காவல்துறை பற்றி

கலைஞரின் சட்டமன்ற உரைகள்



காவல்துறை பற்றி

கலைஞரின் சட்டமன்ற உரைகள்

வெளியீடு :

தமிழ்க்கனி பதிப்பகம்

சென்னை - 600 004

விற்பனை உரிமை :

பூம்புகார் பதிப்பகம்

127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)

சென்னை - 600 108.

முதல்பதிப்பு : மே, 2007

இரண்டாம் பதிப்பு : ஜூலை, 2008

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 085.

G002338

894.815
TAM

விலை ரூ. 320/-

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப் பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !" என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்" என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான "திருக்குவளை" உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை "குளித்தலை தொகுதி"யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு

நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றிபெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத் தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான்

அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் - அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் - அதன் காரணமாக மனித நேயம் - நாகரிகம் - பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்தது மில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர் திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் "அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி"யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என்

இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் !

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக் கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.


இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் - இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில்

எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங் களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,



பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப்

பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத் தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

பொன்னர் சங்கர்

தொல்காப்பியப் பூங்கா

தாய் காவியம்

முத்துக்குளியல்

சிந்தனையும் செயலும்

காலப்பேழையும் கவிதைச் சாவியும்

போன்ற கற்கண்டுச் சொல்லோவி யங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம்.

அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்''

பொன்விழா கொண்டாடப்படும் இந்தக்

குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள் களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரி பிரச்சினை மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.


அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

- தமிழ்க்கனி பதிப்பகத்தார்

காவல்துறை பற்றி

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்



காவல்துறை பற்றி

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்

உரை : 1 நாள் : 12.07.1962

கலைஞர் மு. கருணாநிதி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இங்கு விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ள காவல்துறை மான்யத்தில் எங்கள் சார்பில் அளிக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகள் மீது எனது கருத்துக்களை இங்கு கூற விரும்புகிறேன். சுமார் 34,600 பேர் பணியாற்றுகிற இந்த பெரிய இலாகாவைப் பற்றி மிகத் தீவிரமாகவும், நல்லெண்ணத்தோடும், நாம் அனைவரும் சிந்தித்து செயலாற்ற வேண்டிய கடமை யுணர்ச்சியோடு இருக்கிறோம் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 34,600 பேர் என்று சொல்லப்படுகிற இந்த பெரிய நிறுவனத்தில் ஏறத்தாழ 24,000 பேர் கான்ஸ்டபிள் என்று சொல்லப்படுகிறது.

பழைய போலீஸ் அமைச்சராக இருந்து இன்று நிதியமைச்சராக இருக்கும் கனம் பக்தவத்சலம் அவர்கள் சொல்லக்கூடாது என்று ஒதுக்கி வைத்திருக்கிற காவலர் என்று அழைக்கப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். போலீஸார் என்று கூறுவதில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. காவலர் என்று கூறுவது களங்க முடைத்தது என்கிற எண்ணமும் எங்களுக்குக் கிடையாது. இந்தப் போலீசார் ஒரு பெரிய தியாக பரம்பரையை, நம் நாட்டில் உருவாக்கி வருகிறவர்கள், சிறப்பாகத் தமிழகத்தைப் பொறுத்த வரையில் சொல்ல வேண்டுமானால் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு, இந்திய துணைக்கண்டத்தில் வேறு எந்த

மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நம் மாநிலத்தில் இருக்கிற போலீஸார் தங்களுடைய கடமையை ஆற்றி வருகிறார்கள் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. கடு மழையிலும், கொடிய வெயிலிலும், நள்ளிரவிலும் தங்கள் பணியினை கொலைகாரர்கள் மத்தியிலும், கள்வர்கள் இடையிலும் தங்கள் உயிரைப் பற்றிய கவலை இல்லாமல் மரணத்தை துச்சமாக மதித்து கடமைக்காக போராடி வருகிற அந்தத் தியாக சீலர்களை திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டுவதற்கு கடமைப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் உழைப்பின் மேன்மையை உணர்ந்து அவர்களுக்கு மேலும் பல சலுகைகள் வழங்க வேண்டுமென்று கேட்பதும் இந்த வெட்டுப் பிரேரணை மீது நான் எழுப்புகிற குரல் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சென்னைமாநகரம் போன்ற சிலவிடங்களில் சென்ற ஆண்டு வரை காவல் நிலையம் என்று எழுதப்பட்டிருந்த பலகைகள் எல்லாம் திடீரென மாறி போலீஸ் ஸ்டேஷனாக காட்சியளிக்கின்றன. பெயர் மாற்றத்தில் அக்கறை இல்லாமல் பெயர் மாற்றம் என்றால் கேலிக்குரியது என்று கூறுகிற ஆளும் கட்சியினர் எவ்வளவு அக்கறையோடு அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்று எண்ணும்போது கொஞ்சம் வேதனை எங்களுக்கு ஏற்படாமல் இல்லை. காவல் நிலையம் என்பது நல்ல தமிழ்ச் சொல் என்ற காரணத்தினால் அந்த நல்ல தமிழில் அது பொறிக்கப்பட்ட நேரத்தில் நாங்கள் எல்லாம் மகிழ்ச்சி யடைந்தோம். அதற்காக போலீஸ் அமைச்சராகிய இப்போது நிதியமைச்சராக இருக்கும் கனம் பக்தவத்சலம் அவர்களை நாங்கள் பாராட்டினோம். எங்களுடைய பாராட்டுக்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று நினைத்தார்களோ என்னவோ, அல்லது இவர்கள் என்ன நமக்கு பாராட்டுகளை தெரிவிப்பது என்று கருதினார்களோ என்னவோ, அந்த வார்த்தையை உடனடியாக "மாற்றுங்கள், மாற்றுங்கள்" என்று இந்த மாமன்றத்திலேயே அப்போது வந்திருந்த அதிகாரிகளிடத்தில் சொல்லுகின்ற முறையில் கூறினார்கள் அமைச்சர் அவர்கள். அதன் காரணமாக எல்லா இடங்களிலும் அந்த வார்த்தை மாற்றப்பட்டது. அதற்குக் கூறிய காரணம்தான் உள்ளபடியே எங்களைப் புண்படுத்தியது. இந்த மாமன்றத்தில் வீற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள். அந்தப் பக்கத்தில் (காங்கிரஸ் பக்கத்தில்) உறுப்பினர்களாக வீற்றிருக்கின்றவர்கள் எல்லாம்

பெரும்பாலும் வயதானவர்கள். இதை யாரும் மறுப்பதற்கில்லை. கடந்த தடவை இந்த மன்றத்தில் வெளியிடப்பட்ட "யார் யார்" என்கின்ற புத்தகத்தில், எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. நடராஜன் அவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்களில் இளைஞராக இருந்தார். இந்த தடவையிலும் எங்கள் கட்சியிலுள்ள திரு. வெங்கலம் மணி அவர்கள்தான் இளைஞராக இருக்கிறார்கள். ஆகவே இளைஞராக இருக்கின்றவர்கள் ஏதாவது தவறுகள் செய்யலாம், உணர்ச்சி வசப்படலாம், அதன் காரணமாக அவசரப்பட்டு பேசிவிடலாம். ஆனால் அறுபதாவது ஆண்டு கொண்டாடிக்கொண்டிருப்பவர்கள், அறுபதாவது ஆண்டு கொண்டாடி முடிந்திருப்பவர்கள் எல்லாம் ஆளும் கட்சியிலிருக்கிறார்கள், ஆகவே அவர்கள் எதிர்க்கட்சியிலுள்ள எங்களை புண்படுத்தாத வகையில் பேசவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

முன்னாள் போலீஸ் அமைச்சர் அவர்கள், போலீஸ் காரர்களை காவலர்கள் என்று சொல்லிவந்ததை, திருவொற்றியூரில் நடந்த திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் தங்களை "காவலர்கள்" என்று அழைத்துக் கொண்டதைக் கேட்டதும் உடனடியாக, ''காவலர்கள்'' என்று இருந்ததை மாற்றவேண்டும் என்று நினைத்தோம் என்று குறிப்பிட்டார்கள். அதற்கான ஆதாரத்தையும் நான் வைத்திருக்கிறேன். நாங்கள் அந்த வார்த்தையை உபயோகித்தோம், அதில் எச்சில் பட்டுவிட்டது என்று கருதி, அந்த வார்த்தை மாற்றப்பட்டது என்றால் நாங்கள் எவ்வளவோ வார்த்தைகளை உபயோகிக்கின்றோம், அவைகளை எல்லாமா இவர்கள் மாற்றுகின்றார்கள்? நாங்கள் அடிக்கடி 'மாவட்டம்' என்று உபயோகிக்கின்றோம், சர்க்கார் ஏடுகளில் இப்போது 'மாவட்டம்' என்றே பொறித்துக் கொண்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல, நாங்கள் அடிக்கடி 'அமைச்சர்' என்று உபயோகிக்கின்றோம், அதைப் பார்த்துவிட்டு "நீங்கள் அமைச்சர் என்று எப்படி சொல்லலாம், ஆகவே நாங்கள் அமைச்சர் என்ற பெயரை மாற்றிக் கொள்கிறோம்'' என்று முற்படுவார்களோ என்னவோ தெரியவில்லை. 'காவலர்' என்ற சொல் களங்கத்திற்குரிய சொல்தானா? இல்லை என்பதை திருவள்ளுவரை விட்டே பதில் கூற விரும்புகிறேன். (கனம் திரு. கு. காமராஜ் : திருவள்ளுவரை எப்படி இங்கே கொண்டு வருவீர்கள்?) நான் இலக்கியமாக பேசுகிறேன். திருவள்ளுவரை எப்படி கொண்டுவர முடியும்,

அதிலும் நீங்கள் இருக்கிற இந்த மன்றத்திற்கு எப்படிக் கொண்டுவர முடியும்? அவரே கூறியிருக்கின்றார். . . .

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன் மறப்பர்
காவலன் காவா னெனின்"

என்று திருவள்ளுவர் 'காவலன்' என்ற சொல்லால் அரசனைக் குறிப்பிடுகிறார். அரசனைக் குறிப்பிடுகின்ற சொல்லால் போலீசாரை அழைக்கலாமா, அவ்வளவு அகந்தையா இவர்களுக்கு என்று அமைச்சர் அவர்கள் நினைக்கலாம். ஆனால் அமைச்சர் அவர்கள் சென்ற தடவை பேசிய பேச்சில் Friend, philosopher and guide என்று போலீசைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே காவலர், காவல் நிலையம் என்று சொல்வதில் தவறு அல்ல. அதே நேரத்தில் இப்போது போலீஸ் ஸ்டேஷன் என்றிருப்பதை மாற்றவேண்டும் என்று நான் கூறவில்லை. இருக்கின்ற அருந்தமிழை அழிக்கின்ற வகையில் ஏன் முயற்சி எடுக்கிறீர்கள்? அவ்விதமான முயற்சியில் தயவு செய்து ஈடுபட வேண்டாம் என்பதை மிகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த போலீஸ் துறையில் இருக்கின்றவர்களின் ஊதியத்தைப் பற்றி, அவர்களுடைய வசதிகளைப்பற்றி, அவர்களுடைய வீட்டு வசதியைப்பற்றி குறிப்பிடவிரும்புகிறேன். அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் 65 ரூபாயில் துவங்கி ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்வு பெற்று 70 ரூபாய் அளவுக்கு வந்த பின்னால் இரண்டு ரூபாய் அளவுக்கு உயர்வு பெற்று கடைசியில் 90 ரூபாய் வரையிலும் பெறுகிறார்கள். இவ்விதம் 90 ரூபாய் பெறுவதற்கு 15 ஆண்டுகள் வரையில் சேவை செய்தாகவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த அடிப்படை சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் அவர்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். இதில் சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று சொல்லும்போது, ஆண் போலீசுக்கு மட்டுமல்ல, பெண் போலீசுக்கும் சேர்த்துத்தான் – பெண் போலீஸ் படையை நிறுவப் போவதாகவும் செய்தி வந்தது, சில பத்திரிகைகளில். அதைப் பற்றிக் கார்ட்டூன் போடப்பட்டதோடு அந்தச் செய்தி முடிந்து விட்டது. அதைப்பார்த்துதானோ என்னவோ, போலீஸ் வேலை இவ்வளவு கஷ்டமா, என்று எண்ணித்தான் பெண்கள் இதற்கு அதிகமான அளவில்

அப்ளிகேஷன் போடவில்லையோ என்னவோ தெரியவில்லை. அதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன். போலீசுக்கு கொடுக்கிற மாதச் சம்பளம், யூனிபார்ம் அலவன்ஸ், வைத்திய வசதி, கல்வி வசதி, இவைகளை எல்லாம் சேர்த்து கணக்கிட்டால் கூட 102 ரூபாய் வரையில்தான் பெறுகிறார்கள். இந்தச் சம்பளத்தைக் கொண்டு அவர்களுடைய குடும்பத்தை நடத்த முடியுமா? அவர்கள் ஏற்கெனவே வீட்டு வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள், என்பதை எங்கள் கட்சியில் இருக்கின்ற "போலீஸ்" நண்பராக இருந்த திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய வீட்டில் போடப்படும் மின்விளக்கு 25 சக்தியுள்ளதாகத்தான் இருக்கிறது. இந்த மின் விளக்கை வைத்துக்கொண்டு எவ்விதம் குடும்பத்தை நடத்துவது, பல போலீஸ்காரர்கள் வீட்டுவசதியில்லாமல் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பலவிதமான கஷ்டமான சூழ்நிலையில்தான் அவர்கள் தங்கள் குடும்பத்தை நடத்திக் கொண்டிருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சட்டசபையில் நடமாடுகின்ற போலீஸ்காரர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இப்போது நாள் ஒன்றுக்குக் கொடுக்கப்படுகின்ற படிச்செலவு 10 அணா. இது போதுமா என்பதை அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இங்கே வேலை பார்க்கின்ற பல போலீஸ்காரர்கள் நெடுந்தூரத்தில் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பஸ் வசதியும் இப்போதில்லை. ஆகவே, அவர்களுக்கு பஸ்ஸில் வருவதற்கு பாஸ் வசதியாவது செய்து கொடுக்க வேண்டும். இம்மாதிரிப்பட்ட தேவைகளை எல்லாம் அவர்கள் என்னிடத்தில் வந்து சொன்னார்களா என்று கேட்டு, அப்படி இவர்களிடம் போய் சொல்லிவிட்டார்களா என்று நினைத்து, அதற்காக கொடுக்க மாட்டோம் என்று இருந்துவிடாதீர்கள். உண்மையில் அவர்கள் இவ்விதம் உணருகிறார்கள். அதைத்தான் இந்த அமைச்சர வைக்கும் கனம் சபாநாயகர் அவர்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் அதிக நேரம் வேலை செய் கின்றார்கள் என்றால் அவர்களுக்கு தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுவது போல் 'ஓவர் டைம் அலவன்ஸ்' போன்ற வசதிகள் அளிக்கப்படவேண்டும் என்பதோடு, இவர்களுடைய பிரச்சினைகளையும் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைப் போன்று கவனிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை தெரிவித்துக்

கொள்ள விரும்புகிறேன். இவர்களுடைய வேலை நேரம் எட்டு மணி நேரம்தான் என்று சொல்லப்பட்டாலும், அன்றாடம் அவர்கள் அதிக நேரம் வேலை செய்கின்றார்கள். அப்பேர்ப்பட்ட நேரத்தில் எல்லாம் அவர்களுக்கு ஊதிய உயர்வுப்படி கொடுப்பதற்கு சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், ஆவடியில் இருக்கின்ற சிறப்பு ஆயுதப் படையினர் (எஸ்.எ.பி) தலைமையிடத்திலிருந்து, வெளியில் சென்றால் ஒன்றே கால் ரூபாய் படி கொடுக்கவேண்டும் என்றிருந்தாலும் அதற்கு பதிலாக, மாதம் ஒன்றுக்கு 18 ரூபாய் சாப்பாட்டுச் செலவாக தரப்படுகிறது. இவ்விதம் கொடுக்கப்படும் படி சாப்பாட்டுக்கென்று கொடுக்கப்படும் நேரத்தில் சம்பளத்தில் சேர்ந்து வரும் பஞ்சப்படியை பாதியாக குறைத்துக் கொள்கிறார்கள். இதன் காரணமாக பல கஷ்டங்கள் அவர்களுக்கு ஏற்படுகின்றன. கல்யாணமானவர்களுக்கு மட்டும் வீட்டு அலவன்ஸாக ஏழு ரூபாய் கொடுக்கும்படியாக இருக்கிறது. 500 பேர்களுக்குத்தான் இந்தவிதமான அலவன்ஸ் தரப்பட்டிருக்கிறது. "இவர்களுக்கு ஏன் அலவன்ஸ், இந்த அலவன்ஸில் அவசியம் என்ன, 'கல்யாணமானவர்களுக்கு அல்லவா தெரியும், எனக்கு என்ன தெரியும்" என்று முதலமைச்சர் அவர்கள் கூறிவிட மாட்டார்கள் என்று கருதுகின்றேன், அவ்வாறு இல்லாமல் அங்கிருக்கின்ற அனைவருக்கும் இந்த அலவன்ஸ் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குற்றங்களின் பட்டியலை பூர்த்தி செய்யவேண்டும் என்பதற்காக நிரபராதிகளை அனாவசியமாக சேர்த்து விடுகிறார்கள் போலீஸ்காரர்கள் என்கின்ற செய்தியை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. குற்றப்பட்டியல் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காக யார் யாரையோ குற்றவாளி ஆக்குவது கூடாது, அம்பு எய்கின்றவர்கள் உண்மையிலே ஒருபுறம் இருக்க, சாதாரணமாக இருக்கின்ற போலீஸ்காரர்கள் இதற்காக எங்கிருந்தாவது குற்றவாளிப்பட்டியலைத் தந்தாக வேண்டும் என்று பெரிய அதிகாரிகள் தொல்லை கொடுக்கின்ற நிலைமை ஏற்படுகிறது என்பதை பலர் கூறுகிறார்கள். 'எய்தவன் இருக்க அம்பை நோகின்றனரே? என்ற வகையில் பல ஆயிரக் கணக்கானவர்கள் பெருமூச்சுவிட்டபடி இருக்கிறார்கள் என்பதை

மறந்து விடுவதற்கில்லை, நான் சொல்வதை யாரும் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம், போலீஸ்காரர்கள் அதிகாரிகளால் மட்டும், ஆட்டி வைக்கப்படவில்லை, அமைச்சர்களாலும் ஆட்டி வைக்கப்படுகின்றார்கள் என்கிற செய்தியை இந்த மன்றத்தில் சொல்வதின் மூலமாக அதற்கொரு நீதி கிடைக்கும் என்ற எண்ணத்தில் கூற விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் 'இருப்பு' என்ற கிராமத்தில் அரசியம்மன் கோவிலில் பழைய தர்மகர்த்தாவாக இருந்தவர் நீக்கப்பட்டார். அதன் பேரில் புதிய தர்மகர்த்தாவும் நியமித்தாகிவிட்டது. புதிய தர்மகர்த்தாவிடம் பழைய தர்மகர்த்தா உடனடியாக பொறுப்பை ஒப்படைக்க வேண்டியது நியாயம். ஆனால் பழைய தர்மகர்த்தா நியாயமான முறையில் பொறுப்பை ஒப்படைக்கவில்லை. இதனால் புதிய தர்மகர்த்தா இப்பிரச்சினையை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார். நீதிமன்றத்தில் புதிய தர்மகர்த்தாவிடம் பொறுப்பு உடனடியாக ஒப்படைக்கப்பட வேண்டும்; அதற்கு போலீஸ் சட்டபடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிடப் பட்டது. ஆனால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கும் பின்னால் பழைய தர்மகர்த்தாவிடமிருந்து பொறுப்பை வாங்கித் தருவதற்கு போலீஸார் நடவடிக்கை எடுக்கத் தயங்கியதன் காரணமாக புதிய தர்மகர்த்தா, திரும்பவும் நீதிமன்றத்திற்கு இதைக்கொண்டுபோனபோது நீதி மன்றத்தில் போலீசாரை அழைத்து, "உடனடியாக இதன் மீது நடவடிக்கை எடுக்கிறீர்களா, அல்லது உங்கள் மீது நடவடிக்கை எடுக்கலாமா?" என்று கேட்டு கடுமையான கட்டளையை பிறப்பித்த பின்னால் போலீசாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏன் போலீசார் தயங்கினர் என்று கேட்டால், கனம் அமைச்சர் திரு. பூவராகவன் அவர்கள் இதில் தலையிட்டார் என்று செய்தி நம்பத் தகுந்த இடங்களிலிருந்து கிடைத்திருக்கிறது. இதில் அவர்கள் தலையிட்டதற்குக் காரணம், பழைய தர்மகர்த்தாவாக இருந்தவர், அமைச்சர் திரு. பூவராகவன் அவர்களுடைய அண்ணன் என்றும் தெரியவந்தது. இவ்விதம் அமைச்சர்களால் கூட போலீஸ் ஆட்டி படைக்கப்படுவது நியாயம்தானா, தர்மம்தானா, நீதிதானா – நீதி நிலைக்குமா என்பதை இந்த மன்றத்தில் தங்கள் மூலமாக கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மந்திரிகளுடைய வருகையின் போது போலீஸாருக்கு ஏற்படும் தொல்லைகள் எடுத்துச் சொல்லப்பட்டன. இங்கே கொடுத்திருக்கக் கூடிய இந்த மான்யங்களைப் படித்துப் பார்க்கும் நேரத்தில் மாவட்டங்களுடைய செயற் படை வீரர்களுக்கு ஆகக் கூடிய செலவு 1961-62-ம் ஆண்டில் 429.27 லட்சமாக இருந்தது 1962-63-ம் ஆண்டிலே 447.75 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வு ஏன் என்று நான் கேட்கவில்லை. பஞ்சப்படி உயர்வினால் இந்த அளவுக்குச் செலவு உயர்ந்திருக்கலாம் என்று எடுத்துக் கொள்கிறேன். ஆனால் மலபார் போலீஸுக்கு 1961-62-ல் 18.68 லட்சமாக இருந்தது 1962-63-ல் 32.86 லட்சமாக ஏன் உயர்ந்தது என்று எனக்குப் புரியவில்லை. எந்த விதமான கட்சி குழப்பங்களும் அராஜகங்களும் நாட்டில் ஏற்படாத சூழ்நிலையில் இந்த அளவுக்கு உயருவதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும்போது, கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்காக அதிகச் செலவு ஏற்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு அவசரமாக மோட்டார் வாகனங்கள் ஏன் வாங்கப்பட்டன? அஸ்ஸாமில் கலகத்தைத் தடுப்பதற்காக நமது படை வீரர்கள் அழைக்கப்பட்டார்களே, அதற்காக வாங்கப்பட்டதா? அனுப்பப்பட்ட இந்த மாநில போலீஸாருடைய செலவை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டதா? மாநில சர்க்கார் ஏற்றுக்கொண்டதா? மாநில சர்க்கார் ஏற்றுக் கொண்டிருந்தால், மாநில சர்க்கார் ஏற்றது சரிதானா? அஸ்ஸாம் கலவரத்தைத் தடுப்பதற்காக அனுப்பப்பட்ட காரணத்தினால் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கவேண்டாமா? இந்தக் கேள்விகளுக்கு அமைச்சரிடத்திலிருந்து பதிலை எதிர்பார்க்கிறேன்.

போலீஸார் கஷ்டங்களை எடுத்துக் கூறி அவர்களுக்காக நாங்கள் வாதாடுவதால், போலீஸ்காரர்களை எதிர்க் கட்சிக் காரர்கள் தங்கள் பக்கம் இழுக்கப் பார்க்கிறார்கள் என்று பொதுவாக ஒரு கருத்து ஆளும் கட்சியிலிருந்து தெரிவிக்கப் பட்டது. அமைச்சர் அவர்கள்கூட அப்படித்தான் எண்ணுகிறார் என்று கருதுகிறேன் . . .

கனம் திரு. கு. காமராஜ் : அப்படி நினைக்கவில்லை. நீங்கள் போலீஸ்காரர்களை மிரட்டுகிறீர்கள். எப்படி

மிரட்டுகிறீர்கள் என்று கேட்டால் உங்களிடம்தான் பத்திரிகை இருக்கிறது என்று பத்திரிகையில் எழுதுவது, கூட்டங்களில் பேசுவது என்ற முறையில் நீங்கள் மிரட்டுகிறீர்களே தவிர வேறு இல்லை.

கலைஞர் மு. கருணாநிதி : மிரட்டக் கூடிய அதிகாரம் எங்களிடத்தில் இல்லை - மிரட்ட வேண்டிய அவசியமும் இல்லை. அப்படி மிரட்டியதாக - எந்தக் கூட்டத்திலாவது நாங்கள் அர்த்தமில்லாத முறையில், பண்பில்லாத முறையில், பேசியிருக்கிறோம் என்று - அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னால் அதற்கு நான் தலைவணங்கத் தயாராக இருக்கிறேன். போலீஸாருடைய கஷ்டங்களை எடுத்துக் கூறி வாதாடுவதால் நாங்கள் அவர்களை எங்கள் பக்கம் இழுக்கப் பார்க்கிறோம் எனக் கருதுகிறார்கள். நான் எழுதிய நாடகம் - "உதய சூரியன்" என்ற நாடகம் - சர்க்காரினால் தடை செய்யப்பட்டது. அப்படி தடை செய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்று போலீஸ் அமைச்சரிடத்தில் நேரில் சென்று நானும் என் தலைவர் அண்ணா அவர்களும் கேட்டோம். அப்போது அமைச்சர் அவர்கள் சில குறிப்புகளைக் காட்டி, இவைகளெல்லாம் ஆட்சேபகரமாக இருக்கின்றன என்று சொன்னார்கள். "அவைகளை விலக்கி விடுகிறேன், அனுமதி தாருங்கள்" என்று கேட்டோம். அவைகளை விலக்கி விட்டு அனுப்புங்கள் என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். அவைகளைத் திருத்தி புத்தகத்தை அனுப்பினேன். வந்த தகவல் என்ன தெரியுமா? - நாடகம் தடை செய்யப்பட்ட ஒன்று என்ற தகவல் காதுகளுக்கு எட்டியது. போலீஸாருக்காக வாதாடியிருக்கிறீர்கள், இது தவறு, இதில் போலீசாருடைய கஷ்டங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள் - இது மிகப் பெரிய தவறு. போலீஸாருடைய கண்ணீரைத் துடைக்க வழி தேடி திராவிட முன்னேற்றக் கழகம் போலீஸ்காரர்களைத் தங்கள் பக்கம் இழுத்து ஃபிரெஞ்ச் புரட்சி போல் இதில் ஏதோ செய்வதாக எண்ணிக் கொண்டு இந்த நாடகத்தைத் தடை செய்ததாக நான் அறிகிறேன். ஆனால் முக்கியமாக இந்தக் காரணம் தான் சொல்லப்பட்டது. எனது பேச்சின் இறுதி கட்டத்தில் ஒன்றை மாத்திரம் - அந்த நாடகத்தில் ஆட்சேபகரமானது என்று சொல்லப்பட்ட அந்த தாலாட்டுப் பாட்டு என்ன என்று படித்துக்

காட்ட விரும்புகிறேன் - தயவு செய்து யாரும் தாய்மார்கள் "சட்ட சபையிலே தாலாட்டா?" என்று கேட்டுவிடவேண்டாம். அந்த தாலாட்டுப் பாட்டு -

ஆராரோ ... ஆரிரரோ ... ஆணழகா! கண்வளராய்!
அஞ்சுபத்து சம்பளத்தில் மிஞ்சுவதில் வளரவந்த
அஞ்சுகமே! கண்வளராய்!
போலீசு வேலைக்கென்று போகின்ற ஙொப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண்வளராய்.
துப்பாக்கி எடுத்துகிட்டு போகின்ற ஙொப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுகிட்டு வழிமறிக்கும் கடன்காரன்
வருகின்ற காட்சிகளைக் காணாமல் கண்வளராய்.
நாடாளும் மந்திரிகள் நலியாமல் வாழ்வதற்கு
ஓடாகத் தேய்கின்ற அப்பாவின் புத்திரனே
குருவிக் கூடான வீட்டுக்குள்ளே தவழுகிற குலவிளக்கே!
கொசுக்கடிக்கு அஞ்சாமல் குவளை மலர்க் கண்வளராய்!
காக்கி உடை போட்டுகிட்டு சேப்பு தொப்பி மாட்டிகிட்டு
நாட்டை காக்கும் வீரனுக்கு உன்னைப்போல
நாலு வந்து பிறந்து விட்டால்
காவி உடை வேணுமாடா; கமண்டலமும் தேவையாடா!

இதுதான் நான் அதில் எழுதியிருந்த பாட்டு. இந்தக் காரணம் காட்டி அந்தப் பாடல் தடை செய்யப்பட்டு நாடகம் தடை செய்யப்பட்டு விட்டது. நான் இவைகளையெல்லாம் சொல்லும் காரணத்தினால் எதிர்க் கட்சி ஒரேயடியாக போலீஸை ஆதரிக்கிறார்கள்; அப்படி ஆதரித்து அவர்களுடைய அன்பையும், குளிர்ச்சிப் பார்வையையும் பெறப் பார்க்கிறார்கள் என்று சொல்லி விடவேண்டாம். கழனியில் களை இருப்பது போல, நிலவில் களங்கம் இருப்பது போல சில பல போலீசாருடைய கடமைகளில் - போலீஸாரிடத்தில் - களைகள் இருக்கின்றன, களங்கம் இருக்கின்றது, மாசு இருக்கின்றது, அத்தனை பேரும் மாசு அற்றவர்கள் என்று கூறமாட்டேன். அப்படி இருக்கும் காரணத்தால்தான் சென்னையில் பல இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய படிப்பகங்கள் காலி செய்யப்படவேண்டுமென்று போலீஸாரால் மிரட்டப் படுகிறது. நேற்றைய தினம்கூட இந்த மாதிரி ஒரு சம்பவம்

நடைபெற்றிருக்கிறது. பெரம்பூரில் 'சத்தியவாணிமுத்து படிப்பகம்' என்று ஒரு படிப்பகம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு படிப்பகம் இருக்கிறது. இந்த இரண்டு படிப்பகங்கள் இருக்கும் இடங்கள் யாருக்கும் சொந்தமானது அல்ல. காங்கிரஸ் படிப்பகத்திற்குப் பக்கத்தில் இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக சத்தியவாணிமுத்து படிப்பகத்தை உடனடியாக காலி செய்ய வேண்டுமென்று போலீஸார் அங்கே சென்று மிரட்டியிருக்கிறார்கள். சத்தியவாணிமுத்து அவர்கள் போலீஸ் கமிஷனரிடத்தில் இதைப் பற்றி முறையிட்டதாக நான் அறிகிறேன். நாகை தாலூகாவில் வேளூர், நீலப்பாடி, சோழங்க நல்லூர், ஓடாச்சேரி, குருமனாங்குடி திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தார், இன்றைய தினம் காமராஜருடைய அரவணைப்பைப் பெற்றிருக்கிறோம் என்ற எண்ணத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தினரை வெறியாட்டம் நடத்தியும், பொருள் வாங்க வந்தவர்களை நையப் புடைத்தும் வருகிறார்கள். இதன் மீது போலீஸார் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற செய்தி கிடைத்துக் கொண்டே இருக்கிறது.

அதே போல, சென்னையில் இருக்கிற குடிசைப் பகுதிகளில் - போலீஸார் குற்றங்களைக் கண்டுபிடிக்கவேண்டா மென்று கூறவில்லை - குற்றம் செய்யாதவர்களை இழுத்து வருகிறார்கள். நானும், எனது கட்சிச் செயலாளர் திரு. மதியழகன் அவர்களும் நேரிலேயே கண்ட ஒரு சம்பவத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். இரண்டு தினங்களுக்கு முன் திடீரென்று நள்ளிரவு 12 மணிக்கு எனது வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கக் கூடிய குடிசைகள் பக்கத்திலிருந்து "குய்யோ, முறையோ" என்று சப்தம் வந்தது. வெளியே வந்து என்ன என்று பார்த்தால் போலீஸார் 200 பேர்களை சுற்றி வளைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த நேரத்தில் அங்கேயிருந்த தாய்மார்கள் என்னுடைய வீடு நோக்கி ஓடி வந்தார்கள். அவர்களைப் பார்த்து "என்ன" என்று கேட்டேன். போலீஸ்காரர்கள் கைது செய்கிறார்கள் என்று சொன்னார்கள் . . .

திருமதி டி. என். அனந்தநாயகி : ஆன் எ பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், கனம் அங்கத்தினர் முதலில்

போலீஸாருக்குத் தாலாட்டுப் பாடிவிட்டு இப்போது போராடுகிறாரே, இதில் எதை நம்புவது?

கலைஞர் மு. கருணாநிதி : அப்போதே நிலவிலே களங்கம் என்றேன் - அம்மையார் கவனிக்கவில்லை போலும். நான் உடனே மதியழகன் அவர்களை தொலைபேசி மூலம் கூப்பிட்டு, இரண்டு பேரும் அந்த இடத்திற்குச் சென்று விசாரித்தோம். அவர்கள் சொன்னார்கள், "அங்கே 2-3 பேர்கள் குற்றவாளிகள் இருக்கிறார்கள், அவர்களைப் பிடிக்க எல்லோரையும் வானில் ஏற்றிக் கொண்டு போகப்போகிறோம்" என்று. "2-3 பேர்கள் குற்றவாளிகள் என்றால் யார் யார் குற்றவாளிகள் என்று சொல்லுகிறார்களோ அவர்களை மட்டும் பிடித்துக்கொண்டு மற்றவர்களை விட்டு விடுங்கள்" என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டோம். "சாட்சிகள் வேண்டும், அதற்காக, எல்லோரையும் இழுத்துக்கொண்டுதான் போவோம்" என்று சொன்னார்கள். அப்படியானால் "எங்களையும் இழுத்துச் செல்லுங்கள், சாட்சி வேண்டுமல்லவா, குச்சு வீட்டுக்காரர்களை மட்டும் இழுத்துக் கொண்டு போவானேன், குச்சு வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கக் கூடிய மச்சு வீட்டுக்காரர்களையும், மாளிகை வீட்டுக்காரர்களையும் சேர்த்து இழுத்துப் போங்கள் சாட்சியத்திற்காக" என்று சொன்னேன். "என்ன ஸார், இப்படி எங்கள் காரியத்தில் தலையிடுகிறீர்களே" என்று முணுமுணுத்து, ஏற்றியிருந்த 30-40 பேர்களில் 5-6 பேர்களைக் குறைத்து ஏற்றிச் சென்றார்கள். நள்ளிரவில் "குய்யோ, முறையோ" என்று கதறியழும் நிலையில் ஏழை மக்களுக்கு தொந்திரவு கொடுக்கும் பயங்கரம் ஏற்படாமல் அந்த அளவுக்கு இருக்கக்கூடிய தூண்டுதல் கைவிடப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மான்யத்தின் பேரில் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தி முடித்துக் கொள்கிறேன்.

உரை : 2 நாள் : 18.03.1964

கலைஞர் மு. கருணாநிதி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் மானியம் கோரப்பட்டு எங்கள் கட்சி நண்பர்களால் அளிக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில கருத்துக்களைக் கூறிக் கொள்வதற்கு விரும்புகிறேன். இந்த மானியத்தைப் பொறுத்த வரையில் காலையிலிருந்து விவாதம் சிறிது சிறிதாகச் சூடேறி, தங்களுடைய குறுக்கீடுகளால் அந்த சூட்டோடு சுவையும் ஏறி, விவாதம் ஏறத்தாழ இறுதிக் கட்டத்திலே வந்து நின்று கொண்டிருக்கிறது.

மாண்புமிகு சபாநாயகர் : இந்த நேரத்தில் கொஞ்சம் சூடு குறைந்திருக்கிறது.

கலைஞர் மு. கருணாநிதி : எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் போலீஸ் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, போலீஸ் இலாகாவைப் பற்றித் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள்ளேயே முரண்பாடான கருத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதைப் பற்றி அவர்கள் அவர்களுடைய பேருரையிலே விளக்குவதற்கு முன்னதாக, இந்தக் கருத்துக்களும் பயன்படும் என்பதற்காக அந்த விளக்கத்திற்கு ஏதுவாக அது பற்றி நான் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை போலீஸ் இலாகாமீது தனிப்பட்ட எந்தவிதமான வெறுப்புணர்ச்சியும், என்றைக்கும் இருந்தது கிடையாது. போலீஸ் இலாகாவின் அரும்பெரும் செயல்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறது; அதே நேரத்தில் போலீஸ் இலாகா தவறான வழிகளிலே செல்லுகின்ற நேரத்தில் சுட்டிக்காட்டுகின்ற அந்தச் செயலையும் புரிந்துகொண்டிருக்கிறது. இதே மன்றத்திலே 1962-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் என்று கருதுகிறேன் - போலீஸ் மானியத்தில் நடைபெற்ற விவாதத்தில்

கலந்துகொண்டு உரையாற்றுகின்ற நேரத்தில், அமைச்சர்களும், மற்றவர்களும், போலீசாரை இந்த அளவுக்குப் பாராட்டி உங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள எண்ணுகிறீர்களா என்று கூடக் கேட்டார்கள். நான் பாராட்டுரைகளை வழங்கிவிட்டு, இருக்கிற குறைபாடுகளையும் அப்போதே எடுத்து உரைத்தேன். நாங்கள் நல்லவைகளைப் பாராட்டவும் செய்வோம்: தீயவைகளைக் கண்டிக்கவும் செய்வோம். அதுதான் ஒரு நாணயமான எதிர்க் கட்சிக்கு உரிய இலக்கணம். அந்த நாணயமான இலக்கணத்தின் அடிப்படையிலேதான் இன்றையதினம் இந்த விவாதத்திலே கலந்துகொண்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்கள் எண்ணங்களை இந்தக் கருத்தரங்கிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, போலீஸ் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அதிலே எந்தவிதமான முரண்பாடான கருத்துக்களும் இல்லையென்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போலீஸ் இலாகா 35,000 பணி புரிகின்ற ஒரு பெரும் இலாகா. இந்தப் போலீஸ் இலாகாவில் ஏறத்தாழ, 25,000 கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய குறைபாடுகள் இந்த மானியத்தின் மூலமாக நீக்கப்பட வேண்டுமென்கிற கருத்தினை ஒட்டித்தான் இந்த வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது. மாமன்றத்தின் மரபின்படி வெட்டுப் பிரேரணை என்று குறிப்பிட்டாலும் அளிக்கப்பட்டுள்ள 8,20,22,000 ரூபாவிலிருந்து தொகையைக் குறைக்க வேண்டுமென்பதல்ல பொருள். வெட்டுப் பிரேரணை என்பதை ஒட்டுப் பிரேரணை என்று திருத்திக்கொண்டால் கூடப் பொருத்தமாக இருக்கும். மேலும் மானியத்தொகையை அதிகரித்து போலீஸ் அதிகாரிகள் போலீஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோருக்கு வசதிகளைப் பெருக்க வேண்டும்; வாய்ப்புக்களை அதிகமாக ஆக்கவேண்டும் என்பதற்காகத்தான், இந்தக் கருத்துரைகளை நாங்கள் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழகத்திலே இருக்கின்ற போலீஸ் இலாகா மற்ற மாநிலங்களில் இருக்கின்ற இலாகாக்களை விடச் செவ்வனே பணிபுரிந்துவருகின்ற இலாகா என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்த சிறப்புப் பெயருக்குத் தமிழக போலீஸ் இலாகா தன்னை உரிய இலாகாவாக ஆக்கிக்கொண்டிருக்கிறது. கடந்த முறை

உயர்திருவாளர் முன்னாள் முதலமைச்சர் காமராஜர் அவர்கள் கையில் இருந்த அந்த இலாகா இப்போது கனம் திரு. கக்கன் அவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக நான் உணரவில்லை. அந்த இலாகாவை ஒரே சக்திதான் இன்றையதினம் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் உணருகிறேன். இந்த இலாகாவிலே இருக்கிற குறைபாடுகளையும், இந்த இலாகாவிலே பணி புரிகின்ற போலீஸ் அதிகாரிகள், போலீஸ் நண்பர்களுக்கு இருக்கின்ற உளைச்சல்களையும், அவர்களுக்குத் தேவையான வீட்டு வசதி, குடும்ப வசதி இவைகளுக்குத் தேவையானவை பற்றியும் இந்த மாமன்றத்தின் மூலமாக எடுத்துச் சொல்லுவது முறை என்ற காரணத்தால்தான் அந்தக் குறைபாடுகளை எல்லாம் இந்த மானியக் கோரிக்கை வருகின்ற காலத்திலே எல்லாம் எதிர் கட்சிக்காரர்களால் எடுத்துச் சொலலப்பட்டு வருகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் போலீஸ் இலாகாவைப் பாராட்டினார்கள். இந்தப் பாராட்டுகளினால் தம்முடைய வாழ்வு குளிர்ந்துவிட்டது, வறுமை நீங்கிவிட்டது என்று எண்ணி போலீஸ் நண்பர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை.

ஒரு போலீஸ்காரருக்குத் தரப்படுகின்ற மாத சம்பளம், அவர்களுக்குத் தரப்படுகின்ற யூனிபாரம் அலவன்ஸ், வைத்திய வசதிகள், கல்வி வசதிகள் இவ்வளவும் சேர்ந்து ஒரு போலீஸ்காரருக்கு மாதத்திலே கிடைக்கின்ற பெரும் தொகை ஏறத்தாழ 102 ரூபாய்தான். அந்த 102 ரூபாயில் அவர்கள் இந்தக் காலத்திலே தங்களுடைய வாழ்க்கையைச் செவ்வனே நடத்திச் செல்ல முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கிற வீட்டை நான் வீடு என்று கூற மாட்டேன். உண்மையில் சொல்ல வேண்டுமானால், போலீஸ்காரர்களுடைய கூடு என்றுதான் குறிப்பிட வேண்டும். அப்படிப்பட்ட சிறிய இடங்களில் அவர்கள் இன்றையதினம் தள்ளி அடைக்கப்பட்டிருக்கிறார்கள். குடியிருப்பு வசதிகள் பெருக்கப்பட வேண்டும், கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகளில் மேலும் வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை இந்த மாமன்றத்திலே பல தடவை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

நான் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்வேன். பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் போலீசார் வீட்டுப் பிள்ளைகள், சலுகைகளைப் பெற்று அந்தக் கல்லூரிகளில் அவர்கள் பயில்வதற்கான வசதிகளை அமைச்சரவை செய்து தரவேண்டுமென்று என் கோரிக்கையை நான் இந்த நேரத்தில் இங்கு எடுத்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தொழிலாளர்களைப்போன்று ஏழு அல்லது எட்டு மணி நேரம் வேலை செய்யக்கூடியவர்கள் அல்ல இவர்கள். போலீஸ்காரர்கள் அதிக நேரம் வேலை செய்கிறார்கள். அவர்கள் செய்யும் அதிக நேர வேலைக்காக ஓவர் டைம் அலவன்ஸ் எதுவும் அவர்களுக்கு கொடுப்பதாக தெரியவில்லை. அவைகளை போலீஸ் நண்பர்களுக்கு அளிப்பதற்கு இந்த அமைச்சரவை அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த சபையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற போலீஸ் நண்பர்களுக்கு ஒரு நாளைக்குத் தரப்படுகிற 10 அணா படி நான்கு மாதங்களுக்குப் பிறகு பில் அனுப்பபட்டு பிறகு 3 மாதங்கள் கழித்துத்தான் அவர்களுக்குத் தரப்படுகிற இந்த அவலநிலையைப் போக்குவதற்கும் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விலைவாசி ஏற்றத்தால் போலீஸ்காரர்கள் எந்தளவிற்கு திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். போலீஸ்காரர்கள், நல்ல திடகாத்திரர் ளாக இருக்கவேண்டும். அவர்கள் நல்ல தேக வலிவு படைத்தவர்களாக இருக்கவேண்டும் என்றால் அவர்களுக்கு நல்ல உணவு தேவை. ஆனால் அவர்களுக்குக் கிடைக்கிற ஏறத்தாழ 100 ரூபாய் வருமானத்தில் எப்படி அவர்கள் திடகாத்திரர்களாக இருக்க முடியும்? அமைச்சர்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். மாதர் மாநாட்டில் மந்திரிமார்களின் வீட்டில் உள்ள மரியாதைக்குரிய அம்மையார்கள் எல்லாம் கலந்து கொண்ட அந்த மாநாட்டில், ஒரு போலீஸ் அதிகாரியின் துணைவியார் பேசும்போது 1,500 ரூபாய் சம்பளம் வாங்கும் மந்திரிமார்களுக்கே இந்தக் காலத்தில் வாழ்க்கைச் செலவு கட்டி வரவில்லை என்று கூறினால், 65 ரூபாய், 70 ரூபாய் சம்பளம் வாங்கும் எங்கள் வீடுகளில் எப்படி செலவிற்குக் கட்டி வரும்? என்ற வினாவை போலீஸ் அதிகாரியின் துணைவியார் ஒருவர் அந்த மாதர் மாநாட்டில் எழுப்பியதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். போலீஸ்காரர்கள் தங்கள் குறைகளை எடுத்துச்

சொல்ல ஒரு அஸோஸியேஷன் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறப்பட்டது. 1962-ல் பதில் அளித்த இன்றைய நம் முதல் அமைச்சர் அவர்கள், அஸோஸியேஷன் என்று ஆரம்பமாகும், பிறகு அது ட்ரேட் யூனியனாகி விடும் என்ற கேள்விக் குறிகளோடு அதற்கான பதிலை அளித்துவிட்டு அமர்ந்தார்கள். "Britain Official Hand-Book" என்ற புத்தகத்தில், 1963-ல் வெளியிட்டிருக்கிற இந்தப் புத்தகத்தில் பிரிட்டனில் போலீஸ்காரர்கள் தங்கள் குறைகளை எப்படி அரசியலாருக்கு எடுத்துச் சொல்கிறார்கள் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. அங்கு யாரும் தொழிற் சங்கத்தில் அங்கம் வகிப்பதில்லை, அமைச்சர் அவர்ளின் கூற்றுப்படி, அரசியலில் இருந்து அப்பாற்பட்டு பணியாற்றவேண்டும் என்ற முறை இருக்கிறது என்று அந்த நூலில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் போலீசில் எல்லாத் தரப்பினருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் தனி சங்கங்கள் உண்டு. அது அமைச்சர்களிடமும் உயர்தர அதிகாரிகளிடமும் கோரிக்கைகளை எடுத்துக் கூறும். அது தவிர "Police Council for Great Britain" என்ற கமிட்டி இருக்கிறது. அந்தக் குழு எல்லா போலீஸ் தரப்பிற்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிறது. உள்துறை இலாகாவினரும் அதில் இடம் பெறுகிறார்கள். அந்தக் குழு போலீசாரின் சம்பளம், பென்ஷன் ஆகியவை பற்றி சட்ட மன்றத்திற்கு சிபாரிசு செய்யும் உரிமையைப் பெற்றிருக்கிறது. தமிழகத்தில் போலீஸ்காரர்களுக்கு இருந்த சங்கம் கலைக்கப்பட்டது. அஸோஸியேஷன் ஒன்று வைத்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கை அமைச்சர் அவர்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் பிரிட்டனில் போலீஸ்காரர்களின் குறைகளை எடுத்துச் சொல்ல அமைக்கப்பட்டிருக்கிற இந்த குழுவை, அமைச்சரவைக்கு ஞாபகப்படுத்தி அந்த வகையில் இங்கும் போலீஸ்காரர்கள் தங்கள் உரிமையை எடுத்துச் சொல்லவும் தங்கள் தேவைகளை, குறைகளை அறிந்து கொள்ளவும் இப்படிப்பட்ட குழுக்களை எந்த முறையில் அமைக்கலாம் என்பதற்கான திட்டவட்டமான யோசனைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களை மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். போலீசார் தங்கள் கடமைகளை செவ்வனே ஆற்ற வேண்டும் என்பதில் ஆளும் கட்சியினருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் அசைக்க

முடியாத நம்பிக்கை இருந்து தீரவேண்டும். ஆனால் போலீசார் அவர்கள் கடமையை ஆற்றவொட்டாமல் ஒழுங்குமுறைகளை மீறி, சட்டத்தை மீறி ஏதோ எதிர்க்கட்சியில் இருக்கிற சிறப்பாக, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் போலீஸாரை தங்கள் பணிகளை செய்ய விடாமல் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு ஆளும் கட்சி உறுப்பினர்களால் பரவலாக எடுத்துச் சொல்லப்பட்டது. ஆனால் அவர்களுக்கு நான் ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். போலீஸ் இலாகா தனது நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டது. போலீஸ் மீதிருந்த பயம் எந்தளவிற்கு மக்கள் மத்தியில் யாரால் நீக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்தோ, அறியாமலோ இந்தப் புத்தகத்தின் மூலம் வெளியிட்டிருக்கிறார்கள். அப்படியானால் போலீஸார் என்றால் ஒரு பயங்கரமான உணர்ச்சி ஏற்பட வேண்டுமா என்று கேட்டால் நாங்கள் இப்படிக்கூறவில்லை, அப்படிப்பட்ட உணர்ச்சி ஏற்படத் தேவை இல்லை. முதலமைச்சர் அவர்கள் இங்கு ஒருநாள் குறிப்பிட்டார்கள், தாயிடம் பிள்ளைக்கு இருக்கும் பயத்தைப் போன்று போலீஸாரிடம் மக்களுக்கு இருக்கவேண்டுமென்று. ஆனால் அது நீண்ட நெடு நாட்களாகவே போக்கப்பட்டு விட்டது. அதற்கு இந்த நாட்டில் இருக்கிற காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ்காரர்களுந்தான் காரணம் என்று நான் குற்றம் சாட்டுவேன். இந்த நூற்றாண்டு விழா மலரில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், "வெள்ளையனே வெளியேறு" என்ற போராட்டத்தில், சுதந்திரப் போராட்டத்தில் பல வெறிச் செயல்களைத் தூண்டிவிட்டு போலீஸ்காரர்கள் எங்கெங்கே தாக்கப்பட்டார்கள் என்ற இந்த விவரங்கள் அத்தனையும் இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குமாரபாளையத்தில் கள்ளுக்கடை மறியல் காங்கிரஸ் தலைவர்களால் நடத்தப்பட்டது. நாங்களும் இந்தி எதிர்ப்பு போராட்டம், மறியல் நடத்துகிறோம். இந்த மறியல்கள் எந்தளவிற்கு அமைதியாக கடந்த 4, 5 மாதங்களாக சென்னையிலும் சரி, மதுரையிலும் சரி, நெல்லையிலும் ஆகட்டும், எந்தளவு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மறியல் போலீஸாருக்கு குந்தகம் விளைவிக்காத அளவில் அமைதியாக நடைபெறுகிறது என்பதை நன்றாக அறிவீர்கள். அப்படி அறிகிற காரணத்தினால்தான், அமைச்சர்

அவர்கள் தம் அறிக்கையில் இறுதியில் "இந்த ஆண்டு முழுவதும் அமைதி நிலவியிருந்தது என்றுதான் சொல்லவேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் நடத்திய கள்ளுக்கடை மறியலில் ஒரு சப் இன்ஸ்பெக்டரையும் ஐந்து போலீசாரையும் இவர்கள் 3,000 பேர்கள் தடுத்து வளைத்துக் கொண்டு படுகாயத்திற்கு ஆளாக்கினார்கள் என்பது இந்த "ஹிஸ்டரி ஆப் தி மதறாஸ் போலீஸ்" என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட காரியங்களில் திராவிட முன்னேற்ற கழகத்தினர் இறங்கியது கிடையாது. திண்டிவனத்தில் இன்ஸ்பெக்டரையும், போலீஸ் படையையும் கருணையற்ற முறையில் மறியல் கும்பல் அடித்து நொறுக்கியது. அதுவும், இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. மதுரையிலும், போடியிலும் மறியலில் போலீசார் தாக்கப்பட்டனர். ''வெள்ளையனே வெளியேறு'' என்ற முழக்கத்தையெட்டி தலைவர்கள் கைது செய்யப்பட்டவுடன் சென்னையில் சூளையில் உள்ள கடைத் தெருக்களெல்லாம் தீ வைக்கப்பட்டது. உயர்நீதி மன்ற கட்டடத்திற்குத் தீ இட முயற்சி நடைபெற்றது. தபால் பெட்டிகள் எல்லாம் தகனம் செய்யப்பட்டன. வட ஆற்காடு மாவட்டத்தில் தந்திக்கம்பிகள் தொலைப்பேசிக் கம்பிகள் அறுக்கப்பட்டன. பணப்பாக்கத்தில் பி. டபிள்யூ. டி இன்ஸ்பெக்ஷன் பங்களா, வேலூரில் போலீஸ் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. சூலூர் விமான நிலையம் தீக்கிரையாக்கப் பட்டது. 22 மோட்டார் லாரிகள் சாம்பலாயின. தண்டரை - ஆதிச்சனூர் ரயில் பாதையில் குட்ஸ் ட்ரெயின் கவிழ்க்கப்பட்டது. மதுரையில் நகர சபை "பைர் என்ஜின்", போலீஸ் பஸ்கள், தபால் ஆபீஸ்கள், சானிட்டரி இன்ஸ்பெக்டர்ஸ் ஆபீஸ், திருவாடானையில் சப்-ட்ரஷரி, சப்-மாஜிட்ரேட் ஆபீஸ், டிப்டி தாசில்தார் ஆபீஸ் இவை தீக்கிரையாக்கப்பட்டன. நாட்டரசன் கோட்டையில் பள்ளிக்கூடம், ரெயில்வே ஸ்டேஷன் தீக்கரையாக்கப்பட்டன. திருவையாற்றில் சாலைகள் கெடுக்கப்பட்டு, பஸ்கள் தடுக்கப்பட்டன. தந்திக் கம்பிகள் வெட்டப்பட்டன. தண்டரை, ஆதிச்சனூர், வேலூர், பணப்பாக்கம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், காலத்தி, திருச்சி, சிங்கநல்லூர், போத்தனூர், மதுரை, சேலம், மன்னார்குடி, திருவையாறு, குலசேகரப்பட்டிணம், தூத்துக்குடி இங்கு போலீஸ் ஸ்டேஷன்கள் தாக்கப்பட்டன, போலீஸார் தாக்கப்பட்டார்கள். இப்படிச்

செய்தவர்கள்தான் போலீஸாரிடம் மக்களுக்கு ஏற்படவேண்டிய மரியதையைப் பற்றி கூறுகிறார்கள். தாயிடம் பிள்ளைக்கு ஏற்பட வேண்டிய பயம் போல் இருக்க வேண்டுமென்கிறார்கள். அந்தப் பயத்தைப் போக்கக் காரணமாக அவர்களே இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சாட்ட கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒழுங்கை மீறி போலீஸாரை, அவர்கள் கடமையிலிருந்து நழுவச் செய்யும் எந்தக் காரியத்திலும் எந்த நேரத்திலும் ஈடுபட்டது கிடையாது. போலீஸாரைப் பாராட்டி இங்கு, 1962 ஜூலை என்று கருதுகிறேன், பேசிய நேத்தில் அப்போதிருந்த முதலமைச்சர் உயர்திருவாளர் காமராஜ் அவர்கள் குறுக்கிட்டு "போலீஸாரை மிரட்டாதீர்கள், நீங்கள் போலீஸாரை மிரட்டுகிறீர்கள், அப்படி மிரட்டிவிட்டு பத்திரிகைகளில் எழுதுகிறீர்கள் கூட்டங்களில் மிரட்டிப் பேசுகிறீர்கள்" என்று சொன்னார்கள். உடனே நான் பதில் சொன்னேன், மிரட்டக்கூடிய அதிகாரம் எங்களுக்கு இல்லை, எங்களுக்கு மிரட்டவேண்டிய அவசியமும் இல்லை. அப்படி நாங்கள் ஏதாவது மிரட்டியிருக்கிறோம் என்றால் ஏதாவது ஆதாரம் தர முடியுமா? என்று நான் கேட்டேன். உண்மையிலேயே மிரட்டிக் கொண்டிருப்பவர்கள்; யார் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன், பெப்ரவரி 25-ம் தேதி சென்னை கடற்கரையில் நடத்தப்பட்ட கூட்டத்திற்கு சர்க்கார் சுருக்கெழுத்தாளர் சென்றிருக்கமாட்டார் என்று கருதுகிறேன். இதிலிருந்து யார் போலீஸை மிரட்டுகிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். காங்கிரஸ், கம்யூனிஸ்ட், தமிழ் தேசியக்கட்சி இம்மூன்றும் சேர்ந்து தேசீய அணி என்று ஒரு அணி பிரகடனப்படுத்தப்பட்டது. அந்த தேசீய அணியின் சார்பாக நடத்தப்பட்டக் கூட்டத்தில், ஒரு நண்பர் என்ன பேசுகிறார் என்றால் – மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்கள், திரு. நஞ்சுண்டராவ் அவர்கள் பேசும்போது போலீஸ்காரன் என்று சொல்வது சரியல்ல என்று சொன்னார்கள். அதை நான் மரியாதையோடு, ஏற்றுக்கொள்கிறேன். – இந்த நிலைமையில், அந்த நண்பர் பேசுகிறார் . . . "ஏ போலீஸ்கார அடுத்த மூன்று எழுத்துக்களை நான் சொல்லவில்லை, அப்படியே விட்டு விடுகிறேன் – உனக்கு ஏன் காக்கிச் சட்டை, உனக்கு ஏன் சிவப்பு தொப்பி, உனக்கு ஏன் பூட்ஸ், உனக்கு ஏன் கால்சட்டை, இத்தனையும் கழற்றி கொடுத்து

விட்டு, கருப்புச் சட்டைப் போட்டுக்கொண்டு போடா" என்று கடற்கரைக் கூட்டத்தில் பேசப்பட்டது என்றால், யார் போலீஸாரை மிரட்டுகிறார், எந்த அளவுக்கு அவர்கள் மிரட்டப்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி மிரட்டப்படுகின்ற காரணத்தினால்தான், என்னுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், தேர்தல் நேரத்தில் சென்னை நகரில் நடந்த அல்லோலங்களைப்பற்றி, தேர்தலுக்கு முதல் நாள் என்னென்ன நடந்தது, யார் யார் எந்தெந்த வகையில் கைது செய்யப்பட்டார்கள் என்பதை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். கைது செய்யப்பட்டவர்கள் ஏதோ ரௌடி பட்டியலில் சேர்ந்தவர்கள் என்று சொல்லி பூசி மழுப்பி விடுவதால் உண்மைக்கு மதிப்பும் கண்ணியமும் கொடுத்ததாகி விடாது. துளசிங்கம் என்ற கௌன்சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அவரும் ரௌடி லிஸ்டில் இருப்பவர்கள் என்று சொல்லி பூசி மழுப்பி விடுவது எந்த அளவுக்கு நியாயம் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேர்தல் காலத்தில் நடைபெற்ற சொற்பொழிவின் காரணமாக என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இதைப்பற்றி நான் இந்த மன்றத்திலேயே குறிப்பிட்டு சொன்னேன். வெளியில் கூட்டங்களில் ஆளும் கட்சியினரின் சார்பாக பேசிய பேச்செல்லாம் எங்கே கொண்டுபோய் விடுகின்றன என்பதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னேன். ஆனால் அடுத்த ஒரு வாரத்திற்குள்ளாக வெளியில் நடந்த பேச்சுக்களின் நிலைமை எங்கே போய் முடிந்தது என்பதை நாம் நன்றாக அறிவோம். ராஜாஜி வீட்டில் கொலை வெறியன் நுழைந்தான் என்ற நிலை அப்படிப்பட்ட வெறியுணர்ச்சியை தூண்டிவிடுகின்ற அளவுக்கு பொதுக்கூட்டங்களில் 'கொல்லுங்கள், குத்துங்கள்' என்று பேசக் கூடிய அளவுக்குப் பேச்சுக்கள் எல்லாம் அன்றையதினம் அனுமதிக்கப்பட்டது. ஏதோ இன்றைக்கு அந்தக் கொலை வெறியன் பைத்தியக்காரன் என்று கூறிவிடலாம். உண்மையிலேயே பைத்தியக்காரன்தான் வெறியுணர்ச்சிக்கு ஆளாகக்கூடும். பைத்தியக்காரன் அல்லாமல் அறிவாளியா வெறியுணர்ச்சிக்கு ஆளாவான்? பைத்தியக்காரன் அல்லாமல் புத்திசாலியா வெறியுணர்ச்சிக்கு ஆளாவான்? வெறியுணர்ச்சிக்கு ஆளாகின்றவன்

பைத்தியக்காரன் தான். அப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனம் இன்றைய தினம் நாட்டில் பரவலாக அதிலும் வேகமாக ஏற்படுவதற்கு இந்தப் பேச்சுக்கள் காரணமாக இருக்கின்றன. அவைகள் எல்லாம் தடுக்கப்பட வேண்டும் என்று இதே மாமன்றத்தில் என்னால் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்பதற்காக நான் மிக மிக வருந்துகிறேன்.

இன்னொரு நிகழ்ச்சியையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 16-ம் தேதி காலையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. அதைச் சொல்வதின் மூலமாக போலீஸ் எந்தவிதமான பட்சபாதமாக நடக்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன், பட்சபாதமாக எந்த அளவுக்கு நடக்கவேண்டும் என்று தூண்டி விடப்படுகிறது என்பதைக் காட்டுவதற்காக இதை நான் சொல்லுகின்றேன். 16-ம் தேதி காலை 10½ மணிக்கு, மயிலாப்பூரில் திரு. கபாலி என்பவரின் கடைக்கு அருகாமையில், மந்தவெளியில், ஒரு நண்பர் காரில் வந்து கொண்டிருந்தார். அவர் வந்து கொண்டிருந்த கார், அதன் முன்னால் சென்று கொண்டிருந்த ரிக்ஷாவின் மீது மோதி ரிக்ஷா அடிபட்டது. கார் ரிக்ஷாவில் மோதியதும், ரிக்ஷாக்காரன் அடிபட்ட வேகத்தில் பொறுமை யிழந்து காரில் வந்தவரைப் பார்த்து ஏதோ சொல்ல, காரில் வந்தவர் கீழே இறங்கி அந்த ரிக்ஷாக்காரரை செருப்பால் அடிக்க கையை ஓங்கியிருக்கிறார், இதற்குள் அங்கு கூட்டம் கூடியது. கூட்டம் கூடியதும், காரில் வந்தவர், 'நீங்கள் எல்லோரும் போய்விடுங்கள், இல்லையென்றால் நான் இங்கே மறியல் செய்வேன்' என்று சொல்லி சாலையின் குறுக்கே படுத்து ஒரு மணி நேரம் மறியல் செய்து போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தியிருக்கிறார். இத்தனையும் நடந்த பிறகு இந்த சம்பவத்திற்காக கைது செய்யப்பட்டது யார் தெரியுமா? பரிதாபத்திற்குரிய அந்த ரிக்ஷாக்காரன், ஒரு பாவமும் அறியாது காயமடைந்த அந்த ரிக்ஷாக்காரன். இதைப்பற்றி மேலும் விசாரித்ததில், அந்த காரில் வந்தவர், அங்கிருந்தவர்களிடம் "நான் யார் தெரியுமா? நான் 'தூக்குமேடை'யாக்கும் என்னை ஒருவரும் ஒன்றும் செய்துவிட முடியாது" என்று சொல்லி அங்கிருந்து தப்பித்துக் கொண்டிருக்கிறார். (எதிர்க்கட்சி தரப்பிலிருந்து - ஷேம், ஷேம்...) இந்த விதமாக பட்சபாதமான நிலைமை சென்னை மாநகரத்தில்

நடைபெறுகிறது என்பதைத்தான், காந்தியடிகளின் வழியில் நடந்து வந்ததாகக் கூறுகின்ற அமைச்சரவைக்குச் சொல்ல விரும்புகிறேன். இதைத்தான் முரண்பாடு என்று எங்கள் கட்சி உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்களே தவிர, எங்களிம் முரண்பாடு இருப்பதாக தயவு செய்து யாரும் எண்ணவேண்டிய தேவையில்லை.

இன்னும் நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், எல்லா மாவட்டங்களிலும் நீதி நிர்வாக அதிகாரம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னையைப் பொறுத்த வரையில் பிரிக்கப்பட்டிருக்கிற நிலைமை இல்லை. எங்கள் கட்சி உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் எடுத்துச் சொன்னது மாதிரி, நகரில் 151-வது பிரிவின் கீழ் திடீர் திடீர் என்று பலர் கைது செய்யப்படுகிறார்கள். இதனால் ஏற்படுகின்ற தவறுகளைப்பற்றிச் சுட்டிக்காட்டி, உயர்நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை வழங்கி யிருப்பதையும் நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், ரிமாண்டில் வைப்பதற்கு இருக்கின்ற அதிகாரம் நீதிபதிகளிடம் இருப்பது இல்லை. போலீஸ் கமிஷனரிடத்தில் இந்த அதிகாரம் வைக்கப்பட்டிருக்கிறது. அரசியல் காரணங்களால் இது துர்வினியோகப்படுத்தப்பட ஏது இருக்கிறது. இப்போது துர்வினியோகப்படுத்தப்படுகிறது என்று சொல்லவரவில்லை, அப்படி சொல்ல நான் தயாராக இல்லை. ஆனால் துர்வினியோகப்படுத்துவதற்கு ஏது ஏற்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய நிலைமையில் இருக்கின்ற கஷ்டங்களைப்பற்றி அமைச்சரவை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாவட்டங்களில் எல்லாம் எவ்வாறு இந்த அதிகாரம் பிரிக்கப்பட்டு இருக்கிறதோ அந்த அளவுக்கு சென்னை நகரத்தைப் பொறுத்த வரையிலும், பிரிக்கப்பட்டு, ரிமாண்ட் வழங்குவது, காவலில் வைப்பது இவைகள் எல்லாம் நீதிபதியின் பொறுப்பாக இருக்கும்படியான அளவில் மாற்றவேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் எப்படிப் பட்சபாதமாக நடந்து கொள்கிறது என்பதை காட்டுவதற்காக இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கோவை மாநகரத்திற்கு அருகே ஏறத்தாழ 5,000 ரூபாய்க்கு பிராந்திப் புட்டிகள் பிடிக்கப்பட்டன என்ற செய்தி இரண்டு, மூன்று நாட்களாக ஏடுகளில் வந்தது.

அந்தக்காரில் வந்தவரிடம், இருந்த கடிதத்தில் சென்னையிலுள்ள சினிமா அதிபர் - அரசியல் கட்சித் தலைவராக இருப்பவர் - அவருடைய விலாசமும் இருந்ததாகவும் கூறப்பட்டது. பின்னால் இதுபற்றி எந்த விதமான செய்தியும் வரவில்லை. நான் கேட்க விரும்புவது, ஏன் அதன் பின்னால் இந்தச் செய்திகள் வெளியே வரவில்லை? அவர் காங்கிரசை ஆதரிக்கும் அரசியல் தலைவர் என்ற காரணத்தினாலா? ஒரு வேளை "மனிதன் மாறிவிட்டான்," என்று மன்னித்துவிட்டீர்களா? அல்லது போனால் போகட்டும் போடா" என்று விட்டு விட்டீர்களா? ஏன் அந்த பெயர் வெளியே வரவில்லை? அந்த பெயர் மட்டும் இன்றைக்கு எதிர்கட்சியைச் சேர்ந்ததாக, இருந்தால், போலீஸ் இலாகாவினர் மூலமாக இதற்கு முன்னால் கொட்டை எழுத்துக்களில், பத்திரிகைகளில் பிரசுரித்து விட மாட்டார்களா? ஏன் இது மூடி மறைக்கப்பட்டிருக்கிறது? இதற்கான காரணங்களை தயவு செய்து அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு கனம் எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டும். பத்திரிகையில் இந்தச் செய்தி போடப்படவில்லை என்றால் அதற்கு அரசாங்கம் உடனே என்ன காரணம் என்பதை கூற முடியாது. இதில் நிலைமை என்னவென்றால், திடீரென்று இதைப்பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது இதற்கான தகவல்கள் அமைச்சர்களிடத்தில் இருக்காது. தனியாக, இதைப்பற்றி கேள்வி கேட்டால் விவரங்களைச் சொல்ல முடியும். ஆகவே அரசாங்கம் இதை மூடி மறைக்கிறது என்று சொல்வதை மட்டும் எடுத்துக்கொண்டு, உண்மையிலேயே அரசாங்கம் மூடி மறைக்கப்பார்க்கிறது என்கின்ற தப்பான அபிப்பிராயம் ஏற்படுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் தலையிட்டு இதைக் குறிப்பிடுகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : இதற்குப் பிறகாவது அரசாங்கம் உடனடியாக கவனிக்கும் என்று மனதார நம்புகிறேன். கள்ளக் கடத்தல் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், சில இடங்களில் போலீஸ் துறையினர், கள்ளக்கடத்தல் பேர்வழிகளுக்குத் துணையாக இருக்கின்றார்கள் என்கின்ற குற்றச்சாட்டை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். நான் அந்தக் குற்றச்சாட்டை

கூறுவதற்கு காரணம், 10 லாரிகளில் கள்ளத்தனமாக சரக்குகள் கொண்டு போகப்பட்டால், அவைகளை எல்லாம் விட்டுவிட்டு, ஒரு லாரியின்மீது வழக்குப் போடுவதும், இதை மட்டும் வைத்துக்கொண்டு, அந்தப் பகுதியிலுள்ள போலீஸ் இலாகாவினர் திறமையாக பணியாற்று கின்றனர் என்று சொல்லக் கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. போலீஸ் இலாகாவினர் அடிக்கடி கள்ளக் கடத்தலில் உடந்தையாக ஈடுபடுகிறார்கள் என்ற செய்தி அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையைச் சீர்படுத்துகின்ற வகையில் போலீஸ் இலாகாவில் இருக்கின்ற திறமையான ஒற்றர்கள் மூலமாக தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கருப்புப்பணம் பற்றி, அண்மைக் காலமாக, அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. கருப்புப்பணத்தைப்பற்றி முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் அகில இந்திய காங்கிரஸ் தலைவரும், நமது சட்டமன்ற உறுப்பினருமான திரு. காமராஜ் அவர்கள் ஒரு யோசனையை வழங்கியிருக்கிறார்கள். தஞ்சை பொதுக்கூட்டம் என்று கருதுகிறேன் - கருப்புப் பணம் யார் யார் வீட்டிலே இருக்கிறதோ, அங்கெல்லாம் தொண்டர்கள் வேலைக்காரர்களாகச் சேர்ந்து கருப்புப் பணம் இருக்கிற இடத்தைக் கண்டுபிடித்துக் கொடுங்கள், நாங்கள் அவர்களை சட்டப்படி வழக்கு மன்றத்தில் நிறுத்துகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். வேடிக்கையாக அந்த காலத்தில் கூறுவார்கள், போலீஸ்காரர்களை கிண்டல் செய்யக்கூடிய முறையில் "திருடனை பிடித்துக் கொடு நாங்கள் கையில் விலங்கு மாட்டுகிறோம்" என்று. நமது மாநிலத்தில் முதல் அமைச்சராக இருந்து, இன்றைய தினம் காங்கிரஸ் அக்கிராசனராக இருக்கிற திரு. காமாராஜர் வெளியிட்டிருக்கிற திட்டம் ஆபத்தானது என்று கருதுகிறேன். ஏனென்றால் போலீஸ் இலாகாவிலே துப்பறியும் நிபுணர்கள் இருக்கிறார்கள். போலீஸ் இலாகாவிலே திறமையான ஸி.ஐ.டி.-க்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் திறமை இல்லை என்று திரு காமராஜர் ஏற்றுக்கொண்டாரா? அதைத்தான் சுட்டிக் காட்டுகிறாரா? கருப்புப்பணம் இருக்கிற முதலாளிகளிடத்தில் வேலை ஆட்களாகச் சேர்ந்து பணியாற்றுங்கள் என்று சொல்லும்போது, அவரது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, கருப்புப் பணம் வைத்திருக்கிறவர்கள் கொஞ்சம் பத்திரமாக இருங்கள்,

வேலைக்காரர்கள் போல யாராவது வந்தால் நம்பாதீர்கள் என்று அவர்களுக்கு எச்சரிக்கை விடுகிறாரா என்று எனக்குப் புரியவில்லை.

நான் கடைசியாகக் குறிப்பிடுகிற நேரத்தில் நண்பர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் அரங்கண்ணல் அவர்களும் எடுத்துத் தொவித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், மற்றும் வேறு எதிர் கட்சிக் கூட்டங்களுக்கு சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுகிறார்கள். காங்கிரஸ் கட்சி கூட்டங்களுக்கு சுருக்கெழுத்தாளர்கள் வருவதில்லை. இதை அமைச்சரே ஒத்துக் கொண்டிருக்கிறார், வழக்கு மன்றங்களிலும் இது ஒத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. நான் இரு தரப்புக் கூட்டங்களுக்கும் சுருக்கெழுத்தாளர்கள் வருவது நல்லது என்று கருதுகிறேன். ஆளும் கட்சியின் நன்மைக்காகக்கூட அது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு மற்ற கட்சிக்காரர்களைத் தாக்கி மட்டமாக பேசுகிறார்கள் என்பதை அறிவதற்கு அவர்கள் இருந்தால் நல்லது என்பது ஒரு காரணம். அப்படி எங்கள் கட்சியில் உள்ளவர்கள் பேசினால் அவைகளை எடுத்துக் கூறவும், ஆளும் கட்சியில் உள்ளவர்கள் பேசினால் அவைகளை எடுத்துக் கூறவும், காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்களும் இணைந்த முறையில் ஒரு குழுவை அமைத்தாவது தவறுகளைக் கண்டித்து நாகரீக அரசியலை வளர்ப்பதிலே எங்கள் கழகம் இந்த அமைச்சர் அவையில் இருக்கும் நல்லவர்களோடு ஒத்துழைக்க என்றும் தயாராக இருக்கும் என்று கூறி அந்த வகையில் முயற்சி கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் ஆளும் கட்சிக்கே அது தீமையாக முடியலாம். சுருக்கெழுத்தாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்திற்கு வந்து அண்ணாவினுடைய பேச்சை, நாவலருடைய பேச்சை, எங்கள் பேச்சை எழுதி எழுதிப் பழக்கப்படுகிற காரணத்தினால், எங்களுடைய பேச்சுக்களை கேட்பது மாத்திரமல்ல, எழுதி எழுதி, எழுதியதைத் திரும்பப் படித்து, படித்ததை இன்னொரு தாளில் எழுதி, எழுதியதை நகல் எடுத்து, அவர்களையும் கொஞ்ச நாளில் திராவிட முன்னேற்றக் கழகத்தினராக நீங்களே செய்கிறீர்கள் என்று அமைச்சர்

அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன். (சிரிப்பு). அடிக்கடி எங்கள் பேச்சை. . .

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : எங்கள் போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள் பலதரப்பட்ட பேச்சுக்களை எழுதுகிறார்கள். அவர்கள் எதற்கும் கட்டுப்பட மாட்டார்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : அவர்கள் கட்டுப்படாமல் இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறோம். ஆனால் கால வெள்ளம் யார் யாரையோ அடித்துக்கொண்டு போகிறது. கடைசியாக அமைச்சருக்கும் இந்தத் துறையினருக்கும் நல்லெண்ணத்தையும் பாராட்டுதலையும் தெரிவித்தாலும் முதல் அமைச்சருக்கு இப்போதெல்லாம் பயமாக இருக்கிறது, அத்தகைய பாராட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பக்கத்திலிருந்து வந்தால் தனக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சுகிறார், அப்படி அஞ்சத் தேவையில்லை என்று கூறி, சென்னை மாநகரத்தில் போக்குவரத்தில் 1350 வாடகை டாக்ஸிகளும், 251 ஆட்டோ ரிக்ஷாக்களும், 3,700 கை ரிக்ஷாக்களும், 1,004 சைக்கிள் ரிக்ஷாக்களும், 258 மாட்டு வண்டிகளும், 479 ஜட்கா வண்டிகளும், 1 லட்சம் சைக்கிள்களும் சென்னை நகரத்திலே சுற்றிக் கொண்டிருக்கின்றன என்ற புள்ளி விவரத்தை அறிகிறோம். இந்தப் போக்குவரத்தை சீர் செய்ய எல்லா வகையிலும் முறையான முயற்சிகளை போலீஸ் இலாகா எடுத்துக்கொண்டாலும் ஒரு விஷயத்தில் ஒரு யோசனை கூற கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையைக் சுற்றி இருக்கக்கூடிய ஆலைகளுக்கு, வேண்டிய நிலக்கரி வடக்கேயிருந்து வருகிறது. அந்த ஆலைகளுக்கு வருகிற நிலக்கரியை ராயபுரத்திற்கு கொண்டு வந்து குவிக்கிறார்கள். அங்கிருந்து 150 லாரிகள் மூலமாக எடுத்துச் செல்லும்போது பூந்தமல்லி, வால்டாக்ஸ் ரோடு வழியாக அந்த 150 லாரிகள் செல்லுகின்றன. வடக்கே இருந்து வரும் நிலக்கரி ராயபுரத்தில் சேமிக்கப்பட்டு அங்கிருந்து 150 லாரிகள் பூந்தமல்லி வழியாக, வால்டாக்ஸ் ரோடு வழியாகக் கொண்டு செல்லுவது போக்குவரத்துக்கு, அதுவும் நாமே வேண்டுமென்று தேடிக் கொள்ளும் இடைஞ்சலாக இருக்கிறது. இந்தக் போக்குவரத்து இடைஞ்சலைப் போக்கிக்கொள்ள வடக்கே

கொருக்குப்பேட்டை, கொரட்டூர் ஆகிய இடங்களில் அங்கேயே சேமித்து வைத்து சுற்றியிருக்கிற ஆலைகளுக்குக் கொண்டு சென்றால் 150 லாரிகளால் ஏற்படுகிற போக்குவரத்து இடைஞ்சல் பூந்தமல்லி, வால்டாக்ஸ் சாலைகளில் தவிர்க்கப்படும் என்று எடுத்துக் கூறி, போலீஸ் இலாகா, போலீஸ் அதிகாரிகள், போலீஸ் நண்பர்கள், அம்பு போன்றவர்கள், அந்த அம்பு ஆட்சி பீடத்தில் இருக்கிற வில்லிலிருந்து யாரை நோக்கி எய்தப்படுகிறதோ அவர்களை நோக்கிப் பாய்கிறது; திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிக்க வில்லை. போலீஸ் அமைச்சர் என்ற வில்லுக்கு காங்கிரஸ் கட்சி என்ற நாண் ஏற்றப்பட்டிருக்கிறது. அம்பு புறப்படுகிற இடம் அமைச்சர் என்ற வில்லாக இருந்தாலும் காங்கிரஸ் கட்சி என்ற நாணிலிருந்து புறப்படுகிற அந்த அம்புகளை நோவதற்குத் தயாராயில்லை. வில்லை வளைத்து வளைத்து நாண் ஏற்றும்போது நாண் அறுந்துவிடாமல் காத்துக்கொள்வது அமைச்சருடைய கடமை என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

உரை : 3 நாள் : 11.03.1966

கலைஞர் மு. கருணாநிதி : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தின் மீது, நண்பர் மதியழகன் தந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், போலீஸ் மானிய வெட்டுப் பிரேரணையின் மீது பேசுகிற காரணத்தினால், ஏதோ அந்த இலாகாவையே கண்டித்துப் பேசுவதாகவோ, அந்த இலாகா இருத்தல் ஆகாது என்ற எண்ணத்தில் பேசுவதாகவோ, ஆளும் கட்சி உறுப்பினர்கள் கருதிக்கொள்ளுவது நல்லதல்ல, பொறுப்புள்ளதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த இலாகாவில் ஒரு சில அதிகாரிகள், அல்லது இலாகாவிலே இருக்கிற தனிப்பட்ட சிலர் அல்லது இலாகாவிலே இருக்கிற அதிகாரிகள் வேறு சிலருடைய தலையீட்டால், தவறுகள் விளைவிக்கத் தூண்டப்படும் நிலையில் இருக்கிறவர்கள் பற்றி எடுத்துச் சொல்வது அவசியம். அதற்காகவும்தான் போலீஸ் மானியம் இந்த சட்ட மன்றத்திலே விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தப் போலீஸ் மானியத்தை இந்த மன்றத்தின் முன் வைத்த உள் துறை அமைச்சரவர்கள், போலீசார் இந்த மாநிலத்தில் செய்து வருகிற நல்ல பல பணிகளைப் பாராட்டி, நன்றியினைத் தெரிவித்தார்கள். அந்த நன்றி அறிவிப்போடு, எதிர்க் கட்சியினரும், அந்த இலாகாவைப் பொறுத்தவரையில், நன்றி அறிவிக்கத் தயங்கார் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். போலீஸ் இலாகாவின் மீது எதிர்க்கட்சிக்கு நிச்சயமாக வெறுப்பு இல்லை. அதிகாரிகளானாலும், காவல் துறை வீரர்களானாலும், அவர்கள் பல வகையிலும், இந்த மான்யத்தின் மூலம், நன்மை வாய்க்கப்பெற சீரிய நற்கருத்துக்களை, வெட்டுப் பிரேரணைகள்

அறிவிக்கின்றன. உதாரணமாக, ''காவல் துறையினர் திறமையாகவும், தூய்மையாகவும் பணியாற்ற அவர்களின் கல்வித்தரம், படி ஆகியவைகள் உயர்த்தப்பட வேண்டும்" என்றும், "போலீஸாருடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும்" என்றும் "குடியிருப்பு வசதிகளைத் துரிதப்படுத்துதல் வேண்டும்" என்றும் ''கடமையாற்றும் வசதிக்காக, ஒவ்வொரு சர்க்கில் இன்ஸ்பெக்டருக்கும் ஒரு ஜீப் கார் வழங்கவேண்டும்" என்றும், "போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு உடுப்பு 'அலவன்ஸ்'ஸை அதிகப்படுத்த வேண்டும்'' என்றும் உடை, சலவைக்கூலி, சவரக்கூலி, முதலிய படிகளை உயர்த்த வேண்டும்" என்றும், "விலைவாசி உயர்வுக் கேற்ப சாப்பாடு படிகளை உயர்த்திட வேண்டும்" என்றும், 'கடமையைச் செய்யும்பொழுது, இழப்புக்கு ஆளாகும் காவலர்க்கு தக்க நிவாரணம் அளிக்க வேண்டும்" என்றும், இத்தகைய வெட்டுப் பிரேரணைகள்தான், பெரும்பாலும் எதிர்க் கட்சி உறுப்பினர்களால் தரப்பட்டு இருக்கின்றன. இதிலிருந்தே, போலீஸ் இலாகாவில் பணி புரிகின்ற நண்பர்கள் மீது எதிர்க் கட்சியில் இருக்கின்றவர்களுக்குப் பகை உணர்ச்சி கிடையாது என்பது விளங்கும். இலாகாவில் ஒரு சிலர் தவறுக்கு ஆளாகின்றார்கள். அல்லது தவறு செய்யத் தூண்டப் படுகின்றார்கள். அதிலே தவிர்க்க முடியாத அளவில் சிக்கிக் கொள்ளுகிறார்கள். குற்றம் குறைகள் இருப்பதைச் சொல்லுகிறோம் என்றால், அது எங்களுக்கு மேல், ஆளும் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் அதிகமாகப் பயன்படும் என்றுதான் எடுத்துச் சொல்லுகிறோம்.

உள்துறை அமைச்சர் கொடுத்திருக்கும் அறிக்கையில், 1964-ம் ஆண்டு வழக்குகளின் எண்ணிக்கை 48,947. அதுவே 1965-ல் 49,151 என்றும், 117தான் கூடுதலாக இருப்பதால், அது குறைந்த கூடுதலே என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மற்ற மானியங்களைப் போல அல்ல இது. விவசாயம் போன்ற வேறு மானியங்களில் 1964-ம் விளைச்சல் இவ்வளவு, 1965-ல் இவ்வளவு அதிகம் என்று சொல்வது சரியாக இருக்கும். அதேபோல இந்த மானியத்தில் கருதமாட்டார்கள், எதிர்பார்க்கவும் கூடாது. இந்த மானியத்தைப் பொறுத்த வரையில், 1964-ம் ஆண்டு இருந்த குற்றங்களின் எண்ணிக்கையைவிட 1965-ம் ஆண்டு குற்றங்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கவேண்டும். குற்றங்கள் குறையக்

குறையத்தான் போலீஸ் இலாகாவின் திறமை அதிகரித்திருக்கிறது என்று வெளிப்படையான அர்த்தம். அந்த வகையில் உலகத்திலே சிறந்த போலீஸ் படை என்று அழைக்கத் தகுந்தது. பிரிட்டிஷ் போலீஸ் படை என்று குறிப்பிடப்படுகிறது. அந்தப் பெருமையை அந்த போலீஸ் படைக்கு அளித்த பெருமைக்குரியவர்கள், அதைத் திட்டமிட்டு நிறுவிய, இங்கிலாந்து நாட்டில் போலீஸ் கமிஷனர்களாக இருந்த ரோவன், மேயின் ஆகிய இரண்டு பேர்களும் ஆவர். அவர்கள் போலீஸ்காரர்கள் கடமைகளைப் பற்றி எழுதிய நூல் ஸ்காட்லண்டு யார்டு நூலகத்தில் இருக்கிறது. அந்த நூலில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்; "உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு, நிதானமிழக்காமல், செயலாற்றுவதே ஒரு போலீஸ் அதிகாரிக்குத் தேவையான சிறந்த தகுதி என்பதை ஒரு போலீஸ் வீரன் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நிதானமாகவும், உறுதியுடனும், ஒரு போலீஸ் வீரன் கடமை யாற்றினால், அவசியமேற்பட்டால், அருகில் இருப்பவர்களும் அவனுக்கு உதவி செய்வார்கள்" என்று கூறிவிட்டு, போலீஸ் படையின் நோக்கம் பற்றிக் கூறும்போது, "குற்றங்களைத் தடுப்பதே முக்கிய நோக்கம் என்பதை ஒவ்வொரு போலீஸ் வீரரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். போலீஸ் படையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தனக்குத்தானே காவல் என்ற நினைவுடன் ஒழுக்கம் பேணவேண்டும். குற்றங்கள் இல்லாது ஒழிந்தால் அதுவே போலீஸ் படையின் திறமைக்குச் சிறந்த சான்று ஆகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், அந்த நூலிலே.

பிரிட்டனிலே போலீஸ்காரர்கள் வெறும் காவல் துறைப் பணிகளை மட்டுமே கவனிப்பது என்பது இல்லை. கிராமப் பகுதிகளுக்கும், விவசாயம், சுகாதாரம் போன்ற துறைகளின் தேவைகளையும் கவனிக்கும் பணிகளையும் ஏற்றுச் செய்கிறார்கள். பிரிட்டன் நாட்டில் போலீஸ்காரர்களுடைய வரலாற்றினைப் படிக்கும்போது பிரிட்டானிய நாட்டிலே அபாயகரமான குற்றவாளிகளை, தப்பி ஓடுவார்களோ என்று, ஓர் இடத்திலிருந்து வேறு இடத்திற்கோ, நீதிமன்றத்திற்கோ அழைத்துச் செல்லும் போதே விலங்கிடுகிறார்கள். ஆனால், இங்கே விலைவாசிப் போராட்டத்தின் போது, நண்பர் பாலகிருஷ்ணன் அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றது எவ்வாறு? எவ்வளவு பொறுப்பான இடத்தில் இருக்கிறவர்? எத்தனை மக்களுடைய வாக்குகளைப் பெற்று, இந்த மன்றத்திலே வீற்றிருக்கிறார்?

அப்படிப்பட்டவரை, கொஞ்சம் அலட்சியமாக இருந்து விட்டால் தப்பி ஓடிவிடுவார், பயங்கரமானவர் என்று, கைகளில் விலங்கிட்டு போலீசார் அழைத்துச் சென்ற காட்சியும் ஞாபகத்திற்கு வருகிறது.

பிரிட்டானிய நாட்டில், ஒரு கான்ஸ்டபிளுடைய சம்பளம், என்ன? அண்மையில் ஒரு புத்தகத்தில் பார்க்க நேர்ந்தது. ஆண்டு ஒன்றுக்கு, ஒரு பிரிட்டிஷ் போலீஸ்காரருடைய சம்பளம், 700 பவுன். மாதம் சுமார் 58 பவுன், அதாவது ரூபாய்க் கணக்கில் சொன்னால், ரூ. 758. இது ஒரு போலீஸ் கான்ஸ்டபிளுடைய சம்பளம். மாதம் ஒன்றுக்கு ரூ. 758; அதாவது இங்கே இருக்கும் அசிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடைய சம்பளத்திற்கு ஒப்பானது. அவர்களுடைய சம்பளம் கூட ரூ. 740 தான். பிரிட்டன் நாட்டில் இருக்கிற போலீஸ் கான்ஸ்டபிளுக்கு ரூ. 758 என்றால், ஓய்வு பெற்ற போலீசார் ஊதியத்தில் பாதியைப் பென்ஷனாகப் பெறுகிறார்கள். முப்பது ஆண்டு காலம் வேலைசெய்து விட்டு, ஓய்வு பெற்றால், மூன்றில் இரண்டு பங்கு ஊதியத்திலிருந்து கணக்கிட்டுத் தரப்படுகிறது.

இங்கே ஏறத்தாழ 27,006 போலீஸ் கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். இந்த மாநிலத்திலே அடிப்படைச் சம்பளம் ரூ. 65 முதல் ரூ. 90 வரை. ஒரு ஹெட் கான்ஸ்டபிளுக்கு ரூ. 85 முதல் ரூ. 105 வரை. அவர்கள் மாத்திரம் ஏறத்தாழ 3,089 பேர்கள் இருக்கிறார்கள். சப்-இன்ஸ்பெக்டர்கள் 1,314 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தரப்படும் சம்பளம் ரூ. 140. போலீஸ் இலாக்கா ஸ்டாஃப் நர்சுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் ரூ. 140 தான். அதாவது அடிப்படை சம்பளம். அதே நேரத்திலே, ஃபைர் சர்வீசிலே இருக்கிறவர்கள் சம்பந்தப்பட்டவரை அவர்களுக்கு உடை சலவை இவற்றிற்காகத் தரப்படும் படி ரூ. 1 முதல் ரூ. 3 வரை இருக்கிறது. ஃபைர் சர்வீசில் இருக்கிறவர் களுடைய உடை அடிக்கடி அழுக்கடையக் கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் அலவன்ஸ் ரூ. 1 முதல் ரூ. 3 வரை என்பது எப்படி போதுமானதாகும்? வசதிகள் இல்லாமையும் ஊதியம் குறைவாகத் தரப்படுவதும் நேர்மையையும், நீதியையும், நியாயத்தையும் சில சமயங்களிலே தவற விடுவதற்கான காரணங்களாக அமைகின்றன என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

மது விலக்குச் சட்டத்தின் காரணமாகக் கைது செய்யப்படுகிறவர்களில் சாராயம் குடித்தவர்கள் அதிகமாகக் கைது செய்யப்படுகிறார்கள். அதே நேரத்தில், சாராயம் காய்ச்சிய வழக்குகள் அந்த அளவுக்கு இல்லை. இதைத்தான் கனம் உறுப்பினர்கள் பலர் இங்கே சுட்டிக்காட்டினார்கள். எதிர்க் கட்சிகளிலே உள்ளவர்கள் கொஞ்சம் வெளிப்படையாகச் சொன்னார்கள். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள், அவர்களால் சொல் முடிந்த அளவுக்குச் சூசகமாகத் தெரிவித்தார்கள். 'மாமூல்' என்ற முறை, இந்தச் சாராயம் காய்ச்சும் இடங்களுக்குச் செல்லுகிற போலீஸ்காரர்களை, நடுவிலே நந்தி போல் இருந்து, தடுத்து நிறுத்தி விடுகிறது என்ற நிலை இங்கே எடுத்து விளக்கப்பட்டது. மாமூல் அங்கு மட்டுமா?

பள்ளிக்கொண்டா என்கிற பகுதியினுடைய போலீ ஸ்டேஷன். பருகூர் என்கிற பகுதியினுடைய போலீஸ் ஸ்டேஷன். காவேரிப்பாக்கம் என்ற பகுதியினுடைய போலீஸ் ஸ்டேஷன். இந்த இடங்களில் எல்லாம் போகிற வருகிற லாரிகளின் மொத்த எண்ணிக்கை ஒரு நாளுக்கு சுமார் 600 இருக்கும். இந்த 600 லாரிக்காரர்களும் எந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றாலும், ஏதோ ஆண்டவனுக்குக் கும்பிடு போடுவது போல, போலீஸ் ஸ்டேஷனில் லாரி ஒன்றுக்குப் பத்து பைசா கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டும் என்ற ஒரு நியதி இன்றையதினம் இருக்கிறது. இதை நான் இங்கே வெளிப்படையாக எடுத்துச் சொல்லுகிறேன். அந்தப் பகுதியிலே இருக்கும் பல சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இந்த உண்மை நிச்சயமாகத் தெரியும். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் ஒரு நாளைக்குச் சுமார் ரூ. 50, ரூ. 60 வசூலிக்கப்படுகிறது. காஞ்சீபுரம் போகும் வழியில் – முதல் அமைச்சர் அவர்களும் பார்த்திருக்கக்கூடும் – ஒரு கோயில் வாசலில் கார் போகும் நேரத்தில் ஒரு சிறுவன் ஓடி வந்து உண்டியைக் குலுக்குவான். இஷ்டப்பட்டவர்கள் காசு போட்டு விட்டுப் போவார்கள். ஆனால், இது அப்படி அல்ல. கண்டிப்பாக நிற்கவேண்டும். போலீஸ் ஸ்டேஷனுக்கு முன் வண்டி நிற்க வேண்டும். பத்து பைசா கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டும்.

கொள்ளிடம் பாலத்தில் சுங்க வரி செலுத்துவதைப் போல் இப்படிப் பங்கு தர வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை, இருக்கின்ற ஊதியம் போதாது என்கிற இந்த நிலைமைகளால் ஏற்படுகிற தவறுகள் இவை என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது.

மாண்புமிகு திரு. பூ. கக்கன் : ஊதியம் போதாது என்றால் இப்படி வாங்கவேண்டும் அல்லது வாங்குவது நல்லது என்று கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்களா?

கலைஞர் மு. கருணாநிதி : நான் சொல்லாவிட்டாலும் அப்படிச் சொல்லும்படியாக அமைச்சர் விரும்புகிறார் என்று கருதுகிறேன். நான் அப்படி நிச்சயமாக சொல்லமாட்டேன்.

பிரிட்டானிய நாட்டில் போலீசாருக்கு எப்படி அறிவுரை தரப்படுகிறது என்று சொன்னேன். இங்கே கூட, ஊட்டியில் அடிக்கடி போலீஸ் சூபரின்டெண்டுகள் மாநாடு நடைபெறுகிறது. அந்த மாநாட்டிலே கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் அவர்கள் இவைகளையெல்லாம் எடுத்து விளக்கியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்றுதான். சில பகுதிகளை நான் உள்ளபடியே வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

கைதிகள் துன்புறுத்தப்படுவதை அந்த மாநாட்டில் அமைச்சர் ஒருவர் வெகுவாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார். 'லாக் அப்' மாணவர்களைச் சுட்டிக்காட்டி, இவை தவிர்க்கப்பட வேண்டும், இவை அதிகமாகின்றன என்று கனல் கக்க அந்த மாநாட்டில் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ. வீட்டில் திருட்டு நடைபெற்ற வேடிக்கையையும் அமைச்சர் அவர்கள் அந்த ஊட்டி மாநாட்டில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ. வீட்டில் திருட்டு நடைபெற்றது. அந்தத் திருட்டு நடைபெற்ற பிறகு எம்.எல்.ஏ. போலீசில் புகார் செய்கிறார். உண்மையிலேயே திருடியவனைப் போலீசார் பிடிக்கவில்லை. மறாக ஒரு புதிய திருடனைப் பிடிக்கிறார்கள். புதிய திருடனைப் பிடித்தாலும் பழைய சாமான் அவனிடம் இருக்காது. ஆகவே, புதிய சாமானை அவன் கையில் கொடுத்து, இவன்தான் இந்த சாமானைத் திருடியவன்; இவன்தான் எம்.எல்.ஏ. வீட்டுச் சாமானைத் திருடியவன் என்று அவன் மீது வழக்கு

போடுகிறார்கள். எம்.எல்.ஏ. பறிகொடுத்த பொருள் அதுவா? என்று பார்க்கிறார். "இது நான் பறிகொடுத்த பொருள் அல்ல" என்று அந்த எம்.எல்.ஏ. கூறிவிடுகிறார். இதைக் கூட அமைச்சர் அவர்கள் ஊட்டி மாநாட்டில் எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

ஒரு போலீஸ் அதிகாரி தனக்கு வேண்டாத ஒருவரைக் கைது செய்கிறார். அப்படிக் கைது செய்துவிட்ட பிறகு அவன் மீது என்ன வழக்குப் போடுவது என்று யோசிக்கிறார். சுலபமான வழக்கு சாராய வழக்கு. அந்த வழக்கைத் தலையிலே சுமத்தி அவனைச் சிறையில் போடுகிறார். இதையும் அந்த அமைச்சர் ஊட்டியில் நடைபெற்ற போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் எடுத்து கூறியிருக்கிறார்.

இன்னொரு விபரீதம். அமைச்சர் அவர்களே அந்த மாநாட்டில் கூறியது. திருநெல்வேலியில் ஒரு கொலை நடைபெற்றது. அந்த கொலைக்கு முதல் நாளே, கொலை செய்யப்பட்டவர் போலீஸ்காரர்களுக்குத் தகவல் கொடுக்கிறார். "நான் இந்த நேரத்தில் கொலை செய்யப்படலாம். ஆகவே எனக்கு பாதுகாப்பு கொடுங்கள்" என்று அபயம் கோரி, போலீஸ் இலாக்காவிற்கு அவர், தன்னைப் பாதுகாக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார். ஆனால், போலீஸ் இலாகா அதைக் கவனிக்கத் தவறி விடுகிறது. திட்டமிட்டபடி கொலை நடந்து விடுகிறது. கொலை முடிந்த பிறகு, சிலரை சிறைக்குப் பிடித்துப் போனார்கள். அந்த எதிரிகளும் வழக்கிலே விடுதலை பெற்று விடுகிறார்கள். இப்படி ஒரு அக்கிரமம் நடைபெற்றிருப்பதை அந்த அமைச்சர் ஊட்டி மாநாட்டில் எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார். நான் 'அமைச்சர்', 'அமைச்சர்' என்று சொல்ல அவரை யாரோ எவரோ என்று ஆராயத் தேவையில்லை. மதிப்பிற்குரிய நம்முடைய முதல் அமைச்சர் அவர்களேதான் இவைகளையெல்லாம் அந்த ஊட்டி போலீஸ் அதிகாரிகள் மாநாட்டிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இவைகளை நாங்களா சொல்லுகிறோம்? இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் சொல்லப்பட்டிருக்கின்றன. போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தை நேர்மையான முறையில் பயன்படுத்தாமல், "நான் கொலை செய்யப்படுவேன், வந்து என்னைக் காப்பாற்றுங்கள்"

என்று அபயக் குரலைக் கொடுக்கும்போது ஓடோடி வந்து காப்பாற்றுவதற்குப் போலீஸ் இலாகாவிலே உள்ள முக்கியமானவர்கள் தயங்குகிறார்கள் என்றால், பிறகு யாருக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு இருக்க முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதே அமைச்சர், பிறகு 1965-ம் ஆண்டில் நடைபெற்ற ஊட்டி மாநாட்டில், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றிப் பேசப்பட்ட நேரத்தில், "இந்தி எதிர்ப்பின்போது எங்கள் மீது மாணவர்கள் கற்களை வீசினார்கள்" என்று ஒரு அதிகாரி சொன்ன நேரத்தில், "அவர்களையெல்லாம் இரக்கமின்றி கையை ஒடியுங்கள், காலை ஒடியுங்கள்" என்று கூறியதாக நான் கேள்விப்பட்டேன். (ஷேம், ஷேம்).

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : "கையை ஒடி காலை ஒடி" என்று நான் சொன்னதாக ஆதாரபூர்வமாகச் சொல்ல வேண்டுமேயொழிய 'ஷேம், ஷேம்' என்று சொல்லுவதில் பிரயோஜனம் இல்லை. "கையை ஒடி காலை ஒடி" என்ற வார்த்தைகள் என் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகள் அல்ல.

கலைஞர் மு. கருணாநிதி : 1961-க்கான நடவடிக்கைகள் பற்றிச் சொன்னேன். அதற்கான நடவடிக்கைக் குறிப்பு இருக்கும். அதேபோல் 1965-க்கான நடவடிக்கைக் குறிப்பை முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்தால். . . .

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : நான் சொன்னது எனக்குத் தெரியும். "கையை ஒடி காலை ஒடி" என்று ஒருக்காலும் நான் சொல்லவில்லை. அம்மாதிரி சொல் என் வாயிலிருந்து வரவே வராது.

கலைஞர் மு. கருணாநிதி : அது இல்லை என்று நிரூபிக்க வேண்டியது அமைச்சருடைய பொறுப்பு.

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : ஏதாவது ஒன்றைச் சொல்லி விட்டு, அதை நிரூபி என்பது ஒரு அற்புதமான முறையாக இருக்கிறது. எதையாவது ஒன்றைச் சொல்லிவிடுவது. பிறகு "இல்லை" என்று நிரூபிக்க வேண்டும் என்று சொல்வதென்றால் இதுவா முறை.

கலைஞர் மு. கருணாநிதி : நான் ஏதாவது ஒன்றைச் சொல்லவில்லை. இப்போதும் உறுதியாகச் சொல்லுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் அப்படிக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : அப்படி ஒருக்காலும் கூறவில்லை என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : அவர்கள் கூறுவது உண்மை என்றால், நடவடிக்கைக் குறிப்பை இந்த மன்றத்தில் வைக்க அவர்கள் தயாராய் இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : போலீஸ் மாநாட்டு நடவடிக்கைகளையெல்லாம் இங்கே வைப்பதில்லை.

கலைஞர் மு. கருணாநிதி : போலீஸ் அதிகாரி கொலையைத் தடுக்க முடியாமல் ஒரு கொலை ஏற்படுகிற அளவுக்கு நிலைமையை வளர்த்தார் என்று சொன்னேன். நடந்துவிட்ட கொலையைக் கண்டுபிடிக்கவில்லை என்றால் அது மிக பரிதாபம்.

1965ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் செங்கற்பட்டுக்குப் பக்கத்தில் ஒரு வாலிபனுடைய பிணம் - 27 அல்லது 28 வயது நிரம்பாத ஒரு வாலிபனுடைய பிணம் - கிடக்கிறது. தொடைக்குக் கீழே கால்கள் கிடையாது, கை விரல்கள் இல்லை, ரத்தமும் இல்லை என்றால் வேறு இடத்தில் கொலை செய்யப்பட்டிருக்கிறார். நான் இதைச் சொன்னால்கூட ஏதோ தெரியாமல் 'ரத்தம்' 'எலும்பு' என்று பேச ஆரம்பிக்கிறானே என்று காங்கிரஸ் கட்சி நண்பர்கள் சொல்வார்கள். ரத்தம் இருக்கும் காரணத்தால், அவைகளைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. அங்கே அந்தப் பிணம் கிடக்கிறது. அதனுடைய அடையாளங்கள் தெரியாத அளவுக்கு அங்கஹீனப்படுத்தப்பட்டு, அறுக்கப்பட்டு, காது அறுக்கப்பட்டு அந்தப் பிணம் செங்கற்பட்டிலே கிடக்கிறது. அந்த வாலிபனுடைய பையில் ஒரு பிரயாணச் சீட்டு இருக்கிறது. சென்னை எழும்பூரிலிருந்து திண்டிவனம் வரையில் செல்வதற்குப் பிரயாணச் சீட்டு இருக்கிறது. அந்தப் பிரயாணச் சீட்டோடு ஒரு மூன்று ரூபாய்க்குச் சில்லரைத் தொகை இருக்கிறது. அவன் டிக்கட் எடுத்த மூன்றாவது நாள்தான் அந்தப் பணம் அந்த இடத்தில் கண்டுபிடிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு போலீசார் சென்றார்கள். துப்பறியும் நாய் பயன்படுத்தப்பட்டது, இரயில்வே கேட் வரையில்

போயிற்று என்ற அளவுக்குத்தான் வந்ததே தவிர, கொலை நடந்தது உண்மை, பிணம் கிடந்தது உண்மை, கால் இல்லாத முண்டமாகக் கிடந்தது உண்மை, மூக்கு அறுபட்டுக் கிடந்தது உண்மை. ஆனால், இதுவரையிலும் அந்தக் கொலை கண்டுபிடிக்க முடியவில்லை. இது இன்றையதினம் இருக்கிற நிலைமை.

போலீஸ் அதிகாரிகள் இன்னும் பயங்கரமான தவறுகள் சில செய்கிறார்கள் என்பதற்குச் சில ஆதாரங்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பது என்னுடைய தலையாய கடமையாகும். பருகூரிலிருந்து பங்களூருக்குக் கிருஷ்ணகிரி வழியாக ஒரு லாரி போகிறது. லாரியினுடைய எண் MYM 4281. உமாசங்கர் டிரான்ஸ்போர்ட்டைச் சேர்ந்த லாரி. அதை ஓட்டிச் சென்ற டிரைவரின் பெயர் அப்பு. அந்த லாரி போயிருக்கிறது. போகிற நேரத்தில் பருகூர் போலீஸ் ஸ்டேஷன் ஸப்-இன்ஸ்பெக்டர் லாரியை நிறுத்துகிறார். பங்களூரை நோக்கிப் போகிற லாரிறைய நிறுத்துகிறார். டிரைவருக்கும் அவருக்கும் வாக்குவாதம் நடைபெறுகிறது. அந்த வாக்குவாதத்தைத் தொடர்ந்து டிரைவர் லாரியை ஓட்டிக்கொண்டு போய்விடுகிறார். உடனேயே இவர் இன்னொரு லாரியில் ஏறித் தொடர்ந்து பின்னால் போய் இருக்கிறார். அந்த லாரி டிரைவர் கிருஷ்ணகிரியில் லாரியை நிறுத்திவிட்டு டீ சாப்பிடப் போயிருந்த சமயம் இன்ஸ்பெக்டர் லாரியைப் பிடித்து அதில் ஏறிக்கொண்டு, அதை திரும்பவும் பருகூருக்குக் கொண்டு வருகிறார். இது அந்த லாரி டிரைவருக்குத் தெரியாமல் நடக்கிறது. வருகிற வழியில் எட்டு மைல் தொலைவில் இந்த லாரி விபத்துக்கு உள்ளாகிறது. இந்த விபத்து ஏற்பட்ட பிறகு, அந்த இன்ஸ்பெக்டர் அந்த லாரியின் முதலாளி சுப்பாராவ் என்பவருக்குத் தெரியப்படுத்தி, அவருடன் சமாதான முயற்சி செய்து கொண்டு 500 ரூபாய் ரொக்கமாகவும், மோகன்ராம் என்பவருக்கு 1,500 ரூபாய்க்குப் பாண்டு எழுதிக்கொடுத்து, அது சுப்பராவ் பெயரில் மேடோவரும் செய்யப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டு சர்வென்ட் தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்கக் கூடாது. அப்படி வாங்குவதாக இருந்தாலும் முன் கூட்டியே அனுமதி பெற்று வாங்க வேண்டும். இந்த வழக்கிலே குறிப்பிட்ட சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் மோகன்ராமிடம் கடன் வாங்கி யிருப்பதாக பாண்டு தயாரிப்பதற்குமுன் அனுமதி வாங்கியிருக்கிறாரா

அல்லது அதற்குப் பிறகு அனுமதி வாங்கியிருக்கிறாரா? இதை உள்துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று - பொறுப்பான சட்டமன்ற உறுப்பினர்கள் எங்காவது தவறு நடந்தால் அதை எடுத்துக்காட்டுகிறபோது எவ்வளவு அலட்சியப்படுத்தப்படுகிறது என்பதற்கு மேலும் ஒரு ஆதாரம் கூற முடியும். திண்டிவனப் பகுதியில் கொடிமா என்கிற கிராமம் இருக்கிறது. அங்கே இருந்த நடராச ஆச்சாரி, பெரிய தம்பி கவுண்டர் ஆகிய இரண்டு பேர்களும் சேர்ந்து ஒரு வாரச் சீட்டு நடத்தினார்கள். அந்தச் சீட்டுக்குப் பெயரே அண்டாச் சீட்டு. அதை நம்பி ஏராளமான பெண்கள் சீட்டுக்கு ரூபாய் 36.80 காசு வீதம் கொடுத்தார்கள். சீட்டு விழுபவர்களுக்கு அண்டா வாங்கிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சீட்டுக்குச் சேர்ந்த பணத்தை எடுத்துக் கொண்டு அந்த ஆசாமிகள் ஊரை விட்டே ஓடி விட்டார்கள். இவர்கள் ஓடிய விஷயத்தை 13-10-1965-லேயே மயிலம் போலீஸ் ஸ்டேஷனுக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து 19-10-1965-இல் திரு. தங்கவேலு, எம்.எல்.ஏ. அவர்கள் விக்கிரவாண்டி போலீஸ் ஸ்டேஷனுக்கு ரிஜிஸ்ட்டர் தபாலில் ஒரு மனு அனப்பியிருக்கிறார்கள். அந்தத் தபாலையே 22-ஆம் தேதி கையெழுத்திட்டுத்தான் அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வாங்கியிருக்கிறார். இதுவரை அதன் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மனுவைக் கூட இன்று நான் அமைச்சர் திருமுன் வைக்கிறேன்.

அடுத்து, மையூர் கிராமம் செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கிறது. அந்த மையூரில் ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்த ஊராட்சி மன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. திருவேங்கடம் அவர்கள் வெற்றி அடைந்தார்கள். அவருக்கு எதிராக தேர்தலில் வேலை செய்து தோற்றவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் அவர்கள். அவர் மத்திய அமைச்சர் திரு. அழகேசனின் மைத்துனர். அவர் திரு. திருவேங்கடம் அவர்களது வெற்றிக்கு எப்படிப் பாராட்டு நடத்தினார் தெரியுமா? திரு. திருவேங்கடம் மாமண்டூர் ஹோட்டலை விட்டு வெளியே வருகிறார். இவர்கள்

பத்துப்பேர்களாக அவரை இழுத்துப்போட்டு அடித்துவிட்டு ஓடியிருக்கிறார்கள். அடிபட்ட ஊராட்சி மன்றத் தலைவர் திரு. திருவேங்கடம் அவர்கள் மதுராந்தகம் போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் செய்தார்கள். அதற்குள் அவர்களுக்கு என்ன செய்தி கொடுக்கப்பட்டதோ, ரிப்போர்ட் செய்த திரு. திருவேங்கடத்தையே கைது செய்து உள்ளே தள்ளி விட்டார்கள். பத்துப்பேர்களாக சேர்ந்து தம்மை அடித்தார்கள் என்று ரிப்போர்ட் செய்யப் போனவரே கைதுசெய்யப்பட்ட விந்தையைப் பார்க்கிறோம். அதற்குப் பிறகு வழக்கு நடைபெற்றது. கீழ்க் கோர்ட்டிலே 50 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அப்பீலில் விடுதலை பெற்று விட்டார். அவர் வழக்கிலும் வெற்றி பெற்றுவிட்டார் என்ற ஆத்திரத்தில் "நீ விடுதலை பெற்று விட்டாயா? உன் தலையை வெட்டுவோம்" என்ற அவருக்குத் தபாலில் எழுதினார்கள். திரு. விஸ்வநாதன், எம்.எல்.ஏ. அவர்களும், திரு. திருவேங்கடம் அவர்களும் போலீஸ் ஐ.ஜி. அவர்களைச் சென்று நேரில் பார்த்து அந்தக் கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மறுநாள் வேறு ஒரு வழக்கைக் காட்டி அதே திரு. திருவேங்கடம் கைது செய்யப் பட்டிருக்கிறார். இந்த வகையில்தான் இன்றையதினம் போலீஸ் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது திருவண்ணா மலையில் பெரிய கலவரம் நடந்தது. அந்தக் கலவரத்தைத் தூண்டிவிட்டவர்களைப் பிடித்து அவர்கள் மீது எப்.ஐ.ஆர். தயாரிக்கப்பட்டது. ஆனால் அப்படித் தயாரிக்கப்பட்ட எப்.ஐ.ஆர்.-இல் இருந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள். அதன் காரணமாக என்ன ஆயிற்று? எப்.ஐ.ஆர் தயாரிக்கப்பட்டதோடு சரி, வழக்கு எதுவும் தொடராது அப்படியே விட்டுவிட்டார்கள். இப்படி சார்ஜ்ஷீட் போடாமல் விட்டதற்கக் காரணம் யாருடைய தலையீடு?

அடுத்து, தென்னார்க்காடு மாவட்டத்தில் திருவதி கிராமத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது. சில எதிரிகளைத் தேடிக்கொண்டு சப்-இன்ஸ்பெக்டர் சின்னப்பா என்பவர் போலீஸ்காரர்களுடன் கூட திருவதி கிராமத்திற்கு சென்றார்கள். காடாம்புலியூர் நிலைய குற்ற எண் 110/65, செக்ஷன் 147, 148, 341, 332, 307 ஐ.பி.ஸி. சம்பந்தப்பட்ட எதிரிகளை அவர்கள் தேடி

வந்தனர். அவர்களைக் கைதும் செய்துவிட்டனர். அந்த நேரத்தில் 6 பேர்கள் அவர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டு அடித்தனர். அவர்களையே கொலைசெய்ய முயன்றனர். எதிரிகளையும் விடுவித்துவிட்டனர். அந்த சப்-இன்ஸ்பெக்டரும், போலீஸ்காரர் களும் உயிருக்குப் பயந்து அடிபட்டு ஓடி வந்தார்கள். வந்து ஒரு படையுடன் கூடச் சென்று சம்பந்தப்பட்ட எதிரிகளைப் பிடித்துச் கைது செய்து அவர்கள் மீது பண்ருட்டி நிலையத்தில் எப்.ஐ.ஆர். தயாரித்தார்கள். "எங்களைக் கொலை செய்ய முயன்றார்கள்" என்றே எழுதி கையொப்பமிட்டிருக்கிறார் அந்த சப்-இன்ஸ்பெக்டர் சின்னப்பா அவர்கள். ஆனால் அந்த 6 பேர்களும் காங்கிரஸ் காரர்கள் என்று கேள்வி. நடந்தது என்ன? யார் தலையிட்டார்கள்? எங்கே வழக்குத் தொடரப்பட்டது? வழக்கே தொடரப்படவில்லை; அவர்கள் விடப்பட்டுவிட்டார்கள். போலீஸ்காரர்களுடைய கதியே இது என்றால் நீதி எங்கே இருக்கிறது? நியாயத்தை எப்படிப் பெறுவது? அந்த எப்.ஐ.ஆர். குறிப்பையும் அமைச்சர் திருமுன்பு வைக்க விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்று, நண்பர் திரு. மதியழகன் அவர்கள் பாகாப்புச் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். பத்திரிகைகள் மீது பாதுகாப்புச் சட்டம் - எழுதினால் பேசினால் - முரசொலி, மாலை மணி ஆகியவற்றின் மீது பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது. நான் ஒரு பத்திரிகையில் வந்த வாசகத்தை அப்படியே படித்துக் காட்டுகிறேன். அதைப் படித்த பிறகு கனம் அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு கோபம் வருமோ தெரியாது. தலைப்பு "கம்யூனிஸ்டுளும் நானும்" என்பதாகும்.

''நாளைக்கு ரஷ்யக்காரன் இந்த நாட்டின்மீது படையெடுத்தால் நான் ரஷ்யக்காரனை ஆதரித்து சுட்டுக் கொல்லப்படவோ அல்லது இந்நாட்டுச் சிறையில் இருக்கவோதான் தயாராய் இருப்பேனே யொழிய காங்கிரஸ் கட்சிக்கு இந்திய தேசாபிமானத்துக்கு அடிமையாக ஒரு நிமிஷமும் இருக்க சம்மதிக்க மாட்டேன். இத்தனைக்கும் நான் ஒன்பதுமாற்றுக் கம்யூனிசக்காரனுமல்ல". இத்தனையும் நான் எழுதியிருந்தால் கருணாநிதியை பாளையங்கோட்டைக்கு அல்ல, பாலைவனக் கோட்டைக்கே அனுப்பியிருப்பார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அத்தனைபேர்களையும் கண்காணாத் தேசத்திற்கு

அனுப்பியிருப்பார்கள். எழுதியது யார்? "நாளைக்கு ரஷ்யாக்காரன் படையெடுத்தால் நான் ரஷ்யாக்காரனை ஆதரித்து சுட்டுக் கொல்லப்படவோ அல்லது இந்நாட்டுச் சிறையில் இருக்கவோ விரும்புவேனே தவிர இந்திய தேசாபிமானத்துக்கு அடிமையாக ஒரு நிமிஷமும் இருக்கச் சம்மதிக்க மாட்டேன்'' என்று எழுதியவர் - எனக்குச் சொல்ல வெட்கமாக இருக்கிறது - இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கின்ற பெரியார் திரு. ஈ.வே.ரா. அவர்கள். 5-2-1966 "விடுதலை" பத்திரிகையில் இந்தத் தலையங்கத்தை எழுதியிருக்கிறார். பாதுகாப்புச் சட்டம் எங்கே போயிற்று? பாதுகாப்புச் சட்டம் பெரியார் என்ற பெயரைக் கண்டவுடனே மழுங்கிவிட்டதா? அவர் காலடியில் மண்டியிட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : எதிர்க்கட்சி உபதலைவர் அவர்கள் மிக உருக்கமாக, ஆத்திரமாகப் பேசுகின்றார்கள். அவர் சொன்ன கருத்துக்கும் இதற்கும் உள்ள அடிப்படையான வித்தியாசத்தை உணர வேண்டும். பாதுகாப்புச் சட்டத்தை உபயோகப்படுத்துவது என்றால் எந்தச் சூழ்நிலையில், எந்தச் சந்தர்ப்பத்தில், எந்த மாதிரியாக கருத்து வெளிப்படுத்தப் படுகிறது என்பதை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்துதான் உபயோகப்படுத்த வேண்டும். "ருஷ்யா படையெடுத்தால்" என்றால் ருஷ்யா நம் மீது படையெடுத்திருக்கும் காலத்தில் எழுதப் பட்டிருந்தால் அதுவேறு விஷயம். ருஷ்யா படையெடுக்கவும் இல்லை.

கலைஞர் மு. கருணாநிதி : ருஷ்யா படையெடுக்கவில்லை. ஆகவே, ருஷ்யா படையெடுத்திருந்தால் என்று எழுதப்பட்ட தலையங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் விடப்பட்டது என்கிற வாதத்தைவிட, தேர்தலில் அவரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நப்பாசை காரணமாகத்தான் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறதே தவிர வேறில்லை என்று பதில் கூறியிருக்கலாம் - நாளைக்கு வேறு பத்திரிகை "அமெரிக்கா படையெடுத்தால் அதை ஆதரித்து சுட்டுக் கொல்லப்பட்டாலும் சரி, தேசாபிமானத்தின் பேரால் இந்த நாட்டில் அடிமையாக இருக்கமாட்டோம்" என்று எழுதுவதற்கு மற்ற மற்ற பத்திரிகைகளுக்கு உரிமை கொடுக்கிறாரா என்ற கேட்கிறேன்.

தேசாபிமானம் தேவை இல்லை என்று ஒருவர் எழுதுகிறார். காங்கிரஸ் கட்சிக்கு இந்திய தேசாபிமானத்துக்கு அடிமையாக ஒரு நிமிஷமும் இருக்க சம்மதிக்கமாட்டேன் என்று ஒருவர் எழுதுகிறார்.

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : சிலர் அதை மறைமுகமாகத் தெரிவிக்கிறார்கள். சிலர் நேர்முகமாகத் தெரிவிக்கிறார்கள். அதுதான் வித்தியாசம்.

கலைஞர் மு. கருணாநிதி : இந்தப் பதில் முதல் அமைச்சர் அவர்களுக்கே திருப்தி அளிக்கக் கூடியதாக இருந்தால், அவரது மனச்சாட்சிக்கு சரியானதாகப்பட்டால் - கேவலம் சில பல வோட்டுக்களுக்காக இந்த நிலைக்குப் போய்விட்டார்களே என்று கவலை தெரிவித்து இதற்கு மேல் பேச விரும்பாமல் என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.



உரை : 4 நாள் : 15.03.1969

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள காவல்துறை மானியத்தின் மீது பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை யெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர வர்கள் எனக்கு, அவராகவே வலிய வந்து ஒரு பட்டத்தையும் இன்றையத்தினம் சூட்டியதற்கு நான் கைம்மாறாக எதாவது தர வேண்டும். அவர் என்னை 'கற்பனை ஜோதி' என்றார், ஆனால் இந்த மாமன்றத்தில், புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு. அவர் பேசுகின்ற பேச்சுக்களிலெல்லாம் வெடிக்கின்ற ஹாஸ்ய வெடிகளைப் பார்க்கின்ற நேரத்தில் அதற்குக் கைமாறாக, 'ஹாஸ்ய ஜோதி கருத்திருமன்' என்கின்ற பட்டத்தை (குறுக்கீடு) ஆசிய ஜோதி அல்ல, 'ஹாஸ்ய ஜோதி' என்கின்ற பட்டத்தை. . .

திரு. கே. வினாயகம் : ஹாஸ்யம் என்பது வடமொழியாயிற்றே.

மாண்புமிகு கலைஞர். மு. கருணாநிதி : உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும் என்பதால் அந்த மொழியிலே வைத்தேன்.

இந்த மானியத்தைப் பொறுத்தவரையிலும், எதிர்க் கட்சியிலே நாங்கள் இருந்தபொழுது போலீஸ் துறையினுடைய எல்லா வகையான கொள்கைகளையும் எடுத்து விமர்சித்திருக் கிறோம். அந்த நேரத்திலும் அடக்குமுறைகளைபற்றி எங்கள் கருத்துக்களையெல்லாம் அறிவித்திருக்கிறோம். ஆனால் எதிர்க் கட்சியின் தலைமைப் பொறுப்பிலேயிருந்த நாங்கள் அவ்வளவும் பேசிவிட்டு இறுதியாகவாவது அல்லது பேச்சிலே ஒரு பகுதியா கவாவது, கஷ்டப்படுகின்ற காவல் துறையினருக்கு இன்னின்ன சலுகைகளை வழங்க வேண்டுமென்பதை அந்த மானியத்திலே

894.8115
JAM
G002338

ANNA CENTENARY LIBRARY

பேசுவதை ஒரு முறையாகவும், மனப் பக்குவமாகவும், மனிதத் தன்மையாகவும் கருதி, அப்படியெல்லாம் பேசியிருக்கிறோம். ஆனால். . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்கள் கட்சியின் சார்பிலே திரு. மார்டின் அவர்கள் பூரணமாகப் பேசியிருக்கிறார்கள். நானும் பேசியிருப்பேன், நேரம் இருந்தால்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : யார் பேசியிருந்தாலும், எதிர்கட்சித் தலைவர்களிடமிருந்து ஒரு கோரிக்கையை எதிர் பார்த்தேன். காவல் துறையினருக்கு இன்னன்ன சங்கடங்கள் இருக்கின்றன, இவைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று சொல்வார்கள் என்று எதிர்பார்தேன். அப்படி அவர்கள் சொல்லவில்லை என்பது உள்ளபடியே எனக்கு வருத்தம் கொடுக்கக்கூடிய ஒன்றுதான். காவல் துறையைப் பற்றி அவர்கள் நடத்திய ஒரு விளையாட்டு விழாவில், மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "எந்தச் சமுதாயத்திலிருந்து போலீஸ் படையினர் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களோ அந்தச் சமுதயத்தைப் பிரதிபலிக்கின்ற நிலைக் கண்ணாடிகளாக அப்படையினர் விளங்குவார்கள். அந்தச் சமுதாயத்திலிருந்து வெகுதூரம் அவர்கள் விலகியிருப்பதில்லை. போலீஸ் படை நன்றாக நேர்த்தியாகச் செயல்படுகிறது என்றால் அது சமுதாயத்தின் தன்மையைக் காட்டும். அதேபோல போலீஸ் படையினர் எங்கேனும் செயல் ஆற்றுவதில் தவறுகள் இழைத்தால் சமுதாயத்தில் நிலவும் குறைப்பாட்டையே அவை காட்டுகின்றன.

தங்களால் உருவாக்கப்படாத பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். முரண்பாடு ஏற்படுகிற இடங்களில் எல்லாம் அவர்கள் இருந்தாக வேண்டி இருக்கிறது. சகலவிதத்திலும் சகிப்புத் தன்மையோடு அவர்கள் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. உள்ளக் கொந்தளிப்பு அடையாமல் பற்றற்ற அமைதியுடன் நடந்து கொள்ள வேண்டிய வர்களாக அவர்கள் இருக்கிறார்கள். பெற்ற சிறந்த பயிற்சிக்கு ஒப்ப, கடமை உணர்ச்சி மிக்கவர்களாக அவர்கள் நடந்து கொள்ள வேண்டி உள்ளது" என்கின்ற கருத்தினை பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த விழாவிலே உரையாற்றுகின்ற நேரத்தில் குறிப்பிட்டார்கள்.

இந்த மானியத்தின் மீது எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை நாம் சட்டமன்ற நடவடிக்கை நிகழ்ச்சிகளிலே இணைக்கிறோம். அது மாத்திரம் அல்ல, போலீஸ் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அவர்களே அவைகளைக் கவனமாகக் கேட்கின்ற வாய்ப்பும் இந்த மாமன்றத்திலே ஏற்பட்டிருக்கிறது. இங்கு எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளலாமோ ஏற்று, சிற்சில இடங்களில் சிறிய தவறுகள் நடை பெற்றிருந்தாலும் அவைகளைத் திருத்திக்கொள்ளுகின்ற அந்தப் பண்பினை போலீஸ் துறை நிச்சயமாகப் பெறும் என்ற நம்பிக்கையை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய நண்பர் திரு. டி. மார்டின் அவர்கள் பேசிய பொழுது, இந்த மானியத்தின் ஒதுக்கப்பட்ட சில தொகைகளின் வித்தியாசங்களை எடுத்துச் சொல்லி, அதில் குறைத்துவிட்டார்கள் என்று அறிவித்தார்கள். 1967-68-க்கும், 1969-70-க்கும் உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடித்து சுட்டிக்காட்டினார்கள். "ஆர்ம்ஸ் & அம்யூனிஷன்ஸ்" என்ற தலைப்பில் 1967-68-ல் 31½ லட்சம் ரூபாயும், 1968-69-ல் 14 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1969-70-ல் 14 இலட்சம் ரூபாய் என்று குறைத்திருக்கிறீர்களே, இப்படியிருந்தால் காவல்துறை எப்படி ஒழுங்காகக் கடமையாற்ற முடியும் என்று கேட்டார்கள். 1967-68-ல் அதற்கு முந்திய ஆண்டிலுள்ள பாக்கிகள், அதாவது அரியர்ஸ் 18 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியிருந்ததால் 32 இலட்சம் ரூபாய் என்று கணக்கு இருக்கிறதே தவிர வேறல்ல என்பதையும், அந்த 18 இலட்சம் ரூபாயையும் குறைத்துப் பார்த்தால் நாம் எதையும் அந்த ஆண்டிலிருந்து காவல் துறைக்குக் குறைக்கப்படவில்லை என்பதையும் மாண்புமிகு மார்டின் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகின்றேன்.

'குவாரண்டைன் ஸ்டாஃப்'க்கு 1967-68-ல் 64,438 ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1968-69-ல் 42,400 ரூபாயும், 1969-70-ல் 42,400 ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1967-68-ல் 'அதர் அலவன்ஸஸ்' என்ற தலைப்பில் 'மிஸ்கிளாஸிபிகேஷன் ஆஃப் அக்கவுண்ட்' ஏற்பட்டுவிட்டது. இதனால் இந்தத் தலைப்பில் மொத்தம் ரூ. 33,226 கணக்கில் புகுந்து விட்டது. ஆகவே, இதையும் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப்போல, டிஸ்டிரிக்ட் போலீஸ் மெயின்டனன்ஸ் ஆஃப் வெஹிகில்ஸ் என்ற தலைப்பில் 1967-68-ல் 33 இலட்ச டிரிக்ட் போலீஸ் மெயின்டனன்ஸ் ஆஃப் வெஹிகில்ஸ் என்ற தலைப்பில் 1967-68-ல் 33 இலட்ச ரூபாயும், 1968-69-ல் 29 இலட்ச ரூபாயும், 1969-70-ல் 29 இலட்ச ரூபாயும்உள்ளது. ஏறத்தாழ 4, 5 இலட்சம் குறைக்கப்பட்டிருக் கிறது. 1967-68-ல் 5 இலட்சம் அதிக மானதற்குக் காரணம் பழைய வாகனங்களைப் பழுது பார்ப்பதற்காக அப்பொழுது அந்தச் செலவு ஆகியிருக்கிறது. 1968-69, 1969-70-ல் புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுவிட்ட காரணத்தினால் பழுது பார்க்கும் செலவு குறைக்கப்பட்டிருக்கிறது. 'பாசேஸ் ஆஃப் நியூவெஹிகில்ஸ்' என்ற தலைப்பின் கீழ், 1967-68-ல் 11 இலட்சம் ரூபாயும், 1968-69-ல் 20 இலட்சம் ரூபாயும், 1969-70-ல் 32 இலட்சம் ரூபாயும் உள்ளது. எனவே, 1968-69-ல் புதிய வாகனங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன என்ற முறையிலும் பாராமரிப்புக்கான செலவு குறைந்தது நியாயம் தான் என்று நண்பரவர்கள் உணருவார்கள் என்று கருதுகின்றேன்.

குறைந்திருக்கும் இவைகளை மாத்திரம் சுட்டிக்காட்டி னார்கள் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கும் இனங்களை அவர்கள் சொல்லவில்லை. அதுதான் எதிர்க்கட்சிக்குள்ளன இலக்கணம் என்று வகுத்துக் கொண்டிருக்கும் காரணத்தால் அவர்கள் சொல்ல வில்லை என்று கருதுகிறேன்.

இரயில்வே போலீஸ் விஷயமாக 1967-68-ல் 31.21 இலட்சமும், 1968-69-ல் 34 இலட்சம் ரூபாயும், 1969-70-ல் 35.36 இலட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சி.ஐ.டி. விஷயமாக 1967-68-ல் 51 இலட்சமும், 1968-69-ல் 59 இலட்சமும், 1969-70-ல் 62.73 இலட்சமும், மானியங்கள் என்னும் விஷயத்தில் 1967-68-ல் 3.73 இலட்சமும், 1968-69-ல் 4.75 இலட்சமும், 1969-70-ல் 4.71 இலட்சமும், 'ஃபையர் சர்வீஸ்' விஷயத்தில் 1967-68-ல் 61 இலட்சமும், 1968-69-ல் 75 இலட்சமும், 1969-70-ல் 84 இலட்சமும், 'ஸிட்டி போலீஸ்' விஷயமாக 1967-68-ல் 158 இலட்ச ரூபாயும், 1968-69-ல் 195 இலட்ச ரூபாயும், 1969-70-ல் 220 இலட்ச ரூபாயும் என்கின்ற அளவுக்கு அதிகமாகி இருகிறது.

மொத்தத்திலே பார்க்கப்போனால் போலீஸ் துறைக்காக செலவழிக்கப்படுகிற பணம் 1967-68-ல் 12 கோடி, 1968-69-ல் 13.73 கோடி, 1969-70-ல் 14 கோடியே 70 லட்சம் ரூபாய் என்கின்ற

அளவுக்கு இது உயர்ந்திருக்கிறது என்பதையும் நாம் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ்நாட்டின் காவல்துறை எவ்வளவு சீரோடும், சிறப்போடும் தங்களுடைய கடமைகளை ஆற்றி வருகிறது? எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் குறிப்பிட்டதைப் போல் இன்று மாத்திரமல்ல, பல நாட்களாகவே, பல்லாண்டு காலமாகவே, தமிழ்நாடு காவல்துறை இந்த இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற எல்லா மாநிலங்களையும்விட சிறப்பு வாய்ந்தது, பாராட்டத்தக்கது என்பதற்கான புள்ளி விவரங்களை மத்திய அரசே தொகுத்து வெளியிட்டிருக்கிறது. அதன்படி பார்த்தால் ஓராண்டில் தமிழகக் காவல் துறையினர் எத்தகைய திறமை பெற்றிருக்கிறார்கள் என்பது வெகுத் தெளிவாக விளங்கும். அசாமிலே 100 குற்றங்கள் நடைபெற்றிருக்குமானால் அவைகளில் 6 சதவீதத்தைத்தான் அம்மாநில காவல்துறையினர் கண்டுபிடித்து தண்டனை வாங்கித் தந்திருக்கிறார்கள். பீகாரில் 12.8 சதவீதம் கண்டு பிடித்திருக்கிறார்கள், 87.2 சதவீதம் குற்றங்கள் கண்டுபிடிக்கப் படாமலேயே இருந்திருக்கின்றன. குஜராத்தில் 25.3 சதவீதமும், ஜம்மு காஷ்மீரில் 17.1 சதவீதமும், கேரளாவில் 33.9 சதவீதமும், மத்தியப் பிரதேசத்தில் 29.7 சதவீதமும், உத்தரப்பிரதேசத்தில் 18.8 சதவீதமும் கண்டு பிடித்து தண்டனை பெற்றுத் தந்துள்ளனர். ஆனால், தமிழ்நாட்டிலே மாத்திரம் 59.9 சதவீதம் வழக்குகள் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளன.

கொலை வழக்குகளில் அசாமில் 34.5 சதவீதமும், பீகாரில் 22.2 சதவீதமும், மத்தியப் பிரதேசத்தில் 39.1 சதவீதமும் கண்டு பிடிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே 52.5 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அளவுக்கு தமிழகத்தினுடைய காவல் துறைக்கு மத்திய அரசே புள்ளி விவரம் மூலமாக நல்ல மதிப்பைத் தந்திருக்கிறது. நம்முடைய எதிர்க்காட்சித் தலைவர் அவர்கள் 'கம்பனுடைய ஆட்சியா நடைபெறுகிறது, என்று அங்கலாய்த்துக்கொண்டு, ஆயாசப்படுத்திக்கொண்டு, 'கம்பனுடைய ஆட்சியில் கள்வர் இல்லாமையால் ஒரு காவலும் இல்லை' என்று குறிப்பிட்டார்கள். அது இராமனுடைய ஆட்சியிலே என்று சொல்லி இருந்தால் கூட நான் ஒத்துக் கொண்டிருப்பேன். கம்பன் ஆண்டதாக எனக்குத் தெரியவில்லை, அவர் தமிழை ஆண்டிருக்கிறார்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கம்பர் கண்ட இராமராஜ்யத்தில்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கம்பர் கண்ட இராமராஜ்யத்தில் கள்வர் இல்லையென்றார். சீதையையே தூக்கிப் போகிற கள்வன் இருந்தான் (சிரிப்பு).

திரு. பி. ஜி. கருத்திருமன் : அங்கு ஒரு எதிர்க்கட்சி உங்களைப்போல் இருந்து தூக்கிப் போயிருப்பார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 'கள்வர் இல்லாமையால் ஒரு காவலும் இல்லை' என்று குறிப்பிட்டார். ஏதோ இந்த இரண்டாண்டு காலத்திலேதான், தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசை நாங்கள் அமைத்த பிறகுதான் கள்வர்கள் அதிகப்பட்டு விட்டதைப்போலவும், அதற்கு முன்பு 20 ஆண்டு காலமாக இந்தப் புனிதர்கள் ஆண்டபோது, கள்வர்களே இல்லாததைப் போலவும், திருட்டுக்களே நடை பெறாததைப் போலவும் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். நான் 20 ஆண்டுக்காலம் பின்னோக்கிச் செல்ல விரும்பவில்லை. 1962-லேயிருந்து மட்டும் புள்ளிவிவரத்தைத் தருகிறேன், அவர்கள் புரிந்து கொள்வார்கள். 'கள்வர் இல்லாமையால் ஒரு காவலும் இல்லை' என்ற கருத்திருமனுடைய காங்கிரஸ் கட்சி ஆட்சி எவ்வாறு நடைபெற்றது திருட்டுகள் 20,252; 1963-ல் 19,622; 1964-ல் 20,880; 1965-ல் 20,007; 1996-ல் 22,612; 1967-ல் 22,923 என்கின்ற அளவிலே 22,000, 20,000 என்கின்ற அளவுக்கு 1962-லே இருந்து திருட்டுகள் அப்போதே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட திருட்டுகள், வழக்கு மன்றத்திற்கு சென்று அதனாலே பலர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக, கள்வர் இல்லாமலே, வேறு எந்தக்குற்றங்களும் இல்லாமேலே அவர்களுடைய கம்பர் ஆட்சி, காங்கிரஸ் ஆட்சி நடைபெற வில்லை என்பதை எடுத்துக்காட்டத்தான் இதைச் சொன்னேன்.

கொலைகளைப் பொறுத்தவரையிலே, 1962-ம் ஆண்டிலே 700, 1963-ம் ஆண்டிலே 681, 1964-ம் ஆண்டிலே 799, 1965-ம் ஆண்டிலே 723, 1966-ம் ஆண்டிலே 758, 1967-ம் ஆண்டிலே 740, 1968-ம் ஆண்டிலே 765 என்கின்ற அளவுக்கு நடந்திருக் கின்றன. தற்கொலைகளைப் பொறுத்தவரையிலே 1962-லே 1803, 1964-லே 1,651, 1965-லே 1,698, 1966-லே 1,799, 1997-லே 1,791

என்கின்ற அளவுக்கு இருந்திருக்கின்றன. எதுவுமே நடைபெற வில்லை, தி.மு.க. ஆட்சியிலேதான் கொலை, களவு, திருட்டு இப்படிப்பட்ட குற்றங்கள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்று அவர் கூறிய கூற்றுக்கு மறுப்பாகத்தான் இதைச் கூறுகிறேனே அல்லாமல், வேறு எதற்கும் சொல்லவில்லை. எந்த ஆட்சி நடைபெற்றாலும் காவல் துறை இருப்பதும் அதற்குப் பணம் செலவழிப்பதும், குற்றங்களைத் தடுக்கவும், செய்த குற்றங்களுக்குத் தண்டனை வழங்கவும்தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

மதுவிலக்கைப் பொறுத்தவரையில் இப்பொழுது எத்தனை குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன என்று எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார். 1967-லே ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து சொச்சம் இருந்தது, 1968-லே 2 இலட்சத்து 53 ஆயிரத்து சொச்சம் ஆகியிருக்கிறதே என்று கூறிவிட்டு, முன்னுக்குப் பின் முரணாக ஒன்றைச் சொன்னார்கள். இவர்கள் இப்பொழுது மதுவிலக்குக் குற்றவாளிகளைப் பிடிக்கவில்லை, காரணம் அவர்கள் ஏதோ ஒருவகையிலே இந்த ஆட்சியாளர்களுக்குத் தொடர்புடையவர் காளக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். எங்களுடைய ஆட்சியில் 2 இலட்சத்து 53 ஆயிரத்து சொச்சம் மதுவிலக்குக் குற்றவாளிகள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர் களுடைய ஆட்சியிலே ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து சொச்சம் மதுவிலக்குக் குற்றங்கள்தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பி. ஜி. கருத்திருமன் : குற்றம் செய்தவர்கள், உங்களுடைய ஆட்சியிலே தாராளமாகச் செய்கிறார்கள், எங்களுடைய. . . . . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எங்களுடைய ஆட்சியிலே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிறோம், தொடர் பில்லாத காரணத்தால். உங்களுடைய ஆட்சியிலே அவர்களில் பலர் விடப்பட்டிருக்கிறார்கள், உங்களோடு தொடர்பு கொண்ட காரணத்தால்.

சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைப்பற்றி அடிக்கடி, காவல் துறை மானியத்திலே மாத்திரமல்ல, எந்த மானியமாக இருந்தாலும், அது கவர்னருடைய உரைமீது விவாதமாக இருந்தாலும், வரவு-செலவு திட்ட விவாதமாக இருந்தாலும், எப்படி

அவர்கள் எந்தப் பிரச்னையானாலும் கொள்முதலைக் கொண்டு வருகின்றார்களோ அதைப் போலவே சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைப் பற்றி எல்லாவற்றிலும் பேசி இருக்கிறார்கள். ஆனால், காவல் துறை மானியத்திலே பேசுவது மிகுந்த பொருத்தம் உடையது என்ற காரணத்தால் தமிழ்நாட்டிலே சட்டம் இல்லை, அமைதி இல்லை, ஒழுங்கு இல்லை என்று நண்பர் மார்டின் அவர்களும், காங்கிரஸ் தரப்பிலே பேசிய உறுப்பினர் களும், இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதே வகையில் நன்கு வாதாடி இருக்கிறார்கள். சட்டம், அமைதி ஒழுங்கு இல்லையென்று ஏன் கூறுகிறார்கள்? ஏன் இப்படிப்பட்ட ஒரு சுலோகத்தை தி.மு.க அரசு தொடங்கியதிலிருந்து அவர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்? காங்கிரஸ் ஆட்சியின்போது எவ்வளவோ அராஜகங்கள் நடைபெற்றிருக்கின்றன. எத்தனை முதுகுளத்தூர்கள் நடைபெற்றிருக்கின்றன? அந்த நேரத்திலே கூட, எதிர்க்கட்சிக்காரர்கள் பிரச்சார மேடையில் சட்டம் இல்லை, அமைதி இல்லை, ஒழுங்கு இல்லை என்று பழைய 'வந்தே மாதரம்' போல் ஒரு சுலோகம் வைத்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால், தி.மு.க. அரசு தொடங்கிய காலத்திலிருந்து காங்கிரஸ் நண்பர்கள் மேடைதோறும், இந்த மன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பு கிடைக்குந் தோறும் இதையே திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றார்கள். இந்திய அரசியல் சட்டப் பிரிவுகள், 352, 356, 360-ன்படி உள் நாட்டுக் குழப்பங்கள் ஏற்படும்போதும், அரசியல் சட்டம் பாது காக்கப்படாமல் சட்டம், ஒழுங்கு கெடும்போதும் ஜனநாயக யந்திரம் செயலற்றுப்போகும் போதும், பொருளாதாரத்தில் குழப்பம் ஏற்படும்போதும், மத்திய அரசு தலையிட்டு ஜனாதிபதி ஆட்சி ஏற்படுத்தலாம் என்றிருக்கிறது. இதை அப்படியே வளர்த்துக் கொண்டு போய் ஜனாதிபதி ஆட்சியை கொண்டு வருவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள் என்றுதான் திட்டவட்டமாக நம்புகிறேன். அதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய பேச்சிலே சொன்னார். ஆறு மாத காலக் கட்டம் தருகிறோம். அதற்குள் திருந்தாவிட்டால் புரட்சி, அந்தப் புரட்சி அடிப் படையிலே சட்டம், அமைதி, ஒழுங்கு என்கின்ற பேச்சு, மத்திய சர்க்காருடைய தலையீடு. எந்தப் புரட்சியாக இருந்தாலும், சர்ச்சில் சொன்னாரே 'London can take it' என்று அதைப் போல் திராவிட

முன்னேற்றக் கழக அரசு அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. (பலத்த ஆரவாரம்). ஆனால் நியாயமான காரணங் களுக்காகப் போராடுங்கள், நேர்மையான காரணங்களுக்காகப் போராடுங்கள், அதை விட்டு விட்டு சட்டம் இல்லை, அமைதி இல்லை, ஒழுங்கு இல்லை என்று ஒரு தவறான பிரச்சாரத்தை, ஒரு கற்பனைப் பிரச்சாரத்தை மக்கள் நம்பாத ஒன்றை எடுத்துச் சொல்லி, அதன் காரணமாக நாங்கள் ஒரு புரட்சி ஆரம்பிக்கிறோம் என்று சொன்னால், புரட்சிக்குப் பிறகு என்ன ஆகும்? இந்த அரசு கவிழும். கவிழட்டும். கவிழ்ந்த பிறகு என்ன ஆயிற்று மேற்கு வங்காளத்தில்? (ஆரவாரம்). கவிழ்த்தீர்களே கேரளத்தில், கவிழ்ந்தபிறகு என்ன ஆயிற்று கேரளத்தில்? கவிழ்த்தீர்களே பஞ்சாபில், என்ன ஆயிற்று பஞ்சாபில்? (ஆரவாரம்) கவிழ்ந்தீர்களே, கவிழ்த்துக் கொண்டீர்களே, என்ன ஆயிற்று புதுவை மாநிலத்தில்? நீங்கள் கவிழ்க்கக் கவிழ்க்க நாங்கள் கட்டுமரம்போல், உருண்டு, திரண்டு கலம்போல் வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகமும், தோழமைக் கட்சிகளும் ஆட்சி அமைக்கும் என்று துடிப்போடு அல்ல, மிகுந்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த ஆரவாரம்).

சட்டம், அமைதி கெட்டுவிட்டது என்று கூறுகிறீர்களே? நான் பிற மாநிலங்களை ஒப்புநோக்கிக் காட்டினால், அங்கே நடப்பதையெல்லாம் சொல்லவேண்டுமா, முன்பு நடந்ததை யெல்லாம் சொல்லவேண்டுமா என்று சொல்வீர்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், எந்த அரசாங்கத்திலும், இப்படிப்பட்ட காரியங்களை தவிர்க்க முடியாதவைகாளக ஆகிவிடக்கூடும். அப்படி ஆகிவிடுகிற நேரத்தில் மற்ற மாநிலங்களைவிட அதிகமாக நம்முடைய மாநிலத்தில் நடைபெற்றுவிடவில்லை என்பதை எண்ணிப் பார்ப்பதற்குத்தான் இந்த புள்ளி விவரங்களை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

1968-ல் செப்டம்பர் திங்கள் 19-ம் தேதி டெல்லியில் நடந்தது. மத்திய பொதுப்பணித்துறை அலுவலகங்களும், வேறு சில மத்திய அலுவலகங்களும் உள்ள இந்திரபிரஸ்த பவனுக்குள் போலீசார் நுழைந்து சர்க்கார் ஊழியர்கள் மீது தடியடிப் பிரயோகம்

செய்து துரத்தி அடித்தனர். இரு நபர்கள் உயிரிழந்தனர். சுமார் 300 பேர் காயமடைந்தனர். இந்திரபிரஸ்த எஸ்டேட்டில் இந்திரபிஸ்த பவனுக்கும் விகாய பவனுக்கும் இடையேயுள்ள ரஸ்தாவிஸ் ஊழியர்களை ஜனசங்க எம்.பி. ஒருவர் சமாதானப்படுத்த முயற்சித்துக்கொண்டிருந்தார். அப்போது பிற்பகல் 2 மணி, போலீஸார் முன்னெச்சரிக்கைத் தராமல் தடியடிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். இடைவேளையின்போது ஊழியர்கள் சிறு கூட்டமாகக்கூடினர். அவர்களைக் கலைக்கப் போலீசார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வெடித்தனர். ஊழியர் கோஷ்டியினர் மேல் மாடியில்கூடி போலீசார் மீது கற்களையும், பாட்டில்களையும், இதர பொருள்களையும் வீச ஆரம்பித்தனர். இந்திரபிரஸ்த பவனில் பல்வேறு மாடிகளில் சூப்பரின்டெண்டிங் என்ஜினியர் ஒருவர் உட்பட சில சர்க்கார் அதிகாரிகள் போலீசாரால் அடிக்கப்பட்டனர். அதிகாரிகள் வெளியே இழுத்துவரப்பட்டனர். காயமடைத்தவர்களில் அநேகர் உடனடியாக கவனிக்கப் படவில்லை. அநேகப் பெண் ஊழியர்களுக்கும் தடியடி கிடைத்தது. முகம் கழுவும் அறைக்குள் ஒடி ஒளிந்த பெண்கள் வெளியே இழுத்து வரப்பட்டனர் . . . . . இது நடந்தது மத்திய அரசு சர்க்கார் ஊழியர்கள் போராட்டம் நடைபெற்ற நேரத்தில்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : என்ன நடவடிக்கை எடுத்தார்கள் மத்திய சர்க்கார் தெரியுமா?

THIRU K. VINAYAKAM : Police official were suspended and some of them were dismissed also.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதைப் போலவே இந்த சர்க்காரும் செய்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : வெளி மாநிலங்களைப் பற்றிக் குறிப்பிடுவதைப் பற்றி எனக்கு ஆட்சேபனை கிடையாது. அது மாதிரி இங்கும் நடக்கவேண்டும் என்று விரும்புகிறார்களா? இங்கே ஓரளவுக்கு நடந்திருக்கிறது. மற்ற மாநிலங்களில் நடந்த அளவுக்கு இங்கே நடக்க வேண்டுமென்று காத்துக்கொண்டிருக் கிறார்களா? அல்லது நடந்தது தவறு, இனிமேல் அப்படி நடக்காமல் திருத்திகொள்ளவேண்டும் என்று கருதுகிறார்களா? . . . . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் ஒப்பிட்டுக் காட்டியது டெல்லியில் நடைபெற்றதைவிட, குறைந்த அளவுக்குத்தான் இங்கே நடந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்ப்பதற்குத்தான், அப்படிப்பட்ட இந்த மாநிலத்தில் நீங்கள் ஆறு மாதம் கெடு கொடுக்கிறீர்கள். அங்கெல்லாம் எத்தனை மாதம் கெடு கொடுப்பீர்களோ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : நாங்கள் ஆறு மாதம் கெடு எதற்காகக் கொடுத்தோம்? தவறான பொய் வழக்குகள் பல இடங்களில் போடப்பட்டிருக்கின்றன, அரசியல் நோக்கத்தோடு. அவற்றையெல்லாம் பைசல் செய்து நல்ல முறையில் செயல்பட வேண்டும். இல்லையென்றால் அதற்காக நாங்கள் போராடுவோம் என்றுதான் கூறினேன். முதல் அமைச்சர் அவர்கள், அதற்குள்ளே 'இது ஒரு அரசியல் பிரசாரம், ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வருவதற்குத்தான் இப்படியெல்லாம் செய்கிறார்கள் என்றெல்லாம் கற்பனை உலகத்தில் சென்றுகொண்டிருக்கிறார்கள். அப்படி யெல்லாம் சொல்லவேண்டுமென்றால் நான் தைரியமாகச் சொல்வேன். மறைத்துப் பூசிப் பேசவேண்டிய தேவையில்லை. இது மாதிரி சரியாக நடக்கவேண்டும். அதற்கு ஒரு சந்தர்பத்தை நாங்கள் கொடுக்கிறோம், நாங்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறோம் என்றுதான் சொன்னேன். அதைத் தவறான முறையில் எடுத்துக்கொள்ளவேண்டாம். இதுமாதிரி இதை யெல்லாம் பைசல் செய்தால் தமிழ் நாட்டில் சட்டம், அமைதி பாதுகாக்க உதவியாக இருக்கும் என்றுதான் சொன்னேன் என்று மனதிற்குத் தெரியும். அப்படியில்லையென்றால், எங்கள் ஊழியர் களுக்குக் கஷ்டம் என்றால், நாங்கள் போராட்டம் ஆரம்பிக்க வேண்டியிருக்கும் என்றுதான் சொன்னேன். அப்படி நிலைமை ஏற்படாமல் இருக்கும், அதற்கு வேண்டியதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன் என்று வார்த்தைகளையும் நான் சொன்னேன். அதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நாங்கள் செய்கின்ற நல்ல காரியங்களை 'அல்ல' என்று கூறி, 'நாங்கள் அதற்கு ஒரு போராட்டம் ஆரம்பிப்போம்' என்று சொன்னால், அப்பொழுது அந்த நேரத்தில் நாங்கள் அதற்குப் பதில் சொன்னால், இது கற்பனை என்று அப்படியே விட்டுவிடுவார்களா?

திரு. பி. ஜி. கருத்திருமன் : போராட்டம் என்றால், பொது மக்கள் ஆதரவு வேண்டும். போராட்டம் என்றால் விளையாட்டு இல்லை, மக்கள் ஆதரவு இருக்கவேண்டும். மக்கள் உணர்வு இருக்கவேண்டும். . . . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இப்பொழுதாவது அதைப் புரிந்து கொண்டீர்களே? புரிந்துகொண்டதற்கு நன்றி. மேற்கு வங்கத்தில் 10 மாதங்களில் 315 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்துள்ளன. இதன் காரணமாக 115 பேர் இறந்துள்ளார்கள் (குறுக்கீடு). அவசரப்படாதீர்கள், அதற்காகத்தான் நான் இப்படிச் சொன்னேன். குடியரசுத் தலைவரின் ஆட்சி நடைபெற்ற நேரத்தில், நான் உங்களைப் புரிந்துகொண்டுதான் அப்படிச் சொன்னேன். நீங்கள் உடனே கூட்டணி என்று கூச்சலிடுவீர்கள், மறுபடியும் உங்களை மடக்கலாம் என்றுதான் அப்படிச் சொன்னேன். அதில் வெற்றியும் பெற்றுவிட்டேன்.

பீகாரில் 54 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்துள்ளன. அதில் 41 பேர் இறந்துள்ளனர். உத்திரப்பிரதேசத்தில் 52 தடவை துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது. இதில் 47 பேர் இறந்துள்ளனர். பஞ்சாபில் 8 முறை துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது. இதில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

சட்டம், அமைதி கெட்டுவிடுகிறது என்கின்ற காரணத்தை அடிக்கடி சொல்லி இங்கிருக்கிற தி.மு.க. அரசின் மீது மாசுமரு வினை ஏற்படுத்தலாம், அல்லது ஒரு போராட்டத்தைத் தொடங்கலாம் என்கின்ற எண்ணம் எவ்வளவு தவறானது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் நான் இவைகளையெல்லாம் எடுத்துச் சொன்னேன் அல்லாமல், ஏதோ எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். நான்பதிலுக்கு இதை எடுத்துக்கொண்டு ஆணவத்தோடு சொல்கிறேன் என்பது அல்ல. அவர்கள் இப்படி ஒரு போராட்டம் நடத்தினால் பொதுமக்கள் ஆதரவு கிடைக்குமா என்று அவர்களுக்கே சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. அப்படி அவர்கள் ஒரு போராட்டத்தைத் தொடங்கினால் தி.மு.க. சர்க்கார் என்ன, காவல்துறை என்ன சும்மா இருக்கமா? ஏன், அவரே சொல்லியிருக்கிறார். தி.மு.க. சர்க்கார் போலீஸை முடக்கிப்போடக் கூடாது, உத்தரவிடக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்.

அப்பொழுது காவல்துறையினர் கை என்ன செய்யும்? பூவையா பறித்துக்கொண்டிருக்கும்? 'நீங்கள் போலீஸ் நடவடிக்கையைத் தடுக்கக்கூடாது. நீங்கள் எந்தவிதமான அறிவுரையும் அவர்களுக்கு வழங்கக்கூடாது' என்று குறிப்பிட்டுவிட்டு நீங்களே 'ஒரு போரட்டத்தைத் தொடங்குவோம்' என்று சொல்லி அதற்கு ஆறு மாத தவணை வைக்கிறீர்கள். இது இரண்டாவது ஆறு மாத தவணை, முதலில் நாங்கள் ஆட்சிக்கு வந்தபொழுது ஒரு முறை தவணை வைத்தீர்கள். இங்கே ஆறு மாத தவணை கொடுக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சி பெரிய தலைவர்கள் 6, 7 நாள் என்று சொல்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எதற்கு முதலில் ஆறு மாதம் என்று சொன்னார்கள்? ஆறு மாதத்திற்கு தி.மு.க. ஆட்சியைப்பற்றி ஒன்றும் பேசக்கூடாது என்றுதான் தவணை வைத்தோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சாட்டையால் அடிப்போம் என்று சொன்னார்கள், அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை கடலூரில் வீதி வீதியாக இழுத்து, சாட்டையால் அடித்திருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். இவையெல்லாம் தமிழ்நாட்டுப் பண்பாட்டிற்கு ஏற்றவைகள், அரசியல் நாகரிகத்திற்கு உட்பட்டவைகள் என்பதாக எதிர்க்காட்சித் தலைவர் அவர்கள் கருதுகிறார்களா என்பது எனக்குப் புரியவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இப்போது ஆட்சியில் இருக்கும்படியான அமைச்சர்கள் 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரிசி போடுவோம். படி அரிசி போடவில்லை என்றால், முச்சந்தியில் வைத்து எங்களை சாட்டையால் அடியுங்கள்' என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதைத்தான் அவர்கள் செய்தார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இப்படி சொன்னதைச் செய்தார்கள் என்று சொன்னால் அதை ஆதரித்தார்கள் என்றுதான் அர்த்தம் முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் தலைவர், 'ஆளுக்கு ஒரு வீடு தருவோம்' என்று சொன்னார். தமிழ் நாட்டில் காங்கிரஸ் வெற்றி பெறாவிட்டாலும், அகில இந்திய ரீதியில் பல மாநிலங்களில் வெற்றி பெற்றுவந்திருக்கிறது. ஆளுக்கு

ஒரு வீடு அவர்களால் தரமுடியவில்லை என்பதற்காக காமராஜ் அவர்களின் சிலையை ஆந்திராவில், மைசூரில் செய்து வைத்து "நீங்கள் என்ன செய்தீர்கள், ஆளுக்கு ஒரு வீடு கட்டிக்கொடுக்க முடியவில்லையே?" என்று எங்கள் அண்ணாவின் சிலைக்கு நடந்தது போல செய்யலாமா என்றால், எதிர்க்கட்சியினர் அப்படிச் செய்யமாட்டோம். எதிர்க்கட்சியினருக்கு அந்த அளவுக்கு பண்பாடு குறைந்த மனம் கிடையாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடலூரில் நடந்ததற்கு வருத்தம் கூறவில்லை. 'நீங்கள் சொன்னீர்கள், ஆகவே, அப்படிச் செய்தார்கள் என்று கருதுகிறேன்' என்று கூறினால், எங்களுக்கு இருக்கிற சங்கடம், இப்படி நடைபெறுகின்ற காரியங்களையெல்லாம் எங்களிடத்தில் பேசுகின்ற நேரத்தில், அல்லது இந்த மன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் ஏதோ கண்டிப்பதுபோல கண்டித்துவிட்டு, பிறகு அப்படிச் செய்கிறவர்களை மேலும் மேலும் ஊக்குவிக்கிற நிலையில்தான் இருக்கிறார்கள் என்று நாங்கள் கருத வேண்டியிருக்கிறது.

பத்திரிகைகளின் தரம் பற்றி பேசப்பட்டது. கவர்ச்சிப்படம் போடும் பத்திரிகை என்றெல்லாம் பேசினார்கள். காவல்துறை மானியத்தில் பாதிப்பகுதியை பத்திரிகைத்துறை மானியமாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாற்றிவிட்டார்கள். நான் சொல்கிறேன், இப்பொழுதுகூட உறுதி அளிக்கிறேன். அவர்கள் பேசிய பேச்சு மூலம், கவர்ச்சிப்படம் போடும் பத்திரிகை என்று அவர்களால் கருதப்படுகிற பத்திரிகைகள்கூட அதைத் திருத்திக் கொள்ளக்கூடும். அப்படிப்பட்ட பத்திரிகை தி.மு.க. பேச்சைக் கேட்கிற பத்திரிகை என்று எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக்கொண்டால் நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். அந்தப் பத்திரிகை நிச்சயம் திருத்திக் கொள்ளக்கூடும். அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் கட்சி ஆதரவிலே உள்ள பத்திரிகையிலிருந்து சில வாசகங்களை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். அப்படி இனி அந்தப் பத்திரிகையில் வராது என்று கூறி பொறுப்பேற்றுக்கொண்டு, அதைச் செயல்படுத்திக் காட்ட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தயாராக இருக்கிறார்களா? முடியாது அவரால், அதுதான் அவர் எழவில்லை.

ஒரு பத்திரிகையில் வருகிறது. காவல்துறை பற்றி வந்திருக்கிறது.

> ‘‘மதுரையிலே நாலைந்து வாய்தாக்களுக்கு நெடுமாறனைக் கைது செய்யப் பயந்து அவமானமுற்ற போலீஸ் நாய்கள் ஒரு காரணமுமில்லாமலே நமது தோழர் களைத் தாக்கி இருக்கின்றன.
>
> – கடிதம் 6-3-69”

> ‘‘போலீஸ் இலாகாவிலுள்ள பேதைகளுக்கு என்னுடைய கடைசி எச்சரிக்கை ஒன்று. இன்றைய ஆட்சி தன் மரணப் படுகுழியை வேகமாகத் தோண்டிக் கொண்டிருக்கிறது. இதை நம்பி சட்டத்திற்குப் புறம்பான காரியங்களில் போலீஸ் ஈடுபடுமானால் அதன் அழிவு வெகு தூரத்தில் இல்லை,
>
> – கடிதம் 6-3-69”

1969-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு வருவதற்கு முன்பு தேர்தல் பிரசாரத்தின்போது, மைலாப்பூரில் திரு. அரங்கண்ணலை ஆதரித்துப்பேசிய கூட்டத்தில், காவல் துறையினர் வெகு பாரபட்சமாக நடத்துகிறார்கள். ஆட்சியாளர் களின் பக்கம் சேர்ந்து கொண்டு அடக்கு முறைக்கு ஆளாக்கு கிறார்கள் என்று நாங்கள் உணர்ந்து, அன்றைக்கு நான் சொன்னேன், ‘ஒரே ஆட்சி என்பது நிச்சயமில்லை; ஆட்சி மாறி மாறி வரும்; கட்சிகள் மாறி மாறி ஆட்சிக்கு வரும்; ஆறு நாள் தான், அரசு மாறக்கூடும், எங்களை அடக்குமுறைக்கு ஆளாக்கா தீர்கள் என்று. அதே இடத்தில் மறுநாள் பக்தவத்சலம் பேசியிருந் தார்கள், எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருந்தது. “கருணாநிதி ஆட்சி மாறும் என்ற ஒரே வார்த்தைக்கு எச்சரிக்கிறேன், சட்டப்படி வழக்குத் தொடரப்படும்” என்று பக்தவத்சலம் குறிப்பிட்டிருந்தார்கள். என் நல்ல காலமோ என்னமோ, ஆறு நாளைக்குப் பிறகு அவர் ஆட்சிக்கு வரவேயில்லை; வந்திருந்தால் ஒருகால் பாளையங்கோட்டைக்குப் பதில் ஒரு பாலைவனக் கோட்டையைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடும். இவை அந்த அளவிற்குத் தரக் குறைவான வார்த்தைகள்? பத்திரிகையில் போட்டிருக்கிறது. “இதை நம்பி சட்டத்திற்குப்

புறம்பான காரியங்களில் போலீஸ் ஈடுபடுமேயானால் அதன் அழிவு வெகு தூரத்தில் இல்லை'' என்று. இது காங்கிரஸ் பத்திரிகையில் வந்திருக்கிறது. இன்னும்,

"72-க்குப் பிறகும் உத்தியோகம் பார்க்க விரும்புகிற போலீஸ்காரன் இப்போதே ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும்."
- கடிதம் 6-3-69"

அதே பத்திரிகையில் இன்னும்.

"அதோடு நமது எம்.எல்.ஏக்களுக்கு ஒரு வார்த்தை."

''மதுரையில் போலீஸ் நடத்திய பொறுக்கித் தனத்துக்கு ஒரு முடிவு கட்டியாகி வேண்டும்."
-கடிதம் 6-3-69"

"நெடுமாறனை கைது செய்ய போலீஸ் நாய்கள் மோப்பம் பிடித்து அலைகின்றன."

"வாரியார் தாக்கப்பட்டபோது நெய்வேலி போலீஸ் இலாகாவிலிருந்த பெண்கள் கையைக் கட்டிக் கொண்டிருந்திருக்கின்றனர்."

- கடிதம்.

பெண்கள் போலீஸ்காரர்களே கிடையாது. இந்த வார்த்தைகளால், போலீஸ்காரர்களுடைய அனுதாபத்தை இழப்பதோடு மட்டுமல்லாமல், பெண்களையும் அவமானப்படுத்தி, அவர் களுடைய ஓட்டுக்களையும் இழக்கிறார்கள். மேலும்,

"போலீஸாரின் திமிர்வாதப் போக்கினை - அராஜக வெறித்தனத்தை எதிர்த்து, பிப்ரவரி 2-ந்தேதியன்று மதுரை மாநகரில் பிரம்மண்டமான கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெறும்."

"தக்கலை இன்ஸ்பெக்டர் ரூ. 10-க்கு விலை போனார்."

"இரண்டாண்டு கால தி.மு.க. ஆட்சியில் போலீஸ் காரர்கள் என்போர் காமவெறியர்களாகவும். கடைந் தெடுத்த காலிகளாகவுமே பெருமளவு மாற்றப்பட்டுள்ளனர்

அல்லது மாற்றம் பெற்றுள்ளனர் என்ற உண்மையே நாளும் உறுதியாகி வருகிறது,"

"மதுரை போலீஸ் ரௌடிகள் பிரம்பால்தானே அடித்தனர் என்று பெரிய மந்திரி, கருணாநிதி கூறுகிறார்."

திரு. பி. ஜி. கருத்திருமன் : தயவு செய்து சொல்ல வேண்டும், காங்கிரஸ் பத்திரிகை என்பதற்கு என்ன ஆதாரம்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நாள் பத்திரிகை "கடிதம்" "நாத்திகம்" காங்கிரஸ் பத்திரிகைகள் இல்லையா?

திரு. பி. ஜி. கருத்திருமன் : காங்கிரஸ் கட்சிப் பத்திரிகை என்று ஏற்றுக்கொள்ள முடியாது. அது எங்கள் கட்சிப் பத்திரிகை இல்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அந்தப் பத்திரிகைக்காரர்கள் காங்கிரஸ்காரர்களா, இல்லையா?

திரு. பி. ஜி. கருத்திருமன் : காங்கிரஸ்காரர் நடத்துவதால் அது காங்கிரஸ் பத்திரிகை என்று சொல்லிவிட முடியாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவர்கள் அதை ஒத்துக்கொண்ட வரையில் நன்றி. நாளைக்குக் கொடுப்பார்கள்; அந்தப் பத்திரிகைகளில் கருத்திமனைப் பற்றி வரும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது மலிவான பிரசாரத்திற்கு வேண்டுமானால் உதவும். அநத்ப் பத்திரிகைகள் காங்கிரஸ் பத்திரிகை இல்லை. கவர்ச்சிப் படம் வந்தது யார் பத்திரிகை?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இப்படிப்பட்ட பதிலை வைத்துக் கொண்டிருக்கும்போது, அந்தப் பத்திரிகையைப் பற்றிப் பேசியிருக்கக்கூடாது.

மதுவிலக்கைப் பற்றி அதிகமாகப் பேசப்பட்டது. ஒரு ஆண்டு காலத்திற்கு இருக்கட்டும், அடுத்த ஆண்டு அதை ரத்து

செய்யலாம் என்று உறுப்பினர் திரு. இளம்வழுதி குறிப்பிட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் வலியுறுத்தப்பட்டது. முதல் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டவுடன், அறிஞர் அண்ணா, மதுவிலக்கை தீவிரமாக அமுல்படுத்துவோம் என்று சொன்னார்கள். அதற்கு ஏற்றவாறு எல்லா நடவடிக்கைகளும் தமிழக அரசு எடுத்துவருகிறது; குறைபாடுகள் இங்கொன்றுமங் கொன்றும் இருக்கலாம்; குறைபாடுகள் இருப்பதால் சிலபேர் மதுவிலக்குச் சட்டத்தை மீறி நடக்கிறார்கள் என்பதால், அந்தக் கொள்கையைக் கைவிட வேண்டுமா என்பது கேள்விக்குரிய விஷயமாகும். அதே நேரத்தில், மத்திய சர்க்கார் இப்படி மதுவிலக்கு சட்டத்தைப் போற்றி, பேணி தீவிரமாக அமுல் நடத்துகின்ற மாநிலங்களுக்கு எந்த விதமான உற்சாகமும் கொடுக்கிறதா என்றால், இல்லை. திரு. மொரார்ஜிதேசாய் அவர்கள் புதிதாக எந்த மாநிலமாவது மதுவிலக்கு அமுல்படுத்துமேயானால், அந்த மாநிலத்திற்கு மானியம் வழங்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அதற்காகவாவது, கெட்டிக்காரத்தனமாக ஒரு மூன்று மாதத்திற்கு மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு, புதிதாக ஆரம்பித்து மானியத்தை கொடுங்கள் என்று கேட்க வேண்டுமா என்பது எனக்குப் புரியவில்லை. இந்த அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டபிறகு அண்ணாவுக்குப் பிறகு, சுசீலா நய்யார் அவர்கள் மதுவிலக்குப் பிரசாரத்திற்குத் தலைவர் என்ற வகையில் அந்த அம்மையார் எனக்கு ஒரு கடிதம் எழுதியபோது, அண்ணா அவர்கள் எவ்வளவு தீவிரமாக செய்தார்களோ அதே தீவிரமாக மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந் தார்கள். நான் இந்த மன்றத்தின் முன்னவன் என்ற முறையில், இந்த மன்றத்தின் மூலம் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், மத்திய சர்க்கார் இது போன்ற மாநிலங்கள் மதுவிலக்கு அமுல் படுத்தும்போது, நல்ல மானியங்களை வழங்க வேண்டும் என்று சுசீலா நய்யார் போன்றவர்கள் மத்திய சர்க்காரோடு போராட வேண்டும் என்று (குறுக்கீடு) புதுச்சேரியில் உங்கள் சர்க்கார்தானே இருந்தது, என்ன செய்தீர்கள்? காமராஜர் கடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், என்ன சொன்னார்கள்? புதுச்சேரியின் வருமான நிலையில் மதுவிலக்கு அமுல்படுத்துவதற்கு இல்லை என்றார்கள். புதுவையின் வருமானம் ரூ. 3 கோடி, டெல்லி கொடுக்கும்

பணத்தையும் சேர்த்து. புதுவை மாநிலத்தின் வருமானம் ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவு. அதில் ரூ. 75 இலட்சம் இந்தக் கலால் வரியின் மூலம்தான் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இதுவரையில் மதுவிலக்கு திட்டத்தைப் பற்றியே பேசாத எதிர்க்கட்சித் தலைவர் இப்பொழுது ஏன் பேசுகிறார்கள்? மதுவை எடுத்துவிட்டு, அந்த வருமானத்திற்கும் திண்டாடி திருவோடு ஏந்துங்கள் என்று புதுவை திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு அறிவுரை கூறுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

மதுவிலக்கு அரசியல் சட்டத்திலேயே சேர்க்கப்பட்டுள்ள ஒன்று. எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கு அமல் படுத்தப்பட வேண்டும், என்று சொல்லப்பட்டிருக்கிறது. உள்ளபடியே ஒரு கொள்கை, மகாத்மா காந்தியின் திட்டம், இந்தியா முழுவதும் பரவிடவேண்டும் என்ற கருத்து, அப்படிப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதுவார்களேயானால், மது விலக்கை அமல்படுத்த, தமிழ்நாடு போன்று அமல் நடத்தும் அந்த மாநிலங்களையும், மற்ற மாநிலங்களையும் ஒன்றாக வைத்துப் பார்க்கக்கூடாது. அப்படிப் பார்த்துக் கொண்டு இந்த மானியம் வழங்கமாட்டேன், கடன் கேட்டுக் கொண்டே இருங்கள், பிச்சை எடுத்துக் கொண்டே இருங்கள் என்று சொன்னால், மதுவிலக்கை நீக்கலாமா என்ற கேள்வி எழுவது ஆச்சரியம் இல்லை. அந்தக் கேள்விக்கு பதில், பரிசீலனையின் மேல், மாற்ற வேண்டுமா என்ற நிலைவந்தால் வியப்புக்குரியது அல்ல. நம் மாநிலம் தன் வருமானத்தைக் குறித்து, நிதி நிலையைக் குறித்து எவ்வளவு வருமானத்தைக் கொடுக்கிறது என்று இந்தக் கலால் வரியை எண்ணிப்பார்த்து யோசிக்கத் தலைப்பட்டால் ஆச்சரியம் இல்லை. அன்றைய நிலையில், அது ரூ. 17 கோடியாக இருந்தது. இன்று ரூ. 40 கோடி அளவிற்கு, அந்தத் திட்டம் ரத்துச் செய்யப் படுமேயானால், தமிழக அரசுக்கு வரும். ஆனால் அந்த 40 கோடி ரூபாய் வருகிற நேரத்தில் எவ்வளவோ திட்டங்களை நாம் தமிழகத்தில் நிறைவேற்ற முடியும். இல்லையென்று சொல்ல வில்லை. மகாத்மா காந்தி அவர்களின் கொள்கை என்ன ஆவது என்பதுதான் வினாக்குறியாக இருக்கிறது? சமூகம் கெட்டுவிடுமே என்ற அங்கலாய்ப்புதான் எங்களுக்கு இருக்கிறது. டெல்லியிலே இருக்கிறவர்கள், குறிப்பாக திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள்

இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். மதுவிலக்குக் கொள்கையை அமல் நடத்துவதால் மாநிலத்திற்கு 40 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறதே, நாம் ஒரு 20 கோடி ரூபாய் கொடுத்து உதவலாம் என்ற அளவுக்காவது நல்லெண்ணம் இருந்தால் எவ்வளவோ வரவேற்கலாம். மதுவிலக்குக் கொள்கையை உற்சாகமாகக் கடைப் பிடிக்கலாம். மத்திய அரசு நல்ல முறையில் சிந்தித்து இதில் நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீசார்கள் எந்த அளவுக்குத் தங்கள் கடமைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய நண்பர்களும், சுதந்திரா கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், எதிர்க்கட்சித் தலைவர் களும் கூடப் பாராட்டிப் பேசினார்கள். போலீசார்கள், உலகத் தமிழர் மாநாடு நடைபெற்றபோதும், குடந்தை மகாமகத்தின் போதும், இறுதியாக பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்ததை யொட்டி, 30 இலட்சம், 40 இலட்சம் அளவுக்கு மேற்பட்ட மக்கள் சென்னை நகரில் கூடிய நேரத்தின் போதும் எந்த அளவுக்குக் கட்டுக்கோப்பாகத் தங்களுடைய கடமைகளை ஆற்றினார்கள் என்பதும், பாராட்டப்பட வேண்டிய விஷயங்கள். மத்திய உள்துறை அமைச்சர் திரு. சவான் அவர்களே இந்தப் போலீஸ் துறையைப் பாராடடினார்கள் என்பதும், ஆளுநர் அவர்களின் பாராட்டும் இந்தத் துறைக்குக் கிடைத்திருக்கிறது என்பதும், இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் கலந்து கொண்ட அஞ்சலிக் கூட்டத்தில் போலீசார்கள் எந்த அளவிற்குப் பணியாற்றியிருக்கிறார்கள் என்பது குறித்து திருமதி இந்திரா காந்தி அம்மையார் அளித்த பாராட்டுதல்களும் போலீஸ் துறைக்குக் கிடைத்திருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே உள்ள அனைவரோடு சேர்ந்து நானும் பாராட்டக் கடமைப் பட்டிருக் கிறேன்.

அடுத்து, துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்துவதைப்பற்றிப் பேசப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொறுத்தவரையில் ஏழெட்டு நிகழ்ச்சிகள் குடிகாரர்களைப் பிடிக்கப் போனபோதும், கள்வர்களைக் கைது செய்யப்போனபோதும் நெருக்கடி நிலைமையின் காரணமாக ஏற்பட்டவை. இரண்டொன்றுதான்

விவசாயிகளின் கிளர்ச்சியின்போது ஏற்பட்ட தொல்லைகளினால் உண்டாணவை. நான் இதைப்பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொறுத்தவரையில் 'ஷூட் டு கில்' என்ற கொள்கைதான் கடைப்பிடிக்கப்படுகிறது. சுடுவதற்கு முன் கண்ணீர்ப் புகை, தடியடிப் பிரேயோகம் முதலியவைகளை யெல்லாம் பயன்படுத்திய பிறகுதான் இது கையாளப்படுகிறது. துப்பாக்கிப் பிரயோகத்தை, கலவரத்தை அடக்க முடியவில்லை யென்றால், எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்ட பின்னர்தான் கடைசிக் கட்டமாக நடத்தப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசைப் பொறுத்த வரையில் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். 'ஷூட் டு கில்' 'கொல்வதற்குச் சுடு' என்பதை மாற்றி, 'திறமையற்றவனாக ஆக்குவதற்குச் சுடு' என்பதையும் கடைசி முயற்சியாகத்தான் கொள்ளவேண்டும். அப்படிச் சுடும்போது உயிரிழப்பு ஏற்படுமானால் போலீஸ் அதற்குப் பொறுப்பு அல்ல. இப்படிப்பட்ட நேரத்தில் சிலர் உயிர் இழந்தால் அதற்குப் போலீஸ் பொறுப்பாளி அல்ல.

அடுத்து, இன்னும் போலீஸ் துறையில் இருக்கிற காவலர்கள் அநேக கஷ்டநஷ்டங்களுக்காளாகிறார்கள். விபத்து களுக்காளாகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் அரசு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்யும் என்று கூறிக்கொள்வதோடு. அவர்களுடைய கோரிக்கைகளை தன் நிதி நிலைக்கேற்றவாறு படிப்படியாக நிறைவேற்றித் தருவதும் அரசின் கடமையாகும். என்பதைக் கூறிக்கொள்கிறேன். போலீஸின் க்ஷேமநல நிதிக்காக ஆண்டுதோறும் அரசு ஈட்டு மானியமாக 50 ஆயிரம் ரூபாய் கொடுத்து வந்தது. அதிகாரிகள் நன்கொடை மூலமாக 50 ஆயிரம் ரூபாய் சேர்க்கிறார்கள். அரசு கொடுக்கும் ஈட்டுமானியம் போதவில்லையென்று கூறியதன் காரணமாக, அரசு கொடுக்கும் ஈட்டுமானயத் தொகை 50 ஆயிரத்தை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தருவது என்று அரசு முடிவு எடுத்திருப்பதை எல்லா அங்கத்தினர்களும் வரவேற்பார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸார்களின் இல்லங்களில் பத்து யூனிட்டுகள் மட்டுமே மின்சாரம் பயன்படுத்தலாம் என்ற நிலை இருந்து வந்தது. இதனால் இரவு எட்டு மணிக்கே விளக்கை

அணைத்துவிடும் நிலைமை இருந்தது. இந்த நிலைமை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஏற்றதல்ல. (சிரிப்பு). ஆகவே, தற்போது 10 யூனிட்டுகள் வரை மின்சாரத்தைப் பயன்படுத்தலாம் என்ற நிலையை, இரவு எட்டு மணி வரைக்கும் விளக்கு எரிக்கலாம் என்ற நிலையை மாற்றி, 20 யூனிட்டுகள் வரை மின்சாரத்தைப் பயன்படுத்தலாம் என்று இந்த அரசு வசதி செய்து கொடுக்திருக் கிறது. இதன் காரணமாக, இந்த அரசுக்குக் கிட்டத்தட்ட 8 இலட்சம் ரூபாய் செலவாகும். நிதியமைச்சர் அவர்களோடு கலந்து கொண்டு இதைக் கொடுத்துவிடலாம் என்று இருக்கிறோம். (திரு. பி. ஜி. கருத்திருமன் : நாங்களும் கொடுத்துவிடுகிறோம்).

அடுத்தபடியாக, இன்டியன் போலீஸ் மெடல், பிரசிடென்ட்ஸ் போலீஸ் அவார்டு என்ற இரண்டு மெடல்கள் சுதந்திர தினத்தன்றும் குடியரசு தினத்தன்றும் மத்திய அரசால் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், பதினைந்து ஆண்டுக்காலம் அல்லது சில குறிப்பிட்ட ஆண்டுக்காலம் பணி புரிந்தவர்களுக்கும், அவர்கள் புரிந்த தீரச்செயல்களுக்குச் சான்றாகவும் கடமையில் வழுவாமல் இருந்த காரணங்களுக் காவும் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் சுமார் 50 பேர்களை சிபாரிசு செய்து மத்திய அரசுக்கு ஒரு பட்டியலை அனுப்புகிறோம். அப்படிப்பட்ட பட்டியலில் அவர்கள் ஐந்தாறு பேர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இன்டியன் போலீஸ் மெடல், பிரசிடென்ட்ஸ் போலீஸ் அவார்டு என்று பதக்கங்களை குடியரசுத் தலைவர் வழங்குகிறார்கள். இப்போதும் அந்த முறை நீடிக்கப் படலாம். மாநில அரசின் அளவில், திறமையாகப் பணியாற்றும் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் சிறுசிறு தவறுகளைச் செய்திருந்தால்கூட இத்தகைய புகழைப் பெறலாம் என்ற அளவில் போலீஸ் துறையினரை ஊக்குவிக்கும் தன்மையில் மாநில மட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இத்தனை பதக்கங்கள் என்று குறிப்பிட்டு, அதனை, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான ஒவ்வொரு செப்டம்பர் 15-ம் தேதியன்று வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதற்கு 'முதலமைச்சர் பதக்கம்' என்று பெயர் வழங்கலாம் என்பதையும் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ்காரர்களுக்கு இந்த ஆண்டு வீட்டு வசதிக்காக 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கும் கடன் தொகை வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, 15 இலட்சம் ரூபாய் செலவில் போலீஸ் காரர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படும் என்பதைக்கூறி, நல்ல பல கருத்துக்களைக் கூறியதற்காக எல்லா நண்பர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்தின்மீது தரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை யெல்லாம் உறுப்பினர்கள் திரும்பிப் பெற்றுக்கொள்ள வேண்டு மென்ற வேண்டுகோளை விடுத்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

உரை : 5 நாள் : 03.04.1970

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள காவல்துறை மானியத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எல்லாக் கட்சியினுடைய உறுப்பினர்களும் தங்களுடைய மேலான கருத்துக்களையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே வந்த நேரத்தில், 'இறுதியாகத்தான் பேசப்போகிறீர்களா ?' என்று கேட்டேன். 'தான் பேசப் போவதில்லை'யென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நானே அவரிடத்தில் 'மிக முக்கியமான மானியமாயிற்றே, நீங்கள் பேச வேண்டாமா ?' என்று கேட்டேன். 'பேசுவதற்கு என்ன இருக்கிறது ?' என்று முதலிலே கூறிவிட்டு, என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் கொண்டுவருகிற மானியமாக இருக்கிற காரணத்தால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இறுதியாகப் பேசினார்கள். எனக்கு கொஞ்சம் முக்கியத்துவம் கொடுப்பதுபோல் ஒரு வார்த்தையாவது சொல்வாரே என்பதற்காக நான் அவரைப் பேசுமாறு வேண்டிக்கொள்ளவும் அவரும் பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் கொண்டுவருகிற போலீஸ் துறை மானியத்தில் கண்டிக்க விஷயங்கள் இல்லையென்று ஏற்கெனவே முடிவு செய்த காரணத்தினால், போலீசாருக்கு வசதிகள் அவசியம் என்று பெருந்தன்மையாக எடுத்துரைத்தார்கள். அவர் பேசிய பிறகுதான் புரிந்தது. நாம் ஏன் அவரைப் பேசச் சொன்னோம், பேசச் சொல்லாமலே இருந்திருக்கலாமே என்று. போன ஆண்டு இந்த மானியத்தின்மீது அவர் பேசியதை திரும்பப் படித்துவிட்டால் போதும். போன ஆண்டு சொன்ன அதே குற்றச்சாட்டுக்கள். போன ஆண்டு சொன்ன அதே கம்ப ராமாயணத்திலே வருகின்ற 'கள்ளர் இல்லையேல் காவலர் இல்லை, கொள்வர் இல்லையேல் கொடுப்பார் இல்லை' என்ற உதாரணம்...

இன்று காலையிலிருந்து நடைபெற்ற விவாதத்தில் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் பேசினார்கள். விவாதத்தைத் தொடங்கிவைத்த என் அருமை நண்பர் ராமச்சந்திர துரை அவர்கள்கூட - சாதாரணமான விஷயங்களிலேகூட காரசாரத்தைக் குழைத்துத் தருகின்றவர்கள் - அதிகமான காரசாரம் இல்லாமல் பேசினதும், நம்முடைய நண்பர் மார்ட்டின் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அவர்கள் தாக்குவதாக எண்ணிக்கொண்டு, போலீஸ்துறைக்குப் பதிலாக என்னுடைய அந்தரங்கச் செயலாளர் அவர்கள்மீது தாக்குதலைப் பயன்படுத்தியதன் மூலம், போலீஸ் துறையின்மேல் தாக்குதலைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு காவல்துறை மிகவும் நேர்மையானதாகவும், சிறந்ததாகவும், தமிழகத்திலே அனைவரும் மெச்சத் தகுந்த அளவிலும் பணியாற்றிவருகிறது என்பதை எடுத்துக்காட்டினார்கள், தமிழகத்திலே போலீஸ் துறை அனைவரும் மெச்சக்கூடிய அளவிலே தொண்டாற்றி வருகிறது என்பதற்கு இதைவிட வேறு நல்ல எடுத்துக்காட்டு தேவையில்லையென்று நான் கருதுகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் காவல் துறையினர் எவ்வளவு சிறப்பாகவும் செம்மையாகவும் பணியாற்றுகிறார்கள் என்பதற்குப் பல்வேறு மாநிலங்களுடைய புள்ளிவிவரங்களை எடுத்துக்காட்டினால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். துப்பறிந்த வழக்குகள் என்ற அளவில் வேறுபல மாநிலங்களின் கணக்குகளையும், நம்முடைய மாநிலத்தின் விகிதாசாரக் கணக்கையும் ஒருமுறை ஒப்பிட்டுப் பார்த்தால் நன்கு தெரியவரும். 1963-ம் ஆண்டு துப்பு மூலம் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் ராஜஸ்தான் மாநிலத்தில் 20.9 சதவீதம்; அஸ்ஸாம் மாநிலத்தில் 20.5 சதவீதம்; பீகாரில் 9.7 சதவீதம்; மேற்கு வங்காளத்தில் 17.5 சதவீதம்; பம்பாயில் 26.5 சதவீதம்; ஒரிசாவில் 23.4 சதவீதம்; கேரளத்தில் 31.2 சதவீதம்; மைசூரில் 39 சதவீதம்; குஜராத் மாநிலத்தில் 24.2 சதவீதம்; உத்திரப் பிரதேச மாநிலத்தில் 18.7 சதவீதம்; மத்தியப் பிரதேசத்தில் 30.3 சதவீதம்; அரியானாவில் 34.9 சதவீதம்; ஜம்மு-காஷ்மீர் பகுதியில் 14.4 சதவீதம்; நாகாலாந்து பிரதேசத்தில் 50.1 சதவீதம்; பஞ்சாப் மாநிலத்தில் 35 சதவீதம்; ஆந்திர மாநிலத்தில் 61.6 சதவீதம்; தமிழகத்தில் 60 சதவீதம் ஆகும். ஆந்திரம், தமிழகம் ஆகிய இந்த இரண்டு மாநிலங்களில்தான் குற்றங்கள் 60 சதவீதத்திற்கும் மேலாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் பேசிய நேரத்தில் ஆந்திர மாநிலத்தில் இருந்து தப்பி இங்கே வந்தவர்களை தமிழ் நாட்டில் இருந்து தப்பிச் சென்றவர்களை ஆந்திராவிலும் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார். அதற்கான நிலையும் உறுப்பினர்களுக்குத் தெரியும், புலன் ஆய்வின்மூலம் ஆந்திராவும், தமிழகத்தைப்போல 60 சதவீதத்திற்குமேல் வழக்குகளைக் கண்டுபிடிக்கிற திறன் பெற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

1968-ம் ஆண்டில் செய்யப்பட்ட கொலைகள் உள்பட, களவுக் குற்றங்கள் 26,997. 1969-ம் ஆண்டில் இக் குற்றங்களின் எண்ணிக்கை 28,801 ஆக அதிகரித்திருக்கிறது.

உலகம் எங்கணுமுள்ள வளர்ச்சியடைந்த நாடுகளிலும், முன்னேற்றமடைந்துவரும் நாடுகளிலும் களவுகள் 4½ சதவீதம் அதிகரித்திருப்பதை நாம் கருத்தில் கொண்டு பார்க்கின், நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள குற்றங்களின் உயர்வைக் கண்டு ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அது இயல்பான ஒன்றுதான் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருக்கிறது.

பன்னெடுங்காலமாக சமுதாயத்தில் வேரோடி அனைவராலும் போற்றிப் புகழப்பட்ட மனிதப் பண்புகள் மக்களிடையே குறைந்து வருவதாலும், மக்கள் தொகை நாளும் பெருகி வருவதாலும், குற்றங்கள் பெருகி வருவதை தடுக்க முடியாத அளவில், அடக்க முடியாத அளவில் நாம் இருக்கிறோம் என்பதை நீங்கள் அனவைரும் நன்றாக அறிவீர்கள்.

குற்றங்களைக் கண்டுபிடிப்பதில், புலனாய்வதில் முன்பைவிட இப்போது அதிக நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை புள்ளிவிவரங்களே விளக்கியிருக்கும். வேலூரிலும், பிற எட்டு மாவட்டத் தலைமையிடங்களிலும் உள்ள கைவிரல் பதிவு நிலையங்களும், துப்புத் துலக்கும் நாய்ப்படைகளும், காவற்படையைச் சார்ந்த கம்பியில்லாத் தந்தியமைப்பும், பாரன்சிக் ஆய்வுக்கூடமும் திறனுடன் பணியாற்றிவருகின்றன.

1968-ம் ஆண்டில் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 60.8 சதவீதமாகும். 1969-ல் இது 61.3 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டில் சில முக்கியமான கொள்ளைக்

கூட்டங்களை நம் காவல்படையினர் எவ்வாறு வெற்றியுடன் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்கிற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நேரத்தில் நினைவில் வைத்துக்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

வச்சக்கரப்பேட்டை காவல்நிலைய எல்லைகளுக்குள் 21-5-1969-ம் தேதி கொள்ளை நடத்திய கொள்ளைக்காரர்களைப் பிடித்ததும் பெரிய சாதனைகளில் ஒன்றாகும்.

27-10-1969 அன்று இரவு செங்கோட்டை - மதுரை பாசஞ்சர் ரயிலில் கொள்ளை அடித்த கூட்டத்தினரையும் நமது காவல் படையினர் பிடித்திருக்கிறார்கள். இது சிறப்பு மிக்க ஒரு செய்தியாகும்.

இரண்டு கொலையாளிகள் வாடகைக்கார்களை அமர்த்திக் கொண்டு சென்று வழியில் ஓட்டுநர்களைக் கொலை செய்து அப்பால் வண்டியையும் விற்றுப் பணமாக்கினர். திருநெல்வேலி, செங்கல்பட்டு ஆகிய இந்த இரண்டு இடங்களில் இந்தக் குற்றம் நடந்திருக்கிறது. காவல்துறையின் திறமை காரணமாக குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு நடந்து வருகிறது.

திருநெல்வேலியில் அச்சடிக்கப்பெற்று சென்னையில் பிடிக்கப்பட்ட 10 ரூபாய் கள்ளநோட்டு வழக்கில் காவல்துறையினர் 19 குற்றவாளிகளைப் பிடித்திருக்கிறார்கள்.

1969-ம் ஆண்டில் இரண்டு ரூபாய் கள்ள நோட்டு வழக்குகள் பிடிக்கப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்துபேர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இந்த ஆண்டில் பத்து ரூபாய், இரண்டு ரூபாய் கள்ள நோட்டுக்களையும், 10 டாலர் மதிப்புள்ள அமெரிக்க கள்ள நோட்டுக்களையும் தயார் செய்த 14 பேர் கொண்ட குழு ஒன்றை மதுரையில் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்ற விவரம் உங்களுக்குத் தெரியும்.

அண்மையில் சென்னை நகரத்தில் அதிகார அனுமதியற்ற போலி உணவுப் பங்கீட்டுச் சீட்டுகள் சில சமூகவிரோதிகளால் வழங்கப்படுவதை காவல்துறை உஷார் பிரிவினர் கண்டுபிடித்து, நேற்று புதுப்பேட்டையைச் சேர்ந்த பெருமாள், தண்டையார் பேட்டையைச் சேர்ந்த விசுவநாதன் இருவரையும் 800

போலிச் சீட்டுகளுடன் ஒரு டாக்சியில் செல்லும்போது கைது செய்திருக்கிறார்கள் புதுப்பேட்டை லாங்க்ஸ் கார்டன் சாலையில் உள்ள பான்சி ஆர்ட் காட்டேஜ் என்ற அச்சகத்தையும் சோதனையிட்டு அதிலிருந்து 500 காலிச் சீட்டுக்களையும், மற்றும் அச்சு சாமான்களையும் கைப்பற்றி யுள்ளார்கள். கைதான பெருமாள் இப் போலிச் சீட்டுகளை வண்ணாரப்பேட்டைப் பகுதியில் விநியோகம் செய்ததாகத் தெரிகிறது. அவை யாவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இது காவல் துறையினரின் மற்றொரு அபார சாதனையாகும்.

முகமூடித் திருடர்கள் வட பகுதியில் இருந்துவந்து தமிழ் நாட்டிலும், குறிப்பாக சென்னை நகரிலும் மிகத் துணிகரமாகக் கொள்ளை அடித்தார்கள். நமது காவல்துறையினர் அவர்கள் கொள்ளையிட்டுச் சென்ற இடத்தில் சாதாரண தடையங்களைக் கண்டு அவற்றின் மூலமாகவே அவர்களைக் கண்டுபிடித்திருக் கிறார்கள். கொள்ளை அடிக்கப்பட்ட இடத்தில் கிடந்த பீடித் துண்டுகளைப் பார்த்து அவை தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்டவை அல்ல, வடநாட்டைச் சேர்ந்தவை, அதுவும் எந்த நாட்டைச் சேர்ந்தது என்று கண்டு அவர்களைத் தொடர்ந்து சென்று சான்சியர் பதினைந்து பேர்களையும் அவர்களுடைய தலைவன் கங்குவையும் கைதுசெய்து வழக்குத் தொடர்ந்தார்கள். கொள்ளை அடிக்கப்பட்ட பல்வேறு சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு நடைபெற்று அந்த சான்சியர் ஆறு பேர்களுக்கு ஏழாண்டுக் கடுங்காவல் தண்டனையும், பத்துப் பேர்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது.

இதைப் போலவே சுருள் கதவுகளை உடைத்து கடைகளை எல்லாம் கொள்ளை அடித்து வந்த ஒரு கும்பலையும் நமது காவல் துறையினர் கண்டுபிடித்தார்கள். அதுவும் ஓர் இரவு மதுரையிலே ஒரு துணிக் கடையின் சுருள் கதவுகளை உடைத்துக்கொண்டிருக்கும்போது நமது காவலர் பிடியில் அவர்கள் வசமாய்ச் சிக்கிக்கொண்டார்கள். இவர்கள் நம் மாநிலத்தில் மாத்திரம் இல்லாது ஆந்திரா, மைசூர் ஆகிய மாநிலங்களிலும் தங்கள் கொள்ளையை திறம்பட நடத்தியிருக் கிறார்கள். தமிழகத்தில் இவர்களைப் பிடித்தது நம் காவல்துறையின் சாதனையாகும்.

அதைப்போலவே - திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. அரங்கநாதன் அவர்களும் தம் பேச்சில் குறிப்பிட்டார்கள் - தமிழ்நாட்டில் எங்கெங்கே நக்சல்பாரிகளின் ஊடுறுவல் இருக்கிறது என்பதை நமது காவல்துறையினர் மிகுந்த கண்காணிப்போடு பார்த்து வந்தார்கள். உங்களுக்குத் தெரியும். பெண்ணாடத்தில் நடந்த நிகழ்ச்சி உண்மையில் அலட்சியப் படுத்தக்கூடியது அல்ல. ஒரு மாணவரும், மற்ற இருவரும் வெடி குண்டுகள் தயாரிக்கிற நேரத்தில் தயாரிக்கப்படுகிற வெடிகுண்டுகள் வெடித்ததன் காரணமாக அவர்கள் அந்த இடத்திலேயே இறந்திருக்கிறார்கள். அது வெளியே தெரிந்தால் அவர்கள் நடத்துகின்ற சதி வெளிப்பட்டுவிடும் என்பதற்காக ஆழமாகக் குழி தோண்டி அதற்குள்ளேயே அவர்களது சடலங்கள் புதைக்கப்பட்டுவிட்டன. நமது காவல்துறையினர் அந்த இடத்தையும் கண்டுபிடித்து குழியைத் தோண்டி சவத்தை எடுத்திருக்கிறார்கள். தலைமறைவாக இருக்கிற ஒருவர் இது சம்பந்தமாகத் தேடப்பட்டு வருவதும் உங்களுக்குத் தெரியும்.

ஆந்திரத்தைச் சேர்ந்த நாகிரெட்டியின் தலைமையில் இருந்த ஒரு கூட்டம் சென்னையில் சிக்கினார்கள் என்பது முன்பே தெரியும். அவர்கள் சென்னையில் தங்கியிருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவர்கள் எங்கெல்லாம் செல்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்குத் தெரியாமலேயே பின்தொடர்ந்து சென்று, இரவிலே அவர்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றி - அவர்கள் கட்டிவைத்திருந்த நாய்களுக்கிடையே, மாடுகளுக்கிடையே, மாட்டுத் தொழுவத்தில் சாணத்திடையே - ஒளிந்து நின்று இரவு 3 மணிக்கு பெரும் கூட்டமாகச் சுற்றி வளைத்து அப்படிச் சுற்றி வளைக்கிற நேரத்தில் இருட்டாக்க அவர்கள் விளக்கை அணைத்தபோது, தாங்கள் கொண்டு சென்றிருந்த ஒளிமிக்க விளக்குகளினால் ஒளியை ஏற்படுத்திக்கொண்டு அவர்களைக் கைது செய்திருப்பது மிகமிகப் பாராட்டுக்குரியதாகும். இதை அனைவரும் நன்கு அறிவீர்கள்.

முதலமைச்சருடைய விருது என்ற பெயரால் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாளன்று ஒவ்வொரு ஆண்டும் வீரப் பதக்கங்களையும் சிறப்புப் பதக்கங்களையும் காவல்துறையினருக்கு வழங்கவேண்டும் என்று சென்ற ஆண்டு இந்தக் காவல்துறை மான்யத்தினுடைய விவாதத்தில் அறிவிக்கப்

பட்டது நினைவு இருக்கலாம். அதை தொடர்ந்து 22 பேருக்கு அந்தப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. கையிலே கத்தி வாளோடு மக்களைப் பயமுறுத்திக்கொண்டிருந்த ஒரு பயங்கரவாதியை போலீசார் தேடிக்கொண்டு சென்றபோது அவன் தன்னுடைய வீட்டுக்குள் நுழைந்த நேரத்தில், கையில் வெறும் தடியோடு இருந்த போலீஸ்காரர் மாரிமுத்து என்பவர் தைரியமாக உள்ளே சென்று அவனைப் பிடிக்க, போலீஸ்காரரை கத்திவாளால் குத்த, ரத்தம் பெருக்கு எடுத்த நேரத்திலும் அதைப் பொருட்படுத்தாமல், அப்படியே பிடித்துக்கொண்டு வெளியில் வந்து அவனைப் போலீசாரிடம் ஒப்படைத்து தன்னுடைய பிணத்தையும் போலீசாரிடம் ஒப்படைத்து தீரச்செயல் புரிந்த மாரிமுத்து, போலீஸ் நண்பர் செத்தார். அவருடைய விதவை மனைவி சேலத்தில் நான் பரிசு அளிக்கின்ற நேரத்தில் கண்ணீரும் கம்பலையுமாக வந்து நின்று அளித்த பரிசையும் தங்க பதக்கத்தையும் பெற்றுக்கொண்ட காட்சி போலீஸ்துறையினர், காவல்துறையினர் எந்த அளவுக்கு கடமை ஆற்றுகின்றார்கள் என்பதை நமக்கு தெரிவிக்கின்ற நிகழ்ச்சியாக இருக்கிறது.

ஜனவரி 26-ம் தேதியன்று குடியரசு தினவிழா நாம் கொண்டாடியபோது அணிவகுப்பு ஆரம்பமாகிவிட்டது. ஆயுதப்படை ஹவில்தார் சங்கரநாராயணன் அவர்களுக்கு அப்பொழுது மாரடைப்பு வந்துவிட்டது. மாரடைப்பு என்று சொன்னால் குடியரசு தினவிழாவில் குழப்பம் ஏற்பட்டுவிடும் என்ற பயம் காரணமாக மாரடைப்போடு தன்னுடைய நடையில் மாற்றம் இல்லாமல், முகத்தை மட்டும் வலியின் காரணமாக சுளிக்கிக்கொண்டு எங்கே போகவேண்டுமோ, எந்த இடத்தில் அணிவகுப்பு கலைய வேண்டுமோ அந்த இடத்தில், அணிவகுப்பு முடிந்த இடத்தில் பிணமாகச் சாய்ந்து விழுந்தார் சங்கரநாராயணன். ஆயுதப் படையைச் சேர்ந்த ஹவில்தார் ஒருவர் இந்த ஆண்டு 26-ம் தேதி இறந்தார். முதலமைச்சர் நிதியிலிருந்து ரூபாய் 3,000-ம், போலீஸ் இலாக்காவிலிருந்து 1,500 ரூபாயும் அவருடைய குடும்பத்திற்கு தரப்பட்டிருக்கிறது. நான் அவைகளைக் குறிப்பிடுவதற்குக் காரணம் கடமை உணர்ச்சியும் கட்டுப்பாடு உணர்ச்சியும் கொண்டவர்கள் பலர் இந்தத் துறையில் இருக்கிறார்கள் என்பதைக் தெரிவிக்கவேதான்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள் சில புகார்களை. நான் அந்தக் கருத்துக்களை எல்லாம் இல்லை என்று அவர்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேச விரும்பவில்லை, ஏனென்றால் ஏறத்தாழ 30 ஆயிரம் பேரைக் கொண்டுள்ள இந்தத் துறையில் சிலபேர் தவறு புரிபவர்களாக இருக்கலாம். நான் இல்லை என்று கூறவில்லை. இதில் சிறிய தவறுகள் இருக்கலாம். பெரிய தவறுகளை சிலர் புரிந்து இருக்கலாம். அவர்களை எல்லாம் யார் யார் என்று இந்த ஓராண்டு காலத்தில் நான் அறிந்து வைத்திருக்கிறேன். காவல் துறையில் இருக்கின்ற புலன் ஆய்வு செய்கின்ற அந்த அளவுக்கு மேல் இல்லாவிட்டாலும் அந்த அளவுக்காவது நான் இவைகளை எல்லாம் அறிந்து வைத்திருக்கிறேன். நான் இந்த அவையின் மூலம் அந்தத் தவறுகளைச் செய்கின்ற காவல்துறையினருக்கு எச்சரிக்க விரும்புகிறேன். அவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்களே யானால் அதிக அளவுக்கு தண்டனை நிச்சயமாகப் பெறுவார்கள் என்பதை அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன். ஆகவே இப்படி நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, மக்களுக்கு கடமையாற்றுபவர்களாக உயிர் இழக்கின்ற மாரிமுத்துகளும் இருக்கின்றார்கள், சங்கரநாராயணன்களும் இருக்கிறார்கள், அதே நேரத்தில் தவறு செய்கின்றவர்களும், அவர்களுக்குத் துணைபோகின்ற கயவர்களும் இந்தத் துறையில் இருக்கிறார்கள் என்பதை நான் அறியாமல் இல்லை, இந்த அரசும் அறியாமல் இல்லை, அவர்கள் மீது நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அதிலே சந்தேகம் இல்லை என்பதை இந்தச் சபைக்கு உறுதியோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர் மார்ட்டின் அவர்கள் சொன்னார்கள், சிட்டி போலீசுக்கு சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நிதி ஒதுக்கியதைக் குறைந்துவிட்டார்கள் என்று. அதைச் சொல்லிவிட்டு சிட்டி போலீஸ் விபசாரக் குற்ற வழக்குகளை வாபஸ் வாங்கிவிட்டது. இதற்குப் பெயரா சிட்டி போலீஸ் என்றார்கள். அந்தக் குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்லியிருந்தால் அர்த்தம் உண்டு. உடுப்புக்காக சென்ற ஆண்டு 5,25,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகப்படியாகத் தேவைப்பட்டால் அரசு மறுபடியும் அதைக் கொடுக்கும். இன்றியமையாததைக் குறைக்கவில்லை. அடுத்தபடியாக ரூபாய் 5,000 இந்த ஆண்டும்

சென்ற ஆண்டும் உணவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே வாகனங்களுக்காக சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டதைவிட இந்த ஆண்டு குறைவு என்று சொன்னார்கள். சென்ற ஆண்டே வாங்கவேண்டிய வாகனங்கள் வாங்கிவிட்டதால் இந்த ஆண்டு வாங்கவேண்டியதில்லை. ஆகவே பராமரிப்புச் செலவுக்காகக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு வாங்கிவிட்ட காரணத்தால் இந்த ஆண்டு குறைவு ஏற்பட்டிருக்கலாமே தவிர குறைக்கவேண்டும் என்ற காரணத்தால் குறைக்கப்படவில்லை என்பதை மார்ட்டின் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போலீஸ் துறையினருக்கு சங்கம் வைக்க வேண்டும் என்று நம்முடைய ராமச்சந்திர துரை அவர்கள் சொன்னார்கள். போலீஸ் துறையினருக்கு சங்கம் இருந்து முன்பு ஒருமுறை என்னென்ன சங்கடங்கள் ஏற்பட்டன என்பதை நான் அறிவேன். போலீஸ்காரர் களுக்கு சங்கம் எந்த மாநிலத்திலாவது இருக்கிறதா என்று கேட்டேன். மேற்கு வங்காளத்தில் மட்டும்தான் இருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கிற போலீஸ்காரர்கள் சட்டசபை வரையில் நுழைகிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவேதான், போலீஸ்காரர்களுக்குச் சங்கம் வைத்து அவர்களுக்குரிய உதவிகளைச் செய்வதைவிட சங்கங்கள் வைக்காமலே அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்யக்கூடாதா என்பதை இந்த அரசாங்கம் உணராமல் இல்லை. இந்த அடிப்படையின் காரணமாக போலீஸ் கமிஷன் ஒன்றை அமைத்திருக்கிறோம். அந்தப் போலீஸ் கமிஷன் வெகு விரைவில் அதனுடைய அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று நம்புகிறேன். அவர்களுக்கு என்னென்ன தேவை என்பதை எல்லாம் அந்தப் போலீஸ் குழு ஆராய கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் நம்முடைய மதிப்பிற்குரிய சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் இருக்கிறார். அவர் இந்த மன்றத்தில் இன்றைய தினம் நடைபெறுகின்ற விவாதத்தை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். ஆகவே, காவல்துறையினருக்கு அந்தப் போலீஸ் குழுவில் செய்யவேண்டிய காரியங்களுக்காக நிச்சயமாக குறிப்புக்களைத் தயாரித்து அனுப்புவார் என்று நம்புகிறேன். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது. போலீஸ் குழுவில் போலீஸ் துறையினர்

தங்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லி வருகிறார்கள். போலீஸ் குழு ஓர் அறிக்கை அனுப்பி இருக்கிறது. எல்லாப் போலீஸ்காரர்களும் எந்த ஸ்டேஷனில் இருந்தாலும் தங்களுடைய குறைகளைச் சொல்லலாம், சொல்லவேண்டும். போலீஸ் குழுவின் சார்பாக அனைவருக்கும் அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. (திரு. ம. பொ. சிவஞானத்தைப் பார்த்து) சரிதானே ?

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ்காரர்களுக்குச் சங்கம் இல்லை என்பதை அறிந்துதான் கமிஷன் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் மூலமாக ஒவ்வொரு போலீஸ்காரருடைய குறைகளையும் விசாரித்து அனுப்புவதோடு அல்லாமல், கூட்டம் போட்டு சேர்த்து அனுப்பினாலும் பெற்று அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதற்கு போலீஸ் ஐ.ஜி. மற்ற அதிகாரிகள் ஒத்துழைப்பு கிடைத்து வருகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஆகவேதான் சங்கங்கள் வைத்து காரியங்கள் செய்ய வேண்டியது என்பதல்லாமல், அதைப்பற்றி ஹேஷ்யம் கூறுவதைவிட கமிஷனுடைய குரலை கொடுக்கின்ற வகையில் சிலம்புச் செல்வர் விளக்கத்தைக் கொடுத்ததைக் கேட்டீர்கள். அந்தக் குழுவின் மூலம் கிடைக்கும் அறிக்கையின்மீது விரிவான முடிவு எடுக்கப்படும். குழுவை ஆராயும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ள விவரங்கள்: காவல் படையினரின் சம்பளம், படிகள் பற்றி ஒரு இசைவான முடிவு எடுப்பதற்காக காவல்துறை ஆணைக் குழுவும் சம்பள ஆணைக் குழுவும் சேர்ந்து இது குறித்து பரிசீலனை செய்யும், பணியின் பொது நிலைமைகள், வீட்டு வசதி, காவலர் நலன், காவல் படையின் அதிகாரங்கள், கடமைகள் சட்டம், ஒழுங்கு இவற்றை நிலைநிறுத்துதல், குற்றத்தைத் தடுத்தல், புலனாய்வு செய்தல், போக்குவரத்து கட்டுப்படுத்துதலும், முறைப்படுத்துதலும், வேவுத் தகவல் சேகரித்தல், காவலர்கள் பிற கடமைகள் பழையனவும், புதியனவும் ஆகியவற்றிற்குத் தொடர்பானவற்றில் காவல் படையின் செயல் திறனை மேம்படுத்துதல், மற்றும் இதுபோன்ற பல்வேறு தகவல்கள், இன்னும் காவல்துறை யினருக்குச் செய்யவேண்டிய நல்ல காரியங்களைப் பற்றி இந்தக் குழு ஆராய இருக்கிறது.

நண்பர் ராமச்சந்திர துரை அவர்கள் இங்கே பேசிய நேரத்தில் ஜெமினிக்குப் பக்கத்தில் ஒரு கார் சென்றது என்றும், அதற்குப் பின்னால் சர்க்கார் தலைமைச் செயலாளர் - சீப் செக்ரட்டரி சென்றார். கமிஷனர் வீட்டில் கார் நின்றது, ஒரு போலீஸ் படையை வைத்திருந்தார்கள் என்றும் சொன்னார்கள். அதற்கு எந்தவிதமான அடிப்படையும் இல்லை. நான் விசாரித்துப் பார்த்த அளவில் அப்படி எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே அந்தத் தகவலை நண்பர் அவர்களும் நம்புவார்கள் என்று கருதுகிறேன். அவரும் தனக்கு யாரோ சொன்னதாகத்தான் சொன்னார்கள். அது ஆதாரமற்றது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்குபற்றிப் பேசப்பட்டது. திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் சுதந்திரா கட்சியினுடைய பிரதானத் தலைவர்களிலே ஒருவர். அவர்கள் சொன்னார்கள் மதுவிலக்கை ரத்துச்செய்யுங்கள், தேவையே இல்லையென்று சொன்னார்கள். அதோடு இன்னொன்றும் சொன்னார்கள். ராஜாஜியைக் கேளுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ராஜாஜி சொல்வதையெல்லாம் முதலமைச்சர் கேட்கிறரா என்று சொன்னார்கள். அப்படிக் கேட்காமல் மதுவிலக்கை ரத்து செய்யுங்கள் என்று ஒரு நல்ல யோசனையைச் சொல்லிக் கொடுத்தார். ராஜாஜி சொல்வதை கேட்கக்கூடாது என்பதல்ல, கேட்கமுடியாத நேரத்திலே கேட்காமல் இருப்போம். ராஜாஜி என்ன சொல்வது நாம் என்ன கேட்பது என்று நானோ அல்லது அமைச்சரவையோ அல்லது முன்னேற்றக் கழகமோ நினைப்பதில்லை. ராஜாஜியல்ல, எந்தப் பெரியவர் சொன்னாலும், காமராஜர் சொன்னாலும் கேட்க முடிந்ததைச் சொன்னால் நிச்சயமாகக் கேட்போம். திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் எடுத்துச்சொன்ன அபிப்பிராயம் பரவலாக நாட்டிலே அனைவருடைய உள்ளத்திலே இருந்து வருகின்ற ஒன்றாகும். எடுத்துவிட்டால் என்ன ? அதிக வருமானம் வருமே, கணக்குத்தானே உயருகிறது. திரு. சங்கரய்யா அவர்கள்கூடச் சொன்னார்கள், சென்ற ஆண்டு 2 லட்சம், அடுத்த ஆண்டு 3 லட்சம் என்ற அளவுக்கு கணக்குத்தானே உயருகிறது என்று சொன்னார்கள். கணக்கு உயர்கிற அதே நேரத்திலே குற்றவாளிகளும் அதிகமாகப் பிடிக்கப்படுகிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

காவல்துறையினர் கண்காணிப்பாக இருந்து பிடித்து வருகிறார்கள் என்பதற்காகப் பாராட்டவேண்டும். இந்த மூன்று லட்சம் பேர்களும் குற்றம் செய்தவர்களா இல்லையா என்றால் செய்தார்கள் என்பதை மறுக்கவில்லை. திங்கட்கிழமை செய்தவர் செவ்வாய்க் கிழமை * * * தூய்மையாக இருப்பார். எந்தத்தவறான பொருளிலும் நான் சொல்லவில்லை. ஆகவே செவ்வாய்க்கிழமை போகிற நேரத்திலே அகப்பட்டுக்கொள்வதில்லை. தூய்மைக்கு முன்பாக நான் சொன்ன அந்த வார்த்தையை நீக்கிவிடவேண்டும் – வாய் தவறி வந்துவிட்டது* * * அந்த வார்த்தையை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் குறிப்பேட்டிலிருந்து அந்த வார்த்தையை நீக்கிவிடவேண்டும். பத்திரிகைகளும் அதை வெளியிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட நிலைமையில் எவ்வளவு வருமானத்தை இழக்கக்கூடிய சூழ்நிலையிலும் மதுவிலக்குக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனாலும் மதுவிலக்கை ரத்து செய்வதில்லை என்ற முடிவில் இந்த அரசு இருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். சென்ற ஆண்டு இது கேள்விக் குறியாகக் கிளம்பி, கொஞ்சங்கொஞ்சமாக வளர்ந்து நாட்டிலே உள்ள எல்லாப் பத்திரிகைகளும் கார்டூன்களுக்காக கேள்விக்குறியைப் பயன்படுத்தி, காந்தி நூற்றாண்டு விழா நேரத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக் கிறது. முற்றுப் புள்ளிக்குக் கீழே ஒரு கோடு இழுத்தால் அது கமா ஆகிவிடும், முற்றுப்புள்ளி வைத்தால் கமா ஆகாது என்று சிலர் நினைக்கிறார்கள். அப்படி ஆகாமல் இருக்கின்ற முறையிலே மத்திய அரசு மதுவிலக்கைத் தீவிரப்படுத்துகின்ற அரசுக்கு உதவிகளை பரிசுத் தொகைகள் வடிவத்தில் அளிப்பார்களானால் மதுவிலக்குத் திட்டத்திலே ஒவ்வொரு மாநிலமும் சிரத்தை காட்டமுடியும். தமிழகத்திற்கு அதற்காகத் தருகிறார்கள் என்றால் அடுத்து அடுத்து மற்ற மாநிலங்களும் தமிழகத்தைப் பின்பற்றுவதற்கு முன்வரக் கூடும்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

பெரிய பணக்காரர்கள் மாத்திரம் பெர்மிட் வாங்கிக் குடிப்பதற்கு உரிமையிருக்கிறது, ஏழை எளியவர்களாக இருக்கிறவர்கள் குடித்தால் பிடிக்கப்படுகிறார்கள் என்று திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டார்கள். பெர்மிட் வழங்குகின்ற முறையிலே அரசு சில மாறுதல்களைச் செய்யவிருக்கிறது. வருமானத்தின் அடிப்படையிலே டி. எம். ஓ. அளவிலே நற்சாட்சிப் பத்திரம், "இவருக்கு இருதய நோய், மது சாப்பிட்டால்தான் உயிரோடு இருப்பார்" என்று கொடுத்தால் தரப்படுகிறது. இதைச் சாப்பிட்டால்தான் உயிரோடு இருப்பார் என்பதற்கும் வருமானத்திற்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை. நாலாயிரம், ஐயாயிரம் வருமானமுள்ள பணக்காரர்கள் இரண்டு யூனிட் சாப்பிட்டால்தான் உயிரோடு இருப்பார் என்றால் 200, 300 ரூபாய் வருமானம் உள்ள ஏழை எளியவர்களுக்கு இருதய நோய் வராதா என்ற கேள்வி எங்கள் உள்ளத்தில் உறுத்தியது. பெர்மிட் தரப்படுகின்ற சட்டம் வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு பெர்மிட் வழங்கப்படாமல் அவர்களுடைய நோயை அடிப்படை யாகக் கொண்டு வழங்கவேண்டுமென்ற முறையிலே - மாற்றப்பட உத்திரவு போடப்பட இருக்கிறது. இதற்கு முன்பு புதிதாக பெர்மிட் வாங்குவதற்கு 50 ரூபாய் கட்டணமும் பெர்மிட்டை புதுப்பிப்பது என்றால் 75 ரூபாய் கட்டணம் என்றும் இருந்தது. இனிமேல் புதிதாக பெர்மிட் வாங்குவதற்கு 250 ரூபாய் என்றும் புதுப்பிப்பதற்கு 150 ரூபாய் என்றும் ஆக்கப்பட்டிருக்கிறது. இதற்கான அறிவிப்பு விரைவில் வரவிருக்கிறது.

இது மாத்திரமல்ல, இதற்கு முன்பு மதுவகையறாக்களுக்கு விற்பனை வரியில்லாமல் இருந்தது. இப்பொழுது 12½ சதவீதம் விற்பனை வரி மது வகையறாக்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. ஆக, மதுவை ரத்து செய்து வராத வருமானத்தை இருக்கிற பெர்மிட்டுகளைப் பயன்படுத்திப் பெறலாமா என்ற அற்ப ஆசையிலே இம்மாதிரிச் செய்கிறோம். பெர்மிட் வாங்கிக் குடிக்கிறவர்கள் பெருகுவதை இதன்மூலம் தடுக்கலாமா என்று பார்க்கிறோம். இந்தக் கட்டணத்தையும் செலுத்தி என்னுடைய இருதய நோயைத் தடுக்க போகிறேன் என்று யாராவது வந்தால் அந்த வருமானத்தை இழக்க இந்த அரசு தயாராக இல்லை.

காலையிலே பத்திரிகையில் பார்த்தால் இல்லத்தரசிகள் இதற்காகக் கிளர்ச்சி செய்வார்கள் என்று போட்டிருக்கிறார்கள். கிளப்களிலே பெர்மிட்டைப் பயன்படுத்திச் சீமைச்சரக்கை வாங்கி அங்கேயே உட்கார்ந்து குடிக்கக்கூடாது என்று அரசு உத்திரவு பிறப்பித்திருக்கிறது. காந்தி நூற்றாண்டு விழாவில் இந்த அறிவிப்பைச் செய்தேன். ஏழை எளியவர்கள் குடிக்கிறார்கள் என்றால் பிடிக்கப்படுகிறார்கள். ஆனால் செல்வச் சீமான்கள் கிளப்களிலே உட்கார்ந்து பெர்மிட்டைப் பயன்படுத்தி அங்கேயே உட்கார்ந்துகொண்டு குடிக்கிறார்கள் என்பது சமதர்ம நாட்டில், சோஷலிச நாட்டில் ஒத்துவராது என்ற காரணத்தினாலே 20 ஆண்டுகளாக அனுமதிக்கப்பட்டிருந்த ஜனநாயக சோஷலிசத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த முறை நம்முடைய சோஷலிசத்திலே அனுமதிக்கப்படக்கூடாது என்ற முடிவை எடுத்தோம். அந்த முடிவிற்கேற்ப கிளப்களிலே அயல்நாட்டார், அயல்நாட்டுத் தூதரகத்தைச் சேர்ந்த அயலார், தற்காலிகமாக வரும் அயல்நாட்டார், மற்ற மாநிலத்தார், ராணுவம், கப்பற்படை, விமானப்படையைச் சேர்ந்தவர்கள் பெர்மிட்டைப் பயன்படுத்தி அங்கேயே உட்கார்ந்து சாப்பிடலாம், மற்றவர்கள் அங்கேயே உட்கார்ந்து சாப்பிடக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. வீட்டு அரசிகள் எங்களுடைய கணவர்கள் அங்கேயே உட்கார்ந்துகொண்டு சாப்பிடலாம், 'வீட்டில் சாப்பிட்டால் குழந்தைகளுக்கு அந்தப் பழக்கம் வந்துவிடும்' என்று நினைத்தால் குழந்தைகளைத் தூங்கவைத்துவிட்டு கணவனை மாடிக்கு அழைத்துச் சென்று குறைவாகச் சாப்பிட்டால்தான் நல்லது என்று - தனக்கு அந்தப் பழக்கம் வரக்கூடாது, தன்னைப் பேணிக் காக்கின்ற துணிவு உள்ள பெண் - டாக்டர் இவ்வளவுதான் குறிப்பிட்டுள்ளார், 4 யூனிட்கள்தான் சாப்பிடவேண்டும், அதற்கு மேலே சாப்பிடக்கூடாது என்று சொல்வார்களானால் நல்லது. கிளப்களுக்குச் சென்று குடிக்கவேண்டுமென்று அவர்களே கிளர்ச்சி செய்ய மாட்டார்கள், ஆனால் வீரத் தாய்மார்கள் இதற்காக கிளர்ச்சி செய்வது வேடிக்கையாக இருக்கிறது, பத்திரிகைகளிலே - அரசாங்கம் செய்கிற நல்ல காரியங்களைப் பெரிய அளவிலே போடாவிட்டாலும் - தாய்மார்கள் கிளர்ச்சி என்பதைப் பெரிய அளவிலே போடுகின்றன. உங்களுடைய கணவன் குடிப்பது அளவுப்படி இருக்கவேண்டுமென்றால் இருதய நோயிலிருந்து

உண்மையிலேயே பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் வீட்டிலே அமர்ந்து குடிக்கச் செய்தால் அவர்கள் கெட்டுப்போவதற்கு வழியில்லை கிளப்களிலே அவர்கள் குடிக்க அனுமதித்தால் அங்கே மற்றவர்கள் எனக்குப் போதும் நீ கொஞ்சம் குடி என்று சொல்வார்கள், அவர்கள் கெட்டுப்போவார்கள். ஆகவே கிளர்ச்சி செய்கின்ற தாய்மார்களை இங்குள்ளவர்களையல்ல - வெளியிலே கிளர்ச்சி செய்கின்ற தாய்மார்களை நான் கேட்டுக்கொள்வது வீட்டிலேயே உட்கார்ந்து அளவோடு குடிக்கச் செய்வதுதான் நல்லது என்பதால் அவ்வாறு அவர்கள் செய்யலாம்.

போலீஸ் ஸ்டேஷன்களிலே அடைக்கப்படுகின்ற கைதிகள் தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள். அடிக்கப்பட்டுச் செத்தார்கள் என்ற புகார்கள் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன. இந்த ஆண்டைப் பொறுத்தவரை அந்தக் கணக்கு குறைந்திருக்கிறது என்று கருதுகிறேன். ஐ.ஜி. அவர்களுடனும் ஏனைய அதிகாரிகளுடனும் பேசி ஒரு முடிவை எடுத்திருக்கிறேன். போலீஸ் ஸ்டேஷன்களில் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று கூறி போலீசார் தப்பித்துக்கொள்ளுகிறார்கள் என்பதாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எதுவாக இருந்தாலும் சரி, அதற்கு இடம் இல்லாத அளவுக்கு ஸ்டேஷன்களில் இருக்கும் கைதிகளை அடைக்கும் இடங்களில் ஜன்னல் கம்பி இல்லாத அளவுக்கு, துணியையோ, கயிரையோ கட்டுவதற்கு வசதி இல்லாத நிலையில், குறுக்குக் கம்பி இருந்தால் மிக உயரத்தில் வைக்க வேண்டுமென்ற நிலையில், நிச்சயமாக அந்தக் கைதிகள் தற்கொலை செய்து கொண்டிருக்க முடியாது, தற்கொலை செய்துகொள்ள வாய்ப்பு இல்லை என்ற அளவுக்குக் கட்டடங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாலை ஆறு மணிக்கு மேல் தனிப்பட்ட பெண் குற்றத்திற்காகச் சிறைப் பிடிக்கப்பட்டால் போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருக்கக்கூடாது, சப்-ஜெயிலுக்கு அனுப்பிவிட வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் சில தவறுகள் குறைக்கப்பட ஏதுவாக இருக்கும். அந்த முறையில் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை நகரைப் பொறுத்தவரை ஆறு காவல்துறை வேன்கள் இருந்துகொண்டிருக்கின்றன. மேலும் ஆறு காவல்துறை வேன்கள் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கின்றன. 12 வேன்களும் 12 தொகுதிகளில் சென்னை நகரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் இரவு பகல் எந்நேரமும். அதிலே சப் இன்ஸ்பெக்டரோ அல்லது காவல்துறையைச் சேர்ந்த ஒருவரோ இருப்பார். தீ விபத்துக்கள், சிறு சிறு குற்றங்கள் ஆங்காங்கு நடைபெறாதவாறு 12 வான்களையும் பயன்படுத்த முடியும். அதுவும் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு காவல்துறை மானியக் கோரிக்கையின் போது, காவலர் க்ஷேமநல நிதிக்கு அதிகபட்சம் ரூ. 50,000 என்று இருந்ததை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1 இலட்சம் என்று அதிகரிப்பதாக அறிவித்தேன். அது அமலுக்கு வந்திருக்கிறது. காவலரின் வீடுகளுக்கு மாதம் ஒன்றுக்கு 10 யூனிட் மின்சாரம் என்று இருந்ததை 20 யூனிட்டுகளாக ஆக்குவதற்கு உத்தரவு பிறப்பித்து இன்று அமலில் இருக்கிறது. சிறந்த சேவைக்கும், வீரச் செயல்களுக்கும் 'முதலமைச்சர் பதக்கம்' வழங்குவதுபற்றிக் கூறியதும் இன்று அமலில் இருக்கிறது. காவலர்களுக்கு ரூ. 15 லட்சத்தில் வீடு கட்டித் தரப்படும் என்ற உறுதிமொழியும் இன்று அமலாக்கப்பட்டிருக்கிறது.

இன்று காலையில் பேசிய பலரும் குறிப்பிட்டார்கள். நம்முடைய அரங்கநாதன் அவர்களும், கணேசன் அவர்களும், எதிர்த்தரப்பில் பேசிய பலரும் பேசிய நேரத்தில், கிராமங்களில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைக்கிள் வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்கே மோட்டார் சைக்கிளை வாங்கிக்கொடுப்பதைவிட, ஐந்து ஆண்டுகளில் இருக்கக்கூடிய எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் மோட்டார் சைக்கிள் வாங்கிக்கொடுப்பது என்ற வகையில் முதற்படியாக இந்த ஆண்டு 100 கிராமங்களில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (ஆரவாரம்).

கிராமங்களில் உள்ள போலீஸ்காரர்கள் தங்கள் பணியைப் புரிவதற்கு சைக்கிள்கள் தேவை என்ற கோரிக்கையைத் தெரிவித்தார்கள். போலீஸ் கமிஷன் அறிக்கை வருவதற்கு

முன்பாகவே - அவர்கள் இன்னும் பல தேவைகளையும், நன்மை களையும் கூறியிருக்கிறார்கள் - இடையிலேயே கிராமங்களில் உள்ள போலீஸ்காரர்களுக்கு முதல் கட்டமாக இந்த ஆண்டு ஐயாயிரம் பேர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படும். அந்த சைக்கிள்கள் வாங்க மானியமாக 40 சதவிகிதமும் கடனாக 60 சதவிகிதமும் அவர்களுக்கு அளிக்கப்படும்.

காவல்துறையைப்பற்றி மிகுந்த கடமையுணர்வோடும், கண்ணிய உணர்வோடும், கட்டுப்பாட்டு உணர்வோடும் பலரும் கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். நல்ல காரியங்களுக்காகப் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்கள். அதே நேரத்தில் அவர்களிடத்தில் இருக்கும் சிறு சிறு குறைபாடுகளை அவர்களே நீக்கிக்கொள்ள முன்வரவேண்டும். வேலியே பயிரை மேய்வது என்று இல்லாமல் அவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று இந்த அவையின் சார்பாகக் காவல் துறையினரைக் கேட்டுக்கொண்டு காவல்துறையின் பெரிய அதிகாரிகளும், ஏனைய அதிகாரிகளும் இந்த அரசோடும் என்னோடும் ஒத்துழைத்ததற்காகவும், நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவும், அமைதி ஒழுங்கை நிலைநாட்டவும் அரசுடன் ஒத்துழைத்த ஐ.ஜி. அவர்களுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்தத்துறைச் செயலாளர்களுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்து, இதிலே விரிவான விளக்கம் அளித்துவிட்ட காரணத்தால் இந்த மானியத்தின்மீது கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு அமைகிறேன்.

உரை : 6 நாள் : 19.07.1971

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள காவல் துறை மானியத்தின் மீது அனைத்துக் கட்சிகளுடைய உறுப்பினர்களும், அந்தந்தக் கட்சிகளின் தலைவர்களும் எடுத்துரைத்திருக்கிற கருத்துக்கள் இந்தத் துறை மேலும் திறமையாக நடைபெறுவதற்கும், செம்மையாக நடை பெறுவதற்கும் வழி வகுக்கும் என்று நான் திண்ணமாக நம்புகிறேன். காவல்துறை மிகுந்த கடமையுணர்ச்சியோடும், கண்ணியம் தவறாமலும் குலையாமலும் நடத்தப்படவேண்டிய ஒரு துறை என்பதையும், அந்த வழியைப் பின்பற்றி தமிழகத்தினுடைய காவல் துறை நல்ல புகழையும் மரியாதையையும் பாராட்டுதல்களையும் உரியதாக்கிக் கொண்டிருக்கிறது என்பதனையும் இங்கு பேசிய உறுப்பினர்கள் யாருமே மறுக்கவில்லை என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உறுப்பினர்கள் பேசிய நேரத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில தவறுகளைச் சுட்டிக்காட்டினார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஏராளமான செய்திகளைத் தனித் தனியாக எடுத்துக் கூறினார்கள். அவர்கள் பெரும்பாலும் புகார்கள், புகார்கள் என்ற அளவிலே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, அந்தப் புகார்கள் உண்மையாக இருந்தாலும் அல்லது அவர்களுக்குக் கிடைத்த தகவல்கள் தவறானவைகளாக இருந்தாலும் அவைகளை ஆராய்ந்திடவும், ஆவன செய்யவும் அந்தத் துறை கடமைப்பட்டு இருக்கிறது என்பதனை நான் இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

இந்தத் துறையில் ஈடுபட்டு இருக்கிற ஆயிரக்கணக்கான அலுவலர்கள் அவர்களுடைய உயிரையும் பணையமாக வைத்து இந்த நாட்டு மக்களைப் பாதுகாப்பதிலும், சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைப் பேணிக் காப்பாற்றவேண்டுமென்பதற்காக உழைப்பதிலும் அல்லும் பகலும் பணியாற்றி வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வாழ்வில் நல்ல ஒளி இருக்க வேண்டும், அவர்களுடைய வாழ்வில் நிம்மதி இருக்கவேண்டும் என்று இந்த அரசு கருதிய காரணத்தாலேதான் தமிழ் நாட்டிலே, வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இதுவரையிலே உருவாக்கப் படாத, காவல் துறை ஆணைக் குழு (போலீஸ் கமிஷன்) முதல் தடவையாக 1969ம் ஆண்டு உருவாக்கப்பட்டு, அந்தக் குழு அளித்த பரிந்துரைகளிலே உடனடியாகவும் மிக அவசியமானதும் என்று கருதக்கூடிய கருத்துக்களை நிறைவேற்றுகிற வகையில் அரசு முன்வந்து, அந்தப் பரிந்துரைகளில் பலவற்றை ஏற்று நிறைவேற்றியிருப்பதையும் இங்கே வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

மேலும் போலீஸ் கமிஷனின் சிபார்சுகள் பலவற்றைப் படிப்படி யாக நிறைவேற்றுவதற்கு இந்த அரசு உரிய முயற்சிகளை ஏற்ற காலத்திலே எடுக்கும் என்பதையும் நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போலீசாருடைய திறமையைக் காப்பாற்றவும் அவர்களுடைய உயிரைத் திரணமென மதித்து ஆற்றுகிற பல்வேறு பணிகளுக்கு, இப்போது நான் தொடக்கத்திலே குறிப்பிட்டது போல், அவர்களுடைய வாழ்வில் அமைதி இருக்கவேண்டுமென்பதற்காக இரண்டாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டபோது போலீஸ் கமிஷனின் பரிந்துரையை அதோடு இணைத்து அவர்களுக்கு என்று நாம் பல்வேறு நன்மைகளைச் செய்து இருக்கிறோம். குறிப்பாக நம்முடைய திரு. பொன்னப்ப நாடார் எடுத்துக் காட்டினார்கள். போலீசாருடைய சம்பளம் ஓரளவு உயர்த்தப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த ஓரளவு என்ன என்பதை நாம் சற்று உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

1965-ம் ஆண்டிலே அவர்களுடைய அடிப்படை சம்பளம் ரூ. 65 ஆகவும் பஞ்சப் படி ரூ. 33 ஆகவும் இருந்து, 1967-ல் அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் ரூ. 70 ஆகவும், பஞ்சப்படி

ரூ. 59 ஆகவும் உயர்ந்து, அவர்கள் ரூ. 129 மொத்தச் சம்பளமாகப் பெற்றுக் கொண்டு இருந்தார்கள். இன்றையதினம்அவர்களுடைய சம்பளம் - பஞ்சப் படி உள்பட மொத்தமாகப் பெறுவது ரூ. 165 என்பதை இந்த மன்றம் உணரும் என்று நான் கருதுகிறேன். அதைப்போலவே, 1965-ல் தலைமைக் காவலர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 85 ஆகவும், பஞ்சப் படி ரூ. 33 ஆகவும் இருந்து, அவர்கள் அப்போது பெற்றது மாதம் ஒன்றுக்கு ரூ.118 என்ற நிலைமையில் இருந்து, பிறகு 1966-ல் ரூ. 160 என்ற நிலைமைக்கு உயர்ந்து, தலைமைக் காவலர்கள் இப்போது ரூ. 225 மாதம்தோறும் பெறுகிறார்கள் என்ற செய்தியை இந்த மன்றம் உணரும் என்று நான் நம்புகிறேன். இந்த விகிதத்திலே மற்ற அதிகாரிகளுக்கும் சம்பளம் உயர்த்தி இருக்கப்படக்கூடிய அளவுக்கு இந்த காவல்துறையின் ஆணைக் குழுவின் சிபாரிசுகளை இந்த அரசு ஏற்று இருக்கிறது.

அதைப்போலவே, காவலர்களுக்கு வீட்டு வாடகைப் படி சென்னை நகரத்தில் ரூ. 14, மற்ற இடத்தில் ரூ.14, என்று (2-10-1970-க்கு முன்பு) இருந்தது. ஆனால் 2-10-1970-க்குப் பிறகு காவலர்களுக்கு வீட்டு வாடகைப் படி சென்னையில் ரூ. 20 என்றும், மற்ற இடங்களில் ரூ. 20 என்றும், இந்த நிலை 1972-73-ல் சென்னையில் ரூ. 25 என்றும், 1973-74-ல் சென்னையில் ரூ. 30 என்றும், மற்ற இடங்களில் ரூ. 25 என்றும் காவலர்களுக்கு அளிக்கப்படுவதும், இதே அளவில் மற்ற அதிகாரிகளுக்கும் இந்த வீட்டு வாடகைப் படி அளிக்கப்படுவதுமான நிலைமைகள் இந்த ஊதியக்குழுவால், போலீஸ் கமிஷனின் பரிந்துரையினால் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

ரூ. 17 லட்சம் செலவில் கிராமக் காவல் நிலையங்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்களும், 5,000 மிதி வண்டிகளும் (சைக்கிள்கள்) அரசு வழங்கியிருக்கிறது.

காவலர்களுக்கு முன்பு தரப்பட்டு வந்த தினப் படி ரூ. 1.25 என்று இருந்ததை, 2-10-1970-க்குப் பிறகு ரூ. 3 என்றும், தலைமைக் காவலர்களுக்கு ரூ. 2 என்று இருந்ததை ரூ. 4.50 என்றும், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 2.50 என்று இருந்ததை ரூ. 4.50 என்றும், இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 2.50 என்று இருந்ததை ரூ. 6 என்றும் நாம் உயர்த்தியிருக்கிறோம். இதிலே இந்த இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப இந்த ரூ 3

காவலர்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்றாலும் அதிலே சில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகள் தளர்த்தப் படவேண்டுமென்று இங்கே பேசிய எல்லாக் கட்சி உறுப்பினர்களும் எடுத்துக் காட்டினார்கள். அவைகளை அரசு விரைவில் ஆராய்ந்து ஆவன செய்யும் என்ற உறுதியை நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்களின் குடியிருப்பு வசதிக்காக நாம் 1970-71-ஆம் ஆண்டில் ஒதுக்கிய தொகை முதல் பகுதிக்காக ரூ. 34.24 லட்சம். இரண்டாம் பகுதிக்காக ரூ. 15 லட்சம், ஆக மொத்தம் ரூ. 49.24 லட்சம். 1971-72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 83.62 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக இதுவரையில் காவலர் குடியிருப்புத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 588.05 லட்சமாகும். குறிக்கோளில் 80 சதவீதம் நாம் குறிக்கோளாகக் கொண்டு இருக்கிறோம் என்றால், அதிலே 60 சதவீதம் இதுவரையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. காவலர்களின் மொத்த எண்ணிக்கை 36,958-ல் குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டவர்களின் எண்ணிக்கை 20,231 ஆகும். மீதம் உள்ளவர்களுக்கு விரைவிலே இந்த குடியிருப்பு வசதிகள் செய்வதற்கு அரசு தேவையான எல்லா நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்லாமல், காவல் துறையிலே நல்ல வீரம் செறிந்த செயல்களைப் புரிகிற காவலர்கள், ஏனைய அதிகாரிகள், அவர்கள் நீண்ட நெடு நாட்களாகப் பணியிலே இருந்து, நல்ல பெயரோடும், நல்ல ஒழுக்கத்தோடும், மிகுந்த ஊக்கத்தோடும், அயராது பாடுபட்டு இருப்பார்களேயானால், அவர்களுக்கென்று 'முதலமைச்சர் பதக்கம்' என்கிற ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, பதக்கம் மாத்திரம் அளிப்பது என்று இல்லாமல், அவர்களுக்கு தகுந்த ரூபாய்களையும் நன்கொடையாக வழங்கும் முயற்சியை இரண்டாண்டுக் காலமாக இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. செப்டம்பர் திங்கள் 15-ம் நாள், நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில், காவலர்களுக்கு இந்தப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து, இது வரையில் இரண்டு முறை அந்தப் பரிசுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும், வருகிற ஆண்டுகளிலும் தொடர்ந்து இந்தப் பரிசு அளிப்பு விழாக்கள் நடைபெற இருக்கின்றன.

காவல் துறையிலே வேலை வாய்ப்புகளை மேலும் அதிகப்படுத்துகிற வகையிலே தமிழக அரசு எடுத்து இருக்கிற முயற்சியை இந்த மன்றம் நன்றாக அறியும். அதைப்பற்றிப் பேசிய நேரத்திலேகூட, சில பேர் குறிப்பிட்டார்கள். இதிலே கட்சி சார்புடையவர்களாக 1,000 பேரை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வீர்கள் என்று சில பேர் குறிப்பிட்டார்கள். இந்த வேலைக்கு பள்ளி இறுதி வகுப்பிலே தேறியவர்கள்தான் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இந்த வேலைக்கென்று தகுதி படைத்தவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட முடியுமேதவிர, நான் இன்ன கட்சியைச் சார்ந்தவன், ஆகவே உயரத்தில் 2" குறைவாக இருந்தாலும் பரவாயில்லை, மார்பு சுற்றளவு 2" குறைவாக இருந்தாலும் பரவாயில்லை, என்னைக் காவல் துறையில் வேலைக்கு அமர்த்துங்கள் என்று யாரும் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னபடி அவர்கள் எடுத்துக் கொண்டால், உள்ளபடியே அந்தத் துறையிலே இந்த அரசு ஜனநாயகம் அற்ற முறையிலே நடைபெறுகிறது என்பதை நீங்கள் நிச்சயமாகக் குற்றம் சாட்டலாம்.

ஆனால், ஒரு நல்ல காரியத்தைத் தொடங்குகிறோம், காலம் காலமாகக் காவல் துறைக்கு ஆட்கள் எப்படி எடுக்கப் பட்டிருக்கிறார்கள். எந்த வகையில் காவல் துறைக்கான ஆட்களை எடுக்கிறோம்? ஒரு ஆயிரம் பேர்களுக்குப் புதிதாக வேலை கொடுக்கிறோம். என்பதைப் பாராட்டாவிட்டாலும் கட்சிக் காரர்களைப் போட்டுவிடுவீர்களோ என்று கேட்பது விந்தையாக இருக்கிறது. கட்சிக்காரர்கள் யார்? நான் கேட்கிறேன். ஒரு மனிதன் உள்ளத்தில் ஒரு கொள்கைக்கான தத்துவம் இருக்கலாம். ஆனால், காவல் துறைக்கு எடுப்பவர்களுக்கு அங்க அடையாளங்கள், திறமை, உடல் அமைப்பு, தேக ஆரோக்கியம் இவைகளைத்தான் காணமுடியுமே அல்லாமல், அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதைக் கண்டுபிடிக்கத் தக்க 'எக்ஸ்-ரே' கருவி எதுவும் காவல் துறையினர் கைவசம் இல்லை.

கட்சியைச் சேர்ந்தவர்களை எடுப்பார்களோ என்று கூறுவதன் மூலம், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஒரு பகுதியில் நாம் எடுத்திருக்கும் முயற்சியைப் பாராட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் நழுவிவிட்டதற்காக நான் பெரிதும் வருந்துகிறேன். நிச்சயமாகச் சொல்லுகிறேன். தகுதியற்றவர்கள், கட்சிக்காரர்கள்

நிச்சயமாக இந்த வேலை வாய்ப்பில் இடம் பெற மாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூறுகிறேன். அரசாங்க அதிகாரிகள், அது எந்த அரசாங்கமாக இருந்தாலும், அதற்கு விசுவாசத்தோடு நடந்து கொள்ளவேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. கட்சிக்கு விசுவாசம் காட்டக் கூடாது. அரசாங்கத்தின் காரியங்கள், செயல் முறைகளை நடைமுறைப் படுத்தவேண்டிய பணிகள் இவற்றில் எந்த அதிகாரியாக இருந்தாலும், எந்த துறையில் இருந்தாலும், விசுவாசமாக இருக்க வேண்டும். கட்சிக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்று கூறவில்லை.

இங்கே பேசிய பலரும் - குறிப்பாக எதிர்த் தரப்பில் உள்ளவர்கள் - எடுத்துச் சொன்னார்கள். அரசியல் தலையீடு இதிலே நிச்சயமாக இருக்கக்கூடாது என்று எடுத்துச் சொன்னார்கள். அரசியல் தலையீடு இன்றையதினம் காவல் துறையில் இருக்கிறதா என்பதை அவர்கள் பேசிய பேச்சிலிருந்தே நாம் நன்றாகப் புரிந்து கொள்ளலாம். அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்று கூறும் அதே நேரத்தில், தாங்கள் தலையிட நேர்ந்தது என்பதையும் கூறிவிட்டு, ஆனால் நான் சென்றது ஒரு அநியாயத்தைக் கண்டிக்க, என்று குறிப்பிட்டார்கள்.

அதிலும் குறிப்பாக, நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே.டி.கே. தங்கமணி சொல்லும்போது, நான்கூட இந்த விஷயத்திலே தலையிட்டேன், ஆனால் ஒரு அநியாயத்தைக் கண்டிக்கத் தலையிட்டேன், என்று சொன்னார்கள். நியாயமா, அநியாயமா என்று ஆராய்ந்தறிவது யார்? தலையீடு தலையீடுதான். தலையிட்ட பிறகு நான் நியாயத்திற்காகத் தலையிட்டேன் என்று சொன்னாலும், அநியாயத்திற்குத் தலையிட்டேன் என்று சொன்னாலும் அது பொருந்திவராது. ஆனால் தலையீடுகளை வைத்து ஏற்பட்ட விளைவுகள் என்ன? இந்தத் தலையீட்டின் காரணமாக ஒரு நியாயமான காரியம் அநியாயமாக மாற்றப்பட்டதா? அல்லது ஒரு அநியாயம் நியாயமாக மாற்றப்பட்டதா? என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அப்படிப்பட்ட அரசியல் தலையீடுகள் இருக்கக் கூடாது என்பதற்காக, காவல் துறைத் தலைமை அதிகாரியின்மூலம், 1968-ல் அனைவருக்கும் ஓர் அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது 'எல்லா

அதிகாரிகளும், குற்றங்களைத் தடுப்பதில் அல்லது கண்டு பிடிப்பதில் அல்லது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதில் தங்களது கடமைகளை நிறைவேற்றும்போது, சட்டத்தில் சொல்லியுள்ள கூற்றைக் கண்டிப்பாகப் பின்பற்றி நடக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அவசியமற்ற முறையில் அல்லது நியாயமற்ற முறையில் அல்லது நியாயமற்ற வகையில் செல்வாக்கினை எவர் பயன்படுத்தினாலும், காவலர்கள் அதை உறுதியாக எதிர்க்க வேண்டும்; நியாயமும், நேர்மையும் நிலைநாட்டப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், சட்டம் அல்லது நடைமுறையில் சொல்லியிருப்பவைகளுக்கு மாறான நடவடிக்கை எதையும் பிறர் கொண்டுவரும் செல்வாக்கிற்கு இணங்கி அல்லது அடிபணிந்து மேற்கொள்ளக் கூடாது' என்று காவல் துறைக்கு அறிக்கை அனுப்பப் பட்டிருக்கிறது.

அந்த வகையில்தான் இன்றைக்கு அந்தத் துறை செயல்பட்டு வருகிறது. ஒன்றிரண்டு இடங்களில் தவறுகள் இருப்பது சுட்டிக் காட்டப்பட்டன. அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், அரசின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும், அதையடுத்துக் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டிலும், நான் திட்டவட்டமாகச் சொல்லி யிருக்கிறேன். யார் எந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்து சொன்னாலும், கொண்டு வந்து சொல்கிறவர்கள் யார் என்று பார்க்காமல், அந்தப் பிரச்சினையில் இருக்கும் நியாய அநியாயம் என்ன என்பதைப் பார்த்து அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுங்கள் என்றும், 'தவறு செய்யுங்கள்' என்று நானே சொன்னாலும் கூட, 'நீங்கள் பண்ணாதீர்கள்' என்றும் காவல் துறையினர் மாநாட்டிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும் எடுத்துக் காட்டியிருக்கிறேன். அதற்கேற்ப, இன்றைக்கு அந்தத் துறை நடைபெற்று வருகிறது.

வழக்குகளில் மற்றக் கட்சிக்காரர்கள் தலையிடவே இல்லையா? பொது விவகாரங்களாகட்டும், அல்லது தனிப்பட்ட விவகாரங்கள் ஆகட்டும், தலையிடவே இல்லையா என்பது ஒரு பிரச்சினை. இரண்டாவது, மற்றக் கட்சிக்காரர்கள் மனுக்கள் கொடுத்து, அவை அலட்சியம் செய்யப்பட்டிருக்கின்றனவா, என்பது

இன்னொரு பிரச்சினை. சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், திரு. நா. சௌந்தரபாண்டியன், திருநெல்வேலி மாவட்டம் அடங்கார்குளம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. செல்லையா நாடார் என்பவர் வள்ளியூரில் பஞ்சாயத்து ஒன்றிப்புத் தேர்தலில் சௌந்தரபாண்டியன் ஆதரவு கொடுத்ததால், எதிர் மனுதாரர்கள் 11 பேர்கள் தனக்கும் சௌந்தரபாண்டியனுக்கும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய வகையில் தனக்கு மிரட்டல் கடிதம் வந்ததாகவும், இதுகுறித்து சௌந்தரபாண்டியனுக்கும் தனக்கும் பாதுகாப்பு வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். என்னிடத்தில் மிரட்டல் கடிதம் அளிக்கப்பட்டது. உடனடியாகக் காவல் துறைக்குத் தெரிவித்து, அந்த மனுவைப் பற்றிக் காவல் துறையினர் விசாரித்து, யார் யார் சுட்டிக்காட்டப்பட்டிருந்தார்களோ அவர்களெல்லாம் எச்சரிக்கப்பட்டார்கள். அதேபோல பல நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்ட முடியும்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற் காகவோ அல்லது சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற் காகவோ அலட்சியப்படுத்துவதில்லை. இந்த மன்றத்திலே டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் சில விவகாரங்களை என்னிடத்தில் எடுத்துத் தந்ததும், அவைகளை உடனடியாக விசாரிக்கச் சொல்லி விசாரணைக்குப் பிறகு அதிகாரிகள் தந்த பதிலையும் அவர்களிடத்தில் உடனடியாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, இந்தத் துறையில் பாரபட்ச மற்ற முறையில், கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் பணிகள் நடைபெறு கின்றன என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, பெரும்பாலும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், அதிலும் குறிப்பாகக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தச் சந்தேக வழக்குகள் போடப்படுவது அறவே நீக்கப்பட வேண்டும், அகற்றப்பட வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்தச் சந்தேக வழக்குகளில் சில நேரங்களில் ஏதும் அறியாத அப்பாவிகள் சிக்கிக் கொள்ளுகிறார்கள் என்றெல்லாம் எடுத்துக் கூறியிருப்பதை இந்த அரசும் கவனிக்காமல் இல்லை. ஆனாலும் சில நேரங்களில், அப்படி நடந்துவிடும் சம்பவங்களுக்காக நான் வருந்துகிறேன். ஆனால், சந்தேக வழக்குகள் போடப்படும்போது,

சில முக்கியமான, பயங்கரமான தகவல்கள் கிடைக்கின்றன. எப்படிப் பட்டவர்கள் பிடிபடுகிறார்கள் என்பதற்கான சில உண்மைகளை மேலும் குறிப்பிட விரும்புகிறேன்.

8-7-1971-ல் மதுரையில், ஜெபமணி எனப்படும் நபர் இரவில் சந்தேகச் சூழ்நிலையில் கைது செய்யப்பட்டார். அவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வாடிக்கையான குற்றவாளி. சைக்கிள்களில் இரண்டு பேர்களாகவும், விளக்கு இல்லாமலும், சவாரி செய்யும் நபர்களிடமிருந்து தலைமைக் காவலரைப்போல போலி உடையணிந்து பணம் வசூல் செய்து வந்துள்ளார். வீடுகளில் புகுந்து திருடியதாகப் பல வழக்குகளில் அவர் சம்பந்தப்பட்டவர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டதன் காரணமாக இவ்வளவு தகவல்களும் அவரைப் பற்றிக் காவல் துறையினருக்குக் கிடைத்தது.

15-5-1971 இரவு, விருதுநகரைச் சேர்ந்த குருசாமி என்பவர், சந்தேகச் சூழ்நிலையில் மதுரையில் கைதானவர். தன்னிடம் இருந்த ரூ. 10,000 பெறுமான தங்க நகைகளுக்கு அவரால் சரியான காரணம் காட்டமுடியவில்லை. விருதுநகரில் இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு வீட்டை உடைத்து, பயங்கரமாகக் கொள்ளை யடித்ததற்கு இவர் காரணமானவர். ரூ. 17,000 பெருமான பொருள்கள் மீட்கப்பட்டன.

அடுத்தபடியாக, யாத்திரீகர்கள் நடுவே சந்தேகப்படும் படியாகத் திரிந்த தேவராஜ் என்பவர் 26-5-1971 இரவு மதுரை நகரில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து சைக்கிள் ட்யூப்களும் டயர்களும் மற்றும் பல உபகரணங்களும் ஆக ரூ. 10 ஆயிரம் பெறுமான பொருள்கள் மீட்கப்பட்டன. இவை அனைத்தும் ஒரு சைக்கிள் கடையில் திருடு போனவை என்று கண்டறியப்பட்டு ஒப்படைக்கப்பட்டன.

அடுத்து, திருவில்லிபுத்தூரைச் சார்ந்த காசிநாதன் என்பவர் மதுரைத் திருநகரில் காலை மூன்று மணிக்குப் பிடிபட்டவர். ரூ. 10 ஆயிரம் பெறுமான பொருள்கள் களவிற்குக் காரணமாக இருந்தவர் அவர்.

27-4-1971 இரவு வெள்ளையக் கடும்பன் என்கிற நபர் சந்தேகத்தின் காரணமாகக் கைது செய்யப்பட்டவர். ஆறு வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட வழக்குகளில் சம்பந்தப் பட்டவர். 1969-ஆம் ஆண்டிலிருந்து தலை மறைவாக இருந்தவர்.

சென்னையில் மூர்மார்க்கெட்டுக்கு அருகே 6-6-1971 இரவு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தாமோதரன், காஞ்சீபுரத்தைச் சார்ந்தவர். வீடுகளை உடைத்துத் திருடிய 16 வழக்குகளிலும் மற்றும் பதினைந்து திருட்டுகளுக்கும் அவர் காரணமாக இருந்தவர். இக்களவுகள் யாவும் சென்னையிலும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் நடந்தன. இக்குற்றங்களில் ஈடுபட்ட அந்த நபரிடமிருந்து ரூபாய் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டன. பின்னர் அவருக்கு நான்காண்டு தண்டனை வழங்கப்பட்டது.

19-6-1971 இரவு சந்தேகத்தின் பேரிலே கைது செய்யப்பட்ட ஆவடியைச் சார்ந்த ஜான்ஸன் என்பவர் 17 சைக்கிள் திருடுகளுக்குக் காரணமானவர் என்று கண்டுபிடிக்கப் பட்டது.

1970-ஆம் ஆண்டிலே சந்தேகத்தின் பேரிலே இப்படிக் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள். இதிலே குற்றவாளிகள் என்று கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் 29 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் என்ற குறிப்பும் என்னிடம் இருக்கிறது.

1971-ஆம் ஆண்டில் சென்னையில்மட்டும் பத்தாயிரத் திற்கு மேற்பட்டவர்கள் சந்தேகத்தின் பேரிலே கைது செய்யப் பட்டு இருக்கின்றார்கள். இவர்களில் ஒன்பதாயிரத்திற்கு மேற் பட்டவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபணம் ஆகியிருக்கிறது.

11-7-71 அன்று இரவு சென்னையில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலையில் சைக்கிள் ரிக்ஷாவில் போய்க்கொண்டு இருந்த தூத்மல் என்பவரைச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தார்கள். அவர் கையில் பிளாஸ்டிக் பை ஒன்று இருந்தது. எடுத்துப் பார்த்ததில் நூறு ரூபாய் நோட்டுகளாகவும் பத்து ரூபாய் நோட்டுகளாகவும் மொத்தம் ஒரு லட்ச ரூபாய்க்கு இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இன்றைக்கு அவர்மீது வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

இவற்றையெல்லாம் நான் இங்கே எடுத்துக்காட்டிப் பேசும் போது, சந்தேக வழக்குகள் போடுவது நியாயம்தான் என்று அவற்றை ஊர்ஜிதப்படுத்துவதற்காகப் பேசுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இப்படிப் போடும் நேரத்தில், இந்தச் சந்தேக வழக்குகளால் பாதிக்கப்படுகின்ற, ஏதும் அறியாதவர்களுக்கு உதவிகரமாக இருப்பதற்குக் கூடுமான வரையில் – நாம் இதைத் தவிர வேறு சட்டங்கள் ஏதேனும் இயற்ற முடியுமா என்று முடிவெடுக்கும் வரையில் – போடப்படும் இந்தச் சந்தேக வழக்குகள் எல்லாம் துரிதமாகப் பைசல் செய்தாக வேண்டும், அவற்றிற்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றது.

இப்போது உள்ள வழக்கத்தின்படி, ஒருவர் கைது செய்யப் படுவாரேயானால் அவர், தான் இந்த ஊரைச் சேர்ந்தவர் என்று சொன்னால், அந்த ஊருக்குக் கடிதம் எழுதி, அந்த ஊரிலுள்ள ஸ்டேஷனிலிருந்து அதுபற்றிய தகவல் வருவதற்கு, இடையிலே ஆகும் ஒன்று அல்லது இரண்டு வார காலத்திற்கு, தன்னைப் பற்றி ஏதும் தெரிவித்துக்கொள்ள முடியாத சூழ்நிலையில், குற்றமற்றவர் சில நேரங்களில் சிறையில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக, கூடுமானவரையில் தொலைபேசியைப் பயன்படுத்தி, அங்கேயிருந்து தகவலறிந்து, இரண்டொரு நாட்களிலேயே, அவர் நிரபராதி என்றால் விடுவித்தும் அப்படியின்றிக் குற்றவாளியென்றால் வழக்குத் தொடர்ந்தும், நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கின்றார்கள். எனவே, இப்படிச் சந்தேகத்தின் பெயரால் கைது செய்வதற்காக, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக வேறுவிதமான சட்டம் அல்லது நடைமுறையைக் காணும் வரையில் அதுவரையில், இந்த இடைக்காலத்தில், இப்படிக் கைது செய்யப்படும்போது அவற்றில் துரிதமாகத் தீர்வு கண்டிடவேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கின்றது.

திறமை வாய்ந்த இந்த நிர்வாகம் இன்றைய தினம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதுபோல, தீவிரவாதிகள், "நக்சலைட்டுகள்" என்று சொல்லப்படும் அவர்கள் விஷயத்தில், எந்த அளவிற்குக்

கண்காணிப்போடு இருந்து வருகிறது என்பதை இங்கே மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் எடுத்துக் காண்பித்திருக் கின்றேன்.

அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசியிருக்கின்றார்கள். 'நக்சலைட்ஸ்' ஏன் வளருகின்றார்கள், எந்த அடிப்படையில் வளருகின்றார்கள் என்பதை முன்பே நான் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் இங்கே எடுத்துக் கூறினேன். அவர்கள் வளருவதற்கான அடிப்படை எதுவாக இருந்தாலும், சமுதாயத்தில் உள்ள பல்வேறு சூழ்நிலைகள் மாற்றப்படவேண்டும் என்று நாம் கருதினாலும், வறுமையை வென்று வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிச் சமுதாயத்தில் ஒரு பெரிய புதிய மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் இன்றைக்கு உறுதி கொண்டிருக்கின்றோம் என்றாலும், நாம் இன்னும் சமுதாயத்திலே ஆற்றவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. நாம் மாற்றியமைக்கவேண்டிய சட்டங்கள் பல இருக்கின்றன. எனவே, நாம் அந்த அடிப்படையை உணராமல் இல்லை. அந்த அடிப்படையை உணர்ந்து, ஜனநாயக ரீதியில் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் நேரத்திலே, வன்முறைகள்மூலம் இந்த நாட்டு மக்களிடத்தில் வளமான வாழ்க்கையை உருவாக்கிவிடலாம் என்று நினைத்து, இரத்தத்தில்தான் அந்த அருமையான வளம் மிகுந்த செந்தாமரை முளைக்கும் என்று கருதுவது தவறு என்று நாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலே சுட்டிக்காட்டியிருக்கிறோம். அவர்களுடைய உணர்வுகளை நான் என்றைக்கும் மதிக்கின்றேன். நாடு வாழ வேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் தங்களைத் தீவிரவாதிகளாக ஆக்கிக்கொண்டு இருக்கின்றார்கள் என்றால், அந்த உணர்வுகளை மதிக்கின்றேன்.

ஆனால், அதே நேரத்திலே, அவர்களுடைய செயல்களை, ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் யாரும் ஏற்க முடியாது. ஆகவே, நாம் மெல்ல, மெல்ல ஆனால் உறுதியாக, இந்தச் சமுதாயத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தவேண்டியவர் களாக இருக்கின்றோம். அப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தீவிரவாதிகளாக இருப்பவர்களும் நம்மோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் அதே

நேரத்தில் அவர்கள் இப்படி நமது கவனத்தைத் திசை திருப்புவதாலும், கொலை, கொள்ளை போன்ற மிகக் கொடூரமான காரியங்களில் ஈடுபட்டு, ஒரு நாட்டின் அமைதியை, சமுதாயத்தினுடைய அமைதியைக் கெடுப்பதால் அப்படிப்பட்ட மாற்றங்களைக் கொண்டுவந்துவிட முடியாது என்று இந்த அரசு உறுதியாகக் கருதுகிறது. அரசுப் பொறுப்பிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகமும் கருதுகின்றது.

எனவே, அப்படிப்பட்ட தீவிரவாதிகளுக்கெல்லாம் மீண்டும் ஒரு முறை வேண்டுகோளாக விடுக்கின்றேன். உங்கள் உணர்வுகளை மதிக்கும் அதே நேரத்திலே நீங்கள் எடுத்துக் கொண்டுள்ள செயல்கள் கண்டிக்கத்தக்கவை, தேவையற்றவை, எனவே, அவற்றை விட்டுவிட்டு, இந்தச் சமுதாயம் முன்னேறுவதற்கு இந்தச் சமுதாயம் முன்னேற்றப்பட வேண்டும் என்று அக்கறை கொண்டுள்ள ஜனநாயக அரசோடு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அப்படியில்லாமல் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிலருடைய தலைகளைக் கிள்ளியெறிந்துவிடுவதால், சிலருடைய குழந்தைகள் பதைக்க பதைக்க, குடும்பத் தலைவனைக் கொன்று விடுவதால் நாட்டில் உண்மையான புரட்சி ஏற்பட்டுவிடும் என்று கருதினால் அப்படிப் பட்ட புரட்சி ஒரு மாத காலம் அல்லது இரண்டு மாத காலம் நடைபெறலாம். ஆனால் புரட்சிக்குப் பின்னால் பூத்துக்குலுங்க வேண்டிய சமதர்மப் பூக்காடு மலருமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, இந்தச் சமதர்மப் பூக்காட்டை உருவாக்கு வதற்காக நாம் எல்லோரும் ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டும்.

இதே நேரத்தில் இவற்றையெல்லாம் மீறி வன்முறைதான் எங்கள் லட்சியம், பலாத்காரம்தான் எங்கள் குறிக்கோள், கொலை கொள்ளைச் செய்யும் நாட்கள்தான் எங்களுக்கு இன்பமான திருநாட்கள் என்று அவர்கள் கருதுவார்களானால் அந்த விஷயத்தில் இந்த அரசு இப்போதுள்ளதைவிட இன்னும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நேரும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளாமல் இருக்க முடியாது.

காவல் துறையினர் மிகவும் நாணயமாக நடந்துகொள்ள வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. மாண்புமிகு அங்கத்தினர்கள் யாரும் மொத்தமாகக் காவல் துறையை

அப்படியே குற்றம் சொல்லவில்லை என்பதை நான் முழுக்க முழுக்க நம்புகிறேன். நமது நாடார் அவர்கள் பேசும் நேரத்தில் கூட விவாதத்தில் அதிகமாகச் சூடு பிறக்கவில்லை என்றார்கள். சூடு இல்லாத காரணம் எதிர்க்கட்சியினுடைய திறமைக்குறைவு காரணம் என்று நான் நிச்சயமாகச் சொல்ல மாட்டேன். நீங்கள் நினைத்தால் . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நீங்கள் அப்படிச் சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சொல்லாமல் இருக்கும்போது ஏன் வலிய ஏற்றுக்கொள்ள வேண்டும்? எனவே நான் எதிர்க்கட்சியினருடைய திறமைக் குறைவு என்று சொல்ல மாட்டேன். பதிலாக, சூடாகப் பேசும் அளவிற்கு இந்தத் துறை எந்தத் தவறுகளையும் இழைத்து விடவில்லை என்பதுதான். எனவேதான் சூடேறவில்லை.

மதிப்பிற்குரிய தங்கமணி போன்றவர்களும், நாடார் போன்றவர்களும் திருமதி அனந்தநாயகி அம்மையார் போன்றவர்களும் டாக்டர் ஹண்டே போன்றவர்களும் தங்கள் தொகுதியில் நடந்ததாகச் சொல்லப்படும் இரண்டொரு நிகழ்ச்சிகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவைபற்றி அவ்வப்பொழுது துரிதமாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டும் என்று கட்டளை பிறப்பித்து இருக்கின்றேன். இன்னும் சொல்லப்போனால் நமது சங்கு முத்துத்தேவர் அவர்கள் தொகுதியில் நடந்த சில சம்பவங்கள் பற்றிக் காவல் துறையினரிடமிருந்து தகவல்கள் பெற்று அதன் விவரங்களை நமது நாடார் அவர்கள்மூலமாக திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குத் தந்து இருக்கிறேன். எனவே இத்துறை விழிப்போடும் ஒழுக்கத்தோடும் நடந்துகொள்ள வேண்டிய பெரும்பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது.

அதே நேரத்தில் முஸ்லீம் லீக் உறுப்பினர் திருப்பூர் மொய்தீன் அவர்கள் சொன்னதை மறந்துவிடுவதற்கு இல்லை. காவல் துறையினரிடம் பண்பை எதிர்பார்க்கும் நாம் அவர்களிடமும் பண்போடு நடந்து கொள்ள வேண்டும் என்று

குறிப்பிட்டார்கள். அது முற்றிலும் உண்மைதான். அதே நேரத்தில் காவல்துறையினரை அணுகுகின்றவர்கள் பண்போடு நடந்து கொள்ளவில்லை என்ற காரணத்தினால் காவல்துறையினரும் பண்பற்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லுகிறேன் என்றால், இல்லை. சிலர் பண்பற்ற முறையில் நடந்து கொண்டால் கூட காவல் துறையினர் தங்களுக்கே உள்ள பண்பை விட்டுக் கொடுக்காமல் நடந்துகொள்ள வேண்டும் என்றுதான் நான் காவல் துறையிலுள்ள எல்லா அதிகாரிகளுக்கும் ஏனைய காவலர்களுக்கும் என் வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், காவல்துறை நன்கு செயல்படவேண்டுமானால் அவர்களைப்பற்றி தவறான செய்திகளை, தகவல்களை வெளியிட்டு, காவல் துறையினருக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் அரசியல் கட்சிகளும் அரசியல் ஏடுகளும் முனையக் கூடாது என்பது என்னுடைய பணிவன்பான வேண்டுகோளாகும். இன்றைக்கு எத்தனையோ செய்திகள் வருகின்றன. இன்றைக்கு ஒரு பத்திரிகையிலே பார்க்கிறேன். ம. பொ. சிவஞானம் அவர்களின் மருமகன் எங்கேயோ கார் விபத்தில் சிக்கி யாரோ ஒரு பையன் அடிபட்டுச் செத்துவிட்டான். அவர்மீது வழக்குப் போடவில்லை என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது. நான் அதிகாரிகளிடம் கேட்கிறேன். உடனே அதிகாரிகள் அந்த இடத்திலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்றும், அப்படிக் கைது செய்யப்பட்டவர்மீது வழக்குப் போடப்பட்டு ஜாமீனில் விடுதலையாகியிருக்கிறார் என்றும் தகவல் கொடுக்கிறார்கள். தவறான தகவல்களை இன்றைக்குப் பத்திரிகையிலே போட்டு விடுகின்றார்கள்.

அண்மையிலே 15-ம் தேதி என்று கருதுகிறேன். சென்னை மாநகரத்திலே மதுவிலக்கு ஒத்திவைக்கப்படுவதை எதிர்த்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பாக டில்லியிலிருந்து வந்த திருமதி சுசீலா நய்யார் அவர்களும் தமிழகத்தில் உள்ள சிலரும் சேர்ந்து காலையில் 54 பேர், பிறகு மாலையில் 94 பேர் என்ற அளவிலே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்கள். அது அமைதியாக நடைபெறுவதற்குக் காவல் துறை பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு நல்ல பாதுகாப்பு

அளித்திருக்கின்றது. ஆனால் பத்திரிகையிலே என்ன செய்தி வருகின்றது? உண்ணாவிரதத்தில் இருந்துகொண்டிருக்கும்போது, துறைமுகத்திலிருந்து தொழிலாளர்கள் வெளியே வந்து, உண்ணா விரதம் இருந்த பந்தலைப் பிரித்துப்போட்டு, படங்களையெல்லாம் கிழித்துப்போட்டு அலங்கோலம் செய்தார்கள்; அமளி துமளி ஏற்பட்டது; அவ்வளவு பேரும் திராவிட முன்னேற்றக் கழக அரசால் ஏவி விடப்பட்டவர்கள்; காவல்துறை கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது; அதற்குப் பிறகுதான் 10 பேராக இருந்த காவல்துறை 100 பேராகக் பெருகிக் கலவரத்தை அடக்கினார்கள் என்று செய்தி போடப்படுகிறது. அப்படிப்பட்ட தவறான தகவல்கள் போடப்படுகின்றன; மிகைப்படுத்திப் போடுவது ஒன்று; பொய்யையே போடுவது ஒன்று. 400 பேர் இருந்தார்கள் என்றால், 4,000 பேர் இருந்தார்கள் என்று போடுவது மிகைப்படுத்திப் போடுவது. 400 பேரில் 300 பேர் செத்து விட்டார்கள் என்று போடுவது பொய் போடுதல். அதைப் போலத்தான் அங்கே நடைபெற்ற உண்ணாவிரதத்தில் துறைமுகத் திலிருந்து தொழிலாளர்கள் வெளியே வந்தார்கள். வந்தவர்களில் சிலபேர் உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கு அப்பால், வெகு தொலைவிற்கு அப்பால், நின்றுகொண்டு மதுவிலக்கு ரத்துக்கு ஆதரவாக கோஷமிட்டார்கள். அது உண்மை. உடனடியாகப் போலீஸ் தலையிட்டு அவர்களை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். இதுதான் நடந்த நிலவரம். ஆனால் உண்ணாவிரதம் மேற்கொண்டவர்கள்கூட சொல்லாத கூற்று பத்திரிகையிலே வேண்டுமென்றே போடப்படுகிறது.

இன்னொரு நிகழ்ச்சி. வேலூரிலே இதுபோன்ற உண்ணாவிரதம் அதிலே கலந்துகொண்டவர்கள் யார், யார் என்று பத்திரிகையிலே செய்தி போடும்போது, நான் சாதாரணப் பத்திரிகையைக் கூட சொல்லவில்லை, தினமணிப் பத்திரிகை செய்தி போட்டது. என்ன போட்டது? வேலூரிலே நடைபெற்ற உண்ணாவிரதத்தில் கலெக்டர் காரியாலயத்திலே 77 பேர் ஈடுபட்டார்கள். ஆளுங்கட்சி நீங்கலாக எல்லா அரசியல் கட்சிகளும் இந்த இயக்கத்திலே பங்கு கொண்டிருப்பதாக அந்த இயக்கத்தின் தலைவர் கூறினார். (எதிர் வரிசையிலே அமர்ந்திருந்த திரு. கே.டி.கே. தங்கமணியைப் பார்த்து) இதிலே நீங்கள் உண்டா?

திரு. கே.டி.கே. தங்கமணி : இல்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இதிலே இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி பங்கு கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். பார்வர்டு பிளாக் இல்லை. திருப்பூர் மொய்தீன் சொல்லுகிறார்கள், முஸ்லீம் லீக் இல்லை என்று. சுரேந்திரன் சொல்கிறார் பிரஜா சோஷலிஸ்டு கட்சி பங்கு கொள்ளவில்லை என்று. ஆனாலும் ஆளுங்கட்சி நீங்கலாக மற்ற எல்லாக் கட்சிகளும் இந்த இயக்கத்தில் பங்கு கொண்டிருப்பதாக அந்த இயக்கத்தின் தலைவர் கூறினார் என்று செய்தி போடப்படுகிறது. அத்தோடு விட்டால் பரவாயில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது இருந்தார்கள் என்று பத்திரிகையிலே போடப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இல்லை, 'உணவு அமைச்சர் ப.உ. சண்முகத்தின் சகோதரி மகன் பன்னீர்செல்வம் (பழைய காங்கிரஸ்) உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.' (சிரிப்பு). இது தினமணிச் செய்தி. நான் வேறு சில பத்திரிகைகளில் இம்மாதிரிச் செய்தி வருவதை உள்ளபடியே ஆட்சேபிக்கவில்லை. அது அவர்களுடைய கட்சியின் பழக்கம் ஆனால் அமைச்சர் ப. உ. சண்முகத்திற்குப் பன்னீர்செல்வம் என்ற மருமகன் இருக்கிறாரா என்றால், இல்லை. நான் விசாரித்தேன். பழைய காங்கிரஸ் என்று போடப் பட்டிருக்கிறது. அதில் ஆச்சரியம்கூட இல்லை. தகப்பனார் காங்கிரஸ். மகன் திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கலாம். டாக்டர் சுப்பராயன் காங்கிரஸ். மோகன் குமாரமங்கலம் கம்யூனிஸ்ட் என்று இருந்தார்கள். ராஜாஜி சுதந்திரா, நரசிம்மன் அப்போது காங்கிரஸ் என்று இருந்திருக்கிறார்கள். ஒரே குடும்பத்தில் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருப்பது வியப்பிற்குரியது இல்லை. ஆனால் இந்த ஆச்சரியமான விஷயம் குறிப்பிடத்தக்க விஷயம் என்று போடப்பட்டிருப்பது உண்மையா என்றால், இல்லை. யார் அந்த பன்னீர்செல்வம் என்று அவனைப் பற்றி விசாரித்தேன்.

On 24th June 1971 Thiru Panneerselvam was found drunk and he was charge-sheeted by the Police in Tiruvannamalai in Crime No.829/71/Tiruvannamalai Police Station. He was charged under Section 4 (1) (j) of the Prohibition Act. He was fined Rs. 20 by the Sub-Magistrate, Tiruvannamalai for this offence.

இந்த பன்னீர்செல்வம் மதுவிலக்குச் சட்டத்தை மீறியதற்காக அபராதம் கட்டியவர். அவர் வந்து உண்ணாவிரதம் இருந்திருக்கிறார் (சிரிப்பு). நான் உண்ணாவிரதம் இருந்தவர்களின் உணர்ச்சிகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவதற்காகச் சொல்ல வில்லை. பத்திரிக்கையிலே வந்திருக்கிற செய்தியிலே காணப்படுகின்ற பன்னீர்செல்வம் எப்படிப்பட்டவர், அவர் அமைச்சர் ப. உ. சண்முகத்தின் மருமகன் என்று செய்தியைப் போடுவதன்மூலம், இப்படித்தான் பல செய்திகள் தவறான முறையில் போடப்படுகின்றன என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காகச் சொல்லுகிறேன்.

போலீசார் நாணயமாக ஒழுக்கமாக நடந்துகொள்ள வேண்டும் என்று கருதுகிற நாம், செய்திகளை வெளியிடுகின்ற நேரத்தில் அந்தப் போலீசார் நாணயமாக, ஒழுக்கமாக நடந்துகொண்டதைப் பாராட்டுவதற்குப் பதிலாக, தவறுகள் செய்தார்கள் என்று குறிப்பிடுவது கொஞ்சமும் நல்லதல்ல. தேர்தல் நேரத்தில் போலீஸார் தவறாக நடந்தார்கள், தவறாக நடந்தார்கள் என்றெல்லாம் இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, கோயம்புத்தூரில் தேர்தல் நேரத்தில் பேசிய மதிப்பிற்குரிய தலைவர் காமராசர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அது தினமணிப் பத்திரிகையில் வந்திருக்கிறது.. "போலீசை வைத்து முதலமைச்சர் பயமுறுத்துகிறார்" என்று என்னைத் தாக்கிவிட்டு, கடைசியாக ''நடப்புத் தேர்தல் காலத்தில் போலீசார் பொதுவாக நேர்மையாகவும், பாரபட்சமற்ற நிலையிலும் நடந்து கொண்டிருக்கிறது'' என்று பாராட்டினார் என்று செய்தி வந்திருக்கிறது. போலீசார் தேர்தல் நேரத்தில் ஆளுங்கட்சிக்கு அடிமையாக இருந்தார்கள்; எதிர்க்கட்சியை அடக்கி ஒடுக்கப்

பயன்படுத்தினார்கள் என்கின்ற செய்திகள் எந்த அளவுக்குத் தவறானவை என்பதற்காகச் சொல்லுகிறேன்.

அது மாத்திரமல்ல. இன்றைக்குப் பகிரங்கமாகவே நாங்கள் குற்றங்கள் செய்கிறோம் என்று பேசப்படுகிறது. நேற்றைக்குக் கடற்கரைக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். 'கல்லூரியிலே 4,000 ரூபாய் நன்கொடை என்ற பெயரால் நான் கொடுத்துத்தான் என்னுடைய வீட்டுப் பிள்ளையை காலேஜில் சேர்த்திருக்கிறேன்' என்று கடற்கரையிலே நேற்று ஒருவர் பேசியிருக்கிறார். பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. எந்தப் பத்திரிகையோ அல்ல 'தினமணி' பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. கல்லூரியில் சேர்க்க நன்கொடை என்ற பெயரால் தான் 4,000 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது என்று சொன்னவர், காமராசர் ஆட்சிக் காலத்திலே லஞ்ச ஊழல் இல்லாமலிருந்தது என்று சொல்லியிருக்கிறார். தான் கொடுத்த நன்கொடையை லஞ்சம் என்கிறார். உள்ளபடியே நன்கொடையாக இருந்தால் அதைக் குற்றமாகச் சொல்லக்கூடாது. அது குற்றமாகச் சொல்லப்பட்ட பிறகு, அது லஞ்சமாகிறது. லஞ்சம் வாங்கியவர் மட்டுமல்ல குற்றவாளி; கொடுத்தவர் அதைவிடக் குற்றவாளி. இதை யோசித்து அரசு நடவடிக்கை எடுத்தால், கட்சிச் சார்போடு நடந்துகொள்ளுகிறார்கள் என்று குற்றச்சாட்டு கூறினாலும் ஆச்சரியமல்லை. பகிரங்கமாக ஒரு குற்றம் சாட்டப்பட்டு விட்டது. நான் எல்லா அரசுக் கல்லூரிகளையும் கேட்டுவிட்டேன். நாவலர் அவர்களையும் கேட்டுவிட்டேன். அவரும் விசாரித்து எந்த அரசுக் கல்லூரியிலும் 4,000 ரூபாய் பேசிய நண்பரிடமிருந்து நன்கொடையாக வாங்கியதாகத் தகவலில்லை என்று சொல்லி விட்டார். நன்கொடை என்ற பெயரில் வாங்கியிருப்பதாகக் குற்றச்சாட்டு. அப்படி வாங்கியவர்கள் லஞ்சம் என்கின்ற அளவில் வாங்கியிருக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு. காமராசர் காலத்தில் அந்த லஞ்சம் இல்லை. இப்போது லஞ்சம் இருக்கிறது என்பது குற்றச்சாட்டு. அந்தக் குற்றங்களைச் செய்துவிட்டு, அதைப் பகிரங்கமாக மேடையில் ஏறி, நானே லஞ்சம் கொடுத்தேன், நன்கொடை என்ற பெயரால், என்று சொல்லுகிறார் என்றால், அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? கேட்டவுடனேயே காவல் துறைக்கு எழுதியனுப்பி யிருக்க வேண்டும். இப்படி என்னுடைய வீட்டுப் பிள்ளையைச்

சேர்க்க இடம் கேட்டேன்; 4000 ரூபாய் அவர்கள் நன்கொடை என்ற பெயரில் லஞ்சம் கேட்கிறார்கள் என்று காவல் துறைக்கு அப்போதே செய்தி அனுப்பியிருப்பாரேயானால், காவல் துறை தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அப்படி நடவடிக்கை எடுக்கின்ற சூழ்நிலையைக் காவல் துறைக்குத் தராமல் இன்றைக்குப் பகிரங்கமாக மேடையில் பேசுவது தமிழ் நாட்டின் ஒரு நாகரீகமான, பண்பாடான மரபை எந்த அளவிற்குப் பாதிக்கிறது. காவல் துறையின் நேர்மையை அது எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : ஏதோ லஞ்சத்தைப் புதிதாகக் கண்டுபிடித்துக் குற்றம் சாட்டவேண்டும் என்று கூறியது போலச் சொல்லுவது சரியில்லை. சென்ற ஆண்டிலே கல்வி அமைச்சர் அவர்களே ஒருவரைப் பிடித்துக் கொடுத்தார். அதே மாதிரிச் சம்பவங்கள் நடந்து வருகின்றன என்பதால்தான் சொன்னார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கல்வி அமைச்சருக்குள்ள... பொறுப்புணர்ச்சி நேற்றுப் பேசியவருக்கு இல்லை என்பதைத்தான் சுட்டிக்காட்ட வந்தேன். கல்வி அமைச்சர் அவர்கள் தன்னிடம் லஞ்சம் கொடுக்க வந்தவர் கட்சியைச் சார்ந்தவர் என்று தெரிந்தும்கூட அவரைப் போலீசில் பிடித்துக் கொடுத்தார். ஆனால் இங்கே லஞ்சம் கொடுத்தவர் அந்தக் குற்றத்தைச் செய்து விட்டு நான் லஞ்சம் கொடுத்தேன் என்று மேடையில் பேசுவது கொஞ்சமும் நாகரீகத்திற்கு ஏற்றதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் நடந்த அரசியல் கொலைகளைப்பற்றிச் சொன்னார்கள். தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிச் சார்புள்ள வர்கள் பத்துப் பதினேழு பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்கிற போது, வெவ்வேறு விஷயங்களுக்கு எல்லாம் அரசியல் வண்ணம் பூசப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பத்திரிகையிலே ஒரு காங்கிரஸ்காரர் கொல்லப்பட்டார் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொன்றார்கள் என்பதாகவும்,

திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் கொல்லப் பட்டால் காங்கிரஸ்காரர்கள் தாக்கினார்கள் என்பதாகவும் போடப் படும். இந்த இரண்டையுமே நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அப்படிப் போடுவது வழக்குக்கு உறுதுணையாக அமையாது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தேர்தல் நேரத்தில் திருநெல்வேலி வில்லாகுளம் கிராமத்தில் பரமமுத்துத் தேவர் ஹரிகிருஷ்ண நாடார் என்பவர்கள் கொல்லப்பட்டார்கள். இது சம்பந்தமாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 27 பேர்கள் கைதுசெய்யப் பட்டிருக்கிறார்கள். வழக்கு ஸ்ரீவைகுண்டம் சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணையில் உள்ளது.

தூத்துக்குடியில் பட்டு நாடார் என்பவர் கொல்லப்பட்டார். இது சம்பந்தமாக 7 காங்கிரஸ்காரர்கள் கைதுசெய்யப் பட்டிருக்கிறார்கள். இந்த வழக்கும் விசாரணையில் உள்ளது.

தஞ்சாவூர் பொய்யனான் குடிகாடு என்ற இடத்தில் கன்னையன் என்பவர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாகக் காங்கிரஸ்காரர் ஒருவர் கைது செய்யப் பட்டிருக்கிறார். பட்டுக்கோட்டை சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்கு விசாரணையில் உள்ளது.

தஞ்சாவூர் நாலுவேதபதி என்ற இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த காளிமுத்து என்பவர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாக 12 காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்கு திருத்துறைப்பூண்டி சப்மாஜிஸ்டிரேட்கோர்ட்டில் விசாரணையில் உள்ளது.

தென்னார்காடு இளவரசன்பேட்டை என்ற இடத்தில் சுப்பிரமணியம் என்கிற காங்கிரஸ்காரர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாக 5 திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்கு புலனாய்வில் உள்ளது.

செங்கற்பட்டு, பரங்கிமலை, புழுதிவாக்கம் என்ற இடத்தில் சின்னு என்ற வெங்கடசாமி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாக 21 காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சைதை சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்கு விசாரணையில் உள்ளது.

சென்னை புளியந்தோப்பு என்ற இடத்தில் குருவையா என்ற காங்கிரஸ்காரர் கொலை செய்யப்பட்டார். குற்றவாளி யாரும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. வழக்கு புலனாய்வில் உள்ளது.

இறந்தவர்கள் 8 பேரில் 5 பேர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். 3 பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். தயவு தாட்சண்யம் பாராமல், கொலை செய்யப் பட்டவர் எந்தக்கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல், குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு கண்டிக்கப்படுவார்கள். குற்றவாளிகள் யார் என்று பார்க்காது, வழக்கின் தன்மையை ஆராய்ந்து, நீதி வழங்க இந்தக் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி எல்லா வகையிலும் நம் நாட்டில் சட்டம், அமைதி, ஒழுங்கு இவைகளைக் காப்பாற்ற, பணியாற்றக்கூடிய இந்தக் காவல்துறை மானியத்தின்போது எடுத்துச் சொல்லிய குற்றங் குறைகள் இருக்குமானால் அவற்றைக்களைய இந்த அரசு மேலும் முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்று சுட்டிக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றியமையாத காரியங்களை எல்லாம் இங்கே அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் அந்தத் துறை அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், என்னுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்து நடுநிலைமையில் இருந்து இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்கிற உறுதியினை அளித்து, இந்த மானியத்திற்குக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெறவேண்டுமென்று வேண்டி இந்த அளவில் அமைகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, on a point of clarification. The Hon. Chief Minister spoke about Panneerselvam incident in Vellore. Has he got it checked up? There are two Panneerselvams and one Panneerselvam was convicted in Tiruvannamalai and there is also another Panneerselvam. I want to know whether they are of the same person and I am not holding any brief for anyone. I want to know the

details. It may be possible that there is one Panneerselvam here and another Panneerselvam there.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் அதை ஒரு முறைக்கு இருமுறையாக ஆராய்ந்தேன். இன்னும் விவரம் சொல்லவேண்டுமென்றால் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் தலைவராக இருந்தபோது இந்த பன்னீர்செல்வம் அங்கே வேலைக்குப் பையனாக இருந்திருக்கிறார். அங்கும் குடித்து விட்டு இருந்த காரணத்தினால் அங்கிருந்து வேலையில் இருந்து நீக்கப்பட்டும் இருக்கிறார். பின்னர்தான் புதுகாங்கிரசில் சேர்ந்தது. இந்தத் தகவல்கள் எல்லாம் என்னிடம் வந்திருக்கின்றன. இந்தத் தகவல்களில் தவறு இருக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டால் நான் அந்தத் தவறைத் திருத்திக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்,

திரு. கே. டி. கே. தங்கமணி : பயர் சர்வீஸ் பற்றி ஆலோசனை கேட்டார்கள். மலபார் ஸ்பெஷல் போலீஸ் பற்றி நான் சொன்னதற்கு ஏதாவது விளக்கம் தரமுடியுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 'மலபார் ஸ்பெஷல் போலீஸ்' என்கிற பெயர் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று பலர் சொன்னதற்கிணங்க 'தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ்' என்று அதற்குப் பெயர் மாற்றி அமைக்க ஆணை பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உரை : 7 நாள் : 15.03.1972

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்ட காவல்துறை மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும், தோழமைக் கட்சியின் தலைவர்களும் எடுத்து உரைத்திருக்கிற பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் சில விளக்கங்களை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல்துறை மானியத்தைப்பற்றிப் பேசிய அனைவருமே காவல்துறையில் ஈடுபட்டிருக்கிற பொறுப்புள்ள அதிகாரிகளும், காவலர்களும் எந்த அளவுக்கு இந்தச் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் தொண்டாற்றுகின்றார்கள் என்பதனை விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கடமை, கண்ணியம் எனக் கொண்டு ஆண்டாண்டு காலமாகப் பணியாற்றி வருகின்ற அந்தத் துறையினர் சமுதாயத்திலும் நாட்டிலும் நல்ல பாதுகாப்பும், தூய்மையும், புனிதத் தன்மையும் ஏற்பட வேண்டுமென்பதற்காகத் தங்களுடைய உயிரைக்கூட பணையமாக வைத்து ஆற்றி வருகிற பணிகளை நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

கிட்டத்தட்ட 38 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொறுப்புள்ள காவலர்களும், அதிகாரிகளும் இருக்கின்ற அந்தத் துறையில், இங்கு பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக ஒன்றிரண்டு குறைகள் தென்பட்டாலும் அவைகளை எல்லாம், இன்று காலை முதல் இதுவரை எடுத்துச் சொல்லப்பட்ட பல விளக்கங்களின் மூலம் அவர்களே கூட திருத்திக்கொள்கின்ற சூழ்நிலை நிச்சயமாக உருவாகும் என்று நான் நம்புகிறேன். இந்தப் பெரிய இலாக்கா எப்படிச் சீர்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு பல உறுப்பினர்களும்,

தலைவர்களும் இங்கே கருத்துக்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். இந்த இலாக்காவுக்கும், அரசுக்கும் இருக்கின்ற தொடர்பினை வைத்துக் கொண்டு, இந்த இலாக்காவிலே நடைபெற்று விடுகின்ற சிற்சில தவறுகளை ஒரே அடியாக அரசின் மீது சுமத்தி, அரசியல் ரீதியில் இந்தப் பிரச்சினையை ஆராய்வது நல்லது அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதும் நல்லது என்று கருதுகிறேன்.

இலாக்காவில் உள்ளவர்கள் மக்களிடத்தில் நல்ல தொடர்பு கொண்டவர்களாக இருக்கவேண்டும், எளிமையாக மக்களிடத்தில் பழகுகின்றவர்களாக இருக்கவேண்டும், அவர்களைப் பார்த்து ஒரு அச்சம், பய உணர்ச்சி இவைகள் எல்லாம் ஏற்படாத அளவுக்கு அந்தத் துறை இருத்தல் வேண்டும் என்ற கருத்தினை இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்த பெரியவர் மணலி ஐயா அவர்களும், கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் மாண்புமிகு திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும், வேறு சிலரும் எடுத்துச் சொல்லியிருந்தார்கள். இந்த எண்ணத்தை யாரும் மறுப்பதற் கில்லை. மக்களிடத்தில் நல்ல தொடர்பு நிச்சயமாக இந்த இலாக்காவினர்களுக்கு இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் இந்த இலாக்காவிற்கு அடங்கி நடந்திடல் வேண்டும், இந்த நாட்டில் அமைதியைக் காக்க, ஒழுங்கினைக் காக்க என்ற உணர்வும் பொது மக்களிடத்தில் இருந்திடல் வேண்டும். அது அறவே அற்றுப் போய்விடுமானால் தாறுமாறான சமுதாயச் சூழ்நிலை, மோதுதல் நிறைந்த சமுதாயச் சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதில் யாரும் மாறுபட இயலாது.

ஒரு கதை சொல்வார்கள். ஒரு பாம்பு ஒரு சாதுவினிடத்தில் சென்று, 'என்னைக் கண்டால் எல்லோரும் வெறுக்கிறார்களே ஏன்?' என்று கேட்க, அந்தச் சாது நீ எல்லோரையும் கடிக்கிறாய் என்ற காரணத்தினால் வெறுக்கிறார்கள், நீ அந்த வேலையை விட்டுவிட வேண்டும்' என்று சொல்ல, அந்தப் பாம்பும் 'சரி' என்று சென்று விட்டதாம். பத்து நாட்களுக்குப் பிறகு உடம்பெல்லாம் காயத்தோடு அந்தப் பாம்பு மீண்டும் சாதுவை அடைந்து "என்னைச் சிறுவர்கள் எல்லாம் கூட அடிக்கிறார்களே, உடம்பில் ஏற்பட்டிருக்கும் காயங்களைப் பாருங்கள்" என்று வருந்தியதாம். அதற்கு அந்தச் சாது "உன்னை யாரையும் கடிக்காதே என்று தானே நான் சொன்னேன். அடிக்க வருகிறவர்களை படம் எடுத்துச் சீறாமலா

இருக்கச் சொன்னேன்? படம் எடுத்துச் சீறி இருந்தால் அவர்கள் பயந்து போய் இருப்பார்களே" என்று சொன்னாராம்.

அதைப்போல போலீஸ் இலாக்கா கடிக்காமல் இருக்கலாம் - சீறாமல் இருந்து விடுமானால் பாம்பின் கதிதான் இந்த இலாக்காவுக்கும் என்பதை நான் மாத்திரம் அல்ல - ஆளும் கட்சியாக இருந்து இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருப்பவர்களும், வேறு மாநிலங்களில் ஆளும் கட்சியாகவும் இங்கே எதிர்க் கட்சியாகவும் இருப்பவர்களும், ஒரிசா போன்ற மாநிலங்களில் ஆளும் கட்சியாக இருந்து இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருப்பவர்களும், மற்ற மாநிலங்களில் கூட்டாக ஆளும் கட்சியில் இருப்பவர்கள் இங்கே தோழமைக் கட்சியாக இருப்பவர்களும் நன்றாக உணர்வார்கள் என்று கருதுகிறேன்.

ஆக, போலீஸ் இலாக்கா மக்களோடு நெருங்கிக் கலந்து விட வேண்டுமென்ற அந்தக் கருத்துக்கு இடையிலும், மக்களை அச்சுறுத்துகிற அந்தக் கருத்துக்கு இடையிலும், அவர்களுக்கு என்று இரு நிலைகளுக்கும் இடையே அமைந்த சமநிலையில் நின்று தங்கள் பணியினை ஆற்றிடல் வேண்டும் என்ற முடிவினுக்கு நாம் வர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சமுதாயத்தில் நல்ல பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு விடுமானால் குற்றங்கள் குறைந்துவிடும் என்ற கருத்துக்களை திரு. மணலி ஐயா அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அது ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்துத்தான். ஆயினும் ஓரளவுக்குத்தான் குற்றங்கள் குறையும். அமெரிக்கா போன்ற நாடுகளில் நம் நாட்டைவிட அதிக அளவு குற்றங்கள் மலிந்து இருக்கின்றன என்பதையும், அங்கே யார் வேண்டுமானாலும் ரிவால்வரை வைத்திருக்கலாம், யாரை வேண்டுமானாலும் சுடலாம் என்ற நிலைமை இருப்பதையும் அவர்களே இங்கே கோடிட்டுக் காட்டினார்கள்.

எந்த அளவுக்குக் குற்றங்கள் மலிந்து இருக்கின்றன, சமுதாயத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நாடுகளில் என்று பார்க்கிறபோது, சமுதாய முன்னேற்றம் ஓரளவுக்குத்தான் குற்றங்கள் குறைய உதவி புரிகிறது என்பதை உணர முடியும். அதே நேரத்தில், சில பேர்கள் குற்றங்கள் புரிவதையே ஒரு பழக்கமாக்கிக்கொண்டு விடுகிறார்கள். நான் அண்மையில் ஒரு

பெரிய இடத்தில் நடைபெற்ற திருமணத்திற்குப் பிறகு அந்தத் தம்பதிகள் எங்கே சென்றாலும் ஓட்டலில் இருந்து கணவர் வெளியில் போயிருக்கும்போது மற்ற பக்கத்து அறைகளில் இருந்தெல்லாம் டிரான்சிஸ்டர், க்ளாக் போன்ற பல பொருள்கள் இந்த அறைக்கு வந்துவிடும். அந்த அம்மையாருக்கு அப்படி ஒரு பழக்கம். தேவை என்பதற்காகக் கூட அவர்கள் அப்படித் திருடுவதில்லை. திருடாமல் இருந்தால் அவர்களுக்கு ஏதோமாதிரி ஒரு உணர்வு ஏற்படும் என்கிற தகவல்களை அறிந்தேன். சமுதாயத்தில் ஒரு பெரிய சீர்திருத்தம் தேவை என்று நாம் நினைத்து செயல்படுகிற நேரத்திலே குற்றங்கள் குறைவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். அவற்றைப் புள்ளி விவரங்களே எடுத்துக்காட்டும். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குற்றங்கள் குறைந்துவிடவில்லை என்று எடுத்துக் காட்டினாலும், குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும் இந்த இலாக்கா தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகிறது. கொலைக் குற்றங்களை எல்லாம் எவ்வளவு விரைவாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

காவல் துறையினருக்குக் கடந்த பல ஆண்டுகாலமாக பல்வேறு நன்மைகள் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் முன்பெல்லாம் இருந்து அரசுக்கு அளிக்கப்பட்டு, அவைகள் ஓரளவுக்குத்தான் கவனிக்கப்பட்ட சூழ்நிலை இருந்தது. அவர்களது குறைகளைப் போக்க வேண்டும் என்பதற்காகவே கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காவல்துறை நிலைகளை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு சில பரிந்துரைகளை அரசுக்கு எடுத்து வைத்திருக்கிறது. அதில் 133 பரிந்துரைகள் இருக்கின்றன. அந்த அறிக்கையைப் பரிசீலித்து அரசுக்கு படிப்படியாக நம்முடைய நிதி நிலைகளுக்கேற்ப எந்த எந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டும் என்பதை எடுத்துக்கூற ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அதுவும் தன் பணியினை முடித்து அரசுக்குத் தன் அறிக்கையைத் தருகிற தருவாயில் இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல்துறை ஆணைக் குழுவின் 133 பரிந்துரைகளையும் ஐந்தாண்டுக் காலத்தில் செயல்படுத்த அரசுக்கு அதிகப்படியாக ஆக வேண்டிய தொகை 5 கோடி ரூபாயிலிருந்து 6 கோடி ரூபாய்

வரையிலும் இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாகும். குறிப்பாக 23 பரிந்துரைகள் முதல் கட்டமாக இப்போது ஏற்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பரிந்துரைகளின்படி காவலர்களுடைய சம்பளம், படி விகிதங்கள் உயர்த்தப் பட்டிருக்கின்றன. இதைக் குறித்து நண்பர் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும் வேறு சில உறுப்பினர்களும் "காவலர்களுடைய தினப்படி ரூ. 1.50 என்ற அளவில்தான் இருக்கிறது, அது உயரவே இல்லை" என்று சொன்னார்கள். அவர்கள் ஒருவேளை இந்தக் குறிப்பினைத் தெரிந்துகொள்ளாமல் சொல்லியிருக்கலாம். 2-10-1970-க்கு முன்பு போலீஸ் காவலர்கள் தினப்படி ரூ. 1.50 காசாக இருந்தது. 2-10-1970-க்குப் பிறகு அவர்களது நாள்படி குறைந்த பட்சம் 3 ரூபாய் என்றும், அதிகபட்சம் ரூ. 4.50 என்றும் உயர்த்தப் பட்டுள்ளது. தலைமைக் காவலர் தினப்படி ரூ. 2 ஆக இருந்தது 2-10-1970-க்குப் பிறகு ரூ. 4.50ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தினப்படி ரூ. 2.50 ஆகப் பெற்று வந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் 2-10-1970-லிருந்து ரூ. 4.50-லிருந்து ரூ. 6.00 வரையிலும் பெற்று வருகிறார்கள். இன்ஸ்பெக்டர்கள் முன்பு ரூ. 2.50 லிருந்து ரூ. 4.50 வரையிலும் பெற்றுவந்தனர். 2-10-1970-லிருந்து அவர்களது தினப்படி ரூ. 6.00 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, தினப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு உச்சவரம்பு இருப்பதால் அவர்கள் பெறுகின்ற வருமானம் குறையும் என்று சொல்கிறார்களே, அதுபற்றி என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தினப்படி குறைந்தபட்சம் 3 ரூபாய் என்றும், அதிகபட்சம் 4.50 ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது சங்கடங்கள் இருக்குமானால் அவை ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, போலீஸ் கமிஷனுடைய பரிந்துரைகளின்படி இப்போது முதல் கட்டமாக, ஏற்கப்பட்டிருக்கிற சம்பள விகிதங்கள் எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அனைவரும் அறிவர்.

அதைத் தொடர்ந்து 3,100 புதிய முதல்நிலைக் காவலர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதையும் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் ஆயிரம் என்று சொன்னார்கள். முதல்நிலைக் காவலர்கள் ஆயிரம் பேர் தற்போது 1-2-1972-லிருந்து பயிற்சி பெற்று வருகின்றனர். 500 பேர் கோவையிலும், 500 பேர் வேலூரிலும் பயிற்சிகளில் சேர்ந்திருக்கிறார்கள். பாக்கி 2,100 பேர் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படித்தவர்களும், அது வரையில் படிக்காமல் நிறைந்த அனுபவம் உள்ளவர்களும் இரண்டாம் நிலைக் காவலர் பிரிவிலிருந்து முதல்நிலைக் காவலராக மாற்றப்படுகிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. 60 புதிய காவல் வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தஞ்சாவூர் காவல் மாவட்டம் தஞ்சை மேற்கு, தஞ்சை கிழக்கு என இரு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

குற்றம், குற்றவாளிகளைப் பற்றிய தகவல்களைப் பதிவு செய்ய கணக்கீடு இயந்திர நிலையம் அமைக்க (Computer Centre) ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

13,50,000 ரூபாய் செலவில் காவல்துறை கம்பியில்லாத் தந்தி முறையை விரிவுபடுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

120 காவல் வட்டங்களில் வானொலித் தொடர்பு சாதனம் (V.H.F.) இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் பொருத்தப்படும்.

14 தொலைக் கையச்சுகள் (Teleprinters) அமைக்கப் பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் ரூ. 17,10,000 செலவில் 30 ஜீப்புகள், 30 லாரிகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

16 இயங்கும் குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆராய்ச்சிக் கூடங்களை மாவட்டங்களில் நிறுவ ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

11 மாவட்டங்களில் காவல்துறை நிழற்பட நிலையங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ரூ. 4,50,000 செலவில் உருவ நிழற்படி (Fascimile Transmitters) அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயர்மட்டக் குழுவினால் ஏற்கப்பட்டுள்ள காவல்துறை ஆணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தினால், தற்போது இருக்கும் உட்கோட்டங்கள் 69 லிருந்து 90 ஆகவும், காவல் வட்டங்கள் 182-லிருந்து 307 ஆகவும் அதிகரிக்கும். மேலும், காவல்துறையில் உள்ள பதவிகள் தற்போதுள்ளதைவிட 3,250 அதிகமாகும்.

உயர்மட்டக் குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு மேலும் என்ன என்ன காரியங்களைத் தொடர்ந்து நடத்தலாம் என்பதை நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் காவல்துறையினர் மிகமுக்கியமாக தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணித்து, மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகவும், அவர்கள் காட்டிய ஆற்றல், அஞ்சாமை, அறிவோடு அவர்களை ஆராய்ந்து, எடுத்த நல்ல நடவடிக்கைகளின் மூலம் நக்சலைட்டுகளின் நடவடிக்கை இன்றைக்கு தமிழ்நாட்டில் பெருமளவுக்குக் குறைந்திருக்கிற நிலையைக் காண்கிறோம்.

ஏற்கனவே ஆந்திர மாநில நக்சல்பாரிகள் நாகி ரெட்டியும் மற்ற 7 பேர்களும் கைது செய்யப்பட்டு, ஆந்திர மாநில போலீசார் வசம் ஒப்படைக்கப்பட்ட பெருமை தமிழ்நாடு போலீஸ் இலாகாவுக்கு உண்டு.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எரெனியல் கிராமத்தில், திரு. தங்கசாமி நாட்டார் வீட்டில் நடந்த நக்சல்பாரி கொள்ளை வழக்கில் போலீசார் காட்டிய திறமையின் காரணமாக ஜெகந்தாதன் உட்பட 9 பேர்களுக்கு 7 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பதும் நம் மாநில போலீசாரின் திறமைக்கு எடுத்துக்காட்டு.

பிரசித்தி பெற்ற பெண்ணாடம் வழக்கில் நெல் திருட்டு, வெடிகுண்டு சம்பவங்களுக்கும் வெடிகுண்டு சம்பந்தம் குறித்து புகார் செய்தவர் கொலையிலும், கலியபெருமாள் சம்பந்தப் பட்டிருந்தார். வெடிகுண்டு சம்பவத்தில் அண்ணாமலைப்

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. கணேசன் மற்ற இருவரும் இறந்தனர் என்ற செய்தியைப் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறீர்கள். பெண்ணாடம் கொலை வழக்கில் கலியபெருமாளுக்கும் அவருடைய மகன் வள்ளுவனுக்கும் தூக்குத் தண்டனையும், மற்ற ஐந்து பேர்களுக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. போலீசார் மிகுந்த கஷ்டத்திற்கு இடையே அவர்களைக் கைது செய்தனர்.

திரு. கே.டி.கே. தங்கமணி : தலைவர் அவர்களே, தூக்குத் தண்டனையானது செஷன்ஸ் கோர்ட்டால் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை ஹைகோர்ட் ஊர்ஜிதம் செய்ய வேண்டும். ஹைகோர்ட் ஊர்ஜிதம் செய்த பிறகுதான் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்று சொல்லலாம். It is always subject to confirmation by the High Court. மற்ற தண்டனைகளைப்பற்றி குறிப்பிட்டாலும், தூக்குத் தண்டனைப்பற்றி இப்படிக் குறிப்பிடுவது சரியல்ல.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பு எல்லா ஏடுகளிலும் வந்திருக்கிறது. அவரே அப்பீல் செய்யப் போகாவிட்டாலும் நாமே அளிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதை வெளியிடுவதில் தவறு இல்லை. இப்படிப்பட்ட நேரங்களில் பொறுப்பு வாய்ந்த உறுப்பினர் இப்படிப் பேசும்போது, அதைப் பயன்படுத்திக்கொண்டு, தீவிரவாதிகள் தங்களுக்காகப் பேசக் கூடியவர்கள் நாட்டில் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொள்வார்கள்.

திரு. கே.டி.கே. தங்கமணி : I was only desiring to point out the legal aspect of it; It will not be proper to call it so now.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தூக்குத் தண்டனை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே.டி.கே. தங்கமணி : தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்று சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

திரு. கே.டி.கே. தங்கமணி : தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது என்பதை செஷன்ஸ் கோர்ட்டால் தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டவர் என்று சொல்லலாம். அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். ஹைகோர்ட்டில் அது ஊர்ஜிதம் செய்யப் படவேண்டும். அவர் அப்பீல் பண்ணலாம்.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, தூக்குத் தண்டனையை உயர்நீதிமன்றம் கன்ஃபர்ம் செய்யவேண்டும். அதை கன்ஃபர்ம் செய்வது தவிர தூக்குத் தண்டனை அளிப்பது அதனுடைய வேலை அல்ல. செஷன்ஸ் கோர்ட் தீர்ப்பு கன்ஃபர்ம் செய்யப்படுகிற வரையில் அல்லது ரத்து செய்கிற வரையில் அது தூக்குத் தண்டனை என்றுதான் கருதப்படும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எனக்காக வழக்கறிஞர்கள் எல்லோரும் வாதாடியதற்கு என் நன்றி.

அடுத்து, கந்தசாமி, பஞ்சலிங்கம், கிருஷ்ணசாமி, ஜகந்நாதன் ஆகிய தீவிர கம்யூனிஸ்டுகள் 7-5-1950 அன்று மானுப்பட்டி மிராசுதார் ராமசாமி கவுண்டரை உடுமலைப் பேட்டையில் அவர் வீட்டில் கத்திகளால் குத்திக் கொலை செய்தார்கள். தொடரப்பட்ட வழக்கில் கந்தசாமி, பஞ்சலிங்கம் ஆகியோருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

1970-ம் ஆண்டு ஜூலை மாதம் தீவிர கம்யூனிஸ்டு முருகையா, காத்தமுத்து மற்றும் எதிரிகள் தஞ்சை மாவட்டம் பெருமாங்குளம் நிலச்சுவான்தார் முத்துச்சாமி சோழகர் என்பவரை பிச்சுவாவால் குத்திக் கொலை செய்ய முயற்சித்தனர். இவர்கள் பேரில் வழக்கு தொடர்ந்ததில் 8 எதிரிகளுக்குத் தலா 18 மாதம் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது. பாலு என்னும் தீவிர கம்யூனிஸ்டு இன்னும் தலைமறைவாக இருந்து வருகிறார்.

அதேபோல், ஸ்ரீமுஷ்ணம் மிராசுதார் ராஜகோபால் பிள்ளை என்பவரை 22-12-1970-ம் தேதி இரவு தீவிர கம்யூனிஸ்டுகள் கழுத்திலும் முகத்திலும் வெட்டிக் கொலை செய்தார்கள். இவ்வழக்கு விசாரணையில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சென்ற 1970-ம் ஆண்டு ஏப்ரல் - மே மாதங்களில், தோட்ட முதலாளிகளைக் கொலை செய்யவும், கொள்ளையடிக்கவும், ஜி. கிருஷ்ணபிள்ளை என்ற தீவிர கம்யூனிஸ்டுத் தலைவரும் அவருடைய 6 சகாக்களும் சதி செய்து வெடி குண்டு தயார் செய்தார்கள். வெடிகுண்டு செய்யும்போது, அவைகள் வெடித்து, சுந்தரம் என்ற நபர் இறந்து போனார். அதன் பின்பும் இவர்கள் கொலை, கொள்ளை செய்ய முயற்சிசெய்தார்கள். இவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது.

சென்னையிலே 4-3-1971 அன்று அண்ணா நகரில் அரசுக்குச் சொந்தமான பேருந்துகளை நிறுத்தி, தீ வைத்து நாசம் செய்ய தீவிர கம்யூனிஸ்டுகள் சுவாமிநாதன் என்பவர் தலைமையில் நடவடிக்கை எடுத்தார்கள். வழக்குகள் பதிவு செய்யப்பட்டு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

திருச்சியில் கருப்பூர் என்ற கிராமத்தில் ஒரு நிலச் சுவான்தார் கொலை செய்யப்பட்டார். வழக்கு விசாரணையில் உள்ளது.

முத்து தங்கப்பா, திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் கொலை செய்யப்பட்டார். தியாகராசன், கணேசன் ஆகியவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. குருமூர்த்தி, அரங்கசாமி இவர்கள் தஞ்சை செஷன்ஸ் நீதிபதியால் தண்டனை அளிக்கப்பட்டனர்.

பயங்கரவாதிகள் தீவிரம் பேசிக்கொண்டு தங்களுடைய கொள்கைகள், எண்ணங்கள் நிறைவேற ரத்தப் புரட்சி ஒன்றுதான் சரியான வழி என்ற தவறான எண்ணத்தை மக்கள் மத்தியிலே சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாதாரண மக்கள், பாட்டாளி மக்கள் உள்ளத்திலே பதிய வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட ஒரு இயக்கம் போலீசாரின் கடுமையான நடவடிக்கைகள் மூலமாகவும் திறமையான நடவடிக்கைகள் மூலமாகவும் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை விளக்குவதற்குத்தான் நான் இந்த விவரங்களைக் கூறினேன்.

காவல் துறையினருக்குப் பல்வேறு சலுகைகள் அளிக்கப் படுகின்றன. காவல் துறையினர் சில முக்கியமான நேரங்களில்

தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் இவ்வாறு குற்றங்களைக் கண்டுபிடிக்கிறார்கள் என்பதையும் அவர்களுடைய பணிக்காலத்திலே மிகுந்த பொறுப்போடும் நேர்மையோடும் நடந்து கொண்டார்கள் என்பதையும் கணக்கெடுத்து ஒவ்வொரு செப்டம்பர் 15-ஆம் நாள் அன்றும் 'முதலமைச்சர் பரிசு' என்ற பெயரால் தங்கப் பதக்கங்களும், ஐந்து ஆயிரம் ரூபாய், மூன்று ஆயிரம் ரூபாய், ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்குப் பொற்கிழிகள் அளிக்கின்ற நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

காவலர் நல நிதி என்ற நிதியில் ஒரு லட்சம் ரூபாய் அளவுக்கு இருந்ததை 1971-72ஆம் ஆண்டிலே ஒன்றரை லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு அதிகப்படுத்தியிருக்கிறோம்.

1971-72ஆம் ஆண்டிலே கிராமங்களுக்கு ஆங்காங்கிருக்கிற போலீஸ் ஸ்டேஷன்களிலிருந்து சென்று வருவதற்கு காவல் துறையினருக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்ட யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு 100 மோட்டார் சைக்கிள்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு கூடுதலாக 50 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட இருக்கின்றன.

கடன் உதவியிலே காவல் துறையினர் 5 ஆயிரம் சைக்கிள்கள் வாங்கிக் கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இவ்வளவு சலுகைகளும் நாம் செய்திருக்கிறோம் என்றாலும் முழுதும் நிறைவானதா, இன்னும் செய்யப்பட வேண்டாமா என்ற கேள்விகள் கேட்டு காலையிலிருந்து பேசிய உறுப்பினர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். அதற்கேற்றவாறு தான் நான் முதலிலே கூறியதைப் போல் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் ஆராயப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஏதோ காவல் துறைப் பணிகள் வேகமாக நடைபெற வில்லை, பெரிய பெரிய திருட்டுகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற கோஷம் பலமாக இருக்கிறது. மதிப்பிற்குரிய காங்கிரஸ்

கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறைபாடுகளைச் சொல்லி அதே நேரத்திலே காவல் துறை ஆற்றிய அருஞ்சாதனைகளையும் எடுத்துக் காட்டினார்கள். நான் அதற்காக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, காவல் துறை மானியத்திலே விவாதம் நடைபெறும்பொழுது அதிகச் சூடு இருக்கும், காரசாரம் இருக்கும், கடுமை இருக்கும், ஆனால் இன்றைக்குக் காலையிலிருந்து மாலை வரையிலே கூட்டம் நிறைய இருந்தாலும், காரம் அதிகம் இல்லாமல் கடுமையான விவாதம் இல்லாமல் காவல் துறை மானியம் விமர்சிக்கப்பட்டிருக்கிறது என்பதிலிருந்தே காவல் துறை எவ்வளவு மென்மையாகச் செயல்படுகிறது என்பதை விளக்க விரும்புகிறேன்.

பெரிய திருட்டுக்கள், கொள்ளைகள் இவைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை காலையிலே பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

23-4-1971, அந்த நாளிலே நம்முடைய சென்னை மாநகராட்சி மன்றத்திலிருந்து 65 ஆயிரம் ரூபாய் அளவுக்குப் பணம் காணாமல் போயிற்று. எந்தவிதமான தடயமும் கிடைக்க வில்லை. எப்படி அந்தப் பணப்பெட்டி அங்கிருந்து வெளியேறியது என்பதை யாரும் சொல்வதற்கு இயலவில்லை. அவ்வளவு மர்மமாக அந்தத் திருட்டு நடைபெற்றது. பல பேர்களை சந்தேகப்பட்டார்கள். மாநகராட்சி மன்ற அலுவலர்கள் செய்திருக்கக் கூடுமோ, ஊழியர் செய்திருக்கக் கூடுமோ, என்றெல்லாம் சந்தேகப்பட்டார்கள். கடைசியில் மராட்டியம் போன்ற, மைசூர் போன்ற, ஆந்திரம் போன்ற மாநிலங்களிலே பணத்தோடு சிதறிக் கிடந்தார்கள். இவர்கள் எல்லாம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள், திருச்சி மாவட்டத்தில் உள்ளவர்கள் என்றாலும், அவர்கள் அங்கிருந்து சென்னைக்கு வந்து 65ஆயிரம் ரூபாய் அளவுக்குத் திருடிக்கொண்டு பல்வேறு மாநிலங்களுக்கு ஓடிவிட்ட பிறகும் நம்முடைய காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து, இழந்த பணத்தில் பெரும் பகுதியை மீட்டார்கள். அந்த வழக்கிலே எட்டுப் பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

மதுரை மத்திய வங்கியில் 90 ஆயிரம் ரூபாய் காணாமல் போயிற்று. காவல் துறையினர் எடுத்த நடவடிக்கையால் ஏழு பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

காலையிலே பேசிய அம்மையார் அவர்கள் கருமுத்து சிவலிங்கம் செட்டியார் வீட்டிலே நடைபெற்ற கொள்ளை வழக்கிலே இரண்டு, மூன்று மாத காலம் யாருமே கைது செய்யப்படவில்லை. ஆகவே சந்தேகப்படுகிறேன் என்று சொன்னார்கள். தெக்கூர் கருமுத்து சிவலிங்கம் செட்டியார் வீட்டில் கொள்ளை நடந்த தேதி 25-11-1971, காலை 7½ மணி. வழக்கு விசாரணைக்கு எடுத்த தேதியும் 25-11-1971 தான். தமயந்தி என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 1-12-1971. 25-11-1971க்கும் 1-12-1971-க்கும் இடையிலே மாதக் கணக்கு இல்லை, நாள் கணக்குத்தான் இருக்கிறது. சுப்பிரமணியன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 1-12-1971. சோமன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 2-1-1972. ஒருவேளை ஒருவர் 1971ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார், இன்னொருவர் 1972ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார் என்று சொல்லலாம். ஆனால் 1-12-1971க்கும் 2-1-1972க்கும் வித்தியாசம் தெரிந்தவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள். அதோடு முடிகிறது டிசம்பர் மாதம். 1972ஆம் ஆண்டு அடுத்த ஆண்டு. பெரியசாமி என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 5-1-1972 பணையன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 7-1-1972. அருணாசலம் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 7-1-1972 கதிர்வேலு என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 10-1-1972. கதிரேசன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 26-1-72. மேலும் 9 குற்றவாளிகள் நீதிமன்றத்திலே சரணடைந்தார்கள். இப்படி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். இடையே இரண்டொரு நாள் தலைமறைவாக ஓடி ஒளிந்தவர்களை கைது செய்தார்கள். இதற்கு முன்பு இப்படி நடந்ததா என்று எடுத்துப் பார்த்தால் பல ஆதாரங்கள் இருக்கின்றன. முன்பிருந்த அரசிலே ஆறு, ஏழு மாத காலத்திற்குப் பிறகு, குற்றம் பதிவு செய்யப்பட்டதற்குப் பிறகு கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். இதிலே தாமதம்கூட ஏற்படவில்லை. எந்தத் தாமதமும் இல்லாமல் கைது செய்யப்பட்டார்கள். அது மட்டுமல்லாமல் மிகவும் முக்கியமாக 4 வைர வளையல்கள்

ரூ. 40,000. ரொக்கம் ரூ. 11,932, கடன் பத்திரங்களின் மதிப்பு ரூ. 2,87,000, தங்க நகைகளின் மதிப்பு ரூ. 2,500, துணிகளின் மதிப்பு ரூ. 1,000, வெள்ளி சாமான்களின் மதிப்பு ரூ. 25,000. இவ்வளவும் களவு போன சொத்துக்களில் 90 சதவீதம் கைப்பற்றி இந்தக் குற்றவாளிகளின் மீது வழக்கு தொடர்ந்து இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால் சட்ட மன்றத்திலே வாய்ப்பு இருக்கிறது, தவறான தகவல்களைத் தருகின்ற நேரத்திலே உடனடியாகப் பதில் அளிக்கும் வாய்ப்பை அமைச்சர்கள் பெற்றிருக்கிறோம். பதில் அளிக்கிறோம். காலையில்கூட சட்ட அமைச்சரவர்கள் அவர்களது தவறுகளைத் திருத்தக்கூடிய அளவிற்குச் சொன்னார்கள். நானும் இவ்வளவு விவரங்களைத் தந்திருக்கின்றேன். ஆனால் வெளியிலேயும், பத்திரிகைகளிலேயும் சிவலிங்கம் செட்டியார் வீட்டில் நடந்த கொள்ளையில் அரசு தலையிட்டதன் காரணமாகத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று, வேண்டுமென்றே அவதூறாகக் கூற வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படும் பிரச்சாரங்கள் ஏதோ இந்த அரசை மக்கள் மத்தியிலே குற்றம் சாட்டுவதற்குப் பயன்படலாம். ஆனால் எல்லா அரசுகளுக்கும் பொதுவாக இருக்கின்ற இத்தகைய இலாக்காவை மக்கள் மத்தியில் மதிப்பற்றதாக ஆக்கிவிடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு மிகுந்த கவனத்தோடு இந்தப் பிரச்சினைகளை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, திரு. மணலி கந்தசாமி அவர்கள், சிலைகள் அதிகமாக வெளிநாடுகளுக்குத் திருட்டு போகின்றன என்றும், கண்காணிக்க வேண்டுமென்றும் காலையிலே எடுத்துக் கூறினார்கள். அது உண்மைதான். 1959ஆம் ஆண்டிலே 153 சிலைகள் திருடப்பட்டு, போலீசாரால் 103 சிலைகள் மீண்டும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. 1960ஆம் ஆண்டில் 240 சிலைகள் திருடப்பட்டு, அவற்றிலே 161 சிலைகள் திரும்பக் கிடைத்திருக் கின்றன. 1971ஆம் ஆண்டிலே 208 சிலைகள் திருடப்பட்டு 133 சிலைகள் மீட்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சிலைகள் திருட்டு நீண்ட நாட்களாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. தெக்கலூர் சிவலிங்கம் செட்டியார் வீட்டுத் திருட்டில் ஏதோ அரசியல் அல்லது அரசு தலையிட்டதாகச் சொன்னார்களே, அவர்களுக்குச்

சொல்கிறேன். ஒரு பிரசித்தி பெற்ற சிலை திருட்டில் ஒரு பெரிய அரசியல் கட்சியின் தலைவரே, ஒரு மாவட்டத்தின் தலைவரே ஈடுபட்டிருந்தார் என்பது ஒரு குற்றச்சாட்டு. அரசியலுக்கு எதை எதையோ காங்கிரசார் இழுக்கின்ற காரணத்தால் நானும் இதைச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

1952ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் சிவபுரம் கோயிலைச் சார்ந்த இடத்தின் நிலத்தைத் தோண்டும்போது வேலைப்பாடுகள் நிறைந்த நடராசர், சோமாஸ்கந்தர், சிவகாமி அம்மன், திருஞானசம்பந்தர், மற்றொரு அம்மன், பிள்ளையார் ஆகிய ஆறு சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. பின்னர் இந்தச் சிலைகள் கும்பகோணம் தாசில்தாரிடம் ஒப்படைக்கப்பட்டன. பின்னர், அவற்றை சென்னை அரசினர் கலைக்கூடத்திற்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கும்போது, மேற்படி சிவபுரம் கோயில் தர்மகர்த்தாவும், தீவிர காங்கிரஸ் காரருமான திரு. முத்துசாமி மட்டையர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தினார். கலைக்கூட நிர்வாகத்தினர் எதிர்ப்பு இருந்த போதிலும், மேற்படி சிலைகள் சிவபுரம் கோயிலிலேயே இருக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. சிலைகள் சிவபுரம் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தன. சுப்பிரமணிய படையாச்சி என்பவரின் புதல்வர்களும் அதே போன்ற சிலைகளைச் செய்யக்கூடிய ஸ்தபதியாரும் சேர்ந்து கொண்டு அதே போன்ற சிலைகளை அங்கே செய்து வைத்து விட்டு, அந்த உண்மையான சிலைகளையெல்லாம் களவாடி வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு. அவர் காங்கிரஸ்காரர்தானா என்று சிலர் கேட்கக் கூடும். சுப்பிரமணிய படையாச்சி என்பவர் காங்கிரஸ்காரர்தான். அவருடைய பிள்ளைகளின் பெயர்கள் கூட திலகர், சித்தரஞ்சன், கோவிந்ததாஸ், ஜவஹர், காந்தி என்பதுதான். தன்னுடைய அபிமானப் பெயர்களையெல்லாம் பிள்ளைகளுக்கு அவர் வைத்திருந்தார். சுப்பிரமணிய படையாச்சியின் புதல்வர்களான திலகர், சித்தரஞ்சன் தாஸ் ஆகியோர்தான் இந்தக் குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டவர்கள். 1952-ம் ஆண்டிலிருந்து இவ்வளவு பெரிய திருட்டு கண்டுபிடிக்கப்படவில்லை, இந்த ஆட்சிக் காலத்திலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 1952-லே இந்தத் திருட்டு நடந்து சிலைகள் வெளிநாட்டுக்குச் சென்றிருக்கின்றன. உண்மையான சிலைகள் போல செய்யப்படும் சிலைகள் சாதாரண

உலோகத்திலே செய்யப்படுகின்றன. பழைய காலத்து சிலைகள் அப்படியல்ல. அதிலும் நடராசர் சிலையிலுள்ள வளைவுகள், விரல் நெளிவுகள் இவையெல்லாம் செய்திட தங்கம் அதிகமாகக் கலக்கப்படும். அப்படித் தங்கம் கலக்கப்பட்ட சிலைகள் எல்லாம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. குற்றாலத்திலே ஸ்தாபன காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அந்தத் திலகர் (சிரிப்பு). திலகருடைய சகோதரர், சித்தரஞ்சன் தாஸ் பம்பாயிலிருந்துகொண்டு மூத்த சகோதரருடைய பிரதிநிதியாக இந்த வியாபாரத்தை நடத்தி வந்திருக்கிறார். சிலை வாங்கி விற்பதிலே ஒரு பெரிய தொடர்பே ஏற்படுத்திக்கொண்டு இந்தச் சிலைகள் பல இடங்களுக்கும் போயிருக்கின்றன. ஒரேவொரு சிலை நடராசருடைய சிலை மாத்திரம் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அந்தச் சிலையை அமெரிக்க நாட்டுக்காரன் 75 இலட்சம் ரூபாய் விலை கூறிக்கொண்டிருக்கின்றான்.

இப்படி பயங்கரமான ஒரு சிலை திருட்டு 1952லிருந்து திட்டமிட்டு ஒரு குடும்பமே அதிலே ஈடுபட்டு நடத்தப் பட்டிருக்கிறது. எதற்கெடுத்தாலும் அரசியலைக் கலக்கின்றவர்கள் இவைகளையெல்லாம் மறந்துவிடக்கூடாது. நாங்கள் சொல்லுகின்ற காரணத்தினால், ஏதோ காங்கிரஸ் கட்சியைக் குற்றம் சாட்டுகிறேன் என்று கருதிவிடக்கூடாது.

ஊழல், விவகாரங்கள் இவைகளையெல்லாம் பேசும் நேரத்தில் 1952-லிருந்து 1967 வரையிலேயும் நடைபெற்ற இந்தச் சம்பவங்களை அவர்கள் ஒரு கட்சியின் போர்வையிலே ஒளிந்து கொண்டு நடத்தியிருக்கின்றார்கள். எந்தக் காரியம் எந்தக் கட்சியின் சார்பாக நடைபெற்றாலும் அது கண்டிக்கப் படவேண்டிய ஒன்று. அது கழகத்தின் சார்பிலே நடைபெற்றாலும் சரி, காங்கிரஸ் சார்பிலே நடைபெற்றாலும் சரி, கம்யூனிஸ்ட் சார்பிலே நடைபெற்றிருந்தாலும் சரி, சுதந்திராக் கட்சியின் சார்பிலே நடைபெற்றிருந்தாலும் சரி எந்தக் கட்சியாக இருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆகவே இப்படிப்பட்ட சில தகவல்கள் இருக்கும்பொழுது, வேண்டுமென்றே ஒரு ஆளுங்கட்சியைக் குறைகூற வேண்டுமென்பதற்காக மேடைகளையும், ஏடுகளையும் பயன்படுத்திக் கொள்வது நல்லது அல்ல என்பதற்காக இதைச்

சுட்டிக்காட்டுகிறேனே அல்லாமல் வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஏதாவது முடிவு ஏற்பட்டு இருக்கிறதா? அல்லது அதுவல்லாமல் தகவலாக இப்பொழுது இருக்கிறதா என்பதை முதலமைச்சரவர்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளிலுள்ள அந்தச் சிலைகளையெல்லாம் இங்கே கொண்டுவருவதற்கு வெளி நாடுகளோடு துப்பறியும் இலாக்காவால் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. அவைகள் மீண்டும் வந்தபிறகு விசாரணை ஆரம்பம் ஆகும். எனவே, பதிவு செய்யப்படாமல் இல்லை.

திருமதி. த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, விசாரணை முடிந்து குற்றம் ருசு செய்யப்பட்டால்தான் குற்றவாளி என்று சொல்லலாமே தவிர, வழக்கு இருக்கும்பொழுதே சொல்வது சரியல்ல.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான், குற்றவாளி என்று சொல்லவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர் என்று சொன்னேன். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றாலம் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கிறார்கள் என்று சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : முதலமைச்சரவர்களே சொல்வது சரியல்ல. இப்பொழுது வேறு கட்சிக்கு மாறிவிட்டார் என்று சொல்லப்படுகிறது. அந்தத் தகவல் வந்திருக்கிறதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்களைக் கேட்டுக் கொண்டுதான் மாறியிருப்பார்கள் என்று கருதுகிறேன். இதுவரையில் அப்படி மாறியதாகத் தெரியவில்லை. ஸ்தாபன காங்கிரசில்தான் இருப்பதாகத் தெரிகிறது. ஒருவேளை அப்படி தவறு செய்பவர்களை ஸ்தாபன காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், அல்லது வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும், கட்சியிலிருந்து வெளியேற்றப் படவேண்டும், திலகர், காந்தி என்ற பெயரிலேயிருந்தாலும், அல்லது

அந்தந்தக் கட்சியிலிருக்கும் பெருந்தலைவர்களின் பெயரிலே இருந்தாலும், அந்தக்குடும்பம் நீண்ட காலமாக அந்தக் கட்சிக்கு உழைத்திருந்தாலும், யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற சூளுரையை எடுத்துக் கொள்ளவேண்டு மென்பதற்காகக் கூறுகிறேனே தவிர இவைகளையெல்லாம் அரசியலாக ஆக்கக்கூடாது என்பதற்காகச் சுட்டிக்காட்டுகிறேனே யல்லாமல் வேறல்ல.

இன்றைக்கு இங்கே பேசப்பட்டது, சதி வழக்குகள், பொய் வழக்குகள் இந்தஅரசாங்கத்தின் சார்பாக எதிர்க்கட்சிகளின்மேல் போடப்படுகின்றன என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப் பட்டது. எந்தப் பொய் வழக்கையும் யார்மீதும் போட்டுவிட வில்லை. வழக்குகளைப் போடும் நேரத்தில் சில சாட்சிகள் சரியாக இல்லாமலோ அல்லது அதைக் குற்றம் என்று கண்டுபிடித்த காவல்துறையினரின் கருத்து சரியாக இல்லாமலோ அந்த வழக்குகளில் சிலர் விடுதலை பெற்றிருக்கலாம். அதற்காகவே அது பொய் வழக்கு என்று கூறுவது நல்லதல்ல. ஆனால் நான் சொல்கிறேன். நீங்கள் பழைய விவகாரங்களைச் சொல்லி இதற்குச் சமாதானம் தேடலாமா என்று கேட்கக்கூடாது - பழைய ஆட்சியில், மதுரையில் அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் கிளர்ச்சியில் இன்றைய மதுரை நகர மேயர் நண்பர் முத்து அவர்கள் ஈடுபட்டார்கள். அரசியல் சட்டத்தை மாலை 6 மணிக்கு, அவரும் அவரோடு சேர்ந்து நான்கைந்து கழக நண்பர்களும் கொளுத்துவார்கள் என்று ஏற்கனவே பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டிருந்தது.

அங்கு அந்த நிகழ்ச்சியைக் கண்காணிப்பதற்காக காலையில் அங்கு செல்ல வேண்டுமென்று தலைவர் அண்ணா அவர்கள் கட்டளையிட்டு நானும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் என்.வி.என் அவர்களும், அப்போது நாங்கள் எதிர்க் கட்சியில் இருக்கிறோம் - மதுரைக்குச் சென்றோம், கார் மூலமாக. அப்படிச் செல்லும்போது திருச்சியிலிருந்து நாங்கள் மதுரைக்குச் செல்கின்ற வழியில் கார் பழுதுபட்டு. காலையில் மதுரைக்குப் போய் சேரமுடியாத சங்கடத்திற்கு ஆளானோம். கார் பழுதாகி வழியில் நின்று கொண்டிருக்கும்போது உசிலம்பட்டி பெருமாள் என்ற நண்பர் - அப்போது அவர் காங்கிரசில் இருந்தார், இப்போது

அவர் தி.மு.க. வுக்கு வந்து விட்டார் - எவ்வளவு நாட்களுக்குத் தான் அங்கே இருந்து கொண்டிருப்பது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூட காங்கிரசில் இருந்தார் டிஸ்ட்ரிக்ட் செக்ரடரியாக - காரில் போய்க் கொண்டிருந்தார். நாங்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து 'எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டார்கள். 'மதுரைக்குப் போகிறோம்' என்று சொன்னோம். 'இந்தக் காரில் ஏறிக் கொள்ளுங்கள்' என்றார்.

அவருடைய காரில் ஏறிக் கொண்டு அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் நிகழ்ச்சியைக் கண்காணிக்க சற்றுத் தாமதமாகச் சென்ற காரணத்தால் முத்து அவர்களும், மற்றவர்களும் கிளர்ச்சிக்கு அங்கிருக்கும் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்திலிருந்து இறங்கி சாலைக்கே வந்து விட்டார்கள். அவர்கள் வந்த அந்தச் சாலையில் நான் கொஞ்சம் தள்ளி பின்னால் நின்று கொண்டிருந்தேன். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் மன்னை நாராயணசாமியும் இருந்தார்கள். அந்தச் சாலையில் சென்று கொண்டிருக்கும்போது திடீரென்று ஒரு போலீஸ் அதிகாரி மன்னை நாராயணசாமி அவர்களைப் பார்த்து 'தள்ளிப் போ' என்று சொல்ல, இவர் உடனடியாகத் தள்ளிப் போக முடியாது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இவர் கொஞ்சம் மெதுவாக அந்த முயற்சியில் ஈடுபட, அதிகாரி சொல்லுவதைக் கேட்க மறுக்கிறார் என்று கருதிக் கொண்டு அவர் கைது செய்யப்பட்டார்.

பிறகு அவர்கள் அரசியல் சட்டத்தைக் கொளுத்தினார்கள். நாங்கள் கூட அந்த இடம் வரை போகவில்லை. நானும் என்.வி,என். அவர்களும் தொலைவில் இருந்தோம். பிறகு இருவரும் சென்னைக்குத் திரும்பிவிட்டோம்.

அதற்குப் பிறகு எங்கள் இருவர்மீதும் அரசியல் சட்டத்தைக் கொளுத்தும்படி மதுரை முத்துவையும், மற்றவர் களையும் தூண்டிவிட்டதாக சதி வழக்கு போட்டார்கள். அரசியல் சட்டத்தைக் கொளுத்தப் போவதாக அண்ணா அவர்கள் அறிக்கை விடுத்து, நாடு முழுவதும் விளம்பரப்படுத்தி காரியம் நடைபெறுவது சதியல்ல; ஆனாலும் சதி வழக்கு என்று எங்கள்மீது ஜோடிக்கப்பட்டு நாங்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டோம்.

சதிவழக்கில் போலீசார் சாட்சியம் சொன்னார்கள். அதில் ஒரு ஹெட் கான்ஸ்டபிள் சாட்சியம் சொன்னார். 'கருணாநிதி தமுக்கம் திடலில் சிறப்புக் கூட்டத்தில் பேசினார்; அப்படிப் பேசும்போது மதுரை முத்துவைப் பார்த்து அரசியல் சட்டத்தைக் கொளுத்து என்று ஆணையிட்டார்' என்று கூறினார். வழக்கறிஞர் கூட 'சிறப்புக் கூட்டத்திற்குப் போயிருந்தீர்களா? என்று கேட்க போயிருந்தேன்' என்று இவர் சொன்னார். 'சிறப்புக் கூட்டத்திற்குக் கட்டணம் உண்டா?' என்று கேட்டதற்கு இவர் 'உண்டு' என்று சொன்னார். 'என்ன கட்டணம் டிக்கட் வாங்கி உள்ளே சென்றீர்கள்? என்று கேட்டதற்கு 'எட்டணா டிக்கட் என்றார். 'எட்டணா டிக்கட் பெண்களுக்கல்லவா' என்று வழக்கறிஞர் கூறினார். இதற்கெல்லாம் பிறகு தீர்ப்பளிக்கப்பட்டது. 'எனக்கும் என்.வி.என். அவர்களுக்கும் ஆறு மாத காலம் சிறைத்தண்டனை' என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆக, சதி வழக்கு, பொய் வழக்கு இவைகள் எல்லாம் போடப்பட்டது அந்தக் காலமே தவிர, இந்தக் காலம் அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் சொல்லுகிறேன்.

இன்றைக்குப் பத்திரிகையில் என்னென்னவோ எழுதுகிறார்கள். எவ்வளவோ பயங்கரமான கார்ட்டூன்களை, கேலிச் சித்திரங்களை வெளியிடுகிறார்கள். வழக்குப் போட்டுக் கொண்டா இருக்கிறோம்? கொள்கை ரீதியாக, அரசியல் ரீதியாக செய்யப்படுகின்ற விவரங்களை இந்த அரசு பொருட்படுத்த வில்லை. அதற்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

சில நாடகங்களைப் பற்றி காங்கிரஸ் உறுப்பினர்களே மேல்சபையில் கேட்டார்கள். தடை செய்ய வேண்டுமென்றார்கள். நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற அந்த நேரத்தில் காங்கிரஸ் ஒன்றாக இருந்தது. எழுத்துச் சுதந்திரத்தைப் பறிக்கத் தேவையில்லை என்று சொன்னேன். நாடகங்களைத் தடை செய்யவேண்டுமென்று சொல்லவில்லை.

நூற்றுக்கணக்கான நாடகங்கள், புத்தகங்கள் ஆகியவற்றைப் பழைய காங்கிரஸ் அரசு தடை செய்திருப்பதை நாடு நன்றாக அறியும். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் அன்றும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அவர் நடத்திய அறப்போர் பத்திரிகையில் ஒரு கேலிச் சித்திரம் வெளி

வந்தது. பண்டித ஜவகர்லால் நேருவை இந்தி வெறியர்கள் முதுகில் குத்துவது போன்ற ஒரு கேலிச் சித்திரம் அது. அடுத்த வாரமே அரங்கண்ணல் அவர்கள் 'நேரு அவர்களைப் போட்டு கத்தியால் குத்துவதைப் போல் கேலிச் சித்திரம் வெளியிடப் பட்டது. இப்போதுதான் என்னுடைய கவனத்திற்கு வந்தது; நான் ஊரில் இல்லாத நேரத்தில் துணை ஆசிரியர் அவ்வாறு அதை வெளியிட்டுவிட்டார். நான் அதை விரும்பவில்லை' என்று மறுப்பு அறிக்கை விட்டார்.

திரு. அரங்கண்ணல் மீது பதினாறு, பதினேழு செக்ஷன்களிலே வழக்குப் போடப்பட்டது. கொலையைத் தூண்டிவிட்டதாகக் கூட அவர் மீது ஒரு செக்ஷனிலே வழக்குப் போடப்பட்டு வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென்று முதலமைச்சர் காமராஜர் அவர்களிடத்தில் கட்சி ரீதியாகக் கூடச் சொல்லப்பட்டது. ஒரு கேலிச் சித்திரம் பத்திரிகையில் வந்து அதற்கு மறுப்பும் வந்து விட்டது. ஆசிரியர் வருத்தம் தெரிவித்த பிறகும் வழக்குப் போடப்பட்டது. அந்த வழக்கு பல மாதங்கள் நீதிமன்றத்தில் நடந்து இறுதியாக அரங்கண்ணல் குற்றவாளி அல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை பெற்றிருக்கிறார்.

இவைகளையெல்லாம் சொல்லுவதற்குக் காரணம் அரசு எந்த அளவுக்கு ஜனநாயகத்தோடு அந்தக் காலத்தில் நடைபெற்றது என்பதற்கும், இன்றைக்கு அரசாகட்டும், காவல் துறையாகட்டும் எந்த அளவுக்கு நடந்து கொண்டு வருகிறது என்ற வேறுபாடுகளை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

எவ்வளவோ கிளர்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியர் களாகட்டும், மாணவர்களாகட்டும், தொழிலாளர்களாகட்டும், டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டிய சிம்ப்சன் விவகார மாகட்டும், நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்றிரண்டு அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கலாமே தவிர வேறல்ல. 20 நாள் போராட்டம், 30 நாள் போராட்டம் துப்பாக்கிப் பிரயோகத்தில் போய் முடிந்திருக்குமே என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எல்லாவற்றையும் மிகுந்த நிதானத்தோடு நாம் அணுக வேண்டுமென்ற அளவில் எல்லாக் கிளர்ச்சிகளையும் அணுகுகிறோம். கைது செய்யப்படுகிறார்கள், மறுநாள் விடுதலை செய்யப்படுகிறார்கள். வழக்குகள் திரும்பப் பெறப்படுகின்றன. அந்த அளவுக்கு இந்த அரசு நிதானப் போக்கைக் காட்டி வருகிறது.

ஆனால் நான் ஒன்றைச் சொல்லுவேன். இந்த அரசு தலையிடுகிறது, தலையிடுகிறது என்று சொல்லுகிறார்களே 1951-ம் ஆண்டில் நடைபெற்ற ஒன்று. '1947-ல் இருந்து ஃபைல்களைக் கொண்டு வா, விசாரணைக்குத் தயார்' என்கிறார்கள்.

ஃபைல்கள் வரும் புற்றீசல்கள் போல, ஒன்றைச் சொல்லுகிறேன்.

1951-ம் ஆண்டு தேனியில் ஒரு கலவரம் நடந்தது. நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தேனியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசச் சென்றார்கள். அங்கு ஏற்கனவே ஒரு கூட்டம் நாவலர் பேசுகின்ற அதே இடத்தில் நடத்த வேண்டுமென்று அவர்களும் ஏற்பாடு செய்து 'நீங்கள் நடத்தக்கூடாது' என்று இவர்களிடத்தில் சொல்ல, சமாதானமான முறையில் முதலில் நாவலர் பேசுகின்ற கூட்டத்தை முடித்துவிட்டு பிறகு அவர்கள் கூட்டத்தை நடத்திக் கொள்ளலாம் என்று அதிகாரிகள் தீர்ப்புக் கூறி, நாவலர் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றார். நடந்தது என்ன? மறைந்த தேனி தியாகராஜன் அவர்கள் அப்போது ஜில்லா போர்டு பிரசிடென்ட். மதுரை மாவட்டத்தின் தலைவர். அவர் உட்பட 142 பேர் அங்கே நுழைந்து நாவலருடைய கூட்டத்தில் பெரும் ரகளையை உண்டாக்கினார்கள். பெரிய பாறாங்கல்லை நாவலர் மீது வீசுகின்ற அளவுக்கு பயங்கரமான சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது. அப்படி ஏற்பட்டதையொட்டி நடைபெற்ற சம்பவங்களை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

4-7-1951-ம் தேதி தேனியில் நடந்த கலவரத்தைப் பற்றி அன்றே பெரியகுளம் ஏ.எஸ்.பி. ஒரு தந்தி கொடுத்தார். அதில் அவர் குறிப்பிட்டதாவது.

'ஜில்லா போர்டு தலைவர் தியாகராஜன் தலைமையில் திராவிட கழகத்தாரையும், போலீசாரையும் கலவரக் கூட்டம் ஒன்று

தாக்கி ஆறு போலீசார் உட்பட பலர் காயமுற்றனர். ரத்தம் சிந்துவதைத் தடுப்பதற்காக தியாகராஜன் உட்பட 142 பேரைப் போலீசார் கைது செய்தார்கள்.

அதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் எஃப். டபிள்யூ. ஏ. மோரீஸ், ஐ.சி.எஸ்., அவர்கள் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைவாக ஒரு கடிதம் எழுதினார். ஐந்தாம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர் மோரிஸ் ஒரு நீண்ட அறிக்கையை அவருடைய சொந்த விசாரணைக்குப் பின் அனுப்பியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பது :

I consider the action of the Police in arresting the President, District Board and other people was justified in the circumstances. It is for consideration of the Government whether Mr. Theagarajan should be permitted to act as President of the District Board with such grave charges pending against him and as his official position might enable him to gain an unfair advantage. . . என்று மாவட்ட ஆட்சியாளர் இவ்வளவு தெளிவாக அறிக்கை அனுப்பி, திரு. தியாகராஜன் ஜில்லா போர்டு தலைவராக நீடிக்க அனுமதிக்கலாமா என்று கேட்டதற்கு 12-7-1951-ம் தேதி அரசு,

"பெரியகுளம் சப்-மாஜிஸ்ட்ரேட் வெங்கடாசலத்தையும், பெரியகுளம் இன்ஸ்பெக்டர் ஆப் போலீசையும், தேனி சப்-இன்ஸ்பெக்டரையும் ஹவில்தார் மேஜரையும் உடனடியாக சஸ்பெண்ட் செய்யுமாறு" தந்தி கொடுத்தது.

அரசின் இந்த உத்தரவு கிடைத்தவுடன் சப்-மாஜிஸ்ட்ரேட்டை சஸ்பெண்ட் செய்துவிட்டு ஆட்சியாளர் 17-1-1951-ம் தேதி ஒரு கடிதம் எழுதினார். அதில் -

'It is however not clear to me what is the basis for the charge against the Stationary Sub-Magistrate and what evidence has to be examined by me to substantiate the charge ...'
என்று கூறிவிட்டு முடிவில் அவ்வாறு குற்றம் சாட்டுவது நியாயமாகவோ சரியாகவோ இருக்குமா என்பது தனக்கு மிகவும் சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது என்று கூறுகிறார்.

'I am doubtful whether it is fair or reasonable to permit the charge against the Stationary Sub-Magistrate.' என்று

குறிப்பிடுகிறார்கள். அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சியாளர் மோரீஸ் அவர்கள், விரைவாக விசாரணை செய்து முடிவில் 12-8-1951-ல் தேதி குற்றங்கள் ருசுவாகவில்லை என்று கூறி சப்-மாஜிஸ்ட்ரேட்னுடைய சஸ்பென்ஷனை ரத்து செய்து, அவரை மீண்டும் வேலையில் அமர்த்தினார். இவ்வாறு அந்த மாவட்ட ஆட்சியாளர் 12-8-1951 உத்தரவு போட்டும் 20-8-1951 அரசிடமிருந்து சப்-மாஜிஸ்ட்ரேட்டை மீண்டும் சஸ்பென்ஷனில் வைக்க வேண்டுமென்று உத்தரவு தரப்பட்டது.

'Stationary Sub-Magistrate Venkatachalam should continue to remain on suspension - Orders follow. . .' என்று இருந்தது. இதன் பிறகு ஏன் இவர்களையெல்லாம் சஸ்பெண்டு செய்திருக்கிறார்கள் என்றால் தேனி தியாகராஜன் கைது செய்யப்பட்டாராம். 142 பேர்கள் கைது செய்யப்பட்டுவிட்டார்களாம்.

நாவலர் கூட்டத்தில் கலவரத்தை ஏற்படுத்தி, இரத்தக் களறி ஏற்பட்டு, அப்படிக் கூட்டத்திற்கு வந்திருந்த கலவரக்காரர்களைக் கைது செய்தார்கள். அதற்குத் தலைமை வகித்த தேனி தியாகராஜன் கைது செய்யப்பட்டார். இந்தக் கலவர வழக்கில் 37 பேர்களைக் குற்றவாளிகளாக போலீசார் முதலில் எடுத்த போதிலும் திரு. தியாகராஜன் இதில் ஏ-1ஆக குறிப்பிடப்பட்டிருந்தும் கூட தியாகராசனையும் மற்றும் ஒன்பது பேரையும் தவறாக வழக்கில் சேர்த்துவிட்டதாக அவர்களை வழக்கிலிருந்து போலீசார் விலக்கினார்கள். பிறகு மேலும் ஐந்து பேர்களையும் தவறாகச் சேர்த்துவிட்டதாக வழக்கிலிருந்து விலக்கினார்கள். மீதியுள்ள 22 பேர்கள் மீது வழக்குப் போடுவதற்கான பூர்வாங்கமான ஆதாரங்கள் பப்ளிக் பிராசிகூட்டர் கருத்து தெரிவித்தும்கூட அவர்கள் மீதும் வழக்கு தொடர வேண்டாம் என்று 13-11-1951 அன்று அரசு ஆணையிட்டது. மோரீஸ் அவர்கள் 1953-ல் ஓய்வு பெறவேண்டியவர். ஆனால் அவர்கள் 1951லேயே ப்ரிமெச்சூராக ரிட்டயராகி இருக்கிறார். இந்த அளவிற்கு ஒரு மாவட்ட ஆட்சியாளர் நியாயத்தை எடுத்துரைத்தும், தவறு செய்தவர்களைக் கண்டித்த போலீஸ் அதிகாரிகள் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்படுகிற சூழ்நிலை 1951-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது நடைபெற்றிருக்கிறது.

இதுபோன்ற தலையீடுகள், அரசாங்கமே நேரடியாகத் தலையிட்டு இவரைக் கைது செய்யலாமா என்று கேட்கிற அளவிற்கு தலையீடுகள் அந்தக் காலத்தில் நிரம்ப நடைபெற்றிருக்கின்றன. உதாரணத்திற்காக மட்டும் ஒன்று சொன்னேனே தவிர வேறு அல்ல.

Dr. H.V. HANDE : Sir, does the Hon. Chief Minister think that we want such I.C.S. Officers like Mr. Morris and that the Government will give protection to such officers? Will the Government nurture such officers? Now most of the discussions take place telephonically between the Government and the Collectors. Also, the then Chief Minister who was responsible for that, is not in the House now and we do not know what had actually happened then. Also, Thiru Thiagarajan is no more and so there is one here to refute the information given by the Government. . . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட அலுவலர்களை நாங்கள் என்றைக்கும் பாராட்டுகிறோம். ஆனால் அவர்களைப் பாராட்டாமல் அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்தார்களே அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறது, நாடு என்பதைத்தான் சொன்னேனே அல்லாமல், வேறு அல்ல. தியாகராசன் அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள், அந்த ஆபீஸர் இல்லை என்று சொன்னார்கள். பைல் இருக்கிறது. அவர்கள் இல்லாவிட்டாலும் பைல் இருக்கிறது.

1947-ல் இருந்து விசாரணை வைத்துக்கொள்ளலாமா என்று கேட்கிறார்கள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வார்கள். அந்த முறையில்தான் இருக்கிறது. அந்த பைல் இருக்கிறது.

அடுத்து, திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும் மற்ற உறுப்பினர்களும் லாக்கப்பில் ஏற்பட்ட மரணம்பற்றி உருக்கமாகச் சொன்னார்கள். அவைகள் பெருமளவிற்குத் தடுக்கப்பட வேண்டும் என்பதில் உறுப்பினர்கள் உள்ளத்தோடு என் உள்ளத்தையும் இணைத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு லாக்கப் மரணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட வேண்டுமென்று என்னென்ன தடுப்பு முறைகளைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து வருகிறோம். ஆறு மணிக்கு மேல் போலீஸ் லாக்கப்பில்

யாரையும் வைக்கவேண்டாம், பக்கத்தில் சப்-ஜெயில் இருந்தால் அங்கு அனுப்பி விடுங்கள் என்று சொல்கிறோம். பெண்கள் கைது செய்யப்பட்டிருந்தால் போலீஸ் லாக்கப்பில் ஆறு மணிக்கு மேல் வைக்க வேண்டாம், பக்கத்தில் சப்-ஜெயில் இருந்தால் அங்கு அனுப்பிவிடுங்கள் என்று சொல்கிறோம்.

சில குறைபாடுகள் உள்ளன. போலீஸ் ஸ்டேஷனே இல்லாமல் சில வீடுகளை வாடகைக்கு எடுத்து போலீஸ் ஸ்டேஷனாக வைத்துக்கொண்டிருக்கிறோம். அங்கு போடப்படுகிற சென்ட்ரி ஜன்னலுக்கு நேராக நின்று கவனித்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லாமல் வீடு அமைப்புகள் இருக்கின்றன. அதைக்கூட ஏற்றவாறு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இதுபோன்ற சில சிக்கல்கள் காரணமாக காவலாளரையும் ஏமாற்றிவிட்டு சில தற்கொலைகள் நடந்து விடுகின்றன. எல்லாமே தற்கொலைதானா என்றால் எனக்கு சந்தேகம் ஏற்படும் போது அவற்றிற்கு விசாரணை வைக்கச் சொல்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், ஜேம்ஸ் அவர்களும், வேறு சிலரும் கன்னியாகுமரியில் வேலப்பன் என்ற ஒருவர் மர்ம மரணம் பற்றி எடுத்துச் சொன்னார்கள். உடனடியாக அந்த போலீஸ் ஸ்டேஷனில் இருந்து இரண்டு அதிகாரிகளும் தாற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பொன்னப்ப நாடார் அவர்கள் இத்தகவலை எடுத்துக் கொடுத்தார்கள், கொடுத்த உடனே தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று ஐ. ஜி. அவர்களைக் கேட்டுக்கொண்டு அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை முதலிலேயே எடுத்து விட்டதாகவும் மேலும் நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறி ஐ. ஜி. அவர்கள் உடனடியாக அந்த இன்ஸ்பெக்டரையும், சப்-இன்ஸ்பெக்டரையும் அந்த இடத்திலிருந்து மாற்றுவது அல்ல, தாற்காலிக வேலை நீக்கமே செய்திருக்கிறார்கள். டி. ஐ. ஜி. விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் நிச்சயமாகச் சொல்கிறேன். யார் மீது தவறு இருந்தாலும் அவர்கள் எந்தளவிற்குக் கடுமையாகத் தண்டிக்கப் படவேண்டியவர்களோ நிச்சயமாக அது செய்யப்படும், அதில் எந்தவிதமான தயவுதாட்சண்யமும் காட்டப்படமாட்டாது என்று

திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கும் இந்த அவையில் உறுதி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடியாத்தம் நிகழ்ச்சி பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. திரு. சுரேந்திரன் அவர்கள் காலையில் அதுபற்றிப் பேசினார்கள். இப்போது பொன்னப்ப நாடார் அவர்களும் எடுத்துக் காட்டினார்கள். குடியாத்தத்தில் கோவை ஆலைத் தொழிலாளர் களுடைய வேலைநிறுத்தத்தையொட்டி அறிவிக்கப்படாமல் திடீரென்று அவர்களும் வேலைநிறுத்தம் செய்து ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுமென்று மற்றவர்களையும் வற்புறுத்தி யிருக்கிறார்கள். சில கடைகள் திறந்திருக்கின்றன; அதில் ராமசாமி, கழகத் தோழரின் கடை திறந்திருக்கிறது, எல்லோருக்கும் தெரியும். ஹர்த்தால் என்றால் சில கடைகள் திறந்திருந்தால் ஊர்வலத்தில் செல்பவர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படி நடத்திப் பழக்கப்பட்டவர்கள் தான் அனைவரும். எதிர்தரப்பில் இருப்பவர்களுக்கும் அது தெரியும். எங்களுக்கும் தெரியும். அவர் கடையைச் சாத்திக்கூட இருக்கலாம் அமைதியாக இருக்கட்டும் என்று. அவர் அப்படிச் செய்யாததால் ஊர்வலத்தில் போனவர்கள், கண்ணபிரான் தலைமையில் சென்றவர்கள், கேட்டு தகராறு முற்றியது. சோடா பாட்டில்களை எடுத்து அடித்தார்கள். சோடா பாட்டில் காயம் கண்ணபிரானுக்கு ஏற்பட்ட பிறகு கலவரம் ஏற்பட்டு போலீசார் இலேசாகத்தான் பிரம்பு கொண்டு அடித்தார்கள். போலீசார் ஒருவருக்குக் கை எலும்பு முறிந்து மருத்துவமனையில் இருக்கிறார் என்ற செய்தி வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள், வன்முறைகள் எல்லாம் நடைபெற வேண்டுமென்று நான் வாதாடுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அது நடைபெற்றால் போலீஸ் தன் கடமையைச் செய்யவேண்டும். நகரசபை தீர்மானம் போட்டு அனுப்பி யிருக்கிறது என்றால் அது காங்கிரஸ் கையிலுள்ள ஒரு நகரசபை. அது தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. அவர்கள் உண்மையை மறைத்திருக்கிறார்கள் என்று கூறவில்லை. இன்னும் வேண்டுமானால் அதுபற்றி விசாரிக்க நிச்சயமாகக் கடமைப் பட்டிருக்கிறேன். போலீசார் ஊர்வலமாகப் போனவர்களைத் தடுத்து நிறுத்தி தடியால் அடித்தார்கள் என்பதை மட்டும் ஒரு

சார்பு வாதமாக வைத்துக்கொள்ளக்கூடாது. ஊர்வலமாகச் சென்றவர்கள் தகராறு செய்திருக்கிறார்கள். அதன் தொடர்பாக இந்தத் தகராறு நடந்திருக்கிறது. எனக்கு இப்படித் தகவல் கிடைத் திருக்கிறது. அவர்களுக்கு அப்படித் தகவல் கிடைத்திருக்கிறது.

பெரியபட்டணம் நிகழ்ச்சிபற்றி நேரிலே பார்த்திருக் கிறேன் என்று சொன்னார்கள். அங்கு மங்களசுவாமி நிதிக்காக கம்யூனிஸ்ட் நண்பர்கள் வசூல் செய்தார்கள். ஒரு கம்யூனிஸ்ட் நண்பரின் சொந்தக்காரர், அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், அவர் கொடுக்காததால் அவர்கள் வீட்டிற்குச் சென்று ரகளை செய்ததாகவும், அவர் மனைவியைத் தாக்கியதாகவும், அங்கு தாறுமாறான காரியங்கள் நடந்தன. திரு. தங்கமணி அவர்கள் போலீசார் மிகுந்த கெடுபிடி செய்தார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் நேரில் பார்த்ததாகச் சொன்னார்கள். அவர்கள் சொல்லியதை ஒதுக்கித் தள்ளிவிட நான் தயாராக யில்லை. ஒரு பொறுப்புமிக்கக் கட்சியின் தலைவர் எடுத்துச் சொல்கிற குறைபாடுகளை நான் ஒதுக்கித் தள்ளிவிட விரும்பவில்லை.

ஹாண்டே அவர்கள் போலீசார்பற்றி அன்றே சில குறைபாடுகளைச் சொன்னார்கள். இப்போதும் சொல்லி யிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் இந்த அரசு சார்பில் நான் விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹாண்டே அவர்கள் குடமுருட்டி குண்டு பற்றி ஒரு அறிக்கை இங்கே வைக்கவேண்டும் என்பதில் ரொம்பச் சங்கடப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆவலாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : திருத்தத்திற்கு நன்றி. அவருக்கு முதலமைச்சர் மீது அவ்வளவு அன்பும், அவ்வளவு பற்றும், பரிவும், பாசமும் இருப்பதற்கு - என்ன இருந்தாலும் விட்ட குறை தொட்ட குறை, போகுமா? - (சிரிப்பு). அந்த அளவுக்கு இருப்பதற்கு உண்மையிலேயே மகிழ்ச்சி யடைகிறேன். பத்திரிகையில் வந்து இருக்கிறது. அவர் கூட பேசியதாகப் பார்த்தேன். ஏதோ குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டுவதற்காக யாரோ இரண்டு ராணுவ வீரர்கள் 2 குண்டுகளை

வீட்டுக்குக் கொண்டு வந்தார்கள் என்றும், அவற்றைக்கொண்டு போய் வைத்ததும், ஏதோ புகைய ஆரம்பித்ததால் ஆற்றில் போட்டு விட்டார்கள் என்றும் அதிகாரிகள் ரிப்போர்ட் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள்.

இரண்டு விதமான ரிப்போர்ட்கள் வந்திருக்கின்றன. வழக்கு விசாரணையில் இருப்பதால் ரிப்போர்ட்டை பகிரங்கமாக வைக்க முடியாது. இரண்டு அறிக்கைகளும் வித்தியாசமாக இருக்கின்றன. சொல்லப்படுவது, குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டுவதற்காகக் கொண்டு வரப்பட்டது, புகைய ஆரம்பித்ததால் ஆற்றில் போட்டு விட்டார்கள் என்று. ராணுவ வீரர்கள் வீட்டிற்கும் குடமுருட்டி ஆற்றுக்கும் 3, 4 மைல் இருக்கும். ஏதோ குளத்தங்கரையில் இருப்பவர்கள் போலவும், புகைய ஆரம்பித்ததும், குளத்தில் போட்டு விட்டது போலவும் பேசுவது சரியல்ல. இரண்டு மைல் கொண்டு வந்து ஏன் ஆற்றில் போடாமல் பாலத்தில் போட்டார்கள்? அது புகை குண்டுதான். வெடிக்கும் குண்டு அல்ல. புகை குண்டானாலும் பாலத்தின் மேல் கார்கள் போகிறபோது அது வெடித்திருந்தால் கார்கள் கவிழ நேரிட்டு இருக்கும். நானல்ல, யார் அந்தப் பாலத்தின் மேல் சென்றிருந்தாலும் அந்த நிலை ஏற்பட்டிருக்கும். நான் அந்த குண்டு வைக்கப்பட்ட பாலத்தின் வழியாகச் செல்வதாக இருந்த காரணத்தால், என்னைக் கொல்வதற்கு குண்டு வைத்து விட்டார்கள் என்று சொல்லி என் மீது தவறாக அன்பு வைத்து இருக்கிற கழக நண்பர்கள், எனக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது என்று வருத்தத்தோடு, முதலமைச்சர் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் சொன்ன பதில், செத்தால் தான் என்ன. ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமா என்பதுதான். யார் யார் குண்டு வைத்தார்கள் என்று வீணான கற்பனை செய்து கொண்டு பேசவில்லை. புலன் விசாரணை முடிந்த பிறகு, இரு அறிக்கைகளையும் ஆராய்ந்து, ஒரு அறிக்கையை, அது பற்றி இங்கே சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குழந்தைகளுக்கு விளையாட்டுக்காட்ட வாங்கிக்கொண்டு வந்தார்கள் என்று சொல்வதெல்லாம் அந்தக் காலத்தில் ராட்சதர்கள் வீட்டில்தான் நடந்தது. மனிதர்கள் வீட்டில் நடக்க முடியாது என்றும் அப்படிப்பட்ட தவறான விவரங்களைச் சொல்ல வேண்டாமென்றும் கூறிக்கொள்கிறேன்.

இந்த மானியத்தின் மீது பல குறைபாடுகள் எடுத்துக் கூறப்பட்டதையெல்லாம் அதிகாரிகள் உடன் இருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் மகிழ்ச்சி. குறைகள் இல்லாமல் இலாகா நடைபெற முடியாது.

இந்த இலாகாவைப் பொறுத்தவரையில் மொத்தச் சிலாக்கியமாக நடைபெற வேண்டிய இலாகா. ஒரு குறையும் இல்லாமல் நடைபெறுவது நல்லதுதான். அதற்கேற்ற வகையில் நீங்கள் தந்திருக்கும் எல்லா கருத்துக்களும் - காலையிலிருந்து மாலை வரை கூறப்பட்டவைகள் அனைத்தும் - இங்கே வந்திருந்து கேட்டுக்கொண்டிருந்த அதிகாரிகளுக்கு நிச்சயமாக பயன்படும் என்று நம்புகிறேன். ஆகவே, எடுத்துச் சொல்லப்பட்ட எந்தக் குறைபாடும் புறக்கணிக்கப் படவேண்டியதோ, அலட்சியப்படுத்தப்படவேண்டியதோ அல்ல என்று எடுத்துக் கூறி, அனைத்தும் நல்ல முறையில் கவனிக்கப்படும், நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் கூறி, இந்த மானியத்தின் மீது தந்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை அனைத்தும் திரும்ப பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தின் மீது கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



உரை : 8 நாள் : 23.03.1973

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை மானியம் குறித்து காலையிலிருந்து அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களும் இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களும் பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இன்று ஒருவரைவிட ஒருவர் வேகமாகப் பேச வேண்டும் என்பதிலே நல்ல போட்டி இருந்தது என்பதை நான் காலையிலிருந்து கூர்ந்து கவனித்து வருகின்றேன். அந்தப் போட்டியிலே யார் வென்றார்கள் என்பதை என்னால் சொல்ல முடியாவிட்டாலும் அவர்கள் போட்டுக் கொண்ட போட்டியிலே யாருடைய போர்க் கருவி கூர்மையானது என்பதைச் சோதித்துப் பார்க்க என்னைத்தான் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை மாத்திரம் நான் மறந்து விடவில்லை. இறுதியிலே எனக்கு பெரு மகிழ்ச்சி என்னவென்றால் நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நான் எழுதி காங்கிரஸ் அமைச்சர்களால் தடைசெய்யப்பட்ட உதய சூரியன் என்ற நாடகத்திலே வருகின்ற தாலாட்டுப் பாட்டை அவரே பாட வேண்டிய ஒரு நிலைமைக்குக் கொண்டு வந்து வைத்து விட்டேனே என்பதிலே எனக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி. நான் அந்த நாடகத்தை ஏன் தடை செய்தீர்கள் என்று முன்னாள் முதலமைச்சர் பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களை இந்த மன்றத்திலே கேட்டு, இந்தப் பாடல் தடை செய்யப்பட வேண்டுமா என்று கேட்டு அதை இந்த மன்றத்திலே நான் படித்துக் காட்டினேன். பாடிக்காட்டவில்லை. பாடியிருந்தால் இந்த மன்றம் உடனடியாகக் கலைந்துவிடும், எனவே நான் பாடிக் காட்டவில்லை. படித்துக் காட்டினேன். ஆனால் அவர்கள் என்னுடைய பேச்சுக்கு ஒரு நல்ல தொடக்கத்தை எடுத்துக் கொடுத்தார்கள் என்பதிலே நான்

பெருமையடைகிறேன். ஏனெனில் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நேரத்திலேயும் போலீஸாருடைய துன்ப துயரங்களில் எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிறைந்த அக்கறை இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகிற வகையிலே அவர்கள் இங்கு படித்துக் காட்டிய பாடல் இருப்பதை அனைவரும் அறிவீர்கள்.

இன்று இங்கு பேசிய பலருடைய பேச்சில் ஒருவர் இருவர் தவிர, பரிதாபத்திற்குரிய காவல் துறையிலே இருக்கின்ற காவலர்களைப்பற்றி அவர்களுடைய கஷ்டங்களைப்பற்றி அவர்களுக்கு இன்னும் மேலும் என்ன என்ன வசதிகளைச் செய்து தரவேண்டும் என்பதுபற்றி அதிகமாகப் பேசவில்லை என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஓரிருவர் பேசிய பேச்சிலேயும் மிகப் பெரிய இடத்தை அதற்காக அவர்கள் யாரும் தரவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது நான் என்ன சொன்னேன்? நிலவிலே களங்கம் இருப்பதைப்போல இந்தத் துறையிலேயும் சில பேர்கள் இருக்கிறார்கள் என்று நான் அன்றைக்குச் சொன்னதையும் இன்று சுட்டிக்காட்டினார்கள். முதலமைச்சர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்ட பிறகும் அதே விதமான கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இந்தத் துறையிலே இருக்கின்ற அத்தனை பேர்களும் தூய்மையானவர்கள், இந்தத் துறையை கட்டிக் காக்கின்றவர்கள், இந்தத் துறையிலே பரந்து கிடக்கின்ற பல்லாயிரக்கணக்கான காவலர்கள், அவர்களுடைய துணை அதிகாரிகள் அனைவருமே தூய்மையானவர்கள் என்று நான் எடுத்துக் கொண்டு இங்கு எழுப்பப்பட்ட விவாதங்களுக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலரிடத்தில் நாம் வெறுப்பு அடைகிற அளவிற்குச் சில தவறான எண்ணங்கள், தவறான செயல்கள் நிச்சயமாக இருந்திடக் கூடும். அவைகளையெல்லாம் இது போன்ற மாமன்றங்களில் விவாதிக்கப்படுகிற நேரத்திலே, எடுத்து விளக்கப்படுகிற கருத்துக்களின் மூலமாக அவர்களே திருத்திக் கொள்வதற்கும் வழி ஏற்படும் என்ற வகையில்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் சூடாகத் தங்களுடைய உரைகளை ஆற்றியிருந்தாலும் கூட சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களை அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உரியவர்கள் நிச்சயமாக சிந்தித்துப் பார்ப்பார்கள் என்ற நம்பிக்கையும் இங்கு நான் தெரிவித்துக் கொள்வேன்.

தாலாட்டுப் பாடலிலே போலீஸாருடைய வீட்டிலே யிருக்கின்ற கஷ்டங்களை ஆராரோ பாடுகின்ற அம்மையின் வாயிலாக நான் விளக்கி இருந்தேன். அந்தப் பாட்டோடு நின்று விடாமல் ஆட்சிப் பொறுப்பையேற்ற பிறகு, அதிலும் குறிப்பாக 1969ஆம் ஆண்டு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு, அந்தப் பாட்டை நினைவில் வைத்துக் கொண்டு போலீஸாருக்கு உடனடியாக சில வசதிகளை, வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்பதற்காக போலீஸ் குழு ஒன்றை, காவல் துறை ஆணைக் குழு ஒன்றை அமைத்தேன். திரு. ஆர். ஏ. கோபால சுவாமி, ஐ.சி.எஸ். அவர்களுடைய தலைமையில் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்களும், திரு. கோவிந்தசுவாமிநாதன் அவர்களும், திரு. சந்திரசேகரன் அவர்களும், திரு. என். கிருஷ்ணசாமி அவர்களும் உறுப்பினர்களாகக் கொண்டு, குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய அறிக்கை 2-1-1971இல் அரசுக்கு அளிக்கப்பட்டது. அந்த அறிக்கையிலே 133 பரிந்துரைகள் சொல்லப்பட்டன. அந்தப் பரிந்துரையிலே 122 பரிந்துரைகளை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி ஏற்றுக்கொண்ட 122 பரிந்துரைகளில் மிக முக்கியமான 15 பரிந்துரைகள் அமுல் நடத்தப்பட்டுவிட்டன என்பதையும் 27 பரிந்துரைகள் இப்போது அமுல் நடத்தப்படுகிற கட்டத்திலே ஒன்றன்பின் ஒன்றாக செய்யப்பட்டு வருகின்றன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன்.

அமுல் நடத்தப்பட்ட அந்த 15 பரிந்துரைகள் ஊதிய விகிதம், பஞ்சப்படியை மாற்றியமைத்தல் ஆகியன. அவர்கள் பாடிக் காட்டினார்கள் 'துப்பாக்கி எடுத்துக்கிட்டுப் போகின்ற உங்க அப்பனிடம் பழம் பாக்கி கேட்டு வருகிறார் கடன்காரர்' என்று சொன்னார்கள். ஏன் அப்படிக் கேட்டு வந்தார்கள் தெரியுமா? அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 1970ஆம் ஆண்டு வரையிலே 70 ரூபாயாக இருந்தது. ஆகவே துப்பாக்கிக்கு முன் பழம்பாக்கிக்காரன் வந்து நின்று கொண்டிருந்தான். இந்த 70 ரூபாய், போலீஸ் கமிஷன் பரிந்துரைகளுக்குப் பிறகு 150 ரூபாயாக அவர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. (பலத்த கைதட்டல்). முதல் நிலைக் காவலர்களுக்கு 200 ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, 70 ரூபாய் சம்பளத்திலிருந்த காவல்துறை நண்பனுக்கு

இன்றைக்கு 150 ரூபாய் சம்பளம் பெறுகின்ற அளவிற்கு உயர்த்தி அளித்திருப்பது, பாட்டு எழுதியதோடு மாத்திரமல்ல, அந்தப் பாட்டின் கருத்தைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் இருந்த காரணத்தினால்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்வேன்.

தலைமைக் காவலர்கள் 90 ரூபாய் ஊதியம் பெற்று வந்தார்கள். இப்போது 210 ரூபாய் ஊதியம் பெறுகிறார்கள். காவலர்களும், தலைமைக் காவலர்களும் குறைந்தபட்சம் 25 ரூபாய் இப்போது ஊதிய உயர்வு பெற்று வருகின்றார்கள்.

அடுத்தபடியாக, காவல் துறையிலே உள்ள பதவிகளை மற்ற இலாகாவிலே உள்ள இது போன்ற பதவிகளோடு ஒப்பிட்டு ஊதிய நிர்ணயம் செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் காவல் துறை ஆணைக்குழுவின் சிபாரிசின்படி சிறப்பு ஊதியங்கள் அதிகமாக்கப்பட்டுள்ளன. வீட்டு வாடகைப்படி அதிகரிக்கப்பட்டு இருக்கிறது.

உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால் பெரு நகர்ப் பகுதிகளில் பணியாற்றுகின்ற இரண்டாந்தர காவலர்களுக்கு 1-10-1970-க்கு முன்னால் 7 ரூபாய் வாடகைப்படியாகத் தரப்பட்டது. 1972-73-இல் இந்த வாடகைப்படி 25 ரூபாயாகவும் 1973-74-இல் 30 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. பெரு நகர் அல்லாத மற்ற ஊர்களில் உள்ள காவலர்களுக்கு வாடகைப்படி 7 ரூபாயிலிருந்து 1972-73-இல் 20 ரூபாயாகவும் 1973-74-இல் 25 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, வண்டி வாகனப் படி சீரமைப்பு செய்யப்பட்டு இருக்கிறது. உதாரணத்திற்கு 1-10-70-க்கு ன் 4 ரூபாய் பெற்று வந்த காவலர்கள் இப்போது இந்த வண்டி வாகனச் சீரமைப்புப் படி 5 ரூபாய் பெறுகிறார்கள். 31 ரூபாய் பெற்று வந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் வண்டி வாகனப்படியாக இப்போது 40 ரூபாய் பெறுகின்ற நிலைமையை பெற்று உள்ளார்கள். 1-6-66-ல் குறைந்த பட்ச ஊதியம் 70 ரூபாயாக இருந்தபோது நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் பயிற்சிக்குச் சேரும்போது அவருக்குத் தரப்பட்ட ஊதியம் 60 ரூபாயாக இருந்தது. 1-6-1966-ல் நேரடியாகப் பயிற்சிக்கு ஒருவர் வந்து இணைவாரானால் அவருக்கு

60 ரூபாய் ஊதியம் தரப்பட்டது. இப்போது காவலர்களுடைய சம்பளம் குறைந்தபட்சம் 150 ரூபாயாக ஆக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் பயிற்சிக் காலத்தில் அவர்களுக்குத் தரப்படுகிற ஊதியம் 146 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது.

காவல் படை சேம நல நிதி என்பது ஈட்டுத் தொகையாக அரசு சார்பில் வழங்கப்பட்டதை மாற்றி 1971-ல் சேம நல நிதிக்கு அரசின் சார்பில் 1 இலட்ச ரூபாயும் 1972-ம் ஆண்டு 1½ இலட்ச ரூபாயும் வழங்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்வேன். இதனால் 1967-ம் ஆண்டு இந்த சேம நல நிதியின் சார்பாக நிதியுதவி பெற்ற மாணவர்களுடைய எண்ணிக்கை 182 ஆக இருந்ததற்கு மாறாக 1972-ல் 512 ஆக உயர்ந்திருக்கிறது என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள முடியும்.

காவலர்களுக்கும், படைகலன் தாங்கிய காவலர்களுக்கும் (எஸ்.ஏ.பி.) இடையே இருந்த ஈட்டு விடுப்பு ஊதியத்திலிருந்த மாறுபாடுகள் களையப்பட்டு விட்டன. இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் (D.I.G. services and Co-ordination) டி.ஐ.ஜி பணிகள் என்ற பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குற்றங்கள், குற்றவாளிகள் பற்றிய விவரங்கள், இவைகளை இயந்திரங்களின் மூலம், கம்ப்யூட்டர் மூலம் கணக்கு எடுக்கும் முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது, இந்தப் பரிந்துரை அடிப்படையில், இதன் மூலம் பழைய குற்றவாளிகள் கைரேகை, அங்க அடையாளங்கள், குற்ற விவரங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு பிரிதோர் குற்றம் நடக்கிற நேரத்தில் பழைய விவரங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இந்த இயந்திரம் பெரிதும் பயன்படுகிறது. இதன்படி 1963 முதல் 1973ஆம் ஆண்டுவரை நடைபெற்றுள்ள 5 இலட்சம் குற்றங்களையும், 3 இலட்சம் குற்றவாளிகள் பற்றிய விவரங்களையும் 73 ஜூலைக்குள் கணக்கீடு செய்து வைக்கப்படும். இந்தியாவிலேயே தமிழ்நாடு காவல் துறையில்தான் இந்த முறையை முதன் முதலாக மேற்கொண்டிருக்கிறோம் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள முடியும். இந்தப் பரிந்துரைகளும், இதன் தொடர்பான ஏனைய பரிந்துரைகளும் நிறைவேற்றப்பட ஒரு

கோடியே அறுபத்தெட்டு இலட்சம் ரூபாய் செலவாகிறது. மேலும் இப்போது அமல் நடத்தப்படுகிற 27 பரிந்துரைகளுக்கான விவரங்களை நான் சொல்லியாக வேண்டும்.

அவர்கள் தாலாட்டுப் பாட்டுப் பாடியதற்காக இவைகளை நான் விவரமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர்கள், காவலர், முதல் நிலை, இரண்டாம் நிலை, ஆகியோருக்குப் பயிற்சி காலத்தை மாற்றி புதிய திட்டப்படி பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காவல் துறையினரில் 80 சதவீதம் பேருக்கு வீட்டு வசதி அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தஞ்சை, கோவை காவல் மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. காவல் வட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. புலனாய்வு, நீதிமன்றப் பணி, ரோந்து வருதல் போன்ற முக்கியப் பணிகளுக்கு முதல் நிலைக் காவலர்கள் என்ற (First Grade Constables) புதிய பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளதில் 3 ஆயிரம் பேர் முதல் நிலைக் காவலர்களாகப் பயன் பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கண்ட்ரோல் ரூம் ஏற்படுத்துவதற்கான முயற்சி, ஒவ்வொரு மாவட்டத்திலும் கைவிரல் ரேகைப் பிரிவு, நிழல் படப் பிரிவு ஏற்படுத்துதல், காவல் வானொலிப் பிரிவில் உள்ள அதிகப்படியான பணியாளர்களை நியமித்தல், கணக்கீடு நிலையத்தில் அதிகப்படியான பணியாளர்களை நியமித்தல், சம்பளப் பட்டியல் தயாரிக்க பிராட்மா (Bradma) முறையை கொண்டு வருதல், வாகன வண்டிகளை ஏழாண்டுகளில் அதிகரித்தல், காவல் நிலையங்களை மாவட்டத் தலைமை நகரங்களோடும் மாநிலத் தலைமையிடத்தோடும் இணைப்பதற்கு ரேடியோ சாதனங்கள், டெலிபிரிண்டர்கள், உருவ நிழல் ஊடனுப்பி ஆகியவைகளை அமைத்தல் - இவையும் இவைபோன்ற மொத்தம் 27 பரிந்துரைகளும் நிறைவேற்ற 3 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப் பட்டுள்ளது.

அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ள 122 பரிந்துரைகளை அமல் நடத்தினால் தொடராச் செலவு 6 கோடியே 10 இலட்சமும், ஆண்டுதோறும் ஆகிற செலவு 2 கோடியே 81 இலட்சமும் அதிகமாகும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன்.

1967-ல் 34,964 காவல்துறை ஆட்படையின் எண்ணிக்கையாக இருந்தது. 1972-73ல் 43,364 ஆக அது உயர்ந்துள்ளது. இன்னும் ஐந்தாண்டுகளில் இந்த விகிதாசாரத்தில் அது 46,000 ஆக அதிகரிக்கக் கூடும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன்.

குற்றப் புலனாய்வுகளைக் கவனிக்க சப்-இன்ஸ்பெக்டர் களுக்கும் இன்ஸ்பெக்டர்களுக்கும் இடையே துணை இன்ஸ்பெக்டர் (டெபுடி இன்ஸ்பெக்டர்) என்ற புதிய பதவியும் விரைவில் ஏற்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

இன்று காலையில் பேசிய உறுப்பினர்களில் சிலர் இவர்களுக்கு சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் இவை எல்லாம் வழங்க வேண்டுமென்பதை வலியுறுத்திப் பேசினார்கள். 1970-ல் சட்டப் பேரவையிலே கிராமப்புறக் காவல் நிலையங்களுக்குப் படிப்படியாக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும் என்று நான் அறிவித்ததற்கு ஏற்ப 1971-ல் 100 மோட்டார் சைக்கிள்களும், 1972-73-ல் 43 மோட்டார் சைக்கிள்களும், 1973-74-ல் 100 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்படும் என்ற நிலைமையும் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வேன். 143 மோட்டார் சைக்கிள்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டாகிவிட்டன.

அதே போல் கிராமப்புறக் காவல் நிலையங்களுக்கு சைக்கிள்கள் வாங்கக் கடன் தொகை - உதவித் தொகை (Loan-cum-subsidy scheme) என்ற அடிப்படையில் 5,000 சைக்கிள்கள் வாங்க அனுமதிக்கப்பட்டு இதுவரை 2,390 சைக்கிள்கள் வாங்கிக் காவலர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்வேன்.

மாநிலத்திலுள்ள 251 காவல் வட்டங்களில் 200 வட்டங்களுக்கு வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, 1970-ல் 88 வாகனங்கள் இருந்தன. 1971-ல் 44 வாகனங்களும், 1972-ல் 68 வாகனங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

மாநிலத்திலுள்ள 820 காவல் நிலையங்களில் இதுவரை 450 காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து தரப் பட்டிருக்கிறது. 1972-73-ல் 166 காவல் நிலையங்களுக்குத்

தொலைபேசி வைக்க 10-1-73 அன்று ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. 120 காவல் நிலையங்களுக்குக் கம்பியில்லாத் தந்தி இணைப்புக் கொடுக்க 24-12-71-ல் உத்தரவு தரப்பட்டு இணைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன. 1972-73-ல் 270 காவல் நிலையங்கள் கம்பியில்லாத் தந்தி மூலம் இணைக்கப்பட்டுச் செயல்பட விரைவில் உத்தரவு வழங்கப்படும்.

காவல்துறை அதிகாரிகளை எல்லாம், திறமையாகப் பணி யாற்றியவர்களை எல்லாம் நாம் பாராட்ட வேண்டும் - கவுரவிக்க வேண்டும் என்ற கருத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்காகத்தான் வீரச் செயல் புரிந்தவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் பல ஆண்டுக்காலமாக நற்பணியாற்றியவர் களுக்குத் தமிழக அரசின் புதிய திட்டமாக முதலமைச்சர் பதக்கம் என்ற பெயரால் பொற்கிழி அளித்தல், பொற் பதக்கம் வழங்குதல் என்ற புதிய ஏற்பாட்டைச் செய்து ஒவ்வொரு ஆண்டும் அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாள் முதலமைச்சர் பதக்கம், அந்த விருது பெறுகிறவர்களுக்கு விழா நடத்தி வழங்கப்படும் என்று அறிவித்ததற்கு ஏற்ப வழங்கப்பட்டு வருகிறது.

வீரச் செயலுக்கான தங்கப் பதக்கமும் ரூபாய் மூவாயிரமும் தரப்பட்டிருக்கிறது.

கடமையுணர்வோடு பணியாற்றியமைக்காக காவலர் களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் ரூபாய் ஆயிரமும், பதக்கமும் தரப்படுகிறது. சப்-இன்ஸ்பெக்டர் நிலையில் உள்ளவர் களுக்குப் பதக்கமும் ரூபாய் இரண்டாயிரமும் வழங்கப் பட்டிருக்கிறது. டி.எஸ்.பி. நிலையில் உள்ளவர்களுக்குப் பதக்கமும் ரூபாய் மூவாயிரமும் வழங்கப்படுகிறது. இவர்களில் தீயணைப்புப் படையினரும் சேருகிறார்கள்.

1969-ல் வீரச் செயலுக்கான பதக்கம் இரண்டும், தலை சிறந்த பணிக்கான பதக்கம் இருபதும் வழங்கப்பட்டிருக்கின்றன.

1970-ல் வீரச் செயலுக்கான பதக்கம் நான்கும், தலைசிறந்த பணிக்கான பதக்கம் இருபதும் வழங்கப்பட்டிருக்கின்றன. 1971-ல் வீரச் செயலுக்கான பதக்கம் ஐந்தும், தலைசிறந்த பணிக்கான

பதக்கம் இருபத்து மூன்றும், வழங்கப்பட்டிருக்கின்றன. 1972-ல் வீரச் செயலுக்கான பதக்கம் மூன்றும் தலைசிறந்த பணிக்கான பதக்கம் இருபத்திரண்டும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பதக்கம் அளிக்கும் விழா சென்னையிலேயே தொடர்ந்து நடைபெறுவது என்று இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரிலும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இங்கு அவர்களுடைய கட்டாய விடுப்பு ஊதியம் அதிகப் படுத்தப்பட வேண்டுமென்று சிலர் பேசினார்கள். ஏற்கெனவே காவல் துறையினருக்கும் தலைமைக் காவலருக்கும் வாரத்தில் ஒரு நாள் கட்டாய விடுப்பு அளிக்க வேண்டுமென்றும், ஆனால் அந்த நாளில் ஏதோ பொதுப்பணியின் காரணமாக அவசரத் தேவையின் காரணமாக அவர்கள் அந்த விடுப்பினை எடுத்துக்கொள்ள முடியாமல் - அவர்களுக்கு விடுப்பு வழங்கப்படாமல் - பணியாற்ற அழைக்கப்படுவார்களானால், அந்த ஒரு நாளைக்கு அவர்களுக்கு ஒரு ரூபாய் ஊதியம் தரப்பட்டது. இப்போது அந்த ஊதியம் இரண்டு ரூபாயாக உயர்த்தப்பட்டு இரண்டு நாட்களுக்குமுன் அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஆகும் அதிகச் செலவு சுமார் ரூ. 2½ இலட்சமாகும். இதனால் ஏறத்தாழ 10,000 காவலர்கள் பயனடைவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணி புரிகிற நேரத்தில் - நண்பர் வகாப் அவர்கள் காலையிலே பேசும்போது எடுத்துக் காட்டியதுபோல், பல காவலர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். அங்கஹீனர் களாக ஆகிறார்கள், உயிரிழப்புக்கு ஆளாகிறார்கள். அப்படிப்பட்ட வர்களுடைய குடும்பங்களை நிர்க்கதியாக விட்டுவிடாமல் அந்தக் காவலர்களுடைய குடும்பங்களை ஓரளவுக்கு மனிதாபிமான உணர்ச்சியோடு நோக்குகின்ற பொறுப்பினையும் இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் 1969-ம் ஆண்டு சனவரி 21-ம் நாள் சேலம் மாவட்டத்தை சேர்ந்த பரமத்தி

என்ற ஊரின் காவலர் மாரிமுத்து என்பவர் ஒரு முரடனைப் பிடிக்கப் போகும்போது குத்திக் கொல்லப்பட்டார். அவருடைய மனைவிக்கு முதலமைச்சர் பதக்கமும்; 3,000 ரூபாயும் அண்ணா பிறந்த நாள் அன்று வழங்கப்பட்டது. அது தவிர சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாயும் வழங்கப்பட்டது.

4-1-69 அன்று ஒரு குற்றவாளியைப் பிடிக்கும்போது ஏற்பட்ட மோதலில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த காவலர் ராமசாமி கத்தியால் குத்தப்பட்டு இறந்தார். அவருடைய மனைவிக்கு 1970-ல் குடியரசுத் தலைவருடைய வீரப் பதக்கம் வழங்கப்பட்டது. நம்முடைய சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாய் வழங்கப்பட்டது.

5-10-70-ல் குற்றவாளியைப் பிடிக்கச் சென்றபோது குத்துண்டு இறந்த வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பழனிசாமி என்பவரின் மனைவிக்குக் குடியரசுத் தலைவருடைய வீரப் பதக்கம் வழங்கப்பட்டது. நமது சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாய் தரப்பட்டது.

சிறப்பு ஆயுதப் படையைச் சேர்ந்த துளசிமணி என்பவர் அஸ்ஸாம் மாநிலத்தில் எல்லை காக்கச் சென்று அங்க பணியாற்றிக் கொண்டிருக்கும் போது மாரடைப்பால் இறந்தார். அவருடைய குடும்பத்திற்கு நமது சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாய் வழங்கப்பட்டது.

5-2-1972-ல் விவசாயப் போராட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் ராமசாமி எதிர்பாராத விதமாக மரணம் அடைந்ததால் அவருடைய குடும்பத்திற்கு சேமநல நிதியிலிருந்து 4,000 ரூபாய் வழங்கப்பட்டது. முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்தும் 5,000 ரூபாய் வழங்கப்பட்டது.

22-11-1972-ல் திருநெல்வேலியில் தலைமைக் காவலர் சங்கரபாண்டின் என்பவர் வன்முறைக் கூட்டத்தால் தாக்கப்பட்டு எதிர் பாராத விதமாகத் துப்பாக்கிக் குண்டிற்குப் பலியாகி மரண மடைந்தார். அவருடைய குடும்பத்தினருக்கு சேம நல நிதியி லிருந்து 4,000 ரூபாய் வழங்கப்பட்டது.

ஒரு சோகச் சம்பவம் : 26-1-1970 அன்று குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொண்ட ஹவில்தார், சங்கரபாண்டியன் கொஞ்சதூரம் நடந்து சென்றபோது நெஞ்சுவலி ஏற்பட்டது ஆனாலும் கடமையிலிருந்து தவறக் கூடாது என்பதற்காக அவருடைய நெஞ்சுவலியைத் தாங்கிக்கொண்டு அணிவகுப்பு முழுவதையும் முடித்துக்கொண்டுதான் நோயைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று மிகுந்த சிரமத்திற்கிடையே நடந்து சென்று அணி வகுப்பு முடிந்த இடத்திலேயே சுருண்டு வீழ்ந்து மாரடைப்பால் இறந்து போனார். அவருடைய குடும்பத்திற்கு சேம நல நிதியிலிருந்து 1,500 ரூபாயும், முதலமைச்சர் நிதியிலிருந்து 3,000 ரூபாயும் வழங்கப்பட்டது.

நான் இவற்றை எல்லாம் சொல்லக் காரணம் காவலர்களும், காவல் துறை அதிகாரிகளும் நம்மவர்கள்தான். வேறு ஒரு மாற்று உடையை, காக்கி உடையை, நம்மிலே இருந்து வேறுபட்ட உடையை அணிந்து கொண்டிருக்கும் காரணத்தாலேயே நம்முடைய வெறுப்புக்கு ஆளாகின்ற சில உருவங்கள் என்ற அளவில் அவர்களை எண்ணிடக் கூடாது; அவர்களும் இந்தச் சமுதாயத்தில் ஓர் அங்கம். இந்தச் சமுதாயம் வளர, இந்தச் சமுதாயம் நல்ல ஒளி பெற, இந்தச் சமுதாயத்தில் குற்றங்கள் குறைந்து நல்ல தூய்மை ஏற்பட அனைவரும் சேர்ந்து ஆற்றுகின்ற பணியில் காவலர்களுடைய பணியும் இணைந்திருக்கிறது என்ற காரணத்தால்தான் மனிதாபிமான உணர்ச்சியோடு இந்த அரசு அவர்களுடைய நல்வாழ்வில் நிறைந்த அக்கறை காட்டி வருகிறது என்பதற்கு இவைகளையெல்லாம் நான் எடுத்துச் சொன்னேன்.

ஆராரோ பாடியதோடு நிற்கவில்லை; யார் யாரோ செய்யாததை எல்லாம் இன்றைக்கு நாங்கள் செய்துகாட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இந்தக் குறிப்புகளை எல்லாம் நான் தந்தேன்.

அவர்கள் எவ்வளவு அளப்பரிய பணிகளை எல்லாம், தீரச் செயல்களை எல்லாம் ஆற்றி வருகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர்களேகூட உறுப்பினர்களேகூடச் சொன்னார்கள். எந்த எதிர்க்கட்சியின் தலைவராவது இந்தத் துறை அல்லது இந்தத்

துறையினுடைய நிர்வாகம் மோசமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்களா என்று உற்றுக் கவனித்தேன். யாரும் சொல்லவில்லை. டாக்டர் ஹாண்டே பேசினாலும் சரி, அம்மையார் அனந்தநாயகி பேசினாலும் சரி, நண்பர் மதி பேசினாலும் சரி, திரு. பொன்னப்ப நாடார் பேசினாலும் சரி, திரு. கே.டி.கே. தங்கமணி பேசினாலும் சரி, கட்சியில் உள்ளவர்கள் யார்?

ஒரு சோகச் சம்பவம் : 26-1-1970 அன்று குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொண்ட ஹவில்தார், சங்கரபாண்டியன் கொஞ்சதூரம் நடந்து சென்றபோது நெஞ்சுவலி ஏற்பட்டது. ஆனாலும் கடமையிலிருந்து தவறக் கூடாது என்பதற்காக அவருடைய நெஞ்சுவலியைத் தாங்கிக்கொண்டு அணிவகுப்பு பேசினாலும் சரி, இந்தத் துறையைச் சிலாகித்தே பேசினார்கள். காரணம் அவரவர்களுக்குள்ள ஆசை.

நாம் விரைவிலே ஆட்சிப்பீடத்திற்கு வந்துவிடக் கூடும், ஆகவே இப்போதே அவர்களைப் பாராட்டி வைத்துக் கொள்ளவேண்டுமென்று அந்த ஆசை அவர்கள் உள்ளத்தில் இழையோடுவதை அது காட்டியது. இதையெல்லாம் நீங்கள் சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டாம். (ஆரவாரம்). சீரியஸாக என்றால் ஆட்சிக்கு வந்துவிடுவோமோ என்று சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்பதற்காகச் சொன்னேன்.

நான் இந்த ஆய்வுரையில் சிலவற்றைக் குறிப்பிட்டிருக் கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் ஒருவர் அரசாங்க அதிகாரிபோல் நடித்துப் பயங்கரமான மோசடியில் ஈடுபட்டதைக் காவல் துறையினர் கண்டுபிடித்து இருப்பது சாதாரண விவகாரம் அல்ல.

அதைப்போல மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் என்பவர் இரவு நேரங்களில் சென்னை நகரத்தில் ஜன்னல் வழியாக கைகளை நுழைத்தும், யாருமில்லாத நேரங்களில் உள்ளே நுழைந்தும் அவர் கிட்டத்தட்ட 203 குற்றங்களில் ஈடுபட்டவர், அவர் பிடிபட்டார். அவரிடமிருந்து ரூ. 85,000 மதிப்புமிக்க விலை உயர்ந்த தங்க நகைகள், வைர நகைகள், கடிகாரங்கள், டிரான்ஸிஸ்டர்ஸ், சைக்கிள்கள் முதலியன கைப்பற்றப்பட்டு அவருக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப் பட்டிருக்கிறது.

ராகவேந்திர ராவ் என்பவர் திருமணக் கூட்டத்தில் தானும் ஒருவர் போல், ஒரு விருந்தினர்போல் வருவார். இப்போதுகூட நாம் ஒருவருக்கு கல்யாண அழைப்பிதழ் அனுப்பினால் அது அவருக்குப் போய் சேருவதில்லை. வேறு யாரோ வாங்கிக் கொள்கிறார்கள். அப்படி வாங்கிக்கொண்டு அவர் விருந்துக்கு வருவார். நாம் அவருக்கு அழைப்பிதழ் அனுப்பியிருப்போம் என்று எண்ணிக்கொண்டு நாம் அவரை வரவேற்போம். மணமகன் வீட்டில் உள்ளவர்கள் அவர் மணப்பெண் வீட்டைச் சேர்ந்தவர் என்று கருதிக் கொள்வார்கள். மணப்பெண் வீட்டைச் சேர்ந்தவர்கள் அவர் மணமகன் வீட்டைச் சேர்ந்தவர் என்று கருதிக்கொண்டு வரவேற்பார்கள். அப்படி விருந்தாளிபோல் இந்த ராகவேந்திர ராவ் திருமண வீடுகளில் விருந்தினர்போல் நுழைந்து நடத்திய திருட்டுகளில் ரூ. 20,000 மதிப்புள்ள நகைகள் அவரிடமிருந்து மீட்கப்பட்டிருக்கின்றன. அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

1971 டிசம்பரில் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் 8 பேர்கள் வில்லிவாக்கத்தில் வந்து தங்கினார்கள். அவர்கள் ஆனந்த ராவ் என்பவர் தலைமையில் புகைவண்டிகளில் கொள்ளை நடத்தினார்கள். வழிப்பறிக் கொள்ளைகள் நடத்தினார்கள். இவர்களும் காவல் துறையினருடைய திறமையினால் பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

செங்கற்பட்டிலும், சென்னையிலும் கன்னக்களவுகளில் ஈடுபட்ட டெல்லிப் பட்டணத்தைச் சேர்ந்த பவேரியா, ஜான்ஸி ஆகிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டதும் ஓர் சாதாரண விவகாரம் அல்ல.

ஆந்திராவைச் சேர்ந்த கள்ள நோட்டு அச்சடிக்கும் கூட்டம் ஒன்று அண்மையில் கண்டிபிடிக்கப்பட்டது. 1970-ம் ஆண்டு நவம்பர் முதல் 1972 நவம்பர் வரையில் - எதிர்க் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினார்களே அந்தப் பயங்கரப் படுகொலைகள், 7 படுகொலைகள், 4 திருட்டுக்கள் நடத்திய எட்டுக் கொடியவர்களை நம் போலீஸ் இலாகா கைது செய்தது பாராட்டுக்குரிய அம்சமாகும். அவர்களை நான் தனிப்பட்ட முறையில் பாராட்டியிருக்கிறேன் என்றாலும் இந்த மாமன்றத்தின்

சார்பில் அந்தக் காவல் துறை அதிகாரிகள் அனைவரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் (ஆரவாரம்). அந்தக் கூட்டத்தினர் நடத்தியது கொலை மாத்திரமல்ல, களவும், ரூ. 5½ இலட்சம் வரையில் கொள்ளையடித்திருக்கிறார்கள். இதுவரையில் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளும் ரொக்கப்பணம் கொஞ்சமும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. புலனாய்வுத் துறை தொடர்ந்து தீவிரமாக தன்னுடைய விசாரணையை மேற் கொண்டிருக்கிறது.

குற்றங்கள், கடந்த காலத்தில் முதல் அமைச்சர் அவர்கள் முன்பெல்லாம் எடுத்துக் காட்டியதைப்போல் குறைந்து விடவில்லை என்றும் இது முதலமைச்சர் அவர்களுடைய திறமைக்கு ஒரு சான்று என்றும் நம் நண்பர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் 1971, 1972 இந்த இரண்டு ஆண்டு களுக்கும் இந்த ஆய்வுத்துறையில் இருப்பதைப் பார்த்து 71-ல் 25,830 குற்றங்கள், 72-ல் 26,080 குற்றங்கள் என்பதைச் சொல்லி உயர்ந்திருக்கிறது என்றும் சொன்னார்கள். நான் இந்த ஆயிரம் உயர்வு அல்ல என்று சொல்லமாட்டேன். ஆனால் 1966-ல் 28,477-ல் இருந்து 1967-ல் 28,787ஆக இருந்து இப்போது 26,080 ஆகக் குறைந்திருக்கிறது. அது மேலும் குறைய வேண்டும்.

அதே நேரத்தில் இதிலே இருசார்புடைய கருத்துக்கள் இருக்கின்றன. குற்றங்கள் குறைந்திருப்பதுபற்றி ஆய்வுரையில் சொல்லும்போது நிறைய குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. நீங்கள் கண்டுபிடிக்காமல் விட்டு விட்டீர்களா என்ற கேள்வியும் எழலாம். அல்லது நிறையக் குற்றங்கள் நடக்கும் அளவிற்குக் காவல் துறை சரியாகப் பணியாற்றவில்லையா என்கிற கேள்வியும் எழலாம்.

ஆனால் இன்னும் குற்றங்கள் குறைவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்காகத்தான் இன்னும் நவீன வசதிகளையெல்லாம் காவல் துறைக்குச் செய்துகொடுக்க இந்த அரசு தக்க முயற்சிகளையெல்லாம் எடுத்து வருகிறது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கள்ள நோட்டு வழக்குச் சம்பந்தமாகக்கூட மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். நாம்

1971-72-ம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த அந்த வழக்குகள் எதுவும் அப்படியே நின்றுவிடவில்லை. மேலும் முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திருப்பூரில் நடந்த ஒன்றைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். திருப்பூரில் கள்ள நோட்டு வழக்கு விசாரிப்பதற்காகத் தனிக் கோர்ட் நியமிக்கும்படி உயர்நீதிமன்றத்தைப் போலீஸ் துறையினர் கேட்டார்கள். தனிக் கோர்ட் ஒரு மாதத்திற்கு முன்பு அமைக்கப் பட்டுள்ளது. ஆகவேதான் இதுவரையில் அந்த விசாரணை எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறது.

சேலம் 1970-ம் ஆண்டு கள்ள நோட்டு வழக்கு கோர்ட்டில் விசாரணையில் உள்ளது. திருப்பூர் வழக்கோடு இந்த வழக்குத் தொடர்புடையது. அதுவும் விசாரணை நடைபெற்று வருகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட கள்ள நோட்டு வழக்குப்பற்றி நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விட்டது, 26-3-1973-ல் இந்த வழக்கு விசாரணைக்கு வர இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராயப்பேட்டை கள்ள நோட்டு வழக்கு. இதில் நாற்பது குற்றவாளிகள் மொத்தம் ஈடுபட்டிருக்கிறார்கள். இதில் கேரளாவைச் சேர்ந்தவர்கள் 19 பேர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 21 பேர்கள் இருக்கிறார்கள். இதில் முக்கிய குற்றமாகிய அச்சடிக்கும் குற்றம் கேரளாவில் நடந்தது. ஆகவே நமது போலீஸார் இங்கேயே வழக்கு நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள், ஆனால் கேரளாவைச் சேர்ந்தவர்கள் இங்கு நடத்தக் கூடாது, கேரளாவில் வழக்கை நடத்தவேண்டுமென்று கேரளா கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கி விட்டார்கள். இப்போதெல்லாம் ஒரு பழக்கம், நம் மாநிலத்தில் வழக்கு நடத்தக் கூடாது, வேறு மாநிலத்தில் நடத்த வேண்டும் அல்லது வேறு எங்கேயாவது நடத்த வேண்டும் என்பது. இதை இந்தக் கள்ள நோட்டுக்காரர்கள் எல்லாம் பின்பற்றி கேரளா கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார்கள். பின்னர் நம் போலீஸ் வாதாடி அந்தத் தடையை ரத்து செய்தார்கள்.

கோர்ட்டிலிருந்து அதிகாரப் பூர்வமான நடவடிக்கைக் குறிப்புகள் வந்ததும் வழக்கை இங்கு தொடர்ந்து நடத்துவதற்கு இருக்கிறது என்று டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

கோவை 'பி' ஸீரீஸ் டாலர் வழக்கு. இது கோவை கீழ்க் கோர்ட்டில் விசாரணை முடிந்தபின், செஷன்ஸ் கோர்ட்டுக்கு அனுப்பி இரண்டு வாரங்கள் ஆகின்றன. கோவை 'எல்' ஸீரீஸ் டாலர் வழக்கு கோவை நீதிமன்றத்தின் கீழ்க் கோர்ட்டில் விசாரணையில் இருக்கிறது.

திருவண்ணாமலை வழக்கு. இதில் நோட்டு அச்சடித்தவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள், எல்லாம் அங்கிருந்துதான்! மொத்தம் 11 குற்றவாளிகள். இதில் மூன்று பேர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள். இராயப்பேட்டை வழக்கைப்போலவே இதிலும் கேரளாவைச் சேர்ந்தவர்கள் வழக்கைத் தமிழ்நாட்டில் நடத்தக்கூடாது என்ற ஸ்டே வாங்கினார்கள். தடையை விலக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

இவை எல்லாம் கிடப்பில் போட்டு விடப்படவில்லை. அதற்கான முயற்சிகளை எல்லாம் அந்த அந்த நீதிமன்றங்களில் எடுக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன என்பதை நண்பர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

அதுமாத்திரமல்ல. இந்த வழக்குகளைப் புலனாய்வு செய்து வழக்குத் தொடர நாம் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு ஒரு டி.எஸ்.பி. தலைமையில் மூன்று இன்ஸ்பெக்டர்கள், ஆறு சப்-இன்ஸ்பெக்டர்கள், நான்கு தலைமைக்காவலர்கள், ஆறு காவலர்கள் அடங்கிய தனிப் பிரிவு ஒன்றைக் குற்றப் புலனாய்வுத் துறையில் இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதிலுள்ள பெரிய அதிகாரிகள் எல்லாம் இந்த நோட்டுக்களை எப்படி அச்சடிக்கிறார்கள், எப்படி எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அங்கு நாசிக்குக்கு அனுப்பப் பட்டு அங்குள்ள அரசாங்க நாணய அச்சகத்திற்குச் சென்று இதுபற்றிய நுணுக்கங்களை எல்லாம் தெரிந்து அந்த பயிற்சிகளைப் பெற்று வந்திருக்கிறார்கள்.

அதாவது கண்டுபிடிக்கிற பயிற்சிகளைப் பெற்று வந்திருக்கிறார்கள். இந்தப் பிரிவு நல்ல முறையில் பணியாற்று வதனால் கள்ளநோட்டு அச்சிடுபவர்கள் தொகை வர வர நிச்சயமாகக் குறையும் என்ற நம்பிக்கையை நாமெல்லாம் பெறலாம்.

அதேபோல் சிலை திருட்டுக்கூட - மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் சொன்னார்கள் - பெரிய சிலை திருட்டு ஒன்று 1967ஆம் ஆண்டுவாக்கில் என்று கருதுகிறேன், சிவபுரம், தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்று கிட்டத்தட்ட 75 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சிலையை, திலகர் என்பவர், அவர் உறவினர்கள், அவர் தகப்பனார், அங்குள்ள ஸ்தபதியார் எல்லோரும் சேர்ந்து 75 லட்சம் பெறுமானமுள்ள அந்தச் சிலை அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டு நம் ஐ.ஜி. அவர்கள் அகில உலக இன்டர்போலில் அதைப்பற்றி விவாதித்து அமெரிக்காவில் உள்ள அந்த சிலையைக் கொண்டுவருவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்களும் அதற்கான உதவிகளைச் செய்வதாகச் சொல்லி டி. ஐ. ஜி. அவர்கள் அமெரிக்கவுக்குச் சென்று எந்தவகையில் வழக்குகள் போடலாம் என்பதைப்பற்றி அதற்கான முயற்சிகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். சிவில் வழக்காக இருந்தால் உடனடியாக கேஸ் போட்டுவிட முடியும். கிரிமினல் வழக்குப் போடுவதற்கு அங்கு குற்றஞ்சாட்டி நிரூபிக்கும் அளவிற்கு அமெரிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு நமக்குத் தேவையாக இருக்கிறது.

மிக முக்கியமாக இந்த மானியத்திலே பேசிய எதிர்க்கட்சி யிலுள்ள உறுப்பினர்கள், தலைவர்கள் பலர் துப்பாக்கிப் பிரயோகங்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகங்களில் உள்ளபடியே நான், அப்போது எவ்வளவு நடந்தது, இப்போது எவ்வளவு நடக்கிறது, நேற்று எவ்வளவு, இன்றைக்கு எவ்வளவு என்ற கணக்குகளைக் காட்டி, அன்று நடக்கவில்லையா என்று கேட்டு நான் பிரச்சினையைத் திசை திருப்ப விரும்பவில்லை. ஆனாலும் அந்தக் கணக்கு விவரங்களையெல்லாம் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது

அவசியம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. ஏனென்றால், இதுவரையில் தமிழ்நாடு ஆட்சிப்பீடத்தில் உட்காராத டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்பதில் நியாயம் இருக்கலாம். திரு. தங்கமணி கேட்பதில் நியாயம் இருக்கலாம். ஆளும் காங்கிரசில் இருக்கும் சிலபேர் கேட்பதில்கூட ஒரு நியாயம் இருக்கலாம் - (சிரிப்பு). ஆனால் காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் - இவ்வளவு துப்பாக்கி பிரயோகங்கள் நடக்கலாமா என்று கேட்கிற நேரத்தில் நாம் சிலவற்றை ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. 1962-லிருந்து 66 வரை 5 ஆண்டுகளில் 60 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றன. இறந்தவர்கள் 64 பேர். 1967-லிருந்து 72 வரை ஆறாண்டுகளில் 46 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்று இருக்கின்றன. இறந்தவர்கள் 45 பேர். நான் அதைவிட இது குறைவு என்று வாதிட விரும்பவில்லை. ஆனால் இந்த அரசின் மனோ நிலை இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கிற நேரத்திலெல்லாம் வேதனைக் கண்ணீர் வடித்து இருக்கிறது. ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எதற்கெடுத்தாலும் துப்பாக்கிதானா என்று நண்பர் மதி அவர்கள் வேகமாகக் கேட்டார்கள். அவர்கள் மிக வேகமாகப் பேசினார்கள். எரிமலையின்மீது நின்றுகொண்டு நீரோ மன்னன் வீணை வாசிப்பதுபோல நான் வாசிக்கிறேன் என்று எல்லாம் சொன்னார்கள். நான் சரித்திரத்தை மறந்துவிட்டேன். நீரோ மன்னன் எரிமலைமீது நின்று பிடில் வாசித்தானா அல்லது ஏழடுக்கு மாளிகையின்மீது நின்று கொண்டு பிடில் வாசித்தானா அந்த விவரமெல்லாம் எனக்குத் தெரியாது. (சிரிப்பு).

ஆனால் போராட்டங்கள் எந்த அடிப்படையில் தொடங்கப் படுகின்றன. டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 பேர் செத்து இருக்கிறார்கள். 12 பேர் செத்திருக்கிறார்கள் என்றால் சுட்டவர்கள் போலீஸ்காரர்களாக இருந்தாலும் அதற்கு மறைமுகமாக இந்த கருணாநிதிதான், முதலமைச்சர் கருணாநிதிதான் காரணம் என்று குற்றம் சாட்டுவேன் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அவ்வளவு அழுத்தந்திருத்தமான வார்த்தைகள் போடாவிட்டால், இன்றைக்கு அவர் பேச்சுக்கு ஒரு கிளைமாக்ஸ்

கிடைத்திருக்காது. ஆகவே, அவ்வளவு அழுத்தந்திருத்தமாக வார்த்தைகள் போட்டுச் சொன்னார். (சிரிப்பு). நான் கேட்கிறேன் அதை அப்படியே மாற்றலாம். இந்தப் போராட்டத்திற்கு எல்லாம் காரணமாக இருந்தவர்கள் தூண்டிவிட்டவர்கள்தான். அந்த 10 பேர் செத்ததற்கும் இவர்கள்தான் மறைமுகமாகக் காரணமாக இருந்தார்கள் என்று நான் கூற முடியாதா? (கரவொலி). ஏனென்றால் போராட்டத்திற்கான கோரிக்கைகளை நாம் ஆராய வேண்டும்.

விவசாயப் போராட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். 1968-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கை என்ன? எங்களுடைய நாட்டிற்கு இந்தி ஆதிக்கம் கூடாது. எங்கள் மொழிக்கு ஆபத்து வரக்கூடாது. தமிழைத் தாழ்த்திட இன்னொரு மொழிக்கு நாங்கள் இடந்தரமாட்டோம் என்று சூளுரைத்து இந்த நாட்டு இளைஞர் சமுதாயம், மாணவ சமுதாயம், கிளர்ந்தெழுந்தது. அவர்களுக்கு அனுசரணையாகத் தமிழ் சமுதாயமே கிளர்ந்து எழுந்து நின்றது. 1965-ம் ஆண்டிலே இந்தி எதிர்ப்புப் புரட்சியே நடைபெற்றது. அப்போது ஒரு வார்த்தை மத்திய அரசு "இந்தியை நாங்கள் கட்டாயமாகப் புகுத்த மாட்டோம், உங்களுடைய எண்ணத்தை மதிக்கிறோம்" என்று சொல்லியிருந்தால் 53 பேர் அந்தப் போராட்டத்திலே பிணமாகத் தேவையில்லை. ஆனால் விவசாயப் போராட்டத்தின் நிலைமை என்ன? நாம் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளைச் சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால் விவசாய வருமான வரியை அதிகப்படுத்தியதற்கு ஆதரவு தெரிவித்து, அதை எங்களுடைய கட்சி ஆதரிக்கிறது என்றுகூறி, இங்கே அதற்கு வாக்களித்து நிறைவேற்றுவதற்குக் காரணமாக இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் விவசாயப் போராட்டத்தின் பின்னால் நின்றது. ஆளும் காங்கிரஸ் கட்சியிலிருந்து, பிரதமராக இருக்கின்ற மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள், என்ன சொன்னார்கள், இந்தப் போராட்டத்திற்கு வைக்கப்பட்ட கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் அவர்கள் சொன்னார்கள். ஏனென்றால், இந்தியாவில் இருக்கும் எல்லா மாநிலங்களிலும் இருக்கும் மின்சார டாரிப்ரேட் (Tariff

rate) என்ன? நம்முடைய மாநிலத்திலுள்ள மின்சார டாரிப் ரேட் என்ன? அதையும் நாம் குறைப்பதாக ஒப்புக்கொண்ட பிறகும், கோரிக்கை களை நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்ட பிறகும் இங்கே போராட்டம் நடத்தினார்கள். பேச்சுவார்த்தைகளில் தீர்த்துக் கொள்ளலாம். 12 கோரிக்கைகளா, அதில் 10 கோரிக்கைகளைப் பற்றி இப்போது பேசலாம் என்கிற அளவுக்கு இறங்கிவந்த பிறகும் இங்கே போராட்டம் நடைபெற்றது. ஆனால் ஒரு வரியில் மொழிப் போராட்டத்தை நிறுத்தியிருக்க முடியும். ஒரு வார்த்தையில் அந்த மொழிப்போராட்டத்தை நிறுத்தியிருக்க முடியும். இது அப்படி அல்ல.

இந்தப் போராட்டம் நடைபெற்ற நேரத்தில் விவசாயிகள் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளான நேரத்தில் மதுரை மாநாட்டில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பேசினார். அதைத்தான் திண்டிவனம் உறுப்பினர் ராஜாராம்கூட ஞாபகப்படுத்தினார். எம்.ஜி.ஆர். சொன்னார் ‘‘சில இடங்களில் அராஜகம் நடைபெறுகிறது என்றால் அதை அடக்கும் பொறுப்பு போலீசாருடையது. போலீஸ் ஏன் சுட்டது? சுட்டது சரியா? என்று கேட்கிறார்கள். போலீசார் மக்களை வன்முறையாளர் களிடமிருந்து காப்பாற்றவும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் சுடவேண்டிய கட்டாய நிலைமைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள்” என்று ஆகஸ்ட் 6-ம் தேதிதான் நம்முடைய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரை மாநாட்டில் பேசினார்கள்.

அதுமாத்திரமல்ல. இன்று நம்முடைய திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் பேச்சிலே கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி இரண்டுமுறை சொன்னால் அ.தி.மு.க.வைப்பற்றி 20 முறை சொல்கிறார். அந்த அளவுக்கு அவர்கள் அந்தக் கட்சியின்மீது பற்றும், பாசமும் கொண்டிருக்கிறார்கள். நான் அதிலே குறுக்கிடுவதற்கு எந்த உரிமையும் பெற்றவன் அல்ல. ஆனால் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த மாநாட்டிலேயே மேலும் பேசினார். நான் இந்தப் பேச்சைப் பார்க்கும்போது அந்தப் பேச்சையும் பார்க்க வேண்டியவன். மதுரை மாநாட்டில் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னார்கள். “கம்யூனிஸ்ட்கள் இருக்கிறார்களே அவர்கள் நாட்டில் கலவரம் நடந்தால் முன்னுக்கு வருவதில்லை. ஏனென்றால், பின்னால் இருந்து கலவரங்களைத் தூண்டிவிட்டு

விஷமங்களைச் செய்வார்கள். அவர்கள் விஷமத்தனங்களுக்கு அப்பாவிகள் இறையாவார்கள்". ஆகஸ்ட் 6-ம் தேதி என்னுடைய அருமை நண்பர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதே மதுரை மாநாட்டில் எடுத்துக்கூறினார்கள். இந்தப் பேச்சில்தான் விவசாயப் போராட்டத்தைப்பற்றியும் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். குறிப்பிடும்பொழுது இவைகளை அங்கே எடுத்துச் சொன்னார்.

கொலைகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அரசியல் கொலைகள் கிட்டத்தட்ட 1970-லிருந்து 1972 வரையில் ஒரு கணக்கு எடுத்தால் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகும்கூட 1970-ல் நடந்த அரசியல் கொலைகள் மொத்தம் 7. அதிலே கொல்லப்பட்டவர்கள் தி.மு.க. 2, காங்கிரஸ் 2, மற்றவர்கள் 3. அரசியல் காரணங்களுக்காகக் கொல்லப்பட்டவர்கள் - 1971-ல், அரசியல் கொலைகள் 9. கொல்லப்பட்டவர்களில் தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் 3, காங்கிரஸ் 4,. 1972-ல் அரசியல் கொலைகள் 5, கொல்லப்பட்டவர்களில் தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் 3, பி.எஸ்.பி. 1, காங்கிரஸ் 1. வேறு ஏதோ மணி மற்றவர்களைப் பற்றிச் சொன்னார்கள்.

காலையில் அம்மையார் அவர்கள் கருப்பையா, ஆறுமுகம் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் போலீஸ் கஸ்டடியில் (Custody) இறந்துவிடவில்லை. 14-ம் தேதி கைது செய்யப்பட்ட கருப்பையா உடல் நோய் காரணமாக ஸ்டான்லி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, 17-ம் தேதி மரணம் அடைந்தார். அதேபோல், ஆறுமுகம் கைது செய்யப்பட்டு, மார்வலியின் காரணமாக பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, அந்த நோயின் காரணமாக இறந்தார் என்றுதான் எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது.

நான் தமிழகத்தில் இந்த 3 ஆண்டுகளில் 1970-72 வரை நடைபெற்றுள்ள அரசியல் கொலைகளைப் பற்றிச்சொன்னேன். அதே நேரத்தில் கேரள போலீஸ் அமைச்சர் அங்கே சட்டசபையில் கொடுத்த தகவல்படி, 1970 முதல் 1972 வரை கேரளாவில் 53 அரசியல் கொலைகள் நடைபெற்று இருக்கின்றன.

அதிலே கொல்லப்பட்டவர்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 17 பேர், காங்கிரஸ் 12 பேர், கேரள காங்கிரஸ் 5, சி.பி.ஐ. 4, முஸ்லீம் லீக் 3, ஆர்.எஸ்.பி. 2, ஆர்.எஸ்.எஸ். 1, இதரர்கள் 7. இது "இந்து" பத்திரிகையில் 21-10-1972 அன்று வந்திருக்கிறது. கேரள போலீஸ் அமைச்சர் சட்டசபையில் கொடுத்த தகவல் என்று செய்தியும் வந்திருக்கிறது. ஏதோ பொய் வழக்குப் போடுகிறோம். முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்கு ஏதாவது இடைஞ்சல் என்றால். . .

டாக்டர் எச்.வி. ஹாண்டே : அந்த அளவுக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் முன் கூட்டியே எச்சரிக்கை கொடுக்கிறோம். அந்த மாதிரி வரக்கூடாது, வன்முறைக்குச் செல்லக்கூடாது என்றும் சொல்கிறோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதைத்தான் நாம் அனைவரும் சேர்ந்து கோரஸ்ஸாகப் பாடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவர் சொன்னால் பிரயோசனம் இல்லை. எல்லோரும் சேர்ந்து வன்முறை தலை தூக்காது பார்த்துக் கொள்ளும் பெரும் பொறுப்பை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் தாக்கப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கொடுக்கப்படுகிற புகார் மீது எல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள். ஒரு உதாரணம் சொல்லுவேன்.

11-1-1973 அன்ற மதுரையில் சின்னாளப்பட்டியில் தி.மு.க. உறுப்பினர் ரமணி என்பவர் கொலை செய்யப்பட்டிருப்பதாக ஒரு புகார் கொடுக்கப்பட்டது. அந்தப் புகாரில் என்ன குறிப்பிடப்பட்டு இருந்தது என்றால் அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் ஏதோ விஷம் கொடுத்து அவர்களைக் கொன்று விட்டார்கள் என்பது போல் புகார் கொடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் அதை விசாரித்த போலீசார் அந்த புகார் சரியானது அல்ல என்று சொல்லி இருக்கிறார்கள். ரமணி செத்தது உண்மை. கொல்லப்பட்டது உண்மை. கொலையுண்டது உண்மை. ஆனால் அ.தி.மு.க.வினரால் கொல்லப்பட்டார் என்று புகார் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் புகார் உண்மை அல்ல..

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, அ.தி.மு.க என்கிறார்களே, க.தி.மு.க. தலைவர் பேசுகிறார்களா? சட்டமன்றத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றிருக்கிறதே தவிர, அ.தி.மு.க. என்றில்லை. இவர் என்ன க.தி.மு.க. தலைவரா என்று கேட்கிறேன். வெளியில் வேண்டுமானால் பேசட்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் எங்களுடைய கட்சியை தி.மு.க. என்று சொல்லுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் என்பதற்கு தி.மு.க. என்று சொல்லுகிறேன். அவர்களைச் சொல்லும்போது அ.தி.மு.க. என்கிறேன். எங்களுடைய கட்சியின் முழுப்பெயரை திராவிட முன்னேற்றக் கழகம் என்று குறிப்பிடும்போது, அவர்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று முழுப்பெயரைச் சொல்லுகிறேன். அண்ணா என்ற பெயரைச் சொல்ல எனக்கு என்ன வெட்கம்? அண்ணா அவர்களின் கொள்கையை அப்படியே ஏற்றுக் கொண்டு செயல்படுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு. கே. ஏ. மதியழகன் : அண்ணாவின் பெயரைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அண்ணாவின் பெயரைச் சாப்பிட்டால் பரவாயில்லை. அண்ணா பெயரால் சாப்பிடக் கூடாது.

திரு. கே. ஏ. மதியழகன் : நிரம்ப சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது போல் இதுபோன்ற வன்முறை செயல்கள் மூன்று ஆண்டு காலத்தில் இங்கே 21 அரசியல் கொலைகள்தான். கேரளத்தில் 53 அரசியல் கொலைகள் என்று நான் எடுத்துக்காட்டியதற்குக் காரணம், இந்த வன்முறைகள் எல்லா இடத்திலும். . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி குறிப்பிட்டுக் கொண்டிருந்த நிகழ்ச்சியின் விவரத்தைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : விஷம் கொடுத்து கொன்று விட்டார்கள் என்று செய்தி வந்தது. புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் போலீசார் புலன் விசாரித்து, புகார் சரியானதல்ல என்று கூறி, யார் யார் மீது புகார் கொடுக்கப் பட்டதோ, அ.தி.மு.க. கட்சியினர் மீது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார்கள். ரமணி செத்தது செத்ததுதான். அவர் தி.மு.க. உறுப்பினர். ஆனாலும், தி.மு.க. உறுப்பினர் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதாகப் புகார் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்காக, அந்தப் புகாரை அப்படியே எடுத்துக் கொண்டு யாரையும் கைது செய்யவும் இல்லை, வழக்குப் போடவும் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக கூற முற்பட்டேனே அல்லாமல் வேறு எதுவுமல்ல.

பொதுவாக, இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற பல்வேறு கருத்துக்களை, நமது திரு. பொன்னப்ப நாடார் சொன்னாலும் சரி, மற்றவர்கள் சொன்னாலும் சரி, அனைத்தும் இன்றைக்கு இந்த அரசால் போலீசார் ஆட்டி வைக்கப்படுகிறார்கள், போலீசார் இந்த அரசால் தூண்டிவிடப் படுகிறார்கள் என்கின்ற இந்தக் கருத்தையே அவர்கள் எதிரொலித்தார்கள்.

காலையில் பேசிய என்னுடைய நண்பர் திரு. காளிமுத்து அவர்கள் கூட, எனக்கு, குருவிற்கு செலுத்த வேண்டிய வணக்கத்தை மரியாதையை எல்லாம் செலுத்திவிட்டு, நான் குருவை எதிர்க்க வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டேனே என்றெல்லாம் இங்கே பேசி, எதிர்ப்பதற்கான காரணம் ஜனநாயகத்திற்குப் புறம்பாக இந்த அரசு போய்க்கொண்டிருக்கிறது, ஆகவேதான் என்றெல்லாம் சொன்னார். 10 நாளைக்குள் அந்த மாற்றம் அவருக்கு ஏற்பட்டது. 10 நாளைக்கு முன்னால் கூட ஒரு கடிதம் எனக்கு எழுதியிருந்தார். அதிலே கூட அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் சொன்னார். . . .

"இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காத என் தலைவர் கலைஞர் அவர்களுக்கு,

வணக்கம். என் வழிபாட்டுக்குரிய தங்களைப் பற்றி ஒலிக்கின்ற - வைக்கப்படுகின்ற தகாத வார்த்தைகளை எல்லாம்

கேட்டு மனம் தாளாமல்தான் நேற்றைய தினம் என் உள்ளம் உணர்ந்ததைத் தங்களிடம் கூறினேன். என் தலைவர் இடுகின்ற ஆணையை, ஐயத்துக்கோ, கேள்விக்கோ இடமின்றி ஏற்று வழி நடக்கக்கூடிய நான் - இருக்கின்ற நிலையைக் கூற வேண்டும் என்பதனாலேயே கூறினேன். அன்றாடம் ஆயிரம் வேதனைகளைத் தாங்கிக் கொண்டிருக்கும் தங்களுக்கு நானும் துயரத்தைத் தந்துவிட்டேனோ என்று வருந்துகிறேன். இந்த உலகில் எந்த அரசியல் கட்சியின் தொண்டனும் தனது தலைவரை இதுவரை நேசித்திருக்க முடியாத அளவுக்கு உயிரினும் மேலாகத் தங்களை நான் நேசிப்பவன் என்பதையும், எதிரியின் தலையில் கிரீடமாக ஜொலிப்பதைவிட தங்கள் காலடியின்கீழ் புல்லாக மிதிபடுவதையே தான் விரும்புகிறேன். தங்கள் திருவுள்ளம் இதை அறியுமாதலால் என்னைத் தவறாக நினைக்க மாட்டீர்கள் என்று ஆறுதல் அடைகிறேன். எதிர்ப்புகளுக்கு இடையிலேயே அரசியல் நடத்தி வெற்றி கண்ட தாங்கள் எடுத்த முடிவை ஏற்று, எதிர்ப்புக்கு இடையே இயக்கத்திற்கு வெற்றி உருவாக்க வேண்டும் என்ற உள்ள உறுதியோடு தங்கள் தாள் பணிந்து வணங்கி ஊருக்குத் திரும்புகிறேன். வருகிறேன். என்றும் தங்கள், க. காளிமுத்து.

டாக்டர் எச். வி. ஹாண்டே : உங்களுக்கு கடிதம் எழுதுவதே தவறுபோல் தோன்றுகிறது.

Thiru R. Ponnappa Nadar : Is it not confidential?

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்த கடிதம், அ.தி.மு.க. உருவாக்கப் பட்டதற்கு முன்பு நான் எழுதிய கடிதம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தி.மு.க. விலிருந்து விலக்கப்பட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், வேறு எந்த இயக்கத்திற்காவது சென்று விடுவாரோ, அண்ணாவின் கொள்கைக்குப் புறம்பாகப் போய்விடுவாரோ என்று நான் கருதிய காரணத்தால்தான் அப்படிப்பட்ட கடிதம் எழுத நேரிட்டது. ஆனால், அண்ணாவின் கொள்கையினை ஏற்று அவ்வழி நடக்க புதிதாக ஒரு இயக்கம் உருவாக்கப்பட்ட பிறகு அந்தப் புனிதமான இயக்கத்தில் என்னுடைய குரு எனக்கு கற்றுத்தந்த அரசியல் பயிற்சிபடி நான் அதில் இணைந்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதோடு மாத்திரமல்ல பிறகு 10 நாட்கள் கழித்து பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை; அதன் நகல் கைப்படவே எனக்கு வந்தது.

"என் உயிரினும் மேலாக நான் ஏற்றுக்கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நான் விலகி புதிய கட்சியில் இணையப் போவதாக வதந்திகள் உலவுவதை அறிகிறேன். தி.மு.கழகம் என் இதயத்துடிப்போடும், இரத்தச் சுழற்சியோடும் இணைந்துவிட்ட ஒன்றாகும். கலைஞர் கருணாநிதி அவர்கள் என் வழிபாட்டிற்குரிய தானைத் தலைவராவார். இதனை விட்டுப் பிரிவது என்பது என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாததாகும். முன்னேற்றக் கழகத்தை காட்டிலும் இளைஞர் உலகம் ஏற்றுக்கொள்ளத்தக்க முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட ஒரு இயக்கம் தமிழகத்தில் கிடையாது. டாக்டர் கலைஞரைக் காட்டிலும் தமிழகத்தின் வழிகாட்டி வேறு எவரும் கிடையாது. எனவே, தவறான வதந்திகளை நம்ப வேண்டாம் என்று இயக்கத் தோழர்களை வேண்டுகிறேன்.

இவண், கா. காளிமுத்து".

இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த பிறகு அவர் எழுதிய கடிதம்.

திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, எந்தச் சூழ்நிலையில் கடிதம் எழுதப்பட்டது என்பது தங்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எந்தெந்தச் சூழ்நிலையில் என்னென்ன நடந்தது என்று எனக்கும் தெரியும். நாட்டுக்கும் தெரியும். ஏனென்றால் காலையில் போலீஸ் மான்யத்தின்மீது பேசும்போது அதைப் பேசினார் என்பதற்காகச் சொல்லுகிறேனே அல்லாமல் வேறல்ல. இந்த மான்யத்தைப் பொறுத்தவரையில் நான் எடுத்துச் சொன்னேன். காவல் துறையில் உள்ளவர்களை எந்தெந்த அளவுக்கு. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. காளிமுத்து எந்த சூழ்நிலையில் அவர் எழுதினார் என்பது

எனக்குத் தெரியும் என்று என்னைச் சுட்டிக்காட்டினார். எனக்கு எதுவும் தெரியாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, காவல் துறையிலே இருக்கிற நண்பர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உதவியினைச் செய்வதன் மூலமும், மேலும் அந்தத் துறை நல்ல முறையிலே இந்த நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் பணியாற்ற வேண்டும் என்பதற்காகவும் பல வசதிகளை இந்த அரசின் சார்பில் செய்து கொடுத்திருக்கிறோம். அவைகள் போதுமானவைகளல்ல.. ஏனென்றால் அரசு அலுவலாளர்களில் மற்றவர்களைக் காட்டிலும் காவல் துறையில் இருக்கின்ற அதிகாரிகளானாலும், காவலர்களானாலும், அவர்கள் தங்களுடைய உயிரைப் பணயம் வைத்து, இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களிலே தவறானவர்கள் இருக்கலாம். அவர்கள் இந்த மாமன்றத்தால் அல்லது மற்றவர்களால் அரசுக்கு சுட்டிக்காட்டப்பட்டால், அரசால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நான் நிச்சயமாக மறுக்க மாட்டேன். அதே நேரத்திலே இந்தத் துறையை நல்ல அளவுக்கு விரிவுபடுத்தி, வலிவுள்ளதாக ஆக்கவேண்டும் என்பதும் நம்முடைய பொறுப்பாகும். இன்றைக்கு நாட்டில் போராட்டங்கள், கிளர்ச்சிகள் அமைதியாக நடைபெற்றால் அதை ஆட்சேபிப் பதற்கு யாருமில்லை.

நமது திரு. பொன்னப்ப நாடார் கூடச் சொன்னார். எங்களுடைய 15-ம் தேதிப் போராட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது, என்று சொன்னார். எந்த ஊரிலும் அமைதிக்குப் பங்கம் ஏற்படவில்லை. அதைப் போலவே, அப்படி அமைதியாக நடைபெற்ற ஊர்வலங்களைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பையும், அவைகளை ஒழுங்காக வழிநடத்திச் சென்றவர்களுக்குத் துணையிருக்கக்கூடிய பொறுப்பையும் காவல் துறையினர் ஏற்றுக்கொண்டனர் என்பதை அவர்களும் மறுக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு, காவல்துறை நல்ல பணியை ஆற்றியிருக்கிறது. சென்னையிலாகட்டும், மற்ற நகரங்களிலாகட்டும், அமைதியான ஊர்வலங்கள் பலவற்றை நாம் கண்டிருக்கிறோம். ஏதோ 1, 2 ஊர்வலங்களில் சச்சரவுகள்,

கலவரங்கள் இந்தச் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படாமல் அந்தந்தக் கட்சியின் தலைவர்கள் அதைப் பாதுகாத்திட வேண்டும். அந்தந்தக் கட்சியின் தலைவர்கள், கட்சியின் தொண்டர்களுக்கு அறிவுரை கூறிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வேன்.

நமது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய கட்சி, மதிப்பிற்குரிய காமராசர் கட்சி நடத்திய ஊர்வலம் அமைதியாக நடந்தது என்று சொன்னால், அதுகூட பயமாக இருக்கிறது. ஒரு வேளை காமராசர் அவர்களுடைய கட்சியும், கழகமும் இன்றைக்கு ஒன்றாகச் சேர்ந்துகொண்டிருக்கிறதோ என்றெல்லாம் பிரசாரம் செய்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் இங்கே வேகமாகப் பேசியதற்கே கூட ஒரு காரணம் எங்கே இப்படி சந்தேகப்பட்டு விடுவார்களோ என்பதுதான்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, அந்த மாதிரி ஒன்றுமில்லை. நான் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி வன்மையாகக் கண்டித்தேனே ஒழிய அந்த மாதிரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஊர்வலம் அமைதியாகச் சென்றால் எந்த விதமான தொல்லையும் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். ஆனால் 9-ம் தேதி நடந்த விவசாயிகள் ஊர்வலத்தில் மதிப்பிற்குரிய காமராசர் தலைமையில் நடத்திய ஊர்வலத்தில் நாங்கள் கூட இருந்தோம். ஊர்வலம் போகிற நேரத்தில் வழியில் பல இடங்களில் வழிமறித்து, பிளாசா தியேட்டருக்கு அப்புறம் சைக்கிள் டயரில் பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்துக் கொளுத்தி மெத்தைமேலிருந்து ஊர்வலத்தின்மேல் போட்டு சிதற வைத்தார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஆகஸ்ட் 15 சுதந்திரதினத்தன்று ஓர் ஊர்வலம் நடத்தினார்கள். அப்போது அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அண்ணா அவர்களும், நானும், நாவலரும், மதி உட்பட மற்ற அமைச்சர் களும் கவர்னர் வீட்டில் இருந்தோம். கவர்னர் ஒரு விருந்திற்கு ஏற்பாடு செய்தார்; அதில் கலந்து கொள்வதற்காக அங்கே

சென்றிருந்தோம். அன்றையதினம் இங்கே ஊர்வலம் நடைபெற்றது. அந்த ஊர்வலம் "தென்னகம்", 'முரசொலி' அலுவலகங்களிலே புகுந்து இரண்டு அலுவலகங்களையும் சூறையாடியது. அதற்கு யார் பொறுப்பு? ஊர்வலத்திலே போகிற யாரோ சிலபேர் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள். ஆகவே நாம் இப்பொழுது எந்த அளவுக்கு இருக்கவேண்டு மென்று சொல்கிறோமோ, அதே அளவுக்குத் தொண்டர்களைத் தனித்தனியாக நாம் பயிற்றுவிக்க வேண்டிய கடமைப் பட்டிருக்கிறோம்.

எல்லாக் கட்சியிலும் சிலர் இருப்பார்கள். தி. மு. கழகத்தில் உள்ள அத்தனை பேருமே அமைதியானவர்கள், யாரிடத்திலும் முரட்டுத்தனம் கிடையாது என்று நான் சொல்ல மாட்டேன். ஆத்திரத்திற்கு சில நேரங்களிலே அவசரமாக ஆட்பட்டு விடுகிறவர்கள் கொஞ்சநஞ்சம் எல்லாக் கட்சியிலும் இருப்பார்கள். பொதுக்கூட்டங்களிலே பேசப்படுகின்ற பேச்சைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். காலையிலே என்னைப் பற்றி அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர் இங்கே என்ன பேசினார்? திருப்பி நான் அந்த வார்த்தையை சொல்லக் கூடாது. இங்கேயே ஒரு சட்டமன்ற உறுப்பினர் இவ்வளவு பேருக்கு நேராக இப்படிப் பேசுகிறார் என்றால் மேடையிலே என்ன பேசுவார்கள்? எந்தெந்த அளவுக்கு அமைச்சர்கள் அல்லது கட்சித் தலைவர்கள் தாக்கப் பட்டாலும் அந்தந்தக் கட்சித் தலைவர்கள் தரம் குறையாத அளவுக்கு மேடை அரசியலை நடத்த நாம் பழகிக் கொண்டால் ஆத்திரம் நிச்சயம் தணியும்.

கறுப்புக்கொடி பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக, பட்டுக் கோட்டை நிகழ்ச்சி பற்றி சொன்னார்கள். பட்டுக்கோட்டை நிகழ்ச்சிக்காக 2 மணிக்கெல்லாம் ஒரத்தநாடு நிகழ்ச்சியை முடித்துவிட்டு, உடனே பட்டுக்கோட்டைக்கு போய்விடலாம் என்று நான் சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் என்னிடம் வந்து கறுப்புக்கொடி காட்டுபவர்களைச் சந்தித்துப் பேசினேன்; 3 மணியிலிருந்து 4 மணி வரை அங்கே காத்திருப்போம்; நீங்கள் அந்த இடைநேரத்தில் வரவேண்டும்" என்று சொன்னார்கள். அதற்காகவே நான் ஒரு மணி நேரம் ஒரத்தநாட்டிலே உட்கார்ந்து அவர்களுக்காக நான் நேரம் கொடுத்து 3 மணியிலிருந்து 4

மணிக்குள் செல்வதற்காகத் தயார் படுத்திக்கொண்டு 3 மணிக்குக் காரில் ஏறி உட்காருகிறேன்.

"கறுப்புக்கொடி பிடித்தவர்கள் அங்கிருந்து வந்து குறுக்கே நிற்கிறார்கள். ஆகவே அசம்பாவிதம் ஏற்படும்" என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் தடுக்கப்பட வேண்டும். கறுப்புக்கொடி காட்டட்டும். அது ஜனநாயக ரீதியில் அனுமதிக்கப்பட்ட ஒன்று. ஆனால் அதிலே பலாத்காரம், கல் எறிதல், கலகம் விளைவித்தல் என்றிருக்கக் கூடாது. மதி அவர்கள் கூடச் சொன்னார்கள்; மன்னையின் நெற்றியில் காயம் ஏற்பட்டிருக்கின்றது என்று வருத்தத்தோடு சொன்னார்கள். இதெல்லாம் விளையாட்டுச் செய்திகளா?

அமைச்சர்கள் கலந்துகொண்ட பல கூட்டங்கள் கல்லெறிக்கு ஆளாகின்றன. நண்பர் வேழவேந்தன் அவர்களின் கார் தீ வைத்து அடியோடு கொளுத்தப்பட்டது. அந்தக் கார் எதற்கும் பயனில்லை என்ற அளவுக்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எந்தத் தரப்பிலும் இப்பேர்ப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்கப் பாடுபடுவது ஒவ்வொரு அரசியல் வாதிகளின் கடமை. ஆகவே, போலீசார் கடுமையாக நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால் நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்வேன். வன்முறையிலே யார் ஈடுபட்டாலும் அவர்கள் மீது போலீசார் தயவுதாட்சணியமின்றி நடவடிக்கை எடுப்பார்கள், எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைத்தான் இந்த மாமன்றத்தின் மூலம் பிரதிபலிக்கிறேன்.

இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. இரவெல்லாம் கூட்டங்கள் நடைபெறுகின்றன என்று திரு. நாடார் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றி ஏற்கெனவே ஐ. ஜி. அவர்கள் மூலம் அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. சென்னை நகரில் இரவு 10 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டும் என்றும், திருச்சி, கோவை, மதுரை, சேலம் போன்ற பெரிய நகரங்களில் 10 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டுமென்றும், மற்ற வெளியூர் களில் இரவு 11 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆணையை யார் மீறினாலும்

அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இதை ஒழுங்குபடுத்த நம்முடைய அமைச்சர் பெருமக்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன்; சட்டமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். அதைப்போன்றே கூட்டங்களை நடத்துகின்ற எல்லாக் கட்சித் தொண்டர்களும், ஒலி பெருக்கி அமைப்பாளர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். 11 மணி முதல் 12 மணி வரை கூட்டங்கள் நடந்தால், முடியும் வரை எந்தக் கூட்டமானாலும் காவலர் நின்று தங்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்போது லைசென்ஸ் கொடுப்பதிலே ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? யார் லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று புதிய ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : எல்லாத் தரப்பிலும் இருக்கக்கூடியவர்கள் இந்த விதிமுறைகளைக் கடைபிடித்தால், எல்லா அரசியல்வாதிகளின் உடம்புக்கும் நல்லது; எல்லா வற்றுக்கும் நல்லது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : டாக்டர் என்ற முறையில் திரு. ஹாண்டே அவர்களின் அறிவுரைக்கு நன்றி.

சேலம், வேலூரில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிச் சொன்னார்கள். அதில் வலது கம்யூனிஸ்டுகள் அதிகம் கலந்திருக்கிறார்கள் என்று நான் சொன்னேன். அப்பொழுது கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் கல்யாண சுந்தரம் அவர்கள் பத்திரிகையிலே அறிக்கை விட்டார்கள். அந்த அறிக்கையில் சேலம் வேலூரில் கம்யூனிஸ்டு கட்சியே கிடையாது என்று குறிப்பிட்டிருக்கிறார். "சேலம், வேலூரில் நேற்று நடந்த சம்பவங்களுக்கு வலது கம்யூனிஸ்டுகள் காரணமென்று முதலமைச்சர் கூறியிருப்பது கற்பனையே என்றும், வேலூரில் கடந்த 15 ஆண்டுகளாக தங்கள் கட்சிக் கிளை இல்லை என்றும் தமிழ்நாடு வலது கம்யூனிஸ்டுக் கட்சிக் காரியதரிசி தலைவர் கல்யாணசுந்தரம் இன்று இங்கு கூறினார்" என்ற செய்தி 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் "தினமலர்" பத்திரிகையில்

வெளிவந்திருக்கிறது. உண்மையிலேயே அங்கு அப்படி இருக்குமோ என்று நான் விசாரித்தேன்.

அவர் சொல்கிறார், 15 ஆண்டுகளாக கம்யூனிஸ்டு கட்சியின் கிளையே அங்கு கிடையாது என்று. உண்மையில் அப்படி இருக்குமா என்று விசாரித்தோம். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் வேலூர் கிளை 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் நாளில் துண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில் "வேலூர் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் கிளை" என்று தலைப்பிட்டு, வேலூர் பெரியார்களே! தாய்மார்களே! என்று அழைத்து வெளியிடப்பட்ட துண்டறிக்கை.

அது மாத்திரமல்ல. சுதந்திர தின வெள்ளிவிழாவை யொட்டி ஒரு சர்வகட்சிக் கூட்டமும் விவசாயப் போராட்டத்தில் கலந்துகொண்டு, சிறை சென்று மீண்ட வீரர்களுக்குப் பாராட்டு விழாவும், இதிலே எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்து கொள்கிறார்கள் . . . . இப்படிக்கு ஸ்தாபன காங்கிரஸ் இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி-வேலூர் என்று நோட்டீஸ் அச்சடித்திருக்கிறார்கள்.

ஆனால் கல்யாணசுந்தரம் சொல்கிறார், 15 ஆண்டுகளாக அந்தப்பகுதியில் கம்யூனிஸ்டு கட்சியே கிடையாது, கருணாநிதி தவறாகச் சொல்கிறார் என்று. இப்படித்தான் பல விஷயங்கள் அறிக்கை விடுகின்ற காரணத்தால் அவைகளை பத்திரிகைகளில் பெரிதுபடுத்திப் போட்டு, தி. மு. க. கழக அரசுக்கு ஏதாவது குந்தகம் வராதா என்று எதிர் பார்க்கின்ற காரணத்தால்தான் உண்மைக்கு மாறான செய்திகள் நாட்டில் நடமாடுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதியழகன் அவர்கள் தன் பேச்சை முடிக்கிறநேரத்தில் சொன்னார், "மக்கள் கிளர்ந்தெழுவார்கள், கவர்னரை வாபஸ் பெறவேண்டும், மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும்" என்று சொன்னார்கள். மதி அவர்களின் வாயிலிருந்து எக்கால முழக்கங்களையெல்லாம் கேட்டிருக்கிறேன். எங்களை விட அதிகமாக மத்திய அரசை எதிர்த்து எக்காளமிடுபவர் மதி அவர்கள். இன்றைக்கும் மத்திய சர்க்காரை எதிர்க்கின்ற பாவனையிலே மாநில அரசை அழித்துவிடு, மாநில அரசுக்குப்

புத்தி சொல் என்கின்ற எக்காள முழக்கத்தைக் கேட்டேன். அவர் எங்களைவிட மத்திய அரசை வேகமாக எதிர்த்துப் பழக்கப் பட்டவர். இன்றைக்கு "மத்திய அரசே உடனடியாக வா, கவர்னரை வாபஸ் வாங்கு, இல்லாவிட்டால் மக்கள் இந்த அரசைத்தூக்கி எறிந்துவிடுவார்கள்'' என்றெல்லாம் சொன்னார்கள். தூக்கி எறிந்திட திராவிட முன்னேற்றக் கழக அரசு பூப்பந்து அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன். (பலத்த கைத்தட்டல்). திராவிட முன்னேற்றக் கழக அரசு இமாலயம். இதை யாரும் அசைத்திட முடியாது என்று கூறி இந்த அளவிலே விடைபெறுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, இந்த அளவிலே அமைகிறேன்.

உரை : 9 நாள் : 25.03.1974

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காவல்துறை, தீ அணைப்புத் துறை ஆகிய மானியங்கள் மீது நல்லபல கருத்துக்களை, ஆக்கபூர்வமாக வழங்கியுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானிய விவாதத்தைத் தொடங்கிவைத்த மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் 'பர்பாமன்ஸ் பட்ஜெட்' என்ற முறை இந்த மானியத்திற்கும் கடைப்பிடிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்கள்.

வளர்ச்சித் துறைகளுக்கு மாத்திரம்தான் அதுபோன்ற பட்ஜெட் வகுக்கின்ற முறையை நாம் இதுவரையில் கையாண்டு வந்திருக்கிறோம் என்பதையும், வளர்ச்சித் துறை அல்லாத வேறு மானியங்கள், வேறு துறைகளுக்கு இதுவரை அத்தகைய முறையில் பட்ஜெட் அமைக்கவில்லை என்பதையும், வளர்ச்சிதுறை அல்லாத வேறு துறைகளுக்கும் அந்தவகையில் பட்ஜெட் அமைக்க முடியுமா என்பதைப்பற்றி யோசிக்க, துறையினர்களை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்பதையும் அவர்களுடைய முறையீட்டுக்கு நான் என்னுடைய விளக்கமாகக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேசிய அனைத்துக்கட்சியினுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தமிழ்நாடு காவல்துறையின் திறமையை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள். நண்பர் ஹாண்டே அவர்கள் பேசும்போது, 'போலீஸ் துறையில் தவறுகள் வந்தால் போலீசைக் காட்டிக்கொடுக்கிறீர்கள். போலீஸ் மீது அந்தத் தவறுகள் போய்ச் செல்லட்டும் என்று ஒதுங்கிக்கொள்கிறீர்கள்.

பாராட்டுகள் வந்தால் அதை நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்கள் ? என்று அவர் குறிப்பிட்டார்.

பாராட்டுகளையும் போலீஸ் துறையினர்தான் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் அகில இந்திய விளையாட்டுப் போட்டியில் வழங்கப்பட்ட பரிசுகள் எனக்கு அளிக்கப்படவில்லை, அவைகள் எல்லாம் பரிசு பெற்ற போலீஸ் அதிகாரிகளுக்குத்தான் அளிக்கப்பட்டன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

போலீஸ் திறமை நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அனைவராலும் பாராட்டத்தக்க அளவுக்கு மேல்நோக்கி இருக்கிறது என்பதை இந்த அவையில் நடந்த விவாதத்தில் யாரும் மறுக்காதது மட்டுமல்ல அவர்களை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள், இன்னும் இந்தத் துறை எவ்வாறு செம்மைப்படுத்தப்படவேண்டும் என்கிற கருத்துக்கள் வழங்கப்பட்டன.

அந்தவகையில் அந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவன் என்ற நிலைமையில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் போலீஸார் சார்பாக.

நீங்கள் வாங்கிய பாராட்டுகளுக்கு எல்லாம், இந்த அவையிலே வந்து அவர்கள் தங்களுடைய நன்றியை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள முடியாத காரணத்தினால், அவர்கள் அத்தனைபேர்களுடைய சார்பாகவும் நான் என்னுடைய நன்றியை, அவர்களைப் பாராட்டிய உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தமிழக காவல்துறையின் தலைமை அதிகாரியோ, மாவட்டத்திலுள்ள காவல்துறை தலைமை அதிகாரிகளோ, குறிப்பாக சென்னை மாநகரத்தில் பணிபுரிகிற காவல்துறை தலைமை அதிகாரியோ, அவருக்குத் துணையாக இருக்கிற காவல்துறை அதிகாரிகளோ தமிழகத்தின் சட்டம், ஒழுங்கு அமைதி இவைகளைக் கட்டிக் காப்பதில் எந்த அளவுக்கு நிதானப் போக்கினைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதை நமது நண்பர் வீராசாமி அவர்கள் பட்டியல் போட்டுக் காட்டினார்கள்.

கடந்த ஓராண்டு காலத்தில் நடந்த போராட்டங்களின் வரிசை, அந்தப் போராட்டங்களின் தன்மை, நடைபெற்ற விதம், அந்தப் போராட்டங்கள் எந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டன

என்பதை எண்ணிப்பார்த்து, போலீசார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சட்டமும், ஒழுங்கும் அமைதியும் காப்பாற்றப்படுவதற்கு காவல்துறையினர் எவ்வளவு நிதானப் போக்கினைக் கடைப்பிடித்தார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

நம் காவல் துறையினருடைய மதிப்பு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மேலும் உயருவதற்கான ஒரு அடையாள மாகத்தான் ஏறத்தாழ 100-க்கு மேற்பட்ட நாடுகள் கலந்து கொள்ளுகிற இண்டர்போல் என்று சொல்லப்படுகிற உலக காவல்துறை அமைப்பு பாரிசில் அந்த அமைப்பின் மாநாடு அடிக்கடி கூடுகிறது. இந்த ஆண்டு அந்த மாநாட்டில் உலக காவல் துறையின் துணைத்தலைவராக நம் ஐ.ஜி. திரு. அருள் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அகில இந்திய ரீதியில் காவல் துறையினர் அலுவல் தொடர்புள்ள போட்டிகள் ஆண்டுதோறும் பல்வேறு மாநிலங்களில் நடைபெறுகின்றன. கைரேகை எடுத்தல், கால் பதிவு எடுத்தல், விசாரணைக்கு அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துதல், நிழற்படம் எடுத்தல், சட்டம் சார்ந்த மருத்துவம் வேதியல் அறிவு, முதலுதவி அளித்தல், வாகன ஓட்டுநர்களுக்கிடையே வாகனம் பழுதுபார்த்தல், துப்பாக்கி, சுழற்துப்பாக்கி சுடும் போட்டி, கம்பியில்லாத தந்தி மூலம் செய்தியை விரைவாக அனுப்புதல் ஆகிய இந்தப் போட்டிகள் அகில இந்திய ரீதியில் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

நாம் இந்தப் போட்டிகளில் கடந்த ஐந்தாண்டு காலமாக முதலிடத்தையே பெற்றுவருகிறோம் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளுகிறேன். தொடர்ந்து முதலிடத்தைப் பெற்று வருகிற மாநிலம் தமிழ்நாடுதான் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தப் போட்டிகளில் கடந்த ஆண்டு மாத்திரம் மொத்தம் 11 தங்கப் பதக்கங்களையும் 5 வெள்ளிப் பதக்கங்களையும் 4 வெண்கலப் பதக்கங்களையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது என்பதையும் நான் பெருமையோடு கூறிக்கொள்வேன்.

அகில இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களோடு நம் மாநிலத்தை இன்றைக்கு சட்டம் அமைதி ஆகியவைகளை

ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது எந்த அளவு பெருமைப்படக்கூடிய நிலையில் தமிழ்நாடு இருக்கிறது என்று ஆளும்கட்சி உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள். தமிழகம் அமைதியாக இருக்கிறது என்று பெரியவர் மணலி அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். நாம் மற்ற மாநிலங்களில் நடைபெறுகின்ற அமளிகளைப் பற்றியும் தமிழகத்தில் நிலவுகின்ற அமைதியைப் பற்றியும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற இந்த சூழ்நிலையில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலரும் தமிழ் நாட்டில் அமைதி சூழ்நிலை கெட்டுவிட்டது என்று கூறி இருக்கிற காரணத்தால் மற்ற மாநிலங்களில் நடைபெறுகின்ற குற்றங்கள், அந்தக் குற்றங்களை கண்டுபிடிக்க காவல் துறையினர் எடுத்துள்ள முயற்சிகள் அதில் தண்டிக்கப்படுகின்ற குற்றவாளிகளின் எண்ணிக்கையில் விகிதாசாரம் ஆகியவைகளையும் தயவுசெய்து நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

நமக்குக் கிடைத்து இருப்பது கிரைம் இன் இண்டியா 1970. கிரைம் இன் இண்டியா 1970 என்ற இந்தப் புத்தகம் மத்திய சர்க்காருடைய உள்துறை இலாகாவால் தயாரிக்கப்பட்டுள்ள புத்தகம்.

அந்த புத்தகத்தினுடைய குறிப்புகள், புள்ளிவிவரங்கள் கூறுவதை எடுத்துவைத்துப் பார்ப்போமானால் –

1970-ல் உத்திரப்பிரதேசத்தில் பதிவான கொலைக் குற்றங்கள் 3,502, விசாரணைக்குப் பின் உண்மை என்று தெரிந்து கொள்ளப்பட்டவை 2,824, உண்மை என்று தெரிந்த பிறகு கண்டு பிடிக்கப்பட்ட குற்றங்கள் 1,927, விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்டவர்களின் சதவீதம் 41.69.

மத்திய பிரதேசத்தில் 1970-ல் பதிவான கொலைக் குற்றங்கள் 1,725, விசாரணைக்குப் பின் உண்மை என்று தெரிந்தவை 1,201, அவைகளில் கண்டுபிடிக்கப்பட்டவை 926, விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்டவர்களின் சதவீதம் 47.17.

மகராஷ்டிரத்தில் பதிவான கொலை குற்றங்கள் 1,356. அதில் உண்மை எனத் தெரிந்தவை 1,201. கண்டுபிடிக்கப்பட்டவை 926. விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்டவர்களின் சதவீதம் 53.

இந்தக் கொலைக் குற்றங்களை இந்த மாநிலங்களோடு நம் தமிழ்நாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1970-ல் பதிவான

குற்றங்கள் 890, விசாரணைக்குப் பின் உண்மை என தெரிந்தவை 662, கண்டுபிடிக்கப்பட்டவை 622, விசாரணைக்குப்பின் தண்டிக்கப்பட்டவர்களின் சதவீதம் 63.11 அந்த அளவுக்கு குற்றவாளிகளைக் கண்டுபிடித்தும் தண்டனை அளிப்பதிலும் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது.

கொள்ளைக் குற்றத்தை எடுத்துப்பார்த்தால் - உத்திரப்பிர தேசத்தில் பதிவானவை 5,202. உண்மை என விசாரணைக்குப் பின் தெரிந்தவை 1,869. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 1,027. தண்டிக்கப்பட்டவர்களின் சதவீதம் 37.99.

பீகாரில் 1970-ல் பதிவான கொள்ளைக் குற்றங்கள் 1,626. உண்மை எனத் தெரிந்தவை 963. கண்டுபிடிக்கப்பட்டவை 263. தண்டிக்கப்பட்டோர் சதவீதம் 52.

இதில் தமிழ்நாட்டை ஒப்பிடும்போது 1970-ல் பதிவான கொள்ளை குற்றங்கள் 94. உண்மை என தெரிந்தவை 20. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 19. விசாரணைக்குப் பின் தண்டிக்கப்பட்டோர் சதவீதம் 77.78.

அடுத்து வழிப்பறிக் குற்றங்கள் -

1970-ல் உத்திரப்பிரதேசத்தில் பதிவான குற்றங்கள் 9,710. உண்மை என தெரிந்தவை 3,722. கண்டுபிடிக்கப்பட்டவை 986. விசாரணைக்குப்பின் தண்டிக்கப்பட்டோர் சதவீதம் 43.90.

இதைப்போலவே மராட்டியம், பீகார் போன்ற மாநிலங்களில் அதிகமாகக் குற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

கேரளத்தில் பதிவான குற்றங்கள் 154 அவைகளில் உண்மை எனத் தெரியவந்தவை 78. அதில் கண்டுபிடிக்கப் பட்டவை 61, தண்டிக்கப்பட்டோர் சதவீதம் 32.20.

தமிழ் நாட்டில் 1970-ல் பதிவான வழிப்பறிக் குற்றங்களின் எண்ணிக்கை 107. அதில் விசாரணைக்குப் பின் உண்மை என்று தெரிந்த குற்றங்கள் 93. அதில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 80. குற்றங்களின் விசாரணைக்குப் பின் தண்டிக்கப் பட்டவர்களின் சதவீதம் 72.50.

மொத்தத்தில் குற்றங்களின் பட்டியல் -

1970-ல் உள்துறை அமைச்சர் வெளியிட்ட குறிப்பின்படி உத்திரபிரதேசத்தில் 1970ஆம் ஆண்டு பதிவான மொத்த குற்றங்கள் 2,33,754 அதில் விசாரணைக்குப் பின் உண்மை என தெரிந்தவை 1,40,764. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 33,985. குற்றங்களின் விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்டோர் சதவீதம் 56.24.

மராட்டியத்தில் 1970-ல் பதிவான மொத்த குற்றங்களின் எண்ணிக்கை 96,552. அதில் விசாரணைக்குப் பின் உண்மை என தெரிந்த குற்றங்கள் 28,047. அதில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் 19,493. குற்றங்களின் விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்டோரின் சதவீதம் 66.80.

கேரளாவில் மொத்தம் பதிவான குற்றங்கள் 31,617, உண்மை என தெரிந்தவை 22,567. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 18,002. தண்டிக்கப்பட்டோர் சதவீதம் 40.17.

மைசூரில் 1970-ல் பதிவான மொத்த குற்றங்கள் 35,566. உண்மை என தெரிந்தவை 28,047. கண்டுபிடிக்கப்பட்டவை 19,493, தண்டிக்கப்பட்டோர் சதவீதம் 58.90.

தமிழ்நாட்டில் 1970-ல் பதிவான குற்றங்களின் மொத்த எண்ணிக்கை 63,619. விசாரணைக்குப் பின் உண்மை என தெரிந்தவை 49,407. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 42,464. தண்டிக்கப்பட்டோர் சதவீதம் 83.08.

இன்றைக்கு நாட்டில் தண்டிக்கப்பட்டோரின் சதவீதம் முதலிடத்தில் இருக்கிற மாநிலமாக தமிழ்நாடுதான் இருக்கிறது. அதற்காக நாம் காவல்துறையைப் பாராட்டுவதற்கு மெத்த தகுதி படைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீண்டாமைக் குற்றங்கள் பற்றி குறிப்பிட்டார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய முதல்வ ரவர்கள், தண்டிக்கப்பட்டோர் சதவீதம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். இது 1970 ஆம் ஆண்டுக்கான ஸ்டேடிஸ்டிக்ஸ் அந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது 1974ஆம் ஆண்டு குற்றங்கள் ஜாஸ்தியாக இருக்கிறது. ஆகவே 1970ஆம் ஆண்டில் நடந்த குற்றங்களைப்பற்றி சொல்லுவது பொருத்தமாக இருக்குமா ?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கிரைம் இண்டியா 1970 என்ற இதை வெளியிட்டதற்கு பிறகு எதையும் இன்னும் வெளியிடவில்லை. நான் இந்தப் புள்ளிவிவரங்களைச் சொல்லுவதற்கு காரணம் மத்திய அரசு தந்து இருக்கின்ற புள்ளி விவரங்கள் நம் வாதத்திற்கு வலுவளிப்பதாக இருக்கும் என்பதாலே தந்தேன். அடுத்த புத்தகம் வெளியிட்ட பிறகு அதையும் நான் எடுத்துக்கூறுவேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தீண்டாமைக் குற்றங்களைப் பொறுத்தவரையிலும், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், வழக்குகளே போடப்படுவ தில்லை, யாரும் தண்டிக்கப்படுவதில்லையென்றெல்லாம் சொல்லப்பட்டது.

1969-ஆம் ஆண்டிற்கும் 1972 ஆம் ஆண்டிற்கும் இடையே உள்ள காலத்திற்கான வழக்குகள் பற்றிய புள்ளிவிவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன, அவற்றைப் பார்த்தால், 1969ஆம் ஆண்டு தீண்டாமைக் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டவை 33, தண்டிக்கப்பட்டவை 16, விடுதலை செய்யப்பட்டவை 11, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் முடிக்கப்பட்டவை 5, சாட்சியம் போதாமை ஆகிய காரணங்களால் திரும்பப்பெற்றவை 1.

1970ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டவை 33, தண்டிக்கப்பட்டவை 15, விடுதலை செய்யப்பட்டவை 12, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் முடிக்கப்பட்டவை 6;

1971ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டவை 24, தண்டிக்கப்பட்டவை 10, விடுதலை செய்யப்பட்டவை 13, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் முடிக்கப்பட்டவை 1; 1972 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டவை 842, தண்டிக்கப்பட்டவை 848, விடுதலை செய்யப்பட்டவை 276, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் முடிக்கப்பட்டவை 6.

இதிலே 59 வழக்குகள் சமாதானம் செய்யப்பட்டுவிட்டன, 23 வழக்குகள் கோர்ட்டில் உள்ளன.

1972ஆம் ஆண்டிலே மாத்திரம் தீண்டாமைக் குற்றத்திற்காக 777 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள், 476 பேர்கள்

தண்டிக்கப்பட்டார்கள், 277 பேர்கள் விடுதலை செய்யப் பட்டவர்கள், நீதிமன்றத்திலே வழக்குகள் நடப்பதிலே ஈடுபட்டுள்ளவர்கள் 24 பேர்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய காவல் துறையினருடைய திறமைக்கு எடுத்துக் காட்டாக சென்னை மாநகரத்திலே கமிஷனருடைய அலுவலகத்திலே வைக்கப்பட்டிருக்கிற பொருள்களைப் பற்றியெல்லாம் மாண்புமிகு அங்கத்தினர்கள் அனைவரும் எடுத்துச்சொன்னார்கள். நேற்றைய தினம் நான்கூட அவைகளைப் பார்த்தேன். எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலரும் அவைகளைப் பார்த்தார்கள் என்று அறிகிறேன். அண்மையிலே கண்டுபிடிக்கப்பட்ட அழகான சிலைகள், சோழர் காலத்திலே செய்யப்பட்ட சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, அதனுடைய பெறுமானம் 45 லட்சம் ரூபாய் என்ற அளவிற்குச் சொல்லப்படுகிறது, களவாடப்பட்ட பல பொருட்களை களவு கொடுத்தவர்கள் புகார் கொடுக்காமலேயே களவாடியவர்களைக் காவல் துறை கண்டுபிடித்து அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் எல்லாம் சென்னையில் கமிஷனர் அலுவலகத்திலே வைக்கப்பட்டு இருக்கின்றன. அது பார்ப்பதற்கு நல்ல காட்சியாக இருக்கிறது. வைர மூக்குத்தி, வைரத் தோடு, ஒட்டியானம், நெக்லஸ் வைக்கப்பட்டிருக்கின்றன. வயர்கள் குவிக்கப்பட்டு இருக்கின்றன. நல்ல அருமையான சேலைகள், ஜவுளிக் கடையிலிருந்து நேரடியாக எடுத்துவந்த பட்டுச் சேலைகள், புத்தம் புதிய சேலைகள் எல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புவார்க ளானால் அவர்களைக்கூட சர்க்காருடைய பஸ்ஸிலே அழைத்துச் சென்று, காட்டுவதற்கு மாத்திரம் (சிரிப்பு) அழைத்துச் செல்லத் தயாராக இருக்கிறேன். . .

திரு. கே. டி. கே. தங்கமணி : கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. கடந்த இரண்டு மாதத்திலே கண்டுபிடிக்கப்பட்டவை என்று சொல்கிறார்கள், பாராட்டத்தக்கது. சில பேர்கள் கம்ப்ளெய்ண்ட் கொடுக்காமல் இருக்கலாம், அவைகளினுடைய சொந்தக்காரர்கள் யார் என்று விசாரித்து எல்லாம் திரும்பக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதற்குக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் விளம்பரம் கொடுக்கவேண்டும்.

சட்டசபையிலே பேசப்படுவதன்மூலம் விளம்பரம் கிடைக்கிறது, மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம் அழைத்துச்சென்று காட்ட இருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அந்த 40 லட்ச ரூபாய் சிலையை யாருக்கும் திருப்பிக் கொடுத்துவிடவேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதுமட்டு மல்லாமல், குற்றங்களைக் கண்டுபிடிக்க வசதிகளை மேலும் பெருக்கவேண்டுமென்ற ஒரு கருத்தினை இங்கு பேசிய கட்சித் தலைவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே கடந்த நான்கைந்து ஆண்டுக்காலத்தில் குற்றங்களைக் கண்டுபிடிக்க, முன்னெச்சரிக்கையாகத் தடுக்க போலீஸ் அதிகாரிகளோடு கலந்தாலோசித்து நவீன கருவிகளை வாங்க இருக்கிறோம். எங்கு பார்த்தாலும் வயர்லஸ் ஸிஸ்டம் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாற்பது இலட்ச ரூபாய் செலவில் மைக்ரோவேவ் டிரங்க் லைன் எல்லா காவல் மாவட்டங்களையும் இணைத்து குற்றவாளிகளின் நடமாட்டத்தைத் துரிதமாகக் கண்காணிக்கக்கூடிய வகையிலே சாதனங்களை வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்நியச் செலாவணி வரவேண்டி யிருக்கிறது, மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற்று விரைவிலே நவீன கருவிகள் பொருத்தப்பட்டு குற்றவாளிகளை விரைவிலே கண்டுபிடிக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக முயற்சித்து வருகிறோம்.

அது மட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி எடுத்துத் தெரிவித்ததைப்போல், காவல் நிலையங்களில் தொலைபேசி பொருத்தப்படுகின்ற வேலை வேகமாக நடைபெற்று இருக்கிறது. மொத்தமாக 839 காவல் நிலையங்கள் இருக்கின்றன, தொலைபேசிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவை 586, அவைகளில் இதுவரை அமைத்துள்ளவை 436, 1973-74 ஆம் ஆண்டில் 50 காவல் நிலையங்களுக்கு தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளது. புறங்காவல் நிலையங்கள் 176 இருக்கின்றன. 37 புறங்காவல் நிலையங்களுக்கு தொலைபேசி அமைக்கப்பட்டுள்ளது, 1973-74ஆம் ஆண்டில் 8 புறக் காவல் நிலையங்களுக்கு

தொலைபேசி வசதி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உவரி, திசையன்விளை ஆகிய இடங்களிலே ஏற்பட்ட தகராறுகள் பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அதைப்பற்றி பலபேர்கள் இங்கே சுட்டிக் காட்டிப் பேசினார்கள், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய தொடக்க உரையில் இதைப்பற்றி எடுத்துச்சொன்னார்கள், ஆனாலும் அவர்கள் அதை விரிவாகப் பேச விரும்பாமல் ஓரளவுக்கு சமரஸ ஏற்பாடுகள் அங்கே நடைபெறவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டு நிறுத்திக்கொண்டார்கள்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் விரிவாக அதைப் பற்றிச் சொல்லி அரசு எடுகக்வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றிச் சொன்னார்கள். உவரி பகுதியிலே நாடார் உவரி என்றும் மீனவர் உவரி என்றும் இருக்கின்றன, அந்தப் பகுதியிலே அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டு வருகின்றன. அந்தச் சச்சரவுகளைப்பற்றி இங்கே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்த நேரத்திலே நான் எடுத்துச்சொன்னது அதைப்பற்றி இங்கே விவாதிப்பதன் மூலமாக மேலும் அது பெருகுவதற்கு இடம் ஏற்பட்டுவிடக்கூடும், யோசித்துச் செய்ய வேண்டும் என்பதாகும்.

அது வகுப்புக் கலவரமாக மூண்டுவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது நம் அனைவருடைய கடமை. நம்முடைய அதிகாரிகள் தலையிட்டு உவரி திசையன்விளை பகுதிகளிலே சமரஸத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தற்சமயம் உவரி கிராமம், திசையன்விளை காவல் நிலையத்தின் எல்லைக்குள் உள்ளது. அங்கே காவல் நிலையம் இல்லாத காரணத்தாலே வகுப்புக் கலவரங்களைத் தடுக்கமுடிய வில்லை. ஆகவே அரசு உவரி கிராமத்தில் ஒரு காவல் நிலையம் உடனடியாக அமைக்க முடிவு செய்து ஆணையிட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திசையன்விளை காவல் நிலையத்தை விரிவுபடுத்தி ஒரு போலீஸ் சர்க்கிளாக அதை ஆக்குவதற்கும் முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

உவரி கிராமத்தில் ஏற்படுத்த இருக்கும் காவல் நிலையத்திற்காக ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு தலைமைக் காவலர், ஒரு முதல்தர காவலர், இரண்டாம்தர காவலர்கள் 16 ஆகியவர்களையும் திசையன்விளையில் ஏற்படுத்த இருக்கும் போலீஸ் சர்க்கிளுக்காக ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு முதல்தர காவலரும், ஒரு இரண்டாம்தர காவலரும் நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது, நம்முடைய அரசு பட்டியிலிலிருந்து இல்லாமல் இந்த ஏற்பாட்டை இருக்கின்ற சூழ்நிலைகளுக்கேற்ப உடனடியாக ஏற்பாடுகள் செய்வதற்காக சிறப்பு கட்டளையாக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே போலீஸார் ஊதியங்களைத் திருத்தி யமைப்பதற்காக கமிஷன் போடப்பட்டிருக்கலாம், ஆனால் காவல் துறையைச் சீரமைக்கவும், காவல்துறை பணிகளை ஒழுங்குபடுத்தவும், காவல் துறையினரின் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படவும், சலுகைகள் அளிக்கப்படவும் அவர்களை ஊக்கப்படுத்துகின்ற முயற்சிகள் இவைகளுக்காகவும் இந்தியாவிலேயே ஒரு போலீஸ் கமிஷன் போட்டது தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

போலீஸ் கமிஷனுடைய மொத்தப் பரிந்துரைகள் 133, அவற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டவை 116, ஒதுக்கி வைக்கப்பட்டவை 13, தள்ளிப்போடப்பட்டவை 4, முழுவதுமாகச் செயல்படுத்தப்பட்ட பரிந்துரைகள் 32 செயல்படுத்தப்பட்டுவரும் பரிந்துரைகள் 38. நாம் ஒத்துக்கொண்ட 116 பரிந்துரைகளில் செய்தித் தொடர்பு துறை சம்பந்தமான பரிந்துரைகளை 3 ஆண்டுகளிலும் ஆட்படைத் திறன்பற்றிய பரிந்துரைகளை 5 ஆண்டுகளிலும், போக்குவரத்து பற்றிய பரிந்துரைகளை 7 ஆண்டுகளிலும் செயல்படுத்தத் திட்டமிட்டுவருகிறோம்.

இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டவைகளுக்கான தொடர் செலவு 3 கோடியே 38 இலட்சமும் தொடராச் செலவு 3 கோடி ரூபாயும் ஆகிறது என்பதை எண்ணிப்பார்த்தால் 116 பரிந்துரைகளையும் ஒரேயடியாக நாம் செயல்படுத்த முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். போலீஸ் கமிஷன் பரிந்துரைகளுக்கு ஏற்பவும், அது நம்முடைய

உள்ளத்திலே ஏற்படுத்தியிருக்கும் அடிப்படையான உணர்வும் - அவர்களின் சிபாரிசு என்று மட்டும் சொல்லிவிட முடியாது - அதன் மூலமாக அது அடிப்படை அமைத்துக்கொடுத்திருக்கிற உணர்வுபூர்வமாகவும் வேறு சில சலுகைகளை நம் காவல் துறையினருக்கு வழங்க இருக்கிறோம். இப்பொழுது இந்த மானியத்தின் தொடர்பாக வேறு சில சலுகைகளையும் நாம் இங்கே மகிழ்ச்சியோடு அறிவிப்பதில் பெருமை கொள்கிறேன்.

காவலர்கள் தங்கள் கடமையை ஆற்றும் நேரத்தில், சமூக விரோதச் சக்திகளுடன் ஏற்படக்கூடிய கைகலப்பினாலோ, அல்லது மற்றக் காரணங்களாலோ வீர மரணம் அடைந்தால், அவ்வாறு வீர மரணம் அடைந்த காவலரின் குடும்பத்திற்கு. எவ்வித நிபந்தனையுமின்றி காவலர் தம் "அதிக அளவு காலச்" சம்பளத்தில் சரிபாதிக்குச் சமமான தொகையை ஓய்வூதியமாக அளிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே எப்படி பென்ஷன் அளிக்கப்பட்டது என்றால், உதாரணத்திற்கு 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் சம்பளம் வாங்குகின்ற ஒரு அதிகாரி இறந்துவிட்டார் என்றால், அவர் 300 ரூபாய் சம்பளம் வாங்கினால் பென்ஷன் விதிமுறைகள், அதற்குட்பட்டபடி பென்ஷன் வழங்கப்பட்டது. ஆனால் இப்பொழுது 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் வாங்க வேண்டிய ஒரு அதிகாரி, 300 ரூபாய் வாங்கிக்கொண்டிருக்கும் பொழுது, இப்படிப்பட்ட ஒரு கடமையாற்றுகின்ற நேரத்தில் இறந்துவிட்டால் அவர் வாங்க வேண்டிய 500 ரூபாயைக் கணக்குப் பார்த்து, எந்த விதிமுறைகளையும் வகுக்காமல் சரிபாதிக்குச் சமமான தொகையை ஓய்வூதியமாக அளிக்க விதி செய்திருக்கிறது என்பதை இந்த மாமன்றம் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

செப்டம்பர் 15-ஆம் தேதி, அண்ணா பிறந்த நாளில், இப்படிப்பட்ட வீரச் செயல்கள், அல்லது வீரமரணம் அடைந்தவர் களுக்கு வீரப்பதக்கம், பணமுடிப்பு செப்டம்பர் 15-இல் அளிப்பதை இங்கே உள்ள உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

அத்துடன், தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியவர்கள் தங்களது 10 வருட, 15 வருட, 20 வருட பணிக் காலத்தில் பதிவு செய்யப்படக்கூடிய தண்டனைகள் ஏதுமின்றியும், சிறு தண்டனைகள் இரண்டிற்குமேல் இல்லாமல் திறமான பணிகள் சிறப்புப் பதிவுகள் (குட் சர்வீஸ் என்ட்ரி) பெற்றவர்களுக்கு, அவர் தம் ஊதிய காலத்தையும் மேற்சொன்ன பதிவுகளின் எண்ணிக்கையையும் அனுசரித்து மாதம் ஒன்றுக்கு 1 ரூபாய், 1.50 ரூபாய், 2 ரூபாய் முறையே சிறப்பு ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். இந்தச் சிறப்பு ஊதியம் 4,407 பேர்களுக்கு மேற்படாமல் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை சமீப காலம் வரை இருந்து வந்தது. இந்த நிபந்தனை இப்போது அகற்றப்பட்டு தகுதி பெற்றவர்கள் அனைவருக்கும் இச்சிறப்பு ஊதியம் அளிக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்கள் கடமையாற்றும் சமயம் சமூக விரோத சக்திகளுடன் ஏற்படக்கூடிய கைகலப்பினாலோ அல்லது மற்றக் காரணங்களினாலோ காயமுற்றால் அண்ணா பிறந்தநாள் வீரப்பதக்கம் பெறக்கூடிய நிலை இன்றுள்ளது, அஃதன்னியில் பணியாற்றும்போது காயமுற்றவர்கள், சைக்கிளிலே செல்பவர்கள் விபத்திற்கு ஆளாக்கப்பட்டால், ஸ்கூட்டரிலே செல்பவர்கள் விபத்திற்கு ஆளாக்கப்பட்டால், சைக்கிள் மோட்டாரில் ஜீப்புகளிலே செல்பவர்கள் விபத்திற்கு ஆளாக்கப்பட்டால் அவர் நிரந்தர ஊனம் அடைந்து, பணியில் தொடர இயலாமல் நலிவுறும் நிலையில் இருப்பின் அந்தக் காவலருக்கு நிபந்தனை ஏதுமின்றி மானியத் தொகையாக ரூ. 3,000 அளிக்க அரசு தீர்மானித்துள்ளது என்பதையும் மகிழ்வுடன் அறிவிக்கின்றேன்.

அவர்களுடைய ஊதியம் பற்றியெல்லாம் இங்கு பேசப்பட்டது. எனக்குள்ள வருத்தமெல்லாம் - ஒரு சிலரைத் தவிர - மற்ற உறுப்பினர்கள் எல்லாம் காவல் துறையில் இங்கே தவறு, இந்த அதிகாரி இந்தத் தவற்றைச் செய்தார், அந்த அதிகாரி அந்தத் தவற்றைச் செய்தார் என்பதிலே அதிகமாகக் கவனம் செலுத்தினார்களே தவிர, அந்தத் துறையிலே இருக்கின்ற 40,000 பேர்களும் மனிதர்கள்தான், அவர்களும் தொழிலாளிகள்தான்,

அவர்களுடைய தேவைகளையும் உணரவேண்டுமென்று இந்தக் குறைபாடுகளைப்பற்றிப் பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள் தங்களுடைய உள்ளத்திலே அமைத்துக்கொள்ளாமல் பேசியது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும்.

ஆனால் நாம் போலீஸ் கமிஷன் அமைத்ததற்குப் பிறகு எந்த அளவிற்கு அவர்களுடைய சம்பளம் அதிகரிக்கப்பட்டிருக் கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். ஏற்கனவே இருந்த சம்பளத்தோடு அகவிலைப்படியையும் இணைத்து அதனால் பென்ஷன் வாங்குகின்ற நேரத்தில் அதிக லாபம் அடையும் விதத்தில் ஏற்படுத்தியிருக்கிறோம்.

கேரளத்தில் 80 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தோடு டி.ஏ. 125 ரூபாயும் சேர்த்து 205 ரூபாய் கிடைக்கிறது.

கர்நாடகத்தில் 85 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தோடு 125 ரூபாய் டி.ஏ.யும் சேர்ந்து 210 ரூபாய் கிடைக்கிறது. இங்கேதான் ஒரு 5 ரூபாய் அதிகமாகக் கிடைக்கிறது.

ஆந்திரத்தில் 70 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தோடு 120 ரூபாய் அகவிலைப்படியும் சேர்ந்து மொத்தம் 190 ரூபாய் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் அடைப்படைச் சம்பளம் 150 ரூபாயாகி, டி.ஏ. 55 ரூபாயும் சேர்த்து 205 ரூபாய் நாம் அளிக்கிறோம். இதிலே முதல்தர காவலர்களுக்கு 200 ரூபாயிலிருந்து 300 ரூபாய் என்ற அளவில் மாற்றியமைத்து இருக்கிறோம்.

இன்னும் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமென்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். தீயணைப்புப் படையினருக்கும் இவர்களுக்கும் இருக்கும் வேறுபாடு அகற்றப்பட வேண்டாமா என்று கேட்டார்கள். அந்தக் கேள்வியை மனிதாபிமானத்தோடு எண்ணிப்பார்த்து நிச்சயமாக, தகுந்த நல்லதொரு முடிவு இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

தீயணைப்புத் துறையைப்பற்றிப் பேசப்பட்டது. குறிப்பாக குடியாத்தத்தைப்பற்றிப் பலரும் எடுத்துக்கூறினார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார்கள். எனக்குள்ள குறையே, நான் மேலவையிலே ஒரு

ஒத்திவைப்புத் தீர்மானம் இதுபற்றி வந்தபொழுது, குடியாத்தம் தீவிபத்து பற்றிப் பேசியிருக்கிறேன். பிரதமர் இலட்சம் ரூபாய் அளித்திருக்கிறார், காங்கிரஸ் கட்சி 10,000 ரூபாய் அளித்திருக்கிறது, முதலமைச்சர் நிதியிலிருந்து இலட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்தேன். ஆனால், பொன்னப்ப நாடார் பேசும்பொழுது பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் கொடுத்த இலட்சம் ரூபாய் தெரிந்தது, காங்கிரஸ் கட்சி கொடுத்த 10,000 ரூபாய் தெரிந்தது, ஆனால் உடனடியாக முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுத்த இலட்சம் ரூபாய் அவருக்குத் தெரியாமல் போய்விட்டது என்பதற்காக வருந்துகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : உண்மையிலேயே விடுபட்டுப்போய்விட்டது. அதைத் திருத்திக்கொள்வதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அவர்கள் இன்னும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இன்னும் அதிகமாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : வேண்டுமென்றே விட்டுவிட்டதாக நான் சொல்லவில்லை. நாங்கள் செய்வது அவர்கள் நினைவிற்கு வருவதில்லை, அதற்காகத்தான் சொன்னேன்.

தீயணைக்கும் படை இயந்திரங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : குடியாத்தம் தீ விபத்திற்குப் பிறகு பல இடங்களில் விபத்துக்கள் நடக்கின்றன. இன்றைக்குக் காலையிலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆம்பூரிலே விபத்து ஏற்பட்டு, சந்தேகப்பட்டு அங்கு சாதாரணமாகப் போன ஒரு ஆளைப் பிடித்து அடித்துக் கொன்றிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட விபத்துகள் எப்படி ஏற்படுகின்றன என்று அரசாங்கமே அறிக்கை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா? அப்படி ஒரு கமிஷன் தீர்ப்பு இருந்தால் இம்மாதிரி ஏற்படாது அல்லவா? எனவே விசாரணை கமிஷன் வைக்கும் கருத்து இருக்கிறதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தீ விபத்துகளைப்பற்றி நான் போலீஸ் உயர் அதிகாரிகளோடு

அடிக்கடி கலந்து பேசி, எல்லா இடங்களிலும் நம் காவல் துறையினர் உஷார்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்கேற்ப அந்தக் காரியங்கள் நடக்கின்றன.

ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. நம் மாநிலத்திலுள்ள போலீஸ்ஸாரின் எண்ணிக்கை 40,000. ஆனால் நாமோ 4½ கோடி மக்கள் இருக்கிறோம்.

அந்த விகிதாச்சாரப்படி பார்த்தால் 1,000 பேருக்கு ஒரு காவலர் என்று வருவார். ஆயிரம் பேருக்கு ஒரு காவலர் இருக்கிறார். ஆனால், எத்தனை கிராமங்கள், எத்தனை ஊர்கள், எத்தனை சிற்றூர்கள், எத்தனை நகரங்கள் இருக்கின்றன என்று எண்ணிப் பார்த்தால், உடனடியாக எல்லா இடங்களிலும் தீ விபத்துகள் ஏற்படும்பொழுது அங்கே அதிகாரிகள் அடுத்த கணத்திலேயே இருப்பது என்பது இயலாத காரியம். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள், தீ விபத்து அதிகாரிகள் எங்கே போனார்கள் என்று கேட்டார்கள். அதிகாரிகளெல்லாம் எங்கெங்கே தீ விபத்து ஏற்படப்போகிறது என்று ஜோசியம் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. ஆனால் தீ விபத்து ஏற்படும் நேரத்தில் உடனடியாக அவர்கள் அங்கே செல்லத் தயங்கினார்களா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அதிலே தவறு ஏற்பட்டால் அவர்களைக் கண்டிக்க, தண்டிக்க, விசாரிக்க, விளக்கம் கேட்க நமக்கு உரிமை உண்டு. நிச்சயமாக அரசு அந்த நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருக்கிறது.

ஆனால் ஒவ்வொரு தீ விபத்து நடைபெறும் இடத்திலும் அதிகாரிகள் முன்கூட்டியே இருப்பது என்பது இயலாத காரியம். எங்கே பரவலாக நடைபெறுகிறது என்ற விவரம் தெரிகிறதோ அங்கெல்லாம் முன்னெச்சரிக்கையாக இருக்கக் காவலர்கள் தயராக இருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் சொன்னது, குடியாத்தம் தீ விபத்தில் - ஜோசியம் பார்க்க வேண்டிய அவசியமில்லை - ஆனால் யாரோ ஓரிருவர் லீவில் போகலாம், கம்ப்ளீட்டாக, ஏணிப்படிபோல் இருக்க வேண்டிய அந்த 4, 5 பேர்களும் லீவில் போவது என்றால் எல்லோரும் ஒன்றாக ஜோசியம் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்களா ? திடீரென்று தீ

விபத்து ஏற்பட்டால் அதற்கு யாராவது ஒரு அதிகாரியாவது இருக்க வேண்டும், ஒரு அதிகாரி லீவில் போகலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முதலமைச்சரவர்கள் சொல்லும்பொழுது தீ விபத்து எங்கே வருகிறது என்று ஜோசியம் பார்க்க முடியாது என்று சொன்னார்கள். அது உண்மைதான். கண்டுபிடிக்க முடியாதுதான். ஆனால் சென்ற நான்கைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து, மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட, மற்ற விஷயங்களுக்கு மற்ற மாநிலங்களை ஒப்பிடுவதால் சொல்கிறேன், மற்ற எல்லா மாநிலங்களையும்விட ஜாஸ்தியாக இங்கேதான் குடிசைகள் தீ விபத்தில் சிக்கிக்கொண்டிருக்கின்றன. தங்கமணி அவர்கள்கூட அதற்காகத்தான் சொன்னார்கள். அதற்கு ஏதாவது கண்டுபிடித்து அந்தத் தீ விபத்துக்கள் வராத வகையிலே ஏதாவது முதலமைச்சரவர்கள் திட்டம் வைத்திருக்கிறார்களா என்பதை விளக்கமாகச் சொன்னால் நல்லது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 1967-ல் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் சென்னை மாநகரமெங்கும் குடிசைகள் தீபற்றி எரிந்தன தொடர்ந்து தமிழகத்திலே பல்வேறு இடங்களில் தீ விபத்துக்கள் ஏற்பட்டன. அதற்குப் பிறகு கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக அந்த அளவிற்கு இல்லாமல் படிப்படியாக அது குறைந்திருக்கிறது.

சென்னையைப் பொறுத்தவரையில், குடிசைமாற்று வாரியம் அமைக்கப்பட்டு, குடிசைகளெல்லாம் மாற்றப்பட்டு நல்ல கட்டிடங்கள் கட்டித்தந்த அந்த முயற்சிக்குப் பிறகு சென்னை மாநகரத்தில் தீ விபத்துக்கள் வேகமாகக் குறைந்திருப்பதையும் நாம் காண்கிறோம்.

குடியாத்தத்தைப் பொறுத்தவரை அதுபற்றி முதல் நாள் பேசும்போது கே.டி.கே. அவர்கள் சொன்னார்கள் சதி இருக்கக் கூடும், ஆராய வேண்டும் என்று கூடச் சொன்னார்கள். அந்தப் பகுதி மக்களும் அப்படித்தான் எண்ணுகிறார்கள். ஆனால் இப்படிச் சொல்லுகிற நேரத்திலே பாதிக்கப்பட்ட மக்கள் தவறாகக் கருதிக்கொள்ளக் கூடாது. ஒருசில இடங்களில் தங்களுடைய குடிசைகள் தீ விபத்துக்கு ஆளாக வேண்டுமென்று கருதுகிற உணர்வு சிலரிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், நல்ல நிதி

உதவி கிடைக்கிறது; மாற்று ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்த முயற்சிகளில் நாம் வெகு வேகமாகச் செல்லுகிற நேரத்தில் மிக மோசமாக இருக்கும் குடிசைகள் தீயில் வெந்துபோவது நல்லது என்று எண்ணும் சிலர் இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; அதிகாரிகளும், கட்சி சார்பற்ற முறையில் எல்லாக் கட்சி நண்பர்களும் விபத்து நடக்கும் இடத்தைப் பார்க்கும்போது சிலரது வீட்டுச் சாமான்கள் எல்லாம் முன்கூட்டியே தீயினால் பாதிக்கப்படாத தொலைவுக்கு எடுத்து வைக்கப்பட்டிருக் கின்றன என்ற சேதியும் வருகின்றது. ஆகவே இதிலே நாம் அவசர முடிவுக்கு வந்து இந்தக் காரணத்தாலேதான் தீ விபத்து ஏற்பட்டது என்று சொல்லவில்லை.

திரு. கே. டி. கே. அவர்கள் நீதி விசாரணையே வேண்டுமென்று சொன்னார்கள். நீதி விசாரணை என்ற அளவுக்கு இல்லாமல் உஷாராக இருந்து கண்காணிக்க சகல ஏற்பாடுகளையும் அரசு சார்பில் நாங்கள் மேற்கொள்வோம் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடியாத்தத்தில் எல்லா அலுவலர்களும் இல்லாமல் போய்விட்டார்கள் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். எதையும் மிகைப்படுத்திச் சொல்வது அவர்களுக்கு எப்போதும் மகிழ்ச்சிகரமான விஷயம். எல்லா அதிகாரிகளும் இல்லாமல் போய்விடவில்லை. ஒரே ஒரு அதிகாரி மாத்திரம்தான் குடியாத்தத்தில் விடுமுறையில் இருந்தார் என்ற தகவல் வந்திருக்கிறது.

அதிகாரிகள் தாமதமாகப் போயிருக்கலாம்; போன பிறகு தீ அதிகமாக மூண்டுவிட்ட காரணத்தால் உள்ளே நுழைய முடியாமல் தவித்திருக்கலாம், தீயணைக்கும் படைகூட சற்றுத் தாமதமாக வந்தது என்று குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவைகளைப்பற்றி விசாரித்து அறிக்கை தரவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் வட்ட வாரியாக தீயணைக்கும் படைகள் நிறுவப்பட வேண்டுமென்ற கருத்து கூறப்பட்டது. இதற்கு 10 கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை; அந்தச் செலவை

ஏற்றுக்கொள்ளலாம் என்று கே. டி. கே. அவர்கள் கூட அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். பத்து கோடி ரூபாய் செலவழிப்பதில்கூடத் தயக்கம் இல்லை. அதற்குத் தேவையான இயந்திரங்களைப் பொறுத்தும், கட்டடங்களை வாடகைக்குப் பெறுவது அல்லது இடங்களை அமைப்பது போன்றவைகளிலும் காலதாமதம் ஏற்பட்டுவிடுகிறது.

ஏற்கனவே, இந்த ஆண்டு கிருஷ்ணகிரி, பண்ருட்டி, ஆரணி, மேட்டுப் பாளையம் ஆகிய நான்கு இடங்களில் மாத்திரம் தீயணைக்கும் படைகளுக்கு அனுமதி அளிக்கலாம் என்று அறிவித்திருந்தோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச்சொன்னதற்குப் பிறகு, அதைக்கேட்ட பிறகு கிருஷ்ணகிரி, பண்ருட்டி, ஆரணி, மேட்டுப்பாளையம் ஆகிய நான்கு இடங்கள் மாத்திரமல்லாமல் பட்டுக்கோட்டை, மணப்பாறை, நாமக்கல், சிவகங்கை, ஆத்தூர், செங்கம், திருக்கோயிலூர், கடையநல்லூர், வந்தவாசி, நத்தம், ஸ்ரீபெரும்புதூர் ஆக மொத்தம் 15 இடங்களில் தீயணைக்கும் படைகள் அமைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே அன்றைக்கு குடியாத்தம் தீ விபத்து பற்றிப் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கெங்கு இருந்து தீயணைக்கும் படைகள் வந்தன என்று சொன்னபட்டியலில் வாணியம்பாடி இல்லை. வாணியம்பாடியில் இதுவரை வைக்கவில்லை. பல நாட்கள் கோரிக்கையாக இருக்கிறது. ஆம்பூரில் இருக்கிறதா என்று தெரியவில்லை. வாணியம்பாடி கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. அதையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இப்படிப் பதில் சொல்ல ஆரம்பித்தால் இப்போது குறிப்பிடப்பட்டவை தவிர மற்ற எல்லா ஊர்க்காரர்களும் எழுந்து ஒவ்வொருவராகக் கேட்க ஆரம்பித்தால் மாலை 5 மணி வரை பதில் சொல்லிக் கொண்டிருக்கலாம்.

தீயணைப்புத் துறை பணியாளர் சேமநல நிதிக்காக ஏற்கனவே ஆண்டுதோறும் 5,000 ரூபாய் அரசு மானியமாக வழங்கப்படுகிறது. அந்த ஐயாயிரம் ரூபாயை இந்த ஆண்டு முதல்

தீயணைப்புத் துறையினருக்கு 15,000 ரூபாய் மானியமாக வழங்க அரசு தீர்மானித்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக காவல் துறையைப் பாராட்டிப் பேசினார்கள். என்ன காரணத்தாலோ சென்ற ஆண்டு காவல்துறை ஏற்றுக்கொண்ட கடுமையான கண்டனங்களுக்கு ஆளாகாமல் இந்த ஆண்டு எல்லாக் கட்சிக்காரர்களும் - தோழமைக் கட்சியைச் சொல்லவில்லை. முஸ்லீம் லீக் தலைவர் மொய்தீன் பேசினார் - மற்ற எதிர்க் கட்சிக்காரர்களும் அரவணைத்துப் பேசுவது போல் தெரிந்தது. 1976-ஐ எண்ணிக்கொண்டு இன்றைக்கு அரவணைத்துச் செல்ல வேண்டியது முறை என்ற கற்பனையோடு, கனவோடு அரவணைத்துப் பேசினார்கள் என்று எண்ணுகிறேன் பரவாயில்லை. இரண்டாண்டு காலத்திற்குக் காவல்துறை எங்களிடத்தில் நல்ல மிளிர்ச்சியோடு பழகும் என்ற அந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பாராட்டிவிட்டு அதே நேரத்தில் அவர்கள் ஏன் கெட்டுப்போகிறார்கள் தெரியுமா? - ஆளும் கட்சியின் தலையீடு; ஆளும் கட்சி தலையிடுகிற காரணத்தால்தான் காவல் துறை களங்கப்பட்டுவிட்டது என்று பலவகையில் எடுத்துச்சொன்னாலும், எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல முடியாவிட்டாலும், அவற்றைப்பற்றி நிச்சயமாக அறிவேன் என்றாலும்கூட ஒன்றிரண்டு பற்றி விளக்கத் தயாராக இருக்கிறேன்.

மணலி அவர்கள் சொன்னார்கள் - ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரண்டுபேர் தலையீடுமே இருக்கிறது என்று சொன்னார்கள். தலையிடுவதற்கும் முறையிடுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வது, எதுவாக இருந்தாலும் ஊரில் நாங்கள்தான் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று முறையிடுவோம்; ஆளும் கட்சிக்காரர்கள் முறையிடவே செல்லக்கூடாது என்று சொல்லுகிறார்கள். நான் அதைக் கண்டிப்பாக மறுக்கிறேன்.

முறையிடுகிற உரிமை எதிர்க் கட்சிக்காரர்களுக்கு எப்படி இருக்கிறதோ அதைப்போல் ஆளும் கட்சிக்காரர்களுக்கும் இருக்கிறது. வழக்குகள் போட்டால் ஆளும் சட்சிக்காரர்களுக்குச் சார்பாகவே நடைபெறுகிறது என்றெல்லாம் பேசப்படுகிறது.

கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டையில் லத்தீப் என்ற முஸ்லீம் இளைஞன், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் கொலை செய்யப்பட்டான். வழக்கில் கைது செய்யப்பட்ட அத்தனைபேரும் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கொலை நடந்தது உண்மை; செத்தது உண்மை; கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொலை செய்யப்பட்டால் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்; வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசியல் கொலைக்கு ஆளானால், குற்றவாளிகள் ஆளும் கட்சியினராக இருந்தால் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பது தவறானது.

ஆளும் கட்சிக்காரர்களும் பலபேர் தண்டிக்கப்பட்டார்கள் என்ற பட்டியலை என்னால் எடுத்துச்சொல்ல முடியும். அதற்கு ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்போது சொன்னார்கள், சொல்லிக்கொண்டே வந்தார்கள்; அவர்களை அறியாமலே முன்னுக்கு பின் முரணாக ஒன்றைச் சொன்னார்கள். இந்த மானியத்திலே கே. டி. கே தங்கமணி அவர்கள் பேசிய பேச்சு போற்றத்தக்க வகையில் அமைந்திருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆத்திரத்திற்கு எள்ளளவும் இடம் இல்லாமல் மிகுந்த அமைதியாக முறைப்படுத்தி பேச்சை வகுத்துப் பேசினார்கள். அதைப் பாராட்டுவதால் மற்றவர்கள் பேச்சு அப்படி அமையவில்லை என்று பொருளில்லை. ஆனால், மெத்தவும் ஆத்திரத்தைக் குறைத்துக்கொண்டு நல்ல பல விஷயங்களை அரசுக்கு எடுத்துச்சொன்னார்கள். இப்படிச் சொல்லுவதால் அவர்களை இழுக்கிறேன் என்று சந்தேகப்படவேண்டிய அவசியம் இல்லை. உண்மையை உணருகிற காலம் மெதுவாக வந்தாலும், மெல்ல மெல்ல வந்தாலும், உறுதியாக வரும் என்பதில் நம்பிக்கையுடையவன் நான் என்ற காரணத்தால் இதுபோன்ற யோசனைகளை கே. டி. கே. போன்றோர், பொன்னப்ப நாடார் போன்றோர், மாரிமுத்து போன்றோர், மணலி, மொய்தீன், எட்மண்ட் போன்றோர் கூறினால் சிலாக்கியமாக இருக்கும்.

எட்மண்ட் ஆசனத்தில் இல்லை. அவர் இங்கிருந்து அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மன்னிப்புக் கோரப்

போகிறேன் என்று சொன்னார். தேவையில்லை என்று சொன்னேன். மன்னிப்புக் கோர யாரிடத்தில் அனுமதி கேட்டாரோ தெரியவில்லை; அனுமதி கிடைக்காத காரணத்தால் என் முகத்தைப் பார்க்க வேண்டாமென்று கருதி இங்கிருந்து போய்விட்டாரோ என்று கருதுகிறேன்.

நல்ல பல யோசனைகளை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறது இந்த அரசு. அப்படி விரும்புகிற நேரத்தில் சொல்லப்படுகிற சிறு சிறு குறைபாடுகள், அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்தவைகளைத் தொகுத்துச் சொன்னாலும், அவற்றிற்கு நான் இங்கே பதிலளிக்க நேரம் இல்லாமல் போனாலும் அவை நிச்சயமாகக் கவனிக்கப்படுகின்றன. ஏற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்போது, போலீஸ் நன்றாகத்தான் இருக்கிறது; அரசாங்கம்தான் ஆட்டிப்படைக்கிறது என்று சொல்லிக்கொண்டே வந்தார்கள். எங்கோ ஒரு ஊரில் - மானாமதுரைக்குப் பக்கத்தில் நடைபெற்ற நிலத் தகராறில் போலீசார் நிலப்பிரபுக்களுக்குப் பக்கத்தில் இருந்தார்கள்; அரசாங்கம் தலையிட்டுச் சரி செய்தது என்று சொன்னார்கள். முதலில் போலீசார் சரியாக நடக்கிறார்கள்; அரசாங்கந்தான் தவறு செய்துவிட்டது என்ற கருத்தை வலியுறுத்தி வந்தவர்கள் திடீரென்று மானாமதுரைக்கு அருகில் போலீசார் தவறு செய்தார்கள்; அரசு சரி செய்தது என்று சொன்னார்கள். இதிலிருந்து தவறுகள் நடைபெறுவதற்கும் அரசுக்கும் கிஞ்சித்தும் தொடர்பு இல்லை என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

இன்றைக்குக்கூட காலைப் பத்திரிகையில் பார்த்தேன். கேரளத்தில் பெண் போலீசை இரண்டு ஆண் போலீசார் பலாத்காரம் செய்தார்கள் என்ற செய்தியைப் பார்த்தேன், வேறு பத்திரிகையில் அல்ல; இந்துப் பத்திரிகையில்கூட வந்திருக்கிறது. இதற்கு அரசு பொறுப்பு என்று சொல்லமாட்டேன்.

இங்கேயுள்ள மற்ற இலாகாக்களிலேயும் இருப்பவர்கள், எல்லா அதிகாரிகளும் மனிதர்கள்தான். எல்லா அதிகாரிகளும் தவறு செய்பவர்கள் அல்ல. அதற்காக எல்லா அதிகாரிகளும் நல்லவர்களும் அல்ல. ஒருசில அதிகாரிகள் தவறு செய்யக்கூடும்.

அப்படித் தவறு செய்யக்கூடிய அதிகாரிகளை சுட்டிக்காட்டினால் அவர்களைத் தண்டிக்க, கண்டிக்க இந்த அரசு கடமைப் பட்டிருக்கிறது.

அதிகாரிகளைப் பொறுத்தமட்டில், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் எவ்வளவு நண்பர்களாக இருந்தாலும், ஆருயிர் தோழர்களாக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து பழக்கப்பட்ட அரசியல் இலக்கணம் வகுத்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். (கைதட்டல்).

ஆகவே, அச்சமின்றி இப்படிப்பட்ட விவகாரங்களை நீங்கள் எங்களிடம் எடுத்துச்சொல்லலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பர் ஹாண்டே அவர்கள் இங்கே இரண்டொரு குறிப்புகளை எடுத்துச்சொல்லி இதற்கெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப்போகிறார், என்று கேட்டார்கள்.

ஒன்று பார்க்கிறேன். இந்த மானியத்தை ராஜிநாமாவி லிருந்து ஆரம்பித்து நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் இந்த மானியத்தில் பேசும்போது நீங்கள் அதிகச் சுமையைத் தாங்கிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கூறினார்கள். என்மீது அவருக்கு ஏற்பட்ட இந்தப் பரிதாபத்திற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் என்னை அவர்கள் உணர்வார்கள். ஆகவே, இந்தப் பரிதாபத்தோடு அதிகச் சுமையைத் தாங்கிக்கொண்டிருக்கிறீர்கள், இலாகாவை மாற்றிக்கொடுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.

ஆனால் ஹாண்டே அவர்கள் ராஜிநாமாவும் வேண்டாம். இலாகா மாற்றமும் வேண்டாமென்று கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து குறைந்தபட்சம் ஒரு மன்னிப்பாவது கேட்டுக்கொள்ளுங்கள் என்றளவிற்கு அவர்கள் தமது கருத்தைச் சொன்னார்கள். இரண்டு மூன்று குற்றங்களை எடுத்துச்சொல்லி இவைகளைப் பற்றியெல்லாம் விசாரிக்கவேண்டும், என்ன அக்கிரமங்கள் நடைபெறுகின்றன என்றெல்லாம் சொன்னார்கள்.

நான் உடனடியாக அவைபற்றி விசாரித்தேன்.

உத்தமபாளையம் தாலுகாவில் சின்னமனூரில் குருசாமி என்பவர் அண்ணா தி. மு. க. அமைப்பாளரை 8-11-1973 அன்று சோனைமுத்து மற்றும் சிலர் கடத்திச்சென்று கழுத்தை நெறித்து கொலை செய்து ஆற்றில் போட்டுவிட்டார்கள். இதுபற்றி புகார் செய்தும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். மதுரை தி. மு. க. செயலாளர் பொன் முத்துராமலிங்கம் தலையிட்டு மேல் நடவடிக்கை எடுக்கத் தடை செய்துள்ளாரா என்று அவர்களுடைய அதிகாரபூர்வமான கட்சிப் பத்திரிகையில் வந்த செய்தியை இங்கே அவர் சொன்னார்.

விசாரித்துப் பார்த்தால் அந்த குருசாமி உயிரோடு இருக்கிறார். (பலத்த கைதட்டல்) என்ன விவரம் என்றால். அ. தி. மு. க. உறுப்பினர் குருசாமியை யாரோ கொலை செய்துவிட்டார்கள் என்று காவல் துறையினருக்கு வந்த தந்தியின் மீது விசாரணை நடத்தப்பட்டது. அந்தத் தந்தியை அனுப்பியிருந்த சோனைமுத்துவிற்கும் குருசாமிக்கும் இடையே உறவு சீராக இல்லை. அதற்குக் காரணம் சோனைமுத்து தன் மனைவியை அடித்துக்கொடுமைப்படுத்துவதை குருசாமி - சோனைமுத்துவின் மாமனார் மாமியாருக்குத் தெரிவித்துவிட்டார் என்ற ஒரு எண்ணம் சோனைமுத்துவிற்கு தோன்றியிருந்ததுதான் காரணம் என்று அறியப்பட்டது. சோனைமுத்து தன்மீது கொண்டுள்ள ஆத்திரம் குறையும்மட்டும் எங்காவது சென்றுவரலாம் என்று கருதிய குருசாமி யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் பெரியகுளத்தில் உள்ள தன் உறவினர் ஒருவர் வீட்டிற்குச் சென்று தங்கியிருக்கிறார். 8-11-1973-ல் இவர்களுடைய கட்சிப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது இவர் கொல்லப்பட்டார் என்று. 25-11-1973 அன்று கிராமத்திற்கு அவர் திரும்பிவந்துவிட்டார். ஹாண்டே அவர்கள் பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்து தவறான விளக்கம் கேட்டார். அவருக்கு விளக்கம் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

அதேபோல் இன்னொன்றும் அவர் சொன்னார். கம்பத்தைச் சேர்ந்த குப்புசாமி என்பவர் கொலை செய்யப்பட்டதாக ஒரு செய்தியைச் சொன்னார்கள். 11-3-1974 அன்று தன்னுடைய மகன் குப்புசாமி இரவு 9.45 மணிக்கு விஷம் அருந்தி தற்கொலை செய்துகொண்டான் என்று அவன் தாய் கம்பம் காவல்

நிலையத்திற்குச் சென்று ஒரு புகாரைக் கொடுத்தார். அது குறித்து கம்பம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு உடல் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. வேதியல் பரிசோதனைக்காக உடலுறுப்புகளின் பாகங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. இறப்பைப்பற்றிய கருத்து தெரிவிப்பது வேதியல் பரிசோதனையின் முடிவுக்காக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. ஆகவே தாயார் விஷம் குடித்து மகன் இறந்தான் என்று போலீஸில் அவர்கள் புகார் செய்திருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முதல் அமைச்சர் அவர்கள் அங்கே விஷம் குடித்து அவர் தற்கொலை செய்துகொண்டார் என்று சொன்னார்கள். எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல் மூட்டைப் பூச்சி மருந்து ஊற்றி தற்கொலை செய்துகொண்டார் என்பது தவறான எண்ணம். அவர் தாயார் வாக்குமூலம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதேமாதிரி அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தகப்பனார் அவர்கள் வாக்குமூலம் கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்கொயரி கமிஷன் ரிப்போர்ட்டில் அதற்கு மாறாகவும் இருக்கக்கூடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு கேஸை எடுத்துக்கொண்டு, உங்களுக்குச் சாதகமாக இருக்கக்கூடியதை சொல்வதில் பயன் இல்லை. என்னிடம் ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது. முழுமையாகச் சொல்ல நேரம் இல்லை. அவர்கள் கேட்டால் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். காழ்ப்புணர்ச்சியை வளர்க்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அண்ணா தி. மு. க. மீது காழ்ப்புணர்ச்சி வளரக்கூடாது, தி. மு. க. விற்கும் அண்ணா தி. மு. க. விற்கும் இடையே இந்த மாதிரியான சண்டை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எனக்கிருக்கிற சங்கடமெல்லாம் உயிரோடு இருக்கிற சட்டசபையைச் செத்துப்போன சட்டசபை என்று சொல்கிறீர்கள் - உயிரோடு இருக்கிற குருசாமியைச் செத்துவிட்டார் என்று சொன்னால் எப்படிக் கொலைகாரனைக் கண்டுபிடிப்பது என்பதுதான். . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : உதயகுமார். . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : உதயகுமாரைப் பற்றி நான் சட்டசபையில் என்னென்ன பேசினேன் என்பது

எல்லோருக்கும் தெரியும். எடுத்துப் பாருங்கள் - எனக்குச் சந்தேகமாக இருக்கிறது எனக்கு வந்த தகவல் இப்படி இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறேனேயல்லாமல் இறந்தது உதயகுமார் அல்ல என்று நான் சொல்லவே இல்லை. அதற்கு நீதி விசாரணையே போடப்பட்டது. நீதி விசாரணையிலே கூட போலீஸ் அடித்து உதயகுமார் இறந்தான் என்று சொல்லப்படவில்லை. இறந்தது உதயகுமாராகத்தான் இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு போலீஸ் அடித்து உதயகுமார் இறந்துவிட்டான் என்று சொல்ல முடியாது என்றுதான் நீதி விசாரணையில் இருக்கிறது. இறந்தது உதயகுமாரா இல்லையா என்று தகவல் நல்லமுறையில் அறிய நீதி விசாரணை வைக்க ஒத்துக்கொண்டேன். அதற்குக் காரணம் சந்தேகமான செய்திகள் வருகின்றன, ஆகவே, நீதி விசாரணை வைப்போம் என்று ஒத்துக்கொண்டேனே தவிர வேறு ஒன்றும் அல்ல என்று, பல நாட்களாக சொல்லிக்கொண்டு வந்திருக் கிறார்களே, அதற்குப் பதிலாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் அமைதியாகப் பேசுகிறேன். உதயகுமார் இறந்துபோனதுபற்றி நாங்கள் சொல்லிய நேரத்தில் என்ன தோரணையில் - என்னைப் பார்த்து எள்ளி நகையாடக்கூடிய அளவில் - நீங்கள் பேசியிருக்கிறீர்கள். நாங்கள் உதயகுமார்தான் என்று சொன்னபோது நீங்கள் இல்லை என்று கூறியிருக்கிறீர்கள். பிறகு இறந்ததாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி பல விஷயங்கள் நாங்கள் அப்போது சொன்னதை இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு இங்கு பேசப்பட்ட பிறகு நிரூபிக்கப்பட்ட பல விஷயங்கள் உள்ளன. தகவல் தவறாகவும் இருக்கலாம் அல்லது சரியாகவும் இருக்கலாம். ஆகவேதான் சொல்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் முதலில் சொல்லும்போது எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் சொன்னேன் என்பதை ஹாண்டே அவர்கள் மறந்துவிடக்கூடாது. அவருக்குத் தரப்பட்ட தகவல் தவறானது என்று சொன்னேனே தவிர வேறல்ல. பத்திரிகையிலே வந்த தகவலை வைத்துச் சொல்லியிருக்கிறார். ஆகவே குருசாமி சாகவில்லை என்றுதான் சொன்னேன். பதில் கூறும்போது நான் எவ்வளவு பொறுப்போடு, அடக்கத்தோடு சொன்னேன் என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. முன்பு

உதயகுமார் பற்றிப் பேசும்போது நான் எதிர்க்கட்சிகளை எள்ளி நகையாடுவதுபோல் பேசினேன் என்று சொல்வது தவறு. அப்படி எள்ளி நகையாடக்கூடியவன் அல்ல நான். எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் அப்போது இருந்திருக்கிறார்கள். படங்களைக்கொண்டுவந்து காட்டியிருக்கிறேன். பத்திரிகைகளில் போட்டு அடையாளம் கண்டுபிடியுங்கள் என்று சொல்லப்பட்டது. காவல்துறையிலிருந்து விளம்பரங்கள் செய்யப்பட்டன, யார் என்று கண்டுபிடியுங்கள் என்று. உதயகுமாராக இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம், ஆகவே நீதி விசாரணை போடப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டதே தவிர யாரையும் நான் எள்ளி நகையாடுவதில்லை. எள்ளி நகையாடுகிற பழக்கம் எங்களுக்கு இல்லை. வட ஆற்காடு மாவட்டம் மாதனூர் கிராமத்தில் ஒரு...

திருமதி த. ந. அனந்தநாயகி : தகப்பனாரே தன் பிள்ளையை இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் காட்டினார்களே, அது போலீஸாரின் துப்பறியும் தரத்தைக் காட்டுகிறதா ?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : குளத்தில் மூழ்கி இரண்டு நாள் போனதால் எந்த ஒரு பிரேதத்தையும் அடையாளம் கண்டுபிடிப்பது சிரமம் என்பதால் யாராலும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவருடைய கல்லூரித் தோழர்களால் கூடக் கண்டுபிடித்துச் சொல்ல முடியவில்லை. நெருங்கிப் பழகுகிற தோழர்களால் கூட யார் என்று சொல்வதற்கில்லை என்று சொன்னார்கள். உடனடியாகக் கிடைத்த சாட்சியங்கள் அப்படித்தான் இருந்தன.

வட ஆற்காடு மாவட்டத்தில் மாதனூர் கிராமத்தில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டதாக ஒரு செய்தி வந்து எந்தக் குற்றவாளியும் கைது செய்யப்படவில்லை என்றெல்லாம் - எடுத்தவுடனே டெல்லிக்குத் தந்தி - இங்கு ஒரு அரசு இருப்பதாக யாரும் கருதுவதில்லை - பிரதமர் அவர்களுக்குத் தந்தி ஜனாதிபதி அவர்களுக்குத் தந்தி என்று இப்படி தந்திகள் எல்லாம் கொடுத்தார்கள்.

குற்றவாளிகள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு இ. பி. கோ. 324-வது பிரிவின்படி ஆறு மாதம்

கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டாவது குற்றவாளி பாபுவிற்கும் ஐந்தாவது குற்றவாளி கரியனுக்கும் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, தங்கச்சிமடம் அந்தோணியம்மாள் மரணம் குறித்து கே. டி. கே. தங்கமணி அவர்களும் அம்மையார் அவர்களும் இங்கு பேசினார்கள். இந்தச் சம்பவத்தில் அவர்கள் காவல் நிலையத்திலிருந்து காலை 7.30 மணிக்கு அனுப்பப்பட்டு விட்டார்கள் என்றும் மதியம் இரண்டு மணிக்குத் தெருவில் நினைவிழந்த நிலையில் விழுந்து கிடந்தார் என்றும் பிறகு சிகிச்சை அளிக்கப்பட்டும் பயன் இல்லாமல் 3.30 மணிக்கு அந்தோணி அம்மாள் இறந்துபோனார் என்றும் பிரேத விசாரணை நடத்தப் பட்ட பிறகு வெளிப்புற, உட்புற காயம் எதுவும் காணப்படவில்லை என்பதால் அந்தோணி அம்மாள் விஷ மருந்து அருந்தியிருக்கக் கூடும் என்றும் மருத்துவர் கருத்து வெளியிடப்பட்டது.

இருந்தாலும் விசாரணை, துணை ஆட்சியாளரைக் கொண்டு நடைபெற்றிருக்கிறது.

அதுமாத்திரமல்ல. காவல் துறையினர் மீது கூறப்பட்ட புகார், அந்த விசாரணையில் கடைசியாக அறிவித்த முடிவு கூறப்பட்ட புகார் சரியல்ல என்கிற அளவிற்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குமாரபாளையத்தில் பாத்தீமா பீபீ மரணம் பற்றி பேசப்பட்டது. இப்படி நம்முடைய நாட்டில் ஒரு முஸ்லீம் பெண், ஒரு அரிசனப் பெண் ஆகியவர்களுக்குத் துன்பம் நேர்ந்துவிட்டால் அவர்களை நம்முடைய சகோதரி போல் நம்முடைய உடன்பிறப்பு போல் எண்ணி உணர்வு கொள்வதில் எந்தவிதமான தவறும் கிடையாது. ஆனால் இதைப் பெரியதாக விளம்பரப்படுத்துவதன் மூலம் ஒரு சமுதாயத்தோடு, ஒரு வகுப்போடு ஆளும் கட்சிக்கு விரோதம் உண்டாக்கலாம் என்ற கருத்தின் அடிப்படையில் சிலர் பிரசாரம் செய்வது நல்லதல்ல.

முதலில் அந்த பாத்திமா பீபீ என்பவரை பலவந்தப்படுத்த முயற்சி செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, கைது

செய்து இருக்கிறார்கள். விசாரணை நடைபெற்று வருகிறது. அது வேறு விவகாரம்.

அவர் 12-ம் தேதி பலவந்தப்படுத்தப்பட்டார். நான் வழக்கில் நுழைய விரும்பவில்லை. 13-ம் தேதி இரவு 14-ம் தேதி விடியற்காலை அவர் இறந்து இருக்கிறார். அதற்குப் பிறகு பிணம் புதைக்கப்பட்டுவிட்டது.

முஸ்லீம் லீக் தலைவர்கள் திருப்பூர் மொய்தீன் அவர்கள் தலைமையில் என்னைச் சந்தித்து மேலும் இதுபற்றி விசாரிக்க வேண்டும், பிரேத பரிசோதனை நடைபெற்றாக வேண்டுமென்று கேட்டார்கள்.

உடனே நான் அவர்களையும் அங்கே போகச்சொல்லி - திரு. லத்தீப், வகாப், ஜப்பார் ஆகியோர் சென்றதாக நினைவு - அவர்களுக்குத் தேவையான உதவிகளையெல்லாம் அதிகாரிகளைக் கொண்டு கொடுக்கவேண்டுமென்று சொன்னேன்.

அவர்கள் சென்று பார்த்தார்கள், பிரேதம் தோண்டி எடுக்கப்பட்டு, பிரேத விசாரணை நடைபெற்றது.

டாக்டர்கள் பிரேத விசாரணைக்குப் பிறகு சொல்லி இருப்பது அதிர்ச்சி தரக்கூடிய செய்தி. கழுத்து எலும்பு முறிக்கப்பட்டு இருக்கிறது. இது முறிந்த ஒரு வினாடிக்குள் உயிர் போய்விடும். இது டாக்டர்களுடைய அபிப்பிராயம். 12-ம் தேதி பலாத்காரச் சம்பவம். 13-ம் தேதி இரவு இறந்திருக்கிறார். இறக்கும்போது கூட இருந்தது கணவர்தான். ஆகவே, கணவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். போலீசார் நடவடிக்கை எடுக்காமல் எப்படி இருப்பார்கள்.

ஒரு உறுப்பினர் இங்கே பேசும்போது ஞாயிற்றுக்கிழமையே அவரிடம் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வாக்குமூலம் வாங்கப்பட்டதாகச் சொன்னது மிக மிகத் தவறாகும். 28-1-1974 திங்கட்கிழமை அன்றுதான் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மணி இப்பொழுது 1.30-க்கு மேலாகிறது, இன்னும் எவ்வளவு நேரம் ஆகும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்துவிடுவார்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அடிக்கடி உட்காரச் சொல்லி ஓய்வு கொடுப்பதில் திரு. கே. டி. கே. அவர்களுக்கு ஒரு ஆவல். அதிகாரிகள் ஆங்காங்கே நடந்துகொள்ளும் விதம். அதனால் ஏற்படும் தவறுகள் எல்லாம் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் அனைத்திற்கும் நான் இங்கே பதில் சொல்ல நேரம் இல்லாவிட்டாலும், குறிப்பிட நேரம் இல்லாவிட்டாலும், நான் முதலில் குறிப்பிட்டதுபோல் ஏற்ற நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்பேன் என்ற உறுதியைத் தெரிவித்து, இந்த மானியத்தின் மீது தரப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்று - 1½ மணியாகிவிட்டது, நமது கட்சித் தலைவர்களெல்லாம் ஏற்கனவே களைப்பாக இருக்கிற காரணத்தால், அவைகளைத் திரும்பப் பெற்று இந்த மானியத்தை நிறைவேற்றித்தர வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எஸ். ஐ. செலக்ஷனில் கன்னியாகுமரி அறவே விடப்பட்டது என்று சொன்னார்கள்.

நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். 1973-ல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 193 பேர். அதில் தென் மண்டலங்களைப் பொறுத்தவரையில் 193-ல் 74 பேர் இருக்கிறார்கள். நெல்லையில் 17, மதுரையில் 26, இராமநாதபுரத்தில் 24, கன்னியாகுமரியில் 5 பேர், செலக்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நீலகிரிக்கு 5 பேர், தருமபுரி மாவட்டத்திற்கு 4 பேர்தான் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்படவில்லை, 5 பேர் செலக்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, எஸ். ஐ. செலக்ஷனைப்பற்றி ஒரு விளக்கம் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். இந்தத் தீயணைப்புப்படை போடுவதற்காக உத்தரவு பிறப்பிக்கப்பட இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிருட்டிணகிரி, பண்ருட்டி, ஆரணி, மேட்டுப்பாளையம் போன்ற இடங்களுடன் என்ன காரணத்தாலோ

குழித்துறை இதில் விடுபட்டிருக்கிறது. இதையும் அரசாங்கம் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த எஸ். ஐ. தேர்வில் கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ளவர்களை எடுக்கவில்லை, திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளவர்களைத்தான் எடுத்து இருக்கிறார்கள். குறிப்பாக பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை எடுக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. நான் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பிற்பட்ட சமுதாயத்திற்கு இடம் கிடைக்கவில்லை என்று இந்த அரசைப் பார்த்துக் கூறுவது கொஞ்சமும் பொருத்தம் இல்லாத காரணம். அரசின்மீது குற்றம் சாட்டுபவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், அரிசனங்களுக்கு அதிக இடம் கொடுக்கிறோம் என்பதுதான். ஆகவே எங்கேயாவது 1-2 புகார்கள் இருந்தால், அதைத் தெரிவித்தால் அதைப்பற்றி நான் கவனிக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

குழித்துறையில் ஒரு தீ அணைப்பு நிலையமும், வானியம்பாடியில் ஒரு தீயணைப்பு நிலையமும் நிறுவுவதை அரசு பரிசீலிக்கும் என்று கூறி அமைகிறேன்.

உரை : 10 **நாள் : 03.04.1975**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தின் மீது ஆளும் கட்சியின் சார்பிலும், எதிர்கட்சிகளின் சார்பிலும் பல்வேறு கருத்துக்கள் இரண்டு நாட்களாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. பேசியவர்களில் மிகச் சிலர், சொல்லப் போனால் ஓரிருவர்தான், காவல் துறையில் இருக்கிறவர்கள் இன்னும் பல சலுகைகளைப் பெறவேண்டும், அவர்களுக்கு இன்னும் பல உதவிகள் அரசின் சார்பில் செய்து கொடுக்கப்படவேண்டும், காவல்துறை இன்னும் நல்லமுறையில் செயல்படுவதற்கு நவீன யுக்திகளை எல்லாம் கையாளுகிற முயற்சிகளை செய்ய அரசு முன்வரவேண்டும், என்கின்ற கருத்தை எடுத்துச் சொன்னர்கள்.

பெரும்பாலானோர் இந்த முறை காவல் துறை மீது மிகக் கடுமையான விமர்சனங்களைச் செய்திருக்கின்றார்கள். குறிப்பாக அவரவர்களுடைய தொகுதிகளில் நடைபெற்ற ஓரிரு சம்பவங்களை இங்கே எடுத்துக்காட்டி, காவல் துறையினர் மிகக் கடுமையாக நடந்துகொண்டார்கள் என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லி அந்தக் கருத்துக்களை மிக வேகத்தோடு எடுத்துரைத்து இவைகளுக்கெல்லாம் தக்க நிவாரணங்களைக் காண வேண்டும் என்ற அளவில் தங்களுடைய பேச்சுக்களை முடித்திருக் கிறார்கள்.

நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுகிற நேரத்தில் பல சம்பவங்களைக் குறிப்பிட்டுக் காட்டி அது சம்பந்தமாக காவல் துறையினர் வழக்குகள் பதிவு செய்திருப்பதையும் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். மற்றும் சிலர் வேறு சில சம்பவங்களில் வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை என்பதை எடுத்துச் சொன்னார்கள். பதிவு செய்யப்படவில்லை என்பதாலேயே பதிவு செய்யப்படாமலேயே போய் விடும் என்பது பொருள் அல்ல.

திட்டவட்டமான புலன் விசாரணைகளுக்குப் பிறகு உரிய வழக்குகள் தொடர்புடைய நிகழ்ச்சிகளின் மீது நிச்சயமாகத் தொடுக்கப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்வேன்.

ஒவ்வொரு மானியக் கோரிக்கையை விவாதிக்கிற நேரத்திலும் சொல்லப்பட்டுள்ள எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் அளிக்க எனக்கு நேரமில்லாவிட்டாலும் அந்தந்தக் துறையினுடைய அமைச்சர்கள், அந்தந்த துறையினுடைய அதிகாரிகள் இந்த விவாதத்தைக் கவனிக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற காரணத்தால் அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அனைவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள், அதிகாரிகள் உள்ளிட்டு என்பதையும் நான் இந்த அவையில் கூறிக்கொள்வேன்.

நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பிரிட்டிஷார் காலத்திலிருந்தே காவல் துறை நிர்வாகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, நாங்கள் என்ன புதிதாக இதிலே செய்துவிட்டோம் என்றெல்லாம் கேட்டார். நான் சில புள்ளிவிவரங்களை அந்த அடிப்படையிலே அளிக்க வேண்டியது அவசியமாகும்.

1969-1970-ம் ஆண்டு வரையில் காவல் துறைக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 13,66,42,500 என்றிருந்தது. இந்த ஆட்சி அமைந்த பிறகு காவல் துறையினுடைய பொறுப்பை நான் எடுத்துக்கொண்ட பிறகு ஆண்டுதோறும் இரண்டு கோடி ரூபாய், மூன்று கோடி ரூபாய் என்றளவிற்கு உயர்ந்து 1969-1970-ல் ஏறத்தாழ 13½ கோடி ரூபாயாக இருந்த செலவு இன்று 1974-75-ல் ரூ. 25,99,65,000 என்கின்ற அளவிற்கு அந்தச் செலவு வளர்ந்திருக்கிறது.

எப்படி இந்த அளவிற்கு அந்தத் தொகை உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால், காவல் துறையில் இருக்கிற அலுவலாளர்களுக்கு அவர்களுடைய உழைப்புக்கு ஏற்ற ஊதியமும் அகவிலைப்படி உயர்வும் தரவேண்டுமென்று இந்த அரசு விரும்பியதன் காரணமாக, அவர்கள் தங்களுடைய உயிரையும் பணயமாக வைத்து ஈடுபடுகிற பணியில் இன்றைக்கு இருக்கிறவர்கள் என்ற காரணத்தால் அவர்களுடைய சம்பளத்தில் பல மாறுதல்களை நாம் செய்திருக்கிறோம்.

1970-ம் ஆண்டு வரையில் கான்ஸ்டபிள் என்று சொல்லப் படுகிற இரண்டாவது நிலை காவலாளருடைய அடிப்படைச் சம்பளம் 70 ரூபாயிலிருந்து 95 ரூபாய் என்கின்ற அளவிற்குதான் இருந்தது. 1970-க்குப் பிறகு அந்த அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி 159 ரூபாயிலிருந்து 225 ரூபாய் வரை என்கின்ற அளவிற்கு அதை நாம் மாறுதல் செய்திருக்கிறோம்.

முதல் நிலை காவலாளர் என்ற பதவியே இல்லாமல் இருந்தது. அந்தப் பதவியை உருவாக்கி எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களுக்கு வேலையற்றிருப்பவர்களுக்கு இத்தகைய வேலைவாய்ப்பைத் தரலாம் என்ற நல்லநோக்கத்தோடு முதல் நிலைக் காவலாளர்கள் என்ற பதவியை அமைத்து அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் ரூ. 200-ல் இருந்து ரூ. 300 வரை என்று நிர்ணயித்தோம்.

தலைமைக் காவலாளர்களுடைய ஊதியம் 1970-ம் ஆண்டு வரையில் ரூ. 90-ல் இருந்து ரூ. 110 வரை இருந்ததை ரூ. 210-ல் இருந்து 325 ரூபாய் வரை என்று மாற்றினோம்.

துணை உதவி ஆய்வாளர்களுக்கு ரூ. 110-140 என்றிருந்தது 1970-ல். இப்போது ரூ. 300-500 என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம்.

துணை ஆய்வாளர்கள் என்ற பதவி ஏற்கனவே இல்லை. அந்தத் துணை ஆய்வாளர் டெப்டி இன்ஸ்பெக்டர் என்ற பதவியை உருவாக்கி ரூ. 350-ல் இருந்து ரூ. 600 வரையில் அவர்களுக்கு ஊதியம் வழங்குகிறோம்.

இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 225-375 என்றிருந்தது. அதை ரூ. 425-ல் இருந்து ரூ. 700 என்ற அளவிற்கு இன்றைக்கு மாறுதல் செய்திருக்கிறோம்.

இதைப் போலவே இன்றைக்கு அவர்களுடைய அக விலைப்படியும் எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது என்றால், மற்ற அரசு அலுவலர்களுக்கு எல்லாம் உயர்த்தப்படுகிற நேரத்தில், அதோடு இணைத்து உயர்த்தப்படுகிறது என்பதையும் அவையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

நவீன கருவிகள் காவல் துறைக்கு வழங்கப்படுவதன் மூலம் இன்னும் இந்தத் துறை செம்மையாகச் செயல்படக் கூடும் என்ற வகையில் 1971-72-ம் ஆண்டில் கம்பியில்லாத் தந்திக் கருவிகள், குற்றம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடக் கருவிகள், நிழற்படக் கருவிகள், இவைகளுக்கு மாத்திரம் இந்த அரசு செலவு செய்த தொகை ரூ. 24,87,228.

1972-73-ல் பிராட்மா இயந்திரங்கள், நுண் திரைப்படக் கருவிகள், ரசாயன ஆய்வுக்கூடக் கருவிகள் ஆகியவை களுக்காக செலவிட்ட தொகை ரூ. 35,29,786.

1973-74-ல் மேலும் செலவிட்டது இதற்காக 43 லட்ச ரூபாய்.

1974-75-ல் நுண் மின் அலைத் திட்டம் என்கிற நவீன முறையைப் புகுத்துவதற்காக ஏறத்தாழ செலவு 25½ லட்ச ரூபாய்; ஆக, இந்த வகையில், 1 கோடியே 29 லட்சம் ரூபாய் வரையில் நவீன கருவிகளைக் காவல் துறையில் பயன்படுத்த அரசின் சார்பில் நாம் செலவிட்டு இருக்கின்றோம்.

1971-ம் ஆண்டுதான் முதன்முதலாக 100 கிராம காவல் நிலையங்களுக்கு - ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு மோட்டார் சைக்கிள் வேண்டும் என்ற கோரிக்கை இந்த மாமன்றத்தில் எழுப்பப்பட்டு, அதை நாம் ஏற்றுக்கொண்டு - 100 மோட்டார் சைக்கிள்களை அனுமதித்து, நாம் வழங்கினோம். அந்த அறிவிப்பைத் தொடர்ந்து இது வரையில் 440 மோட்டர் சைகிள்கள் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. மொத்தமுள்ள 863 காவல் நிலையங்களில் 440 நிலையங்களுக்கு இப்போது வழங்கப்பட்டு இருக்கின்றன. 1975-76-ல் மேலும் புதிதாக 50 மோட்டார் சைக்கிள்கள் போலீஸ் ஸ்டேஷன்களுக்காக வழங்கப்பட இருக்கின்றன. இதையும் சேர்த்து, 490 மோட்டார் சைக்கிள்கள் நாம் வழங்குவது காவல் துறையின் சம்பவங்கள் நடைபெற்று விடுகின்ற இடங்களுக்குச் செல்லுகின்ற நேரத்தில் விரைவாகத் தங்களுடைய பணியைச் செய்ய உதவும்.

இதைப்போலவே, காவல் துறையினருக்கு சைக்கிள்கள் வேண்டும். அதை இந்த அரசு ஒப்புக்கொண்டு, அவர்களுக்கு

வழங்கவேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கை இந்த மாமன்றத்தில் உறுப்பினர்களால் எடுத்து வைக்கப்பட்டபோது அதையும் 1973-ம் ஆண்டு இந்த அரசு ஏற்றுக்கொண்டு, 5,000 சைக்கிள்களுக்கு முதல் கட்டமாக நாம் ஒப்புதல் அளித்து, அந்த சைக்கிள்களுடைய விலையில் 40 சதவிகிதத்தை அரசு உதவித் தொகையாகத் தருவது என்றும், மீதித் தொகையை கடனாகத் தவணை முறையில் செலுத்துவது என்றும் நாம் ஆணை பிறப்பித்தோம். அந்த 5,000 மிதி வண்டிகளில் ஏறத்தாழ 2,500 மிதி வண்டிகளைத்தான் காவல் துறையினர் இதுவரையில் பெற்று இருக்கிறார்கள். மற்றவர்கள் இன்னும் அதை வாங்க முன்வரவில்லை என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்வேன்.

1967-ம் ஆண்டு வரையில் காவல் துறைக்கு இருந்த வாகனங்களுடைய எண்ணிக்கை 742 என்கிற அளவில்தான் இருந்தது. 1967-க்குப் பிறகு 1974-வரையில் கூடுதலாக 906 வாகனங்கள், காவல் துறைக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. ஆக மொத்தம் இன்றைக்கு - 742 வாகனங்களாக இருந்தவை 1,648 வாகனங்கள் என்கிற அளவில் காவல் துறைக்கு அமைந்து இருக்கின்றன.

இவைகளை நான் சொல்லக் காரணம் காவல் துறை என்பது அதிலே இருக்கிற 45,000 காவலர்கள் மாத்திரம் இருந்து நடத்துவது என்பது அல்லாமல் அவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புகளை அளிப்பதன் மூலம்தான் அந்தத் துறை நல்ல முறையில் விரைந்து செயல்பட முடியும் என்பதற்காக நாம் செய்துள்ள ஏற்பாடுகளைக் குறிப்பிட்டேன்.

863 காவல் நிலையங்களிலும் தொலை பேசி வைக்கப் படவேண்டும் என்ற இந்தக் கோரிக்கை இதே மன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களாலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களாலும் பலமுறை எடுத்துச்சொல்லப்பட்டு, இன்று 722 காவல் நிலையங்களில் தொலைபேசி வசதிகளை நாம் அரசின் சார்பில் வழங்கி இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, பதவிகளில் கூட எந்த அளவுக்குப் பதவிகளின் எண்ணிக்கைகள் உயர்ந்து இருக்கின்றன என்பதையும் நாம் பார்ப்பது அவசியம்.

எஸ்.பி. பதவி 1966-67-ல் 29-ஆக இருந்தது. இன்று 63 பதவிகளாக ஆக்கப்பட்டு இருக்கிறது.

டி.எஸ்.பி. 146-ஆக இருந்தது. இன்று 174-ஆக உயர்ந்து இருக்கிறது.

இன்பெக்டர்கள் 369 என்று இருந்தது, இன்று 597 என்கிற அளவுக்கு உயர்ந்து இருக்கிறது.

எஸ்.ஐ. 1,545 ஆக இருந்தது, இன்று 1,904 ஆக உயர்ந்து இருக்கிறது.

ஏ.எஸ்.ஐ. 118 ஆக இருந்தவர்கள், 527 பேராக இன்றைக்கு, அந்த அளவுக்குப் பதவிகள் உயர்ந்து இருக்கின்றன.

போலீஸ் கான்ஸ்டேபிள்கள் 28,891 பேர் இருந்தார்கள், இன்று 36,642 பேர்.

ஆகவே, இந்தத் துறையிலே டெக்னிகல் லைன் என்ற அளவில் பணியாற்றும் 3,000 பேர் நீங்கலாக 1966-67-ல் 35,617 பேராக இருந்த இந்தத் துறை, இன்றைக்கு 1974-ல் 45,691 பேர் என்கிற அளவுக்கு வளர்ந்து இருக்கிறது.

இந்த அரசின் சார்பில் நாம் தொடங்கிய குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக இந்தத் துறையிலே உள்ளவர்கள் எந்த அளவுக்குப் பயன் அடைந்து இருக்கிறார்கள் என்பதையும் மன்ற உறுப்பினர்கள் மறந்து விடக் கூடாது. அரசு அலுவலாளர்கள் பணியில் இருக்கும்போது மறைந்து விடுவார்களானால் - இயற்கை எய்திவிடுவார்களானால், அவர்களுடைய குடும்பங்களுக்கு அரசின் சார்பில் 10,000 ரூபாய் நிதி உதவி அளிப்பது என்று அறிவிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு கிட்டத்தட்ட 1,000 அரசு அலுவலாளர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10,000 ரூபாய் நாம் நிதி உதவி செய்து இருக்கிறோம். அந்த குடும்பங்களின் பாதுகாப்பிற்காக, அந்த 1,000 பேரில் காவல் துறையினர் 208 பேர் என்பதை நான் இங்கே தெரிவிப்பேன். இந்தத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பு, அவர்களில் ஒவ்வொரு ஆண்டும் 200 பேர் 300 பேர் இறந்து விட்டிருக்கிறார்கள் என்றாலும் அப்போதெல்லாம் அந்தக் குடும்பங்கள் திக்குத் தெரியாமல்தான் நின்று கொண்டு இருந்தன.

ஆனால், இந்தத் திட்டத்தின்கீழ் காவல் துறையிலே உள்ள குடும்பத்தினர் மட்டுமே 208 குடும்பத்தினர் சென்ற ஆண்டு பயனடைந்திருக்கிறார்கள். அந்த ஊழியர்கள் மறைவிற்குப் பிறகு என்ற செய்தியை இந்த அவைக்குத் தெரிவிப்பதும் என்னுடைய கடமையாகும். நான் இந்தத்துறை பொறுப்பேற்றுக் கொண்டதும் போலீசாரின் நலன்கள், போலீசார் மேலும் தீவிரமாக பணியாற்றுவதற்காக இந்தத் துறைக்கென தனியாக ஒரு 'போலீஸ் கமிஷன்' அமைக்கப்பட்டு, அது 133 சிபார்சுகளை அரசுக்கு செய்தது. அந்த 133 சிபார்சுகளில் 116 சிபார்சுகளை அரசு ஏற்றுக் கொண்டது. அவற்றில் இப்போது 41 சிபார்சுகள் நிறைவேற்றப் பட்டு விட்டன. மற்ற சிபார்சுகளும் படிப்படியாக நிறைவேற்றப் படும் என்பதை நான் அறிவிக்கிறேன்.

எல்லா சிபார்சுகளுக்கும் ஆகும் தொடர் செலவு ரூ. 2 கோடியே 81 லட்சம். தொடரா செலவு 6 கோடி என்கிற அளவுக்கு இருக்கும் இப்போது ஏற்றுக்கொண்டு இருக்கிற 41 சிபார்சுகளுக்கும் ஆகிற தொடர் செலவு 93 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய். தொடராச் செலவு ரூ. 18 லட்சத்து 5 ஆயிரம் என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்கிறேன்.

காவலர்களுக்கு தினப்படி, அவர்களின் உணவுப்படி இவைகளெல்லாம் ஏதோ ஹைதர் காலத்தில் இருந்ததைப் போல் இருக்கிறது என்று நண்பர் செழியனோ யாரோ சொன்னதாக நினைவு. அப்படி ஒன்றும் இல்லை. அவர்களுக்கு அந்தப்படிகள் எல்லாம் உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. தினப்படி காவலர்களுக்கு 1.75 ஆக இருந்தது. இப்போது 3 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே பாதுகாப்பிற்காக செல்கிற இடங்களில் உணவு செலவிற்காக அவர்களுக்கு 2 ரூ. 2.25 என்று முன்பு வழங்கப்பட்டது இப்போது ரூ. 4.50 காசு என்கிற அளவுக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு வாடகைப் படியைப் பொறுத்தவரையில் கூட அவர்களுக்கு போதுமானதாக இல்லை என்ற குறைபாட்டை ஆளும்கட்சி சார்பில் பேசிய ஒரு நண்பர் இங்கே குறிப்பிட்டார்கள். வீட்டு வாடகைப்படி நகர்புறத்தில் இருக்கிறபோது,

இன்ஸ்பெக்டருக்கு 80 ரூ. என்றும், வெளியூர் சென்றால் இல்லை. இது 1970-க்கு முன்பு இருந்த நிலைமை. இப்போது ஒரு இன்ஸ்பெக்டர் நகர்ப்புறத்தில் இருந்தால் வீட்டு வாடகைப்படி 1970-ல் 80 ரூ.க்கு பதிலாக 150 ரூ. வெளியூரில் இருந்தால் 100 ரூபாய் என்றும் உயர்த்தியிருக்கிறோம்.

எஸ்.ஐ.-க்கு நகர் புறத்தில் இருந்தால் முன்பு 60 ரூ. இப்போது நகர் புறத்தில் வீட்டு வாடகைப்படி 100 ரூ. வெளியூரில் இருந்தால் முன்பு எஸ்.ஐ.-க்கு 50 ரூ. இப்போது 80 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறோம்.

தலைமைக் காவலர்களுக்கு நகர் புறத்தில் இருந்தால் முன்பு 20 ரூபாய். இப்போது 40 ரூபாய். வெளியூரில் இருந்தால் முன்பு 20 ரூபாய் இப்போது 30 ரூபாய் என்றும் மாற்றி யிருக்கிறோம்.

புதிதாக ஏற்படுத்திய முதல் நிலை காவலர்களுக்கு வீட்டு வாடகைப்படி நகர் புறத்தில் இருந்தால் 40 ரூபாய் என்றும் வெளியூர்களில் இருந்தால் 30 ரூபாய் என்றும் அளித்து, இரண்டாம் நிலை காவலர்களுக்கு நகர் புறமாக இருந்தால் 14 ரூபாய், வெளியூரில் இருந்தாலும் 14 ரூபாய் என்று இருந்தது. அதை இப்போது நாம் நகர் புறத்தில் இருந்தால் 30 ரூபாய் என்றும், வெளியூர்களில் இருந்தால் 25 ரூபாய் என்றும் மாற்றி யமைத்திருக்கிறோம்.

ஆக, இந்த வகையிலேயெல்லாம் அவர்களுடைய கஷ்டங்களுக்கேற்ற வகையில் நம்முடைய அரசு நிதி ஆதாரத்தையும் மனதில் வைத்துக்கொண்டு முடிந்த அளவிற்கு உதவிகளைச் செய்த காரணத்தினாலும், நவீன கருவிகளை அவர்களுக்கு வாங்கித் தருகிற காரணத்தினாலும் காவல் துறைக்கு 13 கோடி ரூபாயாக இருந்த செலவு இன்றைக்கு 25 கோடியைத் தாண்டியிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆண்டுதோறும் காவலர்களை ஊக்கப்படுத்த, உற்சாகப்படுத்த, அவர்களுடைய வீரச்செயல்களைப் பாராட்ட அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாள் அன்று முதலமைச்சர் வழங்குகிற பதக்கங்கள் என்ற வகையில் விழா

ஏற்பாடு செய்யப்பட்டு, வெறும் பதக்கங்கள் வழங்குவது மாத்திரமல்லாமல், சிறப்புப் பணி புரிந்த காவலர்களாக இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாயும், சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்களுக்கு இரண்டாயிரம் ரூபாயும், காவல் துறை டெபுடி சூப்பிரண்டுகளுக்கு 3 ஆயிரம் ரூபாயும், வீரச் செயல்கள் புரிந்தவர்களாக இருந்தால் அவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் 3 ஆயிரம் ரூபாயும் அண்ணா பிறந்த நாளன்று, செப்டம்பர் 15-ம் தேதியன்று பதக்கத்தோடு அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்த வகையில் 1969-லிருந்து 1974 வரையில் 23 பேர் வீரப்பதக்கம் பெற்றிருக்கிறார்கள். 129 பேர் சிறப்புப் பதக்கம் பெற்றிருக்கிறார்கள். டி.எஸ்.பி.யோடு நின்று விடுகிறது இந்தப் பதக்கங்கள்.

எஸ்.பி.-களுக்கும் இது வேண்டுமென்ற முறையீடும் இருந்து வருகிறது. எஸ்.பி.-களுக்குப் பதக்கம் மாத்திரம் அளிக்கப்படும். பண முடிப்பு அளிக்கப்பட மாட்டாது என்பதையும் வருகிற ஆண்டிலிருந்து எஸ்.பி.- களுக்கும் வீரப் பதக்கம் அல்லது சிறப்புப் பதக்கம் - இவைகள் அளிக்கப்படும் என்பதை நான் இந்த அவையில் அறிவிக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. செழியன் பேசும்போதும் வேறு சில நண்பர்கள் பேசுகிற நேரத்திலும், இந்த போலீசார் எந்த வழக்கையும் கண்டுபிடிக்கவில்லை, எந்த குற்றத்தையும் கண்டு பிடிக்கவில்லை, என்ன செய்கிறது இந்த போலீஸ்? என்றெல்லாம் மிகுந்த ஆத்திரத்தோடு கேட்டார்கள். நான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு வெளியிடுகிற கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா தரப்பில் வெளியிடுகிற 'கிரைம்ஸ் இன் இண்டியா' புத்தகம் 1970 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்டதில் இருந்து சில குறிப்புக்களை சென்ற ஆண்டு இந்த அவையில் எடுத்துக் காட்டினேன்.

அதற்கடுத்து அவர்கள் வெளியிட்டிருக்கிற புத்தகம் 'கிரைம்ஸ் இன் இண்டியா' என்பது 1971ஆம் ஆண்டு புள்ளி விவரங்கள் ஆகும். அதுதான் இதுவரையில் நம் கைக்குக் கிடைத்திருக்கிறது. மற்ற ஆண்டுகளுக்கான அந்தப் புத்தகம்

இன்னும் வரவில்லை. கடைசியாக அவர்கள் வெளியிட்ட புத்தகத்திலிருக்கிற ஆதாரங்களை வைத்துப் பார்த்தால் உண்மை தெரியும்.

உத்திரப் பிரதேசத்தில் பதிவான குற்றங்கள் 2,36.328. விசாரணையில் தண்டிக்கப்பட்ட சதவீதம் 55.38.

மராட்டியத்தில் 99,125 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 66.04.

பீஹாரில் 83,270 குற்றங்கள் பதிவானவை, இதில் தண்டிக்கப்பட்ட சதவீதம் 40.04.

மேற்கு வங்கத்தில் 78,546 குற்றங்கள் பதிவானவை, இதிலே தண்டிக்கப்பட்ட சதவீதம் 56.63.

இராஜஸ்தானிலே 36,743 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 52.93.

குஜராத்திலே 32,747 குற்றங்கள் பதிவானவை, இதிலே தண்டிக்கப்பட்ட சதவீதம் 52.81.

பஞ்சாபிலே 11,433 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப் பட்ட சதவீதம் 54.03.

மைசூரிலே 36,557 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 54.03.

கேரளாவிலே 29,712 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 37.15 ஆகும்.

ஆந்திராவில் மொத்த குற்றங்கள் பதிவானவை, 46,390 தண்டிக்கப்பட்ட சதவீதம் 82.08.

தமிழ்நாட்டில் 59,616 குற்றங்கள் பதிவானவை., இதிலே தண்டிக்கப்பட்ட சதவீதம் 82.08.

ஆக, இந்த இரண்டு மாநிலங்களில்தான் தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும்தான் குற்றங்கள் விசாரணைக்குப் பிறகு அதிக சதவிகிதம் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். என்ன செய்கிறார்கள் போலீசார் என்று திரு. செழியன் அவர்கள் கேட்டார்களே; இதைத்தான் அவர்கள் செய்கிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, நான் நம்முடைய தமிழகப் போலீசின் திறமையை என்றைக்கும் குறை சொல்லவில்லை. இங்கே அரசியல் சம்பந்தமாக, என் மாதிரி அரசியல்வாதிகள் சொல்கிற குற்றச்சாட்டுகள் இன்னமும் இந்த மாதிரியான குற்றங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை என்பதுதான். உதாரணத்திற்குச் சொல்கிறேன். என் வீட்டில் 4 ஆயிரம் ரூபாய் பெறுமான பொருள் திருடு போய் விட்டது. அது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. வெங்கா விவகாரம், சுகுமாரன் கொலை போன்றவைகளில் குற்றவாளிகளை ஏன் கண்டு பிடிக்க வில்லையென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிகுப்பம்) : தலைவரவர்களே, அவர் வீட்டுக்கு யார் யார் வந்தார்கள் என்று யோசனை செய்துபார்த்துச் சொல்லட்டும்.

திரு. கோவை செழியன் : திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களும் போனவாரம் வந்தார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நேரத்தில் மத்திய அரசினுடைய அந்த ஆண்டு அறிக்கையைத்தான் படித்தேன். நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு குற்றங்கள் பதிவாகியிருக்கின்றன, எந்த அளவிற்கு தண்டிக்கப்பட்டார்கள் என்ற இந்த எண்ணிக்கை விவரங்கள் மத்திய அரசின் தகவல் தான். அதைத்தான் நான் படித்தேன். திரு. செழியன் கூறிய விவகாரங்களைப் பற்றி நான் பிறகு சொல்கிறேன். அவர்கள் 60 சதவீதம் வழக்குகளில் 51 சதவீதம் வழக்குகள் அரசியல் வழக்குகள் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் என்ன கணக்குப் போட்டுச் சொன்னார்கள் என்று தெரியாது. அவர் சொன்னதை விளக்குவதற்கு அவருக்கு நேரம் இருக்காது. அவர் தனியாக ஒரு நாள் சந்தித்து விளக்கினால் நானும் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்.

இதைப் போலவே கொலை வழக்குகள் என்று எடுத்துக் கொண்டால்கூட பெரிய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் 41 சதவீதம்தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்ன மாநிலங்களின் பட்டியலைப் பார்த்தால், அவைகளைத்

திரும்ப நான் படிக்க விரும்பவில்லை - தமிழ்நாட்டில் தான் 61 சதவீதம் கொலை குற்றங்களில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தை இந்தப் புத்தகத்தில் நாம் காண முடியும்.

இதைப் போலவே கொள்ளை என்று எடுத்துக் கொண்டால், பெரிய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் 1971ஆம் ஆண்டு பதிவான குற்றங்கள் 6,004. இதிலே 34 சதவீதம்தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பீஹாரில் 2,015 கொள்ளை குற்றங்கள் பதிவானவை. இதிலே தண்டிக்கப்பட்டவர்கள் 44 சதவீதம்.

ஆனால் தமிழ்நாட்டில் கொள்ளை என்ற வகையில் பதிவான குற்றங்கள் 22. இதிலே 57 சதவீதம் பேர்கள் தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பதிவான குற்றங்கள் 124, இதிலே 68.54 சதவீதம் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தீண்டாமை ஒழிப்புச் சட்ட குற்றங்களைப் பற்றி இங்கு சில உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். திரு. கே. டி. கே. அவர்களும் இதுபற்றி எடுத்துச் சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்புக் குற்றங்கள் எவ்வளவு கடுமையாகப் பாவிக்க வேண்டும் என்பதில் இந்த அரசு எப்போதும் பின் வாங்காது என்பதை நான் அடிக்கடி எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

1967ஆம் ஆண்டு 134 குற்றங்கள் பதிவாகி அதிலே கோர்ட்டில் 129 குற்றங்கள் தாக்கல் செய்யப்பட்டு 94 குற்றங்கள் தான் தண்டிக்கப்பட்டிருக்கின்றன.

1968-ல் 37 குற்றங்கள் பதிவாகி, 37 கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு, 19 குற்றங்கள்தான் தண்டிக்கப்பட்டன.

1972, 1973, 1974 ஆகிய இந்த 3 ஆண்டுகளை கணக்குப் பார்த்தால் 1972இல் பதிவான குற்றங்கள் 882, இதிலே கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது 872. இதிலே தண்டிக்கப்பட்டது 590.

1973இல் 1,633 குற்றங்கள் பதிவாகி, 1,628 குற்றங்கள் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு, 1,117 குற்றங்கள் தண்டிக்கப் பட்டன.

1974இல் 954 பதிவாகி, 911 கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு, 516 இதிலே தண்டிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் கடுமையாக இதிலே இருக்க வேண்டுமென்று போலீசார் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள், ஆணையிடப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவிப்பேன்.

சில முக்கிய வழக்குகளில் நம்முடைய காவலர்கள் எவ்வளவு திறமையைக் காட்டியிருக்கிறார்கள் என்பதை யெல்லாம் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் நம் நண்பர் சுப்பிரமணியம் அவர்களும் இங்கே பேசிய வேறு சிலரும் அவர்களே சென்று போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கிற கண்காட்சியைப் பார்வையிட்டோம், அது ஒரு கோணம், இன்னொரு கோணம் இருக்கிறது என்று வாதிட்டார்கள். அவர்களுடைய வாதத்தை நான் மறுக்கவில்லை. பொதுவாகவே போலீஸ் அதிகாரிகள் 45 ஆயிரம் பேரில் அத்தனை பேருமே நல்லவர்கள் என்று வாதிடுவதற்கு நான் எழுந்து நிற்கவில்லை. ஆங்காங்கு சில குறைபாடுகள் இருக்கின்றன.

ஆளும் கட்சியின் சார்பில் பேசியவர்களும் எடுத்துச் சொன்னார்கள். தோழமைக் கட்சியின் சார்பில் பேசியவர்களும் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சியின் சார்பில் பேசியவர்களும் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே போலீசார் ஒரு தலைப்பட்சமாக இருக்கிறார்கள் என்பதற்கு இடமில்லாத வகையில் இந்த மன்றத்திலே இருக்கின்ற ஆளும் கட்சி, எதிர்க் கட்சி, தோழமைக் கட்சி அத்துணை பேருமே அவரவருக்குள்ள குறைபாடுகளை, அவர்களுடைய பகுதியில் நடைபெற்ற சம்பவங்களை எடுத்துக் கூறியதிலிருந்து, போலீசார் ஆளும் கட்சிக்குத்தான் சார்புடையவர்களாக இருக்கிறார்கள் என்ற அந்த வாதம் அடிபட்டுப் போகிறது என்பதை மாத்திரம் நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இதையெல்லாம் மீறி, காவல் துறையில் இருக்கிற நல்ல திறமையாளர்கள், விஷ ஊசிக் கொலை வழக்கு போன்ற வழக்குகளை எந்த அளவுக்குக் கண்டு பிடித்தார்கள்

என்பதையும், அதை இன்றைக்கு அனைத்து இந்தியாவில் இருக்கின்ற அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், ஏன் உடனடியாக ஒவ்வொரு வழக்கையும் கண்டு பிடிக்கவில்லை என்று வாதிடுகின்றவர்களுக்கு பதிலாக சொல்ல விரும்புகிறேன். 19-12-1970-ல் ஒருவர் இறந்தார், இந்த விஷ ஊசி சம்பந்தமாக, அதற்குப் பிறகு மார்ச் 1971-ல் இன்னொருவர் இறந்தார். பிறகு 9-10-1971-ல் இன்னொருவர் இறந்தார். பிறகு 7-1-1972-ல் இன்னொருவர் இறந்தார். 24-6-1972-ல் இன்னொருவர் இறந்தார். கடைசியாக 26-10-1972-லே இறந்து போன கீழக்கரையைச் சேர்ந்த தைக்கா தம்பியின் மாமனார், சென்னை ஏழுகிணறு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில்தான் புலன் விசாரணையே ஆரம்பமாகியது. ஆக, 1970-ல் நடைபெற்ற கொலை சம்பவங்கள், 1972 வரையில் புலன் விசாரணைக்கு ஆளாகாமல் அவ்வளவு மர்மமாக நடைபெற்றது. ஆயினும், நம் திறமை மிக்க காவல் துறையினர் இந்தக் கொலையைக் கண்டு பிடித்து, கொலையில் ஈடுபட்டவர்களுக் கெல்லாம் தண்டனையை வாங்கித் தந்திருப்பதை நான் மீண்டும் மீண்டும் இந்த அவைக்கு ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூடப் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே நான் அதை மீண்டும் இங்கே விளக்க விரும்பவில்லை.

அதைப்போலவே நீங்கள் கமிஷனர் அலுவலகத்திற்குச் சென்றபோது டெலிவிஷனில் ஒன்றைப் பார்த்திருக்கலாம். அதிலே ஒரு தனவந்தரை எப்படிக் கொன்று எந்தப் பொருளும் இல்லாமல் ஏமாந்தார்கள் அந்தத் திருடர்கள் என்பதையும் அவர்கள் எவ்வளவு இளம் வயது படைத்தவர்கள் என்பதை யெல்லாம் பார்க்கும்போது, இந்தச் சமுதாயத்தில் அப்படிப் பட்டவர்களையெல்லாம் திருத்துவதற்கு எவ்வளவு பெரிய பிரச்சாரம் தேவைப்படுகிறது என்பதைத்தான் நாமெல்லாம் மிகுந்த வேதனையோடு எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

சமுதாயத்திலிருக்கிற பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்தான் இப்படிப்பட்டக் காரியங்களுக்குக் காரணமாக ஆகின்றன என்பதை நான் மறக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் அவை களுக்கு இது தான் மார்க்கமா என்கின்ற அந்தக் கேள்விக்கும் நாம் விடை கண்டாக வேண்டும். மிகச் சாதாரண வாலிபர்கள்,

சின்னஞ்சிறியவர்கள், அவர்கள் எப்படி அந்தக் கொலையைச் செய்தார்கள் என்பதைக் கமிஷனர் அலுவலகத்தில் மறுபடியும் காட்சியாக ஆக்கிக் காட்டியிருக்கிறார்கள். அதை டெலிவிஷனில் கமிஷனர் அலுவலகத்தில் நான் சென்று பார்த்தேன், எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அந்த வழக்கை மிகத் திறமையாக நம் காவல்துறையினர் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அதைப் போலவே ஒரு அகில உலக ஏமாற்றுக்காரன் – பாஸ்போர்ட்டை வைத்துக்கொண்டு ஏமாற்றியவன் ஜெர்ரி லாய்டு என்பவன் சென்னையில் உள்ள ஒரு ஓட்டலில் தங்கி, தொடர்ந்து இந்த ஏமாற்று வேலையைச் செய்து கொண்டிருந்தான். நம்முடைய காவல்துறையினரால் பிடிக்கப்பட்டு, அவன்மீது வழக்கு தொடரப்பட்டிருப்பதை அனைவரும் அறிவோம்.

முத்திரைத் தாள் வழக்கு என்ற வழக்கில் திறமையாக முத்திரைத் தாளை அச்சிட்டு, விற்பனை செய்து கொண்டிருந்தவர் களை நம் காவல்துறையினர் அவர்களுக்குக் கிடைத்த தகவலின் பேரில் சென்னை நகரிலுள்ள அண்ணா நகரில் உள்ள ஒரு பங்களாவை சோதனை செய்ததில் இந்தக் கள்ள வில்லைக ளெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு, 15 பேருக்கு மேல் கைது செய்யப் பட்டு, ரூபாய் 1,17,165 மதிப்புள்ள நீதிமன்ற 5 ரூபாய் கள்ள வில்லைகளும், 1 ரூபாய் கள்ள வில்லைகளும் கைப்பற்றப் பட்டிருக்கின்றன. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது நம்முடைய காவல்துறை திறமைக்கு ஒரு சான்றாகும்.

அதைப் போலவே இன்னொரு கொள்ளை. கடந்த 4, 5 ஆண்டு காலத்தில் சென்னை மாநகரத்தில் 5-ஆயிரம் ரூபாய் களவு போய் விட்டது. 10-ஆயிரம் ரூபாய் காணாமல் போய்விட்டது என்றெல்லாம் செய்தி வந்து கொண்டிருந்தது. இப்பொழுது செழியன் கூட 4-ஆயிரம் ரூபாய் வீட்டிலே காணாமல் போய்விட்டது என்று சொன்னார். அதைப் பற்றி விசாரிக்க வேண்டும்.

திரு. கோவை செழியன் : 4-ஆயிரம் ரூபாய் பெறுமான பாத்திரங்கள் திருட்டுப் போய் விட்டது என்று ஏற்கெனவே நான் போலீசுக்கு ரிப்போர்ட் செய்திருக்கின்றேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : செழியன் போலீசுக்கு ரிப்போர்ட் செய்கின்ற நேரத்தில் எல்லாம் அது கவனிக்கப் படுகிறது. ஒரு முறை அவர் ஏதோ பயங்கரமான டெலிபோன்கள் எல்லாம் வருவதாகச் சொன்னவுடன் அவருடைய வீட்டைச் சுற்றி போலீஸ் காவலே போடப் பட்டிருந்தது. அவருக்கே தெரியும். ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை அவர் வீட்டைச் சுற்றி போலீஸ் ஜீப் ரோந்து போய் கொண்டிருந்தது. ஆகவே செழியன் அல்ல, யார் தனக்கு ஆபத்து என்று எந்த எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தாலும், ஆளும் கட்சி, தோழமைக் கட்சி உறுப்பினர் யாராக இருந்தாலும் சரி, அப்படிப்பட்ட அறிவிப்புகள் வருமானால் உடனடியாக அது கவனிக்கப்படுகிறது. செழியன் அவர்கள் தனக்கு டெலிபோன் மூலம் ஆபத்து என்ற அறிவிப்பு வருகிறது என்று சொன்னவுடன், 2 காவலர்கள் போடப்பட்டார்கள். 2, 3 நாள் வரையில் அவர் வீட்டிற்கு முன்னால் காவல் இருந்தது. அவர் வீட்டைச் சுற்றி ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை ஒரு ஜீப் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தது. ஆகவே, தகுந்தப் பாதுகாப்பு அனைவருக்கும் அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனந்தநாயகி அம்மையாருக்கும் கூட.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அனந்தநாயகி அம்மையாருக்கு . . . . இப்படி தொடர்கதைதான்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பழைய கதை; அப்போதே முடிந்துவிட்டது. புதிய தொடர்கதை என்று நீங்கள் ஆரம்பிக்கப்போகிறீர்கள் . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : அனந்தநாயகி, செழியன் இப்படி எல்லோருக்கும் நடந்தது, தொடர் கதை என்று சொன்னேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இப்படி ரூ 5 ஆயிரம் காணாமல் போய்விட்டது, ரூ. 10 ஆயிரம் காணாமல் போய்விட்டது என்ற தகவல் வந்தது. நான்கைந்து ஆண்டு காலமாக சென்னை நகரில் திருட்டைப் பற்றி தகவல் வந்து கொண்டே இருந்தது. அதை நம்முடைய காவல்

துறையினர் ஒரு அறைகூவலாக ஏற்றுக் கொண்டார்கள். இறுதியாக நகரத்திலுள்ள கிரீன்வேஸ் சாலைக்கு அருகாமையில் உள்ள ஒரு இல்லத்தில் நடைபெற்ற ஒரு களவின் தொடர்பாக நம்முடைய போலீசார் 2 பேரை சென்னையிலுள்ள ஒரு விடுதியில் கைது செய்தார்கள். அந்த 2 பேரும் கல்கத்தாவைச் சேர்ந்த வாலிபர்கள். அவர்களிடத்தில் 75 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களும் அதற்கு முன்பு களவாடப்பட்ட நகைகளும் இருந்தன. அவைகள் மீட்கப்பட்டன. அந்தக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பிடிபட்டதன் மூலம் இதுவரையில் 2½ லட்சம் மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப் பட்டிருக்கின்றன. இங்கிருந்து நம் காவல் துறையினர் கல்கத்தா சென்று, அங்கே நம் அதிகாரிகள் மாறு வேடத்தில் அலைந்து திரிந்து, அந்தக் குற்றவாளிகளை யெல்லாம் கண்டுபிடித்து மிகத் திறமையோடு இந்தப் பணியைச் செய்து முடித்திருக்கிறார்கள்.

இன்னொன்று, நண்பர் செழியன் குறிப்பிட்டார். சிலை காணாமல் போன விஷயம், தஞ்சையில். அது சிவபுரம் சிலையா என்று கேட்டேன். அவர்விவரம் தரவில்லை. நான் விவரத்தை தெரிந்து கொண்டேன். சிவபுரம் சிலை காணாமல் போனது நீண்ட நாளைக்கு முன்பு. அதனுடைய விவரங்கள் வேண்டுமானால் மறுபடியும் வருகிற நேரத்தில் சொல்லுகிறேன். இந்தச் சிலையைப் பொறுத்தவரையில் தாமஸ் நாடார் . . .

திரு. கே. டி. கே. தங்கமணி : கல்கத்தா சென்று கண்டு பிடித்ததாகச் சொன்னார்கள். அப்படிக் கண்டுபிடிப்பதற்கு முதலில் யாரோ – எஸ்.ஐ.–யோ யாரோ – ஒரு அதிகாரி கண்டு பிடித்திருக்க வேண்டும். அதற்கு முக்கியமான பொறுப்பாக இருந்தவர், முதலில் கண்டு பிடித்தவர் அந்த அதிகாரி யார் என்று தெரியுமா?

மாண்புமிகு கலைஞர். மு. கருணாநிதி : அந்த அதிகாரியின் பெயர் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த அதிகாரியின் பெயரை அண்ணா பதக்கம் வழங்கப்படுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி கூறியதை நினைவில் வைத்துக் கொள்வோம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாமஸ் நாடார் என்பவரைப் பற்றிச் சொன்னார். இந்த சிலை வழக்கில் 2, 3 முறை அவர் ஈடுபடுத்தப்பட்டு, விடுதலையும் ஆகியிருக்கிறார். இப்பொழுது தஞ்சைப் பெரிய கோவிலில் இருந்து பிரதோஷ நாயகர் சிலைத் திருட்டுச் சம்பந்தமாகக் குற்ற எண். 766/73-ல் தஞ்சாவூரில் பதிவு செய்யப் பட்டு, தஞ்சை காவல் துறையினரின் விசாரணையில் அது இருந்தது. அந்த விசாரணையில் புலன் ஏதும் கிடைக்கவில்லை. பிறகு அரசு இந்த வழக்கை சி. ஐ. டி. போலீசார் மூலம் விசாரிக்க வேண்டுமென்று கேட்டு, ஐ. ஜி. அவர்களுடைய உத்திரவின் பேரில் தமிழ் நாடு குற்றப் புலனாய்வுத் துறையினர், பெரிய கோவிலில் நடந்த பிரதோஷ நாயகர் சிலைத் திருட்டு வழக்கு விசாரணையை 3-1-1975 நாள் அன்று மேற்கொண்டார்கள். விசாரணையை சிறப்பாகச் செய்த குற்றப் புலனாய்வுத் துறையினர் துரைசாமி என்கின்ற சப் போஸ்ட்மாஸ்டர்-ஐ 24-2-1975 அன்றும், அவருக்குத் துணையாக இருந்த சேலத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் என்பவரை 20-3-1975 அன்றும் கைது செய்தார்கள். துரைசாமி மற்றும் ராமகிருஷ்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் அம்மாப்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 459/73-ஐ 30-3-1975 அன்று பதிவு செய்து, அது சம்பந்தப்பட்ட தீபநாச்சியார் சிலையை - சுமார் 10 ஆயிரம் மதிப்புள்ளது - அதனைக் கைப்பற்றினார்கள். இவ்விருவர் வாக்குமூலத்தின் பேரில் கூகூர் சிவன் கோவிலில் இருந்த ஒரு சிலை களவாடியதாகக் கிடைத்த புலன் பேரில் நாச்சியார்கோவில் காவல் நிலைய குற்ற எண். 89/75 ஆக 8-3-1975-ம் தேதி பதிவு செய்யப்பட்டு, அதில் சம்பந்தப்பட்ட சில எதிரிகள் தாமஸ் நாடாருக்கு விற்றதாக தகவல் கூற, அதன் பேரில் தாமஸ் நாடார் 8-3-1975-லிருந்து தேடப்பட்டு வருகிறார். அவர் தலைமறைவாக இருக்கிறார். அவரைக் கண்டுபிடித்து சிலையைக் கைப்பற்ற மேல் நடவடிக்கை எடுக்க முயற்சி நடைபெறுகிறது. மேற்கொண்டு தகவல்கள் இருக்குமானால் - நம்முடைய செழியன் தவறாக எடுத்துக்கொள்ளாமல் - அவர் எங்கேயிருக்கிறார் என்ற தகவலைச் சொல்லுவார்களானால் உதவியாக இருக்கும் - தாமஸ் நாடாரை நான் கூடப் பார்த்திருக்கிறேன். பார்த்தவுடனே அடையாளம் தெரிந்து விடும் - ஆகவே செழியன் மாத்திரமல்ல, யார் வேண்டுமானாலும் அவரைப் பார்த்தவுடன் அவர் இன்ன

இடத்தில் இருக்கிறார் என்று போலீசுக்குத் தகவல் தந்து உதவி செய்வார்களானால், நன்றாக இருக்கும்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், தாமஸ் நாடாரைப் பற்றிய விவரங்களை எல்லாம் நான் தெரிந்து வைத்திருப்பதைப்போலவும், அவர் எங்கே இருக்கிறார் என்பதை நான் தெரிந்து வைத்திருப்பதைப் போலவும் சொல்கிறார். என்னைப் போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது பல கருத்துக்களை ஆதாரமாகக் காட்டுகிறோம். எங்களுக்குப் பல ஆதாரங்களைக் கொடுக்கிறார்கள். அதை வைத்துப் பேசுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவரைப் பார்த்திருக் கிறார்கள். நான் பார்த்ததுகூடக் கிடையாது. மைலாப்பூர் ஓட்டலில் அவரும் மற்றும் சில பெரிய மனிதர்களும் தங்கியிருந்தார்கள். அவர்கள் தங்கியிருந்த அறைக்குப் பக்கத்தில் டெல்லியிலிருந்து வந்த சி.பி.ஐ. டிப்பார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள் 46 நாள் தங்கியிருந்து, இது சம்பந்தப்பட்ட விபரங்களைச் சேகரித்து இருக்கிறார்கள். அந்த டெல்லி அதிகாரிகள்தான் இந்தச் செய்தியை என்னிடம் சொன்னார்கள். யார், யார் தங்கினார்கள் என்று கேட்டால் அந்த விபரத்தைத் தர நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதனால்தான் சொல்கிறேன் செழியனுக்கு இவ்வளவு விபரம் தெரிந்திருக்கிறது. தன்னுடைய வீட்டுக்குப் போன் செய்கிறார்கள் என்று உடனடியாகப் போலீசுக்கு சொன்ன செழியன் அவர்கள், இப்படி ஒரு சிலையைத் திருடிய ஆசாமி தலைமறைவாக இருக்கிறார் என்பது தெரிந்திருக்கும்போது அதைச் செழியன் கடமை உணர்வுடன் காவல் துறைக்கு போன் செய்திருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

திரு. கோவை செழியன் : தயவுசெய்து இன்னும் அப்படிச் சொல்ல வேண்டாம். அது வேறு பக்கம் திருப்பி விட்டு விடும். இது எப்போதோ நடந்தது. பல மாதங்களுக்கு முன்னால் நடைபெற்றது. அப்போது எனக்குத் தெரியாது. இந்த

மானியத்தின் மீது பேசுவதற்காக 2, 3 நாட்களுக்கு முன்னால் செய்திச் சொன்னார்கள். அப்போதே தெரிந்திருந்தால், ஐ. ஜி. என்ன, கமிஷனர் என்ன, முதலமைச்சரிடமே சொல்லி யிருப்பேன். அவர் முதலமைச்சர் மட்டுமல்ல; என்னுடைய நண்பரும் கூட. அவரிடம் சொல்லி, இதைச் செய்யுங்கள் என்று கூடச் சொல்லியிருப்பேன். ஆனால் இந்தச் செய்தி 2, 3, நாட்களுக்கு முன்னால்தான் தெரிய வந்தது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இன்னும் அவர் என்னை நண்பராக வைத்துக் கொண்டிருப்பதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக இந்த இரண்டு வருஷகாலமாக இந்த மன்றத்திலே பல சிலைகள் திருட்டுச் சம்பந்தமாகக் கேள்விகள் போடப்பட்டிருக்கின்றன. சிலை திருட்டைப் பார்க்குப்போது, சிலைகளைத் திருடி யாரோ கையில் வைத்துக் கொண்டிருப்பது மாதிரி செய்தி வருகிறது. அவர்கள் தான் சிலைத் திருட்டுக்கு ஏற்பாடு செய்கிறவர்கள். அப்படியானால் அந்தத் திருட்டுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதோடு, "not only receivers of the property but also abettors" என்ற முறையில் வந்தால் திருட்டுக் குறையும். அந்த மாதிரிப் போலீசார் செய்ய வேண்டுமென்று ஏதாவது தாக்கீது அனுப்பப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சூழ்நிலை யைப் பொறுத்து, சம்பவங்களைப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் தீவிரமாக இதிலே போலீசார் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சிலைகள் வெளிநாடு களுக்குச் செல்வதைத் தடுக்கின்ற வகையில் வெளிநாடுகளுக்கு நம்முடைய தலைமை காவல்துறை அதிகாரி ஐ. ஜி. அவர்கள் இந்தியாவின் சார்பில் சென்றிருக்கிறார்கள். அவர்கள் இன்டர்போலில் அதன் துணைத் தலைவர்களில் ஒருவராகவும் இருக்கிறார்கள். இதுபற்றி அங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக் கிறது. வெளிநாடுகளுக்கு இப்படிப்பட்ட சிலைகள் அதிகமாக ஏற்றுமதியாவதற்குக் காரணம், அங்கே கிராக்கி அதிகமாக இருக்கிறது. இந்தியாவில் இருந்தால் 5,000, 10,000 ரூபாய்தான்

தரப்படும். ஆனால் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது லட்சக் கணக்கில், இதுபோன்ற தொன்மை வாய்ந்த சிலைகளுக்கு லட்சக் கணக்கில் மதிப்புண்டாகிறது. அதனால் இந்த அளவில் நடை பெறுகிறது. இன்டர்போலில் நம்முடைய ஐ. ஜி. அவர்கள் மிக விரிவாக எடுத்துச் சொல்லி வெளிநாடுகளுக்குக் கடத்தப் படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சாதாரணமாகப் பல சாமான்களைத் திருடுகிறார்கள். திருடிக் கொண்டு போய் ஒரு இடத்தில் விற்கிறார்கள். திருட்டுச் சாமான்களை வாங்கியவர்கள், திருட்டுச் சாமான் என்று தெரியாமல் வாங்கிவிட்டோம் என்று சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். அல்லது திருட்டுச் சாமான்கள் என்று சொல்லி கேஸ் போடலாம். இது இரண்டாவது முறை. திருடுகின்றவர்களுக்குச் சிலையின் மதிப்புத் தெரியாது. ஆனால் திருடுவதற்கு என்று ஒரு 'காங்க்' ஏற்பாடு செய்கிறார்கள். அதைக்கொண்டு, இப்படி ஏற்பாடு செய்பவர்கள் திருட்டுக்கு 'அபட்டராகிறார்' என்ற அந்த முறையில் அணுகினால் அவர்களைத் தடுப்பதாக அமையுமே, அந்த முறையில் நடவடிக்கை எடுக்கப் போலீசாருக்கு ஏதாவது தாக்கீது அனுப்பப் பட்டிருக்கிறதா? போலீஸ் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

திருமதி த. ந. அனந்தநாயகி : சிலைகளை, தொன்மை வாய்ந்தது என்பதற்காகத் திருடுகிறார்களா? இல்லை என்றால் கலைநுணுக்கம் அதிகம் உள்ளதால் திருடுகிறார்களா? இந்த இரண்டையும் பார்த்தால், கலை நுணுக்கம் அதிகம் என்பதால் திருடுகிறார்கள் என்றால், இப்படிப்பட்டச் சிலைகள் நம்முடைய சிற்பக் கூடங்களில் தயார் செய்து விற்கலாமே. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கலை உணர்வுக்காகத் திருடவில்லை; விலை உயர்வுக்காகத் திருடுகிறார்கள். நாமே செய்து விற்கலாம் என்றால் வெளிநாட்டார் புதிய சிலைகளை வாங்கத் தயாராக இல்லை. இதைவிட அழகாக புதிய சிலைகளைச் செய்து கொடுத்தாலும் வாங்கத் தயாராக இல்லை. (திருமதி த. ந. அனந்தநாயகி – குறுக்கீடு). என்ன? எண்ணெய் தடவி, விற்கலாமா? (சிரிப்பு). ஒரு வழக்கறிஞர்

இப்படி யோசனை சொல்வது சரியல்ல. புதிய சிலைக்கு எண்ணெய் தடவி, கறுப்பாக்கி விற்கச் சொல்கிறார்கள். இது நல்ல யோசனை அல்ல. திருடி விற்கிறவர்களுக்கு வேண்டுமானால் இது பயன்படும் யோசனையாக இருக்கலாம்.

திரு. கே. டி. கே. அவர்கள் கேட்டபடி வேறு யாராவது அப்படித் திருடச் சொன்னாலும், அது நிரூபிக்கப்படுமானால் அவர்கள் மீதும் வழக்கு போடப்படுகிறது. அதிலும் போலீசார் தீவிரமாக இருக்கிறார்கள். இன்னும் தீவிரமாக இருக்க வேண்டு மென்ற அடிப்படையில் நான் போலீசாரை அழைத்துப் பேசியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. அவர்கள் நடன ஆசிரியர் மலேஷிய மகாலிங்கம் மரணம் குறித்துச் சொன்னார்கள். போலீஸ் அறிக்கையில், போலீஸ் கமிஷனர் தவறான அறிக்கை கொடுத்தார்; பின் மாற்று அறிக்கை கொடுத்தார் என்று சொன்னார்கள். நான் பத்திரிகைகளை தேடச் சொன்னேன். மலேஷிய மகாலிங்கம் பற்றிய செய்தியை எடுத்துவா என்று சொன்னால் என் வீட்டிலிருந்த பையன் மலேஷிய சாம்பசிவம் கொல்லப்பட்டது பற்றி எடுத்து வந்தான். உள்ளபடியே கே. டி. கே. அவர்கள் மலேசிய சாம்பசிவத்தைப் பற்றி பேசியிருந்தால் நான் ரொம்ப மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஏனென்றால் மலேசியா சாம்பசிவம் மலேஷிய கணபதியோடு அங்கு உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு, கணபதி தூக்குக்குப் போன பிறகு, இந்திய அரசின் கருணை காரணமாக விடுவிக்கப் பட்டு, தமிழ்நாட்டுக்கு வந்தார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் – அந்த எண்ணங்கள் கொண்டவர். ரொம்ப கஷ்டத்தில் இருந்தார். கஷ்டப்படும் போது எனக்குக் கடிதம் எழுதினார். நான் உடனே முதலமைச்சர் அவர் நிதியிலிருந்து ஓரளவிற்கு உதவி செய்தேன். அதுகுறித்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் என்னிடம் அதைப் பாராட்டிக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். அவரைத் திடீரென்று ஒருநாள் வட ஆற்காடு மாவட்டத்தில் எதிரிகள் சிலபேர் கொன்று விட்டார்கள் என்று சொல்லப்பட்டது. அதைக் கேள்விப்பட்டு நான் மெத்த வருத்தப்பட்டேன். இது மலேஷிய சாம்பசிவம் விவகாரம்.

ஆனால் திரு. கே. டி. கே. சொன்னது, மலேஷிய மகாலிங்கம் விவகாரம்; இந்த விவகாரத்தில் கமிஷனர் இரண்டு முரண்பட்ட அறிக்கைகள் கொடுத்ததாகச் சொல்வது தவறாகத் தான்படுகிறது. நான் எல்லாப் பத்திரிகைகளையும் தேடிப் பார்த்தேன். அவர் 6-ந் தேதி இரவு கீழே விழுந்து இறந்தார் என்ற செய்தி பத்திரிகையில் வரும்போது, பத்திரிகைகளில் "மகாலிங்கம் கொலை" என்றுதான் தலைப்புப் போட்டார்கள். வந்த செய்தி பத்திரிகைக்குக் கமிஷனர் அப்படிச் சொன்னார் என்று வரவில்லை. பத்திரிகைச் செய்தி, மலேஷிய மகாலிங்கம் கொலை என்று வந்ததே தவிர கமிஷனர் சொல்லவில்லை. மகாலிங்கம் கொலை செய்யப்பட்டது பற்றி போலீஸ் கமிஷனர் சொன்னது, "பிரேதப் பரிசோதனை அறிக்கை கிடைத்த பிறகுதான் இதுபற்றி எதுவும் கூற முடியும்; அவர் உடலில் வெளிக் காயங்கள் இல்லை என்றாலும் உள் காயங்கள் இருக்கிறதா என்பது பிரேத பரிசோதனையின் போது தெரியும்" என்று கமிஷனர் கூறியிருக்கிறார்.

அதற்குப் பிறகு பிரேத பரிசோதனை நடந்தது. பிரேத பரிசோதனையில் பஞ்சாயத்தார் மேலே இருந்து கீழே விழுந்து இறந்தார் என்று - பஞ்சாயத்தில் 5 பேர் இருந்தார்கள் - சொல்லி, அந்த பிரேதப் பரிசோதனை சர்டிபிகேட்டை வைத்து முடிவு செய்தார்கள். அந்த முடிவைத்தான் மறுபடியும் போலீஸ் கமிஷனர், மலேஷிய மகாலிங்கம் செத்தது எப்படி என்று நிருபர்கள் கேட்க, அவர்களுக்குப் பதில் அளித்திருக்கிறார்களே அல்லாமல், கொலை என்று அறிவித்துவிட்டு மறுபடியும் தற்கொலை என்று அறிவித்தார் என்று கூறுவது பொருத்த முடையது அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றும் திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். "மலேஷிய மகாலிங்கம் கொலை செய்யப்படுகிறார்; கமிஷனர் அறிவிக்கிறார் கொலை என்று. மறுநாள் தற்கொலை என்று கமிஷனர் அறிவிக்கிறார், அதற்கு மறுநாள் அவர் அடிஷனல் ஐ. ஜி. ஆகிறார்". என்று கே. டி. கே. அவர்கள் பேசியிருக்கிறார்கள். கே. டி. கே. தங்கமணி போன்றவர்கள் இப்படிப் பேசுவதுதான் எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால் அதற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது, அடிஷனல்

ஐ. ஜி. பதவிக்கு, ஐ.ஜி. அவர்களிடமிருந்து "பிரபோசல்" வந்து அதற்கு அரசாங்கத்தின் சார்பில் நான் கையெழுத்து போட்ட தேதி 5-8-1974. மகாலிங்கம் மாடியிலிருந்து விழுந்து இறந்தது 6-8-1974-அந்த போஸ்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது 5-8-1974. ஆகவே இந்த இரண்டையும் இணைத்துப் பேசுவது முறையாகாது.

"இவர் எப்படி அடிஷனல் ஐ. ஜி. ஆகலாம்", செழியன் கூட வேண்டுமென்றே அதைச் செய்தீர்கள் என்றார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தானாகவே விழுந்து இறந்திருக்கலாம். நான்கு பேர்கள் தள்ளியும் விட்டு இறந்திருக்கலாம். தானாகவே விழுந்தார் என்றால் சூயிசைட் - நான்கு பேர்கள் தள்ளிவிட்டிருப்பார்களானால் மர்டர். அந்தச் செய்தி கிடைத்தவுடன் அது பற்றி புலன் விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது அந்த கேசே டிராப் செய்யப்பட்டிருக்கிறது. எனக்கு நேரிடையாகத் தெரியாது. எனக்குக் கிடைத்த விவரங்களைச் சொன்னேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : முதலில் கொலை என்று கமிஷனர் அறிக்கை விட்டார்; பிறகு தற்கொலை என்று அறிக்கை விட்டார் என்று சொன்னதற்குத்தான் விளக்கம் தந்தேன். கொலை என்று அறிக்கை விட்ட கமிஷனர் மறுநாள் தற்கொலை என்று அறிக்கை விட்டதும் அவருக்குப் பதவி கொடுக்கப்படுகிறதென்றால் என்ன காரணம் என்று மர்மமாகப் பேசியதற்குத்தான் நான் பதில் சொல்ல விரும்புகிறேன்.

அடிஷனல் ஐ. ஜி. பதவி நம்முடைய மாநிலத்தில் மாத்திரம் அல்ல; எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. மத்திய அரசு அடிஷனல் ஐ. ஜி. பதவி ஒன்றை தமிழகத்திற்குத் தந்தது. அதை யாருக்குத் தருவது என்கிற நேரத்தில் எந்த முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. அருள் அவர்கள் ஐ. ஜி. யாக இருக்கிறார். அவருக்கு அடுத்ததாக இருக்கிற ஸ்டிரேசி ஐ. ஜி. (ஃபுட்செல்) என்ற பதவியில் இருக்கிறார். அதற்கடுத்த, சங்கரன் நாயர் டெல்லியில்

ஐ .ஜி. பதவிக்குச் சமமான பதவியில் இருக்கிறார். அதற்கடுத்த சிங்காரவேலுவும், குப்புசாமியும் ஓய்வுபெற்று விட்டார்கள். ஆறாவதாக இருக்கிற ஆர். என். மாணிக்கம் டெல்லியில் ஐ. ஜி. பதவிக்குச் சமமான பதவியில் இருக்கிறார். ஏழாவதாக இருப்பவர் தான் ஷெனாய். ஆகவே, எல்லா வகையிலும் அந்தப் பதவிக்குத் தகுதியானவருக்குத்தான் அடிஷனல் ஐ. ஜி. என்கிற அந்தப் பதவி தரப்பட்டிருக்கிறதே அல்லாமல் எந்த முறைகேடும் இதில் நடைபெறவில்லை.

விசாரணைகளின் அறிவிப்புகள் எல்லாம் இங்கே வைக்கப்படவில்லை. வைக்கப்பட்ட அறிவிப்புகளின் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் இங்கே குறிப்பிட்டார். பெரியகுப்பம் நிகழ்ச்சி பற்றி ஏன் அறிக்கை வைக்கவில்லை என்று கேட்டார்கள்.

ஒரு புதிய மாறுதல் முன்பிருந்த அரசுகளுக்கும் இப்போதுள்ள அரசுக்கும் உண்டு. அதாவது முன்பெல்லாம் விசாரணையே கிடையாது. விசாரணை நடந்தால்தானே. ஏன் அறிக்கையை சபையில் வைக்கவில்லை என்று கேட்க முடியும். இப்போதுள்ள தொல்லை எல்லாம் நாங்கள் விசாரணை வைத்து விடுகிறோம். அதனால் அறிக்கை எங்கே, எங்கே என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் இது ஒரு 'ஜுடிஷியல் என்கொயரி' கூட அல்ல. ஜுடிஷியல் என்கொயரி'-இன் அறிக்கைகள் எல்லாம் வைக்கப்படுகின்றன. ஒரு அதிகாரி யினுடைய விசாரணை அறிக்கை வைக்கப்பட வேண்டுமென்று உறுப்பினர்கள் விரும்புவார்களானால் அதையும் வைக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தப் பெரியகுப்பம் சம்பந்தமாக பலதரப்பட்ட கருத்துக்கள் இருப்பதால் அந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைப்பதன்மூலம் தவறான கருத்துக்கள் அகற்றப்படுவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, அந்த அறிக்கையை இந்த அவைமுன் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அது அச்சாகிக் கொண்டிருக்கிறது. முடிந்ததும் இந்த அவையில் வைக்கப்படும்.

ஆனால் அதிலே தரப்பட்டிருக்கிற குறிப்புகளை மாத்திரம் இங்கே படிக்க விரும்புகிறேன்.

1. இரண்டு தனிப்பட்ட நபர்களிடையே எழுந்த ஒரு சாதாரண பூசல் அரசியல் காரணமாக அசாதாரணமாக மிகைப் படுத்தப்பட்டு அரசியல் லாபம் கருதி தேவையற்ற முறையில் காவல் துறையினர் மீதும், ஏதுமறியாத மற்றவர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

2, 12-5-1973 அன்று காவல் துறையினர் பெரியகுப்பம் கிராம மக்களைத் துன்புறுத்தியதாகவும், சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாகவும், அக்கிராமத்துப் பெண்களை மானபங்கம் செய்ததாகவும், கற்பழித்ததாகவும் கூறப்பட்ட புகார்கள் தகுந்த ஆதாரமற்றவையாதலால் அவைகள் நிராகரிக்கப்பட வேண்டியவையாகும்.

3. 13, 14 மே 1973 ஆகிய நாட்களில் போலிசார் பெரிய குப்பத்தில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டு ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. ஆதலால் அக்குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ள இயலாததாகும்.

4. திரு. மதுராந்தகம் ஆறுமுகம், எம். எல். ஏ., திரு. செய்யூர் பாலகிருஷ்ணன் ஆகிய தி.மு.க. பிரமுகர்களை இச்சம்பவங்களில் சம்பந்தப்படுத்தியது தேவையற்றதும், நியாமற்றதும், அரசியல் நோக்கமுடைய செயலாகும்.

5. கிராம மக்களுடைய உடைமைகளுக்குச் சேதம் விளைவித்ததற்கு காவல் துறையினர் பொறுப்பாளிகள் என்று கூற முடியாது. அச்செயல்களை விஷமிகளும், சமூக விரோதிகளும் செய்திருக்கக்கூடும்.

மேலும் இக்குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளை அரசுக்குக் கூறியுள்ளது :-

1. பெரியகுப்பம் கிராமம் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் அமைந்துள்ளது. அதற்குச் சரியான போக்குவரத்து வழிகள் அமையாததால் இத்தகைய சம்பவங்கள் நிகழ எதுவாகிறது. எனவே அவ்விடத்திற்கு அருகில் பக்கிங்ஹம் கால்வாயைக் கடப்பதற்கு வசதியாக தேவையான இடங்களில் பாலங்கள் அமைக்க வேண்டும்.

2. கடற்கரையோரப் பகுதிகளாகிய இவ்விடங்களில் கிராமங்களில் பாதுகாப்பிற்காக ஒன்று அல்லது இரண்டு காவல் நிலையங்களை (அவுட் போஸ்டுகளை) அமைக்க வேண்டும்.

3. இந்நிகழ்ச்சியில் கிராம முன்சீப் யாதொரு அக்கறையும் காட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

4. இம்மாதிரி நிகழ்ச்சிகளின்போது சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் உயர்மட்ட அதிகாரிகள் நிகழ்விடங்களுக்கு உடனடியாகச் செல்வது நிலைமையைக் கட்டுப்படுத்த உதவுவதோடு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தவும் உண்மையான செய்தியை வெளிப்படுத்தவும் உதவும்.

விசாரணை ஆணைக் குழுவின் தீர்ப்புகளை அரசு ஏற்றுக்கொண்டு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இவைகள் இந்த அவையில் வைக்கப்படும்.

பாளையங்கோட்டை சம்பவம் பற்றி வைக்கப்பட்ட அறிக்கைக்கு நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டது என்று திருமதி. அனந்தநாயகி அம்மையார் கேட்டார்கள். அங்கே ஒன்பது நபர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் 17-3-1973 அன்று மாரடைப்பால் மரணமடைந்து விட்டார். குற்றம் சாட்டப்பட்ட மற்ற 8 பேர்கள் மீது திருநெல்வேலி தலைமை மாஜிஸ்ட்ரேட் முன்பாக தொடர்ந்து வழக்கு நடத்தப்பட்டது. திருநெல்வேலி தலைமை மாஜிஸ்ட்ரேட் 27-12-1974 அன்று இன்ஸ்பெக்டருடைய மகன்கள் மோகன்குமார், வசந்தகுமார் மற்றும் காவலர்கள் ஆகியோரை குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்தார். மோகன்குமாரும், வசந்தகுமாரும் குற்றவாளிகள் நன்நடத்தை சட்டத்தின் 4(1) விதியின் கீழ் விடுவிக்கப்பட்டனர். நான்கு காவலர்களுக்கு மூன்று மாத கால அளவுக்கு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டு தலைமைக் காவலர்கள் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்ததை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யலாம் என நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். அதை அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க்ளைவ் ஹாஸ்டல் சம்பந்தமாக அவைகளை விசாரித்து நடவடிக்கை எடுக்க திரு. கார்த்திகேயன் ஐ. ஏ. எஸ். அவர்களிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதிலே ஐ. ஏ. எஸ். ஐ. பி. எஸ். அலுவலாளர்கள் இருக்கின்ற காரணத்தால் யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனையும் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் அவைகளைப் பற்றி திரு. கார்த்தி கேயன் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்.

அரசியல் கிளர்ச்சிகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு அரசியல் கிளர்ச்சிகளில் இந்த அரசு நான் அடிக்கடி சொல்வதைப்போல்

"கடிதோச்சி மெல்ல எறிக"

என்ற குறள்மொழிக்கேற்ப நடந்து வந்திருக்கிறது.

7-8-1970-இல் வலது கம்யூனிஸ்டுக் கட்சி நடத்திய நிலப்பறிப் போராட்டத்தில் 12,757 பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் 30-8-1970 அன்று விடுதலை செய்யப் பட்டார்கள்.

தண்டனைக் காலம் முடிகின்ற வரை இருந்துதான் தீர வேண்டுமென்று யாரையும் வைக்கவில்லை. முன்பு நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த போதெல்லாம் அப்படி இல்லை, நாங்கள் எல்லாம் 3 மாத காலம் என்று தண்டிக்கப்பட்டால் அதிலே ஒரு மணி நேரம் கூடக் குறைவாக யாரும் எங்களை விடுதலை செய்தது கிடையாது. இன்றைக்குத்தான் இந்த அரசு தண்டனைக் காலம் முடிவதற்குள்ளாக அரசியல் கைதிகளை விடுதலை செய்கிற அந்த முறையை ஏற்படுத்தியிருக்கிறது.

உள்நாட்டு ஒத்துழையாமை இயக்கம் என்ற பெயரால் சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. நல்ல சிவம் அவர்களும் மற்றம் ஐவரும் கைது செய்யப்பட்டு அன்று மாலையே விடுதலை செய்யப்பட்டார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அந்தப் போராட்டத்தில் நாங்கள் எல்லாம் கைது செய்யப்பட்டோம். ஆனால் தண்டிக்கப் படாமல் விடுதலை பெற்றோம். ஆகவே தண்டிக்கப்பட்டு, விடுதலை பெற்றோரும் என்று சொல்வது உண்மையல்ல.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மொத்தம் கைது செய்யப்பட்ட 12,757 பேர்களில் 30-ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டவர்கள் 11,651. மன்னிப்புக் கடிதம் கொடுத்து விடுதலை பெற்றவர்கள் 1,048. தண்டனை பெற்றபின் அரசின் ஆணையின் பேரில் விடுதலை செய்யப்பட்டவர்கள் 58. நான் இந்த விவரங் களைச் சொல்ல வேண்டாமென்று கருதினேன். திரு. தங்கமணி கேட்டதால் சொன்னேன்.

உணவு - வேலையில்லாமை ஒழிப்புப் போராட்டம் என்ற பெயரால் நடைபெற்ற போராட்டத்தில் 3-10-1972 முதல் 5-10-1972 வரை இந்திய கம்யூனிஸ்டுகள் 3,505 பேர் கைது செய்யப்பட்டு அன்று மாலையே விடுவிக்கப்பட்டார்கள். 18-10-1972 முதல் 20-10-1972 வரை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுகள் நடத்திய போராட்டத்தில் 8,159 பேரும் அன்றையதினமே விடுதலை செய்யப்பட்டடார்கள்.

ஆசிரியர்கள் போராட்டத்தில் 30-4-1972 முதல் 16-5-1972 வரை ஆயிரம் பேருக்கு மேல் கைது செய்யப்பட்டு அவர்கள் 16-5-1972-இல் விடுதலை செய்யப்பட்டார்கள்.

3-10-1973 முதல் 12-10-1973 வரை பழைய காங்கிரஸ் கட்சியினர் நடத்தியப் மதுவிலக்குப் போராட்டத்தில் 32,838 பேர் கைது செய்யப்பட்டு, போராட்டம் முடிந்த 12-10-1973 அன்றே விடுவிக்கப்பட்டிருடக்கிறார்கள். அதிலே இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கிளர்ச்சியின்போது, திருச்சிச் சிறைச் சாலையில் இருந்த காங்கிரஸ்காரர்கள் அங்கே ஏற்பட்ட ஒரு கலவரத்தில் அங்கே பறந்து கொண்டிருந்த தேசியக் கொடியை இறக்கிவிட்டு, கட்சியின் கொடியை ஏற்றினார்கள். அவர்கள் மீது வழக்கு போடப்பட்டது. ஆனால், அந்த வழக்குக் கூடத் திரும்ப பெறப்பட்டது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1974-ம் ஆண்டு சென்னையில் மட்டும் 50-க்கு மேற்பட்ட கிளர்ச்சிகள் நடைபெற்று, அந்தக் கிளர்ச்சியிலே ஈடுபட்ட அத்தனை பேரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள்தான் நடைபெற்றிருக் கின்றன. 1975-ம் ஆண்டு, இந்த மூன்று மாதத்தில் மாத்திரம் 22

கிளர்ச்சிகள் நடைபெற்று, அதிலே கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதைப் போலவே, மாணவர்கள், தொழிலாளர்கள் கலந்து கொண்ட வழங்குகள் 50-க்கு மேல் கைவிடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் மீகு கனிவு கொண்ட பல தலைவர்கள் இங்கே இருக்கிறார்கள், எதிர்க் கட்சியிலும் சரி, ஆளுங்கட்சியிலும் சரி, அந்த வரையில்கூட தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் - நான் தேதி வாரியாக வைத்திருக் கிறேன் - 50க்கு மேற்பட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டன என்று நான் கூறிக்கொள்வேன்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதி - போராட்டம் பற்றி பொன்னப்ப நாடார் அவர்களும் ஹாண்டே அவர்களும் இங்கே பேசினார்கள். வகுப்பு வெறி இன்றைக்குக் கல்லூரிகளிலே நுழைந்திருப்பது உள்ளபடியே, மிகமிக வேதனை தரக்கூடிய ஒன்றாகும். பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும், ஏன் காந்தியடிகள் போன்றவர்களும் அவர்கள் வழி வந்தவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும் இன்றைக்குச் சாதி பேதம், சாதி வெறி கூடாது என்பதற்காக உழைத்து வருகிறோம். ஆனால் நம்மையும் அறியாமல் இன்றைக்கு இப்படிப்பட்ட வகுப்புவாத குரோத எண்ணங்கள் நம்முடைய சமுதாயத்திலே ஊடுருவுவது இந்தச் சமுதாயத்திற்கு ஏற்படுகிற ஒரு பயங்கரமான புற்று நோய் என்றுதான் நான் கூற விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிற அரசு என்று நான் பலமுறை அழுத்தந்திருந்தமாக எடுத்துச் சொல்லி யிருக்கிறேன். இதிலே வேடிக்கை என்னவென்றால், எந்தப் பின் தங்கிய மக்களுக்காகப் பாடுபடுகிறோமோ, அந்தப் பின்தங்கிய மக்களே இரண்டு கூறுகளாக, மூன்று கூறுகளாகப் பரிந்து கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொள்வதும், எந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காப் பாடுபடுகிறோமோ, அந்தத் தாழ்த்தப் பட்ட மக்களே அவர்களுக்குள் இரண்டு கூறுகளாக, மூன்று கூறுகளாகப் பிரிந்து கொண்டு, அவர்களுக்குள் சச்சரவுகளை வளர்த்துக் கொள்வதும் விரும்பத்தக்கக் காரியமல்ல.

ஆகவே, சாதி ஒழிய வேண்டுமென்பதை உதட்டளவிலே உச்சரிக்கின்ற வார்த்தையாக வைத்துக் கொள்ளாமல், உள்ளத்திலே பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆளுங் கட்சியிலே இருக்கிறவர்களையும் கேட்டுக்கொள்வேன், எதிர் கட்சியிலே உள்ளவர்களையும் கேட்டுக்கொள்வேன், தோழமைக் கட்சியிலே இருக்கிறர்வளையும் கேட்டுக்கொள்வேன். சமுதாயத்திலே இருக்கிற அத்தனை பேரையும் கேட்டுக் கொள்வேன். அதன் காரணமாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட கலவரங்களானாலும், சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் ஏற்பட்ட கலவரமானாலும், உள்ளபடியே சகித்துக் கொள்ளத் தக்கதல்ல. அவைகளைப் பற்றி மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. இராசாராம் நாயுடு அவர்கள் கூட மேலவையில் அதற்காக ஒரு அதிகாரியை வைத்து விசாரணை வைக்கக் கூடாதா என்று கேட்டார்கள். அதையெல்லாம் மனதிலே கொண்டு, இங்கே பேசிய உறுப்பினர்களின் கருத்துக்களை மனதில் கொண்டு, அந்தச் சம்பவங்களைப் பற்றி விசாரிப்பதற்காக ஐ. ஜி. அவர்களை அதற்காக, நியமித்து, அவரை அதற்காக ஒரு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக்கொண் டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கீழ் வெண்மணிச் சம்பவம், பற்றிச் சொன்னார்கள். அந்தத் தீர்ப்பினால் கீழ்க்கோர்ட்டில் தண்டிக்கப்பட்டவர்கள், உயர்நீதி மன்றத்தில், எல்லா எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். கே. டி. கே. அவர்கள் வருத்தம் தெரிவித்தார்கள். இப்படி விடுதலை செய்தார்களே என்று. தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் இப்பொழுது பேசும்பொழுது கூடக் குறிப்பிட்டார்கள். பலரும் அதற்காக வருத்தம் தெரிவித்தார்கள். சம்பவம் நடந்தது உண்மை. ஆனால் அந்தச் சம்பவத்திலே குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விடுதலை அடைந்திருக்கிறார்கள். அப்படி விடுதலை அடைந்ததை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்திலே அப்பீல் செய்வதற்கு, Certificate of leave to appeal உயர் நிதிமன்றத்தில் அரசின் தரப்பில் கேட்கப்பட்டது. உயர் நீதிமன்றம் அதை மறத்துவிட்டது. அப்படி மறத்துவிட்ட காரணத்தால், உச்ச நீதிமன்றத்திலே special leave petition 22-3-1975-லே பதிவு செய்துள்ளோம்

என்பதை மாத்திரம் நான் அந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

அதிகாரிகளை மாற்றுவதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நல்ல அதிகாரிகளை மாற்றிவிடுகிறீர்கள்; தீய அதிகாரிகளை மாற்றாமல் விட்டு விடுகிறீர்கள் என்ற கருத்தை கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். செழியன் அவர்கள் இஷ்டப்படி ஆளுங்கட்சி சொல்கிற நேரத்தில் எல்லாம் அதிகாரிகளை மாற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, மாற்றுவது என்ற கொள்கையை நாம் அனைவரும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். இதிலே நல்லவர்கள் யார், தீயவர்கள் யார், என்பதிலேதான் - தீர்மானிக்கும் நேரத்தில்தான் நமக்குள்ளே அபிப்பிராய பேதம் வருகிறதே தவிர, நல்லவர்களாக இருந்தால் இருக்கலாம், தீயவர்களாக இருந்தால் மாற்றலாம் என்கிற அந்தக் கொள்கையை ஏதோ ஒரு வகையில் எதிர்க்கட்சியின் சார்பாக பேசியவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ ஆளுங் கட்சியின் சார்பில் ஆயிரக்கணக்கில் சிபாரிசுகள் தருகிறார்கள் என்று சொன்னார்கள். செழியன் அவர்கள் கூட ஆளுங் கட்சியிலே இருந்தபோது சிபாரிசுகளைக் கொடுக்க வில்லையா? எவ்வளவோ கொடுத்தார்கள். கோட்டால் தரலாம் என்று என்னிடத்திலே கூட வைத்திருக்கிறேன். இவ்வளவு கடிதங்களை (அவையில் காண்பித்து) செழியன் அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களுக்காகக் கொடுத்தவைதான்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, நான் ஆளுங் கட்சியிலே இருந்தபொழுது கொடுத்திருக்கிறேன். எப்பொழுது கொடுத்திருக்கிறேன் என்றால், என்னுடைய தொகுதியிலே இருக்கிற அதிகாரிகளை வேறு யாராவது தலையிட்டு மாற்றுகின்றபொழுது அல்லது தலையிடுகின்றபொழுது, நான் அவைகளைத் தடுக்கச் சொல்லியிருக்கிறேன். ஆனால், நானாக அவரை மாற்று, இவரை மாற்று, எனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னது கிடையாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நீங்கள் நிறையக் கொடுத்தீர்கள், கொடுத்த எல்லாவற்றையும் நான் செய்தேனா என்று கேட்கிறேன்.

திரு. கோவை செழியன் : நான் நியாயமானதைத்தான் சொன்னேன். நியாயமானதைச் செய்தீர்களென்று நம்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நியாமானதைச் செய்தீர்கள் என்று நம்புகிறேன் என்று சொல்கிறார். ஆக, ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் கொடுத்தாலும், நியாயமாக இருந்தால் தான் செய்வேன்; அநியாயமாக இருந்தால் செய்யமாட்டேன் என்று அவரே ஒத்துக் கொண்டதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சாதாரணமாக, ஒரு அதிகாரி ஓரிடத்திலே 3 வருடகாலம் இருக்க வேண்டுமென்ற நியதியிருக்கிறது. அப்படியிருக்கும்போது ஒரு அதிகாரி 3 வருடத்திற்குள்ளாக மாற்றப்படுகிறார். சில அதிகாரிகளுக்கு இன்னும் 6 மாத காலம் இருக்கிறது ரிட்டையார் ஆக. அதற்குள்ளே - ரிட்டையர் ஆக 1 வருடம் இருந்தால் சாதாரண மாக மாற்றுவது கிடையாது - மாற்றுகிறார்கள். இப்படி மாற்று கிறார்கள் என்பதற்காகத்தான் சொன்னேன் தவிர, நல்லவர் கெட்டவர் என்ற பிரச்னைக்கு நான் வரவில்லை. ஆனால், சில குறிப்பிட்ட அதிகாரிகளை 1 வருடம் 2 வருடம் ஆன உடனே மாற்றுவதும், சில அதிகாரிகளை 3 வருடம் ஆன பிறகும் மாற்றப் படாமல் இருக்கிற அந்த முறைகள் பல இடங்களிலே இருக்கின்றன.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள் என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப் பட்டது. ஆளுங் கட்சியிலே உள்ளவர்களும் கொலையுண்டிருக் கிறார்கள். உடுமலைப் பேட்டையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். பொள்ளாச்சியிலே லத்தீப் என்கிற தி.மு.க. வாலிபர் ஒருவர் கொல்லப்பட்டார். அதிலே, அ.தி.மு.க.வினர் மீது வழக்குத் தொடரப்பட்டு, அவர்கள் விடுதலை அடைந்தார்கள். அரசாங்கம் நீதிமன்றத்தினை தன்னுடைய கையிலே வைத்திருக்கவில்லை. எது நீதியோ அது நடக்கட்டும் என்கிற வகையிலேதான் அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது. எதிலும் தலையிடுவதில்லை என்பதற்கு இவைகள் எல்லாம் உதாரணம்.

பிரதாப்சந்திரன் கொலை வழக்கிலே கூட, குசேலரும் மற்றும் நான்கு பேரும் விடுதலையாகிருக்கிறார்கள். இரண்டு பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

30-7-1972 அன்று முகவை மாவட்டம் குமாரப்பட்டியில் அண்ணா மன்றத்தில் தி.மு.கழகத்தினர் கம்யூனிஸ்ட்களால் தாக்குண்டு, முத்து என்பவர் கொலையுண்டார் என்ற வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் விடுதலை ஆனார்கள். ஆனால் கொலையுண்டது உண்மை. விடுதலையாகி விட்ட காரணத்தாலேயே சம்பவம் இல்லையென்று ஆகிவிடுமா? கே. டி. கே. கூட சொன்னார்கள், சிலர் விடுதலையாகிவிடுகிற காரணத்தாலேயே சம்பவம் நடந்தது இல்லையென்று ஆகிவிடுமா என்று கேட்டார். கொலையுண்டது நடந்த சம்பவம்தான்.

அதைப்போலவே கோவை மாவட்டத்தில் குறிச்சி கிராமத்தில் ஸ்தாபன காங்கிரஸ் விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த வர்களால், தி.மு.க.வைச் சேர்ந்த ராசு கொலை செய்யப்பட்டார். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை பெற்றிருக்கிறார்கள்.

தென்னாற்காடு மாவட்டம், தேனாம்பட்டு கிராமத்தில் மலையாளத்தான் என்பவர் அ.தி.மு.க. விலிருந்து மீண்டும் தி.மு.கழகத்திற்குத் திரும்பினார். 5-7-1974 அன்று கொலை யுண்டார். அவ்வூர் ஊராட்சித் தலைவர் ரகுபதி உட்பட 12 பேர் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். மூன்றாவது குற்றவாளி கோதண்ட பாணிக்கு மட்டும் ஐந்தாண்டுக் கடுங்காவல் தண்டனை அளிக்கப் பட்டது. மற்றவர்கள் விடுதலை அடைந்தார்கள்.

ஆகவே, இந்த அரசியல் கொலைகள் எல்லா கட்சிகளிலும் நடைபெறுகின்றன. அதற்காக நாம் அனைவரும் சேர்ந்து நம்முடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோமே அல்லாமல், வன்முறைகள் அரசியலில் தலையெடுக்கக் கூடாது என்பதில் நான் இரண்டுவிதமான கருத்துக்களைக் கொண்டிருப்பவன் அல்ல.

காங்கிரஸ்காரர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்; அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களும் கொலைக்க ஆளாகிறாகள்; ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்;

முஸ்லிம் வீக்கைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்; கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள். எப்படியிருந்தாலும்கூட நான் எடுத்துச் சொல்கின்ற பொதுவான கருத்து, பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வன்முறையை ஒரு கருவியாகப் பயன்படுத்து வதை இந்த அரசோ அல்லது ஆளுங் கட்சியாக இருக்கிற தி.மு. கழகமோ அனுமதிக்கவில்லை. ஆதரிக்கவில்லை என்பதை மாத்திரம் நான் இங்கே எடுத்துக் கூறப் பெரிதும் கடமைப்பட் டிருக்கிறேன். இருந்தாலும் இதை நீண்டகாலமாக எல்லாத் தலைவர்களும் எடுத்துச் சொன்னாலும் கூட இடையிலே சில காரியங்கள் நடைபெற்று விடுகின்றன.

வெங்கா தாக்கப்பட்டது பற்றிச் சொன்னார்கள். இன்னும் என்ன செய்கிறது அரசு என்று கேட்டார்கள். அரசு புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கார் டிரைவர் கைது செய்யப்பட்டார். கமிஷனர் அலுவலகத்தில் தவறான நம்பர்கள் பொறிக்கப்பட்ட 20, 30 கார்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்திருக்கலாம். அந்தக் கார்கள் எல்லாம் கள்ளக் கடத்தல் கார்கள்; கொள்ளை அடிக்கப் பயன்பட்ட கார்கள். ஆனால், அதிலே இருக்கிற நம்பருக்கும் அந்தக் காருக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. இப்படி அந்த டிரைவர் கைது செய்யப்பட்ட போது கூட, 'நான் அந்தப் பக்கமே வரவில்லை' என்று சொன்ன தாகவும் இருந்தாலும். மேலும் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாகவும், போலீஸ் அதிகாரிகள். கமிஷனர் அவர்கள் எனக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அதை அப்படியே விட்டு விட்டோம் என்ற நினைக்கத் தேவையில்லை.

சேலத்தில் நடைபெற்ற கொலைபற்றி எடுத்துச் சொல்லப் பட்டது. அதுபற்றியும் புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டு பேர்கள் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். அதற்குள் வழக்கு தாக்கல் செய்யப்படாதற்குக் காரணம் இன்றும் புலன் விசாரணை முடிவடையவில்லை.

குசேலர் கேசில் 'பொலிடிகல் மோடிவேஷன்' (அரசியல் தூண்டுதல்) என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று கே. டி. கே. சொன்னார்கள். நான் பிறகு அந்த ஜட்ஜ்மெண்டை வாங்கிப்

படித்துப் பார்த்தபோது அப்படிப்பட்ட வார்த்தையே அதிலே இல்லை. தங்கமணி அவர்கள் மீது போடப்பட்ட கேசிலே கூட, செஷன்ஸ் ஜட்ஜ் 'மோடிவ்' அரசியலாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார் என்று தங்கமணி இங்கே குறிப்பிட்டார். தங்கமணி போன்ற பெரியவர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள் வயதைச் சொன்னால் கோபித்துக் கொள்வார்களோ என்னவோ பத்து ஆண்டுகள் என்னைவிட அதிகம், 61 வயது என்று ஆனந்தவிகடன் வெளியிட்டு இருக்கிறது, அப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட தகவலை அவைக்குத் தருவது வேதனைக்குரியதாகும். அப்படி தங்கமணி அவர்கள் வழக்கில் நீதிபதி 'மோடிவ்' அரசியல் என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. அவர் ஆர். எஸ். மங்கலத்தில் பேசிய பேச்சு குறித்த வழக்காகும் அது. ஜட்ஜ் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்,

"The next point that arises for consideration is whether the words complained of bring home an offence under Section 115 read with Section 302 I.P.C. as alleged by the prosecution. If the speech complained of is translated into English, secording to me, will run as follows :-

"What is the way for the Chief Minister to escape from the enquiry? One way would be to commit suicide like Hitler or he should be beaten to death like Musolini by you all. Except these two courses I do not see any other way to put an end to the Chief Minister."

இது தங்கமணி அவர்கள் பேசிய பேச்சாகும். தங்க மணியைப் போன்றவர்கள் - ஒரு காலத்தில் என்னைப் பாராட்டிப் புகழ்ந்து பேசிய தங்கமணி போன்றவர்கள். என்னுடைய முடிவு இப்படி அமைய வேண்டுமென்று கருதுவார்களேயானால், அந்த முடிவை தங்கமணியைப் போன்றவர்கள் தங்களுடைய கையால் செய்வார்களேயானால். நான் உள்ளபடியே ஒரு தியாகியின் கையால் சாகிறேன் என்ற அளவில்கூட மகிழ்ச்சியடைவேன்.

திரு. கே. டி. கே தங்கமணி : தீர்ப்பில், அப்படிப் பேசியிருந்தாலும் அது குற்றமாக ஆகாது என்றுதான் இருக்கிறது,

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் நீங்கள் பேசியதைத்தான் சொன்னேன். நீங்கள் எல்லாம் பெரியவர்கள்; நீங்கள் இப்படிப் பேசலாமா? சின்னப் பிள்ளைகள், சில தலைவெட்டிகள் எல்லாம் இருக்கிறார்கள். செழியன் யார் யாருக்கோ ஸ்ரீலஸ்ரீ, மகாசந்நிதானம், என்றெல்லாம் பெயர் வைத்திருக்கிறார். அவரே யாருக்கோ 'தலைவெட்டி' என்று பெயர் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே, சில தலை வெட்டிகள் எல்லாம் இருக்கிறார்கள். செழியனுக்கு ஒரு இளகிய இதயம் உண்டு. அதுவும் என்பால் அன்பு உண்டு. என்னுடைய தலையை வெட்டுவேன் என்று சொன்னால் செழியனைப் போன்றவர்கள் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள், ஆகவே தலைவெட்டி என்று யாருக்கோ அவர் பெயர் வைத்து அழைப்பதாக எனக்குக் கேள்வி. ஆனால் அவர் ஒத்துக் கொள்வாரா என்பது வேறு.

திரு. கோவை செழியன் : நான் யாரையோ தலை வெட்டி என்று சொன்னதாகவும் யாருக்கோ தலைவெட்டி என்று பெயர் வைத்தாகவும் ஒரு தவறான கருத்தைச் சொன்னார்கள். நான் யாரையும் தலைவெட்டி என்று சொல்லவில்லை. வரலாற்றிலே வேண்டுமானால் சார்லஸ் மன்னன் தலையை வெட்டுவதாக வரலாம். நான் யாரையும் தலைவெட்டி என்று பெயர் வைத்து அழைக்கவில்லை. அப்படிக் கூப்பிட்டதே கிடையாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கூப்பிட்டால் தெரிந்துவிடும். சிலரிடம் சொன்னதாகக் கேள்வி, தங்கமணி, அவர் பேசியதை, ஜட்ஜ் குற்றமாக ஒத்துக்கொண்டாரா என்று கேட்டார். ஜட்ஜ் அதைப்பற்றிச் சொல்கிறார்.

"I find such words have been freely used mainly to attain cheap popularity and to get an applause from the audience rather than with an intention of inciting the audience to murder the Chife Minister. If it were the intention of the accused to incite the audience to murder the Chief Minister, he would have used words like" Go and kill him or kill him when he comes here, etc., etc."

The words uttered by the accused are not capable of inciting the audience to commit the offence of murder nor could they be understood in the manner in which the prossecution has understood."

இந்தத் தீர்ப்பை என்னைப் படிக்க வைக்கும் அளவிற்கு தங்கமணி என்னை ஆளாக்கிவிட்டாரே என்பதற்காக மிகுந்த வருத்தப்படுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : எந்தமாதிரியான கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன? ஜட்ஜ்மெண்ட் எப்படியிருக்கிறது என்பது இந்த ரெக்கார்டில் இருப்பது பொருத்தமானதுதான்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தங்கமணி யைப் போன்ற பெரிய தலைவர்கள் எந்தமாதிரியாகப் பேசுகிறார் கள் என்பதும் இங்கே பதிவாக வேண்டியது மிகுந்த அவசிய மாகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : எதிர்க்கட்சிக்காரர்கள் மீது எப்படிப்பட்ட கேஸ்கள் போடப்பட்டன என்பது ரெக்கார்டில் இருப்பதும் நல்லதுதான்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எங்களுக் கெல்லாம் அண்ணா அப்படிச் சொல்லிக் கொடுக்கவில்லை ஹிட்லரைப் போல சாக வேண்டும்: முசோலினியைப் போல அடித்துக் கொல்ல வேண்டும் என்று கற்றுக் கொடுக்கவில்லை, அப்படிப்பட்ட பண்பை நாங்கள் என்றைக்கும் பெற்றதும் கிடையாது. எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் நீண்ட காலம் வாழ வேண்டுமென்றுதான் நாங்கள் கருதுவோம். அப்போதுதான் ஒருவருக்கொருவர் நம்முடைய அறைகூவலை ஏற்றுக்கொண்டு வாழ்ந்து, அதைப்பார்க்க வேண்டும். "அவனைக் கொன்றுவிட வேண்டும், விசாரணையிலிருந்து தப்புவதற்கு அவன் ஹிட்லரைப் போல தற்கொலை செய்துகொள்ள வேண்டும்" என்று பேசியிருக்கிறார். ஆனால், ஜட்ஜ் கைதட்டலுக்காக (அப்ளாஸ்) அப்படிச் சொல்லியிருக்கிறார் என்று சொல்லியிருக் கிறார். இதே தங்கமணி அவர்கள் வாணி மகாலில் ஒரு முறை என்னைப் பாராட்டிப் பேசியதை நான் மறந்துவிடவில்லை. அப்படிப் பேசிய தங்கமணிதான், இப்படிப் பேசியிருக்கிறார். தங்கமணி

போன்றவர்களே இப்படிப் பேசினால், அரசியலில் இளவெட்டுக்களாக இருப்பவர்கள் எந்த அளவிற்குப் பேச ஆரம்பித்து விடுவார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். உருக்கத்தோடு ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டிய ஒன்று என்பதற்காகச் சொல்கிறேன்.

ஹாண்டே அவர்கள் காவல் துறையில் வறட்சி நிவாரண நிதி கட்டாயமாக வசூலிக்க வேண்டுமென்று ஒரு ஆர்டர் போயிருப்பதாகச் சொன்னார்கள். அதில் நான் உன்னிப்பாக கவனித்தேன், அதிலே "I appeal to all member of the Police Department executive and ministerial including last grade servants to eontribute voluntarily one day's salary." என்றுதான் இருக்கிறது. அதிலே 'வாலண்டிரி' அதாவது அவர்களாக முன்வந்து தரவேண்டுமென்று இருக்கிறதே தவிர, 'கம்பல்சரி' என்று இல்லை. இவ்வளவு சூட்டிற்குப் பிறகு தீயணைப்பு இல்லாவிட்டால் நன்றாக இருக்காது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : திண்டுக்கல் ஆர். டி. ஓ. என்குயரி கேஸ் பற்றிச் சொல்ல வேண்டும் உங்களுக்கு உதவி கரமாக இருக்கும் என்ற முறையிலேதான் நான் அதைப்பற்றி கட்மோஷன் ஏற்கனவே கொடுத்திருக்கிறேன். இந்நேரம் உங்களுக்கு பர்டிகுலர்ஸ் வந்திருக்குமென நினைக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தனித்தனி யாகச் சொல்லப்பட்ட புகார்கள் எல்லாம் குறித்து வைக்கப்படு கின்றன. அவைகளைப் பற்றியெல்லாம் தகவலறிந்து வேண்டு மானால் ஹாண்டே அவர்களுக்கத் தனியாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லி, தீ அணைக்கும் படை இந்த ஆண்டு 26 இடங்களில் அமைக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான இடங்கள் எல்லாம் பார்க்கப்பட்டு, இன்னும் ஆறு மாதக் காலத்தில் மேலும் 26 இடங்களில் வைக்கப்பட வேண்டும் என்ற அரசியல் அறிவிப்பு செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்துக் கொண்டு இந்த மானியத்திலே நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக் கிறார்கள். இந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள் நல்ல

முறையிலே செயல்பட அவை ஏதுவாக உள்ள கருத்துக்காளக அமைந்து இருக்கின்றன என்று சொல்லி இந்த அளவிலே **அமைகிறேன்.** வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டிலே தீயணைப்புப் படை சம்பந்தமாக பரிந்துரை இருக்கிறதே, அதைக் கவனிப்பார்களா?

திருமதி. த. ந. அனந்தநாயகி : கராத்தே பயிற்சியை போலீஸாருக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்தப் பயிற்சி நிறுத்தப்பட்டு உள்ளது. அதை மீண்டும் கொடுக்க இந்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கராத்தே பயிற்சியை நான்தான் முதல் முதல் பார்த்துவிட்டு, காவலர் களுக்குச் சிபாரிசு செய்து அந்தப் பயிற்சியைக் கொடுக்கச் சொன்னேன். இடையில் நிறுத்தப்பட்டு விட்டதாகச் சொல் கிறார்கள். எங்கே அதை எதிர்ப்பார்களோ என்று எண்ணியி ருந்தேன். அவர்களே சொல்லிவிட்ட காரணத்தினால் அது தொடர்ந்து நடைபெறும்.



உரை : 11 நாள் : 23.18.1977

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னால் வைக்கப் பட்டு விவாதிக்கப்படுகின்ற, காவல் துறை மானியத்தின் மீது எங்கள் கழகத்தின் சார்பில் கருத்துக்களை வெளியிட முன் வந்துள்ளேன்.

காவல்துறை எப்போதுமே கடுமையான விவாதத்திற்கு ஆட்படும் என்ற காரணத்தால்தான், தீப்பொறி பறக்கும் என்ற காரணத்தால்தான் அதோடு இணைத்து தீ அணைக்கும் படையையும் நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். தீ கிளம்புகிற நேரத்தில் அதை அணைப்பதற்கு தீ அணைப்புப் படை தேவைப்படுவதைப் போல் இரண்டையும் ஒன்றாக இணைத்து நீண்ட காலமாக இந்த மன்றத்தில் நாம் விவாதித்து வருகிறோம். அது இன்றைக்கும் தவறிவிடவில்லையென்பதற் கேற்ப நல்ல மாலை நேரத்தில் தொடங்கப்பட்ட இந்த மானியக் கோரிக்கை விவாதம் மிகச் சூடான அளவில் இதுவரையிலே நடைபெற்று இருதரப்பிலும் பரிமாறிக்கொள்ளப்பட்ட கருத்துக்கள் மிக வேகமாகவும் கனல் வீசத்தக்க வகையிலும் இருந்தன என்பதை தாங்களும் இந்த அவையும் நன்றாக அறியும்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் சொல்லவேண்டு மேயானால் பேரறிஞர் அண்ணா அவர்கள் பொதுவாகச் சொன்ன ஒரு கருத்து அவர்கள் உருவாக்கிய கழகத்திற்கும் கழகத் தொண்டர்களுக்கும் என்று மாத்திரமல்லாமல் உலகத்திற்கும் உலக மக்களுக்கும் என்று சொன்ன ஒரு கருத்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கின்ற இந்த மூன்று சொற்களுக்கும் மதிப்பளித்து நடைபெறவேண்டிய ஒரு துறை காவல் துறையாகும். கடமை உணர்ச்சியோடும் அந்தக் கடமை உணர்ச்சியை அவர்கள் உள்ளத்திலே ஏந்தி பணியாற்றுகிற நேரத்தில் எத்தகைய

தீமைகளை, இடர்ப்பாடுகளை, ஏன் உயிருக்கே ஆபத்து வரத்தக்க நிலைமைகள் ஏற்பட்டாலும் அந்தக் கடமையிலிருந்து காவல் துறையினர் தவறாது இருக்கவேண்டும் என்பதையும் அதே நேரத்தில் அவர்கள் தங்களுக்கு என்று அமைந்துள்ள பொறுப்புக்களை கண்ணியத்தோடு நிறைவேற்றவேண்டும் என்பதையும் அதே நேரத்தில் கட்டுப்பாடு உணர்ச்சியோடு அவர்களுடைய பணி நடைபெற வேண்டும் என்பதனையும் காவல் துறையில் இருக்கிற பலரும் உணர்ந்து நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதுதான் இன்னமும் என்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது.

ஆளும் கட்சி சார்பிலும் எதிர்க்கட்சி சார்பிலும் இங்கே விவாதங்கள் நடைபெற்றபோது காவல்துறையினர் ஆங்காங்கு தவறுதலாக நடந்து கொண்டார்கள் என்றெல்லாம் விவரிக்கப்பட்ட நேரத்தில் இந்த பெரிய துரை ஏறத்தாழ 45,000 பேர்கள் ஈடுபட்டுள்ள இந்த பெரிய துறையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலபேர் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

நேற்றையதினம் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்த போது நம்முடைய அவையின் முன்னவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்தாகவும் முதல்வர் கருத்தாகவும் தெரிவிக்கின்ற வகையில், ஒன்றை சொன்னார்கள். காவல்துறையில் இருக்கின்ற அனைவரும் அல்ல, குறிப்பிட்ட ஒரு பகுதியினர் இந்த ஆட்சிக்கு களங்கம் கற்பிக்கவேண்டும் என்கின்ற வகையில் இப்படிப்பட்ட தவறான செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சி சார்பிலும் இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகள் சார்பிலும் எடுத்துச்சொன்ன கருத்தை நான் முழுமையாக வரவேற்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். எப்படி இன்றைக்கு இருக்கின்ற ஆளும்கட்சி சார்பில் நடைபெறுகின்ற காரியங்களுக்கெல்லாம் ஒரு சில குறிப்பிட்ட அதிகாரிகள்தான் காரணம் என்றும் வேண்டுமென்றே இவர்கள் களங்கப்படுத்துகிறார்கள் என்று கூறிக்கொள்கின்ற உரிமையை எடுத்துக்கொள்கிறார்களோ அதைப் போலவே முன்னால் ஆளும் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் களங்கம் வர வேண்டும் என்பதற்காக காவல் துறையில் ஒரு பகுதியினர் வேண்டுமென்றே இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்கின்ற வாதத்தை நான்

பதிலுக்காக எடுத்து வைப்பது பொருத்தம் உடையதுதான், அதை யாரும் மறுக்கமுடியாது என்பதையும் நான் எண்ணிப் பார்க் கின்றேன்.

இன்று ஆளும்கட்சி சார்பில் பேசிய உறுப்பினர்கள் பலரும் தாங்கள் எடுத்துக்கொண்ட நீண்ட நேரத்திற்கிடையே கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எவ்வளவு தொல்லைகள், எவ்வளவு கொடுமைகள் நடைபெற்றன என்பதையெல்லாம் மிக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள் .25 ஆயிரம் வழக்குகள் இன்றைய ஆளும் கட்சியினர், அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய நேரத்தில் போடப்பட்டன என்றும் கூறப்பட்டது. மொத்தமாக குத்துமதிப்பாக 25 ஆயிரம், 26 ஆயிரம் என்று எடுத்துக் கூறுவது, அது சாதாரண மக்களை கவரக்கூடிய செய்தியாக இருக்கலாம். ஆனால் இந்த 25 ஆயிரம் வழக்குகளின் புள்ளிவிவரங்கள் என்ன என்பதை இன்றைக்கு ஆளும்கட்சியில் உள்ளவர்கள் அதை எடுத்து இந்த அவைக்கு வைக்கக்கூடிய வாய்ப்பை பெற்றிருக்கின்ற காரணத்தால், இந்த 25 ஆயிரம் வழக்குகளும் எங்கு எங்கு போடப்பட்டன, எந்தெந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மீது என்கின்ற விவரங்களை எல்லாம் வைப்பார்களேயானால் அதுகூட ஆளும் கட்சிக்கு பயன்படக்கூடிய குறிப்பாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

இங்கு பேசியவர்கள் எல்லாம் காவல்துறையினரால் ஏற்படுகின்ற இடர்பாடுகளைப்பற்றி பேசினார்கள், அதே நேரத்தில் இந்த அலுவலர்களுடைய இடர்பாடுகளை களைய, அவர் களுடைய சங்கடங்களை களைய ஒரு அரசு என்னென்ன செய்ய வேண்டும் என்று - மனமில்லாமல் அல்ல - நேரமில்லாமல் பேச விட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன். 1970ஆம் ஆண்டில் நான் பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவு காலம் வரையில் காவல் துறையில் மான்யக்கோரிக்கை 13 கோடி 66 இலட்சம் ரூபாயாக இருந்தது. அதற்குப் பிறகு ஆண்டுதோறும் இரண்டு கோடி மூன்று கோடி என்கின்ற அளவுக்கு வளர்ச்சி பெற்று 1974-75-ம் ஆண்டில் 26 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்து இன்றைக்கு சற்றேறக்குறைய 34 கோடி ரூபாய் அளவுக்கு வந்து நிற்கின்றது. 13 கோடி 66 இலட்சமாக இருந்தது கோரிக்கை மூன்று நான்கு ஆண்டு

காலத்தில் இரண்டு மடங்கு அதிகமாக உயர்ந்தது எவ்வாறு என்று சற்று ஆராய்ந்திட வேண்டும். அந்த இடைக்காலத்தில் இதை இரட்டிப்பாக கணக்கிடுகிற நேரத்தில்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு காவல்துறையில் பணிபுரிகின்றவர்களும் மனிதர்கள் தான் அவர்களுக்கு குடும்பம், பெண்டுபிள்ளைகள் உண்டு, அவர்களுடைய வாழ்வும் செம்மையாக இருந்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்களுடைய ஊதிய உயர்வுகளில் தனி அக்கறை செலுத்தியது.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் இரண்டாவது நிலை கான்ஸ்டபிள் என்று சொல்லக்கூடிய சாதாரண காவலர்கள் அவர்களுடைய சம்பளம் 1970ஆம் ஆண்டு வரையில் அவர் களுடைய அடிப்படை சம்பளம் 70 முதல் 95 ரூபாய் வரை என்ற அளவோடு இருந்தது. 1970-க்குப் பிறகு அந்த சம்பளத்தை மாற்றி அடிப்படை சம்பளம் 150 ரூபாய் முதல் 225 ரூபாய் வரை என்று சாதாரண காவலர்களுக்கு உயர்த்திய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாரும். இதை காவல்துறை நண்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அந்த நேரத்தில் கழக அரசை வாழ்த்திய காவலர் குடும்பங்கள் எத்தனை என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.

அதைப்போலவே முதல் நிலை காவலராகப் பணி புரிகின்ற ஒரு புதிய பிரிவு கழக அரசு காலத்திலே உருவாக்கப்பட்டது.

இந்தியாவிலேயே, பிற மாநிலங்களிலே இல்லாத அளவுக்கு போலீஸ் கமிஷன் என்கின்ற ஒரு அமைப்பினைத் தமிழகத்திலே உருவாக்கி, அந்தப் போலீஸ் கமிஷனுடைய சிபாரிசுகளை, ஏறத்தாழ 134-க்கு மேற்பட்ட சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டு, அதில் 40-க்கு மேற்பட்ட சிபாரிசுகளை நடைமுறைப் படுத்தியதின் காரணமாக சுமார் 1½ கோடி ரூபாய் செலவை ஏற்றுக் கொண்ட அரசு கழக அரசுதான்.

அப்பேர்ப்பட்ட சிபாரிசுகளில் ஒன்றுதான், எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு, வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு முதல் நிலை காவலர் என்கின்ற ஒரு பதவியைத் தரலாம் என்று போலீஸ் கமிஷன் பரிந்துரை செய்து, அந்தப் பரிந்துரையை கழக அரசு ஏற்றுக்கொண்டு, இந்த துறையிலே முதல் நிலை காவலர் பற்றி

தரப்பட்டிருக்கின்ற மானியக் குறிப்பீட்டின்படி, 4,309 பேர் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் வேலைவாய்ப்பு பெற்றிருக் கிறார்கள். அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் 200 ரூபாய் முதல் 300 ரூபாய் என்று கழக அரசால் ஆக்கப்பட்டது. ஏற்கெனவே, தலைமை காவலர்கள் அடிப்படைச் சம்பளம் 70-90-110 ரூபாய் என்றிருந்ததை, 210-325 ரூபாய் என்று கழக அரசு உயர்த்தியது. துணை சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு (அதாவது ஏ.எஸ்.ஐ.) அவர்களுடைய சம்பளம் 110-140 ரூபாய் என்ற அளவிலே அடிப்படை சம்பளம் இருந்ததை 250-400 ரூபாய் என்கின்ற அளவிற்கு உயர்த்தியது. சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு 140-220 ரூபாய் என்றிருந்த ஊதியத்தை 300-500 ரூபாய் என்று உயர்த்தியது. டிபுடி இன்ஸ்பெக்டர்கள் அதாவது துணை இன்ஸ்பெக்டர்கள் என்ற ஒரு புதிய பதவியும் உருவாக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் களுக்கு 225-375 ரூபாய் என்றிருந்த ஊதியத்தை அடிப்படை ஊதியம் 425-700 ரூபாயாக உயர்த்தியது.

இப்படி அடிப்படை ஊதியத்தை மாத்திரம் உயர்த்த வில்லை. மற்ற அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட அகவிலைப் படியும் ஏதேனும் இருந்தால், அதையும் குறைக் காமல், அதே நேரத்தில் அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தப்பட்ட நேரத்திலே எல்லாம் அதற்கு ஈடாகக் காவல் துறையிலே உள்ளவர்களுக்கும் அகவிலைப்படி உயர்த்தப் பட்டது. இதையும் இன்றைக்கு நான் சுட்டிக்காட்டுவது பொருந்தும் என்று கருதுகிறேன்.

இப்போது 10 ரூபாய் இடைக்கால நிவாரணம் அளிக்கப் பட்டதில் 200 ரூபாய்க்கு மேல் ஊதியம் வாங்குகிறவர்களுக்கு இந்த நிவாரணம் கிடைத்தது. அதற்குக் கீழே அடிப்படை ஊதியம் வாங்குகின்ற எத்தனை காவல்துறை அலுவலர்கள் இன்றைக்கு இதனுடைய பயனை அனுபவிக்காமல் வேதனைப் படுகிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்கு, குறிப்பாக நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, அவர் வாயிலாக முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துவைக்க விரும்புகிறேன்.

இது மாத்திரமல்ல, அண்மையிலே ஒரு வாரப் பத்திரிகை யில் ஓய்வுபெற்ற தமிழகத்தினுடைய காவல்துறை தலைமை

அதிகாரி திரு. அருள் அவர்கள் எழுதிய கட்டுரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் காவல் துறைக்கு என நவீன கருவிகள் வாங்குகின்ற முயற்சியினை நாங்கள் எடுத்தபோது, அதற்கு அட்டியில்லாமல் உடனடியாக உதவி செய்து, இந்தக் கருவிகளை வாங்கி, போலீஸ் துறை வேகமாக, விரைவாகச் செயல்படுவதற்கு இந்தக் கழக அரசு உதவியது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

1971-72-ஆம் ஆண்டிலே 25 இலட்சம் ரூபாய்க்கும், 1972-73-லே 35 இலட்சம் ரூபாய்க்கும், 1973-74-லே 43 இலட்சம் ரூபாய்க்கும் 1974-75-லே நுண் மின் அலைத் திட்டத்தில் ஒரு நவீன முறையைப் பயன்படுத்துவதற்காக 25 இலட்சம் ரூபாய் செலவு செய்தோம். ஆகமொத்தம், இந்த நவீனக் கருவிகளுக்காக 1 கோடியே 29 இலட்சம் ரூபாய் இந்தக் கழக அரசு தமிழகக் காவல் துறைக்கு செலவிட்டிருக்கிறது.

தமிழகத்திலே இருக்கின்ற காவல் நிலையங்கள் 800-க்கு மேற்பட்டவை. அந்த 800-க்கு மேற்பட்ட காவல் நிலையங்களில் உள்ளவர்களுக்கு 1971-72-ம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதிக்கப்பட்டபோது எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் ஆளுங் கட்சியில் உள்ளவர்களும் அன்றைக்கு எடுத்துவைத்த முறை யீட்டின் பேரில் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கித் தரவேண்டுமென்று எடுத்துச் சொன்ன குறிப்பினை நாங்கள் தவறாமல் நடைமுறைப்படுத்து கின்ற எண்ணத்தில், கழக அரசு காலத்தில் 1971-ஆம் ஆண்டு முதல் 1975-ம் ஆண்டு வரை 800 காவல் நிலையங்களில் 450-க்கு மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கித் தருகிற அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

அதுமாத்திரமல்ல; காவலர்கள் சைக்கிள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்; அவர்களுக்கு சைக்கிள் வாங்கித் தருகிற திட்டத்தைக் கழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மன்றத்திலே எடுத்து உரைத்ததை அலட்சியப்படுத்தாமல், ஒரு புது முறையில் 40 சதவிகிதத்தை அரசு உதவித் தொகையாகத் தரும்; மீதமுள்ள 60 சதவிகிதத்தைக் கடனாக வழங்கும், அதைத் தவணை

முறையில் காவலர்கள் கட்டலாம் என்று 5,000 சைக்கிள்களுக்குத் திட்டமிடப்பட்டு, அந்த முறை செயல்படுத்தப்பட்டு, 1975-ஆம் ஆண்டு ஆரம்பம் வரையில் 2,500 காவலர்கள் அந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்களா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

எனவே, 742 ஆக இருந்த காவல் துறையினர் வாகனங்கள் கூட 1971-ஆம் ஆண்டுக்குப் பிறகு 1975-ஆம் ஆண்டு வரையில் 1,648 வாகனங்களாக அவர்களுக்கு உயர்த்தப்பட்டன.

800-க்கு மேற்பட்ட காவல் நிலையங்களில் தொலைபேசிகள் இருந்தாக வேண்டும் குற்றங்களை உடனடியாக எடுத்துச் சொல்லவும், புகார்களைத் தரவும், குற்றங்கள் நிகழ்கின்ற இடத்தைக் குறிப்பிட்டுக் காட்டவும், உடனடியாகப் போலீசார் விரைந்து செல்லவும் தொலைபேசி துணை மிக மிக இன்றியமையாதது என்று எடுத்துச் சொல்லப்பட்டதைக் கவனத்தில் வைத்து 700-க்கு மேற்பட்ட காவல் நிலையங்களில் தொலைபேசி அமைத்துக் கொடுத்தோம்.

அதுமாத்திரமல்ல; பல பதவி உயர்வுகளுக்கு, மேலும் எண்ணிக்கை உயர்வின் மூலம் எங்களுக்கு விமோசனமே கிடையாதா? மேல் மட்டத்திற்கு வர இயலாதா? என்று பல அதிகாரிகள் இருந்த நிலையில் அவர்கள் மேல் மட்டத்திற்கு வருவதற்காக அந்த எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. எஸ். பி. 1966-67-ல் 29 ஆக இருந்தது 1975-ல் 43 ஆக உயர்ந்தது; டி. எஸ். பி. 146 ஆக இருந்தது 174 ஆக உயர்ந்தது; இன்ஸ்பெக்டர் 369 ஆக இருந்தது 897 ஆக உயர்ந்தது; சப்-இன்ஸ்பெக்டர் 1,505 ஆக இருந்தது 1904 ஆக உயர்ந்தது; ஏ. எஸ். ஐ. 118 ஆக இருந்தது 527 ஆக உயர்ந்தது. காவலர் தொகை 28,891 ஆக இருந்தது 36,642 ஆகியது. ஆக, 1975-ஆம் ஆண்டிலே இந்தத் துறையிலே 45,690 பேர் இடம் பெற்றிருந்தார்கள். இப்போது ஏறத்தாழ 46,000 பேர் இடம் பெற்றிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் அவையில் வைத்துள்ள மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல; அரசு அலுவலர்களுக்குத் தரப்பட்ட குடும்பப் பாதுகாப்பு நிதி - இந்நியாவிலே முதன் முதலாகத் தமிழக அரசு அறிமுகப்படுத்திய திட்டம் - அரசு அலுவ லாளர்கள் பணிநேரத்தில் இறந்து விடுவார்களானால் குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் பாதுகாப்பு நிதி தருவது என்ற வகையில் அளிக்கப்பட்டது. ஒரே ஒரு கணக்கை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். 1974-75-ஆம் ஆண்டு - அந்த ஆண்டுக் கணக்கில் மாத்திரம் பத்தாயிரம் ரூபாய் உதவித் தொகை பெற்ற அரசு அலுவலாளர்கள் ஆயிரம் பேர்; ஆயிரம் பேருக்குத் தலா பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அந்த ஆயிரம் பேரில் அந்தப் பத்தாயிரம் ரூபாய் உதவியைப் பெற்ற காவலர்கள் தொகை 208 பேர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்பே 46,000 பேர் உள்ள காவல்துறையில் ஆண்டுக்கு 200, 300 பேர் பணி புரியும் காலத்திலேயே மாண்டுகொண்டுதான் இருந்தார்கள். அப்போது அவர்கள் குடும்பத்தை வாழ வைக்க எந்த வசதியும் செய்யப்படாத சூழ்நிலை இருந்தது. ஆனால் கழக அரசு காலத்தில் பத்தாயிரம் ரூபாய் அந்தக் குடும்பங்களுக்கு அவர்கள் பதைப்பை நீக்கி, அவர்கள் வாழ்க்கையில் நம்பிக்கையைப் பெறும் ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

போலீசாருக்கு தினப்படிகள் இன்றைக்கு இருப்பதே போதாது என்று மாண்புமிகு சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள், ஆளுங்கட்சியிலே சில உறுப்பினர்களும் சொல்லியிருக் கிறார்கள். ஏற்கெனவே மிகக் குறைவாக இருந்த தினப்படி கழக ஆட்சிக் காலத்திலே - உயர்த்தப்பட்டது. அது மேலும் உயர்த்தப்பட வேண்டும் என்று அவர்கள் வைக்கிற கோரிக்கை இன்றைக்கு ஏறியிருக்கிற விலைவாசிகளைப் பொறுத்து நிச்சயமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய பொருத்தமான நியாயமான கோரிக்கை என்பதை இந்த அரசு உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே வீட்டு வாடகைப்படிகளும் கழக அரசு காலத்திலே பெரும்பாலும் நல்ல நிலையிலே உயர்த்தித் தரப்பட்டது. இப்போதும் அதற்கு ஏற்ப அந்தத் துறையின் அதிகாரிகளும்

அலுவலர்களும் எதிர்பார்க்கிறார்கள், இதற்கும் இந்த அரசு ஆவன செய்யும் என்று நம்புகிறேன்.

கழக அரசு காலத்திலே சிறப்புக்குரிய அம்சமான ஒரு திட்டத்தை நாங்கள் அறிவித்தோம், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் தேதியன்று காவல் துறையினருக்குப் பதக்கம் வழங்குதல் என்ற ஒரு திட்டம் ஏதோ அவர்களுக்குப் பதக்கம் வழங்குவது மாத்திரமல்ல, சிறப்புப் பரிசுகளாக பணமுடிப்புகளும் தருவது என்ற திட்டத்தையும் வைத்திருந்தோம். சிறப்புப் பணிபுரிகின்ற காவலர்க்கு பதக்கமும் வழங்கி ஆயிரம் ரூபாய் பரிசும் வழங்கப்பட்டது. சிறப்புப் பணிபுரிகின்ற இன்ஸ்பெக்டர்களாக இருந்தால் பதக்கம் வழங்கி இரண்டாயிரம் ரூபாய் அளிப்பது, டி. எஸ். பி. யாக இருப்பார் களானால் அவர்களுக்கு சிறப்புப் பதக்கம் வழங்கி மூவாயிரம் ரூபாய் அளிப்பது, வீரச்செயல் புரிந்தோர் யாராக இருந்தாலும் அவர்கள் காவலராக இருந்தாலும்சரி, டி. எஸ். பி. யாக இருந்தாலும் சரி அவர்கள் சம நிலையில் கருதப்பட்டு அவர்கள் தங்களுடைய உயிரைத் துரும்பென மதித்து செயலிலே ஈடுபட்டார்கள் கடமையின் காரணமாக என்பதால் அவர்களுக்கு பதக்கமும் 3 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது. எஸ். பி. என்ற அளவிலே உள்ளவர்கள் அவர்கள் கொஞ்சம் அதிக ஊதியம் பெறுகின்றவர்கள் என்ற காரணத்தால் பண முடிப்பு இல்லாமல் சிறப்புப் பதக்கம் அல்லது வீரப்பதக்கம் அவர்களுக்கு வழங்கப் பட்டது. இப்படி 1969-ஆம் ஆண்டிலிருந்து 1975-ஆம் ஆண்டு வரை 30 பேர்கள் வீரப்பதக்கங்கள் பெற்றிருக்கிறார்கள். 150 பேர்கள் சிறப்பு பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் குடியரசுத் தலைவர் ஆட்சியிலே காவலர்களுக்கு வீரப்பதக் கத்தை சிறப்புப் பதக்கத்தை அளிக்க வேண்டுமென்று அப்போதிருந்த காவல்துறைத் தலைமை அலுவலரால் எடுத்துச் சொல்லப்படாமல் இருந்திருக்கும் என்று நான் எண்ணவில்லை. ஏற்கனவே இருந்த அதிகாரியின் பெயர் 'அருள்' அதற்குப் பிறகு வந்த அதிகாரியின் பெயரிலே 'அருள்' இல்லை என்ற காரணத்தாலே அவர் சொல்லி இருக்கமாட்டார் என்று நினைக்கவில்லை, சொல்லியிருப்பார், ஆனால் அப்போது இருந்த அதிகாரிகள் என்ன கருதியிருக்கிறார்கள் என்றால்

அந்தக் காவலர்கள் பதக்கமும் பணமுடிப்பும் பரிசும் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் நாளன்று பெறுவார்கள், அந்த நாளிலே அல்லவா அவைகளை வழங்க வேண்டும். அப்படி வழங்கினால் அண்ணா பிறந்த நாளில் அல்லவா வழங்க வேண்டும், பாடப் புத்தகங்களிலே அண்ணா அவர்களின் கட்டுரையை எடுத்தவர்கள் அண்ணா பிறந்த நாளிலே இப்படிப்பட்ட சிறப்பான நிகழ்ச்சி நடைபெற எண்ணுவார்களா மனம் இடந்தருமா, இந்த இடம் வராத காரணத்தால் இந்தத் திட்டத்தைக் கைவிட்டார்கள்.

நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன், வருகிற அண்ணா பிறந்த நாள், செப்டம்பர் 15-ஆம் நாளில் காவலர் களுக்கு வீரப்பதக்கத்தையும், சிறப்புப் பதக்கத்தையும் வழங்குகிற காரியத்தை இடையில் அறுந்துபோன அந்தக் காரியத்தை அண்ணா பிறந்த நாளன்று அரசு நடத்த வேண்டுமென்று காவல் துறைக்கும் அமைச்சராக இருக்கிற முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். மாஜி காவல்துறை அமைச்சன் என்ற முறையிலே, அண்ணா பிறந்த நாள் அந்த நாளிலே இந்தச் சிறப்பு இருக்கக்கூடாது என்பதற்காக செய்யப்பட்ட காரியம். அதற்குப் பதில் அளிக்கிற வகையில் இது அமைந்திட வேண்டும். இப்படிப் பட்ட சிறப்புப் பதக்கங்கள் உரியவர்களுக்கு தகுதிபடைத்தவர் களுக்கு வழங்கப்பட வேண்டும்.

தரப்பட்ட மானியக் கோரிக்கைகளில் சில விவரங்களைப் பார்க்கும்பொழுது ஒன்று எனக்குக் குறைபாடாக இருந்தது. 'வெல்பேர் ஆப் போலீஸ் பர்சனேல்' என்பதில் 1975-76 ஆண்டுக் கணக்கின்படி 14.73 இலட்சம் ரூபாய் 'வெல்பேர் ஆப் போலீஸ் பர்சனேல்' என்ற தலைப்பிலே செலவழிக்கப் பட்டிருக்கிறது. 1976-77-இல் 11.83 இலட்சம் என்கின்ற வகையிலே தான், அதாவது 11 இலட்சம் என்ற வகையிலேதான் செலவழிக்கப் பட்டிருக்கிறது. 1977-78 ஆம் ஆண்டு பட்ஜெட் மதிப்பீட்டிலே அது 12.69 இலட்சமாகத்தான் இருக்கிறது. ஏன் 'வெல் பேர் ஆப் போலீஸ் பர்சனேல்' என்கின்ற இந்த முக்கியமான ஒன்று 14 இலட்சத்திலிருந்து 12 இலட்சம் என்கின்ற அளவிற்குக் குறைந்து விட்டது என்பது எனக்குப் புரியவில்லை. அதை உயர்த்திக் காவல் துறையினர் நல்வாழ்வுத் திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கவேண்டும் என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

கழக ஆட்சியிலே நடைபெற்ற பல்வேறு சம்பவங்களை யெல்லாம் எடுத்துக்காட்டி, இதற்கெல்லாம் கருணாநிதிதான் நேரடிப் பொறுப்பு என்ற வகையிலே ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் பேசினார்கள். அதிலும் குறிப்பாகக் குடந்தை சட்டமன்ற உறுப்பினர் திரு. இராதா அவர்கள் வேகமாகப் பேசும் பொழுது குறிப்பிட்டார்கள். இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் அன்றைய தினம் சுற்றுலா மாளிகையில், கும்பகோணத்தில் உட்கார்ந்து கொண்டு அவருடைய கடையைத் தகர்க்கச் சொன்னார் என்ற வகையிலே எடுத்துச் சொன்னார்கள். இன்னொன்றும் சொன்னார்கள், ஏதோ இன்ன போலீஸ் அதிகாரி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிரி என்று நான் பொதுக் குழுவிலே சொன்னதாகவும் சொன்னார்கள். இரண்டுமே நான் மறுக்கக்கூடிய விவகாரங்கள் என்பதை இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை விவாதப் பொருளாக்கிட வேண்டுமென்று நான் விரும்பவில்லை. அதை மறுக்க வேண்டிய கடமை என்பதற்காக எடுத்துக்காட்ட விரும்புகிறேனே அல்லாமல் வேறல்ல.

ஏதோ கழக ஆட்சியிலே நடைபெற்றதெல்லாம் கருணாநிதியே நேரிலே போய் இருந்து செய்ததுபோல், லாக்கப்பிலே யாராவது இறந்து விட்டால் அப்படி இறந்தவரின் கழுத்தை நெறித்துக் கொன்றதே கருணாநிதிதான் என்கின்ற வகையிலேயெல்லாம் பேசினார்கள். இங்கே பேசாவிட்டாலும் வெளியிலே பேசிக் கொண்டிருக்கின்ற நண்பர்களுக்கு நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு போலீஸ் லாக்கப்பிலே எத்தனை சாவுகள் ஏற்பட்டதாக இதே மாமன்றத்தில் எத்தனையோ ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன என்பதை ஒருமுறையும் நாம் நினைவுகூர வேண்டும். இந்த லாக்கப் சாவுகளுக்கெல்லாம் இங்கே அமர்ந்திருக்கின்ற அமைச்சர்கள் தான் காரணம் என்று அவசரப் பட்டோ, ஆத்திரப்பட்டோ, அசூயையின் காரணமாகவே நான் முடிவிற்கு வந்துவிடமாட்டேன், அப்படிப்பட்ட பிரச்சாரம் செய்கின்ற இழிதகை எனக்கு நிச்சயமாகக் கிடையாது.

ஆனால் இந்த ஆட்சி வந்தபிறகு 8-7-1977-இல் புது வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் இருபான் என்ற

ஒருவர் மரணமடைந்து, இவர் உடம்பில் மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு தீக்குளித்துச் செத்தார் என்ற அறிக்கை இங்கே படிக்கப்பட்டது. இது காவல்துறையில் போலீஸ் லாக்கப்பில் ஏற்பட்ட மரணம். அது கொலையா, அல்லது தற்கொலையா என்பது விசாரணையில் இருக்கிறது. ஆனால் போலீஸ் லாக்கப்பிலே ஒரு மரணம் சம்பவித்திருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

அதைப்போல நெல்லிக்குப்பத்திலே சிதம்பரம் என்கிற கைதி காவலர்களால் அடித்துக் கொல்லப்பட்டார் என்ற புகார் சம்பந்தமாக இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, ரெவின்யூ போர்ட் மெம்பர் விசாரணைக்கு ஏற்பாடு செய்கிறேன் என்று முதலமைச்சரவர்கள் உறுதியளித்தார்கள். இதுவே கழக ஆட்சிக் காலத்தில் நடைபெற்றிருந்தால் கருணாநிதிதான் அந்தச் சிதம்பரத்தைக் கொன்றார் என்று சொல்லப்பட்டிருக்கும். ஆனால் இந்த ஆட்சியிலே நடைபெற்றிருக்கின்ற காரணத்தால், அவை முன்னவர்களின் கருத்துப்படி ஆட்சியைப் பிடிக்காத சில அதிகாரிகள் ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று இப்படியெல்லாம் செய்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

மதுரை மாவட்டம் சின்னமனூர் காவல் நிலையத்தில் ஒச்சத்தேவர் என்பவர் காவல்துறையினரால் அடிக்கப்பட்டு மரணம் அடைந்ததாக இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தது அதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

கருமலைக்கூடல் போலீஸ் ஸ்டேஷனில் மேட்டூர் மில் தேசிய பஞ்சாலை முன்னாள் பொதுச் செயலாளர் சாமுவேல் என்பவர் காவல்துறையினரால் தாக்கப்பட்டு ஜூலை 10-ஆம் தேதி மரணம் அடைந்தார் என்ற புகார் ஏடுகளில் வந்தது.

திருவொற்றியூர் மணி 16-8-1977-ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டவர், காவலர்களின் தாக்குதல் காரணமாக சிறையில் இறந்திருக்கிறார் என்ற புகார் கூறப்பட்டு இங்கேயும் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் வந்தன.

ஆகவே, இந்த 40, 45 நாட்கள் புதிய ஆட்சிக் காலத்திலேயே போலீஸ் லாக்கப் மரணங்கள் பற்றிய புகார்கள்

ஐந்து என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. 45 நாட்களை வைத்துக் கொண்டு நான் ஐந்தாறு ஆண்டுகளுக்கான கணக்கைப் போட்டு, 45 நாட்களுக்கு ஐந்து லாக்கப் மரணம், 6 ஆண்டுகளுக்கு எத்தனை லாக்கப் மரணம் என்றெல்லாம் பைத்தியக் காரத்தனமாகக் கணக்குப்போட விரும்பவில்லை.

இப்படிப்பட்ட லாக்கப் மரணங்கள் கழக ஆட்சியிலே சம்பவித்த பொழுது இவையனைத்திற்கும் நேரடிப்பொறுப்பு கருணாநிதிதான் என்று சொல்லப்பட்டது.

ஆனால், இன்றைக்கு அதே லாக் அப் மரணங்கள் சம்பவிக்கிற நேரத்தில், இந்த ஆட்சியைப் பிடிக்காத சில அதிகாரிகள் வேண்டுமென்றே களங்கப்படுத்த இந்தக் காரியங்களைச் செய்கிறார்கள் என்று வாதாடப்படுகிறது. அப்படிப்பட்ட, அந்த வகையான வாதம் என் சார்பிலே அந்தக் காலத்திலே எடுத்து வைக்கப்படவில்லையென்று நான் எண்ணி வேதனைப்படுகிறேன். ஆனால், அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்தவர்களிடத்தில் அப்படிப்பட்ட ஒரு வாதத்தை எதிர் பார்ப்பது அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்த எனக்கு அது நியாயமும் அல்ல, சரியும் அல்ல என்று நான் உணர்கிறேன்.

மேலும் பல சம்பவங்களைக் கேள்விப்படுகிறேன். ஆயிரம் விளக்கைச் சேர்ந்த மக்கீஸ் கார்டனைச் சேர்ந்த 13 வயது சிறுமி வசந்தி காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டு கற்பழிக்கப்பட்டாள் என்ற செய்தி வந்தது.

புதிய ஆட்சி பதவி ஏற்பதற்கு 4 நாட்களுக்கு முன்னால் திருவைகுண்டத்தில் காவல்நிலையத்தில் ஒரு பெண்ணை 3 போலீஸ்காரர்கள் கற்பழித்தார்கள் என்ற செய்தி வந்தது.,

திருச்சியில், முத்தப்பன் நாயக்கன்பட்டியைச் சேர்ந்த செல்வராஜ் என்பவரின் மகள் மேரி என்பவள் தூத்துக்குடிக்கு சென்றிருந்தபொழுது மத்திய காவல் படையைச் சேர்ந்த சேகபால், தங்கராஜ் இருவராலும் அவள் கற்பழிக்கப்பட்டாள் என்ற செய்தி வந்துள்ளது. இவைகளெல்லாம் கழக ஆட்சிக் காலத்தில் நடைபெற்றால், இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திருப்பூர் மணிமாறன் பேசினாரே, அதுபோல், நாங்கள் சொல்லித்தான் நடந்திருக்கும் என்பதைப் போல், கற்பனையே

செய்திருப்பார்கள். ஆனால், இன்றைக்கு இந்தக் காரியங்களிலே, இன்றுள்ள ஆளுங்கட்சியைப் பிடிக்காத அதிகாரிகளால் இந்த ஆளுங்கட்சிக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காக செய்யப்படுகின்ற நிகழ்ச்சிகள் என்று கருதப்படுகின்றன. இந்த வேறுபாட்டைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பரங்கிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த சோழிங்கநல்லூர் ஊராட்சி மன்ற உறுப்பினரும் கழகத்தைச் சேர்ந்தவருமான ஹாத்தீம் பாய் என்பவரை, சூலை 15-ம் நாள் அன்று திருவான் மையூர் காவல் நிலையத்தினர் கைது செய்து, நிர்வாணமாக லாக்கப்பில் அடைத்தார்கள் என்ற புகாரும் எனக்கு எழுதப் பட்டிருக்கிறது.

தென்காசி தாலூகா, ஆலங்குளம் காவல் நிலையத்தில் 31-7-1977 அன்று சங்கரபாண்டியன் என்பவரை, அழைத்துச் சென்று பூட்ஸ் காலால் மிதித்து அடித்து இரத்தம் சொட்ட, சொட்ட அவரைத் துரத்தியிருக்கிறார்கள் என்று அந்தப் பகுதியினுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய செயலாளர் தோழர் இராஜாங்கம் என்பவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். இது அண்மையிலே, 31-7-1977 அன்று நடைபெற்ற கொடுமையாகும்.

மாணவர்கள் பிரச்னை பற்றியெல்லாம் பேசப்பட்டது. மாணவர்கள் பிரச்சனை கழக ஆட்சிக் காலத்திலேதான் நடை பெற்றது என்றெல்லாம் பேசப்பட்டது. இந்த 45 நாட்களில், எத்தனை ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இந்த அவையில் கொண்டு வரப்பட்டன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. புதுக்கல்லூரி மூடப்பட்டு, மாணவர்கள் - பொதுமக்கள் அல்லது, பொதுமக்கள் என்கிற பெயர் சூட்டிக்கொண்ட ரௌடிகள், போலீசார் ஆகியவரிடையே நடைபெற்ற மோதுதல் பற்றி நாம் இங்கே விவாதித்திருக்கிறோம். தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவிக்கச் சென்ற மாணவர்கள் மீது 26-7-1977 அன்று போலீசார் தாக்குதல் நடத்தினார்கள். அதன் தொடர்பாக, பச்சையப்பன் கல்லூரி, வைஷ்ணவா கல்லூரி, நந்தனம் கல்லூரி, தியாகராய கல்லூரி, கந்தசாமி நாயுடு கல்லூரி, புதுக்கல்லூரி ஆகியவைகள் மூடப்பட்டன. அது பற்றியும் நாம் இந்த அவையிலே விவாதித்திருக்கிறோம்.

சைதாப்பேட்டை எம். சி. இராஜா விடுதியில் மாணவர்கள் கோரிக்கை விட்டதைத் தொடர்ந்து போலீசார் ஆஸ்டலுக்குள்ளே நுழைந்தார்கள் என்று மாணவர்களைத் தாக்கினார்கள், கண்ணீர்ப் புகை பிரயோகம் வரையிலே நடைபெற்றது என்றும் அது பற்றிய மாணவர்கள் பிரச்சனை குறித்து விவாதித்திருக்கின்றோம்.

சென்னை சட்டக் கல்லூரியிலே உள்ள மாணவர்கள் எம். சி. இராஜா விடுதியில் நடைபெற்ற அந்தக் கொடுமைகளைக் கண்டிக்க, அனுதாபம் தெரிவிக்கக் கூடிய நேரத்தில், அவர் களையும் போலீசார் தாக்கினார்கள் என்றும் கண்ணீர்ப் புகை பிரயோகம் நடந்தது என்றும் மாணவர்கள் கைதாகி விடுவிக்கப் பட்டார்கள் என்றும் அது பற்றியும் இந்த அவையிலே விவாதித்திருக்கிறோம்.

உடுமலைப்பேட்டை, பழனி ஆகிய இடங்களில் பேருந்துத் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் மோதுதல் ஏற்பட்ட பிரச்னைகளை இந்த அவையிலே விவாதித்திருக்கிறோம்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் கைவிலங்கோடு இழுத்துச் செல்லப்பட்டார் என்ற செய்தியும் இங்கே சொல்லப்பட்டது. ஆனால், அதிகாரிகள் கொடுத்த தகவல் அப்படியல்ல என்று முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டு, மேலும் விசாரிக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டு, விசாரிக்கப் போவதாக உறுதி மொழி அளிக்கப்பட்டு, அதுவும் அண்மையிலேதான் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

போலீசாரால் ஒருவர் அடிக்கப்பட்டு மரணம் அடைந்தார் என்ற செய்தியையும் மாண்புமிகு சுப்பு அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

இராணுவத்திலே பணியாற்றிய முத்துசாமி என்பவர் விடுமுறையிலே மாமனார் வீட்டிற்கு வந்திருந்தபோது, டாக்டர் ஒரு தவறான மருந்து கொடுத்ததால் மன நிலை தடுமாறி போலீசார் அழைத்துச் சென்றபோது, உயிருக்கே ஆபத்து ஏற்பட்ட அந்த நிலையிலும் அவரைப் போலீசார் கடுமையாக உதைத்து, மிதித்து, அதற்குப் பிறகு அவர் இராணுவத்தைச் சேர்ந்தவர் என்ற அடையாள அட்டையைக் காண்பித்தபிறகு பயந்து கொண்டு விட்டு விட்டார்கள்.

இது 21-6-1977-ல் நடைபெற்ற நிகழ்ச்சி என்றும், ஆனால் 25-6-1977-ல் அவர், அந்த முத்துசாமி இறந்து விட்டார் என்றும், அவர் இறந்துவிட்ட அடுத்தநாள், அவர் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்தது என்றும், அந்த அம்மையார் கண்ணீரும் கம்பலையுமாக, எதிர்க்கட்சியில் உள்ள தலைவர்களுக்கெல்லாம் கடிதம் எழுதி, அந்த பிரதியையும் எனக்கு அனுப்பியிருக் கிறார்கள். இதை முதல் அமைச்சர் கவனிக்கவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அந்தத் தந்தையில்லாப் பிள்ளையோடு தவித்துக் கொண்டிருக்கிற அந்த அம்மையாருக்கு இந்த அரசு நியாயம் வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று, நாகர்கோவிலில் இருந்து வந்துள்ள கடிதம், வேலப்பன் நாயர் என்று ஒருவர், அவருடைய மகன் விஜயன் என்பவர் 17 வயது - தங்கையா நாடார் என்பவருடைய ஓட்டலில் சப்ளையராக வேலை பார்த்து வந்தார். அவரைப் பார்ப்பதற்காக அவருடைய தகப்பனார், வேலப்பன் நாயர் வந்தார். அந்த ஓட்டல் முதலாளியும் கேஷியரும் அவர் வெளியூர் போயிருக்கிறார். திருவனந்தபுரம் போயிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மறுநாள் பத்திரிகையில், அந்த வேலப்பன் நாயர் மகன் விஜயன், தற்கொலை செய்து கொண்டு இறந்து விட்டான் என்று செய்தி வருகிறது. விசாரித்துப் பார்த்தால் அது தற்கொலை அல்ல என்றும், அந்த ஓட்டல் முதலாளியும் கேஷியரும் சேர்ந்து அவனை அடித்ததால், அவன் இறந்து விட்டான் என்றும், அவர்களுடன் அந்தப் போலீஸ் அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு தற்கொலை என்று நம்பவைத்து விட்டார்கள் என்றும் வேலப்பன் நாயரும், கோட்டாரைச் சேர்ந்தவர், நாகர்கோவிலிலிருந்து கடிதம் எழுதி இருக்கிறார். இதுவும் அரசினுடைய கவனத்திற்கு வரவேண்டிய ஒரு அவசரமான பிரச்சனை என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கழக ஆட்சியிலே இன்றைக்கு ஆளும் கட்சியாக இருப்பவர்கள், சில பேர் கொலை செய்யப்பட்டார்கள் என்ற விவரங்களும் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. இது இரு தரப்பிலும் நடைபெற்றிருக்கிற விவகாரங்கள்.

இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிற கட்சியின் உறுப்பினர்களும் கொலை செய்யப்பட்டார்கள். எதிர்க்கட்சியிலே இன்றைக்கு இருக்கிற எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்துள்ள யார், யார் கொலை செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை எல்லாம், கவர்னர் உரையிலும், நிதி நிலை அறிக்கையிலும், இன்றைக்கும் கூட எடுத்துச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொலை செய்யப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் - பொள்ளாச்சி லத்தீப் என்ற கழகத் தோழர் கொலை செய்யப்பட்டார். ஆனால் அதிலே குற்றம் சாட்டப்பட்ட அண்ணா தி.மு.க. தோழர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் கொலை கொலைதான். பொள்ளாச்சி லத்தீப் இறந்தது உண்மை, ஏனென்றால் அவன் இறந்து விட்டான் என்பது எல்லோருக்கும் தெரியும். கொலை செய்யப்பட்டான் என்பது எல்லோருக்கும் தெரியும். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், கழக அரசு இதிலே தலையிட்டிருந்தால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டிருக்கமாட்டார்கள். இதிலே தலையிடவில்லை, திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை உதாரணத்திற்காக சொல்லுகிறேன்.

பிரதாப் சந்திரன், கழகத் தோழன், அவனை கொலை செய்த வழக்குகளில் நான்கு பேர்கள் விடுதலை செய்யப் பட்டார்கள். இரண்டு பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள். சிவகெங்கை குமாரப்பட்டி முத்து, இங்கே கூட கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள், சொன்னார்கள் அவர் கழக உறுப்பினரே இல்லை என்று. இன்றைய முதல் அமைச்சர், அன்றைய கழகத்தினுடைய பொருளாளர், நண்பர் மாதவனுடன் சென்று, சிவகெங்கையில், அந்த குமாரப்பட்டிக்குச் சென்று முத்துவினுடைய வீட்டிலே துக்கம் விசாரித்துவிட்டு ஆறுதல் கூறிவிட்டு வந்தார்கள்.

30-7-1972-லே, கொலை செய்யப்பட்டார். குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் அந்த வழக்கிலே விடுதலை செய்யப்பட்டார்கள். கோவை மாவட்டத்திலே குரிச்சியைச் சேர்ந்த ராஜா என்பவர் கொலை செய்யப்பட்டார். அந்த வழக்கிலே எதிரிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தென்னாற்காடு மாவட்டத்தில் வன்பார் கிராமத்தில் மலை யாளத்தான் என்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து இருந்த நண்பர் பிறகு அந்தக் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார். சேர்ந்த சில நாட்களிலே அவர் கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளி என்று சொல்லப்பட்ட எதிரி களில் ஒருவர் கீழ்க் கோர்ட்டில் விடுதலையானார். ஒருவர் உயர் நீதிமன்றத்தில் விடுதலை பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாணவர் பாலசுந்தரம் கொலையுண்டது பற்றி உருக்கத்தோடு அன்றைக்கு அவை முன்னவர் எடுத்துக் கூறினார். அந்தக் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக நண்பர் மாசிலாமணி ஆயுள் தண்டனை பெற்று இன்றைக்குச் சிறைக் கைதியாக இருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாயவரத்திலே மாணவர் ராமசாமி என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தோழர் கொலையுண்டார் என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா என்னிடத்திலே கூறுகிறார். இவைகளை எல்லாம் சொல்வதற்குக் காரணம் கழகத் தோழர்களும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். எத்தனை பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதல்ல. இரு தரப்பிலும் மாறி, மாறி வன்முறைச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்களை கழக அரசு கண்ணியமாக நடந்து கொண்ட காரணத்தினால் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து அவை முன்னவர் அன்றைக்கு நிதிநிலை அறிக்கையை அளித்துப் பேசும்போது, அவரது அறிக்கையினைத் தொடங்கி வைத்துப் பேசும்போது, அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உதயகுமார், கிளைவ் ஹாஸ்டல், இது போல பல சம்பவங்களை எடுத்துச் சொன்னார்கள். எந்த ஒரு சம்பவத்திலும் கழக அரசு வாளா இருந்து இருக்கவில்லை. ஒவ்வொரு சம்பவம் குறித்தும் இந்த அவையிலே விவாதம் வந்த போது உடனடியாக . . . . . .

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் அந்த இரத்த சாட்சிகளுக்கு அஞ்சலி செலுத்துகின்ற முறையிலே பெயர்களைச் சொன்னேனே தவிர உங்கள் ஆட்சியில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றன என்று நான் தெரிவிக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : அதற்காக நான் நன்றி தெரிவித்து கொள்கிறேன். அதை விளக்க நான் கடமைப்பட்டிருக் கிறேன் என்பதால் விளக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுப்படையாகச் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, 1971-ம் ஆண்டில் நாமெல்லாம் ஒன்றாக இருந்த காலத்தில்தான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழா உரை ஆற்ற நான் சென்றேன். அப்போது டாக்டர் பட்டம் எனக்கு அளிப்பதாக அறிவித்தார்கள். அப்போது தான் மாணவர் கிளர்ச்சி நடைபெற்றது. பட்டம் பெற்று வந்த பிறகு என்னைப் பாராட்டும் முகத்தான் இன்றைக்கு முதலமைச்சராக உள்ளவர் அன்றைக்கு என்னைப் பாராட்டிப் பேசியது இன்றைக்கும் எனக்குப் பசுமையாக இருக்கிறது. நான் அவைகளைக் குறிப்பிடுவதற்குக் காரணம் 1971-ம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த சம்பவங்களை எப்படி தேர்தல் நேரத்தில் படமாகப் போட்டு, அந்த மாணவர்கள் மீது நான் துப்பாக்கியை வைத்துக் கொண்டு நடைபோட்டு வருவதாகப் போட்டார்கள். டாக்டர் பட்டம் பெற்று (ஸ்டெதாஸ் கோப் வைத்துக்கொண்டு அல்ல) அந்தப் பட்டத்தோடு மாணவர் களின் பிணத்தின்மீது நான் நடந்து வருவது போல ஒரு படம் போட்டார்கள் . அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சம்பவங்கள் குறித்து உயர்நீதிமன்ற நீதிபதி என். எஸ். ராமசாமி அவர்கள் அப்போதே ஒரு விசாரணை நடத்தினார். உயர்நீதிமன்ற நீதிபதி என். எஸ். ராமசாமி அவர்களைக் கொண்டு ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டு அவருடைய தலைமையில் அது ஆராயப் பட்டு அவர் தந்த அறிக்கை அவையிலே வைக்கப்பட்டது.

இவைகளை எல்லாம் ஓய்வாக இருக்கிற நேரத்தில் அமைச்சர் பெருமக்கள் படித்துப் பார்க்க வேண்டுமென்று

கேட்டுக் கொள்கிறேன். அந்த உயர்நீதிமன்ற நீதிபதி என். எஸ். ராமசாமி என்ன தீர்ப்பினை அளித்திருக்கிறார். என்ன படிப்பினையை அளித்திருக்கிறார் என்பதை இங்கே எடுத்துக் காட்டுவது அவசியம் என்ற காரணத்தினால் அதைக் குறிப்பிடுகிறேன்.

23-7-1971 அன்று காலையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவிற்கு அழைப்பு அனுப்பப் பெற்ற வர்கள் தங்களுடைய வண்டிகளில், மோட்டார் வண்டிகளில் வந்த போது வழி மறிப்பதற்கு நக்சல்பாரி மாணவர்கள் முயற்சித்தார்கள். முதலமைச்சரின் கார் எப்போது வரும் எனக் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்படிக் கவனித்துக் கொண்டிருக்கும்போது, முன்னே சென்ற ஒன்றிரண்டு வண்டிகளில் ஒளிந்து கொண்டு சென்றிருக்கலாம் என்றும், எல்வாறாயினும் விடக்கூடாது என்று அவர்கள் பேசிக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இதனைச் சாட்சிகள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அந்தச்சாட்சிகளை மட்டும் வைத்துக் கொண்டு சதிக்குற்றம் மெய்ப்பிக்கக்கூடும் என்று அரசு கருதவில்லை. அந்தச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது காவலர்கள் மாணவர்களை அப்புறப்படுத்தியிருக்காவிட்டால் அவர்கள் முதலமைச்சரின் மோட்டார் வண்டியை மறித்து நிறுத்தி சூழ்ந்து கொண்டிருப்பார்கள். அந்த அளவு அவர்களது நோக்கங்கள் இருந்தன. அந்தச் சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் அவர்கள் எந்த அளவிற்கு ஊறு விளைவிக்கும் நோக்கத்தோடு இருந்தார்கள் என்று புலனாகும்.

இதை வைத்துக்கொண்டு முன்னதாக சதித்திட்டம் தீட்டப் பட்டது என்ற முடிவு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு முதலமைச்சரின் மோட்டார் வண்டியை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற உள்ளக்கிடக்கை காரணமாக, கசப்பு உணர்ச்சி காரணமாக, ஒரு சில மாணவர்கள் உணர்ச்சி வயப்பட்டு முதலமைச்சரின் வண்டியை நிறுத்தி சூழ்ந்து கொள்ள வேண்டும், அல்லது மறித்து நிறுத்த வேண்டும் என்று அந்தக் காரியத்திலே ஈடுபட்டார்கள்.

"சுருங்கக் கூறின் காலை நிகழ்ச்சியின்போது காவலர்கள் குண்டாந்தடியால் மாணவர்களை அடிக்கவில்லை. மாணவர்கள்

சாலையின் போக்குவரத்திற்குத் தடை செய்தார்கள். அதில் மாணவர்கள் உறுதியாக இருந்தார்கள். கல் முதலியவற்றை எறிந்ததால் 11 காவலர்களும், சிறப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஒருவரும் காயமுற்றனர். அதன் பிறகே மாணவர்களை அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை காவலர் பயன்படுத்தினர். காவலர் மேற்கொண்ட நடவடிக்கை அதிகமானது எனக்கூற இடமில்லை. இதுதான் முதல் பிரச்னை பற்றிய தீர்ப்பாகும்."

"இரண்டாவது பிரச்னையை எடுத்துக் கொண்டால் நீர்த் தேக்கத்தில் காணப்பட்ட உடல் கே. பி. உதயகுமார் உடையதாகவே இருக்கலாம். ஆனால் காவலர் மேற்கொண்ட கடும் நடவடிக் கையால் அவர் இறக்கவில்லை. 23-7-1970 இரவு நீரில் முழ்கியதின் பேரில் அவர் இறந்திருக்க வேண்டும். முதலமைச்சர் சட்டமன்றப் பேரவையில் சடலம் உதயகுமாரு டையதல்ல என்று அறிக்கை விடுத்ததால், சடலம் உதயகுமாரு டையதுதான் என்ற வகையில் அவருடைய தகப்பனாரிடத்திலும், உறவினரிடத்திலும் வாக்கு மூலங்களைப் பதிவு செய்த அதிகாரி பிறகு முதலமைச்சர் சட்டப் பேரவையில் கூறியதற்கு இணங்க இருக்க வேண்டுமென்று ஆவணங்களை திருத்தி தயாரித்தார் என்று வாதிடப்பட்டது. இது முழுவதும் ஆதாரமற்றதாகும். முதற்கண் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் பிரதி ஒன்று இப்போது என் முன் வைக்கப்பட்டுள்ளது. எந்த இடத்திலும் முதலமைச்சர் அந்தச் சடலம் உதயகுமாருடையது அல்ல என்று கூறவே இல்லை என்று தெரிகிறது. சடலத்தின் அடையாளம் குறித்து அதில் உறுதியாக எதுவும் கூறவில்லை. சட்டப் பேரவை உறுப்பினர்களில் சிலர் சடலம் உதயகுமாருடையது என்று கருதும் வகையில் அறிக்கைகள் விடுத்தார்கள் என்பதால் முதலமைச்சர் தனது பதிலில் சடலத்தின் அடையாளம் இனிமேல்தான் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்கள்."

இப்படித்தான் அன்றையதினம் உயர்நீதிமன்ற நீதிபதி ராமசாமி அவர்கள் தான் அளித்த அறிக்கையில் தெரிவித்திருக் கிறார். எந்த நேரத்திலும் இந்த மன்றத்திலே அது உதய குமாருடைய சடலம் அல்ல என்று நான் கூறவேயில்லை. இந்த மன்றத்திலே அப்போது பொன்னப்ப நாடார் போன்றவர்கள் எல்லாம் இருந்தபோது, உதயகுமாரின் புகைப்படத்தினையும்,

தண்ணீரில் மிதந்த அந்தப் பிணத்தின் புகைப்படத்தினையும் காட்டி, யார் என்று ஊர்ஜிதம் ஆகவில்லை - நமக்கே அடையாளம் புரியவில்லை - உதயகுமாருடையதாகவும் இருக்கலாம் என்ற அளவில்தான் குறிப்பிட்டேனே அல்லாமல், உதயகுமாருடைய சடலம் அல்ல என்று குறிப்பிட்டது கிடையாது. எனவேதான் அந்த நீதிபதியின் தீர்ப்பை மீண்டும் ஒரு முறை அவையின் உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தினால் ஒன்றிரண்டு குறிப்புகளை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். கிளைவ் ஹாஸ்டல் நடவடிக்கை குறித்து அமைக்கப்பட்ட மாவட்ட செசன்ஸ் நீதிபதி திரு. சி. எம். குப்பண்ணன் அவர்கள் கொடுத்த அறிக்கையில் காவலர்களுடைய போக்கைக் கடுமையாக கண்டித்து ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையும் இந்த அவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது. அப்போதே கிளைவ் ஹாஸ்டல் சம்பந்தமாக அரசு தரப்பில் கொடுக்கப்பட்ட அறிக்கை படிக்கப்பட்டது. உடனே அவையில் இருந்தவர்கள் நீதிவிசாரணை வேண்டுமென்று சொன்னார்கள். நீதி விசாரணை வைக்கப்பட்டது. நீதிவிசாரணையில் உண்மை வந்தது. அந்த அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள். அப்போது இருந்த போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பு பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அப்போது இருந்த தொழிலாளர் தலைவர்கள் யார், யார்? எஸ். ஜி. கிருஷ்ணன், பொதுச் செயலாளர், மோட்டார் டிரான்ஸ்போர்ட் அண்டு ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன், திருச்சிராப்பள்ளி டிஸ்டிரிக்ட் மோட்டார் ஒர்க்கர்ஸ் யூனியன் (ஏ. ஐ. டி. யு. சி. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைக்கப்பட்டது), டி. எஸ். டி. யுனைடெட் ஒர்க்கர்ஸ் சங்கம் (நிறுவன காங்கிரசை சேர்ந்தது), பாண்டியன் சாலை போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் (தி. மு. க. வை சேர்ந்தது). இந்த பஸ் தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்பட்ட மோதல், இதிலே காவலர்கள் இழைத்த கொடுமை என்று நீதிபதி குறிப்பிட்டு இருக்கிறார்கள். அன்றைக்கு அந்தப் பேருந்து போக்குவரத்து பணியாளர்களின் பாதுகாப்புக் குழுவின் தலைவராக இருந்த

எஸ். ஜி. கிருஷ்ணன், இப்போது தி. மு. க.-வில் இல்லை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார். அவரை விசாரித்தால் தெரியும்.

கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் பற்றி, நீதிபதி குப்பண்ணன் என்ன சொன்னார். ''கிளைவ் விடுதிக்குள் காவலர்கள் நுழைந்தார்கள் என்று தெரிந்த பின்னரும், மாவட்ட ஆட்சித் தலைவரும், டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலும் கிளைவ் விடுதிக்கு செல்லத் தவறியது மன்னிக்க முடியாத குற்றமாகும் என்று நீதிபதி மாவட்ட ஆட்சித் தலைவரைப் பற்றிச் சொன்னார். யார் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர், இங்கே பெயர்களையெல்லாம் சொல்லலாம் என்று எல்லா அதிகாரிகள் பெயரும் காலையில் சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்கு முன்பு நம்முடைய கந்தசாமி அவர்கள் 4-5 அதிகாரிகளுடைய பெயர்களை எல்லாம், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருடைய பெயரை எல்லாம் குறிப்பிட்டார். அந்த அடிப்படையில், இந்த கிளைவ் விடுதி சம்பவத்தில் நீதிபதியால் கூறப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், யார்?

அன்றைக்கு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் யார்? பாரதி. ஐ. ஏ. எஸ். இப்போது அறிக்கை தயாரித்திருக்கிறாரே கூட்டுறவு மோசடிகள் பற்றியெல்லாம், அவர்தான். அவர் செய்தது மன்னிக்க முடியாத குற்றம் என்று அன்றைக்கு நீதிபதியால் சொல்லப்பட்டு அதற்குப் பிறகு மாற்றப்பட்டவர். ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கவேண்டு மானால் மாநில அரசு செய்யமுடியாது என்று கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் அந்தக் காரியத்தை விட்டு மத்திய அரசைக் கலந்து கொண்டு அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்குமாறு அப்போது இருந்த கழக அரசு பணித்து அது இந்த அவையிலும் எடுத்துச் சொல்லப்பட்டது என்பதை நான் உங்களுக்கு இங்கே ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

இறுதியாக லூர்துநாதன் பற்றியது. லூர்துநாதன் விவகாரத்தில் உடனடியாக இங்கு இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் பிரச்னையை எழுப்பியபோது உடனடியாக விசாரணைக் கமிஷன் அதற்குப் போடப்பட்டது. அதில் கோதண்டராம ராஜு, பி. ஏ., பி. எல்., மாவட்ட செஷன்ஸ்

முதன்மை நீதிபதி அவர்களைத் தலைவராகக் கொண்டு அதனை விசாரித்தார்கள். அப்படி விசாரித்தஅதிலே இரண்டு தீர்ப்புக்களை கூறினார்கள். ப்ரொபஸர் சீனிவாசன் அவர்களுக்கும் அவர்களது சகோதரர்களுக்கும் அங்கிருந்த காவல் துறையினர் விளைவித்த கொடுமை பயங்கரமானது, அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள். அந்தத் தீர்ப்பின்படி அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு நடைபெறும்போது இதிலேயுள்ள அதிகாரி - ராஜசேகரன் என்று நினைக்கிறேன் - அவர் மாரடைப்பினால் இறந்துபோய் விட்டார்கள். மற்ற அதிகாரிகளுக்கு மூன்று மாத காலம், நான்கு மாத காலம் என்று அவர்களுக்கெல்லாம் சிறை தண்டனை வழங்கப்பட்டது. அவர்களை விட்டுவிடவில்லை.

லூர்துநாதன் வழக்கு பற்றிய தீர்ப்பை வழங்கிய அதே நீதிபதி அடுத்த பக்கத்தில் சொல்லுகிறார். லூர்துநாதன் இறந்ததற்கு பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்திக்க மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். சில மாணவப் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சித் தலைவரோடு பேசிக்கொண்டிருந்தார்கள். மாணவர்கள் சிலர் வெளியே நின்று கொண்டிருந்தார்கள். அப்போது நாகர்கோவிலிலிருந்து வந்த பஸ்ஸை வழிமறித்து சில விஷமிகள் கல்லெறிந்து சேதப்படுத்தி அதன் டயர் களிலிருந்து காற்றை நீக்கினர். பஸ் டயர்கள் அகற்றப்பட்டன. பஸ்ஸைக் காப்பாற்ற, பஸ்ஸில் உள்ள பயணிகளைக் காப்பாற்ற காவல்துறையினர் ஓடி வந்தனர். அதைக்கண்டு மாணவர்கள் சிதறி ஓடினர். அப்படி ஓடும்போது லூர்துநாதன் ஆற்றைக்கடந்து ஓடுகிற நேரத்தில் அந்த இடத்தில் சுற்றிசுழன்றுகொண்டிருந்த சுழலில் மாணவன் லூர்துநாதன் - நீதிபதி அவர்களின் வார்த்தையில் சொல்லவேண்டு மானால் - தீவினைப் பயனால் மாட்டிக்கொண்டு மூழ்கிப்போனான். மூழ்கும்போது ஆற்றிலிருந்த கரடுமுரடான கற்கள், வழவழப்பான கற்கள் ஆகியவற்றுடன் முட்டிமோதியதில் அம் மாணவனுக்கு மூன்று காயங்கள் ஏற்பட்டன. மூழ்கியதால் மூச்சுத்திணறி அம் மாணவன் இறந்தான். அம் மாணவனது மரணத்திற்கு காவலர்கள் பொறுப்பாளிகள் அல்ல, என்று அந்த நீதிபதி தீர்ப்பளித்திருக்கிறார். முதலில் தீர்ப்பளித்த அதே நீதிபதிதான், காவலர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும்

என்று சொன்ன அதே நீதிபதிதான் இத்தீர்ப்பையும் வழங்கியிருக்கிறார்கள்.

எனவே, குறிப்பாக பலர் சொன்னார்கள். க்ளைவ் ஹாஸ்டல் சம்பவத்திற்கு இவர்கள்தான் காரணம், கருணாநிதிதான் காரணம். கருணாநிதிதான் காரணம் என்று சுவரொட்டிகள் போட்டு மாணவர்களை எல்லாம் கீழே படுக்க வைத்து அவர்கள்மீது நடப்பதுபோல் சொல்லி படிக்காதவர் டாக்டர் பட்டம் பெறலாமா என்று கேட்கிறார்கள். டாக்டர் பட்டம் பெறுவது என்பது படித்து படித்து பட்டம் பெற்று பெறுவதும் உண்டு. படிக்காமல் பட்டம் பெறுபவர்களும் உண்டு. இது அவை முன்னவருக்கு தெரியாத விஷயம் அல்ல. பி. எச்டி. படித்துவிட்டு பட்டம் பெறும் டாக்டர்களும் உண்டு. எம். பி. பி. எஸ். படித்து பட்டம் பெறுகிற டாக்டர்களும் உண்டு. கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படுவதும் உண்டு. இப்படியெல்லாம் போஸ்டர்கள் போடப்பட்டன. இவைகளுக்கெல்லாம் பிறகு இன்றைக்கு ஆளும் கட்சியில் உள்ளவர்கள் 40 நாட்கள் ஆயிற்றே, 45 நாட்கள் ஆயிற்றே என்ற காரணத்தாலோ என்னவோ இன்னும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருப்பதுபோல் கருதிக்கொண்டு அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இறுதியாக நான் ஒன்றை மட்டும் கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். பூலாவாரி சுகுமாரன் வழக்கு பற்றி மிக விஸ்தாரமாக இங்கு பேசப்பட்டு வந்திருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் இங்கே இல்லாவிட்டாலும் ஒலிபெருக்கி மூலம் நிச்சயமாக கேட்டுக் கொண்டிருந்திருப்பார்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். கேட்டுக்கொண்டிருப்பார்கள். அதைப் பற்றி விஸ்தாரமாகப் பேசப்பட்டிருக்கிறது. பூலாவாரி சுகுமாரன் மரணம், அதனால் ஏற்பட்ட வேதனை அனைவருடைய மனதையும் கலக்கக் கூடியதுதான். அதற்குப் பிறகு அது சம்பந்தமாக வழக்குத் தொடர எந்த முயற்சியையும் அந்த அரசு எடுக்கவில்லை என்று கூறுவதும், வழக்கை வேண்டுமென்றே விட்டுவிட்டதாக ஒரு அரசின்மீது குற்றஞ்சாட்டுவதும், யாரோ ஒரு பெரிய புள்ளி சிக்க இருந்தார், அவரை விடுவிக்க இப்படியெல்லாம் செய்யப்பட்டது என்று கூறுவதும் பொருந்தாது

என்பது என்னுடைய வாதம். ஆனால் வழக்கிற்குள்ளே பூர்ணமாக நுழைய நான் விரும்பவில்லை. மீண்டும் குடியரசுத் தலைவர் ஆட்சியில் பலர் வஞ்சம் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக சில காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. குடியரசுத் தலைவர் ஆட்சியில் எப்படி எப்படி அப்ரூவர்கள் தயாரிக்கப் பட்டார்கள் என்பதை ஒரு அப்ரூவர் சாட்சியத்திலிருந்தே தெரிந்து கொண்டிருந்திருக்கலாம். அவர் அப்ரூவர் கூண்டில் ஏறியதும் என்ன நடந்தது என்பதைச் சொல்லி, எப்படி கையெழுத்து வாங்கினார்கள் என்பதையெல்லாம் தத்ரூபமாக எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்கள். இப்போது கோர்ட்டை மாற்றலாமா என்றளவிற்கு பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள்.

இன்னொரு அப்ரூவருடைய பெயர் சந்தானம். அவர் சாட்சியம் கொடுத்திருக்கிறார். அதில் இன்றைய அமைச்சர் ஒருவரைப்பற்றியும் சொல்லியிருக்கிறார். அதை நான் நம்ப வில்லை. நம்பவும் மாட்டேன். அன்றைக்கு வேண்டுமென்றே அதிகாரிகள் இப்படி எழுதி வாங்கியிருக்கிறார்கள். வீரபாண்டி ஆறுமுகம் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பஸ் முதலாளிகளிட மிருந்து வசூல் செய்து அந்தப் பணத்தை நானும் அதாவது சந்தான மாகிய நானும் மாப்பிள்ளை கோவிந்தசாமியும் கொண்டு போய் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனிடம் கொடுத்தோம் என்று அந்த சாட்சி சொல்லியிருக்கிறார். அவர் இப்போது அப்ரூவர், அவர் நாளைக்கு கூண்டில் வரத்தான் போகிறார். குடியரசுத் தலைவர் ஆட்சியில் தயாரிக்கப்பட்ட சாட்சி அவர். அவர் சொல்லியிருப்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை வீரபாண்டி ஆறுமுகம் எப்படி வசூலித்திருக்க முடியும். எப்படி அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களிடம் கொண்டு போய்க் கொடுத்திருக்க முடியும். இது வேண்டுமென்றே அமைச்சரையும் சேர்த்து இழுக்க அவர் பெயரையும் பயன்படுத்தி, அன்றைய தினம் இருந்த அதிகாரிகள் இந்த வலையைப் பின்னியிருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலையில்தான் இந்த வழக்கு தயாரிக்கப்பட்டு இருக்கிறது என்பதை மாத்திரம் இங்கே எடுத்துக்காகாட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது சம்பந்தமாக என்னையும் விசாரணை செய்தார்கள். அதை நான் இல்லை என்று மறுத்திருக்கிறேன். வீரபாண்டி ஆறுமுகம் இதை மறுத்துள்ளார் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : நான் அமைச்சர் அவர்களுக்குக் களங்கம் கற்பிக்கவேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. குடியரசுத் தலைவர் ஆட்சியில் எப்படியெல்லாம் அதிகாரிகள் சாட்சிகளை வேண்டுமென்றே தயாரித்து இருக்கிறார்கள் என்பதை . . . . .

திரு. துரை. முத்துச்சாமி : துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். குடியரசுத் தலைவர் ஆட்சியில் கூட சில தவறுகள் நடந்திருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அப்படி யென்றால் குடியரசுத் தலைவர் அதற்குப் பொறுப்பாளியாக முடியுமா?

கலைஞர் மு. கருணாநிதி : அப்பொழுதிருந்த குடியரசுத் தலைவர் மறைந்து விட்டார். குடியரசுத் தலைவர் ஆட்சி என்று நான் குறிப்பிடுவது அந்த காலகட்டத்தைத்தான் குறிப்பிடுகிறேன். அந்த காலக்கட்டத்தில் எப்படியெல்லாம் சாட்சிகள் ஜோடிக்கப்பட்டார்கள் தயாரிக்கப்பட்டார்கள் என்பதை சொல்வதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேனே தவிர வேறு எதுவும் இல்லை. எப்படியெல்லாம் வழக்குகள் அன்றையதினம் அதிகாரிகளால் ஜோடிக்கப்பட்டன என்பதற்காகச் சொன்னேனே அல்லாமல் எனது அன்பிற்குரிய நண்பர் அமைச்சர் ராமச்சந்திரன் அவர்களுக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இதைச் சொல்ல வில்லை.

இது ஒன்றே போதும், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல - குடியரசுத் தலைவர் ஆட்சியில் யார் யார் லஞ்சம் வாங்கினார்கள் என்று எல்லாம் சொல்லப்பட்ட செய்திகள். அதைத் தொடர்ந்து அதற்காக ஜோடிக்கப்பட்ட வழக்குகள் இவையெல்லாம் எப்படிப்பட்டவை என்பதை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் தந்த விளக்கத்திலிருந்து அனைவரும் புரிந்து கொள்ளலாம், என்பதை

எடுத்துக் கூறி, இந்தக் காவல்துறையில் அவர்களுக்கு வேண்டிய சில சலுகைகளை அளித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் காவல்துறையினருக்கு வீரப்பதக்கம் அளிக்கின்ற நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்திட வேண்டும் என்று கேட்டு காவல் துறையினருடைய கோரிக்கைகளை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

உரை : 12 நாள் : 17.03.1978

கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மன்றத்தில் வைக்கப்பட்டு, மன்ற உறுப்பினர்களுடைய ஒப்புதலைப் பெறுகின்ற வகையில் சற்றொப்ப ரூ. 33 கோடி அளவிற்கு மானியம் பெறுகின்ற நிலையில் விவாதங்களுக்குட்பட்டு வருகின்ற **காவல் துறை** மானியத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, என்னுடைய கருத்துக்களைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்ட நேரம் இந்த மானியத்தின்மீது நடைபெறுகின்ற விவாதத்திலே என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு இன்று ஏற்பட்டுள்ள தவிர்க்க முடியாத சூழ்நிலைகளின் காரணமாக, நேரம் அதிகம் இல்லையென்ற காரணத்தினால் மிகச் சுருக்கமாகச் சிலவற்றை மாத்திரம் காவல்துறை பொறுப்பை ஏற்றிருக்கிற நம்முடைய முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய நீங்காக் கடமையாகும்.

நேற்று இங்கு உரையாற்றிய நண்பர் திரு. லத்தீப் அவர்கள். போலீஸ் கமிஷன் என்ற ஒன்று அமைக்கப்பட்டது, அது என்னவாயிற்று ? அது ஐஸ் பெட்டியிலே போடப்பட்டதா என்ற கேள்வியை எழுப்பினார். கழக ஆட்சியில் போலீஸ் கமிஷன் ஒன்று அமைக்கப்பெற்று அதிலே பங்குபெற்றிருந்தவர்கள் பல பரிந்துரைகளைச் செய்து, கழக ஆட்சிக் காலத்திலேயே 133 பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 40-க்கு மேற்பட்ட பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டன, நடைமுறைக்கு வந்தன என்பதை இந்த மன்றத்திலே ஆட்சி பொறுப்பிலேயிருந்த நேரத்திலும் சரி எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து சென்ற கூட்டத்தொடரில் காவல் துறை மானியத்திலே விவாதம் நடைபெற்ற காலத்திலும் சரி நான் விளக்கமாக எடுத்துக்கூறி இருக்கிறேன்.

இன்றைக்கு ரூ. 33 கோடி அளவுக்கு மானியம், எழுப்பப்படுகிறது. இந்தத் துறை 1970ஆம் ஆண்டில் ரூ. 13 கோடி அளவுக்குத் தான் மானியம் எழுப்பப்படுகின்ற ஒரு துறையாக இருந்தது. இந்த ரூ. 13 கோடி 1974-75ஆம் ஆண்டிலேயே ரூ. 26 கோடி அளவிற்கு இரண்டு மடங்கு அதிகமாக உயர்ந்ததற்குக் காரணம் போலீஸ் கமிஷனுடைய பரிந்துரைகளை அன்றைக்கிருந்த அரசு நிறைவேற்றத் தொடங்கியதுதான்.

அதுமாத்திரமல்ல, இரண்டாம் நிலைக் காவலர்கள், ரூ. 70-லிருந்து ரூ. 95 வரையில் அடிப்படைச் சம்பளம் பெற்றவர்களுக்கு ரூ. 150-லிருந்து, ரூ. 225 என்ற அளவிற்கு அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தியது அந்தப் போலீஸ் கமிஷனுடைய பரிந்துரைகளுடைய அடிப்படையிலேதான் என்பதையும் நாம் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. கடந்த காலத்திலே, இந்தத் துறை வேகமாக இயங்கவும், விரைவாகப் பணியாற்றவும், விறுவிறுப்போடு செயல்களை முடுக்கவும், நவீனக் கருவிகள் தேவை என்பதை உணர்ந்து கமிஷனுடைய பரிந்துரைகளில் அதுவும் ஒரு கட்டமாக இருப்பதை அறிந்து அதற்கு ஆவன செய்ததும் முன்பிருந்த கழக அரசு என்பதையும் அது தொடர்ந்து நடைபெறும் என்கின்ற நம்பிக்கையோடு நாங்கள் இருக்கிறோம் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறை அதிகாரிகள் அல்லது காவல் நிலையங்களில் இருப்பவர்கள் உடனடியாகச் சென்று குறிப்பிடுகின்ற புகார்கள் குறித்து விசாரிப்பதற்கு ஏதுவாக 1971ஆம் ஆண்டு முதல் 1975ஆம் ஆண்டு வரையில் இந்த 4 ஆண்டு காலத்தில் 450 மோட்டார் சைக்கிள்கள் அந்த காவல் நிலையங்களுக்கு அரசின் சார்பாக வழங்கப்பட்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் காவல் துறையில் இருக்கிற பெரும்பாலோர் அல்ல. ஒரு குறிப்பிட்ட பகுதியினர் பல தவறுகளைச் செய்கிறார்கள் என்றாலும்கூட அந்தத் தவறுகளை இப்படிப்பட்ட மன்றங்களில் எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்களும் இன்னும் சொல்லப்போனால் ஆளும் கட்சி வரிசையில் உள்ளவர்களும் இந்த மானிய விவாதத்தின்போது சுட்டிக்காட்டுகின்ற காரணத்தால் அவர்கள் அவர்களைத் திருத்திக்கொள்ளவோ, திருத்திக்கொள்ளத் தயாராக இல்லா

விட்டால் அரசின் சார்பில் நடவடிக்கை எடுக்கவோ ஏதுவாக இருக்கும் என்பதால் விவாதிக்கிறோமே அல்லாமல் அதே நேரத்தில் இந்தத் துறை மேலும் செம்மைப்படுத்தப்பட்டு, விறுவிறுப்பாக, வேகமாகப் பணியாற்றுவதற்கான வழிவகை செய்யப்பட வேண்டும்; அதற்கு இந்த அரசு ஆவனச் செய்ய வேண்டும் என்பதற்காகவுமே சுட்டிக்காட்டுகிறேன்.

தரப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையை நான் கூர்ந்து படித்துப் பார்த்தேன். ஆய்வு அறிக்கையிலே 4, 5 பக்கங்களில் 1976, 1977 ஆம் ஆண்டுகளில் சொத்து குறித்து நிகழ்ந்த குற்றங்கள் பற்றிய ஒப்பீட்டு அறிக்கை பின்வருமாறு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகளில் 1976 ஆம் ஆண்டு ஆதாயத்திற்காக செய்யப்பட்ட கொலைகள் 30. 1977 ஆம் ஆண்டில் அது 49. கொலைகள் உயர்ந்திருக்கின்றன.

1976 ஆம் ஆண்டில் கொள்ளைகள் 20. 1977 ஆம் ஆண்டில் 22 ஆக உயர்ந்திருக்கிறது.

வழிப்பறி 120, 1976-ல். 1977-ல் 130 ஆக உயர்ந்திருக்கிறது.

கன்னக்கோல் வைத்துக் கொள்ளையிடுதல் 1976-ல் 7,759 ஆக இருக்க, 1977-ல் 10,305 ஆக உயர்ந்திருக்கிறது.

பெரிய திருட்டுகள் 19,710, 1976-ல். 1977-ல் 24,589 ஆக உயர்ந்திருக்கிறது.

சிறிய திருட்டுகள் 2,551, 1976-ல். 1977-ல் 3,244 ஆக உயர்ந்திருக்கிறது.

கால்நடைத் திருட்டுகள் 1976-ல் 1,187. 1977-ல் 1,359,

ஆக 1976-ல் 31,377 குற்றங்கள். 1977-லே 39,698 குற்றங்கள், இந்த அளவுக்கு ஏறத்தாழ 8,000-க்கு மேற்பட்ட நிலையில் குற்றங்கள் அதிகரித்து இருக்கின்றன.

இந்த ஒப்பீட்டு நோக்கில் 1975-லே ஆண்டையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், 1975-ல் நடைபெற்ற குற்றங்கள் 33,044. இப்போது 1977-ல் 39,698. 1975 ஆம் ஆண்டுக்கும் 1977 ஆம் ஆண்டுக்கும் இடையில் 6,000-க்கு மேற்பட்டு குற்றங்கள் அதிகரித்து இருக்கின்றன என்பதை இந்த அவையில் அரசின் சார்பில் தரப்பட்டுள்ள ஆய்வு அறிக்கை நிதர்சனமாகத் தெரிவித்திருக்கிறது.

அதோடு, தரப்பட்டிருக்கிற அறிக்கையில் குற்றவாளி களுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் துப்பு துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்று வரும்போது 1976-ல் 52.4 சதவீதம் துப்பு துலக்கப்பட் டிருக்கிறது. 1977-ல் துப்பு துலக்கப்பட்ட சதவீதத்தின் அளவு 41.8 என்று அளவுக்குக் குறைந்திருக்கிறது. 1975-ல் அது இந்தக் குறிப்பில் இல்லாவிட்டாலும் 1975ஆம் ஆண்டு ஆய்வு அறிக்கையில் இருக்கிறது - 58.9 என்ற அளவுக்கு துப்பு துலக்கப்பட்டிருக்கிறது. 1975-லே 58.6 சதவீதமாக இருந்தது 1976-ல் 52.4 சதவீதமாகக் குறைந்து, 1977-ல் இந்த ஆட்சிப் பதவிக்கு வந்த பிறகு 41.8 சதவீதம் என்று இந்தப் புள்ளிவிவரங்கள் குறைந்து இருப்பது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்று என்று சுட்டிக்காட்டு கிறேன்.

அதைப்போலவே, ஆய்வு உரையில் தண்டனை விதிக்கப்பட்ட வழக்கு, விசாரணை நடைபெறுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையில் துப்பு துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்பது 1976-ல் 70.7, 1977-ல் இப்போது அது 57.7 என்ற அளவுக்குப் படுபாதாளத்திற்கு வீழ்ந்திருக்கிறது. 1975 ஆம் ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்த்தால் 1975ஆம் ஆண்டு இப்படி துப்பு துலக்கப்பட்ட வழக்குகளின் சதவீதம் 73.1 ஆக இருந்திருக்கிறது. 1975-ல் 73.1 ஆக இருந்தது, 1976-ல் 70.7 ஆகக் குறைந்து 1977-ல் 57.7 ஆக குறைந்து இருப்பது மிக மிக வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

5-ம் பக்கத்தில் ஆய்வு அறிக்கையில் ஒன்றுகூறப்பட்டிருக் கிறது. 1976ஆம் ஆண்டு இருந்ததைவிட 1977-ல் குற்றங்களின் எண்ணிக்கை 8,321 உயர்ந்துள்ளன. அதாவது 26.5 சதவீதம் உயர்ந்துள்ளது. 1972 ஆம் ஆண்டில் 3.1 சதவீதம்தான் குற்றங்கள் எண்ணிக்கை அதிகரித்தது. இதையும் கவனத்தில் கொண்டிட வேண்டும்.

1972 என்று குறிப்பிடுவதற்குக் காரணம் அதற்கு முன்பு நடந்த ஆட்சி நல்ல ஆட்சி என்றும் 1972-க்குப் பிறகு நடந்த ஆட்சிதான் விசாரிக்கப்பட வேண்டிய ஆட்சி என்றும் நம்முடைய இன்றைய அரசு கருதுகின்ற காரணத்தினால்தான். அதனால்தான்

நான் 1972-ம் ஆண்டு புள்ளிவிவரத்தைச் சொன்னேன். 1972ஆம் ஆண்டிலே குற்றங்களின் அதிகரிப்பு 3.1 சதவீதமாக இருந்தது. 1977 ஆம் ஆண்டிலே குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு 26.5 சதவீதமாகி இருக்கிறது, இதற்குக் காரணங்கள் கொடுத்திருக்கிறார்கள். பெருமளவில் புலன் விசாரணை அதிகாரிகளை நியமிப்பதன் மூலம்தான் இந்தச் சவாலை ஏற்க முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே அளவு எண்ணிக்கை உள்ள அதிகாரிகள்தான் 1972-லும் இருந்தார்கள். 1975-லும் இருந்தார்கள், 1976லும் இருந்தார்கள். 1977-லும் இருந்திருக்கிறார்கள் ஆகவே, புலன் விசாரணை அதிகாரிகளைப் பெருமளவில் நியமிப்பதன் மூலமாகத்தான் இந்தச் சவாலை ஏற்க முடியும் என்று கூறுவதை என்னால் ஏற்க இயலவில்லை. இது அதிகாரிகளினுடைய திறமைக்குறைவா ? அல்லது அந்த அதிகாரிகளின் நல்ல திறமையைப் பயன்படுத்த அரசு தவறிவிட்டதா என்கின்ற வினாவோடு இந்தப் பிரச்சினையை நான் நிறுத்த விரும்புகிறேன்.

அடுத்து காவல்துறையினரின் மொத்த எண்ணிக்கை பற்றி ஆய்வறிக்கையின் 23ஆம் பக்கத்தில் தரப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள - அதாவது கிட்டத்தட்ட 1978-ஐ ஒட்டி என்று எடுத்துக்கொள்ளலாம் - மொத்த எண்ணிக்கை 46,716 ஆகும். இது 1977-ல் இப்போது தரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையின் ஆய்வு அறிக்கையிலே 46,716 பேர் காவல்துறையினரின் மொத்த எண்ணிக்கை என்று கூறப்பட்டிருக்கிறது. 1975ஆம் ஆண்டிலே எவ்வளவு பேர்கள் இருந்தார்கள் ? 46,516 பேர் இந்தக் காவல் துறையினுடைய எண்ணிக்கையில் இருந்திருக்கிறார்கள்.

ஆக 1975-க்குப் பிறகு 1976 உருண்டு 1978-லே 200 பேர்தான் அதிகமாகி இருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பத்தாயிரம் பேரை போலீஸ் வேலைக்குச் சேர்க்கப்போகிறேன் என்று கடந்த கூட்டத்தொடரில் அறிவித்தார்கள். அந்தப் பத்தாயிரம் பேரில் 5 ஆயிரம் பேர், இன்னும் சொல்லப்போனால் ஆயிரம் பேர் கூடச் சேர்க்கப்படவில்லை. 200 பேர்தான் இந்தத் தொகையில் அதிகமாகி இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இரண்டாம் நிலைக்

காவலர்களில் 32,621 பேர் என்று இருந்ததற்கு மாறாக 32,689 என்று - ஆக 68 பேர்தான் இரண்டாம் நிலைக்காவலர்களின் எண்ணிக்கையில் அதிகமாகி இருக்கிறார்கள்.

இதே நேரத்தில் இன்னொரு ஒப்பீட்டையும் நான் காட்ட விரும்புகிறேன். 1972-லே 38,541 ஆக இருந்ததை 10 ஆயிரம் பேரை வேலைக்கு எடுக்கப்போகிறேன் என்று அறிவிக்காமலேயே கடந்த நான்கைந்து ஆண்டு காலத்தில் ஏறத்தாழ 8 ஆயிரம்பேர் காவல்துறையிலே அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பத்தாயிரம் பேரை காவலர் வேலைக்கு எடுக்கப்போகிறேன் என்று அறிவித்த பிறகும் இன்றைக்கு இருக்கின்ற புள்ளிவிவரத்தைப் பார்த்தால் 200 பேர் கூட சரிவர எடுக்கப்படவில்லை என்கிற சோகமான புள்ளிவிவரத்தைத்தான் இந்த ஆய்வறிக்கையின் மூலமாக நாம் பெற முடிகிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

இந்த ஆய்வறிக்கையைப் படிக்கும்போது நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு அதிகாரிகள் கடந்த கூட்டத்தொடரில் எந்த ஆய்வு அறிக்கையைத் தந்தார்களோ அதே அறிக்கையை அப்படியே எழுத்து பிசகாமல் இப்போதும் தந்துவிட்டார்களோ என்று எண்ணத்தான் தோன்றுகிறது.

1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23-லே தரப்பட்ட அறிக்கையிலே இம் மாநிலத்தில் 873 காவல்நிலையங்களில் 756 காவல்நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்துதரப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு 7 மாதத்திற்குப் பிறகு 1978ஆம் ஆண்டு மார்ச்சிலே அதாவது இப்போது வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயும் 873 காவல்நிலையங்களுக்கு 756 காவல் நிலையங்களில் தொலைபேசி வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

873 காவல்நிலையங்களில் டெலிபோன் வசதி 756 காவல் நிலையங்களுக்கு செய்து தரப்பட்டுள்ளது என்று 1977லும் சொல்லப்பட்டது, 1978ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடைக் காலத்தில் ஒன்றிரண்டு காவல் நிலையங்களிலாவது டெலிபோன் வசதி செய்து தருவதற்கான அந்த முயற்சி மேற்கொள்ளப் படவில்லை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியுமா என்பதை எண்ணிப்பார்த்திட வேண்டும்.

1977 ஆகஸ்டு 23-ம் தேதி தரப்பட்ட அறிக்கையில் 873 காவல் நிலையங்களில் 708 காவல்நிலையங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைமையிடத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது தரப்பட்டுள்ள அறிக்கையிலும் எழுத்து பிசகாமல் 873 காவல்நிலையங்களில் 708 காவல்நிலையங்கள், சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைமை யிடத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளன என்றுதான் இப்போதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனவே இந்தத் துறையைப் பொறுத்தவரையில் எந்த ஒரு பெரிய முன்னேற்றமும் ஏற்படவில்லை. பெரிய முன்னேற்றம் என்றால் குற்றவாளிகளை எளிதில் கண்டுபிடிக்கவும் குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கவும் குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித்தரவும் இதில் எளிதாகவும், வேகமாகவும் வழிகளைப் பின்பற்ற இந்தத் துறை பலப்படுத்தப்படவேண்டும், புதுமைப்படுத்தப்படவேண்டும் என்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தொடரவில்லை என்பதுதான் கடந்த கால இந்த அரசு வைத்த ஆய்வுரைக்கும் இப்போது இந்த அரசு வைத்திருக்கும் ஆய்வுரைக்கும் இடையே நாம் ஆய்ந்து பார்க்கிற நேரத்தில் இருக்கிற உண்மையாக இருக்கிறது.

இந்த மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து பேசிய நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். குடித்துவிட்டு வன்முறைகளில் ஈடுபடுகிறவர்கள், வன்முறைச் செயல்களில் ஈடுபடுகிறவர்கள் இருந்தால் அவர்கள்மீது வழக்குகளைப் போட வேண்டும் என்றும் மற்றும் அதைத் தவிர்த்து மற்ற குடித்த வழக்குகளை வாபஸ் வாங்கிவிட வேண்டும் என்றும் ஒரு அறிக்கை, கவர்மென்ட் ஜி. ஓ. அனுப்பப்பட் டிருக்கிறது என்று நான் படித்தேன். அதற்கு முதல்வர் அவர்கள், இது அதிகாரிகளால் அனுப்பப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள்.

பிறகு ஹோம் டிப்பார்ட்மென்ட், உள்துறை இலாக்காவில் இருந்து இது அனுப்பப்பட்டிருக்கிறது என்று நான் எடுத்துக்காட்டினேன். இவ்வளவு பெரியதொரு கொள்கை விஷயத்தை முதல் அமைச்சர் அவர்களுடைய கையெழுத்தைப் பெறாமல் எப்படி அனுப்பினார்கள் என்று கேட்டேன். அதை

பார்த்து விசாரித்து அப்போதே அறிவிப்பதாகச் சொன்னார்கள். இதுவரையில் அறிவிக்கவில்லை. இன்று அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். அந்தத் தவறுக்கு யார் காரணம், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைப்பற்றி அவர்களுடைய பதிலுரையில் எடுத்துச்சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்த ஆய்வுரையில் ஆட்சேபகரமான ஒரு பகுதிபற்றி நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. 9, 10 பக்கங்களில், ஒரு குறிப்பு "30-10-77 அன்று கட்டுக்கடங்காத ஆர்ப்பாட்டக்காரர்கள் அடங்கிய கும்பலொன்று, தடை உத்தரவுகளை மீறி கிண்டி அண்ணாசாலையில் ஹால்டா சந்திப்புக்கு அருகில் கூடியது. அக்கும்பல் அவ்வாறு கூடியிருப்பது சட்டவிரோதமானது என்று அறிவிக்கப்பட்டு கலைந்துபோகுமாறு எச்சரிக்கப்பட்டது. அக்கும்பல் கலைந்துபோவதற்குப் பதிலாக கற்கள், சோடா புட்டிகள், கொடிக்கம்புகள், தடிகள் ஆகியவற்றைக் கொண்டு காவல்படையினரைத் தாக்கியது, முறையாக எச்சரிக்கப்பட்ட பிறகு, கண்ணீர்ப்புகை பிரயோகிக்கப்பட்டது. ஆனால், அது பயனளிக்கவில்லை. இது பயனளிக்காமல் போனதனாலும், கும்பல் ஆவேசமடைந்திருந்ததாலும், காவல் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று. இதில் இருவர் இறந்தனர்; இருவர் காயமுற்றனர். காவல் படையினரில் அறுபத்தைந்து பேர் காயமுற்றனர். விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசு நியமித்துள்ளது; அதன் தீர்ப்பு எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இவ்வளவு தெளிவாக நீங்கள் தீர்ப்பை அறிவித்துவிட்ட பிறகு கமிஷன் எதற்காக, எதற்கு அவர்களிடம் தீர்ப்பு எதிர்ப்பார்க்கப் படவேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. காவல் படையினரை அந்தக் கும்பல் தாக்கியது. முறையாக எச்சரிக்கப் பட்டபிறகு கண்ணீர்புகை பிரயோகிக்கப்பட்டது; ஆனால் அது பயனளிக்கவில்லை, அது பயனளிக்காமல் போனதாலும் கும்பல் ஆவேசமடைந்திருந்ததாலும் காவல் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தவேண்டியதாயிற்று என்று துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணம் கற்பித்து இந்த அரசு இந்த அவையில் வைத்துள்ள ஆய்வு அறிக்கையில் கூறிவிட்ட பிறகு சோமசுந்தரம் கமிஷன் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. எதிர்பார்ப்பதுபோல்தான் வரும் என்று எண்ண வேண்டிய

ஐயப்பாட்டுக்கு நாங்கள் இந்த ஆய்வு அறிக்கை மூலம் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு கமிஷன் அமைத்துவிட்டு அந்தக் கமிஷன் அமைக்கும்போதே முதல் கோணல் முற்றும் கோணல் என்பதைப்போல் நிகழ்ச்சி நடைபெற்ற அதேநாளில் நம் நிதியமைச்சர் அவர்கள், அவை முன்னவர் அவர்கள் சென்னையில் இருந்தவாறே ஒரு அறிக்கை விடுத்தார். காஞ்சி, மதுரை, திருச்சி, சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்களுக்கு நீதி விசாரணை நடத்தப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சார்பாக நான் அறிவிக்கிறேன் என்று அவர்கள் அறிவித்து இது எல்லா ஏடுகளிலும் வெளிவந்து இந்து பத்திரிகையில்கூட முதல் பக்கத்தில் கட்டம் கட்டி போடப்பட்டு அதற்குப் பிறகு நிதி அமைச்சர் அறிவித்ததற்கு மாறாக நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு நியாயமானதா அல்லவா என்று அறிய மாத்திரம்தான் கமிஷன் என்று அறிவித்தார்கள்.

எனவே முதலமைச்சர் அவர்கள் சார்பாக நிதி அமைச்சர் அவர்கள், அறிவித்தது எல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதா அல்லவா என்ற ஐயப்பாடு ஏற்பட்டுள்ளது. இன்னும் விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால், இந்த நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில், முதலமைச்சர் இல்லாத நேரத்தில் முதலமைச்சர் சார்பாக இரண்டு மூன்று அறிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம்கூட முதலமைச்சர் சார்பாக கொடுக்கப்பட்ட அறிக்கைகள் தானா ? ஏற்கனவே நிதியமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லி, மதுரை, திருச்சி, காஞ்சி, சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திற்கு விசாரணை நடைபெறும் என்று சொல்ல, பின்னால் சென்னைக்கு மட்டும்தான் என்று முதலமைச்சர் அதற்கு முரண்பட்ட கருத்தை அறிவித்தார்கள்.

இவ்விதமான முரண்பட்ட கருத்துக்குப் பிறகு கமிஷன் அமைக்கப்பட்டு விசாரணை நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த ஆய்வு அறிக்கையில் போலீசார் செய்தது நியாயம் என்று குறிப்புகள் இருப்பது

உள்ளபடியே ஆட்சேபிக்கத்தக்கது என்பதை திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக இந்த அவையில் எடுத்துக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னென்ன நடைபெற்றது, ஹால்டா சமீபம் என்கின்ற விவரத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை, அவ்விதம் செல்ல வேண்டாம் என்று இருந்தாலும், ஓரளவு செல்லலாம் என்ற அளவில் - ஆழமாக அல்ல - கொஞ்சம் தாழ்வாரத்தில் இருந்து அந்தச் சம்பவங்களை எல்லாம் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு காலமாகிவிட்ட, நாம் எல்லாம் நமது கண்ணீரை காணிக்கையாக்கிக் கொண்டிருக்கிற - பெரியாருடைய அருமைத் துணைவியார், அன்னை மணியம்மையார் காவல்துறை அதிகாரி களால் எந்த அளவுக்கு அங்கு இழிவுபடுத்தப்பட்டார்கள், எந்த அளவுக்கு அதிகாரிகளால் மரியாதைக் குறைவாக பேசப்பட்டார்கள் என்பதையெல்லாம் நாம் மறந்துவிடக் கூடாது.

சோமசுந்தரம் கமிஷனில் என்ன தீர்ப்பு வருகிறதோ தெரியாது, அது வேறு விஷயம். இந்த நாட்டில் ஒரு பெண்மணி, அதுவும் ஒரு கட்சியினுடைய தலைவர், இன்னும் சிறப்பாகச் சொல்லப்போனால் நாம் எல்லாம் பாராட்டியும் வாழ்த்தியும் வருகின்ற பெரியார் அவர்களுடைய துணைவியாரை மரியாதை இல்லாமல் பேசுகின்ற அளவுக்கு ஒரு சில காவல்துறை அதிகாரிகள் ஈடுபட்டார்கள் என்பதை பலரும் அறிவார்கள். அவர்கள் இதையெல்லாம் விசாரணை கமிஷன் முன் வாக்குமூலமாகக் கொடுத்திருக்கிறார்கள்; ஆனால் நேரடியாக சாட்சியாக வந்து சொல்ல முடியாமல் அவர்களை இயற்கை பிரித்துவிட்டது, ஆகவே நான் முதலமைச்சர் அவர்களை மெத்த பரிவோடு கேட்டுக்கொள்வது, இப்படிப்பட்ட அதிகாரிகள்மீது தனியாக விசாரணை வைத்து நடவடிக்கை எடுப்பார்களேயானால் நான் அவர்களை மெத்தவும் பாராட்டுவேன் மகிழ்ச்சியடைவேன் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சாராய வழக்குகளைப்பற்றி இங்கு விரிவாகப் பேசப்பட்டது. இங்கு ஆளும் கட்சி நண்பர்கள் வேண்டுமென்றே என்னை புண்படுத்த வேண்டும் என்ற ஆசையில் ஏதோ சர்வர் சுந்தரம் என்றும், சுந்தரம் என்றும் சுந்தர சாம்ராஜ்யம் என்றெல்லாம்

குறிப்பிட்டுப் பேசினார்கள். இதைக் கேட்டுக்கொள்வதற்கோ அல்லது அதைப்பற்றிப் பேசுவதற்கோ கொஞ்சமும் நான் கூச்சப்படவில்லை, நமது முதலமைச்சர் அவர்கள் கூட ஜனாதிபதி அவர்களிடம் கொடுத்த புகாரில்கூட மைலாப்பூர் சுந்தரம் என்பவர் என்னோடு நெருங்கிய தொடர்பு உடையவர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆனால் நான் கேள்விப்பட்டதை இதற்கு முதலாவது பொறுப்பு ஏற்றுக்கொண்டவர், சர்க்காரியா கமிஷன் முன்னால் வந்தபோது, சேலம் வக்கீல் சொன்னார், அவர் சொல்லக் கேட்டுத்தான் இதைச் சொன்னேன் என்று கமிஷன் முன்னால் சொன்னார்கள். ஆனால் நான் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த மைலாப்பூர் சுந்தரம் என்பவரை நான் சொல்வதை நம்பவேண்டும் - நான் இதுவரை பார்த்ததுகூட கிடையாது. மைலாப்பூர் சுந்தரம் என்பவர், கழக ஆட்சியால் 156 பேர்கள் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நேரத்தில் - இந்த 156 பேர்களில் ஒருவர். அதற்கு முன்பு இவரது சாராய கிடங்கில் சாராய பானைகள் இருந்தது ஆணையாளரால் - கமிஷனரால் கண்டுபிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார். நெருக்கடி காலத்தில் 156 பேர்கள் சாராயம் காய்ச்சி விற்பனை செய்பவர்கள் என்ற முறையில் கைது செய்யப்பட்டார்கள். போலீசார் இடத்தில் அப்படிப்பட்ட பட்டியலில் இருந்து அந்த பட்டியலின்படி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அதில் ஏழெட்டு பேர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். வேறு சில கட்சியைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். இப்படிக் கைது செய்யப்பட்ட 156 பேர்களில் இந்த மைலாப்பூர் சுந்தரம் என்பவரும் ஒருவர் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன், அதே நேரத்தில், நாயர், தாமஸ் என்ற இரண்டு பேர்கள் சிக்கிக்கொண்டார்கள் என்பதற்காக அன்றைக்கு மத்திய அரசில் இருந்த பிரமானந்த ரெட்டியார் அவர்களிடம் சென்று, அவர்களை விடுவிக்க வேண்டும் என்று கோரினார்கள்.

பிறகு பிருமானந்த ரெட்டி அவர்களை நான் டெல்லியிலே சந்தித்தபோது, 'சாராய வியாபாரிகளைக்கூட மிசாவின் அடிப்படையிலே நீங்கள் சிறையில் போடுகிறீர்களா' என்று கேட்டார்கள்.

சமூக விரோதச் செயல்களைச் செய்கின்றவர்களை மிசாவின் கீழ் சிறையிலே போடவேண்டுமென்று சொல்கிறீர்கள், பதுக்கல் பேர்வழிகளை, கடத்தல்காரர்களை இப்படிப்பட்ட சமூகவிரோதிகளை சிறையிலே போட வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதைப்போல்தான் உயிர்களை வார்னிஷ் மூலமும், சாராயம் மூலமும் கொன்று குவிக்கின்றவர்களை, சமூகவிரோதிகள் என்ற அடிப்படையில் ஏன் சிறையில் அடைக்கக்கூடாது என்று வாதிட்டேன். அப்போது அவர்கள் மௌனமாக இருந்து விட்டார்கள். நான் திரும்பிவந்த ஒரு வாரத்திற்கெல்லாம் டெல்லியிலே இருந்து மத்திய அரசிடமிருந்து மாநிலஅரசுக்கு ஒரு தாக்கீது வந்தது, அது இப்போதும் பைலிலே இருக்கும். இப்போது முதல் அமைச்சர் அவர்கள் வாங்கிப் பார்க்க வாய்ப்பிருக்கின்ற காரணத்தினால் பார்க்கலாம். என்ன உத்தரவு போட்டார்கள்? யாரோ 2, 3 பேர்களைக் காப்பாற்றுவதற்காக, பொதுவாக சாராயத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் யாராக இருந்தாலும் பெரிய சாராய வியாபாரியாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் இந்த மிசாவின் கீழ் அடங்கமாட்டார்கள். ஆகவே, அவர்கள் சமூக விரோதிகள் அல்ல என்கின்ற ஒரு நிலைமையை எடுத்துக்காட்டி அவர்களையெல்லாம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்ற உத்தரவை, இங்கே முன்பிருந்த மாநில அரசுக்கு, கழக அரசுக்கு மத்திய அரசிடமிருந்து வந்தது. அதற்குப் பிறகுதான் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

நான் பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடத்திலேகூட இதைப்பற்றி எடுத்துச் சொன்னேன். வாலாஜாவுக்குப் பக்கத்திலே இருக்கின்ற கிராமத்திலே உள்ளவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், யூனியன் சேர்மனாக இருக்கிறார், அவரும் இந்த மிசாவின்கீழே கைதுசெய்யப்பட்டிருக் கிறார், அவரும் திராவிடமுன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர் என்று இந்திரா காந்தி அம்மையாரிடத்திலே எடுத்துச் சொன்னேன் அதற்குப் பிறகும், யாரோ 2, 3, பேர்களைக் காப்பாற்ற இந்த 156 பேர்களை விடுதலை செய்ய வேண்டுமென்ற உத்தரவு வந்தது. இன்னமும் இந்த உத்தரவு மாநில சர்க்காரின் கோப்பிலே இருக்குமென்று நம்புகிறேன். ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் இந்த உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. நண்பர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, புகார் கொடுத்ததைப்பற்றி விளக்கம் சொன்னார்கள். நாங்கள் பல புகார்களைக் கொடுத்தோம். அதிலே மத்திய சர்க்கார் அல்லது சர்க்காரியா கமிஷன் அதிலே ஏற்றுக்கொள்ளக்கூடிய புகார்களை எடுத்துக்கொண்டு, மற்றவைகளை; ஆதாரமில்லாதவைகளை விட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள், அவர்கள் பூர்வாங்கமாக உள்ளவைகளை எடுத்துக்கொண்டு, எஞ்சியதை விட்டுவிட்டார்கள் என்று நேற்றைய முன்தினம் இந்தத் துறைபற்றிய விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது குறிப்பிட்டார்கள்; பிரைமா ஃபேஸி கேஸ் இல்லாதவற்றை விட்டுவிட்டார்கள். இருப்பவற்றை எடுத்துக்கொண்டார்கள் என்பதுதான் அதன் பொருள். நான் ஒன்றை எடுத்துக்காட்டாகச் சொல்ல விரும்புகிறேன், நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றையதினம் எதிர்க்கட்சியின் சார்பிலே தந்த புகாரில், திருவாரூர், தெற்கு வீதியிலே 94ம் எண் உள்ள வீடு பல லட்சக்கணக்கான ரூபாயில் கருணாநிதியால் கட்டப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. உள்ளபடியே இந்தக் குற்றச்சாட்டு பிரைமாஃபேஸி கேஸ் உள்ளதா என்று ஆராய்ந்து பார்த்திருப்பார்களேயானால், இங்கே அச்சடித்து கொடுக்கப்பட்ட புத்தகத்திலும் சரி, நான் அதற்கு இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு அளித்த பதிலிலும் சரி அந்த வீட்டினுடைய புகைப்படத்தை எடுத்து அனுப்பியிருக்கிறேன். ஒரு இடிந்துபோன வீடு அது.

இந்த வீட்டை தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பல நண்பர்கள் பார்த்திருக்கக்கூடும். இப்போது அடித்த புயலால்கூட 3 சுவர்கள் விழுந்துவிட்டன. அந்த வீட்டைக் கட்டவேண்டு மென்று நகராட்சி ஆணையருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன், ஆனால் பல லட்ச ரூபாய் போட்டு கட்டப்பட்ட பெரிய பங்களா என்றும் போடப்பட்டிருக்கிறது. இப்படி புகைப்படம் அனுப்பிய பிறகும் கூட, பதில் உரையை இந்த மாமன்றத்திலே இணைத்த பின்னரும், அவர்கள் இதிலே பிரைமாஃபேஸி கேஸ் இருக்கிறதா என்று உள்ளபடியே பார்த்திருக்க வேண்டும். ஆனால், ஒரு 28 குற்றச்சாட்டுகளை மட்டும் எடுத்து, இதை சர்க்காரியா விசாரிப்பதற்கு

ஆதாரம் இருக்கின்றது என்று சேர்த்திருக்க மாட்டார்கள். இதிலே பிரைமாஃபேஸி கேஸ் இருக்கிறதா என்று பார்த்திருந்தால் இதை இணைத்திருக்க மாட்டார்கள். காரணம், வீட்டின் புகைப்படம் இருக்கிறது இடிந்து விழுந்த வீடு. பங்களா அல்ல. பல லட்சக்கணக்கான ரூபாய்கள் போட்டு கட்டப்பட்ட வீடல்ல என்று விவரங்களையெல்லாம் பூர்வாங்க விசாரணையில், பிரைமா ஃபேஸியில் வெளியிட்டிருக்ககூடும்.

ஆனால் அவசர அவசரமாக, கழக ஆட்சி கலைக்கப்பட்ட உடன், இந்த 54 குற்றச்சாட்டுகளில் அதிகமாக கருணாநிதியைச் சார்ந்த குற்றங்களை பொறுக்கி எடுக்கச் சொல்லி, அப்படி எடுக்கப்பட்ட 28 குற்றச்சாட்டுகள் மீது விசாரணை செய்தார்கள்.

உள்ளபடியே அதிலே உள்ள மொத்தக் குற்றச்சாட்டுகள் 54 ஆகும். எனவே, நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த 28 குற்றச்சாட்டுக்களின் மீது எந்தவிதமான தீர்ப்பு வந்தாலும் சரி மீதம் இருக்கின்ற 26 குற்றச்சாட்டுகள் மீதும் அவைகளையும் விசாரிக்கின்ற வகையிலே, ஒரு விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அன்றையதினம் சொன்னீர்களாம் நாங்கள் பாரபட்சம் இல்லாமல் எந்தக் கட்சியில் இருந்தாலும் நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்தக் கட்சியில் இருந்தாலும் அல்லது நடவடிக்கைக்குப் பயந்து தங்கள் கட்சிக்கு வந்தாலும் யாரையும் விடாமல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே. மிச்சமுள்ள 26 குற்றச்சாட்டுகளுக்குத் தாங்களே ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டுமென்று மிகுந்த பணிவன்போடு நேச உணர்வோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

28 குற்றச்சாட்டுகளைப் பற்றி விரைவில் அறிக்கை வர இருக்கிறது. அவைகளைப்பற்றி மாநில அரசோ, மத்திய சர்க்காரோ நடவடிக்கை எடுக்க இருக்கிறது. அவைகளை எப்படித் தாங்குவது, சந்திப்பது என்பதைப்பற்றி நாங்கள், தொடர்புடையவர்கள், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அவைகளைச் சமாளிக்க இருக்கிறோம். அது வேறு விவகாரம்.

ஆனால் 54 குற்றச்சாட்டுகளில் 28 குற்றச்சாட்டுகள் மாத்திரம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. 26 குற்றச்சாட்டுகள்

விடப்பட்டிருக்கின்றன. நாம் தொடர்ந்து வலியுறுத்திச் சொல்லி வருவது - முதலமைச்சர் அவர்கள் விடப்பட்ட 26 குற்றச்சாட்டுகளின் பேரிலும் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்னொரு கமிஷன்கூடப் போடப்பட்டிருக்கிறது - கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் என்று போடப்பட்டிருக்கிறது. முன்பே அறிவித்தார்கள் - அதற்கேற்ப போடப்பட்டிருக்கிறது. அறிவித்த நேரத்திலேயே நான் அறிக்கைகள் மூலமாகச் சொன்னேன். 1972-ல் இருந்து கணக்கெடுத்திருக்கிறீர்கள். 1969-ல் இருந்து நான் முதலமைச்சராக வந்த அந்த 1969-ல் இருந்து கணக்கெடுங்கள் என்றேன். எனக்குள்ள நிலை எல்லாம் 1972-ல் இருந்து நீங்கள் போட்ட பிறகு அதற்குப் பிறகு நீங்களே ஆட்சிக்கு வந்து அல்லது வேறு கட்சி ஆட்சிக்கு வந்து மீண்டும் 1969-ல் இருந்து 1972 வரை விசாரணை என்று சொல்லி என்னைச் சித்திரவதை செய்துகொண்டிருப்பதை நான் விரும்பவில்லை. 1972 முதல் 1975 வரை விசாரணை முடிந்தபிறகு - காங்கிரஸ் கட்சியோ, ஜனதா கட்சியோ, கம்யூனிஸ்டு கட்சியோ ஆட்சிக்கு வந்து அப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர், 'மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் மூன்று வருஷத்தை விட்டுவிட்டார்கள்; ஆகவே, 1969-ல் இருந்து 1972-ம் ஆண்டு வரை விசாரணை செய்ய கமிஷன் போடுகிறோம் என்று போட ஆரம்பித்தால் விசாரணைக் கமிஷன் வேலையே சரியாக இருக்கும். அடிக்கிற அடியை ஒரே தடவையாக அடித்து முடித்துவிடுங்கள்; பல தடவையாக அடித்துக்கொண்டிருக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1972-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது சில குறைபாடுகளைச் சொல்லிவிட்டு வெளியேறவேண்டிய சூழ்நிலை உங்களுக்கு ஏற்பட்டது. 1972-ல் வெளியேற வேண்டிய சூழ்நிலை உங்களுக்கு ஏற்பட்டபோது '1969 முதல் 1972 வரை தவறுகள் நடந்தன; எனவே வெளியேறினேன்' என்றுதான் காரணம் சொன்னீர்கள், தவறுகள் நடந்தன என்று சொல்லப்பட்ட காலத்தை ஏன் விட்டுவிட்டீர்கள் என்பதுதான் என்னுடைய வாதம். எனவே, இந்த நாயுடு கமிஷனுக்கு - காலத்தை விரிவாக்கி 1969-ல் இருந்து என்றைக்கு இந்தப் பாவி முதலமைச்சராக வந்து உட்கார்ந்தானோ அதிலிருந்து, நீங்கள் நிர்ணயித்திருக்கிற 1975ஆம் ஆண்டு வரை அந்தக் கமிஷன் ஆராய வேண்டுமென்று நியமிப்பதுதான் முறையானதாகவும், பொருத்தமானதாகவும், பாரபட்சமற்றதாகவும்

இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு பிரச்சினைகளைப்பற்றியும் நம்முடைய எதிர்க்கட்சியில் பல நண்பர்களும், தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைக் காப்பாற்ற காவல் துறையினர் இருக்கிறார்கள். நண்பர் சுப்பு அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல் ஆளும் கட்சி போலீசாருடைய நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்க முயல்வதும், எதிர்க்கட்சி குறைகளைச் சொல்வதும் மாறி மாறி வருகிற இயல்புகள்; நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கிற நேரத்தில் அப்படிப்பட்ட அதிகாரிகளுடைய கூற்றுக்களைக் கேட்டு அவர்களுக்காக நியாயங்களைக் கற்பிக்க முயன்றிருக்கலாம். அது தவறாக இருக்குமானால் இதே அவையில் பல நேரங்களில் அந்தத் தவறுகள் எங்களுடைய ஆட்சியில் திருத்திக்கொள்ளப்பட்டு, பிறகு விசாரணைக் கமிஷன்கள் போடப்பட்டிருக்கின்றன.

எதற்கெடுத்தாலும் கிளைவ் ஹாஸ்டல், உதயகுமார் என்று திருப்பித் திருப்பிப் பேசிக்கொண்டிருப்பதும், மதுரையில் மாணவர்களைப் போய் கருணாநிதி பார்த்தார் மாணவர்களைத் தூண்டிவிடச் சென்றார் என்று சொல்வதும் எவ்வளவு பொருத்தமுடையது? அன்றைக்கு கிளைவ் ஹாஸ்டலில் போய் இன்றைய முதலமைச்சர் அவர்களோ, நிதியமைச்சர் அவர்களோ சென்று பார்த்திருந்தால் தூண்டிவிடச் சென்றார்கள் என்று சொல்வது பொருந்துமா? அதுவும் பொருந்தாது, இதுவும் பொருந்தாது, இது பொருந்தாது என்றால் அதுவும் பொருந்தாது.

ஏற்படுகிற குறைபாடுகளை எதிர்க்கட்சியிடத்தில்தான் சொல்வார்கள். நிதியமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள் – தமிழ் நாட்டில் எந்த மூலை முடுக்கிலும், இண்டு இடுக்கிலும் எது நடந்தாலும் எதிர்க்கட்சித் தலைவருக்குத்தான் முதல் தகவல் கிடைக்கிறது. இது எப்படி? என்றார். நல்லவேளை அந்தத் தவறை இந்தத் தடவை செய்யாமல் எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள்.

நெல்லை ஜெபமணி அவர்கள் செங்கத்தில் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி சொன்னார்கள். ஒரு அரிசன் வீடு செங்கம்

சட்டமன்ற உறுப்பினர் துணையோடு, அவரே நேரடியாக நின்று இடிக்கப்பட்டது என்பதைப்பற்றிப் பேசினார். அது குற்றமா குற்றம் அல்லவா என்பது எனக்குத் தெரியாது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அதைப்பற்றி புகார்களை அனுப்பியிருப்பதாகத் தகவல், ஒரு அரிசன வீடு இந்த அளவுக்குப் படுமோசமாக இடிக்கப்பட்டிருக்கிறது.

அவர் எழுதிய கடிதத்தில் செங்கம் தாலுகா கரிமலப்பட்டி கிராமத்தில் சர்வே எண் 65-ல் மூன்று ஏக்கர் பஞ்சம தரிசு நிலம் பட்டா கொடுக்கப்பட்டது. அந்த நிலத்தில் ஒரு பகுதியில் வீடுகட்டிக்கொண்டு பயிர் செய்துவருகிறேன். எனக்கு எட்டு குழந்தைகள் இருக்கின்றன. 26-2-78 அன்று செங்கம் சட்டமன்ற உறுப்பினர் சில அடியாட்களோடு வந்து வீட்டை இடித்துவிட்டார் என்று சொல்லியிருக்கிறார்.

இடிபட்ட வீட்டினுடைய போட்டோவை அனுப்பியிருக் கிறார், அதைப்பற்றிய குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். இது எப்படி நடந்தது என்று விசாரித்து ஏற்ற நடவடிக்கை எடுக்கக்கூடியவர் நம்முடைய முதலமைச்சர் என்பதால் நான் அந்தப் படத்தையும் அரிசனத் தோழர் எழுதியிருக்கிற கடிதத்தையும் அவரிடத்திலே தருகிறேன்.

நண்பர் திரு. மாரிமுத்து ஆனாலும் சரி, திரு உமாநாத் ஆனாலும் சரி திரு ஜேம்ஸ் ஆனாலும் சரி, மற்றும் பேசிய தலைவர்கள் ஆனாலும் சரி அத்தனைபேர்களும் சட்டம் ஒழுங்கு அமைதியை காப்பாற்ற வேண்டும் என்ற பெயரால் ஆளுங் கட்சிக்காரர்கள் சட்டத்தை கையில் எடுத்துக்கொள்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

என். ஜி. ஓ. வினர் போராட்டமானாலும், பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டமானாலும், அவைக ளெல்லாம் நடைபெற்றபோது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மிகுந்த முனைப்போடு ஈடுபட்டு வேலை நிறுத்தம் செய்தவர்கள் மீது தாக்குதலில் ஈடுபட்டார்கள். அதை போலீசார் தடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலை இருப்பதால் என்.ஜி.ஓ.க்களால் பிடிக்கப்பட்ட ஒரு கார் போலி நம்பரோடு இருந்திருக்கிறது. அதிலே பயங்கரமான ஆயுதங்களும் சோடா

பாட்டில்களும் இருந்தன என்று பத்திரிகைகளிலே செய்தி வந்தது. ஆனால் மறுநாள் அந்தக் கார் சொந்தக்காரரிடம் தரப்பட்டது. என்று கமிஷனர் அறிக்கைவிடுகிறார். அந்தக் காரின் சொந்தக்காரர் யார் என்று சொல்லப்படவில்லை.

இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் 9ஆம் தேதி என்.ஜி.ஓ. வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. ஆனால் திட்டமிட்டு எப்படிக் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதற்காகச் சொல்கிறேன். அன்று காலை சென்னை கோபாலபுரத்தில் உள்ள கார்ப்பரேஷன் திடலிலே ஆளுங்கட்சி சார்புடைய தொண்டர்களின் அணிவகுப்பு நடைபெறுகிறது. கிட்டத்தட்ட ஆயிரம் பேர் ஆடவரும், பெண்டிருமாக அணிவகுப்பில் கலந்துகொண்டார்கள். அமைச்சர்கள்கூட அடிக்கடி இதுபோன்ற அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

8 ஆம் தேதி ஆளுங்கட்சிப் பத்திரிகையில் அமைப்பாளர் அறிக்கை விடுகிறார், '9 ஆம் தேதி காலையில் அனைவரும் அணிவகுப்புக்கு வாருங்கள்' என்று வந்தவர்களைத் திரட்டிக் கொண்டு வேலை கொடு, வேலை கொடு' என்று ஊர்வலம் நடத்தப்படுகிறது. தேனாம்பேட்டையில் மோதல் ஏற்படுகிறது. ஸ்டான்லி மருத்துவமனையிலும் பொது மருத்துவமனையிலும் மோதல் ஏற்படுகிறது. போலீசார் தர்மசங்கடமான சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள்.

இன்னும் இதற்கு ஆதாரம் சொல்ல வேண்டுமானால் கருப்பசாமி, பொதுச் செயலாளர், அகில இந்திய அண்ணா தி.மு.க., பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், கோவை மாவட்டம் என்கிற முகவரியிலிருந்து அந்த கருப்பசாமி யாருக்குக் கடிதம் எழுதுகிறார் என்றால் செயலாளர் எம்.ஜி.ஆர். மன்றக் கிளை (அகில இந்திய அண்ணா தி. மு. க. கிளை) கோவை, என்பவருக்கு என்ன எழுதுகிறார் என்றால் 'அன்புடையீர், வணக்கம். 9-3-78 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் டவுன்ஹால் மைதானத்திலே இருந்து அகில இந்திய அண்ணா தி. மு. க. தொழிற்சங்கம் எம். ஜி. ஆர். மன்றம், துணை மன்றம் மற்றும்

வேலையில்லாமல் இருக்கும் வேலையில்லாத பட்டதாரிகள், படித்த இளைஞர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் ஊர்வலத்திற்கு கடல் அலையென, கொடி இல்லாமல் வந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அன்பன், எ. கருப்பசாமி.' இப்படிக் கடிதம் எழுதுகிறார்.

நான் கேட்கிறேன். இது திட்டமிட்டு என். ஜி. ஓ. க்களை அடக்குவதற்காக செய்யப்பட்ட காரியமா அல்லவா ? இதை மறுத்தால் இந்த வேலையில்லாப் பிரச்னை என். ஜி. ஓ. க்கள் வேலைக்கு போனதுமே முடிவடைந்துவிட்டதா ? என். ஜி. ஓ. க்கள் வேலைக்குப் போகாமல் இருந்திருந்தால் அந்தப் பிரச்னை முடிவடைந்திருக்கும், என். ஜி. ஓ.க்கள் வேலைக்குப் போய்விட்டார்கள். வேலையில்லாதவர்கள் பிரச்னை உடனடியாக அடங்கிவிட்டதா ? அதற்குப் பிறகும் நாங்கள் வேலையில்லாமல் தவிக்கிறோம். எங்களுக்கு வேலை கொடு என்று கோரி ஊர்வலத்தை நடத்தியிருப்பார்களானால் உள்ளபடியே வேலையில்லாத பட்டதாரிகள்தான் ஊர்வலத்தை நடத்தினார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியும். ஆனால் வேலையில்லாதவர்கள் என்ற பெயரால், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் இறங்கி வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு எதிராக கொடி உயர்த்துவதும் கொடி தூக்குவதும் நல்லதல்ல.

நடந்தது நடந்துவிட்டது. இனிமேலாவது நடக்காமல் இருப்பதற்காகத்தான் நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள் கிறேன். அவர் சொல்லி அவருடைய கட்சியைக் கட்டுப்படுத்தக் கூடிய ஆற்றல் வாய்ந்தவர் என்ற காரணத்தால் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தை எல்லா மக்களும் எடுத்துக் கொள்கிற சூழ்நிலையை நாம் உருவாக்கிவிடக்கூடாது. சட்டம், ஒழுங்கு அமைதியைப் பாதுகாக்கின்ற அந்தக் கடமையை காவல் துறையினர்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படிச் சொல்லுகிற நேரத்தில் காவல் துறையினர் தங்கள் இஷ்டத்திற்கு அதை எடுத்துக்கொள்ளலாமா என்றால் வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார் 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதைப்போல கையை வேகமாக ஓங்கினாலும் கூட அடிக்கும் பொழுது மெதுவாகத் தட்ட வேண்டும். கொஞ்சம் வேகமாகக் காவல் துறையினர் தங்களுடைய சீற்றத்தைக் காட்டினாலும்கூட அதே காவல்துறையினர் - ஏற்கனவே ஒரு படமே வெளியிட்டார்கள் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 'உங்கள் நண்பன்' என்ற படமே எடுத்து வெளியிட்டார்கள், - அப்படிப்பட்ட உங்கள் நண்பனாக இருக்க விரும்புகிறார்கள், அவர்கள் எப்பொழுதும் மக்களுடைய நண்பனாக இருக்க வேண்டும்.

ஆளுங்கட்சியாக இருக்கும் நேரத்திலேயும் சரி, எதிர்க்கட்சியாக இருக்கும் நேரத்திலேயும் சரி, காவல் துறையினரின் கடமை உணர்வை நான் மறந்துவிடக்கூடியவன் அல்ல, அவர்களுக்கு இருக்கின்ற இன்னல்களை மறந்துவிடக் கூடியவன் அல்ல. அப்படிப்பட்ட பெரும் காவல் துறையைப் பெரும் பொறுப்பேற்று நடத்திக்கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே எடுத்துச்சொன்ன குறைபாடுகளைக் களைவதற்கேற்ற வகையிலே காவல்துறையிலே திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

உரை : 13 **நாள் : 29.07.1980**

கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம், காவல் துறை, தீயணைப்பு, பொதுப் பணிகள், கட்டிடங்கள் முதலிய 7 மானியங் களும் அதற்கான கோரிக்கைகளும் இங்கே வைக்கப்பட்டு சுமார் 115 கோடி ரூபாய் அதற்கென கோரப்பட்ட அந்த மானியங்களின் மீது எதிர்க்கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் தந்துள்ள 194 வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

முதலிலே காவல் துறையைப்பற்றி நாம் கவனிப்போமே யானால் இன்றைக்கு இந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் உட்பட மொத்தம் காவல் துறையிலே இருக்கின்றவர்களின் எண்ணிக்கை 48,892 பேர் என்று நம்முடைய முதலமைச்சரவர்கள் கையெழுத்திட்டு இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதிலே காவலர்களுடைய எண்ணிக்கை மாத்திரம் 1979-80ஆம் ஆண்டு ஆய்வுரை அறிக்கையின்படி 37,989 பேர் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நான் இந்த அவையின் கவனத்திற்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1975-76ஆம் ஆண்டில் வைக்கப்பட்டுள்ள ஆய்வுரை அறிக்கையின்படி, அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் 36,642 பேர்கள் காவலர்கள் மாத்திரம் இருந்திருக்கிறார்கள். அதாவது ஃபர்ஸ்ட் கிரேட், செகண்ட் கிரேட் காவலர்கள் மாத்திரம் 36,642 பேர் இருந்திருக்கிறார்கள். ஆனால் மூன்றாண்டுக் காலத்திற்கு மேலாக நடைபெறுகின்ற இந்த ஆட்சியில் ஃபர்ஸ்ட் கிரேட், செக்கண்ட் கிரேட் என்கிற காவலர்களின் எண்ணிக்கை 1,347 பேர்

என்ற அளவிலேதான் உயர்ந்திருக்கின்றது. அதிலேகூட ஃபர்ஸ்ட் கிரேட் காவலர்கள் 765 பேர் என்ற அளவுக்கும் செக்கெண்ட் கிரேட் காவலர்கள் 582 பேர் என்ற அளவுக்கும் உயர்ந்திருப்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் நம்முடைய முதலமைச்சரவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் 10,000 காவலர்களைப் புதிதாக நியமிக்கப்போகிறேன் என்று அறிவித்தார்கள். ஆனால் ஆண்டுகள் 3 உருண்டோடிவிட்ட பிறகும் 1,347 பேர்கள்தான் அதிகப்படியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலேயும் செகண்ட் கிரேட் காவலர்கள் 582 பேர்கள்தான் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். அறிவிக்கப்பட்ட 10,000 எங்கே அளிக்கப்பட்ட நியமனங்களின் எண்ணிக்கையான 582 எங்கே என்பதை நான் நினைவுபடுத்துவதில் தவறில்லை.

ஆனால் ஒன்று, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இப்படி 10,000 பேர்கள் என்றும், 15,000 பேர்கள் என்றும் அறிவிக்காமலேயே ஏறத்தாழ 8,000 காவலர்கள் புதிதாக நியமனம் செய்யப்பெற்றார்கள் என்ற தகவலை இந்த மாமன்றத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அளிக்கப்பட்டுள்ள ஆய்வு உரையின் 12ஆம் பக்கத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு அளிக்கப்பட்டுள்ள ஆய்வு உரையில் 'குற்றங்களைத் துப்புத் துலக்குதல்' என்ற தலைப்பில் "குற்றப் பிரச்சினையைச் சீரிய முறையிலும் திறமையாகவும் சமாளிப்பதற்கு தமிழ்நாடு காவல் துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. தீர்த்துவைப்பது மிகக் கடினம் என்று வெளிப்படையாகத் தெரியவருகின்ற வழக்குகளும் பதிவு செய்யப்படுகின்றன. 1978இல் தண்டனையில் முடிந்த வழக்குகள், விசாரணை முடிவடையாத வழக்குகளின் சதவீதம் 47.2 ஆக இருக்க, 1979ஆம் ஆண்டு இது 47.6 சதவீதமாக சற்று உயர்ந்து 1980ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் நாள் வரை 40 சதவீதமாக உள்ளது." என்று குறிப்பிடப் பெற்றிருக்கிறது.

இதில் 1978-வது ஆண்டையும் 79-வது ஆண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழ் நாட்டிலேதான் சற்று இந்தக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலே உள்ள விகிதாசாரங்கள் உயர்ந்திருக்கிறது என்பதையும் இந்த இரண்டு ஆண்டுகளையும்

ஒப்பிட்டுப் பார்த்து, இங்கேகூட ஆளும் கட்சியினுடைய தோழமை கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும், தலைவர்களும் பேசுகின்றபோது, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குற்றங்கள் குறைந்திருக்கிறது என்றும் பாராட்டினார்கள்.

ஆனால் இந்த இரண்டு ஆண்டுகளையும் கணக்கிலே எடுத்துக்கொள்வதற்கு பதிலாக, கடந்த நான்கைந்து ஆண்டுகளை கணக்கிலே எடுத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால், நான் தருகிற புள்ளி விவரங்கள் உண்மையை நிரூபிக்கும் என்று நான் நம்புகிறேன்.

வழிப்பறி என்ற தலைப்பில் எடுத்துக்கொண்டால் –

1973ஆம் ஆண்டு	. .	13 வழிப்பறிகள்
1974ஆம் ஆண்டு	. .	17 வழிப்பறிகள்
1975ஆம் ஆண்டு	. .	130 வழிப்பறிகள்
1978ஆம் ஆண்டு	. .	192 வழிப்பறிகள்
1979ஆம் ஆண்டு	. .	254 வழிப்பறிகள்

என்கிற அளவிற்கு அந்த வழிப்பறி குற்றங்கள் உயர்ந்திருக்கின்றன.

கன்னக்கோல் களவு என்ற குற்றத்தினை எடுத்துப் பார்த்தால் –

1973ஆம் ஆண்டில்	. .	6,891
1974ஆம் ஆண்டில்	. .	7,717
1975இல் கழக ஆட்சிக் காலத்தில்	. .	7,387
1979இல் கழக ஆட்சிக் காலத்தில்.	. .	9,637

என்று உயர்ந்திருப்பதை பார்க்கலாம்.

"பெரிய திருட்டுகள் என்ற தலைப்பில்"

1973-ல்	. .	19,463
1974-ல்	. .	23,617
1975-ல்	. .	22,537
1979-ல்	. .	25,406

என்ற அளவிற்கு பெரிய திருட்டுகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.

"சிறிய திருட்டுகள்" என்ற தலைப்பில் -

1973ஆம் ஆண்டு	. .	634
1974ஆம் ஆண்டு	. .	497
1975ஆம் ஆண்டு	. .	1,510
1978-ல்	. .	2,736
1979-ல்	. .	2,969

என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது.

குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கையினுடைய அடிப்படையில் புலனாய்வு செய்த வழக்குகள் எத்தனை சதவீதம் என்று கணக்கிட்டு ஒப்பிட்டு பார்க்கையில் -

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் -

1973ஆம் ஆண்டு	. .	60 சதவீதம் என்றும்
1974ஆம் ஆண்டு	. .	58.1 சதவீதம் என்றும்
1975ஆம் ஆண்டு	. .	58.9 சதவீதம் என்றும்

இருந்தநிலை, இப்பொழுது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் -

1973-ல்	. .	30.1 சதவீதமாகவும்
1979-ல்	. .	26 சதவீதமாகவும்

குறைந்துள்ளது.

கடமை அல்லது திறமை குறைந்திருக்கிறது. இது குற்றங்களை குறித்துள்ள விகிதாசாரமல்ல. நான் முன்பே சொன்னபடி, குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கையில் அடிப்படையில், புலனாய்வு செய்த வழக்குகளின் விகிதாசாரம் எத்தனை சதவீதம் என்ற கணக்கை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கழக ஆட்சிக்காலத்தில்

58.9 சதவீதமாக இருந்த நிலை மாறி 26 சதவீதம் என்கிற அளவிற்கு காவல் துறையினுடைய கடமை உணர்வோ, அல்லது திறமையோ குறைந்துள்ளது என்கிற விகிதாசாரத்தைத்தான் இது காட்டுகிறது.

அடுத்து, தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகள், விசாரணை நடைபெறுகிற வழக்குகள் எண்ணிக்கையில், புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகள் எவ்வளவு சதவீதம் என்ற கணக்கை எடுத்துக்கொண்டால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1973ஆம் ஆண்டு 72.9 சதவீதம் என்றும், 1974-ல் 72.9 சதவீதம் என்றும், 1975-ல் 73.1 சதவீதம் என்றும் இருந்த நிலை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1978ஆம் ஆண்டில் 47.2 சதவீதம் என்றும் 1979-ல் 47.6 சதவீதம் என்றும் குறைந்திருக்கிறது. இதுவும் காவலர்களுடைய கடமையுணர்ச்சியோ அல்லது திறமையோ குறைந்துள்ள விகிதாசாரத்தைக் காட்டுகிற கணக்கே தவிர வேறு அல்ல என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருட்டுச் சொத்துக்கள் மீட்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று பார்த்தால் விகிதாசார அடிப்படையில் 1973ஆம் ஆண்டு 49.7 சதவீதம், 1974-ல் 56.7 சதவீதம், 1975-ல் 56 சதவீதம், 1978-ல் 41.2 சதவீதம், 1979-ல் 41.9 சதவீதம் என்றளவிற்கு திருட்டுச் சொத்துக்கள் மீட்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதை நான் இந்த அவையின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் அடிக்கடி ஆங்கில ஆய்வுரைக்கும் தமிழ் ஆய்வுரைக்கும் இடையே வேறுபாடுகள் வந்துகொண்டேயிருக்கின்றன. அதை நானும் சரி, எதிர்க்கட்சி துணைத்தலைவர் பேராசிரியர் அவர்களும் சரி பலமுறை எடுத்துக்காட்டியும்கூட ஏனோ அதிகாரிகள் தங்களை திருத்திக்கொள்ளத் தயாராகவில்லை. இங்கே கொடுத்துள்ள ஆய்வுரையில் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ளதில் எட்டாவது பக்கத்தில் 1979ஆம் ஆண்டு சொத்து குறித்துப் பதிவான குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 39,571 என்றுள்ளது. ஆனால் தமிழில் கொடுக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் 38,671 என்றுள்ளது. இப்படி ஆயிரம் குற்ற வழக்குகளை ஒரேயடியாக ஆங்கிலத்திலிருந்து

தமிழுக்கு மாறும்போது விழுங்கிவிடலாமா, இது முறைதானா என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைப் பார்த்து கேட்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆயிரம் வழக்குகள் வித்தியாசம் ஆங்கில ஆய்வுரைக்கும் தமிழ் ஆய்வுரைக்கும் இடையே, எப்படி வந்தது என்பதற்கு என்ன காரணம் சொன்னாலும் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க இயலாது. எனவே இப்படிப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டாக வேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆய்வுரையில் இருப்பதைச் சொல்கிறேனே தவிர நானாக இங்கே கொகுத்துச் சொல்வதல்ல. ஆய்வுரையில் வைக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்கள் குறித்து நான் எல்லாவற்றையும் இங்கே சொல்வதற்கு நேரம் இல்லாவிட்டாலும் சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த 1979-80ஆம் ஆண்டு மாத்திரம் எவ்வளவு வகுப்புக் கலவரங்கள் அல்லது ஆய்வுரையில் குறிப்பிட்டிருப்பது போல் இனக் கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன என்றால் நீலகிரி மாவட்டத்தில் 5-1-1979இல் படகர்களுக்கும் படகர்கள் அல்லாத வகுப்புகளைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தில் மூன்று படகர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 45 படகர்களும், 22 படகர்கள் அல்லாதவர்களும் படுகாயமுற்றதாக - ஆய்வுரையில் தரப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை என்ற இடத்தில் - இந்த ஆய்வுரையில் உள்ளபடி - முகமதியர்களுக்கும் ஐயப்ப பக்தர்களுக்கும் இடையே பெருத்த கலவரம் மூண்டது. 10-1-1979 அன்று இங்கே பேசிய முஸ்லிம் லீக் உறுப்பினர் அவர்கள், இஸ்லாமியர்கள் என்று இருக்கவேண்டும் அல்லது முஸ்லிம் என்றிருக்கவேண்டும், அப்படியல்லாது முகமதியர்கள் என்று பெயர் மாற்றுவதாக இருந்தால் பல்வேறு குழப்பங்கள் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அதையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே 1979ஆம் ஆண்டு சூன் திங்கள் பல மோதல்கள் ஏற்பட்டன. காவல் துறையினர் நான்குமுறை

துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள். தொடர்ந்து நடைபெற்ற போராட்டத்தில் 1979ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் தேதி இரவில் கலவரம், தீவைப்பு, கொலை என்றளவிற்கு சென்று முடிந்தது. இரண்டு முஸ்லிம்கள் இறந்தார்கள். காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் இருவர் இறந்தார்கள். முஸ்லிம் ஒருவர் வீசிய நாட்டு வெடிகுண்டு காரணமாக இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். இதுவும் இந்த அறிக்கையில் காணப்படுகிற கொடுமையான செய்தி.

முகவை மாவட்டத்தில் 1979ஆம் ஆண்டு அரிஜனங் களுக்கும் தேவர்களுக்கும் இடையே ஜாதிக் கலவரம் ஏற்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மறைந்த தேவர் திருமகனார் பெயரை சூட்டலாம் என்று அரசு கருதியபோது அரிஜனங்கள் டாக்டர் அம்பேத்கார் அல்லது இமானுவேல் பெயரை சூட்ட விரும்பி அதன் காரணமாக இந்த கலவரம் ஏற்பட்டது என்று இந்த ஆய்வுரையில் அரசாங்கச் சார்பில் தரப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சி துணைத்தலைவர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னதுபோல், உஞ்சணையில் 1979ஆம் ஆண்டு சூன் 28ஆம் தேதி உஞ்சணை கிராமத்தைச் சேர்ந்த அரிஜனங்கள் அல்லாதாருக்கும் அரிஜனங்களுக்கும் இடையே கலவரம் மூண்டு 18 அரிஜனங்களின் வீடுகள் தீக்கிரையாகியது.

ஐந்து அரிசனங்கள் இறந்தார்கள். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். நான் ஆய்வறிக்கையிலே தரப்பட்ட பல விவரங்களை இங்கே விட்டுவிட்டு, 5, 6 சம்பவங்களை மாத்திரம் இங்கே குறிப்பிட்டுக் காட்டினேன்.

இங்கே ஒன்றைப் பார்க்க வேண்டும். உயர் ஜாதிக்காரர்கள், அதற்கடுத்த நிலையிலே உள்ள ஜாதிக்காரர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் என்று பிரிக்கப் படுகின்றபோது அல்லது மதவாதப்படி, புராணீகர் வாதப்படி காலிலே பிறந்தவர்கள், தோளிலே பிறந்தவர்கள், தொடையிலே பிறந்தவர்கள், தலையிலே பிறந்தவர்கள் என்று சொல்லப்பட்டு, பிரிக்கப்பட்டிருக்கின்றனர். வர்ணாசிரம தர்மப்படி இன்றைக்கு தலையிலே பிறந்த உயர்ஜாதிக்காரர்களுக்கும், காலிலே

பிறந்தவர்களுக்கும் சண்டை இல்லை. அதைப்போலவே தோளிலே பிறந்தவர்களுக்கும் சண்டை இல்லை. அதைப் போலவே, தொடையிலே பிறந்த உயர்ஜாதிக்காரர்களுக்கும், காலிலே பிறந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் சண்டை இல்லை, இவ்வளவு சம்பவங்களை கோர்த்து எடுத்து பார்ப்போமேயானால், இந்தத் தகராறுகள் எல்லாம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையிலேதான் நடைபெற்று வருகின்றன. எனவேதான் சமுதாயத்திலே ஒரு பெரிய மறுமலர்ச்சி ஏற்படுத்த, இப்படி பல்வேறு வருணங்களை, ஜாதிகளைப் பிரித்துவைத்த உயர்ந்த ஜாதிக்காரர்கள் இன்றைக்கு இதுபோன்ற அமளிகளிலே ஈடுபடாவிட்டாலும், அவர்கள் என்றைக்கோ ஊன்றிய இந்த வகுப்புவாத விஷவித்து இன்றைக்கு கடுமையாக வேலை செய்வதன் காரணத்தினால், ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட நிலையிலே இருக்கின்ற சமுதாய மக்களும், தாழ்த்தப்பட்ட நிலையிலே இருக்கின்ற மக்களும்தான் தங்கள் கைகளிலே வேல் ஏந்தி, வாள் ஏந்தி, கத்தி ஏந்தி, கட்டாரி ஏந்தி, வீடுகளைக் கொளுத்தவும், ஆட்களைக் கொல்லவும், ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வதன் மூலம் ரத்தம் சிந்தக்கூடிய ஒரு சூழ்நிலை இன்றைக்குப் பரவலாக இந்திய தரணி முழுவதும், குறிப்பாக, தமிழ் நாட்டிலே பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகின்றது, எனவே, பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் மோதிக்கொள்கிறார்கள். இருவரும் பிற்படுத்தப்பட்டவர்கள். பூராணீகர் கருத்துப்படி, இருவரும் காலிலே பிறந்தவர்கள், ஒரு கால் இன்னொரு காலை உதைத்துக்கொண்டு, ஒருவருக்கொருவர் சண்டை இடுகின்ற சங்கடமான, கொடூரமான சூழ்நிலை இருக்கிறது. இதில் அரசினை மாத்திரம் குற்றஞ்சாட்டிக் கூறிவிடமாட்டேன். இதற்கு அரசாங்கத்தை நடத்துகின்றவர்கள் மாத்திரம் அல்லாமல். தமிழகத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சியைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களுக்கும், எல்லா கட்சிகளையும் சார்ந்த தலைவர்களுக்கும் பொறுப்புண்டு; மிகப் பெரிய கடமை இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை மீண்டும் ஏற்றுக்கொண்டு. பொறுப்புக்கு வந்த இந்த இரண்டு மாத

காலத்தில், ஜூன், ஜூலை ஆகிய இந்த இரண்டு மாத காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை மாத்திரம் நான் இரண்டு இரண்டு வரிகளிலே தொகுத்துக்கூற விரும்புகிறேன். ஆய்வறிக்கையிலே இடம் பெறாத காரணத்தினால், அரசுக்கும் பயன்தரும், மக்களுடைய கவனத்திற்கும் வரும். இனிமேலாவது காவல் துறையினர் கொஞ்சம் கண்காணிப்பாக, விழிப்புணர்ச்சியோடு செயல்படுவதற்கு இது பயன்படும் என்ற நல்ல நோக்கத்தோடு, இவைகளை நான் இங்கே தொகுத்துக்கூற விரும்புகிறேன்.

பொன்னேரி அருகில் அனுப்பம்பட்டு பெரிய காரணியைச் சேர்ந்த ஆனந்தன் படுகொலை; இது ஒரு செய்தி, புதுவைக்கு அருகில் பண்டசோழநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த வத்சலா, ராணி என்ற அரிசன பெண்களைத் தூக்கிப்போய் கற்பழிப்பு, ஆலங்குளம் அருகே அகரத்தைச் சேர்ந்த உப்பிலித் தேவர், சுடலையாண்டிப் பிள்ளை, பிச்சைக்கண்ணுத் தேவர் ஆகியோர் வெட்டி கொலை கொச்சின் எக்ஸ்பிரஸ் வண்டியிலே வந்துகொண்டிருந்த அதிகாரி ராமகிருஷ்ணனுடைய மனைவியின் தாலியை கோவைக்கு அருகே பறித்துக்கொண்டு சென்றார்கள். திருச்சி, தேவிமங்கலத்திலே ஆறுமுகம் என்பவர் மர்மச் சாவு. சென்னை, புதுவண்ணாரப்பேட்டையில் சுந்தரராஜன் என்பவர் கத்தியால் குத்தப்பட்டு கொலை. சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், போலீஸ் காலனியில் கத்தியைக் காட்டி மிரட்டி ஒரு பெண் கற்பழிப்பு. தஞ்சை மாவட்டத்திலே மாஞ்சேரி கிராமத்தில் சரோஜா என்ற ஒரு பெண்ணின் தலை துண்டிக்கப் பட்டு கொலை. கிருஷ்ணகிரி தாலுகா, வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த 16 வயது பேபி என்ற அரிசனப் பெண் கடத்தல், கோவை, பீளமேட்டில் தேவராஜ், விஜயகுமாரன் என்ற மாணவர்கள் கடத்தல், கோவை மாவட்டம், குறிச்சியில் ஆறுமுகம் அவர்கள் மகள் லட்சுமியை மயக்கி கற்பழித்தல். திருவான்மியூர் லட்சுமிபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணவேணி கத்தியால் குத்தப்பட்டு கொலை. பேரணாம்பட்டை அடுத்த பல்லவ குப்பத்தில் நந்தன் படுகொலை. சென்னை, எக்மோர் ஆஸ்பத்திரியில் தில்லைநாயகி என்ற பெண்ணின் குழந்தை திருடப்பட்ட சம்பவம்.

திருவல்லிக்கேணி கோஷா மருத்துவமனையில் இலஞ்சியம் என்பவருடைய பெண் குழந்தை திருடப்பட்ட சம்பவம்.

உத்திரமேரூர் வேதப்பாளையம் கிராமத்தில் பீமன் என்பவர் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி. சென்னை பட்டினப் பாக்கத்தில் இரு கோஷ்டிகளுக்கிடையே பயங்கர மோதல், குட்டியான் என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவம். திருவள்ளூரில் ராதாபாய் என்ற பெண் கொலை. சென்னை ராயப்பேட்டையில் ஜகந்நாதராஜா என்பவரை நள்ளிரவில் அடித்து வீழ்த்தி அவர் மனைவியைத் தூக்கிப்போய் கத்திமுனையில் கற்பழிப்பு. சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் பாண்டி பஜார் சரோஜாவின் குழந்தை திருட்டு. விழுப்புரம் சாலமேடு கிராமத்தைச் சேர்ந்த ராஜவல்லி என்ற பெண் கொலை. சென்னை புரசைவாக்கத்தில் பஸ்ஸை வழிமறித்து டேவிட் நாமின் என்ற இருவர் கொலை. அரூரில் ஆசிரியை செல்வி கத்தியால் குத்திக் கொலை. போலீஸ்காரர் கிருஷ்ணய்யா மனைவி லட்சுமி சென்னையில் படுகொலை. பெரியார் மாவட்டம் வீரப்பன் சத்திரத்தில் முத்துசாமி கவுண்டர் மனைவி பாப்பம்மாள் மூன்று குழந்தைகளோடு உயிரோடு தீ வைக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி. சென்னை வேளச்சேரியில் ஈஸ்வரன் என்கிற பேராசிரியர் வீட்டில் 12,000 ரூபாய் நகை திருட்டு. பண்ருட்டியில் நகைக் கடையில் கன்னக்கோல் வைத்து 45,000 ரூபாய் நகை திருட்டு. திருச்சி செம்பட்டு அருகில் திருவளாச்சிபட்டி விஜயலட்சுமி என்ற பெண் கொலை. சிவகாசியில் ராஜகுரு என்ற காவலர் குத்திக் கொலை. கிழக்குத் தாம்பரம் புத்தர் தெருவைச் சேர்ந்த வேப்பந்தட்டையில் இரண்டு சிறுவர்கள் நரபலி. சுங்க இலாகா கடையில் ரூபாய் அறுபதாயிரம் மதிப்புள்ள வெளிநாட்டுச் சாமான் திருட்டு. திருவள்ளூர் டெபுடி தாசில்தார் சுந்தரம் அவர்கள் மகன் அடித்துக் கொலை. சென்னை கொரட்டூர் 15-வது தெருவில் குடிதண்ணீர் கேட்க உள்ளே புகுந்து பெண்களுக்குக் கத்திக்குத்து, நகை கொள்ளை. பொள்ளாச்சி அருகே புளியம்பட்டியில் மாணிக்கம்மாள் என்ற பெண்ணை அழைத்துச் சென்று கற்பழிப்பு. சின்ன காஞ்சிபுரம் சேக்குப்பேட்டை சாலியர் தெருவில் கத்தி முனையில் பெண்களிடம் நகை கொள்ளை. சென்னை மாநகராட்சி ஊழியர் மனைவி அச்சம்மாள் கொலை. சென்னை சிந்தாதிரிப் பேட்டை கூவத்தில் சாக்கு மூட்டையில் பிணம். சென்னை குன்றத்தூரில் இப்ராகிம் என்பவர் வீட்டில் 25,000 ரூபாய் நகை திருட்டு. சென்னை தியாகராய நகர் ஓட்டலில் அறையிலே தங்கியிருந்த காதலர்களிலே காதலரை வெளியே அழைத்து

விரட்டிவிட்டு தனியாக இருந்த பெண்ணைக் கற்பழித்த மூர்க்கத் தனம். சென்னை திருவல்லிக்கேணி அயோத்தியாக்குப்பத்தில் வசிக்கும் குமரன் என்பவர் மகன்கள் இருவர் கடத்தப்பட்ட நிகழ்ச்சி. சென்னை அசோகா நகரில் சாந்தி என்ற பெண் கடத்தப்பட்டு கழுத்தில் கிடந்த தாலியை அறுத்துக்கொண்டு ஓட்டம். விரட்டிச் சென்ற கணவனுக்கு கத்திக்குத்து. துறைமுகத்தில் இரண்டு லட்சம் ரூபாய் சாமான் திருட்டு. சென்னையில் ஆட்டோரிக்ஷா டிரைவர்களிடம் கத்தி முனையில் வழிப்பறி. சென்னை ராயப்பேட்டையில் அதிகாரி மகள் சண்முகப்பிரியா கொலை. சென்னை தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் சௌரிராஜன் இல்லத்திலேயே அவருடைய மகளிடமே திருட்டு. சென்னை புரசைவாக்கத்தில் தாய் பூனம் மகள் அஞ்சு கொலை. நீதிபதி கோகுலகிருஷ்ணன் வீட்டிலேயே திருட்டு. ஒரு நீக்ரோ 12 வயது ஆங்கிலோ இந்தியப் பெண்ணைக் கற்பழித்ததாகச் செய்தி. நேற்றுக்கூட தண்டையார்பேட்டையில் ஒரு கூலித் தொழிலாளி கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்ற பத்திரிகைச் செய்தி இன்று காலையில்.

ஆக 60 நாட்களில் 51-இப்படிப்பட்ட கேட்கச் சகிக்காத படிக்கவொண்ணாத சேதிகள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்லக் காரணம் - இரண்டு மாத காலத்தில் இவ்வளவு நிகழ்ச்சிகள் தமிழகத்தில் குறிப்பாக நம்முடைய தலைநகரிலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றிருக்கின்றன என்பது யாரும் மகிழ்ச்சியடையக்கூடிய விவகாரம் அல்ல.

பரிதாபகரமான ஒரு சம்பவத்தை முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஏற்கெனவே அவர் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு என்ன காரணத்தாலோ அது அலட்சியப்படுத்தப்பட்ட சம்பவம். மதுரை மாவட்டம் பெரியகுளம் தாலுகா கண்டமனூரில் ஓய்வு பெற்ற வருவாய் ஆய்வாளர் - ரெவின்யூ இன்ஸ்பெக்டர் உத்தமபாளையம் கம்பம் நகரில் குடியிருந்த வி. முத்துவேல் என்ற பெயருடையார் கடந்த இரண்டரை ஆண்டு காலமாக என்ன ஆனார் என்றே தெரியவில்லை. காணாமல் போயிருக்கிறார். அவருக்கு மொத்தம் ஒன்பது குழந்தைகள். நான் மதுரை சென்றபோது அவருடைய

மனைவியார் குழந்தைகளோடு வந்து என்னைச் சந்தித்து கண்ணீர் விட்டுக் கதறினார். 27-4-1978 இரண்டாண்டுகளுக்கு முன்பு அனுமந்தப்பட்டி பிரசிடெண்ட் நல்லுசாமி வீட்டுக்குச் செல்வ தாகவும் அவர் தன்னை வரும்படி அழைத்திருப்பதாகவும் மனைவியிடம் சொல்லிச் சென்றவர் திரும்பவே இல்லை. இவ்வாறு நாலைந்து நாட்கள் திரும்பாத நிலையில் மகன் நல்லுசாமி வீட்டுக்குச் சென்று தகப்பனாரைப்பற்றி தகவலைக் கேட்டபோது அவர் ஆவேசமாகப் பேசிய அவரைத் துரத்தியடித்துவிட்டாராம்.

மதுரை மாவட்டத்திற்கு முதலமைச்சர் ஒரு விழாவுக்குச் சென்றபோது அந்த அம்மையார் முதலமைச்சரைச் சந்திக்க வந்தார்கள் என்றும் சந்திப்பதற்கான ஏற்பாட்டை முதலமைச்சரின் செயலாளர் செய்துகொடுத்தார் என்றும் ஆனால் சந்திக்க முடியாத அளவுக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் குறுக்கிட்டு முதலமைச்சர் அந்த அம்மையாரைச் சந்தித்து குறைகளைக் கேட்க முடியாத அளவுக்குச் செய்துவிட்டார்கள் என்றும் எனக்குத் தகவல்கள் கிடைத்தன.

அதற்குப் பிறகு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற கம்பம் நடராஜன் அவர்கள் போலீசாருக்கு அதைப்பற்றிப் புகார் செய்தார்கள். ஆனால் வழக்குகளைக் கண்டுபிடிப்பதிலே மிகவும் திறமைபடைத்த தமிழகத்துப் போலீசார் 31-8-1979ஆம் தேதியன்று கம்பம் நடராஜனுக்கு எழுதிய பதிலில் அந்த வழக்கு கண்டுபிடிக்கப்பட முடியாத ஒன்றாக ஆகிவிட்டது என்று தெரிவித்துவிட்டார்கள். இப்போது ஒன்பது குழந்தைகளையுடைய அந்தத் தாயார் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கிறார்கள். அவர்களுடைய வாழ்வுக்கு எந்தவிதமான வகையும் செய்யப்பட வில்லை. அவர் காணாமல் போய்விட்டாரா அல்லது கொலை செய்யப்பட்டு மறைக்கப்பட்டதா ?

திருவையாற்றிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் வெங்கடாசலத்தினுடைய நிலைமைதான் அவருக்கும் ஏற்பட்டதா ? எப்படி வெங்கடாசலத்தினுடைய நிலை என்ன என்பது இன்னமும் தெரிவிக்கப்பட முடியாமல் இருக்கிறதோ அதைப்போலவேதான் அந்த ஓய்வுப்பெற்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நிலையும் இருக்கிறதா என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் கையெழுத்திட்டு வழங்கியுள்ள ஆய்வு அறிக்கையில் 67ஆம் பக்கத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "4-1-1980ஆம் நாளன்று தி. மு. க. ஊர்வலத்தின் கடைசிப் பகுதியினர் சாலையைக் கடந்து செல்வதற்காக (மதுரை தெற்கு) மதுரையில் சாலைச் சந்திப்பு ஒன்றில் அ.இ.அ.தி.மு.க. தொண்டர்களைக் காவல்துறையினர் தடுத்து நிறுத்தினார்கள்." அதாவது தி.மு.க. ஊர்வலம் சாலையைக் கடந்து செல்வதற்கு அ. இ. அ. தி. மு. க. தொண்டர்களைக் காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர். "அவ்வாறு செய்கையில் குழப்பம் ஏற்பட்டது. சில சமூக விரோதிகள் இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொண்டு தி. மு. க. கழக ஊர்வலத்தினர் மீது கற்களை வீசினர்." சமூகவிரோதிகள் யார் என்பதைத்தான் கண்டுபிடித்தாக வேண்டும். தடுத்து நிறுத்தப்பட்ட ஊர்வலம் அ. இ. அ. தி. மு. க. ஊர்வலம். அப்படித் தடுத்து நிறுத்தியபோது குழப்பம் ஏற்பட்டது என்று முதலமைச்சர் கையெழுத்திட்ட ஆய்வு அறிக்கை குறிப்பிடுகிறது. "அந்தக் குழப்பம் ஏற்பட்டபோது சில சமூக விரோதிகள் இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொண்டு தி. மு. க. வினரும் எதிர்த்துக் கற்களை வீசினர். காவல் துறையினர் குறுக்கிட்டு ஒழுங்கை ஏற்படுத்தினர். இக்கலகத்தில் காங்கிரஸ் (இ), தி. மு. க. தேர்தல் அலுவலகங்களும் அலங்கார வளைவுகளும் கொளுத்தப்பட்டன. சில கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. முறையான எச்சரிக்கை விடுத்தபின்னர் 15 கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. ஆனால் அக்கூட்டத்தினர் மிகவும் வன்முறையில் ஈடுபட்டு காவலர்களை அச்சுறுத்தும் வகையில் தொல்லை ஏற்படுத்தினர். அதன்பேரில் காவலர்கள் தடியடி செய்தனர். இதுவும் பலனளிக்காமல் போகவே 5 சுற்று ஊமைக்காயம் ஏற்படுத்தும் தோட்டாக்களைக் கொண்டு சுட்டனர். இதில் லூர்த்ராஜ் (அ. இ. அ. தி. மு. க.), குட்டி என்னும் ஜெயப்பிரகாஷ் (இ. க. க.) ஆகியோர் இறந்தனர். இவ்வனைத்துச் சம்பவங்களிலும் 35 காவலர்களும் கூட்டத்தினை மீறிய கும்பலைச் சேர்ந்த 38 பேரும் காயமடைந்தனர்." என்று இந்த ஆய்வு அறிக்கையில் முதலமைச்சர் கையெழுத்திட்டு மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற குறிப்பேட்டிலே ஏற்றப்பட்டுள்ள இந்த அறிக்கையில் காணப்படுகிறது. ஆனால் அந்தச் சமூக விரோதிகள் யார் என்பதைத்தான் நாம் அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைப்பற்றி அப்போது மதுரையிலே இருந்த

டி. ஐ. ஜி. ஒரு பேட்டியிலே கூறியிருக்கிறார். அதெல்லாம் பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. டி. ஐ. ஜி. ராஜசேகரன் நாயர் என்பவர் அளித்த பேட்டியில் கூறியது.

அன்று இரண்டு அணிகள், அதாவது தி.. மு. க., காங்கிரஸ் (இ) அணியும் அ. இ. அ. தி. மு. க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அணியும் ஊர்வலங்கள் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. முதல் அணி, அதாவது தி. மு. க., காங்கிரஸ் (இ) அணி காலையிலேயும், மற்றொரு அணி பிற்பகலிலேயும் ஊர்வலம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. இரண்டாவது அணியினர், அதாவது அ. இ. அ. தி. மு. க. அணியினர் தங்களுக்கு ஊர்வலம் துவக்க அனுமதி அளிக்கப்பட்ட நேரத்திற்கு நெடுநேரத்திற்கு முன்பே ஊர்வலத்தைத் துவங்கினார்கள். அதுமாத்திரமல்லாமல் எந்த இடத்திலே ஊர்வலம் தொடங்கவேண்டுமென்று அனுமதி அளிக்கப்பட்டதோ அந்த இடத்திலே துவங்காமல் வேறு இடத்திலிருந்து புறப்பட்டனர். முதலாவது அணியினர், அதாவது தி. மு. க., காங்கிரஸ் (இ) அணியினர் தங்களுக்கு அளிக்கப்பட்ட அனுமதியின்படி ஊர்வலத்தை நடத்தினார்கள். இரண்டாவது அணியினர், அதாவது அ. இ. அ. தி. மு. க., அணியினர் அவர்களுடைய செயல், வழங்கப்பட்ட அனுமதிக்கு மாறுபட்டு இருப்பதைச் சுட்டிக்காட்டி கலைந்துசெல்லுமாறு போலீசார் கூறியபோது ஊர்வலத்தை நடத்திய அந்த தலைவர்கள் அதற்கு இணங்க மறுத்துவிட்டார்கள். மீண்டும் மீண்டும் காவல் துறையினர் விடுத்த வேண்டுகோள் பயன் அற்றுப் போய்விட்டன. ஊர்வலத்தினர் காவலரையும் சப்இன்ஸ்பெக்டரையும் தாக்கினார்கள். தாக்குதலுக்கு உள்ளான காவல் துறையினர் நிலைமையைச் சமாளிக்கவும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும் தடியடி நடத்தினர். அப்போதும் ஊர்வலம் கலைந்துசெல்லாமல் தாக்குதலைத் தொடர்ந்து செய்யவே காவல் துறையினர் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனர். அதன்பிறகு துப்பாக்கிப்பிரயோகம் செய்ததிலே இருவர் இறந்தனர் என்று டி. ஐ. ஜி. பேட்டியிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இந்தச் சம்பவம் நடைபெற்றது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபொழுது நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் நேரம். அந்த நேரத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் போலீஸ் டி. ஐ. ஜி.,

தந்திருக்கின்ற அறிக்கையையும், நம்முடைய முதலமைச்சரவர்கள் கையெழுத்திட்டு இங்கு அளிக்கப்பட்டுள்ள ஆய்வுரையையும் காணுகின்ற நேரத்தில் அவர் தனியாகச் சமுதாய விரோதிகள் என்று ஒரு சாராரைப் பிரித்து அவர்கள்தான் இந்தக் கலவரங்களில் ஈடுபட்டார்கள் என்று குறிப்பிட்டிருப்பது சற்று உண்மைக்கு மாறாக தகவலைத் தருகின்ற ஒன்றாகும் என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

அதே ஆய்வுரை அறிக்கையிலே 69ஆம் பக்கம் நம்முடைய நண்பர் திரு. சுந்தரராஜன் அவர்கள்கூட இங்கே படித்துக்காட்டினார்கள். இதைத்தான் நான் கொஞ்சம் விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். "1980ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ஆம் நாளன்று அ. தி. மு. க.வும் அதனைச் சார்ந்த கட்சிகளும் தமிழ்நாடு சட்டப்பேரவை கலைக்கப்பட்டு அ. தி. மு. க. அரசு நீக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சென்னை அண்ணா சாலையில் காமராஜ் சிலையிலிருந்து சீரணி அரங்கத்திற்கு ஊர்வலமாகச் சென்றன. ஊர்வலத்தின்போது ஊர்வலத்தின் கட்சி தொண்டர்களின் உணர்ச்சிகளை சில சமூக விரோதிகள் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, வன்முறையில் ஈடுபட்டு தனியார் பொதுச் சொத்துக்களையும் காவலர்களையும் தாக்கினர். வன்முறைக் கூட்டத்தினர் டி2 காவல் நிலையத்தையும் தாக்கினர். வன்முறைக் கூட்டம் டி2 காவல் நிலையத்தில் புகுந்து மேசை நாற்காலிகள் முதலியனவற்றிற்கு சேதம் ஏற்படுத்தி மின் விளக்குகளை உடைத்து காவலர்களைத் தாக்கி சென்ரி காவலரிடமிருந்து துப்பாக்கியைக் கைப்பற்ற முயற்சி செய்ததால் சென்ரி காவலர் 1654 ராமர் தற்காப்புக்காகவும் ஆபத்தான நிலையில் இருந்த பிற காவலர்களின் உயிரைக் காப்பாற்றுவதற் காகவும் அரசுச் சொத்துக்களுக்கு மேற்கொண்டும் சேதம் ஏற்படாமல் தடுப்பதற்காகவும் தனது .410 துப்பாக்கியைக் கொண்டு ஐந்து முறை வானத்தை நோக்கிச் சுட்டார். 37 காவலர்களும் 3 தீயணைப்புத் துறை பணியாளர்களும் இச்சம்பவத்தில் காயமுற்றனர்." என்று முதலமைச்சருடைய ஆய்வு அறிக்கை இங்கே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. இங்கேயும் சமூக விரோதிகள் வருகிறார்கள். இங்கே ஆட்சி கலைக்கப்பட்டதை எதிர்த்து அனைத்துக் கட்சியினரும் ஊர்வலம் நடத்துகிறார்கள். நம்முடைய நண்பர் சுந்தரராஜன் அவர்கள் சொன்னார்கள். யாரோ

ஒருவருடைய சிலையை எதிர்க்கட்சித் தலைவருடைய சிலையை உடைப்பதற்காக முயன்றார்கள் என்று. அந்த நல்ல காரியம் என்னுடைய அருமை நண்பர்களால் விரைவிலே நடைபெறுமானால் உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைவேன். அதற்காக நான் வருத்தப்படமாட்டேன். ஆனால் நான் இங்கே குறிப்பிட விரும்புவது சமுதாய விரோதிகள் காவல் நிலையத்தைச் சூழ்ந்தார்கள், சமுதாய விரோதிகள் காவலரிடமிருந்து துப்பாக்கியைப் பிடுங்க முயன்றார்கள் என்றெல்லாம் இங்கே நம்முடைய முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.

நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு ஏடுகளிலே வந்த செய்தியின்படி கிட்டத்தட்ட 235 பேர் - பெரும்பாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் - அவர்கள்மீது போடப்பட்டிருந்த வழக்கு - இந்தச் சம்பவத்தையொட்டி போடப்பட்டிருந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சமூக விரோதிகள் என்று நீங்கள் திட்டவட்டமாக இந்த ஆய்வுரையிலே கூறியிருக்கின்றீர்களே அப்படியானால் சமூக விரோதிகள் மீது போடப்பட்ட வழக்குகளை நீங்கள் ஏன் வாபஸ் வாங்கினீர்கள் ? அவர்கள்தான் தி. மு. க. வும் அல்ல; அ. தி. மு. க. வும் அல்ல சமூக விரோதிகள் அப்படியானால் அந்த 235 பேர் மீது போடப்பட்ட சமூக விரோதிகள் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறுவதற்கான காரணம் என்னவென்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆக, சமூக விரோதிகள் என்பதை, ஆளுங்கட்சிக்காரர்கள் என்று சொல்லக் கூச்சப்பட்டு, நீங்கள், சமூக விரோதிகள் என்று சொல்லி இருப்பது - இந்த அறிக்கையின்மூலம் நீங்களே தந்திருக்கின்ற உண்மையான தகவலே தவிர வேறல்ல என்பதையும் சுட்டிக்காட்டுவது என்னுடைய பெரும் கடமையாகும்.

ஆய்வுரையில் - நான் ஆய்வுரையை வைத்துக்கொண்டே பெரும்பாலும் இன்றைக்குப் பேசுகிறேன் - ஆய்வுரையில் முதலமைச்சர் கையெழுத்திட்டு வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் 44-45-ஆம் பக்கங்கள் மிகவும் முக்கியமான பக்கங்கள் ஆகும். 'திருச்சி சிம்கே மீட்டர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் நாள் முதல் 1979 ஆம்

ஆண்டு மார்ச்சு மாதம் 13ஆம் நாள் வரை செய்த வேலை நிறுத்தத்தின்போதும் சேலம் பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1979ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25ஆம் நாள் முதல் 1979ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் நாள் வரை வேலை நிறுத்தத்தின் போதும், சட்டம் ஒழுங்கை குறைக்கும் வண்ணம் அவர்கள் நடந்துகொண்டனர்."

யார்? தொழிலாளிகள். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளிகள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தொழிற்சங்க முன்னேற்ற சங்கப் பேரவை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தொழிற்சங்கப் பிரிவு ஆகிய இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களெல்லாம் சட்டம் ஒழுங்கைக் குறைக்கும் வண்ணம் நடந்துகொண்டார்கள். அந்த இரு நிறுவனங்களிலும் உண்மை ஊழியர்கள், தாக்கப்பட்டார்கள். இந்த ஊழியர்களால் – வேலை நிறுத்தம் செய்தவர்களால் அந்த நிறுவனத்திலே உள்ள உண்மை ஊழியர்கள் தாக்கப்பட்டார்களாம். நம்முடைய முதலமைச்சர் தருகின்ற ஆய்வுரை இது. தொழிலாளர்களுக்காக பரிந்து பேசுகின்ற ஆட்சி என்று சொல்லப்படுகின்ற இந்த ஆட்சியின் சார்பாக வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் உண்மையான ஊழியர்கள், விஸ்வாச ஊழியர்கள் கம்யூனிஸ்டு களுடைய மொழியிலே சொல்வோமேயானால் கருங்காலிகள் தாக்கப்பட்டார்கள் என்பதற்காக வருத்தம் தெரிவிக்கப்பட்டு 'அத்தொழிற்சாலைகளின் சொத்துக்கள்மீது கல்லெறியப்பட்டது. இந்த. . . எல்லாச் சம்பவங்களின்போதும் காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுத்தனர்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். இங்கேதான் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'இந்த எல்லாச் சம்பவங்களின்போதும் காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுத்தனர்.

தோழர் உமாநாத் அவர்கள் இந்த மன்றத்திலே இந்த சிம்கோ மீட்டர்ஸ் போராட்டம் நடைபெற்றபொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள், சிம்கோ மீட்டர்ஸ் போராட்டத்திலே, வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளிகளை கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளிகளை நிர்வாகத்தினுடைய ஆட்கள் அல்லது குண்டர்கள் தாக்குகிறார்கள்.

அப்படி தாக்கிய சிலபேரை அங்கிருந்த ஒரு போலீஸ் அதிகாரி கைதுசெய்து ஜீப்பிலே அழைத்துக்கொண்டு போனார். அப்படி அவர்களைக் கைது செய்து ஜீப்பிலே அழைத்துக்கொண்டு போனார் என்பதற்காக மறுநாளே அந்த போலீஸ் அதிகாரி திருச்சியிலேயிருந்து மாற்றப்பட்டுவிட்டார். இது நியாயம்தானா நேர்மைதானா என்று தோழர் உமாநாத் அவர்கள் இந்த மாமன்றத்திலே முழக்கம் இட்டது இன்னமும் என்னுடைய காதுகளிலே ரீங்காரம் இட்டுக்கொண்டிருக்கிறது. இந்த அறிக்கையிலே என்ன சொல்லப்படுகிறது? 'இந்த எல்லா சம்பவங்களின்போதும் காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுத்தனர்' என்று சொல்லப்படுகிறது. நான் கேட்கிறேன் உரிய நடவடிக்கை எடுத்த காவல் துறை அதிகாரிதானே அந்த டி. எஸ். பி. உரிய நடவடிக்கை எடுத்ததற்காக அவர் வேறிடத்திற்கு மாற்றப் பட்டதற்குக் காரணம் என்ன? அன்று திரு. உமாநாத் அவர்கள் எழுப்பிய கேள்வியை இன்றைக்கு அவர் எழுப்பாவிட்டாலும் அவர் சார்பாக நான் எழுப்புகிறேன். அவர் என்னை மன்னித்துக்கொள்வார் என்று நான் கருதுகிறேன். ஆக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா? உண்மைத் தொழிலாளிகள் அங்கே தாக்கப்பட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். உண்மையிலே உண்மை ஊழியர்களைத் தாக்கியவர்கள்மீது நடவடிக்கை எடுத்ததற்காக அந்தப் போலீஸ் அதிகாரி வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட சம்பவங்களையெல்லாம் நாம் மறந்துவிடுவதற் கில்லை. இவையெல்லாம் கடந்த கால ஆட்சியிலே 1979-80-லே நடைபெற்ற சம்பவங்களாகும் என்று ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளவையாகும்.

காவல் துறையினர் கிளர்ச்சி பற்றியும் விளக்கி இந்த ஆய்வுரையிலே கூறப்பட்டிருக்கிறது. இங்கே பல உறுப்பினர்கள் காவல் துறையினர் கிளர்ச்சி பற்றி பேசிவிட்டதால் நான் அதைப்பற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. காவல் துறையினருடைய கிளர்ச்சியைப்பற்றி இந்த ஆய்வுரை என்ன கூறுகிறது? ஆனால் முதலமைச்சருடைய தேர்தல் நேரத்து வாக்குறுதிகள் எவ்வாறு இருந்தன என்பதை மறந்துவிடக்கூடாது. பக்கம் 56-57-ல் காவலர் கிளர்ச்சி பற்றி முதலமைச்சர் குறிப்பிடுகிறார். அதில் 'திரு. நயினார்தாஸ் நிபந்தனையோடு ஜாமீன் பேரில் வேலூர் மத்திய சிறையிலிருந்து 1979-ஆம்

ஆண்டு நவம்பர் திங்கள் 1-ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டார். அப்படி விடுதலை செய்யப்பட்டவர் போராட்டத்தைக் கைவிடுமாறு 25-10-1979-ல் வேண்டுகோள் விடுத்தார்.' அது மாத்திரமல்ல. 'தனித்தனியாக 3 சங்கங்களை அமைப்பதற்காக அரசு வெளியிட்ட வழிகாட்டிக் குறிப்புகளை அவர் ஆதரிப்ப தாகவும் கூறினார். தனித்தனியாக 3 சங்கங்கள் இருப்பதை நயினார்தாஸ் என்கிற அந்தப்போராட்டக் குழுவினுடைய தலைவர்களிலே ஒருவர் ஆதரிப்பதாக அறிவித்தார் என்றும் ஆய்வுரை கூறுகிறது. மாநிலத்திலே நடைபெற்ற இந்தக் கிளர்ச்சியில் 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட காவலர்களும் அதிகாரிகளும் ஆதரவளிக்கவில்லை. கிளர்ச்சிக்கு விரோதமாக இருந்தார்கள் என்றும் இந்தக் குறிப்பு கூறுகிறது.

அதுமாத்திரமல்ல. கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களோ தோழர்களோ தருகின்ற தத்துவத்திற்கு எதிராக, ஏன் தொழிலாளர் களுக்காக உண்மையிலே பாடுபடுகின்றவர்கள் தருகின்ற தத்துவத்திற்கு எதிராக, இந்த ஆய்வுரையிலே தரப்பட்டிருக்கிறது 'கிளர்ச்சியில் கலந்துகொள்ளாமல் தங்கள் பணியைச் செய்துவந்த உண்மை ஊழியர்களான காவலர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 50 ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.' அத்துடன் 'அட்வான்ஸ் இன்கிரி மென்டும் அவர்களுக்குத் தரப்பட்டது' என்னும் இந்த ஆய்வுரை யிலே கூறப்பட்டிருக்கிறது. ஆக இந்தக் கிளர்ச்சி எப்படிப்பட்ட முறையிலே முடித்து வைக்கப்பட்டது என்பதை ஆய்வுரையி னுடைய கடைசி பக்கம் 94ஆம் பக்கத்தில் குறிப்பிடுகிறார்கள். 'பதவி வாரியாகச் சங்கம் இருக்க வேண்டுமா என்பதே கிளர்ச்சிக்கான முக்கிய காரணமாகும். காவல்துறையிலுள்ள அதிகாரிகளும் பெரும்பான்மையானவர்களும் தங்கள் பதவிக்குரிய பாரம்பரியத்தைக் கட்டிக்காத்து நற்பணி ஆற்றியதால் இக்கிளர்ச்சி சிதறிய நீர்த்துளிகள் போல பிசுபிசுத்துப் போய்விட்டது' என்று முதலமைச்சர் கடைசி பாராவை முடித்திருக்கிறார்.

கிளர்ச்சி சிதறிய நீர்த் துளிபோல் பிசுபிசுத்துவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். யார் எழுதினாரோ தெரியாது. சிறு நீர்த்துளிகள் காய்ந்து போகுமே தவிர சிதறாது. சிதறிய நீர்த்துளிகள் பிசுபிசுத்துப் போகாது. ஆனால் எழுதி இருக்கிறார்கள்.

பரவாயில்லை. சிதறிய நீர்த் துளிகள் போல பிசுபிசுத்துவிட்டது. இந்த கிளர்ச்சி என்று முதலமைச்சர் தன்னுடைய முடிவுரையிலே இந்த அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் அவர் அளித்த தேர்தல் வாக்குறுதி என்ன? இப்படிப் பிசு பிசுத்துப் போன கிளர்ச்சி; 70 சதவிகிதம் பேர் எதிர்த்து நின்ற கிளர்ச்சி; 30 சதவிகிதம் பேர்தான் நடத்திய கிளர்ச்சி; நைனார்தாசே கூட 3 சங்கங்கள் இருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்ட பிறகு அணைந்துபோன கிளர்ச்சி. இப்படிப்பட்ட கிளர்ச்சியைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத் தேர்தல் நேரத்திலே அளித்த வாக்குறுதி "காவல் துறையினரின் நலன்களையும் நியாயமான உரிமைகளையும் காண்பதற்காக மிகப் பெரும்பாலோர் விருப்பப்படி காவலர் முதல் ஆய்வாளர் வரை உறுப்பினர்களைக் கொண்ட சங்கம் அமைக்க காவலர் பிரிவுக்கு அனுமதி வழங்கப்படும்". அவர்களுடைய கோரிக்கையே இதுதான். ஆய்வாளர் முதல் காவலர் வரையில் உள்ள அந்தப் பிரிவு இணைக்கப்பட்டு தனி சங்க அங்கீகாரம் அதற்கு வேண்டும் என்பதுதான் அவர்கள் கோரிக்கை. இதுதான் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அது தேவையில்லை என்று நைனார்தாஸ் அறிவித்துவிட்டதாக அவர் பேரால் ஒரு அறிக்கை வெளிவந்தது. இந்தக் கிளர்ச்சி பிசுபிசுத்துவிட்டது என்றும் சொல்லப்பட்டாகிவிட்டது. ஆனால் தேர்தல் காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற தேர்தல் நேரத்திலே அவர் அளித்த வாக்குறுதி போலீசார் அந்த கிளர்ச்சியை நடத்திய தலைவர்களை சந்தித்த போதும் பொதுக்கூட்டங்களில் பேசிய போதும் மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார். காவலர் முதல் ஆய்வாளர் வரையில் உறுப்பினர்களாகக் கொண்டு சங்கம் அமைக்க காவலர் பிரிவுக்கு அனுமதி வழங்கப்படும் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

அது மாத்திரம் அல்ல. டிஸ்மிஸ் செய்யப்பட்டிருந்த 800-க்கு மேற்பட்ட காவல்துறை நண்பர்கள் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்கள் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ஆனால் அந்த வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்பட அனுப்பப்பட்டுள்ள அந்த ஜி. ஓ. என்ன குறிப்பிடுகிறது என்றால்.

Their absence from duty on account of the disciplinary action taken against them shall be treated as extraordinary leave (leave without pay and allowance) but it will not constitute a break in service."

அதாவது சர்வீஸ் பிரேக் இருக்காது என்று சொல்லிவிட்டு அதே நேரத்திலே அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்ட அந்த நாட்களை லீவு நாட்களாகக் கருதப்படும் என்று கூறிவிட்டு அந்த நாட்களை 'Without pay and allowances' அதாவது சம்பளமும் அலவன்சும் இல்லாத அளவிலேதான் அவர்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்று கூறி அவர்கள் மீதுள்ள தண்டனை தளர்த்தப்படாத சூழ்நிலையிலே அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக பழி வாங்கப்படும் நிலை தொடருகிறது.

காவல்துறை கிளர்ச்சியிலே ஈடுபட்ட ஒரு ஆய்வாளர் - இன்ஸ்பெக்டர் - அவருடைய பரிதாபகரமான சூழ்நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுந்தரம் என்கின்ற ஒரு இன்ஸ்பெக்டர். அவர் எம்.ஏ. படித்தவர். அவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தக் காவல்துறை நடத்திய கிளர்ச்சியிலே தலைமை வகித்து அந்தக் கிளர்ச்சியை நடத்தினார். அவர் கைது செய்யப்பட்டார். பிறகு ஜாமினிலே வெளிவரவேண்டும் என்று கோரப்பட்டபோது கண்டிஷன் பெயில் கொடுக்கப்பட்டது. அது என்ன தெரியுமா ? அவர் செக்கந்தராபாத்தில் இருக்கவேண்டும். அவர் தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது. செக்கந்தராபாத்திலேதான் இருக்கவேண்டும் என்ற கண்டிஷனிலே அவருக்குப்பெயில் வழங்கப்படுகிறது. பிறகு 19-12-1979-லே கிளர்ச்சி முடிந்த பிறகு அந்தக் கண்டிஷன் பெயில் நிபந்தனை ரத்து செய்யப்பட்டு அவர் விடுவிக்கப்படுகிறார். அவர் தமிழ்நாட்டுக்கு வந்து சேருவதற்குள்ளாக மிகப் பரப்பரப்பான செய்த ஒயர்லெஸ் மூலம் எல்லா இடங்களுக்கும் பரப்பப்படுகிறது. அந்த சுந்தரம் என்கிற இன்ஸ்பெக்டர் எங்கே இருந்தாலும் கைது செய்யவேண்டும் என்ற உத்தரவு இடப்பட்டு அப்படி கைது செய்து ஒப்படைக்கிறவர் களுக்கு சிறந்த வெகுமானம் அரசாங்கத்தால் அளிக்கப்படும் என்று சுந்தரத்தின்மீது பழிவாங்கப்படுகிற கணை மிக வேகமாகப் பாய்கிறது.

அது மாத்திரமல்ல. இந்தச் சூழ்நிலையில் அவர் துடித்துக்கொண்டிருக்கும்போது அவர் வீட்டிலே 10,000 ரூபாய் பெருமானமுள்ள நகைகள் களவு போகின்றது. அதுபற்றி புகார் செய்கிறார், நடவடிக்கை எடுக்கவில்லை. நாங்கள் நடவடிக்கை எடுக்க கருதினோம். ஆனால் மேலே உள்ள அதிகாரிகள் குறுக்கிடுகிறார்கள் என்று நடவடிக்கை எடுக்கவேண்டிய அதிகாரிகள் அவருக்குத் தெரிவிக்கிறார்கள். அதைத் தொடர்ந்து அவருடைய மகன் கை கெடிகாரம் திருடிக்கொண்டு போகிறார்கள். அதைத் தொடர்ந்து அவருடைய மோட்டார் சைக்கிள் திருடப்படுகிறது. ஒரு இன்ஸ்பெக்டர் வீட்டில் 10,000 ரூபாய் பெறுமான நகைகள் களவு போகிறது. அதற்கு நான்கு நாளைக்குப் பிறகு மகன் கைக்கெடிகாரம் களவாடப்பட்டு இருக்கிறது. அதற்குப்பிறகு சில நாட்களுக்கு பின்பு அவருடைய மோட்டார் சைக்கிள் திருடுபோகிறது. இதைப்பற்றி எவ்வளவு புகார் செய்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பிறகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி 23-6-1980 அன்று அவர் வேலைக்கு ஆஜராகிறார். 23-ம் தேதி அன்று முதலமைச்சர் உத்தரவுப்படி வேலையில் சேர்ந்த அவரை 27-6-1980-ம் தேதி அன்று வேலை நீக்கம் செய்கிறார்கள். டிஸ்மிஸ் செய்கிறார்கள். டிஸ்மிஸ் செய்துவிட்டு அவர் தலைமறைவாக இருக்கிறார் என்று சொல்லி அவர்மீது போலீஸ் ஸ்டேஷனைத் தாக்க வந்ததாக வழக்கு இருப்பதாகச் சொல்லி போலீஸ் ஸ்டேஷனுக்கு புகார் செய்யப் போனார் அல்லவா, கெடிகாரம் காணாமல் போய்விட்டது, நகைகள் காணாமல் போய்விட்டது, சைக்கிள் மோட்டார் காணாமல் போய்விட்டது என்று அதனால் போலீஸ் ஸ்டேஷனைத் தாக்க வந்தார் என்று குற்றம்சாட்டி அவர்மீது பிடி வாரண்ட் எடுக்க வேண்டும் என்று நீதி மன்றத்திற்குச் சென்று, அவர் தலைமறைவாக இருப்பதாகச் சொல்லி பிடிவாரண்டை கோர்ட் மூலமாக எடுக்க முயற்சி எடுக்கப்பட்டு அந்த முயற்சியில் இந்த அரசு அல்லது காவல் துறை வெற்றி பெற்று இருக்கிறார்கள். எனவே பழிவாங்கும் படலம் முடியவில்லை. தனிப்பட்ட ஒரு இன்ஸ்பெக்டரைக் (ஆய்வாளர்) கூட எவ்வளவு படுமோசமாக அது துரத்திக்கொண்டு இருக்கிறது என்பதை அவையின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காகச் சொல்கிறேன்.

எனவே அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் - தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட பல்வேறு உறுதிமொழிகளைப் போல் - காவல் துறையைப் பொறுத்தவரையில்கூட மறுக்கப்பட்டுவிட்டன. புறக்கணிக்கப்பட்டுவிட்டன. அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

பல மானியக்கோரிக்கைகள் இருக்கின்ற காரணத்தால், கொஞ்சநேரம் அதிகம் எடுத்துக்கொள்ள அனுமதிப்பீர்கள் என்று கருதுகிறேன்.

தீயணைக்கும் படையைப் பொறுத்தவரையில், அந்த தீயணைக்கும் படையில் நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சியைப்பற்றி இங்கே காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் மாண்புமிகு திரு சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நேரம் இல்லாத காரணத்தால் படுவேகமாக அதைச் சொல்லிச் சென்றார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு - அவருடைய உள்ளத்திலே பதியவைத்துக்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு விவரமாகச் சொல்லவிரும்புகிறேன்.

இந்த தமிழ்நாடு தீயணைப்புத்துறை ஆய்வுரை அறிக்கையில் 7-ம் பக்கத்தில் 13-வது பாராவில் 'பயிற்சி' என்ற தலைப்பின் கீழ் சொல்லப்பட்டு இருப்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தீயணைப்புத் துறைக்கென ஒரு மாநிலப் பயிற்சிப்பள்ளி சென்னையில் 2 நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் மற்றும் முன்னணி தீயணைப்பாளர்கள் உதவியுடன் ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கீழ் செயல்படுகிறது.

நீங்கள் நன்றாக கவனிக்கவேண்டும். சென்னையிலே ஒரே ஒரு மாநிலப் பயிற்சிப் பள்ளி - தீயணைப்புத் துறைக்கு இருக்கிறது. . . ஒரு மாநில பயிற்சிப் பள்ளி - ட்ரெயினிங் சென்டர் - சென்னையில் மாத்திரம்தான் இருக்கிறது. ஆனால் இந்த பயர்மேன் செலக்ட் செய்கிற அந்தத் தீயணைப்பு மண்டலங்கள் தமிழகத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மதுரை மண்டலம் என்றும், சென்னை மண்டலம் என்றும் இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. மதுரையில் தேர்வு ஆகிற - தேர்வு ஆகிற என்று சொன்னால், ட்ரெயினிங்கில் தேர்வு ஆகிறது என்பது அல்ல

முதலில் ட்ரெயினிங்கிற்காக செலக்ட் செய்யப்படுகிறார்களே அவர்கள் எல்லாம் சென்னையில் உள்ள பயிற்சிப் பள்ளிக்குத்தான் அனுப்பப்படவேண்டும். ஆனால், மதுரை மண்டலத்தில் தேர்வு செய்யப்பட்டவர்கள், மதுரை மண்டலத்தில் ஒரு டெபுடி டைரக்டர் ஆப் பயர் சர்வீஸ் திரு. ஜெயபெருமாள் என்று ஒருவர் இருக்கிறார். அவர் என்ன செய்கிறார் என்றால், வருகிற ஆட்களை தேர்வு செய்கிறார். அதாவது தகுதி அற்றவர்களை, அன்-குவாலிபைடாக இருந்தாலும்கூட - இத்தனை அடி உயரம் இருக்கவேண்டும் என்றால் ஒரு அங்குலம் குறைந்தால் கவலையில்லை. ஒரு அங்குலம் குறைந்தால் அந்த ஒரு அங்குலத்திற்கு ரூபாய் நோட்டுக்கள் அடுக்கி வைக்கப்பட்டால், அந்த ஒரு அங்குலக்குறைவு ஒதுக்கிவைக்கப்படுகிறது, இப்படி ஏறத்தாழ 300 பேர் அவர் செலக்ட் செய்து இருக்கிறார். அந்த 300 பேரில் பெரும்பாலும் தகுதி அற்றவர்கள்தான். அன்குவாலிபைட் தான் செலக்ட் செய்து இருப்பதால், அவர்களை செலக்ட் செய்து சென்னைக்கு அனுப்பவில்லை. இங்கேதான் பெரும் பயங்கரம் அடங்கி இருக்கிறது.

சென்னையில் உள்ள ட்ரெயினிங் சென்டருக்கு அவரால் பயர் மென் வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களை அனுப்பினால் இங்கே சேர்த்துக்கொள்ள மாட்டார்கள் என்பது தெரியும். ஏனெனில் அவர்கள் தகுதி அற்றவர்கள். எனவே, அரசாங்கத்தின் சாங்ஷன் எதையும் பெறாமல் அரசாங்கத்தின் ஒப்புதல் பெறாமல், அவராகவே ஒரு ட்ரெயினிங் சென்டரை அங்கே நடத்துகிறார். இங்கு முதலமைச்சரின் கையெழுத்துப் போட்டு தந்து இருக்கிற அறிக்கையில் சென்னையில்தான் ஒரு பயிற்சி நிலையம் என்று போட்டு இருக்கிறீர்கள். ஆனால் அந்த டெபுடி டைரக்டர் ஆப் பயர் சர்வீஸஸ் ஜெயபாலன் அவர்கள் நாம் தேர்ந்தெடுத்தவர்களை அங்கே அனுப்பினால் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள், எடுத்துக்கொள்ள மாட்டார்கள் எனவே நாமே இங்கேயே ஒரு ட்ரெயினிங் சென்டர் ஆரம்பித்து விடுவோம் என்று சொல்லி, ஒரு ட்ரெயினிங் சென்டரை, கடந்த 6 மாதகாலமாக நடத்திக்கொண்டு இருக்கிறார்.

அப்படி நடத்திக்கொண்டிருக்கிற அந்த டிப்டி டைரக்டர் மீது கரப்ஷன் வழக்குகள் மாத்திரம் 12 இருக்கின்றன. அந்த

வழக்குகளைப்பற்றி 'ஃபைல்' - கோப்பு ஒன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரிடம் தேங்கிக்கிடக்கிறது என்று சொன்னால் ஒருவேளை கோபம் வரும்; இருப்பதாக நான் கேள்விப்பட்டேன் இப்படி 12 கரப்ஷன் சார்ஜஸ் அவர்மீது. அவர் ஒருமுறை சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார். சஸ்பென்ட் செய்யப்பட்டு, மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார். நான் கேட்கிறேன். அவர் மீதுள்ள இந்த 12 சார்ஜஸும் என்ன ஆயிற்று ? அவரே அங்கே சர்க்கார் அனுமதி இல்லாமல் ஒரு ட்ரெயினிங் ஸ்கூல் வைத்து நடத்த அனுமதி கொடுத்தது யார் ? அப்படி நடத்த உரிமை உண்டா ? ஏறத்தாழ 300 பேர்களை அவராகவே செலக்ட் செய்து, சென்னையில் ஒரு ட்ரெயினிங் சென்டர் இருக்கும்போது அங்கே அனுப்பாமல் இங்கே ட்ரெயினிங் ஸ்கூல் நடத்தும் விசித்திரம் என்ன ? இப்படிப்பட்ட ஒரு ஊழல், தீ அணைப்புத் துறையில் நடைபெறுகிறது. இதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

அடுத்து, அமைச்சரவை மாநில, மாவட்ட நிர்வாகம் பற்றி ஒன்றிரண்டைக் கூற விரும்புகிறேன். மானியக் கோரிக்கை 9-ல் அமைச்சரவை செலவு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1975-76 ஆம் ஆண்டு 18.39 இலட்சம் ரூபாய்; இந்த அமைச்சரவை செலவு என்று கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. கணக்கு காட்டப்பட்டிருக்கிறது என்றால் 'ரிவைஸ்ட் எஸ்டிமேட்' வந்த பிறகு கொடுக்கப்பட்ட கணக்கு. அந்தக் கணக்கு 18.39 இலட்சம் ரூபாய். ஆனால் 1979-80-ல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்டது 16.22 இலட்சம் ரூபாய். பார்க்கும்போது ஆஹா ! தி.மு.க. 18 இலட்சம் ரூபாயை எடுத்திருக்கிறது அமைச்சரவைச் செலவுக்காக. இந்த ஆட்சியில் 16 இலட்சம்தான் ஒதுக்கினார்கள் என்று திருப்திபடலாம். ஆனால் நிலைமை என்ன ? ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் அந்த 16.22 இலட்சம் ரூபாய் 29.80 இலட்சம் என்று உயர்ந்துள்ளது. கிட்டத்தட்ட ஒன்றே முக்கால் மடங்கு அதிகமாக உயர காரணம் என்ன ? என்ன காரணத்தால் அவ்வளவு உயர்ந்தது . 16 இலட்சம் அமைச்சரவை செலவுக்கு என்று ஒதுக்கியது 29 இலட்சம் என்று உயர்ந்த காரணம் என்ன ? சுற்றுப்பயணச் செலவு ? அல்லது டெலிபோன் செலவா ? அல்லது இந்த செலவுகளோடு தூதுவருடைய செலவு அடங்குமா ? அல்லது தூதுவருடைய செலவு தனியாகத் தரப்படுமா ! என்பது எல்லாம்

எனக்குத் தெரியவில்லை. நான் சபாநாயகரைச் சொல்லவில்லை; தூதுவரைப்பற்றிச் சொல்கிறேன். எனவே, டில்லியிலே இருந்த தூதுவருடைய செலவு எல்லாம் இதிலே அடங்குமா, அடங்காதா ? தெரியாது. அந்த தூதுவர் இடம் காலியாக இருக்கிறது. வேறு தூதுவர்கள் அனுப்பப்படுவார்களா ? எப்போது ? அந்த தூதுவருக் குள்ள பணி நிலைமைகள் என்ன ? இவைகள் எல்லாம்கூட, மாநில, மாவட்ட பொறுப்புகள் பல துறை அமைச்சர்களிடம் அளிக்கப் பட்டிருந்தாலும், முழுவதையும் தன்னுடைய கையில் வைத்துக்கொண்டிருக்கிற முதலமைச்சர் இந்த அவைக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்.

நம்முடைய அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்கிறார்கள். பொதுக்கூட்டங்களிலே பேசுகிறார்கள். சில நேரங்களில் நம்முடைய அரசாங்க நிகழ்ச்சிகளிலேகூட அரசியல் பேச வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படுகிறது. நான் அவைகளுக்குள் எல்லாம் ஆழமாகச் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால் சில கடமைகளை உணர்த்தவும், பொறுப்புகளை உணர்த்தவும் அனைவரும் சேர்ந்து சமுதாய மாற்றத்திற்கு, இன்றைக்கு சமுதாயத்திலே இருக்கிற கேடுபாடுகளை களையவும் உறுதி எடுத்து பணியாற்றுகின்ற இந்த அவையில் இந்த முதல் கூட்டத்தொடரிலேயே நான் அவ்வளவு கடுமையான குற்றச்சாட்டுக்களை இங்கே வைக்க விரும்பவில்லை. ஆனால் எதையும் விட்டுவிடக்கூடாது என்பதற்காக பார்வைக்கு வைக்க விரும்புகிறேன்.

சில அமைச்சர்கள் பேசுகிறார்கள். என்னுடைய அருமை நண்பர் இராஜாமுகமது அவர்கள்கூட ஒரு கூட்டத்தில் பேசியதாக அண்ணா பத்திரிகையில் வந்திருக்கிறது. அரசியலில் கருணாநிதி ஒதுக்கப்பட்டுவிட்ட ஒருவர் என்று சொல்லியிருக்கிறார். பரவாயில்லை. நான் ஒதுக்கப்பட்டுவிடலாம். ஒதுக்கப்பட்டு கார்ப்பரேஷன் குப்பைத் தொட்டியிலேகூட போடப்பட்டவனாகி விடலாம். ஆனால் ஒன்றை மட்டும் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கார்ப்பரேஷன் குப்பைத் தொட்டியிலே போடப்படும் பொருள்கள்கூட சில நேரங்களில் கனகமணி மண்டபத்திற்கு வந்துவிடக்கூடும். அதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, கொஞ்சம் அடக்கம் தேவை. வயதுக்குத் தகுந்த அல்லது அனுபவத்திற்குத் தகுந்த மரியாதையாவது கொடுக்க வேண்டும்.

நானும் நம்முடைய முதலமைச்சரும் சண்டைபோட்டுக்கொள் கிறோம் என்றால் வேறு விஷயம். நானும் நாவலரும் சண்டை போட்டுக்கொள்கிறோம் என்றால் வேறு விஷயம். எங்களுக்குள்ள நீண்டகால உறவு, நீண்டகால நட்பு, நீண்டகாலமாக இந்த இயக்கத்திலே நாங்கள் ஆற்றிய பணி, இவைகள்மூலம் நாங்கள் ஒருவருக்கொருவர் தாக்கிக்கொள்கிற நேரத்தில் ஏற்படுகிற விளைவுகளும், அதே நேரத்திலே இப்படிப்பட்ட அமைச்சர்கள் சிலபேர்கள் இவ்வளவு வேகமாக வார்த்தைகளை பொழிகின்ற இந்த காட்சிகளையும் காணுகின்ற நேரத்தில் அமைச்சர்கள் கொஞ்சம் அடக்கத்தோடு பணியாற்றினால் நல்லது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அதுவும் நம்முடைய முதலமைச்சரவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற ஒன்று என்ற காரணத்தால் ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தினுடைய கல்வி அலுவலர் அதாவது டீ. ஈ. ஓ. திரு. ஸ்டான்லி சாமுவேல் என்பவர் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளருக்கு மிகமிக அவசரம் என்று ஒரு உத்தரவை பதிவு அஞ்சலில் 23-5-1979 இல் அனுப்புகிறார். அந்த உத்தரவினுடைய எண் 12472 என்பதாகும். அது அனுப்பப்பட்ட தேதி 23-5-1979. அப்படி கமிஷனருக்கு அனுப்பப்பட்ட அந்த உத்தரவை அவர் செயல்படுத்த வேண்டும். என்ன உத்தரவு என்றால் ஆசிரியர்களுடைய பொது மாறுதலுக்குரியது, அதாவது 10, 15 ஆசிரியர்களை பல இடங்களுக்கு மாற்றுதல் குறித்து அந்த உத்தரவை டீ. இ. ஓ. - மதுரை மாவட்ட கல்வி அதிகாரி அவர்கள் - கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் கமிஷனருக்கு அனுப்புகிறார் தேதி 23-ல். 7 நாட்களுக்குள்ளே எவ்வளவு பெரிய மாறுதல் பாருங்கள். அப்போது 1979இல் இருந்த ஆளும் கட்சி எம். எல். ஏ. அவர்கள் அதிலே தலையிடுகிறார். நிர்வாகத்திலே தலையீடே இல்லை, நேர்மை நியாயம் நீதி தர்மம் தழைத்து ஓங்குகிறது என்றெல்லாம் பேசப்படுகிறதே அது இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட கோடிட்டுக்காட்ட நான் ஒன்றிரண்டு உதாரணங்களை மட்டும் பல உதாரணங்கள் அல்ல, நேரத்தைக் கருதி ஒன்றிரண்டு மட்டும் - இங்கே சொல்ல விரும்புவதால் குறிப்பிடுகிறேன்.

அவர் தன் கைப்பட 22 ஆசிரியர்களுடைய பெயரை எழுதுகிறார். அப்படி 22 ஆசிரியர்களுடைய பெயரை எழுதி அவர்களில் யார் யாரை எங்கெங்கே மாற்ற வேண்டும் என்று அதிலே குறிப்பிட்டு அதை கோட்டாட்சி அலுவலரிடம் கொடுக்கிறார். அந்தக் கோட்டாட்சி அலுவலர் அதைக் கமிஷனருக்கு அனுபுகிறார். அந்தப் பட்டியலை வாங்கிக்கொண்டு கொட்டாம்பட்டி கமிஷனர் அந்த பட்டியலுக்குக் கீழே என்ன எழுதுகிறார் தெரியுமா? ஆசிரியர்கள் மாறுதல் சம்பந்தமாக மேலூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. அ. ம. பரமசிவன் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு மேலூர் கோட்டாட்சி அலுவலர் அவர்கள் மூலம் வரப்பெற்ற பட்டியல் என்று எழுதி தன் கையெழுத்தைப் போட்டு 30-5-1979 என்று தேதியும் போட்டிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் கொடுத்த பட்டியலின்படி அலுவலகத்தில் மறுபடியும் ஃபைல் தயாராகிறது. அந்த ஃபைலில் அதிகாரி என்ன எழுதியிருக்கிறார். இன்று கோட்ட வளர்ச்சி அலுவலர் அவர்கள் என்னுடைய அலுவலகத்திற்கு வந்திருந்த போது மேலூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. அ. ம. பரமசிவன் அவர்கள் ஏற்கனவே ஒப்புதல் ஆகி வந்த ஆசிரியர் பொது மாறுதல் பிரேரேபணையை செயல்படுத்தினால் ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடைஞ்சல் ஏற்படும் என்று கூறி மாற்றும் பிரேரேபணையை அனுப்ப ஆலோசனையை கூறியதன் பிரகாரம் ஏற்கனவே இணக்கம் அளிக்கப்பட்ட பிரேரேபணைக்குப் பதில் புதிய பிரேரேபணையைத் தயாரித்து அனுப்ப கூறப்பட்ட கருத்தின்படியும் கோட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களின் நேரடி ஆலோசனையின்படியும் மற்ற பிரேரேபணை களைத் தயாரித்து வைக்கவும், ஏற்கனவே வந்துள்ள பிரேரேபணையை அமல் செய்வதை நிறுத்தி வைக்கவும்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இது தலையீடு இல்லையா, ஆளும் கட்சி எம். எல். ஏ. ஒருவர் செய்த தலையீடு இல்லை என்று யாராவது கூற முடியுமா? 22 ஆசிரியர்களுடைய பெயரை அவரே எழுதி அவர்கள் மாற்றப்படவேண்டிய ஊர்கள் எது எது என்பதையும் அவரே எழுதி அதைக் கோட்டாட்சி அலுவலருக்கு அனுப்பி அது கமிஷனருக்கு அனுப்பப்பட்டு முதலிலே அங்கிருந்த மாவட்ட கல்வி அதிகாரி அனுப்பிய உத்தரவு மறுபரிசீலனைக்கு ஆளாகி நிறுத்தி வைக்கப்பட்டு இது செயல்படுத்தப்படுகின்றது

என்றால் இது முறைதானா? இதுதான் நேர்மையான காரியமா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆளும் கட்சியினுடைய முன்னணித் தலைவர்களில் ஒருவர் பெரிய பதவியில் இருப்பவர் அவர். அவர்களுடைய மருமகன் மதுரை மாநகராட்சி மன்றத்திலே பணிபுரிகிறார். மதுரை மாநகராட்சி மன்றத்தில் 27-4-1980 அன்று ஒரு தீர்மானம் நிறைவேறுகின்றது. இதுபற்றி வந்த செய்திகளை எல்லாம் அறிந்து நமது முதலமைச்சரவர்கள்கூட மதுரையிலே கடிந்துகொண்டார் என்று கேள்விப்பட்டேன். அவர்களுடைய காதுக்கு இந்தச் செய்திகளையும் போட்டு வைக்கிறேன். 27-4-1980 அன்று ஒரு தீர்மானம் வருகின்றது. அந்தத் தீர்மானத்தின் எண் 69. அதனுடைய வாசகம் என்ன தெரியுமா? அதன்படி அந்த மாநகராட்சியிலே பணிபுரிகின்றவர் அர்பன் இன்ஜினீயரிங் கோர்ஸ் என்ற ஒரு படிப்பை இரண்டாண்டுகள் படிக்க செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு அவருடைய படிப்புக் காலம் முழுவதையும் பணிக்காலமாகக் கருதி சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்றும் அவர் மேல்படிப்புக்காக கல்லூரிக்கு செலுத்தவேண்டிய நுழைவுப்படி தேர்வு மற்றும் சிறப்புக் கட்டணங்களை மாநகராட்சியே செலுத்த வேண்டும் என்றும் விடுதிச் செலவு அன்னார் படிப்புக்குப் போய் வரும் பிரயாணக் கட்டணம், பிரயாணப்படி போன்றவைகளையும் மாநகராட்சியே செலுத்த வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு மொத்தம் 50 ஆயிரம் ரூபாய் செலவாகக்கூடும். எதற்காக இந்த சலுகை கொடுக்கப்படுகின்றது?

இப்படி ஒரு சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. மாநகராட்சியிலே மருமகன் பணியாற்றுகிறார். அந்த மருமகனுக்கு படிப்புக்கு ஆகும் செலவு, பிரயாணச் செலவு, விடுதிச் செலவு போன்ற அத்தனைச் செலவுகளையும் கிட்டத்தட்ட 50,000 ரூபாய் அளவிற்கு மாநகராட்சி மன்றமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை மாநகராட்சி மன்றமே போட்டு அதை நிறைவேற்றுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அடுத்து இதே மதுரையிலே அண்ணா நகர் என்ற ஒரு இடம் இருக்கிறது. இதை முதலமைச்சர் அவர்கள் கவனிக்க

வேண்டும். அண்ணா நகரில் பிளாட் எண். 65 ஒரு பெரியவருடைய பெயரில் இருக்கிறது. பிளாட் எண். 64 அவருடைய மருமகன் பெயரில் உள்ளது. அதற்கு அடுத்த பிளாட் எண். 66 திரு. எஸ். எம். சிதம்பரம் என்ற பெயரில் உள்ளது. பிளாட் எண். 65 என்பது 2 கிரவுண்ட் 99 சதுர அடி. 64-வது பிளாட் 2 கிரவுண்ட் 174 சதுர அடி. இரண்டையும் சேர்த்து சென்ட்டு கணக்கில் சொல்ல வேண்டுமானால் 22.75 சென்ட். அதாவது 64-வது பிளாட்டும் 65-வது பிளாட்டும், அந்த பெரியவருடைய பெயரிலே இருக்கிற பிளாட்டும், அவருடைய மருமகன் பெயரிலே உள்ள பிளாட்டும் சேர்த்து 22.75 சென்ட் வருகிறது. இந்த இரண்டு பிளாட்டுகளையும் இணைத்ததாக ஆடம்பர பங்களா ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இரண்டு மாடி கட்டிடம். சில விவரங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. கொஞ்சம் போரடிக்கத்தான் செய்யும். ஆனாலும் சொல்கிறேன்.

கீழே தரையில்

10-க்கு 8-ல் ஆர். சி. சி. ஹால் ஒன்று

20-க்கு 15-ல் ஒரு ஆர். சி. சி. ஹால்

10-க்கு 10-ல் ஒரு ஆர். சி. சி. படுக்கை அறை

12-க்கு 8-ல் ஒரு அலுவலக அறை

15-க்கு 10-ல் ஒரு சாப்பாட்டு அறை

10-க்கு 10-ல் ஒரு சமையல் அறை

10-க்கு 6-ல் ஒரு ஸ்டோர் ரூம்.

இதைத் தவிர

12-க்கு 10-ல் ஒரு குளியல் அறை.

இது கீழே உள்ளது.

அதுமாத்திரம் அல்ல முதல் மாடியில்

12-க்கு 8-ல் ஒரு ஆர். சி. சி. ரூம்.

20-க்கு 15-ல் ஒரு ஆர். சி. சி. ஹால்

15-க்கு 8-ல் ஒரு ஆர். சி. சி. ஹால்

10-க்கு 10-ல் ஒரு ஆர். சி. சி. படுக்கை அறை

10-க்கு 10-ல் ஒரு ஆர். சி. சி. அறை

12-க்கு 10-ல் ஒரு குளியல் அறை.

இவ்வளவும் இருக்கிறது.

இரண்டாவது மாடியில்

15-க்கு 8-ல் பெரிய அறை ஒன்று.

இது பிளாட் நெம்பர் 65-ல் கட்டப்பட்டிருப்பவை.

இதனை ஒட்டியுள்ள பிளாட் நெம்பர் 64-ல்

60-க்கு 14-ல் பெரிய ஷெட் ஒன்று.

30-க்கு 10-ல் பெரிய ஷெட் ஒன்று.

ஆக மொத்தம் 22.75 சென்ட்டுக்கும் மாநகராட்சி போட்டிருக்கிற வரி 328.60 காசு. பிளாட் நெம்பர் 65-க்கு 303.60 காசு. பிளாட் நெம்பர் 64-க்கு 25.00 என்று மாநகராட்சி மொத்தம் 328.60 காசு வரி போட்டிருக்கிறது. இதைக் கேட்டதும் சென்னையிலே இருப்பவர்களுக்கெல்லாம்கூட மதுரைக்கே குடிபோய்விடலாம் போல் இருக்கிறதே. அவ்வளவு வரி குறைவாக இருக்கிறதே என்றுகூட எண்ணம் தோன்றும். ஆனால் எல்லோருக்கும் இந்தச் சலுகை கிடையாது. ஒருவரே ஒருவருக்கு மாத்திரம்தான். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஒரு காலத்தில் மதுரை மாநகரத்திலே 'வீரர்' என்று பாராட்டபெற்ற அந்த ஒருவருக்குத்தான் இவ்வளவு சலுகையும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் அதைவிட மிக மோசமான லொக்காலிட்டியில் இருக்கிற எஸ்.எம். ஐயர் என்பவருக்கு சொந்த வீடு பிளாட் எண் 430/-1ல் இருக்கிறது. நிலம் மொத்தம் 5½ சென்ட்தான். அவர் சாதாரணமாக

10-க்கு 8-ல் ஒரு வராண்டா

8-க்கு 5-ல் ஒரு அறை

12-க்கு 10-ல் ஒரு ஹால் ஒரு சமையல் அறை.

மாடியில் ஒரு ரூம் என்று கட்டப்பட்டிருக்கிற இந்த 5½ சென்ட் இடத்திற்கு வரி எவ்வளவு தெரியுமா ? 413.94 காசு. ஆனால் 22¾ சென்ட்டுக்கு 328.60 காசு என்று வரிகளை மதுரை மாநகராட்சி மன்றம் போட்டிருக்கிறது.

அதேபோல்தான் சொக்கிகுளம் பகுதியில் உள்ள குருசாமி என்பவருக்கு 4 சென்ட் அளவு சொந்தமான வீட்டிற்கு 393.40 காசு என்றால் அதற்கும் இத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் எவ்வளவு வரி வித்தியாசம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

எனவே ஆளும் கட்சிக்காரர்களாக இருந்தால் எந்த அளவிற்கு சலுகைகளை தங்களுக்கென்று அவர்கள் செய்துகொள்ளுகிறார்கள் என்பதற்கு உதாரணமாகத்தான் நான் இங்கே எடுத்துக்காட்டினேன். இங்கே எடுத்துக் காட்டியவைகளில் குற்றச்சாட்டுகள் என்ற முறையில் எடுத்துவைத்தாலும் இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டும், நாடு புரிந்துகொள்ள வேண்டும் என்று எடுத்து வைத்தாலும் அவைகளை ஆராய வேண்டியதும் அதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும் அளிக்கப்பட்டுள்ள வாக்குகளை நிறைவேற்ற வேண்டியதும் அது காவல் துறையானாலும், மற்றும் உள்ள நிர்வாகத்துறையானாலும் மாவட்ட துறைகளானாலும் தீயணைப்புத் துறையானாலும் எடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பரிகாரம் காணவேண்டிய பொறுப்பு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற காரணத்தினால் அதற்குரிய விளக்கங்களை பதிலை எதிர்பார்த்து இந்த அளவில் அமர்கிறேன். வணக்கம்.

உரை : 14 நாள் : 28.04.1989

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நேற்றும் இன்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் நீண்ட நேரம் எடுத்துக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகள் மீது தங்களுடைய கருத்துகளை விரிவாக எடுத்துக்கூறி இருக்கின்றார்கள். நேற்றைய தினம் முழுவதும் நடைபெற்ற விவாதத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கையிலே மிக முக்கியமாக மதுவிலக்கு, ஆயத் தீர்வை குறித்துப் பேசியிருக்கின்றார்கள். இன்றைக்கு பெரும்பாலானவர்கள் காவல்துறை, தீயணைப்புத் துறை ஆகிய இந்தத் துறைகள் குறித்துப் பேசியிருக்கின்றார்கள். நம்முடைய, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அவருடைய உரைக்குத் தொடக்கமாகவே காவல்துறையைப் பின்னுக்குத் தள்ளி, மது விலக்கு ஆயத் தீர்வைத் துறையை முன்னால் வைத்துப் பல விளக்கங்களைச் சொல்லி, மறுப்புக்களை அளித்து இருக்கின்றார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய உரைக்குத்தான் முதலில் முன்னுரிமை தரவேண்டும் என்கின்ற முறையில் நானும் என்னுடைய விளக்க உரைக்கு முதல் கட்டமாக மதுவிலக்கு ஆயத்தீர்வை நிதி ஒதுக்கீட்டுக்கான அனுமதியை இந்த அவையிலே பெறுகின்ற வகையில் சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைய தினம் இங்கே உரையாற்றிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களும் இப்போது எனக்கு முன்னால் உரையாற்றிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், மதுவிலக்கு ஆயத் தீர்வையிலே இந்த அரசு கொண்டுள்ள புதிய அணுகுமுறையின் காரணமாக பல கோடி ரூபாய், இன்னும் சொல்லப்போனால், மாதத்திற்கு 15 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டு இருக்கிறது, இவர்கள்

எப்படி 100 கோடி ரூபாயை உபரியாகத் தரப்போகிறார்கள் என்ற கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். அதற்கு நான் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1988ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களையும், 1989ஆம் ஆண்டு இந்த பிப்ரவரி, மார்ச் மாதங்களையும் இந்த வருமான வகையில் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும். 1988ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அரசுக்குக் கிடைத்த வருவாய் 16.85 கோடி. இந்த ஆண்டு, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அரசுக்குக் கிடைத்த வருவாய் 22.18 கோடி. இதிலேயிருந்து கடந்த இரண்டு மாதங்களில் வருவாய் குறைவில்லை என்பது தெளிவாகத் தெரிவதோடு, அதிகமாகக் கிடைத்து இருக்கிறது என்பது புரியும். இன்னும் சொல்லவேண்டுமேயானால், 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே மதுவிலக்கு ஆயத் தீர்வையின் மூலமாக அரசுக்குக் கிடைத்த வருவாய், 1988-ல் 8.17 கோடி, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலே மாத்திரம். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முடிய அல்ல, 24 ஆம் தேதி வரை கிடைத்துள்ள வருவாய் 11.67 கோடி ரூபாய். இந்த மாதம், அடுத்த வாரத்திலே, 'இண்டெண்ட்' கொடுத்ததின் அடிப்படையில் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற வருவாய் 3½ கோடி. எனவே கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் கிடைத்தது 8.17 கோடி ரூபாய். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கிடைக்கும் வருவாய் 15.17 கோடி ரூபாய். எனவே இழப்பு இல்லை. இழப்பு ஏற்பட்டுவிட்டதாக அவருக்குச் சொன்னவர்கள், தங்களுக்கு ஏற்பட்ட இழப்பின் காரணமாக இத்தகைய கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மேலும் நேற்றைக்கு நண்பர் பீட்டர் ஆல்போன்ஸ் பேசும் பொழுது, இன்றைக்கு அவர் இல்லை, பேசிவிட்டுப் பதிலை எதிர்பார்ப்பார் என்று எதிர்பார்த்தேன். மற்றவர்கள் வந்து சொல்வார்கள் என்று அவர் வேறு வேலையாகச் சென்று இருப்பதாக அறிகிறேன். அவர்கள் சொன்னார்கள், மாதம் 40 இலட்சம் கேஸ் முன்பெல்லாம் மதுபானம் விற்றது, இப்போது இல்லையென்று சொன்னார்கள். அது தவறு. 4 லட்சம் என்பதைத் தான் அவர் அவசரத்திலே, யாரோ சொல்லி, குறித்துக் கொள்ளும்போது 40 இலட்சம் என்று குறித்துக் கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். மாதம் 4 இலட்சம்தான்.

இரண்டாவதாக ஒன்றைச் சொன்னார்கள். ஆளுநர் ஆட்சியிலே 39 கோடி ரூபாய் கூடுதல் வருமானத்திற்கு நாங்கள் வழி செய்தோம் என்றும் குறிப்பிட்டார். நான் ஆளுநர் ஆட்சியைக் குறை சொல்லவில்லை. அன்றைக்குக்கூட நான் பேசும்போது, 'அவர் ஒரு கல்லை எடுத்தார்' என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், அதற்காக 39 கோடி ரூபாய்க்குக் கூடுதல் வருமானத்திற்காக வழி செய்தார் என்று காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் சொன்னது ஒரு தவறான புள்ளி விவரமாகும்.

மூன்றாவதாக இன்னொன்றையும் சொன்னார், ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் ஐ. எம். எஃப். எஸ்.-னுடைய விற்பனை குறைவாக இருக்கும்போது, தமிழ் நாட்டிலே மாத்திரம் ஏன் அதிகம் இருக்கிறது என்று தெரியவில்லையென்றும் கேட்டார். அதற்கெல்லாம் விளக்கம் அளிக்கப் பின்னால் வருகிறேன். இருந்தாலும், ஆளுநர் ஆட்சியின்போது மதுபான உற்பத்தியாளர்களிடம் வாங்கும் விலையைக் குறைத்துத் தரும்படி அந்த அரசு கேட்டது. அதாவது அரசாங்கத்தினுடைய நிறுவனமாக இருக்கின்ற 'டாஸ்மாக்' உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கும் விலையைச் சற்றுக் குறைத்துத் தர வேண்டுமென்று கவர்னர் ஆட்சியிலே கேட்கப்பட்டது. ஆனால் முதலிலே அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. பின்பு அவர்களிடம் வாங்காமல் அகில இந்திய அடிப்படையில் டெண்டர் முறையில் வாங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, ஆளுநர் ஆட்சியிலே டெண்டர் பெறப்பட்டது. அப்படி பெறப்பட்ட டெண்டர்களை பரிசீலனை செய்து கொண்டிருக்கும்போது, மதுக் கடைக்காரர்கள் உயர்நீதிமன்றத்தில், வெளி மாநிலத்திலிருந்து வாங்கக் கூடாது என்று வழக்குப் போட்டார்கள்; 'ஸ்டே' கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். உயர்நீதிமன்றம் தடை வழங்காவிட்டாலும், அந்த டெண்டர்களைப் பரிசீலிக்கலாமே தவிர, அதன் மீது முடிவு எதுவும் எடுக்கக்கூடாது என்று உத்தரவிட்டது. இதற்கிடையில் கவர்னர் ஆட்சியில் அதிகாரிகளும், மதுபான உற்பத்தியாளர் களும் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார்கள். அப்போது உற்பத்தியாளர்கள் தாங்களாகவே விலையைக் குறைத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். அப்படி ஒரு கேசுக்கு குறைத்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டது 30 ரூபாய் ஆகும். அக்டோபர் முதல் ஜனவரி முடிய இப்படி 31 ரூபாய் ஒரு கேசுக்கு குறைத்துக்

கொள்ளப்பட்டு, குறைக்கப்பட்ட மொத்த கேசுகள் 19 இலட்சம் கேஸ்களாகும்.

கடந்த ஆண்டு மொத்தத்திலே விற்கப்பட்ட 47 லட்சம் கேசுகளில் உள்ளடங்கியதுதான் இந்த 19 லட்சம் கேசுகள் என்பதையும் நான் நினைவூட்டுகிறேன். இதனால் 'டாஸ்மாக்' நிறுவனத்திற்கு 5.7 கோடி ரூபாய்தான் கிடைத்தது. அதுபோலவே அந்த நிறுவனத்திற்கு பீர் வியாபாரம் மூலம் 28 லட்சம் ரூபாய் கிடைத்தது. இரண்டும் சேர்ந்து சுமார் 6 கோடி ரூபாய்க்கு மேல் லாபமாகக் கிடைத்ததேயல்லாமல், நேற்றைய தினம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னதைப்போல 30 கோடி அல்ல என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன்.

இன்னொன்றையும் அவர் கேட்டார். ஆந்திரா, கர்நாடகா, கேரளாவை விட தமிழகத்திலே மாத்திரம் இந்த ஐ. எம். எஃப். எஸ். அதிகமாக விற்பதற்கு என்ன காரணம் என்பதையும் கேட்டார். அதற்கான காரணத்தை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். 1986-87ஆம் ஆண்டு வரையில் இந்த மது விலக்கினால் - ஆயத் தீர்வை - 286 கோடி ரூபாய் அரசுக்கு வருமானமாக வந்தது. அந்த 286 கோடி ரூபாயிலே சாராயக் கடைகள் மூலமாக வந்தது 202 கோடி ரூபாய்; கள்ளுக்கடை மூலமாக வந்தது 17 கோடி ரூபாய்; ஐ. எம். எஃப். எஸ். மூலமாக வந்தது 56 கோடி ரூபாய்தான். பீர் மூலம் 5 கோடி ரூபாய்; இதர வருவாய் 6 கோடி ரூபாய். இப்படி மொத்தம் 286 கோடி ரூபாய் 1986-87 வரையில் வந்தது.

பிறகு 31-12-1986-ல் சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும் மூடப்பட்டு விட்டன. அவை மூடப்பட்டு விட்ட காரணத்தால் அடுத்த ஆண்டு 1987-88-ல் அரசாங்கத்தினுடைய மொத்த வருவாய் 120 கோடி என்று ஆகிவிட்டது. அந்த ரூபாய் 120 கோடியிலே ஏற்கெனவே 56 கோடி ரூபாய் வருமானம் கொடுத்த ஐ. எம். எஃப். எஸ். 105 கோடி ரூபாய் வருமானம் கொடுக்க ஆரம்பித்து விட்டது. எனவேதான் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களுடைய ஆச்சரியமான சந்தேகத்திற்குத் தருகின்ற விளக்கம், சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும் தமிழ்நாட்டிலே மூடப்பட்டு விட்ட காரணத்தாலேதான்

ஆந்திராவைவிட, கர்நாடகத்தைவிட, கேரளாவைவிட ஐ. எம். எஃப். எஸ்.-னுடைய வியாபாரம் இங்கே அதிகமாயிற்று என்ற விளக்கத்தை நான் தர விரும்புகிறேன்.

120 கோடி ரூபாயிலே ஐ. எம். எப். எஸ். மூலம் 105 கோடி ரூபாய்; பீர் மூலம் 3 கோடி ரூபாய்; ஹை குவாலிடி வெளி மாநில மதுவின் மூலம் 12 கோடி ரூபாய்; மொத்தம் 120 கோடி ரூபாய் 1987-88-ல். 1988-89-லும் அதே சுமார் 120 கோடி ரூபாய்தான் வருமானம். ஐ. எம். எஃப். எஸ். மூலமாக 112 கோடி; பீர் மூலமாக 6 கோடி; இதர வருவாய் 2 கோடி. எனவே மொத்தம் சுமார் 120 கோடி மதுவிலக்குத் துறையின் மூலமாக கடந்த ஆண்டு அரசுக்குக் கிடைத்த வருவாய்.

நான் இப்போது இந்த ஆண்டு கிடைக்கக்கூடிய வருவாய்க்கான ஆதாரப் புள்ளி விவரங்களை உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டு 47 இலட்சம் கேஸ்கள் விற்பனையாகி இருக்கின்றன. அதற்கு முதல் ஆண்டு 36 இலட்சம் கேஸ்கள். அது 47 இலட்சமாகப் பெருகி இருக்கிற காரணத்தால் இந்த ஆண்டு சுமாராக நாம் கணக்கிடுவது 50 இலட்சம் கேஸ்களாவது விற்கும் என்ற அடிப்படையிலே கணக்குப் போட்டுப் பார்த்தால் 50 இலட்சம் கேஸ்களுக்கு 'ப்ரூப் லிட்டருக்கு' 55 ரூபாய் வீதம் - எக்சைஸ் வரியை நாம் 25 முதல் 55 என்று உயர்த்தியிருக்கிறோமே அதன் மூலம் - கிடைக்கிற எக்ஸ்சஸ் வரி 185.62 கோடி ரூபாய். இதற்கு 20 சதவீதம் விற்பனை வரி. அதன் மூலம் கிடைக்கக்கூடிய 37.12 கோடி ரூபாய். இதன்மீது 10 சதவீதம் சர்சார்ஜ் 3.71 கோடி ரூபாய்.

பல்க் லிட்டர் ஒன்றுக்கு வென்ட் ஃபீ 4 ரூபாய் வீதம் மொத்தம் 18 கோடி ரூபாய். எக்சைஸ் வரி, அதாவது கடந்த கால ஆட்சியில் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக, எடுக்கப்பட்டு விட்டதாகச் சொன்னோமே, அந்த எக்சைஸ் வரியை மீண்டும் போட இருக்கிற காரணத்தால் எக்சைஸ் வரி, வென்ட் ஃபீ இவற்றின் மூலம் 31.50 கோடி ரூபாய், ஏலக்கடைகள் மூலம் எதிர்பார்க்கக் கூடிய வரவு முன்பு 4 கோடி ரூபாயாக இருந்தது. இப்போது 20 கோடி ரூபாய் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பீர் மீது போடப் பட்ட எக்சைஸ் வரி, வென்ட் பீ மூலமாக எதிர்பார்க்கப்படுகிற வரவு 20 கோடி ரூபாய். பீர் மீது எதிர்பார்க்கக்கூடிய அதிக வருவாய் 5 கோடி. ஆக மொத்த வருமானமாக இந்த ஆண்டு

சுமார் 300 கோடி ரூபாய்க்குமேல் வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மொத்த வருவாய் 300 கோடியில் கடந்த ஆண்டு கிடைத்த சுமார் 120 கோடியைக் கழித்து விட்டால் கூடுதல் வருவாய் 180 கோடி ரூபாயாகும். சில்லறையில் பழைய விலைக்கே இப்போது விற்கப்படுவதால் கடந்த ஆண்டு கிடைத்த தைப் போல டாஸ்மாக்'குக்கு 45 கோடி ரூபாய் கிடைக்காது. அது குறையும். எனவே, மொத்தமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிற 300 கோடி ரூபாயில் கடந்த ஆண்டு கிடைத்த 120 கோடி ரூபாயையும் டாஸ்மாக் மூலம் கிடைத்த 45 கோடி ரூபாயையும் கூடக் கழித்து விட்டுப் பார்த்தாலும் கூட அதிகமாக 135 கோடி ரூபாய் இந்த அரசுக்கு இந்த ஆண்டு வருவாய் கிடைக்க வழி இருக்கிறது. மொத்தமாக நான் சொன்ன 255 கோடி ரூபாயிலே கூட ஏதாவது சற்று இலாபம், அதாவது வருவாய் குறையுமானால் நிச்சயமாக 240 கோடி ரூபாய் - அதாவது 135 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கும். இப்படிக் கூடுதலாகக் கிடைக்கும் 130 கோடி ரூபாய் அல்லது 135 கோடி ரூபாயுடன் மேலும் வருவாயைப் பெருக்கவும் முடியும். அது எப்படி என்றால் நான் இதைச் சொல்லும்போது நீங்கள் சில்லறை விற்பனைக் கடைகளில் விலையை அதிகப்படுத்தித்தான் இலாபத்தைப் பெருக்கப் போகிறீர்கள் என்று தவறாகக் கருதிக் கொள்ளக் கூடாது. அந்த விலையை அதிகப்படுத்தாமலேயே 130 கோடி ரூபாய் அதிகமாக இந்த ஆண்டு இந்த அரசுக்குக் கிடைக்கும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

சில்லறைக் கடைகளில் இப்போது விற்கின்ற விலையைப் பார்த்தால் தமிழ்நாட்டிற்கும் மற்ற மாநிலங்களுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. கர்நாடகாவில் 750 எம். எல். கொண்ட நெம்பர் ஒன் விஸ்கி ஒரு பாட்டில் 117 ரூபாய். ஆந்திராவில் 120 ரூபாய். கேரளாவில் 125 ரூபாய். தமிழ்நாட்டில் மாத்திரம் 87 ரூபாய்.

அதைப்போல நெம்பர் ஒன் பிராந்தி 750 எம். எல். கொண்ட பாட்டில் கேரளாவில் 93 ரூபாய்; ஆந்திராவில் 100 ரூபாய்; கர்நாடகாவில் 117 ரூபாய்; தமிழ்நாட்டில் 69 ரூபாய்தான்.

'பேக் பைப்பர் விஸ்கி' என்று எடுத்துக் கொண்டால் கேரளாவில் 103 ரூபாய்; ஆந்திராவில் 100 ரூபாய்; கர்நாடகாவில் 98 ரூபாய்; தமிழ்நாட்டிலே 76 ரூபாய்தான்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இதிலே இருந்து எந்த அளவுக்குத் தமிழகத்திலே இந்த சில்லறை விலை குறைவாக இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

அது மாத்திரமல்ல. இப்படி விலை இங்கே குறைவாகவும், வேறு மாநிலங்களில், அண்டை மாநிலங்களில் எல்லாம் அதிகமாகவும் இருந்திருக்கிற காரணத்தால் இந்தப் பொருட்களை அங்கே கடத்திச் செல்லக்கூடிய வாய்ப்புகளும் உண்டு. சில்லறை விலையை நாம் ஓரளவுக்கு, மற்ற மாநிலங்களில் விற்கக்கூடிய அளவுக்குக்கூட இல்லாமல், ஏதோ ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்ற அளவுக்குக்கூட பாட்டிலுக்கு உயர்த்தினால் நான் சொன்ன 130 கோடியோடு மேலும் 30 கோடி ரூபாய் - 30 கோடி ரூபாய் என்று நான் மிகக் குறைவாகச் சொல்கிறேன் - சேரும். எனவே 160 கோடி ரூபாய் மேலும் அதிகமாக இந்த ஆண்டு இந்தத் துறையிலே நாம் எதிர் பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

15 கோடி ரூபாய் இப்போதே நஷ்டம்; எனவே எதிர் பார்த்தது வராது என்றெல்லாம் சொல்வது இந்த அணுகு முறையின் காரணமாக இன்றைக்கு ஆத்திரப்பட்டுக் கொண் டிருப்பவர்களுடைய தவறான பிரச்சாரமே தவிர வேறல்ல என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

மது பானங்களுடைய மொத்த விலையையும் அல்லது அவர்களிடமிருந்து டாஸ்மாக் என்ற இந்த நிறுவனம் வாங்குகிற மொத்த விலையையும், டாஸ்மாக் நிறுவனம் சில்லறைக் கடைக் காரர்களுக்கு விற்கிற சில்லறை விலையையும் நிர்ணயிக்கும் அதிகாரத்தை மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை கமிஷனருக்கு வழங்கும் என்று இந்த மன்றத்தில் நான் எடுத்துக் கூறினேன். அதைத்தான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் இங்கே நினைவுபடுத்தினார்கள். அதுபோலவே கமிஷனருக்கு இந்த அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அப்படி விலை நிர்ணயம் செய்யும்போது அவர்களோடு ஒத்துழைப்பதற்காக நிதித்துறை யிலே இருந்து ஒரு அதிகாரியும், ஆயத் தீர்வைத் துறை துணைக் கமிஷனரும்

மற்றும் ஒரு அதிகாரியும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த மூன்று அதிகாரிகளும் சேர்ந்து எல்லா மதுபானத் தொழிற்சாலைகளிடமிருந்தும் விவரங்களைக் கேட்டறிந்து விலை நிர்ணயம் செய்தார்கள். அப்படி நிர்ணயிக்கப்பட்ட விலைகள் ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவரும் விலையை விடக் குறைந்தது. உதாரணமாக மதுபானத் தொழிற்சாலையினுடைய 'பேலன்ஸ் ஷீட் - அதாவது தனியாருடைய மதுபானத் தொழிற்சாலையினுடைய 'பேலன்ஸ் ஷீட்டில்' - இதை எல்லாம் அவர்கள் காட்டமாட்டார்கள். - அவர்கள் செய்த மொத்த வியாபாரம் - எவ்வளவு அநியாயம் நடக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன் - மொத்த வியாபாரம் ஒரு கம்பெனியில். 23.49 கோடி ரூபாய். இதிலே வேரியபிள் காஸ்ட் என்று சொல்லக்கூடிய செலவினங்களைக் கழிக்கிறார்கள். எவ்வளவு? 14.03 கோடி ரூபாயைக் கழிக்கிறார்கள். அந்த 14.03 கோடி ரூபாய் என்பது சரியா இல்லையா என்பது வேறு விவகாரம். அதைக் கழித்த பிறகு மீதம் உள்ளது 9.46 கோடி ரூபாய். அந்த 9.46 கோடி ரூபாயிலே 'ஓவர் ஹெட்' என்ற செலவினங்களை மீண்டும் கழிக்கிறார்கள். அது 5.08 கோடி ரூபாய். அதற்குப் பிறகு நிகர லாபம் 4.38 கோடி ரூபாய் என்று காட்டுகிறார்கள். அவசரப்பட்டு அப்பாடா என்று பெருமூச்சு விடக் கூடாது. 23 கோடி ரூபாய் டர்ன் ஓவர். அதிலே நிகர லாபம் என்று காட்டுவது 4.38 கோடி ரூபாய். அத்தோடு நிறுத்தவில்லை அவர்கள். நிகர லாபத்தில் சேல்ஸ் ப்ரோ மோஷனுக்காகச் செலவிட்டதாகக் கணக்கு 4.6 கோடி ரூபாய். பாவம் அவர்களுக்கு நஷ்டம் வருகிறது. சேல்ஸ் ப்ரோ மோஷனுக்காகச் செலவிட்டது 4.6 கோடி ரூபாய். சேல்ஸ் ப்ரோ மோஷன் எதற்காக? விளம்பரம் செய்வதற்கு. நீங்கள் மறந்து விடக்கூடாது. உற்பத்தியாளர்கள் தனிக் கம்பெனி. அவர்கள் உற்பத்தி செய்து மொத்தமாக டாஸ்மாக் நிறுவனத்திற்கு விற்கிறார்கள். டாஸ்மாக்குக்கு விளம்பரம் செய்து, எங்கள் சரக்கு களை வாங்குங்கள் விளம்பரம் செய்து, எங்கள் சரக்குகளை வாங்குங்கள் என்று விளம்பரம் செய்து, 4 கோடி ரூபாய் செலவு செய்து விளம்பரம் செய்து விற்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் விளம்பரச் செலவு என்பது 4.6 கோடி ரூபாய்; எங்களுக்குக்

கையைப் பிடிக்கிறது என்று சொல்கிறார்கள். 23 கோடி ரூபாய் டர்ன் ஓவரில் அவர்களாகக் காட்டிய நிகர இலாபம் 4 கோடியே 38 இலட்சத்தில் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் விளம்பரச் செலவு என்று கணக்கெழுதி காட்டி முடித்து விடுகிறார்கள்.

இதிலே இன்னொரு வேதனை என்னவென்றால் மதுவிலக்கு தமிழ்நாட்டில் - நம்முடைய அருமை நண்பர் திரு. எம். ஜி. ஆர். அவர்களுடைய காலத்திலேயே இப்படி ஒரு புதுவிதமான மதுவிலக்கு - அமல்படுத்தப்பட்டபோது இதற்காக விளம்பரங்கள் செய்யக் கூடாது என்று சட்டமே இருக்கிறது. விளம்பரம் செய்வது சட்டப்படி தவறு என்று இருக்கிறது. ஆனாலும் விளம்பரச் செலவு 4.60 கோடி என்று எழுதப்பட்டு எங்களுக்கு மிச்சமே இல்லை என்று அந்தக் கம்பெனி கணக்குக் காட்டுகிறது. அதைப்போல இன்னொரு கம்பெனி அவர்களுடைய கணக்குப்படி 3 கோடி ரூபாய்தான். அவர்களுடைய சென்ற ஆண்டு டர்ன் ஓவர் 17 கோடி ரூபாய்.

அதிலே மொத்த செலவினம் என்று அவர்கள் கணக்குக் காட்டுவது 11.5 கோடி ரூபாய். அவர்களுடைய மொத்த லாபம், அவர்களுடைய பேலன்ஷீட்படி, 5.5 கோடி ரூபாய் நிகர லாபம். அவர்களுடைய கடைசி, பூர்த்தி கணக்கு என்ன தெரியுமா. இந்த முழு லாபத்தையும் சேல்ஸ் புரோமோஷனுக்காக செலவழித்து விட்டோம், விளம்பரத்திற்காகச் செலவழித்து விட்டோம் என்று அவர்கள் கணக்குக் காட்டுகிறார்கள். நான் இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். அவர்கள் ஏமாற்றுவது எங்களை மாத்திரமல்ல, மத்தியிலே உள்ளவர் களையும் வருமான வரி இலாகாவையும் ஏமாற்றிக் கொண்டி ருக்கிறார்கள் என்பதற்கு, எவ்வளவு பெரிய கொள்ளை நடைபெற்றிருக்கிறது என்பதற்கு, இதைவிட எடுத்துக்காட்டுக்கள் தேவையில்லை. இந்த இரண்டு உதாரணங்களே போதும் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அது மாத்திரமல்ல. இன்னும் சில விவரங்கள். இந்த அரசால் விலை நிர்ணயம் செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு இந்த விளம்பரச் செலவுகளை யெல்லாம் ஏற்க மறுத்து விட்டது. அவர்கள் காட்டிய விளம்பரச் செலவுகளையெல்லாம் ஏற்க மறுத்துவிட்டது. அதையெல்லாம் மறுத்துத்தான் நாங்கள் உங்களுக்கு விலை நிர்ணயம் செய்வோம்

என்று கூறிவிட்டது. அதாவது புதிய விலைகளை நிர்ணயிக்கும் போது, விளம்பரச் செலவுகள் இல்லை என்ற அடிப்படையிலே தான் இப்போது விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

அடுத்தது ராயல்ட்டி. ராயல்ட்டி என்றால் மதுபானம் தயாரிப்பவர்கள் பலர் பிரதானமான கம்பெனிகளுடைய டிரேட் மார்க்கை உபயோகிக்கின்றார்கள். தயாரிப்பாளர்கள் உரிய வியாபார ரகசியத்தை இவர்களுக்குச் சொல்லித் தருகிறார்கள். இதற்குத் தயாரிப்பாளர்கள் ராயல்ட்டி கொடுக்கிறார்கள். மதுபானத் தொழிலில் ஈடுபட்டுள்ள 5 நிறுவனங்களில் 3 நிறுவனங்கள் இந்த ராயல்ட்டி கணக்கை எழுதியிருக்கின்றார்கள். இந்த ராயல்ட்டி தொகை மதுபானங்களுடைய அடிப்படை உற்பத்தி விலையை விட அதிகமாக இருக்கின்றது அவர்கள் காட்டிய கணக்கின்படி. உற்பத்தி விலை ஒரு கேஸ்-க்கு 120 ரூபாய் என்றால், ராயல்ட்டி மாத்திரம் 125 ரூபாயாக இருக்கிறது. இதை நாம் எப்படி ஒத்துக்கொள்ள இயலும்? இந்த ராயல்ட்டி முறைக்கு ஏதாவது விளக்கம் இருக்கிறதா என்றால் இல்லை. இது ஏதோ பரம ரகசியமோ அல்லது பிரம்ம ரசசியமோ என்பது போல அதை மறைத்து வைத்துக்கொண்டு நாங்கள் அதைச் சொல்ல மாட்டோம் என்கின்றார்கள். இப்படியிருந்த 125 ரூபாயை இப்போது விலை நிர்ணயிக்கிற கமிஷனரும் அந்தக் குழுவினரும் 25 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதை எப்படி நிர்ணயித்தார்கள் என்ற விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். 'ஸ்பிரிட்' அவர்கள் கோரியது ஒரு கேஸ்-க்கு 96.88 ரூபாய். அதிலே ஆட்சேபணை யில்லை. சரி என்று நம்முடைய விலை நிர்ணயிக்கின்ற நம்முடைய குழு ஒத்துக்கொண்டு விட்டது. பாட்டிலுக்கு ஒரு கேஸ்-க்கு 42.57 ரூபாய் கேட்டார்கள். நம்முடைய குழு ஒத்துக்கொள்ளவில்லை. 21.29 ரூபாய்தான் தரமுடியும் என்று சொல்லிவிட்டார்கள். அதிலே குறைக்கப்பட்டது 21 ரூபாய். மூடி 7.06 ரூபாய் கேட்டார்கள். அதை மறுத்துவிட்டோம். 3.17 தான் அதற்குச் சரியான மதிப்பீடு என்று சொல்லியாகிவிட்டது. லேபிள் ஐந்து ரூபாய் என்றார்கள். ஒரு பாட்டிலுக்கு ஒரு லேபிள் ஒட்ட 5 ரூபாய் என்று கணக்குக் காட்டினார்கள். அது மறுக்கப்பட்டு 80 காசுதான் தரமுடியும் என்று கூறப்பட்டாகிவிட்டது. ராயல்ட்டி 125 ரூபாய் கேட்டார்கள். முடியாது என்று மறுக்கப்பட்டு 25 ரூபாய்

தான் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதிலே 100 ரூபாய் மிச்சப்படுகிறது. பெட்டிகள் 6.54 காசு கேட்டார்கள். அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. வெண்ட் ஃபீ 18 ரூபாய். அது ஏற்கப் பட்டிருக்கிறது. மொத்த வேரியபிள் காஸ்ட் 302 ரூபாய் என்று சொன்னால், அது 172 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. நிர்ணய விலை மற்றும் லாபம் 47 ரூபாய் 83 காசு என்று கேட்டார்கள். அந்த நிர்ணய விலையும் லாபமும் 47.83-க்கு சம்மதிக்க இயலாது என்று கூறி 25.78 என்கின்ற அளவுக்குக் குறைக்கப்பட்டு, முன்பு 350 ரூபாயாக கேஸ்-க்கு இருந்த விலை இப்போது 198 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோலவே, நான் சொன்னது, ஜானக் ஷா பிராந்தி 750 எம்.எல். அதனுடைய ஒரு கேஸ்-னுடைய விலை விவரம். பாலாஜி டிஸ்ட்டில்லர்ஸ். மெக்டோவல் விஸ்கி 750 எம். எல். அது ஒரு கேஸ்க்கு விலை ஏற்கெனவே 398 ரூபாயாக இருந்தது. நான் சொன்னது போல, ஒவ்வொரு ஐட்டமும் குறைக்கப்பட்டு இப்போது 248 ரூபாய் என்கின்ற அளவுக்கு இந்த விலை நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இப்போதுதான் முதன் முதலாக அவர்களுடைய உற்பத்திச் செலவுக் கணக்கை அரசுக்குக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 7 ஆண்டுக்காலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 300 கோடியிலிருந்து 500 கோடி ரூபாய் வரை அவர்கள் மதுபானம் தயாரித்து அரசுக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். அடிப்படை விலை நிர்ணயிக்கப் படாமலேயே, உற்பத்திச் செலவுக் கணக்கு என்ன என்பதை அரசாங்கத்திற்குச் சொல்லாமலேயே இருந்த நிலையை மாற்றி உற்பத்திச் செலவு என்பதை முதன் முதலாக அவர்களைக் கேட்டு அவர்கள் வாயிலாகவே விவரங்களைத் தெரிந்துகொண்டு இப்போது அவர்கள் தயாரித்த பொருட்களுக்கு அரசாங்கம் விலை நிர்ணயம் செய்திருப்பது இந்த அரசின் பெரிய சாதனை என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இதை நான் இந்த மன்றத்திலே முன்பு சொன்னபோது கூட யாரையும் குறை சொல்ல வேண்டும், யாரையும் பழி சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லவில்லை. அரசுக்குக்

கிடைக்க வேண்டிய வருமானம் ஒரு சிலரால் கொள்ளையடிக்கப் படுகிறது. அது தடுத்து நிறுத்தப்பட்டு அது அரசினுடைய கஜானாவிற்கு வந்தாக வேண்டுமென்ற கருத்தில்தான் சொல்லப் பட்டது. ஆனால் சிலர் - நான் யார் பெயரையோ சொன்னேன் என்று சொல்லாத ஒன்றைச் சொன்னதாக வைத்துக் கொண்டு - அவர்கள் சொன்னதற்கு அதுதான் பொருள் - அப்படி எல்லாம் வைத்துக் கொண்டு விளம்பரப்படுத்தினார்களேயல்லாமல் நான் யாரையும் குறை சொல்லுவதற்காகச் சொல்லவில்லை. ஆண்டு ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 130 கோடி ரூபாய் அல்லது 150 கோடி ரூபாய் அளவுக்கு அதிகமாக வருமானம் பெறக்கூடிய சூழ்நிலையை ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நாங்கள் இந்த அரசின் கஜானாவில் சேர்க்கின்ற அந்தப் பொறுப்பிலிருந்து எப்படி விலக முடியும் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவர்கள் இப்போது அதிகமாக சப்ளை செய்வதில்லை என்று நேற்றைக்குக்கூட இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். குறிப்பாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கூட இங்கே குறிப்பிட்டார்கள். அதிலே ஓரளவு உண்மையிருக்கிறது. 1988ஆம் ஆண்டு பிப்ரவரியில் 3 இலட்சத்து 76 ஆயிரத்து 485 கேஸ்கள் 'டாஸ்மாக்'க்கு வழங்கப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பிப்ரவரியில் 1 இலட்சத்து 49 ஆயிரத்து 430 கேஸ்கள்தான் வழங்கப்பட்டன. ஏனென்றால் ஆத்திரத்தின் காரணத்தால், கோபத்தின் காரணமாக முறைத்துக் கொண்டால் பயந்து விடுவோம் என்ற மிரட்டலின் காரணமாக அவர்கள் வழங்கவில்லை. மார்ச் மாதம், 1988ஆம் வருடம் 2 இலட்சத்து 97 ஆயிரத்து 255 கேஸ்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆனால் 1989 மார்ச்சில் 1 இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து 550 கேஸ்கள்தான் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஏப்ரலில் 3 இலட்சத்து 22 ஆயிரத்து 640 கேஸ்கள் வழங்கினார்கள். இப்போது நாம் பயந்து போகத் தயாராக இல்லையென்று தெரிந்த பிறகு ஏப்ரல் மாதத்திற்கு இதுவரையில் 2 லட்சத்து 56 ஆயிரம் கேஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 99 ஆயிரத்தையும் வழங்குவதாக உறுதியளித்திருக்கிறார்கள். எனவே 3 லட்சத்து 56 ஆயிரம் கேஸ்கள் இந்த மாதம் நிச்சயமாக வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, ஒத்துழைக்க மறுத்து, உற்பத்தியைக் குறைத்து, அரசுக்குச் சங்கடத்தை உண்டாக்கி, அரசை அவதிக்கு ஆளாக்குவோம் என்று கருதுவார்களேயானால் நான் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வேன், இதை வைத்து ஆகா, ஓகோ என்று சொல்லுகிறவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வேன். இது ஒன்றும் அரிசி அல்ல, இது இல்லாவிட்டால் (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் பட்டினிக் கிடப்பார்களே என்று கருதுவதற்கு. இப்படி மிரட்டினால் பூரண மதுவிலக்கு வருகிறது என்று திரு. குமரி அனந்தன் கேட்டுக் கொண்டது போல "சொல்லி விடலாம்" (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவுதான். கவர்னர் ஆட்சியில் அவர்கள் மிரட்டினார்கள்.

Mr. SPEAKER : 'May' implies 'may not' also.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் ஆட்சியில் அப்படி மிரட்டிப் பார்த்தார்கள். அதன் காரணமாக அப்போது அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு காம்பிரமைஸ் அவர்களிடத்தில் செய்து கொண்டு அதற்குப் பிறகு அவர்கள் ஒரு வழிக்கு வந்தார்கள். விலையைக் குறைத்தார்கள். அதன் மூலமாகக் குறைந்த அளவுதான் அப்போதிருந்த கவர்னர் ஆட்சியில் கிடைத்தது. இப்போது, அதுமட்டுமல்லாமல், அவர்கள் என்றைக்காவது இப்படிச் செய்யக்கூடும் என்று எதிர் பார்த்துதான் - இங்கே அதனை வரவேற்று நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூடப் பேசினார்கள் - நாங்களே இரண்டு பேக்டரிகளைத் தொடங்குகிற முயற்சிகளை இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், அப்படி அந்த பேக்டரியிலே அந்தப் பணிகள் தொடங்குகிற காலக் கட்டத்தில் இடைவெளி 2 மாதம் அல்லது 3 மாதமானாலும் அதற்குள்ளே இடையிலே இவர்கள் ஏதாவது செய்தாலும்கூட வெளி மாநிலங்களிலிருந்து டெண்டர் கோரி, ரேட் கான்ட்ராக்ட் மூலம் பெறலாம் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருந்தது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு இங்கே பேசும்போது வெளிமாநிலத்தி லிருந்து வரவழைத்தால் அவர்களுக்கும் உங்களுக்கும் என்ன உறவு என்று பேசமாட்டார்களா, உள்ளூரிலிருந்து பெறுவதை

விட்டுவிட்டு ஏன் வெளியூரிலிருந்து வாங்குகிறீர்கள் எனறெல்லாம் - அதற்கு ஒரு மாசு வந்து சேரும் என்பதைப் போல - அவர் மாசு கற்பிப்பார் என்று சொல்லமாட்டேன். (சிரிப்பு) - மாசு வந்து சேரும் என்று கவலைப்பட்டுப் பேசினார்கள். நான் அவர்களுக்கு சொல்லிக்கொள்வேன். வெளிமாநிலத்தி லிருந்து மதுவகை வரவழைக்கப்படுவது என்பது இன்றைக்குத் தான் நாங்கள் அறிவித்திருக்கின்ற காரியம் அல்ல. 1983-84 ஆம் ஆண்டில் அவர் அமைச்சராக இருந்த காலத்திலேயே 4 இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து 258 கேஸ்கள் வெளி மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிக்கு வரவழைக்கப்பட்டிருக்கின்றன.

ஐ. எம். எப். எஸ். 1984-85-இல் 5,60,605 கேஸ்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. 1985-86-இல் 51,407 கேஸ்கள் வெளி மாநிலத்திலிருந்து வரவழைக்கக்கப்பட்டிருக்கின்றன. 1986-87-இல் 1,34,795 கேஸ்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. 1987-88-இல் 1,02,310 கேஸ்கள் வெளி மாநிலத்திலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றன. 1988-89-இல் 95,709 கேஸ்கள் வெளி மாநிலத்திலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே பீர்கூட 1983-84-இல் 5,97,000 கேஸ்கள்; 1984-85-இல் 6,46,000 கேஸ்கள், 1985-86-இல் 9,72,000 கேஸ்கள், 1986-87-இல் 14,31,000 கேஸ்கள், 1987-88-இல் 8,47,000 கேஸ்கள், 1988-89-இல் 7,18,500 கேஸ்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. அதனால், தேவைக்குத்தான் சொல்கிறோமே அல்லாமல், வரவழைத்தே தீருவது என்றல்ல. யாரோடும் பேரம் பேசிக் கொண்டல்ல, அதுவும் டெண்டர் விட்டுத்தான். அந்த டெண்டர் மூலமாகத்தான் அது வரவழைக்கப்படும், தேவைப்பட்டால்; இங்கே உள்ளவர்கள் முரண்டு பிடித்தால். அதற்குத்தானே தவிர வேறல்ல. நம்முடைய நண்பர் திரு. உகம்சந்த் அவர்களும் சொன்னார்கள், திரு. திருநாவுக்கரசு அவர்களும் சொன்னார்கள். நீங்கள் ஆயத்தீர்வையை 1972 ஆம் ஆண்டு 25 ரூபாயிலிருந்து 14 ரூபாயாகக் குறைக்கவில்லையா என்று. இந்த ஆயத் தீர்வையில் 2 ரகம் இருக்கிறது. ஆயத் தீர்வை என்பது ரெக்டிபைட் ஸ்பிரிட் உற்பத்தி ஆகி வருகின்ற அந்த இடத்திலேயே கட்டப்படுகிற ஆயத் தீர்வை, அது 8 ரூபாய். அது 1961 ஆம் ஆண்டு முதல் இருக்கிறது. ரெக்டிபைட் ஸ்பிரிட்

எங்கேயிருந்து வெளியே வந்தாலும் 8 ரூபாய் ஆயத் தீர்வை என்பது 1961 ஆம் வருடத்திலே இருந்து இருக்கிறது. தி. மு. க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பே இருந்தது. அந்த 8 ரூபாயைத் தான் அண்ணா தி. மு. க. ஆட்சிக் காலத்தில் ரத்து செய்தார்கள், ரெட்ராஸ்பக்டிவ் எபக்ட் கொடுத்து என்பது நான் சொன்ன ஒரு தகவல். அதைக் குற்றச்சாட்டு என்றுகூட அல்ல, நான் சொன்ன ஒரு தகவல். அதுமாத்திரமல்ல, நாங்கள் 25 ரூபாயிலிருந்து 14 ரூபாயாகத்தான் குறைத்ததாகச் சொன்னார்கள் 1972 ஆம் ஆண்டு அப்போது ரெவின்யூ போர்ட் இருந்தது. அரசு ரெவின்யூ போர்டில் எடுக்கின்ற முடிவுகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலை. அந்த அளவுக்கு சுயாட்சியான அமைப்பு அது. அதுமாத்திரமல்ல, அந்த ரெவின்யூ போர்டில் சேர்மேனாக அப்போது இருந்தவர் திரு. அனந்த பத்மநாபன் அவர்கள். அவரைப் பற்றிப் பலருக்குத் தெரியும். கவர்னரே சொன்னால்கூட அவர் கேட்கமாட்டார். அவர் எடுத்த முடிவுதான். அப்போது புதுவையிலே 9.53; கேரளாவிலே 14 ரூபாய்; கர்நாடகாவிலே 17 ரூபாய் என்று இருந்தபோது இங்கே இருக்கிற 25 ரூபாயை 14 ரூபாயாகக் குறைக்க ரெவின்யூ போர்ட் அன்றைக்கு ஒரு முடிவு எடுத்தது - அங்கே குறைவாக இருந்த காரணத்தால், அந்த அளவுக்கு இங்கே இருக்க வேண்டுமென்று. ஆனால், இந்த 8 ரூபாயைக் குறைத்தது அப்படியல்ல. ஒரே ஒரு கம்பெனியினுடைய ஒரே ஒரு கடிதம். பைல் வைத்திருக்கிறேன். வேண்டுமானால் காட்டுகிறேன். ஒரு கம்பெனி முதலாளி, மோகன் தொழிற்சாலை என்று கருதுகிறேன், அந்தக் கம்பெனி முதலாளி, அதனுடைய தொடர்புடைய ஒருவர் அன்றைக்கு இருந்த ஆட்சிக்கு ஒரு கடிதம், 8 ரூபாயை ரத்து செய்யுங்கள் என்று எழுதுகிறார். அந்தக் கடிதத்தை வைத்து, உடனே ஆர்டர் போடப்படுகிறது அரசின் சார்பிலே, இந்த வித்தியாசத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். ரெட்ராஸ்பக்டிவ் எபக்ட் கொடுப்பதாகச் சொன்னால் அது தவறு. ரெட்ராஸ்பக்டிவ் எபக்ட் கொடுக்கப்படவில்லை. 1961 லிருந்து இருந்து வந்த அந்த ஆயத் தீர்வை 8 ரூபாயை அப்போது ரத்து செய்ததைத்தான் நான் குறிப்பிட்டேன். இப்போது ஏன் உயர்த்தினீர்கள் என்று கேட்டால், அப்போது கேரளாவிலே 14 ரூபாய், புதுவையிலே 9 ரூபாய், கர்நாடகாவிலே 17 ரூபாயாக இருந்தபோது 14 ரூபாயாக இங்கே

குறைக்கப்பட்டது. இப்போது "அதர் ஸ்டேட்ஸ்" - மற்ற மாநிலங் களிலே ஆந்திராவிலே 60 ரூபாய்; ஒரிசாவிலே 70 ரூபாய், மராட்டியத்திலே 52 ரூபாய், மேற்கு வங்கத்திலே 82 ரூபாய். அங்கேயெல்லாம் அதிகமாக இருக்கும்போது, இங்கே 25 ரூபாயாக இருப்பானேன் என்பதற்காகத்தான் அந்த 25-ஐ 55 ஆக உயர்த்தி இருக்கிறோம். அதனால்தான் நமக்கு இன்றைய தினம் இவ்வளவு வருவாய் வருகிறது என்ற விளக்கங்களை நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 177 கோடி ரூபாய் - 166 கோடி, அத்துடன் 11 கோடி ரூபாய் - காவல்துறைக்கும் தீ அணைப்புத் துறைக்கும் சேர்ந்து 177 கோடி ரூபாய்க்கான மானியத்தை நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அதிலே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பொதுவான பல கருத்துக்களை மிகச் சிறப்பாக, காவல் துறைக்கும் பொதுமக்களுக்கும் இருக்கக்கூடிய தொடர்புகள் எப்படி இருக்க வேண்டுமென்பது குறித்தும், பொதுமக்களுடைய வசதி வாய்ப்புகள் எப்படியெல்லாம் காவல் துறையினரால் பெருக்கப்பட வேண்டுமென்றும், அதற்குத் துணை நிற்கவேண்டு மென்பது குறித்தும், நடைமுறையிலே அவர் ஆங்காங்கு காண்கிற சில நிலரவங்களை எல்லாம் வைத்து அரசுக்குப் பயன் படக்கூடிய வகையில், காவல் துறைக்குப் பயன்படக்கூடிய வகையில் சில நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அதைப்போலவே நம்முடைய உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர் களும், திரு. பொன் விஜயராகவன் அவர்களும், திரு. பூவராகன் அவர்களும், திரு. திருநாவுக்கரசு அவர்களும் மற்றும் பல்வேறு மக்களுக்கும் இருக்க வேண்டிய நல்ல உறவு, தொடர்பு இவைகளைப்பற்றியெல்லாம் இங்கே எடுத்துக் கூறியிருக் கிறார்கள். நேற்றைக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் "எங்களுடைய புரட்டசித் தலைவர் காலத்தில்தான் காவல்துறை நன்றாகக் கவனிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டார். நான் அதை மறுக்கவில்லை. அப்போதும் கவனிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், நான் ஒன்றை இந்த அவையிலே சொல்ல விரும்புகிறேன்.

1962 ஆம் ஆண்டிற்கு முன்பே கழகத்தின் கொள்கை விளக்கப் பிரச்சாரத்திற்காக "உதய சூரியன்" எனற் நாடகத்தை நான் நடத்தியபோது அந்த நாடகம் அன்றைக்கிருந்த காங்கிரஸ் ஆட்சியால் தடை செய்யப்பட்டது. அவ்வாறு தடை செய்யப் பட்டதற்கு என்ன காரணம் என்று நான் பல ஆண்டுகளுக்குப் பிறகு சட்ட சபையிலே வினவக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சியின் துணைத் தலைவரான திரு. திருநாவுக்கரசு அவர்கள் அமர்ந்திருப்பார். பக்கத்திலே நான் அமர்ந்திருந்தேன். நாவலர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர். அவர் வருவார் அங்கே அமர்ந்திருப்பார். பக்கத்திலே நான் அமர்ந்திருப்பேன். அப்போது நான் இந்த நாடகத்தை ஏன் தடை செய்தீர்கள் என்று அப்போதிருந்த முதலமைச்சர் திரு. பக்தவத் சலனார் அவர்களைக் கேட்டேன். பெரியவர் பக்தவத்சலனார் அப்போது சொன்னார் "நீங்கள் போலீசுக்கு வக்காலத்து வாங்கி எழுதியிருக்கிறீர்கள். போலீசுக்கும், அரசுக்கும் மோதல் ஏற்படு வதைப்போல் எழுதியிருக்கிறீர்கள் என்றெல்லாம் சொன்னார். உடனே நான் "அங்கே தடை செய்துவிட்டீர்கள். ஆனால் இங்கே தடை செய்ய முடியாது" என்று அன்றைக்கே காவல்துறை நண்பர்களுக்காகப் பரிந்து பேசி வாதாடி அந்த நாடகத்திலே நான் எழுதிய ஒரு தாலாட்டுப் பாடலை அப்போதே படித்துக் காட்டினேன். அதிகமில்லை - இப்போதே சில பேருக்கு தூக்கம் வருவதைப் பார்க்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி போன்றவர்களுக்கு தூக்கம் வருவதைப் பார்க்கிறேன். தாலாட்டுக் பாடினால் அதிகமாகத் தூங்கிவிடுவார்கள்! (சிரிப்பு). இருந்தாலும் அந்த நான்கு வரிகளை மாத்திரம் சொல்லுகிறேன்.

"போலீஸ் வேலைக்கென்று போகின்ற ஙொங்கப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த தரித்திரனே கண்வளராய்!
துப்பாக்கி தூக்கிக்கிட்டு போகின்ற ஙொப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுகிட்டு வருகின்றார் கடன்காரர்
காக்கியுடை போட்டுகிட்டு, சேப்பு தொப்பி மாட்டிகிட்டு-

அப்போது சிவப்புத் தொப்பி போடுவது வழக்கம்.

"போகின்ற ஙொங்கப்பனுக்கு உன்னைப்போல நாலு வந்து பிறந்து விட்டால் காவியுடை வேணுமடா கமண்டலமும்

தேவையடா" என்று நான் அப்போதே காவல் துறையினருக்காகக் குரல் கொடுத்தவன். நான் என்றால் - குரல் கொடுத்த கட்சி கழகம் - அண்ணாவின் தம்பிமார்கள் - திருநாவுக்கரசு உட்பட! அது தடை செய்யப்பட்டது. காவல்துறைக்காக வாதாடுகிறேன் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அது தடை செய்யப்பட்டது. அந்த நாடகத்தில் வேறு தவறான காட்சிகள் என்ன என்று கேட்ட போது - போலீஸ்காரர் அலுத்துப்போய் வீட்டிற்கு இரவு 12 மணிக்கு வந்து சேருவார். என்ன இருக்கிறது என்று மனைவியைப் பார்த்துக் கேட்பார். ஏதோ பழைய சோறு இருக்கிறது என்று மனைவி சொல்லுவாள். தொட்டுக் கொள்ள ஒன்றுமில்லையா என்று இவன் கேட்பான். நான் இருக்கிறேன் தொட்டுக்கொள் என்று கூறுவாள் மனைவி. அதைச் சாப்பிட்டு விட்டு படுக்கப்போவார் அந்தப் போலீஸ்காரர். அப்போது கதவு தட்டப்படும். என்ன என்று கேட்பார். "மந்திரி வருகிறார், காவலுக்கு வா" என்று வந்தவர் சொல்லுவார். இப்போதுதான் வந்தேன். அதற்குள் மந்திரி வருகிறானா என்று திட்டிக்கொண்டே அவர் போவார். அதற்காக அந்த நாடகம் தடை செய்யப்பட்டது. அப்படி நாடகம் எழுதி காவல்துறை நண்பருடைய கதாபாத்திரத்தை - அவருடைய கஷ்டங்களைப் படைத்தது மாத்திரமல்ல - நான் பொறுப்புக்கு வந்த உடனே அன்றைக்கு எழுதியதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அதுவரை அவர்கள் பேசிக் பே ரூ. 80 வாங்கிக் கொண்டிருந்ததை முதல் தடவையாக ரு. 230 ஆக அன்றைக்கு அதிகப்படுத்திக் கொடுத்தது தி. மு. க. ஆட்சி. இன்றைக்கு ரூ. 500, ரூ. 600 என்று வளர்ந்திருக்கலாம். ஆனால் ரூ. 80 ஆக இருந்தது ஒரே பாய்ச்சலில் ரூ. 230 ஆக ஆக்கப்பட்டது தி. மு. க. ஆட்சியில்தான்.

அதுமாத்திரமல்ல, திரு. கோபாலசாமி ஐயங்கார், ஐ. சி. எஸ். அவருடைய தலைமையில் 1971 ஆம் ஆண்டில் கழக ஆட்சியில் ஒரு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு, சிலம்புச் செல்வர் ம. பொ. சி. போன்றவர்களெல்லாம் அந்தக் குழுவில் இடம் பெற்று - அவர்கள் போலீசாருடைய சம்பள உயர்வைப் பற்றி மாத்திரமல்லாமல் இங்கே திரு. பாண்டியன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் எப்படி இந்தத் துறை நவீன மயமாக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களையும், இந்தத் துறை மேலும் நல்லமுறையில் பணியாற்ற, மக்களுடன் தொடர்பு கொள்ள

என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும் என்பதையும் அந்த கமிஷன் எடுத்துரைத்தது. அவ்வாறு சொல்லப்பட்டதில் 113 பரிந்துரைகளை அன்றைக்கே தி. மு. க. அரசு நிறைவேற்றியது. நான் இப்போது அறிவிக்கிறேன். "மீண்டும் அதைப்போல ஒரு போலீஸ் கமிஷன் இந்த அரசின் சார்ப்பில் அமைக்கப்படும்" என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து திருட்டுகளைக் கண்டுபிடிப்பது பற்றிச் சொன்னார்கள் அதற்கான கணக்கைச் சொன்னால் 1976 ஆம் ஆண்டு வரையிலே காவல்துறை ஆய்வு செய்து கண்டுபிடித்த திருட்டு வழக்குகள் 70 முதல் 76 சதவீதம். 1977 ஆம் ஆண்டில் அது 50 சதவிகிதமாகக் குறைந்தது. 1978-79-இல் 47 சதவிகிதமாக அது குறைந்தது. கடந்த 25 ஆண்டுகளில் திருட்டுச் சொத்துக்களை அதிகமாகத் திரும்பப் பெற்றது 1975 ஆம் ஆண்டில்தான். அதாவது 65.4 சதவிதம். அதற்குப் பிறகு 41லிருந்து 50 சதவிகிதம் வரையில்தான் திருட்டு சொத்துக்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன என்ற விவரத்தையும் அவையின் முன்னால் வைக்கின்றேன். குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து இருக்கிறதா என்று பார்த்தால், அதுவும் இல்லை, அகில இந்திய அளவில் எடுத்துக்கொண்டால் 1976 ஆம் ஆண்டு அதிகக் குற்றங்கள் நடைபெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு ஆறாவது இடத்திலே இருந்தது. அதிகக் குற்றங்கள் நடைபெற்ற மாநிலங்களில் இந்தியாவிலே தமிழ்நாடு ஆறாவது இடத்தில் இருந்தது. கடந்த ஆண்டு எடுத்துக்கொண்டால் இது நாலாவது இடத்திற்குப் போய்விட்டது. நாலாவது இடத்திற்குப் போய்விட்டது என்றால் அது பெருமைக்குரியது அல்ல; ஏழாவது இடத்திற்குப் போய் இருந்தால் பெருமைக்குரியது. அதிகக் குற்றங்கள் என்ற அந்த வரிசையிலே ஆறாவதிலிருந்து நாலாவது இடத்திற்கு தமிழ்நாடு போய்விட்டது, கடந்த ஆண்டில்.

கள்ளச்சாராயத்தை பற்றி எல்லாம் நம்முடைய திரு. பால சுப்பிரமணியம் இங்கே விவரங்களைக் கொடுத்தார். கள்ளச்சாராயம் காய்ச்சுவது தடுக்கப்பட வேண்டும் என்பதை, அதற்கு யார், யார் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதை இந்த அரசு மிகக் கடுமையாக எடுத்துக் கூறி வருகிறது. அந்த விவரங்களை எல்லாம் நம்முடைய திரு. திருநாவுக்கரசு சொல்லிவிட்ட காரணத் தால் அந்தப் புள்ளி விவரங்களை எல்லாம் மீண்டும் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஆனால், நடந்து முடிந்த மாவட்ட

ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் இதைப்பற்றி மிக விரிவாக அங்கே பேசினேன். அதை நம்முடைய திரு. குமரி அனந்தன் அவர்கள்கூட சுட்டிக் காட்டினார்கள். கடுமையாக அவர்கள் எச்சரிக்கப்பட்டு இருக்கிறார்கள். காவல்துறையிலே சில பேர், நான் எல்லோரையும் சொல்லமாட்டேன், அல்லது பலர் - சிலர் என்பது தவறாக இருக்கலாம், பலர்; எல்லோரும் அல்ல - அந்தப் பலர் இப்போது சாராய சாம்ராஜய அதிபதிகள் ஒருபுறம், போலீஸ் ஸ்டேஷன் களில் மாமூல் மன்னர்கள் ஒருபுறம் என்ற அளவுக்கு அந்த மன்னர்களுடைய தொகை பெருகிக் கொண்டிருக்கிறது. இது உள்ளபடியே புகழ்பெற்ற காவல்துறைக்குத் தலைக்குனிவை ஏற்படுத்தக்கூடியது; எனவே திருத்திக்கொள்ள வேண்டும். அடிமட்டத்தில் இருக்கின்ற காவல்துறை நண்பர்களிலிருந்து மேல்மட்டத்தில் இருக்கிற காவல்துறை நண்பர்கள் மாவட்ட அளவிலே இருந்தாலும், வேறு அளவிலே இருந்தாலும் அவர்கள் எல்லாம் திருத்திக்கொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். நேற்றைக்கு திரு. பாலசுப்பிரமணியம் பேசும் பொழுது சொன்னார்கள், பூரண மதுவிலக்குக்கொண்டு வந்தால் அந்தக் கள்ளச்சாராயம் காய்ச்சுவதே இருக்காது என்றெல்லாம் சொன்னாகள். அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இல்லை. ஏனென்றால் பூரண மதுவிலக்கு இருந்த அந்தக் காலத்திலேயே 1969 அல்லது 1968 அல்லது 1967-க்கு முன்பேகூட ஒரு இலட்சத்து 90 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சாராய வழக்கிலே சிக்கி சிறைச்சாலையில் இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவே, எந்தக் காலத்திலும் இந்தச் சட்டத்தை மீறுகிற சாராய சாம்ராஜ்யத்தை கள்ளச்சாராய முறையிலே நடத்திக் கொண்டிருக்கிற ஒரு கூட்டம் தமிழ் நாட்டிலே இருந்துகொண்டுதான் இருக்கிறது. அந்தக் கூட்டத்தை ஒழிப்பதற்கு ஆங்காங்கு மக்கள்தான் முனையவேண்டும். யார் அதிலே ஈடுபட்டாலும் அவர்கள் காட்டிக்கொடுக்கப்பட வேண்டும். நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். இதிலே கட்சி சார்பில்லாத முறையிலேகூட வேறு அரசியல் கூட்டணிகள் எவ்வளவு இருந்தாலும் அந்த அரசியல் கூட்டணிகளிலே வேறுபாடு இருந்தாலும், இந்தக் கூட்டணியிலே வேறுபாடு இல்லாமல் ஆங்காங்கு இந்தக் கூட்டணி நடைபெற்றுக்

கொண்டிருக்கிறது; கட்சி சார்பற்ற முறையிலே, அதுவும் எனக்குத் தெரியும். எனவே, அந்தந்தக் கட்சிகளின் தலைவர்களும் கூட இதிலே முனைப்பான நடவடிக்கை எடுத்து இந்த அரசுக்கு உதவ வேண்டும். அப்படி எடுக்கும்போது அந்தத் தலைவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கெனவே ஒரு திட்டம் நம்முடைய காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் கூட குறிப்பிட்டார், மக்கள் குழுக்களை ஆங்காங்கே அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு திட்டம் என்கிற ஒரு திட்டம் கடந்த ஆட்சிக் காலத்தில் 1975 ஆம் ஆண்டு வாக்கிலே ஆரம்பிக்கப் பட்டு மிக வெற்றிகரமாக நடைபெற்றது. யாராவது மரம் ஏறி கள் இறக்கினால், யாராவது சாராயம் காய்ச்ச முற்பட்டால் அவர்களை மக்களே பிடித்து இழுத்து வந்து, பஞ்சாயத்திலே வைத்து அவர்களே தண்டித்து, அந்தத் தண்டனையை அவர்களே ஏற்றுக்கொண்டு, பிறகு தவறு செய்வது இல்லை என்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒரத்தநாடு திட்டம் நல்ல முறையிலே நடைபெற்றது. அதற்குப் பிறகு ஏதோ தொய்வு ஏற்பட்டு, திட்டமே இப்பொழுது அழிந்து ஒழிந்து விட்டது. அதைப் போன்ற ஒரு திட்டத்தைத் தமிழ்நாடு முழுவதும் பரவலாகக் கொண்டுவர முடியுமா என்றும் இந்த அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

நேற்றைக்குப் பேசிய நம்முடைய அ. தி. மு. க. உறுப்பினர் சின்னசாமி அவர்களும், இன்று காலையில் பேசிய மு. க. ஸ்டாலினும், நண்பர் பொன், விஜயராகவன் அவர்களும் கூட எடுத்துச் சொன்னார்கள். மதுவிலக்கு வழக்குகளைக் கவனிப்பதற்காகத் தனியாக ஒரு அமைப்பு இப்பொழுது இயங்கி வருகிறது. இந்த அமைப்பே தேவையில்லை என்று குறிப்பிட் டார்கள். நாங்களும்கூட அப்படித்தான் கருதுகிறோம். எனவே, இது குறித்து நன்கு பரிசீலித்து, விரைவிலே முடிவெடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

காவலர்களுடைய வசதிகளைப்பற்றி நம்முடைய திரு. பூவராகன் அவர்கள் குறிப்பிட்ட பொழுது, அவர்களுக்கு இலட்சம் இலட்சமாகப் பணம் வருவதாகவும் சொல்கிறோம்,

அதே நேரத்திலே வசதிகளைப் பற்றியும் பேசுகிறோம் என்று சொன்னார்கள். அதிலேகூடச் சிலர்தான் அப்படி வசதி படைத்தவர்கள். பலர் இன்றைக்கும் வாடிக்கொண்டிருப்பவர்கள் தான். அதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

அதைப்போலவேதான திரு. லத்தீப் அவர்கள் பேசும் பொழுதும் அந்த வசதிகளைத் செய்து தரவேண்டும், அவர் களுடைய குடியிருப்புகளையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டு மென்று சொன்னார்கள். நேற்றைக்குப் பேசிய காங்கிரஸ் நண்பர்கள் கூட காவலர்களுடைய குடியிருப்பு வாரியத்தை நாம் ஒழித்து விட்டோம் என்று ஆதங்கப்பட்டுக்கொண்டார்கள். பல வாரியங்கள் அகற்றப்பட்டு, வாரியங்களுக்கு அதிகாரப் பூர்வமற்ற தலைவர்களை அமைப்பது என்பது நிறுத்தப்பட்டு விட்டு, அந்த வரிசையிலே இந்தக் காவலர் குடியிருப்பு வாரியமும் அகற்றப்பட்டதே தவிர, காவலர் குடியிருப்பு இருக்கிறது. அந்த வாரியம் இல்லாவிட்டாலும்கூட வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக இந்தத் திட்டம் தொடர்ந்து நடத்தப்படும். இது கைவிடப்பட்டு விடவில்லை. காவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு எப்பொழுதும்போல், பொதுப் பணித் துறையின் மூலம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் நிலையங்களைப்பற்றி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் அவருக்கு ஞாபகப்படுத்துகின்றேன். அவர் ரொம்பக்குறை சொல்லும்பொழுதெல்லாம் எனக்கு ஏற்பட்ட ஆச்சரியம், நாம் வந்த மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. அங்கிருந்தபொழுது சொல்ல முடியாதவைகளையெல்லாம் இன்றைக்குச் சொல்லி, தன்னுடைய வேதனையைத் தீர்த்துக் கொள்கிறார் என்றுதான் நான் கருதினேன்.

இதெல்லாம் 1987-1988-இல் நடைபெற்ற நிகழ்ச்சிகள். 1987-88-ல் 38 இடங்களில் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அன்றைக்கு அறிவிக்கப்பட்டது. 38 இடங்கள். ஆனால் 19 இடங்களிலே மாத்திரம்தான் காவல் நிலையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மீதும் 19 இடங்களும் விடப் பட்டுவிட்டன. மீதமுள்ள 19 இடங்களுக்கு இப்பொழுது இந்த

நிதி ஒதுக்கீட்டிலே பணம் ஒதுக்காவிட்டாலும்கூட, துணை மானியத்திலே அது ஒதுக்கப்படும் என்கின்ற அறிவிப்பை நான் இங்கே உங்களுக்குத் தந்து, அந்த 19-இல் எங்களால் முடிந்த அளவிற்கு இப்பொழுது ஒரு பத்துபுதிய காவல் நிலையங்களைக் கீழ்கண்ட இடங்களிலே ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறோம்.

சிதம்பரனார் மாவட்டத்தில் தட்டார் மடம், குமரி மாவட்டத்தில் குருந்தங்கோடு. நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் கூடங்குளம். காமராஜர் மாவட்டத்தில் கம்மாபட்டி, சிப்காட் காம்ப்ளெக்ஸ், மானாமதுரை. வடார்க்காடு மாவட்டத்தில் அம்பலூர். திருச்சி மாவட்டத்தில் சிந்தாமணிப்பட்டி. செங்கை-அண்ணா மாவட்டத்தில் காவாங்கரை கிராமம். தஞ்சை மாவட்டத்தில் திருவையாறுக்கு அருகிலே உள்ள மருவூர். சேலம் மாவட்டத்தில் முலசி கிராமம்.

மேலும் செங்கை-அண்ணா மாவட்டத்திலே பெரிய குப்பம், குடந்தை பட்டீஸ்வரம் ஆகிய இரண்டு இடங்களில் புறக் காவல் நிலையங்களை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

உத்தரகோசமங்கை, ஆசாரிப்பள்ளம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள புறக் காவல் நிலையங்களை முழுக் காவல் நிலையங்களாக உயர்ந்த அரசு முடிவு செய்துள்ளது.

அதோடு, சென்னையைச் சுற்றி புறநகர்ப் பகுதியிலே உள்ள - வில்லிவாக்கம். ராஜமங்கலம், விருகம்பாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, பரங்கிமலை, மீனம்பாக்கம், கருணாநிதிநகர், ஆதம்பாக்கம் ஆகிய 9 காவல் நிலையங்களை செங்கை-அண்ணா மேற்கு மாவட்ட எல்லையிலேயிருந்து பிரித்து சென்னைப் பெருநகரக் காவல் சரகத்தோடு சேர்ப்பது என அரசு முடிவு எடுத்து உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் தொகுதியில் குலசேகரத்திலே சர்க்கிள் அலுவலகம், அங்கே காவல் பகுதியிலே மக்கள் தொகை அதிகமாக இருப்பதாலும், மலையோரப் பகுதியாக இருப்பதாலும், சட்டம்-ஒழுங்கு பாதிக்கப் படுகிறது என்றும், ஆகவே அந்தக் காவல் நிலையத்தை ஒரு சர்க்கிள் காவல் நிலையமாக மாற்றி, வண்டி வசதி, கூடுதல் காவலர்கள் நியமிப்பது குறித்து திரு. நடேசன் ஒரு வெட்டுப்

பிரேரணை கொடுத்திருந்தார். அது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப் பட்டு, குலசேகரம் காவல் நிலையம் ஒரு சர்க்கிள் காவல் நிலையமாக ஆக்கப்படும் என்பதையும் இந்த அரசு ஆய்ந்து, நடப்பாண்டில் கதம்பக்கோடு என்ற இடத்திலே காவல் நிலையம் அமைக்கப்படும் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறேன். தீயணைப்பு நிலையங்கள் பற்றியும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் விரிவாக இங்கே பேசியிருக்கிறார்கள். ஒன்றை அவருடைய நினைவிற்கு கொண்டு வருகிறேன். 22-7-1986 அன்று நடந்த கால ஆட்சி 21 இடங்களில் தீயணைப்பு நிலை யங்கள் ஏற்படுத்தப்படும் என்று அரசாணை பிறப்பித்தது. பிறகு 12-1-1987 அன்று மேலும் எட்டு இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்படும் என்று அரசு இன்னொரு ஆணை பிறப்பித்தது. பிறகு 28-10-1987 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் மேலும் 19 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆகவே, 48 இடங்கள் அறிவிக்கப்பட்டது இந்த மூன்றாண்டுகளில். ஆனால் மூன்று இடங்களிலேதான் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப் பட்டது. ஆகவே மீதமுள்ள - நான் ஒன்றும் குறை சொல்ல வில்லை - 45 இடங்களிலிருந்து 10 இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே தீயணைப்பு நிலையங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தப் படும் என்று அறிவிக்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர். தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, தென்னாற்காடு மாவட்டத்தில் சங்கராபுரம், தஞ்சை மாவட்டத்தில் குடவாசல், தரங்கம்பாடி, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் நிலக் கோட்டை, திருச்சி மாவட்டத்தில் புகளூர், நெல்லை கட்ட பொம்மன் மாவட்டத்தில் வள்ளியூர், கோவை மாவட்டத்தில் பல்லடம், சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை.

அதன்னியில் சென்னை மாநகரத்தில் - கேள்வி ஒன்றுக்கு நான் பதில் அளிக்கும்போது சொன்னதையொட்டி - சென்னை மாநகரத்தைப்போல மதுரையிலே, கோவையிலே கமிஷனர்கள் அமைக்கப்படுவார்கள். உறுப்பினர்கள் கேட்டுடக்கொண்டதைப் போல இரண்டு துணைக் கமிஷனர்களும் நியமிக்கப்படுவார்கள். மதுரை, கோவை ஆகிய இடங்களில் நியமிக்கப்படுவார்கள். கமிஷனர்கள் ஐ.ஜி. அந்தஸ்தில் இருப்பார்கள். இந்த நிதியாண்டில்

அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா பிறந்த நாளில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் கழக ஆட்சியில் 1969-ம் ஆண்டு தொடங்கப் பட்டது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்தில் இந்த விழா நடைபெற்றது. ஆனால் 1976-ம் ஆண்டில் 'எமர்ஜென்சி' வந்ததால் இந்த விருது அளிக்கப் படவில்லை. அணிவகுப்பும் நடைபெறவில்லை. 1977-ம் ஆண்டிலிருந்து 1983-ம் ஆண்டு வரையில் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து இந்த விருதுகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டன. 1984-85-ல் மதுரையிலும், 1986-ல் கோவையிலும் இந்த விருது வழங்கப்பட்டது. 1987-ல் விருதுகள் அறிவிக்கப்பட்டும் அணி வகுப்பு நடைபெறவில்லை. 1988-ல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் இந்த விருது வழங்கப்படவில்லை. எனவே இந்த 1989 ஆம் ஆண்டு செப்டம்பரில் நடக்கவிருக்கும் அண்ணா பிறந்தநாளில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் விருதுகள் வழங்கும் விழா ஒரு மாவட்டத் தலைநகரில் மீண்டும் தொடங்கப் படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள மொத்தக் காவல் நிலையங்கள் 1,034. தொலைபேசி வசதி செய்யப்பட்டவை 966. 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தரப்பட அறிக்கையின்படி 756 காவல் நிலையங் களில் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டது. எனவே 1977-ம் ஆண்டிற்கு பிறகு இந்த 12 ஆண்டுகளில் 210 காவல் நிலையங் களுக்குத்தான் புதிய தொலைபேசி வசதி செய்து தரப்பட் டிருக்கிறது. இன்னும் தொலைபேசி வசதி செய்து தரப்படாமல் உள்ள காவல் நிலையங்கள் 68, புறநகர்க் காவல் நிலையங்கள் 20. எனவே இந்த 88 காவல் நிலையங்களுக்கும் இந்த ஆண்டிலே தொலைபேசி வசதி செய்துதரப்பட்டு, தொலைபேசி வசதி இல்லாத காவல் நிலையங்களே தமிழ் நாட்டிலே இல்லையென்ற நிலை ஏற்படுத்தப்படும் என்று அறிவித்துக் கொள்கிறேன். இதற்கு தொடரா செலவினமாக ரூபாய் இரண்டு லட்சத்து ஏழு ஆயிரத்து ஆறுநூற்று என்பதும் தொடர் செலவினமாக 11 லட்சத்து 61 ஆயிரத்து 600-ம் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை கிழக்கு மாவட்டம் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது நாகப்பட்டினத்தில் வாடகைக் கட்டடத்தில் உள்ளது. நேற்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் இராசேந்திரன் அவர்கள் பேசுகிறபோது எஸ். பி. யே அங்கே இல்லை என்றார். எஸ். பி. பதவிக்காக அங்கே ஒருவர் நியமிக்கப்பட்டு அவருடைய துணைவியார் உடல் நலமின்றி இருக்கிற காரணத் தால் சில நாட்கள் லீவில் இருக்கிறார். விரைவில் அங்கே வந்து பொறுப்பேற்க இருக்கிறார். அந்த மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது நாகப்பட்டினத்தில் வாடகைக் கட்டடத்தில் உள்ளது. இந்த கண்காணிப்பாளர் அலுவலகம் கட்ட ஆகும் செலவு 53 லட்சம் ரூபாய் என்று 1987-ல் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இப்போதுள்ள விலை விகிதப்படி 68 லட்சம் ரூபாய் ஆகுமென்று கணக்கிடப் பட்டுள்ளது. இந்த ஆண்டிலே, இதை கட்டி முடிக்க நிதியாதாரம் இல்லை என்றாலும், இதை எங்கே கட்டுவது என்ற பிரச்சினை எழுந்த போது, நாகப்பட்டினம் என்றால் அந்தப் பகுதியில் ஒரு ஓரத்திற்கு அது போய்விடுகிறது. எனவே நடுப்பகுதியாக இருக்கிற திருவாரூரில் கட்டலாமா என்கிற ஒரு யோசனை இருக்கிறது. எனவே நாகையா, திருவாரூரா என்பது விரைவிலே முடிவு எடுத்து அறிவிக்கப்படும். ஆகவே இரண்டு ஊரிலே ஒரு ஊரில் நிச்சயமாக கட்டப்படும்.

அடுத்தது, மிக முக்கியமான பல்லாண்டுகால கோரிக்கை, தங்களுடைய கோரிக்கைகளுக்காக திரு. ரமணி அவர்கள்கூட சொன்னார்கள் - தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராட்டத்திலே ஈடுபட்ட போலீஸ்காரர்கள், அதிகாரிகள் கடந்த கால ஆட்சியிலே நடவடிக்கைக்கு உள்ளானார்கள். இதன்காரண மாக வழக்கு மன்றத்திற்கும் சென்று இருக்கிறார்கள். கடந்த கால அரசு அவர்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் அனைத்தும் ரத்து செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே அவர்கள் வழக்கைத் திரும்பப் பெற்று, பணிகளிலே சேரலாம் என்று அழைப்பு விடுக்கிறேன்.

இன்னொன்று இந்த ஒலி பெருக்கி, பெட்டி ஒலிபெருக்கி தான் வைக்கவேண்டும் என்று ஒலி பெருக்கிச் சங்கத்தார் - பலருக்கு பல தொல்லைகளைத் தருகிற அளவிலே சட்டம்

இருக்கிறது - பலர் எனக்கு மனுக்களை அனுப்பினார்கள். அவர்களின் சார்பாக திரு. கோவை ராமநாதன் அவர்கள்கூட நேற்று என்னிடத்திலே விண்ணப்பித்துக் கொண்டார்கள். எனவே அதைப்பற்றி இந்த அரசு ஆலோசித்து, கூம்பு வடிவம் உள்ள ஹாரன்களைப் பொதுகூட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், மண்டபங்களிலே நடைபெறும் நிகழ்ச்சிகள், திருமண விழாக்கள் போன்றவைகளுக்கு மாத்திரம் அந்தத் தடை இருக்கலாம். அங்கே பெட்டி ஹாரன்தான் வைக்க வேண்டும் என்றும் இப்போது முடிவு எடுக்கப்பட்டு, பொதுக் கூட்டங்களிலே இந்தக் கூம்பு வடிவ ஹாரன்களை உபயோகிக் கின்ற தடை ரத்து செய்யப்படுகிறது என்று அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொன்று, இந்த அவை முழுவதுமே எழுப்பிய கோரிக்கை ஹெல்மெட்டைப் பற்றியது. ஸ்கூட்டரிலே பயணம் செய்வோர் கட்டாயமாக ஹெல்மெட்டை அணியவேண்டும் என்று தடை இருக்கிறது. இந்த உத்தரைவை ரத்து செய்ய வேண்டும் என்று நாளுக்குநாள் ஏராளமாக முறையீடுகள் இந்த அரசுக்கு வந்து கொண்டு இருக்கின்றன. அந்த அடிப்படையில் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரேமுகமாக இந்தக் கருத்தை எடுத்துக்கூறியிருக்கிறார். இதற்கென அமைக்கப் பட்டுள்ள குழுவிலே உள்ள டாக்டர் ராமமூர்த்தி, டாக்டர் மோசஸ். டாக்டர் வேணுகோபால் அவர்களோடு காலையிலே நான் தொடர்பு கொண்டு, அவர்களோடு பேசி, அவர்களுடைய அனுமதியைப் பெற்று இதனை அறிவிக்கிறேன். இனிமேல் ஹெல்மெட்டை அணியாதவர்கள் மீது போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினத்திலேயிருந்து இதற்கு என்று போராட்டம் இருந்தது, இங்கே, மாண்புமிகு முதலமைச் சருக்கு எல்லோரும் சேர்ந்து யுனானிமஸ் - ஆக நன்றியைத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஆனால் இதிலே தலைவராக இருக்கிற டாக்டர் ராமமூர்த்தி சொன்னார்; ஒன்று சொல்லி விடுங்கள், உயிர்ப் பாதுகாப்பு வேண்டுமானால், ஹெல்மெட் அணியவேண்டும். அதைப்பற்றிக் கவலையில்லை, என்றால் அதை அவர்கள் அணியாமல் இருக்கலாம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் கவனத்திலே வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் ஹெல்மெட் அணிய விரும்பாதவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனவே அந்தத் தடை நீக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று பல ஆண்டுக்காலமாகக் காவலர்கள் சந்தேக கேஸ்கள் போடுவது என்பது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அதனால் பல நிரபராதிகள் அவதிக்கு ஆளாவது இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததின் பேரில், இனி சந்தேக கேஸ்கள் போடுவது என்பது அடியோடு ரத்து செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகம் எங்கும் இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், தலமைக்காவலர்கள், காவலர்கள் ஆகியவர்களுடைய இல்லங்கள் 27,469 இல்லங்கள் இருக்கின்ற. அவர்களுடைய இல்லங்களிலே மின் விசிறி இதுவரையில் தரப்படவில்லை. நாங்களும் கட்டிக் கொடுத்தோம். அவர்களும் கட்டிக் கொடுத்தார்கள். இருந்தாலும்கூட அந்த 27,469 இல்லங்களில் ஒரு ஃபேன், மின் விசிறி கூட இல்லாமல் இருக்கின்றது. இதை ஒரு இரண்டு ஆண்டுத் திட்டமாக எடுத்துக்கொண்டு, இந்த ஆண்டிலே ஒரு பகுதியும், அடுத்த ஆண்டிலே ஒரு பகுதியுமாக இந்த 27,469 இல்லங்களுக்கும் மின் விசிறிகள் அமைத்துத் தரப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

ஜீப்புகள் வழங்குவதைப் பற்றிச் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே மொத்தம் உள்ள காவல் கோட்டங்கள் 108. ஒரு காவல் கோட்டத்திற்கு ஒரு ஜீப் அளிக்கவேண்டும் என்பது அரசின் விருப்பம். இதுவரையில் ஜீப் அளிக்கப்பட கோட்டங்கள் 95. இன்னும் ஜீப் வழங்கப்படவேண்டிய கோட்டங்கள் 13 தான்.

ஒரு ஜீப்பின் விலை 1 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய். 13 காவல் கோட்டங்களுக்கு ஜீப் வழங்க மொத்தச் செலவு 18 லட்சம் ரூபாய். இதுவரையில் ஜீப் வழங்கப்படாத காவல் கோட்டங்கள் வேலூர், சேலம் புறநகர், ஈரோடு டவுன், ஊட்டி, நாகபட்டினம், திருச்சி, கோவை ஊரகம், இருப்புப்பாதைக் காவல், திருச்சி, அடையாறு, மைலாப்பூர், தியாகராய நகர், அண்ணா நகர், டிராபிக் இன்வெஸ்டி கேஷன், சென்னை, இவற்றில் சென்யையிலே உள்ள அடையாறு, மைலாப்பூர், தியாகராய நகர், அண்ணா நகர், டிராபிக் இன்வெஸ்டி கேஷன் ஆகிய 5 இடங்கள் தவிர, மற்ற இடங்களுக்கு இந்த ஆண்டே ஒரு கோட்டத்திற்கு ஒரு ஜீப் வீதம் வழங்க முடிவு செய்துள்ளது.

அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையிலே இளநிலை உதவியாளராகவோ, அலுவலக உதவியாளராகவோ நியமனம் செய்யலாம் என்ற அரசு ஆணை 15-2-1972-ல் கழக ஆட்சியில் வெளியிடப்பட்டது.

ஆனால் காவல்துறையில் போதுமான இளநிலை உதவி யாளர்கள் அல்லது அலுவலக உதவியாளர்கள் பணி இடங்கள் காலி இல்லாததால் கிட்டத்தட்ட 200 பேர் கருணையின் அடிப்படையில் வேலைபெறக் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய அரசு ஆணையின்படி கல்வித் தகுதி மற்ற உடல் தகுதி பெற்றிருந்தால்கூட, அவர் களைக் காவலர் பணிக்கோ அல்லது உதவி ஆய்வாளர் பணிக்கோ அமர்த்த இயலாத நிலை உள்ளது. இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, கல்வித் தகுதி மற்றும் உடல் தகுதி உள்ளோருக்கு காவல்துறையில் அவர்களுடைய தகுதிக்கேற்ப காவலர்களாகவோ அல்லது உதவி ஆய்வாளர்களாகவோ, கருணை அடிப்படையில் பணியில் நியமிக்கலாம் என்று இந்த அரசு ஆணை வழங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையினருடைய உணவுப்படி மற்றும் மற்ற சம்பளங்கள் குறித்தும் திரு. ரமணி அவர்கள் நேற்றையதினம் இங்கே விரிவாகப் பேசினார்கள். விரைவிலே வர இருக்கின்ற

ஊதியக் குழுவினுடைய பரிந்துரைக்குப் பிறகு இதுபற்றி யோசிக்கப்படும் என்று நான் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னரசு அவர்கள் பேசும்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் அணி ஒன்றை உளுந்தூர்பேட்டையில் வைக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டார்கள். இப்போது இப்படிப்பட்ட சிறப்புக் காவல் அணி தமிழகத்திலே 9 இடங்களிலே அமைக்கப் பட உள்ளது. அதிலே ஒரு சிறப்புக் காவல் அணியை உளுந்தூர் பேட்டையில் அமைக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் டி. ஐ. ஜி. அலுவலகத்தை மாவட்டத்தின் மத்தியப் பகுதிக்கு மாற்றவேண்டுமென்று தென்னரச அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதை விருதுநகரில் அமைக்கவேண்டு மென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பெ. சீனி வாசன் மற்றும் திரு. சொக்கர் அவர்களும் கேட்டுக்கொண் டார்கள். மெஜாரிட்டியாக அவர்கள் இருக்கின்ற காரணத்தால் விருதுநகரில் டி. ஐ. ஜி. அலுவலகம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வரதட்சிணை தடைச் சட்டத்தைப் பற்றி நேற்றைய தினம் திரு. ரமணி அவர்கள் மிக உருக்கத்தோடு பேசி, அதன் காரணமாக எத்தனை பெண்கள் இறந்திருக்கிறார்கள் என்ற கணக்கையும் சொன்னார்கள். என்னிடத்திலுள்ள அந்தக் கணக்கின்படி பார்த்தால்கூட, 1986-ல் 63 வழக்குகள். வர தட்சிணைக் கொடுமையால் இறந்துபோனவர்களுடைய வழக்கு 1986-லே பதிவு செய்யப்பட்டது 63 வழக்குகள். தண்டனை அளிக்கப்பட்டவை 12. விடுதலை செய்யப்பட்டவை 19. நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளவை. 28. இப்படி மொத்தமாகப் பார்த்தால் 1986, 87, 88 ஆகிய மூன்று வருடங்களில் மொத்தம் பதிவு செய்யப்பட்டவை 234 வழக்குகள். தண்டனை அளிக்கப் பட்டவை மொத்தம் 17 தான். விடுதலை செய்யப்பட்டவை 32. நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பவை 116. புலன் ஆய்வு விசாரணையில் இருப்பவை 58, உண்மைக்கு புறம்பானவை என்று முடிவு எடுக்கப்பட்டது 6. விரைவிலே இந்த வழக்குகளை

எல்லாம் முடிக்கவேண்டுமென்று காவல்துறையினர் கேட்டுக் கொள்ளப்படுவார்கள் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, இந்த வரதட்சிணைக் கொடுமையை ஒரு நீண்டகாலத் திட்டமாக ஒழிப்பதற்குத்தான் பெண்களுக்குச் சொந்துரிமை வேண்டும் என்கின்ற ஒரு சட்டடத்தை இந்தக் கூட்டத் தொடரிலே இந்த அவையிலே கொண்டுவர இருக்கின்றோம். எனவே ஒரு நீண்டகாலத் திட்டமாக அந்தச் சட்டம் இங்கே நிறைவேற இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாகவே அறிவார்கள்.

மேலும் பல விவரங்களை எல்லாம், எத்தனை பெண்கள் என்று, அவர்களின் பெயர்களை எல்லாம் சொல்லியிருக் கிறார்கள். மீரா, திரிபுரசுந்தரி, கோவை நகரிலே ஷோபா, திருவொற்றியூரிலே கிருஷ்ணவேணி ஜலஜா என்று பெயர்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று பாப்பா உமாநாத் அவர்களும் திருவொற்றியூரிலே ராணியம்மாள் மகள் ஷோபா, திருச்சி சீனிவாச நகரில் மா. முத்து என்பருடைய மகள் பானுமதி, இவர்கள் எல்லாம் வரதட்சிணைக் கொடுமையால் இறந்திருப் பதைப்பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி யெல்லாம் கவஸிக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று பேசும்போது சொன்னார்கள். சென்னை நகரத்திலே பல சீட்டுக் கம்பெனிகள் பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து சீட்டு நடத்தி, காலக்கெடு முடிந்தவுடன் உரியவர்களுக்குப் பணத்தைத் திரும்பச் செலுத்தாமல் ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி பெற்ற பணத்தை திரும்பச் செலுத்தாமல் ஏமாற்றுபவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே ஓரியண்டல் ஃபைனான்ஸ், சென்னை-6 ரூ. 92 இலட்சம் கையாடல் செய்திருக்கிறார்கள். ஜயசக்தி ஃபைனான்ஸ், சென்னை-17 ரூ. 22 இலட்சம் கையாடல் செய்திருக்கிறார்கள். தனலட்சுமி ஃபைனான்ஸ் அரும்பாக்கம் ரூ. 5 லட்சம் கையாடல் செய்திருக்கிறார்கள்.

சுவாதி சிட் ஃபன்ட்ஸ், சென்னை-34, ரூ. 4 லட்சம் கையாடல்; சக்தி பாரத் ஃபைனான்ஸ், சென்னை, ரூ. 2 லட்சம் கையாடல்; தமிழ்நாடு ஃபைனான்ஸ், சென்னை-2, ரூ. 3 லட்சம் கையாடல்; ரூ. 128 லட்சம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது.

இன்னொரு பட்டியலில் கதேசன் ஃபைனான்ஸ், சென்னை-1, ரூ. 18 லட்சம் கையாடல்; சமாரியா ஃபைனான்ஸ், சென்னை-4, ரூ. 13 லட்சம் கையாடல்; சூர்யோதயா ஃபைனான்ஸ், சென்னை-35 ரூ. 1 லட்சம் கையாடல்.


திரு. பாலசுப்பிரமணியம், நேற்று இன்னொரு நபரைப் பற்றிச் சொன்னார்கள். பெயரைச் சொல்லவில்லை. (குறுக்கீடு). சுதர்சன் என்கின்ற ஒரு நபருடைய பெயரைக் குறிப்பிட்டு, விவரம் தந்திருக்கிறார்கள். இதுகுறித்து நடவடிக்கைகளை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்தக் காவல்துறை மானியத்தின் மீதும் ஆயத்தீர் வைத்துறை மானியத்தின் மீதும் மற்றும் தீயணைப்புத்துறை மானியத்தி மீதும் நல்ல கருத்துக்களை எடுத்துரைத்த அனை வருக்கும் நன்றியினைத் தெரிவித்து, தந்துள்ள வெட்டுத் தீர் மானங்களைத் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நமது முதல்வர் அவர்கள் பல நல்ல அறிவிப்புகளை எல்லாம் கொடுத்திருக் கிறார்கள். ஒரு விஷயம் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். போராட்ட காலத்தில் பழி வாங்கும் வகையில் பல போலீசாரும் அதிகாரிகளும் நீக்கப்பட்டிருப்பவர்கள் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று அரசு அவர்களுக்கு அழைப்புக் கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். அவர் களுக்குப் போலீசாருடைய அசோசியேஷன் ஏற்படுத்தி நடத்துவதற்கு அரசு என்ன நிலையை எடுத்துக்கொள்ள இருக்கிறது என்பதை அறிந்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் அப்போதே சொன்னேன். போலீசாருக்காக முதல் குரல் கொடுத்தவன் என்று. நானே சங்கத்தின் தலைவனாக இருந்து அதை நடத்திக் கொண்டிருப்பேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் இங்கே சந்தேக கேஸ்களிலே வழக்குகளே போடப்படாது என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்கது. ஏற்கெனவே நிலுவையில் உள்ள அந்த வழக்குகளை வாபஸ் பெற அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதற்கும் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் உண்டு. (சிரிப்பு).



உரை : 15 நாள் : 04.05.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை குறித்த விவாதத்திற்கு பதில் அளிப்பதற்கு முன்பு, இந்த மாமன்றத்திற்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். The Supreme Court have directed the Government of India to constitute a Tribunal within one month from today. (மேசையைத் தட்டும் ஒலி).

தஞ்சை விவசாயிகளின் சார்பாகத் தொடரப்பட்ட வழக்கில், தமிழக அரசும் இணைந்து சிறந்த வழக்கறிஞர்களை வைத்து வாதாடியது உங்களுக்குத் தெரியும். கர்நாடக மாநிலம் இன்னமும் பேச்சுவார்த்தையை நடத்தலாம் என்று கூறியபோது, இனிமேல் பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை என்கிற தீர்மானத்தை, எல்லாக் கட்சிகளின் சார்பிலேயும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அந்த வழக்கிலே வாதாடுகின்ற வழக்கறிஞர்களுக்கு மேலும் உறுதுணையாக இருக்கும் விதத்தில் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்த வெற்றியிலே பங்குண்டு என்பதைத் தெரிவித்து, அவர்களுக் கெல்லாம் என்னுடைய உளமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே உரை நிகழ்த்தியபோது, இறுதியிலே, அந்த கடிகாரத்தினுடைய வேகத்திற்கும் மணி யினுடைய ஓசைக்கும் இடையே, நான் சொல்லிய கருத்துக்களுக்கு இயல்புடையதாக இருந்தாலும்கூட, ஒரு பழமொழியைச் சொன்னேன். அந்தப் பழமொழி, அவைக் குறிப்பிலே இடம் பெறுவது எனக்கும் அழகல்ல; இந்த அவைக்கும் அழகல்ல என்பதனால், அதனை நீக்கிவிடுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய வேண்டுகோளுக்கிணங்க, அந்தப் பழமொழி, அவைக்குறிப் பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . . . (குறுக்கீடு).

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான மகிழ்ச்சிகரமான ஒரு தீர்ப்பை, சுப்ரீம் கோர்ட் அளித்து, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திருக்கிறார்கள். அவையின் சார்பாக, அவையின் உறுப்பினர்கள் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட இந்த நல்ல முயற்சிக்கு, அதிலே நமக்குக் கிடைத்த வெற்றிக்கு, முதலமைச்சர் அவர்களே முழு முழு காரணம் என்ற காரணத்தினால், அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மகிழ்ச்சியிலே நம்மோடு இருந்து கொண்டாடு வதற்கு பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கில்லை என்கின்ற வேதனை என்னுடைய இதயத்தை ஒருபுறம் குடைந்து கொண்டிருந்தாலும்கூட, வெளியில் இருந்தாலும் அவர்களும் மகிழ்ச்சி அடைவார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

காவல்துறை குறித்த ஆய்வுரை, தீயணைப்புத் துறை குறித்த விளக்கக் குறிப்புகள், அதைப்போல ஆயத் தீர்வை குறித்த விளக்கக் குறிப்புகள் இவைகளின் மீது நேற்றும், இன்றும் மாண்புமிகு உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்கள் அரிய கருத்துக்களையெல்லாம் எடுத்து வழங்கியிருக்கிறார்கள். குறிப்பாக இறுதியாகப் பேசிய, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மிகவும் பொதுவான அறிவுரைகளை, கண்டிக்கின்ற நேரத்திலே கண்டித்து, திருத்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு, பொதுவான அறிவுரைகள் பலவற்றை இங்கே எடுத்துக் கூறியமைக்காக அவர்களை நான் பாராட்டவும், நன்றி கூறவும் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். காவல்துறை, எந்த ஒரு கட்சிக்கும் எதிரான, விரோதமான, பகையான ஒரு துறை அல்ல. அப்படிப்பட்ட அந்தத் துறை குறித்து, இங்கே பேசப்பட்ட எல்லாக்

கட்சித் தலைவர்களுடைய பேச்சுக்களும், உறுப்பினர்களுடைய கருத்துக்களும், ஒரு விரோத மனப்பான்மையோடு கூறப்பட்டவை என்று நான் எடுத்துக் கொள்ளவில்லை. இன்னும் நல்ல முறையில் காவல்துறை பணியாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் என்றே நான் அவைகளை ஏற்றுக் கொள்கின்றேன். அந்தத் துறையினுடைய பொறுப்பை நான் சேர்த்து வகிக்கிறேன் என்ற காரணத்தினாலே இங்கே நீங்கள் சொன்ன எல்லாக் கருத்துக்களையும் ஏற்று, அந்தக் கருத்துக்களில் ஒன்றிரண்டு தவறானவைகளாக இருந்தாலும் கூட, அவைகளைப் பற்றிய விளக்கங்களை உங்களுக்குக் கூறி, நீங்கள் சுட்டிக் காட்டியதைப் போல தவறு இந்தக் காவல்துறையின்பால் இருந்தால், எந்த முறையிலே அந்தத் திருத்தத்தை செய்வதற்கு என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ, அந்த முயற்சிகளை யெல்லாம் மேற்கொள்வேன் என்று உறுதியளிக்கின்றேன்.

நேற்றைய தினம் மிக முக்கியமாக இந்த ஆய்வுரையிலே ஒரு பிரச்சினை கிளப்பப்பட்டு, நேற்றைக்கு தாங்களும் நானும் அவை முன்னவரும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கூட ஆய்வுரையிலே உள்ள ஒரு வாக்கியத்தை அகற்றாவிட்டால், இந்த அவையிலே, விவாதத்திலே கலந்து கொள்ளமாட்டோம் என்று பிரதான எதிர்க்கட்சி வெளிநடப்புச்செய்து, தங்களுடைய கண்டனத்தை அத்தோடு நிறுத்தாமல், மீண்டும் உள்ளே வந்து அவை நடப்பதற்கு குறுக்கே சில செயல்களைப் புரிந்த காரணத் தினாலே வெளியேற்றப்பட வேண்டிய வேதனையான நிலை உருவாகி, தொடர்ந்து இன்றும் அதே நிலை ஏற்பட்டு, பிறகு தாங்களும் நானும் எவ்வளவோ முயன்றும்கூட, அதற்குப்பிறகு நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன், கொறடா திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் முயன்றும்கூட அந்த தூதும் பயனளிக்காமல் போய் விட்டது என்று கருதுகிறேன். அவர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளாதது வருத்தப்படத் தக்கது. அவர்களும் இருந்து தாக்கியோ அல்லது வேகமாகப் பேசியோ குற்றம் குறைகளை எடுத்துச் சொல்வார்களோயானால், அது எனக்கு மெத்தவும் பயன்படக்கூடும். ஏனென்றால் மக்களைப் பாதுகாக்க, சட்டம் ஒழுங்கு அமைதி, ஆகியவற்றை நிலைநாட்ட, மிக முக்கியமான பொறுப்பைக் கையிலே ஏந்தியிருக்கிற ஒரு மாபெரும் இலாக்கா

காவல்துறை என்ற காரணத்தினால் எல்லோருடைய கருத்துக்களும் அதற்குத் தேவைப்படுகின்றன. ஆனால் மிகச் சாதாரண ஒரு காரணத்தைக் காட்டி அவர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளாமலேயே போயிருக்கிறார்கள்.

நான் காலையிலே சொன்னேன், ஆய்வுரையில் இது போன்று வாக்கியங்கள் இன்று நேற்றல்ல, அ. தி. மு. க. ஆட்சிக் காலத்திலேயிருந்து நிறைய இடம் பெற்றிருக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன். 1980-81-ஆம் ஆண்டு இந்த அவையிலே வைக்கப்பட்ட காவல்துறை ஆய்வுரையில், 23-ஆம் பக்கத்தில் வந்திருக்கின்ற அந்த வாசகம். . . . . .

"23-12-1980-லேயிருந்து நாராயணசாமி நாயுடு தலைமையிலான சங்கம் இன்றியமையாப் பொருள்களை எடுத்துச் செல்வதைத் தடுத்து நிறுத்தும் போராட்டத்தைத் தொடங்கி மாநில அளவிலான முழு அடைப்புப் போராட்டத்தை நடத்தி அப்போராட்டத்தில் பாலங்களை வெடி வைத்துத் தகர்த்தல், பேருந்துகளையும், லாரிகளையும் கொளுத்துதல், மின் கம்பிகளை வெட்டி நெடுஞ்சாலைகளின் குறுக்காகப் போடுதல், நீர் வழங்கும் குழாய்ப் பாதைகளை சேதப்படுத்துதல் போன்ற பல்வேறு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டார்கள்" என்று விவசாய சங்கத்தினுடைய தலைவர் அவர்களைப் பற்றியே 1980-81-ஆம் ஆண்டு காவல்துறை ஆய்வு உரையிலே கூறப்பட்டு இருக்கிறது. அதை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியினர் யாரும் கூறி வெளிநடப்பு கூட செய்யவில்லை. ஆனால் அந்தக் கருத்துக்கு மாறான கருத்துக்களை விவாதத்திலே எடுத்து வைக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதற்கு எதிர்க்கட்சியினர் வாதிட்டிருக்கிறார்கள். ஆனால், அதே 1980-81-ல் 27-ஆம் பக்கத்தில் "ஆத்தூர் கடைத் தெருவிலே உள்ள ஜாதி இந்துக்களின் கூரைவேய்ந்த கடைகளுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட விவசாயிகள் தீயிட்டார்கள்" என்றே கூட அவர்கள் ஒரு வாக்கியத்தைப் பதித்து இருக்கிறார்கள். அதற்காக இதுபோன்ற எந்த ஒரு முடிவையும் எந்த ஒரு நிலையையும் அன்றைக்கு இருந்த எதிர்க்கட்சியினர் எடுக்கவில்லை. மாறாக, ஆய்வு உரையிலே வந்திருக்கின்ற அந்தக் கூற்று தவறானது என்று சுட்டிக் காட்ட வாய்ப்பு அன்றைக்கு பயன்படுத்திக்கொள்ளப்பட்டது.

மற்றொன்று, 42-ஆம் பக்கத்தில் 1980-81-ஆம் ஆண்டு ஆய்வு உரையிலே "மயில்சாமி என்பவர் தன் மீது காறி உமிழ்ந்து செருப்பால் அடித்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டி ஆசிரியர் ஒருவர் கொடுத்த புகாரின் மேல் விசாரணை நடந்தது" என்று இருக்கிறது. எவ்வளவு இழிவான வார்த்தைகள் எல்லாம் அதிலே இடம் பெற்று, ஒரு ஆசிரியர் கொடுத்த புகாரைப் பற்றி மயில்சாமி என்ப வருடைய பெயரும் குறிப்பிடப்பட்டு வெளிவந்திருப்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். இவைகள் எல்லாம் கூட நீதிமன்ற விசாரணையிலே இருந்த நேரத்திலேதான் இந்த ஆய்வு உரைகள் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டன என்பதையும் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

மற்றொன்று, 1982-83-ஆம் ஆண்டு ஆய்வு உரையில் 65-ஆம் பக்கத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய ஒரு போராட்டத்தைக் குறிப்பிடும்போது, "தடை உத்திரவை மீறி அழகர் சாமி, எம். எல். ஏ., சிவசாமி, வரதராஜன், சின்னச்சாமி கவுண்டர், முத்துச்சாமி கவுண்டர் உட்பட 322 பேர் கைது செய்யப் பட்டார்கள்" என்று. அதன் காரணமாக எழுந்த விளைவுகள் அந்த ஆய்வு உரையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அழகர்சாமி அவர்கள் அதற்கு பதில் அளித்தார்களே அல்லாமல், அந்த ஆய்வு உரையிலேயிருந்து அந்தக் கருத்தை எடுத்துவிட வேண்டும் என்று சொல்லவில்லை. ஆய்வு உரையிலே அப்படிப் பட்ட கருத்துக்கள் இடம் பெறுகின்ற காரணத்தால், அதை உறுப்பினர்கள் ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு அதைப் பற்றி பேசவே கூட ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்று தங்களுடைய கருத்துக்களை அவைக்கும் நாட்டுக்கும் அறிவிக்க அதை பயன் படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதே பக்கத்தில் இன்னொரு இடத்தில், "22-11-1982 அன்று மதுரை மேலூரில் பெரியாறு பனிரெண்டாம் கால்வாய் ஆயக்கட்டுப் பகுதியைச் சேர்ந்த சுமார் 3,000 விவசாயிகள் பாசனத்திற்கு தண்ணீர்விடக் கோரி வீரண்ண அம்பலம் எம். எல். ஏ., தலைமையிலே மேலூர் வட்டாட்சி அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் சென்று மனு கொடுத்தார்கள். ஊர்வலத்தினர் கலந்து செல்லும்போது மேலூர் எல்லையிலே திருச்சிராப்பள்ளி சாலையில் சென்றுக் கொண்டிருந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகம்,

சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துக்களின் மீது கல்லெறிந் தார்கள்" என்று ஒரு எம். எல். ஏ.-வை சம்பந்தப்படுத்தியே அன்றைக்கு ஆய்வு உரை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த எழுத்துக்கள் அகற்றப்பட வேண்டும் என்று அன்றைக்கு யாரும் கோரவில்லை. அதற்கு மாறாக, அந்த ஆய்வு உரையில் இருந்த கருத்தை எதிர்த்து அன்றைய தினம் பேசப்பட்டு இருக்கிறது.

1984-85-ல் 85-ம் பக்கத்தில் ஆய்வு உரையில் ஒரு சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, "இச்சம்பவம் தொடர்பான கோட்டை காவல் நிலைய குற்ற எண். 1239-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. பொதுக்கூட்டத்தில் முஸ்லீம் இனத்தவரையும், அவர்களது தலைவர் காயிதே மில்லத் பற்றியும் தரக்குறைவாகப் பேசியதாக ராமகோபாலன் மீது கோட்டை காவல் நிலையக் குற்ற எண். 1240/84-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காலையிலே கூட நம்முடைய காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர், "எம். எல். ஏ. மாத்திரம் அல்ல; அவர்களுடைய தலைவர்" என்று சொன்னார்கள். காயிதே மில்லத் அவர்கள் எவ்வளவு பெரிய தலைவர் என்பதை நம்முடைய இலக்கியச் செல்வர் உணராதவர் அல்ல. அவருடைய பெயரைப் போட்டு அவரைப் பற்றி இழிவாகப் பேசியதும் இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதைப் போலவே இப்பொழுது வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வு உரையிலே கூட எம். எல். ஏ.-வை ஆளும் கட்சியோ அல்லது காவல்துறையோ, முதலமைச்சரோ குறை கூறி அந்த ஆய்வு உரையிலே எந்த வாக்கியமும் இடம்பெறவில்லை. அதிலே இடம் பெற்றிருப்பதெல்லாம், பேசிய ஒரு நபர், இதுபோன்ற வன்முறைகளைத் தூண்டுகின்ற வகையிலே பேசிய காரணத்தாலே, எம். எல். ஏ.-வைப் பற்றி மாத்திரமல்ல, அந்த ஊர் ஒன்றியத் தலைவரைப் பற்றியும் பேசிய காரணத்தால், அங்கே இத்தகைய விளைவுகள் எழுந்தன என்று, ஒரு கலவரம் உருவானதற்கான சூழ்நிலை எப்படி அங்கே ஆரம்பமாயிற்று என்பதற்குத்தான் அந்த ஆய்வுரையிலே அதைக் குறிப்பிட்டிருக்கிறார்களே அல்லாமல் வேறல்ல. யாரையும் வேண்டுமென்றே இழிவுபடுத்துவதற்காக அல்ல. நான் காலையிலே சொன்னதைப் போல, பெயரைக் கூட

போடவில்லை. நான் இங்கே படித்துக் காட்டியவைகளில் எல்லாம் பெயர்களையும் அதிலே அச்சடித்து இருக்கிறார்கள். இதிலே பெயரைக் கூடப் போடவில்லை. ஒரு எம். எல். ஏ., என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைக் குறை கூறிப் பேசினார் அந்த நபர் என்றுதான் இருக்கிறதே அல்லாமல் வேறல்ல. இதை ஒரு பெரிய காரணமாக எடுத்துக்காட்டி, இரண்டு நாள் இந்த அவையிலே காவல்துறை மானியத்திலே எடுத்துச் சொல்ல வேண்டிய கருத்துக்களையெல்லாம் சொல்கின்ற வாய்ப்பை அவர்களாகவே தவறவிட்டுக் கொண்டு நம் மீது பழி போடுவதை நான் உள்ளபடியே மெத்த வேதனையோடு கண்டிக்க வேண்டியவனாக இருக்கின்றேன். வேறு வழியில்லை, இத்தகைய செயல்களைக் கண்டிப்பதைத் தவிர என்றும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறை எந்த அளவிற்கு எல்லாம் மக்களோடு தொடர்பு கொண்ட துறை என்பதனை இங்கே பேசிய நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும் மற்றும் அப்துல் லத்தீப் அவர்களும் மற்றும் வரதராசன் அவர்களும் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், உயிருக்கும் உடமைக்கும் மக்களுக்கு உரிய பாதுகாப்பைத் தரவும், குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், புலன் விசாரணையிலே ஈடுபடவும், கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களிலே குற்றவாளி களுக்குத் தண்டனை பெற்றுத் தர நீதிமன்றங்களுக்கு வழக்கை எடுத்துச் செல்லவும், போக்குவரத்தை ஒழுங்கு செய்யவும், குற்றங்கள் தோன்றுவதற்கு முன்பே, அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, புலனாய்வின் மூலமாக செய்திகளை அறிந்து, முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகளை எடுக்கவும் இவை போன்ற சமுதாயப் பணிகளிலே காவல்துறையினர் ஈடுபடுகிறார்கள்.

அத்தகைய காவல்துறையிலே உள்ள கேடுபாடுகளை, ஒரு சிலர் செய்கின்ற தவறுகளை, இதே இடத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நானும் சுட்டிக்காட்டி இருக்கின்றேன். குறிப்பிட்ட சம்பவங்களை அன்றிருந்த ஆளுங்கட்சிக்கு எடுத்துக் காட்டியிருக்கின்றேன். ஆனாலும் காவல் துறைக்கு என்று உள்ள மாண்பினையும் அதனுடைய கடமைகளையும்

என்றைக்கும் நான் குறைத்து மதிப்பிட்டவன் அல்ல. இன்றைக்கு நம்முடைய வரதராசன் அவர்கள் பேசும்போது, கடைசியாக போனால் போகிறது என்று காவல்துறையிலே உள்ள அலுவலாளர்களுடைய நலன்களைப் பற்றி பேசினார்கள் என்றாலும்கூட, அவர்களுடைய மொத்தப் பேச்சைக் கவனிக்கும் போது காவல்துறை மீதே ஒரு வெறுப்பை அவர் மனதிலே தேக்கி வைத்துக்கொண்டிருக்கிறாரோ, அந்த அளவிற்குக் காவல்துறை அவரைப் போன்றவர்களுடைய உள்ளத்தைக் கெடுத்து வைத்திருக்கிறதோ, அப்படிப்பட்ட நினைவு அவருக்கு ஏற்படுவதற்குக் காவல்துறை காரணமாக இருந்திருக்கிறதோ என்றுகூட நான் எண்ணியதுண்டு. ஆனால் நானும் சரி, மற்றவர்களும் சரி, காவல்துறையை இன்றைக்கும் காணுகின்ற நேரத்தில், இதிலே உள்ளவர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள் தான் என்பதையும் எப்படி அரசு அலுவலாளர்களுக்காக நாம் இன்றைக்கு வாதாடுகிறோம். அரசு அலுவலாளர்கள் அனை வருமே நூற்றுக்கு நூறு பேர் நல்லவர்கள் என்று சொல்லி நாம் வாதாடவில்லை. ஆசிரியர்களுக்காக நாம் வாதாடுகிறோம், ஆசிரியர்கள் அத்தனை இலட்சம் பேருமே நல்லவர்கள் என்று சொல்லி அவர்களுக்காக நாம் வாதாடவில்லை. தொழிலாளர் களுக்காக நாம் வாதாடுகின்றோம். அந்தக் தொழிலாளர்களிலே ஒரு 10 சதவீதம் பேர், 20 சதவீதம் பேர் இன்றைக்கு தனிப்பட்ட முறையிலே அவர்கள் கடமை மறந்தவர்களாக, கண்ணியமற்ற வர்களாக இருக்கக் கூடும். இருந்தாலும் மொத்த சமுதாயத்திற்காக, பாட்டாளி சமுதாயத்திற்காக, வாதாடுகிறோம். அதைப்போலத் தான், ஆசிரியர்களிலே சில பேர் தவறானவர்கள் இருப்பதைப் போல, தொழிலாளர்களிலே சில பேர் தவறானவர்கள் இருப்பதைப் போல, அரசு அலுவலாளர்களிலே சில பேர் தவறானவர்கள் இருப்பதைப்போல, காவல் துறையிலும் சில பேர் தவறானவர்கள் இருக்கக்கூடும். நான் இல்லையென்று மறுக்கவில்லை. அதை மறுக்காத காரணத்தினாலேதான், வரதராசன் அவர்களே இங்கே எடுத்துக்காட்டிய பல சான்றுகளை, நானே சொன்ன பல சான்றுகளை இங்கே நான் மறுக்கவில்லை. காரணம், இதே அவையிலே நானே கூறிய ஒப்புக்கொண்ட குற்றச்சாட்டுக்கள் அவை. இவைகளை யெல்லாம் திருத்துவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நான் ஒன்றை இங்கே குறிப்பிட

விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் சாதிக் கலவரம், மதக் கலவரம், வேறு சில வகுப்புக் கலவரங்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடைபெறுகின்றன. என்றாலும்கூட, அண்மையிலே, டெல்லியிலே 2 மாநாடுகள் நடைபெற்றன. ஒரு மாநாட்டில் இந்தியாவினுடைய ஒருமைப்பாடு குறித்து விவாதிக்கப்பட்டது. அந்த மாநாட்டுக்குத் தமிழக அரசின் சார்பாக நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் சென்று இருந்தார்கள். அங்கே எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களில் இந்தியாவிலே இன்றைக்குப் பரவலாக நடைபெறுகிற அளவுக்கு கலவரங்கள் தமிழ்நாட்டிலே இல்லை என்கின்ற புள்ளி விவரம் அங்கே தரப்பட்டது.

இதற்கு அடுத்து அண்மையிலே டெல்லியிலே இன்னொரு மாநாடு இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் கூட கலந்து கொண்டு உரையாற்றிய மாநாடு. எல்லா மாநிலங்களிலும் உள்ள காவல்துறைத் தலைவர்களுடைய கலந்துரையாடல் மாநாடு, அந்த மாநாட்டை ஒட்டி ஒரு புத்தகம் வெளியிடப்பட் டிருக்கிறது. Director General - Inspectors General of Police Conference 1990 என்று அந்த புத்தகத்தினுடைய முதல் வரியிலேயே "During 1989 the law and order situation in the country remains under severe strain," என்றுதான் அந்தப் புத்தகம் ஆரம்பம் ஆகிறது. இந்தியா முழுவதும் சட்டம் ஒழுங்கு அமைதி இவைகளைக் காப்பாற்றுவதில் மிகுந்த சோதனையான நிலை, கஷ்டமான நிலை, சிரமமான நிலை இருப்பதை அந்தப் புத்தகம் எடுத்துக்காட்டுகிறது. அப்படி காட்டப்படுகின்ற அந்தப் புத்தகத்திலே கூட இந்தியாவில் காவல் துறையினுடைய திறமை தமிழ்நாட்டிலே எப்படி இருக்கிறது என்பதை விளக்குகின்ற வகையிலே ஒரு தனி பாராவே இதிலே அமைந்து இருக்கிறது. There is a sharp decline in the convictions in major offences in some States. It is not possible to discuss the subject at length. To cite only a few, convictions in murder cases came down from 2,463 in 1987 to 2,072 in 1988 and 922 in 1989. This would not include the figures of Karnataka as already mentioned elsewhere. In 1989, of the 922 convictions secured in murder cases, 707 were convicted in Tamil Nadu itself. இந்தியா

முழுவதும் 922 வழக்குகளிலே கன்விக்ஷன் வாங்கி கொடுத்த காவல்துறை இந்தியா முழுமையும் 922 கொலை வழக்குகளிலே கன்விக்ஷன் வாங்கித் தந்தது; அந்த 922-ல் 707 வழக்குகளில் தமிழ்நாட்டில்தான் கன்விக்ஷன் வாங்கித் தரப்பட்டது என்று இந்த பெரிய புத்தகத்தில் மிகப் பெருமையோடு அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாட்டின் பல்வேறு மாநிலங்களிலே உள்ள சட்டம் ஒழுங்கு நிலைமையை விரிவாக விவரிக்கின்ற இந்த அறிக்கையில் ஜம்மு, காஷ்மீர், பஞ்சாப், மத்திய பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் பீகார், மராட்டியம் ஆகிய மாநிலங்களிலே சட்டம் ஒழுங்கினுடைய தன்மை மிகக் கடுமையாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு விட்டு இதனைச் சொல்கிறார்கள்.

அது மாத்திரம் அல்ல, அதே அறிக்கையில் ஜாதிக் கலவரத்தை அவர்கள் ஆராய்ந்து இருக்கின்றார்கள். அதனால் ஏற்பட்ட உயிர் இழப்புகளைச் சொல்லும்போது 1985-ஆம் ஆண்டு 555 நிகழ்ச்சிகள், 332 பேர் உயிர் இழப்பு; 1986-ல் 764 நிகழ்ச்சிகள், 418 பேர் உயிர் இழப்பு; 1987-ல் 911 நிகழ்ச்சிகள், 383 பேர் உயிர் இழப்பு; 1988-ல் 720 நிகழ்ச்சிகள், 259 பேர் உயிர் இழப்பு; 1989-ல் 706 நிகழ்ச்சிகள், 802 உயிர் இழப்பு; என்கின்ற புள்ளிவிவரத்தைத் தந்து இருக்கிறார்கள். அந்தக் கால கட்டத்திலே தமிழ்நாட்டிலே போடியிலும் மற்றும் சில இடங்களிலும் ஒரு 29-லிருந்து 30, 35 உயிர் இழப்புகள். இந்தியா முழுவதும் பார்க்கிற நேரத்திலே ஆங்காங்கே சட்டம் ஒழுங்கு அமைதி கெட்டுள்ள ஒரு சூழ் நிலையோடு தமிழ்நாட்டை நாம் ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் குறைவானதுதான். ஆனாலும்கூட குறைவாக இருந்தாலும்கூட இது கூட இருக்கத் தேவையா என்கின்ற எண்ணம்தான் ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கும் இருக்கிறது என்பதை நான் மறைத்திட விரும்பவில்லை.

1987-லேயிருந்து 1989-க்குள் மிகவும் குறைந்து விட்ட தாகவும் 922 பேர்களுக்குதான் கொலை வழக்கிலே தண்டனை இந்தியா முழுவதும் கிடைத்தது என்றும், அதில் 707 வழக்கு களிலே, கொலைகாரர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தது தமிழ்நாடுதான் என்றும் குறிப்பிட்ட அந்தப் புத்தகத்தில், இந்தியா முழுமையும் ஆண்டுதோறும் சுமார் 27 ஆயிரம் கொலை வழக்குகள் பதிவாகின்றன என்ற புள்ளி விவரத்தையும்

தந்திருக்கிறது. அந்த 27 ஆயிரம் கொலை வழக்குகளில் தமிழ் நாட்டில் சுமார் ஏறத்தாழ 1,400 கொலை வழக்குகள் ஆண்டு தோறும் பதிவாகின்றன. இந்தியா முழுமையும் 27 ஆயிரம் கொலை வழக்குகள்; அதிலே, தமிழ்நாட்டிலே ஆண்டுதோறும் சுமார் 1,400 கொலை வழக்குகள். இந்த 1,400 கொலை வழக்கு களில் 707 கொலை வழக்குகளில் குற்றாவாளிகளுக்குத் தண்டனை வாங்கித் தந்தால் அது 50 சதவீதம். தமிழ்நாட்டிலே 50 சதவீதம் பேருக்குத் தண்டனை வாங்கித் தந்திருக்கிறோம். 1,400 கொலை வழக்குகளில் 707 பேருக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறோம். ஆனால், தமிழகத்தைத் தவிர, இந்தியா விலுள்ள மற்ற இடங்களில் மீதமுள்ள 26 ஆயிரம் வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது 215 பேருக்குத்தான். 1,400-ல் 707 பேருக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தது தமிழ்நாடு; ஆனால் 26 ஆயிரம் வழக்குகளில் 215 பேருக்குத்தான் தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது என்றால், இந்தியா முழுமைக்கும் அது 1 சதவீதமாக இருக்க, தமிழ்நாட்டிலே மாத்திரம் தண்டனை வாங்கித் தருகின்ற அந்தச் செயல் 50 சதவீதமாக ஆகியிருக்கிறது என்றால், அது தமிழ்நாட்டினுடைய காவல் துறையினருடைய முயற்சிக்கு, அவர்களுடைய ஆர்வத்திற்கு, அவர்களுடைய கடமையுணர்வுக்கு ஒரு எடுத்துக்காட்டு என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய நண்பர் நிக்லி அவர்கள் இங்கே பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். அதாவது 'இண்டியன் எக்ஸ்பிரஸ்'-ல் வந்துள்ள ஒரு கட்டுரையைக் குறித்து. அதிலே முக்கியமாக மூன்று கருத்துக்கள். அந்தப் பத்திரிகையிலே நேற்றையதினம் இடம் பெற்றுள்ளன. அவர்களும் ஆர்வத்தோடு காவல்துறை மானியத்திலே கலந்துகொண்டு சில கருத்துக்களைப் பத்திரிக்கை வாயிலாகத் தெரிவித்து இருக்கின்றார்கள். அதிலே அவர்கள் சொல்லுகிறார்கள். 1965-ஆம் ஆண்டு நேரடியாகத் தேர்ந்தெடுக் கப்பட்ட உதவி ஆய்வாளர்கள் இப்போது டி. எஸ். பி.-களாக உள்ளார்கள். அதுபோலவே 1976-லே தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி ஆய்வாளர்கள் இப்போது இன்ஸ்பெக்டர்களாக உள்ளார்கள். ஆக, நேரடியாக, உதவி ஆய்வாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், இன்ஸ்பெக்டராக 10 ஆண்டுகளும்; டி. எஸ். பி.-யாக

22 ஆண்டுகளும் ஆகிறது. இந்த நிலையில் மதுவிலக்குப் பிரிவை காவல் துறையிலே இணைத்து விட்டதால் பதவி உயர்வு பாதிக்கப்படும் என்று 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' எழுதியுள்ளது. இது மிகத் தவறான கருத்து. ஏனென்றால், மதுவிலக்குக் துறை போலீசார், அந்தத் துறையிலே இருந்த பொழுதும், சட்ட ஒழுங்கு அமைதியைப் பாதுகாக்கின்ற போலீசார் இன்னொரு பிரிவாக இருந்தபொழுதும் பணி, ப்ரமோசன்ஸ், பதவி உயர்வுகளெல்லாம் இருபாலாரையும் ஒன்றாகச் சேர்த்துத்தான் வழங்கப்பட்டது. எனவே அவர்கள் தனித்தனியாக இருந்தாலும் பதவி உயர்வு வழங்குவதிலே இருவரையும் ஒன்றாகச் சேர்த்துத்தான், அப்படி எண்ணிப்பார்த்துத்தான் வழங்கப்படும். அவர்கள் ஒன்றாக இணைந்தால் அதற்காக அந்தப் பதவி உயர்வு அவர்களுக்குப் பாதிக்கப்பட மாட்டாது. மதுவிலக்குப் பணி இப்போது காவல் துறையோடு சேர்க்கப்பட்டதே தவிர இதற்கு முன்பே மதுவிலக்குத் துறையிலே பணிபுரிந்து கொண்டிருந்தவர்களும், சீனியாரிட்டியைப் பொறுத்தவரையில் பதவி உயர்வுக்கு ஒட்டு மொத்தமாகக் கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். எனவே இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக்குவதால் பதவி உயர்வு எந்தவகையிலும் பாதிக்காது.

அதே ஏட்டில் இன்னொரு கருத்து, 1976-ல் நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் 1989-ல் தான் பதவி உயர்வு பெற்றார்கள் என்றும், 1979-ல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு இன்னும் தரப்படவில்லை என்றும் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்'-லே கூறப்பட்டுள்ளது. மேலும் 1980 முதல் 1987 வரை உதவி ஆய்வாளர் நேரடி நியமனம் நிறுத்தப்பட்டது என்றும் அந்தப் பத்திரிகை எழுதியுள்ளது. 1979-லே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இந்த ஆண்டு பதவி உயர்வு கிடைக்கும் என்பதை இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). 1980-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரை நேரடித் தேர்வு நடத்தாததற்கு நாங்கள் பொறுப்பல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் கூட சொன்னார். ஒரு விகிதாச்சாரம் வைக்கவேண்டுமென்று. ஏற்கெனவே இருக்கிறது. 70 : 30 என்று, நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கும், ப்ரமோஷன் மூலம் வருவதற்கும் 70 : 30 என்ற விகிதாச்சாரம்

இருக்கிறது. அது ஏழாண்டு காலமாக கடைப்பிடிக்கப்படவில்லை. ஒருவேளை, அப்பொழுதெல்லாம் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் போலீஸ் மானியத்திலே பேசினாரோ, என்னவோ எனக்குத் தெரியாது. இந்த விகிதாச்சாரம் அப்போது கடைப்பிடிக்கப்படவில்லை. நேரடித் தேர்வு அப்போதெல்லாம் நடத்தப்படவில்லை. அதற்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல.

இதைத்தான் நான் அந்தப் பத்திரிகையினுடைய கட்டுரைக்கு விளக்கமாக அளிக்க விரும்புகிறேன். மிக முக்கியமாக கடந்த 20 அல்லது 25 நாட்களுக்கும் மேலாக இந்த மாமன்றத்தில் நேற்றும், இன்றும்தான் போலீஸ் மானியம் என்ற பெயரிலே விவாதம் நடைபெறுகிறதே அல்லாமல் - ஒவ்வொரு நாளும் கேள்வி நேரம் முடிந்த பிறகு ஒரு அரை மணி நேரம் போலீஸ் மானிய விவாதம் நடைபெற்று இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை. அதனால்தான் பலபேருடைய பேச்சில் அதிக விஷயங்கள் கூட இல்லாமல் போய்விட்டது. காரணம், எல்லாவற்றுக்கும் ஒத்திவைப்புத் தீர்மானம். திண்டுக்கல்லா? ஒத்திவைப்பு. ஆம்பூரா? ஒத்திவைப்பு. அதேபோல் இராஜபாளையமா? ஒத்திவைப்பு. சாத்தூரா? ஒத்திவைப்பு, இராஜபாளையத்தின் முதல் பாகம் ஒத்திவைப்புத் தீர்மானம். இரண்டாம் பாகம்தான் மிச்சம் இருக்கிறது எனக்கு இப்போது, அந்த இரண்டாம் பாகத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதை விவரமாகச் சொல்லவேண்டும் என்பதால் அதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

காமராஜர் மாவட்டம் சேத்தூர் காவல் நிலைய சரகத்தில் கிருஷ்ணாபுரம், சுந்தரராஜபுரம், போன்ற கிராமங்களில் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும், ஜாதி இந்துக்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரங்கள் குறித்து இதே அவையில் ஏப்ரல், 23-ஆம் தேதி விளக்கமான குறிப்புகள் வழங்கப்பட்டன. அதற்குப் பிறகும் அந்தப் பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் ஒரு சில நாட்கள் தொடர்ந்து நடைபெற்றுள்ளன. இதே போன்று கடந்த 1987-ஆம் ஆண்டு ஒரு கலவரம், இராஜபாளைம் பகுதியில் ஏற்பட்டு 10 பேர் அப்போது கொலையுண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1987-லே இதே பகுதியிலே, இதே மக்களுக்கிடையே கலவரம் ஏற்பட்டு 10 பேர் அப்போது இறந்தார்கள். அன்றைக்கு ஏற்பட்ட

மனப்புகைச்சல் இன்றளவும் நீங்காமல் அப்படியே நீடித்து வருகிறது. அதன் காரணமாகத்தான் இரு சாராருமே பறக்கும் படைகளை உருவாக்கிக்கொண்டு பறந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மிகுந்த பதட்டத்தோடு ஜாதிக்கு ஜாதி பறக்கும் படைகளை வைத்துக் கொள்ளலாமா, என்று கேட்டார்கள். நான் நிச்சயமாக இந்த மன்றத்தில் உறுதி கூறுகிறேன். துறையின் அமைச்சர் என்ற முறையில், ஆளும் கட்சியினுடைய தலைவன் என்ற முறையில், ஆணவத்தோடு அல்ல; நாட்டில் ஏற்பட்டுவிட்ட இந்த ஜாதிக் கொடுமைகளால் விளைகிற இது போன்ற போராட்டங்களைத் தவிர்த்திட வேண்டும்; தடுத்திட வேண்டும். யாரோ என்றைக்கோ உருவாக்கிய இந்த நிலை; வருணாசிரமம் என்ற பெயரால் தமிழகத்திலே இன்றைக்கு வேர் ஊன்றிப் போய், யாரோ, செய்த சதிக்கும் கால் முளைத்து; அந்த சதி இன்றைய தினம் நாட்டிலே ரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிற ஒரு பயங்கர நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதை மேலும் தூண்டிவிடுகிற வகையில் ஜாதிக்கு ஜாதி, பறக்கும் படைகளை ஏற்படுத்திக் கொண்டு மேலும் நாட்டிலே அமளி ஏற்படுத்த யார் முன் வந்தாலும் அரசு அதைப் பார்த்துக் கொண்டிருக்காது.

பறக்கும் படை என்ற பெயரால் அது யாருடைய பெயரால் அந்தப் படை வைக்கப்பட்டு இருந்தாலும், எந்த ஜாதியின் பெயரால் அந்தப் படைகள் இயங்கினாலும் அவைகள் அத்தனையும் தடை செய்யப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப்பகை வளர்ந்து, வளர்ந்து, கிருஷ்ணாபுரம் பகுதியில், தொடங்கிய ஜாதிக் கலவரம் இராஜபாளையம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் பரவி மொத்தம் 11 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். அதிலே எந்தெந்த வகுப்பிலே எவ்வளவு, எவ்வளவு என்று சொல்லக்கூட நான் விரும்பவில்லை. அதன் காரணமாக, "ஓகோ, இன்னும் நான்கைந்து பாக்கி இருக்கிறது" என்று அதை ஈடுகட்ட யாராவது முயற்சித்தால் என்ன செய்வது என்ற இதய வேதனையோடு நான் அதை மறைக்க விரும்புகிறேன். 11 பேர் அங்கே இறந்து இருக்கிறார்கள். எந்த வகுப்பு என்றால் இரண்டுபேரும் தமிழர்கள் தான். தமிழர்கள் 11 பேர் ஒருவரை ஒருவர் வெட்டிச் சாய்த்துக்

கொண்டு அங்கே மரணம் அடைந்திருக்கிறார்கள். அமைதியை நிலைநாட்ட உடனடியாக டி. ஜி. பி. மற்றும் ஐ. ஜி. (லா அண்ட் ஆர்டர்) மூலமும், கலெக்டர் மூலமும் பல்வேறு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது 2 காவல்துறை துணைத் தலைவர்கள், 4 மாவட்ட காவல்துறை கண்காணிப் பாளர்கள் தலைமையில் சுமார் 1,000 போலீசார் பாதிக்கப்பட்ட பகுதியில் காவல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளார்கள். தேவையான இடங்களில் பாதுகாப்புக்காக போலீசார் நிறுத்தப் பட்டு இருக்கிறார்கள் தீவிர போலீஸ் ரோந்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குற்றங்கள் சம்பந்தமாக அவ்வப்போது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரையில் 43 புகார்கள் பெறப்பட்டு வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இரு தரப்பிலும் 439 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். மேலும் 253 பேர் முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். 1987-ல் நடந்த ஜாதிக் கலவரத்தின் போது பல கொலை வழக்கு களில் சம்பந்தப்பட்ட முக்கியமான எதிரிகளும் தற்போது முன் கூட்டியே கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். சி. ஆர். பி. சி. 144 பிரிவின் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அமல்படுத்தப் பட்டது. மதுபானக் கடைகளை மூடுதல், வெடி மருந்துக் கடைகளை மூடுதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. தனியார் வைத்திருந்த 143 துப்பாக்கிகள் காவல் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. வீச்சரிவாள் போன்ற பயங்கரமான ஆயுதங்கள் 150-க்கு மேல் கைப்பற்றப் பட்டுள்ளன. பறக்கும் படை என்ற பெயரால் சமூக விரோதிகள் சிலர் வன்முறையில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டு; அந்தப் படையை ஒழிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கள்ளச் சாராய வியாபாரமும் இத்தகைய வன்முறைக்கும், கலவரத்திற்கும் அடிகோலுவதாக இருப்பதாலும், அந்தப் பகுதியில் கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

இதற்கிடையே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் தொலைபேசி மூலம் என்னிடத்திலே தொடர்பு கொண்டார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. வீரையன்

அவர்கள் என்னிடம் தொடர்பு கொண்டு இதுபற்றி கவலையோடு விசாரித்தார்கள். அவர்கள் எல்லாம் சொன்ன யோசனைப்படி, ஒரு அமைதிக் குழு அங்கே அமைக்கப்பட்டு, அதற்குத் தலைவராக ராமசுப்பிரமணிய ராஜா நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த அமைதிக் குழுவில், ராமசுப்பிரமணிய ராஜாவும், திருவேட்டை என்ற ஆதி திராவிடர் பெருமக்களுடைய தலைவரும், கங்காராம் துரைராஜ் அவர்களும் அடங்கிய ஒரு அமைதிக் குழு அங்கே அமைக்கப்பட்டு, இப்போது அங்கே அமைதி நிலவுகிறது. கலவரத்தில் மரணம் அடைந்தவர்களுக்கு ரூ. 10,000 வீதம், அரசின் சார்பில் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. காயம் உற்றவர்கள் சிகிச்சை செலவுகளுக்காக ரூ. 500 வீதம் வழங்கப்பட்டிருக்கிறது. 78 பேர்களுக்குரிய சொத்து மதிப்பு ரூ. 5.4 லட்சத்திற்கு பனை மரங்களும், தென்னை மரங்களும் கரும்புப் பயிர்களும் நாசமாக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். அங்கே நஷ்ட ஈடு தருவது பற்றி வருகின்ற கோரிக்கைகளைப் பெற்று அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. லத்தீப் அவர்கள் பெரம்பலூரில் விகாளத்தூரில் நடைபெற்ற கலவரத்தைப் பற்றிக் குறிப்பிட்டு; அதிலே மாவட்ட அதிகாரிகள் சரியாக நடந்து கொள்ளவில்லை. அவர்களுடைய அறிக்கைகள் ஒருதலைப் பட்சமாக இருந்தன என்று குறிப்பிட்டார்கள். நான் திரு. லத்தீப் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு சிறுபான்மை சமுதாய மக்களுக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கிறது என்பதை அவர்கள் மறுக்கமாட்டார்கள். சிறுபான்மை மக்களிடத்திலே அன்பு காட்டுகிற காரணத்தால், ஒருசிலர் அதையே சாக்காக வைத்து இந்த அரசின் மீது குறை கூறி வருவதையும் அவர்கள் உணரவில்லை. ஆனால் மத்தளத்திற்கு இருபுறமும் இடி என்பதைப்போல, இன்றையதினம் திரு. லத்தீப் அவர்கள் பேச்சைப் பார்க்கும்போது, உரலாக இருந்த நாம் இன்று மத்தளமாக மாறிவிட்டோம் போலும் என்ற எண்ணம்தான் எனக்கு ஏற்பட்டது. பரவாயில்லை. உரலில் இருந்து எழும்புகின்ற ஓசையைவிட, மத்தள ஓசை இனிமையாக இருக்கிற காரணத்தால், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அவர்கள் சொன்னார்கள் - முஸ்லீம்களுக்கு இந்த அரசிலே சரியான பிரதிநிதித்துவம் தரப்படவில்லை என்று சொன்னார்கள். நான் சரியாக இத்தனை பர்சென்ட் என்று அந்தக் கணக்கை எடுத்துச் சொல்ல விரும்பவில்லை - அது இயலாது என்ற காரணத்தால். ஏனென்றால், ஆட்சிக்கு வந்து இன்னும் இரண்டாண்டுக் காலம் கூட சரியாக முடியாமல், சிறுபான்மை மக்களுக்கு எப்படி, எப்படி அளிக்கப்பட்டிருக்கிறது, யார், யார் இருக்கிறார்கள் என்றெல்லாம் அறுதியிட்டுக் கூற இயலாது. ஆனால் இந்த அரசினுடைய உள்ளுணர்வைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மாவட்டங்களில் ஒரு கலெக்டரை முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவராகப் போட வேண்டுமென்றுதான், திரு. ஜலால் அவர்களை திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவராக நியமித்தோம். அவர் அகால மரணம் அடைந்துவிட்டார். அவர் மரணம் அடைந்த பிறகு, திருச்சி மாவட்டத்திற்கு வேறு ஆட்சித் தலைவர் நியமிக்கப்பட்டாலும் கூட, ஒரு முஸ்லீம் கலெக்டர் இல்லையென்ற அந்தக் குறையைத் தீர்க்க, தர்மபுரி மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக திரு. அலாவுதீன், ஐ. ஏ, எஸ். அவர்களை அங்கே அனுப்பிய பெருமை இந்த ஆட்சிக்கு உண்டு என்பதை திரு. லத்தீப் அவர்கள் மறந்துவிடக் கூடாது.

அது மாத்திரமல்ல, இங்கே நம்முடைய நண்பர் திரு. ராஜேந்திரன் அவர்களோ திரு. சொக்கர் அவர்களோ குறிப்பிட்டதைப் போல, டி. ஐ. ஜி. (சி. ஐ. டி.) ஒற்றர்களின் தலைவராக, காவல்துறை நுண்ணறிவுப்பிரிவுத் தலைவராக இருக்கின்றவரே இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்தான் என்பதை திரு. லத்தீப் ஏற்றுக்கொள்ள மறுக்கிறாரா என்று எனக்குப் புரியவில்லை. ஏனென்றால் அவர் அடிக்கடி குல்லாய் போடுகிற ஆபீசர் அல்ல. (சிரிப்பு). அதனால் ஒருவேளை, அவரை அவர் இஸ்லாமியர் அல்ல என்று மறுக்கிறாரா என்று எனக்குப் புரியவில்லை. எனவே எல்லா வகையிலும், இஸ்லாமியர்களுக்கு சிறுப்பான்மை மக்களுக்குத் தரவேண்டிய இடத்தைத் தரவேண்டுமென்ற உள்ளுணர்வு என்பது இந்த அரசுக்கு இருக்கிறது. அதைப்போலவே திண்டுக்கல் சம்பவத்தில்,

எங்கே நியாயம் இருந்ததோ அந்த நியாயத்திற்காக வாதாடியிருக் கிறோம். திண்டுக்கல் சட்டமன்ற. . . . . (குறுக்கீடு).

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நாட்டிலுள்ள பொதுவான நிலைமைகளை குறித்த பொதுக் கருத்தைத்தான் தெரிவித்தேன். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இப்போது தான் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். தி. மு. க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பிறகுதான் ரகசிய துறைக்கு ஒரு முஸ்லீம் நியமிக்கப்பட் டிருக்கிறார். பழைய நிலை மாறி புதிய நிலை உருவாகியிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அரசாங்கத்தை மட்டும் நான் சுட்டிக்காட்டவில்லை. பொதுவாக நாட்டிலுள்ள நிலையைத்தான் பொதுவாகச் சொல்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது கூட ஒரு முஸ்லீமை தேடிப்பிடித்து கலெக்டராக நியமனம் செய்தோம் என்று சொன்னார்கள். மாவட்டத்தில் பொறுப்பில் இருக்கிற அதிகாரிகளை, ஜாதி, மதம் ஆகிய நோக்கில் பார்க்கக் கூடிய ஒரு கலாச்சாரத்தை நாம் புகுத்தக்கூடாது. இந்தக் கருத்துக்களை வெளியே பேசும்போது நாம் வேண்டுமானால் முதலமைச்சரிடம் நேரில் சொல்லலாம். நான்கூட ஒரு சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்தவன். இதிலே கோளாறு இருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் இந்த அவையிலே நாம் பேசும்போது ஓகோ இப்படி எல்லாம் பெரிய அதிகாரிகளை நியமிக்கிறார்களோ என்ற கருத்து மக்கள் மத்தியிலே வரும் என்று சொன்னால், இந்த அவை மீதும் இந்த அவையிலே மிகப் பெரிய பொறுப்பிலே இருக்கிற நம் மீதும் மக்களுக்கு ஒரு சந்தேகம் வரும் என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லியதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசியதால்தான். அது அவைக் குறிப்பில் இருக்கிறது. அதைத் தலைவர் எடுக்கவில்லை. அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. அவர் பேசியது பத்திரிகையில் வந்து ஓகோ, பெரிய பதவிகளில் நம்மவர் யாரும் நியமிக்கப்படுவதில்லையோ" என்று இஸ்லாமியர் கருதிவிடக் கூடாது என்பதற்காகத்தான், இந்தப் பதவியிலே ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்ல வேண்டிய தவிர்க்க முடியாத நிலை எனக்கு ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல, இந்த அரசு வந்ததற்கு பிறகு இப்படிச் செய்திருப்பதாக சொன்னார்கள். அது மாத்திரமல்ல, சிறுபான்மை நலக்குழு இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மை நலக்குழுத் தலைவராக ஒரு கிறிஸ்தவரை, அவரும் சிறுபான்மையினர்தான், நாம் போடவில்லை அல்லது மொழி என்ற அடிப்படையில் ஒரு மலையாளியைத் தலைவராக போடவில்லை. அல்லது ஒரு தெலுங்கரைத் தலைவராக போடவில்லை. அதிலே கொட்டாரக்கரா என்கிற மலையாளி இருக்கிறார். ஒபுல் ரெட்டி என்கிற தெலுங்கர் இருக்கிறார். அதுபோல கன்னட மொழி பேசுகிற ஷெட்டி என்கிற கோவையைச் சேர்ந்தவர் இருக்கிறார். அதுபோல கிறிஸ்தவர் மரியநல்லு என்பவர் துணைத் தலைவராக இருக்கிறார். அதுபோல ஜைன மதத்தைச் சார்ந்த சாந்திலால் ஜெயின் என்பவர் இடம் பெற்றிருக்கிறார். இவ்வளவு பேரும் இடம் பெற்றிருந்தாலும் கூட, அதற்கு அப்துல் ஜப்பார் என்கிற எக்ஸ் எம். எல். ஏ. அவர்கள் தான் தலைவராக அங்கே இருக்கிறார் என்பதை ஏனோ மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் மறந்துவிட்டார். அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. அவரையே போட்டால்தான் அவருக்கு ஞாபகம் இருக்குமோ என்னவோ? (சிரிப்பு).

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை எல்லாம் மறந்து பேசவில்லை. நான் ஒவ்வொன்றையும் நினைவில் வைத்துக் கொள்ளக்

கூடியவன், எனவே, நான் மாண்புமிகு முதலமைச்சருக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் பொத்தாம் பொதுவாக கீழ் மட்டத்தில் இருப்பவர்களை சொல்கிறேன். மேல்மட்டத்தில் என்னைப் போன்ற ஒரு சிலர் இங்கே வந்து உட்கார்ந்துவிடலாம். ஆனால் கீழ் மட்டத்திலே, நடு மட்டத்தில் இருக்கக்கூடிய வர்களைப் பொறுத்தவரையிலும் எல்லா துறைகளிலும் ஒரு நியாய உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். இந்த அரசு என்று நான் சொல்லவேயில்லை. பொதுவாக நாட்டினுடைய நிலைமை அந்த வகையில் இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. இந்த அரசு என்று நான் சுட்டிக்காட்டவே இல்லை. இந்த அரசு செய்திருக்கிறது. அது இப்போது தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறது. வந்த 3 மாதத்திலேயே செய்திருக்கிறது. அதற்கு முன்பும் செய்திருக்கிறது. இங்கே நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் ஏதோ இந்த அரசை குற்றஞ்சாட்டுகிறேன் என்பதுபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன தற்காக சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட சொன்னார்கள். இந்த மாதிரி உணர்வு வரக்கூடாது. ஒரு குறிப்பிட்ட ஜாதிக்குதான் போட்டார்கள் என்ற உணர்வு வரக்கூடாது என்று சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் குறிப்பிட்ட ஜாதி என்று கருதி விட்டு விடவும், தள்ளிவிடவும் கூடாது. அது கடந்த காலத்தில் நடந்து வந்தது. அது இந்த ஆட்சிக் காலத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. ஆக, கடந்த கால நிலைமைகளை நான் இங்கே சுட்டிக் காட்டியாக வேண்டும் என்பதற்காகத்தான் எனது கருத்துக்களை சொன்னேனேயல்லாமல் வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, வி. களத்தூரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதிலே, மாவட்ட ஆட்சித் தலைவர், மற்ற அதிகாரிகள் எல்லாம் நடந்து கொண்ட நிலை சரியில்லை. அவர்களுடைய அறிக்கையை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது என்று குறிப்பிட்டார்கள். அந்த அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். 28-4-1990 அன்று திருச்சியிலே வெளியான - 'மாலை

மலர்' பத்திரிகையிலே வெளிவந்த செய்தியும், அறிக்கையும், அதில் 'பெரம்பலூர் அருகே, வி. களத்தூரில் நடந்த சம்பவத்தில் குண்டு வீச்சு மற்றும் தாக்குதலில் காயமடைந்தவர்கள் திருச்சி மற்றும் பெரம்பலூர் அரசு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். திருச்சி பெரிய ஆஸ்பத்திரியில் அப்துல் காதர், வயது 60, அப்துல் முத்தலிப் வயது 58, அமானுல்லா வயது 17, மற்றும் கிருஷ்ணமூர்த்தி, ஆகிய 4 பேர்களும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். அதில் முதல் 3 பேர்கள் ஆண்கள் பிரிவிலே உள்ளபடுக்கைகளிலே கிடத்தப் பட்டுள்ளார்கள். கிருஷ்ணமூர்த்தி வெளியிலே உள்ள வராண்டா திண்ணையில் படுக்க வைக்கப்பட்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில் திருச்சி மாவட்ட கலெக்டர் டி. ஐ. ஜி. சரவண பெருமாள், மாவட்ட வருவாய் அதிகாரி, ஜீவரெத்தினம், டி. எஸ். பி. கல்யாணசுந்தரம், உதவிக் கலெக்டர் சவுந்திரராஜன் ஆகியோர் திடீரென்று ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தார்கள். தலையில் படுகாயம் பட்டு, திண்ணையில் படுத்திருந்த கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்ததும் கலெக்டரும் டி. ஐ. ஜி.-யும் திடுக்கிட்டார்கள். அவருக்கு ஏன் படுக்கை வசதி செய்து கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். மாவட்ட உதவி மருத்துவ அதிகாரி சிவசுப்பிரமணியத்தைக் கூப்பிட்டு, உடனே படுக்கை வசதி செய்து கொடுக்குமாறு கண்டித்தார். அதுவரையில் செய்து கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருந்தும் செய்து கொடுக்கப்படாமல் இருக்கிறது. கலெக்டர் போய் சொன்னவுடன் உடனடியாக செய்து கொடுக்கப்பட் டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. அதன் பிறகு சிகிச்சை பெற்று வரும் நான்கு பேரையும் சந்தித்து கலெக்டர் ஆறுதல் கூறினார். அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப் படுமென்றும், தெரிவித்தார். அங்கே மாலை மலர் நிருபரிடம் கலெக்டர் நிலவரம் குறித்துக் கூறியது - அதைப் பற்றித்தான் திரு. லத்தீப் அவர்கள் தவறான ஸ்டேட்மென்ட் என்று சொன்னார். அது என்ன என்று படித்துக்காட்ட விரும்புகிறேன்.

"2, 3, இளைஞர்களால்தான் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. பாதையில் போகாமல், மைதானம் வழியாக முஸ்லீம்கள் நடந்து வந்ததால் இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். வழக்க மாக அந்தப் பாதையிலே முஸ்லீம்கள் நடப்பதில்லை. நேற்று

தொழுகை முடிந்து சுமார் 500 பேர் வரை அதில் நடந்து வந்திருக் கிறார்கள். இதில் தப்பான எண்ணம் யாருக்கும் இல்லை - கலெக்டர் நடுநிலையோடு சொல்லியிருக்கிறார் - இதில் தப்பான எண்ணம் யாருக்கும் இல்லை. இரண்டு பேர் தரப்பிலும் ஏன் இப்படி நடந்து கொண்டோம் என்ற எண்ணம்தான் ஏற்பட்டி ருக்கிறது. இதனால் மக்களுக்குப் பாதிப்பு இல்லை" என்று அவர் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். ஒரு சமரச உணர்வோடு அந்த அறிக்கை இருக்கிறதே அல்லாமல் ஏதோ இஸ்லாமியப் பெருமக்களுக்கு விரோதமாக வெளியிடப்பட்ட அறிக்கையாகத் தெரியவில்லை. அவர் நிருபரிடத்திலே சொல்லிவிட்டு மேலும் சொல்லியிருக்கிறார். இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழக அரசுக்கு 3 மணிக்கு ஒரு தடவை தகவல் சொல்லிக் கொண்டிருக் கிறோம். இது பற்றிய அறிக்கை அரசுக்கு தாக்கல் செய்யப்படும் என்று குறிப்பிட்டு, அங்கே சென்றிருந்த ஹோம் செக்ரட்டரியைச் சந்தித்து, அங்கே நடைபெற்ற சம்பவங்களை விவரித்து அவரிடத்திலே அளித்திருக்கிறார். எனவே இதில் அரசு அதிகாரிகள் சிறுபான்மை மக்களுக்கு எதிராக நடந்து கொள்கிறார்கள் என்ற எண்ணம் இருக்கத் தேவையில்லை. குறிப்பிட்டு அப்படி நடந்துகொண்ட சம்பவங்கள் எனக்கு வழங்கப்படுமேயானால் நிச்சயமாக யாராகயிருந்தாலும் தயவு தாட்சண்யம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். பல குறைபாடுகள், பல்வேறு பிரச்சினைகள் மாண்புமிகு உறுப்பினர்களால் இந்த மன்றத்திலே காவல்துறை ஆய்வுரை குறித்து செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

நம்முடைய திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் மிகுந்த ஆவேசத்தோடு நேற்றைய தினம் உரையாற்றி இருக்கிறார்கள். அவர்கள் என்னிடத்திலே கொடுக்கின்ற முறையீடுகள் எல்லாம் கேட்பாரற்றுப்போய் விடுவது போலவும் முதலமைச்சரே இப்படிப் பேசலாமா என்பது போலவும் நேற்றைக்கு ஆவேசமாகக் கேட்டார்கள். இப்போது என்னை எதிர்த்து வருகின்ற ஆவேசப் பேச்சுகளுக்கோ, கோபமான பேச்சுக்களுக்கோ நான் அதிகமாக வருத்தப்படுவதில்லை. ஏனென்றால் ஒரு 25, 30 ஆண்டுகளாக இதே இடத்திலிருந்து அப்படிக் கேட்டு, கேட்டு, வெளியிலே

அப்படிக் கேட்டு, கேட்டு உடம்பு மரத்துப் போய்விட்ட காரணத்தால், நான் அவ்வளவாக அதை எடுத்துக்கொள்ள வில்லை. ஆனாலும் திருமதி பாப்பா உமாநாத் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் ஒரு பத்து காரியங்கள் சொன்னால் நான்கு காரியங்களிலே உடனடியாக அக்கறை செலுத்தப்பட்டு, அந்தக் காரியங்களை இந்த அரசின் சார்பில் நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம்.

திரு. ரா. சொக்கர் : பேரவைத் தலைவரவர்களே, 20, 30 ஆண்டுகளாக அந்தப் பேச்சைக் கேட்டு, கேட்டு, உடம்பு மரத்துப் போய்விட்டது என்று முதல்வரவர்கள் கூறினார்கள். மனம் பக்குவப்பட்டுவிட்டது என்றே நாங்கள் நினைக்கிறோம். ஆக அப்படி இருப்பதே பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குக் காரணம் இருக்கிறது. "செவி கைப்பச் சொற்பொறுத்தல்" என்பதுதான் அதற்கு விடை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 2 தினங் களுக்கு முன்புகூட அம்மையார் அவர்கள் அவருடைய ஜனநாயக மாதர் அணியை அழைத்துக் கொண்டு வந்து, என்னிடத்திலே வந்து, மண்டபத்திலே அமர்ந்து, என்னிடத்திலே பேச வேண்டுமென்று, சொன்னார்கள். அப்போது ஒரு கொலை வழக்கு பற்றிச் சொன்னார்கள். கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட ஒரு பெண். கமலா தேவி என்பது அவருடைய பெயர். அவர் கொலை செய்யப்பட்டது 9-6-1987. கொலைக்குக் காரணமாக இருந்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட அவருடைய கணவன் ரமேஷ், கமலா தேவியின் மைத்துனன் சுரேஷ், பணியாளர் குணாம்சிங் ஆகிய மூவர் மீதும், குற்றம் பதிவு செய்யப்பட்டு, 10-6-1987-லே விசாரணை தொடங்கிற்று. கீழ் கோர்ட்டில் 21-9-1989-ல் குற்றவாளி 2 மற்றும் குற்றவாளி 3 ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. குற்றவாளி 1, கணவர் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்.

அதற்குப் பிறகு உயர்நீதிமன்றத்திலே மேல்முறையீடு குற்றவாளிகளாலும் அரசாலும் செய்யப்பட்டது. 1989-லே இந்த வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு, அரசு சும்மா இராமல் 2, 3,

4 மற்றும் 5, ஜனவரி 1990-ல் உயர்நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்யப்பட்டு, உயர்நீதிமன்றத்திலே 8-2-1990-ல் அனைவரும் விடுதலை ஆகிவிட்டார்கள். ஒரு பெண் கணவர் ஊரில் இல்லாத நேரத்தில் மைத்துனரால் வம்புக்கு இழுக்கப்பட்டு, வேலைக் காரர்கள் உதவியோடு கொலை செய்யப்பட்டு. கணவனேதான் அதற்குத் தூண்டினார் என்கிற அளவுக்கு அந்த வழக்கிலே புலன் விசாரிக்கப்பட்டு, அந்த வழக்கு நடைபெற்று; கீழ்க் கோர்ட்டிலே கணவன் விடுதலை செய்யப்பட்டு, மற்ற இரண்டு பேர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டு, உயர்நீதிமன்றத்திலே இந்த வழக்கு நடைபெற்று, 8-2-1990-ல் அனைவரும் விடுதலை ஆகி விட்டார்கள்.

பொதுவாக ஹைகோர்ட்டோடு அரசாங்க வழக்குகள் நின்று விடுவது வழக்கம். ஆனால் அம்மையார் அவர்கள் அவர் களுடைய ஜனநாயக மாதர் சங்கத்தினுடைய தோழியர்களை அழைத்து வந்து என்னிடத்திலே பேசி, 8-6-1990 வரையிலேதான் மேல் முறையீட்டுக்கான தேதி இருக்கிறது ஹைக்கோர்ட்டிற்கு. ஆகவே நீங்கள் மேல்முறையீடு செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். உடனடியாக அதிகாரிகளை அழைத்து உச்ச நீதி மன்றத்திற்கு அந்த வழக்கிலே மேல்முறையீடு செய்ய அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதை நான் அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம். சென்ற கால ஆட்சியின் போது பதிலே வரவில்லை; இப்போது முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டதில் பலருக்கு பதில் வருகிறது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன் என்பதைக் கூறி காவல் நிலையத்தில் பெண்களை பணயக் கைதிகளாக வைப்பதால்தான் நான் அதைக் குறிப்பிட்டு ஆவேசத்தோடு நீங்கள் சொன்ன மொழியிலே பேசியிருக்கிறேன் என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதைப் போலவே இங்கே பலவற்றைத் திரும்பச் சொன்னார்கள். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக இங்கே, 'சீரோ அவர்' என்று

சொல்லப்படுகிற அந்தநேரத்தில் பேசப்பட்டது. எல்லம்மாள் பற்றி, கன்னியாகுமரி மாவட்டத்தில் தனம் என்ற சிறுமியைப்பற்றி, இராதாபுரம் தொகுதியிலே விமலா என்ற பெண் இறந்தது குறித்து அம்மையார் அவர்களும் நம்முடைய ரமணி நல்லதம்பி அவர்களும் – இரண்டு பேர்களும் பேசி, நான் மறு விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறேன். எனவே, போலீசார் சார்பாக நான் அதை எதிர்க்கவில்லை. குற்றங்கள் சாட்டப் பட்டால் அதை மேலும் விசாரிக்க மறுவிசாரணை செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மங்களம் தனராஜ் என்ற ஒரு போலீஸ் அதிகாரி பற்றி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அவர்மீது திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், நாகல்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சுப்புலட்சுமி என்பவர் புகார் செய்கிறார். தன்னை காவல்துறை ஆய்வாளர் மங்களம் தனராஜ் 7-6-1984 அன்று நடு இரவில் தன்னுடைய கற்புக்குப் பங்கம் விளைவித்துவிட்டார் என்று அவர் கொடுத்த புகாரின் பேரில் 31-8-1984-ல் விசாரணை நடத்தி, சேரன்மாதேவி சார் ஆட்சியர் விசாரணை நடத்தி, தனது அறிக்கையை அரசாங்கத்திற்கு 1984-ஆம் ஆண்டு தருகிறார். இந்தச் சம்பவம் நடைபெற்றது 1984-ல். அறிக்கை தரப்பட்டது 31-8-1984-ல். இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை தரப்பட்டது. அவர்களுடைய விசாரணை அறிக்கையின் பேரிலும் உயர்நீதி மன்ற உத்தரவின் பேரிலும் அவர்மீது வழக்குத் தொடர இப்போது நாம் ஆணையிட்டிருக்கிறோம்.

இடையில் இருந்த அரசு டிபார்ட்மென்ட் நடவடிக்கை மாத்திரம்தான் எடுத்தது. அந்த டிபார்ட்மென்ட் நடவடிக்கையை எதிர்த்து அவர் நீதிமன்றத்திற்குச் சென்று மீண்டும் வேலைக்கு வந்துவிட்டார். அவரைப்பற்றிய புகார்கள் வந்தபிறகு 27-6-1989-ல் அவர்மீது கிரிமினல் வழக்குத் தொடர இந்த அரசு ஆணை யிட்டது. அவரைத் தற்காலிகப் பணி நீக்கம் இந்த அரசு செய்தது. செய்த பிறகு என்ன ஆனது? ஏனென்றால் 26-2-1990-ல் அவரைப் பணி நீக்கம் செய்ய உத்தரவிட்டோம். 1989-லே 6 மாதத்திலேயே கிரிமினல் வழக்கு அவர்மீது தொடர்ந்தோம். இதற்கு இடையிலே உயர் நீதிமன்றத்திற்கும் மேற்படி காவல்துறை கண்காணிப்பாளரால் தொடரப்பட்ட குற்ற வழக்கை 6-3-1990

வரை நிறுத்தி வைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஸ்டே வாங்கி விட்டார்கள். ஸ்டே வாங்கியது மாத்திரமல்ல; அங்கே வாங்கிய அந்த ஸ்டே ஆர்டரை கையிலே வைத்துக் கொண்டு, தமிழ்நாடு மாநில பணியாளர் தீர்ப்பாயம் இருக்கிறதே டி. ஏ. டி. அங்கே சென்று பணிநீக்க உத்தரவை நிறுத்தி வைத்து; அங்கே ஒரு தீர்ப்பு வாங்கிவிட்டார். ஆக, ஒரு இடத்திலே ஸ்டே அதைப்போலவே அந்த மன்றத்திலே அவர்களுடைய பணிநீக்க உத்தரவை நிறுத்தி வைத்து ஒரு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது, எனவேதான் நீதி மன்றத்தினுடைய குறுக்கீடு, டி. ஏ. டி. யினுடைய குறுக்கீடு - இவைகளின் காரணமாகத்தான் 17-4-1990-ல் அவரை மீண்டும் பணிக்கு அமர்த்த வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதையும், பணிக்கு அமர்த்திவிட்ட காரணத்தால், இடைக்காலத் தடை உத்திரவு தான் அது என்பதைப் புரியாத அரசு அல்ல இது. எனவே ஏற்ற நடவடிக்கையை இந்த அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி எடுத்தது என்பதற்கு உதாரணமாக வையம்பட்டி நிகழ்ச்சி உங்களிலே பலருக்குத் தெரியும். வையம்பட்டியிலே போலீஸ் 'லாக்-அப்'-லே ஒருவர் இறந்து விடுகிறார். அப்படி இறந்துவிட்டதை முதலிலே போலீசார், அங்கு இருந்தவர்கள் மறைக்க விரும்புகிறார்கள். ஆனால் பொதுமக்கள் அந்தக் குற்றத்தைக் கண்டுபிடித்து அறிவித்த உடன், உடனடியாக அதிகாரிகள் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரப் பட்டார்கள். அப்படி நடவடிக்கை எடுத்ததில் வையம்பட்டி உதவி ஆய்வாளர் வடிவேலு, மணப்பாறை உதவி ஆய்வாளர் நடராஜன், காவலர் 852 எண்ணுள்ள இராமச்சந்திரன், காவலர் 652 எண்ணுள்ள இராஜகோபால், காவலர் 2197 எண்ணுள்ள நடேசன் ஆகியோர் தற்காலிகப்பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். அது மாத்திரமல்ல, மேலும் மணப்பாறை ஆய்வாளர் சந்திரன், மாப்பாளை ஆய்வாளர் ஆதீனம் ஆகியோர் இட மாற்றம் செய்யப்பட்டார்கள். அதுவன்றி, ஆய்வாளர்கள் எஸ். ஆர். நடராஜன், எஸ். வடிவேல் மற்றும் காவலர் பி. ஜெபமணி ஆகியோர் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. 'லாக்-ஆப்'-லே ஒருவர் இறந்ததற்காக இப்படி

போலீசாரையே கைது செய்து நடவடிக்கை எடுக்கின்ற அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய நண்பர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே பேசும்போது காவல்துறையை நவீனமயமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். காவல்துறையை நவீனமயமாக்குகின்ற அந்தத் திட்டம், அதற்கான முயற்சி 1974-ல் தான் தமிழ்நாட்டில் முதன் முதலாகத் தொடங்கப்பட்டது. அப்போது தகவல் தொடர்புகளைத் துரிதப்படுத்த நுண்ணலைக் கருவிகளையும், தொலைபேசி வசதிகளையும், போக்குவரத்துக்கு அதிகமான ஜீப்புகளையும் மோட்டார் சைக்கிள்களையும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தோடு தொடர்பு கொள்ள மைக்ரோவேவ் சிஸ்டத்தையும் அப்போது தான் அறிமுகப்படுத்தினோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டு கடந்த 16 ஆண்டுகளில் காவல்துறை, மற்ற தென் மாநிலங்களிலே உள்ள துறைகளை விட தமிழ்நாடு காவல்துறை மிகுந்த சிறப்போடு முன்னிலையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டு கூட 55 இலட்ச ரூபாய் இதை நவீனப்படுத்துகின்ற காரியத்துக்காக ஒதுக்கப்பட்டு அது செலவழிக்கப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து நவீனப்படுத்துகின்ற திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசிடம் உதவி கேட்டு, அதற்கான திட்டங்களையும் அனுப்பி வைத்து இருக்கின்றோம். மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் நிதி உதவியை வைத்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் பேசும்போது மேலும் சொன்னார். கோவையில் நடைபெற்ற கொள்ளை பற்றிச் சொன்னார். அதைக் காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் அவர்களும், நம்முடைய திரு. வரதராசன் அவர்களும் கூட இங்கே சுட்டிக் காட்டினார்கள். அந்தக் கொள்ளை வழக்கில் இரண்டு பேர் தாமதமாகச் சென்றார்கள் என்பதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதிலே ஏற்பட்ட விபரீதம் என்னவென்றால், முதலிலே அவர்கள் அந்த டெலிபோனை

ரிசீவ் செய்யத் தவறிவிட்டது உண்மை. கொஞ்சம் காலம் கடந்து டெலிபோனை அவர்கள் எடுத்து இருக்கிறார்கள். எடுத்த உடனே அவர்கள் சொன்ன விலாசத்துக்கு இவர்கள் செல்லவில்லை. பக்தவச்சலம் காலனி என்று ஒன்று உண்டு; பக்தவச்சலம் சாலை என்றும் ஒன்று உண்டு. இந்தக் குழப்பத்தில் அவர்கள் காலனிக்கு செல்வதற்குப் பதிலாக சாலைக்குச் சென்றுவிட்டார்கள், அல்லது சாலைக்கு செல்வதற்கு பதிலாக காலனிக்குச் சென்றுவிட்டார்கள். அங்கே சென்று திருத்திக் கொண்டு அந்த இடத்திற்குச் செல்வதற்கு முன்பாக கொள்ளைக்காரர்கள் வெளியேறி விட்டார்கள். இருந்தாலும் கூட அவர்களுடைய தாமதத்துக்கும், அலட்சியத்துக்கும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனப்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டி. ஜி. பி எண்ணிக்கை தமிழ்நாட்டில் ரொம்ப அதிக மாகிறது என்று ஒரு குறை சொல்லப்பட்டது. நம்முடைய தமிழகத்தில் 3 டி. ஜி. பி. தான். கர்நாடகத்தில் 4 டி. ஜி. பி.; ஆந்திராவில் 5 டி. ஜி. பி. கேரளாவில் 4 டி. ஜி. பி. இருக்கிறார்கள். எனவே அந்த எண்ணிக்கை ஒன்றும் அதிகமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாலசுப்பிரமணியம் இன்னொரு குற்றச்சாட்டைச் சொன்னார். சேத்துப்பட்டு பாலத்துக்கு அருகிலே குடிசைபோட்டு 'கோல்டு பீர்' குளிர்ந்த பானம் வெளியே வைத்து வியாபாரம் செய்கிறார்கள்; அங்கே போய் எல்லோரும் குடிக்கிறார்கள் என்று சொன்னார். அதை விசாரித்தேன். இருந்தது உண்மை. ஆனால் 12-2-1990-லேயே வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அதை நடத்திய கௌரி என்பவர் கைது செய்யப்பட்டு, 800 ரூபாய் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டு அந்த இடம் பிரித்து எறியப்பட்டு இருக்கிறது. அங்கே உட்கார்ந்து மது அருந்திய 5 பேருக்கு தலைக்கு 150 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு இருக்கிறது; நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இது 2 மாதத்திற்கு முன்னால், பிப்ரவரி மாதத்தில் நடந்து இருக்கிறது. ஆனால் அடிக்கடி அங்கே போகக்கூடிய வழக்கம் அவருக்கு இல்லாத காரணத்தால் (சிரிப்பு), போகத் தேவையும் இல்லாத காரணத்தால், இன்னும் இருப்பதாகக் கருதிக்கொண்டு, அவர் சொல்லியிருக்கக் கூடும். அது பிப்ரவரி மாதத்திலேயே எடுக்கப்பட்டுவிட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட அந்த இடத்திலே இருந்தது; ஆனால் இன்றைய தினம் அது அகற்றப்பட்டுவிட்டது என்பதை நான் முதல்வருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அப்படியானால் அங்கே போயிருக்கிறார் என்று தெரிய வருகிறது. (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நான் பச்சையப்பன் கல்லூரியிலே படித்தவன் என்றாலும் சேத்துப்பட்டு பக்கம் போய் நீண்ட நாட்களாகிவிட்டன.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இன்னொரு குறையைக் கூடச் சொன்னார்கள். தீயணைப்புத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு மலிவு விலையிலே உணவுப் பொருள் வழங்குவதில் கடந்த ஆண்டில் 20 இலட்சம், 21 இலட்சம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 17.31 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இந்தக் குறைவு என்று கேட்டார்கள். அந்தப் பக்கத்திலேயே வளைவுக் கோடுக்குள் போடப்பட்டிருக்கிறது. ஜனவரி மாதம் முடிய என்று போடப்பட்டிருக்கிறது. எனவே, ஜனவரி மாதம் முடியத்தான் 17.31 இலட்சம்; மார்ச் 1990 முடிய 26.01 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழக அரசு காவல்துறையிலே மாத்திரம் அல்ல, எல்லாத் துறைகளிலும் சொன்னதைச் செய்து வருகிறது என்பதை திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்தான் அடிக்கடி சொன்னதைச் செய்தார்களா என்று இங்கே கேட்டுக் கொண்டிருப்பவர். கடந்த ஆண்டு காவல்துறை மானியம் விவாதிக்கப்படும்போது, 10 காவல் நிலையங்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்படும் என்று சொன்னேன். இப்பொழுது நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். 11 காவல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை, (மேசையைத் தட்டும் ஒலி), குமரி மாவட்டத்திலே வெள்ளிச்சந்தை, குமரி மாவட்டத்திலே கதம்பமூடு, நெல்லை - கட்டபொம்மன் மாவட்டத்திலே கூடங்குளம், சிதம்பரனார் மாவட்டத்தில் தட்டார்மடம், செங்கை அண்ணா மாவட்டத்தில்

காதங்கரை, தஞ்சை மாவட்டத்தில் மருகூர், வட ஆற்காடு மாவட்டத்தில் அம்பலூர், காமராஜர் மாவட்டத்தில் கம்மாபட்டி, திருச்சி மாவட்டத்தில் சிந்தாமணிபட்டி, பசும்பொன் தேவர் மாவட்டத்தில் சிப்காட் காம்பிளெக்ஸ், சேலம் மாவட்டத்தில் மவுசி, இவை தவிர, புறக்காவல் நிலையங்கள், காவல் நிலையங்களாக மாற்றப்பட்டவை. இராமநாதபுரம் மாவட்டத்திலே உத்தரகோசமங்கை, குமரி மாவட்டத்தில் ஆசாரிபள்ளம், மதுரை மாவட்டத்தில் உத்தரமங்கலம், புதிய புறக்காவல் நிலையங்கள். செங்கை அண்ணா மாவட்டத்தில் பெரியகுப்பம், தஞ்சை மாவட்டத்தில் பட்டீஸ்வரம், மேலும் குமரி மாவட்டத்திலே குலசேகரம் காவல் நிலையம், வட்டக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இவை அனைத்தும் கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, செங்கை அண்ணா மாவட்டத்திலே எல்லை யிலே இருக்கும் 9 காவல் நிலையங்கள் சென்னைப் பெருநகர்ச் சரகக் காவல் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்படும் என்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது, வில்லிவாக்கம் விருகம்பாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, கருணாநிதி நகர் ஆகிய இவை பெருநகரக் காவல் சரகத்தோடு இணைக்கப்பட்டு விட்டன. இராஜமங்கலம், மீனம்பாக்கம், பரங்கிமலை, ஆதம்பாக்கம் இவை சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இன்னும் கொண்டு வரப்பட வில்லை. அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 9-இல் 4-ம் கொண்டு வரப்படுவது மட்டுமல்லாமல், சென்னை மாநகர எல்லைக்குள்ளே அமைந் திருக்கக்கூடிய திருமங்கலம், கொடுங்கையூர், மற்றும் திருவொற்றியூர், மணலி, அம்பத்தூர், கொரட்டூர், மதுரவாயல் ஆகிய இடங்கள் எல்லாம் முகமூடி கொள்ளைகள் நடக்கக்கூடிய பகுதி. ஆகவே, அவற்றையும் சேர்த்துக் கொண்டு வந்தால், கொள்ளையைத் தடுப்பதற்கு உதவிகரமாக இருக்கும். அதையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இயன்ற வரையில் பரிசீலிக்கப்படும்.

கடந்த ஆண்டு கூம்பு ஒலிபெருக்கி வைக்கக்கூடாது என்று தடை இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அந்தத் தடை நீக்கப்படும் என்று அறிவித்தேன். அதற்கேற்ப 15-6-1989-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, கூம்பு ஒலிபெருக்கிகள் வைப்பதற்கு இருந்த தடை நீக்கப்பட்டது.

அதைப் போலவே டி. ஐ. ஜி. அலுவலகம் இராமநாத புரத்திலே உள்ளதை எங்கே வைப்பது என்கின்ற ஒரு பிரச்சினை வந்தபொழுது, அதை நம்முடைய சொக்கர் அவர்களும், பெ. சீனிவாசன் அவர்களும் சேர்ந்து ஓரிடத்தைச் சொல்ல, நம்முடைய தென்னரசு அவர்களும் ஓரிடத்தைச் சொல்ல, அதற்குப் பிறகு மெஜாரிட்டி கருத்தை ஏற்றுக் கொள்வதாகக் கூறி, விருதுநகரிலே வைக்கப்படும் என்று சொன்னேன்.

இருந்தாலும்கூட, அதற்குப் பிறகு, இராமநாதபுரத்திலே உள்ளவர்கள் அங்கிருந்து அந்த இடத்தை மாற்றக் கூடாது என்று சொன்னதன் காரணமாக ஒரு சமரச ஏற்பாடாக இராமநாத புரத்திலே 4 நாளும், விருதுநகரிலே 3 நாளும் அந்த டி. ஐ. ஜி. அலுவலகம் இயங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அது இயங்கி வருகின்றது. இதுவும் அன்றைக்கு சொன்னது செய்யப்பட்ட ஒன்றாகும்.

அதைப்போலவே, தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ். இவர்கள் இன்றைக்கு 9 பட்டாலியன் இருக்கிறார்கள். ஆவடியில், திருச்சியில், பழனியில், கோவை புதூரில், மணிமுத்தாறில், டெல்லியில், 9 பட்டாலியன் இருக்கிறார்கள். ஒவ்வொரு பட்டாலியனும் சுமார் 1,000 பேர் வீதம் 9,000 பேர் அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

டெல்லியிலே இன்றைக்கு இருக்கின்ற அந்த திஹார் சிலைச்சாலையைக் காவல் காப்பதே நம்முடைய தமிழ்நாடு ஷ்பெஷல் போலீஸ்தான் என்பதை அறிந்தால் உறுப்பினர்களுக் கெல்லாம் மகிழ்ச்சி பொங்கும் என்றே நான் கருதுகின்றேன். அது மாத்திரமல்ல, அங்கே குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் இவர்களுக்கெல்லாம்கூட பாதுகாப்பாக இருப்பது

நம்முடைய தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அந்த வகையிலே, 9,000 பேர் 9 பட்டாலியனில் பல இடங்களில், நான் சொன்ன இடங்களிலெல்லாம் இன்றைக்குப் பரவிக் கிடக்கிறார்கள். அதிலே, உளுந்தூர்பேட்டையிலே ஒரு கேம்ப் அங்கே அமைக்க வேண்டுமென்ற கருத்தைக் கடந்த ஆண்டு நண்பர் தென்னரசு அவர்கள் இங்கே வெளியிட்டார்கள். அது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அப்பொழுது சொல்லப் பட்டது. அதற்கு நிலமாற்றம் செய்வதற்கான ஆணை 19-4-1990-இலே பிறப்பிக்கப்பட்டு, அந்தப் பணிகள் இன்றைக்கு வேகமாக நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. அது கேம்பாகவோ அல்லது பில்டிங்காகவோ அமைக்கப்படும். அதிலே ஒரு ஆயிரம் பேர் வரையிலே தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ்காரர்கள் உளுந்தூர்பேட்டையிலே அந்தக் கேம்பிலே தங்கிப் பணியாற்றக் கூடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரையிலும், கோவையிலும், சென்னையைப்போல, கமிஷனர் அலுவலகம் அமைக்கப்படும் என்று கடந்த ஆண்டு தெரிவித்து இருந்தேன். இப்பொழுது கமிஷனர் அலுவலகம் மதுரை, கோவை, ஆகிய இரண்டு இடங்களிலும் அமைக்கப் பட்டாகிவிட்டது. அதுமாத்திரம் அல்ல. இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களாலும் எடுத்துக் கூறப்பட்ட இந்த 41 வது பிரிவு அகற்றப்படவேண்டும்; அந்தத் தடை இருக்கக்கூடாது என்று அவர்கள் வைத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது ஏற்றுக் கொள்ளப்பட முடியாது என்று நான் என்றைக்கும் சொல்லவில்லை. இதே வரதராசன் அவர்கள்தான் நிதிநிலை அறிக்கையிலே கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு, மே தினப் பூங்கா வேண்டும் மே தின நினைவுச் சின்னம் வேண்டுமென்று இந்த அவையிலே பேசினார். அது ஏற்றுக்கொள்ளப்படும் என்று சொன்னேன். ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒரு மாதத்திலே அந்த விழா நடைபெற்று, அது ஒருவேளை நடந்ததா நடக்கவில்லையா என்று அவருக்குத் தெரியாமல் போய்விடக் கூடாது என்று அவரையும் அழைத்து அந்த விழாவிலே பேசச் செய்திருக்

கின்றோம். எனவே, அவர் இங்கே பேசும் பொழுதே, அதைப் பற்றி அரசு யோசிக்கும் என்று சொல்லப்பட்டது. அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தச் சொல்லி, அதற்கான ஏற்பாடு செய்யப் பட்டது. ஆனால், அந்தப் பேச்சுவார்த்தையினுடைய முடிவு சரியாக எனக்குத் தெரிவிக்கப்படாத காரணத்தினால் இவ்வளவு தயக்கங்கள் ஏற்பட்டன. இப்பொழுது தெரிவிக்கப்பட்டு, அந்த ஆணைகள், அந்தத் தடைகள் இனிமேல் இருக்காது என்றும், எப்படி சென்னையிலே இருக்காதோ அதைப்போல மதுரையிலும், கோவையிலும் இருக்காது என்பதையும் நான் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு இந்தக் கருத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போலீஸ் கமிஷன், இரண்டுமுறை தமிழ்நாட்டிலே அமைக்கப்பட்டிருக்கிறது. முதன்முறையாக 71 ஆம் ஆண்டு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டது. இப்பொழுது இரண்டாவது முறையாக அமைக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் கமிஷன் 71-இல் அமைக்கப்பட்ட பிறகுதான், 72 ஆம் ஆண்டு முதன் முதலாக காவல்துறையிலே உள்ளவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் - இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 80 ரூபாய் என்று இருந்ததை முதன்முதலாக 200 ரூபாய், என்று ஒரேயடியாக உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை மறந்துவிடக் கூடாது. அந்த 200 ரூபாய்தான் இன்றைக்கு அடிப்படைச் சம்பளம் 825 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அஃதன்னியில், அவர்களுடைய படிகள்; இவைகளெல்லாம் வேறு, அடிப்படைச் சம்பளம் 80 ஆக இருந்ததை 200 ஆக உயர்த்தி இன்றைய தினம் 825 என்கின்ற அளவிற்கு இந்த அரசு அந்தப் போலீஸ் கமிஷன் போட்டதன் விளைவாக உருவாக்கியிருக்கிறது.

இப்பொழுது மீண்டும் திரு. சபாநாயகம் அவர்களுடைய தலைமையில் - முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் அவர்களுடைய தலைமையிலே அந்தக் கமிஷன் அமைக்கப் பட்டது. நம்முடைய நிக்லி அவர்கள்கூட சொல்வார்கள் தலைமைச் செயலாளர் - ஓய்வு பெற்றவர்களுடைய தலை மையிலே அமைப்பதைவிட ஓய்வு பெற்ற ஐ. பி. எஸ். அதிகாரி தலைமையிலே அமைக்கலாம் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தும் உள்ளத்திலே இருந்த காரணத்தால்தான் ஓய்வு பெற்ற

ஐ. பி. எஸ். அதிகாரி திரு. ஷெனாய் அவர்கள் அந்தக் கமிஷனிலே ஒரு உறுப்பினராக ஆக்கப்பட்டிருக்கிறார். அ°தன்னியில் ரமணி நடராஜன், சிதம்பரம், ராஜகோபால், அண்மையில் மறைந்த நண்பர் டாக்டர் சந்தோஷம் இவர்களை யெல்லாம் உறுப்பினர்களாகக் கொண்ட அந்தப் போலீஸ் கமிஷன் வெகு விரைவில் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் 31-7-1990-க்குள் அரசுக்கு அறிக்கை தருவதாக ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

அதைப்போலவே அண்ணா பதக்கம், 1969 ஆம் ஆண்டு அண்ணா மறைந்த பிறகு, அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்தில், அண்ணா பிறந்த நாளில் அண்ணா பதக்கம், வீர விருதுகள் காவல் துறையினருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அது குடியரசுத் தலைவர் ஆட்சி 1976-ல் வந்தபோது நிறுத்தப்பட்டு, பிறகு அ. தி. மு. .க ஆட்சியில் நினைவூட்டப்பட்டு, சில ஆண்டுகள் நடைபெற்று, பிறகு 1987-88-ல் அந்த நிகழ்ச்சிகள் நடைபெறாமல் முடங்கிப்போய், இப்போது மீண்டும் 1989-ம் ஆண்டில் நான் அறிவித்தவாறு செப்டம்பர் 15-ம் நாள் அண்ணா பதக்கம் 55-க்கும் மேற்பட்ட காவல்துறை நண்பர்களுக்கு, வீரவிருதுகள் வழங்கப்பட்டதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதைப்போலவே பழிவாங்கப்பட்டவர்கள் 7, 8 பேர் களுக்குத்தான் வேலை கிடைத்து இருக்கிறது. மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டது. குறிப்பாக யார் யார் என்று எழுதி அனுப்பப்படுமானால், என்ன காரணத்திற்காக அவர்கள் பழி வாங்கப்பட்டார்கள் என்று எழுதி அனுப்பப்படு மானால் அரசு கவனிக்கத் தயாராக இருக்கிறது. அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட காவல்துறை அலுவலர்கள் - அந்தோணிசாமி - உதவி ஆய்வாளர் - வி. நாகராஜன் - உதவி ஆய்வாளர், நைனார்தாஸ் - உதவி ஆய்வாளர், மானவயல் பூபால ராயர் - தலைமைக் காவலர், சுப்பையா - காவலர், சொக்கலிங்கம் - முதல்நிலைக் காவலர், பழனிச்சாமி - காவலர், ஆடியபாதம் - காவலர், பூதப்பன் - காவலர் ஆகிய ஒன்பது பேருக்கு இந்த அரசு கடந்த ஆண்டிலே மீண்டும் பதவி அளித்துவிட்டது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல இறந்துவிட்ட காவலர்களுடைய வாரிசு களுக்குப் பதவி தர வேண்டும். வேலை வாய்ப்புத் தரவேண்டு மென்ற வகையிலே - போதுமான இளநிலை உதவியாளர்கள் ஏற்கெனவே இருக்கிற காரணத்தால், அந்த இளநிலை உதவியாளர் பணிகளை அவர்களால் பெற இயலவில்லை என்று கோரிக்கை வைத்தார்கள். அந்த அடிப்படையில், கல்வித் தகுதி, மற்றும் உடற்கூறு தகுதி உள்ளவர்களுக்கு காவலராகவோ அல்லது உதவி ஆய்வாளராகவோ - கருணை அடிப்படையில் பணிபுரிய வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு, 1988-ஆம் ஆண்டு 73 பேர் வாரிசுதாரர்கள் நியமிக்கப்பட்டிருக்க, 1998 ஆம் ஆண்டு 162 பேர் வாரிசுதாரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், அந்தப் பட்டியலில் சுமார் 220 பேர் இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு தான் சந்தேக கேஸ்கள், முக்காடு கேஸ்கள் ஒழிக்கப்படும் என்று நான் சொன்னேன். இல்லா விட்டால் இராமலிங்க சுவாமிகள் தெருவில் நடந்தால் கூட பிடித்து விடுவார்கள். (சிரிப்பு). அப்படி முக்காடு கேஸ்களை பிடித்துக் கொண்டு இருந்தார்கள். அப்படி பிடிக்கப்பட்ட முக்காடு கேஸ்கள் ஆண்டு ஒன்றுக்கு 50,000 அல்லது 40,000 என்ற அளவில் இருந்தது. 1987-ஆம் ஆண்டில் மாத்திரம் 46,000 முக்காடு கேஸ்கள், சந்தேக கேஸ்கள்; 1988-ஆம் ஆண்டில் 50,370 முக்காடு கேஸ்கள், சந்தேக கேஸ்கள். இவைகள் எல்லாம் பிடிக்கப்பட்ட கேஸ்கள். வழக்கு வரையில் வந்தவை. வராமல் ஆங்காங்கு, அவர் இவரைப் பார்த்து, இவர் அவரைப் பார்த்து, போய்விட்ட வழக்குகள் 50,000 இருக்கும். எனவே, ஒரு லட்சம் பேர் இந்த முக்காடு கேஸ்களால் தொல்லைப்பட்டுக் கொண்டு இருந்தார்கள். இதை அதிகாரிகள் எல்லாம் கூட கொஞ்சம் தயக்கத்தோடு என்னிடத்தில் சொன்னாலும் கூட, அண்ணா காலத்திலிருந்து செய்யப்பட்ட முயற்சி, அதிகாரிகள் குறுக்கே நின்றார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதிகாரிகள் குறுக்கே நின்றாலும், அதை மீறி அரசு நல்ல காரியங்களைச் செய்யும் என்று திரு. வரதராசன் அவர்களுக்கு சொல்வதற்காகக் குறிப்பிடுகிறேன். எனவே, இந்தக் கேஸ்களை

எல்லாம் ஒழித்ததன் மூலம் இன்றைக்கு லட்சம் பேர் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு தெருவில் நடமாட முடிகிறது.

அடுத்து ஹெல்மெட், ஹெல்மெட் இனிமேல் அணியத் தேவையில்லை. அவர்களுடைய இஷ்டத்திற்கே விட்டுவிடுகிறோம் என்று சொன்னவுடன், இந்த அவையிலேயே அதிகமாக எகிறிக்குதித்தவர் தீட்சிதர் அவர்கள்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். (சிரிப்பு). ஹெல்மெட்டிற்கம் அவருக்கும் உள்ள தொடர்பு அந்த அளவிற்கு, ஹெல்மெட் அணிந்து ஒரு கல்லூரி மாணவனைப் போல அன்றைக்குத் துள்ளிக் குதித்தார். அவ்வளவு மகிழ்ச்சியைத் தெரிவித்தார். கட்டாயமாக அணிய வேண்டுமென்ற நிலையைத் தவிர்த்த காரணத்தால் பெரியதாக எந்த ஆபத்தும் ஏற்பட்டு விடவில்லை. ஹெல்மெட் அணிந்திருந்த காலத்தில், நாம் இந்த உத்தரவைப் போடுவதற்கு முன்பு, ஜனவரி மாதத்தில் ஹெல்மெட் அணிந்திருந்தும் விபத்திற்கு ஆளாகி இறந்தவர்கள் 95 பேர், - இது ஜனவரியில், கடந்த ஆண்டில். பிப்ரவரியில் 58 பேர், மார்ச்சில் 66 பேர். ஏப்ரலில் 67 பேர். மே மாதத்தில் 74 பேர், ஜூனில் 76 பேர், ஆக மொத்தம் 436 பேர்.

ஹெல்மெட் அணியத் தேவையில்லை, அது அவரவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்தது என்று சொன்ன பிறகு - ஆனாலும் ஆங்காங்கு விளம்பரங்களிலே ஹெல்மெட்டை அணியுங்கள் என்று சொன்னோம், கட்டாயம் இல்லை, இருந்தாலும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஹெல்மெட் தேவை என்றெல்லாம் விளம்பரப்படுத்தினோம். அதற்குப் பிறகு - ஜூலை 68, ஆகஸ்ட் 72, மரணம்; செப்டம்பர் 54, அக்டோபர் 75, நவம்பர் 56, டிசம்பர் 61, மொத்தம் 386. கட்டாயம் என்று இருந்தபோது 436. கட்டாயம் இல்லை என்று ஆக்கப்பட்ட பிறகு 386 தான்.

மேலும் போலீசாருக்குத் தேவையான வசதிகளைச் செய்வதில் மிக முக்கியமானது. அவர்களுக்கு தொலைபேசித் தேவை. சிலர் முணுமுணுக்கக்கூடும். ஆம். தொலைபேசி கொடுத்து என்ன, எடுத்துப் பேசினால்தானே என்று சிலர் முணுமுணுக்கக்கூடும். இனிமேல் அவர்கள் பேசுவார்கள் என்ற உறுதியோடு, இப்போது தொலைபேசி வசதி அவர்களுக்குச்

செய்து தரப்படுகிறது. தமிழ்நாட்டிலே உள்ள மொத்தக் காவல் நிலையங்கள் 1,034. அதிலே புறநகர்க் காவல் நிலையங்கள் அதோடு சேர்த்து 202. இரண்டும் இணைந்து 1,236 காவல் நிலையங்கள் இருக்கின்றன. அதிலே தொலைபேசி வசதி செய்யப்பட்ட பெரிய, முழுக் காவல் நிலையங்கள் 966. தொலைபேசி வசதி இல்லாத காவல் நிலையம் 68. புறநகர்க் காவல் நிலையம் 20. இந்த 88 காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதி செய்து தரப்படும் என்று கடந்த ஆண்டு அறிவித்திருந்தேன். அதற்கு இணங்க 74 காவல் நிலையங் களுக்கு தொலைபேசி வசதி முழுமையாக செய்து தரப்பட்டு விட்டது. மீதமுள்ள 14-ல் தான் கடந்த ஆண்டு அறிவித்த 11 புதிய காவல் நிலையங்கள் இருக்கிற காரணத்தால், அதற்கும் சேர்த்து இந்த ஆண்டு தமிழ்நாட்டிலே உள்ள எல்லாக் காவல் நிலையங்களும் தொலைபேசி வசதியை முழுமையாகப் பெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் ஜீப் வசதி, தமிழ்நாட்டிலே உள்ள மொத்த சப்-டிவிசன், காவல் உட்கோட்டங்களில் 108 உட்கோட்டங்களில் இதுவரை ஜீப் வழங்கப்பட்ட உட்கோட்டங்கள் 103. இன்னும் 5 உட்கோட்டங்கள், சப்-டிவிசனுக்கு ஜீப் இல்லை. இந்தக் குறையும் இந்த ஆண்டு நீக்கப்பட்டு, 5 ஜீப்புகளும் வழங்கப்பட்டுவிடும்.

மோட்டார் சைக்கிள், 1,034 பெரிய காவல் நிலையங்களில் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்ட காவல் நிலையம் இதுவரை 892. வழங்கப்படாத காவல் நிலையம் 142. வரும் ஆண்டில் இந்த 142 காவல் நிலையங்களுக்கும் மோட்டார் சைக்கிள் வழங்கப் பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மெஸ், காவல்துறை அதிகாரிகளுடைய மெஸ். வெளி யூரிலேயிருந்து காவல் பணிக்காக வருகிற அதிகாரிகள், வேறு மாநிலங்களிலிருந்து இங்குள்ளவர்களைச் சந்திக்க பணிநிமித்தம் வருகிற அதிகாரிகள், இவர்கள் எல்லாம் ஓய்வு எடுக்கவும், உணவு அருந்தவும் ஒரு தங்குகின்ற இடம் அவர்களுக்குச் சென்னையில் இல்லை என்ற குறையைப் போக்க, காவல்துறை அதிகாரிகளால் முறையிடப்பட்டு, 1987 ஆம் ஆண்டு

அன்றைக்கு இருந்த அரசு 35.60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மையத்தைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்தது. 9-7-1987-ல். அதன்படி 30-10-1987-ல் செலவுக்காக ரூ. 2 இலட்சம் அனுமதிக் கப்பட்டது. அதற்கு அடித்தளம் எல்லாம் கட்டப்பட்டது. அதற்குப் பிறகு பணம் ஒதுக்கப்படவில்லை. அரசாங்கம் பணம் ஒதுக்கும் என்று பொதுப்பணித்துறையும் எதிர்பார்த்து, மேலும் 7.2 இலட்சம் ரூபாயைச் செலவழித்தது. அரசாங்கம் அந்தப் பணத்தையும் பொதுப்பணித்துறைக்கும் தரவில்லை. மேலும் ஒதுக்கவும் இல்லை. எனவே இந்தத் திட்டம் கைவிடப்படும் நிலைமைக்கு இப்போது வந்துவிட்டது. அதை மீண்டும் எடுத்து நிறைவேற்ற, இந்த அரசு இப்போது பொறுப்பேற்றுக்கொண்டு, அதை உடனடியாக நிறைவேற்ற நடப்பாண்டில் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தப் போலீஸ் மெஸ் சென்னையிலே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே சென்னை நகரத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எழுகிற நேரத்திலே வெளியூரிலேயிருந்து தருவிக்கப்படுகிற காவலர்கள் - நான் முதலிலே சொன்னது அதிகாரிகள் காவலர்கள், அவர்கள் தங்கி ஓய்வு எடுக்க, உணவு அருந்த அதற்கு ஒரு இடம் சுமார் 200 பேரிலேயிருந்து 300 பேர்கள் வரையிலும் ஓய்வு எடுக்கக்கூடிய 'டார்மிட்டரிகள்' சென்னையிலே கட்டுவதற்கு 10 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, மொத்த சிறப்புக் காவல் அணிகள் - அதாவது தமிழ்நாடு ஸ்பெசல் போலீஸ் - 9 என்று சொன்னேன். ஒரு அணிக்கு ஆயிரம் பேர் வீதம் 9 ஆயிரம் பேர்கள் என்று சொன்னேன். இந்த அணிகள் செயல் படுகின்ற இடங்களில் எல்லாம், அவர்களுடைய சமையலுக்காக அடுப்பு எரிக்கப் பயன்படுத்துவது விறகுகளாகவே இது வரையிலும் இருக்கிறது. இந்த விறகுகளை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியதாக இருக்கிறது. இல்லாவிட்டால் பக்கத்திலேயிருக்கிற காடுகள் அழியநேரிடுகிறது. எனவே, அதற்குப் பதிலாக இந்த 9 அணிகள் தங்குகின்ற இடத்திற்கும் காஸ் அடுப்புகளை கொடுப்பதற்கு ஒரு செயற்குறிப்பு

காவல்துறைத் தலைவரிடமிருந்து அரசு பெற்று, இந்த 9 அணி களுக்கும் மற்றும் ஆவடியிலுள்ள ரிசர்வ் போலீஸ் படைக்குமாக, மொத்தம் 10 அணிகளுக்கும் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் எரிவாயு அடுப்புகளை வாங்கிக் கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காமராஜர் மாவட்டத்தில் ராஜபாளையம் பகுதியில் அவர்கள் குறிப்பிட்ட ஜாதிக் கலவரங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. ராஜபாளையம் தற்போது சிவகாசி உட்கோட்டத்தில் சப்-டிவிஷனிலே இருக்கிறது. ஒரு நிரந்தரமான ஏற்பாடாக அங்கே அமைதியை ஏற்படுத்துவதற்காக இப்போது செய்யப்படுகிறது. சிவகாசிக்கும், ராஜபாளையத்திற்கும் இடையே 40 கிலோமீட்டர் தொலைவு. ராஜபாளையத்தில் இன்றைக்கு கலவரம் என்ற செய்தியை அறிந்து சிவகாசி சப்-டிவிஷனிலிருந்து, உட் கோட்டத்திலுள்ள துணைக் கண்காணிப்பாளர். ராஜபாளையத் திற்கு வருவதற்குள்ளாக நிலைமை கட்டுக்கு அடங்காமல் போய் விடுகிறது. அதனால்தான் முன்னேற்பாடாக போலீசார் செயல்பட வில்லை என்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் இங்கே சொல்லப் பட்டதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். எனவே, இந்த நிலையைச் சமாளிக்க ராஜபாளையத்தில் ஒரு துணைக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டுவது அவசியம் என்று கருதி ராஜபாளையத்தில் அமைக்கப்படும் அந்த உட்கோட்டத்தில் கீழ்க்காணும் காவல் வட்டங்கள், காவல் நிலையங்கள் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராஜபாளையம் சப்-டிவிஷன். அதிலே ராஜபாளையம் நகரம் தெற்கு சர்க்கிள் நிலையம். அதன் கீழே ராஜபாளையம் நகரம் தெற்கு காவல் நிலையம். அடுத்து ராஜபாளையம் ஊரக வடக்கு சர்க்கிள் ஸ்டேஷன். அதன் கீழே அடங்கும் காவல் நிலையங்கள் ராஜபாளையம் நகரம் வடக்கு கீழ்ராஜகுலராமன். சேத்தூர் தளவாய்புரம்.

ராஜபாளையத்தில் குற்றப்பிரிவு, 'கிரைம் பிரான்ச்' தனியாக இயங்கும். திருவில்லிபுத்தூர் நகரம், திருவில்லிபுத்தூர் தாலுக்கா, மம்சாபுரம் ஆகிய காவல் நிலையங்கள் அந்த சப்- டிவிஷனில் அடங்கும்.

வத்திராயிருப்பு சர்க்கிளில் வத்திராயிருப்பு, மாதம்பட்டி ஆகிய காவல் நிலையங்கள் இயங்கும். வத்திராயிருப்பு வட்டத்திலே உள்ள எம். புதுப்பட்டி காவல் நிலையத்தை சிவகாசிக்கு மிக அருகாமையிலுள்ள காரணத்தால் சிவகாசி காவல் வட்டத்தோடு சேர்க்கவும் ஆணையிடப்படுகிறது. இதைப் போலவே அந்தப் பகுதியிலுள்ள காவலர்களை எப்போதும் தயார் நிலையில் வைத்திருப்பது அவசியமான ஒன்றாக இப்போது இருக்கிறது. எனவே முதற் கட்டமாக 4 ஆர்ம்ட் ரிசர்வ் பிரிவு களில் இரண்டு பிரிவுகளை ராஜபாளையத்தில் தற்காலிகமாக 6 மாதத்திற்கு நிறுத்தி வைப்பது அவசியமாகிறது. இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து அதற்கான ஆணை உடனடியாக பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராஜபாளையத்தில் புதியதாக உட்கோட்டம் ஆரம் பிப்பதைப் போல இந்த ஆண்டு மேலும் புதிதாக ஆரம்பிக் கப்பட இருக்கின்ற உட்கோட்டங்கள் - மதுரை மாவட்டத்தில் போடிநாயக்கனூர், தர்மபுரி மாவட்டத்தில் அரூர், தஞ்சை கிழக்கு மாவட்டத்தில், திருவாரூர் புதிய சர்க்கிள் ஸ்டேஷன்கள், தஞ்சை மேற்கு மாவட்டத்தில் பேராவூரணி, தஞ்சை கிழக்கு மாவட்டத்தில் வேதாரண்யம், செங்கை - அண்ணா மாவட்டத்தில் செய்யூர். இங்கே சர்க்கிள் ஸ்டேஷன்கள் அமைக்கப்படும். இவைகள் எல்லாம் கட்சிச் சார்பில்லாமல், வேறுபாடு இல்லாமல் நடைபெறுகிற காரியங்கள்.

புதிய காவல் நிலையங்கள் இந்த ஆண்டு இராமநாத புரம் மாவட்டத்தில் கீழ்ப்பெரும்கரை, பசும்பொன் தேவர் மாவட்டத்தில் புழுதிப்பட்டி, திருச்சி மாவட்டத்தில் ராம்கி நகர், தர்மபுரி மாவட்டத்தில் எரியூர், வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் சத்துவாச்சேரி, திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டத்தில் வடவணக்கம்பாடி, செங்கை-அண்ணா கிழக்கு மாவட்டத்தில் சாத்தான்காடு, திருச்சி மாவட்டத்தில் தில்லை நகர், மதுரை ஊரகத்தில் கம்பன்நகர், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் சுரண்டை.

புறக்காவல் நிலையங்களை காவல் நிலையங்களாக உயர்த்துதல் - திருச்சி மாவட்டத்தில் கைகலத்தூர், தஞ்சை மேற்கில் திருச்சிற்றம்பலம், மதுரை ஊரகத்தில் மயிலாடும்பாறை.

புதிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு மக்கட் தொகை, தீ அபாயம் உள்ள இடம், அதனுடைய தொலைவு இவைகளை எல்லாம் கணக்கிட்டு ஏற்படுத்துகிறோம். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு புதியதாக அமைக்கப்பட இருக்கின்ற தீயணைப்பு நிலையங்கள் - திருச்சி மாவட்டத்தில், இலுப்பூர், செங்கை-அண்ணா மாவட்டம் - திருத்தணி, புதுக்கோட்டை மாவட்டம் - கந்தர்வக்கோட்டை, தஞ்சை மாவட்டம் - திருவிடைமருதூர், தென்னாற்காடு மாவட்டம் - மரக்காணம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் - ஜவ்வாது மலை, மதுரை மாவட்டம் - கடமலைக்குண்டு, காமராஜர் மாவட்டம் - திருச்சுழி, சிதம்பரனார் மாவட்டம் - கழுகுமலை, இராமநாதபுரம் மாவட்டம் - ஏர்வாடி (குறுக்கீடு), அவர் சொன்னதை அவரே மறந்துவிட்டார் போல் இருக்கிறது.

தலைவர் அவர்களே, காவலர்களுக்குக் குடியிருப்புகள் பற்றி நேற்றைக்கு நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் அவர் களும், இன்றைக்கு நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மற்றும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட்கட்சி சார்பாகவும், மற்றும் லத்தீப் அவர்களும் மற்றும் பேசிய எல்லா தலைவர்களும், உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக் கிறார்கள்.

தலைமைக் காவலர்களுடைய மொத்த எண்ணிக்கை, 6,830. அதிலே குடியிருப்பு வசதி பெற்றவர்கள் 3,077. பெறாதவர்கள் 3,763; காவலர்களுடைய மொத்த எண்ணிக்கை 53,644. குடியிருப்பு வசதி பெற்றவர்கள் 22,433. வசதி பெறாதவர்கள் 31,211 அதாவது இதுவரை 42 சதவிகிதம் பேர்தான் குடியிருப்பு வசதியைப் பெற்றிருக்கிறார்கள். அரசு 80 சதவீதம் என்று இலக்கு நிர்ணயித்திருக்கிறது. அதை அடையவேண்டு மானால் 3,003 தலைமைக் காவலர்களுக்கும், 24 ஆயிரத்து தொள்ளாயிரத்து சொச்சம் காவலர்களுக்கும் குடியிருப்பு கட்டித் தர வேண்டும். அதிலே இப்போதுள்ள அந்த மதிப்பின்படி 1.15 இலட்சம் ரூபாய் ஒரு குடியிருப்புக்குச் செலவாகிறது. எனவே கட்டித்தரப்பட வேண்டிய மீதமுள்ள இந்தக் குடியிருப்புகளுக்கு 321.68 கோடி ரூபாய் தேவைப்படும். அதை ஓரளவு குறைத்து

இன்னும் குறைந்த செலவிலே ஆனால் வசதி குறையாமல் கட்டித்தர ஆண்டு ஒன்றுக்கு 3,000 வீடுகள் வீதம் 10 ஆண்டுக் காலத்தில் கட்டி முடிக்க இந்த அரசு இந்த ஆண்டில் முயற்சி களைத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல்துறை அமைச்சுப்பணியாளர்களுக்கு ஒரு கோரிக்கை இருந்தது. 1982 ஆம் ஆண்டு அரசு காவல்துறை அமைச்சுப் பணியாளர்களின் வேலைப் பளுவை ஆய்வு செய்ய ஒரு சிறப்புக் குழு நியமிக்கப்பட்டது. அதன்படி 2,150 கூடுதல் பதவிகளை அமைச்சுப் பணியிலே புதியதாக ஏற்படுத்த அந்தக் குழு சிபாரிசு செய்தது. உடனடியாக 1,075 பணியிடங்களை ஏற்படுத்த வேண்டும் என்று 1982 ஆம்ஆண்டிலேயே பரிந்துரை செய்யப்பட்டது. உடனடியாக அது செய்யப்படாமல் கடந்த 8 ஆண்டுகளில் 895 பதவிகளுக்குத்தான் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. மீதம் உள்ள 180 பணிகளுக்கு இந்த ஆண்டு அனுமதி வேண்டும் என்று தமிழ்நாடு காவல்துறை அமைச்சுப் பணியாளர் சங்கம் ஒரு கோரிக்கை வைத்தது. அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலித்து இந்த 1990-91 ஆம் ஆண்டில் 180 பணியிடங்களில் 100 இடங்களைப் பூர்த்தி செய்வது என்று அரசு ஆணையிடும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல காவல் நிலையக் கட்டிடங்களைப் பற்றியும் இங்கே எடுத்துக் கூறப்பட்டது. சொந்தக் கட்டிடம் காவல் நிலையத்திற்கு இன்றைக்கு 872 இருக்கின்றன. வாடகைக் கட்டிடம் 367 இருக்கின்றன. பெரு நகரத்திலே ஒரு காவல் நிலையம் அமைக்க 18 இலட்சம் ரூபாய் செலவாகிறது. மாவட்ட தலைநகரத்தில் 13 இலட்சம் ரூபாய் செலவாகிறது. வட்ட காவல் நிலையம் அமைக்க 8 இலட்சம் ரூபாய், ஊரக காவல் நிலையம் அமைக்க 7 இலட்சம் ரூபாய் செலவாகிறது. எனவே இந்த 367 காவல் நிலையத்திற்கும் கோடி ரூபாய் தேவைப்படும். இதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 10 காவல் நிலையங்களுக்குக் கட்டிடங்கள் அமைப்பது என்றும் அடுத்த ஆண்டு நிதிநிலைக்கு ஏற்ப காவல் நிலையங்களுக்கான கட்டிடங்களை அமைக்க ஆணை பிறப்பிப்பது என்றும் அரசு முடிவு எடுத்திருக்கிறது.

மின் விசிறிகள் காவலர்களுக்கு வழங்கப்படும், அவர் களுடைய குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் என்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு 4,800 மின் விசிறிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் 22,669 மின் விசிறிகள் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. நிதி ஆதாரமும் குறைவாக இருக்கிறது. எனினும் இந்த ஆண்டு 22,669 மின் விசிறிகளில் 10,000 குடியிருப்புகளுக்கு 10,000 மின் விசிறிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவலர் தேர்வு பற்றியெல்லாம் இங்கே பேசப்பட்டது. 1987 ஆம் ஆண்டில் இரண்டாம் நிலை காவலர் பதவிக்குத் தேர்வு நடைபெற்றது. இந்த காவலர் பதவித் தேர்வில் முதல் நிலை காவலர் பதவிக்கு ஆண்கள் தேர்வு செய்யப்படுவதில்லை. இரண்டாம் நிலையில் இருந்தால் முதல் நிலைக்கு, பிறகு அவர்கள் பதவி உயர்த்தப்படுகிறார்கள். பெண் காவலர்களைத் தான் முதல் நிலை பதவிக்குத் தேர்வு செய்கிறார்கள். அப்படி தேர்வு செய்ய விண்ணப்பித்தவர்கள், ஆண்கள் இரண்டாம் நிலை காவலர்களுக்கு விண்ணப்பித்தவர்கள் 14,379 பேர். அதிலே எல்லாப் பரிசோதனையும், விசாரணையும் முடிந்து நியமனம் செய்யப்பட்டவர்கள் 6,862 பேர். அதைப்போல சிறப்புக் காவல் பணிக்கு - தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் - அதற்கு விண்ணப் பித்தவர்கள் 2,490 பேர். அதிலே தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் 1,210 பேர். கடந்த கால அரசில் இவர்களுடைய கல்வித் தகுதி எட்டாவது வகுப்பு வரை படித்து இருந்தால் போதும் என்று இருந்தது. ஆனால் இப்போது இந்த அரசு இனிமேல் இது போன்ற இரண்டாம் நிலை காவலர் பதவிக்கும் சிறப்புக் காவலர் பதவிக்கும், வளர்ச்சி அடைந்துள்ள கல்வி முறையைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கவேண்டும். பாஸோ, ஃபெயிலோ கவலை இல்லை. 10-ஆம் வகுப்பு வரை படித்து இருக்க வேண்டும் என்று நிர்ணயித்து ஆணைபிறப்பித் திருக்கிறது. இந்த அடிப்படையில் இந்த ஆண்டு தமிழ்நாடு ஸ்பெஷல் போலீசுக்கு 2,000 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரி வித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமாத்திரமல்ல, இன்னொரு குறைபாடும் இங்கே கூறப்பட்டது. சிறப்புக் காவல் படையில் இருப்பவர்கள் அங்கேயே இருந்து விடுகிறார்கள் என்று. நான் சொன்னேனே டெல்லியிலே இருக்கிறார்கள் என்று. அவர்கள் நான் வந்து பார்த்தால் மகிழ்ச்சியடைகிறார்கள். அவர்கள் இங்கே வருவதற்கே முடியவில்லை. சிறப்புக் காவல் படைக்கு என்று போகிறவர்கள் அங்கேயே தங்களுடைய பணிக்காலம் முடிகிற வரையிலே இருந்து ஓய்வு பெறுகிறார்கள் அல்லது இயற்கை அடைகிறார்கள். இது நிலைமை. அதை மாற்றி, இனிமேல் சிறப்புக் காவல் படையிலே இருப்பவர்கள் சில ஆண்டுகளுக்குப் பிறகு சட்டம் - ஒழுங்கு காவல்துறைக்கு அனுப்பப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண் காவலர்கள் 1973 ஆம் ஆண்டு கழக ஆட்சியிலே தான் முதன் முதலாக தமிழ்நாட்டில் நியமிக்கப்பட்டார்கள். இங்கே சொன்னார்கள். மொத்தமாக, காவலர்கள் மீதே குறை சொல்லிக் கூட சில பேர் பேசினார்கள். ஒரு சிலர் இப்படி இருப்பார்கள் என்பதற்கு உதாரணங்களும் உண்டு. பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டபோது 21 பேர் நியமிக்கப்பட்டார்கள் அந்த 21 பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றிக் கொண்டிருந் தார்கள். அப்போது அருள் அவர்கள் காவல்துறைத் தலைவர். நான் அண்ணா விருது வழங்குகிற விழாவிற்குச் சென்று இருந்தேன். அதிலே பெண் காவலர்கள் அணிவகுத்து வந்தார்கள். நான் அருள் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். என்ன 21 பேர் ஆயிற்றே, 20 பேர்தான் இருக்கிறார்கள்? என்று கேட்டேன். 'அது சார், ஒருவர் திருடிவிட்டார், அதனாலே விலக்கிவிட்டோம்', என்று சொன்னார். 'ஒரு பெண் காவலர் திருடி விட்டார், அதனாலே விலக்கிவிட்டோம்' என்று சொன்னார். அதனாலே காவல்துறையிலே இருந்தாலும்கூட, குறையுடை யவர்கள் இருப்பார்கள் என்பதற்கு ஒரு உதாரணம். அதற்காக அந்தக் காவல்துறையே தவறானது, பெண் காவலர்களை நியமிக்கக்கூடாது என்கிற முடிவிற்கு வரக்கூடாது. இருந்தாலும், அன்றைக்கு முதன் முதலாக தமிழகத்திலே தொடங்கப்பட்ட பெண் காவலர்

படை இன்றைக்குப் பெருகி, 857 பேர் இப்போது பெண் போலீசார் இருக்கிறார்கள். இன்னும் அதிகம் பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை இங்கே வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்த ஆண்டு மேலும் 800 பெண் காவலர்கள், முதல் நிலைக் காவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இறுதியாக, ஆயத்தீர்வைத் துறையைப் பற்றி யாரும் அதிகமாகப் பேசவில்லை. ஒரு வேளை, பேசித் தீர்ந்துவிட்டது. இனிமேல் கேட்கவா போகிறார் என்று சலித்து போய்விட்டார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும், பத்திரிகைகளில் வந்திருக்கிற தேதிகள் எல்லாம் சரியானவைகள் அல்ல. இன்னும் எந்தத் தேதியில் என்று நிர்ணயிக்கப்படவில்லை. உற்பத்தி முழுவதும் அரசின் சார்பிலே இருக்கின்ற 'டாஸ்கோ' மூலமாகத்தான் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதிலும் எந்த மாற்றமும் கிடையாது. அதைப் போலவே டெண்டர் விடப்படும். நேற்றைக்குப் பேசிய அசேன் கூடக் குறிப்பிட்டார்கள். டெண்டர், ஏலம், இவைகளெல்லாம் கூடாது, ஆங்காங்கு நலிந்தவர்களுக்கு அந்தக் கடைகளைத் தரவேண்டும் என்று குறிப்பிட்டார். முன்பிருந்த ஆட்சியிலே அப்படித்தான் நலிந்தவர்கள் என்ற பெயரால் பல பேருக்குத் தந்தார்கள். முன்பிருந்த ஆட்சியில் சாராயக் கடை ஏலம் எடுத்தவர்கள் மாத்திரம் தரவேண்டிய பாக்கி 1988-லே அவர்கள் ஆட்சியை விட்டுப் போகிற நேரத்தில் 33 கோடியே சொச்சம் ரூபாய். சாராயக் கடை ஏலம் எடுத்தவர்கள் மூலமாக வரவேண்டிய பாக்கி 33 கோடியே சொச்சம் ரூபாய். அதை இந்த ஆட்சி வந்த பிறகு, அதிலே இரண்டு கோடிதான் வசூலித்து இருக்கிறது. மேலும் வசூலிப்பதற்கான தீவிரமான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதுமாத்திரமல்ல, அப்போதிருந்த ஆட்சியில் அந்தக் கடைகள் எல்லாம் ஏலம் விடப்படாமல் முதலிலே ஏலம் விடப்பட்டது. அன்றைக்கு இருந்த அந்தத் துறையினுடைய அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்கள் தனியாருக்குத் தரமாட்டோம்,

ஏலம்தான் விடுவோம், தனித்தனியாகக் கொடுத்தால் கட்சிக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டோம் என்கின்ற கெட்ட பெயர் வரும், ஆகவே தரமாட்டோம் என்று இந்த அவையிலே முழக்கம் செய்தார். அதற்குப்பிறகு ஏலத்தை நிறுத்திவிட்டு, தனித்தனியாக எல்லோருக்கும் கொடுத்தார்கள். கொடுத்த பிறகு சில பேர் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குப் போட்டார்கள், கட்சிக்காரர்களுக்கே கொடுத்துவிட்டார்கள். எனவே, அதையெல்லாம் ரத்துச் செய்து ஏலம் விடவேண்டும் என்று வழக்குப் போட்டார்கள். உச்ச நீதிமன்றத்திலே வழக்கு வருகிற நேரத்தில் அரசு அவசரம், அவசரமாக, தன்னுடைய வழக்கறிஞர்களை எல்லாம் கலந்தாலோசித்து, ஃபைல் இருக்கிறது, படித்துப் பார்த்துவிட்டுத்தான் சொல்கிறேன்.

வழக்கறிஞர்களும், அரசுத்துறை அதிகாரிகளும் சொன்னார்கள், அமைச்சருக்குச் சொன்னார்கள், அன்றைக்கு இருந்த துறையினுடைய அமைச்சருக்குச் சொன்னார்கள். அதில் நமக்குக் கெட்ட பெயர் வரும், கட்சிக்காரனுக்குக் கொடுத்து விட்டோம் என்று சுப்ரீம் கோர்ட்டிலே வழக்குப் போட்டிருக் கிறார்கள். சுப்ரீம் கோர்ட் அதை ஒத்துக்கொண்டு தீர்ப்பளிக்கும். எனவே, அரசிற்குக் கெட்ட பெயர் வரும் என்று சொன்னதை ஏற்றுக்கொண்டு, அந்த அமைச்சர் உடனடியாக இனிமேல் - ஏலம் விடப்படும் என்கின்ற குறிப்பை எழுதி, தனித்தனியாகக் கொடுக்கப்பட்ட நிலையை அன்றைக்கே மாற்றியிருக்கிறார். அசேன் சொன்ன யோசனையைக் கேட்டால், மறுபடியும் சுப்ரீம் கோர்ட்தான். அதுமாத்திரமல்ல, சுப்ரீம் கோர்ட்டிற்காக நான் பயப்படவில்லை. இதிலே யாருக்கும், கட்சிக்காரர்களுக்கு ஆதாயம் தருவதற்காக இந்தக் காரியம் நடைபெறக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கேட்கலாம், அசேன் போன்றவர்கள். மற்றவர்கள் கேட்கலாம். 'கட்சிக்காரர்கள் பிழைக்கவே வேண்டாமா' என்று கேட்கலாம் உங்களுக்கு நல்ல சந்தர்ப்பம். காங்கிரஸ்காரர்கள் ஏலம் எடுக்கப் போவதில்லை, என்று அவர்களே அறிவித்து விட்டார்கள். அ. தி. மு. க. வினரும் ஏலம் எடுக்கப்போவது இல்லை என்று அவர்களே அறிவித்து

விட்டார்கள். எனவே, (குறுக்கீடு), மார்க்சிஸ்ட்டு கம்யூனிஸ்டும் கிடையாதா? உண்மையா அது? திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் திரு. ரமணி சார்பிலே சொல்லுகிறார்களோ என்னவோ தெரியாது, அவர்களும் எடுக்கப் போவது இல்லை என்று. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எடுக்கப் போகிறீர்களா?

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா தளத்துக்காரர்களும் ஏலம் எடுக்கப் போவது இல்லை. அதைச் சொல்ல தவறிவிட்டார். ஜனதா தளத்துக்காரர்களும் ஏலம் எடுக்கப் போவது இல்லை. (சிரிப்பு) (குறுக்கீடு). உங்களோடு சேர்ந்த ஜனதா தளத்துக்காரர் களும் ஏலம் எடுப்பதில் சம்மதம் இல்லை. ஏலம் எடுக்கவும் போவது இல்லை என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : வேறு மாநிலங் களில் எடுப்பதாகக் கேள்வி. (சிரிப்பு).

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : வேறு மாநிலத்தில் எடுக்கிறார்கள். நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதனால் இது ஏலம் எடுக்கிற வாய்ப்பு கட்சிக்காரர்களுக்கு இல்லாமல் போய்விடும் என்று யாரும் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் எல்லாம் தங்களுடைய கொள்கையில் நிச்சயம் உறுதியாக இருப்பார்கள். நிச்சயமாக ஏலம் எடுக்க மாட்டார்கள். பினாமி வைத்து எடுத்தால்கூட நிச்சயமாக கண்டுபிடித்து இந்த அவையில் வெளியிடுவேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு (சிரிப்பு) இந்த அளவிலே என்னுடைய உரையை முடிக்கிறேன்.



உரை : 16 **நாள் : 26.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தில் அவை உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட 19 பேர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து, அவற்றுக்குப் பதிலும், விளக்கங்களும் அளிக்கின்ற வகையில் நான் இங்கே நின்றுகொண்டிருக்கின்றேன்.

காவல் துறை எத்தனைக் கடமையுணர்வோடு பணியாற்ற வேண்டும் என்பதையும், அந்தப் பணி எவ்வாறு இடைக் காலத்திலே பங்கமுற்றுவிட்டது என்பது குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மிக விளக்கமாக இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

தமிழக காவல் துறையைப் பொறுத்தவரையில், கடமைகளை நிறைவேற்றுவதிலும், சாதனைகளைப் படைப்பதிலும், இந்திய அளவில் மாத்திரமல்ல உலகளவில் உயர்ந்து நின்ற ஒன்றாகும். ஆனால் இடையில் ஒரு ஐந்து ஆண்டு காலத்தில் காவல் துறை பெரும் களங்கத்திற்கு உள்ளான ஒரு துறையாக மாறிவிட்டது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இந்த அவையில் இடம்பெற்றுள்ள பல்வேறு கட்சித் தலைவர்கள், ஏன் அ.இ.அ.தி.மு.க. வினுடைய கட்சித் தலைவர் திருநாவுக்கரசுகூட அதை ஓரளவு ஏற்றுக்கொண்டு, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள், காவல் துறை திருத்தப்படுவதற்கு உரிய வழிகள் அனைத்தையும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். சொல்லப்பட்ட குற்றங் குறைகள் அனைத்திற்கும், யோசனைகள் எல்லாவற்றுக்கும் பதில் அளிக்க நேரம் இல்லாதது மட்டுமல்ல, சிலவற்றைக் குறித்து நானே அவசரப்பட்டு இங்கே அறிவுப்புக்களைத் தந்து, அதனால் வேற பல நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை மனதில் கொண்டு, அந்தக் கருத்துக்கள் எல்லாம் ஆய்வுக்கு

உரியவைகள், ஏறத்தாழ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவைகள் என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய அளவிற்கு ஆய்வு செய்யப்படும், நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை முதலிலேயே நான் இங்கே வழங்க கடமைப் பட்டிருக்கிறேன்.

மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புள்ள இந்தக் காவல்துறை, ஒரு ஐந்தாண்டுக் காலமாக பொதுமக்களைப் பற்றி பெருமளவிற்குக் கவலைப்படாமல் தனிப்பட்ட ஒருவருடைய பாதுகாப்பு, அவர்களுடைய நலன்கள், அவர்களுடைய சுகதுக்கங்கள் இவைகளில் மட்டும் தங்களுடைய கடமைகளைச் செய்து வந்தது என்பதை யாரும் மறுத்துவிட இயலாது. அதன் காரணமாகத்தான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற 1989ஆம் ஆண்டையும், கடந்தகால ஆட்சியில் 1995ஆம் ஆண்டில் காவல்துறையில் நடத்திய சாதனைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உண்மை மிகத் தெளிவாக விளங்கும். 1989ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற குற்றங்கள், அவைகள் கண்டுபிடிக்கப்பட்ட விகிதாச்சாரம், எண்ணிக்கை இவைகளையெல்லாம் பார்த்தால், இந்த உண்மை தெளிவாகப் புலப்படும்.

1989-ல் கொலைகள்	1,493
அவற்றில் கண்டுபிடிக்கப்பட்டவை	1,182
கண்டுபிடிக்கப்பட்டவை சதவிகிதம்	79.16
1995-ல் நடைபெற்ற கொலைகள்	1,959
கண்டுபிடிக்கப்பட்டவை	1,107

அதாவது 56,51 சதவிகிதம்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

1989ல் கொலை முயற்சிகள்	1,047
கண்டுபிடிக்கப்பட்டவை	828

அதாவது 79.08 சதவிகிதம்.

1995-ல் கொலை முயற்சிகள்	1,599
கண்டுபிடிக்கப்பட்டது	790

சதவிகிதம் 49.41

1989-ல் கற்பழிப்பு நடந்தவை 279
கண்டுபிடிக்கப்பட்டவை 212

சதவிகிதம் 75.99

1995-ல் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த
கற்பழிப்புகள் 268
கண்டுபிடிக்கப்பட்டவை 83

சதவிகிதம் 51.90

பெண்கள், குழந்தைகள் ஆகியோரைக் கடத்தல்.

1989-ல் நடந்தது 690
கண்டுபிடிக்கப்பட்டவை 601

அதாவது 87,10 சதவிகிதம்

1995-ல் நடந்தவை 815
கண்டுபிடிக்கப்பட்டவை 423

சதவிகிதம் 51.90

1989-ல் நடந்த கொள்ளைகள் 98
கண்டுபிடிக்கப்பட்டவை 51

சதவிகிதம் 52.04

1995-ல் நடந்த கொள்ளைகள் 134
கண்டுபிடிக்கப்பட்டவை 47

அதாவது 35.07 சதவிகிதம்

பெரிய திருட்டுக்கள் என்ற அளவில்
1989-ல் நடந்தது 423
கண்டுபிடிக்கப்பட்டவை 298

சதவிகிதம் 70.45

1995-ல் நடந்த திருட்டுகள் 529
கண்டுபிடிக்கப்பட்டவை 281

அதாவது 53.12 சதவிகிதம்.

குண்டு வெடிக்கின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி இன்றைக்கு அறிக்கைகள், இன்றுள்ள அரசின்மீது அவதூறுகள், கண்டனங்கள்

இவைகளெல்லாம் வெளியிடப்படுகின்ற இந்த நேரத்தில், கடந்த கால ஆட்சியில், சென்னை, சேத்துப்பட்டிலுள்ள ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வெடிப்பு, குள்ளஞ்சாவடி காவல் நிலையத்தில் குண்டு வீச்சு, தேன்கனிக் கோட்டை கோவில் விழாவிலே குண்டு வீச்சு, திரைப்பட இயக்குநர் மணிரத்னம் வீட்டில் குண்டு வீச்சு, சேலம் அருகே வாழப்பாடியில் 8 பேர் கொல்லப்படுகின்ற அளவுக்கு வெடிகுண்டு வீச்சு, குடவாசலில் அ.இ.அ.தி.மு.க. அலுவலகத்திலேயே குண்டு வீச்சு, சிதம்பரனார் மாவட்டத்தில் 3 பேர் இறக்கக் காரணமாக இருந்த குண்டு வெடிப்பு.

சென்னை, இலங்கைத் தூதுவர் அலுவலகத்தில் வெடிகுண்டு வீச்சு. நாகப்பட்டினத்தில் குண்டு வெடித்து இந்து முன்னணித் தலைவர் மனைவி சாவு. இந்த 9 சம்பவங்கள் உட்பட 1995ஆம் ஆண்டில் மாத்திரம் குண்டு வெடிப்பு, நாட்டு குண்டு வெடிப்பு சம்பவங்களில் இறந்தவர்கள் 40 பேர். காயம்பட்டவர்கள் 127 பேர். துப்பாக்கிச் சூடு பற்றி இங்கே எடுத்துக் காட்டினார்கள். 1991ஆம் ஆண்டு 33 சம்பவங்கள், 1992ஆம் ஆண்டு 67 துப்பாக்கிச் சூடுகள், 1993ஆம் ஆண்டு 63 துப்பாக்கிச் சூடுகள், 1994ஆம் ஆண்டில் 23 துப்பாக்கிச் சூடுகள், 1995ஆம் ஆண்டில் 30 துப்பாக்கிச் சூடுகள். திரு. திருநாவுக்கரசு பேசும்போது சொன்னார்கள். இப்போதுகூட 1996-லே 23 துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றிருப்பதாகச் சொன்னார்கள். தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகள் 15, அதற்குப் பிறகு நடைபெற்றிருப்பது 8. இந்த 8 துப்பாக்கிச் சூடுகளைக் கூட நான் வரவேற்கவில்லை. இந்தத் துப்பாக்கிச் சூடுகள் இனியும் தொடர்ந்து 9, 10 என்று பெருகாமல் தவிர்ப்பதற்கு பெரும் பொறுப்பு காவல் துறைக்கும் இருக்கிறது, தரவேண்டிய ஒத்துழைப்பு பொது மக்களுக்கும் இருக்கிறது. காவல் துறையும், பொதுமக்களும் இணைந்து சமூகவிரோதிகளை தண்டிக்கக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது என்பதை சட்டப்படி, நியதிப்படி நான் எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இத்தனை வன்முறை நிகழ்ச்சிகள், குண்டுவெடிப்பு நிகழ்ச்சிகள், இவைகளிலே கடந்த காலத்திலே போலீஸார் காட்டிய தீவிரமற்ற நடவடிக்கைகள் போன்ற இவைகளெல்லாம் களையப்

படவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவரும் கோடிட்டுக் காட்டியதைப்போல, இந்தக் காவல் துறை மேலும் சீர்செய்யப்பட வேண்டுமென்பதில் எனக்கு இருவேறு கருத்து இல்லை என்பதை இங்கே தெள்ளத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்திலே ஒருமுறை பேசும்போது நான் குறிப்பிட்டேன். ஈரல் 75 சதவீதம் கெட்டு விட்டதைப் போல காவல் துறை கெட்டுவிட்டது என்று குறிப்பிட்டேன். ஒரு பத்திரிகையிலேகூட சொக்கர் அவர்கள் அந்தமாதிரி முதலமைச்சர் சொல்லியிருக்கக் கூடாது என்று சொல்லியிருந்தார்கள். அதிலே 1 சதவீதம், 2 சதவீதம் எனக்கும், அவருக்கும் வித்தியாசம் இருக்கலாம். அதிக அளவுக்கு காவல் துறை கெட்டுப்போய் விட்டது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இங்கே பேசிய யாரும் மறுக்கவில்லை. ஈரல் கெட்டுவிட்டது என்று சொல்கிறபோது ஒரு உண்மையை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஈரல் ஏன் கெடுகிறது? எந்த ஈரலும் தானாகவே கெடுவதில்லை. ஈரல் மனிதனுடைய உடலிலே இருக்கின்ற ஒரு உறுப்பு. அதைக் கெடுப்பவன் மனிதன்தான். தேவையற்ற, அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதன் மூலமும், தேவைப்படுகிறது என்று போதைத் தண்ணீரைக் குடிப்பதன் மூலமும் ஈரலைக் கெடுத்துக் கொள்கிறான். அதைப்போலத்தான் இந்த நாடு, அரசு என்கிற அமைப்பில், மனித உருவத்தில் ஈரல் உறுப்பாக இருப்பதுபோல. காவல் துறை இருக்கிறது. எனவே காவல்துறை என்பது தானாகவே கெடுவதில்லை. குடித்து ஈரலைக் கெடுத்துக் கொள்வதைப் போல, காவல் துறையைக் கண்காணிக்கின்ற அரசு வெறியோடு, போதையோடு நடந்துகொள்ள வேண்டுமென்று எண்ணிய காரணத்தால் ஈரல் கெட்டுவிட்டதைப் போல 75 சதவீதம் கெட்டு விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி). இப்போது அந்த ஈரலைக் குணப்படுத்துகின்ற பணியிலே நாம் ஈடுபட்டதன் காரணமாக ஓரளவு வெற்றிப் பெற்றிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். எனவே ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. 75 சதவீதம் கெட்ட ஈரலில் 50 சதவீதம் தப்பித்துக் கொண்டது என்கின்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. விரைவில் குணம் பெற்று கம்பீரமாக காவல் துறை உறுதியோடு, நேர்மையோடு, நாணயத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) நடமாடும், நடைபோடும் என்பதை இந்த மன்றத்திலேயுள்ள

மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மாநிலப் பொதுமக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையிலே இரண்டு வகையினர்கள் உண்டு. ஒரு முறை அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது 1968-லே இங்கே உரையாற்றிய போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எல்லோருக்கும் தெரிந்த ஒரு வேடிக்கையான கதையைத்தான் இங்கே குறிப்பிட்டார்கள்.

திரு. கருத்திருமன் அன்று எதிர்க்கட்சித் தலைவர். அவர் வேடிக்கையாக ஒன்று சொல்ல, அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். யாரோ ஒருவன் தெருவிலே போய்க் கொண்டிருந்தான். ஒரு வீட்டுக்குள்ளேயிந்து 'காலை வெட்டு, கையை வெட்டு, கழுத்தை வெட்டு' என்று சத்தம் கேட்டது. உடனே, போலீஸ் அதிகாரி அதைக் கேட்டு, லாரியிலே போலீஸை அழைத்து வந்து உள்ளே நுழைந்தால், அங்கே சட்டை தைத்துக் கொண்டிருந்தார்கள் என்று வேடிக்கையாகச் சொன்னார். அதை நான் பார்த்தபோது, எனக்கு இன்னொரு கதையும் இப்பொழுது நினைவுக்கு வருகிறது. இரண்டு கதைகளுக்கும் உரியவர்களாக நமது காவலர்கள் இருக்கிறார்கள். எதுவும் நடக்காமல் இருக்கும் போதே உள்ளே நுழைந்து, சட்டை தைப்பவனைப் பார்த்து, அவன் கொலைகாரன். ஏனென்றால் கழுத்தை வெட்டு, காலை வெட்டு, கையை வெட்டு என்று சொன்னான். ஆகவே, கொலைகாரன் என்று சொல்லுகின்ற காவல் துறையினர் ஒரு வகை. இன்னொரு வகை, உள்ளபடியே, கொலை நடக்கின்ற இடத்திற்கு வெளியே சென்றுகொண்டிருக்கக் கூடிய காவல் துறை அதிகாரி, உள்ளே 'கழுத்தை வெட்டு, காலை வெட்டு, கையை வெட்டு' என்று சத்தம் கேட்கிறபோது, பக்கத்திலேயுள்ள காவல் துறை நண்பர் அதிகாரியைப் பார்த்து "என்னய்யா, அப்படி சத்தம் கேட்கிறது" என்று சொன்னபோது, "அதெல்லாம் ஒன்றுமில்லை, டான்ஸ் மாஸ்டர் வீடு, அவர் காலை வெட்டு, கையை வெட்டு என்று பெண்ணுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்" என்று சொல்வதைப் போலவும் சில காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். நடனம் கற்றுக் கொடுக்கிறார்; நடனத்திற்கான அபிநயத்திற்கு கையை வெட்ட வேண்டும், காலை வெட்ட வேண்டும், முக்கியமாகக் கண்ணை வெட்ட வேண்டும். எனவே அதைச் சொல்லிக்கொடுக்கிறார்

என்று சொல்கின்ற அந்த வகை காவல் துறை அதிகாரிகளும் இருக்கிறார்கள். எனவே, இந்த இரண்டு வகையினரும் திருந்த வேண்டும். அவசரப்படவும் கூடாது. ஒருவர் மீது உண்மைக்கு மாறான குற்றச்சாட்டைச் சொல்லவும் கூடாது. தெரியாமல் ஒருவரை சிறைப் பிடிக்கவும் கூடாது; கைது செய்யவும் கூடாது. ஏதோ, வேண்டியவர் என்று தெரிந்து, தப்பித்துக் கொள்ள வேறு ஏதோ சமாதானம் சொல்லி, சமாளித்துக் கொள்ளவும் கூடாது. இப்படிப்பட்ட இரண்டு வகையினர்களால் நாடு கெடும்; சமுதாயம் சீரழியவும் என்பதை எண்ணிப் பார்த்து அவர்கள் செயல்படுவார்கள் என்பதிலே எனக்குத் தெளிவான கருத்து உண்டு.

இந்த மானியத்திலே பேசும்போது, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர், சுப்பராயன் அவர்கள், மானியக் கோரிக்கையிலே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்ற வாசகங்களையெல்லாம் சுட்டிக்காட்டி, சமூகப் பார்வையோடு காவல் துறை நடந்து கொள்ளவேண்டும் என்றெல்லாம் கோடிட்டுச் சொல்லி, குறிப்பாக, அன்றைக்கு அவருடைய பேச்சிலே முக்கால் பகுதியில் நடைபாதைக் கடைகளுக்காக வாதிட்டார். அப்படி வாதிடும்போது சொன்னார். ஏதோ போலீஸ் அதிகாரிகள் கொடுக்கின்ற 'போட்டோ' படங்களை வைத்துக்கொண்டு முதலமைச்சர் அவர்கள் தீர்மானிக்கக்கூடாது என்று சொன்னார்கள். நான் அந்த 'போட்டோ' படங்களையெல்லாம் இந்த அவையிலே அவரிடத்தில் காட்டினேன். எதிர்க் கட்சித் தலைவரிடத்திலும், மற்ற உறுப்பினர்களிடத்திலும் காட்டினேன். எதற்காகக் காட்டினேன் என்றால், சாலைகளில் மக்கள் நடக்க முடியாமல், அகன்ற சாலையாக இருந்தாலும்கூட, அதிலே பாதிக்குமேல் சாலைகளை அடைத்து பேருந்துகள் செல்லமுடியாமல், ஆட்டோ ரிக்ஷாக்கள்கூடச் செல்லமுடியாமல் இருக்கின்ற அளவிற்கு, போக்குவரத்து நெருக்கடி இந்த நடைபாதைக் கடைகளால் ஏற்பட்டிருக்கின்றது. அவைகளை அறவே அழித்து விடவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அந்தக் கருத்தைக் கொண்டவனும் அல்ல நான். நடைபதைக் கடைவாசிகள் ஏதோ அவர்களுடைய வயிற்றை வளர்க்க, அன்றாடம் காய்ச்சுவதற்காக, அந்த அங்காடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் அறியாதவன் அல்ல. ஆனாலும், சென்னை போன்ற நகரங்களில், கோவை,

மதுரை போன்ற நகரங்களில் இந்தக் கடைகளின் காரணமாக போக்குவரத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற இடைஞ்சல்களும், அதனால் உருவாகின்ற விரும்பத்தகாத அசம்பாவிதங்களும் தவிர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். எந்தெந்த நகரங்களில் இந்த நிலை இருக்கின்றதோ, அங்கெல்லாம், காவல் துறையைச் சேர்ந்தவர்களும் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களும், உட்கார்ந்து பேசி, அந்த வியாபாரிகளை அழைத்துப் பேசி, ஒழுங்குபடுத்தி, அந்தக் கடைகளை வைப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இந்த அரசுக்கு இல்லை என்பதையும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்போது, சுப்பராயன் போன்றவர்களையும், எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்களையும், மற்றுமுள்ள கட்சிகளின் தலைவர்களையும் கலந்து கொண்டு விரைவிலே இந்த அரசு நடைமுறைப்படுத்தும் என்பதையும் நான் இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, எங்களுக்கு நடைபாதைக் கடைகளை யெல்லாம் அகற்ற வேண்டும் என்கின்ற அந்த எண்ணம் நிச்சயமாகக் கிடையாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

காவலர்கள் எப்பொழுதுமே அப்படித்தான் இருப்பார்கள்; வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து இப்படித்தான் இருக்கிறார்கள்; அவர்கள் என்றைக்கும் திருந்தப் போவதில்லை என்பதைப்போல ஒரு அவநம்பிக்கையை நம்முடைய சுப்பராயன் அவர்கள் இங்கே வெளியிட்டார்கள்.

நான் அவருக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். 1968ஆம் ஆண்டு, 20-3-1968 அன்று, தமிழக முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள், காவல் துறைக்கு அமைச்சர் என்ற அந்த நிலையில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். அப்போதும், கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் பேச்சுக்கு விளக்கமாகத்தான், அதைப் பேசியிருக்கிறார். "கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், எந்தக் கட்சி எப்படி ஆட்சிக்கு வந்தாலும், போலீஸ்காரர்களின் மனப்பான்மை மாறவில்லை என்பதைச் சொன்னார்" என்று அண்ணா குறிப்பிடுகிறார். ஆகவே, எவ்வளவு காலம் ஆனாலும்,

கம்யூனிஸ்டுகள் இப்படிப் பேசுவதிலிருந்து மாறவில்லை என்பது, 1968-லே பார்த்தோமே, இதுவரையில் அதையேதான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு). "கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், எந்தக் கட்சி எப்படி ஆட்சிக்கு வந்தாலும் போலீஸ்காரர்களின் மனப்பான்மை மாறவில்லை என்பதைச் சொன்னார். அவர்களுடைய மனப்பான்மையும் மாறவில்லை என்று சோஷலிஸ்ட் கடசி உறுப்பினரும் சொன்னார். இரண்டுக்கும் சேர்த்துச் சொல்லக்கூடியது, சமூகத்தில் அளவுக்குத் தகுந்தாற் போலத்தான் போலீஸ் துறையும் இருக்கும்' என்பது அண்ணாவின் மணி வாசகம். "வேறு எந்த துறையும் அப்படித்தான் இருக்கும். சமூகத்தில் கிடைக்கக்கூடிய திறமைகளிலே ஒரு பகுதிதான் போலீஸ் துறைக்கும் கிடைக்கும். சமூகத்தின் உயர்வுக்குத் தகுந்தபடிதான் போலீஸ் துறையின் உயர்வும் இருக்க முடியும். ஆகையால், சமூகத்தில், நாம் சட்டத்திற்கும், சமாதானத்திற்கும், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பை, எந்த அளவுக்கு நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். போலீஸ் துறையிலே உள்ளவர்களுக்கு இருக்கிற சங்கடத்தையும் நாம் உணரவேண்டும்". அண்ணா சொன்னது, இவையெல்லாம், "100 வருட காலம், 80 வருட காலம், காங்கிரஸ் ஆங்கிலேய வர்க்கத்தை எதிர்த்து, விடுதலைப்போர் நடத்திய காலத்தில், 'வெள்ளைக்காரர்களுக்குத் துணையாக போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள்' என்ற பேச்சே பலமாகப் பேசப்பட்டது. 'போலீஸ்காரர்' என்றுகூட, அப்போது காங்கிரஸ் மேடையிலே பேசுவதில்லை. 'செந்தலை பூச்சி' என்றுதான் சொல்வார்கள். 'செந்தலைப் பூச்சி' என்று சொன்னாலே, உடனே கரகோஷம் கிடைக்கும். அந்த நேரத்திலே, நம்முடைய கருத்திருமன் அவர்களும். நானும் கல்லூரியிலே படித்துக் கொண்டிருப்போம். நம்முடைய விநாயகம் எல்லாம் கல்லூரியிலே படித்துக் கொண்டிருப்பார். ஆனால், அப்போது இருந்த மேடைப் பேச்சே போலீஸ்காரர் என்றால், செந்தலை பூச்சிகள், அந்தச் செந்தலைப் பூச்சிகளை, எங்களுக்கு சுயராஜ்யம் கிடைத்ததும், எங்கள் காலடியிலே போட்டு நசுக்குவோம் என்பதுதான் அப்போதைய காங்கிரஸின் பேச்சாக இருந்தது. ஒரு 60 வருடம், போலீஸ்காரர்கள் இதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு, காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. 20 ஆண்டுகள் அவர்களுடைய

ஆட்சியிலே, போலீஸ்காரர்கள், காங்கிரஸ் கட்சிக்கு உடந்தையாக இருந்து வந்தார்கள் என்று பேசினார்கள். அதையும் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். யார்? போலீஸ்காரர்கள்; அதையும் கேட்டுக் கொண்டார்கள். "இப்போது அவர்கள் எங்களுடைய மேற்பார்வையின்கீழ், ஓராண்டாக இருக்கிறார்கள். இப்போது அவர்களைப் பார்த்து, இவர்கள் முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறார்கள் என்று நீங்கள் பேசுகிறீர்கள். அவர்கள் உள்ளூர சிரிக்கிறார்கள்''. யார்? போலீஸ்காரர்கள். ''இவர்களுக்குக் கொஞ்சம்கூட விவரம் தெரியவில்லையே? இவர்கள் எந்த நேரத்திலேயோ யார் யார் பக்கத்திலேயோ சேர்கிறார்கள் என்று சொல்கிறார்களே, இவ்வளவு தானா இவர்களுக்கு விவரம் தெரியும் என்று போலீஸார் உள்ளூர சிரிக்கிறார்கள். அவர்கள் எந்தப் பக்கமும் இருப்பவர்கள் அல்ல; அவர்கள் அரசின் பக்கம் இருப்பவர்கள்" என்று அண்ணா அந்த உரையை முடிக்கிறார். அண்ணாவின் அந்தக் கருத்தோடு, நான் இன்னொரு கருத்தையும் சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன். அரசின் பக்கம் அவர்கள் இருக்க வேண்டும்; ஆனால், அரசை நடத்தும் கட்சியின் பக்கம் இருந்து, அநியாயத்திற்குத் துணை போகக் கூடாது என்பதுதான், அண்ணாவின் தம்பி என்ற முறையில், உரிமையோடு அண்ணாவின் கருத்தோடு நான் சேர்க்கின்ற இந்தக் கருத்தாகும்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், யாரும் இங்கே நினைவூட்டாத ஒரு அருமையான செய்தியை நினைவூட்டினார்கள். சுதந்திரம் பெற்று, 1947-க்குப் பிறகு 50 ஆண்டுக் காலத்தில், காவல்துறைக்காக, அவர்களுடைய மேன்மைக்காக, அவர்கள் ஒழுங்குற பணியாற்றவேண்டும் என்பதற்காக, கண்ணியத்தோடு, கடமை உணர்வோடு, கட்டுப் பாடோடு அவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, அதே நேரத்தில், அவர்களுடைய நலன்கள் பாதிக்கப்படாமல், வாழ்வு பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, 50 ஆண்டுக் காலத்திலே, இரண்டு போலீஸ் கமிஷன்களைப் போட்ட ஒரே ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்று அதை நினைவூட்டிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இதயமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின், தனது பேச்சைத் தொடங்கும்போது, 30 அல்லது 35 ஆண்டுகளுக்குமுன்

'உதயசூரியன்' நாடகத்தில் போலீஸ்காரர்களுக்காகப் பரிந்து நான் எழுதிய பாட்டையெல்லாம் ஞாபகப்படுத்தினார். அந்தப் பாடல், அந்த நாடகத்திலே இடம் பெற்றதற்காக, அந்த நாடகமே தடை செய்யப்பட்டது, பக்தவத்சலம் அவர்களால். தடை செய்யப்பட்ட நாடகத்தைப் பற்றி, நான் இதே அவையிலே எதிரில் உட்கார்ந்து பேசினேன்; நம்முடைய லட்சுமணன் அவர்கள் உட்கார்ந்திருக்கிற இடத்திலே இருந்து நான் பேசினேன். முதலிலே, நாவலர் அமர்ந்திருந்தார்; அவருக்குப் பக்கத்தில், இப்போது லட்சுமணன் உட்கார்ந்திருக்கும் இடத்திலே நான் உட்கார்ந்திருந்தேன். அப்போது நான் அந்தப் பாட்டை பாடிக் காட்டி, நீங்கள் வெளியேதான் தடை செய்ய முடியும், அந்தப் பாட்டை. இப்போது உங்கள் முன்னாலேயே பாடிக் காட்டுகின்றேன் என்று சொல்லி

"போலீஸ் வேலைக்கு என்று போகிற உங்கப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த தரித்திரனே கண்வளராய்,
துப்பாக்கி தூக்கிக்கிட்டு போகின்ற உங்கப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுகிட்டு வருகின்றார் கடன்காரர்
காக்கி உடை போட்டுக்கிட்டு சேப்புத் தொப்பு
மாட்டிக்கிட்டு போகிற உங்கப்பனுக்கு
உன்னைப்போல நாலைந்து வந்து பிறந்துவிட்டால்
காவியுடை வேணுமடா, கமண்டலமும் தேவையடா?"

என்று பாடிய பாட்டை 'உதயசூரியனிலே' எழுதினேன். அது மாத்திரம் அல்ல. பாட்டு - தாலாட்டு முடிந்ததும் வேலைக்குச் சென்றிருந்த கணவன் - போலீஸ்காரர் உள்ளே வருவார். கஞ்சி, பழைய கஞ்சி எதிரிலே இருக்கு சாப்பிடு என்பார் மனைவி. கஞ்சிதானா என்பார், ஆமாம் என்று அலுத்துக்கொண்டு மனைவி சொல்வார். தொட்டுக்க ஒன்றும் இல்லையா என்று மனைவியைக் கேட்பார். நான்தான் இருக்கிறேனே என்று சொல்வார். இவ்வளவு வசனமும் ஞாபகம் இருக்கிறது எனக்கு. திரு. ஸ்டாலின் எடுத்துப் படித்துப் பார்த்து இங்கே பேசியிருப்பார். நான் ஞாபகத்தோடு பேசுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது பழைய பாடல்கள்

எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தன்னாலேயே ஞாபகம் வருகிறதா அல்லது மாடத்தைப் பார்த்தவுடன் ஞாபகம் வருகிறதா? தன்னாலேயே ஞாபகம் வருகிறதா அல்லது மேல் மாடத்தைப் பார்த்தவுடன் ஞாபகம் வருகிறதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஞாபகம் மாடத்தில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). சில பேருக்கு மாடமே இருப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த போலீஸ் கமிஷன் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியதைப் போல திரு. கோபால்சாமி என்று அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவருடைய தலைமையில் 1969ஆம் ஆண்டு அமைக்கப் பட்டது. அதைப் பற்றி நான் சொல்வதைவிட, எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைவிட, ஒரு 'போலீஸ்காரருடைய டயரி' என்று தலைப்பிட்ட ஒரு புத்தகத்தில் முன்னாள் ஐ.ஜி.-யாக இருந்த திரு. அருள் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். "போலீஸ் கமிஷன் அமைத்து தமிழக போலீஸ் துறை எவ்வாறு பணிபுரிகிறது என்று கண்டறிந்து அறிக்கை அளிக்க வழி கண்டவர் திரு. மு. கருணாநிதி. 133 பரிந்துரைகளைச் செய்தது அந்த கமிஷன். அதில் 115 பரிந்துரைகளை உடனே ஏற்று அதை நிறைவேற்ற 4 கோடியே 60 இலட்சம் ரூபாயையும் ஒதுக்கியவர் கருணாநிதி. அதனால்தான் இந்தியாவிலேயே தமிழக போலீஸ் துறையை நவீன முறையில் மாற்றியமைக்க முடிந்தது" - இவ்வாறு திரு. அருள் குறிப்பிட் டிருக்கிறார். அந்தச் செய்தியைத்தான் குறிப்பிட்டிருக்கிறார். என்னை அவர் பாராட்டவில்லை. ஏனென்றால் அந்தப் புத்தகம் வெளி வந்த ஆண்டு 1978ஆம் ஆண்டு. எனவே என்னை அவர் பாராட்டவில்லை. பாராட்டாமல் செய்தியை மாத்திரம் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அது மாத்திரம் அல்ல. அடுத்து வந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் ஏதாவது போலீஸ் கமிஷன் அதைப் போல ஒன்று அமைக்கப்பட்டதா என்றால் இல்லை. பிறகு மீண்டும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல 89ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் சபாநாயகம் அவர்களுடைய தலைமையிலேயே ஒரு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷனுடைய அறிக்கை, பரிந்துரைகள் வெளிவருவதற்கு

முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதிலே 100 பரிந்துரைகள் இடம் பெற்றன. 89-லே கழக ஆட்சி அமைத்த அந்தப் போலீஸ் கமிஷனில் 100 பரிந்துரைகள் இடம்பெற்றன. ஆனால் கடந்த ஆட்சியில் 34 பரிந்துரைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டன. மற்றும் 14 பரிந்துரைகள் மீது ஓரளவு நடவடிக்கை. மற்ற பரிந்துரைகள் எல்லாம் கவனிப்பாரற்று போய்விட்டன. 52 பரிந்துரைகள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. அதிலே முக்கியமான ஒரு பரிந்துரை இந்தப் புத்தகத்திலே அட்டையிலேயே அச்சேற்றப்பட்டிருக்கிற பரிந்துரை, அவ்வளவு முக்கியமாகக் கருதி உள்பகுதியிலேயே இருக்க வேண்டிய அந்தப் பரிந்துரையை அட்டையிலேயே அச்சிட்டு இருக்கிறார்கள்.

"To recruit better persons as PCs, SIs and DSPs by raising their educational qualification, improving the physical efficiency test and introducing Psychology test to assess behavioural attitude and to give them better training on all aspects." - அதைத்தான் இன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நல்ல பயிற்சியைத் தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். பயிற்சி அளிப்பதற்கு முன்பு அவர்கள் தேர்வு செய்யப்படுகிறபோதே, அவர்களுக்கு செய்யப்படுகின்ற சோதனைகளோடு சைக்காலஜி டெஸ்டும் வேண்டுமென்று 1989ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்த அந்த போலீஸ் கமிஷன், சபாநாயகம் தலைமையிலேயே அமைந்த அந்த போலீஸ் கமிஷன் சுட்டிக்காட்டியிருக்கிறது. இப்போது பத்தாயிரம் போலீஸை அவர்கள் எடுத்தார்கள். வேறு வழி இல்லாமல் அவர்கள் அத்தனை பேரையும் நாம் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்குப் பணிகள் தரப்படும் என்று அறிவித்து அதைப் பிரகடனப்படுத்தி இருக்கிறோம், செய்யப் போகிறோம். அவர்களுக்குத் தேவையான சோதனை முறைகள், டெஸ்டுகள் நடைபெற்றதா என்றால் இல்லை. இது போலீஸ் கமிஷன் அறிக்கையிலே முதலாவதாக முக்கியமாக சொல்லப் பட்டிருக்கிற ஒரு கருத்து. அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப் படாமலேயே பத்தாயிரம் பேர் செலக்ட் செய்யப்பட்டார்கள். தேர்வு செய்யப்பட்டார்கள். ஆனால் எதிர்காலத்திலே நிச்சயமாக போலீஸ்

கமிஷனுடைய இந்தக் கருத்துகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப் பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதை நான் இந்த அவையிலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். அவர்கள் அதிகம் இந்த அவையிலே பேசாவிட்டாலும், பேசுகிற ஒவ்வொரு நேரத்திலும் ஆழமான பல கருத்துக்களை, பல செய்திகளை அகழ்ந்தெடுத்து சொல்கிறார்கள். அந்த வகையிலே இன்றைக்குத் தந்துள்ள இன்னொரு கருத்து பழைய ஐ. ஜி. ஆபீஸ் பற்றியதாகும். கடந்த கால ஆட்சியில் மக்களுக்குத் திட்டங்கள் தீட்டுவதாகக் கூறி அவைகளில் தங்களுக்கு என்ன ஆதாயம் என்று பார்த்த ஒரு நிலை இருந்த காரணத்தால் தேவை இல்லாமல் கடற்கரையிலே உள்ள டி. ஜி. பி. அலுவலகத்தை இடிக்கப்போகிறோம் என்று ஒரு செய்தி வெளியிடப்பட்டது. அதை இடித்துவிட்டு மிக உயரமான ஒரு கட்டிடத்தை எழுப்புவதற்கான முயற்சிகள் நடைபெற்றன. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சென்னை கடற்கரையின்மீது அபாரமான ஆசை கொண்டவர்கள். அதுமாத்திரம் அல்ல, அவர்கள் சொல்வார்கள், சென்னை மெரினா கடற்கரைதான் சென்னை மாநகரத்திற்கே சுவாசப்பை என்று சொல்வார்கள். எனவே கடற்கரை ஓரத்திலே உயரமாகக் கட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது என்பதிலே அவர்கள் அழுத்தமான கொள்கை கொண்டு அப்படி ஏதாவது கட்டிடங்கள் தோன்றினால் எதிர்ப்பு தெரிவித்து அறிக்கை விட்டிருக்கிறார்கள். பலரும் படித்திருக்கக்கூடும். ஆனால் கடந்த கால ஆட்சியில் ஜெயலலிதா அவர்கள் போலீஸ் துறைக்கும் அமைச்சர் என்ற முறையில் அந்த டி. ஜி. பி. அலுவலகக் கட்டிடத்தை இடித்து விடுகின்ற முயற்சியிலே ஈடுபட்டு அதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்காக அங்கே இருந்த அலுவலகத்தை நம்முடைய அரசினர் தோட்ட வளாகத்திற்குள்ளே மாற்றியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். யாரோ சிலபேர் அங்கே அந்தக் கட்டிடத்தை இடிக்கக்கூடாது என்று நீதிமன்றம் சென்று தடை ஆணை பெற்றிருக்கிற காரணத்தால் அது இடிக்கப்படாமல் நின்று கொண்டிருக்கிறது. அருள் அவர்கள் எழுதியுள்ள அந்தப்

புத்தகத்திலே அந்தக் கட்டிடத்தைப் பற்றிச் சொல்லுகிறார்கள்; விரிந்த நீலக் கடலைப் பார்த்தவாறு அமைந்திருக்கும் நமது அலுவலகத்தைப் போல, காவல்துறை அலுவலகத்தைப்போல, இந்தியாவிலே மட்டுல்ல உலகில் எந்த போலீஸ் தலைமையகமும் இவ்வளவு அழகான சூழ்நிலையிலே அமையவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அலுவலகம் முன்பு 'மெசோனிக் லாட்ஜ்' என்ற நிலையில் இருந்தது. அதாவது ரோட்டரி கிளப் போன்று உலகம் முழுவதும் கிளைகள் உள்ள ஒரு அமைப்பாக இருந்தது. 1850ல் அந்த நாளிலேயே 25 ஆயிரம் ரூபாய் கொடுத்து அந்தக் கட்டிடத்தை பிரிட்டிஷ் அரசு விலைக்கு வாங்கி யிருக்கிறது என்று அருள் அந்தப் புத்தகத்திலே குறிப்பிட்டிருக் கிறார்கள். அப்படி இந்தியாவிலே எங்கும் இல்லாத ஒரு காவல்துறை கட்டிடத்தை தேவை இல்லாமல் இடிக்கப்போய் அதற்கு ஒரு தடை ஆணையை பெற்றிருக்கிற இந்தச் சூழ்நிலையை சிந்தித்து நேற்றையதினம் நான் எடுத்திருக்கிற முடிவு, காவல்துறை அதிகாரிகளை மற்றும் தலைமைச் செயலக அதிகாரிகளைக் கலந்துகொண்டு எடுத்திருக்கிற முடிவு, அந்தக் கட்டிடம் இடிக்கப்படாது, மீண்டும் அங்கேயே டி. ஜி. பி. அலுவலகம் இயங்கும் என்பதுதான் (மேசையை தட்டும் ஒலி). இடம் போதவில்லை என்றால் - டி.ஜி.பி. அலுவலகம் - இப்போது இருக்கின்ற அந்தக் கட்டிடத்திற்குப் பின்னால் நிறைய இடம் இருக்கிறது அங்கே அதிக உயரம் இல்லாத ஒரு கட்டிடத்தைக் கட்டி துணையாக இடவசதியைப் பெருக்கிக்கொள்ள இயலும் என்பதற்காக இதைச் சொல்லுகின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களும், நம்முடைய அப்துல் லத்தீப் அவர்களும், நம்முடைய பழனிசாமி அவர்களும், மற்றும் சுப்பராயன் அவர்களம் வேறு பல ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், அத்தனை பேரும் பேசும்போது, சில வழக்குகளை எல்லாம் குறிப்பிட்டு என்ன நடவடிக்கை என்று கேட்டார்கள். நான் உங்களுக்கு ஒரு விளக்கம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். முதலில் சந்திரலேகா மீது திராவகம் வீசிய வழக்கு. ஏதோ இந்த வழக்கை இன்று உள்ள அரசு நடத்த தயங்குகிறது என்று எல்லாம் வெளியே பேசப்படுகிறது. எத்தனை முறை விளக்கம் அளித்தாலும் கூட

அப்படி பேசப்படுகின்ற செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்து பத்திரிகைகளும் வெளியிட்டுக் கொண்டு இருக்கின்றன. உண்மை என்னவென்றால், ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா 19-5-92 அன்று திராவக வீச்சுக்கு ஆளானார். 15-12-92 அன்று சந்திரலேகா சென்னை உயர்நீதிமன்றத்தில், இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க ரிட் மனுவைத் தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றம் அந்த மனுவை தள்ளுபடி செய்துவிட்டது. உடனடியாக சந்திரலேகா அவர்கள், உச்சநீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்து கொண்டார். உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையின்படி, சென்னையில் குற்றவாளி என்று கருதப்படுகின்ற சுர்லாவினுடைய வாக்கு மூலம் வாங்கப்பட்டது. அப்படி வாங்கப்பட்ட அந்த வாக்குமூலம் உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. உச்ச நீதிமன்றத்திலே அந்த வாக்குமூலம் இருக்கிறது. அதிலே என்ன இருக்கிறது என்று வெளியிலே யாரும் பேசிக்கொள்ளலாம். ஆனால், சுர்லா கொடுத்த வாக்குமூலம் உச்ச நீதிமன்றத்திலே இன்னும் பிரிக்கப்படாமல் இருக்கின்றது என்பதுதான் உண்மை. சி. பி. ஐ. விசாரிக்கக் கூடாது என்பது கடந்த கால ஜெயலலிதா அரசினுடைய வாதம். சி. பி. ஐ. தான் விசாரிக்க வேண்டும் என்பது சந்திரலேகாவினுடைய வாதம். உச்ச நீதிமன்றத்திலே, இந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், கழக அரசு பொறுப்பேற்ற பிறகு நாம் என்ன சொல்லி இருக்கிறோம் என்றால் - நீதிமன்றத்திலே இன்னும் சொல்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. ஏன் என்றால், அங்கு விசாரணையே நடைபெறவில்லை, உச்சநீதிமன்றத்தில். ஆனால், நாம் வெளிப்படையாகச் சொல்லி இருப்பது - சி. பி. ஐ. விசாரணை செய்வது பற்றி சந்திரலேகா வழக்கு தொடர்ந்து இருக்கிறார், அதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. சி. பி. ஐ. தாராளமாக விசாரிக்கலாம், தமிழக அரசு குறுக்கே நிற்காது என்று நாம் தெளிவுபடுத்தி இருக்கிறோம். ஆனால், உச்ச நீதிமன்றத்திலே 16-7-96 அன்று, இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, வழக்கை விசாரிக்க வேண்டிய நீதிபதி விடுப்பிலே, லீவிலே, இருந்த காரணத்தால், விசாரணை நடைபெறவில்லை. மேலும், சந்திரலேகாவினுடைய வழக்குரைஞருடைய அசௌகரியத்தைப் பொறுத்தும், இந்த வழக்கிலே விவாதத்தைத் தொடர முடியாமல் ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது. இந்த வழக்கு உச்ச நீமின்றத்திலே பரிசீலனைக்கு வந்தபோது,

சந்திரலேகா வழக்குரைஞர் கால அவகாசம் - அவர்தான் கேட்டார் - கேட்டதின் பேரில் நான்கு முறை மீண்டும், மீண்டும் இந்த வழக்கு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே தமிழ்நாடு காவல் துறை என்ன செய்ய முடியும் என்பதை இந்த வினாவை எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோலவேதான் வக்கீல் சண்முகசுந்தரம் மீது தாக்குதல். 30-5-95 அன்று வழக்குரைஞர் சண்முகசுந்தரம் அவரது இல்லத்திலே இருந்தபோது, பயங்கரமாகத் தாக்கப்பட்டார். 80-க்கு மேற்பட்ட இடங்களில், நரம்புகள் வெட்டுப்பட்டிருந்தன. அதற்கு பிறகும் உயிரோடு இருப்பது வியப்புக்குரிய ஒன்றுதான். இரத்த வெள்ளத்திலே மிதந்து கொண்டிருந்த காட்சியை நாங்கள் எல்லாம் சென்று கண்டோம். அவர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு, மருத்துவர்களுடைய தீவிர சிகிச்சைக்குப் பிறகு பிழைத்துக் கொண்டார். ஆனால், அந்த வழக்கில், 14-6-95-ல் சிலர் கைது செய்யப்பட்டார்கள். பிரதான குற்றவாளி என்று சொல்லப்பட்ட அந்தக் கூட்டத்தினுடைய தலைவன் வெல்டிங் குமார் கைது செய்யப்படாமலே ஒளிந்து கொண்டிருந்தான். பிறகு கழக ஆட்சி தோன்றிய பிறகு 10-7-96 அன்று அந்த வெல்டிங் குமார் தானாகவே, நீதிமன்றம் ஒன்றில் சரண் அடைந்துவிட்டான். வழக்கு தொடர்ந்து விசாரணையிலே இருந்து வருகிறது. எனவே, வழக்கை யாரும் விட்டுவிடவில்லை, நடந்து கொண்டிருக்கிறது. விஜயன் வழக்கைப் பற்றியும் நம்முடைய ரங்கநாதன் அவர்கள் கேட்டு, மிகவும் ஆத்திரத்தோடு என்ன செய்கிறீர்கள், யாருக்கு பயப்படுகிறீர்கள் என்று எல்லாம் என்னைப் பார்த்துக் கேட்டார். ஆவேசமாகப் பேசவேண்டும் என்பதற்காக கேட்டிருப்பார். நான் யாருக்கும் பயப்பட மாட்டேன் என்று ரங்கநாதன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி). இருந்தாலும் அப்படி கேட்டார். 21-7-94 அன்று வழக்குரைஞர் விஜயன் தாக்கப்பட்டார். 25-7-96 அன்று நான்கு நபர்கள் சரண் அடைந்தார்கள். வாக்குமூலம் கொடுத்தார்கள். அப்படி சரணடைந்தவர்கள் எல்லாம் உண்மையான குற்றவாளிகள் அல்ல. போலிகள். தயாரிக்கப்பட்ட போலிகள். அந்தப் போலிகள் சென்று நாங்கள்தான் இந்தக் காரியத்தைச் செய்தோம் என்று சரணடைந்தார்கள்

நீதிமன்றத்திலே. 8-8-94 அன்று வழக்கு தமிழக அரசின் குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டது. பின்னர் உச்சநீதிமன்ற ஆணைப்படி, சி. பி. ஐ. இந்த வழக்கை 8-9-94 முதல் ஏற்றுக்கொண்டது.

இவர்கள் இங்கேயிருந்த கடந்த கால அரசினர், இதைக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றினாலும்கூட அதை ஏற்றுக் கொள்ளாமல், விஜயன் உச்ச நீதிமன்றத்திலே கொடுத்த குரலின் காரணமாக, சி. பி. ஐ. விசாரணைக்கு அந்த வழக்கு மாற்றப்பட்டது. சி. பி. ஐ. விசாரணை செய்து, 13 குற்றவாளிகள் மீது நீதிமன்றத்திலே வழக்குப் பதிவு செய்தது. ஏற்கெனவே சரணடைந்த 4 நபர்கள் இந்த வழக்கிலே சம்பந்தப்படாதவர்கள் என்றும், காவல்துறை அதிகாரிகள் 6 பேர்தான் போலிக் குற்றவாளிகளை அனுப்பி சரணடைய வைக்கக் காரணமானவர்கள் என்றும், சி. பி. ஐ. கண்டு பிடித்து, அந்த 6 காவல்துறை அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்படி தமிழக அரசை சி. பி. ஐ. கேட்டுக்கொண்டது. ஆனால், அரசு நடவடிக்கை எடுத்ததா என்றால், எடுக்கவில்லை, எடுக்காது. குற்றங்கள் நடைபெறலாம். எண்ணிக்கையை நம்முடைய திருநாவுக்கரசு அவர்களும்கூட ஒப்பிட்டுக் காட்டலாம். ஆனால், நடைபெற்ற குற்றங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கின்ற அரசு இந்த அரசு என்பதையும், நடவடிக்கை எடுக்க தயங்குகின்ற, அரசாக, மறுக்கின்ற அரசாக இருந்தது கடந்தகால அரசு என்பதையும் யாரும் மறந்துவிடக்கூடாது, திருநாவுக்கரசு உட்பட என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கழக அரசு ஏற்பட்ட பிறகு அந்த 6 அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க ஒப்புக்கொண்டது. போலிக் குற்வாளிகளைக் கொண்டுபோய்க் காட்டினார்களே அந்த 6 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஒப்புக்கொண்டு, வேலை நீக்கமும் செய்தது. அதன் அடிப்படையில் சி. பி. ஐ. அந்த 6 போலீஸ் அதிகாரிகள் மீது குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்திருக்கிறது. 10-7-96 அன்று நீதிமன்றத்திலே இந்த 6 காவல்துறை அதிகாரிகளும் ஆஜராகி வழக்கு நடைபெற்று வருகிறது. 4-9-96க்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அவர் கேட்டதற்காக இவ்வளவு விவரங்கள்.

அது மாத்திரம் அல்ல. இந்தப் போலிக் குற்றவாளிகளை உருவாக்க அந்த 6 காவல்துறை அதிகாரிகளுக்கு ஆணையிட்டது அப்போதிருந்த போலீஸ் கமிஷனர்தான் என்றும், அந்த கமிஷனர் மீது ஒரு குற்றத்தைச் சுமத்தி, 5 இலட்சம் ரூபாய் அதற்காக அவர் பெற்றுக் கொண்டார் என்றும் திரு. ரங்கநாதன் அவர்கள் சொன்னார்கள். அதற்கான ஆதாரங்கள் இந்த அரசிடம் இதுவரை கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களிடம் அதற்கான ஆதாரங்கள் இருந்து, அதை அரசிடம் கொடுப்பார்களானால், யாருக்கும் பயப்படாமல் அவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த வழக்கிலேதான் ஆதி ராஜாராம், முன்னாள் அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் ஆகியோர் கைதாகி உள்ளார்கள். இது முழுக்க முழுக்க சி.பி.ஐ. நடத்துகின்ற வழக்கு. சி.பி.ஐ.க்குத் துணையாக, அவர்களுக்கு ஆதரவாக, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு, அவர்களுக்கு உதவியாக, இருக்கின்ற அந்தப் பணியைத் தான் தமிழக அரசு செய்து கொண்டிருக்கிறது.

மற்றொன்று, நேற்றைக்குப் பேசும்போது, திரு. ரங்கநாதன் தான் என்று கருதுகிறேன். எஸ்.பி.ஜி. என்று பிரதமருக்கு இருப்பதைப்போல, எஸ்.எஸ்.ஜி என்று ஒன்று இருக்கிறதே, அதை என்ன செய்தீர்கள் என்று கேட்டார். இன்னும் ஒன்றும் செய்ய வில்லை. இப்போதுதான் செய்யப்போகிறோம். பிரதமருடைய பாதுகாப்புக்கு எஸ்.பி.ஜி - Special Protetion Group என்று ஒன்று இருக்கிறது. ஆனால் பிரதமருடைய பாதுகாப்புக்குத்தான் எஸ்.பி.ஜி. என்ற ஒரு பெரிய குரூப் இருக்கிறதே தவிர இந்தியாவிலே எந்த மாநில முதலமைச்சருக்கும், பிரதமருக்கு இருப்பதைப்போன்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் கிடையவே கிடையாது கடந்தகால தமிழக முதலமைச்சர் ஒருவரைத்தவர, ஜெயலலிதா அவர்கள் 'இசட்' பிரிவிலே உள்ளவர்கள் 'இசட்' பிரிவுக்கு என்று தரப்படவேண்டிய பாதுகாப்பைப் பெற ஒரு அங்கீகரிக்கப்பட்ட பட்டியலே இருக்கிறது. மூன்று இன்ஸ்பெக்டர்கள், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு தலைமைக் காவலர்கள், 20 காவலர்கள் , இவைகள்தான் 'இசட்' பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள். ஆனால்,

ஜெயலலிதா அவர்கள் முதல்வராக இருந்தபோது பிரதமருக்கு எஸ்.பி.ஜி. என்று இருப்பதுபோல், தனக்கும் ஒரு குரூப் இருக்க வேண்டுமென்று, எஸ்.எஸ்.ஜி - Special Security Group - என்ற ஒரு தனி அமைப்பை உருவாக்கினார். உருவாக்கியது மாத்திரமல்ல, ஏதோ, ஏனோ, தானோ என்று ஓரல் உத்தரவு அல்ல, ஓரல் ஆர்டர் அல்ல, இந்தச் சட்டமன்றத்திலேயே தனியாக, அதற்காக ஒரு சட்டமே கொண்டுவந்தார்கள். 'இசட்' பிரிவிலே இருக்கிற முதலமைச்சருக்கு அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு பட்டியல் ஒன்று இருந்தபோதும்கூட, அதைப் புறந்தள்ளிவிட்டு, ஒரு சட்டத்தையே இந்த அவையிலே 1993ஆம் ஆண்டு கொண்டு வந்து நிறைவேற்றினார்கள்; நிறைவேற்றி, இந்த எஸ்.எஸ்.ஜி பிரிவு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பில் ஐ.ஜி.ஆஃப் போலீஸ் ஒருவர், 2 எஸ்.பி.க்கள், ஒரு அடிஷனல் எஸ்.பி., 3 டி.எஸ்.பி.க்கள், ஒரு டெக்னிக்கல் டி.எஸ்.பி., 31 இன்ஸ்பெக்டர்கள், 5 டெக்னிக்கல் இன்ஸ்பெக்டர்கள், 106 சப்-இன்ஸ்பெக்டர்கள், 13 டெக்னிக்கல் சப்-இன்ஸ்பெக்டர்கள், 104 தலைமைக் காவலர்கள், 30 நாயக்குகள், 301 காவலர்கள், 2 டெக்னிக்கல் அதிகாரிகள் மொத்தம் 606 காவல் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் இந்தப் பிரிவிலே மாத்திரம் இடம் பெற்றிருந்தார்கள். இந்தத் தனிப்பிரிவின் உபயோகத்திற்காக ஒரு டாட்டா சியரா - எங்கள் அமைச்சர்களுக்கு ஓட்டைக் கார்தான் கிடைக்கிறது இப்போது - இந்தத் தனிப்பிரிவின் உபயோகத்திற்கு ஒரு டாட்டா சியரா, ஒரு டாட்டா எஸ்டேட் உட்பட 70 வாகனங்கள் இருந்தன. இந்தத் தனிப்பிரிவுக்கான செலவு மாத்திரம், கடந்த ஆட்சியில், 21,23,80,000 ரூபாயாகும். தனி நபர் ஒருவரை பாதுகாப்பதற்காக, மக்களின் வரிப்பணம் ஏறத்தாழ 22 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இந்தத் தனி அமைப்பு உடனடியாகத் கலைக்கப்படுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காகச் சட்ட முன்வடிவு - ஏனென்றால் சட்டம் போட்டு வந்தது - முள்ளை முள்ளாலேதான் எடுக்க வேண்டும்; வைரத்தை வைரத்தால் அறக்க வேண்டும்; முள் என்று சொன்னால் கோபம் வரும் அவர்களுக்கு. அதனால் வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும். எனவே அதற்கான சட்ட முன்வடிவு - இந்தக் கூட்டத் தொடரிலேயே வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அமைப்பிலே இடம் பெற்றிருந்தவர்கள் என்னாவது என்ற கேட்கக் கூடும். அந்த அமைப்பிலே இடம் பெற்றிருந் தவர்கள் பொதுமக்கள் பணிக்காக இனிமேல் பயன்படுத்தப் படுவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்கள் பெற்றிருக்கின்ற ட்ரெயினிங்; அந்த ட்ரெயினிங் மற்றவர்களுக்கும் கிடைக்கத்தக்க அளவுக்கு - இன்றைக்கு மருதம் என்ற இடத்திலே அவர்கள் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கென வீடுகள் எல்லாம் கட்டித்தரப்பட்டிருக்கிறது. நிரந்தர முதல்வர் அவர்கள் அல்லவா. எனவே வீடுகள் எல்லாம் கட்டித்தந்தாகி விட்டது. எனவே, அதை மாற்ற விரும்பவில்லை. அங்கே இவர்களையெல்லாம் வேறு பணிக்கு அனுப்பிவிட்டு, அந்தப் பணியிலே உள்ளவர்களை அங்கே ட்ரெயினிங்குக்காக அனுப்பி அந்த ட்ரெயினிங்கை பெறுகின்ற - முயற்சிகள் செய்யப்படும். தனி ஒருவருக்காக அல்ல. தமிழ்நாட்டு மக்களுக்காக, அவர்கள் அத்தனைபேருடைய பணியும் பயன்படுத்தப்படும்.

மதுவிலக்கு பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள், அவருடையக் கருத்தாக, கழகச் சார்பான கருத்தாக, எனக்கு வேறுபாடு புரியவில்லை, இருந்தாலும் சொன்னார்கள். என்னுடைய கருத்து, கழகச் சார்பான கருத்து என்றார் அவர். என்ன எண்ணிக்கொண்டிருக்கிறார் என்பது தெரியாது. எதிர்காலத்திலே திருநாவுக்கரசு கருத்தே அவர் கட்சியின் கருத்தாக இருக்கக்கூடிய சூழ்நிலை வரும். வந்தால் என்னைப்போல் மகிழ்ச்சியடைபவர்கள் வேற யாரும் இருக்க முடியாது. (சிரிப்பு). இந்த வென்ட் ஃபீ (Vend Fee) பற்றி இங்கே பேசப்பட்டது. விரிவாகப் பேச வேண்டிய அவசியம் இல்லை. வென்ட் ஃபீயிலே 95 ரூபாய் போட வேண்டிய வரிக்குப் பதிலாக - வென்ட் ஃபீக்கு கட்டணத்திற்கு பதிலாக - 45 ரூபாய் என்று போட்டு, 50 ரூபாய் வேறு எங்கோ சென்றுவிட்ட காரணத்தால் - அந்தக் கோபத்தில்தான் திருநாவுக்கரசு சொல்கிறார் - அரசாங்கமே எடுத்துக்கொள்ளட்டும் என்று சொன்னார். என்ன இருந்தாலும் மனசாட்சி உறுத்தும். அதனால் சொன்னார். இதை அரசாங்கமே எடுத்துக் கொள்ளட்டும், ஏன் யாரோ கொள்ளையடிக்க வேண்டுமென்று கேட்டார். ஏற்கெனவே அரசாங்கம் 1989ஆம் ஆண்டு எடுத்துக்கொண்டபோது, இதற்கு எவ்வளவு பெரிய

விமர்சனங்கள் எல்லாம் வந்தன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனவே அதைப்பற்றி ஆலோசித்துத்தான் செய்ய வேண்டும். இருந்தாலும் அந்த 50 ரூபாய் நமக்குக் கிடைக்காமலே வேற எங்கோ போய்க் கொண்டிருந்தது. அந்த 50 ரூபாயை நாம் கட்டணமாகப் போட்டாலும், வென்ட் ஃபீயாகப் போட்டாலும் விலை ஏறாது என்ற உறுதி உள்ள காரணத்தால் 50 ரூபாயைச் சேர்த்து 95 ரூபாயாக ஆக்கியிருக்கிறோம்.

அதைப்போலவே, சர்க்கரைப்பிழிவு, கரும்பு பிழியும்போது ஏற்படும் கழிவுப்பாடு, 'மொலாசஸ்' அதற்கு 200 ரூபாய் சேவைக் கட்டணம் என்று வைத்திருக்கிறோம். முன்பு கட்டணமே இல்லாமல் அந்த 200 ரூபாயை சில பேர் பங்கிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்படி பங்கிடாமல் அதுவும் கருவூலத்திற்கு வர வழிவகைச் செய்து 65 பிளஸ் 10, 75 கோடி ரூபாய் ஆண்டு வருமானத்தை இந்த அரசு வந்ததும் வராததுமாக இந்த மூன்று மாத காலத்திலே பெருக்கியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளச்சாராயம் பற்றி எல்லோருக்கும் கவலை இருக்கிறது. கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியுமா என்பது நம் முன்னால் விசுவரூபம் எடுத்து இருக்கின்ற வினாக் குறியாகும். இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது பாராளுமன்றத்திலே மராட்டியத்தை சேர்ந்த ஒரு காங்கிரஸ் உறுப்பினரே பேசினார், அம்மையார் அவர்களே, தங்களுடைய கட் அவுட்டை வைத்து ஒயின் கடைக்கு விளம்பரம் செய்கிறார்கள் என்று. அவர்கள் ஆச்சரியப்பட்டுப் போய், அதிர்ச்சி அடைந்துபோய் தன்னுடைய கண்டனத்தை பிரதமர் இந்திரா காந்தி அவையிலேயே தெரிவித்தார்கள். அது மாத்திரமல்ல, குஜராத்திலே காந்தியடிகள் பிறந்த போர்பந்தர் கிராமத்திலேயே, காந்தியடிகள் பிறந்த வீட்டுக்குப் பக்கத்திலேயே பெட்ரோல் பங்க் போல கள்ளச் சாராய பங்க் வைக்கப்பட்டு இருக்கிற செய்தியும் சொல்லப்பட்டது, பாராளுமன்றத்தில். இதை எல்லாம் சொல்வதற்குக் காரணம், மது விலக்குக் கொள்கை வெற்றி அடைய முடியாத ஒரு கொள்கையாக இந்தியாவிலே இருந்து வந்து இருக்கிறது. ஆனாலும் கூட, மன அளவில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்ற முயற்சியில் நாம் ஈடுபடுகிறோம். இந்த அளவிற்கு ஈடுபடா விட்டால் இன்னும்

மோசமான ஒரு சூழ்நிலை சமுதாயத்திலே ஏற்பட்டு விடும் என்பதற்காகத்தான் நாம் மது விலக்கு கொள்கையிலே தீவிரமாக இருக்கிறோம், பேசுகிறோம், செயல்படுகிறோம். ஆனால், மது விலக்கு கொள்கையிலே நாம் தீவிரமாகச் செயல்பட செயல்பட, கள்ளச்சாராயம் பெருகுகிறது; கள்ளச்சாராய வியாபாரிகளுக்கு அது உதவிகரமாக ஆகிவிடுகிறது. மது விலக்கு கொள்கையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும்; கள்ளச் சாராயமும் பெருக்கு எடுக்காமல் கண்காணிப்போடு இருந்திட வேண்டும். அதற்காகத் தான் மனதை மாற்றலாம் என்கின்ற எண்ணத்தோடு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரம் மகளிர் இந்தப் பணியிலே ஈடுபடுவதற்கு, சற்றொப்ப 25,000 மகளிருக்கு இந்தப் பணியினைத் தரலாம் என்று எண்ணி ஒரு திட்டத்தை வகுத்து இருக்கிறோம்; திட்டம் இன்னும் முழுமை பெறவில்லை. உள்ளாட்சி மன்றங்களில் பெண் உறுப்பினர்கள், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் களாக இருந்தாலும், பெண் உறுப்பினர்கள் இடம் பெறுகிற நேரத்தில், அவர்களுடைய துணையையும் பெற்று ஒவ்வொரு ஊரிலும் இந்த மது விலக்கு பிரச்சாரத்தை செய்ய, அந்த 25,000 மகளிருக்கும் வழிவகை ஏற்படும் என்ற எண்ணத்தில் அந்தத் திட்டத்தை தீட்டிக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பிலேயே இன்னொரு கருத்தையும் அறிவித்து இருக்கின்றேன். கள்ளச் சாராயத்தை ஒழிக்கின்ற காவல் துறை அதிகாரிகளுக்கு உத்தமர் காந்தியடிகளுடைய பதக்கம் ஒன்றும், 10 ஆயிரம் ரூபாய் அன்பளிப்பும் அவர்களுக்கு வழங்கப்படும் என்று சொல்லி இருக்கிறேன். ஒழிப்பவர்களுக்கு பதக்கம் வழங்கப்படும்; ஒழிக்காமல் உடந்தையாக இருப்பவர்களுக்கு பதக்கம் வழங்கப்படமாட்டாது; என்ன வழங்கப்படும்? மாறுதல்கூட வழங்கப்படாது; வேலை நீக்கம் (மேசையைத் தட்டும் ஒலி). என்ற உத்தரவு வழங்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

எதிர்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும், நம்முடைய லத்தீப் அவர்களும் சொன்னார்கள்; மற்றவர்களும் சொன்னார்கள்; பழனிசாமி சொன்னதாக எனக்கு நினைவு. 1990ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பிலே

இருந்தபோது, காவல் துறையிலே மதுவிலக்குக்கென இருந்த தனிப்பிரிவு அறவே கலைக்கப்பட்டது. பிறகு வந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் மீண்டும் மது விலக்குத் தனிப் பிரிவு கொண்டுவரப்பட்டது. அதன் காரணமாக லஞ்ச லாவண்யம், மாமூல், இவைகள் எல்லாம் பெருகியதை உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவீர்கள். 1989ஆம் ஆண்டு கழக அரசு அமைத்த போலீஸ் கமிஷன், சபாநாயகம் தலைமையிலே அமைந்த அந்த கமிஷன் தெளிவாக சொல்லி இருக்கிறது. "Disbanding of Prohibition Police and entrusting their work to local police; local police stations should pursue disposal of lakhs of cases of P.E.W. (Prohibition Enforcement Wing)" என்று சபாநாயகம் கமிஷன் தெளிவாக கூறி இருக்கிறது. அதை கடந்த கால அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த அரசு ஏற்றுக்கொண்டு மது விலக்குப் பிரிவை உடனடியாகக் கலைத்து (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவிடுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமாத்திரமல்ல, போலீஸ் கமிஷனுடைய மற்றொரு பரிந்துரை,

"Forest Cell C.I.D. to be abolished; investigation of forest offences to be done by local police stations having jurisdiction; to set up mobile patrols and Special Forest Police Stations in the vicinity of forest to detect sandalwood thefts". என்பது ஆகும். புலனாய்வுத் துறையிலே உள்ள தனி அமைப்பான பாரெஸ்ட் செல்லையும் கலைத்துவிட்டு, அந்தப் பொறுப்பையும் சட்டம் ஒழுங்கு காவல் துறையினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி). சந்தனக் கட்டை திருட்டை பிடிக்க தனி போலீஸ் நிலையங்கள் காட்டுப் பகுதியிலே அமைக்க வேண்டும் என்ற 1989ஆம் ஆண்டு போலீஸ் கமிஷன் அறிக்கையை கடந்த கால அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இந்த அரசு ஏற்றுக்கொண்டு வனத்துறை போலீஸ் சி.ஐ.டி. பிரிவும் கலைக்கப்படுகிறது என்று குறிப்பிடுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). அப்படியானால் வீரப்பன்? என்று கேட்பார்கள். அதற்கு என்று தனி டாஸ்க் ஃபோர்ஸ் இருக்கிறது. அது கவனித்துக் கொள்ளும்.

சில அறிவுப்புகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பலருடைய கோரிக்கைகளின் அடிப்படையில் இங்கே வைக்க

விரும்புகிறேன். தமிழகக் காவல் துறையின் சிறப்பான பணிகளுக்குப் பின்பலமாக அமைந்து ஊக்கமுடன் உழைத்து வருபவர்கள், காவல்துறை அமைச்சுப் பணியாளர்கள் ஆவார்கள். அன்றைக்கு டி. மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். இத்தகைய பணியாளர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் பதவி உயர்வு வாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்துடன் 1976ஆம் ஆண்டில் இளநிலை உதவியாளராய்ப் பணியில் சேர்ந்து தற்போது உதவியாளர்களாய் பணி புரிந்து வரும் 329 பேரின் உதவியாளர் பணியிடங்கள் கண்காணிப்பாளர் நிலைக்கு உயர்த்தப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இவ்வாறு 329 பணியிடங்கள் கண்காணிப்பாளர் நிலைக்கு உயர்த்தப்படுவதன் காரணமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 7 லட்சத்து 81 ஆயிரத்து 704 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு - கூடுதலாகச் செலவாகும்.

காவல் துறையினருக்கான சீருடையை அவர்கள் சிறப்பாக அணிந்து வரவேண்டும் என்பதற்காக அவர்களுக்குச் சீருடை சலவைப்படி (Washing Allowance) அரசால் தற்போது வழங்கப் படுகிறது. தற்போது வழங்கப்படும் அந்த சீருடைப் படியை ரூ. 25லிருந்து இனி ரூ. 30 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சீருடைப் படி உயர்வினால் ஒரு ஆண்டுக்கு அரசுக்குக் கூடுதலாக ஏற்படும் செலவு ரூ. 46,96,020. இதன் மூலம் 78,267 காவலர்கள் பயன் பெறுவார்கள்.

காவல் துறையின் விரைவான நடவடிக்கைகளுக்குத் துணை நிற்பவர்கள் ஓட்டுநர்கள். 1989ஆம் ஆண்டு கழக ஆட்சியின் போது ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று அவர்களுக்கு ரூ. 40 சிறப்பூதியம் வழங்கப்பட்டது. பிறகு வந்த ஆட்சியில் எதுவும் உயர்த்தப்படவில்லை. தற்போதுள்ள அந்த 40 ரூபாய் சிறப்பூதியம் 60 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வு காரணமாக, அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 13,84,080 கூடுதலாகச் செலவாகும். இதன் மூலம் 5,767 ஓட்டுநர்கள் பயன் பெறுவார்கள்.

அடுத்து ஊக்க ஊதியம். ரிசர்வ் போலீஸ் பிரிவில் சிறப்பாகப் பணிபுரியும் காவலர், தலைமைக் காவலர் ஆகியோருக்கு

வழங்கப்பட்டு வரும் ஊக்க ஊதியத்தை உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவின்படி, மாதந்தோறும் 3 ரூபாய் வீதம் - மாதாமாதம் 3 ரூபாய் வீதம் ஊக்க ஊதியம் பெறும் காவலர்கள் இனிமேல் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதமும், 5 ரூபாய் வீதம் ஊக்க ஊதியம் பெறும் தலைமைக் காவலர்கள் இனிமேல் மாதம் ஒன்றுக்கு ரூ. 15 வீதமும் பெறுவார்கள். இதன் காரணமாக ஆண்டொன்றுக்கு அரசுக்கு 12,46,056 ரூபாய் கூடுதலாகச் செலவாகும். இதில் ரூ. 10,94,016 காவலர்களுக்காகவும், ரூ. 1,52,040 தலைமைக் காவலர்களுக் காகவும் செலவாகும்.

காவல்துறையினருக்குப் பக்கபலமாக, ஊக்கம் தருபவர்கள் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த மனைவி, மக்கள், பெற்றோர். அவர்கள் நலனில் அக்கறை காட்டினால் காவல் துறையினர் பெரிதும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதை உணர்ந்த இந்த அரசு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சுகாதார உதவித் திட்டம் பயன்படுவதைப் போல, இனிமேல் தமிழ்நாடு காவல்துறை பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவ உதவியை காவல்துறை சுகாதார நிதித் திட்டத்தின் கீழ் வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு நவீன தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் வேலூரில் மாவட்ட காவல்துறை அலுவலகத்துக்கும், வட்டார காவல் துறை துணைத் தலைவர் அலுவலகத்துக்கும் புதிய கட்டிடம் கட்டுவதற்கு இந்த அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு காவல்துறை பணியாளர்களுக்கு வீட்ட வசதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு காவல் துறை வீட்டு வசதிக் கழகம் உருவாக்கப்பட்டது. இந்தக் கழகத்திடம் வீட்டுவசதி கோரும் காவல்துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள தாலும், கட்டிடங்களுக்குத் தேவையான கட்டுமானப் பொருள்களின் விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டும், காவல்துறை பணியாளர்கள் அனைவருக்கும் கூடியவரையில் வீட்டு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற உணர்வோடு காவல்துறை வீட்டு வசதிக் கழகத்திற்கு நிதி ஒதுக்கீட்டை ஒரு

கோடி ரூபாயிலிருந்து 3 கோடி ரூபாயாக உயர்த்தித்தர அரசு முடிவு செய்துள்ளது.

காவல் துறையில் பணிபுரியும் காவலர்களுக்கு பதவி உயர்வு குறித்து ஏற்கெனவே எடுத்துக் காட்டப்பட்டது. இதைக் கவனத்திலே கொண்டு, 15 ஆண்டுகள் காவலர்களாகப் பணிபுரியும் ஆண் காவலர்களுக்குத் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு தரப்படுகிறது. இந்த நடைமுறை பெண் காவலர்களுடைய பதவி உயர்விலும் இதுவரையில் பின்பற்றப்படவில்லை. காவல் துறையின் உயர்விற்கு தங்களது அரிய உழைப்பை நல்கி வரும் பெண் காவலர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் அவர்களுக்கும் இந்தப் பதவி உயர்வு தர முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 15 ஆண்டுகள் காவலர்களாகப் பணிபுரியும் ஆண் காவலர்களை தலைமைக் காலவர்களாக பதவு உயர்வு தருவதைப் போல இனிமேல் பெண் காவலர்களுக்கும், 15 ஆண்டு காலம் காவலர்களாக பணி முடித்த பின் தலைமைக் காவலர்களாக பதவி உயர்வு வழங்கப்படும்.

அடுத்து, நற்பணி மற்றும் சிறப்புப் பணி. மக்கள் நன்மைகளை பாதுகாக்கும் மிக முக்கியமான துறை காவல் துறை என்பதை மெய்ப்பிக்கும் வகையில் கடமை தவறாமல் பணியாற்றி, அதேநேரத்தில் மக்களின் நியாயத்தை மதித்து உறுதியோடு செயல்பட்டு நற்பெயர் ஈட்டு வருகிற காவலர்களை போற்றிப் பாராட்ட வேண்டியது மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று கூறிய பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசுக்கு உள்ள கடமை என்று கருதுகிறேன். இந்தக் கருத்தின் அடிப்படையில் காவல் துறையில் அயராத தங்களுடைய பணியின் மூலம் நற்பெயர் ஈட்டி வரும் காவலர்களுக்கு சிறப்பு அலவன்ஸ், சிறப்புப் படி வழங்க, வழங்கி ஊக்கப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவின்படி நற்பெயர் பெற்று 15 ஆண்டு பணி முடிக்கும் காவலர்களுக்கு ரூபாய் 7-50 வீதமும் 25 ஆண்டு பணி முடிப்பவர்களுக்கு ரூபாய் 10 வீதமும், 30 ஆண்டு பணி முடிப்பவர்களுக்கு ரூபாய் 15 வீதமும், 35 ஆண்டு பணி முடிப்பவர்களுக்கு ரூ. 20 வீதமும், கணக்கிட்டு மாதந்தோறும் சிறப்பு அலவன்ஸ் வழங்கும் புதிய திட்டத்தை இந்தப் பேரவையிலே அறிவிப்பதிலே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

விவாதத்திலே பங்கேற்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் காவலர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். 1987ஆம் ஆண்டு நேரடி தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட்ட 1010 காவல் உதவி ஆய்வாளர்கள் நிலை குறித்து சில சந்தேகங்களை கிளப்பினார்கள். 1989ஆம் ஆண்டு மீண்டும் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது, அதற்கு முன்பிருந்த அ.இ.அ.தி.மு.க. அரசு தேர்வு செய்த உதவி ஆய்வாளர்கள் என்ற பாரபட்சம் காட்டாமல், அவர்கள் அனைவருக்கும் பயிற்சி தருவதற்கான உத்தரவை கழக அரசு பிறப்பித்தது. அதன்படி அவர்கள் எல்லோரும் இன்று பணியில் இருந்து வருகிறார்கள். ஆனால் இந்த 1010 பேர்களில் சட்டம் ஒழுங்கு பிரிவுக்கு நியமனம் பெறாத 395 உதவி ஆய்வாளர்கள் சட்டம் ஒழுங்கு பிரிவில் காலியிடம் ஏற்படும்போது தங்களை அங்கே நியமிக்க வேண்டுமென்று கோரி இருந்தார்கள். அதையும் அரசு பரிசீலனை செய்து படிப்படியாக அவர்களை ஆயுதப்படைப் பிரிவு மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் படை பிரிவிலேயிருந்து சட்டம் ஒழுங்குப் பிரிவுக்கு மாற்றலாம் என்றும், அதற்கு ஏதுவாக இந்த உதவி ஆய்வாளர்களை 6 மாத காலம் காவல் பயிற்சிக் கல்லூரிக்கும், 3 மாத காலம் காவல் நிலையத்திலும் சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட பயிற்சிகளை அளிக்கலாம் என்றும் முடிவெடுத்துள்ளது. இரண்டு கட்டமாக இதுவரையில் 310 நபர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மீதமுள்ள 85 உதவி ஆய்வாளர்கள் மூன்றாவது கட்டமாக பயிற்சிக்கு அனுப்பப்பட இருக்கிறார்கள். இந்தப் பயிற்சி முடிந்ததும் அவர்களை காலியாக இருக்கும் இடங்களில் சட்டம் ஒழுங்கு பிரிவுக்கு மாற்றலாம் என்று முடிவை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு இந்த மன்றத்திலே அறிவிக்கிறேன். அ.இ.அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நியமிக்கப்பட்டிருந்தாலும், கழக அரசு பொறுப்பிலே இருந்தபோது நியமிக்கப்பட்டிருந்தாலும், வேறுபாடு காட்டாமல் காவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் அவரவர் தகுதிக்கேற்ப பதவிகளை அளிப்பதில் இந்த அரசு எப்போதுமே கவனம் செலுத்தி வருகிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும். இதே அடிப்படையில்தான் ஜெயலலிதா அரசு தேர்வு செய்து பணி நியமனம் வழங்கப் படாமல் இருந்த 10,000 காவலர்களையும், 600 காவல் உதவி ஆய்வாளர்களையும், 1060 தீயணைப்போர்களையும் பணியில்

சேர்த்துக் கொள்வது என்று கழக அரசு முடிவெடுத்து, இந்த சட்டமன்றத்திலே ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதையும் நினைவுகூற விரும்புகிறேன்.

முந்தைய ஆட்சியில் காவலர்கள் நியமனத்தின் போது ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை நிறைவு செய்ய தகுதி வாய்ந்த போதுமான ஆதி திராவிடர் இன நபர்கள் கிடைக்கவில்லை என்று காரணம் காட்டப்பட்டு அந்த இடங்கள் நிரப்பப்படாமல் விடுபட்டிருந்தன. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் துரிதமாக நடவடிக்கையெடுத்து தமிழ் நாடு காவல் துறை மற்றும் தீயணைப்புப் பணியாளர்கள் தேர்வாணையக் கழகம் மூலம் தகுதியுள்ள ஆதிதிராவிடர் இன இளைஞர்கள் 454 பேர்களை தேர்வு செய்து அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பணியிடங்களில் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மானியக் கோரிக்கைகளில் பேசிய உறுப்பினர்கள் 1989ஆம் ஆண்டு கழக ஆட்சி பொறுப்பிலே இருந்தபோது காவலர்கள் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட 2000 நபர்களுக்கு அடுத்து வந்த ஆட்சி நியமன ஆணை வழங்கத் தவறிவிட்டது என்றும், நியமன ஆணை வழங்கப்படாததால் அந்த 2000 நபர்களும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளானார்கள் என்றும் தெரிவித்தார்கள். ஆனால் இந்த 1989-ல் தேர்வு செய்யப்பட்ட 2000 நபர்களைப் பொறுத்த வரையில் கழக ஆட்சி கலைக்கப் பட்டதற்குப் பின்னர் வந்த கவர்னர் ஆட்சியிலும் சரி, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலும் சரி மனிதாபிமான அடிப்படையில் நடந்து கொள்ளவில்லை.

கழக ஆட்சி மீண்டும் பொறுப்பேற்றவுடன், பல உறுப்பினர்கள் இம்மன்றத்தில் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், இப்பிரச்சினையை அணுகி ஆய்வு செய்ததில், ஏற்கனவே இந்த 2000 நபர்களில் 350 நபர்கள் நீதிமன்றத்தை அணுகி, தங்களுக்குச் சாதகமான ஆணைகளைப் பெற்று, பணி நியமனம் பெற்றிருக்கிறார்கள், என்று இப்போது தெரிய வந்துள்ளது. அவ்வாறு பணி நியமனம் பெற்றவர்கள் போக,

மீதமுள்ள 1650 நபர்களிலும் முறைப்படி விண்ணப்பித்தால் காவலர்கள் பணிக்குத் தேவையான தகுதிகள் ஏதேனும் தளர்வு தேவைப்பட்டால், அவற்றைத் தளர்த்தி - பணி நியமனம் செய்ய இந்த அரசு ஆவன செய்யும் என்று இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல்துறையின் சீரிய, முறையான செயல்பாடுகளுக்குத் தேவையான எண்ணிக்கையிலே காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும். இன்று, அங்கொன்றும், இங்கொன்றுமாக, மாத்திரமல்ல, பல இடங்களில்கூட வன்முறைச் சம்பவங்கள், திடீர் திருட்டுக்கள், கொள்ளைகள், கொலைகள் நடைபெறுகின்றன என்றால், போதுமான அளவிற்கு - 6 கோடி மக்கள் உள்ள தமிழகத்தில போதுமான அளவிற்கு - காவலர்களுடைய எண்ணிக்கை இல்லை. மக்களின் நலன் நாடி உழைப்பதே இந்த அரசினுடைய முக்கிய பணி என்ற அடிப்படையில் National Crime Records Bureau வெளியிட்ட "Crime in India, 1993" என்ற அந்த புத்தகத்தின்படி, அந்தப் புள்ளிவிவரத்தின்படி, மராட்டியத்தில் 1000 பேர்களுக்கு 1.6 என்ற அளவிலும், குஜராத்தில் 1000 பேர்களுக்கு 1.5 பேர் என்ற அளவிலும் தற்போது காவலர்கள் இருக்கிறார்கள். தமிழகத்தை எடுத்துக்கொண்டால், தற்போது 1000 பேர்களுக்கு 1.1 என்ற அளவிலேதான் காவலர்கள் இருக்கிறார்கள். வெளி நாடுகளில் 500 பேர்களுக்கு ஒரு காவலன் என்ற அளவிலே இருக்கிறது. தமிழகத்திலே 1.6 என்ற அளவிற்கு காவலர்களுடைய எண்ணிக்கையைப் பெருக்க - ஏன் இன்னும் சொல்லப் போனால், வரும் காலகட்டத்திலே 500 பேர்களுக்கு ஒரு காவலன் என்ற அளவிலே அந்த எண்ணிக்கையைப் பெருக்க, இந்த அரசு திட்டமிட்டு இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இப்போது இந்த 1.6 என்ற அளவிற்கு பெருக்கினால், 1 லட்சத்து 4 ஆயிரம் பேர்கள் காவல்துறையிலே இருக்கவேண்டும். தற்போது காவலர்களுடைய எண்ணிக்கை 83,991. கடந்த கால ஆட்சியிலே தேர்வு செய்து நியமிக்கப்படாமல் இருந்த 10 ஆயிரம் காவலர்களை நியமித்தால் 1.6 என்ற இலக்கை முழுமையாக அடைய முடியாது. எனவே, காவலர்கள், துணை ஆய்வாளர்கள் பிரிவிலே இந்த நடப்பாண்டிலே 5 ஆயிரம் பேரும், வருகின்ற நிதி ஆண்டிலே 5

ஆயிரம் பேரும் தேர்வு செய்யப்படுவார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தத் தேர்வில் நான் ஏற்கனவே குறிப்பிட்ட உளவியல் தேர்வு முறையும் சேர்க்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லி முடித்த பிறகு கேட்கலாம். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1993-லே இதேபோல் தேர்வு செய்யப்பட்ட 376 பேர்கள் விடப்பட்டு இருக்கிறார்கள். காவலர்கள் என்று எல்லா உறுப்பினர்களும் இங்கே பேசினார்கள். அரசு உத்தரவாதம் கொடுத்து தேர்வு எல்லாம் முடிந்து 376 பேர்கள் இன்னும் பணியிலே அமர்த்தப் படாமல் இருக்கிறார்கள். அவர்களையும் சேர்த்து, முதலமைச்சர் அவர்கள் பணிக்கு எடுத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1993-லே இண்டர்வியூ எல்லாம் முடிந்து, செலக்சன் எல்லாம் முடிந்தவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அந்தக் கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நடப்பு நிதியாண்டில், கீழ்கண்ட இடங்களில் இயங்கிவரும் புறக்காவல் நிலையங்களுக்குப் பதிலாக, புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும். அண்ணா மாவட்டம், சேலையூர், (கைத்தட்டல்) ஒருவாதான் கைத்தட்ட முடியும், ஏன் என்றால், ஒருவாதான் கேட்டிருப்பார். திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம், அரியமங்கலம்; புதுக்கோட்டை மாவட்டம், நமனசமுத்திரம்; காமராசர் மாவட்டம் சேத்தூர்; இராமநாதபுரம் மாவட்டம், எஸ்.பி. பட்டினம்; வீரன் அழகுமுத்து வைகை மாவட்டம், கோம்பை; வீரன் அழகுமுத்து வைகை மாவட்டம், வரிசைநாடு; நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் சிவந்திபட்டி; சிதம்பரனார் மாவட்டம் சூரங்குடி; கன்னியாகுமரி மாவட்டம் கடையால்மூடு; எம்.ஜி.ஆர்.

மாவட்டம், ஆவடி; திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம், கே.கே.நகர், இந்த 12 இடங்களில் - இது மிகக் குறைவான எண்ணிக்கைதான், ஆனாலும் 3 மாத காலத்திலே உள்ள நிதி வசதியைப் பொறுத்துதான் இதை அறிவிக்க முடிந்தது. ஆயிரத்து சொச்சம் காவல் நிலையங்கள் இருப்பது நிச்சயம் போதாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 500 பேருக்கு ஒரு காவலர் என்ற நிலை ஏற்பட வேண்டும் என்று எண்ணுகிற நேரத்தில் காவல் நிலையங்களுடைய எண்ணிக்கை போதாது. அந்த எண்ணிக்கையைப் பெருக்குகின்ற முயற்சியிலே அரசு ஈடுபடும் என்று குறிப்பிட்டு, தீயணைப்பு நிலையங்களைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் கடிதம் முலமாக என்னிடத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். முறையீடுகளைச் சொன்னார்கள். 21 இடங்களிலே தீயணைப்புத் துறை மூலம் நிலையங்கள் அறிவிக்கப்படுகின்றன. திரு. ஆ.ஜெ. மணிக்கண்ணன் கேட்டதற்கிணங்க திருவெண்ணைநல்லூர், தமிழ்க்குடிமகன், அமைச்சரே கேட்டதற்கிணங்க ராஜசிங்கமங்கலம், ரவி, எம்.எல்.ஏ. என்ற முறையில் கேட்டதற்கிணங்க, ரவி அருணன் கேட்டதற் கிணங்க செங்கோட்டை, உறுப்பினர்கள் திருவாளர்கள் பாண்டுரங்கள் கேட்டதற்கிணங்க பெரணமல்லூர், ரவி அருணன் கேட்டதற்கிணங்க சுரண்டை, கே.ஆர். இராமசாமி கேட்டதற்கிணங்க திருவாடனை, சிவபுண்ணியம் கேட்டதற்கிணங்க கோட்டூர், வேல்துரை கேட்டதற்கிணங்க சேரன் மகாதேவி, மதிவாணன் கேட்டதற்கிணங்க அச்சிறுபாக்கம், அசோகன் கேட்டதற்கிணங்க கீவளூர், பி. கல்யாணம் கேட்டதற் கிணங்க குத்தாலம், இ. கணேசன் கேட்டதற்கிணங்க எடப்பாடி, ஜி. பழனிசாமி கேட்டதற்கிணங்க முத்துப்பேட்டை காயல், டாக்டர் ஞானசேகரன் கேட்டதற்கிணங்க மேல்மலையனூர், வே. கோவிந்தன் கேட்டதற்கிணங்க பேரணாம்பட்டு, அமைச்சர் பிச்சாண்டி கேட்டதற்கிணங்க வேட்டவலம், உறுப்பினர் ஆர்.ஆர். சேகரன்

கேட்டதற்கிணங்க ஓமலூர், அப்துல் நாசர் கேட்டதற்கிணங்க பறங்கிப்பேட்டை, பெரியண்ணன், தலைமைக் கொறடாவும், பேசும்போது திருநாவுக்கரசும் கேட்டதற்கிணங்க ஜகதாப்பட்டிணம் உறுப்பினர்கள் ஞானசேகரன் கேட்டதற்கிணங்க காட்பாடி, அழகிரி கேட்டதற்கிணங்க திருமுட்டம் ஆகிய இந்த 21 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் தெரிவித்து, காவல் துறை மானியமே அநேகமாக தீயணைப்பு மானியமாகத்தான் இருந்தது என்ற காரணத்தால் வேறு ஒன்றும் அதிகமாகக் சூடாகப் பேச முடியவில்லை. பேச்சு சுவையாகவே அமைந்ததற்காக அனைவருக்கும் நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

உரை : 17 நாள் : 25.04.1997

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, அதன் தொடர்பான தீயணைப்புத் துறை, ஆயத்தீர்வைத் துறை ஆகிய துறைகள் குறித்து நேற்றும் இன்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் 18 பேர் - எதிர்க்கட்சித் தலைவர் உட்பட உரையாற்றியபிறகு, என்னுடைய விளக்கங்களைத் தருகின்ற நிலையில் இந்த அவையில் நான் நின்றுகொண்டிருக்கின்றேன்.

காவல் துறை என்பது எந்த அளவிற்கு அரசியல் கட்சிகளால் - அது ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சி களாக இருந்தாலும், விமர்சிக்கப்படுகின்ற ஒரு துறை என்பதை நாம் அனைவரும் மிகத் தெளிவாக அறிவோம்; காவல் துறை இப்படி யெல்லாம் தீங்கிழைக்கின்றது. கடமையை உணராமல் நடை போடுகின்றது என்றெல்லாம் விமர்சிக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள்கூட, காவல் துறையினருடைய குடும்ப நலன்களில் அரசு அக்கறை காட்ட வேண்டுமென்பதையும், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டு மென்பதையும் இணைத்துச் சொல்லும்போது, எனக்குத் தோன்றுகின்ற கருத்தெல்லாம், பெற்றோர் தங்களுடைய குழந்தையை அடித்துவிட்டு, ஏசிவிட்டு, செய்த குற்றத்தைக் கடிந்து இப்படியெல்லாம் செய்யக்கூடாது என்று வசைமாரிப் பொழிந்து விட்டு, இருந்தாலும் வந்து தொலை, சாப்பிட்டுட்டுப் போ என்று சொல்வதைப் போல, கட்சிகளில் உள்ள உறுப்பினர்கள், காவல் துறையைப் பற்றிக் கடுமையாக விமர்சித்தாலும், அவர்களுடைய நலன்களுக்காக, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதை, தாங்களும் நெஞ்சிலே பதியவைத்துக்

கொண்டு, அரசையும் வற்புறுத்துகின்ற நிலை இருப்பதை நாம் காண்கின்றோம்.

நாட்டின் பாதுகாப்புக்காக, சமுதாயத்தின் பாதுகாப்புக்காக சமுதாயத்திலே நல்லொழுக்கம் ஒளிவிட வேண்டும் என்று சொல்லப்பட்ட நோக்கத்தோடு, பிரிட்டிஷார் காலத்திலே காவல் துறை அமைக்கப்பட்டது. அப்போது சுதந்திர தாகம் கொண்டவர்களால் காவல்துறையில் இருக்கும் நல்லவர்கள் கூட எள்ளி நகையாடப்பட்டார்கள். அவர்கள் எல்லாம், நம்மை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு ஆட்சிக்குக் காவலாக இருக்கின்றார்களே என்ற ஆத்திரத்தின் காரணமாக, வெறுப்பின் காரணமாக அவர்களைத் தீக்குச்சிகள் என்றும், அவர்களைச் செந்தலைப் பூச்சிகள் என்றும் வர்ணித்த காலம் ஒன்று உண்டு.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு பிரிட்டிஷார் அமைத்த காவல் துறைக்கு விடை கொடுத்துவிட வேண்டுமென்று, பொறுப்பேற்ற யாரும் கருதவில்லை. காவல்துறை நீடிக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தோடு அதை நீடித்தார்கள். இந்தியாவிலே உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் காவல்துறை தங்களுடைய கடமையைச் செய்வதற்கும் சமுதாயப் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்துவதற்கும் ஏற்றவகையில் பல திருத்தங்கள் செய்யப்பட்டு, காவல்துறை இயங்கி வருகின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே, இந்தக் காவல்துறையிலே இருக்கின்ற சீர்கேடுகளை, குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய பொதுமக்கள் காவல்துறைக்கும் பொதுமக்களுக்கும் இருக்கவேண்டிய தொடர்பு இல்லாத நிலைமை இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து, அப்போதிருந்த காவல்துறை அதிகாரி ஒருவர், "உங்கள் நண்பன்" என்ற ஒரு படத்தையே எடுத்துக்காட்டி, காவல் துறையிடம் எப்படி மக்கள் நடந்துகொள்ள வேண்டும், மக்களிடம் எப்படிக் காவல் துறை நடந்துகொள்ளவேண்டும், ஒருவர் அதிகாரம் செலுத்துபவ ராகவும், இன்னொருவர் அதிகாரத்திற்கு அடிபணிபவராகவும் இருக்கக் கூடாது, நட்பு முறையில் அந்த உணர்வோடு, பொது மக்களும் காவல் துறையும் பழகிட வேண்டும், இயங்கிட வேண்டும் என்பதற்காக அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அந்த அறிவுரைகள் வழங்கப்பட்டன. இருந்தாலும், முழுமையாக காவல் துறை திருந்தி விட்டது என்று யாரும் ஒப்புக்கொள்ள இயலாது. ஏனென்றால் அந்தக் காலகட்டத்தில்தான் முதுகுளத்தூர் போன்ற பெரும் சாதிக் கலவரங்கள் எல்லாம் நடைபெற்று, ஒரு நாள் அல்ல, இரு நாள் அல்ல, ஒரு மாதக் காலம் முதுகுளத்தூர் பகுதியில் உள்ள வயல் வெளிகளில் எல்லாம் பிணங்கள் விழுந்த அந்தக் கோரக் காட்சியை நாம் இன்றைக்கும் எண்ணிப்பார்க்க இயலாத அளவுக்கு அந்த வரலாறு தமிழகத்திலே இன்னமும் பின்னிக் கிடைக்கிறது.

அதற்குப் பிறகு உங்கள் நண்பனாக இருப்போம் என்று அவர்களும், நாங்களும் உங்களுக்கு நண்பர்களாக இருப்போம் என்று பொதுமக்களும் சூளுரைத்துக் கொண்டு பழகினாலும்கூட, ஏதோ ஒரு இடைவெளி, காவல் துறைக்கும் பொது மக்களுக்கும் இடையில் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. அண்மைக் காலத்தில், கடந்த ஆட்சிக் காலத்தில் காவல் துறை எந்தக் கட்டுப்பாட்டிற்குள்ளும் வைக்கப்படாமல் ஆளுங்கட்சிக் காரர்கள் இடுகிற கட்டளைகளை ஏற்று நடத்துகிற ஏவல் துறையாக காவல் துறை மாறியிருந்தது என்பதை இந்த அவையிலே உள்ள எதிர்க் கட்சிகளுடைய தலைவர்கள், உறுப்பினர்கள் யாரும் மறுத்திட இயலார் என்றே நான் நம்புகிறேன்.

கடந்த ஓராண்டு காலமாக மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு நான் ஒரு கட்டத்திலே இங்கே சொன்னேன். காவல் துறை மிகவும் சீர்குலைந்து, ஒரு ஈரல் எப்படி 70 சதவீதம் அழுகிவிட்டால், கெட்டுவிட்டால் இருக்குமோ அதைப்போல ஆகிவிட்டது. மிச்சமுள்ள 30 சதவீதத்தை வைத்து இந்தக் காவல் துறையை சீர்படுத்தலாம் என்று நம்புகிறேன் என்று குறிப்பிட்டேன். ஆனால் இன்றைக்கு நான் சொல்ல விரும்புகிறேன், 70 சதவீதம் கெட்டு விட்ட அந்தக் காவல் துறையை கடந்த ஓராண்டு காலத்தில் இந்த அரசு எடுத்த முயற்சிகளின் காரணமாக அந்த ஈரல் 60 சதவீதம் நல்ல வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீதமுள்ள 40 சதவீதத்தைப் பற்றித்தான் இங்கே எல்லோரும் பேசினார்கள். அது தமிழ் மாநிலக் காங்கிரஸ்

கட்சியின் சார்பில் பேசியவர்களாக இருந்தாலும் சரி, அல்லது மற்ற கட்சிகளின் சார்பில் பேசியவர்களாக இருந்தாலும் சரி, அத்தனைபேரும் மேலும் காவல் துறை நல்லமுறையில் செயலாற்றிட வேண்டும் என்பதற்கான ஆக்கப்பூர்வமான கருத்துக்களைத்தான் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் காவல் துறைக்காக வக்காலத்து வாங்க, இங்கே எடுத்து வைத்த குறைபாடுகளுக்கு எல்லாம் பதில் சொல்ல மாத்திரம் இங்கே நிற்கவில்லை. நீங்கள் எடுத்து வைத்த குறைபாடுகள் பலவற்றை நான் ஏற்றுக்கொண்டு, அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காக என்னென்ன செயல்முறைகளைத் தீட்ட வேண்டுமோ அவைகளைத் தீட்டுவேன் என்ற உறுதியை உங்களுக்கு அளிக்கிற வகையில்தான் உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறையில் 'இந்தியாவில்' அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டில் காவல் துறைக்கு என்ற ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான். அதுவும் ஒரு முறையல்ல இரண்டு முறைகள் அந்த கமிஷன் அமைக்கப் பட்டது. முதல் கமிஷன் ஏறத்தாழ 1970ஆம் ஆண்டில் நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஆர். ஏ. கோபாலசாமி அய்யங்கார் அவர்களுடைய தலைமையில் போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு, அவர்கள் அளித்த பல பரிந்துரைகளை அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றியது. அந்த அடிப்படையில்தான் - லத்தீப் அவர்கள் இங்கே சொன்னார்களே, காவல் துறையில் சாதாரண காவலருக்கு அப்போது 80 ரூபாய்தான் மாத ஊதியம். அந்த 80 ரூபாய் மாத ஊதியம் 230 ரூபாயாக மாறுவதற்குக் காரணமாக இருந்ததே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். ஏனென்றால் அந்த கோபால்சாமி அய்யங்கார் அவர்களுடைய கமிஷன் அறிக்கையின்படி, அது சொன்ன சிபாரிசுகள், பரிந்துரைகள் அத்தனையும் முக்கால் பகுதி எற்றுக்கொள்கிற நிலையில்தான் அந்தக் சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. மீண்டும் 1989-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது முன்னாள் தலைமைச் செயலாளராக இருந்த சபாநாயகம், I.A.S. அவர்கள் தலைமையில் இன்னொரு போலீஸ்

கமிஷன் அமைக்கப்பட்டதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். இந்த இரண்டு போலீஸ் கமிஷன்கள் செய்த சிபாரிசுகளை எல்லாம் படிப்படியாக நாம் நிறைவேற்றி இருக்கிறோம். ஆனால் காவல் துறை கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு ஆளுங்கட்சிக்காரர்களே குண்டர்களாக மாறிய வரலாறு எல்லாம் நம்முடைய தமிழ் மாநிலத்தில் உண்டு என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அதற்கு உதாரணமாக முன்னாள் தலைமை தேர்தல் ஆணையாளர் அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்திலே பல மணி நேரம் சிறை வைக்கப்பட்ட நிகழ்ச்சியும், அவர் சிறை மீட்கப்பட்டு ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலிலே தங்க வைக்கப்பட்டபோது, அந்த ஓட்டலே அடித்து நொறுக்கப்பட்ட அந்த நிகழ்ச்சியும் போதுமானவை என்றே கருதுகிறேன்.

வழக்கறிஞர்கள் சண்முகசுந்தரம், விஜயன், அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய முன்னாள் துணை வேந்தர் டாக்டர் அனந்த கிருஷ்ணன் போன்றவர்கள் எல்லாம் குண்டர்களால் தாக்கப்பட்டதையும் இந்த அவை மிக நன்றாக அறியும்.

நாகர்கோவிலில் சிறைசசாலைக்குள்ளேயே புகுந்து சிறையிலே அடைக்கப்பட்டிருந்த ரவுடி லிங்கன் என்பவரை மற்றொரு ரவுடியான பிரபு கூட்டத்தினர் கொன்றுவிட்டு தப்பிச் சென்ற நிகழ்ச்சியும் கடந்த கால ஆட்சியிலே நடைபெற்றதுதான்.

இன்றைய கழக ஆட்சியிலே அத்தகைய குண்டாயிசம், ரவுடியிசம் தொடரக்கூடாது என்பதற்காக திடமாக முடிவுகள் எடுக்கப்பட்டு காவல்துறையும் அந்தக் கடமையை ஆற்றுகின்ற அந்தக் கம்பீரத்தோடு அவர்கள் செயலாற்றி, ஆசைத்தம்பி, மனோ, கபிலன் போன் பெரிய ரவுடிகளினுடைய அட்டகாசத்தை அடக்கியதையும் இந்த அவை அறியும். அத்தகைய அடக்குகின்ற முயற்சியிலே அந்த ரவுடித் தலைவர்கள் கொல்லப்பட்டதையும் இந்த அவை மிக நன்றாக அறியும். இவர்களைத் தவிர, பல ஆண்டுக் காலமாக இத்தகைய ரவுடித்தனங்களில் ஈடுபட்டிருந்த 1137 நபர்கள் மீது கழக ஆட்சியிலே கடந்த 10 மாதங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் 729 பேர்கள் குண்டர் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலிலே வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

எதிர்க்கட்சி தலைவர் அவர்களும் மற்றும் இங்கே பேசிய பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் காவல் நிலையங்களிலே நடைபெறுகின்ற சாவுகளைப் பற்றி மிகுந்த உருக்கத்தோடு குறிப்பிட்டு இருக்கின்றார்கள். நானும் எதிர்க்கட்சியிலே இருந்தபோதும் சரி, இடையிடையே ஆளும் கட்சியிலே அமருகின்ற வாய்ப்பு வந்தபோதும் சரி, இந்தச் சாவுகளை என்றைக்கும் அனுமதிப்பவன் அல்ல. அதற்குரிய காரணங்களை ஏற்றுக் கொண்டவனும் அல்ல. எப்படி இறந்தார்கள் என்று - மாரடைப்பால் இறந்தார், தூக்குமாட்டிக் கொண்டு இறந்தார், கடுமையான ஜுரத்தால் இறந்தார், வலிப்பால் இறந்தார் என்றெல்லாம் சொல்லப்படுகிற காரணங்களை நான் என்றைக்கும் ஏற்றுக் கொண்டதில்லை. இன்றைக்கும் ஏற்றுக் கொள்பவன் அல்ல என்பதை இந்த அவையிலே நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இத்தகைய சாவுகள் தொடரக்கூடாது என்பதற்காக எடுத்த நடவடிக்கைகளை இந்த அவையிலே உள்ள நீங்கள் யாரும் மறந்துவிடக்கூடாது. குறிப்பாக உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால், மதுரை மாவட்டம் எழுமலை காவல் நிலையத்தில் பெருமாள்தேவர் என்பவர் 23-6-96 அன்று இந்த ஆட்சி வந்த பிறகு - இறந்துவிட்டதைத் தொடர்ந்து இராஜசேகரன் என்ற உதவி ஆய்வாளர், காந்தீபன் என்கின்ற தலைமைக் காவலர், ஆண்டவர் என்கின்ற முதல்நிலைக் காவலர், அரிச்சந்திரன் என்கிற இன்னொரு முதல்நிலைக் காவலர், கோபால் என்ற காவலர் கைது செய்யப்பட்டார்கள் என்ற நிகழ்ச்சியும் இந்த ஆட்சியிலேதான் நடந்தது. அதைத்தான் நேற்றைக்கு சுப்பராயன் அவர்கள் பேசும்போது, இதை நான் வரவேற்கிறேன், இப்படி தமிழ்நாட்டில் முதன்முதலாக காவல் நிலையத்திலே இறந்துபோன கைதிக்காக அவர்களை மன்னிக்காமல் காவல்துறை மீது நடவடிக்கை எடுத்து, அவர்கள் மீது 302 செக்சன் வரையிலே போட்டவர்களைக் கைது செய்த பெருமை இந்த அரசுக்கு உண்டு என்று அவர்கள் சொன்னார்கள்.

மேலும், மதுரை மாநகரத்தில் வேலுச்சாமி என்பவர் ஒரு காவல்நிலையத்திலே, திடீர் நகர் காவல் நிலையத்திலே 29-6-96 அன்று இறந்த செய்தியைத் தொடர்ந்து ஆய்வாளர் தங்கராஜ், தலைமைக் காவலர் செல்வராஜ், முதல்நிலைக் காவலர் பழனிமுத்து,

காவலர், சாமுவேல் ஆகியோர் கைதுசெய்யப்பட்டார்கள். அதேபோல் வ.உ.சி. மாவட்டத்தில் கடம்பூர் காவல்நிலையத்தில் பெரிய தங்கவேலன் என்பவர் காவல் துறை விசாரணையின்போது மரணமுற்றார் என்ற செய்தியின் தொடர்பாக திரு. கோவிந்தன், பொறுப்பு ஆய்வாளர், ஒளிமுத்து, உதவி ஆய்வாளர், காளிமுத்து மற்றும் சீனியர் என்ற சீனிவாசன், காவலர்கள் ஆகிய 4 பேர்கள் மிது வழக்கு பதிவு செய்யப்பட்டு, இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. விசாரணையிலே இருக்கிறது. கைது செய்தவற்காக போலீசார் அவர்களைத் தேடுகிறார்கள். அவர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள். விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அப்படி கைது செய்யப்படாவிட்டால் அவர்களைத் தேடுவதாகச் சொல்லுகின்ற போலீசாரே ஒருவேளை உடந்தையாக இருக்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்கும் வரும் என்றும் போலீஸ் அதிகாரிகளுக்கு நான் கண்டிப்பாகத் தெரிவித்திருக் கிறேன் என்பதையும் இந்த அவைக்கு கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

ஜாதிக் கலவரங்களைப் பற்றி இங்கே பேசப்பட்டது. ஜாதிமதக் கலவரம் எவ்வளவு கொடுமையானது, தீவிரமானது என்பதை எல்லா உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். அவர்களுடைய உணர்வில் இன்றல்ல. கடந்த பல மாதங்களாக இந்த அவை நடத்தப்படுகின்ற ஒவ்வொரு காலத்திலும் ஜாதிமத சங்கடங்களை, சச்சரவுகளை, மோதல்களைத் தவிர்ப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் என்ற கருத்தோடு நான் ஒன்றி இருந்திருக்கிறேன். அதற்கு நீங்களும் இந்த அரசுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்று அன்றைக்கும் கேட்டுக்கொண்டிருக்கிறேன்; இன்றைக்கும் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். நான் இந்த எண்ணிக்கைகளை ஒப்பிட்டுக் காட்டுகின்ற காரணத்தால் நியாயம் கற்பிப்பதாக யாரும் கருதிக்கொள்ளக் கூடாது. 1995ஆம் ஆண்டில் ஜாதிக் கலவரத்தால் இறந்தவர்கள் 49 பேர். 1996 மே வரையில் இறந்தவர்கள் 27 பேர். ஆக 76 பேர் கடந்த காலத்திலே 1995-96ஆம் ஆண்டு மே வரையில் இந்த ஆட்சி வருவதற்கு முன்பு இந்தக் கலவரங்களால் கொல்லப்பட்டிருக்கிறார்கள், செத்திருக்கிறார்கள். 1996 ஜூன் முதல் 1997 மார்ச் வரையில் 7 பேர்

ஜாதிக் கலவரத்தால் செத்திருக்கிறார்கள். ஆனால் மதக் கலவரத்தில் 11 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நான் ஒப்பிட்டுக் காட்ட விரும்பவில்லை. 4 பேர் என்றாலும் ஒருவர் என்றாலும்கூட கலவரம் கலவரம்தான். மத உணர்வு, மத வெறி, ஜாதி வெறி இவைகளின் காரணமாக ஏற்படுகின்ற பூசல் பூசல்தான். அது தவிர்க்கப்பட வேண்டுமென்கின்ற எண்ணம் எல்லோருடைய ஒருமித்த எண்ணம்தான். அதனால்தான் வழக்கமாக இருக்கின்ற காவல்துறையினுடைய படை போதாது என்பதற்காக அதிவிரைவுப் படை ஒன்றை உருவாக்கியிருக்கிறோம். மதக் கலவரங்கள், ஜாதிக் கலவரங்கள் குறித்த விவரங்களை முன்கூட்டியே சேகரித்து, தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக Swift Action Force என்ற ஒரு படையை அதிவிரைவுப் படையை இந்த அரசு அமைத்து, 275 காவலர்களின் முதல் அணிவகுப்பை 28-3-1997 அன்று ஆவடியிலே தொடக்கி வைத்திருக்கின்றோம். இந்த அதிவிரைவுப் படை ஆவடியிலே மாத்திரமல்லாமல், அடுத்து கோவை, சென்னை, மதுரை, நெல்லை என்று படிப்படியாக பல்வேறு மாவட்டங்களிலும் அமைக்கப்படும் என்றும், அவர்கள் ஜாதிக் கலவரங்களோ, மதக் கலவரங்களோ ஏற்படாமல் முன்கூட்டியே தடுப்பதற்கு பயன்படுத்தப்படுவார்கள் அல்லது தடுத்தும் முடியாமல் கிளர்ந்து எழுந்துவிட்டால், அவைகளை அடக்குவதற்கு இந்தப் படையினர் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்று பயன்படுத்தப்படுவார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆட்சிக் காலத்தில் காணாமற்போன நகைகள், காணாமற்போன பல்வேறு உடைமைகள் இவைகள் எல்லாம் எப்படி மீட்டுத் தரப்பட்டன என்பதையும் அவ்வப்போது அதை இந்த அவையிலே மாண்புமிகு எல்லா கட்சித் தலைவர்களும் பாராட்டிப் பேசியதையும் நான் மறந்துவிடவில்லை. இன்றைக்கு பாராட்டால் இருந்தாலும்கூட, நான் எப்போதும் பாராட்டாமல் இருக்கிற நேரத்திலே, அதைப் பொருட்படுத்தாமல் பாராட்டியவை களைத்தான் மனதிலே எண்ணி, பாராட்டவில்லை என்று வருத்தப்படாமல், பாராட்டியதை எண்ணி எண்ணி அந்த பசுமையான நினைவுகளிலேயே நான் பொது வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருப்பவன். அந்த வகையிலே உங்களுக்குத்

தெரியும், கழகத்திற்கு என்று கோயில் குளங்களைப் பற்றி தனிப்பட்ட ஒரு கோட்பாடு உண்டு. ஆனால் கழக ஆட்சியைப் பொறுத்தவரையில், கோயில் குளங்களிலே நம்பிக்கையுள்ள யாருடைய மனமும் புண்படாமல் நடந்துகொள்கின்ற போக்கு கழக ஆட்சிக்கு உரிய போக்காகும். அதனால்தான் கோயில் கூடாது என்பது அல்ல. கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்பதுதான் எங்கள் நோக்கம் என்று நான் இன்றைக்கு அல்ல, கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்பே எழுதி யிருக்கிறேன் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

கோயில்களிலே, குறிப்பாக மயிலாப்பூர் வேதாந்த தேசிகர் கோவிலில் களவுபோன ரூ. 8.37 லட்சம் மதிப்புடைய நகைகள் உடனடியாக மீட்கப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். அந்தக் கோயிலிலே உள்ள அர்ச்சகர்கள் எல்லாம் கூட வந்து, என்னைச் சந்தித்து, எனக்குச் சால்வையும், மாலையும் அணிவித்து, என்னைப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள். ஆண்டவனால்கூட கண்டுபிடிக்க முடியாத திருட்டை ஆளுகின்றவர்கள் கண்டுபிடித்து விட்டார்களே என்று எங்களுக்கு வாழ்த்துக்கூறி விட்டுச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). மதுராந்தகம் ஏரிகாத்த இராமர் கோயில், கும்பகோணம் சாரங்க பாணிகோயில், மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில் ஆகிய புகழ் பெற்ற ஆலயங்களில் முந்தைய ஆட்சியில் 1992 முதல் களவு போன 1 கோடி ரூபாய் மதிப்புள்ள சிலைகளும், நகைகளும், கழக அரசால்தான் கடந்த நவம்பர் டிசம்பர் மாதங்களில் மீட்கப்பட்டுள்ளன என்பதை ஆத்திக நண்பர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). 29-6-1996 அன்று கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டியில், ஜி.சி.எஸ். வங்கியில் 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் களவடைந்து, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களிட மிருந்து 59¼ லட்சம் மதிப்புடைய நகைகள் மீட்கப்பட்டன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிதி நிறவனங்களைப் பற்றி இங்கே பேசினார்கள். தமிழ்நாட்டில் கடந்த 5,6 ஆண்டு

காலமாக இந்த நிதி நிறுவனங்கள் நேற்று பெய்த மழையில் இன்று முளைக்கின்ற காளான்களைப் போல ஆங்காங்கே திடீர் திடீரென்று முளைத்து - காளான்கள் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்பது இன்றைய விஞ்ஞானக் கருத்து - ஆனால், அந்தக் காளான்கள் பொதுமக்களுடைய பணத்தை சூறையாடி அவர்களை யெல்லாம், குடும்பம் குடும்பமாக நடுத்தெருவிலே நிற்க வைத்த காளான்கள். இந்தக் காளான்கள் 39 நிதி நிறுவனங்களாக தமிழகத்திலே, இந்த மாநிலத்திலே இருந்தன. அந்த 39 நிதி நிறுவனங்களையும், நம்முடைய காவல் துறை முயற்சி மேற்கொண்டு முடக்கியது மாத்திரம் அல்லாமல், அந்த நிதி நிறுவனங்களுக்குத் தொடர்புடைய 42 அதிபர்களையும் கைது செய்து சுமார் 170 கோடி ரூபாய் பொதுமக்களுடைய முடக்கப்பட்ட அந்தப் பணத்திலிருந்து ஏறத்தாழ 106 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும், பணத்தையும் மீட்கின்ற பெரும் பணியை செய்து முடித்திருக்கின்றது. அதை ஏன் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். சொத்துக்களைத்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன். வெறும் கேஷ், ரொக்கப்பணமாக இருந்தாலும்கூட, நீதிமன்றத்திலே சொல்லிவிட்டு திருப்பிக் கொடுத்திருக்க முடியும். ஆனால் அப்படி கொடுக்க முடியாத காரணம் - சொத்துக்களை நான் குறிப்பிட்டேன். அவற்றிலே பல வீடுகளாக, கட்டிடங்களாக, வேறு பல அசையா சொத்துக்களாக இருக்கின்ற காரணத்தால் நீதிமன்ற விசாரணை முடிகின்ற வரையிலே அதற்காக பொறுத்திருக்க வேண்டி யிருக்கிறது.

அந்த நிதி நிறுவனங்களுடைய பெயரை ஒருமுறை சொல்வது நல்லது என்று கருதுகின்றேன்.

1. அபிராமி ஹை இன்வெஸ்ட்மென்ட்ஸ்
2. அமுதா கோல்டு பேலஸ்
3. பாரதி ஜெம்ஸ் அண்டு ஜுவல்ஸ்
4. பெட்டர் கெய்ன்ஸ் பைனான்ஸ் அண்டு இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
5. கார் செண்டர் பைனான்ஸ்

6. தட்சிணா பைனான்ஸ்
7. தேவி கோல்டு & ஜி.என்.எஸ். நிதி
8. என்பீல்ட் பிஸினஸ் பைனான்ஸ்
9. ஈஸ்வரி குரூப் ஆப் கம்பெனீஸ்
10. கிரீன் ஹெவன் பைனான்ஸ்
11. லட்சுமி கோல்டு ஹவுஸ்
12. மெட்ராஸ் மோட்டார்ஸ் பைனான்ஸ்
13. மாக்சிமா குரூப் ஆப் கம்பெனி
14. மதுவந்தி பைனான்ஸ்
15. மாலதி தங்க மாளிகை
16. மல்டிபில் பைனான்ஸ் அண்டு இன்வெஸ்ட்மென்ட்ஸ்
17. நியூ இந்தியா பைனான்ஸ்
18. நாகலட்சுமி பைனான்ஸ்
19. ஒமெகா குரூப் ஆப் கம்பெனீஸ்
20. ரமேஷ் கார் பைனான்ஸ்
21. ரிச்சீஸ் அண்டு கிளிப்ஸ் பைனான்ஸ்
22. சினேகம் குரூப் ஆப் கம்பெனீஸ்
23. ஸ்பார்டம் பைனான்ஸ்
24. ஸ்ரீனிவாசலு செட்டி ஜுவல்லர்ஸ்
25. சூரியா எஸ்டேட் பைனான்ஸ்
26. எஸ்.கே.எஸ். கோல்டு ஹவுஸ்
27. சுவிஸ் பைனான்ஸ்
28. சரவணா கிரெடிட் அண்டு பைனான்ஸ்
29. திருமகள் குரூப் ஆப் கம்பெனீஸ்
30. வென்சூரா பைனான்ஸ்
31. இம்பீரியல் கோல்டு ஹவுஸ்

இந்த நிறுவனங்களுடைய மோசடியை விசாரிக்கவும், இழந்த மக்களுடைய பணத்தை, சொத்தை, திருப்பித் தரவும் மேற்கொள்ளப்படவேண்டிய விசாரணைகள் மிக விரைவிலே

முடிய வேண்டும் என்பதற்காக, இதற்கும் ஒரு தனிக் கோர்ட் அமைக்கின்ற முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும், விரைவிலே அந்தத் தனிக் கோர்ட் அமையும் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வெடிகுண்டு கலாசாரத்தைப் பற்றி திருநாவுக்கரசு அவர்களும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் இங்கே எடுத்துக்காட்டினார்கள். வெடித்தவைகள் எல்லாம் வெடிகுண்டுகள் அல்ல என்பதை நாம் ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டும். வெடிகுண்டுகள் ஒரு கட்டிடத்தை பிளக்கக் கூடிய அளவுக்கு ஆற்றல் வாய்ந்த வெடிகுண்டுகள், அதாவது 'பாம்'. அஃதன்னியில் நாம் தீபாவளி காலத்திலே கையிலே வாங்கி வைத்து சுவரிலே அடிக்கின்ற வெங்காய வெடிகளைக்கூட வெடிகுண்டு வரிசையிலே சேர்த்த காரணத்தால் தான் அந்த ஆட்சியிலும் சரி, இந்த ஆட்சியிலும் சரி நான் சொல்கிறேன் எல்லாமே வெடிகுண்டுகள் : வெடித்த காரணத்தால் வெடிகுண்டுகள் என்ற அளவிலே அவைகள் பெயரிடப்பட்டு விட்டன என்பதை மறந்துவிடக் கூடாது. ஆனால் கடந்த காலத்திலே அந்த வெடிகுண்டால் ஆர்.எஸ்.எஸ்.ஸினுடைய பில்டிங் கட்டிடம் ஒன்று இடிக்கப்பட்டு 11 பேர் கொல்லப் பட்டார்கள் என்பதும் அதற்குப் பிறகு இன்னொரு நிகழ்ச்சியில் அந்த வெடிகுண்டால் இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களுடைய கட்டிடம் இடிக்கப்பட்டு சிலர் மாண்டார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும். சென்னைக்கருகில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த கொடுங்கையூர் நிகழ்ச்சியைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக் கிறார்கள். இந்த கொடுங்கையூரிலே அந்த வெடிமருந்து பொருள்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்திருந்தால் சென்னை மாநகரம் ஒரு மும்பை என்ற நிலையை அடைந்திருக்கும் என்பதை இன்று அல்ல அந்தப் பொருள்களையெல்லாம் பார்த்த எதிர்க் கட்சித் தலைவரும் மற்றும் நம்முடைய கட்சிகளின் தலைவர்களும் இந்த அவையிலேயே பேசியவை இன்னமும் என் காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டிருப்பதை நான் மறந்துவிட வில்லை.

அப்படிப்பட்ட கொடுங்கையூர் நிகழ்ச்சியிலே ஈடுபட்டு பணியாற்றிய காவல் துறையினருக்கு ஏன் இன்னும் பதக்கங்களோ அல்லது பதவி உயர்வுகளோ தரவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். பதவி உயர்வு தருவது, பதக்கம் தருவது இதிலே எந்தவிதமான கஞ்சத்தனமும் இந்த அரசுக்குக் கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆனால், ஒவ்வொரு ஆண்டும் அண்ணா பதக்கத்திற்காக நடைபெறுகின்ற நிகழ்ச்சியின்பொழுதுதான் இந்தப் பதக்கம் பெற்றவர்களுக்கெல்லாம் பதக்கம் வழங்குவது வழக்கமாக இருப்பதால் அவர்களுக்கே இத்தகைய பதக்கங்களை, பரிசுகளை அளித்துவிட்டு அதை அறிவிக்கின்ற அல்லது அந்த விழாவை நடத்துகின்ற அல்லது அவர்களுக்கு அணிவிக்கின்ற நிகழ்ச்சியாக, அண்ணா பிறந்தநாள் நிகழ்ச்சி அல்லது அண்ணா பதக்கம் தருகின்ற நிகழ்ச்சியிலே அது நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பதவி உயர்வுகளைப் பற்றிச் சொன்னார்கள். இது நாங்களாகச் செய்தால் நன்றாக இருக்காது என்றுதான் எதிர்க்கட்சிகள் சொல்லிச் செய்தால், பிறகு ஒரு பேச்சுக்கு இடம் இல்லாமல் போய்விடும் என்று நீங்கள் சொல்லட்டும் என்று காத்திருந்தேன். நிச்சயமாகச் செய்யப்படும் என்ற உறுதியை எதிர்க்கட்சித் தலைவருக்கும், மற்ற கட்சிகளின் தலைவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மதுவிலக்குச் சட்டத்தினுடைய தீவிர செயலாக்கத்தை இந்த அரசு கடைபிடிக்கிறதா இல்லையா என்பதற்கு நான் இங்கே வெளிப்படுத்த விரும்புகின்ற ஒன்று கடந்த ஆண்டு நாம் இந்தக் காவல்துறையில் இருக்கின்ற மதுவிலக்குப் பிரிவினால் புகார்கள் தான் அதிகமாக வருகிறதேயல்லாமல் இந்த மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றுகின்ற வெற்றி முகப்பை நாம் காண இயலவில்லை என்று விளக்கம் அளித்து இந்த மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு கலைக்கப்படுகிறது என்று அறிவித்து அவையிலே உள்ள அனைவரும் அன்றைக்கு கையொலி செய்து அன்றைக்கு அனைவரும் கையொலி செய்து - அதை

வரவேற்றீர்கள். நான் மறந்துவிடவில்லை. ஆனால் அதற்காக மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கலைக்கப்பட்டு விட்டாலும்கூட மாநில அளவிலே அந்தப் பணியைச் செய்ய காவல் துறையிலே அவர்களாகவே ஆங்காங்குள்ள காவல்துறையினுடைய அதிகாரிகள், பணியாளர்கள் அந்தப் பணியிலே ஈடுபட்டு இருக்கின்றார்கள்.

அதிலே, குறிப்பாக இந்தக் கள்ளச் சாராயத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமேயானால் நம்முடைய ஈஸ்வரன்கூட இந்தக் கள்ளச் சாராயம் இருக்கிற காரணத்தினால்தான் இவ்வளவு தொல்லை, எனவே சாராய கடைகளையே திறந்துவிடுங்கள் என்று ஆதங்கத்தோடு சொன்னதாக அவர்களுடைய கட்சியின் சார்பிலே தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு என்ன பயம் என்றால் சாராயக் கடைகளைத் திறங்கள் என்று சாதாரண மனிதர் அல்ல ஈஸ்வரனே சொன்ன பிறகு (சிரிப்பு) அதை எப்படி மீறுவது என்பதுதான் என்னுடைய பயம். இருந்தாலும் ஆண்டவன் சொன்னாலும் அது அநியாயமாக இருக்குமேயானால் அதை மறுக்கின்றவர்கள்தான் சுயமரியாதைக் காரர்கள் என்ற அதே அடிப்படையில், நானும் தமிழ் மாநில காங்கிரஸினுடைய அந்த உணர்வோடு ஒன்றிப்போகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). நிச்சயமாக சாராயக் கடைகள் திறக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆனால், சாராய அழிப்புப் பணியில் நாம் இந்த மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு என்ற ஒரு பிரிவு கலைக்கப்பட்ட பிறகுகூட சாராயத்தை அழிப்பதில் ஒரு புள்ளிவிவரத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இதிலே நான் ஒப்பீடு காட்ட விரும்பவில்லை. முன்பு எப்படி, இப்போது எப்படி என்றெல்லாம் ஒப்பீடு காட்ட விரும்பவில்லை. முன்பும் கள்ளச் சாராயத்தை ஒழிக்கின்ற முயற்சிகள் நடைபெற்றன.

ஆனால், இன்றைக்கு அதைவிட மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் தீர வேண்டும். சாராயத்தை அழிப்பதில், கலால் வேட்டைகள் நடைபெற்று, கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, 13-5-96 முதல்

31-3-97 வரை கைப்பற்றி அழிக்கப்பட்ட கள்ளச்சாராயம் 43 லட்சத்து 17 ஆயிரத்து 625 லிட்டர் என்பதை நான் பெருமையோடு இங்கே கூறிக்கொள்கின்றேன்.

சாராய ஊறல்கள் அழிப்பு விவகாரத்தில் 13-5-96 முதல் 31-3-97 வரை கைப்பற்றி அழிக்கப்பட்ட கள்ளச்சாராய ஊறல்கள் 3 கோடியே 59 லட்சத்து 18 ஆயிரத்து 449 லிட்டர் என்பதைப் பெருமிதத்தோடு கூறிக்கொள்கின்றேன்.

சாராவி, ஸ்பிரிட் கழக அரசில் 13-5-96 முதல் 31-3-97 வரை கைப்பற்றி அழிக்கப்பட்ட சாராவி என்ற ஸ்பிரிட் 3 லட்சத்து 61 ஆயிரத்து 426 லிட்டர்.

கள்ளச் சாராயத்தை ஒழிக்கிற சிறப்பு நடவடிக்கையின் அடிப்படையில் 3 நாள் ஒரு தவணையாகவும் 4 நாள் மற்றொரு தவணையாகவும் ஸ்பெஷல் டிரைவ் ஒன்று நடத்தப்படுகிறது.

அந்த வகையில் 13-11-96 முதல் 15-11-96 வரை 3 நாட்கள் தமிழ்நாட்டிலே நடத்தப்பட்ட அந்தச் சிறப்பு கள்ளச் சாராய வேட்டை மற்றும் 14-2-97 முதல் 17-2-97 வரை 4 நாட்கள் நடைபெற்ற அந்தக் கள்ளச் சாராய வேட்டை ஆகியவற்றில் 13 முதல் 15 வரை நடத்தப்பட்ட வேட்டைகளில் 5,746 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 5,120 நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். 61 ஆயிரத்து 132 லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றி அழிக்கப் பட்டிருக்கின்றது. 41 லட்சத்து 93 ஆயிரத்து 25 லிட்டர் சாராய ஊறல்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக, 14-2-97 முதல் 17-2-97 வரை நடத்தப் பட்ட அந்தச் சிறப்பு வேட்டைகளில் 7,286 வழக்குகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் 7,022 நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 58 ஆயிரத்து 125 லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளது. 7 லட்சத்து 39 ஆயிரத்து 427 லிட்டர் சாராய ஊறல்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

இவ்வளவு அதிகமாகக் கைப்பற்றப்பட்டு இருந்தாலும்கூட அறவே சாராயம் ஒழிந்ததா என்றால் இல்லை. அதனுடைய நெடி இன்னமும் தமிழகத்திலே அடித்துக் கொண்டுதான் இருக்கிறது. அதை அறவே ஒழிப்பதற்கான முயற்சிகளில் இந்த அரசு ஈடுபடுவதற்குக் காவல் துறையும், கள்ளச் சாராயம்

காய்ச்சுகின்றவர்கள் நல்லவர்களாக மாற வேண்டும் என்ற நிலையும், இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சிகளினுடைய உறுப்பினர்களும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளும் பொழுது யாரும் என்னைத் தவறாகக் கருதிக் கொள்ளக் கூடாது. ஏனென்றால், சில நேரங்களில் நமக்கு வேண்டியவர்கள் இதில் சிக்கிக் கொண்டால் அவர்களை விடுவிக்க வேண்டும் என்கின்ற அந்த நிலையைக் கூட யாரும் எடுக்காமல், "சிக்கிக் கொண்டாயா, சரி, அதுதான் உனக்குச் சரியான தண்டனை'' என்கின்ற அளவிற்கு மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் இருப்பார்களேயானால், கள்ளச் சாராயத்தை இந்த அரசு கண்டிப்பாக ஒழித்து விட்டது என்ற ஒரு புதிய சரித்திரத்தை நாம் உண்டாக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தக் கலால் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தாத காவல் துறையினர்மீது, கழக ஆட்சியில் ஜூன் 96 முதல் மார்ச் 97 வரை மொத்தம் 705 காவல் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிட்டுக் கூற வேண்டிய முக்கியமான செய்தி என்னவென்றால், கலால் சட்டத்தை தீவிரமாகவும், உண்மையாகவும் செயல்படுத்தாமல் இருந்தமைக்காக 14 காவல் துறையினர்மீது கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டு. அவர்கள் கைது செய்யப் பட்டிருப்பதும் கழக ஆட்சியிலேதான் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்வேன்.

மதுக் கடைகளில் பார் நடத்துவதைப் பற்றிச் சொன்னார்கள். சொன்னது திரு. ஈஸ்வரன்தான் என்று கருதுகிறேன். இந்த பார் நடத்துவதால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை இந்த அரசு எண்ணிப் பார்த்து, பார் நடத்தக் கூடாது என்று குறிப்பிடுகிறது. ஆனால் அங்கே சரக்குகளை வாங்கிக் கொண்டு, பக்கத்திலே உட்கார்ந்து குடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரேகூட போனமுறை பேசும்பொழுது சொன்னார்கள். பார் நடத்தாத காரணத்தால், நடத்திக் கொள் என்று அவர்களுக்கு உரிமை கொடுத்து, மறை முகமாக உரிமை கொடுத்து, ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும்

உள்ள போலீஸ் அதிகாரிகள் 5 ஆயிரம், 6 ஆயிரம் என்று சம்பாதிக்கிறார்கள் என்ற செய்தியைக்கூட அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால், இன்றைக்கு நம்மால் முடிந்த அளவிற்கு மதுக் கடைகளில் பார் நடத்தியவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று பார்த்தால் 1-6-96 முதல் 31-3-97 வரையில் மதுக் கடையில் பார் நடத்தியதற்காகப் போடப்பட்ட வழக்குகள் 1,245. மதுக்கடைகளின் உரிமங்களை ரத்து செய்ய அனுப்பிய அறிக்கைகள் 640. மதுக்கடைகளிலே சில்லறை விற்பனை, போலி மது விற்பனை மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்கு மேலாக விற்பனை செய்தது குறித்து போடப்பட்ட வழக்குகள் 3,240 ஆகும்.

கள்ளச் சாராயத்தை முழுவதும் ஒழித்துவிட்டதாகப் பெருமையடித்துக் கொள்கிற கிராமங்கள், தமிழ்நாட்டிலே 1,500 கிராமங்கள் என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகின்றேன். இருக்கின்ற கிராமங்கள், 58 ஆயிரம், 60 ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன. அவற்றிலே 1,500 கிராமங்களிலேதான் கள்ளச் சாராயம் இன்றைக்கு அறவே ஒழிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமங்களுக்குச் சென்று, யாத்திரைக்குச் செல்வது போலச் சென்று புனித யாத்திரை போலச் செய்து, அவைகளைத் தரிசித்தால்கூட நன்றாக இருக்குமென்று, மதுவிலக்கிலே தீவிர எண்ணம் கொண்டவர்களுக்கு நிச்சயமாக ஒரு மனப்பான்மை ஏற்படும். 1,500 என்பது போதுமானதல்ல. இந்த 1,500-ஐ 15 ஆயிரமாக ஆக்க, எல்லா கிராமங்களிலுமே இன்றைக்கு கள்ளச் சாராயம் இல்லை யென்ற நிலையை உருவாக்க, அனைவரும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த மாமன்றத்திலே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துப்பாக்கிச் சூடுகளைப் பொறுத்தவரையில் இங்கே பேசினார்கள். 1995-ஆம் ஆண்டு துப்பாக்கிப் பிரயோகம் 38 முறை நடைபெற்றிருக்கிறது. 1996 முதல் இந்த ஆட்சி பொறுப் பேற்கின்றவரையில் 11-5-96 வரையில் 4½ மாத காலத்தில் 18 இடங்களிலே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. ஆனால், கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 13-5-96 முதல் 24-4-97 முடிய, 11½ மாத காலத்தில் 11 துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. இதிலே எண்ணிக்கை பெரிதல்ல. அன்றைக்கு அது ஏன் இன்றைக்கு

குறை என்பதல்ல. ஒரு துப்பாக்கி பிரயோகம் கூட நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு காவல் துறைக்கு மாத்திரமல்ல, அனைத்துக் கட்சிகளுக்கும் இருக்கிறது. சமுதாயத்தினுடைய தலைவர்களுக்கும் இருக்கிறது. இன்றைக்கு எப்படியோ, வேறு வழியில்லாமல், என்ன காரணத்தினாலோ ஜாதிகள், அவைகளைக் கட்டிக் காப்பாற்றக்கூடிய தலைவர்கள் அந்த ஜாதியின் பெயரால் இன்றைக்கு உருவாகியிருக்கக்கூடிய சூழ்நிலை, நாம் மறுக்க முடியாத அளவிற்கு இருக்கிறது என்பதை மறைக்கவும் நான் விரும்பவில்லை. அதன் காரணமாக, இங்கே பேசிய நேரத்திலே கூட சில வாக்குவாதங்கள் எல்லாம் ஏற்பட்டன. ஜாதி என்பது தமிழர்களுக்கு அவர்களுடைய அகராதியிலே இல்லாத ஒன்று. தமிழ் அகராதியிலே, இப்போது வந்த அகராதியிலே இருக்கலாம். அந்தக் காலத்து அகராதியிலே ஜாதி கிடையாது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்"

என்றுதான் வள்ளுவர் பாடினார். அந்தச் செய்தொழில் வேற்றுமை கூட அவர் தச்சர், இவர் குயவர், இவர் கருமான் என்று இந்த வகையிலே உள்ள செய்தொழில் அல்ல. எந்த ஒரு தொழிலை செய்தாலும், எழுத்தராக இருக்கலாம், அவர் தச்சராக இருக்கலாம். அவர் ஒரு குமாஸ்தாவாக இருக்கலாம். அவர் செய்கின்ற அந்தத் தொழிலில், அந்தக் குமாஸ்தாக்களில் யார் சிறப்புடையவரோ அவர்தான் உயர்ந்தவரே தவிர, 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்' என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் தமிழ் அகராதியிலே இல்லாத ஜாதி வந்து புகுந்த சதியின் காரணமாக, சதிக்குக் கால் முளைத்து அது சாதியாக மாறி இருக்கிறதே தவிர வேறல்ல. (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, அந்தச் சதியை வீழ்த்த, சாதியை வீழ்த்த, சாதி வேறுபாட்டை வீழ்த்த, பேதத்தை வீழ்த்த, சாதிச் சண்டைகளை வீழ்த்த, மதபாத வெறித்தன்மைகளை வீழ்த்த, மதச்சார்பற்ற ஒரு நிலை சமுதாயத்திலே உருவாக, சாதி சார்பற்ற நிலை, நாம் எல்லாம் ஒரு குலம், ஒன்றே குலம் என்கின்ற அந்த உண்மை ஒளி நம்முடைய உள்ளத்திலே எற்பட அனைவரும் ஒரு உறுதியை எடுத்துக் கொண்டாலொழிய, சட்டத்தால் அல்லது காவல் துறையால் அவர்களுடைய செயலாக்கத்தால் மாத்திரம் சாதிச் சச்சரவுகளை நாம் அகற்றிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்னும் வேறு சில செய்திகளுக்கு நான் செல்வதற்கு முன்பு, நேற்றும் இன்றும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துரைத்த சில குற்றம் குறைகளுக்கான விளக்கத்தை இங்கே கூற நான் கடமைப்பட்டிக்கின்றேன். நேற்று சட்டமன்ற உறுப்பினர், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் பேசும்போது, மதுரையிலே சந்தனன் என்ற தலைமைக் காவலர் கொலை செய்யப்பட்ட வழக்கில் அண்மையிலே தீர்ப்பு வழங்கப்பட்டு, புலன்விசாரணை முறையாகச் செய்யப்படவில்லையென்று நீதிபதி எழுதியிருப்பதாகக் கூறினார். இந்தச் சந்தனன் என்ற ஹெட் கான்ஸ்டபிள் - தலைமைக் காவலர் கொலை செய்யப்பட்டது 1995ஆம் ஆண்டு. 11-2-1995-லே கொலை நடைபெற்றது. தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்தது 13-5-1996. கொலை நடைபெற்று 15 மாதங்களுக்குப் பின்னர்தான் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. கொலை வழக்கு நடைபெற்றது. தீர்ப்புதான் தற்போது வந்திருக்கிறது. எனவே, புலன்விசாரணை ஒழுங்காக இல்லையென்று நீதிபதியால் சாட்டப்பட்ட அந்தக் குற்றச்சாட்டு இந்த ஆட்சிக்கு ஏற்பட்ட களங்கமாக செல்லக்குமார் கருதிக்கொண்டு வருந்தத் தேவையில்லை. பழைய ஆட்சியிலேயே புலன்விசாரணை ஒழுங்காக இல்லாத காரணத்தினாலேதான் இப்படி ஒரு தீர்ப்பு கிடைத்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னொன்று அவர் சொன்னார், வண்ணாரப்பேட்டையிலே ஒரு காவல்துறை அதிகாரி, முதலமைச்சராலேயே பாராட்டப்பட்டவர்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார். முதலமைச்சரே பாராட்டிவிட்டால், அவர் தவறு செய்தால் நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிடக் கூடாது. முதலமைச்சரே பெற்ற பிள்ளையாக இருந்தால்கூட நடவடிக்கை எடுக்க வேண்டும், எடுத்தால்தான் அந்த அதிகாரியை நான் பாராட்டுவேன் (மேசையைத் தட்டும் ஒலி). என்று இதே அவையிலே நான் சொன்ன சொல், ஒரு சொல்தான், அதற்கு எந்த மாற்றமும் என்றைக்கும் கிடையாது. அந்த வகையிலேதான் சொல்கின்றேன். நான் பாராட்டினாலும்கூட, மற்றவர்கள் பாராட்டினாலும்கூட, அந்த அதிகாரி வேறு ஒரு தவறைச் செய்யும்போது தண்டிக்காமல் இருக்க முடியாது. அந்த விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்கு அமுல் பிரிவு மூடப்பட்ட பிறகு, அந்தந்தப் பகுதிகளிலே உள்ள காவல் நிலைய அதிகாரிகள்தான் மதுவிலக்குத் தொடர்பான பணிகளை நிறைவேற்றும் பொறுப்பிலே உள்ளார்கள். உள்ளூர் காவல்நிலைய அதிகாரிகளும், காவலர்களும் தங்கள் பகுதியிலே சட்டத்திற்குப் புறம்பாக மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதையும், மதுபானங்கள் வாகனங்களிலே கடத்தப்படுவதையும், கண்காணித்துத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், தவறுகள் நடந்தால் அந்தப் பகுதியிலேயுள்ள காவலர்கள்தான் பொறுப்பு ஏற்கவேண்டும் என்றும் கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டு, பத்திரிகைகளிலே விளம்பரங்கள், கால்பக்க விளம்பரங்கள் காவல்துறையினால் வெளியிடப்பட்டதையும் நீங்கள் பார்த்திருக்கக்கூடும். சென்னை நகரிலேயுள்ள காவல்துறைக்கு இதுபற்றி 12-9-1996, 8-10-1996, 17-10-1996, 26-2-1997, 10-3-1997 மற்றும் 27-3-1997 ஆகிய தேதிகளில் குறிப்பாணைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் 31-3-1997 அன்று, சென்ட்ரல் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த காவலர்கள், துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் புது வண்ணாரப்பேட்டை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலுள்ள, எண் 768, சக்தி அண்டு சரவணா மதுபானக் கடை எண் 16, பூண்டி தங்கம்மாள் தெருவிலுள்ள ஓம் சரவணா, மதுபானக் கடை மற்றும் எண் 750, திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலுள்ள ஓம் சக்தி அண்டு சரவணா மதுபானக்கடை ஆகிய மூன்று கடைகளைச் சோதனை செய்து, அங்கே 223 பாட்டில்கள், போலியாக லேபிள் ஒட்டப்பட்டு - அதிலிருந்த சரக்கு உண்மையான சரக்கோ, போலியான சரக்கோ, கவலையில்லை - ஒட்டப்பட்ட லேபிள், போலியான லேபிள் ஒட்டப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்து அந்த மதுபானக் கடைகள் மீது தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த மூன்ற மதுபானக் கடைகளுமே புது வண்ண காவல்நிலைய எல்லைக்குள் சுமார் 250 மீட்டர் முதல் 500 மீட்டர் தூரத்திலேதான் அமைந்துள்ளன. எனவே, அந்தப் பகுதியின் காவல்நிலைய ஆய்வாளருக்குத் தெரியாமல் அங்கே அந்த வியாபாரம் நடைபெற்றிருக்க முடியவே முடியாது, பலமுறை அறிவுறுத்தப்பட்ட

பிறகும், மதுவிலக்குச் சட்டங்களை சரியாக அமல்படுத்தாமல், போலியாக லேபிள்களை ஒட்டி மதுபான பாட்டில்களை விற்க மறைமுகமாக உதவியாக இருந்ததற்காகப் புதுவண்ணக் காவல்நிலைய ஆய்வாளர் - நேற்று அவர் குறிப்பிட்ட அந்த அதிகாரி - மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டு, தற்போது ஜாமீனிலே இருக்கிறார். இவர் மீது நடவடிக்கை எடுக்க எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது என்பதையும், வழக்கு நடைபெறவிருக்கிறது. அதிலே உண்மை விளங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, டாக்டர் செல்லக்குமார் சொன்ன மற்றொரு குறைபாடு அல்லது குற்றச்சாட்டு. அவருக்கே பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்று யாரும் கருத வேண்டாம். ஏனென்றால், இந்தப் பத்திரிகைகள் எல்லாம் அந்தக் குற்றச்சாட்டுகளைப் பெரிய அளவிலே வெளியிட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் அப்படி வெளியிடப்பட வேண்டும், அப்பொழுதுதான் மக்களுக்கு விளக்கம் கொடுப்பதற்கும் வழி இருக்கும், காவலர்களும் தவறு செய்திருந்தால் திருத்திக்கொள்ளவும், ஒரு வேளை அரசு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், நடவடிக்கை எடுக்கவும் ஏதுவாக இருக்கும் என்ற அந்தக் காரணத்தாலே, எடுத்த நடவடிக்கைகளைப் பற்றியும், தரவேண்டிய விளக்கங்களையும் இங்கே நான் தர வேண்டியவனாக இருக்கிறேன். அமைந்தகரையில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றி விளக்கமாக அவர் இங்கே குறிப்பிட்டார். இந்தச் சம்பவம் பற்றி இதே அவையிலே 24-3-1997 அன்று புரசைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் விரிவாகப் பேசி, ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானமே கொண்டு வந்தார்கள். நான், ஏதோ தவறான தகவல்களைச் சொல்லிவிட்டதாக டாக்டர் செல்லக்குமார் இங்கே குறிப்பிட்டார். அன்றைக்கு நான் பேசும்போதேகூட இங்கே தவறான தகவல்களைத் தந்ததாகச் சொல்கிற டாக்டர் செல்லக் குமாருக்கும் சொல்கின்றேன், அதை உறுப்பினர்களுக்கும் சொல்லிக் கொள்கின்றேன். இதுபோன்ற நிகழ்வுகள் வருகின்ற நேரத்தில், அதிகாரிகளிடமிருந்து வருகின்ற அறிக்கைகளை நான் படிக்கும்போது, இந்த அறிக்கையை நான் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை, இதில் தவறுகள் இருக்கலாம், தகவல் சரியற்றவையாகவும் இருக்கலாம், எனவே

இதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்று சொல்லிவிட்டுத்தான் இவைகளைப் படித்திருக்கிறேன். அதைப் போலவேதான், அன்றைக்கும், அந்த அறிக்கையை நான் படித்திருக்கிறேன். இந்தப் புகாரின்மீது, காவல்துறையினர் சிலரை அடித்ததாகத் தந்துள்ள இந்தப் புகாரின்மீது, ஆர்.டி.ஓ. விசாரணை ஒன்று இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நடைபெற்று முடிந்து, அதனுடைய விவர அறிக்கை மாவட்ட ஆட்சியாளருக்கும் அளிக்கப்படவிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமானாலும், தயங்காமல் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவான்மியூர் காவல் நிலையத்தில் குணசேகரன் என்பவர் Illegal Custody-ல் வைக்கப்பட்டிருக்கிறார் என்று திரு. செல்லக்குமார் இங்கே சொன்னார். குணசேகரன் யார் என்பதை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் ஒரு பழைய குற்றவாளி. அடையாறு, சாஸ்திரி நகர் ஆகிய காவல்நிலையச் சரகத்தில் குற்றங்கள் இழைத்தமைக்காக ஏற்கெனவே இருபது முறை தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளிதான் குணசேகரன் என்பவர். மேலும் அவர் குற்றங்கள் புரிந்தமைக்காக, 1993ஆம் ஆண்டிலும், அந்த ஆட்சிக் காலத்திலும், மற்றும் 1996ஆம் ஆண்டிலும் இரண்டு முறை 'குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ்' தலா ஓராண்டுக் காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர் அந்த குணசேகரன். அவரைத்தான் Illegal Custody-ல் வைத்திருப்பதாக நேற்றையதினம் இங்கே செல்லக்குமார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

5-1-1997 அன்று பட்டினப்பாக்கம் காவல் நிலையச் சரகத்திலும், 11-1-1997 அன்று சாஸ்திரி நகர் காவல்நிலையச் சரகத்திலும் நடைபெற்ற திருட்டுக்கள் சம்பந்தமான இடங்களில் இந்தக் குணசேகரனுடைய விரல் ரேகை பதிந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இது தவிர, சாஸ்திரி நகரில் நடைபெற்ற மூன்று திருட்டுக்களிலும் அர் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் திருட்டுக்கள் குறித்து விசாரிக்கவும், திருடப்பட்ட சொத்துக்களைக் கைப்பற்றவும் அவர் காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டு, விசாரிக்கப்பட்டு, தற்போது கைதும் செய்யப்பட்டு, குற்ற எண் 85/97-ல்

வழக்கு பதிவு செய்யப்பட்டு, அது சம்பந்தமாக 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களும், மற்றும் சில வழக்குகள் சம்பந்தமாக 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களும் அவரிடமிருந்து இப்பொழுது கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அவரிடமிருந்து ஏறக்குறைய 70 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. அவரும் கைது செய்யப் பட்டிருக்கிறார்.

மேலும், திரு. செல்லக்குமார் தொகுதியில் காவல்துறை அதிகாரி ஒருவர் ஐந்து நாட்களுக்கு முன்பு திடீரென்று அவருடைய தொகுதியிலுள்ள மதுபானக் கடைகள், சூதாட்ட விடுதிகள் இவைகளையெல்லாம் பூட்டியதாகச் சொன்னார். சட்டசபை நடக்கிறது என்பதற்காக ஐந்து நாட்களுக்கு முன்பு பூட்டினாரோ என்னவோ என்ற சந்தேகத்தைக் கிளப்பினார். அவருக்கு நான் விளக்கம் தர விரும்புகிறேன். மதுவிலக்கு அமல் பிரிவு மூடப்பட்ட பின்பு, சென்னை மாநகரம் முழுவதிலும் சனவரி மாதத்தில் 218 வழக்குகளும், பிப்ரவரி மாதத்தில் 244 வழக்குகளும், மார்ச் மாதத்தில் 252 வழக்குகளும், ஏப்ரல் மாதத்தில் இதுவரையில் 163 வழக்குகளும் மதுபானக் கடைகள்மீது பதிவு செய்யப் பட்டுள்ளன.

அதைப் போலவே, சூதாட்ட விடுதிகள் சம்பந்தமாக சனவரி மாதத்தில் 298 வழக்குகளும், பிப்ரவரி மாதத்தில் 283 வழக்குகளும், மார்ச் மாதத்தில் 282 வழக்குகளும், சூதாட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்பட்டன. தியாகராய நகர் பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டாலும்கூட, சனவரி மாதத்தில் 47 மதுபானக் கடைகள் மீதும், பிப்ரவரி மாதத்தில் 24 மதுபானக் கடைகள் மீதும், மார்ச் மாதத்தில் 43 மதுபானக் கடைகள் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதைப்போலவே, சனவரி மாதத்தில் 91 சூதாட்ட விடுதிகள் மீதும், பிப்ரவரி மாதத்தில் 83 சூதாட்ட விடுதிகள் மீதும், மார்ச் மாதத்தில் 79 சூதாட்ட விடுதிகள் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 'அடேயப்பா தியாகராய நகரில் இவ்வளவு சூதாட்ட விடுதிகளா!' என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் என்னிடம் ஒரு சிபாரிசுக் கடிதத்தைக் கொடுத்தார்கள். கோடம்பாக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் - அவருடைய பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால், அவர் யோக்கியமாக பிறகு நடந்து கொண்டார் - அவர் சிலபேரைச் சேர்த்துக்கொண்டு ஒரு இடத்தில், யோகாசன ஆலயம் என்ற அந்த இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டு அங்கே இப்படிப்பட்ட கேளிக்கையை நடத்திக் கொண்டிருந்தார். அதைப்பற்றி அந்த யோகாசன ஆலயத்தைச் சேர்ந்தவர்கள், திரு. சொக்கர் மூலமாக எனக்கு ஒரு வேண்டுகோளை அனுப்பினார்கள். "உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் இங்கே ஒரு கூடம் அமைத்துக் கொண்டிருக்கிறார், அது எங்களுடைய இடம் என்று கேட்டதற்கு, அவர் வெளியேற மறுக்கிறார். நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று கேட்டார்கள். அந்த வேண்டுகோள் என்னிடத்தில 20ஆம் தேதி தரப்பட்டது. 24ஆம் தேதி அந்த இடம் காலி செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்கு நன்றி தெரிவித்து யோகாசன ஆலயத்தை சேர்ந்தவர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதைப் படிக்கிறேன்:

"Respected Sir. On 20-3-1997. we submitted our prayers to you regarding trespassing and illegal occupation of our premises at No.7, Vanniyarpon Street, Choolaimedu, Chennai. Under Your guidance, the Police personnel have acted immediately, vacated the illegal occupation and restored our property back to us on 24-3-1997. On behalf of the President and Members of our Aalayam and on my own behalf we hereby convey our heartfelt thanks to you and the Police Department for the express action taken and rendering justice. Thanking you, Murugesapandiyan, General Secretary" என்று எழுதியிருக்கிறார்.

இதை நான் சொல்வதற்குக் காரணம் நன்றி தெரிவித்து விட்டார்கள் என்பதற்காக மாத்திரமல்ல. இதைப்போன்ற நன்றிகள் முதலமைச்சருக்கு வராமல், போலீஸ் துறையிலுள்ள அதிகாரி களுக்கும் வரவேண்டும் என்கின்ற அளவிற்கு அந்த அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற வேண்டுகோளையும் நான் இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் பேசுகிறபோது சொன்ன கருத்து, திருவான்மியூரிலே 90 நாட்களாக illegal custody-ல் வைத்திருக்கிறார்கள் என்பதுதான். அதைச் சொல்லும்போது மேலும் சொல்லியிருக்கிறேன். என்ன காரணத்திற்காக அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்கிற ஆதாரம் என்னிடம் கிடையாது: அதற்கான தகவல் கிடையாது: ஆனால் illegal custody-ல் 90 நாட்கள் வைத்ததுதான் தவறு என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்). என்னுடைய பேச்சு அவைக் குறிப்பிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

டாக்டர் அ. செல்லக்குமார் : இரண்டாவதாக, தலைமைக் காவலர் சந்திரன் என்பவர் கொலை செய்யப்பட்ட ஆண்டு, மாதம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். நீங்கள் 22 பேர் பேசியிருக்கிறீர்கள். உங்கள் ஒவ்வொருவருடைய கருத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொன்னால், உங்கள் ஒவ்வொருவரையும் நான் திருப்பி விளக்கம் கேட்டால், இது என்ன மானியக் கோரிக்கையா அல்லது வேறு விவாதாமா? நீங்கள் குற்றவாளிக்காக வாதாடவில்லை என்று சொல்லிக்கொண்டு நிறுத்துங்கள். (குறுக்கீடு). குற்றவாளிக்காக வாதாடவில்லை என்று சொல்லிக்கொண்டு நிறுத்துங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : குற்றவாளிக்காக வாதாடினார் என்று நான் எங்கும் பேசவில்லை. திரு. செல்லக்குமார் குற்றவாளிக்காக வாதாடினார் என்ற வார்த்தைகளை நான் எங்கும் சொல்லவில்லை. வாக்குப் பிரயோகமாக என்னுடைய உரையிலே எங்கும் இடம்பெறவில்லை. அவர் குறிப்பிட்ட குணசேகரன் என்பவர் எப்படிப்பட்டவர்; அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்; அவரிடமிருந்து 70,000 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்ற கருத்தைத்தான் சொன்னேன்.

பேராசிரியர் தீரன் அவர்கள் பேசும்போது - அவர் இன்றைக்கு அவைக்கு வரவில்லை. வேறு வேலையாக அவர் போயிருக்கிறார். பஞ்சாயத்து யூனியனுக்கு பூட்டு போடுகிற போராட்டத்திற்கு. இப்படிப்பட்ட போராட்டங்களில் காவல் துறை எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்து நாம்தான் ஒரு முடிவு செய்ய வேண்டும். எத்தனையோ போராட்டங்களை நடத்தலாம். பஞ்சாயத்து யூனியனுக்கு முன்னால் மறியல் செய்கிறோம் என்கின்ற அளவிற்கு போராட்டம் நடத்தலாம். தவறு நடந்திருக்கலாம். தவறுக்காக வக்காலத்து வாங்கவில்லை. பஞ்சாயத்து யூனியனைப் போய் பூட்டுப் போடுகிறோம் என்றால் என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இருந்தாலும்கூட அவருடைய போராட்டத்தினுடைய உணர்வை நான் மதிக்கிறேன். நோக்கத்தை நான் மதிக்கிறேன். அவர் இங்கே பேசும்போது, அவருடைய இயக்கத்தினர்மீது போடப்பட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்குவதாக சொன்னீர்கள்: எதுவும் வாபஸ் வாங்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் என்னிடத்திலே இருக்கிற குறிப்பின்படி 1994ஆம் ஆண்டு வரையில் - 1986 முதல் 1994 வரையில் - பாட்டாளி மக்கள் கட்சித் தோழர்கள் மீது போடப்பட்ட 722 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. இப்போது அல்ல: முன்பே திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இவை தவிர வேறு சில வழக்குகளை வாபஸ் வாங்குவதாக இருந்தால், அதற்கு மத்திய சர்க்காரினுடைய அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது. போக்குவரத்து கழகங்களின் சார்பில் சில வழக்குகள் விசாரணைக் குறித்து நோட்டீஸ் வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அதற்கான விவரங்களைத் தந்தால் அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவில்பட்டியிலே கலவரம் வெடித்தபோது காவல் துறையினர் கைகட்டிக் கொண்டிருந்ததாக திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். ஏனென்றால் நாங்கள் இங்கே தலையிட்டு நடவடிக்கை எடுத்தால் எங்கள்மீதே வழக்கு வரும்

என்று சொன்னதாகச் சொன்னார்கள். அவரே சொன்னார், வேறு வழியில்லாமல் இருதலைக்கொள்ளி எறும்பாக இருக்கிறார் முதலமைச்சர் என்று, அந்த நிலையையும் சொன்னார். எனக்காக இரக்கப்பட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலே திரு. சுப்பராயன் போல் இருக்கிறார்கள் என்கிற ஒரு நிம்மதி எனக்கிருக்கிறது. அதற்காக நான் ஆறுதல் அடைகிறேன். அவர் சொன்னார், காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காவிட்டாலும் என்மீது குற்றம் சாட்டுகிறீர்கள், நடவடிக்கை எடுத்து ஏதாவது நடந்துவிட்டாலும் நான் குற்றவாளியாக்கப்படுகிறேன். இந்த இரண்டுங்கெட்டான் சூழ்நிலையில், இரண்டும் கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை எனக்கிருக்கிறது என்பதை நீங்கள் யாரும் மறந்துவிடக் கூடாது. ஏன் அப்படி அவர்கள் இருந்தார்கள் என்றால், அவர்கள் தலையிட்டிருப்பார்களேயானால், அந்தக் கலவரம் பெரிதாக வெடித்து இன்னும் பல இடங்களிலே பரவக்கூடிய சூழ்நிலை வரக்கூடும் என்பதற்காகத்தான் அவர்கள் கைக்கட்டிக் கொண்டிருந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்றையும் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். தொழிலாளர்களுடைய கிளர்ச்சியில் போலீசார் ஏன் தலையிட வேண்டும்: ஏன் கைது செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். ஏன் அப்படிக் கேட்டார்களென்றால், தொழிலாளர்களைக் கைது செய்கிறார்கள் என்ற ஆத்திரத்திலே கேட்டார்கள். அதுவும், எடுத்த எடுப்பிலே, ஏன் முதலாளிகளைக் கைது செய்யவில்லை என்றும் கேட்டார்கள். முதலாளிகளை கைது செய்தாலும் போலீசாரின் தலையீடு என்றுதானே அர்த்தம். ஆனாலும், நான் நேற்றையதினம், மாலையிலே போலீஸ் அதிகாரிகளை வைத்துக் கொண்டு பேசினேன். திரு. சுப்பராயன் அவர்களுடைய பேச்சின் அடிப்படையிலே அவர்களிடத்திலே பேசினேன். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் போலீசார், போலீஸ் பணிகளான அடிப்பது, உதைப்பது, துப்பாக்கிப் பிரயோகம் செய்வது, கண்ணீர்ப் புகை உபயோகிப்பது என்று மாத்திரம் அல்லாமல், போலீசாரும் அந்த மாவட்ட அதிகாரிகளைப் போல, அமைதியை நிலைநாட்டுகின்றவர்களைப்போல, நடந்து கொண்டு, அவர்களையெல்லாம் அழைத்து பேசி, சமாதானத்தை உருவாக்க முயலலாம், போலீஸ் அதிகாரிகளும் முயலலாம் என்று சொல்லி,

அதைப் போலீஸ் அதிகாரிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றதொரு நல்ல உண்மையை, இந்தச் செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. வெங்கடசாமி அவர்கள் பேசும்போது, போலீஸ் துறையைப் புனரமைப்புச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். மனித நேயத்தோடு, மக்களுடைய குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். அதற்காக வேண்டி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி, மாநில மனித உரிமைக் கழகம், மனித உரிமைகள் ஆணையம் ஒன்றை ஏற்படுத்த 20-12-96-லே அரசு ஆணைப் பிறப்பித்துள்ளது என்பதை நீங்கள் அனைவரும் மிக நன்றாக அறிவீர்கள். மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோருக்கான வரம்புகளும், மற்றும் ஏனைய நிபந்தனைகளும் வரையறை செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. நைனார்சுந்தரம் அவர்களைத் தலைவராகவும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கே. எஸ். சாமிதுரை, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. அப்துல்கனி, திரு. ஆர். ரத்தினசாமி, டாக்டர் எம். சுசிலாராஜு ஆகியோரை உறுப்பினர்களாகவும் நியமித்து, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இனி, இப்படிப்பட்ட மனித உரிமை மீறல் காரியங்கள் எங்கு நடைபெற்றாலும், அவைகளை விசாரித்து, நியாயப்பூர்வமாக, அரசின் தலையீடு எள்முனையளவும் இல்லாமல், அதைப்பற்றிக் கருத்தறிவிக்க, நீதி வழங்க இந்த ஆணையம் செயல்படும் என்ற உறுதியையும் இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திருநெல்வேலி மாவட்டத்திலே, திருச்சிற்றம்பலம் கிராமத்தில் யாரோ ஒருவர் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற வதந்தியின் அடிப்படையில் முருகையன் என்பவர் கொலைக்கு ஆளானார் என்பதை திரு. சந்தானம் அவர்கள் இங்கே குறிப்பிட்டு, அவருடைய குடும்பத்திற்கு நிதியுதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொணட்டார். அதைப் பற்றிய விவரங்களை நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, கலந்து பேசி,

அதற்கு ஆவன செய்யப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். கொடியங்குளம் விசாரணைக் கமிஷன் அறிக்கை என்னவாயிற்று என்றும், சந்தானம் அவர்கள் கேட்டார்கள். கொடியங்குளம் சம்பவம் குறித்து, ஒரு தனி நபர் விசாரணைக் கமிஷன் அமைத்து, கடந்த கால அரசு விசாரணை செய்யத் தூண்டியது. ஆனால் அந்த விசாரணை போதுமானது அல்ல என்று பல கட்சிகளின் தலைவர்களும், பொதுமக்களும், நண்பர் கிருஷ்ணசாமி போன்றவர்களும் அன்றைக்குக் குரல் எழுப்பியதன் காரணமாக 27-6-1996 அன்று மத்திய அரசு தந்த ஒப்புதலின் அடிப்படையில், கழக அரசும், சி.பி.ஐ. அமைப்பதற்கு ஒப்புதலை அளித்து, 30-7-1996 அன்று சி.பி.ஐ.-யிடம் இந்த விசாரணை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தற்போது சி.பி.ஐ. விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதால், கோமதிநாயகம் கமிஷன், பழைய கமிஷன், அதனுடைய அறிக்கையை வெளியிடுவது நல்லதல்ல என்ற முறையில், அந்த அறிக்கை வெளியிடப்படாமல் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. மணி அவர்கள் நேற்றைக்கு, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, ஏராளமான குறைகளைச் சொன்னார்கள். அவர் எப்பொழுதும் குற்றஞ்சாட்டிப் பேசுகின்றவர் அல்ல. அவருடைய வயதும், அவருடைய பண்பும், அனுபவமும் அப்படி. எனவே, அவர் ஏராளமான குறைகளைச் சொல்லி, அவைகளையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதை வைத்து நான் விசாரித்த அளவில், அவர் குறிப்பிட்ட கமலந்தேவி என்பவரை அவரது கணவர் கொலை செய்தது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எப்.ஐ.ஆருடன் சரி என்று சொன்னார். அதை விசாரித்துப் பார்த்ததில், இதுகுறித்து, குற்ற எண் 386/93, பிரிவு 302 இந்திய தண்டனைச் சட்டப்படி இவரது கணவர் லாரன்ஸ் கைது செய்யப்பட்டிருக்கிறார். பிறகு, ஜாமீனிலே வெளிவந்து, தலைமறைவாகியிருக்கிறார் என்ற செய்தி எனக்குத் தரப்பட்டுள்ளது. அதைப்போலவே, அஞ்சுகிராமத்தில் நடந்த முவர் கொலை பற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எஃப்.ஐ.ஆருடன் சரி என்று சொன்னார். குற்ற எண் 483/96, பிரிவு 302. இந்திய

தண்டனைச் சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வழக்கிலே மொத்த எதிரிகள் 26 பேர். இதிலே 17 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 4 பேர் நேராக, நீதிமன்றத்திலே சரண் அடைந்திருக்கிறார்கள். 4-1-1997 அன்று குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டு விட்டது. எஃப்.ஐ,ஆருடன் நிற்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குழித்துறையிலே, கடைகளை நாசம் செய்ததைப் பற்றி எதுவும் நடவடிக்கை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு.. மணி அவர்கள் சொன்னார்கள். இந்தக் குற்றத்தினுடைய எண் 823/96-ல் வழக்கு, 436வது இந்திய தண்டனைச் சட்டப்படி, பதிவு செய்யப்பட்டு, 5 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குழித்துறைப் பகுதியிலே, கள்ளச் சாராயம் பற்றி திரு. மணி குறிப்பிட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், கள்ளச் சாராய வேட்டை நடத்தி, 953/96 மற்றும் 954/96 என்ற இரண்டு வழக்குகளைப் பதிவு செய்து, 4 வாகனங்களைக் கைப்பற்றி, 14 பேரை கைது செய்திருக்கிறார்கள் என்ற செய்தியை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருமனையிலே, 2 கற்பழிப்பு வழக்குகளைப் பற்றியும் திரு. மணி அவர்கள் கூறினார்கள். இதிலேயும், வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 3 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எஃப்.ஐ.ஆரோடு நிற்கவில்லை.

வள்ளியூரில் கொலை வழக்குப் பற்றி கூறினார்கள். அதிலேயும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, ஒருவர் கைது செய்யப்பட்டு, குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு, நீதிமன்றத்திலே நடந்து கொண்டிருக்கிறது.

இதற்கு அடுத்துதான் உச்சகட்டம் வரவிருக்கின்றது; பலருடைய கோரிக்கைகள், இங்கே வைக்கப்பட்ட ஆலோசனைகள், இவற்றை பற்றியெல்லாம் இதற்கு முன்பு, கடந்த ஆண்டு சொன்னதைச் செய்தோமா, இல்லையா என்று சொன்னால் தான் சொல்லப் போவதைச் செய்வார்களா, இல்லையா என்ற நம்பிக்கை உங்களுக்கு வரும். எனவே கடந்த ஆண்டில், 26-8-1996 அன்று, நான் இந்த மானியத்திலே பேசியபோது செய்யப்பட்ட அறிவுப்புகள் :

1976ஆம் ஆண்டு இளநிலை உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள், கண்காணிப்பாளர்கள் நிலைக்கு உயர்த்தப் படுவார்கள் என்று சொன்னேன். இது அறிவிப்பாகவே இல்லாமல், இந்த அறிவிப்பின்படி, அரசு ஆணை வெளியிடப்பட்டு, தகுதிவாய்ந்த 226 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறையினருக்கு வழங்கப்படும் சீருடை செலவுப் படி, ரூ. 25 என்பது, ரூ. 30 ஆக உயர்த்தப்படுமென்று அன்று சொன்னேன். அந்த அறிவிப்பின்படி, சீருடை செலவுப் படியும் ரூ. 30 ஆக உயர்த்தி 30-10-1996-ல், ஆணை வெளியிட்ப்பட்டு, இச்சலுகை இப்போது காவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஓட்டுநர்களுடைய துணைப் படி - டிரைவர்களுடைய துணைப் படி - ரூ. 40-லிருந்து, ரூ. 60 ஆக உயர்த்தப்படும் என்று அன்று சொன்னேன். அதன்படி, சலுகைகள் வழங்கி, 30-10-1996-ல் ஆணையிடப்பட்டு, திட்டம் அமல்படுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆயுத சேமப் படைப் பிரிவில் சிறப்பாகப் பணிபுரியும் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் ஊக்கத் தொகை உயர்த்தல் பற்றி, அன்றைக்குச் சொன்னேன். சேம ஆயுதப் படை - Armed Reserve காவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் செயல்திறன் ஊக்கத் தொகை ரூ. 3 ஆக இருந்ததை, ரூ. 10 ஆக உயர்த்தியும், தலைமைக் காவலர்களுக்கு ரூ. 5 ஆக இருந்ததை, ரூ. 15 ஆக உயர்த்தியும், 3-10-1996-ல் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, நடைமுறைக்கு வந்துவிட்டது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறையினரின் குடும்பத்திற்கும், சுகாதார நலத் திட்டத்தின்கீழ், மருத்துவ உதவி வழங்கப்படும் என்று அன்றைக்குச் சொன்னேன். தமிழ்நாடு காவலர் மருத்துவ நலத் திட்டத்தை, காவல் துறையினரின் குடும்பத்திற்கும் விரிவுபடுத்தி, 4-10-1996-ல் அரசாணை வெளியிடப்பட்டு, நடைமுறையிலே

இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வேலூரில் மாவட்டக் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் துணைக் காவல்துறைத் தலைவர் அலுவலகம் புதிதாகக் கட்டப்படுமென்று சொன்னேன். 20-10-1996-ல், அரசு ஆணை அதற்காகப் பிறப்பிக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து பொதுப்பணித் துறையால், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறை வீட்டுவசதி வாரியத்திற்கு, அவர்களுடைய பணிகள் மேம்பாடடைய, ஒரு கோடி ரூபாயிலிருந்து, 3 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்று அன்றைக்குச் சொன்னேன். தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகத்தால், 'உங்கள் சொந்த இல்லம்' என்ற திட்டத்தின்கீழ், காவலர்களுக்கு, இதுவரை வீடுகட்ட முன் பணமாக வழங்கப்பட்ட தொகை, ஒரு கோடி ரூபாய் என்று இருந்ததை, 3 கோடி ரூபாயாக உயர்த்தி, 20-12-1996-ல் ஆணையிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பெண் காவலர்கள், 15 ஆண்டுக் காலம் பணி முடித்த பிறகு, தலைமைக் காவலர்கள் பதவிக்குப் பதவி உயர்வு வழங்கப்படும் என்று அன்றைக்கு சொன்னேன். இதற்கான ஆணை, 3-10-1996 அன்றே வெளியிடப்பட்டு விட்டது. இதன் மூலம், 399 முதல்நிலைப் பெண் காவலர்கள், தலைமைப் பெண் காவலர்களாகப் பதவி உயர்த்தப்பட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நற்பணி சிறப்புப் படி வழங்கும் புதிய திட்டம் செயல் படுத்துதல்; இதன்படி, 15 ஆண்டுகள் நற்பணி முடிக்கும் காவலர்களுக்கு 5 ரூபாய் வீதமும், 20 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 7½ ரூபாய் வீதமும், 25 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 10 ரூபாய் வீதமும், 30 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 15 ரூபாய் வீதமும், 35 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 20 ரூபாய் வீதமும், சிறப்புப் படி வழங்கப்படும் என்று அறிவித்தேன். அதற்கான ஆணை, 25-10-1996-ல் வெளி யிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதாவது, 'நற்பணி' என்றால், 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் நல்ல பெயரோடு, அந்தக் காவல் துறையிலே பணியாற்றுகிற பணியாளர்கள் என்று பொருள்.

1989ஆம் ஆண்டு ஆயுத சேமப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியமர்த்தப்பட்ட தகுதிவாய்ந்த 395 உதவி ஆய்வாளர்களில் எஞ்சியுள்ள 85 பேருக்கும் குறிப்பிட்ட பயிற்சி அளிக்கப்பட்டு, சட்டம் - ஒழுங்குப் பிரிவுக்கு மாற்றப் படுவார்கள் என்று அன்றைக்கு அறிவித்தேன். ஆயுத சேமப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியாற்றி வரும் 85 உதவி ஆய்வாளர்களைப் பயிற்சிக்கு அனுப்புவது தொடர்பாக அக்டோபர் 1996-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அவர்களும் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ள அனைத்து நபர்களையும் சட்டம் - ஒழுங்கு பிரிவிற்கு மாறுதல் செய்வதற்கு ஏற்ற வண்ணம் பணி விதிகளுக்கான திருத்தங்களும் வெளியிடப்பட்டு விட்டன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட காலியாக உள்ள 454 காவல் பணிகள் உடனடியாக நிரப்பப்படும் என்று சொன்னேன். அதை அமல்படுத்த ஆணைப் பிறப்பிக்கப் பட்டுவிட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

1989ஆம் ஆண்டு காவலர் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் பெறாத - நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அடிக்கடி நம்முடைய திரு. சொக்கர் அவர்களும் மற்றும் நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்களும் திரு. சுப்பராயன் அவர்களும், திரு. அப்துல் லத்தீப் அவர்களும், திரு. திருநாவுக்கரசு அவர்களும் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தின்படி 1989ஆம் ஆண்டு காவலர் தேர்வில் தேர்ந்தெடுக்கப் பட்டு நியமனம் பெறாத - 1609 பேருக்கு அவர்கள் விண்ணப்பித்தால் உரிய விதிகளைத் தளர்த்தி நியமன உத்தரவு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும். (குறுக்கீடு). (ஸ்டாலின் பெயரை விட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள், சேர்த்துக் கொள்ளுங்கள், நீங்கள் சேர்த்துக்கொள்ளுங்கள்.) இந்த 1609

பேர்களில் 1070 பேர் குறிப்பிட்ட அதிகாரிகள் முன்னிலையில் தக்க சான்று ஆவணங்களோடு வருகை புரிந்தார்கள். அவர்களுள் 1022 பேர் மருத்துவத் தேர்வு மற்றும் பிற விசாரணைக்குப் பின் காவலர் பதவிக்குத் தகுதியுடையவர்கள் என்று கண்டறியப் பட்டார்கள். இதில் 610 பேருக்குச் சம்பந்தப்பட்ட விதிகளைத் தளர்த்தி அனுமதி உத்தரவு வழங்குவது குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. 412 பேருக்கு விதிவிலக்குத் தேவைப் படவில்லை. 610 பேருக்கு கல்வியிலே விதிவிலக்கு, வயதிலே விதிவிலக்குத் தேவைப்பட்டது. அந்த விதிவிலக்குகளையும் அளித்து 1022 பேருக்கு பணி வழங்கு ஆணைகள் வெளியிடப் பட்டுவிட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

5000 காவலர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் நடப்பாண்டிலும் அடுத்த ஆண்டிலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அன்றைக்குச் சொன்னேன். சீருடைப் பணியாளர்கள் வாரியம் துவங்கிய 1995ஆம் ஆண்டு அந்த ஆட்சியில் 10 ஆயிரம் காவலர்கள் தேர்வு முடித்த பின்னர் இவ்வளவு உயர்ந்த எண்ணிக்கையிலான அவர்களுக்கு ஒரே நேரத்தில் பயிற்சி அளிப்பது தொடர்பாக ஏற்பாடுகள் செய்ய இயலாமையால் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு முதல் பிரிவினர் 16-4-97 முதல் பயிற்சி பெற்று வருகிறார்கள். இந்த 6 மாத காலப் பயிற்சி முடிந்ததும் அடுத்தப் பிரிவினர் பயிற்சிக்கு அனுப்பப்பட வுள்ளார்கள். இத்தகை சூழ்நிலையில் அடுத்தக் கட்டக் காவலர்கள் தேர்வினை நடத்த உசிதமில்லையாதலால் இந்தக் காவலர் தேர்வு வரும் ஆண்டில் நடத்தப்படவுள்ளது. இதனைப்போல 1,100 உதவி ஆய்வாளர்களில் முதல் பிரிவினரான 500 பேர் மார்ச் 1997-ல் பயிற்சி முடித்துள்ளார்கள். எஞ்சியுள்ள 600 பேர் விரைவில் பயிற்சிக்கு அனுப்பப்படவுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தச் சூழ்நிலையில் உதவி ஆய்வாளர்கள் பதவிக்கான நேரடித் தேர்வுகளையும் உடனடியாக நடத்த உசிதமில்லை யாதலால் இத்தேர்வு நடப்பாண்டில் நடத்தப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

12 இடங்களில் இயங்கிவரும் புறக்காவல் நிலையங்களுக்கு புதிய காவல் நிலையங்கள் அமைப்பது குறித் அதற்கான அரசாணையும் அப்போதே வெளியிடப்பட்டு அமல்படுத்தப் பட்டுவிட்டது.

மீண்டும் காவல் துறை இயக்குநர் அலுவலகம் மெரினா கடற்கரையில் உள்ள பழம்பெரும் கட்டடத்தில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அன்றைக்குச் சொன்னேன். மெரினா கடற்கரையிலே உள்ள பழம்பெரும் காவல் துறை இயக்குநர் அலுவலகக் கட்டடத்தை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாகப் புதுப்பிக்க ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சம் ரூபாய்க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு விட்டது. அதற்கான ஒப்பந்தப் புள்ளியும் கோரப்பட்டிருக்கிறது. இடையிலே வழக்கு ஒன்றிருந்தது. தொன்மையான அந்தக் கட்டடத்தை மாற்றக்கூடாது என்று ஒருவர் வழக்கு போட்டிருந்தார். அந்த வழக்கு முடிவதற்காக நாம் காத்திருந்து நாமே அதைப் பயன்படுத்தப்போகிறோம், அந்தத் தொன்மையானக் கட்டடத்தைப் பாழாக்கப் போவதில்லை என்று சொன்ன பிறகு அந்த வழக்கு முடிந்துவிட்டது. எனவே விரைவில் அந்தப் பணி ஆரம்பம் ஆகும்.

திரு. ப. சபாநாயகம் தலைமையிலே அமைக்கப்பட்ட போலீஸ் கமிஷனின் பரிந்துரைகளில் நிறைவேற்றப்படாத பரிந்துரைகள் மீது மேல் நடவடிக்கை எடுப்பது பற்றி குறிப்பிட்டிருந்தேன். அதில் 100 பரிந்துரைகள் செய்யப் பட்டிருந்தன, 100-வது பரிந்துரை 12 உட்பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது. ஆகவே மொத்தம் 112 பரிந்துரைகள். அதில் 54 பரிந்துரைகள் மீது முடிவுகள் எடுக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள பரிந்துரைகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன இலாக்கா தனிப் பிரிவைக் கலைத்துவிட்டு அவர்களை மற்ற காவல் துறை பிரிவுக்கு மாற்றுவது சம்பந்தமாக சொன்னேன். 25-10-96-ல் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுவிட்டது.

தீயணைப்பு நிலையங்கள் 21 துவங்கப்படும் என்று சொன்னேன். 26-11-96-ல் அரசாணை வெளியிடப்பட்டு 21 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அடுத்து உத்தமர் காந்தி பெயரில் பதக்கம் வழங்குதல். கள்ளச்சாராயம் ஒழித்தல் குறித்து வெகுமதி 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று சொன்னேன். அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கலைக்கப்படுகிறது என்ற சொன்னேன். அவ்வாறு அரசாணை வெளியிடப்பட்டு விட்டது. இனி புதிய அறிவுப்புகளோடு என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று இருக்கிறேன். தமிழ்நாட்டில் தற்போது ஆய்வாளர்கள் வரையிலுள்ள காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 83,825 ஆகும். மேற்படி எண்ணிக்கையில் இதுவரை 25,791 காவல் பணியாளர்களுக்கு மட்டுமே குடியிருப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணியாளர்களுக்கு அந்த வசதியில்லை. ஆண்டு ஒன்றுக்கு 1,500 குடியிருப்புகள் வீதம்தான் கட்டப்படுகிறது. இது நம்முடைய இலக்கை நிறைவு செய்யாது என்பதற்காக இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 80 கோடி ரூபாய் செலவில் இனிமேல் 1,500 குடியிருப்புகளுக்குப் பதிலாக 2,500 குடியிருப்புகள் வீதம் காவல் பணியாளர்களுக்கு என்று கட்டித் தரப்படும். அது மாத்திரம் அல்லாமல், தமிழ் நாட்டிலே 98 இடங்களில் உள்ள 2751 காவலர் குடியிருப்புகளில் எல்லா காவல் குடியிருப்புகளுக்கும் ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவில் நவீன கழிப்பிட வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தொவித்துக் கொள்கிறேன்.

காவல் நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல், தமிழ்நாட்டில் மொத்தம் 1,323 காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 891 காவல் நிலையங்கள் அரசு கட்டிடங்களிலும் எஞ்சியுள்ள 432 காவல் நிலையங்கள் வாடகை கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. இந்த ஆண்டு முதற்கட்டமாக மேலும் 79 காவல் நிலையங்களுக்கு, கட்டிடம் கட்ட அனுமதிப்பது என்றும் மூன்று ஆண்டுகளில் கட்டி முடிப்பது என்றும் ரூ. 15 கோடி செலவு ஆகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய காவல் அலுவலகம். நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை அலுவலகத்தில் பழைய கட்டடம் 1992-ல் இடிக்கப்பட்டு விட்டது. தற்போது மாவட்ட காவல்துறை அலுவலகம் போதுமான வசதிகள் இல்லாத ஒரு கட்டடத்தில் இயங்கி வருகிறது. இது மாவட்டக் காவல் துறையின் சிறப்பான நிர்வாகத்திற்கு உகந்ததாக இல்லையென்பதால் மாவட்ட காவல் துறை அலுவலகம் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டுகின்ற பணி நடப்பாண்டில் தொடங்கப்படும்.

கோயம்புத்தூரில் காவல் ஆணையர் அலுவலகம் கட்டுதல், 1989-90-ல் கழக அரசு பொறுப்பிலிருந்தபோதுதான் கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் காவல் துணை ஆணையகங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், கோவையில் இதுவரை காவல் ஆணையர் அலுவலகத்திற்குத் தகுந்த கட்டிட வசதி இல்லை. நடப்பாண்டில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதற்கான கட்டிடங்கள் கட்டும் பணி துவக்கப்படும்.

காவல்துறையினர் சட்டம்-ஒழுங்கு, கொலை-கொள்ளை போன்ற அவசரத் தேவைகளின்போது விரைந்து செயல்பட ஏதுவாக இந்த அரசு பொறுப்பேற்றபின் இரண்டு கோடியே முப்பது இலட்சம் ரூபாய் செலவில் 224 புதிய வாகனங்கள் வாங்க ஆணையிடப்பட்டது. அதைத் தொடர்ந்து மேலும் 105 வாகனங்கள், மூன்று கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிக்குத் தற்போது வழங்கப்படும் உணவு முன்பணம் ரூ. 5,000, இது பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. தமிழ்நாடு காவல் ஆணையத்தின் (தமிழ்நாடு போலீஸ் கமிஷன்) சபாநாயகம் கமிஷன் செய்த பரிந்துரைகள் பலவற்றில் ஒன்றாகத் தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிக்கு வழங்கப்பட்டுவரும் உணவு முன் பணத்தை உயர்த்தவும் பரிந்துரை செய்தது. அதை ஏற்றி ரூ. 5,000 உணவு முன்பணம் என்பது ரூ. 25,000 ஆக நடப்பாண்டிலிருந்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதுகாப்புப் பணியிலே அவசரக் காலங்களிலும் பொது நிகழ்ச்சிகளின்போது ஈடுபடுகின்ற காவல் பணியாளர்களுக்குத் தற்போதைய விலைவாசி நிலவரத்தைக் கருத்திற்கொண்டு, இங்கே திரு. ரங்கநாதன் போன்றவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன அந்த உருக்கமான வேண்டுகோளையெல்லாம் ஏற்று, இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு உணவுப் படி ரூ. 16-லிருந்து ரூ. 25 என்றும் தலைமைக் காவலர் முதல்நிலைக் காவலர்களுக்கு ரூ. 20-லிருந்து ரூ. 30 என்றும், ஆய்வாளர் / உதவி ஆய்வாளர்களுக்கு ரூ. 30 லிருந்து ரூ. 45 என்றும் உயர்த்தப்படும்.

காவர்களுக்கு தற்போது உணவு மானியத் திட்டத்தின் அடிப்படையில் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் பாமாலின் எண்ணெய் ஆகியவை 50 விழுக்காடு மானியத் தொகையில் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. துவரம்பருப்பு கிலோ ஒன்றுக்கு 4 ரூபாய் வீதமும், உளுத்தம்பருப்புக்கு ரூ. 3 வீதமும், ரவை, மைதா ஆகியவைகளுக்கு ரூ. 1.50 வீதமும் இப்போது மானியத் தொகை வழங்கப்படுகிறது. தற்போதைய விலைவாசி ஏற்றத்தினைக் கருத்தில்கொண்டும் காவலர்களின் நலன் கருதியும் மானியத் தொகை கிலோ ஒன்றுக்கு, துவரம்பருப்புக்கு தற்போது உள்ளது ரூ. 4 என்பது இனிமேல் ரூ. 10 ஆக உயர்த்தப்படும். ரவை, மைதாவுக்கு தற்போது உள்ளது ரூ. 1.50 என்பது ரூ. 3.00 ஆக உயர்த்தப்படும்.

தமிழகக் காவல் துறையினருக்கு இதுவரை குடும்பக் கார்டுகள் வழங்கப்படுவதில்லை. கழக அரசு காவல் துறையிலுள்ள 80,000 பேர்களுக்கு குடும்பக் கார்டுகளை புதிதாக வழங்குவது என்றும் அவர்கள் அந்தக் கார்டுகளைப் பயன்படுத்தி ரேஷன் கடைகளில் தற்போது பொதுமக்களுக்கு மானிய விலையிலே மண்ணெண்ணெய் வழங்குவதைப் போல பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ரேஷனிலே அவர்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையிலே தரப்படும். அதற்கான ரேஷன் கார்டுகள் அவர்களுக்கு தனியாக வழங்கப்படும்.

அதைப்போல, தமிழ்நாடு அரசு காவலர் நல நிதிக்கு மானியத் தொகை ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 25 இலட்சமாக உயர்த்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இசைக்குழு, தமிழ்நாடு காவல்துறை இசைக்குழுவில், இப்போது பேண்ட் மாஸ்டருக்கு ரூ. 50; இனிமேல் ரூ. 100 வழங்கப்படும். உதவி பேண்ட் மாஸ்டருக்கு இப்போது ரூ. 25; இனிமேல் 75 ரூபாயாக சிறப்பு ஊதியம் வழங்கப்படும். தலைமைக் காவலர்/ஹவில்தார்களுக்கு இப்போது 25 ரூபாய்: இனிமேல் 60 ரூபாயாக வழங்கப்படும். காவலர் நாயக்/லான்ஸ் நாயக் இவர்களுக்கு இப்போது 15 ரூபாய் என்பது இனிமேல் 40 ரூபாயாக வழங்கப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கம் பெற்றவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திரப் படி உயர்த்துதல். மாதப்படி இப்போது 20 ரூபாய் என்பது இனிமேல் 40 ரூபாயாக உயர்த்தப்படும். உள்ளூர் தலைமைக் காவலர் மாதப்படி ரூ. 25 என்பது ரூ. 50 ஆகவும், ஆயுதப்படை நாயக் / தலைமைக் காவலர் மாதப்படி ரூ. 25 என்பது ரூ. 50 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

வீரதீரச் செயல்களில் காயமடையும் / மரணமடையும் காவல் துறையினருக்கு வழங்கப்படும் கருணைத் தொகையினை அதிகரிக்க வேண்டுமென்று மிகுந்த கருணையோடு திரு. ரங்கநாதன் அவர்கள் நேற்று நீண்டநேரம் பேசியிருக் கிறார்கள். வீரமரணம் அடைவோருக்கு இதுவரையில் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இனிமேல் இரண்டு இலட்சம் ரூபாயாக - அவர் 1½ இலட்சம் ரூபாய்தான் கேட்டார் (மேசையைத் தட்டும் ஒலி) 1½ இலட்சம் வழங்க வேண்டுமென்று சொன்னார். அது இரண்டு இலட்சமாக வழங்கப்படும்.

செயல்பட முடியாத அளவுக்கு நிரந்தர ஊம் அடைவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூ. 20 ஆயிரம் என்பது 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி). படுகாயம் அடைவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூ. 5 ஆயிரம் என்பது 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். சாதாரணக் காயம் அடைவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூ. 3 ஆயிரம் என்பது 5 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல்துறையிலே, வான் தந்திப் பிரிவில் பணியாற்றும் நாயக்குகள் பல ஆண்டுகளாக எவ்விதப் பதவி உயர்வும் இல்லாமல்

தேக்க நிலையிலே இருக்கிறார்கள். இதனால் அவர்களது ஆர்வம் குன்றுவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதைக் கருத்திலே கொண்டு, 10 சிறப்புக் காவல் அணிகளிலும் மற்றும் ஒரு படைப் பயிற்சி மையத்திலும் 90 நாயக் பதவிகள் ஹவில்தார் பதவிகளாக நிலை உயர்த்தப்படும்.

நான் ஏற்கெனவே அப்பழுக்கற்ற பணிபுரிந்த காவலர் களுக்கு சிறப்புப்படி, 10 ஆண்டுகள் என்றால் எவ்வளவு; 15 ஆண்டுகள் என்றால் எவ்வளவு; 20 ஆண்டுகள் என்றால் எவ்வளவு என்று சொன்னேன். சென்ற ஆண்டு சொல்லி, இந்த ஆண்டு நிறைவேற்றியிருக்கிறோம். இப்போது அறிவிப்பது இன்னும் புதிய அறிவிப்பு.

15 ஆண்டுகள் நற்பணி புரிந்த காவலர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு தரப்படுகிற சிறப்புப்படி - அலவன்ஸ் - 15 ஆண்டுகள் நற்பணி முடித்தவர்களுக்கு ரூ. 5; 20 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 7.50; 25 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 10; 30 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 15; 35 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 20; என்று இப்போது இருக்கிறது. இனிமேல், 15 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 15; 20 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 20; 25 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 25; 30 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 30; 35 ஆண்டுகள், கடைசிவரை நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 40 என்ற வீதத்திலே வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

15 ஆண்டுக்காலம் பணியாற்றி பதவி உயர்வு கிடைக்காமல் உள்ள காவலர்களை ஊக்கப்படுத்தவும், அவர்களுடைய பணித் திறனை மேம்படுத்தவும், ஏற்கெனவே இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மகளிர் காவலர்களுக்குப் பதவி உயர்வு அளித்ததைப் போலவே, ஆண் காவலர்களுக்கும் பதவி உயர்வு கொடுக்க அரசு முடிவு எடுத்துள்ளது. ஆண்கள் எல்லாம் கைத்தட்டலாம். (மேசையைத் தட்டும் ஒலி). 10 ஆண்டுக்காலம் பணியாற்றிய இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல்நிலைக்

காவலர்களாகப் பதவி உயர்த்தப்படுவார்கள். 15 ஆண்டுக்காலம் முதல்நிலைக் காவலர்களாக பணியாற்றியவர்கள் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்த்தப்படுவார்கள். இதனால் மொத்தம் 26 ஆயிரம் காவலர்கள் பயனடைவார்கள்.

மதுரை மாநகருக்கு மேலும் ஒரு ஆயுத சேமப்படைப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டும், அங்கே நடைபெறுகின்ற கோவில் திருவிழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் இவைகளுக்குத் தகுந்த பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என்பதாலும், தற்போதுள்ள 10 காவல் படைப் பிரிவுகளைக் கொண்டு இவை அனைத்திற்கும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை முறையாக இயற்றுவதில் எற்படும் சிரமங்களைக் கவனத்திற்கொண்டும், மதுரை மாநகரக் காவல் பணியினை வலுப்படுத்திட வேண்டியது மிகவும் அவசியமென அரசு கருதுகிறது. அதன் அடிப்படையில், கூடுதல் சேமப்படை ஒன்றினை மதுரை மாநகரில் ஏற்படுத்திட முடிவெடுக்கப் பட்டுள்ளது.

தென்மாவட்டங்களில் அவ்வப்போது நடைபெற்று வருகின்ற இனக் கவலவரங்களால் ஏற்படும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை உடனுக்குடன் சமாளிப்பதற்குத் தேவையான அளவில் காவல் படையினரை, உரிய நேரத்தில் தேவைப்படும் இடங்களுக்கு அனுப்ப ஏதுவாக காமராசர் மாவட்டத்தில் சிவகாசி நகரினைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு சிறப்புக்காவல் அணியின் பிரிவு ஒன்றை அமைத்திட திட்டமிடப் பட்டுள்ளது.

இப்புதிய அணி அமைப்பின் காரணமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குத் தொடரும் செலவினம் 4 கோடியே முப்பது இலட்சம் ரூபாய் என்பதை நினைவூட்டுகின்றேன். தொடராச் செலவினம் ஐந்து கோடி ரூபாய்.

இந்தக் காவலர் குடியிருப்புகளுக்குத் தனி மீட்டர் பொருத்துவது பற்றி இங்கே பேசப்பட்டது. ஏற்கெனவே பல முறை திரு. சொக்கர் பேசியிருக்கிறார். கடந்த ஆண்டு திரு. ஸ்டாலின் பேசியதை நினைவூட்டி நேற்றைக்கு திரு ரங்கநாதன் பேசினார். திரு. திருநாவுக்கரசு அவர்களும் இங்கே நினைவூட்டினார்கள்.

லத்தீப் அவர்களும் மற்றம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய பழனிசாமி அவர்களும் இங்கே குறிப்பிட்டிருக் கிறார்கள். இவைகளையெல்லாம் மனதில் வைத்து ஒவ்வொரு காவலர் குடியிருப்பிலும் தனித்தனி மீட்டர்களைப் பொருத்தி மின் அளவினைக் கணக்கிட வகை செய்வதே நல்லது என்று கருதி, தற்போது தமிழகத்திலே 22,717 காவலர் குடியிருப்புகள் இருக்கின்றன. இதில் கடந்த பல ஆண்டுகளிலே காவலர் குடியிருப்புகளுக்குத் தனி மீட்டர் வைக்கப்பட்டது 8,785 குடியிருப்புகளுக்குத்தான். இன்னும் 13,932 குடியிருப்புகள் பாக்கி இருக்கின்றன.

இவைகளுக்கெல்லாம் ஆண்டுதோறும் இத்தனை குடியிருப்பு என்று எண்ணலாமா என்று பார்த்து, வேண்டாம் 13,932 குடியிருப்புகளுக்கும் தனி மீட்டர் பொருத்த, ஒரேயடியாக உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு 4 கோடியே 18 இலட்சம் ரூபாய் ஆகும். ரொம்ப குறைவுதான்.

புதிய காவல் சரகம் தோற்றுவித்தல், மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல் - மன்னர் திருமலை, வைகை-வீரன் அழகுமுத்து ஆகிய மாவட்டங்களில் எழும் சட்டம்-ஒழுங்கு போன்ற காவல்துறை பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் காவல்துறை கவனிக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, இம்மாவட்டங்கள் அடங்கிய சரகங்கள் சீரமைக்கப்படுகின்றன. மதுரை சரகம்: மதுரை மாவட்டம், காமராசர் மாவட்டம்; இராமநாதபுரம் சரகம்: இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்முத்துராமலிங்க தேவர் மாவட்டம்; திண்டுக்கல் சரகம்: திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், வீரன் அழகுமுத்து மாவட்டம். இந்தச் சீரமைப்பின் பலனாக திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய சரகம் காவல்துறை துணைத் தலைவர் தலைமையிலே உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கமிஷனர்களைப் பற்றிச் சொன்னார்கள். சேலத்திற்கு இன்னும் புதிய போலீஸ் கமிஷனர் வரவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள். அங்கு மாத்திரம் அல்ல,

எல்லா இடங்களிலும் இப்போது வேகமாக வளர்ந்துவரும் நகரங்களாகிய திருச்சி, சேலம், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளை எல்லையாகக் கொண்டும் அங்கு பெருகி வரும் குற்றங்கள், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், போக்குவரத்து நெரிசல் முதலியவற்றை அவ்வப்போது கவனித்து பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைய வேண்டுமென்ற நோக்கத்திலும் காவல் ஆணையகங்களும் இந்த ஆண்டு ஜூன் முதல் தேதியிலிருந்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புறக்காவல் நிலையங்களை முழுக் காவல் நிலையங்களாக அமைக்க வேண்டுமென்று பல உறுப்பினர்களும் இன்றும் இதற்கு முன்பும் என்னிடத்திலே கடிதங்கள் மூலமாக பரிந்துரைகளைச் செய்திருக்கின்றார்கள். தற்போது தமிழ்நாட்டிலுள்ள புறக்காவல் நிலையங்களுடைய எண்ணிக்கை 134. இதில் பின் வரும் இடங்களில் புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்:

சிதம்பரனார் மாவட்டம் - தருவைகுளம்; காமராசர் மாவட்டம் - சூலக்கரை; ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம் - பாமணி; எம்.ஜி.ஆர். மாவட்டம் திருநின்றவூர்; வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் - தக்கோலம்; சிதம்பரனார் மாவட்டம் கடல்குடி; விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் - சிறுபாக்கம்; அண்ணா மாவட்டம் - கேளம்பாக்கம்; நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் - மூன்றடைப்பு; மதுரை மாவட்டம் - எம். கல்லுப்பட்டி; திண்டுக்கல் - மன்னர் திருமலை மாவட்டம் - சுவாமிநாதபுரம்; திருவண்ணாமலை, சம்புவராயர் மாவட்டம் - வானாபுரம்; கோயம்புத்தூர் மாவட்டம், செட்டிப்பாளையம்; எம்.ஜி.ஆர். மாவட்டம் - பொதட்டூர்பேட்டை.

புதிய காவல் நிலையங்களை அமைத்தல். திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வேண்டுகோளின்படி கோவை, அனுப்பர்பாளையம், புதிய காவல் நிலையம்; பவானி, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் வேண்டுகோளை ஏற்று, பெரியார் மாவட்டத்தில் பவானி டிரான்ஸ்போர்ட் என்கிற இந்த இடத்தில்

புதிய காவல் நிலையம்; திருப்போரூர் திரு. ஜி. சொக்கலிங்கம் வேண்டுகோளை ஏற்று அண்ணா மாவட்டத்தில் மானாமதி; தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. வைத்தியலிங்கம் மற்றும் மத்திய இணை அமைச்சர் திரு. பாலு இவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அண்ணா மாவட்டத்தில் நீலாங்கரை; திரு. இராசேந்திரன் என்கிற தீரன், ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தில் இந்தூர்.

திரு. டி. மணி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடையாலூமூடு என்ற இடத்தில் இருந்த புறக்காவல் நிலையத்தையே மூடிவிட்டார்களே என்று கேட்டார்கள்; அதற்குப் பிராயச்சித்தமாக அங்கே மீண்டும் புறக்காவல் நிலையம் வரும் என்று சொல்லவில்லை; புறக்காவல் நிலையத்தையே முழுமையான காவல் நிலையமாக அமைக்க முடிவு எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ராஜ்குமார் மன்றாடியார் வேண்டுகோளுக்கிணங்க பெரியார் மாவட்டத்தில் வெள்ளோடு :

பால்வளத்துறை அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் காட்டூர் - அமைச்சர்கள் பெயர்களை எல்லாம் சொல்வதற்குக் காரணம் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்கள்தானே?

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர், சி. ஆர். இராமச்சந்திரன், வேண்டுகோளுக்கிணங்க வடவள்ளி;

மீன்வளத்துறை அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க சிதம்பரனார் மாவட்டத்தில் ஆத்தூர்;

சட்டமன்றப் பேரவைத்தலைவர் (சிரிப்பு) அன்புக் கட்டளைக்கு இணங்க மதுரை மாநகரில் கே. புதூர்;

திருத்தணி இ.ஏ.பி. சிவாஜி, வேண்டுகோளுக்கிணங்க எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருத்தணி போக்குவரத்து, அதாவது டிரான்ஸ்போர்ட் போலீஸ் ஸ்டேஷன்;

நம்முடைய திருநாவுக்கரசு - நம்முடைய என்றால் பயமாக இருக்கிறது. பெயரோடு சொல்வதற்கு; (சிரிப்பு) திருநாவுக்கரசு, அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜெகதாப்பட்டினம்;

காமராசர் மாவட்டத்தில், வணிகவரிகள் துறை அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க மல்லாங்கிணறு; அவர் சொந்த ஊரிலேயே வைத்துக் கொள்கிறார்;

இராஜாஜி மாவட்டத்தில் கந்தசாமி, எம்.பி., (இராசிபுரம் டி.எம்.சி) அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க மங்களபுரம்;

இராமநாதபுரம் மாவட்டத்தில் தங்கவேலன் வேண்டு கோளுக்கிணங்க திருப்புல்லாணி;

நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் மோகனதாசன் வேண்டுகோளுக்கிணங்க வைத்தீஸ்வரன்கோயில்;

இவை தவிர மற்றும் துறையின் மூலமாக வைக்கப் படுகின்ற காவல் நிலையங்கள் -

சிதம்பரனார் மாவட்டம் நாரைக்கிணறு, கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு, மதுரை மாவட்டம் கூடலூர் தெற்கு, சென்னை, கொளத்தூர், பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம், தளவாய் ஆகியவைகள்.

அடுத்து தீயணைப்பு நிலையங்கள் -

செங்கற்பட்டு தமிழ்மணி வேண்டுகோளுக்கிணங்க அண்ணா மாவட்டம்; திருக்கழுக்குன்றம்;

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், பள்ளிப்பட்டு அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் பள்ளிப்பட்டுநகர்;

பூந்தமல்லி சுதர்சனம் வேண்டுகோளுக்கிணங்க பூந்தமல்லி, எம்.ஜி.ஆர். மாவட்டம்.

இராதாபுரம் அப்பாவு, வேண்டுகோளுக்கிணங்க - எல்லாம் நீங்களாகவே வருகிறீர்கள்; திசையன்விளை, நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்;

மோகனதாசன், பூம்புகார் வேண்டுகோளுக்கிணங்க நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் பூம்புகார்;

துரைசாமி, வரகூர் வேண்டுகோளுக்கிணங்க, வேப்பூர், பெரம்பலூர் - திருவள்ளுவர் மாவட்டம்;

திரு. சுப. தங்கவேலன் வேண்டுகோளுக்கிணங்க சாயல்குடி, இராமநாதபுரம் மாவட்டம்;

துரை. சந்திரசேகரன், திருவையாறு வேண்டுகோளுக் கிணங்க தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு;

கோமதி சீனிவாசன், வலங்கைமான் வேண்டுகோளுக் கிணங்க தஞ்சை மாவட்டத்தில் வலங்கைமான்;

வீட்டுவசதித் துறை அமைச்சர் மற்றும் ந. பாண்டுரங்கன், பெரணமல்லூர் வேண்டுகோளுக்கிணங்க திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டத்தில் சேத்துப்பட்டு;

உணவு அமைச்சருடைய வேண்டுகோளுக்கிணங்க திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்தில் லால்குடி;

பெருந்துரை நா. பெரியசாமி வேண்டுகோளுக்கிணங்க பெரியார் மாவட்டத்தில் பெருந்துரை;

திருப்பூர் சப்பராயன் வேண்டுகோளுக்கிணங்க - எத்தனை வேண்டுகோள்கள், கோவை மாவட்டத்தில் திருப்பூர் தெற்கு;

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் வேண்டுகோளுக் கிணங்க பெரியார் மாவட்டத்தில் அந்தியூர்;

வேலூர் ஞானசேகரன் கோபத்திற்கிணங்க, வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் ஒடுக்கத்தூர்;

உப்பிலியாபுரம் கருப்பசாமி வேண்டுகோளுக்கிணங்க, உப்பிலியாபுரம், திருச்சி - பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்;

அப்துல் லத்தீப், வாணியம்பாடி அவர்களுடைய சீற்றத்திற் கிணங்க, கள்ளிக்குடி;

வீட்டுவசதித் துறை அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க, கீழ் பென்னாத்தூர், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்;

திருநாவுக்கரசு வேண்டுகோளுக்கிணங்க அறந்தாங்கி, தீயணைப்பு நிலையம், ஆவுடையார் கோயில்;

அசோகன், திருவாரூர் வேண்டுகோளுக்கிணங்க வேளாங்கண்ணி;

இ.ஏ.பி. சிவாஜி வேண்டுகோளுக்கிணங்க பேரம்பாக்கம், எம்.ஜி.ஆர். மாவட்டம்;

குழந்தை தமிழரசன், விருத்தாச்சலம் வேண்டுகோளுக் கிணங்க மங்கலம்பேட்டை, தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்;

டி. மணி, விளவங்கோடு வேண்டுகோளுக்கிணங்க கொல்லங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம்;

சிவபுண்ணியம், மன்னார்குடி அவர்களுடைய வேண்டு கோளுக்கிணங்க ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தில் கூத்தாநல்லூர்;

தீரன் என்கின்ற இராசேந்திரன் வேண்டுகோளுக்கிணங்க பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தில் செந்துறை;

ஆகவே காவல் துறையிலே ஆரம்பித்து, தீயை அணைக்கும் துறையிலே வந்து முடித்துவிட்டேன். தீ அணையட்டும் என்று கூறி இந்த அளவில் அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணி 2-10 ஆகிவிட்டது. இனிமேல் ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்). அதிகம் பேர் எழுந்து நிற்கிறீர்கள். எவ்வளவு சலுகைகள் முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். இன்னும் கேட்டுக் கொண்டே இருக்கிறீர்களே. (குறுக்கீடுகள்). பாருங்கள், எத்தனை பேர்? (குறுக்கீடுகள்). முதலமைச்சர் அவர்களிடம் தனியாகக் கேட்டுக் கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இராசிபுரத்தில் புறக்காவல் நிலையம் வேண்டுமென்று என்னிடம் கேட்கப்பட்டிருக்கிறது. என்னுடைய உரையில் அது விடுபட்டுவிட்டது. நிச்சயமாக அதையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்கிறேன்.



உரை : 18 நாள் : 25.05.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல அரிய கருத்துரைகளை இங்கே வழங்கி இருக்கின்றார்கள். வழக்கம்போல் நான் நீண்ட நேரம் இவற்றுக்கெல்லாம் விளக்கம் அளிக்க முடியாத நிலையில், உடல் நலிவோடு இந்த மாமன்றத்தில் நின்று கொண்டிருக் கின்றேன். கடந்த இரண்டு நாட்களாகக் கடும் காய்ச்சல். பேசவே முடியாத அளவிற்குக் குரல் நிலை. இருந்தாலும் பதில் உரையை ஒத்தி வைக்கக்கூடாது என்கின்ற முனைப்போடு மருத்துவர்கள் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக பதில் உரைக்கு என்னைத் தயார்படுத்திக்கொண்டு, இயன்ற வரையில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

இந்த மானியக் கோரிக்கை புத்தகத்தில் உள்ள சில குறிப்புகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் செல்லக்குமார் அவர்களும், திருநாவுக்கரசு அவர்களும், குமாரதாஸ் அவர்களும் ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். அகில இந்திய சராசரி, ஒரு இலட்சம் மக்களுக்கு 134 காவலர்கள் என்று இருக்கும் போது, தமிழ்நாட்டில் 127 காவலர்கள்தான் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அதுகூட நாங்களே கொடுத்த குறிப்புத்தான். அதை மறைக்க வேண்டுமென்று கருதாத காரணத்தால் அந்தக் குறிப்பை கொள்கை விளக்கப் புத்தகத் திலேயே வெளியிட்டு இருக்கின்றோம். ஒருவேளை கொடுக்கா விட்டாலும் நீங்களே எப்படியும் கண்டுபிடித்துப் பேசினாலும் பேசுவீர்கள். இருந்தாலும் ஒன்றை நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகின்றேன். ஆந்திர மாநிலத்திலே ஒரு இலட்சம் மக்களுக்கு சராசரி காவலர்கள்

101 பேர்தான். கர்நாடகத்திலே 118 பேர்தான். கேரளாவிலே 124 பேர்தான். பீகாரில் 84 பேர்தான். மத்தியப் பிரதேசத்தில் 124 பேர்தான். ஒரிசாவில் 99 பேர்தான். உத்திரப்பிரதேசத்தில் 103 பேர்தான். மேற்கு வங்கத்தில் 108 பேர்தான். ராஜஸ்தானில் 119 பேர்தான். இந்தக் கணக்கை எல்லாம் காட்டி, இதற்கு மேல் உயர்த்த முடியாது என்று நான் சொல்ல மாட்டேன். மேலும் உயர்த்த வேண்டும். இங்கே 127 என்று இருப்பது போதாது. மேலும் உயர்த்த வேண்டும் என்பதற்காகத் தான். இந்த ஆண்டுகூட 10 ஆயிரம் பேர் காவல்துறையிலே சேர்க்கப்பட இருக்கின்றார்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி). அதற்கான தேர்வுகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன என்பதையும் நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 7 கிராமங்களுக்கு ஒரு காவல் நிலையம் என்ற வகையில் அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, அது ரொம்ப சுலபம் தான் என்று சொன்னார்கள். எனக்கு வந்த ஆசையில், அவரைக் கொஞ்ச நேரம் உள்துறை அமைச்சராக உட்கார வைத்து அதைச் செய்து காட்டுங்கள் பார்க்கலாம் எனக் கேட்க வேண்டும் என்றுகூட ஓர் எண்ணம் ஏற்பட்டது. இப்போது கிட்டத்தட்ட தமிழகத்திலே 1300 காவல் நிலையங்கள் இருக்கின்றன. புறக்காவல் நிலையம், மகளிர் காவல் நிலையம் எல்லாவற்றையும் சேர்த்து. கிராமங்கள் என்று எடுத்துக் கொண்டால், வெறும் பஞ்சாயத்துக் கிராமங்கள் அல்லாமல் கிராமங்கள் என்ற நிலையிலே உள்ளவைகள் 58 ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன. இந்த 58 ஆயிரம் கிராமங்களுக்கும், 7 கிராமங்களுக்கு ஒரு காவல் நிலையம் என்றால், 8300-க்கும் மேற்பட்ட காவல் நிலையங்கள் தேவை. இது இப்போது இருப்பதைவிட 6 அல்லது 7 மடங்கு அதிகம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதெல்லாம் பெரும் மலைப்பைத்தான் நமக்கு உண்டாக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது.

இன்னொன்று, கடந்த காலத்திற்கும், இந்தக் காலத்திற்கும் உள்ள சில வேறுபாடுகளை திரு. திருநாவுக்கரசு, திரு. செல்லக் குமார் ஆகியோர் எல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். கொலைகள் என்ற அந்தக் குறிப்பில் 1995 ஆம் ஆண்டு 93 கொலைகளில் கண்டுபிடிக்கப்பட்டவை 54 ஆக இருக்க, 1997ஆம்

ஆண்டில் 99 கொலைகளில், கண்டுபிடிக்கப்பட்டது 48 தானா என்று கேட்டு, 50 சதவீதத்தைவிட இது குறைவு என்று இங்கே குறிப்பிட்டு, ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்றெல்லாம் அடுக்கு மொழியிலே திரு. செல்லக்குமார் இங்கே எடுத்துக் காட்டினார். ஆனால், நான் பதில்களாக அல்ல, ஒரு விளக்கத்திற்காகச் சொல்ல விரும்புகின்றேன். இதை எப்படிப் பார்க்க வேண்டும் என்றால், 1995 ஆம் ஆண்டில் உள்ள அந்தக் குறிப்பையும் நாம் பார்க்க வேண்டும். சென்ற ஆண்டு, 1996-97 ஆம் ஆண்டு, தரப்பட்ட அந்தப் புத்தகத்தையும் பார்த்தால், 1995 ஆம் ஆண்டிலே கொலைகள் 93, கண்டுபிடிக்கப்பட்டது 40 என்றுதான் இருக்கிறது. அந்த 40 இப்போது 54 ஆகியிருக்கிறது. காரணம், அதற்கு மேல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலத்தான் இப்போது 48 ஆக இருப்பது, இந்த ஆண்டிலே மேலும் அதிகமாகும் என்ற விளக்கத்தை அவருக்கும், அதைப்போலவே பேசிய மற்றவர்களுக்கும் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். 40, 54 ஆக ஆகியிருக்கிறது. இப்பொழுது 54 என்று சொல்லப்படுவது, 1995-ல் 40 ஆகத்தான் இருந்தது; கண்டுபிடிக்கப்பட்டவைகள். அது இப்போது 54 ஆக ஆகியிருக்கிறது. அதைப்போல 48 என்று இருப்பது இந்த ஆண்டில் மேலும் அதிகமாகும் என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெரிய திருட்டுக்கள் 17,349 என்று இருந்தது, இப்போது 18,511 என்று உயர்ந்துவிட்டது என்று திரு. செல்லக்குமார் இங்கே குறைபட்டுக் கொண்டார். இதை வரிசைப்படி பார்த்தால், 1962 ஆம் ஆண்டு 20,252 ஆக இருந்தது; 1963-ல் 19,622 ஆக இருந்தது; 1964-ல், 20,880 ஆக இருந்தது; 1965-ல் 20,007 ஆக இருந்தது; 1966-ல் 22,612 ஆக இருந்தது. இப்போது 18,511 ஆக இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நான் சொன்ன இந்த ஆண்டுகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற ஆண்டுகள் அல்ல என்பதையும் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்னொன்று, துப்பாக்கிச் சூட்டைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டு திரு. குமாரதாஸ் அவர்கள் வெகுவாக தன்னுடைய கண்டனத்தைத் தெரிவித்தார். 1997-லே 63 துப்பாக்கிப்

பிரயோகமா என்று கேட்டார். துப்பாக்கிப் பிரயோகம் திடீரென்று 63 ஆக ஆகிவிடவில்லை. இப்போது குறைந்திருக்கின்றது. 1997-லே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதற்கான காரணம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். மதக் கலவரம், ஜாதிக் கலவரம் இவைகளெல்லாம் வெகுவாக மூண்டெழுந்து, அப்போது ஏற்பட்ட கலவரங்களை அடக்குகின்ற சூழ்நிலையிலே துப்பாக்கிப் பிரயோகங்கள் தவிர்க்க முடியாமல் ஆகிவிட்டன.

1991 ஆம் ஆண்டு 33 துப்பாக்கிப் பிரயோகம்; 1992-ல் 67 துப்பாக்கிப் பிரயோகம்; 1993-ல் 63; 1994-ல் 23; 1995-ல் 32; 1996-ல் 24; 1997-ல் 63; 1998-ல் இந்த மாதம் வரையில் 5.

அதைப்போலவே காவல் நிலைய மரணங்கள் என்று எடுத்துக்கொண்டாலும் - 'லாக்-அப்' சாவு - அது வெகுவாகக் குறைந்து கொண்டே வந்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். 1995-ல் 19-ஆக இருந்த காவல் நிலைய மரண எண்ணிக்கை 1996, 1997-ல் முறையே 13. 16 என்ற அளவிலே குறைந்தது. 1998 ஆம் ஆண்டில் இதுவரையில் அப்படி காவல் நிலையத்திலே - போலீஸ் லாக்-அப்பில் ஒரு நிகழ்வுகூட ஏற்படவில்லை என்ற நிலையிலே (மேசையைத் தட்டும் ஒலி), என்னிடத்திலே இந்தப் பட்டியல் தரப்பட்ட வரையிலே இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சில குறைபாடுகளுக்கும் அல்லது குற்றச்சாட்டுகளுக்கும் நான் பதில் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். அந்தக் குற்றச்சாட்டுகள் சொல்லப்படும்பொழுது பிரயோகிக்கப்பட்ட வார்த்தைகளுக்குள் எல்லாம் நான் செல்ல விரும்பவில்லை. திரு. செல்லக்குமார் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன் என்று சொன்னார். பகடைக் காயாகக் காவலர்களை நான் பயன்படுத்து வதாகச் சொன்னார். நான் அவைகளுக்கு எல்லாம் பதிலுக்கு பதில் அளித்து ஒரு நல்லுறவைக் கெடுத்துக் கொள்ள விரும்ப வில்லை. இருந்தாலும் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்காவிட்டால், அதற்குப் பதிலே இல்லை போலும் என்று ஆகிவிடும் என்பதற்காக அதிலே சில விளக்கங்களை நான் அளிக்க விரும்புகின்றேன்.

தீயணைப்புத் துறையைப் பற்றிக் குறிப்பிட்டார். அதிலே ஒருவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டார். தீயணைப்புத் துறையிலே கருவிகள் வாங்கியதில் ரூ. 2 கோடிக்.கு அரசுக்கு இழப்பு ஏற்பட்ட வழக்கையொட்டி மாநில குற்றப் புலனாய்வுத் துறை விசாரணை செய்து வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில் ஹரிஹரன், வீரராகவன் ஆகிய இரண்டு அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்கள். இந்த வழக்கு விசாரணையின்போது தீயணைப்புத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் தாமாகவே முன்வந்து நீதிமன்றத்திலே பிரிவு 164 சி. ஆர். பி. சி.-ன் கீழ் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். இந்த வாக்குமூலத்தை ஆராய்ந்து அவர்களைக் குற்றவாளியாகக் கருத வேண்டாம் என்றும், சாட்சியாக ஏற்றுக்கொள்ளலாம் என்றும் மாநில குற்றப் புலனாய்வுத் துறை முடிவு செய்து, அரசுக்கு அறிக்கை அனுப்பியது. இதை அவரே அன்றைக்குச் சொன்னார். வழக்கு மேல் விசாரணையிலே இருக்கிறது. ஆகையால் தீயணைப்புத் துறையைச் சார்ந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கவில்லை. புலன் விசாரணையின்போது குற்றவாளியா, இல்லையா என்பதை உறுதி செய்துகொண்ட பின்புதான் நடவடிக்கை எடுக்க முடியும். மேலும் அந்த அதிகாரியின்மீது Floating pumps வாங்கிய விவகாரத்திலே மேலும் விஜிலென்ஸ் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இப்படிப்பட்ட விசாரணைகள் நடைபெறும்பொழுது அவர்களுடைய பதவி உயர்வைத் தடுத்திடத் தேவையில்லை என்ற ஒரு கொள்கை முடிவை இந்த அரசு எடுத்திருக்கிறது. ஏனென்றால் விஜிலென்ஸ் விசாரணை என்று போட்டு, அந்தக் காரணத்தைக் கொண்டே அவர்களுடைய பதவி உயர்வைத் தடுத்துவிடக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அது அவர்களை மிகவும் பாதிக்கும் என்பதற்காக, விஜிலென்ஸ் விசாரணை என்பதற்காக பதவி உயர்வு தடுக்கப்படத் தேவையில்லை என்ற ஒரு நிலையை எடுத்திருப்பதால்தான் இந்தச் சூழ்நிலையே தவிர, வேறு அல்ல.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட அதிகாரிமீது

விஜிலென்ஸ் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. விசாரணைக்கு உட்பட்டிருக்கின்ற ஓர் அதிகாரி அந்தத் துறையினுடைய தலைமைப் பொறுப்பை வகித்துக் கொண்டிருப்பார் என்று சொன்னால், அந்த விசாரணையிலே எப்படி உண்மை வெளிவர முடியும் என்பதுதான் என்னுடைய வாதம். என்வேதான் நான் கேட்டேன். அந்த அதிகாரியின்மீது, நீதிமன்றத்திலே வழக்கு தொடர வேண்டாம் என்று சொல்லவில்லை. தமிழக அரசின்கீழ் பணியாற்றுகின்ற குற்றப் புலனாய்வுத் துறைதான் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம், அவர் அப்ரூவர் - ஆக மாறிவிட்டார் என்று சொல்லியிருக்கிறது. அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு அதைத்தான் நான் மீண்டும் சொல்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் சொன்னேன். அந்த அதிகாரியும் அந்தத் துறையினுடைய தலைவராக இருந்து, அந்த விஜிலென்ஸ் அவர் மீது விசாரணை நடத்தும் என்று சொன்னால், சாட்சியங்களை அவர் கலைத்துவிட மாட்டாரா என்பதை முதலமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால் இதற்கு முன்னால் நடவடிக்கை எடுக்கப்பட்ட இரண்டு அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு முதலமைச்சர் சொன்ன காரணமும் அதுதான். அவர்கள் பணியிலே தொடருவார்கள் என்று சொன்னால், சாட்சியங்களை அவர்கள் கலைத்து விடுவார்கள் என்று நீதிமன்றத்திலே இந்த அரசின் மூலமாக வாதிடப்பட்டிருக்கிறது. எனவேதான் நான் சொல்கிறேன். விசாரணை நடைபெற்று உண்மை வெளிவருகின்ற வரை எப்படி அந்த அதிகாரி அந்தத் துறையினுடைய தலைவராக நீடிக்க முடியும் என்பதை இந்த மன்றத்திற்கு முதலமைச்சர் விளக்க வேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அவர் அந்த இலாகாவில் தலைவராக இருக்கிறார் என்ற காரணத்தினால், சாட்சியங்களைக் கலைத்து விடுவார் என்று சொல்வதற்கில்லை. ஏன் என்றால், அவர்களே சேர்ந்துதான் முதலிலே சாட்சியங்களாக ஆகி, சாட்சியம் அளித்திருக்கின்றார்கள். அதனால் அவர்கள்மீது, 'இவர்களை குற்றவாளிகளாகக் கருதவேண்டாம், சாட்சியாக ஏற்றுக்

கொள்ளலாம்' என்று குற்றப் புலனாய்வுத் துறையே முடிவு செய்து, அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பி உள்ளது. Vigilance enquiry என்பது யார் மீது வேண்டுமானாலும் போட்டுவிடலாம். யார்மீது வேண்டுமானாலும் விஜிலென்ஸ் விசாரணைக்காக உள்ள ஒரு குற்றச்சாட்டை யாரும் ஒரு மொட்டைக் கடுதாசி மூலமாகக்கூட உருவாக்கிவிடலாம். அதற்காக யாரையும் பழிவாங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் அரசு இந்த நிலையை எடுத்திருக்கிறது என்பதை முதலிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலேதான் இந்த விளக்கத்தை நான் தந்திருக்கின்றேன்.

மற்றொன்று, விபத்து ஏற்பட்டதாக Insurance பணத்தை ஏமாற்றிப் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை என்பது போன்ற ஒரு குற்றச்சாட்டை திரு. செல்லக்குமார் குறிப்பிட்டார். இது 1987, 1988 ஆம் ஆண்டு வாக்கில் நடைபெற்ற ஒன்று. சென்னை காவல் போக்குவரத்து புலன் விசாரணைப் பிரிவில் Traffic Investigation Wing விபத்து நடக்காமலேயே நடந்ததாக, காப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டார்கள். இதுகுறித்து, பாலச்சந்திரன், கோட்டி சுப்பிர மணியன், ஜானகிராமன், தேவசகாயம், ராமசாமி, கன்னியப்பன், இராமய்யன் ஆகிய 7 பேர் மீதும் ஊழல் தடுப்புப் பிரிவும், C.B.I. விசாரணையும் - 1993-லேயே C.B.I. விசாரணை - மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த C.B.I. விசாரணையின் காரணமாக உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, அதன் பிறகு அவர் நிர்வாகத் தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி படிகளைப் பெறுகிறார். அவர் சஸ்பென்டு செய்யப்பட்டார். தீர்ப்பாயத்திலே, அவர் முறையீடு செய்து கொண்டு தீர்ப்பாயத்தினுடைய உத்தரவுப்படி பணியிலே இருந்து வருகிறார். உதவி ஆய்வாளர்கள் ஜானகிராமன், தேவசகாயம், தலைமைக் காவலர் ராமசாமி இவர்கள் Retiring age ஓய்வுபெறும் வயதை அடைந்துவிட்ட காரணத்தினால், அதற்குள்ளாகப் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்பதற்காக அவர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் ஏதும் இப்போது நடைபெற்ற சம்பவம் அல்ல. இன்னொன்று, C.B.I. அறிக்கை அனுப்பினால், அதன்மீதுதான்

மாநில காவல்துறை நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர அறிக்கை அனுப்பாமல் இருக்கும்போது அதில் எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது. இதுவரையிலே C.B.I. அவர்களைப்பற்றி எந்த அறிக்கையும் அனுப்பவில்லை என்பதை C.B.I. விசாரணையிலே அதிக அக்கறை உள்ள நண்பர்களுக்கு எல்லாம் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட் டிருக்கின்றேன்.

இன்னொன்று, சேலம் கோர்ட் நிகழ்வினைப்பற்றி திரு. செல்லக்குமார் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதிலே விரிவாகச் செல்ல விரும்பவில்லை. விரிவஞ்சி விடுக்கின்றேன் என்றால் அந்த வழக்கு ஏன் ஏற்பட்டது என்பதைப்பற்றி யெல்லாம் நான் விளக்கமாகப் பேச விரும்பவில்லை. அமைச்சர் ஒருவர் மீது ஒரு குற்றச்சாட்டு, பயங்கரமான குற்றச்சாட்டு. பல விளக்கங்கள் அளிக்கப்பட்ட பிறகும் திரு. செல்லக்குமார் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டை திரும்பத் திரும்பச் சொன்னார். அது, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2 கோடி ரூபாயைக் கையாடல் செய்துவிட்டார் என்பதாகும். அப்படி ஒரு திட்டமே அங்கு நிறைவேற்றப்படவில்லை. 2 கோடி ரூபாயைக் கையாடல் செய்யவும் இல்லை என்று வேளாண்மைத் துறை அமைச்சர் பல விளக்கங்கள் அளித்த பிறகும், நான் நிரூபிக்கத் தயார் என்று திரும்பத் திரும்ப செல்லக்குமார் அவர்கள் குறிப்பிட்ட காரணத்தினாலே வேளாண்மைத் துறை அமைச்சர் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, வழக்கு போட நேரிட்டது. அந்த வழக்கு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த வழக்கிற்குச் சென்றபோது, ஊர்வலமாகச் சென்று, ஊர்வலமாகச் சென்ற நிலையிலே வளாகத்திற்குள்ளே தகராறு ஏற்பட்டு - அந்தத் தகராறு நடைபெற்று இருக்கக்கூடாது என்பதிலே எனக்கு இருவிதமான கருத்தே கிடையாது - எந்தப் பக்கத்திலே இருந்து தகராறுக்கான சூழ்நிலை ஏற்பட்டு இருந்தாலும் அது வருந்தத் தக்கது, கண்டிக்கத்தக்கது என்பதை நான் அப்பொழுதே சொல்லியிருக்கின்றேன். எனவே, இவைகள் எல்லாம் எந்த அடிப்படையிலே எந்த மன உணர்வுகளின் காரணமாக ஏற்பட்டவை என்பதை எண்ணிப்பார்த்தால், அந்த உணர்வுகளி

லிருந்து நம்மை மீட்டுக் கொள்வோமேயானால், இத்தகைய சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படாது என்பதை மாத்திரம் நான் மிகுந்த பணிவன்போடு எடுத்துகாட்ட விரும்புகிறேன்.

கொடுங்கையூர் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். திரு. செல்லக் குமாரும் சொன்னார்; அநேகமாக, பேசிய அத்தனை பேரும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. சுப்பராயன் உட்பட அத்தனை பேரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. சுப்பராயன் அவர்கள்கூட ஒரு விபத்திலேயிருந்து ஒரு குழந்தையைக் காப்பாற்றிய காசிபாண்டியனைப்பற்றிக்கூடக் குறிப்பிட்டிருக் கின்றார்கள். காசிபாண்டியனுக்குக்கூட ஏதோ ஓரளவுக்கு சிறு தொகை வெகுமதியாக அளிக்கப்பட்டிருக்கின்றது. அது போதுமானது அல்ல என்ற குறை இருந்தாலும்கூட அது பரிசீலிக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொடுங்கையூரிலே வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்ட சம்பவம் கோவை துணை ஆய்வாளர் சந்திரசேகரன் சட்டம் ஒழுங்குப் பணியிலே திறமையாகப் பணி ஆற்றிய தன்மை, இவைகள் மாத்திரம் அல்ல, இவைகளைப் போலவே தீவிர வாதிகளை அடக்குவதிலும், மற்றும் தீவிரவாதிகளைக் கண்டு பிடிப்பதிலும், இதுபோன்ற சோதனைகளை, உயிருக்குத் துணிந்து சென்று தங்களுடைய திறமையைக் காட்டிய வகையிலும் தகுதி வாய்ந்தவர்கள் யார், யார் இருக்கின்றார்களோ அவர்களுடைய பெயர்கள் எல்லாம் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டுக்கான அண்ணா பதக்கம் வழங்கும் விழாவிலே அவர்கள் எல்லாம் கௌரவிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. தாமரைக்கனி வரவில்லை. இருந்தாலும் அவர் சொன்னது ரெக்கார்டில் இருக்கும். ஆகவே பதில் சொல்கின்றேன். போலிக் கையெழுத்திட்டு, போலி ஆவணங்கள் மூலமாகச் சொத்துரிமை கொண்டாடினார்கள் என்று சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தை அத்தோடு இணைத்து இங்கே

பேசினார். ஏ. கே. கே. சுந்தரம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் என்பது உண்மை. ஆனால் இதிலே சம்பந்தப்பட்டு இருப்பவர் யார் என்றால் அவருடைய தம்பி, மறைந்து விட்ட நடராஜன்; அவர் காங்கிரஸ் கட்சிக்காரர்; காங்கிரஸில் மிகுந்த தீவிரமாகப் பணியாற்றியவர். அவர் மறைந்து விட்டார். அவருடைய மனைவிக்கும், அவருடைய வளர்ப்பு மகளுக்கும் தகராறு. ஒரு உயில் தகராறு. அந்த உயிலிலே கையெழுத்திட்டு இருப்பது நடராஜன் தான் என்பது மகளுடைய வாதம். என் கணவர் கையெழுத்திடவில்லை என்பது அவருடைய துணைவியாரின் வாதம். இந்த வாதங்கள் இரண்டு கோர்ட்டுகளிலே நடந்து, சென்னை உயர்நீதிமன்றம் வரையிலே வந்து கடைசியாக திருவில்லிபுத்தூர் முதன்மை நீதிமன்றம் நடுவரிடம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலே நீதிபதி ஆவண நிபுணர்களின் கருத்தை ஏற்க இயலாது என்றும், இந்த ஆவணங்களை மீண்டும் பரிசோதனை செய்ய வேறு மாநில தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்புமாறும் 11-5-1998-ல் உத்தரவிட்டுள்ளார். இது முழுக்க முழுக்க சிவில் வழக்கு. இதிலே ஏதாவது முடிவு வந்து யாராவது குற்றம் சாட்டப்பட்டு, இன்னார் இதிலே தவறு செய்திருக்கிறார்கள் என்று வந்தால் அதற்குப் பிறகுதான் இது கிரிமினல் வழக்காக மாறி, போலீசார் நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கிடையிலே இதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அமைச்சர்களையும் சேர்த்துப்பேசியது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. பேசிய பிறகு அவர் பேசிய குறிப்பை என்னிடத்திலே கொடுத்தார். அதைப் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்த்தபோது எனக்கு ஒரு உண்மை விளங்கியது. முழு பேச்சையும் அதிலே எழுதி வைத்திருக்கிறார். அதைப் பார்த்தால், அந்தப் பேச்சில் ஏ. கே. கே. சுந்தரம் என்று வருகிறது; நடராஜன் என்று வருகிறது; அந்தப் பெண் பெயர் வருகிறது; மனைவி பெயர் எல்லாம் வருகிறது. அதிலே அடுத்து அவர் பேச இருப்பது, யார், யார் மீதோ நடவடிக்கை எடுக்கிறீர்கள் என்று சொல்ல வந்தவர் முன்னாள் அமைச்சர்களை எல்லாம் கைது செய்தீர்கள்; முன்னாள் வாரியத் தலைவர்களை எல்லாம் கைது செய்தீர்கள் என்று சொல்ல வந்தவர், அதைப் படிப்பதற்குப் பதிலாக அமைச்சர்களுக்கு எல்லாம் இதிலே சம்பந்தம்

இருக்கிறது என்று சொல்லிவிட்டார் என்று நான் கருதுகிறேன். ஏன் என்றால் அந்தப் பேச்சில் திடீர் என்று அமைச்சர்கள் பெயர் வருகிறது; ஆகவே, திரு. தாமரைக்கனி இதைத் தவறுதலாக படித்து இருப்பார் என்று கருதுகிறேன். இதிலே எந்த அமைச்சருக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்பதையும், இது ஒரு சிவில் விவகாரம், இதிலே இந்த அரசுக்கு எந்த சம்பந்தமும் கிடையாது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய திரு. ஐ. கணேசன் அவர்கள் திண்டிவனத்திலே டாக்டர் ராமதாஸ் மருத்துவமனை தாக்கப்பட்டது பற்றி சொல்லி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னார். விசாரிக்கப்பட்டது. அந்த மருத்துவமனையினுடைய மேலாளர் திருநாவுக்கரசு, அவர் கொடுத்த புகார்மீது திண்டிவனம் காவல் நிலையத்தில் குற்ற எண். 122/88-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இ. பி. கோ. பிரிவு 147, 148, 448, 427, 323-இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு 5 குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த வழக்கு தீவிர புலன் விசாரணையிலே உள்ளது.

திரு. ஐ. கணேசன் இன்னொரு குற்றச்சாட்டைச் சொன்னார். சேலத்திலே மதுபானக் கடைகளை ஏலம் விட்டதில் தவறுகள் நடந்ததாகக் குறிப்பிட்டார். சேலத்திலே மொத்தம் 161 கடைகள் ஏலத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அவற்றினுடைய மொத்த குறுமத் தொகை - குறுமத் தொகை என்றால் Upset price ரூ. 8.04 கோடியாகும். ஆனால், இந்த Upset price-க்கு மாறாக ஏலத்திலே கிடைத்த மொத்தத் தொகை ரூபாய் 17 கோடி - ரூ. 17.03 கோடி கிடைத்தது. இது குறுமத் தொகையைவிட - குறுமத் தொகை என்பது ரொம்பத் தூய தமிழ். அதை Upset price எனலாம் -- அந்த Upset price-க்கு மேலே கிடைத்தது எவ்வளவு என்றால் 112 சதவிகிதம் அதிகம் கிடைத்திருக்கிறது. அதைத்தான் நம்முடைய திரு. ஐ. கணேசன் குறையாகச் சொன்னார்.

குறுமத் தொகை என்பது சென்ற 3 ஆண்டுகளில் கிடைத்த உரிமத் தொகையின் அடிப்படையிலேதான் நிர்ணயிக்

கப்படுகிறது. மிக அதிக அளவிலே இருந்தது. ஆனால் அதைவிட மிகக்கூடுதலாக, சேலம் மாவட்டத்தில் ஏலத்தில் தொகை கிடைத்திருப்பது மேலே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரியும் என்றே நான் நம்புகின்றேன். அரசினுடைய அறிவுரைகளின்படி சென்ற ஆண்டு கிடைத்த உரிமைத் தொகைகளைவிட குறைவாகக் கிடைத்திருந்தாலோ அல்லது கடையின் விற்பனையிலே 10 சதவிகிதத்திற்குக் குறைவாகக் கிடைத்திருந்தாலோ, அந்தக் கடைகளை மறு ஏலத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பது அரசின் கொள்கை அந்த அடிப்படையில் அந்த மாவட்டத்தில் 23 கடைகள் மறு ஏலத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இந்த 23 கடைகளுடைய குறுமத் தொகை 87 இலட்சம் ரூபாய். அதற்கு மாறாக ரூ. 1.31 கோடி முதலில் கிடைத்தது. முதல் ஏலத்தில் அந்தக் கடைகளின் வாயிலாகக் கிடைத்த தொகை ரூ. 1.31 கோடி. மறுபடியும் ஏலம் விட்டதிலே கிடைத்த தொகை ரூ. 1.81 கோடி என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனவே, எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் கடைகள் மறு ஏலத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அரசாங்கத்தினுடைய இந்தச் சீரிய கொள்கையால், அன்றைக்கு திருநாவுக்கரசு சொன்னார்கள். தனக்கு நன்றிகூற வேண்டுமென்று. அவருக்கு நன்றிகூற வேண்டுமென்றால், ரூ. 750 கோடி வந்திருக்க வேண்டுமென்று திரு. கணேசன் சொன்னார். நம்முடைய ஞானசேகரன் 'நானாக இருந்தால் ரூ. 1.000 கோடி இந்த ஏலத்திலே சம்பாதித்திருப்பேன்' என்று சொன்னார். (குறுக்கீடு).

திரு. சி. ஞானசேகரன் : அரசுக்கு என்று சொன்னேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதுதான் ரூ. 1,000 கோடி அல்ல, ரூ. 2,000 கோடி அல்ல, அது ரூ. 250 கோடியாக இருந்ததை ரூ. 500 கோடியாகக் கொண்டு வந்தார்கள் என்பதற்காக ஒரு பாராட்டு கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி). அவர் ரூ. 750 கோடி என்கிறார்; இவர் ரூ. 1.000 கோடி என்கிறார். யார், யார் எப்படி, எப்படி ஏலம் எடுத்தார்கள், என்று தெரியும். நமக்குள்ளே பேசக்கூடாது அதெல்லாம் யார், யார்

கூட்டணி எங்கெங்கே நடந்தது? அரசியலிலே மாத்திரமா இருக்கிறது கூட்டணி? (மேசையைத் தட்டும் ஒலி).

சேலம் ஜில்லாவிலே ஒரு ஏலக் கடையிலே இந்தக் கூட்டணியிலே வந்த பணத்தை வைத்து ஒருவர் பொதுக் குழுவே நடத்தினார். பொதுக் குழுவிற்குச் செலவே அவர்தான் பண்ணினார் என்று கேள்விப்பட்டேன். விவரங்களிலே நுழைய நான் விரும்பவில்லை. அது எல்லோருக்கும் தெரியும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலமைச்சர் பேசி முடித்து விடட்டும்; அப்புறம் கேளுங்கள். இப்போது உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நம்முடைய நண்பர் குமாரதாஸ் அவர்கள் மதுவிலக்கிலே 3 இலட்சம் வழக்குகள் போடப்பட்டிருப்பதை ரொம்ப ஆச்சரியமாகக் குறிப்பிட்டு, 3 இலட்சம் வழக்குகளா, கள்ளச்சாராயம் அந்த அளவுக்குப் பெருகிவிட்டதா என்று அங்கலாய்த்துக் கொண்டார். அவருடைய அங்கலாய்ப்பிலே நியாயம் இருக்கிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அது போதாது, இன்னும் அதிகமாகப் போடப்பட்டிருக்க வேண்டும். இங்கே நம்முடைய லத்தீப் அவர்களெல்லாம் பேசியதைப் பார்க்கும்பொழுது 3 இலட்சம் வழக்குகள் அல்லது 3 இலட்சம் பேர் கைது செய்யப் பட்டார்கள் என்பதெல்லாம் குறைவுதான். இன்னும் அதிகமாக இதிலே கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அதைப்பற்றி பிறகு வருகிறேன்.

அவருக்கு நான் சொல்கிற விளக்கம், இப்பொழுது 6¼ கோடி மக்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள் 3½ கோடி மக்கள் இருந்த காலத்திலே - '1956'-லே 1 இலட்சத்து 35 ஆயிரம் வழக்குகள், 1957-லே 1 இலட்சத்து 29 ஆயிரம் வழக்குகள். 1958-இலே 1 இலட்சத்து 10 ஆயிரம் வழக்குகள். 1966-லே 1 இலட்சத்து 89 ஆயிரத்து 548 வழக்குகள். 3 கோடி பேருக்கு 1 இலட்சத்து 89 ஆயிரம் வழக்குகள் என்றால் 6 கோடி பேருக்கு 3 இலட்சம் வழக்குகள் வருவது ஒன்றும் ஆச்சரியமில்லை. இன்னும் நிறைய வழக்குகள் வரவேண்டும் என்பதுதான்

என்னுடைய ஆசை. இன்னும் நிறைய வழக்குகள் வரவேண்டும். (குறுக்கீடு). நான் இன்றைக்கு இப்படித்தான் பேச முடியும். என்னால் வேகமாகப் பேச முடியாது. உடல்நிலையைக் கருத்தி லிட்டு நான் துண்டு துண்டாகத்தான் பேசுவேன். மன்னித்துக் கொள்ள வேண்டும்.

கோவை குண்டு வெடிப்புபற்றி ஏன் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை என்று திரு. ஞானசேகரன் கேட்டார். திரு. குமாரதாஸ் கேட்டார். இன்னும் சிலபேர் இங்கே கேட்டார்கள். அதற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பாராட்டிய நம்முடைய செல்லக்குமார்கூட யாருக்கோ பயந்து கொண்டு எடுக்கப்பட்டது மாதிரி சொன்னார். அவர் பேசுவதிலே யுள்ள நயம் எனக்குத்தான் புரியும். பலபேருக்குப் புரியாமல்கூட இருந்திருக்கலாம். ஏதோ பா. ஜ. க. ஆட்சி வந்தவுடன் பயந்து கொண்டு நடவடிக்கை எடுத்தது மாதிரி, அவ்வாறு தொணிக்கிற மாதிரி சொன்னார். நான் யாருக்கும் பயப்படுவதில்லை. நான் நியாயத்திற்கு மாத்திரம்தான் பயப்படுவேன். வேறு யாருக்கும் பயப்படமாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி). எமர்ஜென்சிக்கே பயப்படாத ஆளாயிற்றே நான். (மேசையைத் தட்டும் ஒலி). எமர்ஜென்சியின்போது என் மகன், மருமகன், பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற வீராசாமி, வீரபாண்டி ஆறுமுகம், மணி, துரைமுருகன், இங்கு உட்கார்ந்திருக்கிறார்களே இதிலே பாதி பேர் ஜெயிலில் இருந்தார்கள், எமர்ஜென்சியில் மிசா கைதியாக அப்பொழுதே பயப்படவில்லையே! ஆளே அனுப்பியிருந் தார்களே டெல்லியிலிருந்து. அங்கேயிருந்து கவர்னரே கேட்டாரே! இந்தத் தீர்மானத்தை மாத்திரம் வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். எமர்ஜென்ஸியை எதிர்த்து நீங்கள் போட்டிருக்கிற தீர்மானத்தை மாத்திரம் வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள். கேரளாவில் கொடுத்ததுமாதிரி ஒரு வருடம் ஆட்சி நீட்டித்துக் கொடுக்கிறோம் என்று கேட்பதற்கு டில்லியிலிருந்து ஒரு மந்திரி வந்தார். நான் அண்ணாவினுடைய தம்பி, நான் எழுதிய தீர்மானத்தை திருப்பி எழுதமாட்டேன் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி). தீர்மானத்தை வாபஸ் வாங்கியிருந்தால் இன்னும் ஒரு வருடம் ஆட்சியில் அப்பொழுது இருந்திருப்போம்.

400, 500 பேர் ஜெயிலுக்குப் போயிருக்க வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் அவ்வளவு அவதிப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. எங்களுடைய வீடு, ஆபீசில் எல்லாம் 'ரெய்டு' எல்லாம் நடந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வளவும் நடந்தது. நடந்து போனதற்குப் பிறகு இனி நடக்காமல் இருப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்தான் அவை. முன்கூட்டியே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் நான் திருப்பிக் கேட்கமுடியாதா? உளவுத்துறை Cipher, Zero, எதற்கும் லாயக்கில்லை, என்றெல்லாம் திரு. ஞானசேகரன் இங்கே சொன்னார். அவர் இப்படித் திட்டுவதைப்பற்றி நான் வருத்தப் படமாட்டேன். ஏனென்றால் திட்டத் திட்ட உளவுத்துறை நன்றாக இருக்குமென்பதற்காக தம்பி சொல்லியிருப்பார். இந்த கவர்ன் மெண்டில் இருக்கின்ற உளவுத்துறையைக் குறைகூற வேண்டும் என்பதற்காகச் சொன்னதாக நான் கருதமாட்டேன். "Utter failure" என்று சொன்னார். அது Success ஆக நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் "Utter failure" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பார் என்று நான் கருதுகிறேனேயல்லாமல் வேறல்ல. ஆனால் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த உளவுத்துறை, உலக உத்தமர், தேசப் பிதா, இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மகாத்மா காந்தி கொல்லப்படப் போகிறார் என்பதைச் சொல்லாத உளவுத்துறை "Utter failure"-ரா இல்லையா? எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). அன்னை என்று நம்மால் பாராட்டப்பட்ட, இந்தியா வினுடைய அன்னை என்று நம்மால் இன்றைக்கும் பாராட்டப்படுகின்ற இந்திரா காந்தியை அவர்களுடைய வீட்டுத் தோட்டத்திலேயே அவர்களுடைய பாதுகாவலர்கள் சுட்டுக் கொல்லப்போகிறார்கள் என்பதை உளவுத்துறை கண்டுபிடிக்க முடியவில்லையே! (மேசையைத் தட்டும் ஒலி).

13 தடவை வந்துவிட்டுப் போனார் ராஜிவ் காந்தி, நான் முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டிற்கு. ஒரு துரும்பு அவர் மேல் படாமல் பாதுகாத்து அவரை டெல்லிக்கு அனுப்பி வைத்தோம். ஆனால், கடைசியாக இங்கே வந்தபோது, கவர்னர் ஆட்சியிலே வந்தபோது, தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டு 3 மாதங்கள் கழித்து கவர்னர் ஆட்சியில் ராஜிவ் காந்தி வந்தார்.

இவ்வளவு பாதுகாப்பு இருந்தும்கூட அவர் கொல்லப்பட்டு ஒரு மூட்டையாகக் கட்டப்பட்டு அவருடைய உடல் டெல்லிக்கு அனுப்பப்பட்டது. மூப்பனாரும் மற்ற சில பேரும்தான் இருந்து அனுப்பி வைத்தார்கள், அன்றைக்கு அவர்களும்கூடப் போனார்கள். ஏன் முன்கூட்டியே உளவுத்துறை இதைச் சொல்லவில்லை? எங்கே போனது உளவுத்துறை? பிறகுதான் விசாரிக்கிறோம் என்ன பண்ணியது உளவுத்துறை என்று. பிறகுதான் கமிஷன் போடுகிறோம். அதுமாதிரி எதுவும் மின்னல் வேகத்தில் நடந்துவிடும்போது, ஏன் முன்கூட்டியே செய்ய வில்லை, எங்கே போனது உளவுத்துறை என்று கேட்பதெல்லாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்காகச் செய்யப்படுகிற, உஷார்படுத்துகின்ற காரியங்களாக இருக்கலாமே தவிர, அதையே ஒரு குற்றச்சாட்டாக வைத்துக்கொண்டு அதையே பேசிக் கொண்டிருப்பது நியாயமில்லை என்பதற்காக இதைச் சொல்கிறேன். உளவுத்துறை சில நேரங்களில் நல்ல முறையிலே செயல்படுகின்றது. சில நேரங்களில் அவர்களையும் மீறி சில காரியங்கள் நடைபெற்று விடுகின்றன. எங்களுக்கு வந்த செய்திகளை வைத்துக்கொண்டுதான் அத்வானியைக் காப்பாற்ற முடிந்தது. நான் முதலிலே சொல்லும்போதுகூட அத்வானிக்கு மனித வெடிகுண்டு வரவில்லையென்ற செய்திதான் கோவையிலிருந்து வந்தது. பிறகு மெல்ல மெல்ல அந்தச் செய்திகள் புலன் விசாரணைக்காக விடப்பட்ட பிறகு, தனிப் பிரிவு அமைக்கப்பட்ட பிறகு, அத்வானியைக் கொல்வதற்காக மனித குண்டுகளுடன் சிலபேர் வரமுயன்றதாகவும், அவர்கள் அந்தக் கூட்டத்திற்குச் செல்ல முடியாமலேயே போலீஸ் பாதுகாப்பு இருந்ததாகவும் சொல்கிறார்கள். அந்தச் செய்தி வந்தது. அதைத்தான் White paper-ல் இங்கே நான் வைத்தேன். அதையும் நீங்கள் தெளிவாகத் தெரிந்து வைத்துக்கொண்டிருப் பீர்கள். திரு. அத்வானியை ஏன் காப்பாற்றினோம்? சில நேரங்களில், உளவுத்துறையானாலும் போலீஸ் ஆனாலும் சரியாகச் செயல்படும்போது பெரிய தலைவர்களைக் காப்பாற்றி விட முடிகிறது. மிகப் பெரும் தலைவர்களான உத்தமர் காந்தி, திருமதி. இந்திரா காந்தி, திரு. ராஜிவ் காந்தி இவர்களையெல்லாம் காப்பாற்ற முடியாமலே போய்விட்டது. இவைகளையும் நாம்

ஒப்பிட்டுப் பார்க்கத் தவறிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன்.

முன்கூட்டியே புலன் விசாரணையிலே தகவல் வந்தது. உளவுத்துறையினுடைய தகவல் வந்தது. அதை வைத்து நாங்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாகத்தான், பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி முடிய தமிழ்நாடு முழுவதும் உள்ள போலீஸ் இலாகா மாவட்ட ரீதியாக, ஆங்காங்கு பணியாற்றியதன் காரணமாகத்தான் மாநிலம் முழுவதும் 49 வழக்குகள்; 81 பேர் கைது; நாட்டு வெடிகுண்டுகள் 2,000 கைப்பற்றப்பட்டன. ஜெலட்டின் குச்சிகள் 586 கைப்பற்றப்பட்டன. டெட்டனேட்டர்கள் 1,595, உரிமம் இல்லாத துப்பாக்கிகள் 8, ரிவால்வர் 2 என்று கைப்பற்றப்பட்டன. ஆனால் அங்கே மாத்திரம், கோவையிலே மாத்திரம் திரு. அத்வானியைக் காப்பாற்றுவதிலே காட்டிய அக்கறை, அவர்களுக்குச் சரியான தகவல் அங்குள்ள உள்ளூர் போலீஸ்காரர்களால் தரப்படாததால் ஏற்பட்ட தொய்வு, இவைகளின் காரணமாக போலீஸ் கமிஷனர் நடவடிக்கை எடுக்கத் தவறியது, அதற்காகத்தான் இந்த அரசு அவரிடம் இன்றைக்கு விளக்கம் கேட்டு கடும் நடவடிக்கைக்கான குற்றச்சாட்டை அவர்மீது சுமத்தியிருக்கின்றது. இவ்வளவுக்கும் பிறகு, இதிலே குறைபட்டுக்கொள்ள என்ன இருக்கிறது என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். C.B.I., C.B.I என்று இதற்குக்கூட C.B.I. விசாரணை வைக்க வேண்டும் என்று நம்முடைய ஞானசேகரன் இங்கே வலியுறுத்தினார். எங்கெங்கேயோ ஆரம்பித்து, போயஸ்கார்டனிலே ஆரம்பித்து, C.B.I. விசாரணை இந்த வழக்குக்கு வைக்க வேண்டும் என்பது திரு. ஞானசேகரன் வரையிலும் வந்தாயிற்று.

நான் ஒரு உண்மையை உங்களுக்குச் சொல்கிறேன். திரு. அத்வானி கோவைக்கு வந்து இவ்வளவு நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன என்ற செய்தி எனக்கு எப்போது கிடைத்தது என்றால் – தலைவர் மூப்பனாரும் நானும், மாணிக்கம் அவர்களும் மற்றும் தோழமைக் கட்சிகளினுடைய தலைவர் களும், நம்முடைய அப்துல் லத்தீப் அவர்களும், எல்லோரும் சென்னையிலே அன்றைக்கு, 14 ஆம் தேதியன்று, சிந்தாதிரிப்

பேட்டையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தினுடைய இறுதிக் கூட்டத்திலே, வேண்டுகோள் கூட்டத்திலே பேசிவிட்டு, நான் காரிலே ஏறுகிறேன். அப்போது, மாறன், வீராசாமி ஆகிய இவர்கள் எல்லாம் நான் காரிலே ஏறுவதுவரையிலே என்னிடத்திலே சொல்லாத செய்தியை, காரிலே ஏறி உட்கார்ந்ததுமே சொன்னார்கள். இப்படி, கோயம்புத்தூரிலே குண்டு வெடித்துவிட்டது என்று. நான் நேராக வீட்டுக்குச் செல்லவில்லை. கோட்டைக்குத்தான் வந்தேன். வந்தவுடனே தலைவர் மூப்பனார் அவர்களுக்குப் போன் செய்தேன்; மாணிக்கம் அவர்களுக்குப் போன் செய்தேன்; சங்கரய்யா அவர்களுக்குப் போன் செய்தேன்; ஜனதா தளத்திலே வடிவேலு அவர்களுக்குப் போன் செய்தேன். மற்றவர்கள் கிடைக்கவில்லை. திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஊரிலே இல்லை, அன்றைக்கு உடனடியாகப் புறப்பட்டு எங்கேயோ போய்விட்டார். சமது அவர்களுக்குக்கூட போன் செய்தேன். இப்படி எல்லோருக்கும் போன் செய்தேன். மூப்பனார் அவர்கள் உடனடியாக இங்கே வந்தார். மாணிக்கம் அவர்களும் வந்தார்கள். (குறுக்கீடு). மன்னிக்க வேண்டும். நல்லக்கண்ணு அவர்களும் இங்கே வந்தார்கள். வந்தவுடனே, அவர்களிடத்திலே நிலைமைகளைப் பற்றிச் சொன்னேன். சாயங்காலம் 5.00 அல்லது 6.00 மணிக்கு வந்தவர்கள் இரவு 9.00 மணி வரை என்னோடுதான் கோட்டையிலே முதலமைச்சர் அறையிலேதான் இருந்து, நாங்கள் விவாதித்தோம். என்னிடத்திலே இருந்த குறிப்பைக்கூட அவர்களிடத்திலே எடுத்துக்காட்டினேன். இன்னின்ன இயக்கங்களைத் தடை செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே பரிந்துரை வந்தது, கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கலாம் என்பதற்காக, அப்பொழுதே, கையெழுத்து போட்டிருக்கிற ஃபைல், இதோ இருக்கிறது என்று அந்த ஃபைலைக்கூட காட்டினேன். பிறகு அவர்களிடத்திலே கலந்துபேசித்தான் இரவு 8 மணி அளவிற்கு அந்த இரண்டு இயக்கங்களும் தடை செய்யப்பட்டன. உடனடியாக அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். இதற்கெல்லாம் ஒரு உள்நோக்கம் யாரும் கற்பிக்கக்கூடாது. ஏதோ வேண்டுமென்றே அலட்சியப்படுத்திவிட்டோம் என்று யாரும் கருதக்கூடாது. அரசாங்கமே இதைச் செய்திருக்கலாம் என்று

எண்ணக்கூடாது அரசாங்கம் என்ன செய்ய முடியும்? வருகிற செய்தியை அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க முடியும். அப்படித்தான் தெரிவித் திருக்கிறோம்.

இங்கேகூட ஒரு பழைய நிகழ்ச்சி, இந்த அவையிலே நடந்தது. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பேசுகிறார் "பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பிரச்சினைகளை சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே எழுப்பும்போது. காவல் துறையிடமிருந்துதான், நான் விவரங்களைப் பெற்று இந்த அவைக்குத் தரமுடியும். தனிப்பட்ட முறையில் நான் 'ஷெர்லாக் ஹோம்ஸ்' பாணியிலே போய் புலனாய்வு செய்ய முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி). எல்லோரும் மேசையைத் தட்டினார்கள். "நானே ஒற்றர் மாதிரி போய், அல்லது ஒரு பெரிய துப்பறியும் நிபுணர் மாதிரி, 'ஷெர்லாக் ஹோம்ஸ்' பாணியில் நானே நேரடியாகப் போய் செய்ய முடியாது. போலீஸ்காரர்கள் தான் செய்யவேண்டுமென்று" சொல்லிவிட்டு, இன்றைக்கு என் மேலே குறை கூறிக்கொண்டிருக்கின்ற ஜெயலலிதா, இதே அவையிலே பேசி இதிலே அச்சிடப்பட்டு, நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கிறது. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால் ஒழுங்காக யார் யாரோடு கலந்து பேசி, எந்தெந்தத் தலைவர்களோடு ஆலோசித்துச் செய்ய வேண்டுமோ, அப்படித்தான் ஆலோசித்து எல்லா காரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. அதை விடுத்து, C.B.I. C.B.I., என்றால் C.B.I. யில் வழக்குகள் நீண்ட நாட்கள் ஆகின்றன. C.B.I.-யை நான் குறை சொல்லமாட்டேன். ஆனாலும் இதே C.B.I. விசாரணை கேட்டு, மேலவளவு நிகழ்ச்சிக்கு தேவர் பேரவை எனக்குக் கோரிக்கை வைத்தது. அந்தக் கோரிக்கையை வைத்து நான் நம்முடைய எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களிடம் – அவர்கள் அப்பொழுது அதற்கு பொறுப்பு ஏற்றிருந்த அமைச்சர் அவர்களிடம் கேட்டு எழுதினேன். இல்லை என்றுதான் பதில் வந்தது. 'இப்பொழுது C.B.I. தர இயலாது, போலீஸ்காரர்களே விசாரிக்கிறார்கள். அதுவே போதும்' என்று பதில் வந்தது. மதுரை லீலாவதி, கம்யூனிஸ்டு கட்சியினுடைய கவுன்சிலர் கொலையிலே

திராவிட முன்னேற்றக் கழகத்தார் சம்பந்தப்பட்டிருந்தாலும்கூட அவர்கள்மீது குற்றச்சாட்டு இருந்தபோதும்கூட, எந்தவிதமான பாரபட்சமும் காட்டாமல், அன்று கைது செய்யப்பட்டவர்கள் எத்தனையோ பேர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் வந்திருக்கிறார்கள் என்பதும் எங்களுக்கும் தெரியும். 10, 11 மாதங்கள் ஆகின்றன; இன்னும் யாரும் ஜாமீனில்கூட வரவில்லை. அவர்களுக்காக C.B.I. விசாரணை வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய அரசாங்கத்தை நம்பியோ, நம்பாமலோ C.B.I. விசாரணை வேண்டுமென்று கேட்டார்கள். சி. பி. ஐ. விசாரணை வேண்டுமென்று பரிந்துரை செய்து எழுதினேன். அதற்கும் 'இப்பொழுது ஒழுங்காகத்தானே போலீஸ்காரர்கள் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். C.B.I. அனுப்ப இயலாது' என்ற ரீதியில் எனக்குக் கடிதம் எழுதிவிட்டார்கள்.

அடுத்து, இரயில் குண்டு வெடிப்பு அண்மையில் நடை பெற்றது. பிப்ரவரி மாதத்தில் நடைபெற்றது. அப்பொழுதும் C.B.I. விசாரணை வேண்டுமென்று இரயில்வே துறைக்கும், மத்திய அரசுக்கும் எழுதினேன். C.B.I. அனுப்ப இயலாது என்று எழுதி விட்டார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் C.B.I. இல்லாமலேயே இப்பொழுது நடைபெறுகின்ற கோவை குண்டு வெடிப்பு தொடர்பான அந்த விசாரணைகளில் நல்ல முன்னேற்றம் இருக்கின்றது. தீவிரவாதிகளுடைய தலைவர்களெல்லாம் பிடிபடு கின்றார்கள். பிடிக்கப்படவே முடியாது என்று எண்ணப்பட்ட ஏர்வாடி காசிம் கூட இரண்டு நாட்களுக்கு முன்பு கைது செய்யப்பட்ட அந்தச் செய்தியையும் இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். எனவே, வெகுவேகமாக இந்தப் புலன் விசாரணை முன்னேறிக் கொண்டிருக்கின்ற காரணத்தால், இதிலே C.B.I. விசாரணை தேவையா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டிய பொறுப்பு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உண்டு என்பதை நான் எடுத்துக்காட்டி இந்த அளவோடு இதை நிறுத்துகின்றேன்.

இன்னொன்று, போலீசார் சில போராட்டங்களிலே அத்துமீறி தலையிடுகிறார்கள். பாரபட்சமாக நடந்துகொள் கிறார்கள். என்றெல்லாம்கூட இங்கே பேசினார்கள். நம்முடைய கிருஷ்ணசாமி அவர்களும் நான் வரும்போது அதைத்தான்

பேசிக்கொண்டிருந்தார். நான் போராட்டங்களைப்பற்றி கிருஷ்ணசாமிக்காகச் சொல்லவில்லை. பொதுவாக இப்படிப்பட்ட போராட்டங்களே, அரசு ஒரு கோரிக்கைக்கு இணங்குகிறது என்று அறிவித்த பிறகும் நடக்கின்றன ஏன் அறிவித்தாய் என்று கேட்டு. அதுதான் வேடிக்கை. இதே அவையில் இவ்வளவு பேர் சாட்சியாக இடைநிலை ஆசிரியர்கள்பற்றி நான் வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். அதிலே ஒரே சங்கடம் என்னவென்றால், அதன்காரணமாக, அமைச்சுப் பணியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள் இந்த 3 பேரும் இந்த Category -ல் உள்ளவர்கள், 2½ இலட்சம் பேர் இருக்கிறார்கள். இந்த 2½ இலட்சம் பேரும் தங்களுக்கும் இதிலே முரண்பாடு ஏற்பட்டுவிட்டது, இடைநிலை ஆசிரியர்களுக்குக் கொடுத்தது போல, எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்பார்கள்; எனவே, அவர்களைக் கூப்பிட்டு சமாதானப்படுத்தி, ஒரு சமரசம் செய்து அதற்குப் பிறகு அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்படும் தேதியைத்தான் சொன்னோம். என்றைக்கு அறிவிக்கப்பட்டாலும் முன் தேதியிட்டுத்தான் கொடுக்கப்போகிறோம். அதாவது 1-1-1996 இருக்கிறதே, அந்த 1-1-1996 தேதியிட்டுத்தான் கொடுக்கப் போகிறோம் என்று சொன்னோம். இவ்வளவு சொல்லி ஆகிவிட்டது. இவ்வளவு சாட்சியோடு சொல்லி ஆகிவிட்டது. சொன்ன பிறகும், முதலமைச்சர் அழைத்துப் பேச வேண்டுமாம்? முதலமைச்சர் அழைத்துப் பேசவில்லையா? முதலமைச்சர் அழைத்துப் பேசிய படத்தைக் காட்டவா? படம்கூட என்னிடத்திலே இருக்கிறது. (ஒரு பத்திரிகையில் வந்த படத்தைக் காண்பித்தார்). இந்தப் படத்தில் அவர்களெல்லாம் இருக்கிறார்கள். முரசொலியில் வந்திருக்கிறது. எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. இந்தப் படம் வந்திருக்கிறது. வந்து பேசினார்கள்; பேசிவிட்டு, நாங்கள் One man commission-க்குப் போகமாட்டோம் என்றார்கள். ஏன் போகக்கூடாது? அவர் என்னைவிடப் பெரியவர்தான். ஐ. ஏ. எஸ். ஆபீசர்தான். ஐ. ஏ. எஸ். ஆபீசராக இருந்தவர்தான். தனிப்பட்ட தகுதி என்று பார்த்தால், அவர் சாதாரண ஆள் இல்லை. One man commission-ல் போய் நிலையை விளக்கிச் சொன்னால் என்ன? நீங்கள் வேண்டுமானால் போகவேண்டாம், அவர்களைக் கூப்பிட்டுப் பேசி முடித்துவிட்டு, அதற்குப் பிறகு ஆசிரியர்கள்

பிரச்சினையைத் தீர்க்கப்போகிறோம் என்று சொன்னால், கேட்க மாட்டோம், நாங்கள் போராடித்தான் தீருவோம் என்றால் என்ன அர்த்தம்?

நேற்றைக்குப் போராட்டம், போராடியவர்களெல்லாம் கைது செய்யப்பட்டு - கைது செய்யப்பட்டார்கள் என்று அர்த்தம் அல்ல, அங்கிருந்து அகற்றப்பட்டு உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். நாளைக்கு மறுபடியும் போராட்டம்; தொடரும் போராட்டம் என்னுடைய பிறந்த நாள் நேரத்திலே போராட்டம் நடத்துங்கள். என்னுடைய பிறந்த நாள் நினைவாக அவர்கள் போராட்டம் நடத்துவதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதற்காக, பிறந்த நாளிலே போராட்டம் நடத்தினால், உடனே பணிந்து விடுவேன் என்று நினைத்தால், அதற்கெல்லாம், பணிகிற ஆள் நான் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). கோரிக்கையை நிறைவேற்றுவதகாச் சொன்ன பிறகும்கூட, நீ கூப்பிட்டுப் பேசு என்று சொன்னால் என்ன அர்த்தம்? எதற்காக நான் கூப்பிட்டுப் பேச வேண்டும்? கூப்பிட்டுப் பேசக்கூடாது என்று இல்லை. எல்லோரையும் கூப்பிட்டுப் பேசியிருக்கிறேன். எந்தப் பிரிவு, எந்தத் தரப்பாக இருந்தாலும் பேசியிருக்கிறேன். உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், சமமானவர்கள், சமமற்றவர்கள் என்றெல்லாம் நான் பாகுபாடு பார்த்ததே கிடையாது. இந்த இரண்டு வருட ஆட்சியிலேயும், அல்லது நான் எப்போது ஆட்சியிலே இருந்தாலும் எந்த பிரநிதித்துவத்துக்காக, யாரைக் கூப்பிட்டுப் பேசாமல் இருந்திருக்கிறேன்? வியாபாரிகளா அல்லது விவசாயிகளா அல்லது தொழிலாளர்களா, ஒவ்வொரு பிரிவினரோடும் ஒரு மணி நேரம், 2 மணி நேரம், 8 மணி நேரம் கூடப் பேசியிருக்கிறேன். பி & சி விவகாரத்திலே 8 மணி நேரம். இப்போதுதான் பேசியிருக்கிறேன். எனவே பேசமாட்டேன் என்கிற மாதிரியும், அதை ஒரு குறையாக வைத்து, போராடுவோம் என்றும், சொன்னால், இதையெல்லாம் இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுக்குப் பின்னால் நின்று தூண்டு விடுகின்றவர்கள்தான் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

எங்கே, எத்தனை மாநிலங்களில் மத்திய அரசுக்குச் சமமாக மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தைக் கொடுத்திருக்கிறார்கள்? சொல்லுங்களேன். எத்தனை மாநிலங்களிலே கொடுத்திருக்கிறார்கள்? கொடுக்கப்பட்ட மாநிலங்களிலே, அதே விகிதாசாரத்தை எத்தனை இடங்களில் ஆசிரியர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்? சொல்லுங்களேன் பார்க்கலாம். அது இல்லாத இடம் எத்தனை என்பதை அன்றைக்கே நான் பட்டியல் போட்டுக் காண்பித்திருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன், கோரிக்கையை நான் ஏற்றுக் கொண்டாகிவிட்டது கொள்கை ரீதியாக. அதிலே எந்தவிதமான மறுப்பும் இல்லை. ஒரேயொரு பிரச்சினை, அன்றைக்கே சொன்னேன். ஒரு சடங்கு, சம்பிரதாயம். பாக்கி இருக்கிற 3 கேட்டகிரியில் உள்ள பியூப்பிளையும் கூப்பிட்டு, அவர்களையும் அழைத்துப் பேசி, அதற்குப் பிறகு முடிவை அறிவிக்கிறேன் என்று சொன்னால், நீ முடிவு அறிவிக்கிறேன் என்று சொன்னதே தப்பு, நாங்கள் போராடித்தான் தீருவோம்; போராடித்தான் வந்தது என்று சொன்னால்தான் அதிலே எங்களுக்கு 'கிக்' இருக்கும் என்று சொன்னால், அதையெல்லாம் நான் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. அதைப்பற்றி அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்.

பிறகு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி இங்கே நான் பேச விரும்புகின்றேன். நேற்றைக்கே இதைப்பற்றியெல்லாம் அதிகாரி களோடும், துறைச் செயலாளர்களோடும் கலந்து பேசி பல அறிவிப்புக்களை இப்போது செய்ய இருக்கின்றேன்.

காவல்துறையை மேலும் வலுப்படுத்தவும், செம்மைப் படுத்தவும், நவீனப்படுத்தவும் வாகனங்கள், இயந்திரங்கள், புதிய காவல் அணிப்பிரிவுகள், கடலோர சோதனைச் சாவடிகள், கணிப்பொறிகள் - பேப்பரே கூடாது என்று சொன்னாரே அதற்காகக் கணிப்பொறிகள் - இவைகளுக்காக இந்த இரண்டு ஆண்டுகளிலே 47 கோடி ரூபாய் செலவு பண்ணியிருக்கிறோம். 1998-99-க்கு மேலும் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இஃதன்னியில் மத்திய அரசிடமிருந்து 10 கோடி ரூபாய்

கேட்டிருக்கிறோம். தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருக் கிறோம்.

காவலர் பயிற்சிக் கழகம். நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் சொன்னார்கள் காவலர்களுக்கு அதிகப் பயிற்சி வேண்டுமென்று. இன்று அவர் காவல் துறையைப்பற்றி தனித் தனியே எதுவும் பேசவில்லை. பொதுவான உபதேசங்கள், நம் முடைய காவல்துறைக்கு, ரொம்ப அருமையான உபதேசத்தினை நம்முடைய லத்தீப் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு காவல்துறையின் அனைத்து அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் புதிதாக சீருடைப் பணிக்கு தேர்வு செய்யப் படுபவர்களுக்கும் உயர்தரப் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் ரூபாய் 20 கோடி செலவில் தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகம் நிறுவ தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). திரு. லத்தீப் அவர்கள் சொன்ன கருத்து. இக்கழகம், மாவட்ட அளவில் பயிற்சி மையங்களில் நடைபெறும் பயிற்சிகளை ஒருங்கிணைக்கும் உயரிய தலைமைக் கழகமாகவும் செயல்படவுள்ளது. பயிற்சிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான இந்திய அரசின் மானியத்தையும் இதற்குப் பயன்படுத்திக் கொள்ள அரசு உத்தேசித்துள்ளது. சென்னை வண்டலூர் அருகிலே இக்கழகம் அமைக்கப்பட சுமார் 133 ஏக்கர் நிலத்தை காவல்துறைக்கு மாற்றம் செய்ய ஆணை வழங்கப்பட்டுவிட்டது. அங்கு காவலர் பயிற்சிக் கழகம் நிறுவுதல் தொடர்பாக காவல்துறை தலைமை இயக்குநர் மதிப்பீடுகளைத் தயாரித்து வருகிறார். உரிய உள்கட்டுமான வசதிகளோடு காவலர் பயிற்சிக் கழகம் விரைவில் தொடங்கப்படும்.

அடுத்து காவலர் பயிற்சிப் பள்ளி. காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுவதற்காக, முதற்கட்டமாக, மூன்று நிரந்தரக் காவலர் பயிற்சிப் பள்ளிகள் உருவாக்கப் படவுள்ளன. அதற்காக 1.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று காவலர் தங்கும் விடுதிகள் கட்டப்படவுள்ளன. தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 25 காவல் நிலையங்களுக்கு, முதற்கட்டமாக, ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் கட்டப்படவுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி). தற்போது தமிழ்நாடு அதிரடிப் படையினர் தலைமையகம்

இயங்கும் 'மருதம்' வளாகத்தில் மற்றுமொரு மேல்தளம் இருபது இலட்ச ரூபாய் செலவில் கட்டப்படவுள்ளது. சென்னை, எழும்பூரில் காவல்துறை ஆணையர் அலுவலக வளாகத்தில் உள்ள அலுவலர்களின் உணவுக்கூட இரண்டாவது மாடியில், குளிர் சாதன வசதியோடுகூடிய கூட்ட அரங்கம் ஒன்று 25 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்படவுள்ளது. விருதுநகரில், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு 16 இலட்ச ரூபாய் செலவில் புதிய குடியிருப்பு கட்டப்படும். தடய அறிவியல் துறையில் ஒரு குடிநீர் வழங்கல் திட்டம் ஒரு இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படும். தடய அறிவியல் துறையில், மானிடயியல், வெடி மருந்துகள், ஆவணங்கள் மற்றும் பத்திரங்கள் ஆகிய பிரிவுகளுக்கு 1.68 இலட்ச ரூபாய் செலவில் சீர்வளி வசதி செய்து தரப்படும். அறிவியல் உதவியாளர் பதவி 2.75 இலட்ச ரூபாய் செலவில் அறிவியல் அலுவலர் பதவியாக நிலை உயர்த்தப்படும். ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் ஒரு டி. எம். ஈ. அடர்த்திவீத அளவை மீட்டர் வாங்கப்படும். 15 இலட்ச ரூபாய் செலவில் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கு மூன்று டி. எஸ். டி. ஸ்கேனர் வாங்கப்படும். மேற்கண்ட திட்டங்களுக்காக மொத்தம் 3.67 கோடி ரூபாய் செலவிடப்படும்.

காவல் பயிலரங்கம். மனித உரிமைகள், மனித நேயம் பற்றிய காவல்துறையினுடைய பயிலரங்கம். பொதுமக்களிடையே காவல்துறையின் மதிப்பை உயர்த்தும் வகையில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகரக் காவல் ஆணையர்கள் மூலமாக ஒவ்வொரு மாதமும் பொதுமக்கள் மற்றும் காவல்துறையினர் பங்கேற்கும் பயிலரங்கங்களை நடத்தலாம் என அரசு உத்தேசித்துள்ளது. மனித உரிமைகள் மற்றும் மனித நேயம் தொடர்பான விழிப்புணர்வைப் பொதுமக்கள் மற்றும் காவல்துறை மட்டத்தில் ஏற்படுத்த இப்பயிலரங்குகள் உதவும். குறைந்தபட்சம் காலாண்டிற்கு ஒரு முறை இந்தப் பயிலரங்கங்கள் நடத்தப்பட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய செலவினத்திற்கு அரசு முதல் தவணையாக ரூ. 10 இலட்சம் அளித்துள்ளது.

வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 386 காவல் நிலையங்களில் 79 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட கடந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டது. அந்தக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டில் கட்டடம் கட்டத் தேவையான நிலம் உள்ள பின்வரும் 40 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கு ஏற்கெனவே ஒதுக்கீடு செய்துள்ள ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கூடுதலாக 60 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். அவையாவன:

காஞ்சிபுரம் மாவட்டம்

1. கேளம்பாக்கம்
2. மறைமலைநகர்
3. சூணாம்பேடு

கடலூர் மாவட்டம்

4. நடுவீரப்பட்டி

விழுப்புரம் மாவட்டம்

5. திருவெண்ணெய்நல்லூர்
6. கச்சிராப்பாளையம்

திருவண்ணாமலை மாவட்டம்

7. மேலசங்கம்
8. பிரம்மதேசம்
9. வடவனகருப்பட்டி

வேலூர் மாவட்டம்

10. கே. வி. குப்பம்
11. வேலூர் குற்றம் (வடக்கு)
12. வேலூர் (வடக்கு) மகளிர்

ஈரோடு மாவட்டம்

13. காங்கேயம்

14. தாராபுரம்

15. பவானி

விருதுநகர் மாவட்டம்

16. வீரசோழம்

சிவகங்கை மாவட்டம்

17. புலன்குறிச்சி

18. ஆரவாயல்

19. தேவகோட்டை

கரூர் மாவட்டம்

20. தென்னிலை

21. பழவிடுதை

தஞ்சாவூர் மாவட்டம்

22. அதிராமபட்டினம்

மதுரை மாவட்டம்

23. அப்பன்திருப்பதி

24. சமயநல்லூர்

இராமநாதபுரம் மாவட்டம்

25. இராமநாதபுரம் பஜார்

26. அபிராமம்

தருமபுரி மாவட்டம்

27. களவாய்

28. சிங்காரம்பட்டி

29. மகாராஜகனை

30. காவேரிப்பட்டினம்

31. அதியமான் கோட்டை

32. தோப்பூர்

33. பூமிடி

34. எரையூர்

தூத்துக்குடி மாவட்டம்

35. நாசரேத்

36. கொப்பம்பட்டி

37. பசுவன்தனை

38. கோவில்பட்டி

39. சூரன்குடி

40. சாயர்புரம்

காவல் துறைக்கான கூடுதல் வாகனங்கள் வாங்க, 1997-98 ஆம் ஆண்டில் 9.02 கோடி ரூபாய் செலவில் 320 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டன.

காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், மேலும் 69 வாகனங்கள், 2.34 கோடி ரூபாய் செலவில் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயனற்றவை என்று கழிவு செய்யப்பட்ட 227 வாகனங்களுக்குப் பதிலாக, 1998-99-ல், புதிய வாகனங்கள் வாங்க, 10.35 கோடி ரூபாய் செலவாகும். நிதிநிலை அறிக்கையிலே, ஒதுக்கீடு செய்துள்ள 4 கோடி ரூபாய்க்கு மேலாக கூடுதலாக 6.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

ரோந்துப் பணிகளை மேம்படுத்த, கூடுதல் வாகனங்கள். கோயம்புத்தூர் காவல் ஆணையகத்திற்கு 10 வாகனங்கள்; கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 5 வாகனங்கள்; சென்னை ஆணையகத்திற்கு 10 வாகனங்கள்; செங்கல்பட்டு கிழக்கு காவல் மாவட்டத்திற்கு 5 வாகனங்கள்; மதுரை ஆணையகத்திற்கு 3

வாகனங்கள் - ஆணையகம் என்றால் Commissionerate-மதுரை மாவட்டத்திற்கு 3 வாகனங்கள்; திருநெல்வேலி ஆணையகத்திற்கு 3 வாகனங்கள்; திருநெல்வேலி மாவட்டத்திற்கு 3 வாகனங்கள்; சேலம் ஆணையகத்திற்கு 3 வாகனங்கள்; சேலம் மாவட்டத்திற்கு 3 வாகனங்கள்; திருச்சி ஆணையகத்திற்கு 3 வாகனங்கள்; திருச்சி மாவட்டத்திற்கு 3 வாகனங்கள். ஆக 54 ரோந்து வாகனங்கள் வாங்க தொடராச் செலவினம், ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய்.

காவல் நிலைய தளவாடச் சாமான்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதுகுறித்துக் குறிப்பிட்டார்கள். காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்கள் அமர்வதற்கும், காவலர்கள் அமர்ந்து பணியாற்றுவதற்கும், காவல் நிலையங்களில் தற்போது போதுமான அடிப்படை வசதிகள் இல்லை; இவ் வசதிகளை அங்கே ஏற்படுத்துவதற்கும், போதுமான நிதி ஒதுக்கீடு இல்லை என்ற குறை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதைப் பரிசீலித்து, பொதுமக்கள் உட்காருவதற்காக நாற்காலிகள், காவலர்களுக்குத் தேவையான மேசை, நாற்காலிகள், பதிவேடுகளை வைத்துக் கொள்வதற்குத் தேவையான அலமாரி போன்ற பொருள்கள் வாங்க, ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் 20 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முடிவெடுத் துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமாத்திரமல்லாமல், காவல் நிலையங்களில், இது வரையில் இல்லாத ஒன்று அவசிய செலவின வசதி. காவல் நிலையங்களில் ஏற்படும் சில்லறைச் செலவினங்களுக்குப் போதுமான பணம் ஒதுக்கப்படவில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஆண்டுக்கு 5,000 ரூபாய் சில்லறைச் செலவுக்காகப் பணம் ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக அரசுக்கு ஒரு கட்டச் செலவினமாக 69 இலட்ச ரூபாய் ஆகும்.

அதுபோல, ஒவ்வோர் ஆயுதப் படை முகாமிற்கும் ஆண்டொன்றிக்கு 10 ஆயிரம் ரூபாய் சில்லறைச் செலவுக்காக ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

நாகை மாவட்டக் காவல் அலுவலகம். 1971 முதலாகவே, அங்கே இந்த அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. எனவே, நாகை வெளிப்பாளையம் என்ற இடத்திலே அனைத்துக் காவல் அலுவலகங்களும் ஒரே இடத்திலே செயல்பட வசதியாக 62 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடத்தை, நாகை மாவட்டக் காவல் தலைமை அலுவலகத்தைக் கட்ட இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

காவலர்களுடைய நலன் காக்க, நிதி ஒதுக்கீடு போது மானதாக இல்லை என்று குமாரதாஸ் அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். ஏதோ 4% தான் இருக்கிறது; அதை 6% ஆக்க வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். நாம் அதிலே என்றும் குறை வைக்கவில்லை. நான் முதலிலே சொன்னதெல்லாம், காவல் துறையினை நவீனப்படுத்துவதற்காகச் சொன்ன செலவுகள். காவலர்களுடைய நலனுக்காக என்று எடுத்துக் கொண்டால், நிறையச் செய்திருக்கிறோம். 1991-92 என எடுத்துக் கொண்டோம் என்றால், 89 இலட்சம் ரூபாய்தான் செலவு செய்திருக்கிறார்கள். காவலர் நலனுக்காக 1992-93-லே, 12.80 கோடி ரூபாய்; 1993-94-லே, 16 கோடி ரூபாய்; 1994-95-லே 20 கோடி ரூபாய். 1995-96-லே, 14½ கோடி ரூபாய். இவையெல்லாம் 5 வருடங்களுக்கான செலவு, கழக அரசு பொறுப்பேற்றபிறகு, 1996-97-ல் 52 கோடி ரூபாய், 1997-98-லே 99 கோடி ரூபாய் 5 வருடங்களிலே, காவலர் நலனுக்காக முன்பிருந்த அரசு செலவழித்தது 65 கோடி ரூபாய். 2 வருடங்களிலே, நாம் செலவழித்தது, 151 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி). இதைக்கூட, பத்திரிகையிலே செய்தியைப் பார்த்துவிட்டு, அந்த அம்மா அறிக்கை விட்டாலும் விடுவார்; 'இவையெல்லாம் நான் நினைத்தது' என்று. (சிரிப்பு). 'நான் நினைத்ததை, அவர் கொடுத்திருக்கிறார்' என்று சொல்வார். பரவாயில்லை. நினைத்ததற்காகவாவது நன்றி கூறுவோம்.

காவலர்களுக்கான உணவுப்படி சட்டம்-ஒழுங்கு மற்றும் அவசரகாலப் பணிகளில், காவலர்களை ஈடுபடுத்தும்போதும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளைக் கவனிக்க மற்ற இடங் களுக்கும், மாவட்டங்களுக்கும் அனுப்பும் சமயங்களிலும் காவலர்களுக்கு உணவுப்படி வழங்கப்படுகிறது. 1997 ஆம்

ஆண்டில், உணவுப்படி பின்வருமாறு இந்த அரசால் உயர்த்தப் பட்டது: இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 16 ரூபாயிலிருந்து 25 ரூபாய் என 1997-லே உயர்த்தினோம். முதல் நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்களுக்கு 20 ரூபாயிலிருந்து 30 ரூபாய். உதவி ஆய்வாளர், ஆய்வாளர்களுக்கு 30 ரூபாயிலிருந்து 45 ரூபாய். தற்போது வழங்கப்படும் உணவுப்படி போதுமானதாக இல்லை எனவும், ஆகவே உயர்த்தித் தர வேண்டுமென்றும் காவலர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 25 ரூபாயிலிருந்து 35 ரூபாய் எனவும், முதல் நிலைக் காவலர், தலைமைக் காவலர்களுக்கு 30 ரூபாயிலிருந்து 40 ரூபாய் எனவும் உயர்த்தப்படுகிறது.

காவல்துறையிலே பணியாற்றும் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை தற்பொழுது 12 கிலோ அரிசி மானிய விலையிலும், 8 கிலோ அரிசி பொது விநியோக விலையிலும் வழங்கப்படுகிறது. இனிமேல் 20 கிலோ அரிசியும் மானிய விலையிலே காவலர்களுக்கு வழங்கிட வேண்டுமென இவ்வரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை 84,000 ஆகும். இதற்காக ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 1½ கோடி ரூபாய் செலவாகும்.

சீருடைப்படி. சீருடையைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். அந்த உடை எப்படி இருக்கலாம் என்று நானும் அவர்களும் கலந்து பேசி - மகளிர் காவலர்களுக்கான உடை எப்படி இருக்கலாம் என்று நான், அவர், அக்காள் பொன்னம்மாள் எல்லோரும் உட்கார்ந்து கலந்து பேசி - மூன்று பேர் கொண்ட கமிட்டி இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் ஆகிய மூன்று பேரைக் கொண்ட ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி அந்தச் சீருடையைப் பற்றி முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் மெஜாரிட்டி அவர்கள்தான் இருக்கிறார்கள். (சிரிப்பு).

1996 ஆம் ஆண்டில் இந்த அரசு பொறுப்பேற்றபின் காவலர்கள், தலைமைக் காவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட

சீருடைப்படி 25 ரூபாய் என்பதை 30 ரூபாய் என உயர்த்தி வழங்கப்பட்டது. தற்போது, சீருடைப்படி காவல் பணியாளர் களுக்குப் பின்வருமாறு மீண்டும் உயர்த்தி வழங்கப்பட விருக்கிறது: காவல் கண்காணிப்பாளர்கள் கூடுதல் கண்காணிப் பாளர்கள், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு 40 ரூபாய் என்பது 60 ரூபாய் என்றும், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு 30 ரூபாய் என்பது 50 ரூபாய் என்றும் தலைமைச் காவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோருக்கு 30 ரூபாய் என்பது 40 ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கப்படுகிறது. இதன்காரணமாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு கோடியே பதினெட்டு இலட்ச ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

காவலர்களுக்கு வழங்கப்படும் சீருடை எப்படி வழங்கப் படுகிறது என்றால் தற்போது சீருடை தைத்து வழங்கப்படுகிறது. சரியாக அளவெடுத்துத் தைக்கப்படாத காரணத்தால் இந்தச் சீருடைகளை மறுபடியும் தைக்க வேண்டிய நிலை ஏற்படுகிற தென்றும், இதனால் அரசு வழங்கும் சீருடையைக் காவலர்கள் சரியாகப் பயன்படுத்த முடிவதில்லை என்றும் குறிப்பிட்டு, தங்களுக்கு சீருடைக்குரிய துணியை வழங்குமாறு கோரி வருகிறார்கள். இக்கோரிக்கையினை ஏற்று காவலர்கள் அவரவர் விருப்பப்படி சீருடைகளைத் தைத்தோ அல்லது துணியாகவோ பெற்றுக்கொள்ளலாம் என அரசு முடிவெடுத்துள்ளது. மாதர் சங்கங்கள்மூலம் தைத்துக்கொள்வதாக இருந்தால் தையல் கூலி ரூபாய் 65 என்றிருப்பது ரூபாய் 75 ஆகவும் உயர்த்தப்படுகிறது.

காவலர் குடியிருப்புகள். அதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். காவலர் குடியிருப்புகள் மற்றும் காவல்துறைக் கட்டடங்களைச் சிறந்த முறையில் பராமரிப் பதற்கும், பழுதுபார்ப்பதற்கும் ஏதுவாக, இதுவரை பொதுப்பணித் துறையால் செய்யப்பட்டு வந்த இப்பணிகள் 1-4-1998 முதல் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இப்பணிகளுக்காக இந்த ஆண்டு ரூபாய் 5 கோடி செலவிட அரசு உத்தேசித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இத்தொகை மாவட்ட வாரியாகப் பிரித்துக் கொடுக்கப்படும். மாவட்டங்களிலே உள்ள காவலர் குடியிருப்புகளில் அவசியத் தேவைகளின் அடிப்படையில் இத்தொகை செலவிடப்படும்.

ஏற்கெனவே ஆண்டொன்றுக்கு 1500 வீடுகள் என்ற அளவில் கட்டப்பட்டு வந்தன. சென்ற ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு 2500 வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப் பட்டு, அந்த கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. அதுபோல, 1998-99 ஆம் ஆண்டிலும் மேலும் 2500 வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 5000 வீடுகள் காவலருக்கென இந்த அரசின் முயற்சியால் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கென 85 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்திலேயுள்ள 28,792 காவலர் குடியிருப்புகளில், மின்விசிறி உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 17,652. மின்விசிறிகள் இல்லாத 11,140 குடியிருப்புகளுக்குக் காவலர் வீட்டு வசதிக் கழகத்தின்மூலம் 1 கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு மின்விசிறிகள் இணைத்துக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, தமிழ்நாடு காவலர் உடல் நல நிதித் திட்டத்தின் கீழ் ஆண்டு மானியம் தற்போது 30 இலட்ச ரூபாய் வழங்கப் படுகிறது. அந்த மானிய உதவி இந்த ஆண்டு 50 இலட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

காவல் துறையிலே தற்போது தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 20 வீதம் மிகைப் பணிக்கொடை வழங்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு இந்த Extra Time Remuneration 20 ரூபாய் என்பதற்குப் பதிலாக 50 ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும். இதன் காரணமாக 77,473 காவல் பணியாளர்கள் பயன்பெறுவார்கள். 11 கோடியே 16 இலட்ச ரூபாய் கூடுதல் செலவாகும். அடுத்து Risk Allowance இடர்படி காவலர்கள் ஆபத்து நிறைந்த சூழ்நிலைகளில் பணிபுரிவதால் அவர்களுக்கு மாதந்தோறும் இடர்படி Risk Allowance வழங்கப்பட்டு வருகிறது. காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை 20 ரூபாய் என்றும், துணைக் கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு 30 ரூபாய் என்றும் இடர்படி

இருந்து வருகிறது. இனிமேல் இந்த இடர்படி பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்:-

காவலர் முதல் ஆய்வாளர் வரை ரூபாய் 50 என்றும், துணைக் கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு ரூ. 60 என்றும் வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு 5.16 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

காவல்துறையிலே பதவி உயர்வு இல்லாமல் தேக்க நிலை ஏற்பட்டு இருப்பதாக பத்திரிகைகள் எல்லாம் எழுதுகின்றன. எல்லாப் பத்திரிகைகளும் எழுதுகின்றன. தெரிந்தோ, தெரியாமலோ அல்லது தெரிந்தும் வேண்டுமென்றோ சில பத்திரிகைகள் எழுதுகின்றன. அதில் ஒரு குறிப்பை மாத்திரம் படித்துக் காட்டுகிறேன். இதிலே Director-General of Police, Additional Director-General of Police எல்லாம் தேவை இல்லை என்று கருதுகிறேன். Additional Superintendent of Police என்று எடுத்துக்கொண்டால் 55 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Deputy Superintendent of Police என்று எடுத்துக்கொண்டால் 130 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Inspector of Police (Taluk) என்று எடுத்துக்கொண்டால் 255 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Inspector of Police (Armed Reserve) என்று எடுத்துக்கொண்டால் 53 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Sub-Inspector of Police (Taluk) என்று எடுத்துக்கொண்டால் 173 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Sub-Inspector of Police (Armed Reserve) என்று எடுத்துக்கொண்டால் 208 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Head Constable என்று எடுத்துக்கொண்டால் 9000 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக் கின்றன. Grade-I Police Constable என்று எடுத்துக்கொண்டால் 10106 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Women Head Constable என்று எடுத்துக்கொண்டால் 400 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. மொத்தம் 20,500 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Actual Strength - 80,322; இதிலே Percentage of Actual Strength benefitted through promotion - 25.52%.

அதாவது, 25% சதவிகிதம் பதவி உயர்வு தரப்பட்டிருக் கிறது. மேலும் இவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பது என்ற அடிப்படையில் 15 ஆண்டுகள் பணி செய்த காவலர்களுக்கு தலைமைக் காவலர் பதவி உயர்வு அளிக்கப்படும் என்று சென்ற ஆண்டு இந்த அரசு அறிவித்ததைத் தொடர்ந்து 9000 காவலர்கள், தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து இப்போது தலைமைக் காவலர்கள் தங்களையும் உதவி ஆய்வாளர்களாக (S.I.) பதவி உயர்வு செய்ய வேண்டுமென்று கோரி வருகின்றார்கள்.

இதனையும் அரசு பரிவுடன் கவனித்து 10 ஆண்டுகள் தலைமைக் காவலர்களாகப் பணி முடித்தவர்களுக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் (Special S.I.) பதவி உயர்வு அளித்து மற்ற உதவி ஆய்வாளர்களுக்கு இணையான சம்பளத்தை இவர் களுக்கும் வழங்கிடலாம் என இந்த அரசு தீர்மானித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இதன் மூலம் இரண்டாம் நிலைக் காவலராகப் (Second Grade) பணியில் சேரும் ஒருவர் 25 ஆண்டுகளில் உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அடுத்து, Ministerial Staff - அமைச்சுப் பணியிடங்கள். காவல்துறை அமைச்சுப் பணியாளர்கள் புதிய பணியிடங் களைத் தோற்றுவிக்க வேண்டுமென்று பலகாலமாகக் கோரி வருகின்றார்கள். குறிப்பாக புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களிலும், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஆயுதப்படைப் பிரிவிலும் போதுமான அமைச்சுப் பணியாளர்கள் இல்லை யெனவும், அவ்விடங்களுக்குப் போதிய பணியிடங்களைத் தோற்றுவிக்க வேண்டுமெனவும் கோரிஉள்ளார்கள். அரசு இக்கோரிக்கையை ஏற்று, தேவையான புதிய அமைச்சுப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். அதற்கான பிரேரணைகள் காவல்துறைத் தலைவரிடமிருந்து பெற்று ஆணைகள் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

காவல்துறையில் பணிபுரியும் காவலர்கள் தங்களது குறைகளைத் தங்களுடைய மேல் அதிகாரிகளுக்கோ அல்லது

அரசாங்கத்திற்கோ சரியான முறையில் தெரிவிக்க முடிவதில்லை என்ற குறை அவர்கள் மத்தியிலே நெடுங்காலமாக இருந்து வந்தது. காவல்துறையில் காவலர்களின் குறைகளைக் களைய பல நடைமுறைகள் இருந்தாலும் அவை பலகாலமாக முழுமையாகச் செயல்படவில்லை என்பதால் காவலர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக புதிய அணுகுமுறைத் திட்டம் ஒன்றைப் புகுத்துவது குறித்து அரசு பரிசீலித்தது. அதன்படி காவலர்கள் தங்களுடைய குறைகளை சம்பந்தப்பட்ட காவல்துறை அதிரிகாரிகள் விரைந்து தீர்த்து வைப்பதற்கும், தக்க செயல்முறை நடவடிக்கைகளை வரையறுத்து அவற்றைத் தவறாது கடைபிடிக்க வேண்டுமென்றும் அனைத்து மாவட்ட காவல்துறை கண்காணிப் பாளர்கள் மற்றும் மாநகரக் காவல்துறை ஆணையர்கள் ஆகியோருக்கு அறிவுரைகள் வழங்கி அரசு சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளது. சென்னை காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திலும், அரசுத் தலைமைச் செயலகத்திலுள்ள உள் துறையிலும், காவலர்களின் குறைகளைக் களைவதற்காக தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மதுவிலக்குபற்றியும் கள்ளச் சாராயம்பற்றியும் நிரம்பப் பேசப்பட்டிருக்கிறது. இந்த மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு முன்பு தனியாகச் செயல்பட்டு வந்தது. இதைக் காவல்துறையிலுள்ள மற்ற பிரிவுகளோடு இணைத்தால் மதுவிலக்கு நல்ல முறையிலே அமலாகும் என்ற கருத்துக்கள் கூறப்பட்டன. அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கலைக்கப்பட்டு மாவட்ட காவல்துறையோடு இணைக்கப்பட்டது. அதனுடைய செயல்பாடுகள் மிகவும் மந்தமான நிலையில் இருந்தன. என்பதற்குப் புள்ளிவிவரங்களே அத்தாட்சி. குமாரதாஸ் குறிப்பிட்டாரே அந்த மூன்று இலட்சம், அதுவே குறைவு என்று நான் சொன்னேன். 1996 ஆம் ஆண்டு இந்த மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு இருந்தபோது, 1996 ஆம் ஆண்டிலே 5,17,799 வழக்குகள்; ஆனால் அந்தப் பிரிவு எடுக்கப்பட்ட பிறகு 3,05,054 என்று அது குறைந்து விட்டது. கைது செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கையும் அப்படித் தான். 1996-இல் மதுவிலக்குக் குற்றத்திலே கைது செய்யப்பட்டவர்கள் 4,91,141 பேர். இதை அறிவித்த பிறகு 2,96,000 என்று குறைந்து விட்டது. எனவே, கடந்த இரண்டு ஆண்டுகளிலே ஏற்பட்ட தொய்வு நிலையைக்

கருத்திலேகொண்டு, கள்ளச் சாராயத்தை ஒழித்து சமுதாயத்தில் ஏற்படும் பொருளாதாரச் சீர்கேட்டைத் தடுக்கும் நோக்கில், கள்ளச் சாராய ஒழிப்பு போன்ற வேலைக்கு சம்பந்தப்பட்ட பணிகளைத் தனித்து திறம்பட கவனிப்பதற்காக முன்பு இருந்ததைப் போலவே ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது - மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு - (மேசையைத் தட்டும் ஒலி). ஓராண்டு காலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் காரணமாக மீண்டும் அந்தப் பிரிவு அமைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விருதுநகரில் 31-3-1998 அன்று, மாவட்ட ஆயுதப்படை காலவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சுமார் 250 நபர்கள் காவலர்களுடைய சில பணிக்கால கோரிக்கைகளுக்காகத் திடீரென்று சாலை மறியலில் ஈடுபட்டார்கள், கட்டுப்பாடு உள்ள காவல்துறையில் இத்தகைய செயல்கள் ஏற்புடையது அல்ல என்பதால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த 27 காவலர்கள் விருதுநகரிலிருந்து பணி மாற்றம் செய்யப்பட்டார்கள். அதில் தற்போது 26 காவலர்கள் தங்கள் குடும்பத்தினர் சிலர், வேண்டாத நபர்களின் தூண்டுதலால் இச்செயலில் ஈடுபட்டதாகக் கூறி இந்தச் செயல்களுக்கு வருத்தம் தெரிவித்த மன்னிப்பும் கோரி, தங்களுக்கு வழங்கப்பட்ட பணி மாற்றத்தை ரத்து செய்து ஏற்கெனவே பணி செய்த இடத்தில் பணிபுரிய ஆணையிடுமாறு வேண்டிக்கொண்டார்கள். காவலர்களுடைய நலனில் எப்போதும் அக்கறை கொண்ட இந்த அரசு அவர்களுடைய கோரிக்கையை மனிதாபிமான அடிப்படையில் ஏற்று அவர்களுக்கு வழங்கிய பணி மாற்றத்தை ரத்து செய்து அந்தப் பணி மாற்றத்திற்கு முன்பு எங்கெங்கே பணிபுரிந்தார்களோ அங்கங்கேயே பணிபுரிய ஆணையிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

தீயணைப்பு நிலையங்களைப் பலபேர் கேட்டிருக்கிறார்கள். ஒன்றுகூட கொடுக்கப் போவதில்லை. ஏனென்றால், முந்தைய ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டு காலத்திலே, 29 தீயணைப்பு நிலையங்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தி. மு. க. ஆட்சியில் இந்த இரண்டு வருடத்தில் 47 தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).

ஆனால் இந்த 47 தீயணைப்பு நிலையங்களுக்குத் தேவையான முழு அடிப்படை வசதிகளை உருவாக்குவதில் இந்த அரசு இந்த ஆண்டு கவனம் செலுத்தப்போகிறது. இல்லா விட்டால், ஒவ்வொருவரும் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருப்பீர்கள். தினமும் காவல்துறைக்கு ஒரு கேள்வி, தீயணைப்புத் துறைக்கு ஒரு கேள்வி, புதிய வளாகங்களுக்கு ஒரு கேள்வி என்று இந்தக் கேள்விகள் எனக்கு வரும். அந்தக் கேள்விகளிலே ஒரு கேள்வியாக எப்போது கட்டடம் கட்டப்படும் என்று கேட்பீர்கள், எப்போது தீயணைப்புத் துறைக்கு வசதிகளைச் செய்து தருவீர்கள் என்று கேட்பீர்கள். அந்தக் குறையைத் தீர்க்க இந்த ஆண்டு பூராவும், 47 தீயணைப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டவைகளில், இவைகளையெல்லாம் செம்மைப்படுத்த அடிப்படை வசதிகளைக் கவனிக்கதான் நாங்கள் கருதியிருக்கிறோம்.

புதிய காவல் நிலையங்கள். பாளையம் அமரமூர்த்தி, அரியலூர் அவர்கள் கேட்டார்கள். பெரம்பலூர் மாவட்டத்திலே வெங்கலூரில் ஒன்று உண்டு. அதற்குக் கை தட்டலாம். (மேசையைத் தட்டும் ஒலி). சங்ககிரி முத்து கேட்டது நாமக்கல் மாவட்டத்தில் தேவூர் பேரூராட்சியிலே.

தூத்துக்குடி பெரியசாமி கேட்டது, தூத்துக்குடியிலே தாளமுத்து நகர்; முல்லைவேந்தன் கேட்டது, மகேந்திரமங்கலம், தருமபுரியிலே; பெருந்துறை பெரியசாமி கேட்டது, ஈரோடு மாவட்டம் காஞ்சிக்கோயில்.

பெரணமல்லூர் பாண்டுரங்கன் அவர்களும், அமைச்சர் பிச்சாண்டி அவர்களும் சேர்ந்து - கேட்டது, திருவண்ணாமலை மாவட்டம், பொன்னூரிலே, உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அன்றைக்குக் கேள்வி - கேட்டபோது, 'பொன்னூர் பரிசீலிக்கப்படும்' என்று சொன்னேன். அவர் மறுபடியும் கேள்வி கேட்டார். பரிசீலிக்கப்படுவது குற்றம் என்றால் வாபஸ் கொள்ளலாம் என்று சொன்னேன். இப்போது கொடுத்தாகிவிட்டது.

பவானி பாலசுப்பிரமணியம் கேட்டது, ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடல்; குழந்தை தமிழரசன் கேட்டது, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரில் போக்குவரத்துக் காவல் நிலையம்.

ஆலங்குடி சுயேட்சை உறுப்பினர் வெங்கடாசலம் கேட்டது, (குறுக்கீடு). அவர் இன்று இல்லையா? அதை மாற்றிக் கொடுத்து விடலாம். (சிரிப்பு). அவர் கேட்டது. கரம்பக்குடியிலே; வாசுகி முருகேசன், கரூர் நகர் போக்குவரத்துக் காவல் நிலையம்; தீரன் ஆண்டிமடம், இரும்புலிகுறிச்சி, அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கெங்கவள்ளி; முகையூர் ஏ. ஜி. சம்பத் கேட்டது. விழுப்புரம் மாவட்டத்திலே கண்டாச்சிபுரம்; திருமங்கலம் முத்துராமலிங்கம் கேட்டது, மதுரை மாவட்டம் கூடக்கோயில்; ஓசூர் வெங்கடசாமி கேட்டது, தருமபுரி மாவட்டம், உத்தன்னபள்ளி; சோழவந்தான் லா. சந்தானம் கேட்டது, மதுரை மாவட்டம் பாலமேடு பேரூராட்சி.

புறக்காவல் நிலையங்கள் படிப்படியாக நிதி வசதிக்கேற்ப முழுக்காவல் நிலையங்களாக எல்லாப் புறக்காவல் நிலையங் களும் தரம் உயர்த்தப்பட இந்த ஆண்டு முதலே வேலை தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி உறுப்பினர் மணிவர்மா, தச்சம்பட்டில் காவல் நிலையம் வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டார். அதனால் கொடுக்கப்படுகிறது. இதையே அவர் வழக்கமாக வைத்துக்கொள்ளக்கூடாது என்றுகூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, மானியக்கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : என்னுடைய தொகுதியில், மல்லியில் புதிய காவல் நிலையம் வேண்டுமென்று கேட்டேன். எல்லோருக்கும் கொடுத்து விட்டீர்கள். எனக்கு மட்டும் கொடுக்கவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 'பகைவனுக்கும் அருள்வாய் நெஞ்சே' என்ற அளவில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடல் நலிவுற்ற நிலையிலும், ஏறத்தாழ ஒன்றேகால் மணி நேரம் பதில் அளித்திருக்கிறார்கள்.

உரை : 19 நாள் : 10.05.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியம் குறித்தும், மது விலக்கு குறித்தும், தீயணைப்புத் துறை குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற கட்சிகளின் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய அரிய கருத்துக்கள் பலவற்றை இந்த அவையிலே எடுத்துக்கூறி இருக்கின்றார்கள். பொதுவாக, காவல்துறை மானியம் என்றால், எதிர்க்கட்சி ஓர் இலக்கணம் வகுத்துக்கொள்வது உண்டு. வேகமாகப் பேசுவது, தாக்கிப் பேசுவது, காவல்துறையைக் கடுமையாக விமர்சிப்பது என்பதுதான் இலக்கணம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், காவல்துறை மானியத்திலே பேசுகிற நேரத்தில் ஓர் இலக்கணத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் வாயிலாக நாங்கள் உணர்ந்து, அதனைத்தான் இந்த அவையிலே தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டு இருக்கின்றோம். உதாரணத்திற்கு, 1962ஆம் ஆண்டு இந்த அவையிலே முதலமைச்சராக மரியாதைக்குரிய பெருந்தலைவர் காமராசர் அவர்கள் வீற்றிருந்தார்கள். அப்போது நான் எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர். காவல் துறை மானியத்தில் 12-7-1962 அன்று நான் உரையாற்றியபோது குறிப்பிட்ட சில கருத்துக்களை நினைவுக்குக் கொண்டுவருகின்றேன். "நமது போலீசார் ஒரு பெரிய தியாகப் பரம்பரையை நம் நாட்டில் உருவாக்கி வருகிறவர்கள். சிறப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமானால், வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு, இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, நமது மாநிலத்தில் இருக்கிற போலீசார் தங்களுடைய கடமையை ஆற்றி வருகிறார்கள் என்பதை நான் இங்கு

சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. கடும் மழையிலும், கொடிய வெயிலிலும், நள்ளிரவிலும் தங்களுடைய பணியினை கொலைகாரர்கள் மத்தியிலும், கள்வர்கள் மத்தியிலேயும் தங்கள் உயிரைப் பற்றிய கவலை இல்லாமல் மரணத்தைத் துச்சமாக மதித்துக் கடமைக்காகப் போராடி வருகின்ற அந்தத் தியாக சீலர்களை திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்டவர்களின் உழைப்பின் மேன்மையை உணர்ந்து. அவர்களுக்கு மேலும் பல சலுகைகள் வழங்கவேண்டுமென்று கேட்பதுதான் இந்த வெட்டுப் பிரேரணைமீதும் இந்த மானியத்தின்மீதும் நான் எழுப்புகின்ற குரல் என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்" என்பதுதான் அன்றைக்குப் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது காவல்துறை மானியத்திலே நான் ஆற்றிய உரையின் தொடக்கம்.

அதன் பின்னர், எதிர்க்கட்சித் தலைவராக 27-3-1982 அன்று காவல்துறை மானியத்திலே நான் பேசிய பேச்சின் தொடக்கப் பகுதி; அப்போது அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார்கள்; எடுத்த எடுப்பிலேயே எம். ஜி. ஆர். அவர்களுக்கு ஒரு நன்றி கூறினேன். "கடந்த சில நாட்களுக்கு முன்பு தமிழகத்திலும் கேரளாவிலும் இருந்து நூற்றுக்கு மேற்பட்டவர்களை துபாய் நாட்டிற்கு வேலையிலே சேர்ப்பதற்காக என்று ஏமாற்றி அழைத்துச்சென்று. காட்மாண்டு என்கின்ற இடத்திலே அவர்களைத் தவிக்க விட்டுவிட்ட நிகழ்ச்சியை நான் முதலமைச்சருடைய கவனத்துக்கு இங்கே கொண்டுவந்தேன். அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுத்து தமிழக அரசின் சார்பிலும், காவல் துறையின் சார்பிலும், மத்திய அரசினுடைய உதவியோடும், காட்மாண்டு பகுதியிலே உள்ள அதிகாரிகளுடைய உதவியோடும் கடத்திச் செல்லப்பட்ட அல்லது ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட தமிழக, கேரள மக்கள் நூற்றுக்கு மேற்பட்டோர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ளப்படு வதற்குக் காரணமாக இருந்த இந்த அரசையும் முதலமைச்சரையும் பாராட்டி நான் என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்" என்று அன்றைக்குக் குறிப்பிட்டேன். மேலும், அந்த உரையிலே நான் குறிப்பிட்டதை, காவல் துறை குறித்து இங்கே வைக்கப்பட்டுள்ள இந்த ஆய்வுரையிலே காவல் துறையின் தொண்டுகள் எவ்வளவு

சாலச் சிறந்தவை என்பதுபற்றியும், காவல் துறை எப்படிப்பட்ட இன்னல்கள், இடையூறுகள், இவைகளையெல்லாம் கடந்து தன் கடமையை ஆற்ற வேண்டியிருக்கிறது என்பது குறித்தும் கூறப்பட்ட வாசகங்களில் இருவேறு கருத்துக்கு இடமேயில்லை. அப்போது ஏறத்தாழ 5 கோடி மக்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்றால், இந்த 5 கோடி மக்களிடத்திலே சட்டம் ஒழுங்கு, அமைதி இவைகளை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பை ஏற்று பணியில் இருக்கின்ற காவலர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 50 ஆயிரம் பேர்தான். இதை ஒரு சராசரி கணக்காகப் பார்த்தாலும்கூட 5 ஆயிரம் மக்களுக்கு ஒரு போலீஸ்காரர் என்ற அளவுக்கு நிலைமை இருக்கும்பொழுது, இந்த 5 கோடி மக்களின் பிரச்சினை களையும் அவர்களிடத்திலே ஏற்படுகின்ற பூசல்களையும் சச்சரவு களையும் சட்டம் ஒழுங்கு அமைதி இவற்றிக்கு இடையூறாக நடைபெறுகின்ற காரியங்களைக் கவனிக்கவும், நடவடிக்கை எடுக்கவும் பொறுப்பேற்றுக்கொண்டு சில நேரங்களில் தங்களுடைய உயிரையும்கூடத் துச்சமாக மதித்துப் பணியாற்றுகின்ற, தொண்டாற்றுகின்ற காவலர்கள்பேரில் என்றைக்குமே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓர் அனுதாபம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் என்று 1982ஆம் ஆண்டு இதே அவையிலே எதிர்க்கட்சித் தலைவராக இருந்து நான் ஆற்றிய உரையிலே குறிப்பிட்டு இருக்கின்றேன்.

ஓர் ஆளுங்கட்சியின் சார்பிலே பேசுகின்ற உறுப்பினரைப் போலவே காவலர்களைப்பற்றிப் பேசிய அந்த நேரத்திலே நான் இந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறேன். அதற்குக் காரணம், காவல் துறையிலே எல்லோரும் கெட்டவர்கள் அல்ல. இதை நாம் மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு சிலருடைய தீய செயல்கள், அடாத காரியங்கள், தவறான போக்கு ஆகியவை அந்தத் துறை முழுவதற்கும் உரியது என்று நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. எத்தனையோ துறைகள் நாட்டில் இருக்கின்றன. மருத்துவர்கள் இருக்கின்றார்கள். ஒரு டாக்டர் தவறு செய்துவிட்ட காரணத்தால் அல்லது 10 டாக்டர்கள் தவறு செய்துவிட்ட காரணத்தால் மாநிலத்திலே இருக்கிற 10,000 டாக்டர்களும் தவறானவர்கள் என்று பொருள்கொள்ள முடியாது. ஓர் ஆசிரியரோ அல்லது அலுவலரோ, ஓர் அதிகாரியோ தவறு செய்துவிட்ட காரணத்தால் எல்லா அதிகாரிகளும் தவறானவர்கள்

என்று எடுத்துக்கொள்ள முடியாது. அதைப்போலத்தான் காவல் துறையிலும்கூட, சில பகுதியினர் தவறாகச் சில செயல்களிலே ஈடுபடுகிறார்கள் என்பதற்காக மொத்தமாகக் காவல் துறையை நாம் புண்படுத்துவது, அதற்கு எதிராகக் கருத்துக்களை எடுத்துக் கூறுவது கூடாது. அவர்களும் ஒருவகையான தொழிலாளிகள்தான். அவர்களும் பாட்டாளிகள்தான். அவர்களும் இந்த அரசிலே மக்களுக்காகத் தங்களுடைய கடமைகளை ஆற்றுவதற்காகத் தங்களை முழுவதுமாக ஒப்படைத்துக்கொண்டவர்கள்தான் என்கின்ற உணர்வோடுதான் இதை அணுகவேண்டியிருக்கிறது. அதனால்தான் அன்றைக்கு நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டப் பேரவையினுடைய தலைவராக இருக்கின்ற திரு. கணேசன் அவர்கள்கூட நான் எழுதிய ஒரு பாடலை, காவல் துறையினர் பற்றி நான் எழுதிய ஒரு பாடலை இங்கே நினைவூட்டினார்.

திரு. பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 'உதயசூரியன்' என்கின்ற நாடகத்தில் ஒரு போலீஸ்காரருடைய சிறுகதை இடம்பெறும். அந்த நாடகத்திலே, ஒரு போலீஸ்காரருடைய மனைவி, அவருடைய குழந்தையைத் தொட்டிலிலே போட்டு, ஆட்டும்போது பாடுகின்ற பாட்டு அது.

"போலீஸ் வேலைக்கு போகின்ற ஒங்கப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த தரித்திரனே கண் வளராய்
காக்கி உடைபோட்டுக்கிட்டு, சிவப்பு தொப்பி -
மாட்டிக்கிட்டு (அப்போது சிவப்பு தொப்பி -)
போகின்ற ஒங்கப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுக்கிட்டு வருகின்ற கடன்காரன் தொல்லை
தாங்காமல் காவி உடை வேணுமடா, கமண்டலமும் தேவையடா"

என்று பாடுகின்ற தாலாட்டுப் பாட்டு அது. அந்தப் பாட்டு இருந்த காரணத்தினாலேயே அன்றைக்குப் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் உதயசூரியன் நாடகத்தைத் தடை செய்துவிட்டார். இது போலீஸ்காரர்களைத் தூண்டிவிடுகின்ற காட்சி, பாட்டு என்று சொல்லித் தடை விதித்துவிட்டார். ஆனாலும், அந்தப் பாட்டை இந்த அவையிலேயே நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்து, அவருக்கு முன்பாகவே பாடிக்காட்டி, இப்போது உங்களால் தடை செய்ய முடியாது. இந்தப் பாட்டுத்தான் அந்த நாடகத்திலே இடம்பெற்றது என்று, (மேசையைத் தட்டும் ஒலி)

அவரும் சிரிக்க சிரிக்க, கேட்க கேட்க, அந்தப் பாடலைப் பாடியும் காட்டியிருக்கின்றேன்.

காவல் துறை நண்பர்களுடைய சங்கடங்களை உணர்ந்துதான், அவர்களுடைய மாதாந்திர ஊதியம் மிக மிகக் குறைவாக இருப்பதையெல்லாம் எண்ணிப்பார்த்துத்தான், 1969ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பை, முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன், திரு. ஆர்.ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ். அவர்களுடைய தலைமையில் இந்தியாவிலேயே முதல் தடவையாக, காவல் துறையினருடைய நிலைமைகளை ஆராய்ந்து சொல்ல, ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த கமிஷன் 134 பரிந்துரைகளை வழங்கியது. அவைகளை ஏற்றுக்கொண்டு, உடனடியாக அவற்றை அப்போது நடைமுறைப்படுத்தியதும், இந்தக் கழக அரசுதான். Second Grade Constables - இரண்டாம் நிலைக் காவலர்களுடைய அடிப்படை மாத ஊதியம் அன்றைக்கு 70 ரூபாய் முதல் 95 ரூபாய் வரை இருந்தது. அதை அந்தக் கமிஷனுடைய சிபாரிசின்படி 150 ரூபாய் முதல் 225 ரூபாய் என்று, முதன் முதலாக உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் (மேசையைத் தட்டும் ஒலி). எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலே வெற்றிபெற்றவர்கள் First Grade Constables ஆகலாம் என்ற புதிய நிலையை உருவாக்கி, அவர்களுடைய அடிப்படை மாத ஊதியம் 200 ரூபாய் முதல் 300 ரூபாய் என்று அவர்களுக்கும் ஊதியம் உயர்த்தப்பட்டது. ஆனால், இப்போது அந்த இரண்டாம் நிலைக் காவலர்களுடைய மாத அடிப்படை ஊதியம் 3,050 ரூபாய். முதல் நிலைக் காவலர்களுடைய மாத அடிப்படை ஊதியம் ரூ. 3200 என்று உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இதற்கிடையிலே 1989 ஆம் ஆண்டு மீண்டும் கழக அரசு அமைந்தபோது முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம், ஐ.ஏ.எஸ். அவர்களுடைய தலைமையில் இரண்டாவது போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு, அவர்கள் தந்த 112 பரிந்துரைகளில் 102 பரிந்துரைகள்மீது முடிவெடுத்து ஆட்சி அப்போது கலைக்கப்படுவதற்கு முன்பு, 79 பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவலர்களுடைய ஊதியத்தைப்பற்றி உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் திரு. பழனிசாமி இங்கே பேசும்போதும் குறிப்பிட்டார்கள். ஓர் ஒப்பீடு பார்த்தால், தென்மாநிலங்களில் பணிபுரிந்துவரும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் இதரப் படிகளுடைய விவரங்கள் ஒரு மாதத்திற்கு என்று எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டில், அடிப்படைச் சம்பளம் 3050 ரூபாய். ஆந்திராவில் 1595 ரூபாய், கேரளாவில் தமிழ்நாட்டைப் போலவே 3050 ரூபாய். கர்நாடகத்தில் 3000 ரூபாய். பாண்டிச்சேரியில் 2750 ரூபாய். இந்த அடிப்படைச் சம்பளத்தோடு சிறப்பு ஊதியம், அகவிலைப்படி, வீட்டுவாடகைப் படி, நகர ஈட்டுப் படி, சீருடைப் படி ஆகிய இத்தனையும் சேர்த்தால், தமிழ்நாட்டில் இரண்டாம் நிலைக் காவலர்களுக்குத் தரப்படுகின்ற மாதாந்திரச் சம்பளம் 4630 ரூபாய். ஆந்திராவில் 3172 ரூபாய். கேரளத்தில் 3943 ரூபாய். கர்நாடகத்தில் 4262 ரூபாய். பாணடிச்சேரியில் 4080 ரூபாய். ஆக, தமிழ்நாட்டில்தான் 4630 என்கின்ற அதிகத் தொகை, எல்லாவற்றையும் சேர்த்து மாதந்தோறும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதைப்போலவே, காவல் துறை உதவி ஆய்வாளர்கள் ஊதியம். எஸ்.ஐ. ஆகியோருடைய ஊதியம், ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்பதற்கு முன்னால், உதவி ஆய்வாளர்கள், துணை வட்டாட்சியர்கள் ஆகியோருடைய அடிப்படைச் சம்பளம் 1600 ரூபாயாக இருந்தது. அதைத்தான் அன்றைக்கு சுப்பராயன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். "இப்பொழுது துணை வட்டாட்சியர்களுடைய ஊதியத்திற்குக் குறைவாக இது இருக்கிறதே, இதைச் சரிசெய்யவேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். ஆனால் காவல்துறை ஆய்வாளர்களுடைய ஊதியத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தைத் தருகிறோம் என்று வாக்களித்து, மத்திய அரசு என்ன ஊதியம் தருகிறதோ அதைத்தான், இங்கேயும் தந்து கொண்டிருக்கிறோம். இதிலே சில மாறுபாடுகள் இருக்கலாம். ஆனால், ஒன்றைச் சரிசெய்ய ஆரம்பித்தால், தொடர்ந்து ஒரு சங்கிலித் தொடர்போல மற்ற மற்ற துறைகளில் உள்ளவர்கள் போராடக்கூடும், வாதிடக் கூடும் என்பதையும் மறந்துவிடக்கூடாது. இந்தப் பரிந்துரைகளை ஏற்றபின், எஸ்.ஐ.-யினுடைய அடிப்படை

ஊதியம் இப்பொழுது 5,300 ரூபாயாக இருக்கிறது. திரு. சுப்பராயன் அவர்கள் குறிபிட்டதைப்போல, துணை வட்டாட்சியருடைய அடிப்படை ஊதியம் 5,500 ரூபாயாக இருக்கிறது. அந்த அளவிற்கு இதைச் சரிசெய்யவேண்டுமென்றால், அதையே 5500 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று சொன்னால், மத்திய அரசு தருகின்றதைவிட அதிகமாகக் கொடுத்துவிட்டோம் என்று அதைப்போல எங்களுக்கும் கொடுங்கள் என்று பல துறைகளில் உள்ளவர்கள் வாதிடக்கூடும் எனவேதான் இதிலே நாம் வெகுவாகக் கை வைக்க இடமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குற்றங்களைப்பற்றி இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னை மாநகரத்திலே ஏதோ பயங்கரமான சூழ்நிலை இருப்பதாகச் சொன்னார்கள். நான், இருப்பது குறைவு என்றாலும்கூட, அதை ஏற்றுக்கொண்டு பேசவில்லை. ஆனால் ஒன்றை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். புதுடெல்லியிலே தேசிய குற்ற ஆவணக் கூட்டம் National Crime Records Bureau என்ற ஒன்று இருக்கிறது. அது வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி, ஒவ்வொரு 100 சதுர கிலோ மீட்டருக்கும், அகில இந்திய சராசரியில் காவலர்களுடைய எண்ணிக்கை 38 பேர், ஆனால் தமிழ்நாட்டில் 57 பேர், ஒரு காவலருக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு அகில இந்திய சராசரியில் 61,883 ரூபாய். தமிழ்நாட்டில் 68,059 ரூபாய்.

குற்றங்களைப் பொறுத்தவரையில் குற்றப்பத்திரிகை விகிதாச்சாரம் : அகில இந்திய சராசரி 76.9%. தமிழ்நாடு 90.6%. நீதிமன்றங்களிலே வழங்கப்படுகின்ற தண்டனையின் விகிதாச் சாரம் : அகில இந்திய சராசரி 37.8%; தமிழ்நாட்டு சராசரி 63.6 சதவிகிதமாக இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன்.

காவலர்களுடைய நலனுக்கான செலவினம் 1991 முதல் 1996 வரை, தமிழகத்திலே கடந்த 5 ஆண்டு காலத்தில் தொடரும் செலவு 5.58 கோடி ரூபாய்; தொடராச் செலவு 59.96 கோடி ரூபாய். ஆக, கடந்த ஆட்சியில் 5 ஆண்டுகளில் மொத்தம் 65.54 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 1996 முதல் இந்த 3 ஆண்டுகளில், கழக ஆட்சியில், தொடரும் செலவு 47.40 கோடி

ரூபாய்; தொடராச் செலவு 223.55 கோடி ரூபாய். கடந்த 5 ஆண்டுகளில் காவலர் நலனுக்காகச் செலவிடப்பட்டது மொத்தம் 65 கோடி ரூபாய்; இந்த 3 ஆண்டுகளில் செலவிடப்பட்டது மொத்தம் 270 கோடி ரூபாய் என்பதை நான் பெருமிதத்தோடு இங்கே தெரிவித்துக்கொள்வேன்.

காவல் துறையை நவீனமயமாக்க வேண்டும் என்ற கருத்தும் இங்கே எடுத்துக்கூறப்பட்டது. நம்முடைய உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போதுகூட இன்னும் அதிகமான பயிற்சியை அவர்களுக்குத் தரவேண்டும், மனித உரிமையைப் பற்றி எல்லாம் அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். பயிற்சி இப்போதே 6 மாதத்திலிருந்து 9 மாதத்திற்கு நீட்டிக்கப்பட்டிருப்பதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். பயிற்சியை அளிப்பதற்காகப் பல முறைகள் இன்றைக்குக் கையாளப்படுகின்றன. அவர்களுக்கு அத்தகைய பயிற்சிகளை அளிக்கின்ற முனைப்பான காரியத்தில் இந்த அரசும் காவல் துறையும் ஈடுபட்டிருக்கின்றன. பயிற்சி பெற்றால் மாத்திரம் போதாது என்று காவல் துறையை நவீனமயமாக்குவதற்காக, குறிப்பாக தகவல் தொடர்பில் மேம்பாடு, வாகனங்கள் வாங்குதல், புலனாய்வுக்குத் தேவையான கருவிகள் வாங்குதல், போக்குவரத்து மேம்பாடு முக்கியப் பிரமுகர்கள் பாதுகாப்பிற்கும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கும் வேண்டிய உபகரணங்கள் வாங்குதல், காவல் துறையைக் கணினிமயமாக்குதல், காவல் துறையினருக்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோன்ற பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் காவல் துறையை நவீனமயமாக்க வேண்டுமென்ற திட்டத்தின்கீழ் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் 1991 முதல் 1996 வரையில் 41,56,27,000 ரூபாய் இந்தத் திட்டத்திற்காகச் செலவு செய்யப்பட்டது. இந்த 3 ஆண்டு காலத்தில் 40,93,54,000 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

குற்றங்கள் சென்னை மாநகரத்திலே, மற்ற மாநகரங்களோடு ஒப்பிடும்போது அகில இந்திய அளவிலே, மிகவும் குறைவான அளவிலேதான் இருக்கின்றன என்பதை நான்

சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1998ஆம் ஆண்டில் மாத்திரம் டெல்லியில் 649 பேரும், மும்பையில் 351 பேரும், கல்கத்தாவில் 80 பேரும், சென்னையில் 36 பேரும் கொலை செய்யப்பட்டிருக் கிறார்கள். 36 பேர் கொலை செய்யப்பட்டதை நான் சரியென்றோ, பரவாயில்லை என்றோ ஒத்துக்கொள்ளக்கூடியவன் அல்ல. இருந்தாலும், இந்தியாவிலே உள்ள பெரிய தலைநகரங்களோடு ஒப்பிடும்போது 1998ஆம் ஆண்டிலே மாத்திரம் கற்பழிப்புகள், டெல்லியில் 438, மும்பையில் 115, கல்கத்தாவில் 25, சென்னையிலே 5 தான். கடத்தல்கள் டெல்லியிலே 1333 மும்பையில் 179 கல்கத்தாவில் 117, சென்னையிலே 15, கொள்ளைகள், டெல்லியிலே 26,911, மும்பையில் 12,400 கல்கத்தாவிலே 4,041, சென்னையில் 1,196.

புதுடெல்லியில் உள்ள தேசிய குற்ற ஆவணக் கூடம் National Crime Records Bureau அண்மையில் மாநில வாரியாக - நான் முதலிலே சொன்னது மாநகர வாரியாக - ஒரு பட்டியலைப் புள்ளிவிவரங்களோடு வெளியிட்டிருக்கிறது. 1996 வரை அது கணக்கெடுத்து இருக்கிறது. அந்த ஆண்டு முழுவதுமாகக் கணக்கெடுத்து வெளியிட்டிருக்கிறது. அடுத்த ஆண்டுகளுக்கான கணக்குகள் வரவில்லை. உத்தரப்பிரதேசத்தில் 8,514 கொலைகள், பீகாரில் 5,277 கொலைகள், மராட்டியத்தில் 2,782 கொலைகள், ஆந்திராவில் 2,620 கொலைகள். மேற்கு வங்கத்தில் 1,929 கொலைகள், தமிழ்நாட்டில் 1,889 கொலைகள். மத்தியப்பிரதேசத்தில் கற்பழிப்புகள் 3,265, உத்தரப்பிரதேசத்தில் 1,854, ஆந்திராவில் 812, கேரளாவில் 389, தமிழ்நாட்டில் 327.

அதேபோன்று கூட்டுக் கொள்ளை (Dacoity). பீகாரில் 2,678, உத்தரப்பிரதேசத்தில் 1,259, மேற்கு வங்கத்தில் 728, ஆந்திராவில் 451, கர்நாடகத்தில் 256, தமிழ்நாட்டில் 172. கொள்ளை (Robbery) உத்தரப்பிரதேசத்தில் 5,395, பீகாரில் 2,955, மராட்டியத்தில் 2,865, மேற்கு வங்கத்தில் 869, ஆந்திராவில் 775, கர்நாடகாவில் 994, தமிழ்நாட்டில் 600. வன்குற்றங்கள் (Violent Crimes) - ஐப் பொறுத்த வரையில் உத்தரப்பிரதேசத்தில் 17,022. பீகாரில் 12,363, மேற்கு வங்கத்தில் 4,381, ஆந்திராவில் 4,658, கர்நாடகாவில் 3,085, தமிழ்நாட்டில் 2,988 என்கின்ற அளவில்தான் தமிழ்நாட்டிலே குற்றம், கொள்ளை, கொலை போன்ற காரியங்கள் மற்ற

மாநிலங்களோடு ஒப்பிடும்போது, மாநில அளவிலேகூடக் குறைவாக இருக்கிறது என்ற உண்மையை நமக்குத் தெரிவிக்கிறது. அதேபோல, களவுகள் நிறைய நடைபெறுகின்றன என்பதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், களவுகள் நடைபெறாத ஒரு சமுதாயத்தை நாம் கனவு காணுகிறோம். எந்தத் தவறும் நடைபெறாத ஒரு சமுதாயத்தைக் கனவு காணுகிறோம். அது நடைபெறுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இருந்தாலும் நடைபெற்றுவிட்ட தவறுகள் மேலும் நடக்காமல் இருப்பதற்காக, கண்டுபிடித்து வழக்குத் தொடுத்து. தண்டனை கொடுப்பது; அதிலே நாம் இன்றைக்குச் சுணங்கி போய்விட்டோமா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், களவாடிய பொருட்களைத் திரும்பப் பெற்று ஒப்படைத்த வகையில், 25-2-1998 அன்று ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள வைர நகைகள், 490 பவுன் தங்க நகைகள், 7 கிலோ வெள்ளிப் பாத்திரங்கள், எலெக்ட்ரானிக் சாதனங்கள், கேமராக்கள், 70 மோட்டார் சைக்கிள்கள், 11 கார்கள், 9 ஆட்டோக்கள் மற்றும் ரொக்கப் பணம் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் சென்னை மாநகரக் காவல் துறையினரால் களவு கொடுத்த பொதுமக்களுக்குத் திரும்ப ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இப்போது மொத்தமாகச் சொன்ன கணக்கு பலருக்குப் பகிர்ந்தளித்து, திரும்ப ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, 6-6-1998 அன்று 107 பவுன் தங்க நகை, வைர நகை, தொலைக்காட்சிப் பெட்டிகள், ரேடியோக்கள், 7 கிலோ வெள்ளிச் சாமான்கள், 3 மோட்டார் சைக்கிள்கள், 4 கார்கள் மற்றும் ரொக்கப் பணம் 2 இலட்சம் என்று மொத்தம் 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் திருட்டுக் கொடுத்தவர்களுக்குக் காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன.

27-8-1998 அன்று 200 பவுன் தங்க நகைகள், 7 கிலோ வெள்ளிப் பாத்திரங்கள், எலெக்ட்ரானிக் சாதனங்கள், 10 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ரொக்கப் பணம் 2.4 இலட்சம் ரூபாய் என்று மொத்தம் 35 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் காவல் துறையால் திருட்டுக் கொடுத்த பொதுமக்களுக்குத் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன. 15-10-1998 அன்று 240 பவுன் தங்க

நகைகள், தங்கக் கட்டிகள், வீடியோ டிஸ்க்குகள், தோல் பொருட்கள், 50 இரு சக்கர வாகனங்கள், 2 கார்கள், 8 ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் ரொக்கப் பணம் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன. 31-12-1998 அன்று, 350 பவுன் தங்க நகைகள், 15 கிலோ வெள்ளிச் சாமான்கள், 50 மோட்டார் சைக்கிள்கள், 3 கார்கள், 11 ஆட்டோக்கள், ரொக்கப் பணம் 2.85 இலட்சம் ரூபாய் உட்பட ஒரு கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் காவல்துறையால் திரும்ப ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன.

இப்போது, 5-5-1999 அன்று 344 பவுன் தங்க நகைகள், 72 மோட்டார் சைக்கிள்கள், 16 கார்கள், 12 ஆட்டோக்கள், ரொக்கப் பணம் சுமார் பத்து இலட்சம் ரூபாய் உட்பட ஒரு கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் திரும்ப ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன.

கடந்த ஓராண்டில் மட்டும் 'சென்னை மாநகரக் காவல் துறையினரால் மாத்திரம் மொத்தம் நான்கு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள களவாடப்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டு திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி). இதில் ஒன்றும் மகிழ்ச்சியடைவதற்கு எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், இவ்வளவும் களவாடப்பட்டன என்பதை எண்ணி அதற்குத்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அவருக்கு ஆறுதலாகத்தான் இதெல்லாம் திரும்பப் பெறப்பட்டுவிட்டன என்ற இந்தச் செய்தியையும் நான் அவருக்குச் சொல்கிறேன். ஆனால், இவைகள் சமுதாயத்திலே தொடர்ந்து நடைபெற்று வருகின்ற குற்றங்கள். இது நாட்டுக்கு நாடு, மாநிலத்திற்கு மாநிலம், மாநகரத்திற்கு மாநகரம் வேறுபடுகின்றன என்பதை ஒப்பிட்டுத்தான் இங்கே நான் எடுத்துக்காட்டினேன்.

சென்னையிலே ரவுடிகளுடைய தொல்லை அதிகரித் துள்ளதாக திரு. செல்லக்குமார் அவர்கள் இங்கே பேசினார்கள். பேசியவர்கள் சில பேரை இன்றைக்குக் காணோம். மிக வேகமான குற்றச்சாட்டுக்களை எல்லாம் அள்ளி வீசியவர்கள் இங்கே இல்லை. திரு. அப்துல் லத்தீப் அவர்களைக்கூட இங்கே காணோம்.

இருந்தாலும்கூட, அவர்களுக்கெல்லாம் அவர்களுடைய உறுப்பினர்கள் மூலமாக என்னுடைய பதிலைச் சொல்லலாம் என்கின்ற நம்பிக்கையில் நான் இருக்கின்றேன். ரவுடி ராஜ்யம் இங்கே அதிகரித்துள்ளது என்று இங்கே குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு 667 நபர்கள் குண்டர்கள் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் சிறையில் அடைக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விட்டுவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கவில்லை இந்த அரசும், காவல் துறையும். நடப்பு ஆண்டில் இதுவரை 390 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். கடந்த 4 ஆண்டுகளாக குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய விவரம். 1996-ல் 379 பேர்; 1997-ல் 502 பேர்; 1998-ல் 667 ரவுடிகள்; 1999-ல் இதுவரை 390 ரவுடிகள் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த ஆட்சி தொடங்கிய அந்தக் காலக்கட்டத்தில், 30-7-1996 அன்று ரவுடிகள் ஆசைத்தம்பி, மனோ, கோபால் ஆகியோர் சென்னை லயோலா கல்லூரி அருகில் காவல் துறையால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இந்த அவையிலே உள்ள அத்தனை தலைவர்களும் எழுந்து அன்றைக்குத் தங்களுடைய பாராட்டுக்களைக் காவல் துறைக்குத் தெரிவித்ததை மறந்திட இயலாது. பிறகு 24-10-1996 அன்று ரவுடிகள் கபிலன், அருள் ஆகிய இருவரும் சென்னை அடையார் காந்தி நகரில் காவல் துறையால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். 29-10-1997 அன்று சேலம் மாவட்டம், ஓமலூருக்கு அருகில் சிறைச்சாலைக்குக்கொண்டு செல்லப்பட்ட 5 குற்றவாளிகளைச் சுட்டுக் கொன்ற 3 ரவுடிகளை போலீசார் சுட்டுக் கொன்றார்கள். ஏப்ரல் 1999-ல் திருச்சி மாநகரையே கலக்கிக்கொண்டிருந்த ரவுடி கோசிஜின் என்பவன் காவல் துறையால் சுட்டுக்கொல்லப்பட்டான். அதே ஏப்ரல் 1999-ல் தூத்துக்குடி மாவட்டத்தில் ரவுடி பவுல் என்பவன் காவல் துறையால் சுட்டுக்கொல்லப்பட்டான். பல்வேறு குற்றங்களைச் செய்து வந்த ரவுடி கைபாம் மோகன், (எல்லோருக்கும் இதுபோல அடைமொழி உண்டு - கைபாம் மோகன். கால்பாம் மோகன் என்று இப்படி எல்லாம் அடைமொழி உண்டு) என்ற மிகப் பெரிய ரவுடி காவல் துறையைத் தாக்க முயற்சித்தபோது சுட்டுக்கொல்லப்பட்டான். ஜெயங்கொண்டத்தில் தீவிரவாதி என்கிற பெயரால் நீண்ட நெடும் நாட்களாகத்

தலைமறைவாய் இருந்த சூ என்கின்ற சுந்தரம், இளவரசன் ஆகியோரும் கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரம் உங்களுக்கு நன்றாக நினைவிருக்கும். சென்னையில் சேரா, தாதா குட்டியப்பன், ராட்டினகுமார், குண்டு பத்மநாபன், பிரபாகரன், பங்க் குமார், தென்றல் ராஜா, உருண்டை தங்கவேல், வெள்ளை ரவியின் கூட்டாளிகள் வெங்கடேசன், ஜெகதீஷ், காண்டீபன், செல்வம், கொடுங்கையூரைச் சேர்ந்த குண்டு சங்கர், கேட் ராஜேந்திர னுடைய கூட்டாளிகள் மகேஷ், பாக்ஸர் வடிவேலு, பேருந்துகளில் அடிக்கடி ஜேப்படி செய்யும் ராஜ்குமார், ஜெயராமன், வெங்கடேசன் உள்ளிட்டோர் குண்டர் தடுப்புச் சட்டத்திலே சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். அண்மையிலேகூட செங்கற்பட்டு டி.ஐ.ஜி. அவர்கள் துரத்திச் சென்று சிவா என்ற ரவுடியைப் பிடித்த செய்தி நான்கு நாட்களுக்கு முன் பத்திரிகையிலே வந்ததை நீங்கள் எல்லாம் மறந்திருக்கமாட்டீர்கள். முந்தைய காலத்தில் நடைபெற்றதைப்போலத் தெருக்களிலே வெளிப்படையாகக் கத்தி வீச்சுப் போராட்டங்களோ, அதுபோல நீதிமன்றங்கள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற முக்கிய இடங்களில் வெளிப்படையாக நடக்கும் கைகலப்புகளோ இப்போது அந்த அளவுக்கு இல்லை; வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் இங்கே குறிப்பிடுகின்றேன்.

மனமகிழ் மன்றங்கள்பற்றிச் சொன்னார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில ஓட்டல்களின் பெயரையே குறிப்பிட்டு அங்கெல்லாம் நடைபெறுகின்ற லீலாவிநோதங்கள், வேலைகள், லீலைகள் இவைகளைப்பற்றி எல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அவர் பேசும்போது அவருடைய உருவத்தையே நான் கவனித்துக்கொண்டிருந்தேன். (சிரிப்பு) இவர் இதை எல்லாம் பேசுகிறாரே என்று ஆச்சரியத்தோடு அதை கவனித்துக்கொண் டிருந்தேன். ஏனென்றால், உண்மையைப் பேச வேண்டுமல்லவா? நாடு நலம்பெற, சமுதாயம் நல்ல முறையில் ஒழுக்கமாக இருப்பதற்காக இவைகளை அவர் சொல்கிறார். இருந்தாலும் இன்றைக்கு உலகத்திலே பல பகுதிகளிலே உள்ள இத்தகைய Five Star ஓட்டல்கள் எல்லாம் இப்படித்தான் போட்டி போட்டுக்கொண்டு தங்களுடைய தொழிலை நடத்தி வருகிறார்கள். சென்னையிலும் அத்தகைய போட்டி இன்றைக்கு இருப்பதை நாம் உணர முடிகிறது.

இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும் அது அளவுக்கு மீறிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது காவல் துறையினுடைய பொறுப்பு என்பதை, எதிர்க்கட்சித் தலைவரைப்போல நானும் உணர்கிறேன். அவர் இங்கே பேசியதிலிருந்து, ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் சில ஓட்டல்களினுடைய பெயரைகளையே துணிந்து குறிப்பிட்டு, அங்கே இப்படியெல்லாம் நடைபெறுகின்றன என்று கூறியிருக்கும்போது, காவல் துறை கைகட்டிக்கொண்டு வாளா இருக்காமல், அவற்றைப்பற்றியெல்லாம் நிச்சயமாகக் கவனிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அவர்களையும் நான் அறிவுறுத்திக்கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மனமகிழ் மன்றங்கள் என்ற பெயரால் (Recreation Clubs) சென்னையிலே, சில இடங்களில் சில தவறான காரியங்கள் நடைபெறுகின்றன. அதிலேகூட, 1998ஆம் ஆண்டு, 98 வழக்குகள் அந்த மன்றங்களின்மீது போடப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1999-அதாவது, 31-4-1999 வரையில் இந்த ஆண்டு 35 வழக்குகள் அவர்கள்மீது போடப்பட்டு, அந்த வழக்குகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

நம்முடைய உறுப்பினர் திரு. சந்தானம் அன்றைக்குப் பேசும்போது, ஒரு குறையைச் சொன்னார்கள். மதுரையிலே உள்ள I.M.F.S. மதுபானக் கிடங்குகளை மாற்றுவதுபற்றி ஒரு குறை சொன்னார்கள். அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு போய்விடும் என்று சொன்னார்கள். ஆனால், அதிலே உண்மையான நிலவரம் என்னவென்றால் ஒன்று இப்போது அந்தக் கிடங்குகள், மதுரை மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நெரிசலான பகுதியிலே இருக்கின்றன; தேவைப்படுகிற சரக்குகளை அங்கே வைப்பதற்கு இடம் போதவில்லை என்ற மற்றொரு குறை. மூன்றாவது சரக்குகளை ஏற்றவும், லாரிகள் நிற்பதற்கும் போதுமான இடம் கிடையாது. நான்காவதாக, வாடகை, சதுர அடியின் பேரிலே, 2 ரூபாய் 50 காசு என்று இருந்தது, திடீரென்று 7 ரூபாயாக உயர்த்தப் பட்டது. வாடகை இடம் அது; 7 ரூபாயாக உயர்த்திவிட்டார்கள். அதனால்தான் அந்தக் கிடங்குகளை மதுரை மத்தியப் பேருந்து

நிலையத்திலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவிலும், மதுரை-இராஜபாளையம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவிலும் உள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டது. இது அரசுக்குச் சொந்தமான நிறுவனம். இந்த நிறுவனத்தில் போதுமான இடவசதி உள்ளது. இதன் பரப்பளவு 19,827 சதுர அடியாகும். எனவேதான், அங்கே அவை மாற்றப்படுகிறதே அல்லாமல் வேறல்ல என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாநகரில் நடைபாதை வியாபாரிகளின் பைகளைக் கிழித்து, குமார் என்ற காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர் முறைகேடாக நடந்துகொண்டதாக, திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே பேசினார்கள். அப்படி நடந்து கொண்டிருந்தால் அது கண்டிக்கத் தக்கது. நடவடிக்கை எடுப்பதற்குரிய இதுகுறித்து கோவை மாநகரக் காவல் துறை தலைமை அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டு, அதைப்பற்றிய குறிப்புகளை அனுப்புமாறு நிச்சயமாகக் கேட்டுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒன்று. கோவை மாநகரில் நடைபாதை வியாபாரிகள் அனுமதியற்ற முறையிலே ஆக்கிரமிப்புகளைச் செய்ததன் காரணமாகத்தான், அந்த அடிப்படையிலேதான் சமூக விரோத சக்திகள் அங்கே வளர்ந்து, பெரிய அளவிலே மதக்கலவரம் ஏற்படக் காரணமாகிவிட்டது என்று நீதியரசர் கோகுல கிருஷ்ணன் அவர்கள்கூட, தன்னுடைய விசாரணை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். விசாரணை அறிக்கை, இந்த அவையிலே ஏற்கெனவே வைக்கப்பட்டுவிட்டது.

உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, ஏதோ பி.ஜே.பி.-யோடு உறவு வந்துவிட்டது; ஆகவே இப்போது அறிக்கையை வைத்துவிட்டோம் என்றார்; அது உண்மை அல்ல. இந்த அரசியல் மாற்றங்கள் எல்லாம் ஏற்படாததற்கு முன்பேயே இந்த அவையிலே, 2 மாதங்களுக்கு முன்பே அது வைக்கப்பட்டு, அதைப்பற்றி விமர்சனங்கள் எல்லாம் வெளிவந்திருக்கின்றன. இப்போது இன்றைக்குக்கூட அதன் தொடர்ச்சியாக ஒரு அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. யார் யாருக்கு நிவாரணம் அளிக்கப்பட வேண்டுமென்ற ஓர் அறிக்கை. முழுவதுமாக அது முடிந்து

வருவதென்றால் தாமதமாகும். செல்வந்தர்கள் என்றால் பரவாயில்லை; ஏழையெளிய கடைக்காரர்களுக்கெல்லாம் ஏதாவது உதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக, நீதியரசர் கோகுல கிருஷ்ணன் அவர்கள் ஓர் இடைக்கால அறிக்கையை மீண்டும் தந்திருக்கிறார். அந்த அறிக்கைதான் இன்றைக்கு அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. பலபேர் அந்த அறிக்கையைப் படித்ததாகவே தெரியவில்லை. நானும் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். சிலபேர், நான் சொல்லி எடுத்துப் படித்தார்கள். எதிர்க்கட்சித் தலைவரே இப்போதுதான் படிக்கப்போகிறார். (சிரிப்பு) கோவை நகரிலே - திரு. சுப்பராயன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் - இந்த ஆக்கிரமிப்புகளில் இருந்த 647 நடைபாதை வியாபாரிகளுக்கு மாற்று இடம் வழங்க, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி 450 பேர்களுக்கு, 4 இடங்களில் மாற்றுக் கடைகளை வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மீதம் உள்ளவர்களுக்கு மாற்று இடம் வழங்க, மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை மாநகர மேயர், மாநகரக் காவல் ஆணையர், மாநகராட்சி ஆணையர் ஆகியோர் முயற்சிகளை எடுத்து வருகிறார்கள் என்ற செய்தியையும் நான் திரு. சுப்பராயன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுதவிர, அன்றாடம் புதிது புதிதாகத் தள்ளுவண்டிக் கடைகள் முளைத்த வண்ணம் உள்ளன. இக்கடைகளை அப்புறப் படுத்துவதற்குக் காவல் துறை வருவதால், காவலர்கள்மீது எரிச்சல் கொண்டு அந்த வியாபாரிகள், அரசியல்வாதிகளிடம் சென்று புகார் கூறுகிறார்கள். காவல் துறை உறுதியாக நடவடிக்கை எடுக்கா விட்டால், மேலும் ஆக்கிரமிப்புக் கடைகள் பெருகும், மதச் சண்டைகள் உருவாவதற்கு ஏதுவாகும் என்பதையும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் உணர்ந்து, அவர்களும் அதற்கு ஒத்துழைத்து, வியாபாரிகளும் மாற்று இடங்களைப் பெற்று நலமாக வாழ வேண்டும், அதேநேரத்தில் நகரின் ஆரோக்கியமும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய குமரி மாவட்டத்தினுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. மணி அவர்கள் -

வரவில்லை என்று கருதுகிறேன். (குறுக்கீடு) (காய்ச்சலா ?) அவர்கள் - தங்கமணி என்பவர் காவல் துறையால் தாக்கப்பட்டதாக ஒரு செய்தியைச் சொன்னார். அவர் நேரிலேகூட அதுபற்றி என்னிடத்திலே விளக்கிச் சொன்னார். அதுபற்றி அப்போதே விசாரித்து, அதை நான் அலட்சியப்படுத்தாமல், அதுகுறித்து கோட்டாட்சியர் விசாரணையை மேற்கொள்ள கேட்டுக்கொண்டுள்ளேன். ஆர்.டி.ஓ. விசாரணை நடைபெறுகிறது. முழுத் தகவல்களும் வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. மணி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பல வழக்குகளில் மேல்நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று ஒரு பெரிய பட்டியலைப் போட்டுக் காட்டினார். அதைக் கேட்கும்போதும் அல்லது பத்திரிகையிலே படிக்கும்போதும் அதிர்ச்சியாகத்தான் இருக்கும். ஆனால், ஒவ்வொன்றிற்கும் என்னிடத்திலே விளக்கம் இருக்கிறது, பதில் இருக்கிறது.

குருந்தன்கோடு என்ற இடத்தில் ஸ்ரீமதி என்ற பெண்ணை செல்லப்பன் என்பவர் 30-3-1999 அன்று கற்பழிக்க முயன்றதாக, இரணியல் காவல் நிலையத்தில் குற்ற எண் 209/99, பிரிவுகள் 376 மற்றும் 511 இந்தியத் தண்டனைச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையிலே உள்ளது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை நான் அலட்சியப் படுத்திவிடவில்லை.

அதேபோல், இன்னொன்று சொன்னார். ஆற்றூரில் குளோரிபாய் என்ற பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததற்காக அதில் எதிரி சிவசிங்மீது திருவட்டாறு காவல் நிலையத்திலே வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி, நீதிமன்றத்திலேயிருந்து கைது செய்யப்பட்டவர், பிணையில் வெளிவந்துள்ளார். வழக்கு இரசாயனப் பரிசோதனை அறிக்கைக்காக நிலுவையில் உள்ளது.

6-10-1998 அன்று கொளத்துமேடு சுதா என்ற மாணவியைப் பாலியல் பலாத்காரம் செய்ததற்காக நிர்மலன் என்பவர்மீது அருமனைக் காவல் நிலையத்திலே வழக்கு. அந்த நிர்மலன் என்பவர் கைதாகியிருக்கின்றார்.

அதேபோல, 15-8-1998 அன்று சுமிதா என்ற மாணவியைப் பாலியல் பலாத்காரம் செய்ததற்கு வழக்குப் பதிவு. அந்த எதிரியும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

8-12-1998 அன்று உஷா என்ற பெண்ணைக் கொலை செய்தது சம்பந்தமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, எதிரி பரமேஸ்வரன் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

6-1-1999 அன்று ஜாய் என்ற பெண்ணை மானபங்கம் செய்ததற்காக எதிரி ஸ்டீபன்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு. 19-1-1999 அன்று ஸ்டீபனும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

30-3-1998 அன்று சசிகலா என்ற பெண்ணைப் பலாத்காரம் செய்து கொலை செய்ததற்காக எதிரிகள் அய்யாசிவம், அர்ச்சுனன் ஆகியோர்கள்மீது வழக்கு. எதிரிகள் இருவருமே 2-4-1998 அன்று கைது செய்யப்பட்டனர். வழக்கு விசாரணை முடிந்து 18-12-1998 அன்று நீதிமன்றத்திலே குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப் பட்டாகிவிட்டது.

29-1-1999 கீழசந்தையடி என்ற இடத்தில் அம்பிகா என்ற பெண் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்து இறந்துள்ளார். இதுதொடர்பாக, கன்னியாகுமரி காவல் நிலையத்திலே வழக்குப் பதிவு செய்யப்பட்டது. கோட்டாட்சியர் விசாரணை செய்து வரதட்சணைக் கொடுமையில்லை என்று அறிக்கை கொடுத் திருக்கின்றார். எனவே, எந்த ஒரு சம்பவத்திலும் வழக்குப் பதிவு செய்யப்படாமலோ, எதிரிகள் கைது செய்யப்படாமலோ இல்லை என்பதை நான் அன்பர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இது தொடர்பாகச் சில முக்கியமான அறிவிப்புகளை இந்த அவையிலே நான் வெளியிட விரும்புகிறேன். காவல் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு நலவாழ்வு நிதியின்கீழ் மருத்துவ வசதிக்கு நிதி உதவி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்படுகிறது. வெளிநாட்டிலே மருத்துவ சிகிச்சை செய்துகொள்ள விரும்பினால் அந்த நிதியிலிருந்து 10 சதவிகித வட்டிக்குக் கடன் வசதியும் செய்யப்பட்டு வருகிறது. தற்போது

மாரடைப்பு, சிறுநீரக மாற்றுச் சிகிச்சை ஆகிய பெரிய வியாதிகளுக்கு இந்த நிதியிலிருந்து உதவி வழங்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு 108 காவலர்கள் இந்தத் திட்டத்தால் பயனடைந்தார்கள். அதற்கு 83 இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கின்றது. இந்த நிதிக்கு அரசின் உதவித் தொகையாக 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியின்கீழ் கோரிக்கைகள் கூடுதலாக வந்துள்ள காரணத்தால் அரசு இந்த நிதிக்கு 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்குவதை இப்போது ஒரு கோடி ரூபாயாக நிதி ஒதுக்க முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்திலே 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இருக்கின்றன. அந்த நிலையங்களுக்கு ஏற்கெனவே ஜீப்புகள் வழங்கப்பட்டாகிவிட்டன. தற்போது காவல் நிலையங்களுக்குட்பட்ட இடங்களுக்கு விரைவாகச் சென்று, புகார் மனுக்கள் மீது விசாரணை செய்திடவும், சம்மன்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனடியாகச் சென்று அளிக்கவும் உதவியாக ஒவ்வொரு மகளிர் காவல் நிலையத்திற்கும் ஒரு மொஃபட் மோட்டார் சைக்கிள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

பாதிக்கப்பட்டோர் உதவி நிதி என்று ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. அதில் கொலையுண்டவர்களின் வாரிசுகளுக்கு, கொலையுண்டவர்கள் என்றால் கலவரங்களிலே அல்ல, வேறு அமளிகளிலே அல்ல, பொதுவாக வேறு காரணங்களினால், சொந்தக் காரணங்களினால், கொலையுண்டால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு 10,000 ரூபாயும், கடுமையான காயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5,000 ரூபாயும், கற்பழிப்பு போன்ற குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5,000 ரூபாயும் இதுவரையிலே வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தற்போது மேலும் விரிவுபடுத்தப்பட்டு, கடத்தப்பட்டு பாதிப்புக்குள்ளான பெண்கள் என்றால் அவர்களுக்கு 5,000 ரூபாயும், வரதட்சணை காரணமாக உயிரோடு எரிக்க முயற்சித்தாலோ அல்லது வேறு வகையில் கொலை செய்ய முயற்சித்தாலோ தீக்காயம் அடைந்தால் 5,000 ரூபாயும், அந்த நிகழ்வில் மரணமே அடைந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுகளுக்கு 10,000 ரூபாயும், வரதட்சணைக்

கொடுமையால் தற்கொலை செய்துகொண்ட பெண்களின் குழந்தைகளுக்கு 10,000 ரூபாயும், வரதட்சனை கொடுமையினால் பாதிக்கப்பட்டு நிரந்தரமாக ஊனமுற்ற பெண்களுக்கு 5,000 ரூபாயும் நிவாரண உதவி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையிலே வாகன ஓட்டுநர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ள ஊதியத்தோடு மாதந்தோறும் 90 ரூபாய் சிறப்பு ஊதியமாக அளிக்கப்பட்டு வருகிறது வாகன ஓட்டுநர்களுக்கு. இதை உயர்த்த வேண்டுமென்ற காவல் துறையினுடைய கோரிக்கையை ஏற்று, 90 ரூபாய் என்பதை இனி மாதந்தோறும் 120 ரூபாயாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. காவல் துறையில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட்டதுபோல் தீயணைப்புத் துறையில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும், பணியில் அவர்கள் ஈடுபட்டிருக்கும்போது, காயமடைந்தாலோ, இறந்துவிட்டாலோ, குடும்ப நலத் திட்டத்திலே வழங்கப்படும் கருணைத் தொகை வீரமரணம் அடைவோருக்கு இதுவரை 10,000 ரூபாய் என்று இருந்தது. தீயணைப்புத் துறையில். அதை 2 இலட்சம் ரூபாயாக இப்போது உயர்த்த இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி). செயல்பட முடியாத அளவிற்கு நிரந்தர ஊனம் அடைவோருக்கு இதுவரை 10,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாய் வரை என்று வழங்கப்பட்டதற்கு மாறாக, இனி 50,000 ரூபாய் வழங்கப்படும். படுகாயம் அடைவோருக்கு இதுவரை 1,000 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை என்றிருந்த தொகை 10,000 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. சாதாரண அளவிலே காயம் அடைவோருக்கு இதுவரை 1,000 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக, இனி 5,000 ரூபாய் வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது.

கடந்த ஆட்சியில் 10,000 பேர் காவலர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள். ஆனால், நியமனம் செய்வதாக அறிவிக்கப்பட்டதே தவிர உரிய நியமன ஆணைகள் இதுவரை வெளியிடப்படவே இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். அந்த 10,000 பேரில், சில பேர் கொடுக்கின்ற கஷ்டங்களைத்தான் இன்றைக்கு இந்த அரசு அனுபவித்துக் கொண்டிருக்கிறது என்பதும் உங்களிலே

பலருக்குத் தெரியும். இவர்கள் எல்லாம் திருந்த வேண்டும் என்று இந்த அவையின் சார்பாகக்கூட நான் அவர்களையெல்லாம் கேட்டுக்கொள்வேன். அந்த 10,000 பேரை 1996-லே மீண்டும் கழக அரசு பதவியேற்றவுடன் அவர்களையெல்லாம் விட்டுவிடக் கூடாது. அந்த இளைஞர்களின் எதிர்காலம் கருதி அவர்களை யெல்லாம் தொடர்ந்து நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்கள் பலரும் கோரிக்கையை வைத்தீர்கள். அதை நாங்கள் புறக்கணிக்காமல் அந்த 10,000 பேரில் முதற்கட்டமாக 1,581 பெண் காவலர்கள் உட்பட, மொத்தம் 4,602 காவலர்களுக்கு நியமன ஆணை அனுப்பப்பட்டு, பயிற்சியும் தரப்பட்டு, அவர்கள் அனைவரும் 16-10-1997இல் பணியிலே அமர்த்தப்பட்டார்கள். இரண்டாம் கட்டமாக 1,023 பெண் காவலர்கள் உட்பட மொத்தம் 5,700 காவலர்களுக்கு நியமன ஆணை அனுப்பப்பட்டு அவர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகிறார்கள். இந்த ஆட்சியில் இதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு நாங்கள் இந்த அவையிலே அறிவித்ததைத் தொடர்ந்து, காவலர்கள் தேர்வு முடிவுற்று, 3,465 காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பட்டியலும் இரண்டு நாட்களுக்குமுன் வெளியே வந்திருக்கிறது. மேலும் துணை ஆய்வாளர்கள் 882 பேர் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இதன் தொடர்ச்சியாக மேலும் 5,000 புதிய காவலர்களை இந்த அரசு, இந்த ஆண்டு நியமிக்கும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதிலே ஆடவர் 4,000 பேர், பெண்டிர் 1000 பேர் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதிலே ஒரு கோரிக்கையைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். மற்றவர்கள், பேசியவர்கள் அத்தனை பேர்களும் சொன்னார்கள். உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் பேசாவிட்டாலும் கூட இங்கே உட்கார்ந்துகொண்டே அடிக்கடி தொல்லை கொடுத்துக் கொண்டேயிருப்பார். அதைப்போல, எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆரம்பத்திலேயிருந்து, 1996-97-லேயிருந்து இந்தப் பிரச்சினையைப்பற்றி முன் வரிசையிலே வீற்றிருக்கின்ற தலைவர்கள் அனைவரும், கடந்த பட்ஜெட்டிலேகூட நம்முடைய திருநாவுக்கரசு போன்றவர்களும்,

சந்தானம் போன்றவர்களும் நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவரும் எடுத்துக் கூறியிருக்கின்றீர்கள். 1994-95ஆம் ஆண்டு தேர்வு பெற்ற உதவி ஆய்வாளர்கள் 98 பேரைப்பற்றிய பிரச்சினை. அவர்கள், முந்தைய ஆட்சிக் காலத்தில் மருத்துவத் தேர்வுக்கும் அனுப்பப்பட்டுவிட்டார்கள். செலக்ஷனாகி மருத்துவத் தேர்வு அதற்கும் அனுப்பப்பட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகும், போதிய நியமனங்கள் பூர்த்தியாகிவிட்ட காரணத்தால் அவர்களை எடுப்பதற்கில்லை என்று அவர்களைத் தள்ளி வைத்துவிட்டார்கள். அவர்கள் மீண்டும் இணைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை இந்த அவையிலே பலமுறை உறுப்பினர்கள் வைத்திருக்கின்றார்கள். ஆனால், அதைப்பற்றி அதிகாரிகளிடத்திலே பேசியபோது, தேர்வுப் பட்டியலிலே உபரியாகச் சேர்க்கப்பட்டவர்களுக்குத் தற்போது பணி வழங்குவதற்கு விதிகளிலே இடமில்லை என்று அதிகாரிகள் சட்டப்படியுள்ள கருத்தை எடுத்துச் சொல்லி விட்டார்கள். நான் சொன்னேன், அப்படித்தான் முன்னொரு தடவை, முஸ்லீம்களைப் பின்தங்கிய சமுதாயத்திலே சேர்ப்பதற்குச் சட்டத்திலே இடமேயில்லை என்று நண்பர் இராஜாராம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்தபோது சொன்னார் அந்தக் கோடியிலேயிருந்து. உடனே, இங்கிருந்த முஸ்லீம் உறுப்பினர்களெல்லாம் சத்தம் போட்டார்கள். ஏன் இடமில்லை, ஏன் இடமில்லை என்று. உடனே நான் சொன்னேன், சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும் இந்த இதயத்திலே இடமிருக்கிறது என்று சொல்லி அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலேச் சேர்த்தேன். அதை திரு. லத்தீப் மறந்துவிட்டாரோ என்னவோ எனக்குத் தெரியாது, மற்றவர்களுக்கு ஞாபகமிருக்கும் என்று கருதுகின்றேன். விதியில் இடம் இல்லையென்று சொன்னாலும்கூட இப்போது. . .

திரு. முகம்மது கோதர் மைதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளிக்கிழமையன்று எங்களுடைய தலைவர் அவர்கள் இதே காவல் துறை மானியத்திலே பேசுகின்றபோது, அதையும் சுட்டிக்காட்டினார்கள். பிற்படுத்தப் பட்டோர் பட்டியலிலே சேர்த்ததற்கு, கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சுட்டிக்காட்ட வில்லை என்று நான் சொல்லவில்லை. தலைவரைக் காப்பாற்றிய தற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், உங்களுக்கு (சிரிப்பு).

எனவே, விதியில் இடம் இல்லாவிட்டாலும் 98 எஸ். ஐ.-க் களையும் எப்படியாவது சேர்க்கவேண்டுமென்று கேட்டு, நேற்று முழுவதும் உட்கார்ந்து, ஆராய்ந்து, அதற்கு ஒரு வழி கண்டுபிடித் திருக்கிறோம். தேவைப்படும் நேர்வுகளில் வயது மற்றும் அதற்கான விதிகளையெல்லாம் தளர்வு செய்து - ஏனென்றால் இப்போது வயது அதிகமாகியிருக்கும். அதையெல்லாம் தளர்வு செய்து - அடுத்து உதவி ஆய்வாளர்களுக்கான தேர்வு நடைபெறும்போது, இந்த 98 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே மற்றவர்கள் பட்டியலிலே இடம் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே, காவலர்கள் கடந்த ஆட்சியில் 329 பேர் மருத்துவத் தேர்வுக்கு அனுப்பப்பட்டு, பிறகு பணி காலியிடம் இல்லையென்று நியமனம் செய்யப்படவில்லை. அதுவும் சட்டத்தின் அடிப்படையிலே பார்த்தால் சரி. கருணை அடிப்படையிலே பார்த்தால் தவறு. அவர்கள் ஆரம்பத்திலேயே தவறு செய்துவிட்டார்கள். தேவைக்கேற்ற ஆட்களைத்தான் எடுத்திருக்க வேண்டும். தேவைக்கு அதிகமாக எடுத்தது மாத்திரமல்ல, செலக்ஷனோடு முடிக்காமல் அவர்களை மெடிக்கல் செக்கப்பிற்கும் அனுப்பிவிட்டார்கள். அதிலே தேர்வான பிறகு, அவர்களுக்கு இடம் இல்லை என்று சொல்லியது தவறு என்பதால், அது அவர்களுடைய குற்றம் அல்ல. ஆகவே, இப்போது எடுக்கப்படுகின்ற 5,000 காவலர்களுடைய தேர்வில் இந்த 329 பேருக்குத்தான் முதற்கட்டமாகப் பணி நியமனம் செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). அதிலே வயது வித்தியாசங்கள் வருமேயானால் அந்த வயதைத் தளர்த்தி அவர்களைச் சேர்க்க வேண்டும். எனவே, 5000 என்பதில் 4500 தான் இருக்க வேண்டும்; இவர்களுக்கு இடம் வைத்துவிட்டுத்தான் மற்றவர்களுக்கு இந்தப் பட்டியலில் இடம் அளிக்க வேண்டுமென்றும் நேற்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை

மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னொன்று, தடய அறிவியல் துறைக்குத் தன்னாட்சிப் பொறுப்பு வேண்டுமென்று நீண்ட காலமாக ஒரு கோரிக்கை இருந்து வருகின்றது. வெவ்வேறு பிரிவுகளாக 1849ஆம் ஆண்டிலேயிருந்து இயங்கிவரக்கூடிய தடய அறிவியல் துறை சிறிது காலம் தவிர, தனித் துறையாகவே இயங்கி வந்தது.

தமிழ்நாடு காவல் ஆணையத்தின் பரிந்துரையின்பேரில் 1995ஆம் ஆண்டு காவல் துறையின்கீழ் இந்தத் துறை கொண்டு வரப்பட்டுவிட்டது. 1995-லேயிருந்து இந்தத் துறைக்கு மீண்டும் தன்னாட்சி வழங்க வேண்டும் என்று இந்தத் துறையிலே பணியாற்றிக்கொண்டிருந்த அறிவியலாளர்கள் கோரிக்கை விடுத்துக்கொண்டே இருந்தார்கள். 1999ஆம் ஆண்டு சனவரித் திங்கள் சென்னையிலே நடைபெற்ற 86-வது இந்திய அறிவியல் மாநாட்டின்போதுகூட தடய அறிவியல் அவையைத் தொடங்கி வைத்துப் பேசிய தேசிய மனித உரிமை ஆணையத்தினுடைய உறுப்பினர் நீதியரசர் திரு. மாலிமத் அவர்கள் மனித உரிமை மீறல்களைத் தடுக்கும் பொருட்டு, தடய அறிவியல் துறை தனித் துறையாக இயங்குவதுதான் விரும்பத்தக்கது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்நிலையில், தன்னாட்சி பொறுப்பு வழங்க சாதகமாகக் கூறப்பட்ட கருத்துகள் மற்றும் அதற்கு எதிராக வைக்கப்பட்ட கருத்துகள், இவைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்து, தடய அறிவியல் துறையை உள் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் தனித் துறையாக இயங்க அனுமதிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையினுடைய கட்டுப்பாட்டில் இல்லாமல். உள் துறையினுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் தனித் துறையாக இயங்க அனுமதிக்கலாம் என்று பல ஆண்டுகாலமாக இருந்த இந்தக் கோரிக்கை நிறைவேற்றப் பட்டிருக்கின்றது.

மதுபானக் கடைகளிலே சட்டவிரோதமாக Bar - நடத்துவது பற்றி அன்றைக்குப் பேசப்பட்டது. அதிலேகூட த. மா. கா.-வைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் Bar-ஆவது வைத்துவிடுங்கள் என்று குறிப்பிட்டார். உடனே திரு. ஞானசேகரன் எழுந்து, அது எங்கள்

கட்சியின் கொள்கை அல்ல என்பதை, நல்லகாலம், விளக்கினார். 1-1-1998 முதல் 31-8-1998 வரை திருட்டுத்தனமாக Bar நடத்தியதற்காக தாலுகா காவல் நிலையத்தினர் 1,069 வழக்குகள் போட்டார்கள்; தாலுகா காவல் நிலையத்தின் சார்பாக 1-7-1998-க்குப் பிறகு இந்தச் சட்டத்தை அமல்படுத்தத் தனியாகக் கலால் பிரிவு அமைக்கப்பட்டுவிட்டது. தனிப் பிரிவு அமைக்கப்பட்ட பிறகு, மதுபானக் கடைகளைத் தாலுகா போலீஸ் தணிக்கை செய்யக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்துவிட்டது. எனவே, 1-5-1998 முதல் 6-5-1999 வரை தனியாக Bar நடத்தியதற்காக 4574 வழக்குகள் போடப்பட்டுள்ளன. அதிலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டாலும்கூட, ஆங்காங்கு சில இடங்களிலே, மன்னிக்க வேண்டும், காவல் துறையினுடைய ஒத்துழைப்போடுகூட 'பார்' நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. இதைத் தடுப் 'பார்' யாரும் இல்லை. என்ன செய்வது? இப்படித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

மதுவிலக்கைப் பொறுத்தவரையில், 1998-99ஆம் ஆண்டில் மதுவிலக்கு வழக்குகளுடைய பதிவு எண்ணிக்கை 1,09,022. கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் 1,02,105 பேர். விழா நாட்களில் மட்டும் சிறப்புச் சோதனையின்போது, கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டக் கள்ளச்சாராயம் 38,18,113 லிட்டர் சாராய ஊறல் 2,36,11,045 லிட்டர். சாராயப் பாக்கெட் 4,09,599. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரபல கள்ளச்சாராய வியாபாரிகள் 1998-இல் 795 பேர். 1999-இல் 347 பேர். காம்பவுண்டிங் செய்கின்ற அதிகாரத்தை இந்தத் துறைக்குக் கொடுத்து, அதன்மூலமாகக் கடைபிடிக்கப்படுகின்ற முறையின்மூலம் முடிக்கப்பட்ட வழக்குகள் 22,776. இதிலே வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை 1,51,92,134 ரூபாய். நீதிமன்றங்களிலே நிலுவையிலிருந்த வழக்குகளை முடித்து வைத்ததன்மூலம் வசூலான அபராதத் தொகை 1,71,82,051 ரூபாய். 1998-99 இந்த ஓர் ஆண்டில் கைப்பற்றப்பட்ட மதுவிலக்குக் குற்றம் சம்பந்தப்பட்ட வாகனங்கள் மாத்திரம் 1,011. இதிலே பறிமுதல் செய்யப்பட்டவை 145. தவறு செய்த மதுக்கடை உரிமையாளர்கள் மற்றும் அலுவலர்கள்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 9,652. கைப்பற்றப்பட்ட போலி மற்றும் இரண்டாந்தர மதுபான பாட்டில்கள் 56,674.

பொதுமக்களுடைய ஒத்துழைப்பு கோரி, அரசு, உள் துறையின் மூலமாகச் செய்த விளம்பரத்தினுடைய விளைவாக வந்த புகார் மனுக்கள் 1,323. அதிலே உண்மையான புகார்கள் 504. மற்ற புகார்கள் எல்லாம், வேண்டியவன் இல்லையென்றால் அவனைப்பற்றி எழுதுவது, வேண்டியவன் என்றால் எழுதாமலிருப்பது, என்பது போன்ற அந்தப் புகார்கள். இதிலே கைது செய்யப்பட்டவர்கள் 909 பேர். எனக்கே புகார்களைத் தரலாம் என்று திருச்சி செய்தியாளர்கள் கூட்டத்திலே அறிவித்து, அதன்படி எனக்கே வந்த புகார் மனுக்கள் 1,092; இதில் நடவடிக்கை எடுக்கப்பட்டவை 770; பதிவான வழக்குகள் 1,890; கைது செய்யப்பட்டவர்கள் 1,829 பேர்; கைப்பற்றப்பட்ட வண்டிகள் 15.

எனவே, அரசினுடைய இந்த முயற்சிக்குப் பொது மக்களுடைய ஆதரவு நிரம்ப இருக்கிறது என்பதை இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. உள் துறைக்கு மாத்திரமல்லாமல், முதலமைச்சர் முகவரிக்கே இந்தப் புகார்களை அனுப்புங்கள் என்பதற்கு இந்த அளவிற்கு நமக்குப் புகார்கள் வந்திருக்கின்றன; நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து பொதுமக்கள், சமுதாயத்திலே அக்கறை கொண்டவர்கள், இந்தப் புகார்களை அனுப்பினால் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டே இருக்கும். புகார்களும் வரும்; நடவடிக்கைகளும் எடுக்கப்படும்; ஆனாலும் கள்ளச் சாராயம் ஒழிந்துவிடுமா என்றால் நிச்சயமாக அதற்கு நம்பிக்கை என்னால் தெரிவிக்க இயலாது என்பதை இன்றைக்கு மிகுந்த மன வருத்தத்தோடு தெரிவித்துக்கொள் கின்றேன். இருந்தாலும், நாம் தொடர்ந்து அந்தக் குற்றவாளிகளைத் தண்டிக்கின்ற பயணத்திலே வெள்ளிகரமாக நடைபோட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மதுவிலக்குத் துறையிலேயிருந்து நமக்கு வருகின்ற வருவாயைப்பற்றி ஒரு குறிப்பு சொல்ல விரும்புகின்றேன். இப்பொழுது நாம் I. M. F. L. என்கின்ற மதுக் கடைகளை மாத்திரம்தான் - வியாபாரத்தை மாத்திரம்தான் - அனுமதித்திருக் கின்றோம். பூரண மதுவிலக்கு இல்லை.

1995-96 ஆம் ஆண்டு 1425 கோடி ரூபாய் மதுவிலக்குத் துறை சார்பாக அரசுக்குக் கிடைத்தது.

1996-97 இல், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 1649 கோடி ரூபாய் கிடைத்தது.

1997-98 இல் சில மாறுதல்களைச் செய்தோம். உங்களுக்குத் தெரியும். முன்பெல்லாம் மாதா மாதம் ஆறு கோடி ரூபாய் எங்கேயோ போய்க்கொண்டிருந்தது; தோட்டத்திற்குப் போய்க்கொண்டிருந்தது. பகிரங்கமாக இந்த அவையிலே சொன்ன விஷயம்தான். ஆனாலும், வரி கொடுப்பதற்குப் பதிலாக, அந்த வரி வேண்டாம் என்று சொல்லிவிட்டு, அந்த வரிக்குப் பதிலாக மாதந்தோறும் 6 கோடி ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். 12 x 6 = 72 கோடி ரூபாய் வருடத்திற்குக் கிடைத்துக் கொண்டிருந்தது. 5 வருடத்திலே எத்தனை கோடி ரூபாய்? 360 கோடி ரூபாய் போய்ச் சேர்ந்தது. அதைத் தடுத்து, அந்த வரியை அரசுக்குக் கொடுங்கள் என்று சொல்லி Vend Fee என்று அந்த வரிக்கும் பெயர் வைத்து, அந்த Vend Fee - ஐ வசூலித்து, இதை எங்கள் வீட்டிலே கொண்டு வந்து வைக்க வேண்டாம்; இதை கஜானாவிலேயே கொண்டு சேர்த்திடுங்கள் என்று சொன்னதன் பேரில் 1997-98இல் 1942 கோடி; 1998-99இல் 2697 கோடி இதன் மூலமாகக் கிடைக்கிறது. 39 சதவிகிதம் கூடுதலாக அரசுக்கு வருமானம் இப்போது வருகிறது. எனவே, இன்றுள்ள பற்றாக் குறையில் இந்த வருமானமும் நம்மைக் காப்பாற்றிக்கொண் டிருக்கிறது என்பதை நான் திரு. சொக்கர் போன்ற வருமானங் களைப்பற்றிக் கணக்கிடுகின்றவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, புதிய காவல் நிலையங்கள். (எல்லோரும் நிமிர்ந்து உட்காருவது எனக்குத் தெரிகிறது). அதிகமான காவல் நிலையங்களைத் தர முடியாததற்கு நிதிப் பற்றாக்குறை இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவீர்கள். ஆனாலும், இங்கே வந்து அமர்ந்த பிறகு, நான் பேசத் தொடங்குவதற்கு முன்பு கூட சிலபேர் பரிந்துரைகளைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அந்தப் பரிந்துரைகள் முழுமையையும் ஏற்றுக்கொள்ள முடியாத தற்காக மன்னித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

இருந்தாலும் புதியதாக காவல் நிலையங்கள் 17 காவல் நிலையங்களை இன்றைக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கோவை தொகுதியிலே உக்கடம்; கோவை தொகுதியிலே வெரைட்டி ஹால்; சென்னை மெரினா பீச்; காட்டுமன்னார்கோவில் மருதூர்; திண்டுக்கல் தாடிக்கொம்பு; திருமங்கலம் வில்லூர்; கும்மிடிப்பூண்டி கவரப்பேட்டை; திருவாரூர் வைப்பூர்; திருச்செந்தூர் குறும்பூர்; திண்டிவனம் பெரியதச்சூர்; சமயநல்லூர் ஆவியூர்; வந்தவாசி தாலுகா காவல் நிலையம்; மற்றும் திருக்குவளை மற்று எட்டுக்குடிக்கு இடையில் ஒரு காவல் நிலையம்; ஏனென்றால் எட்டுக்குடி பெரிய முருகனுடைய ஆலயம், ஆண்டுதோறும் 5000, 6000 காவடி வரும், திரு. பழனிசாமி அவர்களுக்குத் தெரியும். அதனால் திருக்குவளை மற்றும் எட்டுக்குடிக்கு இடையிலே ஒரு காவல் நிலையம். வடபழனி - நம்முடைய செல்லக்குமார் கேட்ட காவல் நிலையம் - தியாகராயநகரில் வடபழனியில் காவல் நிலையம்; மதுரை கூடல் புதூர் காவல் நிலையம்; சிதம்பரம் தொகுதி, சோழத்தலம் காவல் நிலையம்; கோவில்பட்டி தொகுதி - கடைசியாக வந்து கொடுத் தார்கள் - குருவிகுளம் காவல் நிலையம். 1991-இலேயிருந்து 1996 வரையிலும் மொத்தம் 5 ஆண்டுகளிலே, கடந்த ஆட்சியில் 23 காவல் நிலையங்கள்தான் புதிதாக ஆரம்பித்தார்கள். இப்போது 1996 முதல் இன்றுவரையில் 57 காவல் நிலையங்களை நாம் புதிதாகத் தந்திருக்கிறோம் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொகுதியான சேப்பாக்கத்தில் சத்தியவாணிமுத்து நகர் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே கிட்டத்தட்ட 3 கிலோ மீட்டர் சுற்றியுள்ள பகுதிக்கு போலீஸ் ஸ்டேஷனே இல்லை என்று சொல்லி அங்கே ஒரு புறக்காவல் நிலையம் வேண்டுமென்று கேட்கிறார்கள். உங்களுடைய தொகுதி அது. அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதைப்பற்றி அந்தத் தொகுதியின் உறுப்பினரே இதுவரையில் கோரிக்கை வைக்கவில்லை. (சிரிப்பு). அவர் கோரிக்கை வைக்காததை எடுத்துக்காட்டியதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

காவல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் தேவை என்று பல உறுப்பினர்கள் வலியுறுத்தியிருக்கின்றார்கள். இப்போது தமிழகத்திலே முழுக் காவல் நிலையங்கள் 1190 இருக்கின்றன. புறக்காவல் நிலையங்கள் 111 இருக்கின்றன. மகளிர் காவல் நிலையங்கள் 57 இருக்கின்றன. ஆக மொத்தம் 1358 காவல் நிலையங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. இதில் அரசுக் கட்டடங்களில் இயங்குபவை 1027 நிலையங்கள். வாடகைக் கட்டடங்களில் இயங்குபவை 331. 1991 முதல் 1996 வரை கட்டடம் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டவை 8. 1996 முதல் இந்த மூன்றாண்டுக் காலத்திலே கட்டடங்கள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டவை 120 நிலையங்களுக்கு. 120 எங்கே, 8 எங்கே என்பதை எண்ணிப்பாருங்கள். இந்த 120இல் கட்டடம் கட்டி முடித்தது 33. பணிகள் தொடர்ந்து விரைவில் முடிய இருப்பவை 75. கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்பட இருப்பவை 12. 1999-2000ஆம் ஆண்டிற்கு, பகுதி-2 திட்டத்தின்கீழ் மேலும் 20 காவல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட ஒப்புதல் தரப்பட்டுள்ளது. இதற்காக ஏற்கெனவே 4.23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீது செய்யப்பட்டுள்ளது. ஆனால், உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று, மேலும் 10 காவல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு முடிவு செய்து, அதற்காக மேலும் 2.2 கோடி ரூபாய் நிதி ஒதுக்க உள்ளது.

அந்தக் காவல் நிலையங்களின் பெயர்கள் வருமாறு :-

சென்னை நகரம்	ஆர். 3 அசோக் நகர்
ஈரோடு	ஈரோடு தெற்கு
ஈரோடு	கடம்பூர்
ஈரோடு	பர்கூர்
நாமக்கல்	ஆயில்பட்டி
நாமக்கல்	குமாரபாளையம்
சேலம்	எடப்பாடி

(அன்றைக்குக்கூட திரு. கணேசன் அவர்கள்கூட கேட்டு அழுதார்கள்)

சிவகங்கை	சாலிக்கிராமம்
தூத்துக்குடி	புதூர்

தூத்துக்குடி	குலசேகரன்பட்டி
நாகப்பட்டினம்	மயிலாடுதுறை
இராமநாதபுரம்	கமுதி
கோவை மாநகரம்	காட்டூர் (மகளிர் காவல் நிலையம்)
கோவை மாவட்டம்	மேட்டுப்பாளையம்
திண்டுக்கல்	கள்ளிமந்தையம்
திருவள்ளூர்	பெரியபாளையம்
காஞ்சிபுரம்	பாலுசெட்டிசத்திரம்
திருச்சி நகர்	காந்தி மார்க்கெட்
நாகப்பட்டினம்	திருவெண்காடு
விருதுநகர் மாவட்டம்	சாத்தூர்
கடலூர் மாவட்டம்	விருத்தாசலம்
திருவள்ளூர் மாவட்டம்	ஆரணி
ஈரோடு மாவட்டம்	ஈரோடு நகரம்
இராமநாதபுரம்	முதுகுளத்தூர்
இராமநாதபுரம்	கமுதி (மகளிர் காவல் நிலையம்)
திருநெல்வேலி	அம்பாசமுத்திரம்
திருநெல்வேலி	திருநெல்வேலி (மகளிர் காவல் நிலையம்)
திருநெல்வேலி	வள்ளியூர்
திருநெல்வேலி	பணகுடி
கோயம்புத்தூர்	துடியலூர்

இந்த 30 காவல் நிலையங்களின் கட்டடங்கள் கட்ட மொத்த மதிப்பீடு 6.62 கோடி ரூபாய் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி),

அடுத்தது, தீயணைப்பு நிலையங்கள். தீயணைப்பு நிலையங்களுடைய பயன் - தீ பற்றிவிட்டால் அது தேவைப் படுகிறது என்றாலும்கூட, ஒரு கணக்குக்கு, புள்ளிவிவரத்தை எடுத்துப் பார்த்தால் மொத்தம் 277 நிலையங்கள். இந்த 277 நிலையங்களில் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து நிகழ்வுகளுக்குக்

குறைவான (Only five incidents) அழைப்பு கிடைத்த தீயணைப்பு நிலையங்கள் மட்டும் 184. 6 நிகழ்வுகளிலிருந்து 10 நிகழ்வு வரை அழைக்கப்பட்ட தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை 66. எனவே, இந்த ஆண்டு - புதிதாக தீயணைப்பு நிலையங்கள் என்பதற்குப் பதிலாக - ஏற்கெனவே உள்ள தீயணைப்பு நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும். அப்படி வழங்கப்படுகின்றபோது, அரசு இடம் தயாராக உள்ள 33 இடங்கள் அதற்காகக் குறிக்கப்பட்டு இருக்கின்றன. அதில் 12 இடங்களுக்குக் கட்டடம் கட்ட, துறையே தீர்மானித்திருக்கின்றது. ஒரு கட்டடம் கட்ட 17 இலட்சம் ரூபாய் செலவாகும். இந்த 17 இலட்சம் ரூபாயில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எட்டரை இலட்சம் ரூபாயைத்தர அவர்கள் ஒத்துக்கொண்டால் மேலும் 12 தீயணைப்பு நிலையங்களுக்கு - இந்த ஆண்டிலேயே 24 இடங்களில் தீயணைப்பு நிலையக் கட்டடங்கள் கட்டமுடியும். யார் யார் தயாராக இருக்கிறார்களோ அவர்கள் உள்துறைக்குத் தெரிவித்தால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, இந்த 33-ல் 24 நிலையங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுக் கட்டடங்கள் கிடைக்கும். அவர்களுக்கு ஒதுக்கியுள்ள பணத்தில் 8.5 இலட்சம் ரூபாய் செலவு செய்தால் கட்டடங்கள் கிடைக்கும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ஒழுங்காகக் கொடுத்தால் இதைப்பற்றியெல்லாம் யோசிக்கப்படும். (சிரிப்பு).

சுப்பராயன் இன்னொன்றைச் சொன்னார். உதவி ஆய்வாளர் தேர்வில் கலந்துகொண்டவர்களுடைய மதிப்பெண்களைத் தெரிவிப்பதைப்பற்றிச் சொன்னார். இந்த மதிப்பெண்களைத் தெரிவித்தால் என்ன; ஏன் தெரிவிக்கக் கூடாது என்று கேட்டார். அதைத் தெரிவிக்கக்கூடாது என்று அப்படி ஒன்றும் கட்டாயம் இல்லை. அப்படி ஒன்றும் அரசும் அதிலே பிடிவாதமாக இல்லை. ஏற்கெனவே இந்தத் தேர்வுக்கான குறைந்தபட்ச cut off marks மதிப்பெண்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், ஒவ்வொருவரும் பெற்ற மதிப்பெண்கள் எவ்வளவு என்பதை

அனைவருக்கும் தெரிவிக்கும்படி தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பெண் உதவி ஆய்வாளர்கள் இடம் காலியாக இருப்பது குறித்து திரு. கணேசன் அவர்கள் அன்றைக்கு வருத்தப்பட்டார். பா. ம. க. சார்பாகப் பேசிய உறுப்பினர் திரு. மணி அவர்களும் இதைக் குறிப்பிட்டார். 40 வயதான பெண்களை எல்லாம் ஓட விடலாமா; அப்படியெல்லாம் அவர்களைத் தேர்வு செய்யலாமா; அவர்கள் தேர்வு ஆவார்களா என்றெல்லாம் கேட்டுக் கொண்டார்கள் இருந்தாலும், அவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து, காவலர்களிலே இருந்து வந்த அந்தப் பெண்கள் அந்தப் பயிற்சிகூட இல்லாமல் இருப்பது சரியா என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே பணியிலே இருக்கும் பெண் காவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட 20 சதவிகிதமான, 60 உதவியாளர்கள் பணியிடங் களுக்கு 123 பேர்தான் விண்ணப்பமே செய்திருந்தார்கள். அதிலே 111 பேர் உடல் தகுதிக்கான தேர்வைப் பெறவில்லை. ஆகவே, அவர்களைத் தேர்ந்தெடுக்க இயலவில்லை. இருந்தாலும், அந்தப் பெண்மணிகளுக்காக, நம்முடைய உறுப்பினர் கண்மணிகள் உகுத்த கண்ணீரை மதித்து, அவர்களுக்கெல்லாம் மீண்டும் ஒரு வாய்ப்பு, இந்தத் தேர்விற்கு அளிக்கப்படும் என்ற உறுதியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மீண்டும் தரப்படுகின்ற அந்த வாய்ப்பில் மிகக் கடினமான தேர்வுகள் எல்லாம் இருக்க வேண்டுமா என்பதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. செல்லக்குமார் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். பதில் அளிக்கும்போது அவர் இல்லை. இருந்தாலும், அதைக் கேட்டுக்கொண்டிருந்த உங்களுக்கெல்லாம் விளக்கம் அளிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கின்றேன்.

தீயணைப்புத் துறை அதிகாரி ஜெயப்பெருமாள் மீதுள்ள குற்றச்சாட்டுதான் அது. அந்த அதிகாரியை ஒன்றும் இந்த அரசு மன்னித்து விட்டுவிடவும் இல்லை; அவரைத் தொட அஞ்சவும் இல்லை. Departmental Enquiry தான் செய்திருக்கிறீர்கள் என்று

சொன்னார். அது தவறு. Departmental Enquiry போட்டு பூசிமெழுகப் பார்க்கிறீர்கள் என்று சொன்னார். பூசி மெழுகுகிற வேலை இந்த அரசுக்கு என்றைக்கும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக இதைப்பற்றிச் சொல்லும்போதெல்லாம் நான் பதில் அளித்திருக்கிறேன். அதைப்பற்றி விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறேனே அல்லாமல் புகார் தவறு என நான் என்றைக்கும் கூறியதில்லை. ப்ளோட்டோ பம்புகளை அதிக விலை கொடுத்து வாங்கியதாகக் கூறினார். அவர் கூறும்போது எல்லோரும் எண்ணிக்கொண்டிருப்பது, இந்த ஆட்சியிலேதான் வாங்கிவிட்டார்கள் என்று. இது, 1996-க்கு முன்பு, இந்த ஆட்சி வருவதற்கு முன்பு நடந்த தவறு. அந்தப் பம்புகள் வாங்கியது சம்பந்தமாக இலஞ்ச ஒழிப்புத்துறை முறையாக விசாரணை நடத்திக்கொண்டு வருகிறது. Department விசாரணையல்ல, இலாக்கா விசாரணையல்ல, இலஞ்ச ஒழிப்புத் துறையை விசாரிக்கச் செய்து முறையாக விசாரணையை நடத்திக்கொண்டு வருகிறது. அந்தத் துறை 21-9-1998 அன்று அரசுக்கு அதுபற்றிய அறிக்கையை அளித்திருக்கிறது. அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட அரசு, ஜெயப்பெருமாள்மீது முறையான Regular case ஒன்றைப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க 21-10-1998 அன்று ஆணையும் பிறப்பித்துள்ளது. இந்த அதிகாரி ஏதோ எனக்கு வேண்டியவர் - வேண்டியவருக்கு வேண்டியவர் என்று சொல்லியிருக்கிறார். இந்த வேண்டியவர் என்பது, அன்றைக்குக்கூட யாரோ பேசும்போது, வீரப்பன் வேண்டியவர் என்று சொன்னார். (குறுக்கீடு). அதே செல்லக் குமார்தான் அதையும் சொன்னார். தாங்கள்கூடப் பெருமனது வைத்து அதை எடுத்துவிட்டீர்கள். எடுத்திருக்க வேண்டியதில்லை. எனக்கு வேண்டியவர்தான் வீரப்பன். அதேபோல, நம்முடைய செல்லக்குமாரும் 'வேண்டியவர்தான்'. அவர் காவல் நிலையம் வேண்டுமென்று வேண்டிய காரணத்தினால்தான் 'வேண்டியவருக்கே' காவல் நிலையம் கொடுத்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதைப்போல, வீரப்பனும் 'வேண்டியவர்தான்', 'நான் சரணாகதி அடைந்து விடுகிறேன், என்னை விடுதலை செய்துவிடுங்கள்' என்று 'வேண்டியவர்தான்'. அந்த வகையிலே 'வேண்டியவர்தான்',

(மேசையைத் தட்டும் ஒலி). வேறு வகையிலே 'வேண்டியவரல்ல' என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்லக்குமாருக்கு இந்த அதிகாரிமீது பழிகூற இந்த ஒரு புகார்தான் தெரியும் என்று கருதுகிறேன். இன்னும் பல புகார்கள் இருக்கின்றன இந்த அதிகாரிமீது. அவருக்குச் சொன்னவர் இந்த ஒரு புகாரைத்தான் சொல்லியிருக்கிறார். தெரிவிக்கப்படாத புகார் இன்னொன்று இருக்கிறது. அதையும்கூற விரும்புகிறேன்.

22-5-1998 அன்று சென்னை மூலக்கடையில் நடந்த பெரிய தீ விபத்தில் சர்டிஃபிகேட் வழங்குவதற்கு இந்த ஜெயப்பெருமாள் கையூட்டுக் கேட்டார் என்றும், இலஞ்சம் கேட்டார் என்றும், அதுகுறித்து விசாரணை நடத்த வேண்டுமென்றும் இலஞ்ச ஒழிப்புத் துறையிலிருந்து வந்த முதல்நிலை அறிக்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டு, அவரைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்திருக்கிறது. இலஞ்ச ஒழிப்புத் துறையின் விரிவான விசாரணைக்கும் இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் களுக்கெல்லாம் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விசாரணை முடிவடைந்து அரசு தற்போது ஜெயப்பெருமாள்மீது மேலும் ஒரு முறையான வழக்கைப் பதிவு செய்து நடவடிக்கையை மேற்கொள்ள இலஞ்ச ஒழிப்புத் துறைக்கு 6-5-1999 அன்று உத்தரவிட்டிருக்கிறது.

இதைவிட இன்னொன்று, 12-11-1998 அன்று இந்த அதிகாரி ஜெயப்பெருமாள் வீட்டை விஜிலன்ஸ் துறை சோதனையிட்டது. அப்போது வரவுக்கு மீறிய சொத்துக்களைச் சேர்த்திருப்பதுபற்றி அங்கே தெரிந்தது. அவருடைய மனைவி, மகன், தாயார் மற்றும் பினாமிகள் பெயரில் ஜெயப்பெருமாள் வீட்டிலே 37 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும். 72 சவரன் நகைகளையும், 3 கார்களையும், ஒரு டெம்ப்போ ட்ரக் ஆகியவைகளையும் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அதன்மேலும் விசாரணை நடைபெற்று வருகிறது. எனவே, ஜெயப்பெருமாள்மீது Vigilance enquiry மேற்கொள்ளப்படவில்லை என்றும் Departmental enquiry தான் வைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொன்னது உண்மைக்கு முற்றிலும் மாறான தகவல். Vigilance Enquiry மாத்திரமல்ல. அவர்மீது Criminal Action - னே எடுக்க இரண்டு நிகழ்வுகளில்

இந்த அரசு ஆணையிட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று சொன்னார், உபகரணங்கள் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை அப்படியே போய்விட்டது என்று சொன்னார். இந்த அரசைப் பற்றியும், இந்த அரசைத் தலைமையேற்று நடத்துகிற என்னைப்பற்றியும் எதிரே அமர்ந்திருக்கிற நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். இந்த உபகரணங்கள் வாங்குவதற்காக 1998-99ஆம் ஆண்டுக்கு அந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்டது 5.42 கோடி ரூபாய். அதில் ஏற்கெனவே செலவானது 2.5 கோடி ரூபாய். 1.86 கோடி ரூபாய்க்கு 13 நீர்தாங்கி வண்டிகள் வாங்கினால், தீயணைப்புத் துறைக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று ஜெயப்பெருமாளுக்குப் பிறகு வந்த அதிகாரி முடிவெடுத்து, அரசுக்குப் பிரேரணை அனுப்பியிருக்கிறார். அரசின் ஒப்புதல் கொடுத்தவுடன் இந்தத் தொகை செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜெயப்பெருமாள் இயக்குநராக இருந்தபோது, ஒப்பந்தப்புள்ளி கோராமல் உபகரணங்களை வாங்கலாம் என்று முன்மொழிந்த கருத்து கொள்முதல் குழுவால், Purchase Committee - யால் ஏற்கப்படவில்லை. ஆகவே, அவருக்குப் பின்வந்த இயக்குநர் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளதால் இந்த உபகரணங்கள் உடனடியாக வாங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள 1.05 கோடி ரூபாய்க்கு உபகரணங்கள் வாங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேமரா ஒன்று வாங்கவில்லை என்று சொன்னார். 4-6-1998 அன்றே கேமரா வாங்குவதற்காக ஆணையை அரசு பிறப்பித்து விட்டது. ஆனால் கேமரா வாங்குவதற்காக அகில இந்திய அளவில் டெண்டர் கோரப்பட்டு யாரும் முறையாக டெண்டர் மனு செய்யாத காரணத்தால் கேமரா வாங்குவதிலே தாமதம் ஏற்பட்டுள்ளது. டெண்டர் இல்லாமல் கேமரா வாங்கினால் அடுத்த ஆண்டு, ஏன் டெண்டர் போடாமல் கேமரா வாங்கினீர்கள் என்ற கேள்வி எழக்கூடும். ஆகவேதான் டெண்டர் போடப்பட்டது. கேமராவி னுடைய விலை 3 இலட்சம் ரூபாய். அதை இயக்குகின்றவர் களுக்கு ஆகிற செலவு 2 இலட்சம் ரூபாய். மொத்தம் 5 இலட்சம்

ரூபாய் விவகாரம்தான். இதிலே ஒன்றும் தவறு நடப்பதற்கு வழி இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுடைய பேச்சிற்குக் கொஞ்சம் விரிவான பதிலை நான் வழங்க வேண்டியவனாக இருக்கிறேன். அவர் பேசும்போது, "காவல் துறை ஒட்டுமொத்தமாக மக்கள் நம்பிக்கையைப் பெற்றிருக்க வேண்டும், அதற்கு மாறாகக் காவல் துறை என்றால் மக்களால் ஏளனம் செய்யக்கூடிய துறையாக மாறி இருப்பது மிகவும் வேதனைக் குரியது" என்றார். இதைக் காவல் துறைக்குப் பொறுப்பு வகிக்கின்ற என்னையே சொன்னதைப் போலத்தான் நான் எடுத்துக்கொள் கிறேன். காவல் துறை மீது நம்பிக்கை இல்லையென்றால் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற முதலமைச்சர் மீதும் நம்பிக்கை இல்லை என்றுதான் அர்த்தம். எனவே, என்மீது நம்பிக்கை இல்லை என்ற ஒரு வார்த்தையைச் சொன்னபிறகு, அதற்கான விளக்கங்களை வழங்க வேண்டியது என்னுடைய கடமையும் பொறுப்பும் ஆகிறது.

16 பேரை நெல்லை மேலப்பாளையத்தில் எந்தக் குற்றமும் இல்லாத பிள்ளைகளைச் சிறையிலே அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார். நெல்லை மாவட்டம், மேலப்பாளையத்தில் சுமார் ஒன்றரை இலட்சம் முஸ்லீம் இன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த ஒன்றரை இலட்சம் பேரில் ஒருசிலர்தான் 'அல் உம்மா' இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு செயல்பட்டு வருகின்றார்கள். 'அல் உம்மா' இயக்கத்தை மறைந்த திரு. அப்துல் சமது அவர்களோ அல்லது அருமை நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்களோ ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல, ஏற்றுக்கொள்ளப் போகிறவர்களும் அல்ல. ஒரு பெரிய சமுதாயத்திலே புல்லுருவிகளாக இப்படிப்பட்ட தீவிரவாத இயக்கங்கள் தோன்றி, கோவையிலே என்றைக்கும் தமிழ்நாடு கண்டிராத அளவிற்குப் பயங்கரமான குண்டு வெடிப்புகள் நடத்தியதால் தமிழ்நாட்டின் வரலாறு எந்த அளவுக்குக் களங்கப்பட்டுவிட்டது என்பதை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. மற்ற குண்டுகளைத் தேடி எடுத்து அவைகளையெல்லாம் வெடிக்காமல் சக்தி இழக்கச் செய்யாமல் இருந்திருந்தால் கோவை மாநகரத்தில் இன்னும் எத்தனை பேர் கொல்லப்பட்டிருப்பார்கள்; எத்தனை குழந்தை

குட்டிகள் மாண்டிருப்பார்கள் என்பதை எண்ணிப்பார்த்தால்தான் அந்தப் பயங்கரம் நமக்கு நன்றாகத் தெரியும். அந்த அளவிற்கு 'அல் உம்மா' என்கின்ற அந்த இயக்கத்தில் தீவிரமாக ஈடுபாடு கொண்டு செயல்பட்டு வந்த சிலபேர்மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்னும் ஒன்று சொல்கிறேன்.

மேலப்பாளையத்தில் சர்வசமயக் கூட்டமைப்புச் செயலாளராகவும், சிறு வியாபாரிகளுடைய சங்கத் தலைவராகவும் இருந்த, 42 வயதேயான வின்சன்ட் அபுபக்கர் என்பவரை முஸ்லீம்களின் அடிப்படைவாத எண்ணங்கொண்ட குழுவினர் கிச்சான் என்ற புகாரி தலைமையில் 10-12-1997 அன்று கொலை செய்தார்கள். யாரை? சர்வ சமய நோக்கம் கொண்டவர், 42 வயதானவர், ஒரு கூட்டமைப்பின் செயலாளர், எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று போதிக்கக்கூடியவர். அவரை இந்த அடிப்படைவாத, மத எண்ணம் கொண்ட குழுவினர், கிச்சான் என்கிற புகாரி தலைமையில் 10-12-1997 அன்று கொலை செய்தார்கள். மத நல்லிணக்கத்திற்கு ஆதாரமாகவும், அமைதியைக் காக்க காவல் துறைக்கு உதவியாகவும் இருந்தவர் இவர்; இந்தக் கொலைக்குக் காரணமான 10 குற்றவாளிகளும் முஸ்லீம்கள், அதிலே 8 பேர் கைது செய்யப்பட்டார்கள். 4 பேர் ஜாமீனில் வெளிவந்துவிட்டார்கள். 2 பேர் இன்னும் தேடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்ட 16 பேரைப் பற்றிய குறிப்பை இந்த அவைக்கு நான் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

டி. எம். சையது அலி - முக்கியத் தீவிரவாதியான கிச்சான் புகாரி என்பவருக்கு, அந்தப் பெரியவரைக் கொன்றாரே, அவருக்கு வலது கரம் போல் செயல்பட்டு, பண உதவி செய்தும், மறைவாகத் தங்க இடம் ஒதுக்கியும் கொடுத்தவர். பெருமாள்புரம் காவல் நிலையம் சம்பந்தப்பட்ட வெடி மருந்து வழக்கில் சம்பந்தப்பட்டவர்.

டி. எஸ். கே. அப்துல் கபூர் இவர் பெருமாள்புரம் வெடி மருந்து வழக்கிலே சம்பந்தப்பட்டவர். தன்வீட்டில் உள்ள தொலைபேசி மூலமாக 'அல் உம்மா' தீவிரவாதிகளுக்கு இரகசியத் தகவல்களைத் தெரிவிப்பவர்.

அஜீஸ் என்பவர் மேலப்பாளையத்தில் உள்ள ராசி டெக்ஸ்டைல்ஸ் கடையிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கைலிகளை தன் நண்பர்களுடன் சேர்ந்து திருடியவர். குண்டு வைக்கத் திட்டமிட்ட வழக்கு ஒன்றிலும் சம்பந்தப்பட்டவர்.

தமீம் அன்சாரி - இவரும் கொள்ளை வழக்கிலும், வெடி மருந்து வழக்கிலும் சம்பந்தப்பட்டவர்.

சாகுல் அமீது - இவர் தமீம் அன்சாரியோடு இணைந்து கொள்ளை வழக்கிலும், வெடி மருந்து வழக்கிலும் சம்பந்தப் பட்டவர்.

சுலைமான் என்பவர் அடிக்கடி பாளையங்கோட்டையில் மத்தியச் சிறையில் உள்ள முக்கிய தீவிரவாதியான கிச்சான் புகாரியைச் சந்தித்து நாசவேலைகள் செய்வதற்கான அறிவுரைகளைப் பெற்று வெளியே உள்ளவர்களுக்குத் தகவல் கொடுப்பவர். வெடிகுண்டு வைக்க முயற்சி செய்த வழக்கு ஒன்றிலும் சம்பந்தப்பட்டவர்.

ஷேக் சையது அலி, முகமது பாதுஷா போன்றவர்களும் சுலைமானோடு இணைந்து செயல்பட்டவர்களாவர்.

அஜ்மீர் என்ற அப்துல் ரகுமான், பத்தமடை பாரதிய ஜனதா கட்சித் தலைவர் மாடசாமி கொலை வழக்கில் சம்பந்தப் பட்டவர்.

ஷா அலம் தங்கள் என்பவர் வெடி குண்டு வைக்கத் திட்டமிட்ட வழக்கில் சம்பந்தப்பட்டவர்.

காஜா மொய்தீன் என்பவர் பீடித் தொழிலாளர்களுக்குப் பொங்கல் போனஸ் பட்டுவாடா செய்வதற்காகக் கொண்டு சென்ற 80 ஆயிரம் ரூபாயை 'அல் உம்மா' செலவிற்காகக் கொள்ளை யடித்தவர். இவர் முத்துக்குருஷ்ணன் என்பவர் கொலை செய்யப் பட்ட வழக்கிலும் குற்றவாளி ஆவார். தன் நண்பர்களோடு சேர்ந்து 'அல் உம்மா' இயக்கத்திற்காகத் தனது தந்தையான அகமது அலியிடமிருந்தே 80 ஆயிரம் ரூபாயைக் கொள்ளையடித்தவர்.

அகமது பஷீர் என்கின்ற நண்டு பஷீர், முத்துக்கிருஷ்ணன் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர். கோவை குண்டு வெடிப்பு

வழக்கிலும் சம்பந்தப்பட்டவர். இரயில் பாதையில் குண்டு வைத்த வழக்கிலும் சம்பந்தப்பட்டவர். இவ்வாறுதான், இந்த நபர்கள்மீது தகுந்த காரணங்களின்பேரில்தான் வழக்குப் போடப்பட்டுள்ளதே தவிர, ஏதோ எந்த உள்நோக்கத்துடனும் அல்ல.

இவர்களைக் கைது செய்தபோது இவர்களிடமிருந்து ஜெலட்டீன் குச்சிகளும், டெட்டனேட்டர்களும், நாட்டு வெடி குண்டுகளும், ஃப்யூஸ் வயர்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. இந்த 16 பேரில், 13 பேர்மீதுதான் என். எஸ். ஏ., தேசியப் பாதுகாப்புச் சட்ட வழக்கு போடப்பட்டுள்ளது. என். எஸ். ஏ. பிரிவின்கீழ் திடீரென்று வழக்குப் போட்டுவிட முடியாது.

மாவட்ட ஆட்சியாளரோ, காவல் துறை ஆணையரோதான் ஆணை பிறப்பிக்க முடியும். ஆணை பிறப்பித்த 5 நாட்களுக்குள் தடுப்புக் காவல் கைதிகளுக்குக் காரணம் கூற வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்த ஆணைக்கு மாநில அரசு 12 நாட்களுக்குள் ஒப்புதல் தர வேண்டும். மாநில அறிவுரைக் கழகத்தின் State Advisory Board முன் அனைத்து ஆவணங்களும் 21 நாட்களுக்குள் வைக்கப்பட்டாக வேண்டும். மாநில அறிவுரைக் கழகத்திலே உயர்நீதிமன்ற நீதிபதிகள் இடம்பெற்றிருக்கிறார்கள். மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் முறையீட்டு மனு செய்துகொள்ள அவர்களுக்கு உரிமையும் உண்டு. தடுப்புக் காவல் ஆணையை எதிர்த்து உயர் நீதிமன்றத்திலே 'ஹேபியஸ் கார்பஸ்' மனு தாக்கல் செய்யலாம்.

திரு. லத்தீப் அவர்கள் இங்கே குறிப்பிட்டவர்களில் மூன்று பேரை விடுவிக்க Advisory Board ஏற்கெனவே ஆலோசனை தந்து அதன் பேரில் அரசும் ஆணை வெளியிட்டுள்ளது. இதுமாத்திர மல்ல. திருநெல்வேலியிலே ஏதோ முஸ்லீம்கள்மீது மாத்திரம்தான் என். எஸ். ஏ. போட்டதாகச் சொல்வது தவறு. திருநெல்வேலி மாவட்டம், தச்சநல்லூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த வழக்கு ஒன்றில் 20 வயதேயான சித்திரக்குமார், 25 வயதான முத்து, மாயா என்கிற மாயாண்டி, 19 வயதான மாரியப்பன் ஆகியோர்மீதும் வெடிகுண்டுப் பிரிவுச் சட்டம் மற்றும் என். எஸ். ஏ. சட்டத்தின்கீழ், திருநெல்வேலி - ஈரோடு இடையே செல்லும் புகைவண்டியைக் கவிழ்ப்பதற்காக இருப்புப் பாதையில் வெடிகுண்டு வைத்த

வழக்கிலே அவர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், இந்துவா, முஸ்லீமா, கிருத்துவரா என்று பார்க்காமல் அவர்கள் எவ்வளவு பெரியவன்முறையில் ஈடுபட்டார்கள் என்கிற அந்த அடிப்படையிலேதான் அவர்கள் மீது வழக்கு போடப்படுகிறதே தவிர, வேண்டுமென்றே ஒரு சமுதாயத்தின் வெறுப்பைத் தேடிக்கொள்வதற்கு இந்த அரசு ஒன்றும் விளையாட்டுப் பிள்ளை அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னொன்று சொன்னார். வேலூர் மாவட்டத்திலே போலீஸ் எஸ்.பி.-யாக முஸ்லீமையே போடக்கூடாது என்று மரபு இருப்பதாக அவர்கள் தெரிவித்தார்கள். நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். என்னுடைய பாதுகாப்புப் பிரிவினுடைய முதன்மை அதிகாரியே ஜாபர் சேட்தான். பாதுகாப்பு அதிகாரி, என்னுடைய பாதுகாப்பு அதிகாரியினுடைய பெயரே, தலைமை அதிகாரி பெயரே ஜாபர் சேட். இஸ்லாமிய ஐ. பி. எஸ். அதிகாரிதான்.

N. S. A. போன்ற பிரிவுகளையெல்லாம் கையாளுகின்ற அரசினுடைய முக்கியச் செயலாளராக இன்று இருப்பவர் பரூக்கி என்ற இஸ்லாமிய ஐ. ஏ. எஸ். அதிகாரிதான்.

நான் 1989-ல் பதவியேற்றபோதுகூட புலனாய்வுத் துறைக்கு தலைமைப் பொறுப்பையே ஜாபர் அலி என்ற ஐ. பி. எஸ் அதிகாரியிடம்தான் கொடுத்திருந்தேன். நம்முடைய ஆளுநர் அவர்களே யார் என்று உங்களுக்குத் தெரியும்.

தமிழகத்திலே இரண்டு துணைவேந்தர்கள் இஸ்லாமியச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான். கோவை பல்கலைக்கழகத்திலும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும் இஸ்லாமியர்தான் துணைவேந்தர்களாக இருக்கின்றார்கள். தமிழ்நாட்டிலே இந்த ஆட்சியிலே மூன்று முஸ்லீம் கலெக்டர்கள் இருக்கின்றார்கள்.

காவல் துறையிலே இஸ்லாமியர்கள் என்று பார்த்தால் 5 கண்காணிப்பாளர்கள், (எஸ். பி.-க்கள்) இருக்கின்றார்கள். 3 ஏ.டி.எஸ்.பி.-க்கள் இருக்கின்றார்கள். 16 டி.எஸ்.பி.-க்கள் இருக்கின்றார்கள். 132 ஆய்வாளர்கள் இருக்கின்றார்கள். 231 உதவி

ஆய்வாளர்கள் இருக்கின்றார்கள். 4217 காவலர்கள் இருக்கின்றார்கள். ஆக மொத்தம், 4604 பேர் காவல் துறையில் எஸ்.பி.-யாக, டி.எஸ்.பி.-யாக, ஏ.டி.எஸ்.பி.-யாக, ஆய்வாளர்களாக, உதவி ஆய்வாளர்களாக, காவலர்களாக இருக்கின்றார்கள். இது காவல் துறையினுடைய மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கையில் 5.49 சதவிகிதம் என்பதையும் நான் மிகுந்த மரியாதையோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கோவை வெடிகுண்டுச் சம்பவத்திலே ஏதோ ஒன்றுமே நடக்காதது மாதிரி நம்முடைய சுந்தரம் இங்கே பேசினார். அதற்கு தி. மு. க. தான் காரணம் அப்படியென்று சொன்னார். அதற்கு முன்னாடி 'அ' போட்டுக் கொண்டால் சரிதான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெடிகுண்டுச் சம்பவத்திலே. . .

திரு. பி. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைதியாக இருக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் பேசினீர்கள். பதிலுக்குப் பேசுகின்றார்கள். அவ்வளவுதான், வேறு ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதிகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கோவை சம்பவத்தில் மொத்தக் குற்றவாளிகள் 195 பேர், கைது செய்யப்பட்டவர்கள் 178 பேர். கைது செய்வதற்கு முன்பே இறந்து போனவர்கள், கைது செய்திருக்கின்ற கட்டத்திலே சந்திரசேகரன் எல்லாம் சொன்னீர்களே அதுமாதிரி நிலைமையின் காரணமாக இறந்து போனவர்கள் 8 பேர், தலைமறைவு 9 பேர். மொத்த வழக்குகளுடைய எண்ணிக்கை 44. இவற்றில் 41 வழக்குகளின்மீது கோவை ஐந்தாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டாகிவிட்டது. சிறப்பு நீதிமன்றத் திற்கான அறிவிக்கை அரசு சார்பிலே வெளியிட்டபோதிலும் இன்னும் உயர்நீதிமன்றம், நீதிபதியினுடைய பெயரை அறிவிக்க வில்லை. அதற்காக ஒரு சிறப்பு நீதிமன்றத்தை அரசு அறிவிக்கை செய்திருக்கிறது. யார் நீதிபதி என்பதை இன்னும் உயர்நீதிமன்றம் அறிவிக்கவில்லை. அதுதான் தாமதம். இருந்தாலும்கூட,

44 வழக்குகளில் மொத்தம், 41 வழக்குகள் குற்றப்பத்திரிகை ஓராண்டு காலத்திற்குள்ளே விரைவாக தாக்கல் செய்த இந்த ஆட்சியைப் பாராட்டாதவர்கள் யாரும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி). இதைப்பற்றி விசாரிப்பதற்காக. . .

திரு. பி. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். நான் கடைசியாக அனுமதிக்கிறேன். (குறுக்கீடு). இப்போது அனுமதிக்க முடியாது, உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதைப்பற்றி விசாரிப்பதற்கு நீதியரசர் கோகுல கிருஷ்ணன் அவர்களை நியமித்து இரண்டு கட்டமாக விசாரிக்கச் சொன்னோம். 1997 நவம்பர் கடைசி காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி குறித்தும், அதற்கு அடுத்து, 1998 பிப்ரவரி 14 ஆம் தேதி நடைபெற்ற குண்டு வெடிப்பு குறித்தும் விசாரணைக் கமிஷன் இரண்டையும் விசாரிக்கச் சொல்லி நீதியரசர் கோகுல கிருஷ்ணன் நியமிக்கப்பட்டார். அவர் இரண்டையும் விசாரிப்பதாக இருந்தாலும்கூட, இரண்டையும் விசாரித்து முழுமையாக அறிக்கை தருவதற்குக் காலதாமதம் ஆகும் என்பதற்காகத்தான் அவர்கள் முதல் நிகழ்ச்சி பற்றிய முழு அறிக்கையை ஏற்கெனவே தந்து, அதை இந்த அவையிலே வைத்து இருக்கின்றோம். அதற்குப் பிறகு, நஷ்டயீடு கேட்டவர்கள் யார் யார், அந்தத் தகவலைத் தருவதற்குச் சில பேர் அவரை அவசரப்படுத்தி இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டமடைந்தவர்கள்; கொஞ்சம் வசதி படைத்தவர்கள், வசதியற்ற சாதாரண சிறு வியாபாரிகள் எல்லாம், தங்களுக்கு ஏற்கெனவே இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட்டு இருந்தாலும், மீதமுள்ள தொகை வேண்டும் என்பதற்காக அவசரப்படுத்தி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நீதியரசர் கோகுல கிருஷ்ணன் அவர்களிடத்தில் நஷ்டயீடு கோரி கொடுக்கப்பட்ட மொத்த மனுக்களின் எண்ணிக்கை 933 என்றாலும் முதற்கட்டமாக 560 மனுக்களைப் பரிசீலனை செய்து நஷ்டயீடு தருமாறு அரசுக்கு அவர் சிபாரிசு செய்து இருக்கிறார். முதல் கட்டப் பரிசீலனை 560. அதிலே இஸ்லாமிய மக்கள் 363 பேர்,

இந்துக்கள் 195 பேர், கிருத்துவர் 2 பேர் மொத்த நிவாரணம் 1 கோடியே 1 இலட்சத்து 67 ஆயிரத்து 45 ரூபாய். இதை அரசு ஏற்றுக்கொண்டு 7-5-1999 அன்றே ஆணை பிறப்பித்துவிட்டது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீதிபதி தன்னுடைய அறிக்கையிலே இதுபற்றிக் குறிப்பிட்ட வாசகம் குறிப்பிடத்தக்கது. "அரசு, கலவரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மிக விரைவான நடவடிக்கை எடுத்து நிவாரணம் வழங்கியது. பாதிக்கப்பட்டவர் களுடைய காயத்தை ஆற்ற உதவியுள்ளது. அரசால் வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணம் மற்றும் கூடுதல் இடைக்கால நிவாரணம், பாதிக்கப்பட்டவர்கள் மறுவாழ்வு அளிக்கப்பட மிகவும் உதவியுள்ளது. இதனை நீதிமன்றத்தில் விசாரணையின்போது கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், அரசால் அளிக்கப்பட்ட இடைக்கால மற்றும் கூடுதல் இடைக்கால நிவாரணத்தால் மிகவும் மகிழ்ந்துள்ளனர்" என்று குறிப்பிட்டு இருக்கிறார். அதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு செய்தி, இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர் களால் ஏகமனதாக ஒரு காலத்தில் பெருவாரியான ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம், பயங்கரவாத நடவடிக்கைத் தடுப்புச் சட்டம். POTA Bill - அதைப்பற்றி சட்டசபையிலே நான் கடந்த மாதம் சில கருத்துக்களைச் சொல்லி இருக்கின்றேன். அப்போது பேசிய திரு. லத்தீப் அவர்கள் அந்தச் சட்டத்தைக் குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்ளவில்லை; திருப்பி அனுப்பிவிட்டார் என்று சொன்னார்கள். நான் அப்போது, அது தவறு; அப்படியல்ல; இது குடியரசுத் தலைவருக்கே இன்னும் போகவில்லை; மத்தியில் உள்ள உள் துறை அதைப்பற்றிச் சில கருத்துகளை, விளக்கங்களைக் கேட்டிருக்கிறது. அந்த விளக்கங் களைப் பற்றித்தான் நாங்கள் யோசித்துக்கொண்டு இருக்கிறோம்; செலக்ட் கமிட்டிக்கு விடலாமா என்றுகூட எண்ணி இருக்கிறோம் என்று குறிப்பிட்டேன். ஆனால், அப்படிக் குறிப்பிட்ட பிறகு, அதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்றும், 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற அரசாக இந்த அரசு இருக்கும் என்றும் அன்றைக்கு நான் விளக்கி இருக்கிறேன். ஆனால், இதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. 19-4-1999 அன்று சட்டத்

துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் நடைபெற்ற இந்தக் குழுக் கூட்டத்தில், இந்தச் சட்டமுன்வடிவை, சட்டமன்றத் துறையின் ஆய்வுக் குழுவின் முடிவுக்கு அனுப்பிவைக்கலாம் என்று பரிந்துரை செய்ததன் பேரில் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தோடு கலந்தாலோசிக்கப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன் சட்டமுன்வடிவு இருக்கும்போது, செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப இயலும் என்றும், சட்டமுன்வடிவு - மசோதா - பேரவையிலே ஏற்கெனவே நிறைவேறிவிட்ட காரணத்தினாலே இப்போது சட்டமன்றப் பேரவைச் செயலகம் கருத்துத் தெரிவிக்க இயலாது என்றும் சட்டமன்றப் பேரவைச் செயலகம் தெரிவித்து விட்டது. எனவே, சட்ட அமைச்சர் தலைமையிலான குழு மீண்டும் கூடி மத்திய அரசின் பரிந்துரைகளை ஆய்வு செய்து, தமிழ்நாட்டில் தற்போது சட்டம் ஒழுங்கு நன்றாக இருப்பதால், தற்சமயம் இந்த POTA சட்டத்திற்கு அவசியம் இல்லை என்று முடிவு எடுத்து, அந்த முடிவை இந்த அரசுக்கு அனுப்பிவைத் துள்ளது. அரசு அந்த முடிவை ஏற்று இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள் கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தச் சட்டம் இல்லாமலேயே இவ்வளவு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டம் வந்தபோது, இது தேவைதான் என்று கருதப்பட்டது. ஏனென்றால், அப்போது இருந்த நெருக்கடியான அந்தச் சூழ்நிலையிலே தேவைதான் என்று கருதப்பட்டது. சட்டம் இவ்வளவு வேகமாக, தீவிரமாக ஆனதற்கெல்லாம் காரணம், யாரையும் தொல்லை கொடுக்க வேண்டும் என்பதல்ல. தமிழ்நாட்டிலே நீண்ட நெடுங்காலமாகத் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், காயிலே மில்லத் போன்றவர்கள் கட்டிக்காத்து வந்த மத நல்லிணக்கத்திற்கு ஓர் ஆபத்து வராமல் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாம் இதுபோன்ற தீவிர சட்டங்களையெல்லாம் இயற்ற வேண்டுமென்கின்ற நிலைமைக்கு ஆட்பட்டோம். இன்றைக்கு அந்த நிலையில்லை. இருந்தாலும்கூட, நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கிறது. அப்படி வருகிற நேரத்தில், நாம் இன்றைக்கு இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக அமர்ந்திருக்கின்றோம். இன்னும் 5, 6 நாட்கள் கழித்து தனித்தனி மேடைகளுக்குப் போய்விடுவோம். எந்தெந்த மேடைகளில் யார் இருப்போம் என்று இன்னும் உறுதியாக அறுதியிட்டுச் சொல்ல

இயலாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்போது நான் சொல்லிக்கொள்கிறேன், ஏனென்றால், நிதியொதுக்கீடு தீர்மானத்திலே பேசுகிற வாய்ப்பிருந்தாலும்கூட, இடையிலே சொல்லிவிட வேண்டுமென்று கருதுகின்றேன்.

நாம், இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், சகோதரர்களாகப் பழகிக்கொண்டிருக்கிறோம். இணை பிரியாத தோழர்களாகப் பழகிக்கொண்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களுடைய கட்சி என்கின்ற அளவிலே நாமெல்லாம் ஒரே கட்சிதான். இதுவரையிலும் நாம் கட்டிக்காத்து வந்த அமைதி சட்டமன்றத்தினுடைய மாண்பு, பெருமை, கௌரவம், இவையெல்லாம் நமக்கிடையே ஏற்பட்டுவிட்ட நட்பு, இனம் தெரியாத தோழமை, ஒரு சகோதர உணர்ச்சி, இவையெல்லாம் தொடர்ந்து கட்டிக்காப்பாற்றப்பட வேண்டும். அதற்காக என்றென்றும் உங்களுக்குத் துணையாக இருப்பேன் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்திலே தமிழகத்திலே வேறு சம்பவங்கள் நிகழலாம். எதிர்பார்க்கிறேன். கோவையைப்போல அல்லது ஓசூரில் நடைபெற்றதைப்போல கள்ளச்சாராய விபத்து நடைபெறலாம். கோவையைப் போன்று ஒரு சம்பவம் நடைபெறலாம். அல்லது முகவையைப்போல, அந்த மாவட்டத்தைப்போல ஒரு சாதிக் கலவரம் தூண்டிவிடப்படலாம். அதற்கெல்லாம் போலீஸ் எச்சரிக்கையாக, தயாராக இருக்கிறது. தயாராக இருக்கும். அப்படி இருப்பதற்குத் தேர்தல் அல்ல பிரதானம், வெற்றி அல்ல பிரதானம். நம் நாட்டின் அமைதியும், சமுதாயத்தினுடைய நிலையும்தான் முக்கியம் என்பதை உணர்ந்து அனைவரும் காவல் துறையில் சிறுசிறு குறைகள் இருந்தாலும்கூட, அவற்றை நீக்கிக்கொள்வதற்கான எல்லா முயற்சிகளையும் அவர்களும் எடுப்பார்கள், நானும் அதற்குத் தூண்டுகோலாக இருப்பேன் என்று கூறி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

உரை : 20 நாள் : 15.05.2000

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் அதன் தொடர்பான துறைகள் குறித்து இரண்டு நாட்களாக எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட 19 பேர் உரையாற்றி, நான் என்னுடைய விளக்கத்தைக் கூறுகின்ற வாய்ப்பைப் பெற்று இந்த அவையில் சில கருத்துக்களை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதலில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தீயணைப்புத் துறைக்கு - காவல் துறைக்கு ஒரு Computer 80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு. . . .

திரு. சோ. பாலகிருஷ்ணன் : காவல் துறைக்கு கணினி.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : காவல் துறையிலே கணினி, அதுதான் Computer என்று சொன்னேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தீயணைப்புத் துறை அல்ல, காவல் துறை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஆமாம். காவல் துறைக்கு வாங்கப்பட்டிருப்பதாகச் சொல்லி, இது அதிக விலை என்று குறிப்பிட்டார்கள். ஏனென்றால் தலைப்புச் செய்தியாக அதுதான் வரும் என்ற காரணத்தால் அதைப் பற்றிய விளக்கத்தை முதலிலேயே கொடுத்துவிட நான் விரும்புகிறேன். 80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டது பிரதான Computer மாத்திரம் அல்ல. Computer, அத்துடன் இணைந்த Printer, Modem-Network-தொடர்பு,, பெரிய Computer Server-கள். UPS ஆகிய Computer உள்ளிட்ட இந்த 6 item-களும் சேர்ந்துதான் 80,000 ரூபாய்க்கு வாங்கப் பட்டிருக்கிறது. எனவே அது ஒன்றும் அதிக விலை அல்ல. Computer மாத்திரம் வாங்கியிருந்தால், கணினி மாத்திரம் வாங்கி

யிருந்தால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்தத் தொகைக்கு வாங்கி இருக்க முடியும். இவற்றோடு சேர்ந்து Printer, Modem, Net Work-தொடர்பு, பெரிய Computer Server-கள் UPS ஆகியவற்றையும் வாங்கியிருக்கின்ற காரணத்தால் இந்தத் தொகை அளிக்க வேண்டியதாயிற்று என்ற என்னுடைய விளக்கத்தைத் தர விரும்புகின்றேன்.

காவல் துறைக்கு அரசின் சார்பில் அளிக்கப்பட்டிருக்கின்ற மொத்த நிதியொதுக்கீடு எவ்வளவு என்று பார்த்தால் 1995-96-இல், கடந்த ஆட்சியில், 450 கோடியே 57 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1996-97-இல் அது 497 கோடியாக உயர்ந்து இப்போது 2000-2001 வரவு-செலவுத் திட்டத்தில் காவல் துறைக்கு மொத்த நிதியொதுக்கீடு 1116 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அதாவது 4 ஆண்டுகளில் காவல் துறைக்கு அதிகமாக்கப்பட்ட நிதியொதுக்கீடு 663 கோடி ரூபாய் ஆகும்.

என்னுடைய அருமை நண்பர் திரு. பழனிசாமி அவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும், ஆளுங்கட்சி சார்பிலே பேசியவர்களும், எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தவர்களும், காவல் துறையினுடைய தவறான போக்குகள், தவறான காரியங்கள் இவற்றை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நம்முடைய நண்பர் பழனிசாமி அவர்கள் காவல் துறையினுடைய சிறந்த செயல்களுக்கான பாராட்டுகளையும் இங்கே தெரிவித்திருக்கின்றார். ஆகவே, இந்த் துறை முழுவதும் கண்டிக்கத்தக்க ஒன்று அல்ல என்பதும் அதிலே ஒரு சிலருடைய செயல்பாடுகள் கண்டிக்கத்தக்க அளவிற்கு இருக்கின்றன என்பதும் புலனாகின்ற உண்மையாகும்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விடுதலைப் புலிகளைப் பற்றியும் மத நல்லிணக்கத்தைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பிறகு நான் என்னுடைய பேச்சின் இடையிலே மறந்துவிடக்கூடும். அமீர் அவர்களுடைய பெயரால் மத நல்லிணக்கப் பதக்கம் ஒன்று வழங்க வேண்டும் என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். நிச்சயமாக அந்தப் பெருமகனுடைய பெயரால் அந்தப் பதக்கம் வழங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அவர் குறிப்பிட்ட விடுதலைப் புலிகள் பற்றிய அந்தப் பிரச்சினைகளை எல்லாம் என்னுடைய பேச்சின் இடையிலே குறிப்பிடலாம் என்று கருதுகின்றேன். கழக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சரியாகச் செயல்படுகிறது; சாதி மதக் கவலவரங்கள் குறைந்திருக்கின்றன என்பதை இங்குள்ள உறுப்பினர்கள் மாத்திரம் அல்ல, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர், தோழர் நல்லக்கண்ணு அவர்கள்கூட ஆனந்தவிகடன் ஏட்டிற்கு அளித்த பேட்டியில் சாதி, மதத் தகராறுகளை இந்த ஆட்சியிலே குறைந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, அவருடைய கருத்துக்கள் சிலவற்றை அவர்கள் இணைந்திருந் தாலும்கூட பொதுவான ஒரு பாராட்டுதலை அவர் குறிப்பிட்டிருக் கிறார். அதற்காக நான் இங்கிருந்தவாறே அவருக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

சாதி, மதக் கலவரங்கள் 1996ஆம் ஆண்டு தமிழகத்திலே 29 என்ற எண்ணிக்கை அளவிலேயிருந்து, 1997ஆம் ஆண்டு 67 என்கின்ற எண்ணிக்கை அளவிற்கு உயர்ந்து, நாம் அனைத்துக் கட்சிக் கூட்டங்களை எல்லாம் கூட்டி, அதற்கு என்ன நிவாரணம் தேடலாம் என்றெல்லாம் யோசித்து, இரண்டு மூன்று முறை அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்துப் பல நடவடிக்கைகளை எடுத்த பிறகு, 1998ஆம் ஆண்டு 12 ஆக குறைந்து, 1999ஆம் ஆண்டு 6 என்ற அளவிலே குறைந்து, இப்போது ஒரேயொரு கலவரம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) சிறிய அளவிலே திருவண்ணாமலையிலே ஒரு பள்ளிக்கூடத்திலே மாணவர்களிடத்திலே, T.V. சம்பந்தமான பிரச்சினையிலே ஏற்பட்டது. ஒரு முஸ்லீம் மாணவருக்கும், முஸ்லீம் அல்லாத மாணவருக்கும் என்ற அளவோடு, ஒன்று என்ற அளவிற்குக் குறைந்திருக்கின்றது. இதிலே நாம் மகிழ்ச்சியடைந்துவிட முடியாது இந்த ஒன்றும் இல்லாத அளவிற்கு - சாதி, மதக் கலவரங்கள் ஒன்றுமே இல்லாத அளவிற்கு நாம் பாடுபட்டாக வேண்டும். மேலும் ஒன்றோ, இரண்டோ கூடுவதற்குக்கூட இடம் தராமல் நாம் பாடுபட்டாக வேண்டும். அமைதியான முறையிலே பெரிய விழாக்கள் எல்லாம்கூட நடைபெற்றிருக்கின்றன. காவல் துறையினுடைய கடமையுணர்வின் காரணமாக கட்டுப்பாடு காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளில் தேவர் ஜெயந்தி விழா

மற்றும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் போன்றவை எந்தவிதமான அசம்பாவிதங்களும் இல்லாமல் நடந்தேறியதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இந்த 4 ஆண்டுக் காலத்திலே நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள், இடைத் தேர்தல்கள் - 1996-இல் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் மற்றும் தமிழக சட்டமன்றத்தினுடைய இடைத் தேர்தல்கள், இவையெல்லாம் மிக அமைதியான முறையிலே நடைபெற்றிருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகளினுடைய விகிதாச்சாரத்தைப் பற்றி நான் அல்ல, தேசிய குற்றப் பதிவுப் பிரிவு (National Crime Records Bureau) 1999ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் முடிய 6 மாதங்களில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற குற்ற நிகழ்வுகள் குறித்து புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது. Mid Term Review. 1999 என்ற அந்த அறிக்கையிலுள்ள சில புள்ளி விவரங்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

கொலைகள் - இநத் 6 மாத காலத்தில் உத்தரப் பிரதேசத்தில் 4,668; பீகாரில் 2,716; மத்தியப் பிரதேசத்தில் 1,647; மராட்டியத்தில் 1,613; ஆந்திரப் பிரதேசத்தில் 1,367; தமிழ்நாட்டில் 907; இந்த 907 என்பது மிகக் குறைவு என்று நான் கூறமாட்டேன். இந்த 907 கூட நடைபெறாவண்ணம் நம்முடைய காவல் துறை இன்னும் கடமையாற்றிட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர்களடைய கருத்து என்பதை நான் மிகத் தெளிவாக உணர்வேன்.

கற்பழிப்பு போன்ற காரியங்கள் - மத்தியப் பிரதேசத்திலே 1,868; உத்தரப் பிரதேசத்திலே 825; மராட்டியத்தில் 648; இராஜஸ்தானில் 609; பீகாரில் 596; ஆந்திரப் பிரதேசத்தில் 485; அசாமில் 327; மேற்கு வங்கத்தில் 412; கேரளாவில் 214; தமிழ்நாட்டில் 202;

கூட்டுக்கொள்ளைகள் (Dacoity)-பீகாரில் 1,190; உத்தரப் பிரதேசத்தில் 509; அசாமில் 448; மராட்டியத்தில் 269; மேற்கு வங்கத்தில் 202; கர்நாடகாவில் 151; குஜராத்தில் 447; ஆந்திரப் பிரதேசத்தில் 123; தமிழ்நாட்டில் 87;

வழிப்பறி - (Robbery) - உத்தரப் பிரதேசத்தில் 2,295; பீகாரில் 1,430; ஒரிசாவில் 557; கர்நாடகாவில் 551; ஆந்திரப் பிரதேசத்தில் 403; தமிழ்நாட்டில் 297; கன்னக்களவு (Burglary) - மத்தியப் பிரதேசத்தில் 8,962; மராட்டியத்தில் 7,339; உத்தரப் பிரதேசத்தில் 4,739; கர்நாடகாவில் 3,940; ஆந்திரப் பிரதேசத்தில் 3,396; தமிழ்நாட்டில் 2,745.

கலவரங்கள் (Riots) - இராஜஸ்தானில் 7,861; பீகாரில் 5,540; கர்நாடகாவில் 3,722; உத்தரப் பிரதேசத்தில் 3,494; கேரளாவில் 3,199; மேற்கு வங்காளத்தில் 2,258; தமிழ்நாட்டில் 1,939 என்ற அளவில் இந்த விகிதாச்சாரங்கள், குற்ற நிகழ்வுகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

காவல் துறையினுடைய சிறப்பான பணி என்று எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், காவல் துறையினுடைய எண்ணிக்கை ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு எவ்வளவு பேர், மற்ற மாநிலங்களிலே எவ்வளவு பேர் என்ற கணக்கைப் பார்க்கின்றபொழுது, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு, பஞ்சாபில் 297 காவலர்கள்; மராட்டியத்தில் 155 காவலர்கள்; குஜராத்தில் 138 காவலர்கள் என்ற விகிதத்திலே இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலேதான் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு நூற்றி இருபத்து நான்கே பேர்கள்தான் காவலர்கள் என்ற விகிதத்திலே, குறைவான எண்ணிக்கையில் உள்ளது. ஆனால் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்பொழுது, காவலர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும்கூட, செயல்பாடுகள் மற்ற மாநிலங்களை மிஞ்சக்கூடிய அளவில் இருக்கின்றன.

பதிவு செய்யப்பட்ட வழக்குகளில், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளினுடைய சதவீதம் என்று பார்த்தால், அகில இந்திய சராசரி, 1997-ல் 77 சதவீதம். தமிழ்நாட்டில் 91 சதவீதம். 1998ஆம் ஆண்டு அகில இந்திய சராசரி 77 சதவீதம். தமிழ்நாட்டில் 90 சதவீதம்.

அதேபோல தொடரப்பட்ட வழக்குகளில், தண்டனையில் முடிவுற்ற வழக்குகளினுடைய சதவீதம் அகில இந்திய சராசரி 1997-ல் 38 சதவீதம். தமிழ்நாட்டில் 64 சதவீதம். 1998-ல் அகில இந்திய சராசரி 37 சதவீதம், தமிழ்நாட்டில் 64 சதவீதம். அதிலும் நாம் சிறப்பாகப் பணியாற்றினோம் என்பதைத்தான் அந்தப் புள்ளிவிவரம் நமக்கு இங்கே காட்டுகின்றது.

காவல் துறையில் மதம், ஜாதி இவையெல்லாம் தலைக் காட்டக்கூடாது என்ற ஒரு நல்ல தத்துவத்தை நம்முடைய அருமை நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக்கூறி, காவல் துறையிலே இஸ்லாமியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப் படவேயில்லை என்று கூறினார். அதிலும் குறிப்பாக இரகசியப் புலனாய்வுத் துறை போன்ற துறைகளிலிருந்து இஸ்லாமியர்கள் நீக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று கூறினார். கடந்த ஆண்டு காவல் துறை மானியத்திலே பேசும்போதும் திரு. லத்தீப் அவர்கள் இதையேதான் கூறினார். இந்த ஆண்டும் அதையேதான் கூறியிருக்கின்றார்.

1989ஆம் ஆண்டு நான் ஆட்சியிலே இருந்தபோதுதான், ஜாபர் அலி அவர்களைப் புலனாய்வுத் துறைப் பொறுப்பில் வைத்திருந்தேன். ஜாபர் அலி என்றாலே அவர் முஸ்லீம் என்று நமக்குத் தெரியும். ஜாபர் அலி செட்டியார் என்றோ, ஜாபர் அலி முதலியார் என்றோ யாரும் சொல்லமுடியாது. அவரைத்தான் புலனாய்வுத் துறைப் பொறுப்பிலே அமர்த்தி அவருக்கு மாநில அளவிலே அந்தப் பொறுப்பை நான் அளித்திருந்தேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாற்றப்பட்ட பிறகு, வந்த ஆட்சியினர், அவரை என்ன பாடுபடுத்தினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அருமை நண்பர் லத்தீப் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அந்த வேதனையைத் தாங்கமாட்டாமல் தாமாகவே ஒய்வு பெற்றுக்கொண்டார் ஜாபர் அலி அவர்கள். புலனாய்வுத் துறையிலே தலைமைப் பொறுப்பில் ஜாபர் அலியை நான் நியமித்ததற்கு முன்பு, இஸ்லாமியர் யாருமே இருந்ததில்லை என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். தற்போதுகூட, எனக்கு முதன்மைப் பாதுகாவலராக இருப்பவர், ஜாபர் சேட், I.P.S. அவர்கள்தான் என்பதை நான் லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

காவல் துறையிலே ஒட்டுமொத்தமாக இஸ்லாமியர்கள் என்று பார்த்தால், S.P. நிலை அதிகாரிகள் 5 பேர்; கூடுதல் S.P. கடந்த ஆண்டு 3 பேர், இந்த ஆண்டு 6 பேர்; D.S.P. கடந்த ஆண்டு 16 பேர், இந்த ஆண்டு 17 பேர். Inspectors கடந்த ஆண்டு வரை 132 பேர், இந்த ஆண்டு 137 பேர். Sub-Inspectors கடந்த ஆண்டு வரையில் 231 பேர், இந்த ஆண்டு 271 பேர். தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்கள், கடந்த ஆண்டு வரையில் 4,617 பேர், இந்த ஆண்டு 4,648 பேர். ஒட்டுமொத்தமாக கடந்த ஆண்டு

4,604 இஸ்லாமியர்கள் இருந்ததற்கு மாறாக இந்த ஆண்டு 5,084 பேர் காவல் துறையிலே பணியாற்றுகின்றார்கள். காவல் துறையில் மொத்தப் பணியாளர்களுடைய எண்ணிக்கையில் இது 6.3 விழுக்காடு என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1 விழுக்காடு உண்டா என்று அன்றைக்கு அவர்கள் ஆணித்தரமாகக் கேட்டார்கள். 6.3 விழுக்காடு காவல் துறை மொத்தப் பணியாளர்களில் இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னும் சொல்லப்பபோனால், அரசின் முக்கிய துறையான பொதுத் துறையின் செயலாளரே பரூக்கி என்ற இஸ்லாமிய I.A.S. அதிகாரிதான். மாவட்ட ஆட்சித் தலைவர்களில் மூன்று பேர் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

இரகசியத் துறையிலே இஸ்லாமியர் இல்லை என்றும், இருந்தவர்கள் நீக்கப்பட்டு விட்டார்கள் என்றும் லத்தீப் அவர்கள் கூறினார்கள். குற்றப் புலனாய்வுத் துறை, ஒற்றாய்வுத் துறை, 'Q' பிரிவு ஆகியவற்றில் இஸ்லாமியர்கள் S.P. நிலையில் ஒருவரும், D.S.P. நிலையில் ஒருவரும், 6 Inspector-களும் 7 Sub-Inspector-களும், 30 தலைமைக் காவலர் மற்றும் காவலர்களும் ஆக மொத்தம் 45 பேர் பணியாற்றுகின்றார்கள். அண்மைக் காலத்தில் 'Q' பிரிவிலிருந்து ஒரேயொரு Inspector-ரும், ஒரு தலைமைக் காவலரும்தான் மாற்றப்பட்டுள்ளார்கள். மற்றவர்கள் யாரும் மாற்றப்படவில்லை.

இன்னொன்று, இலட்சக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்கள் சிறையில் இருப்பதாகச் சொன்னார்கள். நான் அதைப்பற்றி வலியுறத்திக் கேட்டபோது, இவையெல்லாம் ஒரு உயர்வு நவிற்சி என்று சொன்னார்கள். உயர்வு நவிற்சி என்பது இல்லாத பெருமையை அதிகமாகச் சொல்வது; இல்லாத எண்ணிக்கையை அதிகமாகச் சொல்வது, மிகைப்படுத்துதல். அவர் பன்மொழிப் புலவர். அவருக்கு நான் தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மிகைப்படுத்தி, அன்றைக்கு, ஆயிரக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்கள், அப்பாவி இளைஞர்கள் சிறையில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த எண்ணிக்கையை நீங்கள்தான் கொண்டு வரவேண்டுமென்று எனக்குச் சொன்னார்கள். நான்

திருப்பிக் கேட்டபோது. கொண்டு வந்து இருக்கின்றேன். கட்டளையை ஏற்று. (சிரிப்பு).

தமிழகத்திலே உள்ள பத்து சிறைச்சாலைகளிலும் சேர்த்து 12-5-2000 அன்று சிறையிலே இருக்கின்ற மொத்தக் கைதிகளின் எண்ணிக்கை 13,138. 12ஆம் தேதியோடு தமிழ்நாட்டு சிறையிலே, 10 சிறைக் கோட்டங்களிலே இருக்கின்றவர்களுடைய எண்ணிக்கை 13,138. இதில் இஸ்லாமியர்கள் 351 பேர்; இஸ்லாமியர்கள் அல்லாதவர்கள் 12,787 பேர். இஸ்லாமியர்கள் 2.67 சதவிகிதம்; அல்லாதவர்கள் 97.33 சதவிகிதம் என்ற இந்த விவரத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

விரைவான புலன் விசாரணை நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு அன்று பேசிய எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரால் எடுத்து வைக்கப்பட்டது. நம்முடைய சுந்தரம் அவர்களும் அதே கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நத்தை வேகத்திலே காவல் துறை நடைபெறுவதாக அன்றைக்கு அவர்கள் கூறினார்கள். எந்த அளவுக்குத் தீவிரமாக, விரைவாக புலன் விசாரணை நடைபெற்று, குற்றப் பத்திரிகைகள் எல்லாம் கொடுக்கப்பட்டு, விசாரணையும் முடிவுற்று, தண்டனைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதற்குச் சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிப்பது என்னுடைய தலையாய கடமையாகும்.

கோயம்புத்தூரில் நடந்த வெடிகுண்டுச் சம்பவங்களை விசாரிக்க அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு தீவிரமாக விசாரணை செய்து, 175 குற்றவாளிகளைக் கைது செய்தது. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் விசாரணை முடிக்கப்பட்டு 5-5-1999 அன்று 180 பேருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சென்னையிலிருந்து திருச்சி, ஈரோடு, திருச்சூர் சென்ற ரயில்களில் 6-12-1997 அன்று குண்டு வெடித்து, 10 பேர் இறந்த சம்பவத்தைப் புலனாய்வு செய்த சிறப்புப் புலனாய்வுக் குழு, குற்றவாளிகள் ஒன்பது பேரை விரைந்து கைது செய்தது.

சென்னை, கோவை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் 30-5-1999 அன்று குண்டு வைத்த குற்றவாளிகள் கைது செய்யப்

பட்டார்கள். சென்னை இந்து முன்னணி அலுவலகத்தை வெடி வைத்துத் தகர்த்த வழக்கு, திரைப்பட இயக்குநர் மணிரத்னம் வீட்டின்மீது குண்டு வீசப்பட்ட வழக்கு, சென்னையில் மூன்று ஓட்டல்களில் குண்டு வெடிக்கப்பட்ட வழக்குகள் - முந்தைய ஆட்சிக்காலத்தின்போது நிகழ்ந்து - நீண்டகாலமாக நிலுவை யிலிருந்தன. அந்த வழக்குகள், கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் விரைந்து புலன் விசாரணை செய்யப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

தருமபுரியிலே கோவை விவசாயக் கல்லூரி மாணவிகள் சென்ற பேருந்து ஒன்று எரிக்கப்பட்டு, அதிலிருந்த 3 விவசாயக் கல்லூரி மாணவிகள் எரித்துக் கொல்லப்பட்டார்கள். நாட்டையே அதிர்ச்சி அடையச் செய்த அந்த வன்முறை கொலைச் சம்பவம் குறித்த வழக்கில் குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்புப் புலனாய்வுக் குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். 28-4-2000 அன்று, குற்றம் நடைபெற்ற மூன்று மாதத்திற்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 3 முக்கிய குற்றவாளிகள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சிறையிலடைக்கப்பட்டார்கள். இன்னும் முக்கியமான வழக்குகள் என்று எடுத்துக்கொண்டால் பரபரப்பான பல வழக்குகள் விரைந்து முடிவு செய்யப்பட்டிருக்கின்றன.

போலிச் சாமியார் பிரேமானந்தா வழக்கில்; பிரேமானந்தா வுக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமாக ரூபாய் 66 இலட்சத்து 40 ஆயிரமும் விதிக்கப்பட்டது. இதர நான்கு குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் மற்றும் பெண் குற்றவாளியான சந்திராதேவிக்கு 2 ஆண்டு 7 மாதம் 2 நாட்கள் சிறைத் தண்டனையும், அபராதமாக ரூபாய் 25 ஆயிரமும் விதிக்கப்பட்டது.

சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரி முதலாமாண்டு மாணவர் பொன். நாவரசு கொலை வழக்கில், ragging காரணமாக அக்கொலையை செய்த ஜான் டேவிட் என்ற குற்றவாளிக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பொள்ளாச்சியில் ஜிகாத் Committee தலைவர் திரு. பழனிபாபா கொலை செய்யப்பட்ட வழக்கில் 10-11-1999 அன்று ஐந்து குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் மேலும் 5 வருடக் கடுங்காவல் தண்டனையும் அளிக்கப்பட்டது.

சிதம்பரம் ம.தி.மு.க. பிரமுகர் பழனிவேலு கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட 17 குற்றவாளிகள், கைதாகாமல் இருக்க எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளையும் முறியடித்து காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து, குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்துள்ளார்கள்.

தேவகோட்டை தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் ரூசோ கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட காளிமுத்து, சொர்ணலிங்கம் மற்றும் 11 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு விசாரணை முடிந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

மதுரை கல்லூரிப் பேராசிரியர் பரமசிவம் கொலை செய்யப் பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட இப்ராஹிம், நூர்தீன், ஷாகுல் ஹமீது, இப்ராஹிம் ஷா மற்றும் பழனி ஆகிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். இவர்கள்மீதும், நீதிமன்றத்தில் சரண் அடைந்த பக்ருதின் என்பவர்மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன் இவர்களில் 4 குற்றவாளிகள்மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

மதுரையில் உதவி ஜெயிலர் ஜெயப்பிரகாஷ் கொலை செய்யப்பட்ட வழக்கில் அபுதாகிர், ஆசிக், அஸ்லாம் மற்றும் ஜாப்ரு என்ற சையது ஜபார் அகமது ஆகியோர் கைது செய்யப் பட்டுள்ளனர். அவர்கள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், களத்தூரைச் சேர்ந்த மந்திரவாதி வேலுசாமி தனது தாயார், மாமனார் மற்றும் தனது உதவியாளர் ஆகிய மூன்று பேரைக் கொன்ற வழக்கில், புலன் விசாரணை C.B. - C.I.D.-க்கு மாற்றப்பட்டுள்ளது. வேலுசாமி உள்ளிட்ட மூவர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். 25-2-2000 அன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாகர்கோவிலைச் சேர்ந்த செல்வி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் சிவகுமார், வாத்தியார் முருகன் என்கிற தியாகராஜன் மற்றும் நாகராஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கில் விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

தருமபுரி மாவட்டத்தில் மூன்று வனப் பாதுகாவலர்கள் எரித்துக் கொல்லப்பட்ட வழக்கில், மூன்று வனப் பாதுகாவலர் களும் பசவன் என்பவனின் கும்பலினால் கொலை செய்யப்பட்டு, அவர்களது உடல்கள் எரிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்கள். வழக்கு நடைபெற்று வருகிறது.

மார்த்தாண்டத்தில் ஆசிரமம் நடத்திவந்த ஜான் ஜோசப் என்ற போலிச் சாமியார்மீது கற்பழிப்பு, பயமுறுத்தல், கொலை ஆகிய குற்றச் செயல்கள் புரிந்ததாக புகார்கள் வந்தன. தீவிர புலன் விசாரணைக்குப் பின் போலிச் சாமியாரும் மேலும் 4 பேரும் கைது செய்யப்பட்டார்கள்.

தூத்துக்குடி காயல்பட்டினம் பேட்மா நகரில் மஜீத் என்பவர் நரபலி தரப்பட்ட வழக்கில் இரண்டு எதிரிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்கள். இவ்வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Eve-teasing காரணமாக பலத்த காயமடைந்த சரிகா ஷா என்ற கல்லூரி மாணவி இறந்துவிட்டார். இதற்குக் காரணமான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருச்சியில் டாக்டர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட 13 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட R.S.S. அமைப்பாளர் குப்புராம் தாக்கப்பட்ட வழக்கில் இரு குற்றவாளிகளையும் காவல் துறையினர் கைது செய்துள்ளார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டுள்ளது. வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருச்சியில் லீலாவதி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொலைக்கு காரணமான ஸ்ரீபுத்ரா, தினகரன் ஸ்ரீஜெயந்தி, மாதாஜி, பெரிய சத்தியநாராயணன், சின்ன சத்தியநாராயணன் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த 7 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

சென்னையில் கிறித்துவக் கல்லூரியில் விண்ணப்பம் வாங்கச் சென்ற ராஜேஸ்வரி என்ற இளம்பெண் கல்லூரி வளாகத்தில் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். காவல் துறையின் தீவிரமான புலன் விசாரணையின் மூலம் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். 4 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்தது போன்ற போலியான ஜாமீன் உத்தரவுகளைத் தயார் செய்து, அவற்றைப் பயன்படுத்தி, நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்களைச் சேர்ந்த 48 கைதிகளை ஜாமீனில் விடுவித்துவிட்டார்கள். இந்த வழக்கில் குற்றவாளிகளான தூத்துக்குடியைச் சேர்ந்த குருமூர்த்தி, உடன்குடியைச் சேர்ந்த பொன் ஆதித்தன், சேரன்மகாதேவியைச் சேர்ந்த பாவநாசம் மற்றும் நாகர்கோவிலைச் சேர்ந்த பொன்ராஜ் ஆகியோரை ஆதாரங்களோடு கைது செய்து, போலியான ஜாமீன் உத்தரவுகள் தயார் செய்வது ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 1999ஆம் ஆண்டில் 6 மாத காலத்தில் நடந்த வெவ்வேறு சம்பவங்களில், ஒதுக்குப்புறமாக இருந்த வீடுகளில் வசித்த 21 பெண்கள் ஒரே முறையில் கொலை செய்யப்பட்டார்கள். போலீசாரின் தீவிரமான புலன் விசாரணைக்குப் பிறகு இக்கொலைகளைச் செய்த மருதமுத்து என்பவர் கைது செய்யப்பட்டு குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைக்கப்பட்டார்.

கன்னியாகுமரி, தெரிசனம்கொப்பு என்ற இடத்தில் ஒரு தனியார் வங்கியின் (GSC) பாதுகாப்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு ரூ. 60 இலட்சம் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்த வழக்கில் அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப் பட்டார்கள். கொள்ளையடிக்கப்பட்ட அனைத்து நகைகளும் திரும்பக் கைப்பற்றப்பட்டன.

மதுரை மாநகராட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திருமதி லீலாவதி கொலை வழக்கில் ஆளுங்கட்சிக் காரர்கள் மீதே குற்றஞ்சாட்டப்பட்டது, என்றாலும் அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். அதுமாத்திரமல்ல, வழக்கு முடியும்வரை அவர்கள் ஜாமீனில்கூட வரமுடியாமல், குற்றவாளிகள் ஆறு பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

கோவையில் பச்சிலை ராமன் என்பவர் ஜக்கம்மா பூஜை என்ற பெயரில் சுமார் 20 அப்பாவிப் பெண்களைக் கடத்திச் சென்று உடலுறவு வைத்து பின்னர் திருப்பி அனுப்பியிருக்கிறார். 8-2-2000 அன்று இவர் கைது செய்யப்பட்டு ஓராண்டு தடுப்புக் காவல் சட்டத்திலே வைக்கப்பட்டுள்ளார்.

சேலம் மாவட்டத்தில் சுப்பிரமணி என்பவர் சாமியாடி வாக்கு சொல்லுவதாகக் கூறி பல நாட்களாக ஏமாற்றி வந்திருக்கிறார். இறுதியாக வள்ளி அம்மாள் என்பவரைக் கற்பழித்ததாகப் புகார் வந்ததையொட்டி வழக்குப் பதிவு செய்யப் பட்டு இவரும் கைது செய்யப்பட்டார்.

இவ்வளவு ஏன், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களுடைய மகனுடைய இல்லத்திலேகூட 12ஆம் தேதி திருட்டு, 13ஆம் தேதி கண்டுப் பிடிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே என்னுடைய மகன் வீட்டில் திருடியதை 24 மணி நேரத்தில் பிடித்துவிட்டார்கள். அதனால் எனக்கு என்ன தொல்லை என்றால், திருட்டுக்கு உள்ளானவர்கள் எல்லாம் நீங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதால் வந்துவிட்டது, அதேபோல் எங்களுக்கும் வாங்கிக் கொடுங்கள் என்று ஏகப்பட்ட phone calls வருகிறது. (சிரிப்பு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எப்படியோ செய்தி, விளம்பரமானால் சரி. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், பலமாடிக் குடியிருப்புகளில் திருடுவதில் கைதேர்ந்த கவுஸ் பாஷா, அவருடைய மகன் அக்பர் பாஷா மற்றும் மருமகன் நாசர் ஆகியோர் சென்னை நகரக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்கள். 18 வழக்குகளில் தொடர்புள்ள இவர்களிடம் இருந்து ரூ. 5.2 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டன. இவர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலே அடைக்கப்பட்டார்கள்.

தாம்பரத்தை அடுத்த பொழிச்சலூரைச் சேர்ந்த, 1990 முதல் திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டு வந்து 105 வழக்குகளில் குற்றவாளியான இரத்தின பாண்டியன் என்பவர் 13-9-1999 அன்று கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 87 தொலைக்காட்சிப் பெட்டிகள், 131 சவரன் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன. 4-11-1999 அன்று இவர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் அடைக்கப் பட்டார்.

தென் சென்னைப் பகுதிகளில் திருட்டுகள் புரிந்து வந்த கல்கத்தாவைச் சேர்ந்த கொடூரமான குற்றவாளி பர்வீஸ் அலி என்பவர் 2-7-1999 அன்று கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் மீட்கப்பட்டன. இக் குற்றவாளி, குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப் பட்டார்.

சென்னை பூக்கடைப் பகுதிகளிலே உள்ள வியாபாரிகளிட மிருந்து பெரிய அளவில் பணத்தைக் கொள்ளை அடித்து, 10 கிலோ எடையுள்ள தங்க நகைகள் மற்றும் சுமார் 25 இலட்சம் ரூபாய் பணத்தைக் கொளளயடித்த குற்றவாளிகளான மன்னீர் பேட்டையைச் சார்ந்த அனில்குமார் மற்றும் அவரது கூட்டாளிகள் 20-7-1999 அன்று கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

பல்வேறு கொள்ளைகள் மற்றும் பணத்திற்காக ஆட்களைக் கடத்துதல் போன்ற குற்றங்களைச் செய்து வந்த முகேஷ் மற்றும் அவனது கூட்டாளிகள் அனைவரும் 29-12-1999 அன்று கைது செய்யப்பட்டார்கள். அவர்களிடமிருந்து மூன்று

கைத்துப்பாக்கிகள், 37 குண்டுகள், அம்பாசிடர் கார், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ரூ. 4 இலட்சம் கைப்பற்றப்பட்டன.

வருமான வரி அதிகாரிகளைப் போலவும், சங்க இலாகா அதிகாரிகளைப் போலவும் மேலும் Police C.I.D. அதிகாரிகள் போலவும் போலியான வேஷத்தோடு மக்களை ஏமாற்றியும் மிரட்டியும் கொள்ளைகள் நடத்திய சதீஷ் மற்றும் அவனது கூட்டாளிகள் கைது செய்யப்பட்டார்கள். 11-3-1999 அன்று குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையிலே அடைக்கப் பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஏமாற்று, கொள்ளை அடித்தல், வஞ்சித்து திருடுதல் போன்ற காரியங்கள் மாத்திரமல்ல, ரவுடிகள் ராஜ்யத்தைக்கூட இந்த 4 ஆண்டுகாலத்திலே நம்முடைய காவல் துறையினர் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தி, தகர்த்தெறிந்திருக் கிறார்கள்.

சென்னையிலே மோகன் என்ற கபிலன், ஆசைத்தம்பி, மனோ, கோபால் ஆகிய ரவுடிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். திருநெல்வேலியில் முத்துராஜ் என்ற ரவுடி; கன்னியாகுமரியில் நாவல்காடு ஆர்னால்டு என்ற ரவுடி; தஞ்சாவூரில் கண்ணன் என்ற ரவுடி; தூத்துக்குடியில் பால் என்ற ரவுடி; சில நாட்களுக்கு முன்பு திருச்சியிலே பிச்சைமுத்து என்ற ரவுடி; சில மாதங்களுக்கு முன்பு திருச்சியிலே கோசிஜின் - இப்படி பிரபல ரவுடிகள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கின்றார்கள்.

பல்வேறு கொலைகள், கொள்ளைகள் மற்றும் வழிப்பறிகள் புரிந்து நீண்ட நாட்களாகத் தலைமறைவாய் இருந்துவந்த கொடூரமான ரவுடி ரவி என்கிற வெள்ளை ரவி கைது செய்யப் பட்டு 12-5-1999 அன்று குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்.

பல்வேறு கொலைக் குற்றங்கள், கொள்ளைகள், பணத்திற்காக ஆட்களைக் கடத்துதல், கட்டப் பஞ்சாயத்து செய்து குடியிருப்பவர்களை மிரட்டி வீட்டைக் காலி செய்ய வைப்பது போன்ற கொடுங் குற்றங்களைச் செய்து வந்த சைதாப்பேட்டையைச் சேர்ந்த பிரபல ரவுடி குமார் என்ற பங்க் குமார் கைது செய்யப்பட்டு 7-4-1999 அன்று குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார். இன்னொரு ரவுடி சேராவும் கைது செய்யப்பட்டார்.

ஏற்கெனவே 17 முறை சிறைத் தண்டனை அனுபவித்து 32 கொள்ளைகள், கொலை மற்றும் வன்முறை போன்ற குற்றங்களில் சம்பந்தப்பட்ட சென்னை சேத்துப்பட்டைச் சேர்ந்த தங்கையன் என்பவரும் அவனது 8 கூட்டாளிகளும் 14-12-1999 அன்ற கைது செய்யப்பட்டார்கள். குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

சென்னை வால்டாக்ஸ் சாலையைச் சார்ந்த தங்கவேல் மற்றும் அவரது சகோதரர்கள், உறவினர் ஆகியோர் 7-2-1999 அன்று கோவி என்பவரைக் கொலை செய்தார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு 22-2-1999 அன்று குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

பல்வேறு கொள்ளை, பணத்திற்காக ஆட்களை கடத்துதல் மற்றும் வியாபாரிகளை மிரட்டி பணம் வசூலித்தல் போன்ற குற்றங்களைச் செய்து வந்த சுப்பிரமணி என்ற குற்றவாளி 27-6-1999 அன்று குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்.

கட்டப் பஞ்சாயத்து செய்தல், ஆட்களைக் கடத்துதல் மற்றும் ஆட்களை மிரட்டி குடும்பத்தினரை வீடு காலி பண்ணச் செய்து வந்த இராஜா என்பவனும் அவனது கூட்டாளிகள் 12 பேர்களும் 10-4-1999 அன்று கைது செய்யப்பட்டு குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம் ரவுடி கும்பலைச் சேர்ந்த லிங்கம், பாபு சுரேஷ் ஆகியோரைக் கொலை செய்த ரவுடி சீலன் கும்பலைச் சேர்ந்த 24 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

பல குண்டு வெடிப்புச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட ஏர்வாடி காசிம் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்.

ரவுடிகள் மீண்டும் தொடர்ந்து தலையெடுக்காமல் இருக்கத் தேவையான கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. அதற்குப் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு நிரம்பத் தேவை என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருட்டு வீடியோ. சினிமா படம் எடுப்பவர்களை பெரும் நஷ்டத்திற்கு ஆளாக்கும் வகையிலே நடைபெறுகின்ற ஒரு காரியம் திருட்டு வீடியோ என்பது. ஒரு படம் தயாரிக்கப்பட்டு, அது வெளியிடப்பட்ட முதல் நாளோ அல்லது வெளியிடப் படுவதற்கு முதல் நாளோ இந்த திருட்டு வீடியோக்கள் நாட்டிலே பரவி, படத்தினுடைய வசூலைக் கெடுப்பதாக படத் தயாரிப்பாளர்கள், திரைப்படக் கலைஞர்கள், பலமுறை என்னிடத்திலே முறையிட்டு இருக்கின்றார்கள். கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அளித்த உறுதியின் காரணமாக 2000ஆம் ஆண்டு ஜனவரி முதல் இதுவரை திருட்டு வீடியோ தொடர்பாக 99 வழக்ககள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 108 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்கள். 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

1999ஆம் ஆண்டில் திருட்டு வீடியோ தடுப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு 123 வழக்குகளைப் பதிவு செய்தது. அதில் 10 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 68 வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். 6 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திருட்டு வீடியோக்கள் கைப்பற்றப் பட்டன.

சென்னை மாநகரில் கடந்த ஆண்டு மட்டும் திருட்டு வீடியோ தொடர்பாக மொத்தம் 80 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. இதில் 7 பேர்மீது குண்டர்கள் தடுப்புச் சட்டப்படி வழக்குப் போடப்பட்டு மூன்று மாதங்கள் சிறையிலே இருந்த பிறகுதான் உயர் நீதிமன்றத்தின் ஆய்வுக் குழு ஆணைப்படி சிறையிலிருந்து வெளியே வந்துள்ளார்கள். மேலும் 36 பேர்மீது வழக்குத் தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. 5,840 வி.சி.டி.-க்களும், 14,205 வீடியோ கேசட்டுகளும் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டில் மாத்திரம் சென்னை மாநகரில் 24 வழக்குகள் போடப்பட்டு 26 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 5,455 வி.சி.டி-க்களும், 115 வீடியோ கேசட்டுகளும் கைப்பற்றப் பட்டுள்ளன. 12-5-2000 அன்று மாலை நடைபெற்ற சோதனையிலே

மாத்திரம் 1,180 வி.சி.டி.-க்கள் கைப்பற்றப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகரிலே உள்ள சில வீடியோ கடைகளில் திடீர் சோதனை செய்ததில் 79 வி.சி.டி.-க்கள் கைப்பற்றப்பட்டு மேலும் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்ற விவரத்தையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

காவல் நிலைய மரணங்களைப்பற்றி நம்முடைய ஞானசேகரன் அவர்கள் பேசினார்கள். காவல் நிலையத்திற்குச் சென்றாலே மரணம்தானா என்று ஆத்திரத்தோடு கேட்டார்கள். காவல் நிலைய மரணங்களை இந்த அரசு வரவேற்கவில்லை. மாறாக தன்னுடைய கவலையை அதற்காகத் தெரிவித்துக்கொள்கிற அரசுதான் இந்த அரசு என்பதையும் அதற்குக் காரணமாக இருக்கின்ற காவல் துறை அதிகாரிகளை கடுமையாகத் தண்டிக்கின்ற அரசு இந்த அரசு என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற அளவுக்கு, சமீப காலமாக, காவல் நிலைய மரணங்கள் இப்போது நிகழவில்லை. உறுப்பினர்களுக்குத் தரப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலும் அது விளக்கப்பட்டிருக்கிறது. 1996ஆம் ஆண்ட காவல் நிலையங்களிலே நடந்த மரணங்கள் 13; 1997-ல் 16; 1998-ல் 8; 1999-ல் 8. இந்த மரணங்களும் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய முக்கியமான நோக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தவறு செய்த அதிகாரிகள் மீது இந்த அரசு எடுத்த நடவடிக்கை, இந்த 4 ஆண்டுகளில் மட்டும், 1 Inspector, 2 Sub-Inspector, 9 காவலர்கள் இந்தக் காவல் நிலைய மரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 4 D.S.P.-க்கள், 16 Ispectors, 20 Sub-Inspectors, 75 காவலர்கள்மீது குற்றவியல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் செல்லக்குமார் பேசும்போது ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு தமிழகத்திலே நடைபெற்றதைக் குறித்தும், அது தடுக்கப் பட்டதைக் குறித்தும், தடுக்கப்பட்ட நேரத்திலேகூட அவர்கள், அந்த மாநாட்டுப் பிரச்சாரம் செய்தார்கள் என்பது குறித்தும் இங்கே

கருத்துத் தெரிவித்தார். ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டை இந்த அரசு ஆதரிக்கவில்லை என்பதற்கு அடையாளமாகத்தான், நிச்சயமாக அதை எதிர்க்கிறது என்பதற்குச் சான்றாகத்தான், சிதம்பரத்தில் நடைபெற்ற அந்த மாநாடு தடுக்கப்பட்டது. அந்த மாநாட்டிலே கலந்துகொள்வதற்கு வந்தவர்களெல்லாம் - சுமார் 200-க்கும் மேற்பட்டவர்கள் - கைது செய்யப்பட்டார்கள். ஆனால் டாக்டர் செல்லக்குமார் பேசும்போது ஒன்று கேட்டார். திருவாரூரில் இந்த மாநாடு நடத்த எப்படி அனுமதி கொடுத்தீர்கள் என்பது போன்ற ஒரு கருத்தை இங்கே எழுப்பினார். தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு, திரு. நெடுமாறன் தலைமையில் 19-1-1997 அன்று மதுரை தமுக்கம் மைதானத்தில் தமிழர் எச்சரிக்கை மாநாடு என்ற பெயரில் மாநாடு நடத்த இருந்தார்கள். இதற்குக் காவல் துறை அனுமதி மறுத்துவிட்டது. இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட Writ மனுமீது சென்னை உயர்நீதிமன்றம் மாநாடு நடத்த அனுமதி வழங்கிவிட்டது. உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கிய காரணத்தால்தான் மதுரையிலும், தொடர்ந்து திருவாரூரிலும், இராணிப்பேட்டையிலும் மாநாடு நடத்த, அந்தக் கூட்டங்கள் நடத்த அனுமதிக்கப்பட்டன. அவைகூட பெரிய அளவில் நடைபெற்ற மாநாடுகள் அல்ல. ஆனால் அந்த நேரத்திலே இலங்கையிலும் இதுபோன்ற அளவிற்கு தீவிரமான நிலையில்லை. இருந்தபோதிலும்கூட, நீதிமன்றத்தினுடைய அந்தத் தீர்ப்புக்கு நாம் கட்டுப்பட வேண்டியவர்களானோம். எனவே அப்போது தடை விதிக்கப்பட வில்லை. இந்த நேரம் மிகத் தீவிரமான நேரம். இலங்கையிலே தீவிரமான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரம்.

7-5-2000 அன்று சிதம்பரத்தில் ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு நடத்துவதாக முதலில் அறிவித்துவிட்டு பின்னர் இலங்கையில் விடுதலைப் புலிகள் ஆனையிறவு வெற்றி மாநாடு என்ற பெயரால் மாநாடு நடத்தப் போவதாக அறிவித்தார்கள். இலங்கையில் தற்போது நிலவி வரும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும், கூட்டம் நடத்தவிருந்த திருமண மண்டபத்திற்கு அச்சுறுத்தல்கள் வந்ததாலும், சட்டம் ஒழுங்கைக் கருதியும் இந்த மாநாட்டிற்கு அரசு தடை விதித்தது. தடையைமீறி மாநாட்டிற்கு வந்திருந்த 258 பேர் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டு

அவர்கள் வைக்கப்பட்டிருந்த திருமண மண்டபத்திலே அவர்களுக்கு என்று ஒலிப்பெருக்கி எதுவும் கொடுக்கப்பட வில்லை. ஒலிப்பெருக்கி இல்லாமலே - நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்திருக்கிறோம். நீங்கள் இப்போது இருக்கிறீர்கள், கைது செய்யப்பட்டு கொண்டுபோய் காவல் நிலையத்திலே வைத்தாலே அங்கே நாம் ஒரு கூட்டத்தை நடத்திவிடுவோம். இது இயற்கை. நாங்கள் ஜெயிலில் இருந்தபோதுகூட - 6 மாதம் நான் ஜெயிலில் இருந்தபோதும் சரி, பிறகு 3 மாதம், 2 மாதம் இருந்தபோதும் சரி, அங்கே, ஜெயிலுக்குள்ளே கூட்டம் நடத்துவதுதான் வழக்கம். அது மாதிரி நடந்த கூட்டம்தானே தவிர அரசாங்கத்தினுடைய அனுமதியோடு நடைபெற்ற கூட்டம் அல்ல என்பதை நான் நண்பர் செல்லக்குமார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விடுதலைப் புலிகளை அனுமதிக்கக் கூடாது என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உணர்ச்சி வசப்பட்டு சில கருத்துக்களை சொன்னார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் என்றாலே, இலங்கையில் உள்ள தமிழீழத்தை ஒரு காலத்திலே ஆதரித்தோம் என்ற காரணத்திற்காக அல்லது இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்பதற்காக கண்ணீர் உகுத்தோம் என்ற ஒரு காரணத்திற்காக அந்தப் போராளிகள் செய்கின்ற எல்லாக் காரியங்களையும் நாங்கள் ஆதரித்தவர்கள் அல்ல. இங்கே சொன்னார்கள் அமிர்த லிங்கத்தைப்பற்றி. அதைப்போல ஸ்ரீசபாரத்தினத்தைப்பற்றி. அவர்களெல்லாம் எனக்கு மிக நெருங்கிய நண்பர்கள். அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. வெவ்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள். நான்கு, ஐந்து இயக்கங்கள் அதிலே இருந்தன. இந்த நான்கு, ஐந்து இயக்கங்களும் இந்தியாவிலே இறக்குமதியானபோது ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு இயக்கத்திற்குப் பின்னணியிலே இருந்து அவர்களுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். அந்த நிலையிலேதான் எம்.ஜி.ஆர். அவர்கள் விடுதலைப் புலிகள் - இவர் சொல்லுகின்ற Tigers (L.T.T.E.) அவர்களுக்கு, அவர்களைச் சார்ந்தவர்களுக்கு நிறைய உதவிகளைச் செய்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம்

சில குழுக்கள் அன்றைக்கு வந்தன. 'TELO' போன்ற குழுக்கள் எல்லாம் அன்றைக்கு எங்கள் பக்கம் வந்து எங்களுடைய ஆதரவைக் கோரினார்கள். E.P.R.L.F. என்ற ஒரு group இருந்தது. அவர்கள் சில கட்சிகளுடைய தயவை நாடினார்கள். இப்படி நான்கு ஐந்து groups இருந்தபோது, குழுக்கள் இருந்த அந்தக் காலகட்டத்தில் நாங்கள் எல்லோரையும் சமமாக நினைத்துத்தான் உதவினோம். என்னடைய பிறந்தநாள் ஒன்றிற்கு உண்டியலிலே போடப்பட்ட பணத்தை எல்லாக் குழுவினருக்கும் பகிர்ந்தளிப்பதாக அறிவித்து, அப்படி அந்த அறிக்கையை நான் வெளியிட்டபோது, மூன்று, நான்கு குழுக்கள் வந்து வாங்கிக் கொண்டார்கள். விடுதலைப் புலிகள் மாத்திரம் வந்து வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டார்கள். நான் கொடுப்பதை வாங்கிக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டார்கள். காரணம் அங்கேயே group-ஆக இருந்துதான் வந்தார்கள். இங்கே வந்தாலும் இங்கே வேறு group இவர்களுக்கு. அதனால் வாங்கினால் யாரோ கோபித்துக் கொள்வார்கள் என்பதற்காக வாங்காமல் இருந்து விட்டார்கள். அது நாடறிந்த இரகசியம். பிறகு அந்தப் பணத்தை மறுபடியும் பிரித்து மிச்சம் இருக்கிற குழுக்களுக்கே கொடுத்து விட்டேன். விடுதலைப் புலிகள் வாங்க மறுத்துவிட்டார்கள். அந்த அளவுதான் எனக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உள்ள தொடர்பு என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பத்மநாபா கொலையைப்பற்றி நம்முடைய டாக்டர் செல்லக்குமார் அவர்கள்கூடப் பேசினார்கள். பத்மநாபா கொலை நடந்தது 19-6-1990. அதற்குப்பிறகு 4 மாதங்கள் கழித்து 4-10-1990-லே முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளுக்கு ஒரு தனிப் பேட்டி கொடுக்கிறார்கள். அந்தப் பேட்டியில் என்ன சொல்லியிருக் கிறார்கள் தெரியுமா? 'பத்மநாபா கொலைக்குப் பிறகு புகார் கூறுகிற அளவுக்கு விடுதலைப் புலிகள் எந்தக் காரியத்திலும் ஈடுபட வில்லை' என்று ஒரு Certificate கொடுக்கிறார்கள். இது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே 4-10-1990 அன்று வந்த அவருடைய பேட்டி, ஜெயலலிதா அவர்களுடைய பேட்டி.

"சிங்கள இராணுவமும், காவல் துறையும் இலங்கையில் தமிழ் இனத்தை அழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் துணிவான போராட்டத்தில் ஈடுபட்டு சிங்கள இராணுவத்தை எதிர்த்து தீரத்தோடு போர் நடத்தி வருகிறது. கடந்த இரு மாதங்களில் தமிழ்நாட்டில் புகார் கூறும் அளவுக்கு எந்தவிதமான நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் ஈடுபடவில்லை. இப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நாட்டின் அரசாங்கத்தை எதிர்த்துப் போர் நடத்தி வருகின்றது. இது ஒரு அதி தீரமான செயல். . . .

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டால் இலங்கையில் உள்ள தமிழினம் முழுவதும் அழிந்துவிடும் என்பதை நாம் மனதில் நிறுத்தவேண்டும். விடுதலைப் புலிகளினுடைய வெற்றி, இலங்கைத் தமிழர்களின் வெற்றியாகும். அவர்களுக்கு உதவும் வகையில் எதுவும் செய்வதற்குப் பதிலாக, தமிழக முதலமைச்சர் கருணாநிதி தன்னைப் பாதுகாத்துக்கொள்வதிலேயே கவனம் செலுத்தி வருகிறார். அவருடைய அனைத்து சக்தியும் மற்றும் கவனம் முழுவதும் முதலமைச்சருடைய நாற்காலியைப் பாதுகாத்துக்கொள்வதற்கே அர்ப்பணிக்கப்பட்டு வருகின்றது"

என்று என்மீது குற்றஞ்சாட்டி விடுதலைப் புலிகளுக்கு நான் உதவவில்லை என்பதை பத்திரிகையிலே தனிப் பேட்டியாகக் கொடுத்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதுமாத்திரமல்ல. . . .(குறுக்கீடு).

திரு. பி.ஆர். சுந்தரம் : விடுதலைப் புலிகள் சம்பந்தப் பட்ட விஷயத்தில் இராஜிவ் காந்தி இங்கே தமிழகத்திற்கு வந்து கொலை செய்யப்பட்ட பிறகு உள்ள நிகழ்ச்சி ஒன்று. இராஜிவ் காந்தி நிகழ்ச்சிக்கு முன்பு அவர்களுடைய நிலைமை வேறு. அதை விடுதலைப் புலிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை யாரும் மறுக்கவில்லை. முதலமைச்சர் அவர்கள் தேதியைச் சொல்லும் போதே அது தெளிவாகத் தெரிகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் அதை மறுக்கவில்லை. ஆனால் பத்மநாபா

கொலைக்குப் பிறகு நாங்கள் விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொள்ளவில்லை. பத்மநாபா கொலைக்குப் பிறகே செல்வி ஜெயலலிதா அவர்கள் விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டு விடுத்த அறிக்கை இது. (குறுக்கீடு). போதும், போதும், அதற்கு மேலே பேசமுடியாது. போதும் போதும். பத்மநாபா கொலைக்குப் பிறகு . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரம், தெளிவாக சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகு நீங்கள் ஏன் எழுந்து நின்று கொண்டிருக்கிறீர்கள்? நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர். மு. கருணாநிதி : பத்மநாபா கொலைக்குப் பிறகு என்றுகூடச் சொல்லமாட்டேன். அதற்கு முன்பே அமிர்தலிங்கத்தினுடைய கொலையானாலும் 'TELO'-வினுடைய தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தினுடைய கொலையானாலும் அதைப்போல வேறு சில போராளிகளுடைய கொலை, போராளிக் குழுவினுடைய தலைவர் உமாமகேஸ்வரன் அவர்களுடைய கொலையானாலும் இந்தக் கொலைகள் எல்லாம் நடந்த பிறகு, தன்னுடைய இனத்திலே உள்ளவர்களையே அழித்துவிட்டு தன்னுடைய இனத்தை எப்படிக் காப்பாற்ற முடியும் என்கின்ற அந்த ஆதங்கம் எங்களுக்கு ஏற்பட்டது. அதனால் நாங்கள் விடுதலைப் புலிகளை ஆரம்பத்திலிருந்தே எந்த அளவுக்கு ஆதரித்தோமோ அந்த அளவுக்கு ஆதரிக்கவில்லை, நாங்கள் ஒதுங்கிவிட்டோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்வதற்காகத்தான் இதைக் கூறுகின்றேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரம், உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள் (குறுக்கீடு). நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னதற்குப்பின் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு கலைஞர். மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்போதும்கூட, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கடத்தல்காரர்கள் 51 பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி (N.S.A.)

கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். 4 wireless கருவிகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் சொல்ல விரும்புகின்றேன். 1996 மே மாதத்திற்குப் பிறகு L.T.T.E. சம்பந்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் ஒன்றுகூட நடைபெறவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். 1991-96 ஆகிய 5 ஆண்டுக் காலத்திலே பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்தப் பழைய கதைக்கெல்லாம் நான் மீண்டும் செல்ல விரும்பவில்லை.

'பங்களாதேஷ் பிரச்சினையில் இந்திரா காந்தி செய்ததைப் போல இராணுவ நடவடிக்கைப்பற்றி இந்தியா சிந்தித்தால் அதில் தவறு எதுவும் இல்லை என்று கருதுகிறேன்'

என்றுகூட சொன்னவர்தான் ஜெயலலிதா; இந்து பத்திரிகையிலே 29-4-1991 அன்று வந்தது. பிறகு அவரது கருத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இப்படி ஒரு கருத்தைச் சொன்னதற்காகவே, அந்தக் கருத்திலேயே கடைசிவரையிலே இருக்கிறார்கள் என்று யாரும் அதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிவிட முடியாது. . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்ல வருவதைத்தான் அவரே சொல்லுகிறார். நீங்கள் ஊடே எழுந்திருக்க வேண்டாம். நான் உங்களுக்கு அனுமதி கொடுக்க வில்லை. முதலமைச்சர் தன்னுடைய நிலையை தெளிவாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு). நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் முதலில் உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : முதலில் அவர் தமிழைக் கொஞ்சம் கற்றுக் கொள்ள வேண்டும். முதலில் நான் பேசுகின்ற தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழைக் கற்றுக் கொள்ளாமல் பேசக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி). 'தமிழ் ஈழத்தை ஆதரிக்கிறேன்' என்று நான் சொல்லவில்லை. 'தமிழ் ஈழம் பெறுவார்களேயானால் மகிழ்ச்சியடைவேன்' என்று சொன்னேன். அதற்கும், இதற்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது. எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதுதான் தமிழ்; தமிழில் அதுதான் பெரிய கோளாறு.

திரு. பி.ஆர். சுந்தரம் : **

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தமிழ் ஈழத்தை ஆதரித்து இங்கே போராட்டம் நடத்துவோம் என்று சொல்ல வில்லை. அந்தக் காலத்திலே ஜெயவர்தனாவுக்கு வராத கோபம் உங்களுக்கு ஏன் இன்று வருகிறது? சந்திரிகாவுக்கு வராத கோபம் உங்களுக்கு ஏன் இப்போது வருகிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய ஞானசேகரன் அவர்களும் பேசும்போது நிதி நிறுவனங்களுடைய மோசடிகள் குறித்துப் பேசினார்கள். இந்த நிதி நிறுவனங்களுடைய மோசடிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க ஆரம்பித்ததே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் என்பதை அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதிலே ஒன்றிரண்டு நிகழ்வுகளில் சுணக்கம் இருந்திருக்கலாம்; அல்லது ஒன்றிரண்டு நிகழ்வுகளில் சில அதிகாரிகளால் தவறுகள் கூட ஏற்பட்டிருக்கலாம். அவற்றையெல்லாம் நம்முடைய செல்லக்குமார் அவர்கள்கூட அன்றைக்குச் சுட்டிக்காட்டினார்கள். அவையெல்லாம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, அவை மறுபடியும் ஒழுங்குப் படுத்தப்பட்டன என்பதை அறிவீர்கள். ஆனால் இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளினால் நிதி நிறுவனங்களுடைய மோசடிகள் மக்கள் மன்றத்திலே அம்பலமாக்கப்பட்டன. அதுவும் குறிப்பாக, இந்தியாவிற்கே வழிகாட்டியாக, 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிறுவன வைப்பீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை இந்த அரசுதான் முதன்முதலாக இயற்றியது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த மோசடி சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க சென்னையிலே தனி நீதிமன்றம் ஒன்றை அமைத்தது. தனி நீதிமன்றம் என்றால் அந்த நீதிமனறம் அல்ல. இது வேறு. இந்த மோசடிக்காக, நிதி நிறுவனங்களுடைய மோசடிக்காக தனி நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். மோசடி நிதி நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்க பொருளாதாரக் குற்றப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிரிவு-2 என்ற புதிய காவல் துறைப் பிரிவை இந்த அரசு 1999-ல் ஏற்படுத்தியது. இதுவரையில் பொருளாதாரக் குற்றப் பிரிவில் மொத்தம் 235 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இவற்றில் 4 வழக்குகளில் எதிரிகள் முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுத் தொகை முழுவதையும் செலுத்திவிட்டபடியால், மேல் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருக்கின்றன.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்களில் கடன் பெற்றவர்கள் இருக்கிறார்கள். நிறைய கடன் பெற்றுவிட்டு கட்டாமலேயே விட்டுவிடுகிறார்கள். அதனால் deposit செய்தவர்களுக்குப் பணம் கிடைக்க வழியில்லாமல் இருப்பதால், நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்றவர்களிடம் கடன் பெற்றவர்களின் சொத்தை attach செய்கின்ற முறையில் சட்டத் திருத்தம் செய்ய வேண்டுமென்ற வலியுறுத்தல் இருக்கிறது. அதுகுறித்து மாநில அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர். அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்களிலே மோசடி செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் சொல்லுகின்றபோது மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நீதிமன்றத்திலே காவல் துறையைக் கண்டிப்பு செய்த பிறகு, கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாகியிருக்கிறது. 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட பிறகும்கூட அவர்கள் தப்பிவிட்டார்கள் என்று சொல்லுகின்ற சூழ்நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. பல நிதி நிறுவனங்களுடைய அதிபர்கள் SRI MARIAS என்று சொல்கின்ற நிறுவனம் NEW INDIA FINANCE என்கிற நிறுவனம், RICHARD AND CLIFF என்கிற நிறுவனம் போன்ற பல நிறுவனங்களினுடைய அதிபர்கள் இதுவரை கைது செய்யப்படாமல், அவர்கள் தப்பித்துவிட்டார்கள் என்று காவல் துறை அதிகாரிகள் சொல்கின்ற சூழ்நிலை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னதுபோல, நான் ஏற்கெனவே கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றபோது, இந்தக் கருத்தை

வலியுறுத்தினேன். ஏனென்று சொன்னால், கடன் பெற்றவர்கள் செல்வாக்கு பெற்றவர்கள். பல்வேறு அரசியல் தலைவர்களுடைய பின்னணியிலே செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள்; கோடிக் கணக்கான ரூபாய்க்கு கடனைப் பெற்றுவிட்டு, அந்த நிதி நிறுவனத்தினுடைய அதிபர்கள் கைது செய்யப்பட்டபிறகு, தாங்கள் தப்பித்துக்கொண்டோம் என்கிற சூழ்நிலையில், அவர்கள் இப்போது தப்பிக்கின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுடைய சொத்துக்களை அரசு கையகப்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு இப்போது நடைபெற்று வருகிற அந்த வழக்குகளில் சாதக பாதகமாக என்ன இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, அவர் கூறிய அந்தக் கருத்தை இணைத்து, சட்டப்படி யோசித்து ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். செல்லக்குமார் எழுப்பியது; ஏதோ ஒன்றிரண்டு பேர் தப்பித்துக் கொண்டார்கள் என்று நானே ஒத்துக்கொண்டு சொன்னேன். அவர் அந்தப் பெயர்களைச் சொல்லவேண்டும்; ஏதோ அரசியல் இயக்கங்களினுடைய பின்னணியில் இருக்கின்றன என்று சொல்கின்ற காரணத்தால், அது திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிவிடாது. எந்த அரசியல் இயக்கமும் இருக்கலாம். எந்தெந்த அரசியல் இயக்கங்கள் எதெதிலெல்லாம் பின்னணியாக இருக்கின்றன என்பதை நான் மிக நன்றாக அறிவேன். நாடும் மிக நன்றாக அறியும். எனவே அதைச் சொல்ல விரும்பவில்லை.

இதுவரை 235 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதில் நான்கு வழக்குகளில் எதிரிகள் முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுத் தொகை முழுவதையும் செலுத்திவிட்டபடியால் மேல்நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருக்கின்றன. அவர்கள் முழுப் பணத்தையும் செலுத்திவிட்டார்கள். ஆகவே மேல் நடவடிக்கை கைவிடப் பட்டிருக்கின்றது. மேலும் நான்கு வழக்குகளில் எதிரிகள் மீது புதிதாக இயற்றப்பட்ட 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிறுவன வைப்பீட்டாளர்களின் பாதுகாப்புச் சட்டப்படி தண்டனையில் முடிந்து நிதி நிறுவன உரிமையாளர்களுக்கு அதிகபட்சத்

தண்டனையாக 10 வருட கடுங்காவல் தண்டனை வழங்கப் பட்டிருக்கிறது. ஒருவருக்கு 1 இலட்ச ரூபாய் அபராதமும் மற்றும் மூவருக்கு தலா 50,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது.

41 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, பல்வேறு நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன. இவ்வழக்குகளில் 17 வழக்குகள் சென்னையிலே தனி நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன. மேற்படி 235 வழக்குகளில் 8 இலட்சத்து 24 ஆயிரத்து 724 முதலீட்டாளர்களின் 1,477 கோடி ரூபாயை பல்வேறு மோசடி நிதி நிறுவனங்கள் ஏமாற்றியுள்ளன. ஒன்றிரண்டு அல்ல, 1477கோடி ரூபாய். இதுவரை மொத்தம் 1 இலட்சத்து 32 ஆயிரத்து 589 புகார்கள் பெறப்பட்டுள்ளன. 1,048 கோடி ரூபாய் மதிப்புள்ள நிதி நிறுவனங்களின் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டுவிட்டன. 1,477 கோடியில் 1,048 கோடி ரூபாய் மதிப்புள்ள நிதி நிறுவனங்களின் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேற்படி 235 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள 725 நபர்களில் 301 நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளார்கள். மீதமுள்ள 302 எதிரிகளைக் கைது செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


நிதி நிறுவன மோசடி வழக்குகளில் 34 நிதி நிறுவனங் களுக்குச் சொந்தமான 314.83 கோடி ரூபாய் மதிப்புள்ள அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை காவல் துறை கண்டுபிடித்து, சொத்துக்கள் முடக்கப்பட்டு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காவல் துறையின் நடவடிக்கையால் இதுவரை முதலீட்டாளர்களுக்கு 103 கோடியே 62 இலட்ச ரூபாய் பெற்றுத் தரப்பட்டுள்ளது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மேலும் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, பொதுமக்கள் இனிமேலாவது ஏமாறாமல் இருக்க வேண்டும் என்றுதான் இந்தப் புள்ளிவிவரத்தின் மூலமாக நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எத்தனை செய்திகள் வந்தாலும், மறுபடியும் இன்னொரு நிதி நிறுவன மோசடி என்று வருகிறது. காரணம், பொதுமக்கள் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, அங்கே கொண்டுபோய் பணத்தைப் போடுகிறார்கள். பணத்தைப் போட்டுவிட்டு ஏமாந்த பிறகு, அதற்கு அரசாங்கம்தான் பொறுப்பு; வாங்கிக் கொடு என்று பழியை நம் தலையிலே போடுகிறார்கள்.

பல சாமியார்களிடம் ஏமாநத்தாலும்கூட, புதுப்புது சாமியார்கள் முளைத்துக்கொண்டு இருப்பதைப்போல, இந்த நிதி நிறுவனங்களில் ஏமாந்தாலும்கூட, புதுப்புது நிதி நிறுவனங்கள் முளைத்துக்கொண்டேதான் இருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவன மோசடியில், ஆரணி, குடியாத்தம், வேலூர் போன்ற பகுதிகளிலே, பணத்தைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் cash certificate என்று கொடுப்பதற்குப் பதிலாக, pro-note என்று கொடுத்து விட்டிருக்கிறார்கள். இந்த pro-note என்கிற வார்த்தையை வைத்துக்கொண்டு, இதற்கு civil வழக்குப் போட்டுத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமேயொழிய, நாங்கள் criminal சட்டப்படி நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்று வழக்கும் பதிவு செய்யாமல், கைதும் செய்யாமல் காவல் துறையினர் இருந்து கொண்டிருக்கிறார்கள்; எந்தப் பொருளையும் seize செய்யாமல் இருக்கிறார்கள். pro-note என்று அவர்கள் மோசடியாக எழுதியிருக்கிற காரணத்தினால், அதை மோசடிக் குற்றமாகச் சேர்த்து, இந்தச் சட்டத்திலே கொண்டுவந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது pro-note ஆக இருக்கிற வரையிலே pro-note தான். அது மோசடி என்று கண்டுபிடிக்கிற வரையிலே அது pro-note ஆகத்தான் இருக்கும். அதற்குள்ள சாஸ்திரம், சம்பிரதாயம் என்று இருக்க முடியுமே தவிர, pro-note-ஐப்போய் திடீரென்று மோசடி என்று சொல்ல முடியாது. அது pro-note இல்லை; அது மோசடி என்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகு வேண்டுமானால், இரண்டுக்கும் சேர்த்து அவர்கள்மீது வழக்குத் தொடரலாம்.

இன்னொன்றையும் சொன்னார் செல்லக்குமார். வடபழனி காவல் நிலையம் நான் கேட்டேன்; நீங்கள் கொடுத்தீர்கள்; ஆனால் அந்தக் காவல் நிலையத் திறப்பு விழாவிற்கு எனக்கு அழைப்பு இல்லை; என்னைக் கூப்பிடவில்லை என்று சொன்னார். அதிலே பாதி உண்மை. காவல் நிலையம் கேட்டது உண்மை; நான்



கொடுத்தது உண்மை. ஆனால் அதற்குத் திறப்பு விழா நடக்கவில்லை. நடந்தால்தானே கூப்பிட முடியும்? நடக்கவில்லை. (குறுக்கீடு). எல்லாவற்றுக்கும் இப்படி எழுந்து நின்றால் எப்படி?

டாக்டர் அ. செல்லக்குமார் : தவறாகச் சொல்லவில்லை; பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் சொல்கிறேன். எனக்கு வந்த தகவலை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) எனக்கு வந்த தகவல். . . (குறுக்கீடு). நான் தகவலைச் சொல்வதற்கு முன்னால் சொன்னால் எப்படி? நான் அதிகமாக இடம் கொடுத்து உட்காகிறேன் என்பதற்காக சும்மா சும்மா எழுந்திருப்பதா? நான் கொஞ்சம் ஓய்வு எடுக்கலாம் என்பதற்காக உட்காருகிறேன்; அவ்வளவுதான். (சிரிப்பு). ஏற்கெனவே, கோடம்பாக்கத்திலே ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையத்திலே, நான் செல்லக்குமாருக்குக் கொடுத்த அந்த வடபழனி காவல் நிலையத்தையும் அங்கே வைத்து, இரண்டு பேரையும் வைத்து, ஒண்டிக் குடித்தனம் நடத்தினார்கள். அதற்குப் பிறகு, அந்தக் கோடம்பாக்கம் காவல் நிலையத்தை அங்கேயிருந்து அகற்றிவிட்டார்கள். 'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்தியது மாதிரி'. (சிரிப்பு) உங்கள் பிடாரி - வடபழனி காவல் நிலையம் - அங்கே இருக்கிற கோடம்பாக்கம் காவல் நிலையத்தை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தியது. அந்தக் கோடம்பாக்கம் காவல் நிலையம் வேறு இடத்திற்குப் போன பிறகு, பழைய கோடம்பாக்கம் காவல் நிலையத்திற்கு திறப்பு விழா. திறப்பு விழா என்றால், Invitation கிடையாது. யாருக்கும் அழைப்பு என்று எதுவும் கிடையாது. சும்மா அதிகாரிகள் போய் குத்து விளக்கு ஏற்றி வைத்தார்கள் பழைய காவல் நிலையத்திற்கு. புதிய காவல் நிலையத்திற்கு அதுகூட நடக்கவில்லை. அதனால்தான் செல்லக்குமார் அழைக்கப்படவில்லை. நான் செல்லக்குமார் போன்றவர்களெல்லாம் அழைக்கப்படவில்லை என்பதற்காக வருத்தப்படுவேனே தவிர, அதற்காக மகிழ்ச்சியடையக் கூடியவன் அல்ல என்பதையும் அவர் உணர வேண்டும்.

உதவி ஆய்வாளர் சம்பத்துக்குப் பதவி உயர்வு கொடுக்கப் படவில்லை என்று சொன்னார். அவர் செய்தது வெடிகுண்டு

இருக்கிற இடத்தைப் போய் கண்டுபிடித்தார் என்பது. அதோடு அந்த வெடிகுண்டு வெடிக்குமா, வெடிக்காதா என்று பார்த்தார் என்கிற ஒரே தீரச் செயல்தான். வேறு ஒன்றும் இல்லை. ஆனால் சந்திரசேகரனுக்கு கோயம்புத்தூர் நிகழ்வில் கொடுத்தோம் என்றால் அவர், துப்பாக்கிப் பிரயோகத்தின் இடையிலே புகுந்து, வீரசாகசம் புரிந்து, அங்கே சமாளித்தார் என்பதற்காகத்தான் அவருக்கு பதக்கம் எல்லாம் கொடுத்தோம்; பதவி உயர்வு கொடுத்தோம். இவர் அப்படி அல்ல. இருந்தாலும்கூட சம்பத் அவர்களைப் பாராட்டி, 1,500 ரூபாயும், ஒட்டுமொத்தமாக அந்தக் குழுவினருக்கு 18 ஆயிரம் ரூபாயும் வெகுமதி வழங்கப்பட்டது. இவருக்கு குடியரசு தலைவர் விழாவில் விருது அல்லது பதக்கம் வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நமது திரு. ஜி.கே. மணி அவர்கள், வன்னியர் சங்கம் வழக்குகள் எல்லாம் வாபஸ் ஆகவில்லை என்று சொன்னார். சில வழக்குகள் G.O.-விற்குப் பிறகு அல்லது நீதிமன்றத்திலே சில தேக்கத்தின் காரணமாக வாபஸ் ஆகாமல் இருக்கலாம். அவை தவிர, வாபஸ் செய்ய வேண்டும் என்று எல்லாவற்றுக்கும் பொதுவான உத்தரவு போட்டாகிவிட்டது. 722 வழக்குகள் - 1986 முதல் 1994ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் 722 வழக்குகள் அந்தச் சங்கத்தின் மீது இருந்தன அந்த ஆட்சியில். அவற்றில் நீதிமன்ற நிலுவையில் இருந்தது 409. எல்லாவற்றையும் சேர்த்து மூன்றே மாதங்களில், அரசு ஆணை எண் 854, பொதுத்துறை, தேதி 1-8-1996-இன்படி, திரும்பப்பெற ஆணையிடப்பட்டுவிட்டது. 137 வழக்குகள் பல்வேறு காரணங்களுக்காக நீதிமன்றத்திற்கே செல்லாமல் கைவிடப்பட்டன. 104 வழக்குகள் அரசிடம் கோரிக்கை வைக்கப்படுவதற்கு முன்பாகவே நீதிமன்றத்தாலும், காவல் துறையினராலும், முடிக்கப்பட்டுவிட்டன. எனவே ஏதாவது மிச்சம் மீதி இருந்தால், அதைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டினால், அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : எங்களுடைய பகுதியிலே, ஜாதிக் கலவரம். .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமரைக்கனி, கையை, கையைக் காண்பித்தால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவையும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன.

சென்னையில் ஊர்வலம் நடத்த அனுமதியில்லையென்று பழனிசாமி அவர்களும் சொன்னார்கள்; ஹேமச்சந்திரன் அவர்களும் அன்றைக்குப் பேசினார்கள். சென்னை மாநகரத்திலே போக்குவரத்து நெருக்கடி காரணமாக, சில வரைமுறைகளைக் காவல் துறையினர் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இருந்தாலும்கூட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, 1999ஆம் ஆண்டு அனுமதி கோரிய நிகழ்வுகள் 75. அந்த 75-லே 56 நிகழ்வுகளுக்கு, அவர்கள் கோரிய இடத்திலேயே அனுமதி தரப்பட்டிருக்கிறது. 19 நேர்வுகளிலேதான் அனுமதி தரப்பட வில்லை. இந்த ஆண்டு ஜனவரி முதல் 30-4-2000 வரை, அதே கட்சியினர் 33 முறை அனுமதி கோரினார்கள். 28 நிகழ்வுகளில் அவர்கள் கோரிய இடம் தரப்பட்டிருக்கிறது. 5 நிகழ்வுகளிலே மாத்திரம்தான் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்குவத குறித்து நம்முடைய காவல் துறையினருக்குச் சொல்லியிருக் கிறேன். அனுமதி கேட்கும்போது, இரண்டு இடங்களைக் குறிப்பிட்டு அல்லது மூன்று இடங்களைக் குறிப்பிட்டு, இந்த மூன்றில் எந்த இடத்தை நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள் என்று அவர்களுக்கு எழுதுங்கள்; அந்த மூன்றில் ஒன்றையோ, இரண்டில் ஒன்றையோ எடுத்க்கொள்ளட்டும் என்று நான் காவல் துறையினருக்குச் சொல்லி இருக்கிறேன். எனவே அந்தப் பிரச்சினை இனி எழாது.

நம்முடைய சுப்பராயன் அவர்கள் மோகனாம்பாள் கொலையைப்பற்றியும் அஞ்சலை கொலையைப்பற்றியும் பேசினார்கள். ஏதோ ஒரு பழைய காலத்து நாவலுக்கு தலைப்பு மாதிரி பேசினார்கள். அவர்களுக்கு எழுதி அனுப்பப்பட்ட அந்த முறையீட்டைப் படித்தால் உருக்கமாக இருக்கிறது. நான் இல்லை என்று மறுக்கவில்லை. எப்பொழுதுமே அந்த முறையீடுகளையும், மனுக்களையும் படித்துவிட்டு, அதை முழுவதும் நாம் உண்மை என்று நம்பிவிட முடியாது. ஆனால் உண்மை அல்ல என்றும் நான் எடுத்துக்கொள்ளவில்லை. அதையும் நான் சுப்பராயன் அவர்களுக்குச் சொல்கிறேன். ஆனால் முருகேசன் வழக்கைப் பொறுத்தவரையில், அது குற்றப் பத்திரிகையாகவே தாக்கல்

செய்யப்பட்டுவிட்டாகிவிட்டது. இங்கே சொன்னார்கள். கடைசி நேரத்திலேதான் எங்களுக்கு அனுப்புகிறார்கள், அதுவரையிலும் அனுப்புவதில்லை என்று. அதேமாதிரி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த பிறகு, இந்த விவரங்களை சுப்பராயன் அவர்கள் என்னிடத்திலே இங்கே கொடுத்திருக்கின்றார்கள். அதைப்பற்றி நான் விசாரித்தேன். இந்த வழக்கிலே, அந்த முருகேசன் தன்னுடைய மைத்துனியையும் கல்யாணம் செய்துகொள்வதற்கு விரும்பியிருக்கிறார். அதனாலே ஏற்பட்ட தகராறு. அதனாலே விளைந்த கொலை. அது ரங்கோன் ராதா மாதிரி நடந்திருக்கிறது.

எனக்குத் தந்தத் தகவலைச் சொல்கிறேன். தகவல் வேறாக இருந்தால் திருத்திக்கொள்ளலாம். ஆனால் குற்றப் பத்திரிகை வரையிலும் வந்தாகிவிட்டது.

முருகேசன் தனது மைத்துனியையும் திருமணம் செய்து கொள்ள விரும்பியதாகவும் அதைத் தொடர்ந்து அவர் மனைவியைக் கொலை செய்துள்ளார் என்றும் காவல் துறை கூறுகிறது. கணவன் மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு நடந்ததற்கும் கொலை நடைபெற்றதற்கும் சாட்சிகள் வாக்குமூலம் கொடுத்து அது குற்றவியல் நடுவர் முன்னால் பதிவு செய்யப் பட்டுள்ளது. முருகேசனிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு அவரிடமிருந்து, இறந்துபோன அந்தப் பெண்மணியினுடைய காது தோடும் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த வழக்கிலே விசாரணை முடிந்து குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டு, வாய்தா 6-6-2000 அன்று போடப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை குறித்து ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட இயக்கத்தினர் புகார் செய்ததன்பேரில், C.B., C.I.D. இந்த வழக்கை மேற்பார்வை செய்து, ஒழுங்காக விசாரணை நடைபெற்றதாக, அவர்களும் மதிப்பீடு செய்து, விசாரணை செய்து ஓர் அறிக்கையை கொடுத்திருக் கின்றார்கள்.

அதைப்போலவே விழுப்புரம் மாவட்டத்திலே, அஞ்சலை என்ற பெண், காவல் துறையினர் மிரட்டியதன் காரணமாக தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவித்தார். இந்த வழக்கில் அஞ்சலை, ராஜா என்பரைக் காதலித்தார். காதலித்து அது கருவுறுகிற வரையிலே வந்து, அதற்குப் பிறகு அந்தக் காதலன்

மறுத்துவிட அதன் காரணமாக, இறந்துவிட்டாரே தவிர, காவலர்கள் மோசமாகப் பேசினார்கள், ஆகவே அவர் தன்னை கொலைக்கு உள்ளாக்கிக் கொண்டார் என்ற சொல்வது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. இந்த வழக்கிலே காவல் துறையினருக்கு சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

அஞ்சலையின் அண்ணன் கொடுத்த முதல் புகாரில், காவல் துறையினர்மீது எந்தத் தவறும் அஞ்சலையினுடைய அண்ணன் கூறவில்லை. அந்தப் புகார் மனுவில் எந்தத் தவறும் கூறவில்லை. மேலும் இதுகுறித்து ஐயப்பாடுகள் எழுமேயானால் முருகேசன் சம்பவத்திலே குற்றப் புலனாய்வுத் துறை உள்ளூர் காவலர்கள் செய்த விசாரணை முறையாக நடைபெற்றதா என்பதை சரிபார்த்ததைப் போல, விழுப்புரம் நிகழ்வுபற்றியும் குற்றப் புலனாய்வுத் துறைக்கு ஆணையிட்டு சரி பார்க்கச் சொல்கிறேன் என்கிற உறுதியை மாத்திரம் நான் திரு. சுப்பராயன் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கே.ஆர். இராமசாமி இங்கே எழுப்பிய, பட்டு குருக்கள் கொலை. அதிலேயும் பல கோணங்களிலே போலீசார் துருவி துருவி ஆராய்கிறார்கள். அதற்கு 3, 4 கோணங்கள் இருக்கின்றன. ஒரு கோணம் காதல் கோணம். ஆகவே காதல் இல்லாத கொலை என்று எதுவும் கிடையாது. (சிரிப்பு). அது அவருக்குத் தெரியும். கே.ஆர். இராமசாமிக்குத் தெரிந்திருக்கும்; தெரியாமல் இல்லை. இருந்தாலும் காதலை மறைத்துவிட்டு, பாக்கி விஷயங்களை மாத்திரம் அவர் இங்கே பேசியிருக்கிறார். புகழேந்தி என்கிறவரும், அவருடைய கூட்டாளிகளும் இந்தக் கொலைக்குக் காரணமாக இருப்பார்களோ என்ற சந்தேகமும் அதிகமாக ஏற்பட்டுள்ளது. இதற்கான நோக்கம் எதுவாக இருக்கும் என்று பல கோணங்களிலும் காவல் துறையினர் ஆராய்ந்து வருகின்றார்கள். C.B., C.I.D. போலீசும் இதை மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. விரைவில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கூடும் என்ற உறுதியை காவல் துறை எனக்கு அளித்துள்ளது என்பதையும் நான் நம்முடைய கே.ஆர். இராமசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கள்ளச் சாராயம் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். அவர்களையெல்லாம் குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே கைது செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இப்போதே பல பேர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலேதான் கைது செய்யப்படுகிறார்கள். நாம் மதுவிலக்குக் கொள்கையிலே தீவிரமாக இல்லை என்று இங்கே சொல்லப்பட்டது. ஏன் இல்லை? அருமை நண்பர் எம்.ஜி.ஆர். காலத்திலேயிருந்து ஒரு புதிய முறை மதுவிலக்குக் கொள்கையிலே வகுக்கப்பட்டு இன்றளவும் அதுவே நடைமுறையிலே இருந்து வருகின்றது. அதன்படி இந்த ஆண்டு மாத்திரம் நமக்கு இந்த ஆயத் தீர்வையிலே கிடைத்திருப்பது ஏலம் உட்பட 1,830 கோடி ரூபாய். விற்பனை வரி மூலமாக 1,000 கோடி; ஆக 2,800 கோடி ரூபாய்க்கு மேல் இந்த ஆயத் தீர்வை மூலமாக தமிழக அரசுக்குக் கிடைத்திருக்கின்றது. இதனுடைய சந்து பொந்துகளிலே நுழைந்து கொண்டு கள்ளச் சாராய வியாபாரிகள் நடத்துகின்ற கூத்துகள், திருவிளையாடல்கள் மீது இந்த அரசு இப்போது மிக வன்மையாக நடவடிக்கை எடுத்து கண்டித்திருக் கின்றது. தண்டித்திருக்கின்றது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

1999ஆம் ஆண்டு மாத்திரம் 4,521 வாகனங்கள் கைப்பற்றப் பட்டன. 2000 ஆண்டில், 31-3-2000 வரை. 1,811 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 1999ஆம் ஆண்டில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 4,20,878. கைது செய்யப்பட்டோர் 3,91,306 பேர். இதில் பெண்கள் 94,760 பேர் என்பதுதான் வேதனைக்குரியது.

ஆயத் தீர்வை இழப்பினைத் தடுக்கும் பொருட்டு, இந்திய தயாரிப்பு அயல் நாட்டு மது வகை சில்லறை விற்பனைக் கடைகளில் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 1999ஆம் ஆண்டில் உரிமை விதிகளை மீறியதற்காக 7,878 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் சட்ட விரோதமாக bar நடத்திய குற்றத்திற்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 2,923. இவற்றையும் மீறி இந்தத் தவறு நடந்துகொண்டுதான் இருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்பது எனக்குப் புரியாமல் இல்லை. இருந்தாலும்கூட இத்தனையையும் மீறி நடைபெறுகின்ற இந்தத் தவறுகளை அறவே ஒழித்துக்கட்ட நாம் அனைவரும் ஒன்றுபட்டு, ஒரே கண்ணோட்டத்தோடு, இந்தக்

கள்ளச்சாராயத்தை ஒழிக்கின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டும். அந்த முயற்சியிலே நாம் இப்போது பெருமளவு வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால் முழுமையாக வெற்றி பெறவில்லை என்பதை ஒத்துக்கொண்டு, எல்லோருடைய ஒத்துழைப்பும் எனக்குத் தேவை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நேரத்திலே சில அறிவுப்புகளை காவல் துறையின் சார்பாக இந்த மாமன்றத்திலே வெளியிட நான் விரும்புகின்றேன். காவல் துறை இயக்குநர் அலுவலக வளாகம் - ஏற்கெனவே நம்முடைய கடற்கரை ஓரத்திலே வானொலி நிலையத்திற்குப் பக்கத்திலே இருந்த காவல் துறை தலைமை அதிகாரியினுடைய அலுவலகத்தை மாற்றுவதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெற்று, அது இடிக்கப்படுகிற நேரத்திலே இந்த ஆட்சி பொறுப்பேற்று அதை இடிக்காமல் தடுத்து, அதே இடத்திலே பழைய கட்டடத்தையே பொலிவுபடுத்தி, வலிவுபடுத்தி, புதுமைக்கோலம் கொள்ளச் செய்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது அந்தக் கட்டடத்தை ஒட்டினாற்போல், வானொலிப் பிரிவு மற்றும் தடய அறிவியல் துறை ஆகியவற்றின் கட்டடங்கள் பழுது பார்க்க இயலாத அளவிற்கு உள்ளபடியால் - அவற்றை இடித்துவிட்டு புதிய கட்டடத்தை அல்ல - அதற்குப் பின்னால் இருக்கின்ற, ஒட்டியிருக்கின்ற சில பழைய கட்டடங்களை இடித்துவிட்டு - அந்த இடத்திலேயே புதிய கட்டடங்களைக் கட்டுவது குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு வல்லுநர் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அந்தக் குழுவினுடைய அறிக்கை கிடைத்த வுடன் புதிய கட்டடங்கள், காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள் அமைந்துள்ள அதே வடிவமைப்பில் கட்டுவதென்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

தற்போதைய வேலூர் சரகம், வேலூர், தருமபுரி, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பெரிய சரகமாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்து சேலத்தில் ஒரு புதிய காவல் சரகம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தச் சரகத்தின்கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி மாவட்டங்கள் இடம்பெறும். தற்போது விழுப்புரம் சரகத்தில் உள்ள திருவண்ணா மலை மாவட்டமும், வேலூர் மாவட்டமும் வேலூர் சரகத்தின்கீழ் இடம்பெறும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல்படையில் 11 அணிகளிலும் உள்ள வானொலி தொலைத் தொடர்புப் பிரிவில் தற்போதுள்ள 11 சார் ஆய்வாளர்கள் பதவிகளை 11 ஆய்வாளர் பதவிகளாகவும் மற்றும் 22 அவில்தார் பதவிகளை 22 சார் ஆய்வாளர் பதவிகளாகவும் நிலை உயர்த்தி ஆணை வழங்கப்படும்.

பொது மக்களின் புகார்களைப் பெறுவதற்கென்றே சென்னை மாநகரில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, காவல் துறைத் தலைவர் அலுவலகத்தில் ஒரு தனி தொலைபேசி நிறுவப்படும். இந்த எண்ணை தொடர்பு கொள்வதற்காகும் தொலைபேசிக் கட்டணத்தை அரசே ஏற்கும். புகார் செய்பவர்களுக்கு தொலைபேசிக் கட்டணம் கிடையாது. இந்த வசதி படிப்படியாக மற்ற நகரங்களுக்கும் விரிவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

சிறு வணிகர் பாதுகாப்பிற்கு என்று Food Cell. Food Cell போலீசார் அரிசி, ration மண்ணெண்ணெய் ஆகியவற்றைக் கடத்துபவர்கள் மற்றும் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்பவர்கள்மீது Criminal நடவடிக்கை எடுப்பதாகக் கூறி சிறு சிறு வணிகர்களை எல்லாம் பெரும் இன்னலுக்கு ஆளாக்கி வருவதாகப் புகார்கள் அரசுக்கு வந்துள்ளன. எனவே பிரத்தியேகமான வழக்குகளைத் தவிர மற்ற நேர்வுகளில் Food Cell போலீசார் சிறு சிறு வணிகர்களைத் தேவையில்லாமல் சோதனைகள் மற்றும் விசாரணைகளுக்கு ஆட்படுத்தக் கூடாது என்று அரசு உத்தரவு பிறப்பிக்கும்.

காவல் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து காவல் நிலையம் வரை கணினிமயமாக்கவும், பொது மக்கள் காவல் நிலையங்களைத் துரிதமாகத் தொடர்புகொள்ளவும் ஒரு திட்டம் உருவாக்கப்படுகிறது. இதன்மூலம் காவல் துறை - பொது மக்கள் தொடர்பு நவீன முறையில் சீரமைக்கப்படும். கணினி மூலம் பொது மக்கள் புகார்களைக் கொடுக்கவும் முதல் தகவல் அறிக்கை நகல் பெறவும் முடியும். இதனைச் செயற்படுத்த உள் துறைச் செயலாளர் தலைமையில் காவல் துறை இயக்குநர் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர், கூடுதல் காவல் துறைத் தலைவர் ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்.

மதுவிலக்கு அயத் தீர்வைத் துறையின் அனைத்து அலுவலகங்களும் கணினிமயமாக்கப்படும். இதனால் ஆயத் தீர்வைத் துறை நிர்வாகத்தின் செயல்பாடுகள் மேம்படும்.

கணினி மூலம் தகவல் பெற்று சாராவி, இரசாயனப் பொருட்கள் ஆகியவை வேறு காரணங்களுக்காக தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க கண்காணிப்பு தீவிரமாக்கப்படும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் காவலர் குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டு வந்தன. 1996-ல் ஆண்டு ஒன்றுக்கு 1,500 காவலர் குடியிருப்புகளாகவும், 1997ஆம் ஆண்டு 2,500 காவலர் குடியிருப்புகளாகவும் உயர்த்தப்பட்டு அவ்வாறு கட்டப்பட்டு வருகின்றன. இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 90 கோடி செலவாகும். இந்த ஆண்டு முதல் காவலர் குடியிருப்புகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 கோடி ஒதுக்கப்படும். இதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் காவல் துறைக்கு 624 புதிய வாகனங்கள் 19 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டன. வரும் ஆண்டிற்கு மாத்திரம் 18 கோடியே 72 லடசம் ரூபாய் செலவில் 434 புதிய வாகனங்கள் காவல் துறைக்காக வாங்கப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் தொலைத் தொடர்புப் பிரிவில் பணிபுரியும் 628 பணியாளர்களுக்கு இதுவரை சீருடை வழங்கப்படவில்லை. இந்த 628 பேருக்கும் இந்த ஆண்டு முதல் சீருடை வழங்கப்படும்.

உணவுப்படி, சட்டம் ஒழுங்கு மற்றும் அவசர காலப் பணிகளில் காவலர்களை ஈடுபடுத்தும்போதும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினையில் மற்ற இடங்களுக்கும், மாவட்டங்களுக்கும் அனுப்பும் சமயத்திலும் அவர்களுக்கு உணவுப்படி வழங்கப் படுகிறது. இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு, 1997-ல் ரூ. 16 என்பது ரூ. 25 ஆகவும், 1998-ல் ரூ. 25 என்பது ரூ. 35 ஆகவும் உயர்த்தப்பட்டது. தற்போது ரூ. 35 என்பது ரூ. 45-ஆக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). முதல்நிலைக்

காலவர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு, 1997-ல் ரூ. 20 என்பது ரூ. 30 ஆகவும், 1998-ல் ரூ. 30 என்பது ரூ. 40 ஆகவும், உயர்த்தப்பட்டது. தற்போது ரூ. 40 என்பது ரூ. 50-ஆக உயர்த்தப் படுகிறது. Sub-Inspector மற்றும் Inspector-களுக்கு 1997-ல் ரூ. 30 என்பது ரூ. 45 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது ரூ. 45 என்பது ரூ. 55-ஆக உயர்த்தப்படுகிறது. இதன்மூலம் 10,904 இரண்டாம் நிலைக் காவலர்கள், 72,650 முதல் நிலை மற்றும் தலைமைக் காவலர்கள், 8,542 உதவி ஆய்வாளர்கள் பயன் பெறுவார்கள். சுமார் ரூ. 1 கோடி கூடுதலாகச் செலவாகும்.

Risk allowance - இடர்ப் படி. காவல் துறையினர் ஆபத்து நிறைந்த சூழ்நிலைகளில் பணிபுரிகின்றார்கள். அதனால் அவர்களுக்கு மாதந்தோறும் இடர்ப் படி வழங்கப்பட்டு வருகிறது. காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை 1997-ல் இடர்ப் படி 20 ரூபாய் என்று இருந்தது. 1998-ல் 50 ரூபாயாக உயர்த்தப்பட்டது. தற்போது இந்த இடர்ப் படி 60 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. துணைக் கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு 1997-ல் 30 ரூபாய் என்று இருந்தது. 1998-ல் 60 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இது தற்போது 70 ரூபாயாக உயர்த்தப் படுகிறது. இதனால் அரசுக்கு சுமாராக ஒரு கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும். 90 ஆயிரம் காவலர்கள் இதன் மூலம் பயன் பெறுவார்கள்.

காவலர்களுக்கு தற்போது ஆண்டு ஒன்றுக்கு இரண்டு set சீருடைகள் வழங்கப்படுகின்றன. சீருடை தைக்க set ஒன்றுக்கு 75 ரூபாய் வீதம் தையற்கூலி தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இதனை set ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் இரண்டு set-ற்கு 200 ரூபாய் இந்த ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பற்றி இங்கே பல உறுப்பினர்களும் எடுத்துக் கூறினார்கள். உதவி ஆய்வாளர்களுக் கான அந்தஸ்து இவர்களுக்குத் தரப்பட்டிருந்தாலும், உதவி ஆய்வாளர்களுக்கான ஊதியம் தரப்படவில்லை என்று தெரிவித்தார்கள். இந்த குறை களையப்பட்டு சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கும் உதவி ஆய்வாளர்களைப் போலவே ஊதிய

விகிதம் வழங்க ஆணை பிறப்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே அறிவித்தவாறு ஆயிரம் பெண் காவலர்கள் மற்றும் நான்காயிரம் ஆண் காவலர்கள் தேர்ந்தெடுப்பதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இது தவிர இந்த நிதி ஆண்டில் ஓய்வு பெறும் காவலர்களுக்குப் பதிலாக 1,500 காவலர்கள் தேர்வு செய்யப்பட வுள்ளார்கள். இதையும் தவிர கடலோரக் காவல் படை, அதி விரைவுப் படை மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஆகிய பணிகளுக்காக மேலும் 2,000 காவலர்கள் இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்கள்.

நடப்பாண்டில் தேர்வு செய்யப்பட்டு வரும் 5,000 காவலர்களோடு இந்த 3,500 காவலர்களும் சேர்ந்து 8,500 காவலர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

1996ஆம் ஆண்டு முதல் 2000 வரை, 4 ஆண்டுகளில் 57 புதிய காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. 36 புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப் பட்டன.

புதிய காவல் நிலையங்கள் கோரி 150-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் என்னிடம் தரப்பட்டுள்ளன. இந்த 150 கோரிக்கைகளில் 15 கோரிக்கைகள் மாத்திரமே ஏற்கப்படுகின்றன.

மாவட்டங்களிலே உள்ள காவல் நிலையங்களின் எண்ணிக்கை, அந்தப் பகுதியிலே நடைபெறும் குற்றங்களின் எண்ணிக்கை மற்றும் சட்டம் ஒழுங்கு நிலை ஆகியவற்றை மனதிலே கொண்டு இந்த 15 காவல் நிலையங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:

1. திருப்பூர்-மங்கலம்
2. மேல வளவு
3. சிவகிரி
4. சங்கரன்கோவில்

5. மகாலிங்கபுரம்
6. வேப்பளங்குரிச்சி
7. தூக்கணாம்பாக்கம்
8. கிருஷ்ணாபுரம்
9. திருமுல்லைவாயில்
10. சாத்தூர் தாலுக்கா காவல் நிலையம்
11. உசிலம்பட்டி தாலுக்கா காவல் நிலையம்
12. பட்டீஸ்வரம்
13. அம்மாபட்டி
14. தென்கரை
15. கிருஷ்ணன்கோவில்

அடுத்து தாமரைக்கனி கையைக் காட்டுகிறார்.

காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியும் ஏராளமான கோரிக்கைகள் வந்துள்ளன. அவற்றில் 10 பேருடைய கோரிக்கைகள் ஏற்கப்படுகின்றன:

1. மருதூர்
2. சத்திரப்பட்டி
3. மதுக்கூர்
4. வைத்தீஸ்வரன்கோவில்
5. வைப்பூர்
6. தூசி
7. கடத்தூர்
8. மல்லாங்கிணறு
9. கள்ளிக்குடி
10. நாகையாபுரம்

இங்கே கட்டடம் கட்டுவதற்கான ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியத்தில் நல்ல கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியத்தை ஏற்குமாறு கேட்டு அமைகின்றேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).



உரை : 21 நாள் : 30.08.2006

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தேவையான, முக்கியமான, இந்த அரசு சட்டம்-ஒழுங்கை எப்படிக் காத்திடுகிறது என்பதற்குச் சான்றான ஒரு செய்தியை முதலில் தெரிவித்துவிட்டு, என் உரைக்கு வருகின்றேன்.

நேற்றையதினம், திண்டுக்கல் மாவட்டத்தில், தந்தை பெரியார் சிலைக்கு ஏற்பட்ட ஒரு களங்கம் குறித்து, நான் இங்கே உரையாற்றும்போது, அதற்குக் காரணமானவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று அறிவித்தேன். அவ்வாறே, அச்சம்பவத்திற்குக் காரணமான குற்றவாளிகள், தர்மராஜ் என்பவரும், தட்டுவண்டி மணி என்பவரும் கைது செய்யப் பட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய விடுதலைச் சிறுத்தைகளின் சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் செல்வம் அவர்கள், கடந்தகால ஆட்சியிலே தன்மீது போடப்பட்ட, உண்மைக்கு மாறான வழக்குகளை C.B.I. விசாரித்து வருகிறது என்பதையும், உண்மையை வெளியிலே கொண்டுவர, விரைந்து முயற்சிகளை அரசின் சார்பில் சட்டப்படி எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் இங்கே உரையாற்றும்பொழுது வைத்தார். இங்கே வைக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகளில் அது ஒரு முக்கியமான கோரிக்கை; உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கை. அதிலும் இந்த அவையிலே உள்ளவர்களில் ஒருவர் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், பரிகாரம் தேடவேண்டிய கோரிக்கை. பரிகாரம் தேடுவோம் என்ற உறுதியை நான் (மேசையைத் தட்டும் ஒலி) செல்வம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவருடைய புள்ளி விவரங்கள் ஒரு சிறிது வேறுபடுகின்றன என்பதற்கு ஒரேயொரு சான்றினை மாத்திரம் இங்கே தர விரும்புகின்றேன். சாதிக் கலவரத்தில் 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரையில் அ.தி.மு.க. ஆட்சியில், அதைப்போல, 1996 முதல் 2001 வரையில் தி.மு.க. ஆட்சியில் என்று அவர் வகுத்துக் கொண்டு, எத்தனை நிகழ்வுகள் என்று சொன்னார். அதிலே, ஒரு திருத்தத்தோடு இந்த புள்ளிவிவரத்தை அவருக்கு நான் பிழை திருத்திச் சொல்ல விரும்புகின்றேன். 1991-96 அ.தி.மு.க. ஆட்சியில் சாதிக் கலவர நிகழ்வுகள் 337. 1996-2001, தி.மு.க. ஆட்சியில் 269. 337-ஐவிட 269 குறைவு என்று நான் சொல்லத் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெரிய வித்தியாசம் இல்லை என்பதற்காக இதைச் சொல்கின்றேன்.

அந்தக் கலவரத்திலே இறந்தவர்கள், 1991-1996 இந்தக் காலகட்டத்தில் 189 பேர் அ.தி.மு.க. ஆட்சியில்; தி.மு.க. ஆட்சியில் 182 பேர். காயமடைந்தோர், அ.தி.மு.க. ஆட்சியில், 1991-1996-ல், 2,048 பேர்; தி.மு.க. ஆட்சியில் 964 பேர். இந்தத் தொகை அதிகமாக காயமடைந்தவர்களுடைய பட்டியலிலே காட்ட முடிகின்றது. ஒருவேளை இதை நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் படித்திருப்பாரேயானால், அவருடைய நண்பர்கள், மேஜை உடைகின்ற அளவிற்குக் கைதட்டி, '2,048 பேர் அதிகம், நம்முடைய காலத்திலேதான் காயமடைந்திருக்கிறார்கள்' என்று பாராட்டி மகிழ்ந்திருக்கக் கூடும். (மேசையைத் தட்டும் ஒலி). காவலர்களை, அம்மா ஆட்சியிலேதான், உன்னதமான இடத்திற்கு, உயர்ந்த இடத்திற்கு, சிறப்பான இடத்திற்கு, இட்டுச் சென்றதைப் போல, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய பேச்சு அமைந்திருந்தது. அது அப்படித்தான் அமையும்; அமைய வேண்டும்; அந்த வகையிலே, அந்தப் பேச்சு அமைந்திருந்தது. இன்று காலையிலேயிருந்து எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் ஒவ்வொருவரும் நீண்டநேரம் தங்களுடைய கருத்துக்களை இந்த மானியத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில், அந்தக் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் நண்பர் கோ. க. மணி அவர்கள் உரையாற்றும்பொழுது, உதவிக்கு இன்னொரு

நாதஸ்வரத்தையும் அழைத்துக் கொண்டார். எப்பொழுதுமே இரட்டை நாதஸ்வரம் எடுப்பாக இருக்கும் என்பதற்காக, செல்வத்தையும் அழைத்துக்கொண்டார். அவரும் சேர்ந்து, நாதஸ்வரம் வாசித்து, களைகட்டியது. எவ்வளவு களை, கடந்த காலத்திலே இருந்தது காவல் துறையிலே என்பதும் எடுத்துக் காட்டப்பட்டது.

நம்முடைய அம்மையார் யசோதா அவர்கள், காங்கிரஸ் கட்சியின் சார்பாக, தன்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்து, தன்னுடைய தொகுதிக்கு என்னென்ன தேவை என்பவற்றையெல்லாம் கோரிக்கைகளாக இங்கே வைத்திருக் கின்றார்கள்.

நம்முடைய நண்பர், ம.தி.மு.க. சார்பில் பேசிய நண்பர், தமிழகத்திலேயிருந்து நம்மையெல்லாம் வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று, வெளிநாட்டுக் காட்சிகளையெல்லாம் காட்டி, தமிழகத்திற்குக் கடைசி கட்டத்திலே வந்து, நேரம் இல்லாத காரணத்தால் அதை முடித்துக்கொண்டார்; பரவாயில்லை. அவர் என்ன சொல்ல வந்தார் என்பது எனக்குத் தெரியும், எனக்குப் புரியும் என்ற காரணத்தால், நான் அவரை எங்கேயாவது சந்திக்கின்ற நேரத்தில் உண்மையைச் சொல்ல நிச்சயமாகத் தயாராக இருக்கிறேன். அப்படிப்பட்ட சந்தர்ப்பம் எனக்கு வாய்க்குமோ வாய்க்காதோ என்று எனக்குத் தெரியாது. ஆனால், என்ன நடந்தது, எத்தகைய சூழ்நிலையிலே இப்படிப்பட்ட ஒரு கற்பனை கட்டிவிடப்பட்டது என்பவையெல்லாம் காவல் துறைக்கும் தெரியும்; எனக்கும் மிக நன்றாகத் தெரியும்.

இந்த விவாதத்திற்கு இடையே நம்முடைய செல்வம் அவர்கள், அவர் பட்ட வேதனைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, தனக்கு ஒரு வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். வழிகாட்டுவதற்கு நீதிமன்றம் இருக்கின்றது. சட்டம் இருக்கின்றது. அந்தச் சட்டத்தைச் செயல்படுத்த, நீதியை உண்மையான நீதியை வரவழைக்க, எத்தகைய உதவியையும் செய்ய இந்த அரசு, செல்வம் போன்றவர்களுக்காகத் தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவலர்கள் அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகுதான், இத்தகைய உன்னதமான நிலையை அடைந்தார்கள் என்று நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுடைய பேச்சிலே குறுக்கிட வில்லை, குறுக்கிட்டால் அவர் நோகக்கூடும், தம்முடைய பேச்சிலும் குறுக்கிடுகிறாரே என்று. அவர்மீது எனக்குள்ள அன்புக்குக் காரணம், அவருடைய பெயர். பன்னீர்செல்வம் என்ற பெயர், இன்று, நேற்றல்ல என்னுடைய பால பருவத்திலேயே கவர்ந்த பெயர். ஏனென்றால், இதே அவையில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள், முதலமைச்சராக இருந்த காலத்தில் எல்லாம், Premier-பிரதமர் என்றுதான் பெயர். இந்தி, கட்டாயம் என்பதை இங்கே கொண்டுவந்தபோது, பன்னீர்செல்வம் அவர்கள் அதை எதிர்த்து காரசாரமாகப் பேசிய நேரத்தில், இராஜாஜி அவர்கள் பன்னீர்செல்வத்தைப் பார்த்து, ''யார் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிறார்கள்? இரண்டே பேர்தான்; ஒருவர் சோமசுந்தர பாரதியார்; இன்னொருவர் நீங்கள்'' என்று சொன்னார்கள். சொன்னவுடனே, பன்னீர்செல்வம் சொன்னார் : ''இரண்டு பேர்தான் எதிர்க்கிறோம்; ஆனால், கொண்டு வருவது நீங்கள் ஒருவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) majority நாங்கள்தான்'' என்று சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, தந்திரமாக, மிகச் சாதுர்யமாக பதிலைத் தந்து, பாராளுமன்றச் சரித்திரத்தில், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் எழுதிய 'Parliamentarian' என்ற புத்தகத்திலேகூட பன்னீர்செல்வம் இடம் பெற்றிருக்கின்றார். அவ்வளவு சாதுர்யம் நம்முடைய பன்னீர்செல்வம் அவர்களுக்கு இருக்கிறதா என்று நான் சொல்லமாட்டேன். ஏனென்றால், அவர் சாதுர்யங்களுக் கெல்லாம் போகக்கூடியவர் அல்லர்; சாது! (மேசையைத் தட்டும் ஒலி). சில நேரங்களில், ''சாது மிரண்டால் காடு கொள்ளாது''; அதுவும் எனக்குத் தெரியும். சூது வாது அறியாத சாது! (பலத்த சிரிப்பு). அதுவும் எனக்குத் தெரியும். அதனால்தான் அவர் இங்கே திரு. வீராசாமி அவர்களும், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்களும் குறுக்கிட்டபோதெல்லாம், அவர்களுடைய பதிலைப் பார்த்தால், அவர் சாதுதான் என்பதை நிரூபிக்கின்ற அளவிற்கு, அவருடைய பதில்கள் எல்லாம் அமைந்தன என்பதை நீங்கள் அனைவரும் மிக நன்றாக அறிவீர்கள்.

நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், காவலர்கள், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இப்பொழுது இருக்கின்ற நிலை, உயர்ந்த நிலைதான், நான் இல்லை என்று மறுக்கவில்லை. கடந்தகால ஆட்சியிலே, முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள், கூடுமானவரையிலே தொழிலாளர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு நன்மைகளைச் செய்தாலும், செய்யாவிட்டாலும், அதற்கு மாறாகத் துன்பங்களை விளைவித்திருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்குரிய ஒரு படை, காவல் துறை படைதான் என்ற காரணத்தால், அந்தக் காவலர் படையைக் கைக்குள்ளேயே வைத்து இருந்தார். அதற்கு ஏற்ப, காவலர் படைக்குத் தேவையான நன்மைகளை எல்லாம் நிறைய செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி). அதனால் தான், இன்றைக்குக் காவல் துறை, அம்மையார் அவர்களைப் புகழ்ந்தும், போற்றியும், இன்றளவும் அவர் சொல்கிற கட்டளைகளை நிறைவேற்றியும், எதிர்க்கட்சிகளை எப்படியெல்லாம் வேட்டையாட வேண்டுமோ, அப்படியெல்லாம் வேட்டையாடியும், யார் யார்மீது என்னென்ன வழக்குகளைப் போட வேண்டுமோ, அந்த வழக்குகளையெல்லாம் போட்டும், ஒரு பெரிய நிலைக்கு அந்தத் துறை வந்து இருக்கிறது. அந்தத் துறை வசதியாக, வாய்ப்பாக இன்றைக்கு இருக்கிறது. ஆனால், ஒன்றை மறந்துவிடக் கூடாது.

நானும், பேராசிரியரும், இந்த அவைக்கு வந்து 50 ஆண்டு காலம் ஆகிறது. 1957ஆம் ஆண்டு குளித்தலை தொகுதியிலே போட்டியிட்டு வெற்றி பெற்று, இந்த அவையிலே நுழைந்த நான், இடையிலே ஓரிரு மாதங்கள் இலங்கைப் பிரச்சினைக்காக இராஜினாமா செய்துவிட்டு வெளியிலே இருந்தேனே அல்லாமல், பாக்கி நேரமெல்லாம், இந்த அவையிலே இருந்திருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, எனக்கு இந்த அவையிலே 50 ஆண்டுக் கால அனுபவம் உண்டு. அதை வைத்துச் சொல்லுகின்றேன்; கடந்தகால ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே காவலர்களுக்கு நீங்கள் ஆயிரம் கோடிதான் ஒதுக்கினீர்கள். இப்பொழுது நாங்கள் 5 ஆயிரம் கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லும்பொழுது எனக்கே ஒரு கவலை. இப்பொழுதுதான் இந்த மண்டபத்தைப் புதுப்பித்தோம்,

மேஜை, நாற்காலிகளை எல்லாம் போட்டோம், இந்த அடி அடிக்கின்றார்களே மறுபடியும் பழுதுபார்க்க வேண்டுமே என்கின்ற அளவிற்கு, கவலை ஏற்படக்கூடிய அளவிற்கு மேசையைத் தட்டுகிறீர்கள், மகிழ்ச்சியடைகிறேன்.

நான்கூட இங்கே என்னுடைய நண்பர்களைப் பார்த்துச் சொல்வேன். 'நீங்கள் எல்லாம் சரியாகச் சாப்பிடுவது இல்லையா? அவர்கள் எப்படி சாப்பிட்டுவிட்டு வருகிறார்கள், பாருங்கள்'. (சிரிப்பு). அப்படி என்று சொல்வது உண்டு. அந்த அளவிற்கு அடி அடிக்கிறீர்கள்; அப்படி மகிழ்ச்சியடைகின்றீர்கள். ஆனால், இந்த மகிழ்ச்சியடைவதற்கு, காவல் துறை இவ்வளவு களிப்போடு இருப்பதற்கு, ஏற்கெனவே இந்த ஆட்சி காரணம் என்று நீங்கள் சொன்னாலும்கூட, இதனுடைய ஆரம்பம் எப்படி இருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உங்களுக்கு நான் ஒன்று சொல்ல வேண்டும். 1957ஆம் ஆண்டுக்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழகம் 1967ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, காவலர்களுடைய நிலை என்ன? நான் அன்றைக்கு இருந்த எந்த ஆட்சியையும் குறை கூறுவதற்காக இதைச் சொல்லவில்லை. அன்றைக்குப் பெருந்தலைவர் காமராஜருடைய தலைமையிலே ஆட்சி இருந்தது. பக்தவத்சலத்தினுடைய பார்வையிலே ஆட்சி இருந்தது, நிர்வாகம் இருந்தது. சி. சுப்பிரமணியம் அவர்களுடைய நிர்வாகப் பொறுப்பிலே ஆட்சி இருந்தது. இதே அவையில் எங்கள் காதுகளிலே ஒலித்தது, சி. சுப்பிரமணியம் அவர்கள் கையிலே budget புத்தகத்தை எடுத்துக்கொண்டு படித்தார். படிப்பதற்கு முன் சொன்னார்; இன்றைக்கு நான் சதம் அடிக்கப் போகிறேன், century அடிக்கப்போகிறேன் என்றார். என்ன பொருள் தெரியுமா? 100 கோடி ரூபாய் budget. அவ்வளவு பெருமையாக அன்றைக்குக் சொன்னார். 100 கோடி ரூபாய் budget, அதைப் படிக்கப் போகிறேன் என்று சொன்னார். 1957, 1958, 1960 இந்த ஆண்டுகளில் 100 கோடி ரூபாய் அளவுக்கு இருந்த budget தான் இன்றைக்கு 20,000 கோடி ரூபாய், 30,000 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. எனவே, முன்பு 3,000 கோடிதான் ஒதுக்கினீர்கள், இப்பொழுது 5,000 கோடி ஒதுக்கி யிருக்கிறீர்கள் என்று சொல்வதில் எல்லாம் பொருள் இல்லை. அவ்வப்பொழுது வருமான உயர்வு, வரி உயர்வு,

வரிகளால் ஏற்படுகின்ற வருமானம், இப்படிப் பல வகையிலே கிடைக்கின்ற வருமானங்கள், ஒரு ஆட்சியிலே பொருளாதாரம் அவ்வப்போது பெருகிப் பெருகி, ஆயிரம், பத்தாயிரம், இலட்சம், கோடி என்கின்ற அளவுக்குப் பெருகும். இல்லாவிட்டால் 100 கோடி ரூபாய் budget இன்றைக்கு 30,000 கோடி ரூபாய் budget-ஆக உருவாகி யிருக்கிறது என்றால் என்ன காரணம்? எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்த 100 கோடி ரூபாய் budget இருந்த காலத்தில் ஒரு காவலருடைய சம்பளம் என்ன? அவர்களுடைய வாழ்க்கை எப்படி இருந்தது? நானே ஒரு நாடகத்தில் ஒரு பாட்டு எழுதி, அப்பொழுது சிக்கிக் கொண்டேன். 'உதய சூரியன்' என்கின்ற நாடகம்; அரசியல் நாடகம். பக்தவத்சலம் அவர்கள், அந்த நாடகத்தைத் தடை செய்து, "ஏன் தடை செய்தேன் தெரியுமா? என்று இந்த அவையிலே விளக்கமும் கொடுத்தார். 'போலீஸ் காரர்களை அரசுக்கு எதிராகத் தூண்டிவிடக் கூடாது; அப்படித் தூண்டிவிடுகின்ற பாட்டு இதிலே இருக்கிறது; ஆகவேதான் தடை செய்தேன்' என்று இங்கே சொன்னார். நான் அவருக்கு நேராகவே, 'நீங்கள் தடை செய்த பாட்டைப் பாடிக் காட்டுகிறேன், பாருங்கள்"! என்று இங்கே அந்தப் பாட்டைப் பாடிக் காட்டினேன். உங்களுக்கும் பாடிக்காட்டுகிறேன். பாடியல்ல, படித்துக் காட்டுகிறேன். பாடினால், பசி நேரம் என்று போய்விடுவீர்கள்! (சிரிப்பு).

"ஆராரோ! ஆராரோ! ஆணழகா கண் வளராய்! என்று போலீஸ்காரனுடைய மனைவி தன்னுடைய குழந்தையைப் போட்டு, தாலாட்டுகிறாள்.

"அஞ்சு பத்து சம்பளத்தில் மிஞ்சுவதில் வளர வந்த
அஞ்சுகமே கண் வளராய்!
போலீசு வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு,
புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண் வளராய்!
துப்பாக்கி எடுத்துகிட்டு போகின்ற நொப்பனிடம்!
பழம்பாக்கி கேட்டுகிட்டு வழி மறிக்கும் கடன்காரன்
வருகின்ற காட்சிதனைக் காணாமல் கண் வளராய்!
நாடாளும் மந்திரிகள் நலியாமல் வாழ்வதற்கு

ஓடாகத் தேய்கின்ற அப்பாவின் புத்திரனே!
குருவிக் கூடான வீட்டுக்குள்ளே தவழுகின்ற குல விளக்கே!
கொசுக்கடிக்கு அஞ்சாமல் குவளை மலர் கண் வளராய்!
காக்கி உடை போட்டுகிட்டு சேப்புத் தொப்பி மாட்டிக்கிட்டு
நாட்டைக் காக்கும் வீரனுக்கு உன்னைப் போல
நாலு வந்து பிறந்துவிட்டால். . . . . காவி உடை வேணுமடா. . .
கமண்டலமும் தேவையடா. . . . . ”

இது பாட்டு. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). இது ஒரு காவல்துறை நண்பருடைய வீட்டிலே உள்ள வறுமை, இல்லாமை, இந்தக் கொடுமையை அவருடைய மனைவிமூலமாக, அந்தக் குழந்தையின் தாய் மூலமாக, எடுத்துக்காட்டுகின்ற பாட்டு. இதை பக்தவத்சலம் தடை செய்தது நியாயம்தான். நானாக இருந்தால்கூட தடைதான் செய்திருக்க வேண்டும். வேறு என்ன வழி? ஏனென்றால், இது காவல் துறையைத் தூண்டிவிடுகின்ற அளவிற்கு இருக்கின்ற பாட்டு என்பதால், தடை செய்யப்பட்டு, ‘உதய சூரியன்’ நாடகமே எங்கும் நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது அப்போது.

நாங்கள் தந்திரசாலிகள்; ‘உதய சூரியன்’ என்பதை ‘இளைஞன் குரல்’ என்று மாற்றி நடத்திக்கொண்டிருந்தோம். அது வேறு விஷயம். இதற்குப் பிறகு, இந்த அவல நிலைக்குப் பிறகு, ஆட்சிக்கு வந்தோம். ஆட்சிக்கு 1967ஆம் ஆண்டு வந்தோம் என்றால், எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்ட நான், 1969-ல் பொறுப்பேற்றவுடன், முதலில் நான் எழுதினேனே தாலாட்டு, நினைவிலே பதிந்திருந்த காரணத்தால், பாடியதோடு இருக்கக்கூடாது; பரிகாரமும் தேட வேண்டும் என்பதற்காக, முதன்முதலாக நான் அமைத்த கமிஷன்தான் கோபாலசாமி, I.C.S. தலைமையிலே அமைக்கப்பட்ட போலீஸ் கமிஷன். (மேசையைத் தட்டும் ஒலி). அதனுடைய பரிந்துரைகள் 133. அந்த 133 பரிந்துரைகளில் என் தலைமையில் இருந்த கழக அரசு ஏற்றுக் கொண்ட பரிந்துரைகள், 115. (மேசையைத் தட்டும் ஒலி). அதன்பிறகு, தொடர்ந்து 1989-ல் சபாநாயகம், I.A.S. தலைமையில் இரண்டாவது போலீஸ் கமிஷன். பரிந்துரைகள் 112. நடைமுறைப் படுத்தியது 79.

1996ஆம் ஆண்டு, மத்தியிலே ஐந்தாவது ஊதியக்குழு வந்தது. இந்தியாவிலேயே, மத்தியிலே போடப்பட்ட ஐந்தாவது ஊதியக் குழுவினுடைய சிபாரிசுகளை முதன்முதலாக ஏற்றுக் கொண்ட ஒரு மாநில அரசு உண்டென்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அது தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

1969-ல் காவலர் ஊதியம் எவ்வளவு தெரியுமா? அடிப்படைச் சம்பளம் 70 ரூபாய். 70 ரூபாய் என்று இருந்த அடிப்படைச் சம்பளம் 200 ரூபாய் என்று ஆனது. ஆய்வாளர் ஊதியம் ரூபாய் 180 என்பது ரூபாய் 425 என்று ஆனது. பொதுவாக, இரண்டாம் நிலைக் காவலர்களுடைய அடிப்படை ஊதியம், 1996-ல் 825 ரூபாயாக இருந்தது, 3,050 ரூபாயாக உயர்த்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி). உதவி ஆய்வாளர் களுடைய அடிப்படை ஊதியம் - S.I. 1,600 ரூபாய் என்ற அளவிற்கு இருந்தது, 5,300 ரூபாய் என்று உயர்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த உயர்வுகள், படிப்படியாக உயர்ந்து உயர்ந்து, கண்காணிப்பாளர் - S.P.-யினுடைய சம்பளம், 12 ஆயிரம் ரூபாய் என்கிற அளவிற்கு உயர்ந்தது. அ°தன்னியில், காவலர்களுக்குச் சலுகைகளாக, பயணப்படி, மருத்துவப்படி, இடர்ப்படி, சிறப்புப்படி, சீருடைப்படி என பல படிகள் உயர்த்தி வழங்கப்பட்டன.

1969ஆம் ஆண்டு முதல், காவல் துறையிலே சிறந்த பணியாற்றுவோருக்கு அண்ணா பதக்கம் - தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், இந்தப் பதக்கத்தைக் காவல் துறையிலே பெற்றுள்ளார்கள்.

1974ஆம் ஆண்டு வரை காவலர்கள் அணிந்துவந்த அரைக்கால் சட்டையை, முழுக்கால் சட்டையாக ஆக்கி, முழங்காலை மறைத்திருப்பது (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

அதன் பின்னர், காவலர்கள் அணிந்துவந்த சிகப்புத் தொப்பியையும், பெரியதாக இருந்த shoe-வையும், கழக ஆட்சியிலேதான் மாற்றப்பட்டது என்பதை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வீட்டு வசதி வாரியத்தின் சார்பாகக் கட்டப்பட்ட வீடுகளைப்பற்றி இங்கே சொல்லப்பட்டது. அம்மையார் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியில் 1991 முதல் 1996 வரை 48 கோடி ரூபாய் செலவில், 3,001 குடியிருப்புகள் கட்டப்பட்டன, காவலர்களுக்காக. 1996 முதல் 2000 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நான்கு ஆண்டுகளில் 190 கோடி ரூபாய் செலவில் 12,602 குடியிருப்புகள் கட்டப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறை நிர்வாக வசதிக்காக, பெரிய மாவட்டங்களைப் பிரித்து, இரண்டு காவல் மாவட்டங்களாக உருவாக்கியதும், கழக ஆட்சியிலேதான். 1973ஆம் ஆண்டு, முதன்முதலாக மகளிரை, காவல் துறையிலே சேர்ப்பதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆணையைப் பிறப்பித்ததும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி). அன்றைக்கு, திரு. அருள் அவர்கள் I.G.-ஆக இருந்த காலத்தில், இந்த அருமையான சாதனையை நிறைவேற்ற முடிந்தது. அதனுடைய தொடர்ச்சியாக, இன்றைக்கு ஆயிரக்கணக்கானவர்கள், அனைத்து மகளிர் காவல் இல்லங்கள் இவையெல்லாம் வந்து இருப்பதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இவையெல்லாம், ஒரு ஆட்சியினுடைய படிப்படியான வளர்ச்சி என்பதை யாரும் மறுக்க முடியாது; பாராட்டாமல் இருக்கவும் முடியாது. நீங்கள் செய்தீர்கள் என்பதற்காக, அந்த அம்மையார் செய்தார்கள் என்பதற்காக அதை, அருவருக்கிற, அதைப்பற்றித் தவறாக் கூறுகின்ற, தரங்கெட்டவன் அல்லன் நான் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவலர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, காவலர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டதும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி). தமிழ்நாடு காவல் துறை, இந்த ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், மாநிலத்திலே சட்டம்-ஒழுங்கை, எந்தவொரு தொய்வும் இல்லாமல், இப்போது பாதுகாத்து வருவதை அனைவரும் அறிவீர்கள். மாநிலம் முழுவதும், குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தி, ஆங்காங்கே குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ரவுடிகள், கொள்ளையர்கள், வழிப்பறிக் கொள்ளையர்கள் மற்றும்

திருடர்கள் ஆகியோரைக் கைது செய்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, பொது அமைதியைக் காவலர்கள் செம்மையாகப் பராமரித்து வருகின்றார்கள். இந்த நடவடிக்கைகளால், குற்றங்கள் நிகழ்வது மாநிலத்தில் வெகுவாகக் குறைந்து இருக்கிறது என்பதற்கும், சில ஒப்பீடுகளை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

2001-2006 வரையில், ஐந்து வருடத்தில், ஆதாயக் கொலைகள் அ.தி.மு.க. ஆட்சியில், 2001-ல் மே, ஜூன், ஜூலை ஆகிய மூன்றே மாதங்களில் 19 கொலைகள்; 2006, இப்போது மே, ஜூன், ஜூலையில் 17 கொலைகள். ஆதாயமற்ற வேறு கொலைகள், அ.தி.மு.க. ஆட்சியில் 2001-ல் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த மே, ஜூன், ஜூலை ஆகிய அந்த மூன்று மாதங்களில் 521; தி.மு.க. ஆட்சியில் இந்த மூன்று மாதங்களில் 344. கொள்ளைகள், அப்போது அ.தி.மு.க. ஆட்சியில் மூன்று மாதங்களில் 49; இப்போது 35. வழிப்பறி, அப்பொழுது 218' இப்பொழுது 112. கன்னக்களவு, இப்போது 863, இந்த மூன்று மாதங்களில். அன்றைக்கு அ.தி.மு.க. ஆட்சியில், அந்த மூன்று மாதங்களில் கைதட்டக்கூடிய அளவிற்கு 1,860. திருட்டுக்கள், தி.மு.க. ஆட்சியிலே 3,384; அ.தி.மு.க. ஆட்சியில் 4,958. வரதட்சணைக் கொடுமைகள், இப்பொழுது 31; அப்பொழுது 59. மகளிருக்கு எதிரானவை 311 குற்றங்கள்; மகளிருக்கு எதிரான குற்றங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் 522. கலவரங்கள், தி.மு.க. ஆட்சியில், இந்த மூன்று மாதங்களில் 476; அ.தி.மு.க. ஆட்சியில் அந்த மூன்று மாதங்களில், ஆட்சிக்கு வந்த மூன்றே மாதங்களில் 885. ஆகவே, இந்த குற்றங்கள் சற்றேற ஒன்றிரண்டு, பத்து, இருவது என்கின்ற அளவிற்கு வித்தியாசங்கள் இருப்பதால், இவற்றை வைத்தே இந்த ஆட்சியையும், அந்த ஆட்சியிலே இருக்கின்ற காவல் துறையினுடைய கடமைகளையும், அவர்களுடைய பணிகளையும் அளவிட்டுவிட முடியாது.

அந்தந்த நேரத்திற்கு, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, சிலபல நடக்கின்றன. அவற்றை வைத்தே, இதனால்தான் இது உயர்ந்த ஆட்சி, இது தாழ்ந்த ஆட்சி என்று கணக்கிட நான் தயாராக இல்லை. நான் அதைப்பற்றிக் கிண்டல் செய்யவும், கேலி செய்யவும் தயாராக இல்லை.

மாநிலத்திலே இந்த ஆண்டு இதுவரையில், 83 சதவிகிதம் சொத்து வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 72 சதவிகிதச் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. மதுவிலக்கு, சொத்து வழக்கு, ரவுடித்தனம் போன்றவற்றில் ஈடுபட்ட 242 நபர்கள், தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டிருக் கின்றார்கள். மேலும், கொலை, கொள்ளை மற்றும் பல வழக்குகளில் சம்பந்தப்பட்ட ரவுடிகள், உருண்டை ராஜா என்கிற ராஜன், நாகூர் மீரான், செந்தில்குமார் ஆகியோரைக் காவல் துறையினர் கைது செய்ய முயற்சித்தபோது, அவர்களைத் தாக்கிவிட்டு தப்பிக்க முயன்றதால், சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சிகளும், சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றுகிற வகையிலே நடத்தப்பட்டுள்ளன.

'குளித்தலை மீனாட்சி, குளித்தலை மீனாட்சி' என்ற பெயர் நாள்தோறும் பத்திரிகைகளிலே வந்து கொண்டிருந்தது. பரப்பரப்பாகப் பேசப்பட்ட, குளித்தலை ஆசிரியை மீனாட்சி யினுடைய வழக்கு, 19-10-2004 முதல் கண்டுபிடிக்கவே முடியாமல், மத்தியப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு, நிலுவையிலே இருந்து வந்தது. தமிழகக் காவல் துறைக்குச் சவாலாக இருந்துவந்த இந்த வழக்கை, இந்த அரசு பதவியேற்றபிறகு, குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினர்; தீவிரமாகப் புலன் விசாரணை செய்து, துப்புத் துலக்கி, 3-7-2006 அன்று, இக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளான குமார், சண்முகவேல் ஆகிய இருவரையும் கைது செய்துள்ளது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே. (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த முன்று மாதங்களில், கள்ளச் சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபட்டவர்கள்மீது, 25,266 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள்; 'எங்கள் ஆட்சியிலே குறைவாகத்தான் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன; உங்கள் ஆட்சியிலே அதிகமாக வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன' என்று. அதற்கு உட்பொருள் என்ன? நீங்கள் அந்த வழக்குகளையெல்லாம் பதிவு செய்யாமலே விட்டுவிட்டீர்கள்; நாங்கள் பதிவு செய்கிறோம் என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, இந்த ஒப்புநோக்கெல்லாம் தேவையில்லாத ஒப்புநோக்கு என்பதை

நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு இந்த நேரத்திலே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சுதந்திர தின விழா, எப்படி நடைபெறுமோ என்கின்ற அளவிற்கு பகீர், பகீர் என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு, இந்திய நாட்டு மக்கள் திரிந்து கொண்டிருந்த அந்த நேரத்தில், இந்தியாவிலே நடைபெற்ற சுதந்திர தின விழாவானாலும், இங்கே நடைபெற்ற சுதந்திர தின விழாவானாலும்,. அமைதியாக நடைபெற்றது என்றால், அதற்கு மக்கள் காட்டிய கட்டுப்பாடும், அந்தக் கட்டுப்பாட்டை, மேலும் மேலும் ஊக்கப் படுத்திய காவல் துறையினருடைய பணியும் என்பதை யாரும் மறக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

கண்டதேவியிலே தேரோட்டம் என்று வந்ததும், பத்திரிகைகளிலே எல்லாம் பரபரப்பான செய்திகள்; 'தேர் ஓடுமா, கலவரம் நடைபெறுமா' என்றெல்லாம். ஆனால், கண்டதேவி தேரோட்டம், மிக மிக அமைதியாக நடைபெற்றது என்றால், அதற்கு அங்குள்ள அதிகாரிகளும், காவல் துறை நண்பர்களும் காட்டிய அந்தக் கட்டுப்பாட்டு உணர்ச்சியும், அந்த ஒழுங்குபடுத்து கின்ற அந்தப் பணியும்தான் அதற்குக் காரணம் என்று சொன்னால், அதை யாரும் மறுக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

இப்பொழுது இலங்கையிலேயிருந்து ஒரு பதற்றமான சூழ்நிலையில், நேற்றுவரையிலே 12 ஆயிரம் பேர் அகதிகளாக - நான் அன்றைக்கே சொன்னேன்; அகதிகள் என்று சொல்வதற்கு வெட்கமாக இருக்கிறது என்று - தமிழர்கள் ஏதிலிகளாக வருகிறார்கள்; இருக்க இடமின்றி வருகின்றார்கள். அப்படி வருகின்றவர்களால், அவர்களுடைய கொதிப்பால், அவர்களுடைய கொந்தளிப்பால், அவர்களுடைய பரிதாபகரமான நிலைமையினால் ஏற்படுகின்ற ஆத்திரத்தால், எதுவும் ஏற்பட்டு விடாமல், அமைதியைக் காத்து, வருகின்றவர்களையும் வரவேற்று, அவர்களை பாதுகாப்பாக இங்கேயுள்ள முகாம்களிலே வைத்து, இன்றளவும் அவர்களை மகிழ்ச்சிகரமாக, ஆறுதலாக - மகிழ்ச்சிகரம் என்று சொல்லமுடியாது; - ஆறுதலாக வைத்திருக்கின்ற அந்த அரும்பணியை, நம்முடைய அதிகாரிகளும், மிக முக்கியமாக, காவல் துறை அதிகாரிகளும் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்

கிறார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏதோ அதிகாரிகளையெல்லாம் மாற்றிவிட்டோம் என்று எதிர்தரப்பிலேயிருந்து இன்னொரு குரல் கிளம்பியது; 'அதிகாரிகளை மாற்றுவதுதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய பணியாக இருக்கிறது' என்று.

2001-இல் 5 D.G.P.-க்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியிலே, ஒரே ஒரு D.G.P. தான் மாற்றப்பட்டார். அலெக்சாண்டர் இருந்தார், அவர் மாற்றப்பட்டார், அவர் மாற்றப்பட்டு வந்த D.G.P. முகர்ஜி இருக்கிறார், அவ்வளவுதான். எங்கே மாற்றிவிட்டோம்? எங்கோயோ பத்து D.G.P.-க்களை மாற்றிவிட்ட மாதிரி - மாற்றியது அவர்கள் - ஐந்து பேரை. ஐந்து பேர் மாற்றப்பட்டு - D.G.P.-யே ஐந்து பேர் மாற்றப்பட்ட ஒரு சூழ்நிலை அங்கே.

A.D.G.P. 21 பேர் அ.தி.மு.க. ஆட்சியிலே மாற்றப்பட்டிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியிலே 15 பேர்தான். I.G., 27 பேர் அ.தி.மு.க. ஆட்சியிலே மாற்றப்பட்டவர்கள்; தி.மு.க. ஆட்சியிலே 20 பேர்தான். S.P., அ.தி.மு.க. ஆட்சியிலே 86 பேர் மாற்றப்பட்டார்கள்; தி.மு.க. ஆட்சியிலே 92 பேர். இதிலே, ஒரு 6 பேர்; இந்த 6 பேரை மாற்றியதுகூட, பதவி உயர்வின் காரணமாக இந்த மாற்றம் transfer ஏற்பட்டது.

D.S.P. 323 பேர் அ.தி.மு.க. ஆட்சியிலே; 332 பேர், தி.மு.க. ஆட்சியிலே மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதிலே 70 பேர் பதவி உயர்வு காரணமாக மாற்றப்பட்டிருக்கின்றார்கள். Inspectors, 309 பேர் அ.தி.மு.க. ஆட்சியிலே; 280 பேர் தி.மு.க. ஆட்சியிலே. இவையெல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில், தி.மு.க. ஆட்சியில் பதவிப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட முதல், மூன்று மாதங்களில் செய்யப் பட்டவையாகும். ஏதோ தி.மு.க. ஆட்சியிலே வந்ததும் வராததுமாக எல்லோரையும் மாற்றிவிட்டோம், எல்லோரையும் மாற்றிவிட்டோம் என்று சொல்லுவதும், பத்திரிகைகளிலே அதை வெளியிடுவதும் ஒரு பரபரப்பை ஏற்படுத்துவதும்தான் இவர்களுடைய பிரச்சாரமாக இன்றைக்கு இருக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை.

ஒரே மாதத்தில் D.G.P.-யாக இருந்த ஆர். ராஜகோபாலனை மாற்றிவிட்டு, ரவீந்திரநாத் அவர்களை D.G.P.-யாக நியமனம் செய்து, அவரை விட்டு என்னைக் கைது செய்யச் சொல்லி, அந்தக் காரியம் முடிந்ததும், அவரை suspend செய்துவிட்டு, நெயில்வால் அவர்களை D.G.P.-யாக நியமித்து, அதன்பிறகு ராஜகோபாலனை D.G.P.-யாக நியமித்து, 'போன மச்சான் திரும்பி வந்தான்' என்பதைப்போல, போன அவர், திரும்ப அழைக்கப்பட்டார். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்குப்பிறகு, கோவிந்த் அவர்களை D.G.P.-யாக நியமித்து, பிறகு கோவிந் அவர்களையும் மாற்றிவிட்டு, அலெக்சாண்டரை D.G.P.-யாக நியமித்தார்கள் என்றால், அந்த ஹாஸ்ய வெடிகள் எல்லாம், தமிழக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, காவல் துறை நிர்வாகத்திலே வெடிக்கப்பட்டதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அலெக்சாண்டர், பெயருக்கு ஏற்ற உயரம், கம்பீரம், இதெல்லாம் உள்ளவர்தான். ஆனால், ஆட்சி மாறி, அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், அலெக்சாண்டர் எங்கே போனார்? இராமேசுவரம் கடற்கரைக்கு அனுப்பப்பட்டார். ஒரு நாற்காலிகூட கிடையாது; ஒரு மேசைகூட கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அவர் அங்கே மாற்றப்பட்டார். கடைசியாக அவருக்கு விமோசனம் ஏற்பட்டு, இரோமேசுவரத்திலே இருந்த காரணத்தாலோ, என்னவோ, (சிரிப்பு), விமோசனம் ஏற்பட்டு, கடைசியாக வந்து சேர்ந்தார். வந்த பிறகும் அவரை மாற்றிவிட்டார்கள், பிறகு கோவிந்த் அவர்களை அங்கே நியமித்தார்கள். பிறகு அவரும் மாற்றப்பட்டார். இப்படி D.G.P.-யினுடைய நிலைமைகளே இந்தளவுக்கு ஆயிற்று.

நம்முடைய நண்பர் சேகர் பாபு பேசும்போது சொன்னார், காவல் துறைக்காக, தி.மு.க. ஆட்சியில், 1996-2001ஆம் ஆண்டுகளில் செலவழிக்கப்பட்டது 3,988 கோடி ரூபாய்தான் என்றும், 2001-2006ஆம் ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் காவல் துறைக்காக 8,000 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டதாகவும் இங்கே கூறினார். கேட்பதற்கு நிரம்ப இனிமையாகத்தான் இருந்தது; பெருமையாகத்தான் இருந்தது. இன்னும்கூட கைதட்டியிருக்கலாம். அது அந்த அளவுக்கு இருந்தது. ஆனால் உண்மை என்னவென்றால்,

ஒவ்வொரு ஆண்டும், நிதிநிலை வளர்ந்து கொண்டே வரும்போது, ஒரு ஆட்சி ஐந்து ஆண்டுகளுக்குச் செலவழிப்பதைவிட, அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு அதிகமாகத்தான் இருக்கும். அப்படி அது அதிகமாக ஆகியிருக்கலாம். ஆனால், உதாரணமாக 1991-1996-இல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1,716 கோடி ரூபாய்தான் காவல் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை மறந்துவிடக்கூடாது.

அதற்கு அடுத்து வந்த ஐந்தாண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், காவல் துறைக்காகச் செலவழிக்கப் பட்ட தொகை, 3,988 கோடி ரூபாய். அதற்குப் பிறகு நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் 8,000 கோடி ரூபாய், காவல் துறைக்காக ஒதுக்கப்பட்டது என்று சேகர்பாபு கூறியது, எந்த ஆதாரத்தின் அடிப்படையிலே என்று எனக்குத் தெரியவில்லை. நிதித் துறையிலே நான் விசாரித்தவரையில், கடந்த ஐந்தாண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில், 8,000 கோடி ரூபாய் காவல் துறைக்காக ஒதுக்கப்படவில்லை என்றும், 6,159.20 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டது என்றும், நிதித் துறை வாயிலாக எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை, சேகர்பாபு அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். எனவே, நிதியொதுக்கீடு உயருவது, அது அவ்வப்பொழுது இருக்கின்ற நிலைமைகளைப் பொறுத்து, வளர்ச்சியைப் பொறுத்து, பொருளாதார நிலையைப் பொறுத்து, இதை ஒரு பெரிய சாதனையாக ஒப்பிட்டுக்காட்டக் கூடாது என்பதற்காக இதைச் சொல்கின்றேன்.

காவல் துறையின்மீது அம்மையார் அவர்களுக்கு, முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்குள்ள அன்பை, அருளை, இரக்கத்தை, அவர்களுக்காக அவர் காட்டிய, பொழிந்த கருணையைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துக்காட்டப்பட்டது. ஒன்றிரண்டை மாத்திரம், கோப்புகளைச் சான்றாக வைத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, 12-9-2003 அன்று ஓர் அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில், ஈரோடு மாவட்ட ஆயுதப் படைப் பிரிவில், காவலராகப் பணியாற்றிய,

மயில்சாமி என்பவர், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும்போது, திடீரென்று உடல் சுகவீனமுற்று, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 11-9-2003 அன்று உயிரிழந்தார். தமக்கு அது மிகுந்த வருத்தம் அளிப்பதாகத் தெரிவித்து, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டதாகத் தெரிவித்திருந்தார்.

எப்பொழுது? 12-9-2003-ல். ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன் என்று தெரிவித்திருந்தார். இந்த அறிக்கை, 'தினத்தந்தி'-யில் 13-9-2003 அன்று வெளிவந்தது. முதலமைச்சரின் இந்த அறிக்கையில், பாதுகாப்புப் பணியிலே என்று கூறப்பட்ட போதிலும், செல்வி ஜெயலலிதா அவர்களின் பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டிருந்தபோதுதான், அவர் உடல்நலம் பாதிக்கப் பட்டார். இந்தச் செய்தியும் அதேநாளில் ஏடுகளில் வெளிவந்தது. முதலமைச்சர் அம்மையார் அவர்கள், 12-9-2003 அன்று அறிவித்தவாறு, அந்த ஒரு இலட்சம் ரூபாய் மயில்சாமி குடும்பத்திற்கு வழங்கப்பட்டதா? இல்லை.

இதற்கான கோப்பு முதலமைச்சருடைய அறிவிப்புக்கு, 15 மாதங்களுக்குப் பிறகு 22-12-2004 அன்று முதலமைச்சர் அலுவலகத்திற்கு, ஒப்புதலுக்காக அனுப்பப்படுகிறது. 22-12-2004 அன்று அனுப்பப்பட்ட கோப்பு, முதலமைச்சர் அலுவலகத்திலே யிருந்து மீண்டும் திரும்ப வரவில்லை என்றும், இறந்துபோன மயில்சாமியின் தாயார், அந்தத் தொகையைக் கேட்டு வலியுறுத்துவதாகவும், கோப்பினைத் திரும்ப அனுப்பக் கேட்டு, ஒரு குறிப்பு முதலமைச்சர் அலுவலகத்திற்கு 14-09-2005 அன்று அனுப்பப்படுகிறது. இறந்தது 12-9-2003. முதலமைச்சர் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தது 12-9-2003. இதற்காக ஒப்புதல் கேட்டு, கோப்பு முதலமைச்சர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட தேதி 22-12-2004. அதாவது 15 மாதங்களுக்குப் பிறகு. இந்தக் கோப்பு, அதற்குப் பிறகு 9 மாத காலம் வரை திரும்பி வராத காரணத்தால், அந்தக் கோப்பை உடனடியாகத் திரும்ப அனுப்பக்கோரி, உள் துறை, முதலமைச்சர் அலுவலகத் திற்குக் குறிப்பு அனுப்பிய தேதி 14-9-2004. அதாவது 9 மாதத்திற்குப் பிறகு குறிப்பு அனுப்புகிறார்கள்.

இதற்குப் பிறகாவது, அந்தத் தொகை வழங்கப்பட்டதா; கோப்பு கையெழுத்திடப்பட்டதா என்றால், இல்லை. 24-1-2006 அன்று, மீண்டும் உள்துறையிலேயிருந்து ஒரு கோப்பு தயாரிக்கப் பட்டு, ஒரு இலட்சம் ரூபாய் பாதிக்கப்பட்டவருடைய குடும்பத்திற்கு வழங்க, ஒப்புதல் கோரி, முதலமைச்சர் அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது.

இறுதியாக, அந்தக் கோப்பில் நிதித் துறை செயலாளர், 27-1-2006 அன்று கையெழுத்திட்டு, முதலமைச்சர் அலுவலகத்திற்குக் கோப்பு அனுப்பப்பட்டபோதிலும், கடைசிவரை அந்தக் கோப்பில் அப்பொழுது முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் கையெழுத்திட்டுத் திரும்ப அனுப்பவேயில்லை.

தேர்தல் முடிந்தபிறகு அந்தக் கோப்பு, மீண்டும் ஒப்புதல் பெறாமல், துறைக்குத் திரும்ப அனுப்பப்பட்டது. தற்போது அந்தக் கோப்பு எனக்கு அனுப்பப்பட்டு, 11-6-2006 அன்று கையெழுத்திட்டு, அனுப்பியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). காவலர்களுக்குக் காட்டப்பட்ட கருணையின் அத்தியாயத்திலே இது ஒரு அத்தியாயம்.

ஜெயலலிதா ஆட்சியில், ஒவ்வொரு நாளும் ஏடுகளில் வரும் புகைப்படங்களைப் பார்த்திருப்பீர்கள். அதாவது மறைந்த போலீஸ்காரர் குடும்பத்திற்கு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார் என்பதற்கான புகைப்படம் அது. தற்போது என்னிடம் ஒரு கோப்பு வந்தது. என்ன கோப்பு தெரியுமா? அவர் முதலமைச்சராக இருந்தபொழுது, 153 காவல் துறையைச் சேர்ந்த நண்பர்களுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவதற்கான அனுமதி வழங்குகின்ற கோப்புதான் அது. நான் கேட்டேன்; அந்தக் காவல் துறை நண்பர்களுக்குத்தான் நிதியே வழங்கப்பட்டுவிட்டதே, எதற்காக இப்போது கோப்பு என்று கேட்டேன்.

அதற்கு அதிகாரிகள், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கோப்பில் கையெழுத்திடாமல், ஆணை பிறப்பிக்காத நிலையிலேயே,

2004-2005ஆம் ஆண்டுகளில் அத்தனை காலம் காவல் துறை நண்பர்களுக்கு நிதியை வழங்கியிருக்கிறார்கள். அதற்கான கோப்புகள்தான் 153 பேருக்கு நிதியுதவி வழங்குவதற்கான கோப்புகள், என்னிடம் பின்னேற்பு கையெழுத்து கேட்டு வந்துள்ளது. பின்னேற்பு, after issue.

153 கோப்புகளுக்கு பின்னேற்பு கையெழுத்து கேட்டு என்னிடத்திலே வந்தது. இவ்வாறு ஆணையே இல்லாமல், ஒருவருக்கு அல்ல; இருவருக்கு அல்ல; 153 பேருக்கு ஆணையே இல்லாமல், நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. இதைவிட ஒரு சோகச் சம்பவம் இருக்கமுடியுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). முதலமைச்சருடைய கையெழுத்தே இல்லாமல் நிதியுதவி வழங்கிய அற்புதம், கடந்த ஆட்சியைத் தவிர வேறு எந்த ஆட்சியில் நடைபெற முடியும்?

வீரப்பனைப்பற்றி சாங்கோபாங்கமாகப் பேசி முடித்து விட்டீர்கள். நான் அதற்குமேலே எதுவும் பேச விரும்பவில்லை. ஆனால், அதபற்றி சில வழக்குகள் என் மீதும், நம்முடைய 'நக்கீரன்' கோபால்மீதும், வேறு சிலர்மீதும் போடுவதற்காக, சில file-கள் தயாரிக்கப்பட்டு, அதிலே முதலமைச்சர் கையெழுத்திட்டு, அந்த வழக்குகளை உடனடியாகத் தொடர வேண்டுமென்று, அதுபற்றி விசாரணையெல்லாம் நடைபெற்று, யாரோ ஒருவர், ஒரு போலீஸ் அதிகாரி, கர்நாடகத்திலிருந்து வெளியிட்ட ஒரு புத்தகத்திலே உள்ள ஆதாரங்களையெல்லாம் வைத்து, எனக்குப் பணம் கொடுத்தார்கள், வீரப்பனைக் காப்பாற்றுவதற்காக என்றெல்லாம் சொல்லி, அது அப்பொழுதே, அந்த ஆட்சியிலேயே, அங்குள்ள ஒற்றர்களிடத்திலே அனுப்பப்பட்டு, அவர்கள் நன்கு ஆராய்ந்து, கடைசியாக இதில் எந்த ஆதாரமும் கிடையாது, எந்த சாட்சியமும் கிடையாது, யாரும் இதை ஒத்துக் கொள்ளவில்லை என்று அந்தக் கோப்பு திருப்பி அனுப்பப்பட்ட கதையையும், நான் உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இங்கே சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், தொடர்ந்து பழிவாங்கும் நடவடிக்கைகள் நடைபெறுவதாக நம்முடைய எதிர்க்கட்சித் துணைத்

தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எப்படித்தான் இந்த உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்ல அவருடைய உள்ளம் பண்பட்டதோ என எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

17-5-2001-ல் நீங்கள் ஆட்சிக்கு வந்ததும், தம்பி பரிதி இளம்வழுதி கைது 26-5-2001-ல் ஆற்காடு வீராசாமியினுடைய தம்பி தேவராஜ் கைது. 27-5-2001-ல் பரசுராமன், முன்னாள் M.P. கைது; ஒரு பாவமும் அறியாதவர் அவர், பார்த்தாலே பசு போல இருப்பார்; அவர் கைது. 30-5-2001-ல் புரசை ரங்கநாதன் கைது. மறைந்த தாமரைக்கனி கைது. 13-6-2001-ல் வளர்ப்பு மகன் சுதாகரன் கைது. 21-6-2001-ல் திருமாவளவன் கைது. 29-6-2001-ல், நள்ளிரவில், நான் கைது. தொடர்ந்து அதே நாளில், தம்பி முரசொலி மாறன் கைது. தம்பி பாலு கைது. மு. க. ஸ்டாலின் கைது. மதுரையில் பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் கைது, மு. க. அழகிரி கைது. சாலைப் பணியாளர்கள் பணி நீக்கம். அமைச்சர்கள் வீடு சோதனை. பொன்முடி கைது. 'நக்கீரன்' கோபால் கைது. ESSMA சட்டத்தின்படி, என்மீதும் எதிர்க்கட்சியினர் மீதும் வழக்கு. இளம் பெண் செரினா மீது வழக்கு. இவ்வளவும், ஆட்சிக்கு வந்த ஒரே மாதத்தில், இரண்டு மாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள். நாங்கள் இப்பொழுது பழிவாங்குகிறோம் என்று சொல்கின்றீர்களே, எனக்கு என்ன பதில் அளிக்கப் போகின்றீர்கள் என்று எனக்கே தெரியவில்லை.

ஒன்றைச் சொல்ல வேண்டும். ஏதோ சொல்லவேண்டும்; ஏதோ நான் பழைய வழக்கை எடுத்துவிட்டேன் என்று கருதக்கூடாது. டான்சி வழக்கு நடைபெற்று, அம்மையார் அவர்கள் அதிலே விடுதலை பெற்றுவிட்டார்கள். அது வேறு விஷயம். விடுதலை பெற்றுவிட்டார்கள். ஆனால், விடுதலை அளித்த நீதிபதி என்ன சொல்லியிருக்கிறார் என்றால், "நீங்கள் உங்கள் மனசாட்சியை நினைத்து, அதற்கேற்ப பரிகாரம் தேடிக் கொள்ளுங்கள்; டான்சி நிலத்தை அரசுக்குத் திரும்ப ஒப்படைத்து விடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்.

இப்பொழுது என்னவாயிற்று? அவர் சொன்னது, 24-11-2003; சொல்லி, அம்மையாரை விடுதலை செய்தார்கள். அவர்

விடுதலை செய்த அதே நாளில்தான் என் அருமை கண்மணி முரசொலி மாறன் இறந்த நாள். அந்த விடுதலை விழாவைக் கொண்டாட கோபாலபுரத்திலே என்னுடைய வீட்டைச் சுற்றி பட்டாசு வெடித்தார்கள். மாறன் அவர்களுடைய சாவு நடக்கும் பொழுதே, பட்டாசு வெடித்தார்கள். அதெல்லாம் வேறு விஷயம். அதெல்லாம் அரசியல் நாகரீகத்தினுடைய ஒரு அத்தியாயம். நான் அதற்காக கவலைப்படவில்லை.

நான் சொல்ல வருவது, 24-11-2003-ல் தீர்ப்பு. அந்த டான்சி நிலத்தை, அரசுக்குத் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்று, சொல்லப்பட்டு, 2003, 2004, 2005 முடிந்து, 2006-உம் வந்துவிட்டது. இதுவரையிலே, டான்சி நிலம் திரும்பவும் ஒப்படைக்கப்பட வில்லை. அதற்கு இப்போது புதிதாகச் சொல்லப்படுகின்ற காரணம், stamp-ஏ 3 கோடி ரூபாய்க்கு ஒட்டவேண்டுமாம். அதைத் திரும்ப ஒப்படைக்கவேண்டுமென்றால், வாங்கி விட்டார்கள், அரசாங்கத்திட மிருந்து; திரும்ப ஒப்படைப்பது என்றால், 3 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கு stamp ஒட்டவேண்டும். அதை ஒட்டுவதா, இல்லையா என்று முடிவு எடுக்கவில்லை. File போனால்தான் வராதே! முடிவு எடுத்தால் தானே ஆகும்? ஆகவே, முடிவு எடுக்கவில்லை. இப்போது கடைசியாக நாங்கள் ஒத்துக்கொண்டிருக்கின்றோம். அரசாங்க நிலம் அரசாங்கத்திடம் இருந்தால்போதும்; அதற்காக 3 கோடி ரூபாய் stamp ஒட்டித் தொலைக்கிறோம் என்று (மேசையைத் தட்டும் ஒலி). சொல்லியாகிவிட்டது.

ஒன்றே ஒன்று, வீரப்பனைப் பிடித்ததை, பெரிய வீரப் பிரதாபமாகச் சொல்லப்படுகிறது. நான் இல்லையென்று சொல்லவில்லை. வீரப்பனைப் பிடித்தது ஒரு நிகழ்ச்சி; தேவையான நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சிக்கு நானும் மகிழ்ச்சியடைந்தேன் என்பதை, பிடித்த விஜயகுமார் தெரிந்து வைத்திருக்கிறார். விடியற்காலையில் கொடைக்கானலில் உட்கார்ந்து நான் எழுதிக் கொண்டிருக்கின்றேன். எனக்கு telephone call வருகிறது, விஜயகுமார் அவர்களிடமிருந்து. அப்பொழுது அவர் அரசாங்கத்திலே வேலை பார்க்கவில்லை. நானும் அரசுப் பொறுப்பிலே இல்லை. நான் என்னவென்று கேட்டேன். "ஒன்றும் இல்லை Sir, வீரப்பனைப் பிடித்துவிட்டோம், சுட்டுவிட்டோம், கொன்றுவிட்டோம்" என்று சொன்னார்.

செய்தியை எனக்கு முதன்முதலாகச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன வந்தது? நாம் அந்த முயற்சியிலே கடந்த காலத்திலே ஈடுபட்டிருந்தோம் என்பதற்காக, ஒரு வெற்றிச் செய்தியாக அதை என்னிடத்திலே சொன்னார். நான் அதை மறுக்கவில்லை. ஆனால், வீரப்பனை நாங்கள் என்னவோ, நண்பராகக் கருதி வைத்திருந்ததைப்போலவும், இங்கே நண்பர்கள் பேசும்போது, அவர் ஏதோ எங்களுடைய கொள்கைப் பரப்புச் செயலாளராக, திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் பிரச்சாரத்திலே ஈடுபட்டவராக எல்லாம் இங்கே பேசினார்கள். திருத்தணி தம்பிகூட மிக வேகமாகத் தலையாட்டுகிறார், "ஆமாம் பேசினோம்" என்று. தலையாட்டுவீர்கள். இனிமேல் தலையாட்ட மாட்டீர்கள். ஆனால், நடந்தது என்ன? எப்படி வீரப்பனை நாங்கள் கருதினோம். வீரப்பனை நீங்கள் கருதுவதுபோல, நாங்கள் பெரிய கதாநாயகனாகக் கருதினோமா? அவர் பிடிக்கப்பட வேண்டியவர். அவரால் ஏற்படுகின்ற தொல்லைகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலையை எடுத்தவர்கள்தான் நாங்கள்.

அப்படி ஒரு நிலை எடுத்து, அவரை உயிரோடு பிடிக்க வேண்டும் என்பதற்காக அவரோடு நக்கீரன் கோபாலைவிட்டு பேச்சுவார்த்தை நடத்தச் சொல்லி, பேச்சுவார்த்தை நடத்தி, கடைசியாக வீரப்பன் ஒத்துக்கொண்டான், நான் 2 ஆண்டுக் காலம், 3 ஆண்டுக் காலம் சிறைச்சாலையில் இருக்கத் தயார் என்று சொல்லி, இப்போது சொல்கிறேன் உங்களுக்கு; பலருக்குத் தெரிந்திருக்கும். செங்கற்பட்டு பக்கத்திலே உள்ள, மதுராந்தகத் திற்கு அருகிலே உள்ள மரப்பாளையம் பங்களாவில், கருங்குழி பங்களாவில், அவரைச் சிறை வைப்பது என்றும், வழக்கை நடத்துவது என்றும், அவர்மீது உள்ள கொலை வழக்குகளை யெல்லாம் நடத்துவது என்றும், அந்த வழக்குகளுக்கு அவர் ஆஜராவதற்கு ஏற்றபடி, அந்தச் சிறையிலே அவரை வைத்திருப்பது என்றும், அதற்கு ஒத்துக்கொண்டு அவர் கைதாவது என்றும், ஒரு குறிப்பிட்ட தேதியிலே அவர் வந்து சரணடைவது என்றும், இவ்வளவு ஏற்பாடுகள் நடந்தபிறகு, என்னவாயிற்று? ஒரு போலீஸ் அதிகாரி, வீரப்பனுக்குச் செய்தி அனுப்பினார். 'நீ கருணாநிதியிடத்திலே வந்து சரணடைகிற அன்றைக்குச் சுட்டுக்

கொல்லப்படுவாய்! நானே சுடுவேன்' என்று செய்தி அனுப்பிய காரணத்தால், வீரப்பன் அன்றைக்கு வந்து சிக்கவில்லை.

சிக்கியிருந்தால், இன்றைக்கு உயிரோடு இருந்திருப்பார்; தண்டிக்கப்பட்டிருப்பார்; சிறைத் தண்டனைப் பெற்றிருப்பார்; ஆயுள் தண்டனைப் பெற்றிருப்பார்; ஒருவேளை மரண தண்டனைகூட பெற்றிருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால், ஏதோ நாங்கள் அவரைக் காப்பாற்றுவதற்காகவே, எங்களுடைய பிரச்சாரகராக வைத்துக் கொண்டதைப்போலப் பேசுகிறார்களே, என்ன சொன்னார் அவர்?

3-12-1994-இல் துணைக் கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் என்பவரை, வீரப்பன் கடத்திச் சென்றான். 3-9-1994, முதலிலே; முதலிலே இருந்த ஆட்சியிலே. அப்போது, வீரப்பன் போட்ட நிபந்தனை என்ன தெரியுமா? 'அதிரடி போலீஸை வாபஸ் பெறவேண்டும்; என்னைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும்; என்னுடைய அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும்; நான் சரணடைந்தால் என்மீது வழக்கே போடக்கூடாது' என்று அன்றைய நிலையிலே வீரப்பன் அந்தச் சர்க்காரைப் பார்த்துச் சொன்னான்.

கோவை மாவட்ட Collector 4-12-1994-இல், அவர் சொல்கிறார்; எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, தினத்தந்தி எல்லா பத்திரிகைகளிலும், எழுதியதைத்தான், அச்சேற்றியதைத்தான் நான் இங்கே படிக்கிறேன்.

கோவை மாவட்ட Collector, 4-12-1994-இல் சொல்கிறார்: 'வீரப்பனால் கடத்தப்பட்டவர்களுடைய உயிரைத்தான் காப்பாற்ற வேண்டும். எனவே, வீரப்பனைத் தேடும் பணி, வீரப்பனுடைய நிபந்தனையின்படி நிறுத்தப்பட்டு விட்டது'. நிறுத்திவிட்டார்கள்; ஏன்? அவர், கொள்கைப் பிரச்சாரகரா அங்கே? அந்தக் கட்சியினுடைய தேர்தல் பிரச்சாரத்திற்காக நிறுத்தினார்களா?

கோவை மாவட்ட Collector, 6-12-1994-இல் சொல்கிறார், 'வீரப்பனிடமிருந்து எனக்குச் செய்தி வந்துள்ளது; வீரப்பன் கேட்டுக் கொண்டபடி, வீரப்பனோ, அவரது பிரதிநிதியோ என்னைச் சந்திக்கலாம்'. அவரைச் சந்திக்கலாமாம்! யாரை?

Collector-ஐ. 'அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்று உறுதி அளிக்கப்படுகிறது; மேலும், பணயமாகப் பிடித்து வைக்கப் பட்டிருப்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லத் தடையும் இருக்காது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன' என்று கோவை Collector சொல்கிறார்.

நிருபர் கேட்கிறார், Collector-ஐ. 'வீரப்பனுடைய தூதுவன் வர, அரசுத் தரப்பில் வாகன வசதி செய்து கொடுக்கிறீர்களே! அந்த நிலையிலே, தூதுவன் துப்பாக்கியுடன் வந்து பேசுகிறானே! இது சரியா?' என்று கேட்கிறார் அந்த நிருபர். Collector சொல்கிறார்: 'அவர் சொந்தப் பாதுகாப்புக்குத் துப்பாக்கியோடு வருகிறார்; காரணம், அவர் காட்டுக்குள் போகிறார் வருகிறார். எனவே துப்பாக்கி ஏந்துகிறார். அது தவறில்லை' என்று கோவை மாவட்ட Collector சொல்கிறார்.

அவர்தான் அப்படிச் சொன்னார் என்றால், அப்போது தலைமைச் செயலாளர் யார் தெரியுமா? ஹரி பாஸ்கர். அவர் சொல்கிறார்: 'சிறையிலே உள்ள வீரப்பன் கோஷ்டியை, அவருடைய தளபதி பேபி பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்; இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது; இப்போது மிக முக்கியமான முன்னுரிமை, கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மீட்பதுதான்; விசேஷ அதிரடிப்படைகள் நிறுத்தப்பட்டுவிட்டன; அந்தப் படைகளை அனுப்பினால், வீரப்பன், போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் கொன்றுவிடக்கூடும்; ஆகவே, வீரப்பனைத் தேடும் படலத்தைத் தற்காலிகமாக ஒத்திவைத்திருக்கிறோம்' என்று ஹரி பாஸ்கர், தலைமைச் செயலாளர் சொல்கிறார் என்றால், இதற்கு என்ன பொருள்? ஆகவே, வீரப்பன் பிடிபட்டதிலே யாருக்கும், இந்த அவையிலே உள்ள யாருக்கும், எந்தவிதமான வருத்தமும் கிடையாது. மகிழ்ச்சியடைய மாட்டோம் என்று சொல்கின்ற யாரும் இங்கே இல்லை. ஆனால், இதை வேண்டு மென்றே ஒரு வீரப் பிரதாபமாகக் கருதிக்கொண்டு, மற்றவர்கள் மீது பழி சுமத்துகின்ற காரியத்திலே எதிர்க்கட்சிக்காரர்கள் ஈடுபடவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நான் முதலிலேயே இங்கே இரகளை நடந்து கொண்டிருக்கும்போதே நம்முடைய பேராசிரியரிடத்திலே சொன்னேன். நான் பேச நேரம் இருக்காது; நேரமும் தேவையில்லை; என்னுடைய அறிவிப்புகளை மாத்திரம் படித்து விட்டுப் போய்விடுகிறேன் என்றேன். இல்லை, இல்லை. இருந்து, பேசிவிட்டுச் செல்லுங்கள். அறிவிப்புகளை மாத்திரம் படித்துவிட்டுப் போகவேண்டாம் என்று சொன்னார். அவற்றை யெல்லாம் இப்போது படிக்கின்றேன்:

தமிழ்நாட்டிலே உள்ள 243 காவல் துறை உட்கோட்டங் களுள் (D.S.P. Office) வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 69 அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட முடிவு செய்திருக் கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி).

முதற்கட்டமாக, இந்த ஆண்டு பத்து அலுவலகமும், குடியிருப்பும் சேர்ந்த கட்டடங்கள், குடியாத்தம், ஆம்பூர், திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம் திருப்பத்தூர்), பெண்ணாகரம், அரூர், பொள்ளாச்சி, செய்யாறு, திருவாரூர், சமயநல்லூர், ஆலங்குளம் ஆகிய நகரங்களில் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறையை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ், ரூபாய் இரண்டு கோடி மதிப்பீட்டில் ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை இரண்டாம் அணிக்குக் கட்டடம், கிடங்கு, காவலர்கள் தங்குமிடம் ஆகியவற்றைக் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் காவலர்களுக்கான தங்கும் விடுதிகள் கட்ட முடிவெடுக்கப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த ஆண்டு, பின்வரும் 25 காவல் நிலையங்களுக்கான கட்டடங்களின் தரத்தை உயர்த்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவையாவன:

வாலாஜாபாத், வேப்பாக்கம், ஆரணி தாலுகா, செய்யாறு, ஓசூர்-சிப்காட், ஓசூர் நகரம், மதிகோண்பாளையம், பி1 பஜார்,

பல்லடம், பொள்ளாச்சி கிழக்கு, ஆண்டிமடம், வெள்ளியணை, லாலாபேட்டை, சமயபுரம், பி16 அண்ணா நகர், திருவில்லிப்புத்தூர் நகரம், திண்டுக்கல் வடக்கு நகரம், இளையான்குடி, களக்காடு, புதுக்கடை, சின்னமனூர், முரப்பநாடு, திருமங்கலம் நகரம், இராமநாதபுரம் நகரம், பாளையங்கோட்டை.

இஃதன்னியில், பின்வரும் 12 நகரக் காவல் நிலையங் களுக்கு ரூபாய் 318 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

வந்தவாசி அனைத்து மகளிர் காவல் நிலையம், போளூர் அனைத்து மகளிர் காவல் நிலையம், செங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையம், பல்லடம் அனைத்து மகளிர் காவல் நிலையம், அம்மையார் ஆரம்பித்தார் என்பதற்காக அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டாமல் விடவில்லை; கட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) பீளமேடு, சரவணப்பட்டி, திருவரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையம், லால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம், திருவாரூர் நகரம், சிலைமான், விக்கிரமங்கலம், எம். பாடுபட்டி.

பின்வரும் 14 ஊரகக் காவல் நிலையங்களுக்கு, ரூபாய் 224 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட முடிவு:

திருவண்ணாமலை தாலுகா காவல் நிலையம், தூக்கனம் பாக்கம், ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம், ஜெகதாப் பட்டினம், இலுப்பூர், அரும்பாவூர், குன்னம், வடக்காடு, ஆத்தூர், ராதாபுரம், சாத்தான்குளம், களியக்காவிளை, திருப்பூர் ஊரகம், நெகமம்.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஆயுதப் படைப் பிரிவிலுள்ள காவலர்களுக்கு தங்கும் விடுதி கட்டப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆயுதங்களை வைக்கும் பாதுகாப்பு அறையும், ஆயுதப் படை வளாகமும் ஒரு கோடி ரூபாய்ச் செலவில் அமைக்கப்படும்.

சென்னைப் பெருநகரில், வியாசர்பாடி, பழவந்தாங்கல், புழல் ஆகிய காவல் நிலையங்களுக்கு 190 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மருதம் வளாகத்திலுள்ள அதிரடிப்படை பள்ளி, ஆண் மற்றும் பெண் காவல் பணியாளர்களுக்கும், அதிரடிப்படைக்கும், ரூபாய் 144 இலட்சம் மதிப்பீட்டில் தனியான பயிற்சி மையம் ஒன்றும், தங்குமிடங்களும் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாடு தடய அறிவியல் துறைக்கு, ரூபாய் 228 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நவீன உபகரணங்கள் வாங்கப்படும்.

இந்த ஆண்டில் சென்னைப் பெருநகர் உள்ளிட்ட, தமிழ் நாடு காவல்துறையைக் கணினி மயப்படுத்தி, நவீன மயமாக்கும் திட்டத்திற்கு, 378 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

ஊர்க் காவல் படை பற்றி இங்கே பேசப்பட்டது. ஊட்டியிலே உள்ள ஊர்க் காவல்படை பயிற்சி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

சிவகங்கை, புதுக்கோட்டை, நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய நான்கு நகரங்களில் உள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

கடற்கரை காமராஜர் சாலையிலே, தற்போதுள்ள காவல் துறை இயக்குநர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே புதிதாகக் கூடுதல் கட்டடம் கட்டப்படும். அந்த காமராஜர் சாலையிலே உள்ள கட்டடம், D. G. P. Office - அதை இப்பொழுது பார்த்தாலும் அதற்கு வரவிருந்த ஆபத்தை நாமெல்லாம் மறக்க முடியாது. 1994ஆம் ஆண்டு, அந்தக் கட்டடத்தை இடிப்பதற்கு ஏலமே விட்டு விட்டார்கள். அப்படி ஏலம் விட்டு, அதை ஏலத்திலே எடுத்து, இடிப்பதற்கும் தொடங்கிவிட்டார்கள். நல்லவேளையாக, அந்த நேரம் பார்த்து, 1996-ல் அவர்கள் அதை இடித்துக் கொண்டிருக்கும் போதே, நம்முடைய ஆட்சி வந்தது. நம்முடைய ஆட்சி வந்தபோது, அருள் அவர்களும், இந்த ஆங்கில வேண்டுகோள் ஒன்றை விடுத்து, அந்த ஆங்கில வேண்டுகோளில் C. Subramaniam, former Governor of Maharashtra, Raveendran, former D. G. P., V.R. Lakshminarayanan, former D. G. P., Kamalhassan, film artiste, Ramanathan Krishan, Tennis Player, R.K. Narayan, Author, Semmangudi Srinivasa Iyer, Musician ஆகிய

இவர்களெல்லாம் கையெழுத்திட்டு, "அந்த அழகான கட்டடத்தை, உலகத்திலே வேறு எங்கும் இப்படிக் கடற்கரை ஓரத்திலே இல்லாத, எழில்மிகுந்த ஒரு கட்டடத்தை இடிக்கக்கூடாது; அது அப்படியே இருக்க வேண்டும்; அதைப் பழுதுபார்த்து அப்படியே வைத்திருங்கள்" என்று கடிதம் எழுதினார்கள்.

அதற்குப்பிறகு, அதைப் பற்றி விசாரித்தால், அதை ஒருவர் ஏலத்தில் எடுத்து, இடிக்க ஆரம்பித்துவிட்டார். அவரை அழைத்து, கெஞ்சிப் பேசி, அவர் அதைக் கேட்காமல் நீதிமன்றத்திற்குச் சென்று, நாங்கள் நீதிமன்றத்திலே சென்று வாதாடி, அந்த வழக்கை வாபஸ் பெறச்செய்து, அந்த இடத்தை இப்போது காப்பாற்றி வைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). அது தான் இன்றைக்கு சென்னை மாநகரத்தினுடைய தாஜ்மஹாலாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிற அந்த D. G. P. - யினுடைய Office என்பதை உங்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). அவ்வளவு அழகான கட்டடத்தை மீட்டு, இன்று நீங்களும், இங்கே சுற்றுலா வருகின்ற பயணிகளும் இரசிக்கத்தக்க அளவுக்கு மாற்றிய அந்தப் பெருமை, அதற்கு ஒத்துழைத்த பெருமை காவல்துறை நண்பர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உண்டு; இந்த விண்ணப்பம் எழுதியவர் களுக்கும் உண்டு என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, Commissioner Office 10 கோடி ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்படவுள்ளது.

வண்டலூர் அருகில் உள்ள ஊனமாஞ்சேரியில் தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகக் கட்டடத்திற்கான முதல் கட்டப் பணி ஜூன் மாதம் முடிவுறும், அதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

குழல் வாசிக்கும் காவலர்கள், 55 பேர் இரண்டாம் நிலைக் காவலர்களாக இருக்கிறார்கள்; அவர்கள், 1993-1994ஆம் ஆண்டில் முறையான இரண்டாம் நிலைக் காவலர்களாக மாற்றப்பட்டு, 10 ஆண்டுக் காலம் பணி முடித்த நிலையில், 31-12-2004 முதல் முதல்நிலைக் காவலர்களாகப் பதவித் தரம்

உயர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஒரு வேறுபாடு பாருங்கள். 1989ஆம் ஆண்டு - பீட்டர், நீங்களும் கொஞ்சம் சேர்ந்து பாருங்கள், ஒரு வேறுபாட்டை நோக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1989 ஆம் ஆண்டில் - தி. மு. க. ஆட்சியில் இரண்டாம் நிலைக் காவலர் களாகப் பணி நியமனம் செய்யப்பட்ட 94 பேர், தரம் உயர்த்தலுக்கு முழுத் தகுதி பெற்றிருந்தும், முன்னர் அளிக்கப்பட்ட கருத்துருவில் இவர்களது பெயர் விடுபட்டதால், அவர்களை முதல் நிலைக் காவலர்களாகத் தரம் உயர்த்துவதோடு, அவர்கள் 15 ஆண்டுக் காலப் பணியையும் முடித்துள்ளதால், அவர்களது பணியைத் தலைமைக் காவலர்களாக இப்போது உயர்த்தப்படுகிறார்கள். இடையிலே உயர்த்தப்படவில்லை, அவர்கள் தி.மு.கழக. ஆட்சியிலே இரண்டாம் நிலைக் காவலர்களாகப் பணி நியமனம் பெற்ற காரணத்தால் உயர்த்தப்படவில்லை. இதற்கு மாறாக, 1995ஆம் ஆண்டு அ. தி. மு. க. ஆட்சியில் பணியமர்த்தப்பட்ட 2,207 இரண்டாம் நிலைக் காவலர்கள், 2005ஆம் ஆண்டில் 10 ஆண்டுக் காலப் பணியை முடித்துள்ள நிலையில், இவர்கள் அனைவரையும் முதல் நிலைக் காவலர்களாக உயர்த்த, நாம் முடிவு செய்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தப் படத்தையும் பாருங்கள்; இந்தப் படத்தையும் பாருங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி). அதற்காகத்தான் சொல்கிறேன். அதனால், இவர்களுக்கு என்ன ஆதாயம் வருமென்றால், தற்போது 6,563 ரூபாய் மாத ஊதியம் பெற்றுவரும் இந்த இரண்டாம் நிலைக் காவலர்கள், முதல்நிலைக் காவலர்களாக பதவி உயர்வு பெற்று, மாத ஊதியமாக 6,842 ரூபாய் பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆயுதப் படையில் தலைமைக் காவலர்களாக 10 ஆண்டுக் காலம் பணி முடித்ததோடு, மொத்தம் 25 ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ள 42 தலைமைக் காவலர்களுக்கு, அ. தி. மு. க. ஆட்சி கொடுக்கத் தவறிய பதவி உயர்வினை, 1-6-2005 முதலே முன்தேதியிட்டு வழங்கி, அவர்களைச் சிறப்புச் சார்பு ஆய்வாளர்களாகப் பதவி உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்தின் தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துகளைக் குறைக்கவும், போக்குவரத்தைச் சீர்படுத்தி, விதிகளைச் செயல்படுத்துவதில் சிறப்பான கட்டுப்பாட்டைப் பராமரிக்கவும், பின்வரும் இடங்களில் ஒவ்வொன்றிலும் தலா ஓர் ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள், 4 தலைமைக் காவலர்கள், 4 முதுநிலைக் காவலர்கள், 12 இளநிலைக் காவலர்கள் மற்றும் ஓர் இரண்டாம் நிலை வாகன ஓட்டுநர் காவலர்களைக் கொண்ட 20 போக்குவரத்துக் காவல் நிலையங்களை 8.27 கோடி ரூபாய் செலவில் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

அந்தப் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப் படும் இடங்கள்: கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு, திருப்பெரும்புதூர், உளுந்தூர்பேட்டை, விக்கிரவாண்டி, பெருமாநல்லூர், சமயபுரம், திருமங்கலம், சமயநல்லூர், புதுச்சத்திரம், ஓமலூர், சங்ககிரி, ஆத்தூர், காங்கேயம், பவானி, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், வள்ளியூர், சாத்தூர், பெரம்பலூர். (மேசையைத் தட்டும் ஒலி).

தேசிய நெடுஞ்சாலைகள் அமைந்துள்ள காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, திண்டுக்கல், நெல்லை ஆகிய பத்து மாவட்டத் தலைநகரங் களிலும் சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நடமாடும் நீதி மன்றங்களைப் போல, ஒரு கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் நீதிமன்றங்கள் அமைப்பதற்கு முடிவெடுக்கப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

கோவை மாவட்டத்தில், கே. ஜி. சாவடி புறக்காவல் நிலையம், திருச்சி மாவட்டத்தில் கொள்ளிடம், மணிகண்டம் புறக்காவல் நிலையங்கள், விழுப்புரம் மாவட்டத்தில் மூங்கில் துறைப்பட்டு புறக்காவல் நிலையம், கடலூர் மாவட்டத்தில் நடுவீரன்பட்டு புறக்காவல் நிலையம், வேலூர் மாவட்டத்தில் மேல்பட்டி புறக்காவல் நிலையம், மதுரை மாவட்டத்தில் அப்பன் திருப்பதி புறக்காவல் நிலையம், தேனி மாவட்டத்தில் ஹைவேவிஸ் புறக்காவல் நிலையம், கன்னியாகுமரி மாவட்டத்தில் கொட்டியோடு புறக்காவல் நிலையம், திருச்சி இரயில்வே மண்டலத்தில் திருப்பூர் புறக்காவல் நிலையம் ஆகியவற்றைக்

காவல் நிலையங்களாக 2.96 கோடி ரூபாய்ச் செலவில் தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னை நகரத்தில் எம். எம். காலனியில் உள்ள எம். 2 காவல் நிலையத்தை, 4 ஆம் தரத்திலிருந்து 2 ஆம் தரக் காவல் நிலையமாகவும், மாங்காட்டில் உள்ள டி. 14 காவல் நிலையத்தை 4 ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தரக் காவல் நிலையமாகவும். (மேசையைத் தட்டும் ஒலி). குன்றத்தூரில் உள்ள டி. 13 காவல் நிலையத்தை 5 ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தரக் காவல் நிலையமாகவும், முத்தா புதுப்பேட்டையில் உள்ள டி. 8 காவல் நிலையத்தை 4 ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தரக் காவல் நிலையமாகவும், காஞ்சிபுரம் மாவட்டம் கல்பாக்கத்தில் உள்ள 4 ஆம் தரக் காவல் நிலையத்தை இரண்டாம் தரக் காவல் நிலையமாகவும், கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உள்ள 4 ஆம் தரக் காவல் நிலையத்தை மூன்றாம் தரக் காவல் நிலையமாகவும், தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் உள்ள 4 ஆம் தரக் காவல் நிலையத்தை மூன்றாம் தரக் காவல் நிலையமாகவும், மதுரை மாவட்டம் ஒத்தக்கடையில் உள்ள 5 ஆம் தரக் காவல் நிலையத்தை மூன்றாம் தரக் காவல் நிலையமாகவும், திருப்பரங்குன்றத்தில் உள்ள 4 ஆம் தரக் காவல் நிலையத்தை மூன்றாம் தரக் காவல் நிலையமாகவும், நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் உள்ள 5 ஆம் தரக் காவல் நிலையத்தை 4 ஆம் தரக் காவல் நிலையமாகவும், வேலூர் மாவட்டம் - ஞானசேகரன் அவர்களுடைய வேண்டுகோளையேற்று - சத்துவாச்சேரியில் உள்ள 4 ஆம் தரக் காவல் நிலையத்தை 2 ஆம் தரக் காவல் நிலையமாகவும் 4.18 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). சிவபுண்ணியம் சில காவல் நிலையங்கள் கேட்டிருக்கின்றார். அவையும் வழங்கப்படும் என்பதைக் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்நாடு காவல் துறையில் மொத்தம். . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தமிழ்நாடு காவல்துறையில் மொத்தம் 98,897 காவல் பணியாளர்கள் உள்ளனர். ஆனால், தற்போது 42,016 குடியிருப்புகள் உள்ளன. இதன்மூலம்

42.48 சதவிகித காவல் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, 56,881 குடியிருப்புகளைக் கட்டுவது அவசியமாகிறது. தற்போது 5,373 காவல் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. அரசுக் கொள்கையின்படி ஒவ்வொரு ஆண்டும் 3,000 குடியிருப்புகள் கட்டப்படும். அதுபோல் இந்த ஆண்டும் 3,000 குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்படும். இதற்கு 135 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி). இதற்குப் பணம் எங்கே என்று நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது; ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அவருக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சில முக்கியமான அறிவிப்புகளாகக் காவல்துறை நண்பர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய அறிவிப்புகளாக: இப்பொழுது, தலைமைக் காவலர் ஒருவர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பதவி உயர்வுபெற உச்ச வரம்பு வயது 53 என்றும், தலைமைக் காவலர் ஆயுதப் படையில் இருந்து உதவி ஆய்வாளராக பதவி உயர்வுபெற வயது உச்ச வரம்பு 55 என்றும், உதவி ஆய்வாளர் பதவியிலிருந்து காவல் நிலைய ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்ச வரம்பு 55 என்றும், ஆய்வாளர் பதவியிலிருந்து துணைக் கண்காணிப் பாளராகப் பதவி உயர்வுபெற உச்ச வரம்பு வயது 55 என்றும், தற்போது நிபந்தனைகள் உள்ளதால் பெரும்பாலானவர்கள் பதவி உயர்வு பெற முடியாமல் ஓய்வுபெற வேண்டிய நிலைமை உள்ளது.

அரசுப் பணிகள் பெரும்பாலானவற்றில் இவ்வாறு வயது உச்ச வரம்பு இல்லாத நிலை உள்ளதால், காவல்துறையினர் இந்த நிபந்தனை காரணமாக பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே பதவி உயர்வுபெற, தற்போது இவர்களுக்குள்ள இந்த வயது உச்ச வரம்பு அறவே நீக்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த முடிவின் காரணமாக, உடனடியாக 450 காவல்துறை அதிகாரிகள் மற்றும் சார்நிலைக் காவலர்கள் பயனடைவார்கள். வரும் ஆண்டுகளில் தொடர்ந்து பல்லாயிரவர் பயனடைவார்கள்.

தமிழ்நாடு காவல்துறை சார்புப் பணி சிறப்பு விதியின்படி, சரகப் பதவி உயர்வுக்கான வாரியம், எழுத்துத் தேர்வையும், எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு உடற்பயிற்சித் தேர்வுகள் உள்ளிட்ட நேரடித் தேர்வுகளையும் நடத்தி, அதில் தேர்ச்சி பெற்ற தலைமைக் காவலர்களை, உதவி ஆய்வாளர்களாக - உள்ளூர் மற்றும் ஆயுதப் படை - பதவி உயர்வு அளிக்க தேர்ந்தெடுக்கும் முறை தற்போது உள்ளது.

காவல் துறையிலே உதவி ஆய்வாளர் பணிக்குக் கீழே உள்ள பதவிகளுக்கோ, உதவி ஆய்வாளர் பணிக்கு மேலுள்ள பதவிகளுக்கோ, இத்தகைய பதவி உயர்வுக்கான தேர்வுகள் நடத்தப்படுவதில்லை. எனவே, தலைமைக் காவலர்கள் மட்டுமே பதவி உயர்வுக்கான தேர்வுகளைத் தற்போது எழுதி வருகின்றார்கள். இத்தகைய போக்கு, தலைமைக் காவலர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது. பணிமூப்பு மற்றும் பணிப் பதிவேடுகளை ஆதாரமாகக் கொண்டு, இதரப் பதவிகளுக்குப் பதவி உயர்வு அளிப்பதைப்போல, இவர்களுக்கும் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை தலைமைக் காவலர்களிடையே நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்த அரசு இதை ஏற்று, இனி தலைமைக் காவலர் பதவியிலிருந்து உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வுக்கு நடைபெறும் தேர்வு முறையை இரத்து செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பத்தாயிரம் இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதிலே முதற்கட்டமாக இந்த ஆண்டு 5,000 பேர் தேர்வு செய்யப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் காவலர் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்குப் பொருளாதாரப் 140 பயன்கள் கிடைக்கும்வகையில், அவர்களுக்கு ஏற்கெனவே கழக ஆட்சியிலே நடைமுறையில் இருந்ததுபோல், தமிழ்நாடு சிறப்புக் காவலர் பெண்கள் பனியன் தயாரிப்போர் தொழில் கூட்டுறவுச்

சங்கத்திலிருந்து நேரடியாக விலைப்புள்ளிகள் பெற்று பனியன்களைத் தயாரித்து வழங்கிட, அந்தச் சங்கத்திற்கு ஆணைகள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதுவரை தமிழ்நாடு ஆயுதப் படையிலே பணியாற்றும் காவலர்களுக்கு விடுப்புப் பயணச் சலுகை - Leave Travel Concession - கிடையாது. இனி, அவர்களுக்குக் காவல்துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு இருப்பதைப்போல, விடுப்புப் பயணச் சலுகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

இடர்நிதி என்று அவர்களுக்கு ஒரு சிறப்பு நிதி வழங்கப் படுகிறது. இடர்களையும் நிதி. இடருகிற நேரத்திலே பயன்படுத்திக்கொள்வதற்கான நிதி. அதை இடர்ப்படி என்றும் சொல்வார்கள். இடர்ப்படியோ அல்லது இடரும்படியோ தெரியாது. அந்த இடர்ப்படியை, இப்போது 60 ரூபாயாக கொடுத்து வருகிறோம். அது இனிமேல் 120 ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே, துணைக் கண்காணிப்பாளர்களும், கூடுதல் கண்காணிப்பாளர்களும் தற்போது இடர்ப்படியாக பெற்றுவரும் ரூபாய் 70 என்பதை, இனி 140 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த உயர்வு 1-9-2006 முதல் நடைமுறைக்கு வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையிலே இடர்ப்படியை உயர்த்துவது என்று முடிவெடுக்கப்பட்டதைப் போலவே, தீயணைப்புத் துறையிலும் தீயணைப்போருக்கு - Fireman - தற்போதுள்ள இடர்ப்படி, மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய் என்பதை, இனி 120 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி). மாவட்ட தீயணைப்புத் துறை அலுவலருக்கு வழங்கப்படும் 60 என்பதை 140 ரூபாயாக உயர்த்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இதுவும் 1-9-2006 முதல் அமலுக்கு வரும்.

முதல் தகவல் அறிக்கைக்கான படிவங்களை அச்சேற்று வதிலும், விநியோகிப்பதிலும் சரியான நெறிமுறைகள் கையாளப் படாத காரணத்தால், பல்வேறு முறைகேடுகள் ஏற்பட்டுள்ளன. அதைக் கருத்தில்கொண்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கான படிவங்களை, அரசு அச்சகங்களில் மட்டுமே அச்சேற்ற வேண்டுமென்றும், (மேசையைத் தட்டும் ஒலி). தனியார் அச்சகங்களில் அச்சேற்றும் நடைமுறையை, அறவே ஒழிக்க வேண்டுமென்றும், அரசு அச்சகங்களில் படிவங்களை அச்சேற்றும்போதுகூட, பரிசுச் சீட்டுக்களை அச்சேற்றியபோது மேற்கொள்ளப்பட பாதுகாப்பு முறைகள் அனைத்தையும் கையாண்டு அச்சேற்றப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் நிலையங்களில் முதல் தகவல் அறிக்கையைப் பதிவுசெய்வது பற்றி ஒரு முக்கியமான அறிவிப்பு. சம்பவம் எந்தக் காவல் நிலைய எல்லையிலே நடைபெற்றது என்பதைக் கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல் – இப்போது, இங்கிருந்து போய் மயிலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனிலே போய் புகார் கொடுத்தால், அதை வாங்கிப் பார்த்துவிட்டு, "இது மயிலாப்பூர் அல்ல; திருவல்லிக்கேணிக்குப் போ" என்று சொல்வார்கள். அது இல்லாமல் – வழக்குப் பதிவு செய்யத்தக்க குற்றம் நிகழ்ந்துள்ளதாக, பொதுமக்களிடமிருந்து புகார்கள் பெறப்படும் போது, நிலைய அதிகாரி, முதல் தகவல் அறிக்கையை அங்கேயே பதிவுசெய்து, தக்க, சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தச் சம்பவம் தங்கள் எல்லையில் நடைபெறவில்லை என்ற காரணத்தைக்கூறி, புகார் மனுவினை ஏற்க மறுக்கக்கூடாது. பிற காவல் நிலைய எல்லைக்குள் குற்றம் நிகழ்ந்துள்ளதாகப் புகாரில் குறிப்பிடப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அந்த முதல் தகவல் அறிக்கை மாற்றம் செய்யப்படும். வழக்குப் பதிவு செய்ய அவசியமில்லாத புகார்கள் அளிக்கப்படும்போது, அவை விசாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தால் தீர்வு காணப்பட வேண்டும்.

தேர்தல் அறிக்கையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டுள்ள மூன்றாவது போலீஸ் கமிஷன் தலைவராக ஒய்வுபெற்ற ஐ. ஏ. எஸ். அதிகாரி ஆர். பூர்ணலிங்கம் அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி). போலீஸ் கமிஷன் துணைத் தலைவராக, சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் டி. சுதர்சனம் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி). உறுப்பினர்களாக ஒய்வுபெற்ற டி. ஜி. பி. திரு. பி. காளிமுத்து அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி). மற்றும் ஒய்வுபெற்ற சிறைத்துறை டி. ஐ. ஜி. திரு. ஜி. இராமச்சந்திரன் அவர்களையும், உறுப்பினர் - செயலாளராக திரு. இராமானுஜம், ஐ. பி. எஸ். அவர்களையும் நியமிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொரு முக்கிய அறிவிப்பு. வளர்ந்துவரும் சென்னை மாநகரத்தின் தேவைக்கேற்ப போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கையாளவும், சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கவும், வளர்ந்த நாடுகளில் உள்ளதுபோல, சமீபத்திய உயர் தொழில்நுட்பச் சாதனங்களை, Latest Hi-tech Gadgets கொண்ட நடமாடும் கண்காணிப்புப் பிரிவுகளைக் காவல்துறையில் ஏற்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. அதையொட்டி, இருங்காட்டுக் கோட்டையில் உள்ள ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் நல்லெண்ண அடிப்படையில் - as a measure of goodwill - சென்னைப் பெருநகரக் காவல்துறையின் பயன்பாட்டுக்கென குளிர்சாதன வசதியுடன் கூடிய 100 Accent ரகக் கார்களை நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இது ஒரு முன்னோடித் திட்டமாக, சென்னை மாநகரில் அறிமுகப்படுத்தி செயல்படுத்தப்படும். இந்தியாவிலேயே முன்மாதிரியாக செயல்படுத்தவிருக்கும் இத்திட்டம் வெற்றி அடைந்த பிறகு, தமிழகத்தின் மற்ற மாநகரப் பகுதிகளிலும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

ஆயத்தீர்வை பற்றி நம்முடைய அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சில கேள்விகளை எழுப்பினார். அதற்கு என்னுடைய துணைத் தலைவர் அவர்கள், சில விளக்கங்களைத்

தந்தார். அந்த விளக்கங்கள் திருப்திகரமானதா இல்லையா என்பதை விரைவில் தெரிந்துகொள்கின்ற அளவிற்கு சில ஆய்வுகள் இந்த அரசின் சார்பில் நடத்தப்படும் என்ற உறுதியை, பீட்டர் அல்போன்ஸ் போன்றவர்களுக்குத் தெரிவித்து, அந்தப் பணி தொடரும் என்பதையும் கூறி, எங்கே தவறு நடந்தாலும், அந்தத் தவறுகளை - அந்த வீரப்பன் விவகாரத்தில் காவல்துறை அதிகாரி காளிமுத்துக்கு கடந்த ஆட்சியில் மற்றவர்களுக்கு வழங்கப்பட்டதைப்போல வீட்டுமனை, பணமுடிப்பு வழங்கவில்லை என்று செய்திகள் எனக்கு அனுப்பப்படுகிறது. நேற்றே சொல்லிவிட்டேன். நான் வந்து வழங்கவேண்டும் என்று விட்டுவிட்டார்கள் போல் தெரிகிறது; அது வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நேற்று, நம்முடைய விஜயகாந்த் பேசும்போது, அறிஞர் அண்ணா அவர்களைக் குறிப்பிட்டு அண்ணா அவர்கள் சொந்தக் கட்சிக்காரனையே, சில அலுவல்களிலே இருந்தவர்கள் தவறு செய்தபோது நடவடிக்கை எடுத்தார் என்று குறிப்பிட்டார்கள். நானும் அண்ணாவின் தம்பிதான். சொந்தக் கட்சிக்காரர்கள் அல்ல; சென்னை மாநகராட்சி மன்றத்தின் மேயரையே கைது செய்தவன் நான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). Muster roll என்று ஒரு வழக்கு வந்தது. அந்த Muster roll வழக்கில், எல்லாக் கட்சியினரும் இருந்தார்கள். அனைத்துக் கட்சியினரும் இருந்தார்கள். அப்போது, இதே அவையில் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், அந்த Muster roll ஊழலைப்பற்றிப் பேசினார்கள். பேசியவுடனேயே எழுந்து, "நடவடிக்கை எடுக்கப்படும்; இப்போதே அறிவிக்கிறேன்; மாநகராட்சி மன்றம் கலைக்கப்படுகிறது; அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மேயர் இருந்தாலும்கூட கலைக்கப்படுகிறது" என்று அறிவித்து, மறுநாளே மேயர் கைது செய்யப்பட்டதும், மாநகராட்சி மன்றத்தினுடைய உறுப்பினர்கள், முக்கியமான உறுப்பினர்கள், யார், யார் சென்னையிலே மாநகராட்சி மன்றம் உருவாவதற்குப் பாடுபட்டார்களோ, பணியாற்றினார்களோ அவர்களையெல்லாம் தயவுதாட்சண்யம் இல்லாமல், அவர்களை யெல்லாம் கைது செய்த ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல தஞ்சையிலே ஒருவர், என்னுடைய ஆருயிர் நண்பர், உயிர் நண்பர், ஒரு வழக்கறிஞர். அவர் வங்கியில் செய்த தவறுக்காக, அவர் கைது செய்யப்பட்டு - வக்கீல் அவர் - அவருடைய 'சன்னத்' எல்லாம் பிடுங்கப்படுகிற அளவுக்கு தண்டிக்கப்பட்டார் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, யாராக இருந்தாலும், எவராக இருந்தாலும் அவர்கள்மீது சட்டம் பாய்வதற்கு அஞ்சாது, தயங்காது, நீதி நிலைநாட்டப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே இந்த மானியக் கோரிக்கையிலே என்னுடைய முடிவுரையாக எடுத்துக்கூறி, உங்களுடைய அன்பான கருத்துகளுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்து, நன்றி தெரிவித்ததை ஏற்றுக்கொள்வதற்கு அடையாளமாக வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. தி. வேல்முருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்; ஆயிரத்துச் சொச்சம்பேர். அதிலே 98 காவலர்களுக்கு, சட்டம்-ஒழுங்கைப் பார்க்கின்ற தாலுகா காவல் நிலையத்தில் பணியுறுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்கள், அந்த 98 உதவி ஆய்வாளர் களையும், தாலுகா காவல் நிலையத்தில் பணி அமர்த்துவதற்கு ஆவன செய்வார்களா என்பதோடு, மாண்புமிகு தமிழகத் தினுடைய முதல்வர் தலைவர் அவர்களிடத்தில் ஆளுநர் உரையின்மீதும், நிதிநிலை அறிக்கையின்மீதும் தொடர்ந்து ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

சிறைச்சாலைகளில் கடந்த 15, 20 ஆண்டுக்காலமாக விடுதலை பெறாமல் இருந்து வருகிறார்கள். கடந்த மாதம்கூட பக்கத்து மாநிலமான ஆந்திர மாநிலத்தில் 309 நபர்களை விடுதலை செய்திருக்கிறார்கள். நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்கள், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் வருகின்ற காரணத்தினால், அந்த அப்பாவிகளை, சிறைச்சாலையில்

வாடுகின்றவர்களை, 10 ஆண்டுகளாக சிறைச்சாலையில் நல்ல முறையில் முடித்தவர்களை, விடுதலை செய்வார்களா என்பதை ஆவலோடு எதிர்பார்ப்பதோடு, அவர்கள் பரோலில் வெளியில் வருகின்ற அதையும் தண்டனை காலமாக எடுத்துக் கொண்டு, விடுதலை செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : வேல்முருகன் எங்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையோடு, 10 ஆண்டு சிறைவாசம் முடித்த கைதிகள், விடுதலை செய்யப்படுவார்கள், அண்ணா பிறந்த நாளில் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உரை : 22 நாள் : 26.04.2007

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையைத் தொடங்குவதற்கு முன்பு ஒரு பசுமையான நினைவை இங்கே என் நெஞ்சிலும், அவையோர் நெஞ்சிலும் படர விடுகின்றேன். 12-7-1962 அன்று இதே மன்றத்தில் காவல்துறை மான்யத்தில் அன்றைய எதிர்க்கட்சியின் துணைத் தலைவராக இருந்த நான் ஆற்றிய உரையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்போது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்தார். அன்று நான் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது, சொல்லப்போனால் முதல் பகுதி இது, தொடக்கப் பகுதி இது.

> "நமது போலீசார் ஒரு பெரிய தியாகப் பரம்பரையை நம் நாட்டில் உருவாக்கி வருகிறவர்கள். பொதுவாக, தமிழகத்தை பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமானால் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இந்திய துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நமது மாநிலத்தில் இருக்கின்ற போலீசார் தங்களுடைய கடமையை ஆற்றி வருகிறார்கள் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது."

மறந்துவிடக்கூடாது அப்போது நான் எதிர்க்கட்சியின் துணைத் தலைவர். எதிர்க்கட்சியின் துணைத்தலைவர் ஆளுங்கட்சி வரிசையிலே பெருந்தலைவர் காமராசர் போன்றவர்கள் அமர்ந்திருந்தபோது போலீசாரைப்பற்றி கூறிய வாசகம் இது:

> "கடும் மழையிலும் கொடிய வெயிலிலும், நள்ளிரவிலும், தங்கள் பணியினை, கொலைகாரர்கள் மத்தியிலும், கள்வர்கள் இடையிலேயும், தங்கள் உயிரைப்பற்றிய கவலையில்லாமல்

மரணத்தை துச்சமாக மதித்து கடுமையாக போரிடுகின்ற அந்த தியாகச்சீலர்களை தி.மு.கழகம் பாராட்டுவதற்கு கடமைப் பட்டிருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு உழைப்பின் திறமையை உணர்ந்து அவர்களுக்கு மேலும் பல சலுகைகள் வழங்கவேண்டும் என்று கேட்பதுதான் இந்த வெட்டுப் பிரேரணை மீதும் இந்த மான்யத்தின் மீதும் நான் எழுப்புகின்ற குரல் என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்."

தலைவர் அவர்களே, நேற்றைக்கு வெட்டுத் தீர்மானத்தைப் பற்றி பெரிய பிரச்சினை இங்கே வந்தது. அதனைப் பற்றி விளக்கம் அளிக்கும் போது ஒன்றைச் சொல்ல விட்டுவிட்டார்கள். வெட்டுப் பிரேரணையினுடைய வாசகம் எப்படி இருக்க வேண்டும் என்றால் கல்வித் துறைக்கு அல்லது நீர்ப்பாசனத் துறைக்கு 2000 கோடி என்று ஒதுக்கி இருப்பதிலிருந்து 100 ரூபாயை வெட்ட வேண்டும் என்றுதான் தீர்மானம் கொடுப்பவர்கள் கொடுப்பார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் கூட்டவேண்டும் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் வெட்டுத் தீர்மானம் 100 ரூபாயை குறைக்க வேண்டும் என்று இருக்கும். அப்படிச் சொன்னால்தான் அவர்களுக்குப் பேச வாய்ப்பு. கூட்ட வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக குறைக்க வேண்டும் என்று கேட்டு – அந்த வெட்டுத் தீர்மானத்தின் மீதுதான் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுவார்கள். ஆனால் பேசும்பொழுது இங்கே நம்முடைய எதிர்க்கட்சியினுடைய தலைவர்களும் மற்றும் தோழமைக்கட்சிகளுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துரைத்ததைப்போல இன்னும் காவல்துறையினருக்கு தேவை தேவை தேவை, இவைகளை எல்லாம் தாருங்கள் என்று கேட்பதைப் போலத்தான் கேட்பார்கள். அப்படிப்பட்ட அந்த நிகழ்விலேதான் நான் இந்த அவையில் எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவராக நின்று பெருந்தலைவர் காமராஜருக்கு முன்பு, பக்தவத்சலனாருக்கு முன்பு, சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு முன்பு, காவல்துறையினருக்கு இன்னும் பல வசதி வாய்ப்புகளை செய்திட வேண்டும் என்று கேட்டேன்.

இங்கே நம்முடைய ஜி. கே. மணி அவர்கள் பேசும்போது அவர்களுக்கு சம்பளத்தையாவது உயர்த்திக் கொடுக்கக் கூடாதா? என்ன செய்யப்போகிறீர்கள். இப்போதாவது, அவர்கள் ஏங்கித்

தவிக்கிறார்களே என்று சொன்னார். அவர்கள் ஏங்கித் தவித்தார்களோ இல்லையோ அவர்களுக்காக ஜி. கே. மணி இங்கே ஏங்கித் தவித்த காட்சியை நான் கண்டேன், எல்லோரும் கண்டார்கள். ஆனால் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். 1967க்கு பிறகு தி. மு. கழக ஆட்சி உருவாகி நம்முடைய வாய்ப்புக் குறைவின் காரணமாக பேரறிஞர் அண்ணா அவர்களை நாம் இழந்து அதற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்க வேண்டிய சூழ்நிலை உருவாகி, ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன் காவல்துறையினருடைய கஷ்ட, நஷ்டங்களை எண்ணிப்பார்த்து அவர்களுக்கு என்ன செய்யலாம் என்று யோசித்து இந்தியாவிலேயே முதல்முதலாக போலீஸ் கமிஷன் அமைத்த மாநிலம் தி.மு.கழக ஆட்சி நடந்த இந்த மாநிலம்தான் (பலத்த மேசையைத் தட்டும் ஒலி).

ஒரு காரியத்தைச் செய்தவர்கள் மார்தட்டிக் கொள்வதிலே தவறில்லை. அந்த வகையிலேதான் முதன் முதலாக தமிழகத்தில் காவல்துறைக்காக ஒரு கமிஷன் - கோபாலசாமி அவர்களுடைய தலைமையில் அவர் ஐ.ஏ.எஸ். அல்ல - ஐ.சி.எஸ். அவருடைய தலைமையில் அமைத்து அதனுடைய பரிந்துரைகளை நிறைவேற்றினோம். சரியாக சொல்லவேண்டுமேயானால் அப்பொழுது காவலர்களின் மாத சம்பளம் 65 ரூபாய். அந்த முதல் காவல்துறை கமிஷன் செய்த சிபாரிசின்படி மாத சம்பளம் 200 ரூபாயாக உயர்ந்தது. அதற்குப் பிறகு இன்னொரு போலீஸ் கமிஷன் - போலீஸ் கமிஷன் - நான் போட்டதெல்லாம் போலீஸ் கமிஷன்தான். நான் வேறு கமிஷனை நாடிப் போகவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). அப்படிப்பட்ட இரண்டாவது கமிஷனில் 200 ரூபாய் என்பது 500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு மத்திய அரசு ஊழியர்களுக்கு ஐந்தாவது ஊதிய குழு வாயிலாக ஊதியங்களை உயர்த்தியபோது 65 ரூபாய் மாத சம்பளத்தில் இருந்த காவலர்களுக்கு இன்றைய தினம் மாதம் 6500 ரூபாய் கிடைக்கிறது என்றால், இது தி.மு.கழக ஆட்சியிலே எடுத்த முதல் முயற்சியின் விளைவு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல்வாதிகளாக இருப்பவர்கள் வேண்டுமானால் அரசியலுக்காக ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் மனச்சாட்சி உள்ள காவல்துறை நண்பர்கள் நிச்சயமாக இதை உணருவார்கள். உணர்ந்து நன்றி பாராட்டுவார்கள்.

இங்கே நம்முடைய நண்பர் ஜெயக்குமார் அவர்கள் பேசும்போது சொன்னார். காவலர்களுக்கு குடியிருப்பு "அம்மா" ஆட்சியில் அதாவது அ.தி.மு.க. ஆட்சியில், கட்டித் தந்ததைப் போல் நீங்கள் கட்டித்தரவில்லை என்று சொன்னார். எனக்கு இதிலே யார் காவலர்களுக்கு அதிகம் செய்தார்கள் யார் செய்ய வில்லை என்ற போட்டா போட்டிக்கு நான் வரவும் இல்லை. அதிலே ஜெயகுமாரோடு எனக்கு அல்லது செங்கோட்டைய னோடு எனக்கு வம்பு தும்பும் இல்லை.

இரண்டுபேரும் எதைச் சொல்கிறோம்? ஒருவரைக் குறைசொல்லி - ஆளுங்கட்சி எதிர்க்கட்சியையும், எதிர்க் கட்சி ஆளுங்கட்சியையும் குறைசொல்லி இன்னும் நிரம்ப செய்ய வேண்டும் என்று அந்த லாபத்தை நாம் இரண்டுபேரும் சேர்ந்து கொடுப்பது பாதிக்கப்பட்டிருக்கின்ற காவல்துறையினருக்குத்தான். அதைத்தான் இன்றைக்கு நாம் செய்திருப்பதாக நான் கருதுகின்றேன்.

அவர்கள் சொன்னார்கள் அ.தி.மு.க. ஆட்சியிலே கட்டித் தரப்பட்ட குடியிருப்புகளைவிட காவலர்களுக்கு தி.மு.க. ஆட்சியில் குறைவாகத்தான் குடியிருப்புகள் கட்டித்தரப் பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள்.

என்னிடத்திலே உள்ள புள்ளிவிவரப்படி 91-96 என்ற ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் காவலர்களுக்கு குடியிருப்பு 3,503 கட்டித் தரப்பட்டிருக்கின்றது. 1996-2001ல் இந்த ஐந்தாண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் 12,103 குடியிருப்புக்கள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி). 12 ஆயிரம் என்பது 3 ஆயிரத்தை விட குறைவானது என்று சொன்னால் நான் ஆமாம் என்று ஒத்துக்கொள்கின்றேன்.

அதுமாத்திரமல்ல, அதற்குப் பிறகும் 2006-2007 தி.மு.க. ஆட்சியில், 2007-2008 தி.மு.க. ஆட்சியில் மேலும் 5 ஆயிரம் வீடுகள்.

எனவே யார் அதிக வீடுகள் கட்டித் தந்தார்கள் என்பதல்ல முக்கியம். இந்த போட்டாப்போட்டி ஆளுகின்ற கட்சிக்கும், ஆளப் போகிறோம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற எதிர்க் கட்சிக்கும் இடையிலே இருந்தால் அது இடையிலே இருப்பவர்களுக்கு

நல்லதுதான். அந்த வகையிலே நான் இந்தப் போட்டா போட்டியை வரவேற்கிறேன். இதை நான் தவறு என்று கருதவில்லை.

இன்னொன்று சொன்னார்கள் தி.மு.க. ஆட்சியில் குற்றங்கள் பெருகிவிட்டன, அம்மா ஆட்சியில் அமைதிப் பூங்காவாக தமிழகம் இருந்தது. இந்த ஆட்சியிலே பூங்காவிலே புயல் வீசிக் கொண்டிருக்கின்றது. இப்போது புயல் எங்கே வீசுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இங்கே வீசவில்லை புயல், இருந்தாலும் அம்மாவில் ஆட்சியிலேதான் அமைதியாக இருந்தது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒரு புள்ளி விவரத்தை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

அ.தி.மு.க. ஆட்சியில் ஜூன் 2005 முதல் டிசம்பர் 2005 வரையிலான காலக்கட்டத்திலும் கழக ஆட்சியில் ஜூன் 2006 முதல் டிசம்பர் 2006 வரையிலான காலக்கட்டத்திலும் தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு குற்றங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் கழக ஆட்சியில் குற்றங்கள் குறைந்துள்ளன என்பதை அறியலாம்.

கன்னக் களவுகள் அ.தி.மு.க. ஆட்சியில் 2235, கழக ஆட்சியில் 2061.

திருட்டு : அ.தி.மு.க ஆட்சியில் 9,304, கழக ஆட்சியில் 8,079.

கொலைச் செயல்கள் : அ.தி.மு.க. ஆட்சியில் 759, கழக ஆட்சியில் 749.

காயம், கொடுங்காயம் ஏற்படுத்திய நிகழ்ச்சிகள் அ.தி.மு.க. ஆட்சியில் 8,238, கழக ஆட்சியில் 7,794.

பெண்களுக்கு எதிரான கற்பழிப்புக் குற்றங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் 318, கழக ஆட்சியில் 264.

ஆள் கடத்தல் அ.தி.மு.க. ஆட்சியில் 476, கழக ஆட்சியில் 458.

வரதட்சணை மரணங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் 140, கழக ஆட்சியில் 107.

கணவர் அல்லது அவரது உறவினர்களால் ஏற்பட்டக் கொடுமைகள் அ.தி.மு.க. ஆட்சியில் 1086, கழக ஆட்சியில் 764.

பெண்களை மானபங்கப்படுத்துதல் அ.தி.மு.க. ஆட்சியில் 1050 - கழக ஆட்சியில் 666.

நம்பிக்கை மோசடி அ.தி.மு.க. ஆட்சியில் 115 - கழக ஆட்சியில் 100,

தீ வைப்பு நிகழ்ச்சிகள் அ.தி.மு.க. ஆட்சியில் 304 - கழக ஆட்சியில் 239,

ஏமாற்றுதல் அ.தி.மு.க. ஆட்சியில் 1554 - கழக ஆட்சியில் 1026.

குற்றங்களை கண்டுபிடித்தல் அ.தி.மு.க. ஆட்சியில் 88 சதவிகிதம் - கழக ஆட்சியில் 93 சதவிகிதம் (மேசையைத் தட்டும் ஒலி).

கண்டுபிடிக்கப்பட்ட களவு போன சொத்தின் மதிப்பு அ.தி.மு.க. ஆட்சியில் 24 கோடி - கழக ஆட்சியில் 27 கோடி.

மீட்கப்பட்ட சொத்து அ.தி.மு.க. ஆட்சியில் 19 கோடி - கழக ஆட்சியில் 23 கோடி.

இந்திய தண்டனைச் சட்டத்தில் பதிவான வழக்குகள் அ.தி.மு.க. ஆட்சியில் 64,701 - கழக ஆட்சியில் 60,535.

இதிலே பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. நூறு, இருநூறு தான் வித்தியாசம் அந்த ஆட்சிக்கும் இந்த ஆட்சிக்கும். அப்படி இருக்கும்போது நாங்கள் நினைப்பதைப்போல எதிர்க்கட்சியில் இருக்கின்ற நீங்களும் நினைத்தால் இரண்டு பேரும் சேர்ந்து எல்லோரும் சேர்ந்து நாட்டில் நல்லதை வழங்கலாம். நாட்டில் தீமைகளை ஒழிக்கலாம். அதை விட்டுவிட்டு நீதான் தீமையை அதிகமாக செய்தாய். நாங்கள் செய்ததெல்லாம் நன்மைதான். நாங்கள்தான் அமைதியாக நாட்டை வைத்திருக்கிறோம் என்று இப்படிப் பேசுவது யார் அமைதியை நிலைநாட்டுவது என்பதிலே நமக்குள்ளே வாக்குவாதம் வந்து அதிலே முற்றி அதிலே தகராறாகி அதுவே பெரிய போர்க்களமாக ஆகி நமக்குள்ளே அபிப்பிராய பேதங்கள் மேலும் மேலும் வளர்ந்தது என்று சொன்னால் அதுவே காரணமாக ஆகும். எனவே இதிலே போட்டா போட்டி வேண்டாம் என்று எதிர்க்கட்சி நண்பர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று ஜெயக்குமார் சொன்னார். காவல்துறையை நவீனமயமாக்குகின்ற திட்டத்திற்கு இப்போது நிதி குறைக்கப்பட்டு விட்டது என்றார். நேற்றைய தினம் செங்கோட்டையன் அவர்கள் இதையே குறிப்பிட்டார். அவர்கள் இந்த புத்தகத்திலே இருக்கின்ற அந்த குறிப்புகளை வைத்துக் கொண்டு அதைச் சொன்னார்கள். அவர்கள் அதை வைத்துக் கொண்டு சொல்வதிலே தவறில்லை. ஆனால் அதை ஆழமாக பார்த்தால் 2002 - 2003 அ.தி.மு.க. ஆட்சியில் 136.20 கோடி ரூபாய். 2003 - 2004ல் அதே அ.தி.மு.க. ஆட்சியில் 89.14 கோடி ரூபாய்; ஆக இந்த குறைவு அ.தி.மு.க. ஆட்சியிலேயே ஏற்பட்டுவிட்டது.

அதற்காக நான் அ.தி.மு.க. ஆட்சியை குறை கூறவில்லை. மத்திய சர்க்கார் தந்த உதவியைக் கூட பர்சன்டேஜ் விகிதத்தில் தான் தந்தார்கள். அப்படித் தந்தபோது 50-50 என்று தந்தபோது அதாவது மத்திய அரசு 50 சதவிகிதம் என்றும், மாநில அரசு 50 சதவிகிதம் என்று தந்தபோது அது, நிறைவாக இருந்தது. பிறகு 60-40 என்று தந்தபோது மாநில அரசின் பங்கு குறைந்து, அது குறைந்து ஒன்றுக்கு ஒன்று வித்தியாசமாக இருந்தது. அதனால்தான் அ.தி.மு.க. ஆட்சியிலே மீண்டும் குறைக்கப்பட்டது என்பதற்கான விவரமாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

காவலர்களுடைய காலியிடங்கள் நிரப்பப்படவில்லை. எப்போது நிரப்புவீர்கள் என்று நம்முடைய ஜெயக்குமார் அவர்களும் எதிர்க்கட்சி சார்பிலே பேசியவர்களும் தோழமைக் கட்சி சார்பிலே பேசியவர்களும் குறிப்பிட்டார்கள். காலியிடங்களை நிரப்பிட, கடந்த ஆண்டு 5000 பேரைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்பொழுது நடைமுறையிலே அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் 5000 பேரை இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்ற நல்ல செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவலர்களுக்கு Feeding charge குறைந்து வருகிறது. குறைக்கப்பட்டு விட்டது என்று ஜெயக்குமார் மிகவும் வருத்தப் பட்டார். அவருக்கு தெரியும். அரிசி விலை குறைந்திருக்கிற காரணத்தால் அந்த கணக்கில் அது குறைவாக தெரிகிறது. அது

தெரியும் அவருக்கு. தெரிந்தாலும் ஒரு விவாதத்திற்கு சொல்லி வைக்க வேண்டுமே என்பதற்காக சொல்கிறார். Feeding குறைவாக இருக்கிறது என்று யாராவது சொல்லமுடியுமா? அதுவும் ஜெயக்குமாரைப் பார்த்து Feeding குறைவு என்று யாராவது சொல்வார்களா? (மேசையைத் தட்டும் ஒலி).

பொதுவாக தமிழகத்தில் காவல்துறையில் 62ஆம் ஆண்டு மொத்த எண்ணிக்கை 29,560 பேர். 64-ல் 35 ஆயிரம் பேர். 69-ல் 41,337 பேர். 89-ல் 66,856 பேர். 2001-ல் 91,340 பேர். 2006-ல் 98,897 பேர். காவல்துறையினருடைய மொத்த எண்ணிக்கை 1 லட்சம் பேர் என்ற இலக்கை அடையும் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இவர்களுக்குத்தான் அந்த காலத்தில் மாதம் 65 ரூபாய் ஊதியம் இருந்து இன்றைய தினம் 6000 ரூபாய் என்கிற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றால், ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு கட்சியினுடைய அரசும் அவர்களால் ஆன உதவிகளை சம்பள உயர்வை காவலர்களுக்கு தந்ததன் காரணமாகவும் ஒன்றிரண்டு அரசு அதைப் பற்றி கவலைப்படாமல் இருந்தாலும் குறிப்பாக தி.மு.கழக அரசைப் பொறுத்தவரையில், நானே அந்த காலத்திலே போலீஸ்காரர்களுக்காக பாடி, பாட்டு எழுதி நாடகமே நம்முடைய பெரியவர் பக்தவத்சலம் அவர்களால் தடை செய்யப்பட்டு, தடை செய்யப்பட்ட நாடகத்தினுடைய பாடலை இதே அவையில், நீங்கள் தடை செய்தாலும் இங்கே பாடுகிறேன் கேளுங்கள் என்று "போலீஸ் வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு புத்திரனாக வந்து உதித்த தரித்திரமே கண்வளராய், சிகப்புத் தொப்பி மாட்டிக் கிட்டு காக்கி உடை போட்டுக்கிட்டு போகின்ற நொப்பனிடம் பழைய கடன்காரன் வந்து பாக்கியைக் கேட்டால் கமண்டலமும் வேணுமடா, காவி உடை வேணுமடா" என்று பாடிய அந்தப் பாட்டையெல்லாம் பெரியவர் பக்தவத்சலனாருக்கு நேராகவே பாடிக்காட்டி (மேசையைத் தட்டும் ஒலி) நாடகம் நடித்தால் கைது செய்வனே என்று சொன்னீர்களே, உங்களுக்கு நேராகவே இப்பொழுது பாடி நடித்திருக்கிறேன், கைது செய்யுங்கள் பார்க்கலாம் என்று நானும் பேச அவரும் அதை வேடிக்கையாக அன்றைக்கு எடுத்துக் கொண்டார்கள். இன்றைக்குப் போல இவ்வளவு ஆக்ரோஷங்கள் அன்றைக்கு நம்முடைய அவையிலே

இல்லை. கோபம் இருக்கும், குமுறல் இருக்கும், ஆத்திரப் பேச்சுகள் இருக்கும். ஆனாலும் உள்ளூர வெறுப்பு இருக்காது. ஒருவரையொருவர் பார்த்து சிரித்தாலே இன்றைக்கு பயப்படுகி றார்களே. அப்படிப்பட்ட நிலைமை அன்றைக்கு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி). தோழமை உணர்வோடு, நட்பு உணர்வோடு (அப்போதும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் யாரும் சிரிக்கவில்லை). (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே நம்முடைய அமைச்சர் எடுத்துக்காட்டியதைப் போல் குளித்தலை மீனாட்சி வழக்கு நீண்ட காலமாக புரியாமலே இருந்து இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்தபிறகுதான் அந்த வழக்கு என்ன என்று வெளிப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது. எதிரிகளுக்கு ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஒரு புதுவித கொள்ளையர்கள் திடீரென்று கேள்விப்பட்டோம். கிரில் கொள்ளையர்கள். அவர்கள் பல லட்சக்கணக்கான மதிப்புள்ள பொருட்களையெல்லாம் கொள்ளை யடித்து அதன் காரணமாக எந்தவிதமான தண்டனையும் தரமுடியாத சூழ்நிலையில் போலீஸார் தேடித்தேடி அலைந்து கடந்தகால ஆட்சியிலே அவர்கள் பிடிபடாமல் இந்த ஆட்சியிலே அவர்கள் எல்லாம் பங்களாதேஷ் நாட்டை சேர்ந்தவர்கள், இங்கே கொள்ளையடிக்க வந்திருக்கிறார்கள் என்று புரிந்துகொண்டு மூன்று பெண்கள் உட்பட 14 குற்றவாளிகளை கொல்கத்தா சென்று கைது செய்து அவர்கள் இன்றைக்கு தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் சம்பந்தப்பட்ட 66 வழக்குகளில் திருடுப்போன தங்க நகைகள் 184 சவரன் மற்றும் வெள்ளி நகைகள் 400 கிராம் மற்றும் 43 ஆயிரம் ரொக்கம் ஆகியவை கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

இன்னொன்று பீரோ புல்லிங் கொள்ளை - பீரோக்களை வெளியிலே இருந்தே இழுத்து அதில் இருக்கிற பணத்தை நகை நட்டுகளை திருடுவது. அந்தக் களவுகளில் ஈடுபட்டு தொடர்ந்து காவல்துறைக்கு பெரும் அறைகூவலாக இருந்த விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த நாகமணி என்பவன் கைதுசெய்யப்பட்டு அவனிடம் 69 வழக்குகளிலே களவுப்போன தங்க நகைகள் 438 பவுன். வெள்ளி நகைகள் 650 கிராம். மற்றும் ரொக்கம் 51 ஆயிரம் கைப்பற்றப்பட்டது.

அண்மையிலே தலைமைச் செயலகத்திற்கு திருடு போன சொத்துக்கள் மீண்டும் கொண்டுவரப்பட்டு உரியவர்களுக் கெல்லாம் ஒப்படைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதில் நான் கலந்துகொண்டபோது அங்கே வரிசை வரிசையாக கொலு வைப்பது போல அந்த நகைகளையும் பொருட்களையும் வைத்து அதை உரியவர்கள் வந்து வாங்கி கொண்டபோது எவ்வளவு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள் என்பதை நான் நேரிலே காண முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி).

ஆக, மாநிலத்தில் 2006ஆம் ஆண்டு 89 சதவிகித சொத்து வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு 81 சதவீதம் சொத்துக்கள் மீட்கப் பட்டுள்ளது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

2005ஆம் ஆண்டு 86 சதவீத சொத்துக்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டது. அதைவிட அதிகமாக நாம் கண்டுபிடித்து அவர்களையெல்லாம் தண்டித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). இதிலே நான் போட்டிப்போட விரும்பவில்லை. அன்றைக்கு இருந்த செயல்முறையில் அவர்களுக்கு கிடைத்த வெற்றி. அவர்கள் 4 பர்லாங் முன்னேறினார்கள் என்றால் நாம் 6 பர்லாங் முன்னேறியிருக்கிறோம் என்ற அந்த உணர்வோடுதான் இங்கே பேசுகிறேனே அல்லாமல் நீங்கள் ஒன்றும் பெரிதாக செய்து விடவில்லை. நாங்கள்தான் செய்தோம் என்று இந்த போலீஸ் துறை மானியம் பேசுகின்ற நேரத்தில் தீயணைப்பு துறைக்கு வேலை கொடுக்க நான் விரும்பவில்லை.

நான் எப்பொழுதும் சொல்வதுண்டு. போலீஸ் துறையையும் தீயணைப்புத் துறையையும் ஒன்றாக வைத்திருப்பதற்கு காரணம் இதிலே ஏற்படுகின்ற சூடு இதிலே மூளுகின்ற அனல் இதிலே பற்றி எரிகின்ற தீ இவைகளை அணைப்பது:றகு தீயணைப்புப் படை உதவி செய்யும் என்பதற்காகத்தான் இரண்டு மானியங்களையும் ஒன்றாக வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). நல்லவேளை இங்கே தீயணைப்பு துறை உள்ளே வராமலே அணைந்துப் போயிருக்கிறது நெருப்பு. அணைந்து போகவில்லை. வெளியில் தெரியாமல் இருக்கலாம். ஆனாலும், அணைந்துபோனது அணைந்ததுதான். அந்த நிம்மதியுடன் என் பேச்சைத் தொடருகின்றேன்.

ஜி. கே. மணி அவர்களும் மற்றும் சுதர்சனம் அவர்களும் செங்கோட்டையன் அவர்களும் வேறு கட்சிகளைச் சேர்ந்தவர் களும், வேல் முருகனும் கள்ளச் சாராயத்தைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அவைகளை எல்லாம் ஒடுக்கவேண்டும் என்று சிவபுண்ணியம் சொன்னார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் செல்வம் சொன்னார். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்வது கள்ளச் சாராயம் என்பது முடிக்க முடியாத ஒன்று என்பதுதான். என்ன இப்படி சவால் விடுகிறீர்கள் என்று கேட்பீர்களேயானால் - சொல்கிறீர்களே காமராஜர் ஆட்சி வரவேண்டும் - காமராஜர் ஆட்சி வரவேண்டும் என்று, அந்த காமராஜர் ஆட்சியிலேயே ஒழிக்க முடியாத ஒன்று இது - பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியிலே அது எந்த அளவுக்கு இருந்தது, பக்தவச்சலம் ஆட்சியிலே எந்த அளவுக்கு இருந்தது என்பதை புள்ளி விபரம் போட்டு - எனவே இதை ஒழிக்க முடியாது, இத்தனை இலட்சம் பேர் கள்ளச் சாராயப் பேர்வழிகள் தண்டிக்கப்பட்டு சிறையிலே இருக்கிறார்கள் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது. அது மாத்திரம் அல்ல இதே அவையிலே நான் பேசியிருக்கின்றேன். அன்றைக்கு முதலமைச்சர் நிலையிலே இருந்து பேசியிருக்கின்றேன். என்ன பேசினேன் என்றால் போர்ப்பந்தரில் மகாத்மா காந்தி பிறந்த ஊரில் அவருடைய வீட்டிற்கு பக்கத்திலேயே பெட்ரோல் பங்க் போல ஒரு பெரிய கிணறு தோண்டி அதிலே கள்ளச்சாராயத்தை காய்ச்சி அதை விற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதை நான் அல்ல, இந்திய பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள் டில்லி பாராளுமன்றத்திலே சொல்லி வருத்தப்பட்டிருக்கிறார் என்று குறிப்பிட்டேன். ஆனால் இந்திரா காந்தி வருத்தப்பட்டாலும் சரி, இன்றைக்கு அந்த கட்சியிலே இருக்கின்ற கடைசி தொண்டன் வருத்தப்பட்டாலும் சரி, அறவே கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியாததற்கு காரணம், மதுவிலக்குத் திட்டத்தில் நாம் மற்ற நாடுகளோடு போட்டி போடுகிறோம் என்றால் அவர்களைவிட இன்னும் நல்ல சரக்குகளை இங்கே உற்பத்தி செய்ய முடியும் என்பதிலேதான் வெற்றி பெற முடியுமே தவிர வேறு வழியிலே வெற்றிபெற முடியாது என்பதற்கு இன்றைய உலக நிலை, உலக பண்பாடு, உலகக் கலாச்சாரம் சாட்சியாக இருக்கின்றது.

நான் இன்றைக்கும் சொல்லுகின்றேன் - டாஸ்மார்க் ஊழியர்களைப் பற்றி எல்லாம் பேசினீர்கள் - நான்கூட நம்முடைய

கோவிந்தசாமியிடத்திலேயோ சிவபுண்ணியத்திடத்திலேயோ வேடிக்கையாக கேட்கலாம் என்று எனக்கு ஒரு ஆசை. டாக்டர் ராமதாஸ் அவர்களுடைய பேச்சை கேட்டுக்கொண்டு, ஜி.கே. மணியினுடைய அன்புக் கட்டனையை ஏற்று மதுவிலக்கு திட்டத்தைக் கொண்டு வந்து விடலாமா? என்பதுதான் அந்த யோசனை. இவர்கள் எல்லாம் சரி என்று சொன்னால் அதற்குக் கூட தயாராக இருக்கின்றேன். 7000 கோடி ரூபாய் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று. ஆனால் அந்த டாஸ்மார்க் ஊழியர்கள் அப்போது என்ன ஆவார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். (சிரிப்பு).

கள்ளச்சாராயத்தை ஒழிக்கவில்லை என்ற மிகக் கடுமையாக செங்கோட்டையன் அவர்கள் இந்த அரசின் மீது குற்றம் சாட்டினார். குற்றம் சாட்டிவிட்டு அதற்கு மேல் போகாமல் அதோடு விட்டு விட்டார். நான் அவருக்கு ஒரு புள்ளி விபரத்தை சொல்ல விரும்புகின்றேன்.

2001ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் குடித்து பாதிக்கப் பட்டோர் - 3 சம்பவங்களில் இறந்தவர்கள் 98 பேர். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் 250 பேர். 2003ஆம் ஆண்டு ஒரு சம்பவம் - இறந்தவர்கள் 17 பேர் - மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் 89 பேர். 2004ல் இரண்டு சம்பவம் - கள்ளச்சாராயம் குடித்து இறந்தவர்கள் 5 பேர். மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டவர்கள் 5 பேர். 2005ல் இரண்டு சம்பவங்கள் - இறந்தவர்கள் 10 பேர் - மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டவர்கள் 37 பேர். ஆக 2006 ஏப்ரல் முடிய அ.தி.மு.க. ஆட்சியில் உங்களுக்கெல்லாம் புரியும்படி சொல்ல வேண்டுமே யானால், நீங்கள் அன்போடு சொல்லுகின்ற "அம்மா ஆட்சியில்" 134 பேர் கள்ளச்சாராயம் குடித்து இறந்தவர்கள். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் 387 பேர். ஆனால் தி.மு.க. ஆட்சியில் 2006 மே மாதத்தில் தி.மு.க. ஆட்சி வந்தது - அது முதல் டிசம்பர் வரையிலே ஒரே ஒரு ஆள்தான் இறந்திருக்கிறார். இந்த கள்ளச்சாராயத்தை குடித்து என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக நான் கள்ளச்சாராயத்தை ஆதரிக்கிறேன். அதற்கு நான் வக்காளத்து வாங்குகிறேன் என்று யாரும் கருதக் கூடாது. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு நாமும், காவல்துறை நண்பர்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதிலே

அசையாத கருத்து எனக்கு உண்டு, அதற்காக எத்தகைய கடுமையான தண்டனையையும் விதிப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றையும் செங்கோட்டையன் சொன்னார். மணல் கொள்ளை நடைபெறுகிறது - மணல் திருட்டு நடைபெறுகிறது - அதை சரியாக நிர்வகிக்கவில்லை என்று சொன்னார். அதையும் வாங்கிப் பார்த்தேன் 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் விற்கப்பட்ட மணல் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த வருவாய் 78.50 கோடி.

2006-2007ல் தி.மு.க. ஆட்சியில் மணல் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த வருவாய் 130.49 கோடி. அன்று 78 கோடி இன்றைக்கு 130 கோடியாக பெருகியிருக்கிறதே அல்லாமல், மணல் பிரச்சினையில் நாம் ஒன்றும் ஏமாந்து போய்விடவில்லை. அதை சரியாகத்தான் நிர்வகித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதற்காக இதைச் சொல்ல விரும்புகின்றேன்.

நம்முடைய சுதர்சனம் அவர்களும், ஞானசேகரன் அவர்களும் மற்றும் நம்முடைய ஜெயக்குமார் ஆகியோரும் வேறு சிலரும் பேசும்போது கூட ராக்கெட் லாஞ்சர் பற்றி எல்லாம் பேசினார்கள் 11.7.2006 அன்று மும்பையில் நடந்த தொடர்குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தும், சென்ற சுதந்திர தினத்தை முன்னிட்டு பயங்கரவாத இயக்கங்களின் அச்சுறுத்தல் வந்த போதும் குறிப்பாக கல்பாக்கம் அணுமின் நிலையத்தையே தாக்கிச் சேதம் விளைவிக்க உள்ளதாக தகவல் கிடைத்த போதும் மாநிலத்திலே முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து மையங்களிலும் தக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, எந்தவிதமான அசம்பாவித சம்பவங்களும் நிகழாமல் தடுக்கப்பட்டுள்ளது.

17.12.2006 அன்று அடையாளம் தெரியாத நபர்களால் இந்து முன்னணி தென்காசி நகரத் தலைவர் குமார்பாண்டியன் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட மூன்று எதிரிகளை அரசு கைது செய்து அவர்களில் இரண்டு பேரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைத்தது. இவைகள் எல்லாம் தீவிரவாதத்தை மதவெறியின் காரணமாக நடைபெறுகின்ற வன்முறை வெறியாட்டங்களை தடுப்பதற்கு இந்த

அரசு எடுத்த கடுமையான நடவடிக்கைகள். அதைப்போல பயங்கரவாதச் செயல்கள் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்குள்ளே வருவது, இந்தியாவில் இருக்கின்றவர்களை பயன்படுத்திக் கொண்டு தங்களுடைய வன்முறைச் செயல்களுக்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்ப்பது அவர்களை இந்த அரசு விட்டு வைக்கவில்லை. இதிலே குறிப்பாக ராக்கெட் லாஞ்சர் - 7.9.2006 அன்று ஆந்திர மாநிலத்தில் சாக்கு மூட்டைகளில் ஏற்றிச் சென்ற போது இது பிடிபட்டதாக தகவல். அதைப்பற்றி விசாரித்தால் 7.9.2006 நம்முடைய ஆட்சி வந்த பிறகு பிடிபட்டிருக்கிறது. ஆனால் அம்பத்தூரிலிந்து அது கடத்தப்பட்டது கிராந்தி டிராவல்ஸ் மூலமாக 10.8.2005, 9.9.2006, 11.5.2006 ஆகிய தேதிகளில் நடந்துள்ளதாகத்தான் தெரியவந்துள்ளது. இதன் மூலம் 2005ஆம் ஆண்டிலிருந்து நடந்து வந்த இந்த சதிச்செயலை மிகவும் திறமையாகச் செயல்பட்டு ஒரேவாரத்தில் முறியடித்தது நம்முடைய அரசின் காவல்துறை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய ஞானசேகர் அவர்கள் இந்த வன்முறையாளர் களைப் பற்றி பயங்கரவாதிகளைப் பற்றி பேச குறிப்பு தயாரித் திருக்கிறார். அவருக்கு மிக சுலபமாக கிடைத்த குறிப்பு நம்முடைய தமிழ்நாடு காவல்துறையின் மானியக் கோரிக்கை புத்தகம் கிடைத்து விட்டது. அதிலிருந்து குறிப்பு எடுத்தார் பாருங்கள் - எடுத்து நான் எங்கெங்கே வன்முறையாளர்கள் யார், யார் பயங்கரவாதிகள் என்று அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தோமோ அவர்களை எல்லாம் "விடுதலைப் புலிகள்" என்று இவர் மாற்றி விட்டார். (மேசையைத் தட்டும் ஒலி). நான் சந்தேகப்பட்டு எடுத்துப் படித்துப் பார்த்தேன் - ஒருவேளை நாம் படித்தபிறகு யாரும் புரூப் திருத்தி இருப்பார்களோ, நம்முடைய அலுவலகத்திலே என்று படித்துப் பார்த்தால் அதிலே பயங்கரவாதிகள் என்றுதான் இருந்தது. விடுதலைப்புலிகள் என்று இல்லை. ஞானசேகரன் கண்ணுக்கு பயங்கரவாதிகள் என்றாலே விடுதலைப்புலிகள் என்று தெரிகிறது. அதற்காக நான் விடுதலைப்புலிகளை ஆதரிப்பவன் அல்ல. அதுவும் அவருக்குத் தெரியும். தமிழ்நாட்டில் இனி அவர்களுக்கு வேலை இல்லை. அந்த வேலைகளில் அவர்கள் ஈடுபடவும் இல்லை. ஈடுபடவும் கூடாது என்பதிலே நான் மிகத் தீவிரமாக ஞானசேகரனுக்கு கூறுகிறேன். ஆனால், இங்கே அவர்

சொல்லிக் காட்டிய இத்தகை நிகழ்ச்சிகளிலும் வருகின்றவர்கள் அந்த கதாநாயகர்கள் எல்லாம் வேறு கதாநாயகர்கள். இவர் அவர்களை எல்லாம் விடுதலைப்புலிகளாக இங்கே கற்பித்துச் சொன்னார். நண்பர் ஞானசேகரன் அவர்களே அவர்கள் விடுதலைப்புலிகள் அல்ல. உங்களுடைய ஞானத்துக்கு வேண்டுமானால் அப்படி தெரிந்திருக்கலாம். நீங்கள் சேகரித்து கொடுக்கிறீர்களே தகவல்கள், உண்மையானவற்றை சேகரித்து கொடுக்க வேண்டுமே தவிர அவர்கள் எல்லாம் விடுதலைப் புலிகள் என்று சொன்னதை நீங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டீர் என்று கருதுகின்றேன். அவர்கள் விடுதலைப் புலிகள் அல்ல. விடுதலைப் புலிகள் என்றால் அவர்களுடைய போக்கு வேறு அவர்களுடைய எந்தவிதமான வன்முறைச் செயல்களும் இந்த இந்தியாவிற்கு, தமிழகத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய எந்த ஒரு காரியமானாலும் நான் சொல்லுகின்றேன். உறுதியாகச் சொல்லுகின்றேன். அறுதியிட்டுச் சொல்லுகின்றேன்,

இந்த அரசு அத்தகைய காரியங்களுக்கு இடம் அளிக்காது, அளிக்காது, அளிக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொன்றையும் சொன்னார்கள். இராமநாதபுரத்தில் அகதிகள் முகாமிற்கு - சுதர்சனம் இங்கே சொன்னார்கள். நான் உடனடியாக இராமநாதபுரத்திற்கு தொடர்பு கொண்டு அங்குள்ள அதிகாரிகளை கேட்டபோது வந்த செய்தியைச் சொல்லுகின்றேன். மத்திய கடல்மின் ஆராய்ச்சி நிறுவனத்தின் தெற்குக் கடற்கரையில் சிறிய வெள்ளைநிற தர்மோகோல் பெட்டி ஒன்று கரை ஒதுங்கியது - அதைக் காவல் துறையினர் கைப்பற்றி திறந்து பார்த்ததில் எட்டு அங்குல நீளமும், இரண்டு அங்குல சுற்றளவும் கொண்ட ஐந்து சிவப்பு நிற பிளாஸ்டிக் குழாய்கள் இருப்பதைக் கண்டு மதுரையிலிருந்து வெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப் பட்டு சோதனை செய்யப்பட்டது. சோதனையில் அந்தப் பிளாஸ்டிக் குழாய்கள் கப்பல்களில் பயன்படுத்தப்படும் சமிக்ஞை தோட்டாக்கள், சிக்னல் கேட்ரிட்ஜஸ் என்று தெரியவந்தது. அந்த பெட்டியிலிருந்து ஐந்து சமிக்ஞை தோட்டாக்களில் ஒரு தோட்டாவை வெடிக்க வைத்துப் பார்த்ததில் அது உயரே சென்று வெளிச்சத்தை ஏற்படுத்தி சிறிய பாராசூட் போல விரிந்து கீழ் நோக்கி வந்தது. மேலும் இராமஸ்வர கடற்படை அதிகாரி பீஸ்வால்

என்பவரும் சோதனை செய்து இவை அனைத்து தரப்பு கப்பல்களிலும் பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய சமிக்ஞை தோட்டாக்கள். சிக்னல் கேட்ரிட்ஜஸ் என்றும் வேறு ஆபத்து இதனால் எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார். இது தொடர்பாக மண்டபம் காவல் நிலையத்தில் குற்ற எண் 74/07 பிரிவு 102 கு.வி.ந.ச. வின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற செய்தி எனக்கு கிடைத்திருக் கிறது. ஆகவே, அது கண்டு பீதியடைய வேண்டியதில்லை, பதட்டப்படத் தேவையில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வகையிலே கடலோரத்தில் நம்முடைய தமிழகம், இந்தியாவினுடைய பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்கின்ற வகையில் தொடர்ந்து நம்முடைய காவல்துறையினுடைய பணி மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு விஷயத்தை சொன்னார்கள் - மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் ஒரு தாக்கீது அனுப்பி யிருக்கிறார். காவலர்களுக்கு கடன் கொடுக்கக்கூடாது என்று ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறார் என்று ஒரு குற்றச்சாட்டைப்போல இங்கே சொன்னார்கள். அது பற்றி உடனடியாக நாங்கள் விசாரித்தபோது அப்படி ஒரு தாக்கீது அனுப்பப்படவில்லை என்று நம்முடைய நிதி இலாக்காவிற்கு செய்தி வந்திருக்கிறது. வேறு இலாக்காக் களையும் விசாரித்த போது சிதம்பரம் அப்படி எந்த தாக்கீதும் அனுப்பவில்லை. போலீசாருக்கு கடன் கொடுக்கக் கூடாது என்று அவர் சொல்லவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, போலீசாரைப் பற்றியும் அவர்களுடைய செயல்பாடுகளைப் பற்றியும், அவர்களை வைத்து நடத்துகின்ற ஆட்சியினரும், இரு தரப்பிலும் நம்முடைய கருத்துக்களை பரிமாறிக் கொண்டிருக் கின்றோம்.

நம்முடைய செல்வப் பெருந்தகை நேற்று பேசும்போது கடந்த கால ஆட்சியில், வேண்டுமென்றே அவர்மீது ஒரு பெரிய பொய் வழக்கு நடத்தி பின்னர் அதை விசாரித்த காவல் துறையினர் சி.பி.ஐ. அப்படி குற்றச்சாட்டு எதுவுமே இல்லை என்று சொல்லிவிட்டார்கள் என்று குறிப்பிட்டார். நேற்று குறிப்பிட்டதோடு

மட்டும் அல்லாமல் இன்று என்னிடம் கடிதமும் கொடுத்திருக்கிறார். இதைப்பற்றி தன்மீது ஒரு தவறான, வேண்டுமென்றே திட்டமிட்டு சாட்டப்பட்ட குற்றச்சாட்டு பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார். தக்கவரைக் கொண்டு சரியான ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்தப்படும் என்று நான் அவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இவற்றுக்கு எல்லாம் முத்தாரம் வைப்பதைப்போல சில அறிவிப்புகளை இங்கு சொல்ல விரும்புகின்றேன்.

அதில் முதல் அறிவிப்பாக நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் ஆறுமுகம் அவர்களும் இந்த அவையிலே ஒரு பரிந்துரையை வைத்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள் கடந்த ஒன்றரை மாத காலமாக காணாமல் போய்விட்டது குறித்து இதே அவையிலே பிரச்சினை எழுப்பப் பட்டபோது, அவர்களை கண்டுபிடிப்பதற்கான பணி தொடர்ந்து நடைபெறும் என்றும் அவர்கள் கண்டுபிடிக்கப்படும் வரை அந்த குடும்பத்திற்கு நிவாரண உதவித்தொகை வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தேன்.

அதன்படி காணாமல் போன அந்த 12 மீனவர்கள் குடும்பங்களுக்கு, அவர்கள் இல்லம் திரும்பும் வரை அல்லது காணாமல் போன மீனவர்கள் குடும்பம் அரசிடம் இருந்து முழு நிவாரண உதவித்தொகை பெறும் வரை மாதந்தோறும் தலா ஒரு குடும்பத்திற்கு 1500 ரூபாய் உதவித்தொகை வழங்குவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

அறிவிப்பு 1 : **கடலோரப் பாதுகாப்பிற்கு புதிய பணி இடங்கள்.**

கடலோர பாதுகாப்பிற்காக 12 கடலோர காவல் நிலையங்கள், 12 புறநகர் காவல் நிலையங்கள் மற்றும் 40 சோதனைச் சாவடிகள் ஆகியவற்றுக்கு கட்டிடங்கள் கட்ட தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான செலவில் 50 சதவீதம் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். அனைத்துக் கட்டிடங்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும். இந்த நிலையங்களில்

காவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை நியமிக்க ரூபாய் 5 கோடி செலவிடப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

அறிவிப்பு 2 : **புறக்காவல் நிலையங்களை தரம் உயர்த்துதல்.**

2006 - 2007ஆம் நிதியாண்டில் பல்வேறு இடங்களில் 10 புறக்காவல் நிலையங்கள் முழுமையான காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டன. இன்றைய நிலவரப்படி மாநிலத்தில் 106 புறக்காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பின்வரும் 12 புறக்காவல் நிலையங்கள் முழுநேரக் காவல் நிலையங்களாக சுமார் 3.8 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம் - மாகரல் - 5ஆம் வகை
விழுப்புரம் மாவட்டம் - கீழ்க்குப்பம் - 5ஆம் வகை
திருச்சி மாவட்டம் - இனாம் குளத்தூர் - 5ஆம் வகை
புதுக்கோட்டை மாவட்டம் - செம்பட்டு விழுதி - 5ஆம் வகை
தருமபுரி மாவட்டம் - பஞ்சப்பள்ளி - 5ஆம் வகை
கிருஷ்ணகிரி மாவட்டம் - கிருஷ்ணகிரி அணை - 5ஆம் வகை
மதுரை மாவட்டம் - எம். சத்திரப்பட்டி - 5ஆம் வகை
ராமநாதபுரம் மாவட்டம் - தெற்குவேலி - 5ஆம் வகை
கன்னியாகுமரி மாவட்டம் - பளுகல் - 5ஆம் வகை
மதுரை மாநகர் - அரசு ராஜாஜி மருத்துவமனை - 5ஆம் வகை
திருவண்ணாமலை மாவட்டம் - புதுப்பாளையம் - 5ஆம் வகை
திருவண்ணாமலை மாவட்டம் - பாச்சல் - 5ஆம் வகை

அறிவிப்பு 3 - **காவல்நிலையங்களை தரம் உயர்த்துதல்.**

சென்னை மாநகர காவல் ஆணையர் மற்றும் மண்டல காவல் துறை தலைவர்கள் மேற்கொண்ட ஆய்வின்படி மாநிலம் முழுவதும் 100 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. 2006 - 2007ஆம் ஆண்டில் 14 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டன. 2007 - 2008ஆம் ஆண்டில் 15 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு பணியாளர்களுடைய எண்ணிக்கை ரூ. 6.19 கோடியில் அதிகரிக்கப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம் - திருப்பெரும்புதூர்
கடலூர் - பண்ருட்டி
திருவண்ணாமலை - ஆரணி நகரம்
திருச்சி - திருவெறும்பூர்
தஞ்சாவூர் - தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை
திருச்சி நகரம் - காந்தி மார்க்கெட்
திருச்சி நகரம் - கே. கே. நகர்
கோயம்புத்தூர் - திருப்பூர் வடக்கு
கோயம்புத்தூர் - திருப்பூர் ஊரகம்
நாமக்கல் - நாமக்கல்
கோயம்புத்தூர் நகரம் - குனியமுத்தூர்
மதுரை - அவனியாபுரம்
திண்டுக்கல் - பழனிநகரம்
ராமநாதபுரம் - கமுதி
தூத்துக்குடி - கோவில்பட்டி மேற்கு

அறிவிப்பு 4 - **தூத்துக்குடி மாவட்டத்தில் பேரூரணியில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளியை மேம்படுத்துதல்.**

தூத்துக்குடி மாவட்டத்தில் பேரூரணியில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளியில் 400 காவலர்களுக்கு பயிற்சியளிக்க வசதி யுள்ளது. இந்த பள்ளி 54 ஏக்கர் நிலப் பரப்பளவில் அமைந்துள்ளது. தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை ரூ. 4.38 கோடியில் மேம்படுத்தி 600 காவலர்களுக்குப் பயிற்சியளிக்கும் அளவிற்கு இப்பயிற்சிப் பள்ளி தரம் உயர்த்தப்படும்.

அறிவிப்பு 5 - **காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் புதிய காவல் நிலையம் உருவாக்குதல்.**

காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் கிராமத்தில் சிப்காட் மூலம் தொழில் மையங்கள் அமைய உள்ளன. மேலும் டெல்பி, டி.வி.எஸ்., எம்.எம்.போர்ஜிங் இந்தியா நிறுவனம் ஆகிய பன்முக வெளிநாட்டு நிறுவனங்கள் கூடியவிரைவில் ஒரகடத்தில் தொழிற்சாலைகள் நிறுவவுள்ளன. ரூ. 1400 கோடியில் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ள தேசிய தானியங்கி சோதனை ஆய்வு மற்றும் வளர்ச்சித் திட்டமும் இந்த இடத்தில் நிறுவப்படவுள்ளது.

புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படும்போது வாகனப் போக்குவரத்து அதிகரிக்கும் என்பதாலும், ரோந்துப் பணி அதிகரிக்கப்பட வேண்டியிருக்கும் என்பதாலும் ஒரகடத்தில் வகை 1 காவல் நிலையம் புதிதாக சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இதோடு சுங்குவார் சத்திரத்தில் தற்போது உள்ள வகை 5 காவல் நிலையம் வகை 1 ஆக தரம் உயர்த்தப்படும்.

அறிவிப்பு 6 - **காவல் பணியாளர்களுக்கு 2000 புதிய குடியிருப்புகள்.**

தமிழ்நாடு காவல் பணியில் பணியாற்றும் காவலர்களுக்கு தற்போது 42,556 குடியிருப்புகள் உள்ளன. மொத்தமுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையில் இது 43.03 சதவிகிதம் ஆகும். இந்த ஆண்டில் கூடுதலாக காவல் பணியாளர்களுக்கு 2000 குடியிருப்புகள் சுமார் ரூ. 110 கோடி செலவில் கட்டப்படும்.

அறிவிப்பு 7 - **இரண்டாம் நிலைக் காவலர்களை முதல்நிலைக் காவலர்களாக நிலை உயர்த்துதல்.**

பத்து ஆண்டுகள் பணியை நிறைவு செய்யும் 7320 இரண்டாம் நிலை ஆண் காவலர்களும், 3231 இரண்டாம் நிலைப் பெண் காவலர்களும் முதல் நிலைக் காவலர்களாக நிலை உயர்த்தப்படுவர். இதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6.13 கோடி அரசுக்கு கூடுதலாக செலவாகும்.

அறிவிப்பு 8 - **முதல் நிலைக் காவலர்களைத் தலைமைக் காவலர்களாக நிலை உயர்த்துதல்.**

5 ஆண்டுகள் பணியை நிறைவு செய்துள்ள 293 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாக நிலை உயர்த்தப் படுவர்.

அறிவிப்பு 9 - **தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாக நிலை உயர்த்தப்படுவர்.**

114 தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர் களாக நிலை உயர்த்தப்படுவர்.

அறிவிப்பு 10 - தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பணியாளர்களுக்கு கூடுதல் நேர ஊதியம் வழங்குதல்.

தற்போது ஆயுதப்படை உள்ளூர் மற்றும் சிறப்பு பிரிவுகள் காவல் பணியாளர்களுக்கு கூடுதல் நேர ஊதியமாக நாளொன்றுக்கு ரூ. 150 வழங்கப்படுகிறது. இந்தக் கூடுதல் நேர ஊதியம் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியாற்றுபவர் களுக்கு அளிக்கப்படுவதில்லை.

தமிழ்நாடு சிறப்புக் காவல்படை பணி, பயிற்சி மையம் மற்றும் சிறப்புப்படையில் உள்ள பணியாளர்களுக்கும் கூடுதல் நேர ஊதியம் வழங்கப்படும். இதன் காரணமாக 12,690 பேர் பயன்பெறுவார்கள்.

அறிவிப்பு 11 - **கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களை இரண்டாம் நிலைக் காவலர்களாக தேர்வு செய்தல்.**

காவல்துறையில் இளநிலை உதவியாளர், தட்டச்சர் பதவிகளுக்கு கருணை அடிப்படையில் பணியமர்த்தப்படுவதற்கு 1460 நபர்கள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். இவர்களில் காவலர் பதவிக்கு தேவையான கல்வி மற்றும் உடற் தகுதி உள்ளோருக்கு இரண்டாம் நிலைக் காவலர் பதவி அளிக்கப்படும்.

அறிவிப்பு 12 - **கருணை அடிப்படையில் தொகுப்பூ தியத்தில் பணி அமர்த்தப்பட்டுள்ள தகவுப் பதிவாளர் களுக்கு காலமுறை ஊதியம் வழங்குதல்.**

கடந்த 2002ஆம் ஆண்டில் கருணை அடிப்படையில் பணி கேட்டு காத்திருப்போர் பட்டியலில் இருந்த 805 நபர்கள் தகவுப் பதிவாளர்களாக தேர்வு செய்யப்பட்டு மாதம் ரூ. 2500 தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டனர். கடந்த 4 ஆண்டுகளுக்கு மேல் இவர்கள் தொடர்ந்து தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருகிறார்கள். இடைக்காலத்தில் ஒரு சிலர் தட்டச்சர் மற்றும் இளநிலை உதவியாளர் பதவிகளில் காலமுறை ஊதிய விகிதத்தில் மாற்றப்பட்டுள்ளனர். மீதமுள்ள சுமார் 650 நபர்களுக்கு காலமுறை சம்பள விகிதம் இந்த ஆண்டு நிர்ணயிக்கப்படும்.

அறிவிப்பு 13 - **சேலம் சரகம் அலுவலகத்திற்கு அமைச்சுப் பணியாளர்கள் பதவிகளை ஏற்படுத்துதல்.**

2000ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு காவல்துறை துணைத்தலைவர் பதவியுடன் சேலத்தில் காவல் சரகம் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்திற்கு அமைச்சுப் பணியாளர் பதவிகள் எதுவும் இல்லாமல் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. அதனால் இவ்வலுவலகத்தின் நிர்வாகப் பணியை கவனிக்க அயற்பணி அடிப்படையில் அமைச்சுப் பணியாளர்கள் சரகத்தின் பிற மாவட்டங்களிலிருந்து பணியமர்த்தப்படுகின்றனர். இந்த நிலைமையை சரி செய்ய சேலம் காவல் சரகத்தில் அமைச்சுப் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்படும்.

அறிவிப்பு 14 - **வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்தல் படையில் முன்னாள் படை வீரர்களை நிரந்தரம் செய்தல்.**

காவல்துறையில் சிறப்புப் பிரிவில் மாதாந்திர ஒப்பந்த ஊதியத்தில் நியமிக்கப்பட்ட 42 முன்னாள் இராணுவத்தினரை நிரந்தரமாக பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அறிவிப்பு 15 - **தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில் இடையே இலக்க முறை நுண்ணலைத் தொடர்பு வசதி ஏற்படுத்துதல்.**

1997ஆம் ஆண்டில் தூத்துக்குடி, நெல்லை, நாகர்கோவில் இடையே இலக்கமுறை நுண்ணலைத் தொடர்பு வசதி உருவாக்கப் பட்டது. 8 ஆண்டுகாலம் உபயோகத்தில் இருந்து வந்த இந்த தெலைத் தொடர்பு இப்போது பழுதடைந்தும், உதிரிபாகங்கள் சந்தையில் கிடைக்காத சூழ்நிலை உள்ளதாலும் பழைய கருவிகளை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ரூ. 2.35 கோடி செலவில் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

அறிவிப்பு 16 - **மன்னார்குடியில் உள்ள மறு அஞ்சல் தொலைத் தொடர்பு நிலையக் கட்டிடம் கட்டுதல்.** (Repeater Station).

1973ஆம் ஆண்டில் கட்டப்பட்ட மன்னார்குடி மறு அஞ்சல் நிலையமானது தற்போது முழுவதும் சேதமடைந்து பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் உள்ளது. மிக நவீன கருவிகள் இந்தக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருப்பதாலும், பணியாளர்கள்

நாள் முழுவதும் அங்கு பணியாற்றுவதாலும் பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிய மறு அஞ்சல் நிலையக் கட்டிடம் கட்டப்படும்.

அறிவிப்பு 17 - **கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய நுண்ணலை தொலைத் தொடர்பு இணைப்புகள் நிறுவுதல்.**

தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு கிருஷ்ணகிரி மாவட்டம் ஏற்படுத்தப்பட்டது. இந்த மாவட்டத்தில் உள்ள காவல்துறை அலுவலர்களுக்கு நுண்ணலை தொலைத் தொடர்பு இணைப்பு வசதி ஏற்படுத்தித் தரவேண்டியது அவசியமாகிறது. இந்த வகையில் கருவிகள் நிறுவவும், கட்டிடங்கள் கட்டவும் ரூ. 94.58 லட்சம் நிதி ஒதுக்கப்படும்.

அறிவிப்பு 18 - **சேலம் மாவட்டத்தில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.**

சேலம் மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. சுமார் ரூ. 3.5 கோடி செலவில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டிடம் ஒன்று சேலத்தில் புதிதாகக் கட்டப்படும்.

அறிவிப்பு 19 - **தமிழ்நாடு சிறப்புக் காவல்படை ஒன்று புதிதாக ஏற்படுத்துதல்.**

ரூபாய் 16.52 கோடி செலவில் சுமார் ஆயிரம் பேர் கொண்ட தமிழ்நாடு சிறப்புக் காவல் படை ஒன்று புதிதாகவே உருவாக்கப்படும்.

அறிவிப்பு 20 - **இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியிடங்களை நிரப்புதல்.**

தற்போது சுமார் 14,000 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியிடங்கள் காவல்துறையில் காலியாக உள்ளன. இவற்றில் 5000 பணியிடங்களை நிரப்புவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மேலும் 5000 பணியிடங்களும், 2008-2009ஆம் ஆண்டில் மீதமுள்ள 4000 பணியிடங்களும் நிரப்பப்படும்.

அறிவிப்பு 21 - **திருவாரூர் மாவட்டத்தில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.**

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதற்கான சொந்தக் கட்டிடம் ரூ. 3.44 கோடி செலவில் இந்த ஆண்டுக் கட்டப்படும்.

அறிவிப்பு 22 - **காவல் நிலையக் கட்டிடங்கள்**

மாநிலத்தில் உள்ள 1432 காவல்நிலையங்களில் 284 காவல் நிலையங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவருகின்றன. இவற்றிக்கு படிப்படியாக சொந்தக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2007-2008ஆம் ஆண்டில் பின்வரும் 13 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டிடம் கட்டப்படும் :-

கோயம்புத்தூர் - ஆலந்துறை
கோயம்புத்தூர் - மகாலிங்கபுரம்
கோயம்புத்தூர் நகரம் - பி.1 பஜார்
திருவண்ணாமலை - செய்யாறு அனைத்து மகளிர் காவல் நிலையம்
தூத்துக்குடி - கடம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையம்
தூத்துக்குடி - புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையம்
தூத்துக்குடி - கழுகுமலை
தூத்துக்குடி - எப்போதும்வென்றான்
மதுரை - உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையம்
மதுரை - சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல் நிலையம்
மதுரை - திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையம்
மதுரை - பாலமேடு
இராமநாதபுரம் - எமனேஸ்வரம்

இவை தவிர அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பின்வரும் 25 இடங்களில் காவல் நிலையங்களுக்குக் கட்டிடம் கட்ட கோரிக்கை வைத்துள்ளார்கள். இவற்றில் அரசு நிலம் இருக்கும் இடத்தில் உடனடியாக கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கோ. சி. மணி - மருவூர்
கே. பொன்முடி - சின்னலேசம்

எ. வ. வேலு - திருவண்ணாமலை கிழக்கு
என். கே. பி. பி. ராஜா - கருங்கல்பாளையம்
தங்கம் தென்னரசு - மல்லாங்கிணறு
வெள்ளக்கோயில் சாமிநாதன் - மூலனூர்
பூங்கோதை அருணா - ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையம்
கே. சி. பழனிச்சாமி - கரூர்
கே. பிச்சாண்டி - திருவண்ணாமலை நகர காவல் நிலையம்
எஸ். பி. விஜயகுமார் - சந்தவாசல்
அர. சக்கரபாணி - அம்பிளிக்கை
என். குருசாமி - அம்மாபேட்டை
டி. ராமச்சந்திரன் - தளி
கே.பி. ராமசாமி - மங்களாபுரம்
ஜி.கே. மணி - மேட்டூர் தாலுக்கா
கே. சின்னதுரை - கெங்கவல்லி
வ. சிவபுண்ணியம் - தலையாயமங்கலம்
கே. ஆர். ராமசாமி - திருவாடானை
டி. செங்குட்டுவன் - இராயக்கோட்டை
ஜி. ஜான் ஜோசப் - நித்திரவிளை
வ. முல்லைவேந்தன் - அ. பள்ளிப்பட்டி
கே. உலகநாதன் - திருத்துறைப்பூண்டி
எம். ஏ. கலிலுர்ரஹ்மான் - அரவக்குறிச்சி
எஸ். எஸ். சிவசங்கர் - ஆண்டிமடம்
டி. யசோதா - திருப்பெரும்புதூர்

அறிவிப்பு 23 - **புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்துதல்.**

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் புதிதாக காவல் நிலையங்கள் அமைக்க கோரிக்கை தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. மாநிலத்தில் ஏற்கனவே 1432 காவல்நிலையங்கள் உள்ளன. தேவையின் அடிப்படையில், புதிதாக பின்வரும் இடங்களில் காவல்நிலையங்கள் சுமார். ரூ. 3.2 கோடியில் புதிதாக தொடங்கப்படும் :-

திருவண்ணாமலை - மேல்மா கூட்ரோடு
கடலூர் - பகண்டை கூட்டுசாலை

நாமக்கல் - நல்லிப்பாளையம்
சென்னை மாநகரம் - நொளம்பூர்
திண்டுக்கல் -ரெட்டியார் சத்திரம்
விழுப்புரம் - காணை

அறிவிப்பு 24 - **வேலூர் மாவட்டத்தில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.**

வேலூர் மாவட்டம் காட்பாடியில் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் புதிதாக கட்டப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று 18 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டிடம் ஒன்று கட்டப்படும்.

தீயணைப்புத் துறை அறிவிப்பு 1 - **சென்னையில் தீயணைப்பு மற்றம் மீட்புப் பணிகள் துறையில் புதிய கோட்டம் ஏற்படுத்துதல்.**

சென்னை மாநகரத்தில் தற்போது தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் வடசென்னை மற்றும் தென்சென்னை ஆகிய 2 கோட்டங்கள் உள்ளன. சென்னை மாநகரில் பலமாடிக் கட்டிடங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்திற் கொண்டும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயலாக்கத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கும் சென்னை மாநகரில் தற்போது செயல்பட்டு வரும் வடசென்னை மற்றும் தென்சென்னை கோட்டங்களை பிரித்து சென்னை நகர மத்திய கோட்டம் என்ற புதிய கோட்டம் உருவாக்கப்படும்.

அறிவிப்பு 2 - **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அலுவலர்களுக்கு செல்லிட தொலைபேசிக் கட்டணம் வழங்குதல்.**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தற்போது துணை இயக்குநர்கள், கோட்ட அலுவலர்கள், உதவி கோட்ட அலுவலர்கள், நிலைய அலுவலர்களுக்கு 100 செல்லிட தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேலும் விரைவாக செயல்படுத்த எஞ்சியுள்ள 304 அலுவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூ. 500 வீதம் செல்லிட தொலைபேசி வசதி செய்து தரப்படும்.

அறிவிப்பு 3 - **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.**

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 282 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் 161 நிலையங்கள் சொந்தக் கட்டிடங்களிலும், 30 நிலையங்கள் பகுதி நிரந்தரக் கட்டிடங் களிலும், 92 நிலையங்கள் வாடகைக் கட்டிடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

பகுதி நிரந்தரக் கட்டிடங்களிலும் வாடகைக் கட்டிடங் களிலும் செயல்பட்டு வரும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு படிப்படியாக சொந்தக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பின்வரும் இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்குக் கட்டிடம் கட்ட கோரிக்கை அளித்துள்ளார்கள் :-

எ.வ. வேலு - தண்டராம்பட்டு
தமிழரசு - ஓமலூர்
ஆர். சிவானந்தம் - ஆரணி
க. அன்பழகன் - குத்தாலம்
நா. ராமகிருஷ்ணன் - கம்பம்
கே. உலகநாதன் - திருத்துறைப்பூண்டி
தியோடர் ரெஜினால்டு - தக்கலை
ஆர். சக்கரபாணி - ஒட்டன்சத்திரம்

G00233
894.815
TAM

இந்தக் கோரிக்கைகளை ஏற்று இந்த ஆண்டு 2 கோடி செலவில் கட்டிடங்கள் கட்டப்படும். (மேசையை பலமாக தட்டும் ஒலி).

மாமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற வேண்டும் என்று மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 085

